விவேகபோதினி

ஒரு சிறந்த மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை

" எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்

தொகுதி 12

1919-ம் ஞு ஜூலை மீ — 1920-ம் ஞு ஜூன் மீ

1919—20

" விவேக போதினி " ஆபீஸ்

மயிலாப்பூர், சென்னை

[விலை ரூபாய் 6

அட்டவணை

பக்கம்

மத விஷயம்
சேரநாட்டுத் திருப்பதிகள் ... 1
கம்பராமாயணத் திரட்டு 41, 81, 113, 145, 177, 209, 241, 305, 337, 369
பக்தியின் பெருமை 224, 246, 276, 322
திருமழுவாடித் வயிரத்தூணர் பதிகம் 273

பெரியோர் சரிதை
யுதிஷ்டிரர் 2, 42, 82, 114, 146, 178, 210, 242, 274, 306, 338, 370
பிரதானசிரோமணி டி. ஆனந்தராவ் ... 12
டாக்டர் ரவிந்திரநாத் டாகூர் ... 20
ஸர் ப்ரபுல்ல சந்திர ரே ... 52
ஹிம்மத் ஸிம்ஹன் 95, 128
கௌதம புத்தர் ... 119
ஸர் வி. ஸி. தேசிகாசாரியார் ... 156
கபிலர் 279, 314, 349, 378

ராஜாங்க விஷயம்
மன்னர் பிரானின் ஸ்ரீமுகம் (ஆங்கில மூலமும் தமிழ் மொழிபெயர்ப்பும்) 183, 185

சரித்திர ஆராய்ச்சி : சரித்திரம்
புராதன இந்தியா 159, 190, 256
சந்திரகுப்த விக்ரமாதித்யன் ... 218
ஆங்கிலேய அரசாட்சியும் அனுமரணமும் 223

சுகாதார சாஸ்திரம்
பள்ளிச் சிறுவர்களின் சுகாதாரம் 25, 54
மாணுக்கர்களின் தேகசௌக்கியத்தைக் கவனித்தல் ... 317

தாவர சாஸ்திரம்
பருத்தி ... 89
பலா ... 221

பிரக்ருதி சாஸ்திரம் 31, 187, 227, 290
காந்த சக்தி ... 22

உலோக சாஸ்திரம்
அப்ரகம் .. 9

ஸங்கீத சாஸ்திரம்
ஐரோப்பிய ஸயன்ஸும் கர்நாடக ஸங்கீதமும் 250, 283

கல்வி
கிண்டர்கார்டன் ... 122
குருடர்களின் கல்விப் பயிற்சி ... 254
பிரதம கல்விச்சாலைகளின் நோக்கம் ... 311
ஸ்கூல்களில் இங்கிலீஷ் மொழிபெயர்ப்பு. 375

வியாபாரம்
பருத்தி : அதன் வியாபாரமும கைத் தொழிலும் ... 89

பக்கம்

மொழி ஆராய்ச்சி
தமிழ் நூற்பயிற்சி ... 7
தமிழ் நூல் வரலாறு ... 17
தமிழ் நூல்கள் ... 47
தாய்ப்பாஷையில் கல்வி போதித்தல் ... 150

வாலிபச் சாரணன் 135, 154, 189, 294

பொது வியாஸங்கள்
கம்பரும் ஸ்ரீராமபிரானும் 14, 64
நட்பு ... 49
நம் சிறுவர்களின் மனோபாவமும் முற்போக்கும் ... 287
உலக இன்பங்களும் சித்தார்த்தரும் ... 344

செய்யுள்
சேர நாட்டுத் திருப்பதிகள் ... 1
குருட்டுச் சிறுவன் ... 21
வந்தனோபசார வாழ்த்து ... 158
சீட்டுக்கவி ... 214
பொங்கல் அகவல் ... 217
ஒருமை விண்ணப்பம் அல்லது ஸமரஸப் பிரார்த்தனை ... 292
அரசர் பிறந்த நாள் ... 352

அதிசயக் காட்சி
ஐபல் கோபுரம் ... 57

நமது சிறு கதைகள்
ஆபீஸ் ரகஸ்யம் 27, 59, 98
அபுஹாஸன் அல்லது விசுவாஸத்தின் அவசியம் 166, 193
பிரேமாவதி 232, 263
போஸ்ட்மாஸ்டர் 295, 326
காலத்தின் கோலம் 353, 381

சிறுவர்களுக்கான பக்கங்கள்
வாலிபச் சாரணன் 135, 154, 189, 294
ஐந்தாம் ஜார்ஜ் சக்கரவர்த்தி ... 33
சண்டையொழித்த சக்கரவர்த்தி ... 72
நல்ல விக்டோரியா ... 73
தைர்யமுள்ள 600 யுத்தவீரர்கள் ... 74
மஹா அலெக்சாந்தர் ... 106
அலெக்சாந்தரும் டியாஜனிஸும் ... 107
அலெக்சாந்தரும் ஆபிரிககத் தலைவரும் ... 140
ஸர் வால்டர் ரலே ... 201
பொறுமை (ஸர் ஐஸக் நியூடன்) ... 235
இடைவிடா முயற்சி ... 303
தன் வழி அறிதல் 335, 362
தீயோரைக் காண்பது தீது ... 388

அட்டவணை

பக்கம்

ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

அருந்ததி ... 35
அனஸூயை ... 74, 108, 141
பெண்புத்தி ... 171
அஹல்யாபாய் 204, 235, 266
இந்துமதியின் ஸ்வயம்வரம் ... 300
தாராபாய் 330, 363, 390,

சரித்திர சம்பந்தமான கதை

வஸந்த மந்திரம் 65, 102, 136, 161, 195, 229, 259, 297, 329, 357, 383

பிரபஞ்ச வர்த்தமானம்

கல்விக்காக ஓர் கொடை; கம்பியில்லாத் தந்தியால் டெலிபோன்; குழந்தைகளின் தேக சௌக்கியம்; வருமான வரிக்குள்ளாகும் தொகையைக் குறைத்தல்; கனம் கான்பஹதூர் ஹபுபுல்லா ஸாஹிப் பகதூர். ... 40
ஆப்கானிய யுத்த முடிவு; சென்னைச் சட்டசபை; ஜனரல் போதாவின் தேகவியோகம் ... 79
சுதேச ராஜ்யங்களில் வித்யாவிஷயம்; ஆந்திர மாகாணம். ... 80
கம்பளத் தொழில்; ஏழைகளுக்கு வாச வசதிகள்; பிள்ளைகள், பெண்கள் இவர்களின் கல்விச் செலவு; நூதன முறையில் விவசாயம்; மின்சார சக்திக்காக மைசூர் கவர்ன்மெண்டின் ஏற்பாடு; வங்காள கைத்தொழில்கள் ... 112
ஜயமண்டபம்; சேலம் ஜில்லா வித்தியா கான்பரன்ஸ் ... 144
லக்ஷ்மணபுரியில் யூனிவர்ஸிடி; பேசும் படங்கள் ... 175
சென்னை யூனிவர்ஸிடியின் வருஷாந்தரப் பட்டமளிப்பு; அயல் நாடுகளில் ஹிந்து மதம்; அகில பாரத புத்தகசாலைக் கூட்டம்; படிப்பிற்காகப்படும் கஷ்டம்; அமெரிக்காவில் ஆகாயப் போக்கு வரவு விருத்தி ... 176
பெருங்கொடை; ஆப்கன் யுத்தச் செலவு; இலங்கை காங்கிரஸ் மகாசபை; ஸ்கூல் இன்ஸ்பெக்டராக நியமனம் பெற்ற மிஸ்டர் ஸ்ட்ரேதம் ... 208
ஸர் சங்கரன் நாயர்; ஆரிசிவிலே; இலங்கை ஜாதீய மகாநாடு; ஸ்ரீமான் எஸ். கஸ்தூரிரங்கய்யங்கார். ... 240
மதலுங்கும், தமிழும் ... 271
சட்டசபை அங்கத்தினரின் எலக்ஷன்; வேலை நிறுத்தச் செலவு; சென்னையில் டெலிபோன் வசதிகள்; சென்னை கார்ப்போரேஷன் புதிய பிரசிடண்ட்; லாலா லஜபதிராய் ... 272
வி. பி தபால் முறை; தமிழ் நாட்டில் ஓர் சர்வகலாசாலை; சில துக்க சம்பவங்கள்; சர்வகலாசாலை அங்கத்தினர் பதவி; வீட்டு வாடகை மசோதா ... 304
ஓர் அதிசயமான இயந்திரக்கை ... 335
பயிர்த்தொழில் பரிசீலனைக்காக ஓர் உபகாரச் சம்பளம்; மோடாரில் செல்வதினால் உண்டாகும் நன்மைகள்; ஸர் ஜே. ஸி. போஸ்; தர்பங்கா மஹாராஜாவின் நன்கொடை; இந்தியசாரணச் சிறுவர் சங்கம் ... 336
உலகெங்கும் வலைவீசுதல்; காகிதப் பஞ்சம்; மின்சார சக்தி ... 368
இந்தியாவில் மரண விகிதங்கள்; இந்தியப் பயிற்சியின் பெருமை ... 396

அடிக் குறிப்புகள்

கற்பூரத்தைலம் ... 19
யுத்தச் செலவு ... 39

புத்தகக் குறிப்பு

ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர் சரிதை ... 121

சித்திரப் படங்கள்

முருகக் கடவுள் ... 1
காலஞ்சென்ற டி. ஆநந்தராவ் ... 13
டாக்டர் ரவீந்திரநாத் டாகூர் ... 20
காந்த சக்தியைப்பற்றின படங்கள் 22, 23, 24
ஜார்ஜ் சக்கரவர்த்தியின் உருவச்சிலை. ... 33
சென்னை சட்டசபை அங்கத்தினர்கள் ... 41
ஸர் பிரபுல்லசந்திர ரே ... 52
கனம் கான் பஹதூர் ஹபிபுல்லா சாஹிப் பஹதூர் ... 81
கனம் ஆர். லிடில்ஹேல்ஸ் ... 113
கௌதம புத்தர் ... 121
காலஞ்சென்ற ஸர் வி. ஸி. தேசிகாசாரியார் 145
ஸர் பொன்னம்பலம் அருணாசலம், எம். ஏ. 177
ஸ்ரீ கிருஷ்ணன் வேணுகானம் ... 209
காலஞ்சென்ற மைஸூர் திவான் ஸர் கே. சேஷாத்திரி ஐயர் ... 241
ஸ்ரீ காளஹஸ்திக் கோயிற் காட்சி ... 273
ஸரஸ்வதி—லக்ஷ்மி ... 305
விக்டோரியா மகாராணியாரும், அவரது மந்திரிமார்களும் ... 337
பரமசிவன் ... 369

PRESS & PUBLIC OPINIONS

Annual Subscription:— Inland Rs. 5 : : Foreign Rs. 6 *(Post free)*

Note :—No Half Yearly subscription is accepted. However, as a special case, those who feel inconvenience to pay. Rs. 5 at once, may pay the same in two instalments It is advisable to subscribe from the commencement of the volume, i. e., July when new serials are started.

The Hindu.—* A well-conducted Tamil monthly. The articles cover a wide range of subjects of absorbing interest to the readers. All the articles are written in easy, simple and direct Tamil & are entirely free from pedantry. The journal fulfils very ably the function of diffusing much useful knowledge among the Tamil people.

The Hon'ble Mr. Justice, T. V. Seshagiri Ayyar.— The subjects dealt with are of consuming interest to the reading public. * * I have taken the Journal ever since its first number was published: and I can speak to the good work it has done.

M. Ramaswami Ayyangar Esq., Inspector of Schools.—* * The Viveka Bodhini is a very useful booklet to Elementary School teachers. It teaches on a variety of topics which are calculated to increase the stock of knowledge of the Elementary School Masters. It is very essential that a copy of the Journal ought to be in the hands of teachers. I therefore recommend that it may be subscribed for by the Taluk Board for circulation among the teachers of all the Schools under its control.

Rao Bahadur, Mr. A. C. Pranatartihara Ayyar, I. S. O., Retired Inspector of Schools.—The Viveka Bodhini is a journal conducted on right lines. The matter is both interesting and instructive and so distributed as to suit all classes of the Tamil-reading public. * * A special feature of the journal is, I am glad to note the attention given to the improvement of scientific knowledge among the people.

Rao Saheb Mr. T. V. Sivakumara Sastri, Principal, Teachers' College, Saidapet.—*The articles are very instructive and embrace a variety of useful topics. You deserve to be specially complimented upon the articles on scientific subjects that you are making available to the general public.

T. S. Subramania Ayyar Esq., M.A., L.T., Inspector of Schools.—* * Your journal is now *the best*, the *cheapest* and *the most ably conducted Tamil Monthly* in our midst,

K. V. Subbaiya Aiyar Esq., M.A., L.T., Assistant Inspector of Schools.—The articles in this Journal are all written in *very simple and idiomatic style and deal with a variety of highly interesting and instructive subjects and I know of no other Journal that is at once so cheap and so good as your Viveka Bodhini.*

"சுதேச மித்திரன்."—* * விவசாயம், கல்வி, பூர்வீகர்களின் சரித்திரம், தற்காலத்துப் பிரசித்தி பெற்றவர்களின் சரித்திரம், தற்காலத்து யுத்த விஷயம், ஹிந்துக்களின் விரதாதிகள், சிலாசாஸன ஆராய்ச்சி, தமிழ் ஆராய்ச்சி, ஸ்தல சரித்திரங்கள் பட்சிகளின் சாஸ்திரங்கள் முதலிய தலைப்புக்களின் கீழ் அநேக அருமையான வியாஸங்கள் எழுதப்பட்டு இந்த சஞ்சிகை விளங்குகிறது. * * இப்போதினியை நம் தமிழுலகினர் நன்கு போஷிப்பாராக.

The Madras Mail.—* * The excellent Tamil monthly of Madras, has maintained its usual standard of excellence. * * Almost all the articles are written in simple and chaste Tamil. **There is much in the journal to supply food for teachers of Elementary Schools.**

The New India.—* * The Viveka Bodhini is a very useful and interesting publication. The noteworthy feature of the publication is "the richness and variety of the subjects" served to the public. * * Most of the articles are written in easy elegant Tamil,

Sir P.S Sivaswami Aiyar, K. C. S. I., C. I. E.—* * The articles are written in an easy, readable style and deal with a variety of interesting subjects.

N. Vijayaraghavan Esq., Dy,. Accountant General.— I have been a regular reader of the "Viveka Bodhini" from the beginning and think that it is just what a popular journal ought to be. The variety of subjects it treats of and a certain level of excellence in easy style of writing conspicuous in it appeal readily to people whose general experience of average Tamil Journals would ordinarily lead them to expect either mysticism and pedantry on the one hand or vulgarity and puerility on the other.

மஹாமஹோபாத்யாய பிரஹ்மஸ்ரீ வே சாமிநாதய்யரவர்கள், * * நீதிகளைக் கற்பிக்கும் சிறு கதைகளும், புதிய நாடகங்களும்; சிலமொழி பெயர்ப்புகளும், தற்கர்லத்திற்கேற்ற நாகரீக விஷயங்களும் இப்பத்திரிகையில் மிக எளிய நடையில் எழுதப்பெற்றிருக்கின்றன. சிறுவர்களும் பெண்பாலாரும் இதனால் பல விஷயங்களையும் வருத்தமின்றித் தெரிந்துகொள்ளலாம்.

மஹிபாலன்பட்டி, ம-ள-ள-ஸ்ரீ, வித்வான் மு. கதிரேசன் செட்டியாரவர்கள்.—* * விவேக போதினி தக்கபண்டிதர்களாலும் பெரியோர்களாலும் மதிக்கப்பெற்றதென்பதும், நவீன சாஸ்திரங்களைப்பற்றியும் பல அரியவிஷயங்களைத் தாங்கி வருகின்றதென்பதும் அதன் ஆரம்பகாலத்தில் இரண்டு வருஷ சஞ்சிகைகளைப் படிக்கும்பொழுதே அறிந்துளேன். "விவேக போதினி" எவ்வாற்றானும் சிறந்ததொரு ஸஞ்சிகை யென்பதென் கருத்து.

"இந்து நேசன்."— படித்த தமிழ் மக்களின் விசேஷ ஆதரவுக்கும், நன் மதிப்புக்கு முரியதாயிருந்து வருவதோடு, இது தான் கொண்டிருக்கும் பெயருக்கேற்க, படியாத தமிழ் மக்களுக்கு விவேகத்தை நன்குபோதிக்கும்பத்திரிகையாகவேவிளங்கி வருகிறது. * இப்பத்திரிகை நீண்ட காலம் நடந்து தமிழ் மக்களுக்குப்பெருந்த நன்மையைச் செய்ய வேண்டு மென்பதே நமது விருப்பமாகும்.

Annual Bound Volumes Rs. 6 each.

உ [illegible]

[illegible]

[illegible]

[illegible]



முருகக் கடவுள்

விவேகபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்.

தொகுதி XII | சித்தார்த்தி௵ ஆனிமீ :: 1919-௵ ஜூலைமீ | பகுதி 1

சேரநாட்டுத் திருப்பதிகள்

SACRED PLACES IN CHERANAD

[ஸ்ரீமான் கே. ஜி. சேஷய்யர்

அவர்கள், பி. ஏ., பி. எல்.]

1. திருவநந்தபுரம்

அயோத்
கத்தில், ...ளுங் கலைமகளுங் களிப்புடன்
விடத்தில்வாழ் திருப்பதியாம்
க்ரோதப்நங்தை தனில்மகிபன்
வொட் திருமூலன் சேரலனுன்
...யருத்தொண்டு தினந்தினமுஞ்
செயப்பெற்றே யரவணைமேற்
றிருத்துயில் கொள் திருவநந்தன்
பதம் பணிவார்க்கிலை யிடரே.

2. ஜநார்த்தனம்

பித்தனைத் திரிந்த வென்னைப்
பிணியினின் றகற்றி யன்பும்
பத்தியுமுடைய னாக்கிப் பணிவொடு
தொண்டு செய்யச்
சித்தமுஞ் செவ்வையாக்கி
ஜனார்த்தன விரங்கிக் காப்பா
யத்தநின் னடிமையல்லா
லறிகிலே னுய்யுமாறே.

3. செங்குன்றூர்

செங்குன்றூர்த் தேவி
செழுங்கருணைச் சோதியே
துங்கம் விளைக்குநின்
தூய் நோக்கால்—கங்குல்
விரைந்தோட மக்கள்
விவேகமொடு ஞானப்
பெரும்பேறு பெற்
றிடுவர் காண்.

4. திருவல்லா

தோழிகேள் கண்ணன் சூதைத்
தொடியணி யாயர் மாதர்
தாழியில்வைத்த செய் பாற்
றயிர் கவர்ந்துண்டு பின்னுள்
மாழை நுண்ணிடையாரின்கி
மனங்கவர்ந் தொளித்த மாயன்
யூழையிலாழி பெண்டிர்
புகாவிதம் நாட்டினனே.

5. வைக்கம்

கற்றிலேன் கலைகளொன்றுங்
கருது நன்னலங்கள் யாதும்
பெற்றிலேன் பேதையானேன்
பெருந் திருக்கோவிலப்பா!
நற்றவப்பயனுனின்டு நணுகினே
னுய்ய வெண்ணிப்
பற்றினே னெளியேன் நின்றன்
பதமிணை ; அருள் செய்வாயே!

6. ஆல்வாய்

ஆலவா யரனே! ஆற்றை
யாரமா யணிந்த தென்னே!
காலனைக் கனித்த காலுங்
கருமணற் கனைந்த தென்னே!
மாலயன் மயக்கவாம மதலையாய்
நிலைத்தா யீண்டைப்
பாலிதழ் மதலை தீண்டப்
பதசிரந் திகழ்ந்த தென்னே!

7. திருவாரூர்

சித்தந் தெளிந்து
திருவாரூர் வீற்றருளும்
அத்த னடிபணிய
வாகுமே—முத்தி யெனுஞ்
சீகாழி யான்மாற்றஞ்
சீர்வஞ்சி யாரூர்க்கு
மாகாதோ வைம்
முகனே செப்பு.

8. திருவஞ்சைக்களம்

நரர்களுஞ் சுரர்களும் நலநனிசிறக்க
வருட்கட லான்திரு வஞ்சையின் களமார்
திரைபுரட் குடதிசைச் சிதம்பரத் தமர்ந்தான்
திருக்கழற் சிரமிசைக் கொளவிடர் கெடுமே.

விவேக போதினி

தொ.12] சித்தார்த்தி ௵ ஆனி ௴ [ப. 1

யுதிஷ்டிரர்
YUDHISHTIRA

பாண்டுமஹாராஜன், ரிஷியின் சாபத்தால் குந்தியென்ற தன் பார்யையிடத்தில் புத்ரர்களை உண்டுபண்ண முடியாமற்போன பொழுது குந்தி, "நாதா! துர்வாஸ மஹர்ஷியின் அனுக்ரஹத்தால் எனக்குக் கிடைத்திருக்கும் மந்த்ரங்களால் மஹிமையுள்ள தேவதைகளை அழைத்து அவர்களால் உத்தம புத்ரர்களை அடையலாம். இப்பொழுது, முதலில் எந்த தேவதையை ப்ரார்த்திக்கட்டுமெ"ன்றாள். அதற்குப் பாண்டு, "பெண்ணே! ப்ரஜைகளை ஆளுவதற்குத் தர்மத்தின் ஸஹாயம் அவச்யம். ஆகையால், ஸகல தேவதைகளுக்கும் மேலானவனான தர்மதேவதையை வேண்டிக்கொள். அவருடைய அனுக்ரஹத்தால் பிறக்கும் புத்ரன் குருகுலத்திற்கு சிரோமணியாய் விளங்குவான். அவனுடைய மனஸ் ஒருபொழுதும் அதர்மத்தில் செல்லாது. தர்மத்தின் ஆதியையும் நடுவையும் முடிவையும் பரம ரஹஸ்யங்களையும் அறிவான். அவனால் நமது கீர்த்தி ஸகல லோகங்களிலும் ப்ரகாசிக்கும்; உத்தம லோகங்களும் நமக்குக் கிடைக்கும்" என்றார்.

பாண்டுவின் எண்ணப்படி நல்ல முஹூர்த்தத்தில் பிறந்த இக்குழந்தை சமதமாதி ஸகல கல்யாண குணங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. அக்காலத்தில் ஆகாசத்திலிருந்து அசரீரி வாக்கு "இவன் மனுஷ்யர்களில் உத்தமனும் தர்மாத்மாக்களில் ச்ரேஷ்டனும் மஹா பராக்ரமசாலியும் ஸத்யம் தவறாதவனும் லோகத்தில் மன்னர்க்கு மன்னனுமாய் விளங்குவானெ"ன்று தெரிவித்தது.

இவனுக்கு, தர்மபுத்திரன், யுதிஷ்டிரன், அஜாதசத்ருவென்ற பெயர்களுண்டு. ஆனால், இவை இவனிடத்தில் பூர்ணமாய் ஒத்திருக்கவில்லை. தர்மதேவதையின் அம்சத்தால் பிறந்த புத்ரனானாலும், பாண்டுவின் புத்ரனென்பதே வாஸ்தவம். யுதிஷ்டிரர், அதாவது, யுத்தத்தில் அசையாமல் கலங்காமல் நிற்கிறவனென்ற கருத்திற்கு விரோதமாய், பாரத யுத்தத்தில் பல தடவை சத்ருக்களால் தோல்வியடைந்து புறங்காட்டி ஓடியிருக்கிறார். "அஜாத சத்ரு"வென்ற பதத்திற்கு, இவனுக்கு சத்ருவாய்ப் பிறந்தவர் ஒருவருமில்லையென்று பொருள் கொள்ளும். தன் நிகரற்ற பராக்ரமத்தால் சத்ருக்களைத் தலையெடுக்கவொட்டாமற் செய்து, யாரும் இவனுக்கு சத்ருவாக ஏற்படுவதற்குப் பயந்து, இவனுக்கு சத்ருவே இல்லாமலிருக்கலாம். அல்லது, இவனுடைய உத்தம குணங்களாலும் ஒப்பற்றபொறுமையாலும் இவனிடத்தில் கோபங்கொண்டு இவனுக்குக் கெடுதிசெய்ய நினைக்கக்கூடியவர்களே இல்லையென்றும் சொல்லலாம். இவ்விரண்டும் இவரிடத்தில் பொருந்தவில்லையென்பதற்கு துர்யோதனாதி கௌரவர்களே ஸாக்ஷி. ஆகையால், யுத்தத்தில் அசையாமல் இருப்பவரென்று பொருள் கொள்ளும் யுதிஷ்டிர சப்தத்திற்கு, எண்ணிறந்த ஜன்மங்களில் நமக்கு பரமசத்ருக்களாய், நம்மிடத்திலேயே வஸித்து, நம்மால் வளர்க்கப்பட்டு, மோக்ஷமென்ற நமது ராஜ்யத்தைப் பிடுங்கிக்கொண்டு, நம்மை வேரறுப்பதற்கு ஒவ்வொருக்ஷணமும் முயலும்- காமம் க்ரோதம் முதலிய ஆறு நித்ய சத்ருக்களுடன் எக்காலத்திலும் எந்த உலகத்திலும் எந்த ஸ்திதியிலும் நாம் புரியும் பெரும் போரில், தர்மத்தைக் கடைப்பிடித்து, ஸத்யத்தில் வேரூன்றி, ஆத்ம சக்தியின் மஹிமையால் பகைவர்களை மூல நாசஞ் செய்யும், ஸமுத்ரத்தைப்போல் கலங்காத காம்பீர்யமும் ஹிமயமலையைப்போல் அசைக்க முடியாத திறமையுமுள்ள பரிபக்வ ஞானத்தால் விளங்குகிறவரென்றே அர்த்தஞ் செய்யவேண்டும்.

இப்படியே ஸ்ரீமத் ராமாயணத்திலும் சக்ரவர்த்தித் திருமகனுக்கு கனிஷ்ட ஸஹோதர

கருங்காலி உலக்கைக்கு வெள்ளிப்பூண் கட்டினதுபோல.

ரான சத்ருக்னாழ்வாருக்கு "சத்ருக்களை ஸம் ஹரிக்கிறவன்" என்ற பெயர் எப்படிப் பொருந் தும்? லவணாஸுரனுடன் யுத்தஞ்செய்து அவனை ஸம்ஹரித்தார்; அதுவும் ஸ்ரீராமன் கொடுத்த திவ்யாஸ்த்ரத்தைக் கொண்டே செய்யலாயிற்று. இதைத் தவிர ராம லக்ஷ்மணர்களைப்போல் ரணரங்க தீரராய், சத்ருகுல காலராய் எப்பொழுதாவது இவர் விளங்கினதாய்க் காணோம். கொடிய ராக்ஷஸ குலத்தை வேரறுத்த ராமலக்ஷ்மணர்களுக்கு சத்ருக்னனென்ற பெயர் கிடைக்கவில்லையே யென்றால், இதற்கு வால்மீகி மஹர்ஷியே சத்ருக்ன பதத்திற்கு வ்யாக்யானம் செய்து மேற்கண்ட ஆக்ஷேபணையை பரிஹரித்திருக் கிறார்.

அயோத்யா காண்டம் முதலாவது ஸர்க் கத்தில், 'சத்ருக்னோ நித்யசத்ருக்ன' என்ற விடத்தில், நித்ய சத்ருக்களான காமம் க்ரோதம் முதலியவைகளைத் தலையெடுக்க வொட்டாமல் ஸம்ஹரித்தவரென்று பொருள் விளக்கியிருக்கிறார்.

மேலும், ஸ்ரீராமபிரானுக்கு அந்தரங்கபக்த ரான ஸ்ரீத்யாகராஜஸ்வாமிகள், லேகனாவென்ற கீர்த்தனத்தில், ஸீதா லக்ஷ்மண பரத சத் ருக்ன ஹனுமான் முதலியவர்கள் எதற்காக ராமனை இடைவிடாமல் சுற்றிக்கொண்டிருக் கிறார்களென்ற கேள்விக்கு, பகவானுடைய திவ்யமங்கள விக்ரஹத்தின் ஸௌந்தர்யத் தில் ஸீதாப்பிராட்டியும், கைங்கர்யம் செய் வதில் இளையபெருமாளும், திருமுக மண்ட லத்தைப் பார்த்துப் பார்த்துத் திகட்டாமல் ஆராவமுதை அனுபவிப்பதில் பரதனும், பகவான் ஸ்ரீவைகுண்டத்தில் நித்யவிபூதியில் எழுந்தருளியிருக்கும்பொழுது கேவலம் சின் மயனாய் ஞானஸ்வரூபியாய் விளங்கும் ஸ்வ ரூபத்தை இடைவிடாது த்யானஞ் செய்வதில் சத்ருக்னனும், பாதஸேவையில் ஆஞ்ஜனேய ரும் ஈடுபட்டிருக்கிறார்களென்று தெரிவித் திருக்கிறார்.

இப்படியில்லாவிட்டால், யுதிஷ்டிர சப் தம் அர்ஜுனனுக்கே பொருந்தும். ஆனால், பாண்டவ கௌரவ ஸைன்யங்களைப் பார்த்து "ஐயோ! இவர்களை எப்படிக் கொல்வே னெ"ன்ற துக்கம் மேலிட்டு, "இவர்க ளைக் கொன்று ஓண்டியாய் ராஜ்யத்தை ஆள் வது மேலா? இவர்களைக் கொல்லாமல் ஆயு தங்களை விட்டெறிந்து க்ரூரமான க்ஷத்ரியத் தொழிலைத் துறந்து ஸாதுவான ப்ராஹ்மண விருத்தியைக் கைக்கொண்டு பிக்ஷையெடுத் துப் பிழைப்பது மேலாவெ"ன்று தர்மஸந் தேஹமுண்டானது அர்ஜுனனுக்கல்லவா? தன் தர்மத்தை விட்டு பரதர்மத்தைச் செய்ய விரும்பின அர்ஜுனன் நித்யசத்ருக்களுடன் புரியும் போரில் அசைவில்லாமல் ஸ்திரமாய் நிற்பவனென்று எப்படிச் சொல்லமுடியும்?

யுதிஷ்டிரரோ தர்ம தேவதையின் அம்சத் தால் உண்டானவர். பீஷ்மர், த்ரோணர், விது ரர், தௌம்யர், நாரதர், மார்க்கண்டேயர், வ்யாஸர், ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா முதலிய மஹானுபாவர்களிடத்தில் தர்ம ரஹஸ்யங் களைக் கேட்டறிந்து ஸந்தேஹ விபரீதங்களற்ற வர். லோகரீதியாய் இவருக்கு சத்ருக்கள் ஏற் பட்டாலும், அவர்களாலும் கொண்டாடப் பட்டவர்.

த்ரோணாசார்யரால் பாண்டவ ஸைன்யம் மடிவதைக் கண்டு வருந்தின யுதிஷ்டிரரைப் பார்த்துப் பீமன், "அண்ணா! இந்த த்ரோணரை கொல்லக்கூடியவன் ஒருவனுமில்லை. அவர் யுத்தம் செய்யாமல் ஓய்வதற்கு வேண்டிய உபாயத்தையே தேடவேண்டும். தன் ப்ரிய புத்ரனை அச்வத்தாமா கொல்லப்பட்டானெ ன்ற சொல் அவருடைய காதில் விழுந்தால், அவர் துக்கத்தால் யுத்தஞ் செய்யாமல் நின்று விடுவார். இதற்காகவே மாளவ ராஜனுடைய ஓர் சிரேஷ்டமான யானையை நான் கொன்று, அதன் பெயர் அச்வத்தாமாவானதால், அவ ரிடத்தில் போய் அச்வத்தாமா கொல்லப்பட் டானென்று கர்ஜித்தேன். அவர் என் வார்த் தையை நம்பாமல், 'யுதிஷ்டிரன் எப்பொழு தும் நிஜத்தையே சொல்லுகிறவன். பொய் யையே அறியான். அச்வத்தாமா கொல்லப் பட்டானென்று அவன் சொன்னால் அதைத் தடையில்லாமல் நம்புவே' னென்றார். த்ரோ ணர், தன் மரணத்தைப் பெரிய லாபமாக எதிர் பார்த்துக்கொண்டிருக்கும் யுதிஷ்டிரரிடத்தில் எவ்வளவு நம்பிக்கை வைத்திருக்கவேண்டும்? முடிவில் அவருடைய வார்த்தையை நம்பியே உயிரைக் கொடுத்தார்.

ஒரு ஸமயத்தில் துர்யோதனன் பீஷ்மரிடத் திற்குச் சென்று, "ஸ்வாமி! எனக்கு பீம

ஸேனனால் பெரும் பயமுண்டா யிருக்கிறது. என் துடையை கதாயுதத்தால் முறிப்பே னென்றும், என் தலையைக் காலால் மிதிப்பே னென்றும் அவன் பயமுறுத்தியிருக்கிறான். ஆகையால், எனக்கு அவனால் அபாயமில்லா மல் என் தேஹம் வஜ்ரம்போல் ஆயு தங்களால் நாசமடையாமலிருப்பதற்கு ஓர் உபாயத்தைத் தாங்கள் சொல்லவேண்டு மென்று ப்ரார்த்தித்தான். மூன்று காலங் களையு மறிந்த மஹாஞானியான பீஷ்மா சார்யர் "அப்பா! இந்த விஷயத்தில் உனக்குத் தகுந்த யுக்தி சொல்லக்கூடியவன் யுதிஷ்டிர னைத் தவிர வேறெவருமில்லை" யென்றார். துர்யோதனன் கைகொட்டிச் சிரித்து "வெகு நன்றாயிருக்கிறது! யாருடைய உயிரை வாங்க விரும்புகிறேனோ அவர்களையே அதற்கு உபா யத்தைச் சொல்லும்படி நான் கேட்டால், என் னைப்போல் மூடன் யாராவதுண்டோ? நானும் என்னைச் சேர்ந்தவர்களும் வேருடன் அழிய வல்லவா அவன் யுக்தி சொல்வானெ"ன்றான். பீஷ்மர் "குழந்தாய்! நீ தர்மபுத்ரனை நன்றாய் அறிந்தாயில்லை. தன் உயிரையும் கீர்த்தியையும் இஹபரக்ஷேமத்தையும் காட்டிலும் தர்மத்தை யும் ஸத்யத்தையும் மேலாய் எண்ணும் மஹா புருஷன் அவனைத்தவிர யார்? தன்னைவெட் டிக் கொண்டிருக்கும் மனுஷ்யனுக்குத்; தான் பூமியில் விழும் வரையில் நிழலையும் குளிர்ச்சி யையும் கொடுத்துக்கொண்டு, தான் இறந்த பிறகும் தன் இலைகளாலும் புஷ்பங்களாலும் பழங்களாலும் மரத்தாலும் பலவிதமாய் அவ னுக்கு உபகாரத்தைச் செய்யும் மஹாவிரு க்ஷத்தைப்போல், பரோபகாரமே யுதிஷ்டிர ரூபமாய் பூமியில் விளங்குகிறதென்று சொல்ல வேண்டு"மென்றார்.

துர்யோதனன் ஒருவாறு நம்பிக்கை யுண்டாய், பீஷ்மருடைய சொல்லை பரீக்ஷித் துப் பார்ப்போமென்று, தர்மபுத்ரர் தனி யேயிருக்கும் ஸமயத்தில் அவரிடத்திற் குச் சென்று "அண்ணா! எனக்கு பீமஸேன னால் எப்பொழுதும் பெரும் பயம் நேரு மென்று நடுங்கிக்கொண்டிருக்கிறேன். அதற் காக என் தேஹம் வஜ்ரத்தைப்போல் கடின மாய் ஆயுதங்களால் சிதைவுறாமல் எனக்கு அமரகாயம் கிடைக்கும் உபாயத்தைச் சொல்ல வேண்டும். இது தங்களாலேயே முடியு மென்று பீஷ்மர் எனக்குச் சொன்னா" ரென் றான். தர்மபுத்ரர் அதைக் கேட்டு ஸந்தோஷித் துக் "குழந்தாய்! அவருக்குத் தெரியாத விஷ யமுமுண்டோ? ஆயினும், என்னைச் சொல்லும் படி ஆக்ஞாபித்ததால் சொல்லுகிறேன். உன் தாயான காந்தாரிதேவி மஹாபதிவ்ரதை. தன் பர்த்தா நேத்ரமில்லாதவரென்று கேள்வி யுற்று, "அவர் அடையாத ஸுகம் எனக்கே னெ"ன்று வஸ்த்ரத்தால் கண்களைக் கட்டிவிட் டாள். மிகுந்த யோகவித்தியுள்ளவள்; உன் னிடத்தில் எல்லையற்ற ப்ரியம் வைத்தவள். உன் க்ஷேமத்தையே கோருகிறவள். அந்த உத்தமி பூர்ண கிருபையுடன் தன் கண்களால் உன் தேஹத்தைப் பார்த்து அனுக்ரஹித்தால் அவளுடைய பார்வை விழுந்த இடமெல்லாம் வஜ்ரகாயமாகு"மென்று யுக்திசொல்லியனுப் பினார் பிறந்தது முதல் பாண்டவர்களுடைய நாசத்தையே தேடிப், பல யுக்திகளைச் செய்து பலிக்காமல், மறுபடியும் அவர்களைக் கொல்வ தற்குப் புதிய உபாயத்தை சொல்லும்படி கேட் கும் துர்யோதனனுக்குக், கல்மஷமில்லாமல் ஒளிக்காமல் அவன் கார்யத்தை தன் கார்யமாய் எண்ணித், தன்னையும் தன்னைச்சேர்ந்தவர் களையும் முற்றிலும் மறந்து, ஸத்யம் ஒன் றையே ப்ரதானமாய் எண்ணித், தங்களுடைய கழுத்தை அறுக்கும் கத்தியைத் தங்களுடைய பரம சத்ருவின் கையில் ஸந்தோஷமாய்க் கொடுத்த மஹாபுருஷனை யுதிஷ்டிரருக்கு நிகருண்டோ? மஹாபாபியான துர்யோதனனும் இவருடைய நேர்மையையும் தர்மபுத்தியை யும் ஸத்ய வ்ரதத்தையும் நம்பினானல்லவா? அப்படி நம்பிக்கை வைத்தது வீணாயிற்றோ? யுதிஷ்டிரர் ஸம்பந்தப்பட்டவரையில் அது வீண்போகவில்லை. அவர் சொன்ன உபாயம் தவறாது; பூர்ண பலத்தையே கொடுக்கும். ஆனால், அந்த மஹாத்மா எந்த தர்மத்தைக் கலங்காமல் பக்தியுடன் அனுஷ்டித்து வந் தாரோ, அந்த தர்மதேவதையே அவருக்கு சத்ருக்களால் யாதொரு தீங்கும் நேராமல் காக்குமல்லவா?

இப்படித் துர்யோதனன் வந்து கேட்ட தும், தர்மபுத்ரர் உபாயம் சொன்னதும், தர் மாத்மாவும் ஸகல ஜீவராசிகளின் ஹ்ரு தயத்தில் அந்தர்யாமியாயும் வஸிக்கும் கண்ண பிரானுக்குத் தெரியாமலிருக்குமா?

"பாண்டவர்களே என் பஞ்ச ப்ராணன்கள்" என்று எப்பொழுதும் அவர்களுக்கு யாதொரு கெடுதியும் நேராமல் கண்ணிமையைப்போல் ரக்ஷித்துக்கொண்டிருப்பவர், உடனே தர்ம புத்ரரிடத்திற்கு வந்து "என்ன யுதிஷ்டிரரே! உங்களுடைய குடும்பக் கலஹம் ஒருவிதமாய்த் தீர்ந்து, நீங்களும் கௌரவர்களும் ராஜியானதைப்பற்றி மிகவும் ஸந்தோஷிக்கிறேனெ"ன்றார்.

தர்மபுத்ரர் "அப்படி ஒன்றும் நடக்கவில்லையே. தங்களுக்குத் தெரியாமல் நாங்கள் எதையாவது செய்வோமா? மேலும், அந்த அஸாத்யமான கார்யம் தங்களையன்றி வேறு யாரால் முடியுமெ"ன்றார். கிருஷ்ணன் "நான் வரும்போது துர்யோதனன் உமது மாளிகையிலிருந்து போவதைக் கண்டேன். ஒரு நாளும் பிறருக்கு வணங்காதவனும் உங்களிடத்தில் தீராப்பகைகொண்டவனுமான துர்யோதனன் உம்மைத் தேடி வந்ததைக் கண்டு நான் இப்படி எண்ணலாயிற்றெ"ன்றார். யுதிஷ்டிரர் "அவன் என்னிடத்தில் ஒரு கார்யத்தை உத்தேசித்துவந்தானெ"ன்று நடந்த வரலாற்றைத் தெரிவித்தார். கிருஷ்ணன் "தர்மபுத்ரா! நல்ல கார்யம் செய்தாய்? உன்னிடத்தில் அவன் வைத்த நம்பிக்கைக்குத் தகுந்தபடி நடந்துகொண்டாய்; பீஷ்மருடைய வார்த்தையை நிஜமாகச் செய்தாய்; உன் மஹிமையை லோகமெங்கும் காலமுள்ளவரையில் நிலைநாட்டினை" யென்று அவரை மெச்சி த்ரௌபதையின் வீடுதிக்குச்சென்று பீமார்ஜுன நகுல ஸஹதேவர்களை வருவித்து, "பரம ஸாதுவும் கபட லேசமில்லாதவரும் தர்மானுஷ்டானத்திலேயே முரட்டுப் பிடிவாதமுள்ளவருமான நமது யுதிஷ்டிரராலேயே நாமெல்லோரும் துர்யோதனனென்ற யமனுடைய கையில் கட்டி ஒப்புவிக்கப்பட்டோம். இனி நமக்கு வேறு கதியில்லை. க்ரூரமான மரணத்தை எந்த நிமிஷத்திலும் எதிர்பார்த்துக்கொண்டிருப்பதைத் தவிர நாம் செய்யக்கூடியது யாதுமில்லை. நீங்கள் இதுவரையில் அனுபவித்த எண்ணிறந்த கஷ்டங்களும் நான் பட்ட பாடும் இந்த தர்மபுத்ரனுடைய பாழும் தர்மானுஷ்டானத்தால் வீணாயிற்றே"யென்று துக்கமேலிட்டுத் தைர்யமிழந்து ஒன்றும் தோன்றாமல் குனிந்த தலை நிமிராமல சிந்தாக்ராந்தராயிருந்தார்.

அதைக் கேட்ட பீமன் முதலியவர்கள், மனம் பதறி உடல் நடுங்கி "கிருஷ்ணா! அநாதரக்ஷகா! தர்மபுத்ரரால் நமக்கு நேர்ந்த கெடுதிகளில் முதலாவது இதுதானோ? இப்படி எல்லாவற்றையும் தொலைக்கும்படியான ஸ்திதியில் அவர் எங்களை எவ்வளவு தடவையோ வைத்திருக்கிறார். அப்பொழுதெல்லாம் ப்ராணபிக்ஷை கொடுத்து ரக்ஷித்த உம்மையே இப்பொழுதும் சரணமடைகிறோம். பயத்தை விளைவிக்கிறவரும் நீரே. பயத்தைப் போக்குகிறவரும் நீரே" யென்று தீனமாய் ப்ரார்த்தித்தார்கள். அதைக் கேட்டு கண்ணன் "நான் என்ன செய்வேன். பரம ஸாதுவும் லோகஞானமில்லாதவனும் தர்மப்பித்து பிடித்தவனுமான யுதிஷ்டிரன் நம்மை இந்த வலையில் மாட்டிவிட்டு ஸுகமாய் உட்கார்ந்திருக்கிறான். ஏதோ என்னால் கூடியதைச் செய்துபார்க்கிறேன். ஆனால், என்னை நம்பவேண்டாம். மனிதன் எப்பொழுதும் கெடுதியை முதலில் எண்ணி, அதை அனுபவிக்க ஸித்தமாயிருக்கவேண்டுமெ"ன்று அவர்களிடத்தில் விடைபெற்றுக்கொண்டு சென்றார்.

இதற்குள் துர்யோதனன் காந்தாரியிடத்தில் சென்று, தான் தர்மபுத்திரரை உபாயம் சொல்லும்படி கேட்டதையும் அவர் சொன்ன பதிலையும் அவளுக்குத் தெரிவித்தான். அதைக் கேட்டு அவள் மனமகிழ்ந்து 'குழந்தாய்! நீ இன்று நடுராத்ரியில் ஒருவர் கண்ணிலும் படாமல் தனியே என் அந்தப்புரத்திற்கு வா. நான் கட்டை அவிழ்த்து உன் தேஹத்தில் எந்த பாகம் வஜ்ரத்தைப்போல் ஆகவேண்டுமோ அதைப் பூர்ண அனுக்ரஹத்துடன் பார்க்கிறேன். அதனால் உனக்கு அவ்விடத்தில் அமரகாயம் கிடைக்குமெ'ன்று சொல்லியனுப்பினாள். அப்படியே நடந்த விருத்தாந்தத்தை துர்யோதனன் தன் ஸஹோதரர்கள் கர்ணன் சகுனி முதலிய யாரிடத்திலும் சொல்லாமல், அர்த்தராத்ரிவேளையில் காந்தாரியின் அந்தப்புரத்திற்குச் சென்று, அங்குள்ள யாவரையும் அங்கிருந்து வெளிப்படுத்தித், தன் ஆடை யாபரணங்களைக் கழற்றிவிட்டு நிர்வாணமாய்க், காந்தாரியிருக்கும் அறைக்குப் போகும் மாடிப்படிகளில் ஏறிக்கொண்டிருந்தான். அப்பொழுது கண்ணபிரான், அந்த மாடியின் மேலிருந்து, புஷ்ப சந்தன தாம

பூல கந்தங்களால் அலங்கரிக்கப்பட்டு உல்லாஸமாய் இறங்கிக்கொண்டிருந்தார். பாதி வழியில் துர்யோதனனை சந்தித்து "யார் அங்கே? துர்யோதனனைப்போல் இருக்கிறதே" என்று ஆச்சர்யத்துடன் வினவினர். துர்யோதனன், "யார் அது? கிருஷ்ணனா? அர்த்த ராத்ரியில் என் தாயாருடைய அந்தப்புரத்தில் இப்படி எனக்கு ஸேவை ஸாதித்ததால் தன்யனானேனென்று பரிஹாஸமாய்ப்பேசி, தனக்குள் "இவன் மஹா வஞ்சகன், பாண்டவர்களுக்குப் பரம மித்ரன், எனக்குப்பரமசத்ரு. இவனை இங்கே இந்தஸமயத்தில் காண்பதால் எனக்கு மிகுந்த ஸந்தேஹமுண்டாகிறதெ"ன்று அச்சமுற்றான். அப்பொழுது கிருஷ்ணன், "காந்தாரி தேவியைத் தர்சித்து வெகு நாளாயிற்று. இன்று கொஞ்சம் அவகாசமிருந்தபடியால் அந்த மஹா புண்யத்தைஸம்பாதித்துக்கொண்டேன். லோகத்தில் மஹாபதிவ்ரதாசிரோமணி யென்ற பெயர் இவளுக்கே தகும். அருந்ததியும் அனஸூயையும் இவளுக்கு எம்மாத்ரம்? இவளுடைய அந்தக்கரண சுத்திக்கும் பதிவ்ரதா தர்மத்திற்கும் விரோதமான விஷயத்தை ஒருவன் நினைத்தாலும் அந்த க்ஷணமே அவன் சாம்பலாவான். அதிருக்கட்டும். நீ என்ன, இந்த வேஷத்துடன் இங்கே போய்க் கொண்டிருக்கிறாய்? நண்பர்களுடன் அளவுக்கு மிஞ்சி மதுபானம் செய்து அந்தக் குடிவெறியால் மெய்ம்மறந்தாயா? அல்லது, உனக்கு இவ்விதமான சித்தப்ரமை பிடித்து எவ்வளவு காலமாயிற்று? பனைமரத்தைப்போல் உயர்ந்து காட்டு யானையைப்போல் பருத்துத் திமிர்த்து, பார்க்கப் பயங்கரமாய், வஸ்த்ரமில்லாமல், பாதி ராத்ரி வேளையில், மஹா உத்தமியான காந்தாரியின் மாடிக்குப் போய்க்கொண்டிருக்கிறாயே! ஐயோ பாவம்! புத்தி சரியாகஇருந்தால் இப்படி செய்வானா" வென்று பரிதபத்துடன் சொன்னார். அதைக் கேட்டு துர்யோதனன் "கிருஷ்ணா நீ சொல்லுகிறபடியல்ல; வெளிப் பார்வைக்கு அப்படித்தான் தோன்றும். ஆயினும், ராஜ்ய தந்த்ரத்தில் நீ ஒருவனே நிபுணனென்ற எண்ணத்தை விட்டுவிடு" என்று தன் பெருமையையும் புத்திக் கூர்மையையும் தன்னால் பாண்டவர்களுக்கு நேரப்போகும் நாசத்தையும் கிருஷ்ணனுடன் சொல்லி அவரை கலங்கச்செய்து அவர் படும் துக்கத்தைப் பார்த்துத்தான் மகிழ வேண்டுமென்று, ஆதியோடந்தமாய் ஸகல விருத்தாந்தங்களையும் கண்ணனிடத்தில் தெரிவித்தான்.

அதை அதுவரையில் அறியாதவர்போல, கிருஷ்ணன் ஆச்சர்யத்தையும் வருத்தத்தையும் காட்டி, "அடே! மடையா! புத்தியற்ற பசுவே! உங்கள் நூறுபேர்களுக்கும் ப்ரஹ்மதேவன் தேஹங்களை ஸிருஷ்டித்தானேயொழிய புத்தியை வைக்க மறந்துவிட்டான். எப்படியும் புத்திமானே பலவானாவான். பாண்டவர்களிடத்தில் பரமப்ரீதியை வைத்து அவர்களுடைய க்ஷேமத்தையே என்றும் கோரி, உன்னுடைய அன்னத்தை தின்றுவளர்ந்து, உன்னால் ஸகல மேன்மையும் அடைந்து, அந்தரங்கத்தில் பாண்டவர்களுடைய ஜயத்தையும் உன் நாசத்தையும் எப்பொழுதும் ப்ரார்த்திக்கும் பீஷ்மரைப் பாண்டவர்களுடைய நாசத்திற்கும் உன் மேன்மைக்கும் தகுந்த உபாயத்தை கேட்கப்போன முழுமூடன் உன்னைத்தவிர யாருமுண்டோ! இதற்கு வேறு ஸாக்ஷி வேண்டுமோ? பாண்டவர்களுக்குள் மூத்தவனும் ருத்ராக்ஷப் பூனைபோல் தர்மமென்ற வேஷம்போட்டு லோகத்தை வஞ்சிப்பவனும் உங்களுடைய குடியைக் கெடுக்கும் எண்ணத்தையே தபஸாய்க் கொண்டவனுமான யுதிஷ்டிரனைப் பாண்டவர்களுடைய மரணோபாயத்தை உனக்கு சொல்லும்படி ப்ரார்த்திக்கவேண்டுமென்று உன்னை அவனிடத்திற்கு அனுப்பினதே போதாதா? ஐயோ பாபம்! கேவலம் முரட்டுபலத்தையும் பிடிவாதத்தையும் கூச்சல் போடுவதையும் முன்கோபத்தையும் தவிர உன்னிடத்தில்வேறு துர்க்குணங்களில்லையென்பது எனக்கல்லவா தெரியும்? ந்யாயமாய்ப் பார்த்தால் கபடமென்பதே தெரியாத உனக்கல்லவா தர்மபுத்திரரென்று பெயர்வைக்கவேண்டும்? அந்த ஆஷாடபூதி வாங்கவேண்டிய கெட்ட பெயரையும் வீண்பழியையும் பூர்வஜன்ம பாபத்தால் நீ வாங்குகிறாய். குருகுலக்கிழவன் ஸாதாரணமானவனல்ல. பழைய பெருச்சாளி; மஹா வஞ்சகாசார்யன்; கபடஸ்வாமி" யென்று கேட்போர் மனம் கரையும்படி கண்ணன் சொல்ல, துர்யோதனனுக்குப் பீஷ்மரிடத்திலும் தர்மபுத்ரரிடத்திலும் புதிதாய் உண்டான மதிப்பும் நம்பிக்கையும் ஸூர்யனைக்கண்ட இருளைப்போல் ஒழிய ஆரம்பித்தது.

தமிழ் நூற் பயிற்சி

THE STUDY OF TAMIL

[ஸ்ரீமான் ச. சச்சிதாநந்தம் பிள்ளை அவர்கள், பி. ஏ., எல். டி.]

தமிழ் வழங்கு நாட்டில் தமிழ் நூற் பயிற்சி இந்நாளில் எங்ஙிலையிலுள்ளதென்று ஒரு சிறிது ஆராய்ந்து, அப்பயிற்சியின் இன்றியமையாமையை விளக்குவதே இச்சிறு கட்டுரையின் கருத்தாம். ஒரு நூலில், "மூவேந்தரும் போய், முச்சங்கமும் போய், பாவேந்தரும் குறைந்து பழைய நூலுரைகளும் மறந்து, படிப்பாரும் கேட்பாரு மின்றித் தமிழ்க் கல்வி மழுங்குமிக் காலத்தில்" எனவொரு வாக்கியம் எழுகின்றது. தற்காலத் தமிழகத்தில் கற்றோரும் மற்றோருமா யுள்ளாரிற் பெரும்பாலோர் தம் செய்கையில் தமிழை எவ்வாறு நடத்துகின்றார் என்று உய்த்துணர்வோர்க்கு இச்சொற்கள் உண்மையே கூறுகின்றனவென்று புலப்படும்.

முதலில் நமது சென்னைச் சர்வகலாசாலையின் செய்கையை நோக்குவோம் : தமிழ் நாட்டிற் பிறந்து தமிழையே தாய் மொழியாகப் பெற்ற பலர் இக்கூட்டத்திலுள்ளார். இருந்தும் என்ன பயன்? 26-12-13-ல் கல்கத்தா சர்வகலாசாலையில் ஸர் அஷ்டோஷ் முகர்ஜீ என்னும் பெரியார் பின் வருமாறு மகிழ்ச்சியொடு பேசினர் :—

"After a struggle of a quarter of a century the elementary truth was thus recognised that if the Indian Universities are ever to be indissolubly assimilated with our national life, they must ungrudgingly accord due recognition to the irresistibie claims of the Indian Vernaculars."

"எக்காலத்திலாவது இந்திய சர்வகலாசாலைகள் நம்நாட்டு வாழ்க்கையோடு பிரிக்க முடியா வண்ணம் ஒன்று பட வேண்டுவதாயின், அவைகள் இந்திய மொழிகளின் மறுக்கவொண்ணு உரிமைகளை மனமார ஒத்துக் கொள்ளவேண்டும், என்னும் இவ்வடிப் படையான உண்மை இருபத்தைந்து வருடகாலப் போராட்டத்தின் பின் (நம சர்வ கலாசாலையில்) அங்கிகரிக்கப்பட்டது."

சென்னைச் சர்வ கலாசாலையில் இப்போது தென்னாட்டு மொழிகளுக்குக் கிடைக்கும் பெருமையை நோக்கின், ஸர் அஷ்டோஷ் முகர்ஜீ கூறி மகிழ்ந்ததுபோல் நாம் களித்தற்கில்லை என்று தோன்றுகிறது. இங்கு இம் மொழிகளுக்குப் பல ஆண்டுகளாக இருந்த உயர்நிலை திடீரென்று சில வருஷங்களுக்கு முன்பு மாற்றப்பட்டது. இம்மொழிகள் தலையெடுத்தற்கான பெருமுயற்சிகள் ஒன்றும் நடைபெறவில்லை. இவைகள்மாட்டு நம் சர்வகலாசாலை காட்டும் அன்பு மாற்றாந்தாய் அன்பிற் சிறந்ததொன்றன்று. இவ்விழி நிலை எவரால் உண்டாயது என்று நாம் இங்கு விசாரிக்க வேண்டுவதில்லை. இதற்கு முதல் வழிகாட்டிகள் அரசாங்கத்தாரல்லர் என்று மட்டும் உறுதியாய்க் கூறலாம்.

பி. ஏ. வகுப்பு வரையில் கட்டாய பாடமாக இருந்த தாய் மொழிகளை அங்நிலையிலிருந்து தாழ்த்தி விட்டமையாலும்,உத்தியோக முறையில் அம்மொழிகளில் வல்லுநரைப் பல வழிகளிலும் அவமதித்து எளிய நிலையில் வைத்திருத்தலாலும், அவற்றை வளர்க்கும் பொருட்டுத்தமிழ்நாட்டில் உள்ளன்போடு போதிய முயற்சிகள் செய்யப்படாமையாலும், தமிழ்ப் புலவர்களை முன்போல் ஆதரிப்பா ரில்லாமையாலும், பிறவாற்றாலும் விளையும் கெடுதிகள் பல. தமிழளவிற் பேசுங்கால் அதற்குத் தமிழ் பேசுவோராலேயே அசட்டை, கெடுதி, அவமதிப்பு என்னும் மூன்று பொல்லாங்குகள் நேர்ந்திருக்கின்றன என்று துணிந்து கூறலாம்.

இங்நிலைமைக்குக் காரணம் விளக்கத் தொடங்கின், அதுவே அதிக இடங்கொள்ளும். சுருங்கக் குறிப்பிடுங்கால், (1) அறியாமை (2) தேசப்பற்றும் பாஷைப்பற்றும் இல்லாமை (3) தன்னலமொன்றே கருதும் தாழ் குணம் என்பனவற்றை முற்படுத்திக் கூறலாம். உயர்ந்த ஆங்கில பட்டங்கள் பெற்றிருப்பினும் உத்தியோக முறையிலன்றி வேறு சமயங்களிலெல்லாம் தம் தாய்மொழியிலேயே பேசுவதும் எழுதுவதும் வழக்கமாகக் கொண்டுள்ளார் வங்காள நன்மக்கள். எங்கும் எஞ்ஞான்றும் தமிழிற் பேசுவதும் எழுதுவதும் இழிவென்று ஒதுக்கியுள்ளார் தமிழ் நாட்டில் ஆங்கிலங்கற்ற பல மாக்கள். இவ்விருதிறத்தார்

பெருமை சிறுமைகளை அறிஞர் உள்ளவாறு மதிக்கற்பாலர். விரிக்கிற் பெருகும்.

இனித் தமிழ் நூல் பயில வேண்டுவதேன் என்னுங் கேள்விக்குச் சுருக்கமாக விடை பகர முயல்வோம். முதலாவது, தமிழ் மக்களுக்குத் தமிழ் தாய்மொழியாதலின் அதை அவர் நன்கு கற்றல் இயற்கையில் ஏற்பட்டுள்ள முறை என்போம். ஆங்கிலத்தை ஆங்கிலேயரும், ஜப்பானிய மொழியை ஜப்பானியரும், மிகவும் பிற்காலத்ததாய வங்காளத்தை அவ் வங்காளிகளும் பொன்னேபோற் போற்றுதல் கண்கூடன்றோ? இன்னரிடத்துத் தேசப் பற்றும் தாய்மொழிப்பற்றும் ஒருங்கு நின்று விளங்குவது உற்று உணரற்பாலதே.

இவ்வாறு கூறுங்கால், தமிழுக்குத் தன்னியல்பிலேயே அளப்பரும் பெருமை அமைந்து கிடக்கின்றது என்பதை மறத்தலாகாது. உலகில் நூற்றுக் கணக்கான மொழிகள் இருப்பினும்,உயர்தரச் செம்மொழிகளாய் உள்ளவை ஐந்தாறுக்கு மேலில்லை என்ப.அச்சிலவற்றுள் தமிழ் ஒன்று. அம்மட்டோ? அச்சிலவற்றுள்ளும் தமிழ் நீங்கிய ஏனையவெல்லாம் பேச்சு வழக்காறு அற்று நிற்கின்றன. நந்தமிழோ பன்னரும் பழமை உடையதேனும் "கன்னித் தண்டமி"ழாய்ப்"பசுந்தமிழாய்"ப்பேச்சு வழக்கில் இன்றும் நிலவுகின்றது. அன்றியும் இம்மொழி பல்லாயிர வருடங்கட்கு முன்னரே இலக்கண வரம்பு செவ்விதின் வாய்க்கப் பெற்றது. நீர், நெருப்பு, வன்மீகம், மாந்தர் கொடுமை என்பனவற்றால் இறந்தொழிந்த எண்ணிலா நூல்களை நீக்கிப் பார்க்கினும், பல அரும்பெரும் இலக்கியங்களை இன்றுமிது தன்பாற் கொண்டுள்ளது. "தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்ததும், முதலையுண்ட பாலனை அழைத்ததும், என்பு பெண்ணுருவாக் கண்டதும், மறைக் கதவினைத் திறந்ததும்" இவை போன்ற இன்னும் பல தெய்வீகச் செயல்களைச் செய்ததும் நந்தமிழ் என்னில் இதன் பெருமை யாவரே சாற்றவல்லார் என்றும் தமிழ்ப் பெருமை கூறுப. கிரீன்லாந்திலும் ஸஹாராவிலும் வசிப்போர்கூடத் தம் பனி மேட்டையும் மணற் காட்டையும் அவணுள்ள பிறவற்றையும் பரிவொடு பாராட்டுகின்றார். தமிழ் நாட்டில் வாழ்வோர் தம் முயிர்க் குருதி பயக்கும் தண்டமிழைப் பாராட்டாப் பாதகம் என்னே? இவையே யன்றித் தமிழ் மொழியின் ஓசையின்பம், தமிழ் எழுத்துக்களின் வரிவடிவ அருமைப்பாடு, தமிழிலக்கண அகப்பொருட் சிறப்பு முதலியவற்றையும் இவண் நினைவுகூர்தல் பொருத்த முடைத்தே. இன்னோரன்ன சிறப்புகள் வாய்ந்தவோர் மொழியை நன்மக்கள் எவர்தாம் போற்றாது விடுவர்?

இம்மொழியைப் பயிலல் அவசியம் என்பதற்கு இன்னும் சில காரணம் காட்டலாம்; நந்தென்னாட்டு முன்னோரைக் குறித்துச் சரித்திர ஆராய்ச்சி முறையில் உலகுக்குத் தெரிந்திருப்பது மிகவும் அற்பம். பூர்வீக இந்தியாவைப்பற்றிச் சரித்திர மெழுதிய **ஸர் வின்ஸெண்ட் ஸ்மித், ஸர்ரமேச சந்திர தத்தர்** என்னும் புகழ்பெற்ற ஆசிரியர்கள் தாமும் தென்னாட்டின் சார்பாக நாம் அறியக்கூடிய அவ்வளவும் அறிவிக்க இயலாது போயினர். காரணம் அன்னோர் தமிழ் நூல் பயிலாமையும் அவருக்கு அந்நூற் பொருள்களைத் தமிழ் வல்லார் எடுத்துரைக்காமையுமே. தமிழ் வல்லாராகிய ஆசிரியர் **சுந்தரம் பிள்ளை** யவர்களும் **கனகசபைப் பிள்ளை** யவர்களும் நம் நாட்டையும் மொழியையும் குறித்து ஆங்கிலத்தில் எழுதிய பின்னரன்றோ மற்றும் சிலர் இந்நாட்டின் பண்டைப் பெருமையைச் சரித முறையில் ஆராய்ந்து விரிவாய் எழுதப் புக்கார்? பழந்தமிழ் நூலாராய்ச்சியால் பழைய அரசர்களது செயல்களின் கால முதலிய விவரங்கள் எல்லாம் தெரியாது போயினும், நம் முன்னோரது வழக்க ஒழுக்கங்களும் நம்பிக்கைகளும், வாழ்க்கை மேம்பாடும் இனிது புலனாகின்றன. தமிழரசரது அரும்பெருஞ் செயல்களிற் சிலவும் தெரியவருகின்றன.

அன்றியும் சாதிமதப் பிணக்குகள் கங்கு கரையின்றிப் பெருகி நம்மவர்க்குள் அன்பையும் ஒற்றுமையையும் குன்றச் செய்துவரும் இக்காலத்தில், நம் முன்னோரது விரிந்த அறிவையும், சமயப் பொறையையும் அன்பு செறிந்த வாழ்க்கையையும் செயற்கருஞ் செய்கை செய்த தீரத்தையும் விளங்க எடுத்துக் காட்டல் பெரும்பயனுடைத்தாம். வடநாட்டுப் பத்திரிகை யொன்றுளஎழுதியபடி,தென்னிந்திய மக்களின் வழக்க ஒழுக்கங்களைத் திருத்த முயல்வோர் கடைச் சங்க காலத்துத் தமிழ் நாட்டை முன் மாதிரியாய்க் கொள்ளல்

ஏற்புடைத்து; பிறதேச நாகரீகத்தைப் பின்பற்ற வேண்டுவதில்லை. ஆக, ஆசார சீர்திருத்தம் செய்ய விரும்புவோர்க்கும் தமிழாராய்ச்சி எவ்வகையினும் இன்றியமையாததே.

'தனக்கென வாழாப் பிறர்க் குரியாளன்' "நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்பன போன்ற பெரு மொழிகள் பிறர் நலம் குறித்துழைக்கும் பெற்றியைப் புலப்படுத்துவன. இம்முற் குறியை இக்காலத்து உயர்தர மாணவர் முன் அடிக்கடி அறிவாளிகள் புகழ்ந்து கூறுகின்றனர். இது கேட்டோர் அருள்பொருந்திய நெஞ்சினராய், நம் நாட்டவர் முன்னேற்றமடைய வேண்டிப் பல துறைகளினும் நல்லறிவு பரப்ப ஆசைப் படுகின்றனர். இவ்வாறு செய்தற்கு ஆங்கிலப் புலமை யொன்றே போதாது; தமிழ் நூற் பயிற்சியும் இன்றியமையாததாம். தமிழ் மக்கள் பலர்க்கும் நன்மை புரிய விரும்புவோர் அத்தமிழ் நூல்களை நன்கு கற்று அம்மொழியில் எழுதவும் பேசவும் ஆற்றல் பெறவேண்டுவ தவசியம். தமிழ னொருவன் தமிழொன்றே உணர்ந்தார் கூட்டத்துப் புக்கு 'எனக்குத் தமிழிற் பேசவராது, ஆங்கிலம் நன்றாய் வரும்' என்று சொல்லுவது பெருமைக்கு ஏதுவன்று.

கடைசியாக மற்றுமொரு நியாயம் காட்டி முடிப்பாம். 'மண்ணினிற் பிறந்தார் பெறும் பயன்' இதுவென அறிந்தோர் ஆன்மலாப மடைதலை அவாவி நிற்பர். அன்னார் உலகியல்பும் தம்மியல்பும் தலைவனியல்பும் அறிந்து கொள்ளல்வேண்டும். நீதிநெறியை இனிதுணர்ந்தொழுகல் வேண்டும். எவற்றிற்கும் மேலாக, பக்தியை வளர்த்தல் வேண்டும். இவை கைகூடற்குத் தமிழ் மக்கள் தமிழ் நூல்களை விடுத்து யாது செய்யவல்லார்? தமிழர்க்குத் தமிழ்க் கல்வி கேள்விகளால் விளையும் அத்துணைச் சமயஉணர்ச்சியும் பத்தி முதிர்ச்சியும் வேறெம்மொழிப் பயிற்சியாலும் விளையாது என்பது பல மொழி கற்ற ஆன்றோர் முடிபாம்.

இதுகாறும் குறிப்பித்த வாற்றால் தமிழ் மொழி, பொதுவாய் எல்லாராலும், சிறப்பாய்த் தமிழ் நாட்டாராலும் போற்றத்தக்கது என்பது தெளிவாதல் கூடும். இனி அம்மொழியை வளர்க்கும் வழிகள் எவையென ஆராய்தல் முறைமை.

அப்ரகம்

MICA

[ஸ்ரீமான் ஆர். கே. துப்புஸ்வாமி ஐயரவர்கள், பீ. ஏ., எல். டி.]

அப்ரகம் என்றும், 'காக்காப்பொன்' என்றும் சொல்லும் வஸ்துவை இங்கிலீஷில் மைகா (Mica) என்பர். இது நிலத்திலிருந்து வெட்டியெடுக்கும் சிறந்த உலோகப்பொருள்களில் ஒன்று. அப்ரகப் பிளவுகள், சுண்ணும்புக்கல், வெங்கச் செங்கல், க்ரானைட் முதலிய பாறைகளுக்கிடையில் ஊடுருவிச்செல்வதைப் பல இடங்களில் காணலாம். சில இடங்களில் இப்பிளவுகள் மெல்லியதாய் இரண்டொரு அங்குலப் பருமனு யிருக்கும். வேறு சில இடங்களில் பிளவுகளின் பருமன் 100 அடிகளுக்கு மேலேயே மிக அற்புதமாயிருக்கும். இது, பொன், வெள்ளி, தாமிரம் இவற்றின் சுரங்கங்களைப்போல் பூமியின்கீழ் வெகுதூரம் வெட்டிக் கொண்டுபோய்த் தேடவேண்டிய வஸ்துவல்ல, பூமியின் மேற்புறத்திலேயே, பெரும்பாலும் இலகுவாய்க் கிடைக்கக்கூடிய வஸ்து. ஆகையால் இந்தியாவில் பண்டைக்காலம் தொடங்கியே இப்பொருளை எடுத்துக் கையாண்டு வருகின்றனர்.

அப்ரகம் நுட்பமானதாயும் சுலபமாய் ஒடிந்து போகக் கூடியதாயும் இருப்பதுபற்றி பாறைகள் நிலை மாறும்போது நாசமடைகின்றது. அக்காரணத்தால் உலகில் எல்லா இடங்களிலும் பாறைகள் ஏராளமா யிருப்பினும் சிறந்த அப்ரகச் சுரங்கங்கள் கிடைப்பதில்லை. இந்தியா, திபத்து, கனடா, அமெரிக்காவின் ஐக்கிய மாகாணங்கள், ஜர்மன் கீழ் ஆப்ரிகா— இவைகளே முக்கியமாய் அப்ரகம் வெட்டியெடுக்கும் தேசங்கள். ஒரு தேசத்திலாவது

கரும்பு ருசியென்று வேரோடு பிடுங்கலாமா?

இந்தியாவில் கிடைப்பதுபோல் அவ்வளவு ஏராளமாய் இவ்வஸ்து கிடைப்பதில்லை. இந்தியாவின் அப்ரகம்போல் அவ்வளவு சிரேஷ்டமாகவும் இருப்பதில்லை.

அப்ரகம் சுபாவமாய்ப் பல வர்ணங்களை உடைத்தாயிருக்கின்றது. அதில் கலந்துள்ள உட்பொருள்களைப்பற்றி நிறம் மாறுகின்றது. இரசாயன சாஸ்திரிகள் ஒவ்வொருவித அப்ரகத்தின் உட்பொருள்களையும் வேறு வேறாகப் பிரித்து அதன் தன்மையை நிர்ணயம் செய்திருக்கின்றனர். நாம் அதை கவனிக்கவேண்டியதில்லை. சில ஜாதி, நிறமின்றி நிர்மலமாய்க்கண்ணாடிபோன்றிருக்கின்றன; சில சிவப்பாயும் பச்சையாயு மிருப்பதுண்டு; சில கருப்பாய், ஒளி ஊடுருவிச் செல்லாதபடி மந்தமாயிருக்கும். கடைசி மாதிரியை கிருஷ்ணப்ரகம் என்பர் நம்மவர்.

எவ்வாறிருப்பினும், அப்ரகம் வெட்டியெடுக்கும்போது கடப்பைக்கற்களைப் போல் துண்டு துண்டாயிருக்கும். ஒவ்வொரு கட்டியிலும், அப்ரகத் தகடுகள், புஸ்தகத்திலுள்ள காகிதங்கள் ஒன்றின்மேலொன்று சேர்ந்திருப்பதுபோல், ஒட்டிக்கொண்டிருக்கும். முதல் தரமான சுரங்கத்திலிருந்து வெட்டியெடுக்கும் துண்டுகளை மிகப்பெரிய தகடுகளாகப் பிளக்க முடியும். முன் காலங்களில் நாகரீகமற்ற காட்டு ஜனங்கள் அப்ரகத்தைக் கண்டவிடத்தில் வெட்டியெடுத்து உபயோகப்படக்கூடிய துண்டுகளை மட்டும் விற்று, மற்ற பாகங்களை சேதமாக்கினார்கள். இப்போது வியாபாரிகள் தொழிற்சாலைகள் ஏற்பாடு செய்துகொண்டு கூலியாட்களை நியமித்து, தொழில் தெரிந்த மேஸ்திரிகளின் மேல்பார்வையில் வேலை செய்வதால் சேதம் முன் மாதிரியாவதில்லை. வெட்டியெடுத்த கட்டித் துண்டுகளை தொழிற்சாலைக்குக் கொண்டுபோய், சீராய்ப் பக்கங்களை வெட்டி ஒழுங்குபடுத்துவார்கள். அப்போது புறைபோய்ப் பழுதுபட்ட பாகங்களை நீக்கி, பயன்படும் பாகத்தை நேராக்குவது வழக்கம். இங்ஙனம் சீராக்கிய துணுக்குகள் பிளப்பதற்குத் தயாராயிருக்கின்றன. பிளக்கும்போது காயப்படாமலும், நடுவில் ஒடிந்து போகாமலும், களங்கமற்றும், இருப்பனவே சிறந்த தகடுகள். பின்பு, அவற்றின் ஓரங்கள் ஒழுங்கில்லாமலிருந்தால் ஜாக்கிரதையாய்க் கத்தரித்து அடுக்கி வைப்பார்கள். பெரிதும் சிறிதுமாயிருப்பவைகளை, அவற்றின் அளவுக்குத் தக்கபடி பிரித்து ஒரே அளவாயிருப்பவற்றை ஒவ்வொரு கட்டாகக் கட்டுவார்கள். அப்ரகம், ஈரம் தாக்கினால் கெடுமாகையால், தக்கபடி பெட்டிகளில் அடக்கம் செய்து விற்பனைக்குத் தயாராக்குவார்கள்.

அப்ரகத்தின் லக்ஷணம் யாவையெனில், எளிதில்கிறுண்டுஒடியாதது. சுலபமாய் வளையக்கூடியது; உஷ்ணத்தால் உருகாதது. சூடுபரவவொட்டாமல் தடுப்பது: வெளிச்சத்தைத் தடையில்லாமல் நுழைந்துபோக விடுவது: இலக்ட்ரிஸிடி— மின்சாரசக்தி—ஒழுகிப்போகாமல் தேக்கி வைத்துக்கொள்வது ஆகிய இவைபோன்றவைகளே. இக்குணங்கள் பரிபூர்ணமாயிருக்கும் ஜாதிக்கே விலை அதிகம். தொழிலாளிகள் தங்களுக்கு எவ்விதமான அப்ரகம் வேண்டுமென்றும், எம்மாதிரியிருக்க வேண்டுமென்றும், எப்படிக் கத்தரிக்க வேண்டுமென்றும், தொழிற்சாலை மானேஜருக்குத் தெரிவித்து விடுவதால், அவரவர்களுடைய தேவைக்குத் தக்கபடி வட்டமாகவோ, சவுக்கமாகவோ, திரிகோணமாகவோ கத்தரிக்கப்பட்ட தகடுகள் சில சமயங்களில் மணங்கு 300 ரூபாய் அல்லது 400 ரூபாய்க்குக் கூட விற்கும். தாழ்ந்த ஜாதியில் சேர்ந்த வஸ்து மணங்குக்கு 10, 15 ரூபாய்க்கு விற்பதுமுண்டு.

நமது தேசத்தில் அப்ரகத்தகடுகளைக் கண்ணாடிகளுக்குப் பதிலாய்ப்படங்களுக்கு மேலே போடவும், அவற்றின்மேல் சித்திரங்கள் வரையவும், விளக்குச் சிமினிகளாகவும், விசிரிகளுக்கும், சில ஆபரணங்களுக்கும் உபயோகிக்கின்றனர். கிருஷ்ணப்ரகத்தை ஆயுர்வேத வைத்தியர் மருந்துக்கு உபயோகப்படுத்துகின்றனர். ஆகையால் நாம் உபயோகிப்பதெல்லாம் சாதாரணக் காரியங்களுக்கே.

ஐரோப்பிய தேசங்களில் ஜன்னல்களை மூடவும், ஸ்டவ், மாஜிக் லாண்டர்ன் (Magic-Lantern), என்ஜின், இவற்றிலும் விசேஷமாய் உபயோகப்படுத்துகின்றனர். யுத்தக் கப்பல்களில் அப்ரகத் தகடுகளைப் பல வேலைகளுக்கு உபயோகப் படுத்துகின்றனர். இலக்ட்ரிக் கைத்தொழில் அபிவிருத்தியானதன் மேல் அப்ரகத்தின்தேவை அதிகமாய்விட்டது.

மின்சார சக்தியை நிலை நிறுத்தித் தாங்குவது பற்றி, டைனமோ என்னும் மின்சாரசத்தி யுண்டாக்கும் யந்திரத்தில் அப்ரகம் அதிகமாய் உபயோகமாகிறது. அப்ரகப் பொடியை கிளி ஸெரின் (Glycerine) முதலியவற்றுடன் கலந்து வெடி மருந்து செய்ய உபயோ கிக்கின்றனர். ஆகையால் யுத்த சமயத் தில் அப்ரகம் பலவிதமாய் உபயோக மாகி வந்தது. அப்ரகத்தின் மகிமை பல நாளாக ஒருவருக்கும் தெரியாமலிருந்தது பற்றி அதன் வியாபாரமும் உன்னதஸ்திதியை அடையவில்லை. சுமார் 20 வருஷகாலமாகத் தான், சாஸ்திர வல்லவர்கள் அதன் மேன் மையை அறிந்து, கைத்தொழில்களில் அதை உபயோகித்து வருகின்றனர். இன்னும் எத் தனை வேலைகளுக்கு அப்ரகம் உபயோகமாகு மோ! இனிக் கண்டுபிடிக்கும் கருவிகள் எவ்வெ வைகளுக்கு, இவ்வுலோகம் இன்றியமையாப் பொருளாயிருக்குமோ! யாருக்குத் தெரியும்? யுத்தம் இப்பொழுது முடிந்துவிட்டபடியால் இனி இலக்ட்ரிக் கைத்தொழில்கள் மிதமின்றி விருத்தியாகுமென்பதற்குச் சந்தேகமேயில்லை. அப்பொழுது அப்ரகத்தை வேண்டுவோர் அதிகமாவார்கள். "கர்க்காப்பொன்" உண் மையாய்ப் பொன்போலவே விலையுயர்ந்த வஸ் துவாகும் என்பதற்குத் தடையில்லை.

இவ்விஷயத்தைப்பற்றி, ப்ரிட்டிஷ் கவர்ன் மெண்டில் யுத்தசாமான்கள் செய்யும் இலாகா வில் பார்லிமெண்ட் ஸெகிரடெரியாயிருக்கும் உத்தியோகஸ்தர் பின்வருமாறு கூறுகின் றார்:—"இலக்ட்ரிக் கைத்தொழில் தற்காலத் தில் யுத்த சம்பந்தமான பெரிய கைத்தொழி லாக விருக்கின்றது. யுத்தம் தொடங்குமுன் ஜர்மனி தேசத்தார் இலக்ட்ரிக் கைத்தொழில் களில் அதிகத் திறமையுடையவர்களாயிருந்த னர். இத்திறமைக்குக் காரணம் என்னவெனில் இந்தியாவிலிருந்தும், பிரிட்டிஷ் ஸாம்ராஜ் யத்தில் பல பாகங்களிலிருந்தும், அவர்கள் ஏராளமாய் அப்ரகத்தை ஏற்றுமதி செய்து கொண்டதே. இல்லையேல் அவர்களுக்கு அவ் வளவு மேன்மை கிடைத்திராது. மைகா (அப்ரகம்) இல்லாமல் இலட்ரிக் கைத்தொ ழில் நடைபெறுவது அசாத்தியம். அப்ரகம் சப்ளை செய்வதோ பிரிட்டிஷ் ஸாம்ராஜ்யம் தவிர வேறொன்றுமில்லை. உலகில் கிடைக் கும் மைகாவில் 100-க்கு 50 பங்குக்கு அதிக மாகவே—சுமார் பாதி—இந்தியாவில் கிடைக் கின்றது. 15 பங்கு கனடாவில் கிடைக்கின் றது. ஜர்மன் கீழ் ஆப்பிரிக்காவில் 10 பங்கு கிடைக்கின்றது. பிரிட்டிஷ் ஸாம்ராஜ்யத்தி லேயே 100-க்கு 65 மடங்கு இவ்வஸ்து கிடைப்பதாயிருந்தும், யுத்தம் ஆரம்பமாகு முன் இவையனைத்தும் ஜர்மனியார் கையில் அகப்பட்டிருந்தது. ஜர்மனி தேசத்தார் 1913-ம் வருஷத்தில் அநேகமாய் இந்தியாவி லிருந்து அப்ரகம் வேண்டியமட்டில் வாங்கின தல்லாமல், இந்தியாவிலிருந்து இங்கிலாந் துக்கு வந்த சரக்கிலும் பாதிக்குமேல் மறுபடி தாங்களே வாங்கிக்கொண்டார்கள்.

யுத்தமாரம்பமானதுமுதல் அப்ரகம் இங் கிலாந்துக்கே விசேஷமாய் ஏற்றுமதியாகின் றது. ஜர்மன் கீழ் ஆப்பிரிகாவில் உள்ள சுரங்கங் களும், பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் மேல்பார் வையிலேயே இப்பொழுது வேலை செய்யப் பட்டு வருகின்றன. யுத்தத்துக்கு வேண்டிய கருவிகளைச் செய்ய முனைந்து, இப்பொழுது பிரிட்டிஷ் இலக்ட்ரிக் கைத்தொழில், ஜர்மனி, ஆஸ்திரியா இவற்றின் வியாபாரத்தைக் கைப் பற்றி நாசமாக்கினதுமன்றி, இக்கைத்தொ ழில் உலகிலேயே முதன்மையான ஸ்தானத் தை யடைந்திருக்கிறது."

இங்கிலாந்தில் இலக்ட்ரிக் கைத்தொழில் விருத்தியாவதனால், தானாகவே இந்தியாவில் அப்ரக வியாபாரம் மேலோங்குமென்பது சொல்லவேண்டியதில்லை. சில நாட்களுக்கு முன், இந்தியாவில் விசாரணை செய்த இண் டஸ்டிரியல் கமிஷன், தமது ரிபோர்ட்டில் சொல்லுகிறபடி "இந்தியா, அப்ரகம் உண் டாக்கும் தேசங்களுள் முதல் ஸ்தானத்தை வகிக்கின்றது. பீகார் தேசத்து அப்ரகமே இதுவரையில் அதிகமாய் வெட்டியெடுக்கும் சரக்குகளுக்குள், முதல்தரமா யிருக்கின்றது. சிலநாளைக்குமுன்வரையில், இந்த லோகத்தை வெகுவாய் பிரபலமற்ற சிறு வியாபாரிகளே எடுத்து விற்று வந்தனர். பலத்த வியாபாரிகள் சிலர் இவ்வஸ்துவை இப்பொழுது சாஸ்திர முறைப்படி வெட்டியெடுக்க முயற்சி செய்கின் றனர்." ஆகையால் கூடிய சீக்கிரத்தில் இந் தியர்கள் இக்கைத்தொழிலில் சிறந்த லாபத்தை எதிர்பார்க்கக்கூடும்.

பதினைந்து, இருபது வருஷங்களுக்குள் இந்தியாவில் இக்கைத்தொழில் பலப்பட்டதை யும், இவ்வியாபாரம் அபிவிருத்தியடைந்ததை யும் கவனிப்போம். * 1900 வருஷத்தில் 130 சுரங்கங்கள் வேலை செய்தன. அவற்றில் உழைத்த வேலையாட்கள் 10,000 பேர்; உண் டான சரக்கு 900 டன். இதில் பாதிக்குமேல் நெல்லூரிலிருந்து வந்தது. 1913-14 வரு ஷங்களில் ஆஜ்மீர், பீஹார், மதராஸ் இவ் விடங்களில் எத்தனையோ புதுச் சுரங்கங்கள் வேலை யாரம்பித்தன. வேலை செய்வோரும் பெருகிவிட்டனர். 1913-14 வருஷத்தில் இந்தியாவிலிருந்து ஏற்றுமதியான வஸ்து வின் தொகை மட்டும்—இந்தியாவிலேயே செலவான வஸ்துவைக் கணக்கிடவில்லை— 2700 டன். 1899-ம் வருஷத்தில், 700 டன் அப்ரகம், 9 லக்ஷம் ரூபாய்க்கு விற்பனையா யிற்று. 1913-14 வருஷத்தில் 2700 டன் 45 லக்ஷம் ரூபாய்க்கு விற்பனையாயிற்று. யுத்த ஆரம்பத்தில் வியாபாரம் கொஞ்சம் தளர்வுற்றதானாலும், மறுபடி யுத்தம் நடக் கும்பொழுதே தழைத்துவிட்டது. எப்படி யெனில் 1914-15 வருஷத்தில்—அதாவது யுத்தத்தின் முதல் வருஷத்தில்—ஏற்றுமதி சுமார் 28½ லக்ஷம் ரூபாய்தான். 1913-14 வருஷத்தில் நடந்த வியாபாரத்தில் அரைப் பங்கே. 1916-17 வருஷத்தில் வியாபாரம் மறுபடி முன்னிருந்த நிலைக்கு வந்துவிட்டது. 1917-ம் வருஷம் மார்ச்சு மாதத்தில் மட்டுமே ரூபாய் 4,82,313 பெறுமான அப்ரகம் இந்தி யாவிலிருந்து ஏற்றுமதியாயிற்று.

இவ்விதமாய் விருத்தியாகும் வியாபாரத்தை கவர்ன்மெண்டாரும், பொது ஜனங்களும் கைவிடுவார்களென்று எண்ண இடமில்லை. இங்கிலாந்திலும் வியாபாரிகள், இக்கைத் தொழிலின் அபிவிருத்தியின்மேல் கண்ணு யிருப்பார்களென்று நாம் சொல்லவேண்டிய தில்லை. இல்லையேல் அவர்களுக்கு இலாபத் தைக் கொடுக்கும் இலக்ட்ரிக் கைத்தொழிலும் வியாபாரமும் தடைபட்டு விசேஷமாய்க் குறையும். இனி அபாரமாய் விருத்தியடையப் போகிற ஆகாய விமானங்களென்ன, கம்பியில் லாத் தந்தியென்ன, மூட்டையிழுக்கும் பெரிய மோடார் வண்டிகளென்ன, யுத்தமுனைக்கு முன் செல்லும் ஆயுதம் நிறைந்த சண்டை வண்டிகளென்ன, இவைபோன்றவற்றில் உபயோகப்படும் யந்திரங்களுக்கு மூலாதாரமா யுள்ள இப்பொருளை விருத்திசெய்யாமல் கைவிடுதல் இயலாது: விருத்திசெய்தே தீர வேண்டியதவசியம். அப்படிச் செய்யும் போது நமது காருண்ய கவர்ன்மெண்டாரும் பொது ஜனங்களும், இங்கிலாந்தின் காமன்ஸ் சபையோரும், இந்தியாவின் நன்மையை நாடி இந்தியா தேசத்தாருக்கு அநுகூல முண்டாகும்படி இத்தொழிலை அபிவிருத்தி செய்வார்களென்று நம்புகிறோம்.

* Modern Review, October. 1918.

காலஞ்சென்ற பிரதான சிரோன்மணி டி. ஆனந்த ராவ், ஸி. ஐ. ஈ.

The Late Mr. T. Ananda Rao, C. I. E.

[ஸ்ரீமான் டி. என். ஆர். ராகவாசாரியாரவர்கள், பீ. ஏ.]

1919-ம் ஞு ஜூலைமீ 19-ந் தேதி காலை 7-30 மணிக்கு தேகவியோகமான கனம் ஆனந்தராவ் அவர்கள் நம்மிந்தியாவின் ஸ்ரீமான் களில் ஒருவர். காலஞ்சென்ற ராஜா. ஸர். டி. மாதவ ராவ் கே. ஸி. எஸ். ஐ. அவர்களின் மூன்று குமாரர்களில் இவர்தாம் மூத்தவர். இவர் திருவனந்தபுரத்தில் 1852-ம் ஞு மேமீ 15-ந் தேதி பிறந்தவர். இவர் இளம் பிராயத்தி லேயே தகுந்த உபாத்தியாயர்களிடம் கல்வி கற்றுப் பிறகு சென்னை இராஜதானிக் கல் லூரி (Presidency College) யில் ஈ. தாம் ஸன் என்ற கல்வி சிரேஷ்டரிடம் வித்தை கற்றுக்கொண்டார். மெட்ரிகுலேஷன், எப். ஏ, பீ. ஏ., எல்லாப் பரீக்ஷைகளிலும் முதல் வகுப்பில் தேறினர்.

முதன்முதலில் இவர் இண்டோர் (Indore) சமஸ்தானத்து இளவரசர்கட்கு போதகாசிரிய ராக நியமிக்கப்பட்டார். சிறிது காலம் இவ்வுத் தியோகத்தில் அமர்ந்திருந்தார். ரிவினியூ போர் டில், டிப்டி கலெக்டர் வேலைக்கு வேண்டிய பரீக்ஷைகளைக் கொடுத்திருந்தும் இவரை ஜெனரல் டேலி (General Daly) என்பவர்



காலஞ்சென்ற பிரதான சிரோன்மணி
டி. ஆனந்தராவ், ஸி. ஐ. ஈ.

வேணுமென்று பொறுக்கியெடுத்து இண்டோருக்கு அனுப்பிவைத்தார். அச்சமஸ்தானத்து சீதோஷ்ண நிலைமை இவரது தேகத்துக்கு ஒவ்வாததனால், இவர் திரும்பவும் மைசூர் சமஸ்தானத்துக்கு வந்து அங்கே 1873-ம் வருஷத்தில் இங்கிலீஷ் துரைத்தனத்தாரின் சபையில், ஒரு உதவி அங்கத்தினராக அமர்ந்தார். 1875 ௵த்தில் அஸிஸ்டெண்டு கமிஷனர் வேலைக்கு நியமிக்கப்பட்டதன்மேல், பெங்களூர், ஹாஸான், கடூர், மைசூர் முதலிய பல ஜில்லாக்களில் வெகு சாமர்த்தியத்தோடு வேலைபார்த்தார். மைசூர் ஜில்லாவின் டிப்டி கமிஷனர் வேலை பார்க்கும்போதுதான், அவ்விடம் உண்டாகியவேலைக்காரர்களின் கலகத்தை யடக்கினதன் காரணமாக, ஜனங்களின் நல்ல அபிப்பிராயத்தையும் பிரீதியையும் சம்பாதித்துக்கொண்டார். கடைகளை மூடிவிட்டுத் திறக்க மாட்டோம் என்று பிடிவாதம் பிடித்த கடைக்காரர்களிடத்து அவர் காட்டிய பொறுமையும், சாமர்த்தியமும் அதிகமும் பாராட்டத்தக்கன. கலகக்காரர்களை துப்பாக்கியால் சுடும்படி துரைத்தனத்தார் உத்தரவிட்டிருந்தும் அவ்வாறு செய்யாது, தன்னுடைய வேலைக்காரன் ஒருவனும், தன்னுடைய கையிற் பிடித்த பிரம்பும் இரண்டுமே துணையாக, கலகக்காரர்களுக்கிடையே புகுந்து, தன்னுடைய சாதுர்ய வார்த்தைகளினாலேயே சாந்தப்படுத்தினார். கடைகள் உடனே திறக்கப்பட்டன, தெருக்கள் அமைதியுற்றன. அன்றைய தினத்திற்காகக் குறிப்பிடப்பட்டிருந்த ராஜாவின் ஊர்வல வைபவமும், யானைகளும், குதிரைகளும் சூழ, அதிக விமர்சையுடன் நடந்தேறியது. சிறிதுகாலம், ராயரவர்கள், அரண்மனையின் மேலதிகாரியாக விருந்தார். பிறகு பிரதான் காரியதரிசியாக நியமிக்கப்பட்டார். இந்தவேலையை வகித்து வரும்போது, அவருடைய கண்களில் சிறிது உபாதி ஏற்பட்டதன் காரணமாக ரஜாவில் சென்றார். ரஜாவிலிருந்து திரும்பிவந்தவுடன் ஜனத்தொகுதியின் கணக்கெடுப்பதற்காக (Census operations) நியமிக்கப்பட்டார். இந்த வேலையில் அவர் எடுத்த பிரயாசையைக் குறித்து இந்திய ஜனத்தொகுதி கமிஷனர் மிஸ்டர் கெயிட் (Mr. Gait) என்பவர் வெகு சிலாகித்துப் புகழ்ந்துள்ளார்.

ஸ்ரீமான் வி. பி. மாதவராவ், ஸி. ஐ. ஈ. அவர்கள், மைசூர் திவானாக நியமிக்கப்பட்டபோது, ஆனந்தராவ் முதல் மந்திரி ஸ்தானம் வகித்து வந்தார். இண்டோர், திருவாங்கூர் சமஸ்தானங்களுக்குத் திவானாக ஆனந்தராவ் அவர்களை வரும்படி யழைத்தார்கள். ஆனால் அவர் அவைகளை யொத்துக்கொள்ளவில்லை. மைசூர் சமஸ்தானத்தின் திவான் வேலை, தனக்கே எப்படியும் கிடைக்கும் என்று அவருக்கு நிச்சயமான நம்பிக்கை இருந்திருத்தல் வேண்டும்.

ஆனந்தராவ் அவர்கள் ஆங்கிலேய உத்தியோகஸ்தர்களிடம் முதன்முதல் வேலை கற்றுக்கொண்டவ ராதலின், அவர்களுடைய விடாமுயற்சியும், நுட்பமான பகுத்தறிவும் உத்தியோக முறையில் கண்டிப்பாய் வேலை வாங்குந் திறமையும் நிரம்ப வாய்க்கப்பெற்றிருந்தார். திவானாக நியமிக்கப்பட்டதன் மேல் இவர் சமஸ்தானத்தில் ஏற்படுத்திய புதிய சீர்திருத்தங்களுள் முக்கியமானது:— "மைசூர் சமஸ்தான உத்தியோகங்கள் முதன் முதலில் மைசூரிற் பிறந்து வளர்ந்தவர்க்கே யுரியன" "Mysore Service for Mysoreans" என்பதே. அதற்கு முன்னால், மைசூர் சமஸ்தானத்தின் பெரிய உத்தியோகங்களுக்குச் சென்னை இராஜதானியிலிருந்து அநேகம் பேர்கள் நியமிக்கப்படுவது வழக்கம்.

ஆனந்தராவ் திவானாக விருந்தகாலத்தில் தான், மைசூர் பொருளாதார கான்பரென்ஸ் முதன்முதலில் ஏற்படுத்தப்பட்டது. மைசூர் சமஸ்தானத்துக்கே இவர் ஒரு திலகம் போன்று விளங்கினர் என்று சொல்வது அதிகமே யல்ல. இவருடைய பெருந்தன்மையையும், விசேஷ கியாதியையும் முன்னிட்டே மஹாராஜா இவருக்கு அதுவரையிலும் எவருக்கும் கொடுத்திராத, பிரதான சிரோன்மணி என்னும் பட்டத்தை யளித்தார். ஆங்கிலேய கவர்ன்மெண்டாரும் ஸி.ஐ.ஈ. பட்டமளித்தனர்.

ஆனந்தராவ் அவர்கள் திவான் வேலையிலிருந்து நீங்கிய காலத்தில், மஹாராஜா அவர்கள், ராவருடைய திறத்தை பஹிரங்கமாக மெச்சி, மாதம் ஒன்றுக்கு 1250 ரூபாய் விசேஷ பென்ஷனும், மூன்று மாதத்திய முழுச் சம்பளமும் கொடுக்கும்படிக்கும், இதன்றியும் திவான் வேலையிலிருக்கும்பொழுது உள்ள கவுரவங்களில் பலவற்றையும், அவர் ஆயுட் பரியந்தம் அடையும்படிக்கும் உத்தரவிட்டு, சாசுவதமாக அவருக்கு இரண்டு ஹரிகாரரும் ஒரு ஜமேதாரும், ஒரு டபேதாரும், 6 டலாயத்துகளும் சமஸ்தானத்துச் செலவில் ஏற்படுத்தி, சமஸ்தான கெஜட்டில் ஒரு விளம்பரமும் பிரசுரித்தார்.

பென்ஷன் பெற்றனபிறகு ஆனந்தராவ் அவர்கள் அநேக தர்மங்களைச் செய்துவந்தார். அவருடைய தர்மங்கள், வெகு நாட்களுக்கு அவர் பெயரை நிலைநிறுத்தும்படியானவை. அவருக்குக் குழந்தைகள் இல்லை. ஸ்வீகாரம் செய்துகொள்வதில் அவருக்கு இஷ்டமில்லை. ஸ்வீகாரம் செய்துகொள்வது இயற்கைக்கு விரோதமான காரியம் என்பது அவருடைய துணிவு. அவருடைய பத்தினி சென்ற வருஷமே காலஞ்சென்றாள்.

கம்பரும் ஸ்ரீராமபிரானும்

KAMBAN AND SRI RAMA

[ஸ்ரீமான் வி. வி. ஸ்ரீனிவாஸாசாரியாரவர்கள், பீ. ஏ., பி. எல்.]

ஸ்ரீராமபிரானது திவ்ய சரித்திரத்தைத் தமிழில் பெருங் காப்பியமாகப் பாடியருளிய கம்பர் ''கற்பார் இராமபிரானையல்லால் மற்றுங் கற்பரோ'' என்றபடி அப்பரம புருஷனின் உத்தம பக்தராய் நூலைப் பாடுவான் அமைந்தார். கேவலம் பௌராணிகராகமட்டு மிருந்து அந்நூலைப் பாடாது ஸ்ரீராமபக்தனாகப் பாடுவான் துணிந்தது இவர் தாமே கூறியருளிய பாசுரத்தால் போதரும்.

''முத்த மிழ்த் துறையின் முறை போகிய
உத்தமக் கவிகட் கொன் றுணர்த்துவன்
பித்தர் சொன்னவும் பேதையர் சொன்னவும்
பத்தர் சொன்னவும் பன்னப் பெறுபவோ''

என்று தனது பக்தியின் பெருமையை வெளியிடுகிறார். ஆனதுபற்றியே கதாநாயகன் நாயகியுடன் ஒற்றுமைப்பட்டு அவர்கள் சுகதுக்கங்களைத் தமது சுகதுக்கங்களாக நினைத்து அவர்களுடன் தம்மை ஐக்கியப்படுத்திக்கொண்டு பரவசப்பட்டுச் செல்கிறார் நம் கவி. ஸ்ரீராகவன் சிருஷ்டி ஸ்திதி சம்ஹாரம் ஆகியமூன்று தொழில்களையும், செய்யும் ஆற்றலுடைய ''முன்னை யாதியா மூர்த்தி'' என்பதும் ஸ்ரீஜானகிப் பிராட்டியார் ''மூவகை உலகின் அன்னை'' என்பதும் இவரது சித்தாந்த மாதலின், அவர்கள் சந்துஷ்டியை அடைந்துழி சகல லோகங்களும் சராசரங்களும் அவர்கள் சரீரமாதலின் சந்துஷ்டியை அடைந்ததாகவும், துக்கப்பட்டுழி துக்கமடைந்ததாகவும் கூறி முறையிடுவர். திருஷ்டாந்தமாக விபீஷண னடைக்கலப் படலத்தில் விபீஷணாழ்வானுக்கு இலங்கைப் பட்டாபிஷேகம் செய்வித்து சக்கரவர்த்தி திருமகன் சந்துஷ்டியை அடைந்த அழகை வருணிக்குமிடத்து,

''தீர்த்தனை தருளை நோக்கிச் செய்ததோர் சிறப்புப் பெற்றான்
கூர்த்த நல்லறத்தை நோக்கிக் குறித்த தோ யாது கொல்லோ
வார்த்தையஃ துரைத் தலோடுந்தனித் தனிவாழ்ந் தே மென்ன
ஆர்த்தன வுலகினுள்ள சராசர மனைத்துமம்மா''

என்று எம்பெருமான் கொண்ட சந்தோஷம் காரணமாக சராசரங்கள் குதூகலித்தன என்று கூறுகிறார் பாரீர்.

பிராட்டி களங்காண் படலத்தில் யுத்த களத்தில் மூர்ச்சித்துக்கிடந்த ஸ்ரீராமபிரானைப் பார்த்து, பிராட்டி பிரலாபம் செய்ய ஆரம்பித்ததைக் கூறுமிடத்து,

"மங்கையழலும் வானாட்டு மயில்க ளழுதார் மழவிடையோன்
பங்கிலுறையும் குயிலழுதாள் பதும மலர்மேன் மாதழுதாள்
கங்கை யழுதாள் நாமடந்தையழுதாள் கமலத் தடங்கண்ணன்
தங்கையழுதாள் இரங்காத வரக்கி மாருந் தளர்ந்த ழுதார்"
பொன்றாழ் குழையா டனையீன்ற பூமாமடந்தை புரிந் தழுதாள்
குன்றுமறையும் தருமமுமெய் குழைந்து குழைந்து விழுந்தழுத
பின்றுதுடற்றும் பெரும்பாவ மழுத மற்றென் பிறர்செய்கை
நின்றார் நின்றபடி யழுதார்"

என்றும் கூறி ஈசுவரனது சர்வ வியாபகத்துவத்தை நிரூபிக்கிறார் நம்புலவர் பெருமான்.

இவ்விதமே பிராட்டி அக்னிப் பிரவேசம் செய்யும் சமயம்,

நீயிடை யருகிற் சென்று தேவர்க்கும்
தாய்தனி குறுகலுந் தரிக்கிலாமையால்
வாய்திறந் தரற்றின மறைக ளன்கொடும்
ஓய்வினல் லறமுமற் றுயிர்கள் யாவையும்

என்றும்,

வலம் வருமளவையின் மறுகிவானமுதல்
உலகமு முயிர்களு மோலமிட்டன"

என்றும்,

இந்திரன் றேவியர் முதல வேழையர்
அந்தர வானினின் றரற்றுகின்றனர்
செந்தளிர்க் கைகளாற் சேயரிப் பெருஞ்
சுந்தரக் கண்களை யெற்றித் துள்ளினர்"

என்றும்,

சராசரங்கள் வருத்த முற்றன என்பதைக் கூறுவதையும் உற்று நோக்குவீர்.

இவ்விதம் ஸ்ரீராகவன்பாலும் ஸ்ரீ ஜானகிபாலும் மிகுந்த பக்திபண்ணி எழுதப்புகுந்த கம்பநாடர் ஸ்ரீராகவனது "எல்லையில் பெருங் குணங்களில் எதை முக்கியமாய்ப் பாராட்டுகின்றனர்? எக்காரணம் பற்றி அவ்விதம் பாராட்டுகின்றனர்? அதை அவர் கற்பனா சக்திகளுடன் பெருமை பாராட்டும் அருமை எவ்விதம்? என்று சில கேள்விகள் கேட்டுக் கொண்டு அவைகளுக்கு விடை ஒருவாறு சிற்றறிவிற் கெட்டினமட்டும் பகர்வான் துணிந்தாம்.

வட மொழியில் ராமாயணம் எழுதியருளிய வால்மீகநாதனும் ஸ்ரீராமபிரானை "ராமோ விக்ரஹவாந்தர்ம:" என்பர். அக்கருத்தையே உட்கொண்டவராய்க் கம்பரும் அப்பரம புருஷனது உத்தமோத்தம குணங்களை வருணிக்கு மிடத்து அவனது "தரும" சுவரூபத்தையே முன்னிலைப்படுத்திக் கூறுகிறார். சில உதாரணங்கள் வருமாறு.

வசிஷ்டர் கூற்றாக,

'புறத்து நாமினி யொரு பொருள் புகல்கின்ற தெவனோ
அறத்தின் மூர்த்திவன் றவதரித்தானென்பதல்லால்'

எனவும்

"வீர நின்குல மைந்தனை வேதியர் முதலோர்
யாரும் யாஞ்செய்த நல்லறப் பயனென விருப்பார்"

எனவும்

சூர்ப்பனகையின் கூற்றாக,

"இருவர்மானிடர் தாபதரேந்திய
வரிவில் வாட்கையர் மன்மத மேனியர்
தருமநீரர் தயரதன்காதலர்
செருவினேரு நிருதரைத் தேடுவார்

என்றும்,

ஆஞ்சநேயர் கூற்றாக

'போயின திசைசடோறுமரனோடு புல்லுமெல்லாம்
சாய்வுறுந் தொழுவபோலி ங்கிவர்களோதருமமாவார்

எனவும்

சதமனஞ் சுறுநிலையர் தருமனஞ் சுறுசரிதர்
மதனனஞ்சுறுவடிவர் மறலியஞ் சுறுவிறலர்

எனவும்

'நீதியார் கருணையின் னெறியினர் நெறிவயித்
'பேதியா நிலைமையா ரெவரினும் பெருமையார்.

எனவும்

செங்கணிற் கரத்திராமனத் திருநெடுமாலே
இங்குதித்தன னிண்டற நிறுத்துநற் கின்னும்.

எனவும்

வேதமுமறனும் சொல்லுமெய்யற மூர்த்திவில்லோன்'

எனவும்

வாலியின் கூற்ருக

"தருமமே தவிர்க்குமோ தன்னைத்தானரோ"
எனவும்

மறைகளுமுனிவர்யாரு மலர் மிசையோனும் மற்றைத்
துறைகளின் முடிவுஞ் சொல்லும் துணிபொருடுணி விற்ருக்கி
அறைகழலிராமனுகி யறநெறி நிறுத்தவந்த
இறையொருசங்கையின்றி எண்ணுதி
பெண்ண மிக்கோய்
எனவும்

கும்பகர்ணன் கூற்ருக

'அறப்பெருந்துணைவர் தம்மையபய மென்றடைந்தவுன்னை

என்றும் மறித்தும் மறித்தும் கூறி ஸ்ரீராம பிரான் " தர்மவிக்ரஹம் " என்று முதனூலிலெழுதிய வால்மீக நாதன் கருத்தை வலியுறுத்துகிருர்.

பரித்ராணய சாதூனம் விநாசாயச துஷ்க்ருதாம்
தர்ம ஸம்ஸ்தாபநார்த்தாய ஸம்பவாமி யுகேயுகே."

என்று பகவத் கீதையில் கூறியபடி துஷ்ட நிக்ரக சிஷ்ட பரிபாலனம் செய்ய அவதரித்த பிரபு தர்மமே உருவெடுத்தது என்னும்படி நடந்து கொண்டதும் ஏனைய அவதாரங்களிலும் ஸ்ரீராமாவதாரம் ஏற்றம் பெற்றதென்றும் இக்காரணம்பற்றி ஆன்ருேர் கூறுவர். இவ்விதம் தர்மத்தைப் பரிபாலனம் செய்வதிலும் "தருமமே ஜயம்" என்று கடைப்பிடித்து ஒழுகுவதிலும் ஒரே புத்தியாய் தர்மத்தை முன்னிட்டு நடப்பதிலும் சுகமேற்படுமேயன்றி சங்கடங்கள் நேரிடா என்றும் அக்காரணம்பற்றி தருமம் கைக்கொள்வதில் ஒரு புருஷனுக்கு சிரமம் ஏற்படுவதில்லை யென்றும் பலர் எண்ணியிருத்தல் கூடும். இது முற்றிலும் தவறு. தர்ம பரிபாலனம் செய்வதில் நேரிடும் சங்கடங்கள் பல. அக்காரணம் பற்றியே "தர்மசங்கடம்" என்றும் வழக்கு ஏற்பட்டது போலும். இவ்விதம் "தர்ம பரிபாலனம்" செய்வதில் ஏற்படக்கூடிய சங்கடங்கள் நேர்ந்தும் தர்மத்தைக் கைவிடுவதும் அநுகூலங்கள் நேர்ந்துழி கைப்பிடித்தலும் முறையாகாது. ஸ்ரீராகவனைப் பிரிவதில் துயரமுற்று அவன் காட்டுக்குச் செல்வதைஆற்றகிலாது அவனைப் பின் தொடரும் சுமந்திரரைப் பார்த்து சக்ரவர்த்தி திருமகன் கூற்ருக இக்கருத்தை கம்பநாடர் அருளிச் செய்கிருர்.

"முன்பு நின்றிசை நிறீஇ முடிவுமுற்றியே
பின்பு நின்றுறுதியைப் பயக்கும் பேறம்
இன்பம் வந்துறு மெனினி னியதாயிடைத்
துன்பம் வந்துறு மெனினிற்றுறக்கலாகுமோ."

இவ்விதமே ஸ்ரீராமபிரானுக்கு பட்டாபிஷேகம் செய்துவைத்து முன்னோர் வழி பின்பற்றி தான் வானப்பிரஸ்தம் செய்வதாய் உத்தேசித்திருந்த கருத்தை வெளியிட்டு மந்திரிகளது அபிப்பிராயம் தசரத சக்ரவர்த்தி கேட்கவும் சுமந்தரர் கூற்ருக கம்பர் அடியிற் கண்டபடி வரைந்துள்ளார்.

உறத்தகும்மர சிராமற்கென் றுவக்கின்ற மனத்தைத்
துறத்தி நீயென்னுஞ் சொற்சுடு முன்குலத் தொல்லோர்
மறத்தல் செய்கிலா வறத்தையும் மறப்பது வழக்கன்று
அறத்தி னூங்கினிக் கொடிதெனலாவதியாதோ"

என்று "அறத்தின் கொடுமை"யை மிகவும் தெளிவாக எடுத்துக்காட்டுகிருர். சிற்றன்னை ஆணையால் நாடு துறந்து காடேகின பிரபு தன்னைக் கண்ணினுமினிய ஆசாரியன், சகோதரர்கள், அன்னைமார், மந்திரிகள் எவ்வளவோ நயந்து திரும்பி ராஜ்யத்துக்கு வரும்படி கேட்கவும் செவிகொடாது "மிகவும் கொடியவன்" என்று சொல்லும்படி தர்மத்தை கடைப்பிடித்துச் சென்ற உத்தமமான மர்மம் இந்த ராமாயணத்தில் நிதர்சனமாகக் காட்டப்பட்டிருக்கிறது. அறுபதினுயிரம் வருஷம் அரசாண்ட சக்ரவர்த்தி மகப்பேறின்றி ரிசிய சிருங்கர் அநுக்கிரகத்தால் புத்ர காமேஷ்டி செய்து அரிதிற் பெற்ற தன்னை இழந்தால் பிராண வியோகம் செய்தல் நிச்சயம் என்று தெரிந்தும் அதை எதிர்பாராது தர்மத்தைக் காப்பாற்றின அருமையை என்னவென்று சொல்வோம். இவ்விதம் சக்ரவர்த்தித் திருமகன் நிஷ்கண்டகமாய் தன் தாயரை எதிர்பாராது காட்டிற்குச் செல்லும் விபரத்தைச் சொல்லுமிடத்து தசரத மகாராஜனும்.

"நெகுதற் கொத்த நெஞ்சு நேயத்தாலேயாவி
உகுதற்கொத்த உடலு முடையேன் உன்போலல்லேன்

என்று எம்பெருமானது தர்ம பரிபாலனம் செய்வதிலுள்ள ஆதுரத்தைக் குறித்துச்

சொல்லித் தன்னால் இத்தனை இடைஞ்சலுடன் தர்ம பரிபாலனம் செய்தல் அசாத்தியம் என்று காட்டுகிறார்.

இதே விஷயத்தைப் பிராட்டியும்

"முடியா முடிமன்னன் முடிந்திடவும்
படியேழு நெடுந்துயர் பாவிடவும்
மடியா நெறிவந்து வனம்புகுதும்
கொடியான் வருமென்று குலாவுவதோ"

என்று மிகுந்த பச்சாத்தாபத்துடன் கூறி ஸ்ரீராகவனது "தர்ம பரிபாலனத்தின்" ஏற்றம் காட்டுகிறாள்.

தான் காட்டிற்கேகில் அக்காரணத்தை முன்னிட்டு சக்ரவர்த்தி மிகுந்த துயரமுற்று பிராணனை விடுதல் கூடுமென்றும அவரை ஆற்றித் தேற்றல் உன் கடமை என்றும் கூறி தன்னுடன் புத்திர வாத்ஸலயத்தால் காடேறுதல் தருமமன்று என்று கௌசலாதேவிக்கு தர்மத்தின் சூக்ஷ்மத்தை பெருமாள் தெரிவிக்கிறார்.

என்னை நீங்கி யிடர்க்கடல் வைகுறும்
மன்னர் மன்னனை வற்புறுத்தாதுடன்
துன்னுகானந் தொடரத் துணிவதே
அன்னையே யறம் பார்க்கிலையா மன்றே.

வசிஷ்டரிடமும் இவ்விதமே கூறுகிறார் பிரபு.

"அன்னவன் பணிதலை யேந்தி யாற்றுதல்
என்னது கடன் அவனிடரை நீக்குதல்
நின்னது கடன் இது நெறியு மென்றனன்
பன்னகப்பாயலுட் பள்ளி நீக்கினான்"

என்று தருமத்தின் லக்ஷணத்தை அதிகாரத்தோடு எடுத்துக்காட்டுகிறார்.

"தோன்றிய நல்லறநிறுத்தத்" தோன்றினாதலின் இதே கருத்தை, தன்னைத் திரும்பவும் நாடுவந்து பட்டாபிஷேகம் பெற்று ராஜியபரிபாலனம் செய்யவேண்டிய பரதனது வேண்டுகோளுக்கு உத்தரமாக வெளியிடுகிறார் ஸ்ரீராமபிரான். (இன்னும் வரும்).

தேடாத செல்வம்

ஆண், பெண் இரு பாலாரும் எளிதில் அறியும் வண்ணம் எளிய செந்தமிழ் நடையில் எழுதப்பட்டுள்ளது. உலக நடையைப் பெரும்பாலும் தழுவி, எல்லா வகுப்பினருக்கும் ஊக்கமூட்டக்கூடியது. பாடசாலைகளில் கற்கும் மாணவர்களுக்கும் மிகவும் உபயோகமுள்ளது. சோம்பலின் தீமையும், சூதாட்டத்தின் முடிவும், லாட்டரி சீட்டின் சூதுகளும், பொறுமையின் பெருமையும் கதைப்போக்கிலேயே ஹாஸ்யமான பாஷையில் வர்ணிக்கப்பட்டுள்ளன. அணா 3.

தமிழ் நூல் வரலாறு

HISTORY OF TAMIL LITERATURE

[ஸ்ரீமான் எஸ். அனவரத விநாயகம் பிள்ளை அவர்கள், எம். ஏ., எல்.டி.]

தமிழ் நூல் வரலாறு என்று பெயரிட்டு எழுதப்படும் இச் சிற்றுரை தமிழ் நூல்களின் வரலாற்றைப்பற்றி ஒன்றும் உரைப்பதன்று, அத்தகைய வரலாறு இன்னும் அமைந்திலதென்பதையே தெளிவாகக் காட்ட எழுந்ததாகும். நேற்றுத் தோன்றிய மொழிகட்கெல்லாம் நூல் வரலாறுகள் அளவில ஏற்பட்டிருப்பவும், பல்லாயிர ஆண்டுகளாக நிலவிவரும் தமிழ்மொழிக்கு நூல் வரலாறு ஒன்றும் இன்னும் அமையாதிருத்தல் ஆச்சரியத்திற்கிடமாயிருக்கின்றது. தக்க நூல்களில்லாத மொழிகட்கு நூல் வரலாறு அமையாதிருத்தல் இயல்பு: உலகமெங்கும் புகழப்படும் உயர்ந்த நூல்களையுடைய தமிழ் மொழிக்கு நூல் வரலாறு அமையாதிருத்தல் ஆச்சரியத்தினை விளைக்காதென் செய்யும்!

ஆயின் தமிழ்க்கு நூல் வரலாறு இல்லையோ எனின், அங்ஙனம் அறுத்துச் சொல்லுதற்கு மில்லை. ஸ்ரீமான் பூர்ணலிங்கம் பிள்ளையவர்கள் எழுதிய (A Primer of Tamil Literature, 1904) தமிழ் நூல் வரலாறு முதற்புத்தகமொன்று உளது. இது தோன்று முன்னரே கால்ட்வெல் ஆசிரியர் தாம் எழுதிய (A Comparative Grammar of the Dravidian Languages, second edition, 1875) திராவிட பாஷை ஒப்புக் நோக்கிலக்கணத்திற்கு முன்னுரையில் தமிழ் நூல் வரலாற்றைப்பற்றிச் சுருக்கமாகக் கூறினார். காசிச் செட்டி யென்பவர் எழுதிய (The Tamil Plutarch) ஒரு வரலாறும் உண்டு. இவையெல்லாம் அங்கில மொழியில் எழுதியவை.

தமிழில் எழுதப்பட்டனவும் சில உள. காசிச் செட்டி எழுதியதை விஸ்தரித்து அ. சதாசிவம் பிள்ளை எழுதிய பாவலர் சரித்திர தீபகம் (1886) ஒன்று. இது அகாராதியாகப் புலவர் பெயரையும் அவர் செய்த நூல்களின் பெயரையும் அவரைப்பற்றித் தெரிந்த சில விவரங்களையும் தருவது. சபாபதி நாவலர் எழுதிய திராவிடப் பிரகாசிகை (1899) தமிழ் மொழியி

னுள்ள நூல்களுள் சிறந்தவற்றைப்பற்றி விரிவாகவும் விளக்கமாகவும் நவீன முறையிற் கூறும் அருமையான நூல். யாழ்ப்பாணத்துச் சுன்னாகம் அ. குமார சுவாமிப் புலவரவர்கள் இயற்றிய தமிழ்ப்புலவர் சரித்திரம் (1917) முன்னே கூறிய அ. சதாசிவம் பிள்ளை வரலாறு திருத்திப் புதுக்கி விளக்கியது போன்றுளது. இதில் தவறுகள் இல்லையென்றே சொல்லலாம். ஆயினும் புலவர் பெயர்களை அகாராதி முறையில் எடுத்து வரலாறுரைத்தல் முறையாகாது.

இவையன்றி, சி. வை. தாமோதரம் பிள்ளை வீரசோழியத்திற்குத் தாம் எழுதிய பதிப்புரை (1882)யில் தமிழ் நூல் வரலாற்றை ஒருவாறு காலப்பிரிவுகளாக வகுத்துக்கூறினர். வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியார் தம் தமிழ் மொழி வரலாற்றில் (1903) தமிழ் நூற் பரப்பைப்பற்றி ஓர் 'உபந்நியாசம்' எழுதினர். இவர்க்கு முன்பே ஸ்ரீமான் திருமலைக்கொழுந்துப் பிள்ளை யவர்கள் தமிழ் நூல் வரலாறு எழுதுவான் றொடங்கிச் சிறிது பாகம் சித்தாந்த தீபிகை யென்னும் அங்கில மாசப் பத்திரிகையில் வெளியிட்டார். அது முடிவு பெருதொழிந்தது. மற்று, அச் சித்தாந்த தீபிகையிலும், கிறிஸ்தவ கலாசாலைப் பத்திரிகை யென்னும் அங்கிலப் பத்திரிகையிலும், (The Indian Antiquary) இந்திய புராதன கலைஞன் என்னும் அங்கிலப் பத்திரிகையிலும், (The Tamilian Antiquary) தமிழ்ப் புராதன கலைஞன் என்னும் அங்கில திராவிடப் பத்திரிகையிலும், செந்தமிழ் என்னும் மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் பத்திரிகையிலும், இவ்வுரை தோன்று விவேக போதினி என்னும் இப்பத்திரிகையிலும், விவேக சிந்தாமணி யென்னும் மாசப் பத்திரிகையிலும் தமிழ் நூல் வரலாறு சம்பந்தமாக எழுதியோர் பலர். அவரெல்லாம் ஒவ்வொரு காலத்தைப்பற்றியாதல் ஒவ்வொரு புலவரைப் பற்றியாதல் தத்தம் ஆராய்ச்சியிற் புலப்பட்டனவற்றை எழுதிவைத்தனர். இன்னும், விநோதரஸ மஞ்சரி ஒருவாறு புலவர் வரலாறு கூற எழுந்த நூலேயாகும். ஆயினும் அதனை யெழுதியவீராசாமிச்செட்டியார்உண்மையைக் கவனியாது விநோத ரசத்தையே விசேஷமாகப் பாராட்டினர். பன்னிரு புலவர் சரித்திரம் சிறந்த பன்னிரண்டு புலவர்களைப் பற்றிச் சொல்லும் நூல். அதுவும் ஆராய்ச்சி முறையில் எழுதப்பட்டதன்று. முருகதாச சுவாமிகள் இயற்றிய புலவர் புராணமும், அதன் பெயர் குறிப்பதுபோலவே புராணமாய் ஆக்கியோர் பல்லிடத்தும் கேட்ட கதைகளையெல்லாம் செய்யுள் நடையில் தொகுத்துரைத்த நூலாகும். தமிழ் நாவலர் சரிதை புலவர் அவ்வக்காலத்துப் பாடிய பாடல்களைச் சந்தர்ப்ப பூர்வமாகத் தரும் ஒரு நூல். அதில் அந்தக கவி வீரராகவ முதலியார்க்குப் பின் தோன்றிய கவிகளின் பாடல்கள் காணப்படவில்லை யாதலால், அது சுமார் முந்நூறு வருடங்களுக்கு முற்பட்டது என்னலாம். இந் நூலின் முறையையே பற்றியதாய்ப் பிற்காலத்து அறுபது வருடங்களுக்கு முன் செய்யப்பட்ட தனிப்பாடற்றிரட்டு அவ்வளவு சிறந்ததாகாது. தமிழ் நாவலர் சரிதையிற் பொய்புரட்டுகள் சிறு பான்மையே காணப்படும். இதில் அவை மிகுதியாக உண்டு. இதனை அதிகமாக விரித்துத் தனிச் செய்யுட் சிந்தாமணி யென்றொரு நூலைச் சில ஆண்டுகளின் முன்னர் ஒருவர் வெளியிட்டனர். மற்றுப் புலவர் பலருடைய சரித்திரங்கள் தனித்தனியாய்ப் புத்தகமாக வெளிவந்துள்ளன. அவ்வாறு வந்தவைகளுள் சில, திருவள்ளுவர், அவ்வையார், இடைக்காடர், பொய்யாமொழிப் புலவர், ஒட்டக்கூத்தர், கம்பர், அருணகிரி நாதர், வில்லிபுத்தூரர், நக்கீரர் என்றிவர் சரித்திரங்கள். ஆழ்வார்கள் சரித்திரம், சந்தான குரவர் சரித்திரம் முதலியவற்றைத் தொகுத்துரைக்கும் நூல்களும் உண்டு. இவையேயன்றித் துரைத்தனத்துக் கையெழுத்துப் பிரதிப் புஸ்தகாலயத்தி லிருந்து அவ்வப்போழ்து வெளிவரும் நூல் விவரணங்களில் தமிழ் நூல் வரலாற்றைப்பற்றிச் சில அரிய விஷயங்கள் பொதிந்திருப்பது முண்டு.

தமிழ் நூல்களைப்பற்றி இத்தனை நூல்களிருப்பவும், தமிழ் நூல் வரலாறென்றும் இன்னும் அமைந்திலதென்று முன் உரைத்தது பொருந்துமோ எனின், பொருந்தும். தமிழ் நூல் வரலாறென்று சொல்லத்தக்கது அங்கில முதலிய மொழிகளுக்கு அமைந்த வரலாறு போன்ற வரலாறே யாகும். மற்று, இம் மேற் குறித்த நூல்களனைத்தும் போலி

களே. இதனால் அவை பயனற்றன வென்று சொல்லியவா றன்று. ஒவ்வொன்றும் ஒவ்வொரு பயனைக் கருதி எழுதியதே. அவையனைத்தையும் நோக்கியும்நன்மாணாக்கனுக்குத் திருப்தி பிறத்தலில்லை யாகலின், தமிழ் நூல் வரலாறொன்று வேண்டப்படுவது ஒருதலை.

இம் மேற் குறித்த நூல்களில் குற்றங் குறைகளுண்டு. ஆசிரியர் பெயர்கள் நூற்பெயர்கள் தடுமாற்ற முற்றிருக்கும். ஆசிரியர் பெயர்களை மாற்றி யெழுதுவதைப்பற்றிப் பிரமாதமாகச் சொல்லலாகாது. உதாரணமாக, யாப்பருங்கலக் காரிகை யாசிரியர் அமிர்தசாகரரென்றே இதுவரை வழங்கிவந் திருக்கின்றனர். சுன்னாகம் குமாரசுவாமிப் புலவராதி உரையாசிரியர் பதிப்பாசிரியர் அனைவரும் அமிர்த சாகர ரென்றே எழுதி வைத்தனர். யாப்பருங்கலப் பாயிரத்துள்,

அளப்பருங் கடற்பெய ரருதவத் தோனே

என்று குறிக்கப்பட்டவர் அமித சாகரர். ‘அளப்பரும்’ என்பது ‘அமித’ என்பதன் நேர்மொழிபெயர்ப்பாகும். ஆதலின் அவர் பெயரை அமுதசாகரரென்றாதல் அமிர்தசாகரரென்றாதல் எழுதுவது தவறேயன்றோ. இவ்வகைப் பிழைகள் ஏகதேசமா யிருக்கும். அவை திருத்தமுறுதலும் ஒரு நாளி லாவதன்று. மற்று, ஓராசிரியர் செய்த நூலை வேறோராசிரியரதாகக் கூறுதல் உடனே நீக்கவேண்டிய பிழை. நூல்களைநேரிற் பார்த்தபின் அவற்றின் வரலாற்றை எழுதப் புகுவராயின் இப் பிழை தானே நீங்கும்.

நூல் வரலா றெழுதுபவர் பக்ஷபாதமின்றி எல்லாப் புலவரைப் பற்றியும் அவர் நூலைப் பற்றியும் எழுதவேண்டும். ஒரு புலவரிடத்துத் தமக்கு அருவருப் பிருப்பின், அவரைப்பற்றி யெழுதித் தம் அருவருப்பிற்குக் காரணத்தை விளங்க உரைக்கலாம். தமிழ்ப்புலவர் சரித்திரத்தில் அருட்பா இராமலிங்கம் பிள்ளையைப் பற்றி ஒன்றுங்காணப்படாமை அந்நூற்குக் குறைவே. அவர் சரித்திரம் கூறப்படாமல் தமிழ்நூல் வரலாறு எப்படி நிறைவு பெறும்!

இன்னும் நூல்வரலா றெல்லாம் காலக் கிரமத்தையே கிரமமாகக்கொண்டு எழுதப்படல் வேண்டும். தமிழ்ப்புலவர் சரித்திரம் போல் அகராதி யொழுங்கை அனுசரித்திருப்பின் அவைபெரும்பயன்செய்யா. ஸ்ரீமான் பூர்ணலிங்கம் பிள்ளை யவர்கள் தமிழ் நூல் வரலாறு காலக்கிரமத்தை யனுசரித்து எழுதப்பட்டதே. அது மிகச் சுருங்கி யிருப்பது அதன் முக்கியகுறை.

தமிழ்நூல் வரலாறு எழுதப்புகுவோர் ஒருவராயினும் பலராயினும் அவரிடத்து மேற்குறித்த நூல்களனைத்தும் இருத்தல் வேண்டும். அன்றியும், தமிழில் அச்சிட்டு வழங்கும் நூல்களனைத்தும் கையெழுத்துப் பிரதிகளாயுள்ளவை யனைத்தும் அவர்க்குப் பார்வைக்கெட்டுவனவாயிருத்தல் வேண்டும். அன்றியும் தமிழரசர் சம்பந்தமாகச் சிலா சாஸனங்களாற் றெரிவனவும் தாமிர சாஸனம் நாணகமென்றிவற்றாற் றெரிவனவும் கிரேக்க பாஷை முதலிய பாஷைகளில் எழுதப்பட்டனவும் இன்னவென்று அவர் அறிந்து கொள்ளவேண்டும். அன்றியும், அங்கிலம் பிரெஞ்சு முதலிய நாகரிகஞ் சிறந்த பாஷைகளில் நூல் வரலாறு எழுது முறைகளை நன்கு படித்தறிதல் அவர்க்கு அத்தியாவசியகமாகும். இவை யெல்லாம் தமிழ்நாட்டில் ஒருவர்க்கே அமைதல் அருமை, இவை எளிதிலமையப்பெறும் அயல் நாட்டார் பிறமொழியாளராகலின் தமிழ் நூல் வரலாறு எழுதுதற்குத் தகுதி பெறார். இவை தமிழ் நாட்டில் ஒருவர்க் கமையாதாயின், பலர் கூடியாயினும் எழுதுதல்தான் நெறி.

கற்பூரத் தைலம்:—கற்பூரத் தைலமென்பதொருவகை எண்ணெய். அது வர்ணங்களுக்கும் மெருகுகளுக்கும் உபயோகமாகின்றது. நெடுநாளாக அது அமெரிக்காவிலிருந்து நமக்கு வந்து கொண்டிருக்கின்றது. இந்தியாவில் தேவதாரு மரத்துக் குங்கிலியத்தைப் பட்டியிற் காய்ச்சிப் புகைநீராக வடித்துக் கற்பூரத்தைலமும் குங்கிலியமும் இந்தியாவில் ஏற்கெனவே செய்துகொண்டிருக்கிறார்கள்; வியாபாரத்திற்குப் போதுமான அளவும் செய்கின்றார்கள். இப்பொழுது இந்தியச் சாம்பிராணியிலிருந்து மேற்சொல்லிய கற்பூரத் தைலமிறக்க வழி கண்டுபிடித்திருக்கிறார்கள். இவ்வாறு கிடைக்கும் எண்ணெய் கொஞ்சமானாலும், இந்தியர்களுக்கு மிகப் பயன்படும். ‘‘பாஸ்வெல்லி யாஸர் ஆடா’’ என்னும் மரம் மத்திய இந்தியக் காடுகளில் வரட்சி மிகுந்த பிரதேசத்தில் விஸ்தாரமாக இருக்கின்றது. இந்த மரத்தைக் கொத்திவைத்து, அதிலின்று வரும் பாலைத் திரட்டி யெடுப்பதே மேற்சொல்லிய சாம்பிராணியென்னும் நறும் பிசினாகும். கொத்தின இடங்களிலின்று கசியும் பிசினில் ஒருவிதமான கற்பூரத் தைலமும், குங்கிலியமும், பிசினும் சேர்ந்திருக்கின்றன.

கலம் குத்தினாலும் பதர் அரிசி ஆகாது.

டாக்டர் ரவீந்த்ர நாத் டாகூர்
Dr. RABINDRANATH TAGORE

[ஸ்ரீமான் கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரியா ரவர்கள், பீ. ஏ., பி. எல்.]



கிரீஸ் தேசத்தின் நாகரிகம் மிகவும் உயர்ந்த தென்றும் அதன் சாராம்சங்களைப் பற்றி யிருப்பதால்தான் இப்பொழுது கோலாஹல மாக விளங்கும் மேனுடுகள் நாகரிக பரிஷ்கா ரத்தை அடைந்திருக்கின்றன என்பது சரித் திர ஆராய்ச்சி செய்தவர்கள் ஒத்துக்கொண்ட விஷயம். அந்த நாகரிகத்தின் உயர்ந்த அம்சங் களை எல்லாம் விவரிப்பது அஸாத்யமானுலும் முக்யாம்சங்களை எடுத்துரைக்கிறேன். கிரீஸ் தேச மனிதர்கள் இந்திரிய கோசரமான இயற்கை அழகுகளின் உணர்ச்சி, பூர்ணமாய்ப் பொருந்தினவர்க ளென்றும், அவ்வழகுகளை நன்ருக வெளியிடுவதில் சக்தி பொருந்தினவர் களென்றும் அவர்கள் தேசசரித்திர மூலமாக வும் அவர்கள் நாட்டிற்கு அலங்காரமாகவிளங் கின மகா கவிகளின் வாக்கியங்களாலும் தெரி கின்றன. அவர்கள் கொண்டாடின தேவதைக ளும் மனித ரூபமாகவும் அதிக அழகுடன் ஜ்வ லிப்பதாகவும் இருப்பதாக அவர்கள் கொள்கை என்று அவர்கள் தேசத்திலிருந்த காவ்யங்களா லும் சில்ப சித்ரவிமர்சைகளாலும் தெரியவரு கிறது. உலகத்தில் இயற்கை அழகுடைய வஸ் துக்கள் என்னமாதிரியாக இருக்கின்றனவோ, அந்த மாதிரியாகவே வர்ணிப்பதும் சித்திரங் களில் எழுதுவதும் சில்பங்களால்வெளிப்படுத் துவதும் வழக்கமாக அந்தநாகரிகத்தில்இருந்தி ருக்கிறது. நம்முடைய நாகரிக முறைகளை நாம் கவனித்துப் பார்த்தோமேயானுல் நம்முடைய நோக்கங்கள் வேறு மாதிரியாகவே இருந்து வந்திருக்கின்றன. இந்த விசாலமான தேசத் தில் ஆகாயத்தை யளவிய மலைகளும், பொங்கி வரும் கடல்போல விரிந்தஆறுகளும்,உயர்ந்து வளர்ந்த மரங்களும் மனிதனுடைய நோக்கங் களை மிகவும் விசாலப்படுத்தி அந்தர்முகமான ப்ரவிருத்திகளும் அனுபவங்களும் அதிகமா கும்படியான மனோபலத்தைக் கொடுத்தன. ஆகையால்தான் நம்முடைய தேசத்தில் யோகி களும் ஞானிகளும் பக்தர்களும் கவிகளும் வித்வான்களும் ஈச்வர ஸ்வரூபத்தையே நாடி அனுத்யநந்த திவ்ய மங்கள ஸ்வரூப வைபவங் களை யோகஜ ப்ரத்யக்ஷத்தால் உணர்ந்து அதையே வாக்கியங்களாலும் கீதங்களாலும் சில்பசித்ரங்களாலும்வெளியிட்டிருக்கிருர்கள். இயற்கை யழகுகளை உணர்ந்து வெளியிடுவது டன் நின்றுவிடாமல், அந்த அழகுகள் எந்த பூர்ண ஸௌந்தர ஜ்யோதிஸௌடைய அம்சங்க ளாக இருக்கின்றனவோ அதை ஒவ்வொரு இயற்கை யழகிலும் கண்டுகளித்து வெளி யிட்டிருக்கிருர்கள். "சாந்தம், சிவம், சுந்தரம்" என்று ஈச்வர ஸ்வரூபத்தை அறிந்து வர் ணித்து மகிழ்ந்த மகான்களைப்பற்றி எவ்வளவு புகழ்ந்தாலும் போதாது. யோக சமாதியால் அறிந்து ஈச்வர ஸ்வரூபத்தை வெளியிட்டபடி யால்தான் நம்முடைய தேவவிக்ரகங்கள் கிரீஸ் தேசத்தில்போல மனித உருவமாகவே எப் பொழுதும் இல்லாமல் விசித்திர வைபவங்கள் பொருந்தி இருக்கின்றன. பகவத்கீதையில் கிருஷ்ண பகவான் காண்பித்த விச்வரூபத் தின் மஹிமை நம்முடையதேசம் நம்முடைய நாகரிகம் தவிர வேறு எவ்விடத்திலும் இவ் வுலகில் காணமுடியாது. அதேமாதிரியாக நம் முடைய காவ்யங்களிலும் இயற்கை யழகுகளை மட்டும் வர்ணிக்காமல் மனதில் விளங்கும் ரஸானுபவங்களையும் லோகாந்தரசுகங்களையும்

(இதன் தொடர்ச்சி 21-ம் பக்கம் பார்க்க.)

குருட்டுச் சிறுவன்

(Based on "The Blind Boy" by Colley Cibber.)

[ஸ்ரீமான் தி. த. கனகசுந்தரம் பிள்ளை
அவர்கள் பீ. ஏ.]

ஒளி யென்பதிது வென்றே
உரையீரே பெருமானே,
ஒளியின் றன்மையை ஐய!
ஒருகாலும் அறியேனே!
ஒளியின் றன்மையை ஐய!
ஒருகாலும் அறியேற்கு
ஒளியினால் வருநன்மை
உணர்த்தீரே பெருமானே.

கண்ணினிற் காண்பன
கணக்கில மொழிகுவீர்!
மண்ணினின் ஞாயிற்றின்
மணிக்கதிர் புகழுவீர்!
மண்ணினின் ஞாயிற்றின்
மணிக்கதிர் வெயிலன்றி
எண்ணிடிற் பகவிர
வியற்றுமா றெங்ஙனே?

உறங்கேனேற் பகலாகும்
உறங்கினா லிரவாகும்
கறங்கு நீர் சூழ் ஞாலம்
கண்ணிலேற் கெம்மானே.
கறங்கு நீர் சூழ் ஞாலம்
கண்ணிலேன் ஒருநாளும்
உறங்கேனேல் ஓவாத
பகலாகும் உடையானே.

கட்டழ கறியாத
கண்ணிலேற் காகநீர்
நெட்டுயிர்ப் புற்றுளம்
நெகிழுவ தென்கொலோ!
நெட்டுயிர்ப் புற்றுளம்
நெகிழற்க அம்மானே;
கட்டழ வெனக்கில்லை
காணாத பொருளினால்.

ஆதலிற் இட்டாத
அரும்பொருள் வருத்தற்க.
பூதவத் தேகாட்சிப்
புலனிலாச் சிறுவனை.
பூதலத்தே காட்சிப்
புலனிலே னாயினும்
மாதவத் தரசென
மனம்மிக மகிழ்வனே.

THE BLIND BOY

O say what is that thing called light,
Which I must ne'er enjoy;
What are the blessings of the sight,
O tell a poor blind boy!

You talk of wondrous things you see,
You say the sun shines bright;
I feel him warm, but how can he
Or* make it day or night?

My day or night myself I make
Whene'er I sleep or play;
And could I ever keep awake,
With me 'twere always day.

With many sighs I often hear
You mourn my hapless woe;
But sure with patience I can bear
A loss I ne'er can know.

Then let not what I cannot have
My cheer of mind destroy;
While thus I sing, I am a king,
Although a poor blind boy.

* Or, in prose, *either*. † *Ever* here means *always*.


சக்திதத்வ போதினி

PHYSICS

[ஸ்ரீமான் ஆ. ஸ். கஸ்தூரிரங்க ஐயரவர்கள், பி. ஏ., எல். டி]

காந்தசக்தி (1) அதன் தன்மை

மருந்துச் சரக்குகள் விற்கும் கடையில் காந்தக்கல் என்று கேட்டால் ஓடுபோல் மங்கல் சிவப்பாகவுள்ள ஒரு துண்டை எடுத்துக் கொடுப்பான். இது சில மருந்துகளுக்கு உதவும். இந்தக் கல்லை எடுத்து இருப்புப் பொடிகளில் தோய்த்தால், அவைகளில் பல இதில் ஒட்டிக்கொள்ளும். இக்கல்லில் உள்ள, இரும்பை ஒட்டிக்கொள்ளச் செய்யும் ஆற்றலுக்குக் காந்த சக்தி என்று பெயர். இக்கல்லுக்கே இதற்காகத்தான் காந்தக்கல் என்று பெயர் வந்தது. இம்மாதிரி கற்களை பூமியிலிருந்து வெட்டி எடுக்கலாம். சில ஊர்களில் சிற்சில வேளைகளில் இரவில் காணப்படும் எறி நக்ஷத்திரங்களில் மிகுந்து விழும் இரும்புபோன்ற வஸ்துக்களும் காந்தக் கற்களாக விருக்கும். இக்கல்லை ரஸாயன சாஸ்திரப்படி பரிசோதித்து நோக்கில் இதில் ஸாதாரண இரும்பும், பிராண வாயுவும் ஒருமாதிரியான அளவில் சேர்ந்து ரஸாயனக் கலப்பாகவுள்ளது என்பது வெளிப்படும்.




காந்தக்கல்லை இருப்புப் பொடியில் தோய்த்து எடுத்து நோக்கில், பொடிகள் அதன் இரண்டு எதிர் முனைகளில் அடர்த்தியாகப் பிடித்து நிற்கவும், இடைப் பாகங்களில் அவை யில்லாமலும் காணப்படும். ஆகவே, காந்த சக்தி அந்த முனைகளில் பலமாக உள்ளது, இடையில் இல்லை என்றே கூறவேண்டும். இப்படிப் பொடி பிடித்திருக்கும் காந்தத்தை, தாங்கக்கூடிய இலேசான பட்டுக் கயிற்றில் மட்டமாகத் தாங்கி நிற்கும்படி ஊஞ்சல்போ லமைத்துத் தொங்கவிட்டால் அதன் ஒரு முனை வடக்கு நோக்கியும் எதிர்முனை தெற்கு நோக்கியும் அமைந்த பின்னரே அது அசைவற்று நிற்கும். வேறு எப்படி நிற்கும்படியாக அதை அமைத்துப் பார்த்தாலும், அது ஆடி ஆடிச் சுழன்றுதெற்குவடக்காக அமைந்தே முடிவில் அசைவற்று நிற்கும். மேலும், வடக்கு நோக்கி நிற்கும் முனையை சீமைச் சுண்ணும்பால் குறியிட்டு, அதைத் தெற்கு நோக்கும்படி வைத்தாலும், அந்தக் காந்தக்கல் சுழன்று குறியிட்ட முனையை வடக்கே அமைத்துக்கொண்ட பின்னர்தான் அசைவற்றிருக்கும். ஆதலால் இந்தக் கல்லுக்கு வடக்கு நோக்கிக் கல்லென்றும், திசை காட்டும் கல் என்றும் பெயர். இதன் தன்மை நம்முன்னோர்களுக்கும் சீன தேசத்தவர்களுக்கும் வெகுகாலம் முன்னரே நன்றாகத் தெரியும். இதில் உள்ள முனைகளுக்கு முறையே வடக்கு நோக்கும் முனை என்றும் தெற்கு நோக்கும் முனை என்றும் பெயர்.


இதுவரையிலும் கூறிவந்த காந்தக்கல் என்ற இயற்கைக் காந்தத்தில், காந்த சக்தி குறைவாகவேதான் காணப்படும். இதே கல், பட்டணம் காட்சிச்சாலையில் வைத்திருக்கும் எறிநட்சத்திரக் கல்லைப்போல மிகப்பெரிதாக இருந்தால், ஒருவேளை மிகுந்த காந்த சக்தியுடையதாக இருக்கலாம். இவைகளின் அருகாமையில் கைகடியாரம் முதலிய நுட்ப இரும்புக் கருவிகளாலாகிய வஸ்துக்களைக் கொண்டுபோகவே கூடாது: போனால், அவைகள் உள்ளே இருக்கும் இருப்புப் பாகங்கள் நிலைகுலைந்து காந்த சக்தியால் சிதறிப்போய் விடும். ஆனால் சிறு துண்டுக் கற்களில் காந்த சக்தி குறைவு. காந்தசக்தி விஷய நுட்பங்களை நன்கு உணர, இவை அதிகமாக உதவி புரிய மாட்டா. ஆதலால் செயற்கைக் காந்தங்கள், ஊசி, கம்பி, குதிரை லாடம் ஆகிய இவைகள் உருவமாக்கி, பலமான காந்தசக்திகள் உடையனவாகச் செய்யப்படும். இவைகளைச் செய்யும் வழிகளைப்பற்றி ஆராய்வோம்.

செயற்கைக் காந்தம் உண்டாவதற்கு இரண்டு முக்கிய வழிகள் உண்டு. முதலாவது தேய்க்கும் வழி, இரண்டாவது மின்சார வழி. (1) தேய்க்கும் வழி: ஸாதாரண ஊசி ஒன்றை மேஜைமேல் வைத்து அதன் காதை இடது கையால்அழுத்தி பிடித்துக்கொள்ளவேண்டும். பின்னர், வலது கையில் காந்தக்கல்லை எடுத்து அதன் வடக்கு நோக்கும் முனையை, ஊசியின் காது முதல் நுனிவரையில் இழுத்துவிட

வேண்டும். இப்படியே பலதரம் செய்தபின்பு ஊசியை இருப்புப்பொடிகளில் தோய்த்துப் பார்த்தால் அதற்குக் காந்தசக்தி வந்துவிட்டதாக அதன் நுனிகளில் ஒட்டிக்கொண்டிருக்கும் பொடிகளால் நன்கு வெளியாகும். மேலும் இந்த ஊசியை, தடையின்றி மட்டமாகச் சுழலும்படி வெகு லேசான பட்டுக் கயிற்றால் தொங்கவிட்டுப் பார்த்தால், அது தன் நுனியை தெற்கிலும், காதை வடக்கிலும் வைத்துக் கொண்டே எப்பொழுதும் அசைவற்ற நிலைக்கு வரும். முன் தேய்த்ததில் காந்தக் கல்லின் தெற்கு நோக்கும் நுனியாலாவது, அல்லது ஊசியின் நுனியை அழுத்திக்கொண்டாவது, அல்லது வெளிநுனியிலிருந்து கையை நோக்கியாவது தேய்த்தால், ஊசி, தன் நுனியை வடக்கு நோக்கும் முனையாகவும், காதைத் தெற்கு நோக்கும் முனையாகவும் கொண்ட காந்தமாகும், அதிகச் சூடு பிறக்காமல் அநேக தரம் தேய்த்தால் ஊசி பலமான சக்தி யுடையதாகும். (2) இரண்டாவதான மின்சாரவழி மின்சாரத்தைப் பற்றி விவரிக்குங்கால் விளக்கப்படும். இந்த வழியால் தான் மிகுந்த வலிவுடைய பல உருவச் செயற்கைக் காந்தங்கள் செய்பலாம். இந்தக் காந்த சக்தி ஏற்கும் தன்மையில் கொடுக்கப்படும் காந்தத்தின் மிகுதியான சக்தியை ஸாதாரண இரும்பு மிகுதியாக ஏற்கும், எஃகு குறைவாகத்தான் ஏற்கும்; ஆனால் எஃகில் காந்த சக்தி தங்கி இருப்பதுபோல, நீடித்துக் காந்த சக்தி இரும்பில் இராது. ஓரணுக்காசு செய்துள்ள நிக்கல் என்ற உலோகமும், கோபால்ட் என்பதும் அதிகக் காந்தசக்தி ஏற்காவிடினும் காந்தத்தால் இழுபட்டு ஒட்டிக்கொள்ளக் கூடியவைகள்தாம்.


பலமான மின்சார காந்தத்திலிருந்து மற்றைய எஃகுத் துண்டுகளுக்கு காந்தசக்தி ஏற்றுவதற்கு ஓர் எல்லையுண்டு: அதற்குமேல் முதல் காந்தம் எவ்வளவு பலமுடையதாக விருந்தாலும் எஃகுக்கு காந்தசக்தியே ஏறாது. இப்படி இருந்தும், ஒரு எஃகுக்கம்பி எவ்வளவு பருமனுள்ளதோ அவ்வளவே பருமன் உடையதாக இருக்கும் பல எஃகுத் தகடுகளை எடுத்துத் தனித்தனி அவைகளின் எல்லைவரை காந்த சக்தி ஏற்றி அவைகளை நுனிகளில் இரும்புத்துண்டுகளால் சேர்த்தால் அது பருமனை எஃகுத்துண்டைவிட பலமான காந்தமாகும். இந்தத் தகடு காந்தத்திற்குச் சேர்க்கைக்காந்தம் என்று பெயர். இதில் இடைத் தகடுகள் ஓரத் தகடுகளைவிட நீளமாக இருந்தால் சேர்க்கைக் காந்தம் வெகு பலமாக விருக்கும்.





இப்படி ஏற்றப்படும் காந்தசக்தி சிதறிப் போவது இப்படி என்பதையும், அதை இவ்வாறு போகவொட்டாது காக்கும்விதம் எப்படி என்பதைப்பற்றியும் ஆராய்வோம். எவ்வளவு பலமான காந்தமாயினும் அதை நன்றாகக்காய்ச்சினாலும், குலுக்கிப் பலதரம் கீழே போட்டாலும், அதன் சக்தி குன்றிப்போய்விடும்: ஒரு வேளை முழுசக்தியும் போய்விட்டாலும் விடலாம்: இதே மாதிரிதான் அவைகளைத் துருப்பிடிக்க விட்டாலும், துருவெடுக்கத்-சூடுபிறக்கும்படி தேய்த்தாலும். இதுவுமன்றி அவைகளின் ஒரு முனையில் எதிர்முனைக் காந்தசக்தி ஏற்படும்படி வேறுகாந்தம் கொண்டு தேய்த்து ஏற்றினாலும், முன்னுள்ள காந்த சக்தி போய் விடும். இப்படி எல்லாம் இருப்பதால் செயற்கையில் பலமாகச் செய்யப்படும் காந்தங்கள் வெகு ஜாக்கிரதையாகக் காப்பாற்றப்பட வேண்டும். பொதுவாக அவைகளை உஷ்ணமான இடங்களில் வைக்காமல், மரப்பெட்டிகளுள் வைத்து மூடிவைக்கவேண்டும். எடுத்துப் பழகுங்கால் அவைகளை மிகுதியாகக் குலுக்காமலும், கீழே தவறிப் போடாமலும் இருக்க வேண்டும். மேலும் ஊசிகளாக இருந்தால், இரண்டிரண்டாக முனை மாறாகப் போட்டு வைக்கவேண்டும். கம்பிக் காந்தங்களாயின், இரண்டிரண்டாக முனை மாற்றிப்போட்டு இடையில் அதே நீள மரத்துண்டையிட்டு

முனைகளையும் ஒவ்வொரு இரும்புத் துண்டைக்கொண்டு ஒட்டிச் சேர்த்து வைக்க வேண்டும். குதிரைலாடக் காந்தத்தில் முனை இரண்டும் நெருங்கியே இருப்பதால் காந்த சக்தி சிதறியே போகாது. ஆகையால்தான் இவ்வுருவம் காந்தத்திற்கு மிகத் தகுந்தது என்பர் பிரகிருதி சாஸ்திரிகள். இதிலும் ஜாக்கிரதையாகவிருக்க ஒரு இரும்புத்துண்டு இரண்டு முனைகளில் ஒட்டி விட்டிருக்கும். இவை காந்த சக்தி சிதறிப்போகவிடாது காப்பதால் இப்படி இருக்கும் இரும்புத் துண்டுகளுக்கு காவற்றுண்டுகள் என்று பெயர்.



காந்த சக்தியைப்பற்றியுள்ள பொது விஷயங்களை முடிக்குமுன் எல்லோரும் எளிதில் செய்து வேடிக்கை பார்க்கக்கூடிய காந்தக் காற்ருடியைப்பற்றிக் கூறி நிறுத்துவோம். சுவற்றில் ஆணி ஒன்று அறைந்து அதில் குதிரைலாடக் காந்தம் ஒன்றை மாட்டுவோம். அதற்கு நேர் கீழாகச் சுவற்றில் கொஞ்சதூரத்தில் வேறு ஒரு ஆணி அடித்து அதில் கொஞ்சம் நீளமான நூலில் ஒரு நுனியைக் கட்டிவைப்போம். ஸாதாரணச் சிறு ஊசி ஒன்றை எடுத்து அதை வளைத்துச் சிறு நூலை இருநுனியிலும் கட்டி மாலைபோலத் தொங்கவிடுவோம். இந்நூலின் மத்திய பாகத்தில் ஆணி நூலின் மறுநுனியைக் கட்டி அதை ஆணியையச் சுற்றிச்சுற்றி, வளைந்த ஊசியை காந்தத்தின் அடியில் கொஞ்சதூரத்தில் அடிநூல் நேராகக்கொண்டு நிற்கச்செய்வோம். தகுந்த தூரத்தில் வளைந்த ஊசி காந்தத்தில் படாமலும் கீழ்நூலைத் தளரச் செய்யாமலும் அந்தரத்தில் நிற்கும். இதற்கே காந்தக் காற்ருடி என்று பெயர். காந்தம் ஊசியை மேலே இழுக்க, (அதன் கனம் கீழே இழுப்பினும்) ஆணிநூல் அதை மேலேபோய் காந்தத்தில் ஒட்டிக்கொள்ளாமலும் கீழ்நூலையும் தளரவிடாமலும் தடுக்க, ஊசி அந்தரத்தில் நின்றுவிடுகிறது.

இப்படி இருக்கும் காந்தக் காற்ருடியிலிருந்து காந்தசக்தி விஷயம் ஒன்று புதிதாகத் தெரிந்துகொள்ளலாம். காற்ருடி ஊசிக்கும் காந்தத்திற்கும் இடையில் இரண்டிலும் படாமல் காகிதத் துண்டையாவது கண்ணாடித் துண்டையாவது கொண்டுவருவோம். காற்ருடியில் ஒருமாறுபாடும் இராது. ஆனால் இடையில் லேசான இரும்புத்தகட்டை அப்படியே கொண்டுவருவோம். உடனே காற்ருடி கீழே விழுந்துவிடும். இதனால் காகிதம், கண்ணாடி முதலிய காந்தசக்திக்கு ஈடுபடாத பொருள்கள் வழி காந்தசக்தி ஊடுருவிப் பாயும் திறனுடையது: அதற்கு ஈடுபடக் கூடிய இரும்பினால் அது தடைப்பட்டு நின்றுவிடும் என்பது வெளியாகும். இதுபற்றியே காந்தசக்தியைக் காப்பாற்ற காவல் துண்டுகள் இரும்பாலேயே அமைக்கப்பட்டுள்ளன. கண்ணாடிப் பாத்திரத்துள் இருப்புப்பொடிகள் இட்டு வெளியில் காந்தத்தை இழுத்தாலும், காகிதத்தின்மேல் அவைகளைக் கொட்டி அடியில் காந்தத்தை இழுத்தாலும், காந்த சக்திக்கீடுபட்டிருப்பதைக் காட்டி, அவை குதித்தாடிக் கூடிப் பிரியும். சில உஷ்ணம் காட்டும் கருவிகளில் உள்ளிருக்கும் இரும்புக் குறிகளை இடம் மாற்ற காந்தங்களை உபயோகப்படுத்த வேண்டி வரும்.

இனிக் காந்தசக்தியின் நுட்பங்களை மேல் எடுத்து விவரிப்போம்.

(20-ம் பக்கத் தொடர்ச்சி.)

கூட வர்ணித்திருக்கிருர்கள். இதே காரணத்தால்தான் நம்முடைய சாஸ்திரங்களிலும் நம்முடைய நடவடிக்கைகளிலும் இந்த ஒரு பிறவிதான் உண்டென்று நாம் நினைக்காமல் விசால நோக்கத்துடன் ஜன்மாந்தரங்கள் சத்தியமென்று நாம் உணர்ந்தும் உணர்ச்சி இருக்கிறதென்று காட்டியும் வருகிருேம். ஆகையால் உலக நாகரீகங்களுள் உயர்ந்த கிரீஸ் நாகரீகமும் நம்முடைய நாகரீகமும் எத்தன்மையானவைகள் என்று நாம் உணர வேண்டியது மிகவும் அவசியமான விஷயம்.

பள்ளிச் சிறுவர்களின் சுகாதாரம்

HEALTH OF SCHOOL CHILDREN

[ஸ்ரீமான் கே. எஸ். ராமஸ்வாமி ஐயரவர்கள், பி. ஏ., எல். டி.]

நம்நாட்டில் பள்ளிக்கூடத்திற்குப் போய்க் கல்வி பயின்றுவரும் சிறுவர்களின் தொகை கொஞ்சம் கொஞ்சமாக அதிகரித்து வருகின்றது. நாட்டிலுள்ளோர் அனைவருக்கும் கல்வி பரவவேண்டியது மிகவும் இன்றியமையாததால், மேற்குறித்த விஷயத்தைப்பற்றி நாமனைவரும் மகிழ வேண்டியதே. பள்ளிக்கூடத்தில் சிறு வயது முதல் படிப்பது அவசியமானால், அப்படிச் சிறு வயது முதல் பள்ளிக்கூடத்தில் படிப்பதால் அவர்களுக்கு ஆரோக்கியம் குறையாமலிருக்கும்படியான வழிகளை நாம் தேடவேண்டும். சிறுவர்கள் பள்ளிக்கூடத்தில் போய் வாசிப்பதால் என்ன கெடுதி உண்டாகுமென்று சிலர் கேட்பர். அதற்குப் பதில் கூறுவது முதலில் அரிதாகத் தோன்றினாலும், ஆராயும்போது, பல விஷயங்கள் வெளிப்படுகின்றன.

சாதாரணமாக, 5-வயதுமுதல், 18 அல்லது 20-வயது வரையிலுமுள்ள சிறுவர் சிறுமிகளையே பல நோய்கள் வருத்துகின்றன. பள்ளிக்கூடத்தில் பல சிறுவர்கள் ஒன்று கூடியிருப்பதனால், ஒரு சிறுவனுக்கு நோய் உண்டாகுமானால், அது மற்றவர்களுக்கும் பரவுவது மிகவும் சுலபம். இரண்டாவது, சிறுவர்கள் ஒரே இடத்தில் வெகு நேரம் இருக்க நேரிடுவதினால், அசுத்தமான காற்றை உட்கொள்ளும்படி யாகிறது. மூன்றாவது, பள்ளிக்கூடங்களில், சுகவழிக்கு விரோதமான மேஜைகள் அல்லது விசுப்பலகைகள் முதலியவைகளின்மீது எழுதியும், உட்கார்ந்தும் வருவதால், கூன்முதுகு முதலிய விகார ரூபங்கள் ஏற்பட இடமுண்டாகின்றது. நான்காவது, சிறுவர்கள் இளமையிலிருந்தே சிறு எழுத்துக்களைப் படிக்கவேண்டி யிருப்பதனால் அவர்களுடைய பார்வை சக்தி மிகவும் குறைகின்றது. இவைகளைப்போன்ற பல குறைகள் பள்ளிக்கூடங்களில் இருக்கின்றன. இவைகளில் எல்லாவற்றையுமாவது, அல்லது கூடிய மட்டில் முக்கியமானவைகளையாவது நீக்கினால் மாத்திரமே, பள்ளிக்கூடத்தில் படிக்கும் பிள்ளைகளுக்கு படிப்பதின் முக்கிய பயன்கள் உண்டாகும்.

இவைகளெல்லாவற்றையும் கவனித்த துரைத்தனத்தார், தற்காலம் புதிதாக ஓர் ஏற்பாடு செய்திருக்கின்றனர். அவ்வேற்பாடு பள்ளிச் சிறுவர்களின் தேகாரோக்கியத்தைக் கவனிக்க ஏற்பட்டது. அதன்படி கல்வியிலாகாவின்கீழிருக்கும் ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும், அப்பள்ளிக்கூடத்துச் சிறுவர்களின் தேக சௌக்கியத்தைக் கவனிப்பதற்காக ஓர் வைத்தியர் நியமிக்கப்படவேண்டும். அவர் பள்ளிக்கூடத்துச் சிறுவர்களின் தேக சௌக்கியத்தைக் கவனித்து வரவேண்டும். சாதாரணமான நோய்களால் கஷ்டப்படும் சிறுவர்களுக்குத் தகுந்த மருந்து பள்ளிக்கூடத்திலேயே கொடுபடவேண்டும். வைத்தியர் எடுத்துக்கொள்ளும் சிரமத்திற்காக, குறிப்பிட்ட ஓர் தொகை, அவருக்குப் பள்ளிக்கூடத்து அதிகாரிகளால் கொடுக்கப்படும். இத் தொகையில் ஓர் பாகம் துரைத்தனத்தாராலும், மற்றொரு பாகம் பள்ளிக்கூடத்தாராலும் கொடுக்கப்படும்.

பள்ளிக்கூடத்தில் சிறுவர்களின் தேக சௌக்கியத்தை வைத்தியர்கள் விசாரிக்கும்போது, அவர்கள் கவனிக்கவேண்டிய விஷயங்களை மூன்றாகப் பிரிக்கலாம்:—(1) சிறுவர்களுக்கு சாதாரணமாய்க் காணும் வியாதிகளுக்கு மருந்து கொடுத்தல் அல்லது சிகித்சை செய்தல். (2) வியாதிகள் வராதிருக்க ஏற்பாடுகள் செய்தல். (3) சுகாதார விஷயங்களைப்பற்றிச் சிறுவர்களுக்குப் போதிப்பதும், அவ்விஷயங்களில் அவர்கள் ஆவல்கொள்ளும்படிச் செய்வதுமாம்.

அம்மை, சுரம், இருமல், சிரங்கு முதலியவைகள் சாதாரணமாகப் பிள்ளைகளைத் துன்புறுத்துகின்றன. இவற்றில் ஒன்று ஒரு சிறுவனிடம் காணப்படுமாயின், உடனே அவனைப் பள்ளிக்கூடம் போகாமலும், மற்றச் சிறுவர்களுடன் எவ்விதத்திலும் சேராமலு மிருக்கும்படியான வழிகளைத் தேடவேண்டும். சில பெற்றோர்கள் இதற்கு முதலில் ஒத்துக்கொள்ளமாட்டார்கள். பையன் பள்ளிக்கூடம் போகாமலிருந்தால், கட்டின சம்பளம் வீணாகப் போகிறதென்றும், நோயுள்ள பையன் பள்ளிக்கூடம் போனால், மற்றவர்களுக்கு ஒன்றும்

வராதென்றும் கூறுவார்கள். இதற்குத் தகுந்த சமாதானங்களைக் கூறி, சிறுவனை (பள்ளிக்கூடத்து வைத்தியரிடம் போகாவிட்டால்) அருகேயுள்ள ஆஸ்பத்திரிக்கு, அல்லது வைத்தியரிடம் போய் சரியான சிகித்ஸை பெறும்படிச் சொல்லவேண்டும். பெற்றோர்கள் மேற்கூறியபடி செய்யாவிட்டால், நோயுள்ள பையனை பள்ளிக்கூடத்திலிருந்து வீட்டிற்கு அனுப்புவதைவிட வேறு வழியில்லை. உதாரணமாக, ஒருவனுக்கு அம்மை காணுமாயின், அவன் எக்காரணத்தைக்கொண்டும் பள்ளிக்கூடம் வரக்கூடாது. பள்ளிக்கூடத்து வைத்தியராவது, அல்லது தகுந்த வேறொரு வைத்தியராவது, அம்மை முற்றிலும் சிறுவனுக்கு இல்லை என்று உறுதிமொழிச் சீட்டுக்கொடுக்கும் வரையிலும், வகுப்பில் சேர்த்துக்கொள்வது பிசகு. இப்படிச் செய்யாவிட்டால், பையன் பள்ளிக்கூடம் போகவில்லையே என்று வருத்தப்படும் பெற்றோர்கள், அம்மை கொஞ்சம் குறைந்ததும் அம்மைக் கொப்புளங்கள் நீர்வற்றி உலர்ந்து விழுவதற்கு முன்னமே, பள்ளிக்கூடத்திற்கு அனுப்பிவிடுவதுவழக்கம். இந்தக் கெட்டவழக்கத்தினுல், அம்மை மற்றையச் சிறுவர்களுக்கும் பரவ வழியுண்டாகின்றது. சிறு வயதில் அம்மை குத்திக்கொண்டவர்களும், பெரியவர்களான பிறகு மறுபடியும் குத்திக் கொள்வதனுல் நல்லதேயொழிய கெடுதியொன்றுமில்லை.

சிரங்கு, பள்ளிக்கூடத்துக்குச் சிறுவர்களிடம் மிகவும் சாதாரணமாய்க் காணப்படுகின்றது. இது அழுக்கடைந்த உடைகளைத் தரிப்பதனுலும், அசுசியா யிருப்பதாலும், சிரங்குற்றவர்களோடு பழகுவதனுலும் தகுந்த உணவில்லாததினுலும் உண்டாகின்றது. இதைப்பற்றிப் பள்ளிக்கூடத்து உபாத்தியாயர்கள் மிகவும் கவனமாக இருக்கவேண்டும். பிள்ளைகள் தினந்தோறும் ஸ்நாநம் செய்கிறுர்களா வென்றும், தலையில் பேன் முதலியவை இராமலிருக்கின்றனவா வென்றும் கவனிக்கவேண்டும். எவையாவதுஇருப்பதாகத் தெரிந்தால், சவர்க்காரம் கொண்டு அலம்பியாவது, தலைமயிரைக் கத்தரித்தாவது, பூச்சிகளைப் போக்கடிக்க முயலவேண்டும்.

மேற்கூறிய விஷயங்களைக் கவனிப்பதற்கு வைத்தியர், உபாத்தியாயர் ஆகிய இருவர்களுடைய முயற்சி மாத்திரம் போதாது. பிள்ளைகளின் பெற்றோர்களுடைய கூட்டுறவும் வேண்டும். பெற்றோர்களுக்கு, நோயின் குணத்தைப் பற்றியும், சிகித்ஸை முறையைப்பற்றியும் தெரிவிக்கவேண்டும். இவ்விஷயத்தில் மேனுடுகளில் கீழுள்ளதுபோன்ற ஓர் கடிதம் பள்ளிக்கூடத்திலிருந்து அனுப்பப்படுகிறது :—

..........................பள்ளிக்கூடம்

தேதி........19

.............................அவர்களுக்கு,

ஐயா / அம்மணி,

மேற்படி, பள்ளிக்கூடத்தில்......வது வகுப்பில் வாசித்துவரும் தங்கள் மகன் / மகள்.............. என்பவருக்கு..............கண்டிருக்கிறபடியாலும், அம்மாதிரி ....இருப்பது பள்ளிக்கூடத்தின் ஆரோக்கியத்திற்குக் குறைவு உண்டாக்குமாதலாலும் ஷெ சிறுவனை / சிறுமியை நீங்கள் கவனிக்காவிட்டால்........ ....முதல் பள்ளிக்கூடத்தில் நாங்கள் சேர்க்கமாட்டோம்.

ஷெ நோய்க்குத் தகுதியான மருந்து.......... .... ஆஸ்பத்திரியில் / பள்ளிக்கூடத்தில் கிடைக்கும்.

(மருந்து உபயோகிக்கும் முறை நேரில் சொல்லப்படும்.)

தலைமை உபாத்தியாயர்,
வைத்தியர்.

மேற்கூறிய நமூனுவைப் பெற்றும் மாணவர்களின் பெற்றோர் கவனியாதிருப்பின், பையனைப்பற்றி மேலே கூறிய நமூனுவில் "சிறுவனுக்கு / சிறுமிக்கு உடம்பு முற்றிலும் குணமாயிற்று என்று வைத்தியர் கூறும் வரையில் பள்ளிக்கூடம் வரக்கூடாது" என்பதைச் சேர்த்து எழுதி அனுப்பி விடுகிறுர்கள்.

பள்ளிக்கூடத்தில் வியாதிகள் பரவாமலிருக்கும்படியும் அப்படி எவருக்காவது நோயுண்டான போதும் அதைத் தடுக்கத் தகுந்த சிகித்ஸையும் செய்வதோடுங்கூட, பிள்ளைகளின் சுகாதாரத்தைக் குறித்து வேறு விஷயங்களையும் கவனிப்பது வைத்தியர் கடமையாகிறது.

(தொடரும்.)

நமது சிறு கதை
OUR SHORT STORY
[ஸ்ரீமான்ஜி.ஏ சுந்தரமய்யரவர்கள்,பி.ஏ.,பி.எல்.]

ஆபீஸ் இரகசியம்
THE OFFICE SECRET

சக்கரவர்த்தி ஐயங்காருக்கு மதுரை தாசில் உத்தியோகம் ஆனபோது வயது ஐம்பத்து மூன்று. அவர் மனைவி பத்மாசனி அவருக்கு மூன்ருவது இளையாள். அவளுக்கு வயது இருபது. ஐயங்காருக்கு தனது பத்தினியின்பேரில் மிகுந்த அன்பு. பத்மாசனிக்கும் அவள் புருஷனிடம் அதிகப் பிரியம்தான். ஐயங்கார் தகுந்த உத்தியோகத்திலிருப்பதையே முக்கியமாக உத்தேசித்து பத்மாசனியின் பெற்ரோர்கள் அவருக்குப் பெண்ணைக் கொடுத்தார்கள். பத்மாசனி தன் நாதனுடைய பதவியினல் தனக்கு ஏற்பட்ட மேன்மையை வெகு கௌரவமாய் வகித்துவந்தாள். ஒரு ஏழை வீட்டுப் பெண்ணயிருந்தும், சிறு வயதிலேயே பெரிய பதவிபெற்று சேவகர்களை அதிகாரம் செய்வதும், குமாஸ்தாக்கள் அவள் வார்த்தைக்குக் காத்துக்கொண்டிருப்பதும் யாருக்குத்தான் உன்னத ஸ்திதியாகத் தோன்ருது? அதிகாரத்திலும் பதவியிலும் மனதைச் செலுத்தினலும், அவ்வளவுக்கும் காரணமான தன் நாதனையும் மறக்காமல் அவரிடம் பத்மாசனி வெகு பிரியம் பாராட்டி வந்தாள். தாலுகா ஆபீஸ் வருமானவரி குமாஸ்தா துரைசாமி ஐயர் தாசில்தார் வீட்டுக்கு அடுத்த ஒரு சிறு வீட்டில் குடியிருந்தார். ஆகவே அவர் அடிக்கடி தாசில்தார் வீட்டுக்குப் போகவும், அவர் வீட்டுக் காரியங்களை கவனிக்கவும் நேர்ந்தது. பத்மாசனிக்கு ஆகவேண்டிய வீட்டுக்காரியங்களையெல்லாம் துரைசாமி ஐயரிடம் சொல்லி அவரைக்கொண்டு முடித்துக்கொள்ளும் வழக்கம் ஏற்பட்டது. துரைசாமி ஐயர் மனதில் கள்ளம் கபடு ஒன்றும் நினையாதவர். வயது இருபத்தேழுதான், சம்பளம் சுவல்பமாயிருந்தாலும், நல்ல உடுப்புக்களில் அவருக்கு அதிகப் பிரியமானதினல் செலவைக் கவனியாமலே அவர் எப்போதும் நல்ல உடை அணிவார். சங்கீதத்தில் கொஞ்சம் கிறுக்கு. தானகவும் பாடுவார். அவரிடம் ஒரு குற்றமும் இல்லாதிருந்தும் அவர் அடிக்கடி தன் வீட்டிற்கு வருவதும் பத்மாசனியுடன் பேசுவதும் சக்கரவர்த்தி ஐயங்காருக்குப் பிடிக்கவில்லை. ஐயர் அடிக்கடி தன் வீட்டிற்கு வருவது தமக்குப் பிரியமில்லை என்பதை வெளியிட்டுச் சொல்லி அவரை வராமல் நிறுத்திவிடலாம் என்று யோசித்தார். ஆனல் எப்படிச் சொல்லுகிறதென்று தெரியவில்லை. பத்மாசனியிடம் சொல்வதானல் கூச்சமாயிருந்தது. துரைசாமி ஐயரிடம் இதைப்பற்றி ஏதாவது சொன்னல், தான் சொல்லிய சங்கதி வெளியில் பரவி தன்னைப்பற்றி அபவாதம் உண்டாகும் என்றும் பயந்தார்.

நாளடைவில் சக்கரவர்த்தி ஐயங்காருக்கு துரைசாமி ஐயரைத் தன் வீட்டிற்கு வராமல் தடுப்பதற்கு வழிதேடுவதே பெரிய கவலையாகிவிட்டது. "மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்" என்பதுபோல துரைசாமி ஐயருடைய ஒவ்வொரு செயலும் விகல்பமாகத் தோன்றியது. துரைசாமி ஐயரை வேறு ஊருக்கு மாற்றிவிடலாம் என்று யோசித்தார்; முடியவில்லை. பத்மாசனியும் துரைசாமி ஐயரும் நாளாக நாளாக அதிகமாய் நெருங்கிப் பழக ஆரம்பித்தார்கள். ஆனல் அவர்கள் மனதில் மட்டும் பிசகான எண்ணம் ஒன்றுமில்லை. இவர்கள் மனதின் உண்மையை அறியாத சக்கரவர்த்தி ஐயங்கார் மனதில் பித்து ஏறிப்போய் இவர்கள் நெருங்காமல் இருக்க எந்தக் காரியமும் செய்யத் துணிந்து விட்டார். யோசித்து யோசித்து கடைசியாய் ஒரு சூழ்ச்சி செய்து, துரைசாமி ஐயர்பேரில் ஒரு பெரிய குற்றத்தைச் சாட்டி அவரைச் சிறைச்சாலைக்கு அனுப்பிவிடுவதாய்த் தீர்மானித்தார்.

மதுரை, தாலுகா கச்சேரியில் துரைசாமி ஐயருக்கு அடுத்து உட்கார்ந்திருக்கும் குமாஸ்தா கேசவராவ் வேலையில் மிகவும் கவனமுள்ளவர் என்று பேர்பெற்றவர். ஆனலும் மேல் உத்தியோகஸ்தர்களை அடிக்கடி பார்த்து திருப்திசெய்யும் வழக்கம் அவரிடம் இல்லாததால், அவ்வளவுதான் அவர் வேலையை ஒழுங்காய்ப் பார்த்தாலும் அவருக்குச் சம்பளம் மட்டும் உயரவில்லை. வயது முப்பத்தாருகியும், சர்க்கார் வேலையிலமர்ந்து பதினைந்து வருஷங்களாகியும், அவருக்கு சம்பளம் ரூபாய் 25-க்கு மேல் காயமாகவில்லை. மற்ற குமாஸ்தாக்களைப் போல மேல்வரும்படி சம்பாதிக்கும்

வழிகளும் தெரியாது. சம்பளம் உயராவிட்டாலும், ராயரிடம் சந்தானலக்ஷ்மியின் பரிபூர்ண கடாக்ஷம் ஏற்பட்டு அவருக்கு பிள்ளைகள் நாலும், பெண்கள் மூன்றும் பிறந்தன. அவர் வீடு குசேல ஸ்வாமியின் திருமாளிகை போலவே விளங்கிற்று. சக்கர்வர்த்தி ஐயங்கார் மதுரை தாசிலாக வந்தது முதல், ராயரிடம் விசேஷ அபிமானம் காட்ட ஆரம்பித்தார். வந்து ஆறுமாதம் ஆனதும், முன் இருந்ததைக்காட்டிலும் அதிகமாய் ராயரிடம் பிரியம் காட்டினார். ராயருக்கும் நல்ல காலம் பிறந்ததுபோலக் காணப்பட்டது.

ஒரு நாள் சாயங்காலம் சக்கரவர்த்தி ஐயங்கார் ச்சேரியிலிருந்து வந்தவுடன் கேசவ ராயரை வீட்டிற்கு வரும்படி ஆள் விட்டார். ராயர் வந்து சேர்ந்ததும், தாசில்தார் அவரைத் தன் வீட்டிற்குள் தான் ஆபீஸ் செய்யும் அறைக்கு அழைத்துப்போனார். சேவகன் ஒருவனைக் கூப்பிட்டு "அம்மா எங்கே" என்று கேட்டதற்கு அவன் "டிப்டி கலெக்டர் எஜமான் வீட்டில் குழந்தைக்கு ஆண்டு நிறைவு கல்யாணத்திற்குப் போயிருக்கிறார்கள்" என்றான். தாசில்தார் "சரி. யார் வந்தாலும் இப்போது பார்க்கமுடியாது என்று சொல்லிவிடு" என்று சேவகனுக்கு உத்தரவுகொடுத்துவிட்டுக் கதவை மூடிக்கொண்டு ஒரு நாற்காலியில் உட்கார்ந்துகொண்டார். பக்கத்தில் நின்றுகொண்டிருந்த கேசவ ராயரைப் பார்த்து,

"உம்மிடம் அந்தரங்கமான சில விஷயங்கள் பேசவேண்டும். உட்காரும்" என்று மற்றொரு நாற்காலியைக் காட்டினார்.

கேசவ ராவ் "பாதகமில்லை, நான் நின்றுகொண்டே இருக்கிறேன்" என்றார்.

"நீர் இவ்வளவு வருஷ சர்வீஸ்காரராக இருந்தும் உமக்கு வேலை உயராமல் இருப்பது எனக்கு மிகவும் வருத்தமாக இருக்கிறது. அடுத்த வாரத்தில் நமது ஆபீஸில் வேலை காலியாகிறதில் உம்மை ரூ. 35-க்கு உயர்த்தும்படி நான் பலமாய் எழுத உத்தேசிக்கிறேன்."

"தாங்கள் என்மேல் பக்ஷம் வைத்து எனக்காகச் சிரமப்படுவதை நான் எப்போதும் மறக்கமாட்டேன். எந்த வேலையில் என்னைப் போட்டாலும் மேலதிகாரிகளுக்கு திருப்திகரமாய் வேலையை ஒழுங்காய்ப் பார்க்கிறேன்" என்றார் ராயர். "அதிருக்கட்டும், உம்பேரில் கோர்ட்டில் யாரோ பிராது போட்டதாய்க் கேள்விப்பட்டேனே என்ன அது?" என்று கேட்டுக்கொண்டே சக்கரவர்த்தி ஐயங்கார் தனக்குச் சமீபத்தில் இருந்த தன் கைப்பெட்டியைத் திறந்தார்.

"ஒன்றுமில்லை. சுவல்ப சம்பளமானதால் குடும்ப யோகக்ஷேமத்திற்குப் போதாமல் ரூ. 10 கடன் வாங்கும்படி நேரிட்டது. வேறு வழியில்லாமல் வட்டிக்கடை சடையன் செட்டியாரிடம் ஒருபாண்டு எழுதிக்கொடுத்து கடன் வாங்கினேன். அந்த பாண்டுக்கு வட்டிப் பணம் கூடுமானவரை அடிக்கடி கொடுத்துக் கொண்டே வந்தும், சில அசந்தர்ப்பங்களால் நடுவில் கொஞ்சகாலம் வட்டி கொடுக்க முடியாமல் வட்டியும் அசலுமாக ரூபா. 200 வரை ஏறிவிட்டது. செட்டி பிராது செய்துவிட்டான். நான் வாயிதாவன்று கோர்ட்டுக்குப் போய் ரூ. 100 செலுத்திவிட்டு பாக்கித்தொகைக்கு மாத வாயிதா கேட்டு, கோர்ட்டார் தயவால் அப்படியே வாயிதா பெற்றுக் கொண்டேன்" என்றார் ராயர்.

"உமக்கு ஒருமாத வாயிதா தீர இன்னும் எவ்வளவு நாள் இருக்கின்றது?"

"இன்னும் ஒருவாரம் தான் இருக்கிறது."

"பணத்துக்கு என்னவழி செய்திருக்கிறீர்?"

"என் சிநேகிதர்களிடம் கேட்டுப்பார்த்தேன். ஒருவரிடமும் இல்லை. சுவாமிதான் வழிகாட்டவேண்டும்" என்று கேசவராவ் பதில் சொல்லி முடிப்பதற்குமுன், சக்கிரவர்த்தி ஐயங்கார் கைப்பெட்டியிலிருந்து ஒரு நூறு ரூபாய் நோட்டை எடுத்து "இந்தாரும்; இந்த ரூபாயை எடுத்துக்கொள்ளும். நாளையே கோர்ட்டில் செலுத்தி உமது டிக்கிரியை தீர்த்துக்கொள்ளும். இதை எனக்கு திருப்பிக்கொடுப்பதைப் பற்றிச் சிறிதும் கவலைப்படவேண்டாம். உமது சௌகர்யம்போல் சாவகாசமாய் நாலோ அஞ்சோ கையில் அகப்பட்டதைக்கொடுத்துத் தீர்க்கலாம். வட்டி ஒன்றுமே வேண்டாம்" என்று சொல்லி கேசவராவ் கையில் நோட்டைக் கொடுத்தார், கேசவராவ் அதிக ஆச்சரியமடைந்து "எஜமான் என் குடும்பத்தை ரக்ஷித்தீர்கள். நானும் என் குழந்தைகளும் உங்கள் பேரைச்சொல்லிக்கொண்டுதான் சாப்பிடவேண்டும்" என்று சொல்லி பக்கத்தில்

இருந்த மேஜையின்பேரில் நோட்டை வைத்தார்.

சக்கிரவர்த்தி ஐயங்கார் "ஒன்றும் சொல்ல வேண்டாம். அந்த விஷயம் இருக்கட்டும். நீர் செய்யவேண்டிய காரியம் ஒன்றுண்டு. அதில் நான் சொல்லுகிறபடி செய்வீரா" என்றார். கேசவராவ் "என்னைக் காப்பாற்றிய என் குல தெய்வம் தாங்கள். என்னை என்ன செய்யச் சொன்னாலும் செய்கிறேன்" என்றார்.

சக்கிரவர்த்தி ஐயங்கார் தன் கைப்பெட்டியிலிருந்து ஒரு கடிதத்தை எடுத்து கேசவராவிடம் கொடுத்து "இந்த மனுவைப் படித்துப் பாரும்" என்றார். கேசவராவ் அதைப் பிரித்துப்பார்த்தார். அதில் அடியில் கண்டபடி எழுதியிருந்தது.

"மகாகனம்பொருந்திய ம-ா-ா-ஸ்ரீ மதுரை தாலூகா தாசீல்தாரவர்கள் திவ்விய சமுகத்திற்கு மதுரை கிழக்குஉத்தர வீதியிலிருக்கும் குழந்தையன் செட்டி மிகவும் வணக்கமாய் எழுதிக்கொண்ட மனு.

என்னுடைய வருமான வரி விஷயமாய் சமுகம் ஆபீஸில் தாக்கல் செய்திருந்த என் தஸ்தாவேஜுகளை நான் வாப்ஸ் வாங்கிக்கொண்டதில் அவைகள் சரியாக இருக்கும் என்று எண்ணி ஆபீஸில் கையெழுத்து செய்து தஸ்தாவேஜுகளை மொத்தமாய் ஆபீஸிலிருந்து வாங்கிவந்துவிட்டேன். பிற்பாடு அவைகளை பார்க்கும்போது நத்தர்சா ராவுத்தரிடம் நான் வாங்கிய ரூ. 1000 பத்திரம் காணவில்லை. இது சந்தேகத்திற்கு இடம் தருகிறது. நத்தர்சா ராவுத்தர் அவ்வளவு ஒழுங்கான மனுஷியனல்ல. அவர், ஆபீஸ் குமாஸ்தா யாருக்கோ பணம் கொடுத்து கைவசப்படுத்தி மோசடியாய் தஸ்தாவேஜை வாங்கிவிட்டதாக பிரஸ்தாபம் ஆகிறது. தஸ்தாவேஜை தன் கைவசப் படுத்திக்கொண்டு என் பணத்தை மோசம் செய்வதற்காக இட்படிச் செய்திருக்கிறார். ராவுத்தர் ரூ. 100-வரை செலவுசெய்து ஆபீஸிலிருந்து திருட்டுத்தனமாய் தஸ்தாவேஜை வாங்கிப்போய்விட்டதாக பராபரியாய்க் கேள்வி.

இந்த விஷயத்தைத் தீரவிசாரித்து தஸ்தாவேஜைக்கண்டுபிடித்து அதைமறைத்தவர்களை தண்டனைக்குக்கொண்டுவந்து நீதி செலுத்தும்படி மிகவும் தாழ்மையாய் கேட்டுக்கொள்றேன். இப்படிக்கு, தங்கள் ஊழியன்

குழந்தையன் செட்டி,

இதை ராயர் படித்து முடிந்ததும் சக்கிரவர்த்தி ஐயங்கார் அவரைப் பார்த்து "இந்த விஷயத்தைப்பற்றி நான் போலீஸ் இன்ஸ்பெக்டரிடம் தெரிவித்திருக்கிறேன். உம்மிடம் சில கேள்விகள் கேட்கவேண்டியிருக்கிறது. வருமானவரி குமாஸ்தா உமக்கு அடுத்து உட்காருகிறாரா?" என்றார்.

"ஆம். ஆனால் துரைசாமி ஐயர் இந்த மாதிரி பிசகான காரியம் ஒன்றும் செய்யக்கூடியவரல்லவே." "உம்முடைய அபிப்பிராயத்தை நான் கேட்கவில்லை. துரைசாமி ஐயர் ஆபீஸில் என்ன காரியம் செய்தாலும் உமக்குத் தெரியுமல்லவா?"

"ஆம். அவர் எனக்கு அடுத்து உட்கார்ந்திருப்பவரானதால் அவர் செய்கிறதெல்லாம் எனக்குத் தெரியும்"

"அவர் பெட்டியில் உள்ள தஸ்தாவேஜுகள் உம்முடைய பெட்டிக்கு வருவதுண்டா?"

"அபூர்வமாய்எப்போதாவது அவர்வேலையும் நான் பார்க்கநேரிட்டால் அவர் பெட்டியில் இருக்கும் தஸ்தாவேஜுகள் என் பெட்டிக்கு வரக்கூடும்" "இந்த மனுவில் கண்ட தஸ்தாவேஜை நீர்பார்த்ததுண்டோ? நீரும் துரைசாமி ஐயரும் சேர்ந்து குழந்தையன் செட்டி வருமானவரிசம்பந்தமான தஸ்தாவேஜுகளைப் பார்த்ததாக ஹெட் குமாஸ்தா வாக்குமூலம் கொடுத்திருக்கிறார்."

"ஆமாம். நானும் துரைசாமிஐயரும்சேர்ந்து தான் குழந்தையன்செட்டி தஸ்தாவேஜுகளைப் பார்த்தோம்."

"அப்படியா? ஆனால் நீரோ அல்லது துரைசாமிஐயரோதான் இந்த மனுவில்கண்ட தஸ்தாவேஜை எடுத்துக்கொடுத்துவிட்டதாய் ஏற்படுகிறது. என்ன சொல்கிறீர்?" என்றார் தாசில்தார். கேசவராவ் "ஐயா, நான் பார்த்த தஸ்தாவேஜுகளையெல்லாம் துரைசாமி ஐயரிடம் கொடுத்துவிட்டேன். அவர் பணத்திற்கு ஆசைப்பட்டு கெட்டகாரியம் ஒன்றும்செய்யக் கூடியவரில்லை"என்றார்.

"முன்னேயே சொன்னேனே உமது அபிப்பிராயம் ஒன்றும் வேண்டாம். நமது கச்சேரி

யில் எல்லாம் ஊழலாக இருக்கிறது. இதைக் கண்டுபிடித்து இதில் சம்பந்தப்பட்டவரை சரியானபடி சிக்ஷை செய்யாவிட்டால் ஆபீஸில் ஒருவருக்குமே பயமில்லாமல் போய்விடும். துரைசாமி ஐயர் வேலை மிகவும் அவகேடாக இருக்கிறது. அவர்தான் இப்படிச் செய்திருப்பார்."

"தீர விசாரித்தபின் குற்றம் யார்பேரில் ருசுவாகிறதோ அவரைத் தண்டிக்கவேண்டியது அவசியம்தான். விசாரிப்பதற்கு நான் என்னால் கூடிய உதவி செய்ய எப்பொழுதும் காத்துக்கொண்டே யிருக்கிறேன்" என்றார் கேசவராவ்.

சக்கரவர்த்தி ஐயங்கார் சற்று நிதானித்து "கேசவராவ். நான் முதலில் சொன்னது ஞாபகம் இருக்கட்டும். இந்த நூறு ரூபாய் நோட்டை எடுத்து உமது சட்டைப்பையில் வைத்துக்கொள்ளும்" என்று சொல்லி மேஜையில் இருந்த நோட்டை ராயரிடம் கொடுத்தார். கேசவராவ் அதை வாங்கித் தன் சட்டைப்பையில் போட்டுக்கொண்டதும் ஐயங்கார் அவரைப் பார்த்து "ராவ்ஜி. நீர் நம் ஆபீஸுக்குள் நல்ல உழைபாளி; உமக்குப் சம்பளம் உயர்த்துவதற்கு எழுதுவதாகத் தீர்மானித்துவிட்டேன். இப்போது நீர் வாங்கிக் கொண்ட ரூபாயையும் நீர் இனமாக வைத்துக்கொள்ளும். ஆபீஸ் கார்யங்களை சீர்திருத்த நீர் எனக்கு உதவி செய்யவேண்டியிருக்கிறது" என்றார்.

கேசவராவ் "என் குடும்பத்திற்கு சமயத்தில் கைகொடுத்திருக்கிறீர்கள். ஆபீஸ் கார்யமானாலும் சரி, தங்களுடைய மற்ற எந்தக் காரியமானாலும் சரி, என்னாலானதைச் செய்ய நான் தயாராக இருக்கிறேன்" என்றார்.

சக்கிரவர்த்தி ஐயங்கார் "நம்முடைய ஆபீஸ் ஊழலுக்கெல்லாம் காரணம் துரைசாமி ஐயர்தான். அவர் எப்போது பார்த்தாலும் வம்புபேசுவதும் பாட்டுப்பாடுவதும் தன்னை அலங்காரம் செய்து கொள்ளுகிறதுமாகவே இருக்கிறார். மற்றவர்களும் அவரைப் பார்த்து கெட்டுப்போகிறார்கள்" என்றார். "அவர் பால்யமானதால் சிறிது குஷாலாக இருந்தாலும் உண்மையில் யோக்கியர். நான் அவரிடம் தனித்துப்பேசி கவனமாய் வேலைபார்க்கச் சொல்கிறேன்."

"வேலை இனி கவனமாய் பார்ப்பது இருக்கட்டும். இந்த மனுவில் கண்ட தஸ்தாவேஜை அவர்தான் எடுத்துக் கொடுத்திருக்கிறார் என்பதில் எனக்கு சந்தேகமில்லை. இப்படியெல்லாம்செய்து காசுபறிக்காவிட்டால் அவருக்கு ரூ. 25 சம்பளத்தில் உயர்ந்த உடுப்புகள் வாங்குவதற்குப் பணம் எப்படி கிடைக்கும்?

"ஐயா அப்படி சொல்லக்கூடாது. அவர் கெட்ட காரியம் செய்து ஒருக்காலும் பணம் வாங்கமாட்டார்".

"அதை நான் உம்மைக் கேட்கவில்லை. அவர்தான் தஸ்தாவேஜை எடுத்துக் கொடுத்திருக்கிறார். அதை ரூபிக்கவேண்டிய மற்ற எல்லா அம்சங்களும் தயாராகிவிட்டது. நீரும் சரியாய் வாக்குமூலம் கொடுக்கவேண்டும்".

"எனக்கு இதில் ஒன்றும் தெரியாதே!" என்றார் கேசவராவ்.

தாசில்தார் "ஓய்! உமக்கு புத்தி என்பது சிறிதும் இல்லை. உம்மைப்போன்ற முழுமடையர்களுக்குத் திறந்து சொன்னாலொழிய பிரயோஜனமில்லை. கேளும். துரைசாமி ஐயரை எவ்விதத்திலும் தண்டனைக்குக் கொண்டுவரத் தீர்மானித்திருக்கிறேன். இந்த மனுவில் கண்ட தஸ்தாவேஜை அவர் எடுத்துக் கொடுத்துவிட்டதாக ரூபித்து அவரை போலீசார்வசம் ஒப்பிவிக்கவேண்டும். மற்ற சாக்ஷிகள் நான் சொன்னபடி வாக்குமூலம் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். நீர் அவருக்கு அடுத்து உட்கார்ந்து வேலை பார்ப்பவராதலால் உமது வாக்குமூலம் அவசியமாயிருக்கிறது. ராவுத்தரிடம், துரைசாமி ஐயர் தஸ்தவேஜை எடுத்துக்கொடுத்ததைப் பார்த்ததாக நீர் சொல்லவேண்டும். தெரிந்ததா? இந்த ஒருவார்த்தைமட்டும் சொல்லிவிட்டால் உமக்கு சம்பளம் உயர வழி செய்கிறேன். உமது கடன்களும் ஒழிந்து போகும். நான் கேட்டபடி செய்வதாய் சற்று முன்னால் உறுதிமொழியும் கொடுத்திருக்கிறீர். யோசித்துச் சொல்லும்" என்றார். (தொடரும்.)

* T. S. Subramania Ayyar Esq., M. A., L. T. Professor of History The Presidency College * * Your Journal is now the cheapest, the best and the most ably conducted journal in our midst.

பிரகிருதி சாஸ்திரம்

PHYSICAL SCIENCE

[ஸ்ரீமான் ஏ. வரதாசாரியாரவர்கள், பி. ஏ., எல். டி.]

முன்னொரு சஞ்சிகையில் தாவர ஜங்கம நூலின் முக்கிய உட்பிரிவுகளும், அவற்றுள் ஜடபதார்த்தத்தின் மூலதத்துவத்தை விவரிக்கும் ரஸவாத சாஸ்திரத்தின் முக்கிய கொள்கைகளும் சுருக்கமாய்ச் சொல்லப்பட்டன. இனி, உலகத்திலுள்ள ஜட பதார்த்தங்களின் தோற்றம், இயற்கை, விசேஷ குணங்கள் முதலியவற்றைக் குறித்து உரைக்கும் பிரகிருதி சாஸ்திர (Physics) சம்பந்தமான விஷயங்கள் எடுத்துச் சொல்லப்படும்.

நம்மைச் சுற்றிலுமுள்ள ஜடப்பொருள்களின் இருப்பை நமது ஐம்புலன்களுள் ஒன்று அல்லது அதிகமான இந்திரியங்களா லறிகிறோம். இவ்விதமுணரப்படும் வஸ்து சமூகத்துக்குப் பொதுவாய் பிரகிருதி(Matter)என்று பெயர். பிரகிருதியின் மிதமான அம்சமானது பொருள், பதார்த்தம் அல்லது வஸ்து வென்று சொல்லப்படுகிறது. உலகத்திலுள்ள பொருள்கள் (Bodies) பல விதமான சாமக்கிரியைகளால் (Substances or Materials) உண்டாவதாலும், அவைகளின் உருவம், நிறம், விஸ்தாரம் முதலிய வெளித்தோற்றங்களில் வித்தியாசமடைவதாலும், வஸ்துக்களை வெவ்வேறு பெயரால் பேதப்படுத்தி விவகரித்து வருகிறோம். பலகை, சீமைச்சுண்ணாம்பு, செங்கல், வஸ்திரம் இவைபோன்ற பதுவகை வஸ்துக்களின் சாதனப் பொருள்கள் (சாமக்கிரியை) வேறுபட்டுள்ளன. இவைகளின் நிலைமைகளிலும் பேதமுண்டு. மரம் என்னும் ஓரேவித சாமக்கிரியையா லுண்டாயுள்ள நாற்காலி, பெஞ்சி, கதவு ஆசனப்பலகை இவைபோன்ற பதார்த்தங்களின் வடிவம், பருமன் முதலான குணங்கள் வேறுபடுவதினாலேயே இவைகளைத் தனித்தனி வஸ்துக்களாகப் பேசுகிறோம்.

நம்மைச் சுற்றிலுமுள்ள பொருள்களை நமது புலன்களால் அநேக விதமாய் உணர்கிறோம் என்று ஏற்கெனவே சொல்லப்பட்டது. சில வஸ்துக்களின் நிறம், வடிவம் முதலானதை கண்ணால் பார்த்து அறிகிறோம். வேறு வஸ்துக்களை அவைகளின் சப்தத்தினாலோ, வாசனையினாலோ தெரிந்துகொள்ளுகிறோம். மற்றும் சில பொருள்களை உருசியினாலோ ஸ்பர்சத்தாலோ உணர்கிறோம். இவ்விதம் நாம் வஸ்துக்களின் பேதாபேதத்தைத் தெரிந்துகொள்ளும் பிரகாரங்களுக்கு, வஸ்துக்களின் ஸ்வதர்மங்கள் அல்லது குணங்கள் (Properties) என்று பெயர். சில லக்ஷணங்கள் சில வஸ்துக்களிடத்தில் காணப்படலாம். மற்றவைகளில் அவை தோன்றாம லிருக்கலாம். பொருளில் ஒரு சமயம் தோன்றும் தன்மை,மற்ற சந்தர்ப்பங்களில் மறைந்தும் மாறியும் இருக்கலாம். இவ்விதம் பதார்த்தங்களின் குணங்கள் வித்தியாசமுள்ளவைகளா யிருப்பினும், ஜடப்பொருள்களுக்கெல்லாம் பொதுவாய் சில இயற்கையான தர்மங்களுண்டு. சக்தி விசேஷங்களால் வஸ்துக்களின் நிலைமை முதலியன வேறுபட்டாலும், வஸ்து ஸ்வரூபமே மாறி வேறுவிதமாய் பரிணமித்தாலும், இவ்வியல்பு குணங்கள் அவைகளிலும் காணப்படும்.

ஜடப்பொருளின் ஸாமான்ய தர்மங்கள்

General Properties of Matter

I. எந்த வஸ்துவும் ஏதாவது ஸ்தலத்தை வியாபித்து நிற்கும் தன்மையுள்ளது. இவ்விதம் ஒவ்வொரு பொருளும் நிரம்பி இருக்கும் விஸ்தாரத்துக்கு அதன் பருமம் அல்லது காத்திரம் (Bulk or Volume) என்று பெயர். நம்மைச்சுற்றிலுமுள்ள காற்றைப்போல் (air) நமது கண்ணுக்குப் புலப்படாத வஸ்துவும், ஓர் ஸ்தலத்தை ஆக்கிரமிக்கும் இயல்புள்ளது. பொருளின் பருமத்தின் அளவு, அதன் நீளம், அகலம், உயரம் இவைகளின் அளவைச் சார்ந்திருக்கும். ஒவ்வொரு பொருளும் அதற்குரிய பிரதேசத்தை வியாபித்து நிற்கும் என்பதை சுலபமான பரீக்ஷணத்தினால் (Experiment) தெரிந்துகொள்ளலாம்.

ஓர் பெரிய கண்ணாடிப் பாத்திரத்தில் ஜலத்தை ஊற்றி, அந்த ஜலத்தின் மேற்புறத்தில் ஒரு பளிங்குக் கிண்ணத்தை(Glass tumbler) தலைகீழாய் சமமாய் வைத்து நீருக்குள் அமுக்கினால், கிண்ணத்தின் உட்புறத்தில் ஜலம் மேலே எழும்புவது துர்லபம். அப்படி எழும்பினாலும், மிகவும் சுவல்ப பாகந்தான் ஏறும். இதன் காரணமென்ன? கிண்ணத்தி

னுள்ளிருக்கும் வாயுவானது (air) வெளியில் போய் வியாபிக்க வழியில்லாமல், தன் ஸ்தானத்திலேயே இருந்துகொண்டு, மற்றொரு வஸ்துவாகிய ஜலமானது அவ்விடத்தை ஆக்கிரமிக்க இடங்கொடாது.

மேற்சொன்ன கிண்ணத்தை ஒரு பக்கம் சாய்த்து (inclined) நீரில் அமிழ்த்தினால், காற்றானது குமிழி ரூபமாய் வெளிக்கிளம்புவதையும், ஜலம் கிண்ணத்தினுள் உயர எழும்புவதையும் காணலாம்.


II. ஒவ்வொரு பதார்த்தமும், அதற்குரிய மூலப்பொருளின் இராசி அல்லது பிண்டத்தால் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வித இராசியை கனபரிமாணம் (Mass) என்று சொல்லலாம். பலவித வஸ்துக்கள், ஒரே காத்திர முள்ளதாயினும், அவைகளின் நிறை வேறுபடுவது தெரிந்த விஷயமே. ஒரே பருமமுள்ள இரும்புக் கட்டியையும், நெட்டித் துண்டையும் (piece of cork) கையிலெடுத்துப் பார்த்தால், இரும்புக்கட்டி மிகவும் பளுவென்றும், நெட்டித் துண்டு அதிக இலேசானதென்றும் உணர்ச்சி ஏற்படுகிறது. இவ்விதம் வஸ்துக்களின் நிறை வேறு படுவதற்கு மேற்சொன்ன கன பரிமாணந்தான் முக்கிய காரணம். சாதாரணமாய் ஒரு பொருளைப்பற்றி 'அது எவ்வளவு இருக்கிறது' என்றும் கேள்வி அதிலுள்ள வஸ்து இராசி அல்லது கனபரிமாணத்தைக் குறித்ததாயிருக்கும். வஸ்துவின் கனபரிமாணம் எப்படி ஏற்படுத்துகிறது என்பதைத் தெரிந்துகொள்ளல் அவசியம். ஒரு காகிதத்தை சிறு துண்டங்களாக நாம் கையால் கிழிக்கக்கூடும். இவ்விதம் ஏற்படும் ஓர் சிறு கண்டத்தை யந்திர விசேஷங்களால் அணுக்களாகச் சேதிக்கக் கூடும். இவ்விதம் பகுத்ததைப் பிரித்துக் கொண்டுபோனால் இனி துணிக்க முடியாதென்று சொல்லக்கூடிய சூக்ஷ்மமான பரமாணுக்கள் (atom; molecule) ஏற்படும். ஒவ்வொரு பொருளுக்குரிய பரமாணுக்கள் ஒன்றோடொன்று இசைந்து ஸ்தூலரூபம் உண்டாகிறது. பரமாணுக்கள் இவ்விதம் அடர்ந்து இசையும்படி செய்யக்கூடிய ஓர் விசித்திர சக்தியை சம்யோக சக்தி அல்லது பிண்டீகர சக்தி (Cohesion) என உரைக்கலாம். அணுக்கள் ஒன்றுகூடிக் கலக்கும்போது அவைகளுக்கு இடையில் ஏற்றக் குறைச்சலான அந்தரம் அல்லது மத்தி ஸ்தலம் (Inter-space) ஏற்படலாம். சாதாரணமாய் அணுக்கள் அதிக இடை வெளி கொடாமல், நெருங்கி ஒன்று சேர்ந்துள்ள வஸ்துக்கள் கனமாயும், கொஞ்சம் தளர்ச்சியாய் இசைந்துள்ள பொருள்கள் பளுவற்றதாயும் தோன்றும்.

III. ஒவ்வொரு வஸ்துவின் பருமத்துக்குத் தகுந்தபடி அணுக்களின் சமூக அளவு ஏற்படுமென்று மேலே சொல்லப்பட்டதால் தெரியும். ஆகையால் ஒரு வஸ்துக்குள் மற்றொரு வஸ்து உட்செல்லக்கூடாத தன்மை இயல்பாயுள்ளது. பொருளின் இக்குணத்தை அபேத்யத்துவம் (Impenetrability) எனச் சுருக்கமாய்ச் சொல்லலாம். இதற்கு சாமான்யமான உதாரணங்களை நாடோறும் பார்க்கலாம். சுவற்றுக்குள் ஆணி அடிக்கும்போது, கல், மண் அல்லது சுண்ணாம்பின் துணிக்கைகள் வெளி வருவதைக் காண்கிறோம். வாய் அகலமில்லாத ஓர் மைக்கூடை நேர்முகமாய் வைத்து அதற்குள் மையை ஊற்றினால், உள்ளே தாராளமாய் இறங்காமலிருப்பது அனுபவசித்தமே. ஓர் துடைப்பக்குச்சித்துண்டால் அதன் முகத்திலிருக்கும் மசியைக் கிளறினால், காற்றுக் குமிழிகள் கிளம்பி, மசி உள்ளிறங்குவதையும் காணலாம். இம்மாதிரியே, புனல் (Funnel) என்னும் குழலை எண்ணெய்ப் புட்டியின் முகத்தில் காற்றுப் புகாதபடி இறுக்கமாய் வைத்து எண்ணெயை ஊற்றினால், எண்ணெய் கீழ் இறங்குவது கஷ்டம். அதிகமாய் ஊற்றினால், வெளியில் கீழே வழியும். புனல் இறுக்கமாய் இல்லாவிட்டால், எண்ணெய் புட்டிக்குள் சுலபமாய் விழும், உள்ளிருக்கும் காற்றின் காரியமே இதற்கெல்லாம் காரணம்.

சிறுவர்களுக்கான பக்கங்கள்

CHILDREN'S PAGES

[ஸ்ரீமான் ஜி. ரத்தினம்பிள்ளை அவர்கள்,
பி. ஏ., எல். டி.



அன்புள்ள ஐந்தாம் ஜார்ஜ் சக்கரவர்த்தி

நமது அரசர் ஐந்தாம் ஜார்ஜ். அவர் இங்கிலண்டு தேசத்திலிருக்கிறார். அவருக்குப் பதிலாக நமது தேசத்தை ஆள்பவருக்கு ராஜப்பிரதிநிதி என்று பெயர்.

நமது அரசருக்கு முன், இங்கிலண்டில் "ஜார்ஜ்" என்று பெயருள்ள நான்கு ராஜாக்கள் அரசாட்சி செய்தபடியால் நமது ராஜாவுக்கு "ஐந்தாம் ஜார்ஜ்" என்ற பெயர் வழங்கி வருகிறது. இவர், முன் அரசுபுரிந்த ஏழாவது எட்வர்டு சக்ரவர்த்தியின் இரண்டாவது பிள்ளை. மாட்சிமை தங்கிய விக்டோரியா மகாராணியாரின் பேரன். ஜார்ஜ் மன்னருக்கு தமையன் ஒருவர் இருந்தார். அவர் பெயர் எட்வர்ட். இவர்களிடத்தில் விக்டோரியா மகாராணியாருக்குப் பிரியம் அதிகம்.

இவர்கள் சிறுபிள்ளைகளாக விருக்கும்போது, எட்வர்ட், தோட்டத்தில் பூஞ்செடிகளைப் பயிரிட்டு விக்டோரியா மகாராணியாருக்கு புஷ்பங்களைக் கொண்டுபோவது வழக்கம். ஆனால் நமது அரசரோ கீரை, காய், கிழங்குகளைப் பயிரிட்டு, அவைகளை விக்டோரியா மகாராணியாருக்குக் கொண்டுபோய்க் கொடுப்பதுண்டு. "நீ ஏன் புஷ்பங்களை கொண்டுவரவில்லை" என்று பாட்டியார் கேட்டதற்கு, "பாட்டி! புஷ்பங்கள் பார்ப்பதற்கு வெகு அழகாக விருக்கும், ஆனால் பசித்தால் அவைகளைச் சாப்பிட முடியா"தென்று சொன்னார். இதைக் கேட்ட ராணியார் மகிழ்ந்தார்.

நமது ராஜாவுக்கு மற்றொரு பாட்டியுண்டு. அப்பாட்டியார் டென்மார்க் தேசத்து லூயி ராணி. இப்பாட்டியாரிடத்திலும் ஜார்ஜ் அதிக அன்பாயிருந்தார்; அவளைப் பார்க்க அவர் அடிக்கடி டென்மார்க்குக்குப் போவதுண்டு. டென்மார்க்கு, சமுத்திரஞ் சூழ்ந்த தேசம். அத்தேசத்து ஜனங்களுக்கு சமுத்திரத்தின்மேல் பிரியம் அதிகம். அவ்விடத்தில்தான் ஜார்ஜுக்கும் சமுத்திரத்தின்மீது பிரியம் உண்டாயிற்று. அது முதற்கொண்டு, தான் மாலுமியாக இருக்க வேண்டுமென்ற ஆசை நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டு வந்தது.

பன்னிரண்டு வயதானதும், இவரும் இவர் சகோதரரும் மாலுமி வேலையை கற்றுக்கொள்வதற்கு பிரிட்டானியா என்னும்சண்டைக் கப்பலில் மாணக்கர்களாகச் சேர்ந்தார்கள். இவர்களை மற்ற மாணாக்கர்களைப்போலவே கப்பல் அதிகாரி நடத்தி வந்தார். ஜார்ஜ் கொஞ்ச காலத்திற்குள் மாலுமி வேலையை நன்றாய்க் கற்றுக்கொண்டு பேர்போன மாலுமியானார். இதனால் தான் இவருக்கு "மாலுமி ராஜா" என்ற மற்றொரு பெயருமுண்டு. மாலுமிக்கு வேண்டிய குணங்களெல்லாம் இவரிடத்தில் நன்கு பொருந்தி யிருக்கின்றன.

தமையனை எட்வர்ட் திடீரென்று நோய் கண்டு இறந்துபோக ஜார்ஜ் அரசவாழ்க்கைக்கு வேண்டியவைகளைப் பயிற்சிசெய்வது அவசியமாயிற்று.

கொஞ்சகாலத்திற்குப் பிறகு இவருக்கு இங்கிலண்ட் அரசனுடைய மூத்த குமாரனுக்குரிய ப்ரின்ஸ் ஆப் வேல்ஸ் என்கிற பட்டம் கிடைத்தது. முப்பதாவது வயதில் டியூக் ஆப் கென்ட் பிரபுவின் புத்திரியான நமது மகாராணி மேரியைக் மணஞ் செய்துகொண்டார்.

கலியாணமானதும் ஜார்ஜும் அவர் மனைவியும் இங்கிலீஷ் ராஜ்ய முழுமையும் பிரயா

மாகிய பெல்ஜியத்தின்மீது படையெடுத்தார்கள். அத்தேசத்தைக் காப்பாற்றும் பொருட்டும், துஷ்டர்களாகிய ஜெர்மானியர்களை நிக்ரத்து சிஷ்டபரிபாலனஞ் செய்யும்பொருட்கிணஞ்செய்து இந்தியாவுக்கும் வந்தார்கள். சென்ற இடங்களிலெல்லாம் இவர்களுக்கு ஜனங்கள் சிறப்புடன் நல்வரவளித்தார்கள்.

1910-ம் ௵ மேமாதத்தில் எட்வர்ட் சக்கரவர்த்தி இறந்துபோனார். ஜார்ஜ் இளவரசர் இங்கிலந்துக்கு ராஜனும், மேரி ராஜகுமாரி, ராணியுமானார்கள். இவர்களுடைய மகுடாபிஷேகம் இங்கிலந்திற்கு பிரதான பட்டணமாகிய லண்டன் மாநகரிலுள்ள வெஸ்ட்மின்ஸ்டர் ஆபி என்ற பெரிய மாதா கோவிலில் வெகு விமரிசையாக நடந்தேறியது. இக்காட்சியைக் காண அநேக தேசத்து ராஜாக்களும் பிரபுக்களும் போயிருந்தனர்.

ஜார்ஜ் மன்னருக்கு இந்திய குடிகளிடத்தில் அன்பு அதிகம். ஆகையால்தான் இதுவரையிலுள்ள வழக்கத்தை விட்டு, முடிசூட்டிக் கொள்ள இந்தியாவிற்கு மகாராணியுடன் விஜயஞ்செய்தார். 1911 ௵ டிசம்பர்மீ 12௳ டில்லி மாநகரில் இந்திய சக்கரவர்த்தி என்று முடி சூட்டப்பட்டார். அந்த தினம் நாம் எப்போதும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டிய நாள். தேசமெங்கும் ஒரே குதூகலமாக விருந்தது. அந்த தினத்தில் பட்டிக்காடுமுதல், பெரிய பட்டணம் வரையிலுள்ள எல்லா ஊர்களிலும் ஜனங்கள் கூடி ஒரு பெரிய திருநாள்போல் கொண்டாடினார்கள். அந்த தினத்தில்தான், பஞ்சபாண்டவர்கள் காலந்தொடங்கி, இந்தியாவிற்குத் தலைநகராக இருந்த டில்லி மறுபடியும் இந்தியாவிற்கு தலைநகரமாயிற்று. பிரிக்கப்பட்ட வங்காளம் மறுபடியும் ஒன்றாய்ச் சேர்க்கப்பட்டது. இந்தியர் ஆதாரப் படிப்பிற்காக 75 லட்சம் ரூபாய் சக்ரவர்த்தியவர்களால் கொடுக்கப்பட்டது. இந்தியாவில் இந்த தினத்தை கொண்டாடாதவர்களில்லை. சக்ரவர்த்தி சென்றவிடங்களிலல்லாம் சிறப்புடன் பள்ளிப் பிள்ளைகளுக்குப் பரிசு அளித்தனர்.

1914 ௵ ஆகஸ்டுமீ 4௳. வெகு காலமாக சண்டைக்குத் தயார் செய்துகொண்டிருந்த துராசை பிடித்தஜெர்மானியர் தங்கள் வாக்குத் தவறி, ஐரோப்பாவிலுள்ள சிறுதேசடும் நமது சக்கரவர்த்தி, அவர்களோடு கடும் போர் புரியத் தலைப்பட்டார். பிரான்சு, ருஷியா, இடாலி தேசத்து அதிபதிகளும், இன்னும் ஐரோப்பாவிலுள்ள அநேக சிற்றரசர்களும் நமது அரசரோடு சேர்ந்துகொண்டார்கள். ஐந்து வருஷம் ஐரோப்பாவில் நாம் இதுவரையில் கேட்டிராத மகாயுத்தம் நடந்தது ஜெர்மானியர் அநேக சூட்சிகள் செய்து ருஷியாவைக் கலைத்து அதோடு தனி சமாதானஞ் செய்துகொண்டார்கள். ஆகாய விமானங்களிற் பறந்து சென்று, இங்கிலாந்திலும் அதன் கூட்டாளி தேசங்களிலும் வெடிக் குண்டுகளை எறிந்து, அநேக அழகான கட்டிடங்களை இடித்தார்கள். சென்னப்பட்டணத்தையும் 1914 ௵ செப்டம்பர் மாதம் 23௳ இரவில் தாக்கினார்கள். தாங்கள் பிடித்த இடங்களில் ஜெர்மானியர் செய்த அக்கிரமங்கள் அநேகம். கோவில்களையும் பொருள் காட்சிசாலைகளையும் மற்றும் அழகான கட்டிடங்களையும் இடித்துப் பாழாக்கி, ஸ்திரீகளை மானபங்கப்படுத்தி, குழந்தைகளையும் இம்சை செய்தார்கள். அநேக பட்டணங்களை கொளுத்தினார்கள். ஜெர்மானியர் என்ன செய்தும் இங்கிலீஷ்காரர்களையும் அவர்கள் கூட்டாளிகளையும் ஜயிக்க முடியவில்லை. நாளுக்குநாள் தோல்வியுற்ற ஜெர்மானியர் சமாதானஞ் செய்துகொள்ள மன்றாடினார்கள். காருண்யமுள்ள நமது அரசரும்அவர் சினேகிதர்களான கூட்டாளிதேசத்து அதிபதிகளும் பாம்பிற்குப் பல்லைப் பிடுங்குவதுபோல் ஜெர்மானியர் பலத்தை மிகக் குறைத்து அவர்கள் இனிமேல் சண்டை தொடுக்காவண்ணம் சமாதானம் செய்துக்கொண்டார்கள். இந்த மகாயுத்தம் நடக்கும் காலத்தில் தாய் தேசமாகிய இங்கிலாந்திற்கு இந்தியா, ஆஸ்டிரேலியா, நியூஜீலண்டு, கேப் காலனி, கனடா முதலிய தேசங்கள் சற்றும் பின்வாங்காமல் தங்களாலியன்றவரையில் வேண்டிய ஒத்தாசை செய்து தாய் தேசத்தோடு கஷ்டப்பட்டன. இப்போது சமாதானம் ஆய்விட்டது. தாய் தேசத்தோடு சந்தோஷப்படுகின்றன. சமாதானக் கொண்டாட்டம் 1919 ௵ ஜூலைமீ 19௳ யன்று எங்கும்விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. சென்னையில் அன்றைய தினம் நமது சக்கரவர்த்தியின் திருஉருவச்சிலை திறக்கப்பட்டது.

ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

LADIES' PAGES

[ஸ்ரீமான் ஸி. ஆர். ஸ்ரீனிவாஸ ஐயங்காரவர்கள், பீ ஏ.]

1. அருந்ததி

ஸ்வாயம்புவ மனுவிற்கும், சதரூபையென்பவளுக்கும் புத்திரியான தேவஹூதியைக் கர்த்தம ப்ரஜாபதி விவாஹஞ்செய்தார். அவருக்கு மஹாவிஷ்ணுவின் அம்சாவதாரமான கபில மஹர்ஷியும் கலை ச்ரத்தை ஹவிர்புக் கதா க்ரியை க்யாதி சாந்தி அனஸூயை அருந்ததீ முதலிய பெண்களும் பிறந்தார்கள். இவர்கள் முறையே, மரீசி அங்கிரஸ் புலஸ்த்யர் புலஹர் க்ரது பிருகு அதர்வ அத்ரி வஸிஷ்டரென்றவர்களுக்குப் பார்யைகளானார்கள்.

அருந்ததிக்கு ஊர்ஜையென்றும் அக்ஷமாலையென்றும்பெயர்களுண்டு. அவளுடையபுத்ரன் சக்தியென்ற மஹர்ஷி. ஒரு ஸமயத்தில் ஸப்தரிஷிகளையும் அருந்ததியையும் கொல்ல வந்த ஓர் துர்த்தேவதையிடத்தில் அவர்கள் தங்களுடைய பெயர்களுக்கு அர்த்தத்தைச சொல்லிக்கொண்டு வந்தபொழுது, அருந்ததி, "நான் என் பர்த்தாவின் மனஸை அனுஸரித்தவளாய், எல்லாவற்றையும் தாங்கிப் போஷிக்கும் பூமியில் அவரை அடுத்திருக்கிறேன். ஆகையால் எனக்கு அருந்ததி, அதாவது, பர்த்தாவின் இஷ்டத்தைத் தடுக்காதவளென்று பெயர் வந்தது. முதலில் அருந்தந்தீ யென்றிருந்து அதில் நகரங்கெட்டு அருந்ததீ யென்றாயிற்று" என்று சொல்லியிருக்கிறாள்.

ஒரு காலத்தில் மஹாதேவன் பாலனைப்போல் வேஷமெடுத்து, ஆடையின்றித் திகம்பரராய், மஹர்ஷிகள் வஸிக்கும் ஆச்ரமங்களில் பிக்ஷையெடுத்தபொழுது, ரிஷிபத்னிகள் அவருடைய அழகைக் கண்டு மோஹித்து மனங்கலங்கிக் கற்பழிந்து நின்றார்கள். ஆனால் அருந்ததி ஒருத்தியே சிவபிரானால் மனோவிகாரங்கொள்ளாமல், தன் பதிவ்ரதா மஹிமையால் நிர்மலமான சித்தத்தையும் கலங்காத புத்தியையு முடையவளாய் விளங்கினாள்.

வேறொரு சமயத்தில் இந்திரன், அக்னி ஸூர்யன் இம்மூவரும் அவளுடைய கற்பினைச் சோதிக்க நினைத்து அவளுடைய ஆச்ரமத்திற்கு வந்தார்கள். அப்பொழுது தண்ணீர் கொண்டுவருவதற்குக் குடம் எடுத்துச் சென்றுகொண்டிருக்கும் அருந்ததியைக் கண்டு, அவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் மஹிமையால் அக்குடத்தைக் காற்காற்பங்கு நீருள்ளதாகச் செய்ய, முக்காற்குடம் நீரால் நிறைந்ததைக் கண்டு, அவள் தன் கற்பினால் மற்றைக் காற்பங்கு நீரையும் நிரப்பிப் பூர்ணகுடமாக்கினாள்.

அக்கினிதேவன் ஸப்தரிஷிகளின் பார்யைகளிடத்தில் ஆசைகொண்டு வருந்துவதையறிந்த ஸ்வாஹாவென்ற அவனுடைய பத்னி "என் பர்த்தா என்னிடத்தில் கொஞ்சமேனும் பிரியம் வைப்பதில்லை. எனக்கோ அவரிடத்திலுள்ள ஆசைக்களவில்லை. ஆகையால் அவர் இப்பொழுது ஸப்தரிஷி பார்யைகளிடத்தில் கொண்டிருக்கும் ஆசையைக் காரணமாய் வைத்துக்கொண்டு என் இஷ்டத்தைப் பூர்த்தி செய்வேனெ"ன்று நினைத்து, அங்கிரஸ் மஹரிஷியின் பார்யையான சிவாவென்பவளின் ரூபத்தை எடுத்துக்கொண்டு அக்கினியிடத்திற்குச் சென்று, "ஸ்வாமி! நீர் எங்களிடத்தில் வைத்திருக்கும் பிரியத்தை நாங்கள் உமது நடத்தையாலும் இன்னும் பல அடையாளங்களாலும் கண்டுகொண்டோம். எங்களுக்கும் உம்மிடத்தில் எல்லையற்ற பிரியமுண்டு. ஸ்திரீகளானதால் முதலில் அதை வெளியிட வெட்கப்பட்டுக்கொண்டிருந்தோம். உமது மனோபாவம் வெளிப்பட்டபடியால் நாங்களும் எங்களுடைய எண்ணத்தைத தெரிவிக்கத் துணிந்தோம். நான் முதலில் உம்மிடத்தில் அனுப்பப்பட்டிருக்கிறே"னென்றாள். இப்படியே ஆறு தடவைகளில் ஆறு ரிஷிபத்னிகளின் ரூபத்தையெடுத்து அக்கினியிடத்தில் வந்தாள். ஆனால், அருந்ததியின் ரூபத்தை எடுக்க நினைத்தபொழுது அவளால் முடியவில்லை. வஸிஷ்ட பத்னியின் பதிவ்ரதா மஹிமையென்ற நெருப்பினிடத்தில் ஸ்வாஹாதேவியின் கல்மஷமடைந்த மனஸ் நெருங்கமுடியவில்லை.

இப்பொழுதும், விவாஹ காலத்தில், பர்த்தா பார்யைக்கு த்ருவநக்ஷத்ரத்தைக் காட்டி, அதைப் பார்த்து, "நீ த்ருவமாய் ஸ்திரமாயிருக்கிறாய்; த்ருவமான ஸ்தானத்தை யுடைத்தாயிருக்கிறாய்; த்ருவமான உத்பத்தி ஸ்தா

னத்தை யுடைத்தாயிருக்கிறாய்; த்ருவமான ஸ்திதியிலேயே வேரூன்றியிருக்கிறாய். காளை மாடுகள் செக்கினுடைய நடுமரத்தைச் சுற்றி ஓடுவதுபோல், நக்ஷத்திரங்கள் உன்னைச் சுற்றி ஓடுகின்றன. என்னுடன் சண்டைசெய்யும் புருஷனிடத்திலிருந்து என்னை ரக்ஷிக்கக்கடவா''யென்ற மந்திரத்தைச்சொல்லுகிறான். பிறகு தன் பார்யைக்கு அருந்ததி நக்ஷத்திரத்தைக் காட்டி, ''கிருத்திகைகளில் முதலான அருந்ததியை ஸப்தரிஷிகள் ஸ்திரமான தன்மையை அடையும்பொருட்டு நடத்திக்கொண்டுபோனதால், மற்ற ஆறு கிருத்திகைகளும் அவளுடன் பிரியமாய்ச் சேர்ந்து, அவளை ஆலிங்கனஞ் செய்துகொண் டிருக்கிறார்கள். இப்பொழுது என்னால் விவாஹஞ்செய்யப்பட்டிருக்கும் இந்த ஸ்த்ரீயும் ஸப்தரிஷிகளின் பார்யைகளான ஏழு பதிவ்ரதைகளுடன் எட்டாவதாய் விளங்கட்டு''மென்ற மந்திரத்தைச் சொல்லுகிறான். இதனால் பர்த்தா த்ருவனைப்போல் ஸ்திரமான மனஸையும் பிரியத்தையுமுடையவனா யிருக்கவேண்டுமென்றும், பார்யை அருந்ததியைப்போல் கற்பில் சிறந்தவளாயும் மஹாபதிவ்ரதையாயுமிருக்க வேண்டுமென்றும் பிரார்த்திப்பது வழக்கமென்று தெரிகிறது.

மேற்கண்டபடி ஸ்வாஹாதேவி தான் அருந்ததியின் ரூபத்தை எடுக்கமுடியாமற் போனபொழுது, "நீயே கற்புக்கரசி, உன்னையே பெண்கள் ஸ்துதித்து எல்லையற்ற கற்பையடையக்கடவ'' ரென்று வரங்கொடுத்தாள். ஸ்ரீராமசந்திரனுடைய பார்யையை ராவணன் அபஹரித்து லங்கையில் அசோகவனத்தில் வைத்து, தன்னால் கூடியவரையில் அவள் தன்னிடத்தில் ஆசைகொள்ளவேண்டுமென்று மஹாப்பிரயத்தினங்களைச் செய்தும் பலிக்காமல் போனதைக் கண்டு வருந்தினான். அப்பொழுது அவனுடைய மந்திரியான மஹோதரன் ''ஸ்வாமி! ஏன் இப்படிக் கஷ்டப்படவேண்டும்? ராமனுடைய ரூபத்தை யெடுத்து ஸீதையை ஏமாற்றி வசப்படுத்தலாமே'' யென்றான். அதற்கு ராவணன், ''ஐயோ! அந்த விந்தையை என்ன சொல்வேன்! ராமனுடைய ரூபத்தை எடுக்க வேண்டுமென்று நினைத்தவுடனே, என் மனதில் ஓர்விதமான தெளிவும் தூய்மையும் சாந்தியும் உண்டாகின்றன. அப்பொழுது லோகத்திலுள்ள ஸ்த்ரீகள் யாவரும் என் ஸஹோதரிகளென்றும் ஸீதை லோகமாதாவென்றும் எனக்கு எண்ணமுண்டாகிற'' தென்றான். ஏகபத்னீ வ்ரதனான ராமமூர்த்தியின் களங்கமற்ற அந்தக்கரணத்தின் மஹிமையாலும் நிகரற்ற கற்பாலும், அவரை எவ்விதமாயாவது ஸ்மரிப்பவர்களுக்கும் மனஸ் நிர்மலமாய் விஷய ஆசை ஒழிந்து சாந்தியும் சுத்தியும் உண்டாகின்றனவென்பது இதனால் விளங்குகிறது.

ஒரு சமயத்தில் ஸப்தரிஷிகளும் அருந்ததியும் வனத்தின் வழியாய்ப் போய்க்கொண்டிருக்கையில் பசிமேலிட்டு, ஓர் அழகிய தாமரைக் குளத்தைக் கண்டனர். அது நெருங்கின மரங்களால் மறைக்கப்பட்டு, நிரம்பித் தெளிந்திருக்கும் பரிசுத்தமான ஜலமுள்ளதாய், உதயகாலத்து ஸூர்யமண்டலத்தைப்போல் பிரகாசிக்கும் தாமரைமலர்களால் விளங்கி, வைடூர்யத்தைப்போன்ற தாமரை இலைகளால் மூடப்பட்டுப், பலவகைப் பறவைகளால் எப்பொழுதும் நிறைந்து, மணல் பாய்ந்த சிறு துறைகளுடன் சேறில்லாமல், அதுவரையில் ஒருவராலும் உபயோகிக்கப் படாமலிருந்தது. அதைக் காத்துக்கொண்டிருந்த துர்தேவதைக்குத் தங்களுடைய பெயர்களின் தாத்பர்யத்தைச் சொல்லி, அவள் அதைத் தெரிந்துகொள்ளமுடியாமல் போனதால் அவளைச் சாம்பலாக்கி, அக்குளத்திலிறங்கி, வேண்டியவரையில் தாமரை மலர்களையும் தாமரைக் கிழங்குகளையும் பறித்துக் கரையில் வைத்துவிட்டு ஸ்நானம் ஸந்தியாவந்தனம் தர்ப்பணம் ஜபம் முதலிய நித்யகர்மங்களைச் செய்துகொண்டிருந்தார்கள். பிறகு கரையில் வந்து பார்க்கையில் அக்கிழங்குகளையும் மலர்களையும் காணவில்லை. அப்பொழுது ஒருவரிடத்தி லொருவர் ஸந்தேஹப்பட்டுக் கோரமான சபதஞ்செய்துகொண்டார்கள். அப்பொழுது அருந்ததி ''தன் மாமியாரை எக்காலத்திலும் அவமதிப்பவளும் பர்த்தாவை வெறுப்பவளும் மதுரமான பதார்த்தங்களைப் பிறர்க்குக் கொடுக்காமல் தானே புஜிப்பவளும் பந்துக்களால் அழைக்கக்கூடாத ஸ்திதியிலிருப்பவளும் பொழுதுபோன பிறகு மாவைக் கரைத்து குடிக்கும்படி ஒருவருடைய ஆதரவுமில்லாமல் உணவுக்குக் கஷ்டப்படுகிறவளும்,

புருஷனை அனுபவிக்கத் தகாதவளும் சக்தியற்ற பிள்ளைகளைப் பெற்றவளும் செய்த மஹா பாபத்திற்கு இந்த தாமரைக் கிழங்குகளைத் திருடினவர் ஆளாகட்டு" மென்றான்.

வேறொரு சமயத்தில் ப்ரபாஸ தீர்த்தத்தில் ரிஷிகளெல்லோரும் சேர்ந்து புண்யதீர்த்த யாத்ரைசெய்ய நிச்சயித்தார்கள். அவர்களுடன் சிபி, திலீபன், நஹுஷன் முதலிய அரசர்களும் இந்திரனும் சென்றனர். ப்ரஹ்ம ஸரஸென்ற தீர்த்தத்தில் ஸ்நானம்செய்து தாமரை மலர்களையும் கிழங்குகளையும் எடுத்துப் புஜித்தார்கள். அப்பொழுது அகஸ்தியருடைய கிழங்குகளும் மலர்களும் காணமல்போனதைப் பார்த்து, அவர் "நான் உங்களிடத்தில் ஸந்தேஹிக்கிறே" னென்றார். அப்பொழுது அவர்கள் கொடிய சபதங்களைச் செய்தார்கள். அவர்களுக்குள் அருந்ததி மேற்கண்ட கதையில் சொன்னபடியே சபதஞ்செய்தாள்.

ஸப்தரிஷிகளுடன் ஸமமாய் எப்பொழுதும் ஸஞ்சரிக்கத்தகுந்த யோக்கியதையுள்ளவள், அவர்களுடைய பார்யைகளுக்குள் அருந்ததி ஒருத்தியேயென்று பல இதிஹாஸங்களால் விளங்குகிறது.

பவபூதி யென்ற மஹாகவியால் செய்யப்பட்ட உத்தரராமசரித மென்ற நாடகத்தில் ஸீதை அருந்ததியை நமஸ்கரித்து "ஸகல லோகங்களிலும் பரிசுத்தமான பதார்த்தங்களுக்கு நிதியைப்போன்றவர் வஸிஷ்ட மஹரிஷி ஒருவரே; லோகத்தில் குருக்களென்று விளங்குகிறவர்களுக்குள் வெகு புராதனமான குருக்களுக்கும் குருவாய் ஸர்வ ச்ரேஷ்டமாய் விளங்குகிறவர்; அப்படிப்பட்டவரும் தங்களாலேயே பரிசுத்தமானவராய் எண்ணிக்கொள்ளுகிறார். மூன்று லோகங்களுக்கும் பரமமங்களத்தைக்கொடுக்கக்கூடியவர்கள் தாங்களே. ஸகல லோகங்களாலும் வந்தனஞ் செய்யப்படத் தகுந்தவர்கள் தாங்களே. விடியற்காலையில் ஸூர்யபகவான் உதிப்பதற்குமுன் விளங்கும் உஷஸென்ற தேவியை நமஸ்கரிப்பதுபோல், தாங்களை ஸாஷ்டாங்கமாய் நமஸ்கரிக்கிறேனெ"ன்று சொல்லுகிறாள். இப்படிச் சொல்லும் ஸீதையின் மஹிமை எப்படிப்பட்டதென்றால், அந்த அருந்ததியே "நீ வயஸில் சிறியவளானாலும் எனக்குச் சிஷ்யையானாலும் பாதகமில்லை; அதிருக்கட்டும். உன்னுடைய அந்தக்கரண சுத்தியும் கற்பும் எல்லையற்றது. எனக்கு உன்னிடத்தில் அளவற்ற பக்தி யுண்டாயிருப்பதற்கு அதே காரணம். ஸகல லோகங்களாலும் நீ பூஜிக்கப்படத் தகுந்தவளன்றோ? லோகத்தில் பூஜிப்பதற்குத் தகுந்த காரணம் உத்தம குணங்களைத் தவிர வேறுண்டோ? கேவலம் வயஸாலும் ஆண் பெண்ணென்ற பேதத்தாலும் என்ன ப்ரயோஜனமெ"ன்றிருக்கிறாள்.

ஒரு காலத்தில் ரிஷிகள் தேவர்கள் பிதருக்கள் அனைவரும் சேர்ந்து மனஸை அடக்கி, மஹாத்மாவான வஸிஷ்டருக்கு ஸமமான மஹிமையுள்ளவளும் ஒப்பற்ற தபஸைச் செய்தவளுமான அருந்ததியைப் பார்த்து "அம்மா! நாங்கள் தர்ம ஸூக்ஷ்மங்களை உன்னிடத்தில் கேட்க விரும்புகிறோம். உனக்கு எது வெகு ஸூக்ஷ்மமாகத் தோன்றுகிறதோ, அதைச் சொல்லவேண்டு" மென்று கேட்டார்கள். அருந்ததி "எனக்கு மேன்மையான தபஸ் கிடைத்திருப்பது உங்களை ஸ்மரிப்பதாலேயே. உங்கள் அனுக்கிரஹத்தால் அழியாத தர்மங்களை ஸூக்ஷ்மமான பாகங்களோடும் முக்யமான அம்சங்களோடும் சொல்வேன். ச்ரத்தையும் பரிசுத்தமான மனஸுமுள்ளவனுக்குத் தர்மரஹஸ்யங்களை உபதேசிக்கலாம். ச்ரத்தையில்லாதவனோடும் அஹங்காரமுள்ளவனோடும் ப்ரஹ்மஹத்யா செய்தவனோடும் ஆசார்யமனைவியிடம் கெட்ட சித்தத்துடனிருப்பவனோடும்பேசுவதால் மஹாபாபம் நேரும் இவர்கள் கேட்டுக்கொண்டிருக்கும்பொழுதும் தர்மத்தைப்பற்றிப் பேசலாகாது. நாளுக்கொரு பசுவாகப் பன்னிரண்டு வருஷங்களாய்க் கபிலைப் பசுக்களைத் தானஞ் செய்கிறவனும் மாதந்தோறும் ஸத்ரயாகம் விடாமல செய்பவனும் ஆனிமாதத்தில்புஷ்கரக்ஷேத்ரத்தில் லக்ஷம் கோதானம் செய்பவனும் அடையும் புண்யம் ஒரு அதிதியைத்திருப்திசெய்பவனுடைய புண்யத்திற்கு ஒப்பாகாதவை. இன்னுமொரு தர்மஸூக்ஷ்மத்தைச்சொல்லுகிறேன்; அது மனுஷ்யர்களுக்கு சுகத்தையும் அளவற்ற புண்யத்தையும் கொடுக்கும்; ச்ரத்தையுடன் செய்யத்தகுந்தது. காலையில் எழுந்து ஆஹாரம் செய்வதற்குமுன், தர்ப்பங்களையும ஜலத்தையும் எடுத்துக்

கவையைப்பற்றிக் கழுதையின் காலைப்பிடி.

கொண்டு, பசுக்களின் நடுவில் போய், ஜலத்தைத் தர்ப்பங்களால் அவற்றின் கொம்புகளில் தெளித்து, அந்தப் புண்யதீர்த்தத்தைத் தலையில் தரிக்கவேண்டும். மூன்று லோகங்களிலும் ஸித்தர்களாலும் சாரணர்களாலும் மஹரிஷிகளாலும் அடையப்பட்ட புண்ய தீர்த்தங்களென்று பெயர்பெற்ற எல்லாவற்றிலும் ஸ்நாநம் செய்வதும், பசுக்களின் கொம்பிலிருந்து பெருகும் ஜலத்தின் ஒருதுளி தலையில் படுவதும் ஒரே பலத்தைக் கொடுக்குமென்''றாள். எல்லோரும் அதை ''நல்லது நல்ல'' தென்று கொண்டாடினார்கள். ஸகலப் பிராணிகளும் வெகு ஸந்தோஷத்துடன் அவளைப் பூஜித்தன. ப்ரஹ்மதேவர் ''மஹானுபாவையே! என்ன ஆச்சர்யம்! உன்னால் சொல்லப்பட்ட தர்மம் வெகு ஸூக்ஷ்மமானது. பாக்யசாலியே! உன் தபஸ் எப்பொழுதும் வளரக்கடவ''தென்று வரங்கொடுத்தார்.

ஸீதை லங்கையில் அசோகவனத்தில் கோரமான ராக்ஷஸிகளின் நடுவில் அகப்பட்டுக்கொண்டு, அவர்களுடைய போதனைக்குட்படாமல், கண்ணீர் சொரிய, ''நீங்களெல்லோரும் சேர்ந்து சொல்லும் வார்த்தைகள் எனக்குக் கோரமாய்த் தோன்றுகின்றன. அது மஹாபாபமென்றும் ஸகல ஜந்துக்களும் நிந்திக்கத் தகுந்ததென்றும் உங்களுக்கு ஏன் தெரியவில்லை? மனுஷ்யஸ்த்ரீ ராக்ஷஸனுக்குப் பார்யையாவது யுக்தமா? உங்களுடைய இஷ்டப்படி என்னைத் தின்றுவிடுங்கள்; நீங்கள் சொன்னபடி செய்யமாட்டேன். ராமன் தரித்திரனாயிருந்தாலும், ராஜ்யமற்றவனாயிருந்தாலும் என் பர்த்தா; ஆகையால் என்னால் பூஜிக்கத் தகுந்தவர்; ச்ரேஷ்டர். ஸுவர்ச்சலாதேவி ஸூர்யனைப் பின்தொடர்வதுபோல் நானும் அவரிடத்தில் ப்ரீதியுற்று அவரைப் பின் தொடர்வேன். மஹாபாக்கியசாலியான சசீதேவி இந்திரனையும், அருந்ததீ வஸிஷ்டரையும், ரோஹிணீ சந்திரனையும், லோபாமுத்ரை அகஸ்திரையும், ஸுகன்யை ச்யவனரையும், ஸாவித்ரீ ஸத்யவானையும், மதயந்தீ ஸௌதாஸனையும், ஸ்ரீமதீ கபிலரையும், கேசினீ ஸகரனையும், தமயந்தீ நளனையும், இந்துமதீ அஜனையும், மஹாப்பிரேமையுடன் சேர்ந்திருப்பதுபோல், நானும் ரகுகுல ச்ரேஷ்டரான ராமனைப் பதியாயடைந்து ஸந்தோஷிக்கிறேனெ''ன்று சொல்லி, மஹா பதிவ்ரதைகளின் கோஷ்டியில் அருந்ததியைச் சேர்த்திருக்கிறாள்.

ஆதிகாலத்தில் கிருத்திகைகளென்று ஏழு நக்ஷத்திரங்கள் சேர்ந்த ஓர் வகுப்புண்டு. தைத்திரீய ப்ராஹ்மணத்தில் அவைகளுக்கு முறையே அம்பை, துலை, நிதத்னி, அப்ரயந்தீ, மேகயந்தீ, வர்ஷயந்தீ, சுபுணிகாவென்று பெயர்கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் ஏகாக்னிகாண்டத்திலிருந்து முன்பு சொன்ன மந்திரத்தில் இவைகளில் ஒன்றிற்கு அருந்ததீயென்று பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதில் ப்ராஹ்மணம் முந்தினதா! அல்லது மந்திரத்தில் காணப்படும் பெயர் முந்தினதாவென்று நிச்சயிப்பது கஷ்டம். இந்த விஷயமாய் க்ரீஸ் தேசத்து மத கிரந்தங்களில் இதே கிருத்திகைகளைப்பற்றி அடியில் கண்ட கதை காணப்படுகிறது. அட்லாஸ் என்ற பர்வதராஜனுக்கும் ப்லியோனென்ற அப்ஸரஸிற்கும் ஏழு பெண்கள் பிறந்தார்கள். அவர்களைப் பகவான் ஆகாசத்தில் நக்ஷத்ர கணமாகச் செய்தார். மூன்றாவது வகுப்பு நக்ஷத்ரங்களில் ஒன்றான ஆல்கியோனென்றது இவைகளில் மிகுந்த தேஜஸுள்ளது. தூரதிருஷ்டிக் கண்ணாடியாலன்றி வெறும் கண்ணால் பார்க்கும்பொழுது ஆறு நக்ஷத்ரங்களே தெரியும். ஏழாவது நக்ஷத்ரதேவதையான பெண், மனுஷ்ய லோகத்திலுள்ள ஒருவனிடத்தில் ஆசைவைத்ததால் வெட்கமடைந்து தன்னை மறைத்துக் கொண்டிருக்கிறாளெ''ன்று புராதனகதை. இந்த நக்ஷத்ரத்தையே ஆர்யர்களும் அருந்ததீ யென்கிறார்கள். மஹாபதிவ்ரதையென்றும் மற்றவர்களுடைய கண்ணில் படுவதில்லையென்றும் சொல்வது பொருந்தியிருக்கிறது. ஆனால் தற்காலத்தில் இந்த நக்ஷத்ரம் ஸப்தரிஷி மண்டலத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. அந்த மண்டலத்தின் வாலிலுள்ள நக்ஷத்ரங்களில் நடுவிலிருப்பது வஸிஷ்டரென்றும், அதற்குப் பக்கத்தில் ஸ்வல்ப ப்ரகாசத்துடன் விளங்குவது அருந்ததீயென்றும் எண்ணப்படுகிறது. வராஹமிஹிரரென்ற ஜ்யோதிஸ்தந்திர நிபுணர் பிருஹத்ஸம்ஹிதையில் இப்படிச் சொல்லியிருக்கிறாரென்று வாசஸ்பத்ய நிகண்டுவில் காணப்படுகிறது.

அருந்ததி தன் பர்த்தாவைக் குறித்து தபஸ்

செய்தபொழுது, நியமம் தவறிச் செய்ததால் அவளுக்கு ஸூக்ஷ்மமான ரூபம் கிடைத்த தென்று சொல்லுகிறார்கள் அந்த நக்ஷத்ரம் வஸிஷ்ட நக்ஷத்ரத்திற்கு முந்தின பாகத்தில் காணப்பட்டால் லோகத்திற்கு வெகு கஷ்டத் தையுண்டுபண்ணக்கூடிய சகுனங்கள் நேரும். அந்த நக்ஷத்ரம் எப்பொழுது ஒருவனுக்கு முற்றிலும் காணப்படாமலிருக்குமோ அப்பொ ழுது அவனுக்குச் சீக்கிரத்தில் மரணம் நேரு மென்றறியலாம்

ஒரு சமயத்தில் ஸப்தரிஷிகள் ஆஹாரம் தேடுவதற்காக ஹிமாலயமலைக்குச் சென்றார் கள். அப்பொழுது அருந்ததியைத் தங்களு டைய ஆச்ரமத்தில் வைத்துவிட்டுப் போனார் கள். அவர்கள் அங்கே ஓர் பர்ணசாலையைக் கட்டிக்கொண்டு வேர்களையும் கிழங்குகளை யும் சேகரித்துக்கொண்டிருக்கையில் பன்னி ரண்டு வருஷப் பஞ்சமுண்டாயிற்று. அருந்ததி கடினமான தபஸை அனுஷ்டித்துக்கொண்டு காலத்தைக் கழித்தாள். ஒருநாள் பரம மங்க ளத்தைக் கொடுப்பவரும் ஸூர்ய சந்திர அக் னிகளை நேத்ரங்களா யுடையவருமான மஹா தேவன் அவளுடைய தபஸால் ஸந்தோஷ மடைந்து, ப்ராஹ்மண வடிவம் கொண்டு அங்கே வந்து, "பவதீ! பிக்ஷாம் தேஹி" யென்றார். அவள் ஸ்வாமி! இங்கிருந்த ஆஹார பதார்த்தங்கள் சிலவாயின. இந்த இலந் தைப்பழங்களைப் புஜிக்கலா"மென்றாள். மஹா தேவன் "அப்படியானால் அதைப் பக்குவம் செய்துகொடு" வென்றார். அப்பொழுது அருந் ததி அவைகளை ஓர் பாத்திரத்தில் வைத்துச் சமைத்துக்கொண் டிருக்கும்பொழுது மஹா தேவன் தர்மத்தையும் ஞானத்தையும் பக்தி யையும் யோகத்தையும் உபதேசிக்கும் பல புண்ய கதைகளைச் சொல்லிக்கொண்டே யிருந் தார். இப்படி ஆஹாரமின்றி நித்திரையின்றி அதிதிக்காக இலந்தைப்பழங்களைச் சமைத்துக் கொண்டு புண்யகதைகளைக் கேட்டுக்கொண்டி ருந்த அருந்ததிக்கு அந்தப் பன்னிரண்டு வருஷங்களும் ஓர் பகலைப்போல் கழிந்தன. பிறகு ஸப்தரிஷிகள் ஹிமாலயத்திலிருந்து ஆஹார பதார்த்தங்களுடன் திரும்பிவந்தார் கள். மஹாதேவன் "புண்யவதியே! முன் போல்இந்த ரிஷிகளை உபசரிக்கக் கடவாய். உன் தபஸாலும் நியமத்தாலும் உறுதியாலும் பக்தி யாலும் மிகுந்த சந்தோஷத்தை அடைந்தே" னென்று தன் நிஜரூபத்தை எடுத்து, ரிஷி களைப் பார்த்து "நீங்கள் ஹிமாலயத்தில் இந் தப் பன்னிரண்டு வருஷங்களாய்ச்செய்துவந்த தபஸின் மஹிமை, இந்த மஹாபதிவ்ரதை கடுமையான நியமங்களுடன் புண்ய கதை களைக் கேட்டுக்கொண்டிருந்ததால் ஸம்பா தித்த மஹிமைக்கு ஈடாகாது. உத்தமியே! உனக்கு வேண்டிய வரத்தைக் கேளெ"ன்றார். அப்பொழுது அருந்ததீ ஸாஷ்டாங்க மாய் நமஸ்கரித்துத் தலைமேல் கைகூப்பி, "மஹாதேவ! தங்களுடைய அனுக்ரஹம் என்னிடத்திலிருந்தால் இந்த ஸ்தலம் பதர பசனமென்ற புண்யதீர்த்தமாகக்கடவது (இலந் தைப்பழங்கள் சமையல் பண்ணப்பட்ட விடமென்று கருத்து). ஸித்தர்களும் தேவ ரிஷிகளும் இவ்விடத்தில் பிரியமாய் வஸிக்கட் டும். தேவதேவோத்தமா! இங்கே உபவாஸ மிருந்து மூன்று ராத்ரிகள்வரையில் தபஸ் செய்கிறவனுக்குப் பன்னிரண்டு வருஷ உப வாஸத்தின் புண்யம் கிடைக்கட்டு" மென்று பிரார்த்தித்தாள். உடனே ஆகாசத்திலிருந்து தேவர்கள் "அப்படியே ஆகக்கடவ" தென் றார்கள். சப்தரிஷிகளால் கொண்டாடப்பட்டு மஹாதேவன் தன்னுலகம் சென்றார்.

மகாபுண்யஞ் செய்தவர்களின் ஆத்மாக் கள் காலமுள்ளவரையில் நக்ஷத்ரரூபிகளாய் ஆகாசத்தில் விளங்குகின்றனவென்று ஓர் கொள்கை நமது ஜனங்களுக்குள் வழங்கு கிறது. அப்படியே கற்பாலும் ஆசாரத்தாலும் கடுந்தபஸாலும் ஸகல ஸ்த்ரீகளுக்கும் நாயக மாய், மஹா மஹிமையுள்ள ஸப்தர்ஷிகளாலும் கொண்டாடப்பட்டவளாய் விளங்கும் அருந் ததீதேவி, ஸப்தர்ஷிமண்டலத்தில் ஓர் நக்ஷத்ர தேவதையாய் எப்பொழுதும் ப்ரகாசித்துக் கொண்டு, கிருஹஸ்தாச்ரமத்தை அடையப் போகும் ஸ்த்ரீகளுக்கு வழிகாட்டியாயும் உவமைப்பொருளாயும் விளங்குகிறாள். நமது ஆர்யாவர்த்தப் பெண்மணிகள் யாவரும் அவளைப்போல் ஆகக்கடவார்கள்.

யுத்தச் செலவு.—சமீபத்தில் முடிவடைந்த மகாயுத்த விஷயமாய் கிரேட் பிரிடனுக்கு நேர்ந்த செலவு எழுபது ஆயிர லட்சம் பவுன் என்று தெரிய வருகிறது.

பிரபஞ்ச வர்த்தமானம்

NEWS & NOTES

கல்விக்காக ஓர் கொடை

உகாண்டாவில் 15-வருஷகாலம் ஸப் அவிஸ் டெண்டு ஸர்ஜனாக இருந்த நாகபுர வாசியான ஸ்ரீமான் லாண்டே என்பவர்சிலநாள்களுக்குமுன் இறந்து போனார். இவர் இறப்பதற்கு 5-நாள்களுக்குமுன், இத்தேசத்திலும் ஆப்பிரிக்காவிலும் இருந்த ஸுமார் 55,000 ரூ மதிப்புள்ள தமது ஆஸ்தியில் பெரும்பாகத்தை கல்விக்காகவும் தருமத்திற்காகவும் செலவிடும்படிஉயில் எழுதிவைத்துப்போனார். உகாண்டா நாட்டு சட்டப்படி, இறப்பதற்கு ஒருவருஷம் முன்னர் எழுதப்பட்டு, தகுந்த ஆள்களிடம் வைக்கப்படாத உயில் செல்லாது. ஸ்ரீமான் லாண்டே அவர்களுக்கு மனைவியிருவரும், தாயாரும் இருக்கிறார்கள். இவர்கள் இந்த உயிலைப்பற்றி வழக்கிடின் அது செல்லாமற் போகும். ஆனால் இவர்கள், உயிலில் கண்ட கொடைகளைப் பற்றி ஒருவழக்கும் தொடராதிருப்பதாக விடுதலைப் பத்திரம் எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். இந்து மாதர் யூனிவர்ஸிடி பொறுப்பாளிகளே இந்த உயிலின் காரியகர்த்தர்களும். ஆகவே அவர்கள் கூடிய சீக்கிரத்தில் 15,000 ரூபாயும், பின்பு மொத்த ரூபாயும் கல்வியின் அபிவிருத்திக்காகக் கிடைக்கு மென்று எதிர்பார்க்கிறார்கள்.

* * *

கம்பியில்லாத் தந்தியால் டெலிபோன்

கம்பியில்லாத் தந்தியைக் கண்டுபிடித்த மார்கோனி கம்பெனியார் ஐர்லந்திலிருந்து கானடாவிற்கு கம்பியில்லாமலே டெலிபோன் செய்தார்களாம். இன்னும் கொஞ்ச காலத்திற்குள் ஒருவர் தம் சிநேகிதர்களுடன் எவ்வளவு தூரமானாலும் பேசி தங்கள் கார்யத்தை முடித்துக் கொள்ளலாம். வியாபாரிகளுக்கு இது மிகவும் பிரயோசனமாயிருக்கும் என்று கூறுவது மிகையாகாது.

* * *

குழந்தைகளின் தேகசௌக்கியம்

நம் தேசத்தில் பிரஸவ காலத்தில் ஸ்திரீகள் படும் கஷ்டத்தையும், சிறுவயதிலேயே குழந்தைகள் மாள்வதையும் உத்தேசித்து, சிறு குழந்தைகளை வளர்த்தல் முதலியவைகளை விவரித்துக் காட்டும் காட்சி ஒன்று 1920ளு பிப்ரவரி மீ, லேடி செம்ஸ்போர்டு அவர்களுடைய ஆதரணையின் கீழ் டில்லியில் நடைபெறுமெனத் தெரியவருகிறது.

* * *

வருமான வரிக் தள்ளாதும் தொகையைக் குறைத்தல்

கலாசாலைகளில் படிக்கும் பிள்ளைகளுடைய பெற்றோர்கள் செலுத்தும் வருமான வரியை குறைக்க வேண்டுமென்று இங்கிலாந்தில் கல்வி இலாகாவைச் சேர்ந்தவர்கள் வருமானவரியைப் பற்றி விசாரிக்கும் ராயல் கமிஷனுக்குத் தெரிவித்திருக்கிறார்கள். 21-25 வயதுக்குட்பட்ட குமாரனாவது, குமாரியாவது படித்தால் ஒவ்வொரு நபருக்கும் மொத்த வருமானத்தில் 225 பவுன் தள்ள வேண்டும் என்றும் தெரிவித்திருக்கிறார்கள்.

* * *

கனம் கான் பஹதூர் ஹபிபுல்லா ஸாஹிப் பஹதூர்

கனம். பி. ராஜகோபாலாசாரியா ரவர்கள் ஒரு வருஷம் ரஜா எடுத்துக்கொள்ள, நிர்வாக சபையில் ஓர் இடம் காலியாயிற்று. அதைப் பூர்த்தி செய்ய கனம் மிஸ்டர் ஹபிபுல்லா ஸாஹெப் அவர்களை கவர்னர் அவர்கள் நியமித்திருப்பது யாவருக்கும் ஸந்தோஷத்தைத்தரும். சில வருஷங்களாகமது நிர்வாகசபையில் ஓர் இந்தியராவது இருத்தல் அவசியமென்பதை அறிந்து, இந்தியர்களை நிர்வாகசபையின் அங்கத்தினராக துரைத்தனத்தார் நியமிப்பது பாராட்டத்தக்கது. ஸ்ரீமான் ஹபிபுல்லா அவர்கள் நிர்வாக முறையில் மிகவும் பயிற்சியுள்ளவர். வெகு காலமாக அவர் வேலூர் முனிஸிபாலிடியின் தலைவராக அவ்வூரரால் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கின்றனர். தாலூகா போர்டு பிரஸிடெண்டாகவும், டிஸ்ட்ரிக்ட் போர்டு வைஸ் பிரஸிடெண்டாகவும், பிரஸிடெண்டாகவும் நியமிக்கப்பட்டு மிகவும் சிறப்புடன் வேலை செய்திருக்கிறார். நிர்வாக சபையிலும் ஸாஹெப் அவர்கள் கீர்த்தி அடைவாரென்று நம்புகிறோம்.



சென்னை சட்டசபை அங்கத்தினர்கள்

விவேகபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்.

தொகுதி XII | சித்தார்த்தி௵ ஆடி௴ :: 1919-௵ ஆகஸ்ட்௴ | பகுதி 2

கம்பராமாயணத் திரட்டு

SELECTIONS FROM KAMBA RAMAYANA

நகவன் மாசிற கரிந்தவ ஞன்மறைக் கிழவன்
அகவன் மாயையென் றறநெறி நால்வருக் களித்தோன்
உகவன் மாய்த்தவ ருணர்வரு மறையைவான் மீகி
பகவன் மாதவன் பணித்தனவண்ணமே பகர்வாம்

ஞான நாயக ஞன்மறை நாயக ன்ளினத்
தேனநாயகன் றிருப்பத நதிபொதி செனியன்
ஆனநாயக னம்பிகைக் கருடிருக் கதைக்கோர்
சேனை நாயக னடியிணை சிறந்தநற் றுணையே.

நாடு கோசல நாடுமா னதிபுனற் சரயு
ஆடு திண்கொடி யயோத்திமா நகரதற் கிறைவன்
தேடு வண்புகழ்த் தசரதன் றேவியர் முதன்மை
சூடு கோசலை கைகேசி சுமித்திரை யென்பார்.

மற்றுந் தேவிய ரறுபதி ஞயிர மடவார். [டக்கிப்
சொற்ற மன்னவன் சுடர்புகழ் வேள்வியைத் தொ
பெற்ற மைந்தர்பேர் பிறங்குவே லிராகவன் பரதன்
எற்று நீள்புயத் திலக்குவன் சத்துருக் கினனே.

அன்ன மன்னவ னரியணை மீதுவீற் றிருந்தான்
இன்ன மாநிலம் படைப்பெனன் றவனியல் வேள்விக்
[தான்
குன்னன் மைந்தரி லிராமனைத் தருகியென் றுரைத்
மன்னர் மன்னவன் மறுத்தனன் வசிட்டனீ துரைத்
[தான்.

மறுத்தி யன்றென வுரைத்தலு மன்னர்கோன் முனி
பொறுத்தியென்றவன் பொன்னடிசென்னியிற்[யைப்
[புனையா
உறுத்திமைந்தரை யளித்தலு முவந்துமா முனியும்
கறுத்த செம்மலுந்தம்பியும் காடுசென் றடைந்தார்.

காமன் மாறுபட் டுவந்ததோர் காடுகண் டேகித்
தாம வார் குழற் றுடகை படச்சரந் தூண்டி
ஏம மாகிய படைக்கலம் யாவையு மெய்தி
ஓமமாவவியுறைந்ததோருறையுள்சென் றுறைந்தார்.

வெவ்வி லிச்சின வீரரைக் காக்கென விடுத்தே
அவ்வி டத்துமா முனிவனும் வேள்வியை யமைக்க
எவ்வி டத்தினு மரக்கர்வந் திடியென வார்த்தார்
வவ்வி டச்சர மாரியால் வானத்தை மறைத்தார்.

கண்ட வீரனு மரக்கரைக் கடிந்துதா டகையாம்
சண்ட வேகத்த டனையரி லொருவனைச் சரத்தால்
துண்ட மாக்கிமற் றொருவனைக் கடல்புகத் துரந்தான்
மண்டுவேள்வி செய்முனிவனுமதுகண்டுமகிழ்ந்தான்.

கண்ட மாமறை முனிவனுந் தம்பியுந் தானும்
கண்டல் சூழ்கரைக் கங்கையுங் கானமுங் கடந்து
பண்டை மாசிற மகலிகை பெறப்பணித் தருளி
விண்டொ டும்மதின் மிதிலைமா நகரின்மே வினரால்.

சனகர் கோனைவந் தணுகலுந் தழல்புரி வேள்வி
முனிவ விங்கிவ ராரெனக் கருளென மொழிந்தான்
வினையம் வேறிலை விறல்புனை தசரத னென்பான்
தனையர் மற்றுநின் றனுவலி காண்குறச் சகைந்தார்.

இந்திர வில்லென யாரு மியம்ப
வந்த நெடுஞ்சிலை வள்ளல் வளைத்தான்
அந்தரவானி லரம்பைய ரார்த்தார்
தந்தை யுகந்திடச் சார்ந்திடு மென்றே.

சனகன லந்திகழ் தசரத னுக்கோர்
துனியறு மோலையைத் தூதொடு மேவத்
தனைய ரொடுங்கிளர் தவமுனி யோடும்
வினையம் வலான்மதின் மிதிலை யடைந்தான்.

தெள்ளமிழ் தம்புரை சீதையை யன்பால்
வள்ள லிராமன் மகிழ்ந்து மணந்தான்
முள்ளில வெயிறிதழ் மூவரை யும்போர்
வெள்ளிலை வேலவர் மூவரும் வேட்டார்.

அங்கர் தன்னை யகன்றன ரிப்பால்
மன்னு மழுப்படை யான்சிலை வாங்கி
யன்னவ னைத்தவ மார விடுத்தே
பொன்னணி மாட வயோத்தி புகுந்தார்.

அரியணை மீதி லிருந்தா சாரும்
வரிகழன் மன்னன் வசிட்டனை நோக்கா
உரிய தவம்புரி வேனென் மகற்கே
விரிகதிர் மோலி மிலைச்சுமி னென்றான்.

கறையான் புற்று, பாம்புக்கு உதவுகிறது.

விவேக போதினி

தொ.12] சித்தார்த்தி௵ ஆடிமீ [ப. 2

யுதிஷ்டிரர்

YUDHISHTIRA

"கிருஷ்ணா! நீ சொல்லும் காரணங்கள் நியாயமாகவே தோன்றுகின்றன. ஆனால் யுதிஷ்டிரன் சொன்ன யுக்தியை என் தாய் அங்கீகரித்த தெப்படி"யென்று தயங்கினான். கண்ணன் எந்தவேஷம் போட்டாலும் அவருக்குப் பலிக்கும். ஒருவனைத் தன் வசப்படுத்த நிச்சயித்துவிட்டால் அவன் தப்புவதெங்கே? சகல பிரபஞ்சத்தையும் மயக்கும்மாயையையும் அடக்கியாளும் மஹா மாயாவி. "அடே பிருஹஸ்பதிக்குக் குருபீடமே! இதை ஒரு பெரிய சந்தேஹமாய் நினைத்து இதில் போய் முட்டிக்கொள்கிறாயே! உன் துடையை பீமஸேனன் கதையால் முறிப்பானென்று பயமாகையால், அவ்விடத்தை மாத்திரம் நீ வஜ்ரகாயமாய்ச் செய்துகொள்ள விரும்புகிறாயென்றெண்ணி, உன் தாய் உன்னை வரச்சொல்லியிருக்கிறாள். பீஷ்மரும் தர்மனும் உன் பேராசையையும் மடத்தனத்தையும் பூர்ணமாய் அறிந்தவர்கள். உனக்குத் தேஹம் முழுவதும் வஜ்ரகாயமாகவேண்டுமென்று ஆசை பிடித்திருக்கிறது. அதை அவர்கள் அறிந்து, உனக்கு இந்தயுக்தி சொல்லியிருக்கிறார்களே" னத், துர்யோதனன், "என் ஆசைப்படி ஸர்வாங்கமும் அமரகாயமாவதற்கு, நான் நிர்வாணமாய்ப் போனால் என்ன கெடுதி" யென்று தடுத்துக் கேட்டான். கிருஷ்ணன் "இந்தக் காண்டாமிருகத்துடன் யாரால் பேசமுடியும்? கொசுவிற்குள்ள புத்திகூட உனக்கில்லையே. தன் கணவனையும் கண்ணெடுத்துப் பாராமல், பதிவ்ரதாக்னியின் கொழுந்துபோல் பயங்கரமாய் ஜ்வலித்துக்கொண்டிருக்கும் உன் தாய்க்கெதிரில், நீ சுக்குமாந்தடிபோல் போய் நின்றால், அப்புறம் உன் கதியைக் கேட்கவும் வேண்டுமோ? உடனே அவளுடைய கோபாக்னி உன்னைச் சாம்பலாக்கிவிடும். சபாஷ்! நல்ல யுக்தி சொன்னான் தர்மபுத்திரன்" என்றார். துரியோதனன் இதைக் கேட்டுப் புத்தி சிதறி, இடிவிழுந்த நாகத்தைப்போல் குன்றி, பயத்தால் நடுங்கிக் "கிருஷ்ணா! இந்தத் துரோஹிகளின் வஞ்சனை எனக்கு இப்பொழுதல்லவா வெளியாயிற்று! நீ சாதாரணமாய் மஹா மோசக்காரன். ஆனாலும் சில வேளைகளில் உனக்கு நல்ல எண்ணம் பிறக்கிறது. நீ சொல்லும் யுக்தி முற்றிலும் நியாயமே. ஆனால், இப்பொழுது நான் என்ன செய்யட்டும்? அமரகாயத்தை விட்டுவிட இஷ்டமில்லை. பிராணனை விட்டுவிடவும் இஷ்டமில்லை. கிருஷ்ணா! இதற்கு நீயே ஒரு யுக்தி சொல்லவேண்டு"மென்று வேண்டினான். அதற்குக் கண்ணன் "துரியோதனா! என்னை உபத்திரவிக்காதே. யுக்தி சொல்வதில் எனக்குத் திறமையே இல்லை. மேலும், பாண்டவர்களைச் சேர்ந்தவனென்று லோகாபவாதம் இருப்பதாலும் நீயும் அதை நம்புவதாலும், என் யுக்தி உனக்கு ஒவ்வாது. அதன்படி நீ நடந்தாலும், உன்னால் பிசகுகள் ஏதாவது நேர்ந்தால், அதை என் தலைமேல் எல்லோரும் வைப்பார்கள். ஏதோ கபடமறியாத உன்னைப்பார்த்து என்மனம் தாங்காமல் எனக்குத் தோன்றினதை உளறிவிட்டேன். நீ அதை ஏன் நிஜமென்று நம்பவேண்டும்? ஏன் அப்படி நடக்கவேண்டும்? எல்லா விஷயத்திலும் நிகரற்ற யுக்தி சொல்லும் மஹாபுத்திமானான உன் மாமன் சகுனி ஒருவன் இருக்கிறானென்பதை ஏன் நினைக்கவேயில்லை? அவனுக்கு முன் நானெங்கே? அவனைக் கேட்காமல் இப்படிச் செய்வாயா? இந்தத் தொல்லை எனக்கேன்? நான் போய் வருகிறே"னென்று ஒதுங்க ஆரம்பித்தார். அப்பொழுது துரியோதனன் அவரை வழிமறித்து "கிருஷ்ணா! என் தாயின் உத்தரவால் நான் இதை ஒருவரிடத்திலும் சொல்லவில்லை; சகுனிக்கும் தெரியாது. நீ சொல்லும் யுக்தியே எனக்குப் போதுமெ"ன்று நிர்ப்பந்தித்தான். அப்பொழுது கபட நாடக ஸூத்ரதாரியான கோபாலன், அனுப்

படைந்தவர்போல் "இதென்ன? உன்னிடத்திலிருந்து தப்பித்துக்கொள்வதற்காகவாவது ஓர் யுக்தியைச் சொல்லவேண்டும் போலிருக்கிறதே" யென்று, தன் கழுத்திலிருந்த புஷ்பஹாரங்களை எடுத்து, அதி சீக்கிரத்தில் ஓர் சல்லடமாய்ப் பின்னி, "இந்தா, இதை தரித்துக் கொண்டு காந்தாரிதேவியிடத்திற்குச் செல். அவளுடைய திருஷ்டி உன் தேஹத்தில் படட்டும். பீமஸேனன் உன் தொடையைக் கதையால் முறிப்பதெப்படி? கதாயுத்தத்தில் இடுப்பிற்கு மேல் அடிக்கலாமென்று யுத்தநீதியல்லவா? இடுப்புக்குக் கீழ் ஒருவரும் அடிப்பதில்லை. அதிலும் பீமஸேனன் அந்த வழிக்குப் போகமாட்டான். உனக்கு இடுப்புக்குமேல் அமரகாயமாய், ஆயுதங்களால் பிளக்கமுடியாமலிருந்தால் போதாதோ" வென்று அவனிடத்தில் விடைபெற்றுக்கொண்டு வெளியில் வந்தார்.

பிறகு துரியோதனன் அந்தப் புஷ்பச்சல்லடத்தால் இடுப்புமுதல் பாதித்தொடைவரையில் மறைத்துக்கொண்டு, காந்தாரியின் அந்தப்புரத்துக்குச்சென்று, தன் வரவைத் தெரிவிக்க, அந்த அம்மாள் தன் கண்களை மூடியிருந்த கட்டை எடுத்துவிட்டுப் பூர்ண விசுவாஸத்துடனும் பிரியத்துடனும், துரியோதனனுடைய தேஹத்தைத் தலைமுதல் பார்த்துக்கொண்டு வந்தாள். அரையில் அணிந்திருந்த புஷ்ப சல்லடத்தைக் கண்டு "குழந்தாய்! நான் உன்னை இப்படி வரச் சொல்லவில்லையே. உன் தேஹம் முழுவதும் வஜ்ரகாயமாக செய்யவேண்டுமென்று நிர்வாணமாயல்லவா உன்னைப் பார்க்க விரும்பினேன்? ஏதோ உனக்கு அந்தப் பிராப்தியில்லை. புஷ்பத்தால் மறைக்கப்பட்ட பாகத்தைத்தவிர மற்ற தேஹம் முழுவதும் எந்த ஆயுதங்களாலும் பிளக்கப்படாமல் வஜ்ரசரீரமாகும். பீமஸேனனுடைய பிரதிக்ஞையும் நிறைவேறும். இதிருக்கட்டும், இந்த யுக்தி உனக்கெப்படி தோன்றிற்று" என, துரியோதனன் மனங்குன்றி, "அம்மணி! தங்களுடைய எண்ணப்படியே நான் வந்தேன். வழியில் கிருஷ்ணன் என்னைக் கண்டு—" "கிருஷ்ணன் உன்னை என் மாளிகையில் இந்த ராத்திரியில் கண்டானு! போதும் போதும். மேலே சொல்ல வேண்டியதில்லை. இப்பொழுது எனக்கு எல்லாம் ஸ்பஷ்டமாய்த் தெரிந்துவிட்டது. ஸர்வாந்தர்யாமியான அவனைத் தவிர இந்த விஷயம் மற்ற யாருக்குத் தெரியக்கூடும்? பக்தபராதீனனுன அவனைத்தவிர வேறு யாருக்குப் பாண்டவர்களை ஆபத்து நேராமல் காப்பதில் இவ்வளவு சிரத்தையும் ஊக்கமும் உண்டாகும்? கர்மங்களுக்குத் தகுந்தபடி அந்தந்த தேசகாலங்களில் பயனைக் கொடுக்கும் தேவதையாகிய அந்த பரமாத்மா, எப்படிக் கார்யங்களை முடிக்க வேண்டுமென்று நினைத்திருக்கிறாரோ, அதற்குத்தகுந்தபடியே யாவற்றையும் ஒழுங்குபடுத்திக்கொண்டு வருகிறார். நீயும் பீஷ்மரும் யுதிஷ்டிரனும் நானும் அவருடைய எண்ணப்படி காரியங்களைச் செய்துகொண்டு, அந்த கபடநாடகஸூத்ரதாரியின் கையில் பொம்மைகளைப்போல் வசப்பட்டிருக்கிறோம். அவருடைய திருவுளப்படியே நாம் நடந்துகொண்டிருக்க, அக்ஞானத்தால் நான் செய்கிறேனென்று இறுமாப்படைகிறோம். என்ன ஆச்சரியம்! தனக்கும் தன்னைச் சேர்ந்தவர்களுக்கும் நாசத்தை உண்டுபண்ணக்கூடிய யுக்தியை, தன் பரமசத்ருவாய், தன்னைக் கொல்லவந்த உனக்கு, கபடமில்லாமல் வருத்தமில்லாமல் மித்ரனைப்போல் சொன்ன தர்மாவதாரமான யுதிஷ்டிரனுடைய மஹிமையை நான் கொண்டாடட்டுமா? அல்லது, தன்னை முற்றிலும் நம்பி, அனன்யமாய், வேறு பற்றின்றி, இடைவிடாது பக்திசெய்யும் பாண்டவர்களுக்கு நேரும் ஆபத்துகளை அந்த க்ஷணமே அறிந்து, அவைகளைத் தீர்ப்பதற்கு எந்த வேஷத்தையும் போட்டு, எந்தப் பாட்டையும் பட்டு, செய்யாதகாரியங்களைச் செய்து, அவர்களுக்கு சகல மங்களங்களையும் அளிக்கும் அந்த கோபாலனுடைய அபார கிருபையையும் வாத்ஸல்யத்தையும் கொண்டாடட்டுமா? ஸத்யத்தையும் தர்மத்தையும் குறைவற அனுஷ்டிப்பதே ஸர்வோத்தமமான மோக்ஷோபாயம். பகவானுடைய கருணைக்கு அதே மார்க்கம். அப்படி அனுஷ்டிக்கும் தர்மமே ரூபமாய், பகவான் அந்த தர்மாத்மாக்களுக்கு யாதொரு அபாயமும் நேராமல் ரக்ஷித்து, ஸகல இஹபர ஸுகங்களையும் அளிக்கிறாரென்பதற்கு இதுவும் ஒரு ஸாக்ஷி" யென்று, விதியை நினைத்துப் பெருமூச்செறிந்து, துரியோதனனுக்கு விடைகொடுத்தனுப்பினாள்.

யுதிஷ்டிரருடைய சரித்திரத்தைக் கவனிக்

குமிடத்தில். அவருடைய செய்கைகளால் இதைப்போன்ற அநேக உத்தம நீதிகளும் தர்மரஹஸ்யங்களும் நமக்கு உபதேசிக்கப் படுகின்றன. அவற்றில் சிலவற்றை இங்கே எடுத்துரைப்போம்.

இவ்விதமான உத்தமகுணங்களால் அலங்கரிக்கப்பட்ட யுதிஷ்டிரர் சதச்சிருங்கமென்ற மலையில் பிறந்தார். பாண்டுமஹாராஜன் தனுர்வேதத்திலும் தேகவலிமையிலும் நிகரற்றவனுயிருந்தபடியால், திருதராஷ்டிரன் அரசனுய் மகுடஞ் சூட்டப்பட்டபொழுது, பீஷ்மர் பாண்டுவை ஸேனுதிபதியாகச் செய்தார். பாண்டு தன் புஜபல பராக்கிரமத்தால் சத்துருக்களை ஜயித்து அவரவர்களுடைய தேசங்களை ஹஸ்தினபுர ராஜ்யத்துடன் சேர்த்தான். பிறகு கிந்தமரென்ற மஹரிஷியின் சாபத்தைப் பெற்று, பாண்டு இவ்வுலக வாழ்க்கையில் வெறுப்புற்றுத், தன் மனைவிகளான குந்தீ மாத்ரீ யென்றவர்களுடன் தவஞ்செய்யக் கருதி, சதச்சிருங்கமென்ற புண்ய பர்வதத்திற்குச் சென்றுன்.

அங்கே குந்தி பெற்ற வரப்பிரசாதத்தால் தர்மதேவதையின் அம்சமாய் யுதிஷ்டிரர் பிறந்தார். அந்த மலையில் வஸிக்கும் ரிஷிகளே பாண்டு புத்திரர்களுக்கு நாமகரணஞ் செய்தார்கள். "யுத்தத்தில் புறங்காட்டி ஓடாமல் ஸ்திரமாய் நிற்பவனெ"ன்ற கருத்தையுடைய யுதிஷ்டிரனென்ற பெயர் மூத்த குழந்தைக்கு வைக்கப்பட்டது. குந்தியின் பந்துக்களான வஸுதேவர் முதலிய யாதவர்கள் பாண்டுவிற்கு மக்கட்பேறு கிடைத்ததைப்பற்றி மிக மகிழ்ந்து, அவர்களுடைய புரோகிதர்களை யனுப்பி, ஸகல ஸம்ஸ்காரங்களையும் செய்வித்தார்கள். பிறகு அக்குழந்தைகள் விதிப்படி வேதமோதி, சர்யாதியின் மூத்த மகனும் வில்வித்தையில் ஒப்பற்றவனுமான சுகனென்றவனிடத்தில் ஆயுதப் பயிற்சியைச் செய்தார்கள். யுதிஷ்டிரர் ஈட்டிச்சண்டையிலும், பீமன் கதாயுத்தத்திலும், அர்ச்சுனன் வில்வித்தையிலும், நகுல சகதேவர்கள் கத்திச்சண்டையிலும் நிகரற்ற திறமையை யடைந்தார்கள். அங்கே சிலகாலம் வசித்துக்கொண்டிருந்து, பாண்டு மஹாராஜன், ரிஷியின் சாபத்தால் காலகதியை யடைந்தபொழுது, அங்குள்ள ரிஷிகள் குந்தியையும் பஞ்சபாண்டவர்களையும் அழைத்துக்கொண்டு, பாண்டு அவனுடைய இளைய மனைவியான மாத்ரீ யென்றவர்களின் சரீரங்களையும் எடுத்துக்கொண்டு, ஹஸ்தின புரத்திற்கு வந்து, தங்களுடைய வரவை அரசனுக்குத் தெரிவித்தார்கள்.

உடனே பீஷ்மர், ஸோமதத்தன், திருதராஷ்டிரன், விதுரர், ஸத்யவதீ, அம்பாலிகை, காந்தாரி, துரியோதனன் முதலியவர்கள் அந்த ரிஷிகணங்களை எதிர்கொண்டழைத்து, விதிப்படி உபசரித்து, அவர்களுடைய உத்தரவால் பூமியில் உட்கார்ந்தார்கள். அப்பொழுது அவர்களுக்குள் வயஸாலும், தபஸாலும், ஞானத்தாலும், முதிர்ந்த ஓர் ரிஷி எழுந்து, "கௌரவ குலதிலகனுனபாண்டு, இல்லறத்தைவெறுத்து, சதச்சிருங்க மலைக்குச் சென்று, தபஸ்வியாய் வசித்துக்கொண் டிருந்தானல்லவா? அவனுக்குக் கடவுளின் கருணையால் தெய்வாம்சமான இந்த ஐந்து குழந்தைகளும் பிறந்தனர். அக்காலத்தில் இவர்களுடைய மஹிமையைப் பற்றி ஆகாசவாணியே கொண்டாடிற்று. இவர்களுக்கு விதிப்படி ஸகல ஸம்ஸ்காரங்களும் செய்யப்பட்டன. வேதாத்யயனம், அஸ்திர சஸ்திரப்பயிற்சி முதலிய ராஜ குமாரர்களுக்கேற்ற எல்லா வித்தைகளும் கற்பிக்கப்பட்டன. மஹாதேவனுடைய ஐந்து முகங்களைப்போலும், இவ்வுலகத்திற்கு ஆகாரமான ஐந்து பூதங்களைப்போலும், ஸகல ஜீவர்களுக்கும் உயிரான ஐந்து வாயுக்களைப்போலும், பல பராக்கிரமங்களில் நிகரற்று விளங்குகிருர்கள். இப்படியிருக்கையில், இன்றைக்குப் பதினேழாவது நாளில் பாண்டுமஹாராஜன் காலகதியை யடைந்து தேவலோகத்தில் இந்திரனேடு ஸுதர்மாவென்ற ஸபையில் வீற்றிருக்கிருன். அவனுடைய இரண்டாவது மனைவியான மாத்ரீ, அங்கும் அவனுக்குப் பணிவிடை செய்வதற்காக, அவனை விட்டுப் பிரியாமல் அவனுடன் சென்றுள். அவ்விருவருக்கும் இதற்குமேல் செய்யவேண்டிய காரியங்களை நீங்கள் செய்யலாம். உங்களுடைய வீட்டிற்கு வந்திருக்கும் இந்தக் குந்தியையும், புகழ் பெற்ற பாண்டவர்களையும், பிரியத்துடன் வரவேற்கக் கடவீர்களென்று" அவர்களிடத்தில் ஒப்புவித்து, எல்லோரும் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே அவ்விடத்திலிருந்து அந்த ரிஷிகள் மறைந்தார்கள்.

அப்பொழுது யுதிஷ்டிரருக்குப் பதினாறு வயது; பீமனுக்குப் பதினைந்து; அர்ச்சுனனுக்குப் பதினான்கு; நகுலஸஹதேவர்களுக்கு பதின்மூன்று; கிருஷ்ணபரமாத்ம அர்ச்சுனனுக்கு மூன்று மாதம் மூத்தவர்; பலராமர் கிருஷ்ணனுக்கு மூன்று மாதம் பெரியவர்.

பிறகு திருதராஷ்டிரன் பாண்டுவிற்கும் மாத்ரிக்கும் ஸகல உத்தரக்கிரியைகளையும் விதிப்படி செய்வித்து, பாண்டவர்களைத் தன் அரண்மனையிலேயே வைத்து வளர்த்து வந்தான். அப்பொழுதே பீமன் வேகத்திலும் பலத்திலும் போஜனத்திலும் துரியோதனாதியரை மிஞ்சினான். அதைக்கண்டு அவர்கள் பொறாமைகொண்டு, அவனைக் கொல்ல விரும்பிக், கங்கையில் தள்ளினார்கள்; பாம்புகளைக் கொண்டு கடிக்கச்செய்தார்கள்; விஷங்கலந்த தின்பண்டங்களைக் கொடுத்தார்கள்; சூலங்கள் ஜலத்தில் நாட்டப்பட்ட விடத்தில் அவனைத் தள்ளினார்கள். இவ்விதமான ஆபத்துகளிலிருந்து பீமஸேனனை விதுரர் தன் யுக்திகளாலும் உபாயங்களாலும் தப்புவித்தார். பிறகு பாண்டவர்களும் கௌரவர்களும் கிருபாசாரியரிடத்திலும் துரோணரிடத்திலும் தனுர்வேதத்தைக் கற்க ஒப்புவிக்கப்பட்டார்கள். அவர்களுடைய திறமையைப் பரீக்ஷிப்பதற்காக எல்லோரும் கூடியிருந்தபொழுது கர்ணன் அங்கே வந்து, துர்யோதனனால் நன்குமதிக்கப்பெற்று, அங்க தேசாதிபதியாய் அபிஷேகஞ் செய்யப்பட்டான்.

கௌரவ புத்திரர்களுக்குள் யுதிஷ்டிரர் ராஜ்யத்தை யாளுவதில் திறமையுள்ளவரென்றறிந்து, அவருக்கு யௌவராஜ்ய பட்டாபிஷேகஞ் செய்வதற்காக திருதராஷ்டிரன் மந்திரிகளுடன் ஆலோசனைசெய்தான். அவனுடைய புத்திரர்கள் எவ்வளவு தடுத்தும் கேட்காமல், ஒரு வருஷமானவுடன் யுதிஷ்டிரரை இளவரசனாய் முடிசூட்டினான். அவர் வணக்கத்தாலும் ஒழுக்கத்தாலும் அமைதியாலும் பாண்டுமஹாராஜனுடைய கீர்த்தியை மறைத்துவிட்டார்.

இப்படியிருக்கையில், நகரத்து ஜனங்கள் பாண்டவர்களின் உத்தமகுணங்களைப்பற்றி ஸபைகளிலும் நாற்சந்திகளிலும் கூட்டங்கூட்டமாய்ப் பேசிக்கொண்டிருந்தார்கள். "குருகுலக்கிழவரான பீஷ்மர் நியாயமாய் இந்த ராஜ்யத்திற்கு அரசன்; இதை வேண்டாமென்று அவர் ஆதியிலே மறுத்துவிட்டபடியால், இப்பொழுது ஒருக்காலும் விரும்பமாட்டார். திருதராஷ்டிரன் மூத்தவனானாலும், புறக்கண்ணில்லாதவனாகையால், அரசிற்குத் தகுந்தவனல்ல; பாண்டுவே ராஜ்யத்தை ஆண்டுவந்தான். அவன் இறந்தவுடன், கௌரவ ராஜகுமாரர்களில் மூத்தவனான யுதிஷ்டிரனுக்கே பட்டம் கிடைக்கவேண்டும். ஸத்யம், தயை, பொறுமை, ஞானம், நல்லொழுக்கம், பராக்கிரமம் முதலிய உத்தம ராஜலக்ஷணங்கள் அவனிடத்தில் விளங்குகின்றன. நம்மெல்லோருக்கும் இவ்வுலகத்திலும் வானுலகத்திலும் நிகரற்ற க்ஷேமத்தை அவனே செய்விப்பானெ"ன்றார்கள். அதைக் கேட்ட துரியோதனன் மனக்கொதிப்புற்றுப், பொறாமையால் வருந்தி, திருதராஷ்டிரனிடத்தில் சென்று, பலவித மாய வார்த்தைகளால் அவனுடைய மனதைக் கலைத்து, தனக்குட்படுத்திக் கொண்டான். மேலும், பட்டங்களையும் பரிசுகளையும் திரவ்யத்தையும் ஏராளமாய்க் கொடுத்து, மந்திரிகளையும் ராஜ்ய உத்தியோகஸ்தர்களையும் தன் தம்பிமார்களையும் வசப்படுத்திக் கொண்டான். ஆனால், அவர்களில் யுயுத்ஸு வென்றவனும், பீஷ்மரும், துரோணரும் கிருபரும், விதுரரும் அவனுடைய கொடுஞ் செயல்களை வெறுத்து, அவனைப் பலதடவை கண்டித்து வந்தார்கள்.

அந்த துரியோதன பக்ஷத்தைச் சேர்ந்தவர்கள் பாண்டவர்களிடத்தில் வந்து, வாரணாவதமென்ற ஸ்தலத்தின் அழகையும் வளப்பத்தையும் எடுத்து வர்ணித்து, அங்கே பாண்டவர்கள் சிலகாலம் வஸிக்கவேண்டுமென்று வற்புறுத்தினார்கள். மஹாபுத்திமானான யுதிஷ்டிரர், நடந்த விஷயங்கள் யாவற்றையும் விதுரரால் அறிந்து, திருதராஷ்டிரன் தங்களுக்கு விரோதமாயும் துரியோதனாதியருக்கு அனுகூலமாயும் இருந்ததைக் கண்டு, அதற்கு ஒப்புக்கொண்டு, வாரணாவதத்திற்குக் குந்தியையும் தன் சகோதரர்களையும் அழைத்துக்கொண்டு சென்றார்.

அப்பொழுது அவரை வழியனுப்ப வந்த விதுரர், தன் மனதிலிருந்த கருத்தை யுதிஷ்டிரருக்குத் தெரிவிக்க விரும்பிச், சாதுர்யமான வார்த்தைகளால், பிறர் அறியாவண்ணம் மறைவாகச் சொன்னார். "ராஜநீதி சாஸ்திரத்தை

அனுஸரித்து, யுக்திகளைச் செய்துகொண்டிருக்கும் சத்துருக்களின் சூழ்ச்சியை அறிந்தவன், அந்த அபாயத்தைத் தாண்டக்கூடிய உபாயத்தைத் தேடவேண்டும். இரும்பால் செய்யப்படாமல் அங்கங்களைச் சிதைக்கக்கூடிய கூர்மையான ஆயுதம் இன்னதென்றறிந்து, அதைத் தடுக்கும் வழியை அறிகிறவனே பகைவர்களை வெல்வான். பெரு நெருப்பு, காடுகளை அழிக்கும்; குளிரைப் போக்கும். ஆனால், பெருங்காட்டில் வளைகளில் பதுங்கியிருக்கும் எலி முதலிய ஜந்துக்களை எரிக்க முடியாது. கண்ணில்லாதவன் வழியை அறிய மாட்டான். கிழக்கு மேற்கென்ற திசைகளை அறியான். தைர்யமுள்ளவனுக்கே ஐச்வர்யம் கிடைக்கும். எதிரி உபயோகிக்கும் ஆயுதத்தைத் தான் முன்பே கைக்கொண்டு, அதனால் பகைவரைக் கொல்லுகிறவனே வல்லவன். முள்ளம்பன்றியைப்போல் சுரங்கத்தில் புகுந்துகொண்டு, தீ முதலிய விபத்துகளிலிருந்து விடுபடுவான். நடப்பவனுக்கே பகலிலும் இரவிலும் வழிகள் தெரியும். ஐம்புலன்களையும் மனதையும் அடக்கி எப்பொழுதும் ஜாக்கிரதையா யிருப்பவனை எதிரிகள் இரவிலும் பகலிலும் நகரத்திலும் காட்டிலும் ஏமாற்ற முடியாது. திசையறிவதற்கு நக்ஷத்திரங்கள் போதாதா'' வென்று மற்றவருக்குத் தெரியாத மிலேச்ச பாஷையில் சொன்னார். யுதிஷ்டிரர் அதை நன்றாய்க் கவனித்துக் கேட்டு "தெரிந்து கொண்டேனெ"ன்று பதிலளித்தார். பிறகு, குந்தி வெகு நுட்பமான புத்தியுடையவளாகையால், இவை யெல்லாவற்றையும் கவனித்துக்கொண்டிருந்து, யுதிஷ்டிரரிடத்தில் வந்து, "குழந்தாய்! விதுரர் ஜனங்களுக்கு நடுவில் சில சங்கதிகளை உன்னிடத்தில் சொன்னார். நீயும் அதை அங்கீகரித்து மறுமொழி சொன்னாய், அதென்ன'' என்று கேட்டாள். அதற்கு அவர் "அம்மணீ! நமக்கு விஷத்தாலும் தீயாலும் கெடுதி நேருமென்றும், தூங்காமல் விழித்திருந்து அவைகளிலிருந்து தப்பவேண்டுமென்றும், சுவர்களை நன்றாய்க் கவனித்துப் பார்க்க வேண்டுமென்றும், சுரங்கம் நமக்கு உபயோகப்படுமென்றும், சத்துருக்களின் உபாயத்தையே நாம் அவர்களிடத்தில் முந்தி பிரயோகிக்க வேண்டுமென்றும், நக்ஷத்திரங்களின் நடையால் இரவில் வழிகளை அறிந்து காடுகளில் செல்ல வேண்டுமென்றும் ஜாடையாகச் சொன்னாரெ''ன்றார்.

இப்படியிருக்க, இதற்கு முன்பே துரியோதனன் புரோசனனென்ற மந்திரியை அழைத்துப், "பாண்டவர்கள் வாரணாவதத்தில் வஸிக்கப் போகிறார்கள். நீ இப்பொழுதே அங்கே போய், ஒன்றிற்கொன்று எதிராக நாலு ஸபாமண்டபங்களையும் அதைச் சுற்றிப் பிராகாரத்தையும் அமைக்கக்கடவாய். அவை மனதைக் கவரக்கூடியவையாயும் பார்ப்பவருக்கு அவைகளின் ரஹஸ்யம் தெரியாமலு மிருக்கவேண்டும். சணல், குங்கிலியம், விழல், மெழுகு, நெய், எண்ணெய், கொழுப்பு, அரக்கு முதலிய சீக்கிரமாய்த் தீப்பிடிக்கத்தக்க சரக்குகள் யாவற்றையும் சேர்த்துச், சுவர்களையும், கூரைகளையும், தூண்களையும், உத்தரம் முதலிய மரங்களையும் அந்த மாளிகையில் அமைக்கக்கடவாய். பாண்டவர்களும் மற்ற யாவரும் அவைகளை எவ்விதமாய்ப் பரிசோதித்துப் பார்த்தாலும் அவை தீப்பிடிக்கக் கூடியவையென்று கண்டுபிடிக்க முடியாம லிருக்கவேண்டும். பாண்டவர்கள் அங்கே ஒரு நிமிஷங்கூட ஓய்வில்லாமல், விருந்துகளாலும் விளையாட்டுகளாலும் உற்சவங்களாலும் பந்தயங்களாலும் நாடகங்களாலும் பாட்டுகளாலும் ஆட்டங்களாலும் காலத்தைக் கழிக்கும்படி செய். அவர்கள் ஐயமற்று அக்கட்டிடங்களில் தங்கியிருக்கையில், இரவில் நீ அந்த மாளிகையின் நான்கு புறத்திலும் தீ வைத்துவிட்டு, "பாண்டவர்கள் அஜாக்ரதையால் தங்களுடைய வீட்டிலேயே எரிக்கப்பட்டார்களெ''ன்று அந்நகரத்தார் நம்பும்படி பலரால் சொல்லுவிக்கவேண்டுமெ''ன்று ஆக்ஞாபித்தான்.

புரோசனன் அப்படியே செய்து, பாண்டவர்களை விசேஷ அன்புடனும் மரியாதையுடனும் ஆரவாரத்துடனும் எதிர்கொண்டழைத்து, அவ்வரக்கு மாளிகைகளில் தங்கச் செய்தான். யுதிஷ்டிரர் அதை நன்றாய்க் கவனித்துப்பார்த்து அதில் உபயோகப்பட்டிருந்த சரக்குகளின் நாற்றத்தை முகர்ந்து, பீமனிடத்தில் அதின் ரஹஸ்யத்தை ஜாடையாய்த் தெரிவித்தார். அதைக் கேட்டு, பீமன் கோபத்தால் பதறி, "இந்த க்ஷணமே இங்கிருந்து வெளியில் போ

வோம். இந்தத் துஷ்டர்களின் உபத்திரவத்தை இனி பொறுக்கமுடியாது. கௌரவ வம்சத்தையே வேரறுத்து விடுகிறேனெ" ன்று துடித்தான். யுதிஷ்டிரர் அவனை அடக்கி "நாம் இங்கிருந்தே பகைவரின் சூழ்ச்சிகளை யறிந்து அவைகளைத் தடுப்பது நலம். நாம் சந்தேகப்பட்டோமென்று புரோசனனுக்குத் தெரிந்தால், அவன் பலாத்காரமாய் நம்மைக் கொளுத்திவிடுவான். உலகநிந்தைக்கும் பாவத்திற்கும் பயப்படாத இந்தக் கொடியவன், தனக்கு உதவியாய் எண்ணிறந்த ஸைன்யங்களையும் இங்கே கொண்டுவந்திருக்கிறான். பக்கபலமில்லாத நாம் இவர்களுடனே இப்பொழுது வெளிப்படையாய் விரோதிப்பது நலமன்று. நாம் கொல்லப்பட்டால் பீஷ்ம துரோண கிருப விதுராதியர் என்ன செய்யமுடியும்? நாம் இங்கிருந்து தப்பி ஓடினாலும், தூதனைக் கொண்டு நம்மைத் தொடர்ந்து, எப்படியாவது கொன்றுவிடுவான். அவனுக்கு ராஜ்யமும், பொக்கிஷமும், ஸைன்யமும், நண்பர்களுமுண்டு. நமக்கோ இவை ஒன்றுமில்லை. ஆகையால் இவர்களை ஏமாற்றி இங்கிருந்து வெளிப்பட்டு, நம்மைத் தொடராவண்ணம் உபாயஞ்செய்து, ஒருவருக்கும் தெரியாமல் சில காலம் வசிக்கவேண்டும். விதுரருடைய யுக்தியும் இதே. எல்லாவற்றிற்கும் முதலாக நாம் ஓர்சுரங்கத்தைச் செய்விப்போ"மென்றார்.

இதற்குள் விதுரரால் அனுப்பப்பட்ட ஓர் சுரங்கவேலைக்காரன் யுதிஷ்டிரரிடத்தில் ரஹஸ்யமாய் வந்து, தான் விதுரரால் அனுப்பப்பட்டதற்குச் சில அடையாளங்களைத் தெரிவித்து, "கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசி ராத்திரியில் புரோசனன் இம்மாளிகைக்குத் தீவைக்கப் போகிறான். நீங்கள் இங்கிருந்து அதற்கு முன்பே வெளிப்படுவதற்காக ஓர் சுரங்கத்தை வெட்டுவிக்கவேண்டுமென்று விதுரர் எனக்குக் கட்டளையிட்டிருக்கிறா"ரென்றான். பாண்டவர்கள் அப்படியே அவனுக்கு அனுமதி கொடுத்தார்கள். அதிசீக்கிரத்தில் ஒருவருக்கும் தெரியாமல் சுரங்கம் வெகு சாதுர்யமாய்க் கட்டி முடிக்கப்பட்டது.

பிழை திருத்தம்.—சென்றமாதச் சஞ்சிகையில், 34-ம் பக்கத்தில் முதற் பகுதியின் தலையிலுள்ள முதல் நான்கு வரிகளை அப்பகுதியின் கடைசி வரியின் தொடர்ச்சியாக வாசிக்கவும்.

தமிழ் நூல்கள்

TAMIL WORKS

[ஸ்ரீமான் வ. சு. செங்கல்வுராய பிள்ளை அவர்கள், எம். ஏ.]

கலாசாலையிற் படித்த நாள்களில் தமிழையும் தமிழ் நூல்களையும் கவனியாதிருந்து இப்போது அவைதம் பெருமையை ஆன்றோர் சொல்லக்கேட்டுத் தமிழகத்தே பிறந்துந் தாய்மொழியை இந்நாள் காறுந் துறந்தோமே என ஏக்கமுற்றுத் தமிழ் நூல்களை இனியேனுங் கற்றுச் சுகிப்போம் என்னுங் கருத்துக் கொண்டவர்கள் நம்மவருட் பலருளர். அவ்வாறு கருத்து வந்தபின், தமிழில் எந்நூல் நன்னூல்? முதலிற் படிக்கத் தக்கன யாவை! முக்கியமாய்ப் படிக்கத்தக்கன யாவை? எளிய நடையில் உள்ள நூல்கள் எவை? இலக்கணம் பிறழாது உயர்ந்த செந்தமிழ் நடையில் உள்ள நூல்கள் எவை? நல்ல வசன நூல்களெவை? நல்ல செய்யுணடை நூல்களெவை? உயர்ந்த கருத்துக்களமைந்த நூல்கள் எவை? எனப் பலவித ஐயங்கள் தோன்ற அவை தீர்ப்பார் யாரோ எனத் தேடவேண்டியிருக்கிறது. எமக்குத் தெரிந்த அளவு ஷை வினாக்களுக்கு விடை தந்து தமிழில் அவாவுள்ளோருக்கு உதவுமாறு கீழே காட்டுவோம்.

முதல் முதல் ஏதேனும் ஒரு இலக்கண நூலை ஒருவாறு படித்த பின்பு இலக்கியம் படித்தல் நன்று. பவணந்தியார் நன்னூல் என்னும் இலக்கண நூல் (ஆறுமுக நாவலர் உரைப் பதிப்பு) இதற்குத் தக்கதாகும். இந்நூல் ஒன்றைக் கசடறக் கற்றால் அதுவே போதும். பின்னர், வசன நூல்களுள் நல்லநடை, எளிய நடை, செந்தமிழ் நடை இவை வாய்ந்தன— தாண்டவராய முதலியார் எழுதிய "பஞ்சதந்திரம்", ஆறுமுக நாவலர் எழுதியுள்ள "பெரிய புராண வசனம்", "திருவிளையாடற் புராண வசனம்" முதலிய. இவை அவசியம் படிக்கத்தக்கன. செய்யுணூல்களுள் முக்கியமாய்ப் படிக்கத்தக்கன திருக்குறளும், நாலடியாரும். விசேட கருத்துக்களைச் சுருக்கிச் சிறிய பாக்களுள் இந்நூல்களுள் அமைத்துள்ளவாறு அமைப்பது அருமை அருமை! திருக்குறளின் பெருமையை உலகமெல்லாம் கொண்

டாடும். கதைகள் அமைந்த நூல்களிற் சிறந்தனவாய்ப் படிக்கத்தக்கன கம்பராமாயணம், கந்தபுராணம், பெரியபுராணம், வில்லி பாரதம், நள வெண்பா—என்னும் : இவ்வைந்து நூல்களும்; இவை பஞ்ச ரத்தினங்களாம். இவை தமை ஆராய்ந்து படித்தால் தமிழின் அருமையும் தமிழ்க் கவிஞர்களின் ஆற்றலும் மிக விசேடமாக விளங்கும்.

கம்பராமாயணத்தில் கற்பனை விசேடங்களும், பொருள் நுணுக்கங்களும் ஆராய ஆராய மணலூற்றுப் போல வெளிவரும். கச்சியப்ப சிவாசாரியர் எழுதிய கந்த புராணம் பொருட் சிறப்போடு நடைச் சிறப்பும் பொது ளிய நூல். இலக்கண இலக்கிய பிரயோகங் களுக்கு மேற்கோளாக எடுத்துக் காட்டத் தக்க பெருமை வாய்ந்தது. நடை எளிதாய்ப் பொருள் புலப்படக்கூடியது. பெரிய புராணமும் வில்லிபாரதமும் அவ்வாறே சிறந்த நடை வாய்ந்தன. புகழேந்தியார் நளவெண்பா சிறந்த செந்தமிழ் நடையில் எழுதப்பட்ட நூல்.வெண்பா வகையில் அவ்வளவு சுலபமான நடையில் தெளிவுபடப் பாடுவது மிகக் கஷ்டமானது. இவை கற்றுப் பின்னர் தமிழ் நூல்கள் படிக்க விரும்பினல் சமயநூல்களில் விசேட வாக்குள்ள நூல்கள் ஏராளமாய் உள. சைவ மதத்தாருக்குத் திருவாசகம் ஒன்றே போதும். வைணவ சமயிகட்குப் பிள்ளைப் பெருமாளையங்கார் வாக்கு ஒன்றே போதும். சைவ புராணங்கள் படிக்க விரும்புவோர் நடைச் சிறப்பு, பொருட் சிறப்பு நிரம்பியுள்ளனவாக விசேடமாகப் பாராட்டப்படும் பின்வரும் ஒன்பது புராணங்களைப் படிக்கலாம்.

1. கந்தபுராணம் (கச்சியப்பசிவாசாரியர்)
2. பெரிய புராணம் (சேக்கிழார்)
மேற்சொல்லினேம்.
3. காஞ்சிப் புராணம் (சிவஞான யோகிகள்)
4. காளத்திப் புராணம் (சிவப்பிரகாச சுவாமிகள் முதலிய மூவர்)
5. திருவிளையாடற் புராணம் (பரஞ்சோதி முனிவர்)
6. சேதுபுராணம் (நிரம்ப அழகிய தேசிகர்)
7. தணிகைப் புராணம் (கச்சியப்ப முனிவர்)
8. திரு ஆனைக்காப் புராணம் ஷை
9. திருக்குற்றலத் தலபுராணம் (திரிகூடராசப்ப கவிராயர்)

தமிழில் பழைய நூல்களைக் கற்க விரும்புவோர், இலக்கணத்துக்குத் தொல்காப்பியமும் இலக்கியத்துக்குப் புறநானூறு பத்துப்பாட்டு சிலப்பதிகாரம், சிந்தாமணி, கலித்தொகை என்னும் நூல்களையும் படிக்கலாம். தமிழ் நூல்வகைகளுள், ஒவ்வொரு வகைக்கு ஒன்ருக் தக்க நூல் படிக்க விரும்பினல் பின்வரும் நூல்களைப் படிக்கலாம்.

நூல்வகை.		படிக்கத்தக்க நூல்.
1. கோவை	...	திருக்கோவையார்
2. உலா	...	கைலாய ஞானவுலா
3. பிள்ளைத் தமிழ்		திருவிரிஞ்சை முருகன் பிள்ளைத் தமிழ்
4. கலம்பகம்	...	அருணைக் கலம்பகம்
5. அந்தாதி	...	கந்தரந்தாதி
6. குறம்	...	மீனுக்ஷியம்மை குறம்
7. மடல்	...	வருண குலாதித்தன் மடல்
8. பரணி	...	கலிங்கத்துப் பரணி
9. சந்த நூல்	...	திருப்புகழ்
10. மாலை	...	நால்வர் நான்மணி மாலை
11. சதகம்	...	அறப்பளீசுர சதகம்
12. நாடகம்	...	கலாவதி.

இச்சங்கடங்கள் வேண்டாம். நம்மைப் படைத்த நாதனுந் தேவனும்,மூல காரணனும் முதல்வனை ஓதி, இம்மை மறுமை இடுக்கணைத் தொலைத்துப் பிறவிக் கடலெனும் பீழையை முடித்துக், கடைத்தேறுவோமெனுங் கருத்துக்கொண்ட திண்மை யாளர்க்குத் திப்பிய நூல்களெவையோ என்னில் அவை தமைக் கூறுவோம். சைவர் தமக்குத் திருவாசகமுடன் தேவாரமாகும்; சங்கபாணியனும் நெடியோனடியாருக்கு நாலாயிரப் பிரபந்தமும் திருவாய்மொழியும் பெருவாய்மையதாம். கூர்வேல்முருகன் அடியார் தமக்குக் கருப்பவ மறுக்குந் திருப்புகழ் ஒன்றுமே.

வியாஸ விதானம்.—இது மயிலாப்பூர் பி. எஸ். ஹைஸ்கூல் முதல் உதவி போதகரான மிஸ்டர் ஆ.வீ. கஸ்தூரி ரங்கய்யரவர்கள் செய்தது. வர்ணனை வியாஸங்கள், கதா வியாஸங்கள், விளக்க வியாசங்கள், ஆராய்ச்சி வியாஸங்கள், மொழி பெயர்ப்பு விளக்கம் இவைகள் கொண்டது. ராவ் பஹதூர் மிஸ்டர் K. B ராமனுதய்யா எம். ஏ., பி. எல்., எல். டி., அவர்கள முகவுரையுடன் கூடியது. துரைத்தனத்தார் அங்கீகரித்தது. விலை அணு. 12.

நட்பு

FRIENDSHIP

[ஸ்ரீமான் டி. எஸ். ராஜகோபால் அவர்கள்.]

"முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்
தகநக நட்பது நட்பு."

தேனீக்களின் ரீங்காரம் சப்திக்க, மரக்கிளைகளில் குயிலினங்கள் மணந்து ரமிக்க, மயில்கள் ஆடிக்களிக்க, இதர புள்ளினங்கள் கொஞ்சிக் குலாவி ஆரவாரிக்க, பெருந்தன்மையும் கம்பீரத் தோற்றமுமுடைய மிருகேந்திரன் உலாவி வர, கபடமற்ற மான் கூட்டங்கள் பசும் புற்றரையில் துள்ளிக் குதித்தோட, நானாவித புஷ்பச் செடிகள் அரும்பிப் பூத்து மலர, மந்தமாருதம் அவைகளின் நறுமணத்தைக் கவர்ந்து எங்கும் வீச, இத்தகைய அழகும் அமைதியும் உற்சாகமும் நாலா பக்கங்களிலும் பரவி நிற்கப் பெற்றதான ஓர் இனிய சோலையில், மாலைப் பொழுதில், பூர்ண சந்திரன் உதயமாகி, இப்பிரபஞ்சாதிகளின் நேர்த்தியைப் பார்த்துக் களிப்புற எண்ணி, எங்கும் அளவளாவி வியாபித்து நிற்கும் ஆகாய வீதியை அதிவேகமாய்க் கடந்து செல்ல, தாமரைக் குவளை செவ்வல்லி மலர்களையும் அன்னப் பறவைகள் நீந்தி விளையாடுவதால் உண்டாகும் சிற்றலைகளையும், பற்பல மீனினங்களையும் நிரம்பப் பெற்றதான ஓர் ரமணீயமான தடாகக் கரையில் அமர்ந்து, இவ்வுலகாதிகளைப் பற்றி ஆலோசித்துக்கொண் டிருக்கையில் சர்வத்திற்கும் முதன்மையாக நின்று விளங்குவதான அன்பு வெள்ளம் எம் இதயத்துள் பாய்ந்து, மனத்தைத் தெளிவித்து, ஆனந்தக் கடலி லழுத்தவே, அவ்வன்பின் மாண்பைப்பற்றி மேன்மேலும் ஆராய்ந்தறியப் புகுந்த பொழுது, பின் வருபவைகள் எம் மனத்தில் தோன்றின.

ஒன்றின் மேலொன்றாக அநேகச் சக்கரங்கள் மனிதனாகிய பொதுமத்தியைச் சுற்றிலும் வளைந்தோடி யிருக்கின்றன. அம்மத்தியை யடுத்துள்ள சக்கரமே உறவினர்; அதற் கடுத்தது அயலார்; இதற்கு மேலானது மன்பதை; இதற்கும் வெளியிலுள்ளவை இப்பிரபஞ்சமும், பிரபஞ்சகர்த்தாவும். சிலந்தி ஓர் பெரிய வலையை யமைத்து, அதன் மத்தியிலிருந்து வருகையில் சிற்சில சமயங்களில் அச்சிலந்தியின் அவயவங்களிலேதேனு மொன்று அவ்வலையின் ஏதாவது ஒரு பாகத்தில் படவே, எங்ஙனம் அவ்வலை முழுவதும் அசைந்து ஆடுகின்றதோ, அங்ஙனமே மனிதனாகிய பொதுமத்தியில் நிகழ்பவைகளெல்லாம் எல்லாப்பக்கங்களிலும் உடனே பரவி, அவைகளி லெல்லாம் அந்நிகழ்ச்சிகளுக்குத் தக்கவாறு மாறுதல்கள் உண்டாகின்றன. அம்மத்தியினின்று நற்சிந்தனைகளும், நற்செயற்களும் வெளித் தோன்றுமானால், அவைகளின் நற்பயன் மேற்கூறிய சக்கரங்களி லெல்லாம் ஊடுருவிச் சென்று பரிணமிக்கின்றது.

பல்லாயிரம் மைல்களுக்கு அப்பாலுள்ள நக்ஷத்திரங்களையும், சந்திர சூரியர்களையும் உற்றுநோக்கி, அவைகளின் மெய்க்குணாதிசயங்களைக் கண்டுபிடித்து விட்டான்; நிலம், நீர், நெருப்பு, காற்று முதலானவைகளைத் தன் ஆதீனத்துள் அடக்கிவிட்டான்; மின்சாரத்தின் இருப்பையும், உபயோகங்களையும் பார்த்தறிந்து அதைத் தனக்கு அனுகூலமான பொருளாக மாற்றிவிட்டான்; தன்னிஷ்டப்படி செடிகள் புஷ்பிக்கும் படிக்கும், மிருகங்கள் தன் ஆக்ஞைக்குக் கீழ்ப்படிந்து நடக்கும்படிக்கும் செய்துவிட்டான். ஆனால், தன்னிடமுள்ள மன ஹிருதயங்களின் அமைப்பையும் போக்கையும், நற்பயன்களையும் உற்றுணர்ந்தறிந்து, அவைகளைச் செலுத்தவேண்டியவற்றில் செலுத்தி, அகற்ற வேண்டியதினின்று அகற்றாது இருந்து வருதல் வியப்பினும் வியப்பே! மிக்க நேர்த்தியான ரோஜா மலர்களை வளர்ப்பவன் அதற்கு மேலான தூய்மை, நேர்மை, அருள் என்றவைகளை வளர்க்க முடியாது தயங்குகிறான்! காடு, மலை, வனம், கடல் முதலியவைகளை எளிதில் கடப்பதற்குரிய கருவிகளைக்கண்டுபிடிப்பதும், ஸ்தாவர ஜங்கமங்களின் பிரயோசனத்தைத் தெரிந்து கொள்ளுதலும், அரிய பெரிய விஷயங்களைக் கற்றறிந்து மேலேற வேண்டுமென்ற விருப்பமும் சிலாகிக்கத் தக்கவையே; ஆனால் சர்வத்திற்கு மேலானதாக விளங்கும் நம்முடைய அந்தக்கரணத்தைப்பற்றி அறியாம லிருப்பது துக்கிக்கத் தக்கதாகும். சுயபோக சிந்தனையையும், பரோபகார குணத்தையும் பகுத்துணர்ந்து முன்னதை விலக்கி, பின்னதை அபிவிருத்தி செய்தலும்; சண்டை சச்சரவுகளை

கழுதைக்கு வாழ்க்கைப்பட்டு உதைக்கு அஞ்சலாயா?

யடக்கி, எங்கும் சமாதானமே வியாபித்து நிற்கச்செய்தலும்; நம்மைச் சதாகாலமும் தாக்கி நம் மனத்தைக் கலக்கும் ஆசைகளைப் போக்கி மனவமைதியையும், தன்னம்பிக்கையையும் இழக்காது, அவைகளை மேன்மேல் விருத்தி செய்தலும், இன்னு மிவைபோன்ற இதர நற்குண நடத்தைகளைக் கைக்கொண்டு ஒழுகுதலுமே ஒவ்வொருவனுடைய முழுமுதற் கடமையாகும்.

பொய்யும் - கபடமும் - பொறாமையும் - அகங்காரமும் - கட்காமக் குரோதாதிகளும் மேம்படவே, மனிதன் தன் தெய்வத் தன்மையை யிழந்து, ஆறாத் துயரக்கடலி லழுந்தி அவதிப் படுகிறான். கல்வியறிவும், நற்சகவாசமு மில்லாமையே அத்தீமைகளுக்கு முக்கிய காரணம். அறிவையும், அன்பையும், திட நம்பிக்கையையும் ஊட்டுவித்து, கீழோரிட மிருக்கும் நன்மைகளை வெளிக் கொணர்ந்து, அவர்களுடைய கயமையை நீக்கி, அவர்களிடமுள்ள நன்மையை விருத்தி செய்பவனன்றோ மெய்ஞ்ஞானி யெனவும், மாந்தரின் மிக்க மேலான நண்பனெனவும் அழைக்கப்பட்டு வருபவன். ஆழ்ந்து பரந்த கல்வியறிவையும், மெய்யன்பையும் மிகுதியாக உடையவனே இதற்கு ஓர் மேல்வரிச் சட்டமாக நின்று விளங்கக் கூடியவன்.

மன ஹிருதயங்களின் தூய்மைக்கும், கிளர்ச்சிக்கும் மூல காரணமாவது அன்பே. இவ்வுலக வாழ்க்கையின் இன்னல்களைக் குறைத்து பேராசை, கோபம், செறுக்கு, வஞ்சகம் முதலானவைகளால் மூடப்பட்ட மனத்தைத் தெளிவித்து, நல்வழியிற் புகுத்தி யாவர்க்கும் இன்பம் பயப்பது அன்பே யன்றோ? பிறவியாகிய பெருங் கருங்கடலி லகப்பட்டு, நல்வினை, தீவினைகளாகிய ஈரலைகளால் அலைக்கப்பட்டு, அவித்தையாகிய நீர்ப் பாம்பினால் கடியுண்டு ஆசையாகிய விஷம் பெருகி, தேகம், மனம், ஹிருதயங்க ளெல்லாவற்றிலும் புகுந்து மயக்கி, செற்றம், ஆணவம், கொலை, களவு, போர், கட்காமங்களாகிய சண்ட மாருதத்தினால் தாக்கப்பட்டு, துயரமாகிய பாறையில் மோதி, தயங்கித் தளர்ந்து அவதிப்படும் புன்மாக்களை அக்கொடுமைகளின்று விடுவித்து நன்மை எய்துதற்கு உதவுவது ஞானமும், அறமுமன்றோ? ஞானத்தின் பயனும், அறமாதியவைகளுக் கெல்லாம் சிரோபூஷணமுமாவது அன்பன்றோ? இத்தகைய சிறப்பு வாய்க்கப்பெற்ற அன்பின் வெளித்தோற்றமே நட்பு எனப்படுவது.

இம்மைப் போகங்களுக்கும், அழிவில்லாத வீடு பேரின்பங்களுக்கும் துணைக் காரணமாவது நட்பே. கால இடங்களின் வேற்றுமையால் சிதறிக் கிடக்கும் மாந்தரைப் பிணைத்து, ஒருவரை யொருவர் நேசிக்கச் செய்து, ஒருவர்க் கொருவர் பேருதவியாக நிற்கச் செய்து, நற்குண நன்னடத்தைகளை உணர்த்தி, மேன்மேல் வளர்ப்பது நட்பேயாகும். இந்நட்பின் முதிர்ச்சிக்கும், நற்பயன்களுக்கும் இன்றியமையாத சாதனம் அன்பேயென முன்கூறினோம். உண்மை நேசமும், பரோபகார சிந்தனையுமே அன்பின் முக்கிய லக்ஷணங்களாவன. இன்றிருந்து நாளையழியும் பொருள்களை இச்சித்துச் சிநேகித்தல் பாசம்; எந்நாளும் நீடித்து நிலை நிற்கக் கூடியதான பெரும் பொருள்களை விரும்பி, அவைகளைப் பெற்று இனித்திருக்கக் கூடிப் பழகி வருதலே நேசம், அல்லது நட்பின் மெய்யியல்பு. உணர்ச்சியினின்று உண்டாகும் சேர்க்கையானது தேய்ந்து மறையுங் குணத்தை உடையது; ஆனால், உள்ளத்தினால் உய்த்துணர்ந் தறிவதிலிருந்து உண்டாகும் கேண்மையோ எப்பொழுதும் உறுதியுடன் நிற்கவல்லது. பாசங்களிலிருந்து உண்டாகும் சிநேகம், அப்பாசங்கள் கீழடையவே, தானே குறையும்; ஆனால், கல்வி வளப்பத்தினின்றும் அன்பு மிகுதியினின்றும் உண்டாகும் நட்பு, நாட்குநாள் பெருகி மேன்மேலோங்கி வளரும்.

தன் அயலார்க்கு நேரிடும் இடையூறு இடுக்கண்களையும், கஷ்டநஷ்டங்களையும், தனக்கே சம்பவித்துவிட்டதுபோல் பாவித்து, நன்மையை மேற்கொண்டு, தீமையைத் தள்ளி, அத்துர்ச் சம்பவங்களை யகற்றி, மனவமைதியும், சந்தோஷமுமே யாவரிடமும்குடிகொண்டிருக்கும்படி ஊக்கத்துடன் உழைத்து வருபவனே சகலராலும் மதிக்கப்படும் நண்பன். நம் மனப்போக்கை நன்கு கவனித்தறிந்து, அதற்குத் தக்கபடி நடப்பவனே நம்முடைய மெய்யன்பன். உயர்ந்த நோக்கங்களையும், பரஸ்பரவன்பையும், பரோபகாரத்தின் சிறப்பையும், அரிய பெரிய ஞான அற விஷயங்களைத் தெளி

வுறத் தெரிவித்து, மறமலிந்த இவ்வுலக வாழ்க்கையை இனிது நடத்த அனுகூலிப்பவனன்றே நம்முடைய அருமைச் சிநேகிதன். சதா காலமும் சுயபோக சிந்தனைகளையே உடைத்தாய், உண்மையும், நன்மையுமில்லா வார்த்தைகளைப் பேசி, பயனற்ற காரியங்களைச் செய்பவர்க்குள் உண்டாகும் பழக்கம் வெகு நாள் நீடித்து நிற்காது; நாளடைவில், அருவருப்பும், அழுக்காறும் மேட்பட்டு, அச்சிநேகம் கெடும். மனமொப்பியவர்களுக்குட்தான் நட்பு என்பது ஊன்றி வளரும்.

நற்புத்தகங்களை எழுதி வெளிப்படுத்தலும், சிற்சில சமயங்களில் ஹிதோபதேசங்கள் செய்தலும், தன்னைத் தேடியடைந்த எளியர்க்கு அவ்வப்போது கொஞ்சம் பொருள் கொடுத்து உதவுதலும் மாத்திரம் மெய்ஞ்ஞானம், மெய்யன்புகளின் மேன்மை யாகா; பிறர் இடர்களை ஓர்ந்தறிந்து, அவைகளை அகற்றுவதற்கான நெறிகளை அவர்களுக்குப் பன்முறைபுகட்டி வருவதுடன், தாமும் அப்பேதையர்களுடன் கூடி, அவ்விடர்களைக் களைந்து, அவர்கள் இனிது சுகித்திருக்க உழைப்பதே மெய்யன்பினரின் சுவபாவமாகும்.

உண்மையில், ஒரு மனிதனும் முழுத்தீமை, அல்லது பூர்ண நன்மை பொருந்தியவனல்ல. ஒவ்வொருவனிடமும் சிற்சில குற்றங் குறைகளிருந்து வருகின்றன. கல்வியறிவு பெற்ற மகான்களிடத்தில் தீமைகள் மேற்கிளம்பாது பதுங்கிக் கிடக்கும். அவித்தையரிடமோ நன்மை யெனப்படுவது முன்வரச் சக்தியில்லாது ஒடுங்கிக் கிடக்கும். இதிலிருந்து விவேகமும், அவிவேகமுமே நன்மை, தீமைகளின் காரண மென்பது அகங்கைக் கனியாகின்றது. உயர்வு, தாழ்வு, தனம், வறுமை முதலான வித்தியாசங்களைத் துறந்து, எல்லாவற்றையும் சமமாகக் கருதி, ஒவ்வொருவரிடமுமுள்ள சிற்றறிவையும், சிறுதொழிலையுமகற்றி, நற்குண நன்னடத்தைகளை ஊட்டியறிவிப்பதே மெய்யன்பின் குணுதிசயமென முன் கூறினோம். ஆதலால், வித்வசிரோமணிகள் யாவருடனும் சமமாகப் பழகி, கொள்ளற்பாலதை க்கைக்கொண்டு தள்ளற் பாலதைத் தள்ளி அவர்களை நல்வழிப்படுத்த வேண்டு மென்பது தெளிவாகின்றது. பேரறிவாளர்க்குப் புகழ்ச்சி, இகழ்ச்சி என்பனவாதிக ளில்லாமையால், அவர்கள் தமக்கு வழியில் நேரிடக்கூடிய நிந்தனை, அவமானம், தோல்வி எனப் பலவிதமாகச் சொல்லப்பட்டு வருபவைகளைப் பொருட்படுத்தாது, தம் உள்ளக் கருத்துப் பலிக்கும் வரையிலும் ஊகம், ஊக்கங்களுடன் உழைக்க வேண்டுமேயல்லாது, அகப்புறப் பற்றுக்களுக்குட்பட்டு வாடி வருந்தி தம் மேலான நோக்கங்களைக் கைநெகிழவிடுதல் இழிவான காரியமாகும்.

நன்மையோடு நன்மை சேர்ந்தால் இன்பம் பெருகும். தீமையுடன் தீமை கூடினால் துன்பம் அதிகரிக்கும். ஒரு பக்கத்தில் எவ்வளவு இன்பங்கள் அபிவிர்த்தி யாகின்றனவோ, அதே அளவுடன் மறுபக்கத்தில் தீமை விருத்தியடைகின்றன. ஆதலால், தீர்ந்த ஞானிகள் அறிவிலிகளுடனுஞ் சேர்ந்து, அவர்களுடைய கயமையை நீக்கி, அவர்களை மேலேறச் செய்ய வேண்டும். இங்ஙனஞ் செய்யாது, ஞானிகளாகிய நமக்குக் கசடர்கள் தகுந்தவ ரல்லவெனக் கொண்டு, அவர்களை அலக்ஷியஞ் செய்துவிட்டால், அப்புன்மாக்களும் மேன் மக்களாவது எங்ஙனம்? அறிஞர், அறிவிலார்களுக்குள் இணக்க முண்டாகாததற்குக் காரணமென்ன? வித்வர்களுடைய இறுமாப்பே. கடவுளருளால் பூரண ஞானமும், சீரிய குணவொழுக்கங்களும் நிரம்பப்பெற்ற பெரியோர்கள் அறம், மறம், நன்மை, தீமை, சுகம், துக்கம், மேன்மை, கீழ்மை என்பவைகள் ஒன்றற்கொன்று எதிரிடையாக அமைக்கப்பட்டிருக்கின்றன வென்பதையும், ஒன்றற்கு மற்றது உரையாணியாக நின்று உதவுவன வென்பதையும் உறுதியுடன் அறிந்து, சீரியரெனப் பட்டவர்களை உதைத்துத் தள்ளாது, அவர்களுடனும் சேர்ந்து, நன்மையின் வளர்ச்சிக்காகப் பாடுபடுதலே தக்கது.

ஊழின் வலிமை நம்முடைய செயல்களைப் பொறுத்திருக்கின்றது. செயல்களின் பலன், அல்லது குணம் நமது அறிவையும், நற்சகவாசத்தையும் சார்ந்திருக்கின்றது. நல்லறிவும், நல்லினச் சேர்க்கையு முடையவன், தீமைக்கு அஞ்ச வேண்டுவதில்லை; இதற்கு மாறுதலையாக நடப்பவன், அதாவது விவேகத்தை விருத்தி செய்யாதும், நல்லோர் குழுவிற் கலவாதும் ஜீவிப்பவன் இடருற்று வருந்த வேண்டும்.

ஸர் பிரபுல்ல சந்திர ரே

SIR. P. C. RAY

[ஸ்ரீமான் என். ஆர். கேதாரிராவ் அவர்கள்.
எம். ஏ., எல். டி.]



சென்ற இருபது வருஷ காலமாய் இப்பரத கண்டத்தில் எல்லாவிதத்திலும் ஊக்கமும் மனக்கிளர்ச்சியும் அதிகரித்து வருகின்றன என்பது யாவருக்கும் தெரிந்த விஷயமே. ஏனெனில், காவியத்தில் ரவீந்திரநாத் டாகூர் என்ன, ஸரோஜினி அம்மை என்ன, இன்னோ ரன்ன சாமானியமானவர்களல்ல. அம்மாதிரியே ஸம்ஸ்கிருத பாஷையில் அற்புத ஞான முடையவர் நமது ஸர் ராமகிருஷ்ண பண்டார்க்கர். அப்படியே கணித சாஸ்திரத்தில், சென்னை இராமாநுஜ ஐயங்காரைப்போல் நுண்ணறிவுடையவர் ஒருவருமில்லை யென்று மேனாட்டார் சொல்வதை நாம் களிகூர்ந்து கேட்டிருக்கிறோமல்லவா? இராஜ்ய பரிபாலன விஷயத்தில் காலஞ்சென்ற கோகலே, மேடா இவர்களுக்கு ஒப்புயர்வற்றவர் ஒருவருமில்லை என்பதும் நாடறிந்த விஷயமன்றோ? இன்னும் மத சம்பந்தமான விஷயத்தில் ஸ்வாமி ராமகிருஷ்ண பரமஹம்ஸரென்ன, ஸ்ரீ விவேகாநந்தரென்ன இவ்விருவரும் அதி மேன்மையுடையவர் என்பதற்கு ஐயமே யில்லை. ஆயினும் சாஸ்திரஞான விஷயத்தில் தேர்ச்சிபெற்றவர் இந்தியரில் ஒருவருமில்லை என்று சிலர் சொல்லக்கூடும். அவ்வசையை நீக்குவதற்காகவே அவதரித்தார்போலும் ஸர் ஜகதீச சந்திர வஸு, ஸர் பிரபுல்ல சந்திர ரே, ஸி. வி. ராமன் ஆகிய இம்மூன்று சாஸ்திர நிபுணர்களும். அவர்களுள், ஸர் ஜகதீச சந்திர வஸு மனிதர்களுக்கு எவ்வளவு நுட்பமாய் உணர்ச்சி இருக்கிறதோ அவ்வளவு நுட்பமாய் செடிகொடிகளுக்கும் இருக்கிறதென்ற விஷயத்தைப்பற்றிப் பலவாறாய் ஆராய்ச்சி செய்திருக்கின்றார். ஸி. வி. ராமன் அவர்கள், சங்கீதத்தில்உபயோகப்படும்படியான சப்தத்தைப் பற்றி வெகுவாய்ப் பரீக்ஷை செய்துவருகிறார். ஸர். பிரபுல்ல சந்திரரேயோ ரசாயனசாஸ்திரத்தில் நிபுணராய், தம்மைப்போன்ற பல சிஷ்யர்களையும் அச்சாஸ்திரத்தில் கல்வி பயில்வித்து, தமக்கும் தம்நாடு முழுவதுக்கும் பயன்படும்படி, பொதுஜன விஷயமாய்ப் பலவாறாய் உழைத்து வருகிறாராதலின் அவர் ஜீவியசரித்திரத்தை இங்கு சுருக்கிக் கூறுவோம்.

வங்காள மாகாணத்தில் குல்னு ஜில்லாவிலுள்ள 'ரருலி கடிபாரா' என்ற ஓர் கிராமத்தில் இவர் அவதரித்தார். கபோதாக்ஷ நதி தீரத்தில் உள்ளதாதலால் இக்கிராமம் வெகு அழகாயிருக்கும். இதனாலேயே அதைப் பற்றி 'மதுசூதனன்' முதலிய பல கவிகள் சிலாகித்துக் கூறியுள்ளனர்? இது நிற்க,

இவர் 1861-ம் வருஷத்தில் பிறந்தார். இவர் தந்தையின் பெயர் ஹரிச்சந்திரரே என்பதாம். அவர் கல்வி கேள்விகளிற் சிறந்து, ஈசுவர சந்திரவித்யாஸாகரர் முதலியபெரியோர்களின் ஸகவாசத்தால் நன்மை யடைந்தவ ராதலால் தாமே அவ்வூரில் ஒரு பள்ளிக்கூடத்தை ஸ்தாபித்திருந்தார். அப்பள்ளிக்கூடத்திலேயே இவரும் சிறு வயதில் வாசித்து வந்தார்.

இவருக்கு ஒன்பது பிராயமான வுடனே இவர் தந்தை இவரைக்கல்கத்தாவுக்கு அழைத்துக்கொண்டுபோய் வாசிக்க வைத்தார். இவர் கல்கத்தாவில் 1882-ம் வருஷம் வரையில் கல்வி கற்றுவந்தார். 1879-ம் வருஷம் முதல் 1882-ம் வருஷம் வரையில், வித்யாஸாகரர் ஸர்வகலாசாலையில் இவர் வாசித்துவந்தவராதலால், வாசால கோபாலனாகிய நமது ஸுரேந்

திர நாத பானர்ஜியிடத்தில் ஓர் சிஷ்யனு யமர்ந்தார். இப்படியிருக்க,

மேற்படிப்புக்காக இங்கிலாந்துக்குப் போக வேண்டுமென்ற அவா இவருக்குளப்பொழுதும் உண்டு. ஆயினும் தம் தகப்பனருக்கு ஏதோ சிரமதசை வந்துவிட்டதால் அவ்வளவு திரவியம் அவரால் கொடுக்கமுடியாது என்று இவருக்குத் தெரிந்தது. ஆதலின் 'கில்க்ரைஸ்ட்' என்ற ஸ்காலர்ஷிப்புக்காக இவர் ஒருவருக்கும் தெரியாமல் வாசித்துக்கொண்டிருந்து, கடைசியில் அதை வாங்கிக்கொண்டு 1882-ம்வருஷத்தில் எடின்பரோவுக்குப் போனர்.

எடின்பரோவில் இவர் ஆறுவருஷம் ரசாயன சாஸ்திரத்தையே வாசித்து வந்தார். 1885-ம் வருஷத்தில் B. Sc, (பி. எஸ். ஸி) என்ற பரீக்ஷையையும் 1887-ம் வருஷத்தில் D. Sc (டி. எஸ்ஸி) என்ற பரீக்ஷையையும் கொடுத்து, 1888ம் வருஷம் இந்தியாவுக்குத் திரும்பிவந்தார்.

திரும்பிவந்தவுடனே கல்கத்தா ராஜதானிக் கலாசாலையில் இவரை ரசாயன சாஸ்திர உபாத்தியாயராய் நியமித்தார்கள். தம் வேலையில் அமர்ந்தவுடனேயே கலாசாலை ரஸாயன அறையில் வெகுவாய்த் தம் காலத்தைக் கழித்துவந்து ரசாயன விஷயத்தைப்பற்றிப் பல ஆராய்ச்சி செய்ய ஆரம்பித்தார்.

இப்படி இவர் ஆராய்ச்சி செய்து வருகையில், 1895-ம் வருஷம் டிஸம்பர் மாதத்தில் 'மர்கூரஸ் நைட்ரைட்' (Mercurous Nitrite) என்ற ஒரு புது வஸ்துவைக் கண்டுபிடித்தார். இதுவரையிலும் ஒருவருக்கும் தெரியாதிருந்த விஷயமாதலால் அவரை ஐரோப்பாவிலுள்ள ரஸாயன சாஸ்திரிகள் எல்லாரும் வெகுவாய் மதித்துவந்தார்கள். பிரான்சு தேசத்திலுள்ள மான்ஷியர் பர்தாலெட் (M. Bertholet) என்பவர் இவருக்கு வெகு உபசாரமாய் ஒரு கடிதம் எழுதினதுந் தவிர, "ஐரோப்பாவிலுள்ளவர்க்கு இந்தியர்களின் ரசாயனத் தேர்ச்சி விஷயமாய் ஒன்றும் தெரியாது. ஆதலின் கற்றறிந்த தாங்கள் முற்காலத்தில் ரசாயன சாஸ்திரத்தில் ஹிந்துக்களுக்கு எவ்வளவு பயிற்சி யிருந்தது என்பதைப்பற்றி ஓர் புஸ்தகம் எழுதி அச்சிட்டால் மிக்க நன்மையுண்டாகும்" என்று கேட்டிருந்தார்.

அதற்கு இவரும் மனமிசைந்து பலநாள் பல பழைய புத்தகங்களையும், ஏட்டுப் பிரதிகளையும், அருமையான ஸம்ஸ்கிருத நூல்களையும் பார்த்துத் தம் மனதில் சமாசாரங்களைத் தெரிந்துகொண்டு புத்தகம் எழுதத் தொடங்கினர். கடைசியில், 1902-ம் வருஷம் முதற் பாகத்தையும், 1907-ம் வருஷம் இரண்டாம் பாகத்தையும் எழுதி முடித்தார். பதினைந்து வருஷ காலமாய் இதற்கென்று சிரமப்பட்டு எழுதினராதலின் அப்புத்தகம் வெகு நன்றாயிருக்கிறது; அதைப் புகழாதார் ஒருவருமில்லை.

இது நிற்க. 1892-ம் வருஷத்திலேயே இவர் இந்தியாவானது கைத்தொழில் விஷயத்தில் முன்னேற்றம் அடையவேண்டும் என்ற ஆவலுடன் "வங்காள ரசாயன வைத்திய சாலை" யை ஸ்தாபித்தார். (Bengal Chemical & Pharmaceutical Works.) ஆரம்பத்தில் அதற்கு மூலதிரவியம் 800 ரூபாய் தான் இருந்தது. ஒரு சிறு வீட்டை வாடகைக்கு வாங்கி அதில் இச்சாலையை வைத்து அதைக் கொஞ்சங் கொஞ்சமாய் அபிவிருத்தி செய்து, தமது ஓழிவு நேரமெல்லாவற்றையும் அதற்கே அர்ப்பணம் செய்து, அதைத் தம் கண்ணுக்குக் கண்ணாய்ப் பாராட்டி வருகின்றார். சென்ற நாலைந்து வருஷமாய் இப்பெரும் யுத்தத்தில் ரசாயன மருந்துகள் பலவும் வேண்டுமென்று வங்காள கவர்ன்மெண்டார் கேட்டபொழுது இவர் இச்சாலையிலிருந்து பலவிதமாய் உதவி புரிந்தார். இந்த "ரசாயன வைத்தியசாலை"யின் மூல திரவியம் இப்போது ஐந்து லக்ஷரூபாய்க்கு மேலேயே இருக்கிறது என்று சொல்லலாம். ரஸாயன சாஸ்திர நிபுணர் பலர், இதிலிருந்து பொது ஜன நன்மைக்காக உழைத்து வருகிறார்கள். இதையுந்தவிர, இந்தியாவின் கைத் தொழில் முன்னேற்றத்துக்கு இது ஒரு பெருஞ் சாதனமாயிருக்கிறது.

1904-ம் வருஷத்தில் கர்ஸன் பிரபு (Lord Curzon) கவர்னர் ஜெனரலா யிருந்தபொழுது ஐரோப்பாவிலுள்ள ஸர்வகலாசாலைகளில் சாஸ்திர ஞானம் (Science) எப்படிச் சொல்லிக் கொடுக்கிறார்கள் என்பதை அறியும்படி இவரை மேனாட்டுக்கனுப்பினர். அதற்கு மனமொத்து, இவரும் பலதேசங்களுக்குச்

சென்று புது விஷயங்கள் பலவற்றைத் தெரிந்து கொண்டார். எங்கே சென்றாலும் இவருக்கு இராஜோபசாரம் நடந்தது. ஆங்காங்குள்ள பத்திரிகைகளும் இவரைப் பலவாறாய் சிலாகித்துக்கூறின.

1905ம் வருஷம் இவர் இந்தியாவுக்குத் திரும்பினார்.

ஐரோப்பாவிலிருந்து திரும்பிவந்த பிறகும் இவர் தம் ஆராய்ச்சியை மறந்து போகாமல் கைப்பிடித்தே வந்தார். 1907-ம் வருஷத்தில் மர்கூரஸ் ஆக்ஸிநைட்ரேட் (Mercurous Oxynitrate) என்ற ஒரு புது வஸ்துவைக் கண்டுபிடித்து சாஸ்திர அறிஞர்கள் கூட்டத்தில் அதைப்பற்றி ஒரு பிரசங்கம் செய்தார்.

1912-ம் வருஷத்தில் பிரிடிஷ் இராஜ்யத்திலுள்ள ஸர்வகலாசாலைகளுள் முக்கிய அங்கத்தினர் எல்லோரும் லண்டன் மாநகரில் ஒரு கூட்டம் கூடினார்கள். அதில் கல்கத்தா யூனிவர்ஸிடியின் அங்கத்தினராய் இவரை நியமித்து, மற்றொரு தரம் லண்டனுக்கு அனுப்பினார்கள். அங்கே ஸர்வ வித்யா பாரங்கதர் என்று பெயர் வாங்கி ரசாயனப் பத்திரிகையில் (Transactions of the Chemical Society, London) பல வியாசங்களை வரைந்து வந்தார். இதைக்கண்டு டர்ஹாம் யூனிவர்ஸிடியார் (Durham University) இவரை வரவழைத்து, இவருக்கு (D. Sc.) என்ற கௌரவப்பட்டத்தை யளித்தார்கள். இப்படிச்சிலகாலம் ஐரோப்பாவில்இருந்து மறுபடி கல்கத்தாவுக்குத் திரும்பிவந்தார்.

1916-ம் வருஷம் பிப்ரவரிமாதம் ஹார்டிஞ்சு பிரபு அவர்கள் (Lord Hardinge) காசிமாநகரில் ஹிந்து யூனிவர்ஸிடியை ஸ்தாபிக்கும் சமயத்தில் ரசாயன சாஸ்திரத்தைப்பற்றி இரண்டு மூன்று பிரசங்கங்கள் இவர் செய்தார். இவரை அந்த யூனிவர்சிடியில் கௌரவ உபாத்தியாயராய் ஏற்படுத்தினர்.

சென்ற வருஷம் நமது சென்னை யூனிவர்சிடியார் அழைத்ததனால் இவர் இங்கு விஜயம் செய்து, இரண்டு பிரசங்கங்கள் செய்தனர். அதற்காக யூனிவர்சிடியார் அளித்த வெகுமதியையும் இவர் ஏற்றுக்கொள்ளாமல் அதை மூலதிரவியமாய் வைத்து அதினின்றும் வரும் வட்டியை ரசாயன சாஸ்திரத்தில் புத்தியுள்ள பையன் ஒருவனுக்கு வருஷா வருஷம் பரிசாய் அளிக்கவேண்டியது என்று ஏற்பாடு செய்து, இந்திய நண்பராகிய காலஞ்சென்ற வெட்டர்பர்ன் பரிசு என்று அதற்குப் பெயரும் வைத்துள்ளார்!

இப்பொழுதும் கல்கத்தாவிலுள்ள யூனிவர்சிடி சாஸ்திர கலாசாலையில் இவர் மனப்பூர்வமாய் உழைத்து வருகின்றார் என்பது எல்லாருக்கும் தெரியும். டாம்பிகம் என்பதே கொஞ்சமுமில்லாமல், தமது ஜனன பூமியின் முன்னேற்றத்துக்காகத் தம்மாலியன்றவரையில் உழைத்து வருகிறாராதலின் கவர்ன்மெண்டாருக்கு இவரிடத்தில் அதிக மரியாதையுண்டு. அதற்கறிகுறியாகத்தான் சிலமாதங்களுக்கு முன்னால் இவருக்கு 'ஸர்' (Sir) என்ற பட்டத்தை யளித்தார்கள்.

இப்பேற்பட்ட மகான்கள் பலரும் நமது இந்தியாவில் செழித்தோங்கி வாழ்வாராக என்பதே எமது பிரார்த்தனை.

பள்ளிச் சிறுவர்களின் சுகாதாரம்

HEALTH OF SCHOOL CHILDREN

[ஸ்ரீமான் கே. எஸ். ராமஸ்வாமி ஐயரவர்கள், பி. ஏ., எல். டி.]

முக்கியமாய்ப் பள்ளிக்கூடத்திலுள்ள மாணவர்களுடைய கண்களின் நிலைமை, அதற்கு வேண்டிய சிகித்ஸை, காது சரியாகக் கேளாதிருத்தல், வளர்ச்சிக் குறைவு, மந்த புத்தி ஆகிய இவைகளையும் அறிந்து தகுந்தபடி நடத்தல் வைத்தியர் கடமையாகும்.

தற்காலத்தில் நம் சிறுவர்கள் சிறு வகுப்பிலிருந்தே புஸ்தகங்களைப் படிப்பதற்கு ஆரம்பிக்கிறார்கள். சில புஸ்தகங்கள் சிறு எழுத்துக்களுள்ளதாய் இருப்பதால் கண்களை வெகு சிரமப்படுத்தவேண்டியதா யிருக்கிறது. தவிர, இரவில் குறைந்த வெளிச்சத்தில் படித்தல், அல்லது அஸ்தமன வேளைகளில் படித்தல், மிகப் பிரகாசமான தீப வெளிச்சத்தில்

வாசித்தல்; இவைகளால் சிறுவர்களுடைய கண்கள் கெட்டுப்போகின்றன. அதனால் அவர்கள் பால்யத்திலேயே மூக்குக் கண்ணாடிகள் போட்டுக்கொள்ளும்படி நேருகின்றது. கூடியவரை அவர்களுக்கு இவ்விதத் தீங்கு நேரிடாதபடி காக்கவேண்டும். மூக்குக்கண்ணாடிகள் அணிய நேரிட்டால், வைத்தியர், பள்ளிக்கூடத்திலுள்ள ஒவ்வொரு பையனையும் அவன் கண் பார்வையின் தீக்ஷண்யம் முதலியவற்றைப் பரீக்ஷித்து, அவனவனுக்குத் தகுந்த கண்ணாடியோ, மருந்தோ கிடைக்கும்படிச் செய்யவேண்டும். காது சரிவரக் கேளாவிடில், எவ்வளவு தூரத்தில் பையனுக்குக் காது கேட்கிறது என்று பரீக்ஷித்தறிதல் வேண்டும். இதை எப்படிச் செய்வதெனில், ஓர் அறையில் நீளமாக ஓர் கோடிட்டு 10 அடி 15 அடி எனக்குறிப்பிட்டு, பையனை ஒரு கோடியில் நிறுத்தி, மற்றொரு கோடியில் உபாத்தியாயரோ, அல்லது வைத்தியரோ நின்றுகொண்டு, மெல்லப் பேசவேண்டும்; அல்லது சிறு கைக்கெடியாரத்தை வைத்துக்கொண்டு அது செய்யும் சப்தம் கேட்கிறதா என்றறியவேண்டும். ஒவ்வொரு பையனுக்கும் எவ்வளவு தூரத்தில் சப்தம்கேட்கிறது என்பதையறிந்து குறித்துக்கொள்ளுதல் அவசியம். மேற்கூறியபடி ஸரியாகக் காது கேளாதவர்கள், கண் தெரியாதவர்கள் முதலியவர்களின் குறிப்பை வைத்துக்கொண்டு, அதன்படி தகுந்த சிகித்ஸை செய்து வந்தால், அநேகமாகப் பையன்களுக்கு அநுகூலமுண்டாகும். மேலும், மாணவர்கள் வகுப்பில் உட்காரும்போது, மேற்கூறியபடி, பார்வைக்குறைவு, கொஞ்சம் காது கேளாதிருத்தல் முதலிய குறைகளுடையவர்களை உபாத்தியாயருக்கும் கரும்பலகைக்கும் அருகில் உட்காரவைக்கக்கூடும்.

அமெரிக்கா, இங்கிலாந்து முதலிய தேசங்களில், பள்ளிக்கூடங்களையும், அவைகளில் பிள்ளைகள் வாசித்து வருவதற்கு வேண்டிய வசதிகளையும் கவனித்து வரும்படியும், சமயாசமயங்களில் பள்ளிக்கூட அதிகாரிகளுக்கு சுகாதார விஷயங்களில் நூதன வழிகளைத் தெரிவிக்கும்படியும் சுகாதார முறையில் தேர்ந்த நிபுணர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். நம் தேயத்தில் பல சிறுவர்கள் தமது பெற்றோரிருக்கும் இல்லத்திலேயே இருப்பதால், அவர்களின் பெற்றோர் தம் பிள்ளைகளின் தேக சௌக்கியத்தைக் கவனிக்கிறார்கள். ஆனால் மேனாடுகளில் பிள்ளைகள் தம் வீட்டைவிட்டுப் பள்ளிக்கூடங்களைச் சேர்ந்த "ஹாஸ்டல்" களில் சேர்ந்து வாசிப்பதால், அப்படிப்பட்ட பெற்றோரைப் பிரிந்திருக்கும் பிள்ளைகளின் சுகாதாரத்தைக் கவனிக்கவேண்டியது மிகவும் அவசியமாகின்றது.

பள்ளிக்கூடங்களுக்கு சுகாதார போதகராய் இருக்கும் நிபுணர்கள் வைத்திய சாஸ்திரம் நன்றாய் அறிந்திருப்பதோடு, சுகாதாரத்திற்கு அநுகூலமான கட்டிடங்கள் கட்டுவதைப்பற்றியும், பள்ளிக்கூடங்களில் சிறுவர்கள் உட்காரும் பீடங்கள், மேஜைகள், வசிக்கும் அறைகள் ஆகிய இவற்றின் நிர்மாணத்தைப்பற்றியும் அறிந்தவர்களாயிருக்கின்றனர். இதனால் இவர்களுடைய உதவி பள்ளிக்கூடத்து அதிகாரிகளுக்கு இன்றியமையாததாகின்றது. இம்மாதிரி விஷயங்களில் வைத்தியர்கள் என்ன நன்மை செய்யக்கூடும் என்பதைப்பற்றிச் சிறிது கூறுவோம்.

நல்ல காற்றும், வெளிச்சமும் உள்ள இடங்களில் பள்ளிக்கூடங்களைக் கட்டுவதில் வைத்தியர்கள் கொஞ்சம் உதவியாயிருக்கலாம்; பள்ளிக்கூடங்களில் பிள்ளைகள் குடிக்கும் ஜலத்தைப் பரிசோதித்து, அசுத்தமாயிருந்தால் அதைச் சுத்தமாக்குவதற்குவேண்டிய முயற்சிகளைச் செய்யலாம்; கண்பார்வைக் குறைவு, கேட்கும் சக்திக்குறைவு உள்ள பையன்களைப் பொறுக்கி எடுத்து அவர்களுக்குத் தகுந்த சிகித்ஸையும் இடங்களும் அமைக்கலாம்.

சாதாரணமாய் வைத்தியர், மாணவர்களின் தேகசௌக்கியத்தைப்பற்றி விசாரிக்கும்போது மாணவர்களின் மிக நெருங்கின பந்துக்களில் ஒருவர் வந்திருப்பது மிகவும் நல்லது. பையன்களுடைய தேகசௌக்கியத்தில் அவர்களுக்குக் கவனம் உண்டாவதோடுகூட, பள்ளிக்கூடத்திற்போலவே வீட்டிலும் தகுந்த ஏற்பாடுகள் செய்ய சாத்தியமாகும். இதற்குப் பின் கூறப்பட்ட அறிக்கையை உபயோகிக்கலாம்:—

கள்ளன் கொண்ட மாடு எத்துறை போயென்ன?

.......................பள்ளிக்கூடம்
...............19
.....................................அவர்களுக்கு,

ஐயா
அம்மணி,

மேற்படி பள்ளிக்கூடத்தில்.........வகுப்பில் வாசித்துவரும் தங்கள்.............................. என்பவ.......... பள்ளிக்கூடத்து வைத்தியர்...... மீ................தேதி..........கிழமை விசாரித்துப் போவதாக இருப்பதால் தாங்கள் அன்றைபதினம் ....மணிமுதல்......மணி வரையில் பள்ளிக்கூடத்திற்கு வந்திருக்கும்படிக் கோருகிறேன்

தலைமை உபாத்தியாயர்

சாதாரணமான வியாதிகளுக்கு வேண்டிய மருந்துகளை ஆஸ்பத்திரியில் பெறுவதோடு பள்ளிக்கூடத்திலேயும் கொஞ்சம் வாங்கி வைக்கலாம். வாலிபச்சாரண (Boy Scouts) ருக்கு ஆரம்ப சிகித்ஸை தெரிந்திருக்கவேண்டியது அவசியமாகையால், அவர்களின் உதவியைக்கொண்டு சாதாரண காயங்கள் முதலிய வற்றிற்குச் சிகித்ஸைசெய்யலாம்.முக்கியமாக ஊரில் எங்கேயாவது ஜ்வரம், அம்மை முதலியன பரவுமாயின் வைத்தியரும் உபாத்தியாயர்களும் மிகவும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். இம்மாதிரியே ஊரில் தொற்று வியாதிகளாவது அல்லது வேறு ஏதாவது நோய்கள் பரவுவதா யிருக்கும்போது பள்ளிக்கூடத்தைச் சார்ந்த வைத்தியர் அப்போது தகுந்தஅறிக்கைகளை வெளியிட்டு வரவேண்டும்.

பள்ளிக்கூட அதிகாரிகளும் பெற்றோர்களும், வைத்தியரும் கவனிக்க வேண்டிய வேறொரு விஷயம் பையன்கள் பள்ளிக்கூடத்தில் உட்காரும் இடம் (விசுப்பலகை எழுதும் மேஜைமுதலியவைகளாம்)இவைகள் சரியாயிருந்தால்தான் பிள்ளைகள் நல்லவேலை செய்யமுடியும். இந்த விஷயத்தில் நம் தேசத்தில் மிகவும் கவனம் குறைந்திருக்கின்றது என்றே சொல்லவேண்டும். பிள்ளைகள் உட்காரும் விசுப்பலகையும், மேஜையும், உயரத்திற்குத் தக்கவாறு அமைக்கப்பட வேண்டுமென்பது வைத்திய நிபுணர்களின் கொள்கை. அப்படி இல்லாவிட்டால் சிறியபிள்ளைகள் உயர்ந்த "பெஞ்சு" "டெஸ்கு"களிலும் பெரியவர்கள் சிறிய பெஞ்சுகளிலும் உட்காரும்படி நேருகின்றது. அப்படி உட்காருவதனால் உடம்பிற்கு அசௌகரியமும் அதனால் படிப்பில் கவனக் குறைவும் ஏற்படுவதோடு கூன்முதுகும்,விகாரமான நடையும் உண்டாகின்றன. சிலவேளைகளில், விசுப்பலகையும், சாய்வுமேஜையும் ஒன்றாய்க் கெட்டியாய் இணைக்கப்பட்டிருப்பதால் ஒரு சிறுவன் தன் இடத்தில் உட்கார்ந்து கொண்டால் பிறகு எழுந்திருக்கக் கஷ்டப்பட வேண்டியிருக்கிறது. ஆகையால் இவ்விஷயத்தையும் பள்ளிக்கூடத்தைச்சார்ந்த வைத்தியர்கள் கவனித்து அயல் தேசங்களில் நடப்பதையும் அறிந்து தகுந்த விசுப்பலகைகள் சாய்வு மேஜைகள் முதலியன செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

மாணவர்களின் தேகாரோக்கியத்தைக் கவனிக்கும்போது, பாடசாலை அதிகாரிகளும் வைத்தியர்களும் மிகவும் ஜாக்கிரதையாகக் குறித்துவைக்கவேண்டிய விஷயம் இன்னமொன்றுண்டு. மாணவர்களின் தேகப்பயிற்சி விஷயத்தில் பேருக்காக எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் 'டிரில்' 'ஜிம்னஸ்டிக்ஸ்' முதலியன நடந்தபோதிலும், அவைகளில் மாணவர்கள் அனைவரும் உற்சாகம் கொள்வதில்லை. இதற்குக் காரணம், மாணவர்கள் களைப்படைந்து இருக்கும்பொழுது தேகப்பயிற்சி செய்யும்படி பலவந்தப்படுத்துவதாம். இதை நீக்கி, அதிகாலையிலோ, அல்லது மாலையிலோ பையன்கள் உற்சாகத்துடனிருக்கும் போது தேகப்பயிற்சி செய்ய ஏற்பாடுகள் செய்யவேண்டும். இதனோடு, தேகப்பயிற்சி காலங்களில் செய்யப்பட்ட வேலைகளின் நோக்கத்தை, விவரமாய்க் குறிப்பிட்ட நேரங்களில் பிள்ளைகளுக்குத் தெரிவிக்கவேண்டும். இதனால் பையன்களுக்குத் தேகப்பயிற்சியில் அபிமானம் உண்டாகும். மாலை நேரங்களில் பையன்கள் விளையாடும் காற்பந்து முதலிய விளையாட்டுகளையும் வைத்தியர் மேற்பார்வை பார்த்து வருவது நல்லது. மாணவர்களுள் சிலர் காற்பந்து, பந்தய ஓட்டம் முதலியவைகளில் நல்ல பெயரெடுக்கக் கருதித் தம் தேகத்தை அளவிற்கு மிஞ்சி கெடுத்துக் கொள்ளுகிறார்கள். இதனால் அவர்களுடைய தேகம் கெடுவதோடுங்கூட சிற்சில வேளைகளில் உயிர் நீங்கவும் காரணமாயிருக்கிறது. இவ்விஷயத்தில் பள்ளிக்கூடமோ அல்லது பையனோ பரிசுகளைப் பெறுவதைக் காட்டிலும், அவன்

தேகஸ்திதியையே முக்கியமாகக் கவனித்து அளவிற்கு மிஞ்சி விளையாடாமலிருக்கும்படி புத்தி கூறுவதும் அவசியமாகின்றது.

தேகப் பயிற்சிக்காக மேனுடுகளில் தனியான ஓர் இடமும் அதை மேல்பார்க்க ஓர் உத்தியோகஸ்தரும், அவர் கீழ்ச் சிப்பந்திகளும் இருக்கின்றனர். இதை யனுஸரித்தே சென்னைத் துரைத்தனத்தாரும் தேகப்பயிற்சி விஷயமாய் ஆலோசனை கூறும் உத்தியோகஸ்தர் ஒருவரை நியமித்திருக்கின்றனர்.

பள்ளிக்கூடங்களில், பிள்ளைகள் சுகாதார விதிகளைப் பின்பற்ற, பாடசாலை அதிகாரிகளும் வைத்தியர்களும் என்ன செய்யக்கூடும்? பள்ளிக்கூடமும் அதிலுள்ள உபாத்தியாயர்களும் தாங்களே சுத்தமாக இருந்து மாணவர்களுக்கு ஓர் நிதரிசனமாக வேண்டும். இது இல்லாவிடின் எவ்வளவுதான் ஆசிரியர் உபதேசித்தபோதிலும் அவையெல்லாம் பயன் படா. வகுப்பிற்குத் தக்கவாறு சுகாதார விதிகளைப் போதிக்கவேண்டும். சில வேளைகளில் பூதக்கண்ணாடி, சித்திரம் பிரதிபிம்பிக்கும் இயந்திரம் (Magic Lantern) முதலியவைகளின் உதவியோடு பிரசங்கங்கள் செய்யலாம். சில வேளைகளில் பிள்ளைகளின் பெற்றோரையும் மேற்கூறியவாறு உபந்நியாசங்கள் செய்யும்போது வரவழைப்பது மிகவும்பயன் தரும்.

மாணவர்களுக்குச் சுகாதார விஷயங்களில் ஆர்வமுண்டாகும்படி ஆரோக்கியத்தைப்பற்றின விஷயங்களைப்பற்றி வியாசங்கள் எழுதும்படிக்கும், அவைகளில் சிறந்த வியாஸங்களுக்குப் பரிசுக ளளிக்கும்படிக்கும் ஏற்பாடுகள் செய்யவேண்டும். வருஷாவருஷம் பள்ளிக்கூடத்தில் மிகுந்த பரிசுத்தமுள்ளவனென்று கூறப்பட்டவனுக்குப் பரிசு கொடுப்பதும் நல்லது.

சுவற்றை வைத்துக்கொண்ட பிறகே சித்திரம் எழுதவேண்டுமாதலால், நம் சிறுவர்களின் தேகஸ்திதி சரியாயிருந்தாற்றான் அவர்கள் பிற்காலத்தில் தங்களுக்காகவும் தேசத்திற்காகவும் உழைப்பதற்கு அருகராவர். ஆகையினால், நம் பள்ளிக்கூடங்களில் வாசிக்கும் மாணவர்களின் ஆரோக்கியத்தைக் கவனித்து வரவேண்டியது, நம் தேசத்தின் முன்னேற்றத்தை நாடுவோர்களின் முக்கிய கடமையாகும்.

ஐபல் கோபுரம்
EIFFEL TOWER

[ஸ்ரீமான் டி. எஸ். சுந்தரம் ஐயரவர்கள், பீ. ஏ.]

இப்பொழுது நின்றிருக்கும் ஐரோப்பிய யுத்தத்தில் நமது ராஜாங்கத்தாரின் நேசக்கட்சியார்களில் ஒருவர் பிரஞ்சுக்காரர். அவர்கள் தேசத்தில் வியக்கத்தக்க பொருள்கள் இருந்தால் அவற்றைப்பற்றி நாம் தெரிந்துகொள்வது அவசியமே. பிரான்ஸின் பிரதான பட்டணமாகிய பாரிஸில் அனேக அற்புதமான கட்டடங்களிருக்கின்றன. அவற்றுள் ஐபல் டவர் ஒன்று.

இது இரும்பினாலாயது. 300 மீடர் அல்லது 984 அடி உயரமுள்ளது. யாதொரு அபாயமுமில்லாமல், கஸ்டவ் ஐபல் (Gustov Eiffel) என்னும் பிரஞ்சுக்காரரால் கட்டி முடிக்கப்பட்டது. ஆப்பிரிக்கா தேசத்து பெரிய பிரமிட்டைப்பார்க்கிலும் 500 அடி அதிக உயரமுள்ளது.

இந்த இரும்புக்கோபுரம் ஒரு நதியின் பக்கத்தில் கட்டப்பட்டிருக்கிறது. நதியை யடுத்துள்ள இடத்தில் 45 அடியும் தரைப்பக்கத்தில் 25 அடியும் ஆழத்தில் பதிக்கப்பட்ட கல் அஸ்திவாரத்தின்மேல் கட்டப்பட் டிருக்கிறது. சுமார் 7,000 டன் நிறைக்குமேல் இரும்பு உபயோகப்பட்டிருக்கிறது. அஸ்திவார ஸ்தம்பங்களின்மேல் நான்கு ('ஆர்ச்சு) கணவாய்கள் போடப்பட் டிருக்கின்றன. இந்த நான்கு ஸ்தம்பங்களுக்கும் இடையிலுள்ள இடம் இரண்டு ஏகர் விஸ்தீரணமுள்ளது.

நமது இந்தியாதேசத்தில் குடப்மினார் என்ற ஸ்தம்பத்தைப்பற்றி யாவரும் படித்திருக்கலாம். இதுபோன்ற ஸ்தம்பங்கள் முதலியன ஏதாவது ஒரு ராஜாவின் வெற்றிக்கு அடையாளமாகக் கட்டப்படும். ஆனால் ஐபல் கோபுரம் அவ்வாறு ஞாபக சின்னமாகக் கட்டப்படவில்லை. ஜனங்களுடைய சந்தோஷ அனுபோகத்தின் பொருட்டே கட்டப்பட்டதென்று சொல்லவேண்டும். இக்கோபுரத்தில் ஒன்றிற்கு மேலொன்றாக மூன்றுமேடைகளமைக்கப்பட் டிருக்கின்றன. சாதாரண ஜனங்கள் ஏதோ சொற்பப் பணங் கொடுத்துவிட்டு இம்மேடைகளின்மேலேறி சுற்றிலுமுள்ள காட்சியைக் கண்டு களிக்கலாம்.

கள்ளிக்குத் தண்ணீர் கண்ணிலே, நீலிக்குத் தண்ணீர் நிமையிலே.

முதல் மேடையானது 225 அடி உயரத்தில் அஸ்திவார ஸ்தம்பங்களைச் சேர்க்கும் நான்கு ஆர்ச்சுகளுக்கும் மேலாக அமைந்துள்ளது. ஒவ்வொன்றிலும் 50 ஜனங்கள் அடங்கக்கூடிய இரண்டு யந்திரங்கள் ஜனங்களை மேலே கொண்டுபோகின்றன. தவிர வளைந்து வளைந்து செல்லும் படிக்கட்டின் வழியாகவும் ஜனங்கள் மேலே போகலாம். எப்படிப் போனாலும் பணங் கொடுக்கத்தான் வேண்டும்.

இந்த மேடையில் அனேகம் கடைகளும் சாப்பாட்டு விடுதிகளும் இருக்கின்றன. அதனாலே இங்கேபோகிறவர்கள் ஏதோ ஒரு கிராமமத்தியில் இருப்பதாக நினைப்பார்களே தவிர, பூமியிலிருந்து எத்தனையோ அடிக்கு மேலாக இருப்பதாக நினைக்கமாட்டார்கள். சாப்பாடு சிற்றுண்டிகளுக்காக ஏற்பட்டிருக்கு மிடங்களில் ஒரே காலத்தில் சுமார் 1,600 பேர்கள் தங்கலாம். 6,000 பேர்கள் ஒருவர்மேல் ஒருவர் இடியாமல் இந்த மேடையில் இருக்கலாம்.

இரண்டாவது மேடை, இதற்குமேல் 175 அடி உயரத்திலிருக்கிறது. இங்கே கீழே உள்ள புழுதி உஷ்ணம் ஒன்றும் கிடையாது. இவ்விடத்தில் சாவகாசமாயிருந்துகொண்டு கண்ணாடி மூலமாய் பாரிஸ் பட்டணத்தைப் பார்க்கலாம். இக்கண்ணாடி, வாடகைக்குக் கிடைக்கும். இப்பட்டணத்தினூடே வளைந்துவளைந்து செல்லும் ஸேன் நதி, பிரகாசிக்கும் ஒருநாடாப் போலவும், அதில் செல்லும் புகைக்கப்பல்கள் அநேகம் புள்ளிகள்போலவும் தோற்றும். அநேக அரண்மனைகளும், சிங்காரத் தோட்டங்களும், கோவில்களும், காட்சிசாலைகளும் காணப்படும்.

மூன்றாவது மேடை இன்னும் 500 அடி உயரத்தில் இருக்கிறது. இங்கே போகவேண்டியவர்களைத் தூக்கிவிட ஒருயந்திரமிருக்கிறது. மேலே ஏறும்போதும், கீழே இறங்கும் போதும் காதிரைச்சலும் தலையில் ஒருவித மான வலியுமுண்டாகும். இம்மேடையானது பூமியிலிருந்து 900 அடி உயரத்திலிருக்கிறது. இங்கிருந்து பார்த்தால், சுற்றியுள்ள பாரிஸ் நகரம் ஒரு படம்போல் தோற்றும். அதற்கப்பால் செழிப்பான பசுமை நிறமுள்ள தரைகளும், அதற்கப்பால் பிரகாசிக்கும் சமுத்திரமும் காணப்படும். இந்த மேடைமேல் நின்று, ஒருதரம் சுற்றிப் பார்த்தால் தலை சுற்றும் போல் தோன்றும். அதனாலே அநேகர் ஒரு தரம் பார்த்ததும்கீழே இறங்கிவிடப் பிரியப்படுகிறார்கள். விநோதார்த்தமாக அநேகர் மேலே ஏறிப்பார்க்க ஆசைப்பட்டாலும், மறுபடி கீழே பூமிக்கு வந்துவிடுவதில் மிகுந்த திருப்தியை அடைகிறார்கள். இந்த மூன்றாவது மேடைக்கு மேல் ஜனங்களை ஏறவிடுவதில்லை.

இதிலே இருந்து ஒரு சுற்றுப் படிக்கட்டு இக்கோபுரத்தின் தலைக்குப் போகிறது. இவ்விடத்தில்தான் எலக்ட்ரிக் (மின்சார) வெளிச்சத்துக்கு வேண்டிய விளக்கு இருக்கிறது. இந்தத் தலைப்பாகத்தில் அநேகம் சிறு அறைகளிருக்கின்றன. இங்குள்ள விளக்கு முதல்தர விளக்குக்கூண்டில் (லைட்ஹௌஸ்) உபயோகிக்கப்படும் விளக்கைப் போன்றது. இதன் வெளிச்சம் ஐந்து அல்லது ஆறாயிரம் மெழுகு வத்திகள் வெளிச்சத்துக்கொப்பானது. இதை அங்குள்ள பிரதிபிம்பக் கண்ணாடிகள் எழுபதினாயிரம் மெழுகுவத்திவெளிச்சம்போல் பிரகாசிக்கச் செய்கின்றன. நீலம், வெள்ளை, சிவப்பு இம்மூன்று நிறங்களுமுள்ள கண்ணாடிகள் சுற்றிக்கொண் டிருப்பதால் வெளிச்சம் இம்மூன்று நிறமாக மாறிமாறித் தெரியும். வெள்ளை வெளிச்சம் இங்கிலீஷ் சானலி (English Channel) லுள்ள கப்பல்களிலிருந்து பார்க்கத் தெரியும். இது தவிர அக்கோபுரத்தில் நூற்றுக்கணக்கான காஸ் (Gas) விளக்குகளும் சிறு எலக்ட்ரிக் விளக்குகளும் போடப்பட்டிருப்பதால் இராக்காலங்களில் பார்ப்பதற்கு மிகவும் அழகாயிருக்கும்.

நமது சிறு கதை
OUR SHORT STORY

(30-ம் பக்கத் தொடர்ச்சி.)

[ஸ்ரீமான்ஜி.ஏ சுந்தரமய்யாவர்கள்,பி.ஏ.,பி.எல்.]

இதைக் கேட்டதும் சிறிதுநேரம் கேசவ ராயருக்கு பதில் சொல்ல நா எழவில்லை. இவ்வளவு இழிவான காரியத்தைத் தன்னிடம் சொன்னாரே என்று சக்கரவர்த்தி ஐயங்கார் பேரில் கோபம் உண்டாயிற்று. ஆனால் அதைக் காட்டாமல் அடக்கிக்கொண்டு சிறிது பொறுத்து "ஐயா எனக்குக் கடன் தீர்க்க சக்தியில்லையென்பதும் சுவல்பச் சம்பளம் என்பதும் வாஸ்தவம். இந்தக் குறைகளை நீக்குவதாக தாங்கள் வாக்குத்தத்தம் செய்ததற்கு அநேக வந்தனம். ஆனால் மற்றொருவர்மேல் பொய் வாக்குமூலம் கொடுக்க நான் ஒரு காலத்திலும் சம்மதிக்க மாட்டேன். இந்த நோட்டை வாங்கிக்கொள்ளுங்கள்" என்று சொல்லித் தன் சட்டைப்பையிலிருந்த நோட்டை எடுத்தார். சக்கரவர்த்தி ஐயங்கார் ராயர் கையைப் பிடித்துக்கொண்டு "வேண்டாம். நோட்டை நீரே வைத்துக்கொள்ளும். மறுபடி நன்றாய் யோசியும். நான் சொல்லுகிறதை கேட்காவிட்டால் உமக்குப் பெரிய தீங்குவிளையும்" என்றார்.

கேசவராவ் "எனக்கு என்ன தீங்கு வந்தாலும், நான் தாங்கிக்கொள்ளுகிறேன். பிறர் மேல் பொய்க் குற்றம் சாட்ட நான் சம்மதிக்க மாட்டேன்" என்றார்.

"தீர யோசித்துச் சொல்லும். குழந்தையன் செட்டி தஸ்தாவேஜை நத்தர்சாராவுத்தரிடம் யார் எடுத்துக்கொடுத்தார் என்பதைப்பற்றி போலீசார் விசாரணை செய்கிறார்கள். ஒன்று துரைசாமி ஐயர் எடுத்துக் கொடுத்திருக்கவேண்டும். இல்லாவிட்டால் அந்த தஸ்தாவேஜை நீர்தான் எடுத்துக் கொடுத்திருக்க வேண்டும். துரைசாமி ஐயர் பேரில் குற்றம் சுமர்த்தி நீர் வாக்குமூலம் கொடுத்தால் நீர் தப்பிக்கொள்ளலாம். சம்பளமும் உயரும். கடனும் தீரும். அவ்விதம் நீர் வாக்குமூலம் கொடாவிட்டால், போலீஸ்காரர் உம்மைத்தான் பிடிப்பார்கள்."

"என்னைப் பிடித்தால் நான் குற்றம் செய்யவில்லை யென்று ரூபித்து விலக்கிக்கொள்ளுகிறேன்" என்று பணிவுடன் கூறினார் கேசவராவ்.

"ரூபிப்பது எளிதல்ல. துரைசாமி ஐயர் இருக்கும் இடத்தை அடுத்து நீர் இருக்கிறீர். தவிர, இதுவிஷயமான தஸ்தாவேஜுகளை நீரும் அவரும் சேர்ந்து பார்த்ததாய் நீரேஒப்புக் கொண்டிருக்கிறீர். ஹெட் குமாஸ்தாவும் அவ்விதம் வாக்குமூலம் கொடுத்திருக்கிறார். தவிர, நீர் கோர்ட்டில் சடையன் செட்டியார் பிராதில், ரூ 100 சுமார் இருபது நாளைக்கு முன்னால்தான் செலுத்தியிருக்கிறீர். அந்த ரூபாய் நீர் நத்தர்சா ராவுத்தரிடமிருந்து வாங்கிக் கொடுத்ததாய் சந்தேகிக்க இடமிருக்கிறது. இதை யெல்லாம் யோசியும். மேலும் ஆபீஸை சீர்திருத்துவதில் நான் எதற்கும் பின்வாங்க மாட்டேன். நீரே ராவுத்தரிடம் கொடுத்ததை பார்த்ததாக வாக்குமூலம் கொடுக்க, ஒரு சேவகன் தயாராய் இருக்கிறான்.நீர் தப்பித்துக் கொள்ளமுடியாது. உம்மிடம் கோர்ட்டில் கட்டப் பணம் ஏது? நத்தர்சாவிடம் வாங்கித்தான் கட்டினீரென்றும் யாரும் நம்புவார்கள். நன்றாய் யோசியும். ஒரு வார்த்தைதான் நீர் சொல்லவேண்டியது. சம்மதியாவிட்டால் உம்பேரில் குற்றம் சுமந்து, உம் வேலை போவதல்லாமல் நீரும் சிறைச்சாலைக்குப் போகும்படி நேரிடும்" என்றார் சக்கரவர்த்தி ஐயங்கார்.

இதைக்கேட்டதும் கேசவராவுக்கு ஒன்றுமே செய்யத் தெரியவில்லை. சடையன் செட்டியார் பிராது செய்ததும், கேசவராவ் தன் மனைவியிடமிருந்த அவள் சொந்தப் பணம் ரூபாய் அறுபதை அவளைக் கேட்டு வாங்கித் தன் சம்பளத்திலிருந்து ரூபாய் பத்து சேர்த்து தன் சிநேகிதர்கள் இரண்டு பேர்களிடமிருந்து ரூபாய் முப்பது கடன் வாங்கி ஆகரூபாய் நூறும் சேர்த்து கோர்ட்டில் கட்டினார். ஆனால் இதை எப்படி ரூபிப்பது? சிறிதுநேரம் ஒன்றும்தோன்றாது நின்று பிறகு தாசில்தாரைப் பார்த்து "ஐயா! நான் ஏழை. துரைசாமி ஐயரும் நிரபராதி. எங்களை யெல்லாம் பெரியவர்களாகிய தாங்கள் இவ்விதம் சோதனை செய்வது தகுமா? தாங்கள் எவ்வளவோ கீர்த்தியுடன் பெரிய உத்தியோகங்கள் வகித்திருக்கிறீர்கள். இந்த ஒரு

தஸ்தாவேஜு, ஆபீஸில் கெட்டுப்போனதால் தங்கள் பேருக்கு ஒரு குறைவும் வராது, அதையும் நானே எப்படியாவது தேடிக் கண்டுபிடித்து விடுகிறேன். வீணாக ஒரு பாவமும் அறியாத ஒருவன்மேல் பொய்யாகக் குற்றம் சாட்டலாமா? தாங்கள் எல்லாம் அறிந்தவர்கள். எவ்வளவோ படித்தவர்கள். உத்தியோக முறைமையிலும் வயதிலும் எனக்கு மிகவும் மேலானவர்கள். தாங்கள் ஏழையைப் பரீக்ஷிக்கிறதாகவே எனக்குப் படுகிறது. பரீக்ஷித்தது போதும். எனக்கு உத்தரவு கொடுக்க வேண்டும்'' என்று சொல்லி சக்கரவர்த்தி ஐயங்கார் முன் நமஸ்காரம் செய்தார். சக்கரவர்த்தி ஐயங்கார் திரும்பிக்கொண்டு "எழுந்திரும் ராவ்ஜீ! உம்மைப்போல் உலக சுபாவம் அறியாத பெரும் மூடரை இதுவரை நான் பார்த்ததேயில்லை. இனி உம்முடன் பேச எனக்கு சாவகாசம் இல்லை. இதெல்லாம் விளையாட்டுப்பேச்சு என்று நினையாதேயும். நாளைய தினம் போலீஸ் இன்ஸ்பெக்டர் நமது கச்சேரிக்கு வருவார். அவரிடம் நீர் சரியாய் நான் சொன்னபடிக்கே வாக்குமூலம் கொடுத்தால் உமது வேலையைக் காப்பாற்றிக்கொண்டு மேன் மேலும் உயர்ந்த சம்பளம் பெறலாம். இல்லாவிட்டால் நாளை இராத்திரி சாப்பாடு உமக்கு ஜெயிலில்தான். வீணாய் வேலையை இழந்து உமது மனைவி, குழந்தைகள் எல்லோரையும் தெருவில் விட்டுவிட்டு, ஜெயில் வாசத்திற்கு ஆசைப்பட்டுக்கொண்டு நீதி சாஸ்திரம் பேச வேண்டாம். யோசித்து உமது இஷ்டப்படி செய்யும். ரூ 100 நோட்டு உம்மிடமே இருக்கட்டும்'' என்றுசொல்லிவிட்டு எழுந்து வெளியே சென்றார். கேசவராயரும் ரூ. 100 நோட்டுடனே வீடு சென்றார்.

II

கேசவராவ் யோசித்துக்கொண்டே தன் வீடு சென்றார். தாசில்தார் பெரிய பிடிவாதக்காரர் என்பது அவருக்கு நன்றாய்த் தெரியும். அவர் சொல்லியபடி செய்யாவிட்டால் தான் மறுநாளே போலீஸார் வசம் கைதியாக வேண்டி வரும் என்பதில் சந்தேகம் இல்லை. வீடுவந்து சேர்ந்ததும் கைகால்களை அலம்பிக்கொண்டு சந்தியாவந்தனம் செய்துவிட்டு, சாப்பிட உட்கார்ந்தார். உடனே அவர் மனைவி யமுனாபாய் தன் கடையை அவிழ்க்க ஆரம்பித்தாள். "உங்களைப்போல உத்தியோகத்தி லிருக்கிறவர்கள் எல்லாரும் இப்படித்தானா இருக்கிறார்கள்? நீங்களாகத்தான் ஒன்றும் செய்கிறதில்லையே. நானாவது எப்படியாவது குழந்தை துளசிக்கு ஒருதோடு வாங்கலாம் என்று யோசித்து என் அண்ணாவிடம் கொஞ்சம் கொஞ்சமாக வாங்கிச் சேர்த்து வைத்திருந்த ரூபாயையும் வாங்கிக்கொண்டு விட்டீர்கள். குழந்தையை எத்தனை நாள்தான் இப்படி ஒரு நகையுமில்லாமல் வைத்திருக்கிறது?'' என்று பின்னும் யமுனாபாய் சொல்லிக்கொண்டே போனாள். இவ்விதமான பிரசங்கம் நாள் தவறாமல் கேட்டு கேசவராவுக்கு வழக்கமாய்ப் போய்விட்டபடியால் முடியும்வரை பதில் ஒன்றும் சொல்லாமல் கேட்டுக்கொண்டேயிருந்துவிட்டுப் பிறகு, "இன்று யாராவது என்னைத் தேடி வந்தார்களா?'' என்று கேட்டார்.

"யார் வருகிறார்கள்? ஒருத்தரையும் காணோம். ஜவுளிக்கடைக்காரன்தான் வந்து பாக்கிப்பணத்தைக் கட்டாயமாய்க் கொடுத்து விடவேண்டுமென்று என்னென்னவோசொன்னான். நாளைக்குள் கொடுக்காவிட்டால் பிராது செய்து விடுவானாம்? அவனுக்கு ஏன் பாக்கி வைக்கிறீர்கள். கொடுத்துத் தொலைத்து விடுகிறதுதானே; அவன் வார்த்தைக்கெல்லாம் நானல்லவா ஆளாகவேண்டிவருகிறது"என்று யமுனாபாய் பதில் சொன்னாள்.

"கொடுத்துவிடலாம்"என்று சொல்லிவிட்டு கேசவராவ் மௌனமாய் இருந்தார். அதற்குள் குழந்தைகள் ரகுநாதன், லக்ஷ்மணன், கோபாலன், சத்தியப்பிரியன், துளசி, சாரதா, கங்காபாய் இவர்கள் எல்லோரும் வந்து அவர் தோள்களைக் கட்டிக்கொண்டு விளையாட ஆரம்பித்தார்கள். குழந்தைகளுடன் விளையாடுவதில் சிறிதுநேரம் தனது கவலைகளை யெல்லாம் மறந்திருந்தார். திடீரென்று தான் ஜெயிலுக்குப் போய்விட்டால்,அருமைக் குழந்தைகளைப் பிரியவேண்டிவருமே என்று ஞாபகம் வரவும் கேசவராவுக்கு அடக்கமுடியாமல் கண்ணிலிருந்துகரகரவென்று கண்ணீர் ததும்பி வடிய ஆரம்பித்தது. சரேலென்று வேறொருவரும் அதைப் பார்ப்பதற்குமுன், கண்களை துடைத்துக்கொண்டு சாப்பிட்டுவிட்டு, எழுந்திருந்தார். சாப்பிட்டானதும், குழந்தைகளை, படுக்கையில்

கறந்த பாலும் எச்சில், பிறந்த பிள்ளையும் எச்சில்.

படுக்கவைத்து அவைகளுடனே விளையாடிக் கொண்டே அவைகளைத் தூங்கப்பண்ணினர். தனது சின்னஞ் சிறுகுழந்தைகள் தன்னுடன் மேலே விழுந்து விளையாடிக்கொண்டிருப்ப தைப் பார்க்கப் பார்க்க, கேசவராயர் மனது படாத பாடு பட்டு என்னென்னவோ நினைக்க ஆரம்பித்தது. தன் வேலையையும் இழந்து, கடனில் மாட்டிக்கொண்டு தன் பெண்சாதி யையும் குழந்தைகளையும் நடுத்தெருவில் விட்டுவிட்டு, தானும் ஜெயிலில் அடைபட்டு, அப்படியாவது சத்தியத்தைக் காப்பாற்றுவிட்டால் தான் என்ன என்று யோசித்தார். இருந்தாலும் கண்ணால் காணுததை உண்மையென்று சொல்லி மற்றொருவரைத் தண்டனைக்கு உட்படுத்துகிறதென்றால் அதற்கும் மனது சம்மதிக்கவில்லை. மறுபடியும் யோசித்தார். யாருக்குத் தெரியும் உண்மை? ஒருக்கால் துரைசாமி ஐயர்தான் தஸ்தாவேஜை எடுத்திருந்தால் நாம் சாக்ஷிசொல்வதால் என்னகெட்டுப்போகிறது? அவர் உடுப்புகளையும் அலங்காரங்களையும் பார்த்தால், ஒருக்கால் அவர் ஏதோ லஞ்சம் வாங்கிக்கொண்டுதஸ்தாவேஜை எடுத்திருப்பார் என்றே தோன்றுகிறது. அவர்மேல் குற்றம் ஏற்பட்டாலும் அதனால் என்ன? அவருக்கோ குழந்தைகள் இல்லை. பெண்சாதியும் இறந்து போய்விட்டாள்."

இவ்விதம் புரண்டு புரண்டு யோசித்து கடைசியில் குழந்தைகளின்மேலுள்ள அபிமானம் என்னும் பாசம் பலமாய்க் கட்டியிழுக்க, அவர் மனது, தாசில்தார் சக்கரவர்த்தி ஐயங்கார் சொன்னபடி செய்ய உடன்பட்டது. "துரைசாமி ஐயர் தஸ்தவேஜை எடுத்து ஒரு புறமாய் வைத்துக்கொண்டார்" என்று மட்டும் வாக்குமூலம் கொடுத்துவிட்டு அதற்காகத் தாசில்தாரிடமிருந்து தனக்கு கிடைக்கும் ரூபாய்நூறையுங்கூட இனமாக எண்ணமல் சௌகர்யப்படி பின்னால்திருப்பிக் கொடுத்துவிடுகிறதென்றும் சம்பளம் உயர்ந்தால் அந்தப் பணத்தை துரைசாமி ஐயருடைய சௌகரியங்களுக்காகவும் மற்றும் தர்ம காரியங்களுக்காகவும் செலவு செய்துவிடுகிறதென்றும் கேசவராவ் தீர்மானித்து முடித்தார்.

அவர் யோசனையெல்லாம் முடிந்து படுத்துக்கொள்ள யத்தனிக்கையில், அவர் சிநேகிதரும் தாலூகா கச்சேரியில் மற்றொரு குமாஸ்தாவுமான பரமேசுவர ஐயர் வந்தார். வந்ததும் "ராவ்ஜி புறப்படும், மணி ஒன்பதரையாகப்போகிறது புறப்படும்" என்றார். "எங்கே போகப்போகிறீர்? நான் எதற்காக வரவேண்டும்?" என்று கேசவராவ் கேட்க, "சென்னப் பட்டணத்திலிருந்து வந்திருக்கும் பாரதி விலாஸ நாடக சபையார் இன்று இரவு நடத்துகிற அரிச்சந்திர நாடகத்திற்கு எனக்கு இரண்டு டிக்கெட்டுகள் வந்திருக்கின்றன. நாம் இரண்டுபேரும் போகலாம்" என்றார் பரமேசுவர ஐயர். கேசவராயருக்கு நாடகம் பார்ப்பதில் அதிக பிரியம். அவர் பள்ளிக்கூடத்தில் படித்தநாளில் மாதக்கணக்காக நாள் தவறாமல் நாடகம் பார்த்தவர். தாலூகா குமாஸ்தா பதவி கிடைத்தபின் வேலைத் தொந்தரவினாலும் கையில் பணம் இல்லாததாலும் அடிக்கடி நாடகங்களுக்குப் போக முடிகிறதில்லை. இருந்தாலும், நாடக ஆசைமட்டும் குறையவே இல்லை: பாரதி விலாஸ சபையில் பல கீர்த்திபெற்ற ஆக்டர்கள் வந்திருப்பதாயும் கேள்விப்பட்டிருந்தார். ஒரு நாளாவது போய்ப் பார்க்கவேண்டும் என்று உத்தேசித்திருந்தார். பணம் இல்லாத குறையினால் போக முடியவில்லை. இலவசமாய் டிக்கட்டுடன் வந்து பரமேசுவர ஐயர் கூப்பிட்டதும் ராயர் உடனே தன் சட்டையை எடுத்துப் போட்டுக்கொண்டு புறப்பட்டார்.

III

சக்கரவர்த்தி ஐயங்கார் கேசவராயரை தன் வீட்டிற்கு உள்ளே அழைத்துக்கொண்டுபோய் ரகசியம் பேசும்போது பத்மாசனியம்மாள் டிப்டி கலெக்டர் வீட்டிற்குப் போய்விட்டாள் என்று சேவகன் சொன்னதாக மேலே எழுதியுள்ளது இதைப் படிப்போருக்கு ஞாபகம் இருக்கும். ஆனால் சேவகன் சொன்னது சரியல்ல. பத்மாசனியம்மாள் அதற்கு சற்று முன்னால் டிப்டிகலெக்டர்வீட்டிலிருந்து திரும்பிவந்து விட்டாள். சக்கரவர்த்தி ஐயங்காரும், கேசவராயரும் பேசிக்கொண்டிருந்த அறைக்கு அடுத்த அறையில் தன் நகைகளைக் கழற்றி இரும்புப் பெட்டிக்குள் வைத்துக் கொண்டிருந்தாள். தன் புருஷனும் கேசவராயரும் பேசினது எல்லாம் அவள் காதில் விழுந்தது. அவர்கள் சொற்களை யெல்லாம் அவளும் கவனமாகவே கேட்டாள். துரை

சாமி ஐயரைப்பற்றி தன் புருஷன் சொன்ன வற்றைக் கேட்டதும், அவர்மேல், தன் புருஷனுக்கு ஏதோ துவேஷம் ஏற்பட்டிருக்கிறது என்பது அவளுக்கு நன்ருய் விளங்கிற்று. ராயரைவீட்டிற்குஅனுப்பினதும்சக்கரவர்த்தி ஐயங்கார் ஒரு சேவகனைக் கூப்பிட்டு "அடே போலீஸ் இன்ஸ்பெக்டர் வீட்டிற்குப் போய் விட்டு அங்கிருந்தே டிப்டி கலெக்டர் வீட்டிற்குப்போய் அங்கேயே சாப்பாடு செய்துகொண்டு பிறகு வருகிறேன். அம்மாள் வந்ததும், எனக்காக சாப்பாட்டிற்கு காத்திருக்கவேண்டாம் என்று சொல்லு" என்று சொல்லிவிட்டு வெளியே போனர். பத்மாசனி தன் நகைகளை யெல்லாம் எடுத்து இரும்புப் பெட்டிக்குள் வைத்துவிட்டு, பெட்டியை மூடப்போகும்போது அடித்தட்டில் ஓரத்தில் ஒருமடித்த காகிதம் இருந்ததைப் பார்த்தாள். அது புதிதாக இருந்ததால்அதை எடுத்துப் பிரித்துப் படித்துப் பார்த்தாள். அது கிழக்கு உத்தர வீதியிலிருக்கும் குழந்தையன்செட்டியாருக்கு நத்தர்சா ராவுத்தர் ரூ. 1000-க்கு எழுதிக் கொடுத்த தஸ்தவேஜாக இருந்தது.எந்தப் பத்திரத்தை எடுத்துக் கொடுத்துவிட்டதாக துரைசாமி ஐயர்மேல் பழிசுமற்ற தன் புருஷன் உத்தேசித்தாரோ, அந்தப் பத்திரம், தன் இரும்புப் பெட்டியிலேயே வந்திருப்பது ஆச்சரியமாக இருந்தது. அதை அந்தப் பெட்டியில் கொண்டுவந்து வைக்கக்கூடியவர் தன் புருஷனைத்தவிர வேறு ஒருவருமில்லை. அவரே அந்த தஸ்தவேஜை எப்படியோ கச்சேரியிலிருந்து கொண்டுவந்து வைத்துவிட்டு, அது விஷயமாய்ப் பத்திரத்தின் சொந்தக்காரன் மனுச்செய்ததைக் குறித்து விசாரணை செய்வதுபோல் செய்து சாக்ஷிகளையும் சிருஷ்டித்து துரைசாமி ஐயரைக் கெடுக்க ஒரு சூழ்ச்சி செய்திருக்கிருர் என்பது பத்மாசனியம்மாள் மனதில் ஸ்பஷ்டமாய் விளங்கிற்று. துரைசாமி ஐயர் தன் வீட்டிற்கு அடிக்கடி வருவதும் பத்மாசனியுடன் பேசுவதும் தனக்குப் பிடிக்கவில்லை யென்று ஐயங்கார் இரண்டொருதரம் ஜாடையாகக் குறிப்பிட்டதும் அவள் ஞாபகத்திற்கு வந்தது. அவர் அப்படிக் குறிப்பாய்க் காட்டின காலத்தில் பத்மாசனியம்மாள் அதைக் கவனிக்கவில்லை. அதையே மனதில் வைத்திருந்து துரைசாமி ஐயரை முற்றிலும் கெடுக்கத் தன் புருஷன்செய்யும்ஏற்பாடுகளைத் தெரிந்துகொண்டவுடனே திடீரென்று தன் பேரிலும் துரைசாமி ஐயர்பேரிலும் தன் புருஷன் வித்தியாசமான எண்ணங்கொண்டிருப்பது பத்மாசனி அம்மாளுக்கு விளங்கிற்று. அவர் அப்படி எண்ணங்கொண்டதும், அதனால் துரைசாமி ஐயரைக் கெடுத்துவிட பொய் கேஸ் சிருஷ்டிப்பது மனதில் பட்டதும், பத்மாசனியம்மாளுக்குத்தாங்கமுடியாத துக்கமும் கோபமும் உண்டாயிற்று. இதற்கெல்லாம் தானே காரணமாயிருப்பதையும் நினைத்துக்கொண்டு மேலே என்ன செய்வது என்று யோசித்தாள். தான் தெரிந்துகொண்டதை, தன் புருஷனிடம் தானே நேரில் சொல்லி, மேல் நடவடிக்கையை நிறுத்தும்படி கேட்டுக்கொண்டால் அவருக்கு சந்தேகம் அதிகரிப்பதுமல்லாமல், வீண் மனவருத்தமும் ஏற்படும் என்பதையும் உணர்ந்தாள். குற்றமொன்றும் செய்யாத துரைசாமி ஐயராவது கேசவராயராவது தண்டனைக்கு உள்ளாவதை எப்படியும் தடுத்துவிடவேண்டும் என்றும் தீர்மானம் கொண்டாள். எப்படி அதை நிறைவேற்றலாம் என்று வெகுநேரம் யோசித்துப் பத்மாசனியம்மாள் கடைசியாய் ஒருவிதம் மனதை திடப்படுத்திக்கொண்டாள். இரும்புப் பெட்டியைப் பூட்டிவிட்டு தஸ்தவேஜை கையில் எடுத்துக்கொண்டு அந்த அறையை விட்டு வெளியே வந்தாள்.

* * *

IV

பாரதி விலாச நாடக சபையில் அன்றிரவு அரிச்சந்திர நாடகம் வெகுஅழகாய் நடந்தது. அன்று நடித்த வேஷதாரிகள் எல்லோருமே தங்கள் தங்கள் பாகங்களை வெகுநன்ருய் நடித்தார்கள். அதிலும் அரிச்சந்திர வேஷம்பூண்ட அரங்கநாத முதலியாரும், சந்திரமதி வேஷம் பூண்ட சபாபதி முதலியாரும், விசுவாமித்திர வேஷம்பூண்ட பசுபதி ஐயரும், மற்ற எல்லாரையும் காட்டிலும் மேலாக வெகு அற்புதமாய் நடித்தார்கள். அவர்களுடைய திறமையிலும் இடத்திற்குப் பொருந்திய பாடல்களிலும் உயர்ந்த ஆடல்களிலும் கேசவராயர் முழுதும் ஈடுபட்டுத் தன் சொந்தக் கவலைகளை யெல்லாம் மறந்துவிட்டார். அரிச்சந்திரன் வீரபாகுவின் அடிமையாக, சுட

லைக் காத்துக்கொண் டிருக்கையில், பாம்பு கடித்து இறந்த தன் மைந்தனைக் கொண்டு வந்து போட்டு தீமூட்ட யத்தனிப்பவள் தனது தர்மபத்தினி என்று தெரிந்து, அவளை அவள் யஜமானனிடம் போய் கொள்ளிக் காசு வாங்கி வரும்படி அனுப்பிய இடம் வந்தது. அவள் சென்றபின், விசுவாமித்திரர் அரிச்சந்திரனிடம் மறுபடிவந்து சம்வாதம் தொடங்கினர். அந்த கட்டத்தை நடிக்கும்போது வெகுஉருக்கமாக இருந்தது. முனிவர் "அப்பா ஒரு பொய் சொல்லிவிட்டால், உன் துன்பம் எல்லாம் பறந்துபோகும். உன் மனைவி அடிமைத்தனம் நீங்குவாள்; இறந்து பிரேதமாகக் கிடக்கும் உன் அருமைச் சிறுவன் உயிர்பெறுவான். நீயும் உன் நீசத்தொழிலைவிட்டு உனது நாட்டைப் பெற்று, எல்லா சம்பத்தையும் ராஜ்ய லட்சுமியையும் அடைவாய். ஏன் இதை யெல்லாம்விட்டு துன்பத்திற்குமேல் துன்பமாகத் தேடிக்கொள்கிறுய் ?. ஒரேவார்த்தை சொன்னுல் போதும். அப்பா சொல்லிவிடு!" என்று அரிச்சந்திரனை வேண்ட, நாடிழந்து பெண்டிழந்துதன் செல்வக்குமரனையும் பறிகொடுத்து, தானும் நீசனுக்கு அடிமைப்பட்டும் புன்தொழிலில் அமர்ந்தும், மனவலிமையும் சத்தியத்தினிடம் உள்ள பற்றுதலும் சிறிதும் தளராத அவ்வரசன் சற்றும் யோசியாமல் முகத்தில் கொஞ்சமும் வாட்டமின்றி கம்பீரமாய் "முனிசிரேஷ்டா! நானும் என் பத்தினியும் கைக்கொண்டிருக்கும் பொய்யாமை விரதம் எங்கள் உயிரினும் பெரிது. எது காரணங் கொண்டும், நாங்கள் அதைக் கைவிடோம். இந்த உலகத்தில் நாங்கள் இதுவளா இவ்வளவு பாடு பட்டதோடு இனிமேலும் என்னபாடு படும்படி நேர்ந்தாலும் சரி, நாங்கள் உயிர் துறந்தபின்னும் லோகாந்தரங்களில் என்ன துன்பங்களெல்லாம் படவேண்டி நேர்ந்தாலும் சரி, சத்தியத்தைமட்டும் நாங்கள் கைவிடோம். இதுமட்டுமல்ல. நாங்கள் இவ்விதம் சத்தியத்தைக் காப்பாற்றுவதால் மேலுலகத்தில் எங்களுக்கு ஸ்வர்க்கம் கிடைக்கும் என்று நம்பியிருப்பது பிசகாக இருந்துசத்தியத்தைப்பாராட்டினதற்குப் பலனுக நாங்கள் இறந்தபின் கொடிய நரகத்தில் வீழும்படிக்கு ஏற்பட்டாலும் அப்படிநரகில்புக சம்மதிப்போம். சத்தியத்தை மட்டும் எவ்விதத்திலும் கைவிடமாட்டோம். தபோநிதே! தாங்கள் அடியேனைச் சோதிக்கத் திருவுளம் கொண்டிருக்கிறபடியால், தாங்கள் எங்களை எவ்வளவுதூரம் பரீக்ஷித்தாலும் எல்லாம் தங்கள் கிருபை என்றுகொண்டு எல்லா வற்றிற்கும் உட்படுகிறேம். சத்திய நெறியினின்றும் சிறிதும் தவறேம். இனி தங்கள் கிருபை என்று சொல்லி விசுவாமித்திரர் பாதங்களில் விழுந்து பணிந்து, பின் எழுந்து கை கூப்பி நின்ருன். அரிச்சந்திரன் வார்த்தைகள் கேசவராயர் செவியில் படவும், அவருக்கு தன்னை அன்று சாயந்திரம் சக்கரவர்த்தி ஐயங்கார் பொய் வாக்குமூலம் கொடுக்கும்படி கேட்டதும், தான் முதலில் அதற்கு உடன்படாவிட்டாலும் தன் வீட்டிற்குவந்து குழந்தைகளைப் பார்த்து பின் அதற்கு இணங்கி விடுகிறதென்று தன்மனதில் நிச்சயம் செய்து கொண்டதும் நினைவு வந்தது. நாட்டையும் பெருஞ் செல்வத்தையும் இழந்து, தானும் தன்மனைவியும் அடிமைபூண்டு பிறர் ஏவலைச் செய்து வாழ்ந்து, மைந்தனும் இறக்கநேரிட்ட அத்தருணத்திலும் சத்தியத்தைக் காப்பதே தலை என்றுகொண்டு ஒரு சிறு பொய் வார்த்தை சொல்ல மறுத்துவிட்ட அரிச்சந்திரனுடன் சுவல்ப சம்பத்தை இழந்து கடனுக்குட்பட்டு காவல்படுவதைத் தடுப்பதற்காக மனமாற நிரபராதியான தன் சிநேகிதர்பேரில் குற்றம் சாட்டிப் பொய் வாக்குமூலம் கொடுக்கத் துணிந்த தன்னை ஒப்பிட்டுப்பார்க்க அவருக்கே தாங்க முடியாத வெட்கம் உண்டாயிற்று. உடனே என்னகெடுதிகள் வந்தாலும் தான் பொய் சொல்லுவதில்லை என்று தேறி, மறுநாள் நடக்கும் போலீஸ் விசாரணையில் உண்மையாய் நடந்து கொள்கிறதென்று தீர்மானித்தார்.

(இக்கதை அடுத்த சஞ்சிகையில் முடிவு பெறும்)

:: பஞ்சாங்கம் ::

புதிய பதிப்பு::அழகிய ஆப்டோன் படங்களுடன்

இதில் சீதை, ருக்குமிணி, சகுந்தலை, தமயந்தி, சாவித்திரி முதலிய ஸ்திரீ ரத்தினங்கள் ஐவரின் சரித்திரம் மிகவும் அழகிய நடையில் எழுதப்பட்டுள்ளது. ஸத்தியப் பிரவர்த்தி, தர்ம சிந்தனை, கற்பு முதலிய அரிய குணங்கள், இவர்கள் சரித்திரங்களால் போதிக்கப்படுகின்றமையால், இவைகளை நமது சிறுவர்களுக்கு இளம் பிராயத்திலேயே கற்பிப்பது பெரு நன்மை விளைக்கும். விலை அணு 12.

கறுமுறுகாந்தப் படலம் வாசிக்கிறுர் கவிராயர்.

கம்பரும் ஸ்ரீராமபிரானும்

KAMBAN AND SRI RAMA

[ஸ்ரீமான் வி. வி. ஸ்ரீனிவாஸாசாரியாரவர்கள், பி. ஏ., பீ. எல்.]

(17-ம் பக்கத் தொடர்ச்சி.)

தாய்வாங்கொளத் தந்தை யேவலால்
மேயநங்குலத்தரும மேவினேன்.
நீவரங் கொளத்தவிர்தமோர்மையோ
ஆய்வரும் புலத்தறிவு மேவினாய்''

இளைய பெருமாள் பெருமாளுக்குத் தீங்கிழைத்துக் காடேகும்படி செய்ததாக நினைத்து சிற்றன்னைபாலும் பிதாபாலும் தருமத்தை மறந்து கோபங்கொண்டு கூறிய கோபவார்த்தைகளைக் கேட்டு அவர் தவறுதலாய் உளறுகிறார் என்று சொல்ல லஜ்ஜைப்பட்டவராய் நம் கதாநாயகனும்,

"வாய்தந்தன கூறுதியோ மறைதந்தநாவால்"

என்று எதிர் மறையாய்க் கூறி அவ்விளையாழ்வானின் கோபத்தை ஆற்றுகிறார் பாரீர்.

அயோத்தியில் வாழும் சகல ஜீவராசிகளுடையவும் பரதனுடையவும் துக்கத்திற்காற்றாதவராய் வசிஷ்டரும் ஸ்ரீராமபிரானைக் காடுவிட்டு நாடு வரும்படி கேட்டுக்கொண்ட வார்த்தை நம் பிரபுவிற்கு குதூகலம் கொடாது வெறுப்பைத் தந்து அவர் வாயிலிருந்து இப்பாசுரத்தை வெளிப்படுத்திற்று.

"சான்றவராக தன்குரவாகதாய்
போன்றவராக மெய்ப்புதல் வராகதான்
தேன்றருமலருளான் சிறுவ செய்வனென்
றேன்றபின்னவ்வுரை மறுக்கு மீட்டதோ"

இப்பாவின்கண் வசிஷ்டரை விளிப்பதற்கு தேன் தருமலருளான் "சிறுவ" என்று கூறி "சிறுவ" சப்தம் பிரயோகிக்கிறார் பிரபு. தன்னைக் காடு துறந்து நாடுவரும்படி கேட்டதால் அந்தப் பிரம்மஞானியும் இயற்கையில் பெருந்தன்மையாய்க் கூறும் தருமவார்த்தைகளை மறந்து "சிறிய தன்மையின் பாற்படும் தையாடினார்" என்று பொருள் தொனிக்கும்படி "தேன்றரு மலருளான் சிறுவ" என்று கூறியருளியதும் உற்று நோக்குவீர்.

இவ்விதமே தன் வாழ் நாள் முழுதும் தர்ம பரிபாலனம் செய்வதில் தனக்கு நேர்ந்த சங்கடங்களையும் மனக்கிலேசங்களையும் தாக்ஷிண்யத்தையும் எதிர்பாராது ஓரேவிரத முடையவனாய் அனுஷ்டித்துக் காட்டி நின்றான் ஸ்ரீராகவன்.

இராவணன் ராஜ்யத்தில் சில காலம் வசித்திருந்த போதிலும் மகாபதிவிரதா சிரோமணியாய் விளங்கி அவ்விவரத்துக்கு ஆஞ்சனேய சாக்ஷயமும் பலமாய் ஏற்பட்டிருக்கவும் உலகத்தார் "இவள் பதிவிரதா தர்மத்தை நழுவவிடாது அநுஷ்டித்தவளே" என்று கொள்ளும்படி செய்யவேண்டியது "தருமம்" என்று கடைப்பிடித்தவராய்க் கருணா நிதியான பிரபுவும் மிகுந்த கோபத்துடன் அப்பிராட்டியை அக்னிப்பிரவேசம் செய்யும்படி ஆஜ்ஞாபித்த சங்கதியும் இவ்விடம் நாம் தெளிந்தோம்.

இது நிற்க, இளையபெருமாள் அநுஷ்டித்துக் காட்டிய, தர்மத்தைப்பற்றியும் இவிடம் இரண்டொன்று கூறுவாம். சக்ரவர்த்தி திருமகனுக்குக் கைங்கரியம் செய்வதையே பரம புருஷார்த்தமாகக் கொண்டு அவனைப் பின்பற்றிச் செல்லவிருக்கும் தருவாயில் இளைய பெருமாளைப் பார்த்து ஈன்றவளாம் சுமத்திரையும்,

ஆகாத் தன்று லுனக்கவ்வன மிவ்வயோத்தி
மாகாத விராமனம் மன்னவன் வையமீந்தும்
போகாவுயிர்த்தாயர் நம்பூங்குழற் சீதை யென்றே
ஏகாயினியிவ்வயினிற்றலு மேத மென்றாள்''

என்றும்

"பின்னும் பகவான் மகனே யிவன்பின் செறம்பி,
என்னும் படியன் றடியாரினி லேவல் செய்தி பின்
னும் நகாக்கே யிவன் வந்திடில் வாவதன்றேல், முன்
னம் முடியென் றனள்பால் முலைசோர நின்றாள்."

என்று அப்பெருமான் அநுஷ்டிக்கவேண்டிய தர்மத்தைக் கூறுகிறாள். சக்ரவர்த்தி திருமகனை பிதாவாகப் பாவித்து அவனுக்கு அடியாரின் ஏவல்செல்து அவன் இத்திருவயோத்திக்கு யெழுந்தருளினால் நீயும் இவிடம் வரக்கடவை; இல்லாத பக்ஷத்தில் நீ அவனுக்கு முன் முடியக்கடவாய் என்று கூறியருளுகிறாள் இப்பாசுரங்களால். இவ்விதம் தன் குமாரனைப் பார்த்து கூறியருளியது இயற்கைக்கு மாறாக விருக்கிறதே (Unnatural) என்றுசங்கிக்க இடங்கொடாதவராய் குழந்தைபாலுள்ள வாத்ஸல்யத்தை அன்னாள் மறக்கவில்லை என்பார்; பான் முதல் சோரநின்றாள்" என்றார் கவியும். ஆனால் இளைய பெருமான்

அனுஷ்டிக்கவேண்டிய தர்மத்தைச் சொல்ல வந்ததாதலின் இங்ஙனம் கூறினளென்க. ஆகவே இவிடமும் தர்மத்தின் கொடிய தன்மை கண்டோம். இந்தத் தர்மத்தை இளையாழ்வார் கைக்கொண்டு மாதுர்வாக்கிய பரிபாலனம் செய்த அழகையும். கம்பர் தாமே மிகுந்த ஞாபக சக்தியுடன் பின்னர் எடுத்துக் காட்டுகிறார் பாரீர்.

"ஒருக்காலமும் தம்பி என்று நீ கருதாது அடியாரினேவல் செய்தி" என்று கூறிய தாயார் பாசுரத்தை உட்கொண்டவராய் சுக்ரீவ மகாராஜனிடம் தன்னுடையவும் ஸ்ரீராகவனுடையவும் வரலாறு கூறுமிடத்து.

"அன்னவன் புதல்வனுமிவ்வாண்டகை அன்னையேவத்
தன்னுடையுரிமைச் செல்வம் தம்பிக்கே தகவினல்கி
நன்னெடுங்கானம் சேர்ந்தான் நாமமு மிராமனென்பான்
இந்நெடுஞ் சிலைவலானுக்கேவல் செய்யடியன்யானே"

"ஏவல் செய்யடியன் யானே" என்று தாயார் கூறிய "அடியாரினேவல் செய்தி" என்ற அடியை ஒற்றிக் கூறியருளுகிறார்.

இவ்விதமே பிரமாஸ்திரப் பிரயோகத்தால் இரண்டு மூர்த்திகளும் மூர்ச்சையடைந்து கிடக்கும் அவஸ்தையை பிராட்டிபார்த்து பிலாபிக்கும் சமயத்தில் இளயபெருமாள் சக்கரவர்த்தி திருமகனுருக்கு முன்பே பிராணனை விட்டிருத்தல் நிச்சயம் என்று அவள் சரீரக் குறிமுதலிய லக்ஷணங்களாலும் அறிந்து அப் புண்ய புருஷன் முன் தாய்கூறிய தர்மவார்த்தைகளைக் கேட்டு அவ்விதமே நடந்து பிராண வியோக மடைந்தனன் என்று தெளிந்து,

"மேதாவிளையோய் விதியார்வினைவால்
போதாநெறியெம்மொடுபோதுறுநாள்
மூதானவன் முன்னர் முடிந்திடெனும்
மாதாவுரையின் வழிநின் றனையோ"

என்று கூறி அம்மகான் அனுஷ்டித்துக்காட்டிய தருமத்தை மிகவும் வியந்து வெளியிடுகிறாள். ஆகவே தர்ம லக்ஷணத்தையும் அதை அனுஷ்டித்துக் காட்டிய பரம புருஷர்களின் பெருமையையும் பிரதிப் பிரயோஜனம் எதிர் பாராது இவ்வுலகத்தோர் பயன்படுமாறு அமிழ்தினுமினிய பாசுரங்களால் நிருபித்து "நீதிக்கடலாம்" ராமாயணத்தின் அருமையை வெளியிடுகிறார் கவி சக்கரவர்த்தியாம் கம்பர்.

வஸந்த மந்திரம்

(தொகுதி XI, 383-ம் பக்கத் தொடர்ச்சி.)

எட்டாம் அத்தியாயம்

அரண்மனையில் குழப்பம்

இதற்குள் அரண்மனைச் சேவகர்களும் ஜனங்களும் தமக்கு இஷ்டம்போல் சமாசாரங்களைத் தாராளமாய்ப் பரப்பத் தொடங்கினர். ஸிந்துபாக்ஷாவின் சேனை புறப்பட்டு வந்துவிட்டது; இனி உதயபுரியை எதிர்ப்பது தான் பாக்கி என்று ஒருபுறம் வதந்தி. இன்னொருவன் "அப்படியில்லை; நமது பிரதாபசிங்கருக்கு உதவியாய் ஜயபாலராஜா வந்தபோது அவர் சேனையைத் துருக்கர் வளைத்துக் கொண்டு தோற்கடித்துவிட்டார்களாம். இப்பொழுதுதான் நமது தேசத்தை நோக்கி வருகிறார்களாம்." மற்றொருவன் "யுத்தமு மில்லை ஒன்றுமில்லை: ஏன் அப்பா! வீண் சண்டை போடுகிறீர்கள்: அந்தத் துலுக்கன், மாது சிரோமணியான லலிதையைக் கல்யாணம் செய்துகொள்ள வேண்டும் என்கிறானாம், அதற்குப் பிரதாபசிங்கர் சம்மதிக்கும்படி செய்யப் பெரிய சேனையுடன் படையெடுத்து வருவதாக பாவனை செய்கிறானாம்; நமக்கு ஒன்றும் பயமில்லை; ஏன் வீணில் கத்துகிறீர்கள்!"

முதலில் பேசினவன் "இருக்கலாம். நானும் ஏதோ கலியாணத்தைப்பற்றிக் கேள்விப்பட்டேன். ஆனால் ஜயபாலனுக்கே நமது லலிதையைக் கொடுப்பதாகத் தீர்மானமாய்ச் சொல்லிக்கொண்டார்களே!"

மூன்றாமவன் "எதுதான் ஐயா நிஜமான சங்கதி. நமது தீர்மானத்தை யார் கேட்கிறார்கள்? அந்தத் துலுக்க ராஜனைக் கேட்டா இவர்கள் தீர்மானம் செய்தது! அவன் இஷ்டப்படி அவன் செய்கிறான்!"

இரண்டாமவன் "செய்யட்டும்; செய்யட்டும்; நமது லலிதையைத் துலுக்கன் மணந்து போக வேண்டுமானால் நாம் எல்லோரும் உயிர் இழந்த பிறகேயல்லவா முடியப் போகிறது பார்த்துக்கொள்வோம். மங்கள நாயகர் இருக்கின்றவரையில், நமது சேனைகளுக்கு என்ன பயம்" என்று இவ்வாறு பொய்யும் நிஜமும் கலந்து சரமாரியாய் அவர் அவர்கள் இஷ்டப்படி மொழியவே, வெகுவாய்ப் பயந்த

காசி இரண்டு எழுத்துத்தான் காண எத்தனைநாட் செல்லும்.

பெண்டிர்களுக்கும், கிழவர்களுக்கும் ஒன்றும் தோன்றவில்லை.

படிப்படியாய் சமாசாரம் லலிதையின் காது வரை எட்டியது. இதுவரையில் ஒரு சமாசாரமும் தெளிவாய்த் தெரியவில்லை லலிதைக்கு. அவளும் தைர்யமாய்த் தகப்பனுரை யாவது தாயாரையாவது விசாரித்தவள் அல்லள். அவர்களும் குழந்தையை அதிகமாய்ச் சந்தித்துப் பேசவில்லை. மன்மதன் பாணத்தால் மனம் புண்பட்டு ஏங்கி அறையோடு ஒடுங்கிக்கிடந்தாள். சில சமயங்களில் தலை கால் இல்லாமல், ஏதோ சந்தேகமாக துருக்கர்களால் தேசத்துக்குத் தொந்தரவு வரும்போல் இருப்பதாக சமாசாரம் வரும். அதற்குள் தனது கல்யாணம் நிறைவேறுமோ என்று ஏங்குவாள்! இராஜபுதனத்துக்குத் துருக்கரால் கேடு விளையுமெனில் ஜயபாலராஜனும் மற்ற இராஜபுத்திரர்களும் ஒன்று சேர்ந்து உதவிசெய்ய மாட்டார்களா? மேனுள் இராஜபுதனத்தின்பொருட்டு இராஜபுத்திரர் ஐக்கியமாய் எதிரியுடன் போராடவில்லையா?" என்று இவ்வாறு மனம் தேறுவாள்.

இங்ஙனம் நற்காரியத்துக்கு இடையூருக வந்து முன் நிற்கும் பிரதிபந்தங்களை எண்ணி எண்ணி விசாரப்படும் லலிதைக்கு இன்று ஜனங்களின் வதந்தியெல்லாம் காதில் பட, அவள் மனம் எங்ஙனம் பதைக்குமென்பதை மனதில் நினைப்பதும் அசாத்தியமே. நெருப்பில் விழுந்த புழுப்போலத் துடிப்பாள். சிறிதுநேரம் பொறுத்துத் தனது தாதிகளையும் தோழிகளையுட் வெளியே அனுப்பிவிட்டு தன்னந்தனியே உட்கார்ந்து சிந்திப்பாள். "என்பொருட்டு இத்தேசத்துக்கும் என் பெற்ருேர்களுக்கும் என்னருமைக் காதலருக்கும் ஆபத்து வருவதா யிருந்தால் அதைத் தடுக்க யான் என்ன செய்ய வேண்டும் இப்பொழுது? என் முன்னேரான இராஜபுத்திரிகள் தங்கள் தைரியத்தால் இராஜ்யங்களைக் காப்பாற்றியுள்ளனர். யான் அறியாப் பெண்போல் அழுதுகொண்டு நிற்பதும் தகுதியோ! என் அருமைத்தோழி புஷ்பவல்லியை அழைத்துச் சங்கதிகளை செவ்வையாய் அறிந்துவரச் சொல்லுகிறேன் முதலில்! பிறகு செய்வன திருந்தச் செய்வோம்! இராஜராஜேசுவரீ! என் கவலையை அகற்றுவாய்; வீர ராஜபுத்திரரின் வலிமையையும் பொறுமையையும் எனக்கு அளிப்பாயாக! அலையிற் சிக்கிய ஓடம்போல் நிலைதடுமாறும் என் உள்ளத்தை நங்கூரம் பாய்ச்சிய கப்பலைப்போல் நிலை பெற்றதாகச் செய்வாய், அம்மையே!" என்று கைகூப்பி அம்மையைத் தொழுது விட்டு, புஷ்பவல்லியைக் கூப்பிட்டாள்.

இதற்குள் சுமதியும் வீரேசனும் அரண்மனை வந்து சேர்ந்தனர். அவர்களுக்காக ஒரு முறை கதையைத்திரும்ப உரைத்தனர். என்ன சொல்வான் மந்திரி! அவனுக்கு ஒன்றும் தோன்றவில்லை. அரசன் "சுமதி, இனி இதைப் பற்றி விசனிப்பதில் பயனில்லை. எதிரியை எதிர்ப்பதற்குத் தக்கபிரயத்தனம் செய்யவேண்டியதுதான். மங்கள நாயகருடன் யோசனை செய்து எந்த எந்த சேனை எங்கெங்கு இருக்க வேண்டுமோ அவ்விடத்திற்கு அனுப்புங்கள். இன்னும் என்ன செய்ய வேண்டியது இச்சமயத்தில்—?"

மந்திரி "வீரபத்திர மகாராஜனுக்கு இப்பொழுதே ஒரு தூதனை சுகுணபுரத்திற்கு அனுப்புகிறேன். நமது ஒற்றர்கள் நாளை வருகின்ற முறையாதலால் ஜயபாலராஜனதுசேனை புறப்பட்டுவிட்டதாவென்பதும், எங்கே தங்கியிருக்கின்றதென்பதும், என்று இங்குவந்து சேருமென்பதும் தெரியவரும். துருக்கசேனை புறப்பட்டிருந்தால் அந்த விவரமும் நாளைய தினந்தான் தெரியவரும். இதற்குள்ளாகவே கணவாய்களைக் காப்பதற்குத் தக்க சேனை அனுப்பும்படி உத்தரவு செய்வோம். நாம் ஒரு மாதமாய் யுத்தத்துக்குப் பிரயத்தனம் செய்து கொண்டிருப்பதால் யாதொரு பயமும் இல்லை" என்ருன்.

அரசன் "சுமதியாரே! அப்படிச் சொல்ல வேண்டாம். தினமும் அந்த ஆமத் பாக்ஷாவின் சேனை யுத்தத்துக்குத் தயாராய் இருக்கின்றது. ஆயினும் எண்ணித் துணிக கருமம் துணிந்தபின் எண்ணுவ மென்பது இழுக்கேயல்லவா?' ஈசன் இருக்கின்ருன். அவன் ஆணையின்றி அணுவும் அசைவதில்லை. நாம் செய்வதென்ன விருக்கின்றது? இனிப் புறப்பட்டுப்போய் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வோம். நாளை காலையில் நமக்கும் ஆமத் பாக்ஷாவுக்கும் நடந்த இராஜாங்க விஷயங்களைச் சுருக்கமாயும், இப்பொழுது அவனுக்

கும் நமக்கும் விரோதம் ஏற்பட்டிருக்கின்ற சங்கதியையும் பகிரங்கமாய்ப் பறையறைவிக்க வேண்டும். நமது பிரஜைகள் எதிரிகளோடு, யாதொரு வியாபாரமும் வைத்துக் கொள்ளக் கூடாதென்பதும் அவர்களுக்கு எடுத்துக் காட்டவேண்டும். ஜனங்களுள், பிராமணர்கள் தவிர, இதர ஜாதியார் 25 வயதுக்கு மேல்பட்டவர்களும், 45 வயதுக்கு உட்பட்டவர்களும் கூப்பிட்டபோது தண்டுகளில் சேர்ந்து சண்டை செய்யத் தயாராய் இருக்க வேண்டும் என்பதும் எல்லாரும் அறிய வேண்டியது. இனிச் செல்வோம்" என்று மந்திரிகள் இருவரும் முன்செல்ல அரசன் பின் தொடர்ந்தான்.

* * *

இரவில் நாழிகை 12க்குமேல் இருக்கலாம். அரண்மனையில் இன்னும் ஒருவரும் போஜனம் செய்யவில்லை. லலிதை ஸ்நானம் செய்து பூஜை முடித்து, கவலையில் ஆழ்ந்தவளாய்த் தன் அறையில் முன்னும் பின்னும் உலாவுகிறாள். கூந்தல் அவிழ்ந்து தொங்குகின்றது. இவ்விளம்பிராயத்தில் இத்துணை கவலைக்கு ஆளாக வேண்டியதென்ன இப்பெண்மணி! இதைத்தான் பூர்வகர்மத்தின் பயன் என்கிறார்களோ! எப்பொழுதோ செய்த கருமத்தின் பயனை யாதொன்றும் அறியாத இப்பேதைப் பெண்மணி இப்பொழுது அநுபவிக்க வேண்டுமென்று ஈசன்கட்டளையிடுவது நியாயமோ! என் செய்வது! முறையிடுவதனால் பயன் உளதோ?

"நாற் குணமும் நாற்படையா ஐம்புலனும் நல்லமைச்சா, ஆர்க்கும் சிலம்பே யணி முரசாவேற்படையும் வாளுமே கண்ணுவதநமதிக். குடைக்கீழாளுமே பெண்மையரசு" என அழகும்கம்பீரமும்,நிரம்பிய லலிதை,வாடிய முகத்துடன் உலாவுவதைப் பார்த்தால் அசோகவனத்தில் அழுதுகொண்டிருந்த சீதைதானோ இவள் என்று பார்ப்போர் ஐயமுறுவார்கள்.

அரண்மனையின் அலங்கோலம் சொல்லி முடியாது. விஷயம் தெரிந்த இராணி, எழுந்து நடக்கவும் ஆற்றாதவளாய், அரசன் வரவை எதிர்பார்த்திருந்தாள். நாழிகைக்கு நாழிகை பறையறைய வேண்டியவர்கள்கூட தத்தம் தொழிலை மறந்து மனோராஜ்யம் செய்து கொண்டு சும்மா உட்கார்ந்திருந்தனர். கோட்டையுள் நுழைகின்றவர்களையும் வெளியே போகின்றவர்களையும் 'யார்?' என்று கேட்கக்கூட சேவகர்கள் கிடையாது. முகுந்தனுடைய ஆயுதசாலைதவிர வேறு எங்கேயும் ஒரு வேலையும் நடக்கவில்லை அன்று சாயந்திரம் முதல்! முகுந்தனும் அவனுடன் வேலை செய்கிறவர்களும், இருப்போர், வருவோர், போவோர், இவர்களைக் கவனியாது தம் தொழிலைத் தப்பாது சரியாய்ச் செய்யும் சூரிய நக்ஷத்திரங்களும்போல், தம் வேலையைக் கவனத்துடன் நடத்திவந்தனர்.

முன்னும் பின்னும் உலாவிக் கொண்டிருந்த லலிதை, அற்ப சப்தம் ஆனாலும் கதவின்புறம் திரும்பிப் பார்ப்பாள். ஒருவரும் நுழையவில்லை அரைநாழிகை வரையில். கடைசியாய் புஷ்பவல்லி மேகத்திலிருந்து மின்னல் புறப்படுவதுபோல் கதவைத் திறந்துகொண்டு உள்ளே வந்தாள். வந்தவளை லலிதை பார்த்து "என்னருமைப் புஷ்பவல்லியே, என்ன சொன்னான் நரேந்திரன்?" என வினவினாள்.

புஷ்பவல்லி "சீக்கிரம் புறப்பட்டுவந்து தங்களை தரிசித்துப்போவதாகச் சொன்னான்."

லலிதை "என்ன செய்கிறார்கள் அவ்விடத்தில்?"

புஷ்பவல்லி "என்னவா? ஐயோ. அம்மா; என்னவென்று சொல்வது! எத்தனை அடுப்புகள்! எத்தனை பட்டடைகள்! அம்பு செய்வோரும், கத்திசெய்வோரும் அவற்றை முனைபிடிப்போரும், பரீக்ஷைசெய்வோரும்,சேர்த்து வைப்போரும் என்ன வேகம், என்ன உற்சாகம், இவ்வுலகத்துக்கே ஆயுதம் கொடுக்கலாம்போல் இருக்கின்றது நமது ஆயுதசாலையிலிருந்து!"

லலிதை "இன்னும் வேலைசெய்கிறார்களா?"

புஷ்பவல்லி "ஆம்; அம்மா! நான் போனதும் என்னைக் கவனிப்பவனே கிடையாது! என் தம்பியைத் தொட்டு வார்த்தை பேசுகிற வரையில் அவன் தன் வேலையை விட்டு என் புறம் திரும்பவேயில்லை!"

லலிதை "நானும் ஒரு ஆண்பிள்ளையாய்ப் பிறந்து, முகுந்தன் ஆயுதசாலையில் வேலை செய்வதானால்—அசாத்தியமான காரியத்தை விரும்புவதில் பயன் என்ன!—ஆகவே நரேந்திரன் வருவான்"

புஷ்ப.—"ஆம் அம்மா சீக்கிரம் வருவான்"

காகம் கர் என்றால் கணவனை அப்பா என்று கட்டிக் கொள்ளுவாளாம்.

அதிகநேரம் காத்திருக்கவேண்டிய அவசியம் இருக்கவில்லை.

புஷ்பவல்லி பேசிமுடிந்த க்ஷணமே நரேந்திரன் கதவைத் தட்டினன். புஷ்பவல்லி உடனே கதவைத் திறந்து நரேந்திரனை வாவென்றழைத்தாள். உள்ளே நுழைந்து வந்தனம் செய்து தலைகுனிந்துநின்ற நரேந்திரனை லலிதை பார்த்து "அப்பா நரேந்திரா நீ ஏது இந்தப்பக்கமே வருவதில்லையே?"

நரேந்திரன் "அம்மா நான் ஒரு பக்கமும் போவதில்லை. ஆயுதசாலைப் பக்கத்தில் உள்ள வேலையே தலைக்குமேல் இருக்கின்றது. இரவு 15 நாழிகை வரையில் வேலை செய்கிறோம். மறுபடி சூரிய உதயத்திற்கு வேலை ஆரம்பிக்கிறோம்."

லலிதை "அப்படியா? குழந்தைப் பருவத்தில் நாம் ஒன்றுகூடி விளையாடின ஞாபகத்திற்காகவாவது இவ்விடத்துக்குச் சாவகாசப்பட்டபோது வந்து போய்க்கொண்டிருக்கக் கூடாதா? இப்பொழுது நடக்கும் யுத்தப்பிரயத்தனத்தின் விஷயத்தை எனக்கு விவரமாய் எடுத்துச்சொல். என் பிதா என்னைக் குழந்தையென்று நினைத்து என் காதில் யாதொரு கஷ்டவார்த்தையும் படக்கூடாதென்று ஒன்றும்என்னிடம் சொல்லுவதில்லை.என் தாயோ பால்குடிக்கும் குழந்தையென்றே என்னைக் கருதுகிறாளேயல்லாமல் வேறில்லை. பலர், பலவிதமாய்ச் சொல்லும் வீண்வார்த்தைகளைக் கேட்டு நாங்கள் மனம் பதைக்கின்றோம். உண்மையை உனக்குத் தெரிந்த வரையில் உரைப்பாயானல் உனக்கு எவ்வளவோ புண்யம் வரும். இராஜ புத்திரியாகிய நான், தேசத்தின் க்ஷேமத்தையும் அபாயத்தையும் என் குடும்பத்தின் நிலைமையையும் அறியக்கூடாதோ?"

நரேந்திரன் "அதில் ஒன்றும் தப்பில்லை. ஆனல் எனக்கு விசேஷமாய் ஒன்றும் தெரியாது. தெரிந்த சில விஷயங்களும் என் தகப்பனருடன் சுமதியார் பேசிக்கொண்டிருந்தபோது நான் கேட்டவை; அதிரகசியமான விஷயங்கள்; தங்களிடமின்றி மற்ற எவரிடமும் என் மனதைப் பிளந்தாலும் சொல்லுகிறவன் அல்லன் என்று பீடிகை போட்டுக்கொண்டு அன்றையதினம் நடந்த சமாசாரம் தவிர, மற்ற எல்லாவற்றையும் தனக்குத் தெரிந்தவரையில் சொல்லி முடித்தான்.

லலிதை "இன்றைக்கு என்னவோ ஜோதிபுரியிலிருந்து—"

நரேந்திரன் "ஆம்! ஆம்! வழியில் கேள்விப்பட்டேன் முழுவதும் தெரியாது; தெரிந்துகொண்டு நாளை வருகிறேன்" என்று வணங்கிவிட்டு உடனே பறந்தோடினன்.

லலிதை "புஷ்பவல்லி! தனக்கிட்ட வேலையைச் செய்வதில் நமது நரேந்திரன்போல் அனைவரும் இருப்பின், இவ்வுலகம் எத்துணை மாறியிருக்கும்! இனி நமது தேசத்திற்கு க்ஷேமத்தை உத்தேசித்து நாமும் ஏதோ செய்யவேண்டியது. 'விதியினல் ஆகாதெனினும் உழைப்புத் தன் மெய்வருத்தக் கூலி தரும்—" என்றபடி நாம் பெண்டிர்களாய் இருப்பினும், நம்மால் கூடியமட்டில் நாட்டிற்கு க்ஷேமம் உண்டாகும் பொருட்டு உழைக்கவேண்டும்!"

புஷ்பவல்லி—"அப்படியே செய்வோம். இன்று ராத்திரி என் வீட்டிற்குச் சென்று என் தகப்பனரைக் கண்டு விசாரித்து வரட்டுமா? நம் போன்ற பெண்களால் ஆகவேண்டிய காரியம் உளதெனில் ஏன் உடனே நாம் அவற்றைச் செய்யத் தொடங்கக்கூடாது?"

லலிதை "என் எண்ணமும் அப்படியே; ஏதோ புசிக்கவேண்டுமே உணவு! கொண்டுவரச்சொல்; பிறகு வாயிலில் நிற்கும் ஏமாங்கதனையோ, சித்திரக்கிரீவனையோ துணைக்கு அழைத்துக்கொண்டு வீட்டிற்குச்சென்றுவா!"

புஷ்பவல்லி வெளியே போக, லலிதை ஜன்னலில் இரண்டு முழங்கைகளையும் வைத்துக்கொண்டு, தன் இரண்டு கரங்களிலும் முகத்தைத் தாங்கிக்கொண்டு ஊர்ப்புறம் பார்க்கிருள். 'ஹம்' என்ற சப்தம் இன்னமும் கேட்கின்றது! ஏது இன்னும் ஜனங்கள் நித்திரை போகவில்லையா?" "டம், டம், டப், டப்" என்று ஆயுத சாலையிலிருந்து சப்தம் கேட்கின்றது. "ஹா! ஹா! முகுந்தனும் அவன் அருமைச் சினேகிதர்களும் பொது நன்மைக்கு எத்தனைதூரம் பிரயாசைப் படுகிருர்கள்!—யான் எதற்காக வருந்துவேன்? வயதுமுதிர்ந்த காலத்தில் கடவுள் எனது பிதாவை இம்மாதிரி சோதனை செய்கிருரே அதற்கு இரங்கவா? என் அன்னை என்னைக்குறித்து வருந்தி வருந்தி தின

மும் வாடுகின்றனளே! அதற்கு இரங்கவா? என் பொருட்டாய் இத்தேசம் அபாயத்திற் குள்ளாயிற்றே—இதற்கு இரங்கவா?—எதற் கென்று இரங்குவேன். பாவியாகிய நான் பிற வாதிருப்பின்! மறுபடி என் மனம் ஜயபால ரிடம் செல்லுகின்றது. இதுவும் ஆச்சரியமல் லவா? தவலையில் தண்ணீர் ஊற்றி வேகவைக் கும்போது அத்தண்ணீரில் விளையாடும் ஆமை போன்று இருக்கின்றதே என் மனம்! அந்த மஹாபுருஷனை ஜயபால ராஜாவுக்கும், ஜனங் கள், பொருள்,—இவை நஷ்டம். இவையெல் லாம் என் பொருட்டேயன்றோ! இவ்வுடலம் படைத்து ஈசா நான் என்ன சுகம் அனுபவித் தேன். "எரியெனக்......எனக்கே"—நான் ஒரு ஆண்பிள்ளையாய்ப் பிறந்திருப்பின்..." என்று இவ்வாறு மனோவிசாரத்தால் நித்திரை யற்று அவ்விரவைக் கழித்தாள்.

ஒன்பதாம் அத்தியாயம்

ஆமத்பாக்ஷா யுத்தவிஷயமாய் ஆலோசனை செய்தல்

"............ சுமாலீ இன்னொரு முறை அக்கடிதத்தைப் படியும் பார்ப்போம். அந்தத் துரோஹி ஜயபாலன் சேனை புறப்பட்டுவிட் டதென்று அர்த்தமா? புறப்படவில்லையென்று அர்த்தமா? ஆஹா எவ்விதம் மோசம் போகி றோம்? ...." என்று தலைகுனிந்து யோசிப்பானாயினன். சபையோர் ஒருவரும் பேசவில்லை. சுமாலீ கடிதத்தைக் கையில் வைத்துக்கொண்டு நிற்கின்றான். மீரான் சாகிப் முதலிய துருக்கப் பிரபுக்கள் அனந்த பட்டர் முகத்தை ஏறிட்டுப் பார்க்கின்றனர். அவரும் தலை குனியவே இதர பிரபுக்கள் கண் சாடை செய்துகொள்ளுகின்றனர். அர நிமிர்ந்தவுடன், சுமாலி படிக்கத் தொடங்கி னான்:—

ஜோதிபுரி,
??? மிதுனமாதம் 15-தேதி.

இராஜாதி இராஜ இராஜ மார்த்தாண்ட சூர்யகுலோத்தம ஜோதிபுரி மண்டலாதிபர் ஜயபால ராஜாதிராஜர் உத்தரவின்படி, சிதா னந்தன் வணக்கத்துடன் மனுச்செய்துகொள் ளுவ தென்னவெனில்:—தமது கடிதங்களைக் கண்டு இவ்விடம் எல்லோரும் மனமிரங்கி னோம். இராஜஸ்தானத்தில் எப்புறத்திலாயி னும் துருக்கர் கஷ்டப்படுத்துவதாய் இருப் பின், ஜோதிபுரியில் இருப்போர் உதவிக்கு வராமல் பார்த்து இருப்பதும் உண்டோ? 'தர் மமே ஜயம்' என்ற பிருதுபூண்ட நமது அரசன் தம்பொருட்டும் இராஜஸ்தானத்தைக் காப் பாற்றுதற்கும், எதையும் மனதார அர்ப்பிதம் செய்துவிடத் தயாராய் இருப்பதை அறிவிக் கச்சொல்லுகிறார்.

உமது வேண்டுகோளுக் கிணங்க தற்காலம் நாங்கள், எமது சேனைத்தலைவர் கவுரவம் பொருந்திய கணாதிபர், அபிப்பிராயப்படி, 1000 குதிரைவீரர்களை தளகர்த்தர் ஜயசிங்கர் வசம் அனுப்புகிறோம். தாமதம் இனி ஒன் றும் நடவாது. இக்கடிதம் தமக்குக் கிடைக் கும் முன்னரே ஜயசிங்கர் புறப்பட்டுவிடுவார். எமது எல்லைவரையில் சேனை விரைவாய் வர வேண்டுமான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக் கின்றன. தமது எல்லையிலும் அவ்விதமே செய்தால் அதிக அநுகூலமாய் இருக்கும்.

வீரர்கள் உதயபுரியை அடைந்தவுடன் எம் மீது அன்புகூர்ந்து சங்கதி தெரியப்படுத்த வேண்டுமென்று அரசன் கேட்டுக்கொள்ளுகி றார். இனி நேரக்கூடிய சண்டையில் நாங் கள் செய்து கொடுக்கக்கூடிய உபகாரங்கள் எவை உள்ளனவோ அவற்றைத் தாமதமின் றியும் சிரத்தையுடனும் செய்யத் தயாராய் இருக்கின்றோம்.

(உத்தரவின்படி)
தங்களிடம் மிக்கப் பணிவுள்ள,
சிதானந்தன்.

இதைக் கேட்கக் கேட்க நாகப்பாம்பின் விஷம் ஏறுவதுபோல கோபம் மூண்டெழுந் தது பாக்ஷாவுக்கு. கண்களில் தீப்பொறி பறக்க, மீசை துடிக்க, கைமேல் கைதட்டிக்கொண்டு, கையிற் பிடித்திருந்த பூச்செண்டைக் கசக்கி யெறிந்துவிட்டு அனந்தபட்டரைப் பார்த்து "ஐயா அனந்தபட்டரே: நல்ல யோசனை செய் தீர். போனதடவை தூதர்களை அனுப்பும் சமயத்தில் வேண்டாமென்றல்லவா தடுத்தீர்! உமது ஆலோசனையை மேற்கொண்டு நான் மட்டும் தூது அனுப்பாவிடின் இந்த இரண்டு இராஜபுத்திர துரோஹிகளின் கபடச்செயல் நமக்குத் தெரிந்திராது. அந்தப் பொய் சொல் லிய பிரதாபசிங்கனுக்கும் தக்கதுணை கிடைத் திருக்கும்—என்ன? 1000 பெயர்களா?

குதிரை வீரர்களா? ஜோதிபுரியின் வீரர்கள் சிறந்த தொழிலாளிகளென்று கேள்விப்பட்டிருக்கிறேம்—இத்தனை நேரத்துக்குள் அவர்களும் புறப்பட்டு இருக்கலாம். ஐயா, உமது பேச்சை நம்பி எவ்வளவுதூரம் மோசம் போனேன். என் செய்யலாம் சொல்லும் ஐயா, இப்பொழுது? உமது அரிச்சந்திரன் செய்த வேலையைக் கேட்டீர் அல்லவா?''

என்ன சொல்லுவார் அனந்தபட்டர்! குனிந்ததலை நிமரவில்லை; வாயும் திறக்கவில்லை.

மீரான் சாஹிப் "ஐயா! இராஜபுத்திரர் துரோஹிகள் என்றும், அவர்களை என்றும் நம்பக்கூடாதென்றும் நமதுசேனைகளை நேராய் நடத்திக் கொண்டுபோய் நமக்கு வேண்டியதைக் கேட்பதே சிறந்ததென்றும், முன்னமேயே நான் சொல்லவில்லையா? இந்தப் பார்ப்பான் பேச்சைக்கேட்டுப் பாழாயின காரியங்கள். இனியாவது காரியங்களை நன்கு யோசித்து நடத்தவேண்டும். கடவுளின்பால் பக்தியுடையோரான எமது காரியத்தில் ஏனையோர் புத்திமதி எத்துணை பிரயோசனப்படுமோ—''

ஆமத்பாக்ஷா "மீரான்சாகிப், வாயை மூடும். உமக்கு சமயம் தெரியாது. எந்த சமயத்தில் எவர்களுடைய வார்த்தையை கேட்கவேண்டுமென்பது நமக்குத் தெரியும்! இனியும் அனந்தபட்டர் நமக்கு கெடுதி செய்யவேண்டுமென்று எண்ணியதாக நான் சந்தேகிக்கவில்லை. பொய்யுடையொருவன் சொல்வன்மையினால் மெய்போலும்மே மெய்போலும்மே!' என்றபடி அந்தத் திருட்டு மனிதர்களின் பேச்சை உண்மையென்று நம்பி ஏமாந்து இருக்கலாம். அவரை நோவதில் பயனில்லை, இனி நடத்தவேண்டிய காரியங்களைப் பற்றிப் பேசுங்கள்'' என்ருன் கோபத்துடன். மீரான்சாஹிப் உட்கார்ந்துவிட்டான். மற்ற சபையோர்களும் பேச எழவில்லை. சிறிது நேரம் கழித்து சுமாலி ''அரசர்க்கரசே! இனி நாம் செய்யவேண்டிய காரியம் ஒன்றே. சேனைகளோ தயாராய் இருக்கின்றன; புறப்படவேண்டியதுதான் இராஜஸ்தானத்தின்மீது படையெடுத்து. யோசனைசெய்வதில் பயனில்லை—''

பாக்ஷா "நீர் சொல்வது சரியே; படையெடுத்துப்போவதென்ருல் சுலபமா? சுல்தான் ஆமத் எப்பொழுதும் தன் சேனைகளைத் தயாராய் வைத்திருப்பதானுலும், போகும் வழிகளில் உணவு பொருள்களுக்குத்தக்க ஏற்பாடு செய்ய வேண்டாமா? அதிக வேகமாய்ப் பறந்தோடும் குதிரைவீரர்களை அழைத்துவந்து இதோ இந்த முத்திரை மோதிரத்தை அடையாளமாகக் கொடுத்து உடனே அவர்களை யனுப்பி எல்லையைக் காக்கும் சேனுதிபதியாகிய மகமத் ஆலியை அரைக்கணமும் தாமதிக்காமல் புறப்பட்டு ஜோதிபுரியரசன் சேனை உதயபுரிக்கு வந்து சேராமல் தடுக்கும்படி உத்தரவு செய்வீர். இருதிறத்தார் சேனைகளும் கலந்துவிட்டால் மஹமதியர் வெல்வது கஷ்டமாகும். அப்படி சேராமல் தடுக்க இன்னும் சாவகாசம் இருக்கின்றதென்று எண்ணுகிறேன். எவருடைய அஜாக்கிரதையினுலாவது இக்காரியம் முடிவுபெறத் தாமதம் ஆகுமானுல், இதில் சம்பந்தப்பட்ட எல்லோருடைய தலைகளையும் வாங்கிவிடுவேன். கண்டிப்பாய் உத்தரவு அனுப்புவீர். உடனே போய்வாரும். எடுத்துக் கொள்ளும் இதை'' என்று மோதிரத்தை வீசியெறிந்தான். சுமாலியும் பதில் பேசாமல் வெளியேறினுன்.

ஆமத் பாக்ஷா "சபையோர்களே! இந்தக் காரியம் ஜயமானுல் அந்த இராஜபுத்திரர்கள் தோல்வி யடைவார்கள். நமது மகமத் ஆலி சண்டை செய்யவேண்டியதில்லை. அத்தகைய சக்தியும் அவனுக்குக் கிடையாது. முன் செல்லவொட்டாமல் தடுத்துக்கொண்டிருந்தால் போதும்; அதற்குள் நாமே போய்ச் சேர்ந்து விடுவோம்.

ஐயா, சேனைத் தலைவரே! நாளை காலையில் தண்டு எடுத்துப் புறப்படவேண்டுமானுல் எத்தனைபேர் தயாராய் இருப்பார்கள்?

சேனைத்தலைவன் "10,000 பேர் சேரும்.''

ஆமத் "அவற்றில் குதிரைவீரர்?''

சேனைத்தலைவன் "4000 பேர்கள்''

ஆமத் " சரி. நீரும் வெளிச் சென்று நாளை சூரிய உதயத்திற்குச் சேனைகள் புறப்பட ஏற்பாடு செய்யும். மறுபடி இன்று இரவு 8 மணிக்கு அரண்மனைக்கு வந்து சேரும். நீரும் போகலாம்;'' என்று அவரையும் அனுப்பி விட்டான்.

"மீரான்சாகிப்! உம்மிடம் இருக்கும் சாமான்களை இன்று இரவுக்குள்ளும் நாளைய தினத்துக்குள்ளும் எவ்வளவு சேனையுடன்

அனுப்பமுடியுமோ அதற்குத் தக்க ஏற்பாடு செய்துவிட்டு, மீதியுள்ளவற்றை தினம் கொஞ்சம் கொஞ்சமாய் சேனையின் பின்னே யே அனுப்ப ஏற்பாடு செய்ய வேண்டியது. ஐந்திரபுரியிலுள்ள ஒட்டகங்களும் யானை களும் உம்மிடத்தில் ஒப்புவிக்கப்படும். உமக் கோ யுத்தத்தின்பேரில் அதிக ஆவலாயிருப் பதால் மேற்கூறிய ஏற்பாடுகள் செய்தவுடன் முன்னேபோய் ஒவ்வொரு இடத்திலும் நம் பெருஞ்சேனைக்கு யாதொரு குறைவும் இல் லாமல் சரிவர நடக்கும்படி முன் ஜாக்கிரதை செய்து வையும். உம்மிடம் இப்பொழுது வேலைசெய்யும் 100 பேர்களுக்குமேல் ஒரு மனிதனுவது கொடுக்கமுடியாது. நீரும் போய் வரலாம்."

மற்ற மந்திரிகளையும் பிரதானிகளையும்சபை யோர்களையும் வைத்துக்கொண்டு, தான் இராஜ புதனத்தின்மீது படையெடுத்துச் செல்லும் பொழுது எங்ஙனம் இராஜ்யபாரம் நடத்த வேண்டுமென்ற விஷயமாய் சில ஏற்பாடுகள் செய்துவிட்டு, மூலஸ்தானம், கைபர் முத லான கணவாய்களைக் காக்க சேனைகளை திட் டம் செய்துவிட்டு சபையோருக்கு உத்தரவு கொடுத்தனுப்பினுன்.

வெளியே சபையோருடன் சென்ற அனந்த பட்டரை மறுபடி வரவழைத்து அவர்மீது தனக்குக் கோபமில்லை யென்பதை மறுபடி ஒருமுறை தெரிவித்துத் தான் ஊரில் இல்லாத சமயத்தில் குழப்பம் நிகழாமல் பார்த்துக்கொள் ளும்படியும் அடிக்கடி நடக்கும் விசேஷங்க ளுக்கு தூதனுப்பிக்கொண் டிருக்கும்படியும் கேட்டுக்கொண்டான். அவரும் சம்மதித்து விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டுப் போய் விடவே, ஆமத்பாக்ஷா சிம்மாஸனத்தில் உட் கார்ந்தவண்ணமே ஆலோசனையில் ஆழ்ந் தான்:—

"இவ்வேழைப் பிராமணனை அனைவரும் திட்டுகின்றனர். இவரைத் திட்டுவதில் என்ன பயன்? இவர் என் உப்பைத் தின்று எனக்குத் துரோஹம் நினைப்பவர் அல்லர். ஆயினும் அந்தப்பாவி பிரதாபசிங்கன்...என்ன யுக்தி, அவனுடைய யுக்தி!......அந்தச் சிறு பிள்ளை ஜோதிபுரி யரசன், அவன் பெயர் என்ன?... எவனுனல் என்ன? ஆமத் பாக்ஷாவின் வழியில் நின்று அவன் காரியம் கைகூடாமல் தடை செய்கின்றவர்கள், இறக்கவேண்டியது தான். இல்லையேல் அப்பாவிகள் வழிவிலகிப் போகட்டும்......அந்தப் பயலாவது லலிதாவை விவாகம் செய்துகொள்வதாவது! என்ன தைரியம்! என்ன அகங்காரம்! என் சங்கதி தெரிந்தால் ஒருவேளை..........சீ!சீ! எவனு னல் என்ன, நம்முடைய சுகத்துக்குத் தடை செய்கிறுன் என்றுல், அதைவிடக் குற்றமான காரியம் அவன் நமக்கு என்ன செய்யவேண் டும்?......அடே பயலே, பொறு, பொறு, உன் அகங்காரத்தை அடக்குகிறேன்; நீயாவது லலிதையைப்பற்றி கனவு காணவாவது; ஆச் சர்யம்!!....... லலிதா! லலிதா! உன்னை அடையலாம் என்ற நம்பிக்கையுடனே யல் லவா இதுகாறும் உயிர் வைத்திருக்கிறேன். உன் தகப்பன் சம்மதித்தான் என்று கேட்ட போது அவனுக்குச் சற்று புத்தியிருக்கின்ற தென்று எண்ணியிருந்தேன். மூர்க்கனுய் இருப்பதோடு மோசக்காரனுயும் இருக்கின் றுனே! உன்பொருட்டு யான் யாரையும் மன்னிப்பேன் — உன்பொருட்டு யான் யாரையும் மதிப்பேன் — உன்பொருட்டு என் உயிரையும் துறப்பேன். ஆயினும் மற்ற வன் உன்னை மணக்க நினைக்கின்றுன் என்ப தைப் கேட்கவும் என் மனம் ஆறவில்லையே! படையெடுத்துவந்து, கோட்டைகளை இடித்து, அகழ்களைத் தூர்த்து, மானிடரைக் கொன்று, இரத்த வெள்ளம் ஓடுங்கால், உன் னைக் கவர மனம் வராமல், மஹமதியரும் இராஜபுத்திரரும் உறவாடிக் கைகோர்த்துச் சந்தோஷப்படும்போது உன் தகப்பனிடமிரு ந்து மனதாற பூர்ண இஷ்டத்துடன் உன்னை நான் வாங்கிக்கொள்ளவேண்டுமென்று எண் ணினேன். தெய்வச் செயல் எப்படியோ, அப் படி நடக்கட்டும். இப்பொழுது கூட, அனுவ சியமாய் ஜனங்களைக் கொல்வதில் எனக்கு இஷ் டமில்லை. எவ்விதத்திலும் லலிதை என் மனைவியாக வேண்டியதுதான்......ஆஹா! லலிதா! லலிதா! உன் தேசத்தை யழித்து, உன் பிரஜைகளைக்கொன்று, உன் தகப்பனையும் வென்று, உன்னைக் கைக்கொள்வேனுயின், நீ என்னை விரும்புவாயா? நீ என்னை வெறுப் பதைப்பார்க்கிலும்—நான் உயிர்விடுவது நல மல்லவா?—இந்தச் சேனையை நிறுத்திவிட வா?..........

காக்கை ஏறினதும் பனம்பழம் விழுந்ததும்.

சீ! சீ! படையெடுத்துச் செல்லாவிடில் லலிதா நமக்குக் கிடைப்பதில்லை.........நிச்சயம்! படையெடுத்துச் சென்ருல் சேனைகளைப் பார்த்து பயந்தாவது அந்தப் பிரதாபசிங்கன் இணங்கக் கூடும்! ......இணங்கலாம், இணங்கலாம்!......இதுதான் நல்லவழி—படைகளைக் கூட்டிச் செல்வதென்ருல் இலேசா?—லலிதா! உன் பொருட்டல்லவா இத்தனை கஷ்டம்! இனியும் உன் தகப்பன் தணிவானுனல்! வீண் யோசனை!........."

"இறைவனே! மந்திரி சுமாலியார் வந்து காத்துக் கொண்டிருக்கிருர்."

"வரச்சொல் உள்ளே"——

மந்திரியும் வந்து வணங்கி நிற்க, அரசன் "சுமாலீ! நாம் இருவரும் அரண்மனைக்குப் போவோம். போய் இனி நடத்தவேண்டிய காரியங்களை யோசிப்போம்".

(இரண்டாம் பாகம் முற்றிற்று.)

சிறுவர்களுக்கான பக்கங்கள்

CHILDREN'S PAGES

[ஸ்ரீமான் ஜி. ரத்தினம்பிள்ளை அவர்கள், பி. ஏ., எல்.டி.]

சண்டையொழித்த சக்கரவர்த்தி

ஏழாவது எட்வர்ட் சக்கரவர்த்திக்கு, மேலே கூறிய மற்ருெரு பெயரு முண்டு. இவர் நமது ஐந்தாம் ஜார்ஜு சக்கரவர்த்தியின் தந்தை. பத்து வருஷகாலம் அரசுபுரிந்தார். இவர் காலத்தில் சண்டை என்பதே கிடையாது. ஆகையால்தான் "சண்டையொழித்த சக்கரவர்த்தி" என்று இவருக்கு மற்ருெரு பெயர் வழங்கலாயிற்று. இவர் 1901ஃ பட்டத்திற்கு வந்து 1910ஃத்தில் இறந்தார். இறந்தபோது பிரிடிஷ் ராஜாங்கத்து ஜனங்களும், மற்றதேசத்து ஜனங்களும் அதிக துக்கமடைந்தார்கள். அக்காலத்தில் ஆகாயத்தில் ஒரு பெரிய வால் நட்சத்திரம் தோன்றியிருந்தது, உங்களில் அநேகம் பேர்களுக்குத் தெரிந்திருக்கலாம்.

இவருடைய தாய் விக்டோரியா மகாராணியார் ஆண்டகாலத்தில் எட்வர்ட் இளவரசாக இருந்தார். ஜனங்களுக்கு அநேக நன்மைகளை செய்தார். அவர்கள் சௌக்கியத்திற்காகத் தன்னுல் கூடியமட்டில் பாடுபட்டு வந்தார். தான் இன்னுரென்று காட்டிக்கொள்ளாமல் எளிய ஜனங்களுக்கு உதவி செய்வதில் இவருக்கு உற்சாகம் அதிகம். ஒருநாள் ஒரு கிராமத்தின் வழியாக தனியாய் போய்க் கொண்டிருக்கையில் ஒரு எளிய கிழவியை சந்தித்தார். அவள் சந்தைக்குப் போய்க் கொண்டிருந்தாள் கிராமத்தார்களுக்கு மூட்டைகள் தூக்கிக்கொண்டு போய்க் கொடுப்பது அவள் தொழில். அப்போது அவள் தூக்கிக்கொண்டு போன மூட்டை அதிக பளுவாக விருந்தது. அவளால் நடக்கக்கூட முடியவில்லை. எட்வர்ட் அவளைப் பார்த்து இரக்கப்பட்டு, "என்ன அம்மா! அந்த மூட்டை உன்னுல் தூக்கமுடியாமல் அவ்வளவு பாரமாக இருக்கும்போல் தோன்றுகிறது." "தாங்கள் சொல்வது சரியே. ஆனுலும் நான் என்ன செய்கிறது. வயிரே பசிக்கிறது. வேலை செய்யாவிட்டால் பட்டினி கிடந்து சாகவேண்டும். எனக்காக என்மகன் ஜாக் தூக்கிக்கொண்டிருந்தான்" என்று கேட்டவர் இன்னுர் என்று அறியாமல் கிழவி பதில் சொன்னுள். எட்வர்ட் "இப்போது ஜாக் எங்கே" என்று கேட்டார். "ஐயோ! ஐயா அவன் இறந்துபோய் விட்டானே" என்று சொல்லிக் கோவென்று அழ ஆரம்பித்தாள். எட்வர்டுக்கும் அதிக துக்க முண்டாயிற்று. ஒரு பக்கமாகத் திரும்பினுர். அவர் கண்களில் கண்ணீர் ததும்பிற்று. ஏனென்ருல் இவருக்கும் சிலநாள்களுக்கு முன் ஒரு பிள்ளையிருந்து இறந்துபோயிற்று. மறுநாள் காலையில் அக்கிழவிக்கு பலமுள்ள கழுதை கட்டின சிறிய வண்டியொன்றை வெகுமதியாகக்கொடுத்தார்.

அரண்மனை வாயிலில் சிறுவனெருவன் ஒரு நாள் நின்று தேம்பித் தேம்பி அழுது கொண்டிருந்தான். அதைக்கண்ட எட்வர்ட் இளவரசர், அவனிடம்போய் அவன் கையைப் பிடித்து, "ஏன் அப்பா அழுகிருய்" என்று வெகு பிரியமாகக் கேட்டார். அவன் "ஐயா, மகாராணியாரைப் பார்ப்பதற்கு அரண்மனைக்குள்ளே போனேன். வாயிலில் காத்துக்கொண்டிருந்த சேவகர்கள், 'உள்ளே போகக்கூடாது, வெளியே போ' என்று சொல்லி, என்னை வெளியில்

காக்கையைக் கண்டு அஞ்சுவாள் காடியைப் பிடித்துக் கட்டுவாள்.

அனுப்பிவிட்டார்கள்" என்று சொன்னான். அதைக் கேட்டதும், எட்வர்ட் "அழாதே நான் உன்னை மகாராணியாரிடம் அழைத்துக் கொண்டுபோகிறேன். இச் சேவகர்கள் என் வேலை ஆள்கள். ஒன்றும் சொல்லமாட்டார்" என்று அச்சிறுவனை தைரியப்படுத்தி உள்ளே அழைத்துக்கொண்டுபோய், மகாராணியார் தரிசனம் செய்துவைத்தார்.

எட்வர்ட் சக்கரவர்த்தி வெகு சாமர்த்தியம் வாய்ந்தவர். மகா நிபுணர்களான மந்திரிகள் தீர்க்க முடியாத சண்டைகளையும், கட்சிக் காரர்களை விருந்துக்கு அழைத்து, வெகு சாதுர்யமாகப் பேசி தீர்த்து விடுவார். ஆகையால் இவர் எந்த தேசத்திற்குப் போனாலும் ஜனங்கள் இவரைப் பிரியத்துடன் நல்வரவு கூறி சந்தோஷத்துடன் உபசரித்து, இவர் பேசும் வார்த்தைகளை அதிக கதுனத்துடன் கேட்பதுண்டு.

ஒருசமயம் இவர் இத்தாலியா தேசத்திற்குப் போக நேர்ந்தது. கப்பலில் இருந்து இவருக்காக நிறுத்தப்பட்டிருந்த வண்டியிருக்கும் இடம்வரையில் நடக்க வேண்டியிருந்தது. நடப்பதற்காக அத்தேசத்தார் ஒரு இரத்தன கம்பளத்தை விரித்தார்கள். கம்பளம் வண்டியிருக்கும் இடம் வரையில் எட்டவில்லை. எட்வர்ட் வண்டி கிட்டவந்ததும், உடனே அத் தேசத்துக் கொடியை கீழே விரித்தார்கள். அதைக்கண்டதும் எட்வர்ட் சக்கரவர்த்தியார் அதை மிதிக்காமல் அப்பால் சென்றது மன்னியில், உடனே அத்தேசத்துக் கொடிக்கு தன் மரியாதையைக் காண்பிக்கும்பொருட்டு தன் குல்லாவையும் உடனே தலையினின்றும் கழற்றிவிட்டார். இதைப் பார்த்ததும் இத்தாலியா தேசத்தாருக்கு இவரிடத்தில் அத்தியந்தப்பிரிய முண்டாயிற்று.

நல்ல விக்டோரியா

ஏழாவது எட்வர்ட் சக்கரவர்த்திக்கு முன், விக்டோரியா மகாராணியார் 64 வருஷகாலம் அரசு செலுத்தி வந்தார். இவரைப் போன்ற நல்ல ராணியார் உலகத்தில் இல்லை என்றே சொல்லலாம். தன்னால் கூடியமட்டில் ஜனங்களுக்கு நன்மை செய்தார். தன் குடிகளிடத்தில் இவருக்கு வாஞ்சை அதிகம். ஏழைகளுக்குப் பணம் கொடுப்பதுண்டு. வியாதியஸ்தர்களுக்கும் கஷ்டப்படுகிறவர்களுக்கும் பிரியத்துடன் கடிதம் எழுதுவது இவர் வழக்கம். அரண்மனைக்குச் சமீபத்தில் வசிக்கும் ஏழைகளைப் போய்ப் பார்த்து வியாதியஸ்தர்களுக்கு உருசியுள்ள பதார்த்தங்களைக் கொண்டுபோய் கொடுப்பதில் சந்தோஷம் அதிகம்.

ஒருநாள் மகாராணியார் சாலையில் போய்க் கொண்டிருக்கும்போது ஒரு பையன் சில ஆடுகளை ஓட்டிக்கொண்டு எதிரில் வந்தான். ராணியார் சாதாரண உடை உடுத்துக்கொண்டிருந்தபடியால் இன்னாரென்று அவனுக்குத் தெரியாது. அவன் ராணியாரைப் பார்த்து "வழியை விட்டு விலகு" என்று சொன்னான். உடனே ராணியாரும் அப்படியே செய்தார். தான் சந்தித்தது ராணியென்று பிறர் பின்பு சொல்ல, அவன் "ராணிக்குரிய உடை அவர் ஏன் தரிக்கவில்லை" என்று கேட்டான்.

சிறு பெண்ணாகவிருந்தபோது தனக்கு ராணி பதவி கிடைக்குமென்பது விக்டோரியாவுக்குத் தெரியாது. அப்போது இங்கிலாந்து தேசத்திற்கு அரசன் நாலாவது உவில்லியம். அவர் விக்டோரியாவிற்குச் சிறிய தகப்பன். அவருக்குப் பிள்ளை இல்லை.

பன்னிரண்டாவது வயதில் ஒருநாள் சரித்திரப் பாடம் கற்றுக் கொண்டிருக்கையில், உவில்லியம் அரசர் இறந்தபிறகு, தான் ராணியாக வருவதை தன் தாய் சொல்ல விக்டோரியா தெரிந்துகொண்டாள்.

உடனே விக்டோரியாவின் நீரோர் பலம் போன்ற கண்களில் நீர் ததும்பிற்று. "அம்மா தாங்கள் சொன்னது எனக்கு அதிக பயத்தை உண்டு பண்ணுகிறது. நான் கூடிய வரையில் நல்லவளாக விருந்து என் கடமையைச் செய்கிறேன்" என்று சொன்னார்.

அதுமுதல் விக்டோரியா தன் பாடங்களைச் செவ்வனக் கற்று, ராணி உத்தியோகத்திற்குக் கூடியவரையில் தகுதியுள்ளவராக ஆனார்.

வருஷங்கள் ஆயின. விக்டோரியாவுக்கு வயது பதினெட்டாயிற்று. உவில்லியம் அரசர் இறந்தார். விக்டோரியாவுக்கு இந்த சமாசாரம் சொல்ல அதிகாலையில் இரண்டு பிரபுக்கள் அனுப்பப்பட்டார்கள்.

அவர்கள் விக்டோரியா விருக்கும் அரண்மனைக்கு வந்தபோது அவர் தூங்கிக் கொண்டிருந்தார். இவர்கள் வந்ததை கேள்வியுற்று உடனே கீழே இறங்கி வந்தார்.

காசிக்குப் போயும் கருமம் தொலைய வில்லை.

தன் சிறிய தகப்பனுர் இறந்தாரென்று அவர்கள் சொன்னதும், விக்டோரியா துக்கித்து அழுதார். இப்போது, தான் ராணியென்றும், தனக்குச் செய்ய பெரியவேலை இருக்கிறதென்றும் தெரிந்து கொண்டார்.

ஒரு வருஷங்கழித்து லண்டன் நகரிலுள்ள வெஸ்ட்மினிஸ்டர் என்ற பெரிய மாதா கோவிலில் விக்டோரியாவுக்கு முடி சூட்டப்பட்டது. அப்போது அநேக தேசத்து ராஜாக்களும், பிரபுக்களும் அவ்விடம் விஜயஞ் செய்து "நமது ராணியாரை கடவுள் காப்பாற்றுவாராக" என்று பிரார்த்தித்தார்கள்.

தைரியமுள்ள அறுநூறு யுத்தவீரர்கள்

அநேக வருஷங்களுக்கு முன், இங்கிலீஷ்காரர்கள் ருஷியர்களோடு யுத்தம் செய்தார்கள். அந்த யுத்தத்தில் அநேகர் உயிர் துறந்தனர். ஆயினும் அநேக வீரச் செயல்கள் செய்யப்பட்டன.

அவைகளில் அறுநூறு வீரர்கள் சவாரி செய்துகொண்டு போனது ஒன்று. இவர்கள் குதிரைப் படையை சேர்ந்தவர்கள். அவர்கள் செய்த வீரச்செயலைச் சொல்லுகிறேன் கேளுங்கள்.

சண்டை கடுமையாய் நடக்கும்போது ருஷிய பீரங்கிகள் இருக்குமிடத்திற்கு சவாரி செய்து, பீரங்கி சுடுவோரைத் துறத்த வேண்டுமென்ற தப்பான உத்தரவு இவர் தலைவரால் இவர்களுக்குக் கொடுக்கப்பட்டது.

உத்தரவு தப்பு என்று தெரிந்தும், அவர்கள் மறுதளிக்காமல் உத்தரவுப்படி நடக்கவேண்டியது தங்கள் கடமை என்று நினைத்து உடனே சவாரி செய்து சென்றனர். அப்படிச் செல்லும்போது எதிரிலிருந்தும், வடது இடதுபக்கங்களி லிருந்தும், பீரங்கிக் குண்டுகள் ஆலங் கட்டிகள்போல் இவர்கள் மீது விழுந்தன. ஒருவர் ஒருவராய்க் கீழே விழுந்து இறந்தும், மற்றவர்கள் பின் வாங்காமல் ருஷிய பீரங்கிகள் இருக்கும் இடத்தை நோக்கிச் சென்றனர். பீரங்கி போட்டவர்களில் சிலர் கொல்லப்பட்டும் மற்றவர்கள் துரத்தப்பட்டனர். ஆகையால் ருஷிய பீரங்கிகள் பிரயோசனமற்றுப் போயின. பிறகு தங்கள் இருப்பிடத்திற்குத் திரும்பினார்கள். மறுபடியும் இவர்களின்மீது துப்பாக்கிக் குண்டுகள் வந்து விழுந்

(இதன் தொடர்ச்சி 80-ம பக்கம் பாாசக.)

ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

LADIES' PAGES

[ஸ்ரீமான் ஸி. ஆர். ஸ்ரீனிவாஸ ஐயங்காரவர்கள், பீ. ஏ.]

2. அனஸூயை

இவள் கர்த்தம ப்ரஜாபதிக்கும் ஸ்வாயம்புவமனு புத்திரியான தேவஹூதிக்கும் பிறந்தவள். அருந்ததிக்கும் கபில பகவானுக்கும் ஸஹோதரி. அத்ரி மஹரிஷியின் பத்னி. அஸூயை யில்லாதவ ளென்று இவளுடைய பெயர் அர்த்தமாகும்.

உத்தம குணங்களுள்ளவர்களிடத்தில் பொறாமைகொண்டு, "ஐயோ! நம்மிடத்தில் இந்தக் குணங்கள் யாதொன்று மில்லையே" யென்று வயிறெரிந்து, அந்த நற்குணங்கள் அவரிடத்திலில்லையென்று சாதித்துப், பிறரை நம்பச்செய்து அவைகளுக்கெதிரான துர்க்குணங்கள் அவரிடத்திலிருக்கின்றனவென்று பிறரை நம்பச் செய்யும் கொடுமையான மனோபாவத்திற்கு அஸூயை யென்று பெயர். இது ஸகல தோஷங்களிலும் ஸகல பாபங்களிலும் மஹா கோரமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

எப்படியென்றால், ஸ்ரீமத் ராமாயணத்தில், வால்மீகி பகவான், ஸ்ரீராமகதையைக் கேட்பவர்களிடத்தில் எவ்விதமான யோக்யதையிருக்கவேண்டுமென்று சொல்லும்பொழுது "அஸூயையில்லாத மனதுடன் கேட்கவேண்டு" மென்கிறார்.

பரப்ரஹ்ம யோக சாஸ்திரமான பகவத்கீதையில், பரம ரஹஸ்யத்தை யாருக்கு உபதேசிக்கலாமென்று சொல்லுமிடத்து கிருஷ்ண பரமாத்மா "அர்ஜுனா! இந்திரியங்களையும் மனதையும் அடக்கி, ஒரே விஷயத்தில் நிறுத்த முடியாதவனுக்கும், என்னிடத்தில் பரம பக்தியில்லாதவனுக்கும், இந்த உத்தமமான விஷயத்தைக் கேட்க விருப்பமில்லாதவனுக்கும், என்னிடத்தில் அஸூயை கொண்டவனுக்கும் ஒருக்காலும் நீ சொல்லக்கூடாதெ"ன்கிறார். ஆகையால் கோர பாபமான அஸூயையை விலக்கின இந்த மஹானுபாவைக்குக் கிடைக்காத நற்குணங்கள் யாதொன்றுமில்லை.

ஸ்ரீராமசந்திர மூர்த்தி, பிதிருவாக்ய பரிபாலனத்திற்காக வனவாஸஞ் செய்தபொழுது

சித்திரகூடத்தை விட்டு, லக்ஷ்மணனையும் ஸீதையையும் அழைத்துக்கொண்டு அத்ரி மஹரிஷியின் ஆசிரமத்திற்குச் சென்றார். அவர் ராமனைத் தன் புத்திரனைப்போல் மிகுந்த பிரியத்துடன் ஆதரித்து, தானே அவருக்கு மிகவும் உபசரித்து ஸீதையையும் லக்ஷ்மணனையும் அநேகவிதமாய் சமாதானம் செய்தார். அப்பொழுது பதிவ்ரதா சிரோமணியும், மிகவும் வயது சென்றவளுமான தன் பத்னி அனஸூயை அங்கே வர, அவளை அழைத்து "நமது குழந்தை ஜானகியை ஜாக்கிரதையாய்ப் பார்த்துக் கொள்" என்று அவளிடத்தில் ஒப்புவித்தார். பிறகு ராமனைப் பார்த்து "ராமா! இவள் தர்மத்தை அநுஷ்டிப்பதில் மிகவும் நோக்க முள்ளவள்; மகா தபோபல முள்ளவள். முன்னொரு காலத்தில் பத்து வருஷங்கள் வரையில் மழை பெய்யாமல் புல் பூண்டு செடி கொடி மரங்கள் பட்டுப் போயின; அப்பொழுது இவள் தன் தபோமகிமையால் மந்தாகினீ நதியை சிருஷ்டித்தாள். கங்கையின் பிரவாஹம் குறையாமலிருக்கும்படி செய்தாள். மற்றொரு சமயத்தில் தேவகாரிய நிமித்தமாய்ப் பத்து தினங்களை ஒரே ராத்திரியாகச் செய்தாள். கோரமான தபஸ்களையும் கிருச்ரம் சாந்திராயணம் முதலிய விரதங்களையும் அநேக ஆயிர வருஷங்கள் வரையில் அநுஷ்டித்து, இடையில் நேர்ந்த விக்கினங்களை ஜயித்து, லோகத்தில் கீர்த்தி பெற்றவள். இவளை உன் தாயைப் போல் நீ பூஜிக்கவேண்டும். ஸகல பிராணிகளும் நமஸ்கரிக்கத் தகுந்த மஹிமையுள்ளவள். மஹா கீர்த்திசாலி, மிகவும் வயதுசென்றவள், கோபமென்பதே இவளுக்கு ஒருநாளும் தெரியாது. பிறரால் அநுஷ்டிக்க முடியாத கடினமான தபஸுகளை லோகத்தின் க்ஷேமத்திற்காகச் செய்ததாலும், பர்த்தாவிற்கு சுச்ருஷை செய்வதிலும் பதிவ்ரதா தர்மத்தை அநுஷ்டிப்பதிலும் ஒப்பில்லாதவளானதாலும், பிறர் அஸூயை கொள்ளமுடியாத அவ்வளவு மேன்மையுள்ளவள். ஆகையால் இவளுக்கு அனஸூயை யென்ற பெயர் கிடைத்தது. ஸீதை இவளிடத்தி லிருக்கட்டு" மென்றார்.

ராமனும் "அப்படியே செய்யட்டு"மென்று சம்மதித்து, ஸகல தர்மங்களையும் அறிந்த ஸீதையைப்பார்த்து "நமக்கு விசேஷ க்ஷேமமுண்டாவதற்காக மஹரிஷி சொன்னதைக் கேட்டாயா? சீக்கிரமாய் அனஸூயை யிடத்திற்குப் போ" வென்றார். அப்பொழுது தன் ஹிதத்தையே கூறும் ராமனுடைய வார்த்தையைக் கேட்டு ஸீதை அனஸூயை யிடத்திற்குச் சென்று, நமஸ்கரித்துத் தன் பெய்ரைச் சொன்னாள்.

அனஸூயை மிகவும் வயஸ் சென்றவளானதால் தேஹம் தளர்ந்து, தோல் சுருங்கித் தலைமயிர் வெளுத்துப், பெருங் காற்றில் வாழை மரம் நடுங்குவதுபோல் நடுங்கிக் கொண்டிருந்தாள். அந்த மஹாபதிவ்ரதையை ஸீதை விதிப்படி பூஜித்துக் கைகூப்பி, ஸந்தோஷத்துடன் வணக்கமாய் க்ஷேமம் விசாரித்தாள். அனஸூயை விசேஷ பிரியத்துடன் அவளை வாரியணைத்து உச்சி முகர்ந்து ஆசீர்வாதம் செய்து "குழந்தாய்! பதிவ்ரதா தர்மத்தை நன்றாய் அநுஷ்டித்து வருகிறாயா? பதினான்கு வருஷங்கள் வரையில், வனத்தில் வஸிக்க வேண்டுமென்று பிதாவால் கட்டளையிடப்பட்ட உன் பர்த்தவாவை ஆச்ரயித்துப், பந்துக்களையும் ஐச்வர்யத்தையும் அஹங்காரத்தையும் விட்டு இங்கே வந்திருக்கிறாய். பர்த்தா நகரத்திலிருந்தாலும் வனத்திலிருந்தாலும் பாபியாயிருந்தாலும் புண்யாத்மாவாயிருந்தாலும் பார்யை அவனுக்கு பிரீதியோடும் பக்தியோடும் சுச்ருஷை செய்துவந்தால் உத்தம லோகங்களை யடைவாள். பர்த்தா கெட்ட நடத்தை யுடையவனா யிருந்தாலும், காமபரவசனா யிருந்தாலும், ஐச்வர்யமற்றவனா யிருந்தாலும், உத்தம ஸ்திரீகளுக்கு பர்த்தாவே தெய்வம். எந்த ஸ்திதியிலும் தன் பத்னியை ரக்ஷிக்கும் ஸாமர்த்திய முள்ள பர்த்தாவைக் காட்டிலும், மேலான பந்து பார்யைக்குக் கிடையாது. அவன் அழிவில்லாத பலத்தைக் கொடுக்கும் தபஸைப் போன்றவன். பர்த்தா அவர்களுக்கு நாதனென்று சொல்வதற்குப் பதிலாக பர்த்தாவிற்கு அவர்கள் நாதனென்று சொல்லும்படி நடந்து கொள்ளுகிறார்கள். அவர்களுடைய மனஸ் பரபுருஷர்களிடத்திலேயே செல்லும். அவர்கள் எப்பொழுதும் கெட்ட நடத்தை யுள்ளவர்கள்; தர்ம மார்க்கத்திலிருந்து விலகி, சாசுவதமான அபகீர்த்தியை அடைவார்கள். ஆனால் உன்னைப் போன்றவர்கள் லோகத்தில் உயர்வு தாழ்வுகளை

நன்ருயறிந்து, கல்யாண குணங்களால் அலங்க ரிக்கப்பட்டு, தர்மவான்கள் அடையும் உத்தம லோகங்களில் பிரகாசிக்கிருர்கள். ஆகையால் நீ பதிவிரதைகளின் ஆசாரத்தை அனுசரித்து, உன் பர்த்தாவின் தர்மத்தையும் விரதங்களையும் அனுஷ்டிக்கவேண்டும். இப்படிச் செய்வதால் உனக்கு அழிவில்லாத கீர்த்தியுண்டாகும். எல்லோராலும் கொண்டாடப்பட்டு, முடிவில் அந்தப் புண்யத்தால் ஸர்வோத்தமமான பதவியையும் ஸுகத்தையும் பெறுவாய்" என்று சிலாக்கியமான பதிவிரதாதர்மத்தை உபதேசித்தாள்.

அதற்கு ஸீதை சொன்ன உசிதமான பதிலைக் கேட்டு, அனஸூயை மிகவும் சந்தோஷப்பட்டு அவளை உச்சி முகர்ந்து "குழந்தாய்! கடுமையான தபஸைச் செய்து அபூர்வமான மஹிமையை அடைந்திருக்கிறேன். அந்தப் பலத்தால் உனக்கு வேண்டிய வரங்களைக் கொடுக்கத் தயாரா யிருக்கிறேன். உன்னிஷ்டத்தைப் பூர்த்தி செய்ய விரும்புகிறேன். நீ சொன்ன வார்த்தைகள் யுக்தமாயும் மதுரமாயு மிருக்கின்றன. அவைகளைக் கேட்டு எனக்கு மிகுந்த சந்தோஷ முண்டாயிருக்கிறது, கேளெ"ன்றாள். ஸீதையும் அதிக ஆச்சரியப்பட்டுப் புன்சிரிப்புடன் விசேஷ தபோபலத்தையுடைய அனஸூயையைப் பார்த்து "தங்களை தரிசித்ததாலும் தங்களுடைய சேர்க்கையாலும் அனுக்கிரஹத்தாலும் என் மனோரதங்களெல்லாம் நிறைவேறின" என்ருள். ஸகல தர்மங்களையும் அறிந்த அனஸூயை ஸீதையின் வணக்கத்தையும் பக்தியையும் பார்த்து இன்னும் அதிக ப்ரீதியடைந்து, "குழந்தாய்! என் சந்தோஷம் பலனில்லாமல் போகக்கூடாது. இதோ பார். இந்த உத்தமமான மாலையும் வஸ்திரங்களும் ஆபரணங்களும் பரிமள திரவ்யங்கள் சேர்ந்த சந்தனமும் உனக்குத் தகுந்தவை. இவைகளை நீ தரித்தால் உன் அழகிற்கு எல்லை யிராது. இவைகளின் காந்தியும் பரிமளமும் அழகும் ஒருநாளும் குறையாது. நாராயணனுடைய தேஜஸ்ஸையும் ஸௌந்தர்யத்தையும் மஹாலக்ஷ்மி தன் காந்தியால் விருத்தி செய்வது போல், இந்தச் சந்தனத்தால் உன் பர்த்தாவை விசேஷமாய்ப்பிரகாசிக்கும்படிசெய்வாயெ'ன்று அவைகளை ஸீதைக்குக் கொடுத்தாள். ஜானகி அவைகளைப் பிரியத்துடன் பெற்றுக்கொண்டு, அந்த ரிஷிபத்தினியை நமஸ்கரித்து, அவளால் ஆசீர்வதிக்கப்பட்டாள்.

ஒரு ஸமயத்தில் ப்ரஹ்மா அத்ரிமஹரிஷியை சிருஷ்டிக்கும்படி ஆக்ஞாபிக்க, அவர் தன் பத்னியான அனஸூயையுடன் ரிக்ஷமென்ற பர்வதத்திற்குச் சென்று, பிராணுயாமத்தால் மனதை அடக்கி, நூறு வருஷங்கள் வரையில் ஒரு காலால் நின்று, காற்றைப் புஜித்துக்கொண்டு சுகதுக்கங்களை ஸமமாய் நினைத்துக் கடுந் தபஸைச் செய்தார். "எவர் ஜகத்திற்கு அதிபதியோ, அவர் தனக்கு ஸமமான குழந்தையை எனக்குக்கொடுக்கவேண்டு"மென்று பிரார்த்தித்தார். அப்பொழுது அவருடைய தலையிலிருந்து கிளம்பின அக்கினிக் கொழுந்துகளால் ஸகல லோகங்களும் எரிக்கப்படுவதைப்பார்த்து,திருமூர்த்திகளும் தேவகணங்களும் அங்கே வந்தார்கள். அத்ரியும் அனஸூயையும் அவர்களை நமஸ்கரித்து, அர்க்ய பாத்ய ஆசமனீயங்களால் விதிப்படிபூஜித்து,ஸ்தோத்திரஞ் செய்தார்கள். "மகானுபாவர்களே! உங்களில் யாரை நான் அழைத்தேன்? புத்திரன் பிறக்க வேண்டித் தேவர்களுக்குள் பிரதானமான ஒருவரையே தியானஞ்செய்தேன். அப்படியிருக்க, மனதிற்கும் எட்டாத நீங்கள் மூவரும் இவ்விடம் வந்த காரணமென்ன". என்ருர்.

அப்பொழுது அவர்கள் சிரித்து "நீர் எப்படி நினைத்து தியானஞ் செய்தீரோ அப்படியே ஆகட்டும். நீர் எதை ஜகத்காரணமாய் உபாஸித்திரோ அது நாங்களே. குணபேதத்தால் எங்களுக்கு சரீர பேதமேயன்றி தத்வ பேதமில்லை. எங்களுடைய அம்சம் கலந்த புத்திரர்கள் உமக்குப் பிறப்பார்கள்" என்று வரங்கொடுத்து மறைந்தார்கள். பிறகு ப்ரஹ்மாவின் அம்சமாய் சந்திரனும், விஷ்ணுவின் அம்சமாய் தத்தாத்ரேயரும், சிவனுடைய அம்சமாய் துர்வாஸரும் அனஸூயையிடத்தில் பிறந்தார்கள். இப்படி அனந்தகோடி ப்ரஹ்மாண்டங்களைப் படைத்துக் காத்து அழிக்கும் த்ரிமூர்த்திகளே அவதாரம் செய்யத் தகுந்த பரிசுத்தமான தேஹத்தையும் அந்தக்கரணத்தையு முடைய மஹானுபாவையான அனஸூயையின் மஹிமைக்கு நிகருண்டோ?

ஒரு நாள் நாரத மஹரிஷி ஸகலலோகங்க

காடிக்குப் போய்த் தயிர் கொண்டுவந்தது போல்.

ளிலும் சஞ்சரித்துக்கொண்டும், மஹதீயென்ற வீணையில் பகவத்குணங்களை மதுரமாய் வாசித்துக்கொண்டும், அதை ஒத்துப் பாடிக்கொண்டும் ப்ரஹ்ம லோகத்திற்குச் சென்றார். அங்கே அவருடைய தாயான ஸரஸ்வதியை நமஸ்கரித்து அவளால் ஆசீர்வதிக்கப்பட்டு உட்கார்ந்தார்.

"குழந்தாய்! லோகங்களில் என்ன அபூர்வமான ஸமாசார" மென்று நாமகள் கேட்க,

அந்தத் தேவரிஷி "அம்மா! ஒன்றுமில்லை. பூலோகத்தில் சஞ்சரிக்கையில், அத்ரி மஹரிஷியின் ஆசிரமத்தில் சிலகாலம் வஸிக்கும்படி நேர்ந்தது: அங்கே அவருடைய பத்னியான அனஸூயையின் தபோபலத்தையும் பதிவ்ரதா தர்மத்தையும் கண்டு எனக்கு ஆச்சரியமும் பயமும் மேலிட்டு, இப்படிப்பட்ட மஹிமை எவ்வுலகத்திலும் எவர்க்கும் கிடைப்பதரிதென்று நினைத்தேன். அந்த ஆச்சர்யத்தைத் தங்களிடத்தில் சொல்ல வந்தேனெ"ன்றார்.

ஸரஸ்வதி "என்ன நாரத! மறுபடியும் சொல். அனஸூயையைப்போல் பதிவிரதை எவ்வுலகித்திலும் இல்லையென்று சொன்னாயா?" வென்றாள்.

நாரதர், "ஆம், அதில் ஸந்தேஹ மில்லை."

ஸரஸ்வதி, "மனுஷ்யர்களுக்குள் இல்லையென்று உன் அபிப்பிராயம் போலிருக்கிறது."

நாரதர் "அப்படியில்லை; அதல விதல பாதாளமென்ற கீழ் ஏழு லோகங்களிலும், பூலோகம் முதல் மேல் ஏழு லோகங்களிலும் உள்ள ஸகல ஜீவகோடிகளின் ஸ்வபாவத்தையும் யோக்கியதையையும் நன்றாயறிந்த நான், எவ்வுலகத்திலும் எவரிடத்திலு மென்று சொன்னதைத் தாங்கள் நன்றாய்க் கவனிக்க வேண்டும்."

ஸரஸ்வதி, "நாரதா! ஜாக்கிரதையாய்ப் பேசவேண்டும்."

நாரதர், "வெகு ஜாக்கிரதையாய்ப் பேசுகிறேன். தங்களுக்கு ஓர் ஸம்சயமிருக்கிறதென்று எண்ணுகிறேன். அதை ஸ்பஷ்டமாய்ச் சொல்லத் தாங்கள் ஸங்கோசப் படுகிறீர்கள். நான் அதைத் தீர்த்து விடுகிறேன். ஸத்ய லோகம், வைகுண்டம், கைலாஸ மென்கிற லோகங்களைத் தவிரவென்று நான் சொல்ல வேண்டுமென்பது தங்களுடைய கருத்து. அதிலும் மற்ற இரண்டு லோகங்களையும் சேர்க்காமல் ஸத்யலோகத்தைமாத்திரம் விலக்கிச் சொன்னால் தங்களுக்கு மிகவும் பிரியமாயிருக்கும். ஆனால், நான் என்ன செய்வேன்? அந்த ஸத்யலோகத்தி லிருந்துகொண்டு ஸத்யத்தைப் பேசாமலிருக்க முடியுமா? என் தாயான தாங்களும் மஹாலக்ஷ்மியும் பார்வதியும் பதிவிரதா தர்மத்தில் அனஸூயைக்கு அடுத்தவர்களே. அவளை நீக்கிப் பேசினால் நீங்களே முதலானவர்கள். உங்கள் மூவருடன் ப்ரதி தினமும் பழகும் நான் இந்த விஷயத்தில் மோசம் போவேனா? தங்களிடத்தில் இல்லாத பக்ஷபாதமும் பிரியமும் முன்பின் பாராத ஒரு மனுஷ்ய ஸ்தரீயிடத்தில் உண்டாகுமா?"

ஸரஸ்வதீ, "மஹேச்வரன் தன் பார்யையைப் பக்கத்தில் வைத்துக்கொண் டிருக்கிறார். விஷ்ணு தன் மனைவியை மார்பில் வைத்துக் கொண்டிருக்கிறார் ஆனால் உன் பிதாவான ஸர்வலோக பிதா மஹர், என்னைச் சிரஸிலும், சிரஸில் ப்ரதானபாகமான வாக்கிலும் வைத்துக் கொண்டிருப்பது, மற்ற இருவரைக் காட்டிலும் நான் எவ்விதத்திலும் மேலானவளென்று பரீக்ஷித்துத் தெரிந்தே செய்ததென்று உனக்கேன் விளங்கவில்லை?"

நாரதர், "அது எப்படியோ எனக்குத் தெரியாது. பார்யைக்கும் பர்த்தாவிற்கும் அநேக வ்யவஹாரங்க ளிருக்கும். அவர்களின் ப்ரீதிக்கும் த்வேஷத்திற்கும் காரணங்களை விசாரிக்க முடியாது. உங்களுடைய பக்ஷத்தில் உங்களுக்கு அனுகூலமாய் ஸாக்ஷ்யம் சொல்ல வேண்டிய நானே இப்படிச் சொன்னால், அதில் எவருக்கும் ஸந்தேஹமுண்டாக இடமில்லை. என் வார்த்தையை நம்புங்கள். வேண்டுமானால் அனஸூயையின் பதிவிரதாமஹிமையை உங்களால் கூடியவரையில் பரீக்ஷித்துப் பார்க்கலாம். அப்பொழுதாவது என் வார்த்தையில் நம்பிக்கையுண்டாகுமல்லவா? நான் போய்வருகிறே"னென்று உத்தரவு பெற்றுக்கொண்டு, இப்படியேவைகுண்டத்திற்கும் கைலாஸத்திற்கும் சென்று, அங்கே லக்ஷ்மியிடத்திலும் பார்வதியிடத்திலும் இவ்விதமாகவே பேசி, அவர்களுடைய மனதையும் கலைத்துப் பொறாமையுண்டாகச் செய்தார்.

பிறகு அந்த மூவரும் தங்களுடைய பர்த்

காடு காத்தவனும், கச்சேரி காத்தவனும் பலன் அடைவான்.

தாக்களை இடைவிடாமல் உபத்ரவித்து, தங்களுடைய மஹிமையும் யோக்கியதையும் நாசமாயிற்றென்றும், கேவலம் ஒரு மனுஷ்ய ஸ்திரீக்குத் தாங்கள் தோற்றுப்போனதாகவும் ஸகல லோக நாயகர்களான திருமூர்த்திகளின் பத்னியென்று சொல்லிக்கொள்ள வெட்கப்படுவதாயும், ஸர்வ விருத்திலும் பதினுன்கு லோகங்களிலுமுள்ள ஸ்திரீகள் ஒருவரும் தங்களுக்கு ஈடில்லையென்று ஸ்தாபித்தாலொழியத் தாங்கள் திருமூர்த்திகளின் பார்யைகளென்ற பதவியை விட்டு விடுவோமென்றும், வேறு எந்த ஸ்திரீகளையாவது மனைவிகளாகக் கொள்ளலாமென்றும், பலவிதமாய் ஹிம்ஸித்து, அவர்களுக்கு வேறொன்றும் தோன்றாமல், தங்களுடைய வேலையைப் பார்க்கமுடியாமல், இரவும்பகலும் ஒவ்வொரு நிமிஷமும் கோரமான நரகயாதனையை அனுபவிக்கும்படி செய்தார்கள். அதைப் பொறுக்கமுடியாமல் ப்ரஹ்மா விஷ்ணு ருத்ரனென்ற திருமூர்த்திகள் ஒன்று சேர்ந்து ஆலோசித்து "இதென்ன கஷ்டம்! நமக்கு ஒரு வேலையும் நடக்கவில்லை. ஒவ்வொரு நிமிஷமும் ஒரு கல்பமாகப் போகிறது. இப்படி உபத்திரவப்பட்டுக் கொண்டிருந்தால், நாம் எல்லோரைக் காட்டிலும் தீர்க்காயுஸுள்ளவர்களென்ற பெயரை இழந்து, எல்லோரைக்காட்டிலும் அல்பாயுஸுள்ளவர்களென்ற பெயரை அடைந்து, அகால மரணத்திற் காளாவோம். ஒன்று, நம் மனைவிகளின் இஷ்டப்படி அனஸூயையின் மஹிமையைப் பரீக்ஷிபோமா? அல்லது நமது வேலையை விட்டு, ஒருவருக்கும் தெரியாமல் இந்த ப்ரஹ்மாண்டத்தைத் துறந்து எங்கேயாவது ஓடிப்போவோமா? அனஸூயையின் அபாரசக்தி நமக்கு நன்றாய்த் தெரியும். நமது பத்னிகளின் இஷ்டத்தைப் பூர்த்தி செய்ய விரும்பி அதைப் பரீக்ஷிக்கப் புகுந்தால், நமக்கு நேரும் அவமானமும் அபாயமும் எவ்விதமென்பதைச் சொல்ல முடியாது. இந்த பிரபஞ்சத்தில் எங்கே போய் ஒளிந்து கொண்டாலும், நமது பார்யைகள் நம்மைக்கண்டுபிடிக்காம லிருக்கமாட்டார்கள். அதைக்காட்டிலும் அவர்களுடைய கோரிக்கையைப் பூர்த்தி செய்து அதினால் வரும் கஷ்டங்களை அனுபவிப்பதே நலம்" என்று முடிவு செய்தார்கள்.

பிறகு, வெகுநேரம் வரையில் மூவரும் ஆழ்ந்து ஆலோசித்து, ஓர் உபாயத்தைக் கண்டுபிடித்து, அந்தப் பரீக்ஷைக்கு அனஸூயை தப்ப முடியாதென்று மனமகிழ்ச்சியுடன் பூலோகத்திற்கு வந்து, அத்ரி மஹரிஷி இல்லாத ஸமயத்தில் அவருடைய ஆச்ரமத்தில் பிரவேசித்தார்கள். அனஸூயை ஞானதிருஷ்டியால் அவர்கள் இன்னாரென்பதையும், எந்த உத்தேசத்துடன் வந்திருக்கிறார்களென்பதையும் அறிந்தும், ப்ராஹ்மண வேஷம் பூண்டு வந்தவர்களை ஸாதாரணமான அதிதிகளைப்போல் பாவித்து விதிப்படி உபசரித்தாள். அப்பொழுது அம்மூவரும் "பவதீ! பிக்ஷாம் தேஹி" யென்றார்கள். உடனே அனஸூயை அவர்களுக்கு அன்னம்போட யத்னம் செய்ய, அவர்கள், "அம்மணீ! இந்த அன்னம் எங்களுக்கு வேண்டாம். இதோ நாங்கள் கொண்டுவந்திருக்கும் கடலையைப் பக்குவம் செய்து எங்களுக்குப் பரிமாற வேண்டு" மென்றார்கள். அனஸூயை அதை வாங்கிப் பார்க்கையில், அது கறுத்த இரும்பால் செய்யப்பட்டிருந்தது. ஆனாலும், அதை ஸாதாரணமான கடலையென்றே எண்ணினவளைப்போல், ஆச்சர்யப்படாமல், தன் பர்த்தாவினுடைய கமண்டலத்திலுள்ள ஜலத்தை அவைகளின்மேல் தெளித்து பக்குவஞ்செய்ய ஆரம்பித்தாள். அதி சீக்கிரத்தில் அவை புஷ்பத்தைதபோல் மிருதுவாயும் மனோஹரமாயும்சமைக்கப்பட்டுத் திருமூர்த்திகளின் வாயில் ஜலம் ஊறும்படி செய்தன. அவைகளை அவர்களுக்குப் பரிமாற யத்தனம் செய்யும்பொழுது, சிருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரமென்ற முத்தொழில்களையும் நடத்தும் திருமூர்த்திகள், அனஸூயையை தடுத்து "எங்களுக்கு இப்படிப் பரிமாறக்கூடாது. நிர்வாணமாய்ப் பரிமாறுகிறவர்களிடத்திலேயே நாங்கள் போஜனம் செய்வது எங்களுடைய விரதம்" என்றார்கள். இருப்புக் கடலையை ஒருநாளும் பக்குவஞ் செய்ய முடியாதென்றும், அப்படிச் செய்யத் தவறினால் அதிதி பூஜை செய்யாத பாபம் நேருமென்றும், அந்தக் காரணத்தால் அவளைச் சபிக்கலாமென்றும் நினைத்து யுக்தி செய்த திருமூர்த்திகளின் எண்ணம் நிறைவேறாமல் போயிற்று.

காடு வா என்கிறது, வீடு போ என்கிறது.

பிரபஞ்ச வர்த்தமானம்

NEWS & NOTES

ஆப்கானிய யுத்த முடிவு.

நமது நாட்டுக்கு வடமேற்கிலுள்ள ஆப்கானிஸ்தானத்தின் அதிபதியான அமீர் சிலருடைய துர்ப்போதனையால் இந்தியாவை ஜெயித்துவிடலாமென்று படையெடுத்த விவரத்தை அபிமானிகள் அறிந்திருக்கலாம். பிரிடிஷ்ஸார்வ பௌமத்தின் வல்லமையையும் மகத்துவத்தையும் ஒரு சிறிது கவனித்துப் பார்த்திருப்பாரானால், ஆப்கானிய அமீர் இப்படிப்பட்ட காரியத்தைச் செய்யத் துணிந்திருக்கமாட்டார். சண்டை சிறிது நாள்கள் தான் நடந்தது. எதிர்பார்த்தபடியே, ஆப்கானிய சேனைகள் தோற்றோடியதன் காரணமாக, அமீர் பிரிடிஷ் கவர்ன்மெண்டாரோடு சமாதான உடன்படிக்கையைக் கோரினர். அவ்வுடன்படிக்கையின்படி இந்தியா மூலமாக துப்பாக்கி முதலிய ஆயுதங்களைத் தருவிக்கும் சுதந்தரம் இனிமேல் ஆப்கானியருக்கு இல்லாது போகும். வருஷாவருஷம் அமீருக்கு பிரிடிஷ் கவர்ன்மெண்டாரால் கொடுபட்டு வந்த வர்த்தனையாகிய 18 லக்ஷம் ரூபா இனி நின்றுவிடும். சென்ற சில வருஷங்களாக இந்த வர்த்தனையை அமீர் பெற்றுக்கொள்ளாதிருந்தனர். இப்போது இந்தத் தொகையும் பறி முதலாகிவிட்டது.

ஆகவே, பணத்தையும் ஆயுதங்களைத் தருவிக்கும் சுதந்தரத்தையும் ஒருங்கே இழந்த ஆப்கானியர் இனிமேலாகிலும் எல்லைப்புற வாசிகளுக்குத் துன்பம் செய்யாமல், தங்கள் நாட்டுக்குள்ளேயே அடங்கிச் சாதுக்களாய் வாழ்வார்களென எதிர்பார்க்க இடமுண்டு.

* * *

சென்னைச் சட்ட சபை.

நாளது மீ 12-ந் தேதி சென்னையில் கூடிய சட்ட சபை இருவிதத்தில் கவனிக்கற்பாலது. முதலாவது, வில்லிங்டன் பட்டவர்த்தனர் கவர்னரான பிறகு, புதிதாக வந்த அங்கத்தினரைக் கொண்ட விசேஷமொன்று. தனித்தனி பிரதிநிதித்வம் வேண்டுமென்ற வகுப்பாருடைய மனோபீஷ்டத்தை ஒருவாறு பூர்த்தி செய்து, அவ்வவ் வகுப்பினிலிருந்து பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்ததொன்று.

சபையில் நடக்கும் விஷயங்களெல்லாம் இங்கிலீஷிலேயே தர்க்கிக்கப்படவேண்டுமென்பதற்காக கனம் அட்வகேட் ஜனரல் ஒரு பிரேரேபனை கொணர்ந்தார். எதிர்பார்த்தபடியே இது நிறைவேறியது. பிரிடிஷ் ஸார்வ பௌமத்தின் ஓர் பகுதியான கனடா மாகாணத்தில் பார்லிமெண்டு சபையில் நடக்கும் விஷயங்களெல்லாம் இங்லீஷ், பிரஞ்சு என்ற இரண்டு பாஷைகளிலும் நடக்கின்றன. ஐரோப்பிய நாடுகளிலும், இவ்விதம் இரு பாஷைகளில் ராஜ்ய விஷயங்கள் நடைபெறுகின்றன. உதாரணமாக, பெல்ஜிய ராஜ்யத்தில், பிரஞ்சுபாஷையும் பெல்ஜிய பாஷையும் ஒருங்கே நடையாடுகின்றன. நமது மாகாணத்தில் நாலைந்து பாஷைகள் வழக்கத்தி லிருக்கிறபடியால், அவ்விதம் செய்வதற் கியலாதென வாதிக்கலாம். இதை நாம் ஒப்புக்கொள்கிறோம் என்றாலும், பிரதிநிதிகளுக்கு இவ்வித சுதந்தரத்தைக் கொடுப்பதில் ஒருவித கஷ்டமும் இராதெனவே நினைக்கிறோம். தாய்ப்பாஷையில் வாசகதாட்டியாகப் பேசுபவர்கள் அருமையிலும் அருமை. ஆகவே அப்படிப்பட்ட சுதந்தரத்தைப் பெற்றிருந்தபோதிலும், பிரதிநிதிகளில் பெரும்பான்மையோர் இங்கிலீஷிலேயே பேசுவார்கள். இந்த சுதந்தரத்தைக் கவர்ன்மெண்டார் கொடுத்திருப்பரேல், சுதேச பாஷைகளுக்கு இதுவரையில் இல்லாத ஒரு விசேஷ கவுரவம் உண்டாயிருக்கும். இந்த் சந்தர்ப்பத்தில், வங்காள மாகாணத்தில் இங்கிலீஷ் பாஷையே கோர்ட்டுகளில் நடையாடவேண்டுமென்று கொணரப் போவதாகவிருந்த ஒரு பிரேரேபனை ஹைகோர்ட்டாரால் தடுக்கப்பட்ட சங்கதியை அபிமானிகள் அறியவேண்டுகிறோம்.

* * *

ஜெனரல் போதாவின் தேகவியோகம்.

தென்னாப்பிரிக்காவில் மந்திரியாக விருந்த ஜெனரல் லூயி போதா நாளது மாதம் கபவாத ஜுரத்தினால் மரணமடைந்தாரென்பதைக் கேட்க விசனிக்கிறோம். இருபது வருஷங்களுக்கு முன்னால் தென்னாப்பிரிக்காவில் நடந்தபோவர் யுத்தத்தில் ஜெனரல் போதா பிரிட்டிஷாருக்கு எதிர்க்கட்சியில் நின்று சண்டைபோட்டார்

சண்டைநின்று சமாதானமானது முதல், ஜனரல் போதா பிரிடிஷ் ஸார்வபௌமத்தில் வெகுசிரத்தைகொண்ட பிரபலர்களில் ஒருவராக விளங்கியதும், இப்போது முடிவுபெற்ற ஐரோப்பிய யுத்தத்தில் அவர் தென்னாப்பிரிக்காவில் ஜர்மானியரை முறியடித்துச் சரணமடையச்செய்ததும் சிலநாள்களுக்குமுன்னால் இங்கிலாந்துக்குச் சென்றிருந்தகாலத்தில், பிரிடிஷ் ஸாம்ராஜ்யத்தின் ஐக்கியத்தை எப்படிச் செம்மைப் படுத்தலாமென்று வெகு கம்பீரமாய்ப் பேசியதும் நாம் கவனிக்கற்பாலனவாம். இவர் தேகவியோகத்தால் பொதுவாக பிரிடிஷ் ஸாம்ராஜ்யமும், சிறப்பாக தென்னாப்பிரிக்காவும், பெரிதும் வருந்துமென்பதில் தடையில்லை. தேகவியோக காலத்தில் இவருக்கு வயது 56. அவர் நேடால் நாட்டில் பிறந்த போவர் ஜாதியாரானாலும், அவரது மனைவி அயர்லாண்டு தேசத்தில் பிரபலரான ராபர்ட் எம்மட் என்னும் தேசாபிமானியின் உறவினளாவாள்.

* * *

சுதேச ராஜ்யங்களில் வித்யா விஷயம்.

திருவாங்கூர் சமஸ்தான வரும்படியில் நூற்றில் பதினைந்து பாகம் வித்யாவிஷயத்தில் விநியோகிக்கப்படுகிறது. என்றாலும், அவ்விராஜ்யவாசிகள் இன்னும் பள்ளிக்கூடங்களை அதிகரிக்க வேண்டுமென்றும், உபாத்தியாயர்களுக்கு இன்னும் உயர்ந்தசம்பளம் கொடுக்கவேண்டுமென்றும், தொழிற் கல்விச் சாலைகளை ஸ்தாபிக்க வேண்டுமென்றும், மன்றாடுகிறார்கள். இவ்விஷயங்களைப்பற்றி ஆலோசித்துத் தீர்மானம் சொல்லும்படி அங்கு ஒரு கமிடி ஏற்பாடாகி இருக்கிறது.

மைசூர் ராஜ்யத்தில், அடுத்த ஐந்து வருஷங்களுக்குள் 10,000 புதிய பள்ளிக்கூடங்களை சர்க்கார் செலவில் ஏற்படுத்துவதற்கான பிரயத்தனங்கள் செய்யப்படுகின்றன: ஜனசங்கியையில் 200-300 நபர்களடங்கிய ஒவ்வொரு கிராமத்துக்கும் தனிப் பள்ளிக்கூடமொன்று இருக்கவேண்டுமென்பது தர்பாரின் நோக்கமாம். இதனால் வித்தியா விஷயச் செலவு 34 லக்ஷம் ரூபாவிலிருந்து 64-லக்ஷம் ரூபாவாக உயர்கிறது. இப்படி, நமது அண்டையிலுள்ளோர்க்கு உண்டாகும் அனுகூலத்தைப் பார்த்து நாம் சந்தோஷப்படுகிறோமென்றாலும், நமக்கு அவ்வித சவுகரியமில்லாத குறைக்கு வருந்தத்தான் வேண்டியிருக்கிறது:

* * *

ஆந்திர மாகாணம்.

அனந்தப்பூரில் நடந்த ஆந்திர "மஹாநாடு" தீர்மானித்த விஷயங்களில் பிரத்தியேகமான ஆந்திர மாகாணத்தைப் பற்றியவிஷயம் ஒன்று. தெலுங்கு பாஷை நடையாடும் பதினொரு ஜில்லாக்களையும் சென்னையையும் சேர்த்து தனி ஆந்திர மாகாணமாக்கவேண்டுமென்பது அவர்களுடைய நோக்கம். இவர்கள் சென்னையையும் சேர்த்ததின் காரணம் நமக்கு விளங்கவில்லை. தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய நான்கு தேச பாஷைகளும் நடையாடும் சென்னை ஜில்லாவைத் தனியாகவே ஒரு மாகாணமாக்கி விடுவதில் நமக்கு ஆக்ஷேபணையில்லை. ஐக்கிய மாகாணங்களின் நடுவே உள்ள டில்லியை ஒரு தனிப் பிரதேசமாக்கியிருப்பதை அபிமானிகள் அறிந்திருப்பார்கள். அங்கு பாஷை விஷயத்தால் தனி மாகாணமாகவில்லை. என்றாலும் ராஜகீய விஷயத்தில் செய்ததை, பாஷை விஷயத்திலும் செய்யலாம். இல்லையேல், தமிழர்களுக்கும் ஆந்திரர்களுக்கும் மனக்குறை ஏற்படும். ஒருவரை அபிமானித்தும் ஒருவரைப் பிரதிகூலித்தும், காரியங்களைச் செய்வதில் எப்போதும் தொல்லைதான்.

* * *

(74-ம் பக்கத் தொடர்ச்சி.)

தன. இவர்களில் அநேகமாய் பாதிபேர் மடிந்தனர். மடிந்தாலென்ன? அவர்கள் தங்களுக்குக் கொடுத்த வேலையைச் செய்து முடித்து அழியாக் கீர்த்தி பெற்றனர். பிள்ளைகளே! நீங்களும் பெரியோர்கள் உத்தரவுக்கு மீறி நடக்காமல், கீழ்ப்படிந்து நடந்தால் இவர்கள் மாதிரி நீங்களும் புகழ் அடைவீர்கள்.

காடு வெந்தால் சந்தன மரமும் வேகாதோ?



திவான் பஹதூர், மிஸ்டர் பி. ராஜகோபாலாசாரியாருக்குப்
பதிலாக நியமிக்கப் பெற்றிருக்கும் நிர்வாக சபை மெம்பர்
கனம் கான் பஹதூர், ஹபிபுல்லா சாஹிப் பஹதூர்.

விவேகபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்.

தொகுதி XII | சித்தார்த்தி௵ ஆவணி௴ :: 1919-௵ செப்டம்பர்௴ | பகுதி 3

கம்பராமாயணத் திரட்டு

SELECTIONS FROM KAMBA RAMAYANA

அன்னது கூனி யறிந்தனள் சொல்லக்
கன்னன் மொழிக்குயில் கைகசி கேட்டே
மன்னவ நீமு னளித்த வரத்தால்
என் மக னுக்கர சீந்தரு ளென்றாள்.

வடிவுடை மன்னன் மயங்கினன் வீழ்ந்தும்
இடுகழல் வீர விராகவ வின்றே
நெடில்படு கானக நீபுகு கென்றே
கொடியவள் சீரை கொடுத்தன ளன்றே.

மலர்க்குழ லாளொடும் வார்சிலை வன்கை
இலக்குவ னோடு மிராகவ னன்றே
அலக்க ணாரு மலயோத்தி கடந்தே
நலக்குறு கங்கை நறுங்கரை நண்ணி.

அங்க ணிருங்குக னம்பிவிடப்போய்க்
கங்கை கடந்துறு கங்குலி னங்கோர்
சங்கையின் மாமுனி சாலையி னண்ணிக்
கொங்கலர் சித்திர கூட மடைந்தான்.

சித்திர கூட மடைந்திடு செய்தி
அத்த னறிந்திவ ணாருயிர் விட்டான்
வித்தக மாமுனி மெய்ப்பர தற்கே
உய்த்தன னோலை யுணர்ந்தனன் வந்தான்.

மன்ன னுக்கு மகனுக்கு முற்றவா
றன்னை கூற வறிந்து மனந்தளர்ந்
தென்ன பாவிசெய் தாயென் றிரங்கினான்
றன்னை மாமுனி தான்வந்து தேற்றினான்.

இன்ன தந்தைக்கிங் கீமக் கடன்செய்த
பின்னை மாமுடி சூடெனப் பேசிடப்
பன்னு மாலைப் பரத னிராகவன்
றன்னை நாளைத் தருவெனென் றோதியே.

சடையும் வற்கலை யுந்தரித் தாங்கிரு
புடையுந் தாயரு மன்னரும் போதர
இடைய கங்கைக் குகனொடு மேறிப் போய்க்
கொடிகொள் சித்திரகூடஞ் சென்றெய்தினான்.

வைய மாளுடை யானை வணங்கிப்பின்
ஐயன் வான மடைந்தது கூறிட
ஐய கோவென் றரற்றி யிராகவன்
கையி னாலக் கடன்கழித் தானரோ.

ஆதி மாமுடி சூடென் றடிதொழப்
போதி யேழி ரண்டாண்டு பொறுத்தியென்
றோத மின்றி யிராகவன் கூறலும்
பாது கங்கொ டவனும் படர்ந்தனன்.

விடங்கொள் வேற்கை விராதனை வீட்டிப் போய்த்
தடங்கொள் வீடு சரபங்க னுக்களித்
த்டங்க வாவ மகத்தியன் றந்தபின்
இடங்கொள் பஞ்ச வடியிற்சென் றெய்தினான்.

மங்கை சூர்ப்ப நகைப்பெயர் மாதராள்
கொங்கை நாசி குழையொ டரிந்தபின்
அங்கை யாற்றன் வயிறலைத் தாவெனக்
கங்குல் வாழ்க்கைக் கரனுக் குரைசெய்தாள்.

கரனுந் தூடண னுங்கலி னப்பரித்
திரிசி ராவுஞ் சினப்படை யீட்டமும்
வரனி ராமன்கை மாண்டதெல் லாங்கடி
துரைசெய் தாள்சென் றிராவணற் கோடியே.

சீதை மற்றவன் றேவியைக் கொண்டியான்
போத லுற்றுழிப் புக்கதி தென்றலும்
காத லுற்றவட் காண்குறு மாசையான்
மாது லற்கொரு மாற்றஞ்சென் றோதினான்.

மறுத்துணர்த்திட மாமன்மா ரீசனும்
வெறுத்துரைத் தனன் வெஞ்சொ லிராவணன்
பொறுத்தி நீயெனப் பொன்னிள நவ்வியாய்
நிறுத்த சீதை நிலையிற்சென் றெய்தினான்.

கண்டு சீதை கவர்ந்தது தாவென
அண்டர் கோனு மதன்பின்ன ரேகியே
கொண்ட மாயை யறிந்து கொலைசெய்தான்
ஒண்டொடீஇயிளை யோயென் றுலைந்ததே.

அன்ன மன்னவ ளவ்வுரை கேட்டலும்
தன்ன நாயகன் றம்பியை யேவினாள்
பன்ன சாலையிற் பார்ப்பன வேடமாய்
இன்னல் செய்ய விராவண னெய்தினான்.

காடை இடம் ஆனால், நாட்டை ஆளலாம்.

விவேக போதினி

தொ. 12] சித்தார்த்தி௵ ஆவணிமீ [ப. 3

யுதிஷ்டிரர்

YUDHISHTIRA

பாண்டவர்கள் பகலில் வேட்டையாடிக் கொண்டு காடுகளில் காலங்கழித்தார்கள். இரவில் ஆயுதபாணிகளாய் அம்மாளிகையில் விழித்துக்கொண் டிருந்தார்கள். புரோசனன் எப்பொழுதும் அதன் வாயிலிலேயே ஜாக்கிரதையாய்க் கார்த்துக்கொண் டிருந்தான். இப்படி ஒரு வருஷத்திற்கு மேல் பாண்டவர்கள் அங்கே வஸித்துக்கொண் டிருந்தார்கள். அவர்கள் யாதொரு ஸந்தேகமு மில்லாமல் தன்னை நம்பியிருக்கிறார்களென்று புரோசனன் எண்ணி, அவர்களை அழிப்பதற்குக் காலம் சமீபத்ததென்று மகிழ்ந்தான்.

இப்படி ஒரு வருஷகாலம் வரையில் பாண்டவர்கள் அங்கே வஸித்துக்கொண் டிருந்த பொழுது "இவர்கள் கவலையற்று நம்மிடத்தில் சந்தேகப்படாமல் வேடிக்கையாய்க் காலங் கழித்துக்கொண்டிருக்கிறார்களே"ன்று, புரோசனன் களிப்புற்றிருந்தான். அவனை எப்பொழுதும் வெகுநுட்பமாய்க் கவனித்துவந்த யுதிஷ்டிரர், தன் தம்பிகளை யழைத்து ரஹஸ்யமாய், "இந்த வன்னெஞ்சனான புரோசனன், அவனுடைய வலையில் நாம் சிக்கிக்கொண்டோமென்று நம்பி மகிழ்கிறான். இனி இவ்வரக்குமாளிகையில் தீமூட்டி நம்மைக் கொல்லத் தாமதிக்க மாட்டான். நாம் முந்திக்கொண்டு ஆயுதசாலையில் தீமூட்டி, புரோசனனையும் எரித்து; இங்கே ஆறு மனிதர்களை வைத்துவிட்டு, ஒருவருக்கும் தெரியாமல் சுரங்கத்தின் வழியாய்த் தப்பி, காட்டில் ஸஞ்சரிப்போ"மென்றார். அவருடைய ஆலோசனையால் குந்தி ஒரு நாளிரவில் பெரிய பிராஹ்மண போஜனஞ் செய்வித்தாள். புரோசனனால் அனுப்பப்பட்ட ஒரு வேடச்சி, குந்தியை அடுத்து, நட்புப் பாராட்டி பாண்டவர்களுடைய செயல்களைத் தன் யஜமானனுக்குத் தெரிவித்துக்கொண் டிருந்தாள். அன்றைக்கு அவளும், அவளுடைய ஐந்து புத்திரர்களும் அங்கே வந்து வயிறார உண்டு, உடம்பு தெரியாமல் தேனையும் கள்ளையும் குடித்து மயங்கிக் கிடந்தார்கள்.

நகரத்து ஜனங்களெல்லாம் அயர்ந்து தூங்கிக் கொண்டிருக்கையில், பெருங் காற்றடிக்கையில், புரோசனன் படுத்திருக்கும் இடத்திலும், பிறகு அம்மாளிகையில் பலவிடங்களிலும், பீமன் தீமூட்டி, தன் தாயையும் உடன்பிறந்தாரையும் அழைத்துக்கொண்டு, சுரங்கத்தின் வழியாய் வெகு தூரத்திற் கப்பால் வெளியில் வந்து, காட்டில் நுழைந்து, குந்தியைத் தோளிலும், நகுல ஸஹதேவர்களை இடுப்பிலும் வைத்துக்கொண்டு, யுதிஷ்டிரரையும் அர்ஜுனனையும் கைகளில் பிடித்துக் கொண்டு, வழியிலிருக்கும் மரங்களை மார்பால் முறித்துத் தள்ளிக்கொண்டு, மேடு பள்ளங்களைக் காலால் நிரவிக்கொண்டு, வாயு வேகமாய் அந்த வாயுபுத்திரன் காட்டைக் கடந்து, கங்கைக் கரைக்கு வந்தான். அங்கே விதுரரால் ஆயத்தம் செய்து வைக்கப்பட்ட படகில் ஏறிக் கங்கையைத் தாண்டி, நக்ஷத்திரங்களின் நடையால் காட்டுவழிகளைக் கண்டுபிடித்துக் கொண்டு அவர்கள் வெகுதூரம் சென்றனர்.

இப்படியிருக்க, வாரணாவதத்து ஜனங்கள் அரக்குமாளிகை எரிந்த சத்தத்தால் விழித்துக் கொண்டு, "ஐயோ! இந்த மஹாபாபி, பரம ஸாதுவான பாண்டவர்களை இவ்வரக்கு மாளிகையில் வைத்துக் கொளுத்திவிட்டானே! ஆனால், தெய்வச்செயலாய் அவனும் அங்கிருந்து தப்ப முடியாமல் இறந்தானே"ன்று மிகவும் வருந்தி, தீயை அணைத்துத் தேடிப் பார்க்கையில், ஏழு மனித உடல்கள் வெந்து கிடப்பதைக் கண்டார்கள். அவை புரோசனனும் வேடத்தியும் அவளுடைய ஐந்து பிள்ளைகளுமென்று அறியவில்லை. சுரங்கமோ மண்ணால் மூடப்பட்டு ஒருவராலும் கண்டுபிடிக்க முடியவில்லை.

பிறகு அந்தத் துக்க சமாசாரத்தைத் திருதராஷ்டிரனுக்குச் சொல்லி யனுப்ப, அவன்

காட்டுப் பூனைக்குச் சிவராத்திரி விரதமா?

துயரமுற்றுப் பாண்டவர்களுக்கும் குந்திக்கும் தகுந்தபடி உத்தரக்கிரியைகளை நடப்பித்தான். துரியோதனாதியரோ அகத்தில் மிக்க மகிழ்வடைந்தும், வெளியில் மற்றவர்களைப்போல் புரண்டழுதார்கள். ஆனால், பீஷ்மரையும் துரோணரையும் விதுரர் தனியே யழைத்து நடந்த சங்கதிகளைச் சொல்லி, பாண்டவர்களுடைய க்ஷேமத்தைத் தெரிவித்து சமாதானம் செய்தார். ஆனால், பல அரசர்களும் நண்பர்களும் "பலத்திலும் பராக்கிரமத்திலும் நிகரற்ற பாண்டவர்கள், அறிவில்லாத பசுக்களைப்போல் மடியார்கள். பீமனுடைய பலமும் யுதிஷ்டிரருடைய நுட்பமான புத்தியுமே அவர்களைக் காப்பாற்றுமெ"ன்று அவர்களுடைய மரணத்தை நம்பவேயில்லை.

வியாஸபகவான் பாண்டவர்களை அவ்வனத்தில் கண்டு ஆசீர்வதித்து ஆறுதல் சொல்லி, "நீங்கள் இதோ விருக்கும் ஏகசக்கிர நகரத்தில் மறைவாய்ச் சிலகாலம் வஸித்துக்கொண்டிருங்கள். நான் மறுபடியும் உங்களை வந்து பார்த்து மேல் நடக்கவேண்டிய காரியங்களைச் சொல்லுகிறேனெ"ன்று மறைந்தார்.

பிறகு தருமன் முதலானோர் ஏகசக்கிர நகரத்திற்குச் சென்று, ஓர் அந்தணனுடைய வீட்டில் ஜடைமுடிகளுடன் பிரமசாரி வேஷம் பூண்டு, மௌன விரதம் கொண்டு, ஸாதுக்களின் வீடுகளில் இரவும் பகலும் பிக்ஷையெடுத்துக் குந்தியைக் காப்பாற்றி வந்தார்கள். அவ்வன்னத்தில் ஒரு பாதியைத் தின்றுவந்த பீமன் பசியால் களைத்து வாடி, நிறம் மாறி, இளைத்தான். பகனென்ற ஓர் கொடிய அஸுரனால் அந்நகரத்து ஜனங்கள் பீடிக்கப்பட்டு, அவனுக்கு ஒவ்வொரு நாளும் பல வண்டிகளில் அன்னத்தையும், அத்துடன் நரபலியையும் கொடுப்பதாய் ஏற்பாடு செய்து, வீட்டுக்கு வீடு அப்படியே முறை வைத்து நடத்தி வந்தார்கள். பாண்டவர்கள் குடியிருந்த வீட்டுப் பிராஹ்மணனுடைய முறை வர, அவனும் மனைவி மக்களும் அடங்காத் துயரம் கொண்டு வாய்விட் டலறுவதைக் கண்ட குந்தி, மனம் பொறாமல், "எனக்கு ஐந்து பிள்ளைக ளிருக்கிறார்கள். அவர்களில் ஒருவனை இன்று அனுப்பி, உங்களுடைய துயரத்தைப் போக்குவேன். அக்கொடிய அஸுரனால் அவன் கொல்லப்பட்டாலும் நான் வருந்தேன். ஆனால், அந்தப் பாதகனை என் மகன் கொன்று ஜயசாலியாய்த் திரும்பி வருவானென்றே எண்ணுகிறேனெ"ன்றாள். அதைக் கேட்ட வேதியனும் அவனுடைய சுற்றத்தாரும் ஆச்சரியமடைந்து "எங்களைக் காப்பாற்றுவதற்காக உன் வயிற்றில் பிறந்த புத்திரனைக் கொடிய அரக்கனுக்குப் பலி கொடுக்கத் துணிந்த உத்தமியே! நீயே எங்களைக் காப்பாற்ற வந்த தெய்வம். இந்தப் பெரும் உதவிக்கு நாங்கள் செய்யக்கூடிய கைம்மாறு யாதுமில்லை. உன் மகன் அவ்வஸுரனைக் கொன்று இந்நகரத்தாரை என்றென்றும் பயமில்லாமல் வாழச் செய்வானெ"ன்று ஆசிர்வதித்தார்கள்.

பிறகு குந்தி, யுதிஷ்டிரருடன் கலந்து ஆலோசித்து "நமது பீமனுக்கு வெகுநாளாய்ப் போதுமான ஆகாரமில்லாமல் களைத்து வருந்துகிறான். மேலும் தனக்குரிய வீரச்செயல்களுக்கு இடமில்லாமல், சோம்பேறியாய்த் திரிகிறான். ஆகையால், இவ்வஸுரனுக்கு அனுப்பும் ஏராளமான அன்னத்தைத் தின்று, அவனுடன் கையாறப் போராடி, அவனைக் கொன்று வரட்டுமென்"ன்று பீமனுக்கு உத்திரவு கொடுத்தனுப்பினாள். தர்மனுக்கிளையோன் அதைக் கேட்டு, ஆனந்தத்தால் தோள்களைத் தட்டிக்கொண்டு, வழக்கத்தைக் காட்டிலும் அதிகமாய்ப் பல வண்டிகளில் அன்னம் முதலிய சாமான்களை ஏற்றி ஓட்டிக்கொண்டு அவ்வஸுர னிருக்கும் இடத்திற்குப் போய், அவனைச் சண்டைக் கழைத்து, வெகு நேரம் போராடிக் கொன்று, அவ்வன்னக் குவியல்களை வயிறாறத் தின்று, ஏகசக்கிர நகரத்திற்கு ஜயகோஷத்துடன் திரும்பிவந்தான்.

இப்படியிருக்கையில், அந்தப் பிராமணருடைய வீட்டுக்கு வந்த ஓர் அதிதி, பாஞ்சால தேசத்தரசனுக்கு தெய்விகமாய் திருஷ்டத்யும்னனும் திரௌபதியும் பிறந்ததையும், அந்தப் பாஞ்சாலியின்மணத்திற்காகஸ்வயம்வரம் ஏற்படுத்தி யிருப்பதையும் விஸ்தாரமாய்ப் பாண்டவர்களுக்கு எடுத்துரைத்தார். குந்தி புத்திரர்கள் அரக்குமாளிகையில் வெந்திறந்ததை நம்பாத பாஞ்சாலன், அதை நிச்சயமாய் அறிவதற்காகவே, அர்ஜுனன் ஒருவனால் மாத்திரம் ஸாத்யமான ஓர்பந்தயத்தை ஏற்படுத்தி,ஸ்வயம்

வரம் கூட்டியிருக்கிருனென்று ஊகித்து, குந்தியும் பாண்டவர்களும் அந்தப் பிராமணனோடு பாஞ்சால நகரத்திற்குச் சென்றார்கள். அப்பொழுது வியாஸமஹரிஷி அங்கே வந்து, மேல் நடக்கும் விஷயங்களைச் சொல்லி, பாஞ்சால புத்திரியான திரௌபதி குந்திக்கு நாட்டுப் பெண்ணுவாளென்று ஆசீர்வதித்துச் சென்றார்.

பிறகு பாண்டவர்கள் பிராஹ்மணக் கூட்டங்களுடன் பாஞ்சால நகரத்திற்கு யாத்திரை செய்தார்கள். கங்கைக்கரையில் தன் ஸ்திரீகளுடன் ஜலக்கிரீடை செய்துகொண்டிருந்த சித்திரரதனென்ற கந்தர்வனுடன் அர்ஜுனன் யுத்தம் செய்து அவனை ஜயித்து, யுதிஷ்டிரருடைய உத்திரவால் அவனுக்கு உயிர்ப்பிச்சை கொடுத்து விடுத்தான். பாஞ்சால நகரத்தில் பாண்டவர்கள் பிக்ஷையெடுத்துப் புஜித்துக் கொண்டு, ஓர் குயவன் வீட்டில் குடியிருந்தார்கள். ஸ்வயம்வர தினத்தில், நானு தேசத்தரசர்கள் துருபதனுல் உபசரிக்கப்பட்டுத் தகுந்த ஆஸனங்களில் வீற்றிருந்தனர். பாண்டவர்களும் பிராஹ்மணர்களின் நடுவில் உட்கார்ந்திருந்தனர், ஸ்வயம்வரத்தின் நிபந்தனையின்படி அந்த வில்லை வளைப்பதற்கு அங்கு வந்திருந்த ஒவ்வொருவரும் எவ்வளவு யத்னஞ் செய்தும் பலிக்கவில்லை. பாண்டவர்களுடைய வரவை நுட்பமாய்க்கண்டுபிடித்தகிருஷ்ணன், அந்தப் பந்தயத்திற்குத் தான் போகவில்லை. துரியோதனன் கர்ணன் முதலிய வீரர்களும் அவமானப்பட்டுப் பின்னடைந்ததைக் கண்டு, அர்ஜுனன் எழுந்துபிராஹ்மணனுடையஆசீர்வாதத்தைப் பெற்று, தர்மபுத்திரருடைய பாதங்களில் வணங்கி, தன்குலதெய்வமான கிருஷ்ணனை மனதால் நமஸ்கரித்து,வில்லையெடுத்து விளையாட்டாய் நாணேற்றி, ஐந்து பாணங்களால் குறியை அடித்துத்தள்ளினுன். மனுஷ்ய ஸம்பந்தமில்லாமல் அக்னி குண்டத்திலிருந்து உண்டான மஹா பரிசுத்தமுள்ள திரௌபதி, உடனே வெண்மையான புஷ்பமாலையை, புன்னகையுடன், பிராஹ்மணர்களுக்கு நடுவிலிருக்கும் அர்ஜுனனுடைய கழுத்தில் போட்டு, அவனைத் தன் பர்த்தாவாக வரித்தாள். பாண்டவர்கள் அவளை அழைத்துக் கொண்டு, பிராஹ்மணர்களால் ஆசீர்வதிக்கப் பட்டு,அந்தக் குயவனுடைய வேலைச்சாலைக்குப் போய், திரௌபதியை வெளியில் நிறுத்தி விட்டு, உள்ளே பிரவேசித்துத் தாயை நமஸ்கரித்து, "அம்மா! இன்று ஓர் அபூர்வமான பிக்ஷை கிடைத்திருக்கின்றதெ"ன்று தெரிவித்தனர். உடனே குந்தி, "எல்லோரும் சேர்ந்து அதைப் புஜியுங்களெ"ன்றாள். பிறகு கிருஷ்ணை உள்ளே வந்து குந்தியின் பாதங்களில் வணங்க, அவள் திடுக்கிட்டு "ஐயோ! நான் கவனிக்காமல் மஹா பாபத்தை விளைக்கும் சொற்களைப் பிதற்றி விட்டேனே"யென்று கவலையுற்று "நான்வழக்கம்போல் கவனியாது சொன்ன வார்த்தைக்கு கெடுதிநேராமலிருப்பதெங்ஙனம்? இந்தப்பாஞ்சாலராஜபுத்திரிக்கும் என்வார்த்தையால் எவ்வாறு பாபம் அணுகாமலிருக்கும்? இந்த தர்மசங்கடத்திலிருந்து என்னைக் காப்பாற்றெ"ன்றாள். தர்மபுத்திரர் சற்றுநேரம் ஆலோசித்து, "அர்ஜுனு! இந்தத் திரௌபதி ஸ்வயம்வரத்தில் உன்னுல் ஜயிக்கப்பட்டு, உன்னையே கணவனுய்க் கோரியிருக்கிருள். ஆகையால், நீ இவளை அக்கினி ஸாக்ஷியாய் மணஞ்செய்துக் கொள்ளெ"ன்றார். அர்ஜுனன், "அண்ணா! வரிசைக்கிரமமாய் விவாஹம் நடப்பதே எங்நாளும் வழங்கும் தர்மம். அதை மீறி நடந்தால் பெரும் பாபத்திற் காளாவேன். நாங்களும் இந்த மங்கையும் உமது கட்டளைக்குட்பட்டவர்கள். தர்மத்திற்கும் புகழிற்கும் பாஞ்சால ராஜனுடைய க்ஷேமத்திற்கும் எது தகுமோ அதை ஆராய்ந்து,எங்களுக்கு உத்திரவுசெய்ய வேண்டுமெ"ன்றான். பாண்டவர்கள் திரௌபதியிடத்தில் கொண்ட கருத்தை அவர்களின் குறிப்புகளால் அறிந்த தர்மநந்தனன், வியாஸருடைய சொற்களை நினைத்துத் தங்களுக்குள் விரோதம் வருமென்ற பயத்தால், "கீர்த்திசாலியான திரௌபதி நம்மெல்லோருக்கும் மனைவியாவாளெ"ன்றார்.

இப்படியிருக்கையில், கிருஷ்ணன் பலராமன் மற்றுமுள்ள யாதவ வீரர்கள் பாண்டவர்களுடைய விடுதியைக் கண்டுபிடித்துக் குயவனுடைய வீட்டில் நுழைந்து, தர்மபுத்திரருடைய பாதங்களிலும் குந்தியின் பாதங்களிலும் வணங்கி, மற்றவர்களைத் தகுந்தபடி உபசரித்து, அவர்களால் வரவேற்கப் பெற்றார்கள். சற்றுநேரம் யோகக்ஷேமங்களைக் கலந்து பேசிக்கொண்டு, தங்களுடைய விடுதிக்குச் சென்றார்கள்.

திரௌபதியின் சகோதரனான திருஷ்டத்யும்னன், ஒருவருமறியாமல், பாண்டவர்களைப் பின்தொடர்ந்து, நடந்த விஷயங்களை நன்றாய்க் கவனித்துத் தன்தந்தையிடத்திற்குச் சென்று, மஹா பிரதாபசாலிகளான பாண்டவர்களாலேயே திரௌபதி அடையப்பட்டாளென்று தெரிவித்தான். பிறகு பாஞ்சாலன் தன் புரோஹிதரால் பாண்டவர்களையும் குந்தியையும் அரண்மனைக்கு வருவித்து, பலவிதமாய் அவர்களைப் பரீக்ஷித்து, ஐயம் நீங்கி, "ஐவரும் ஓர் பெண்ணை மணம்புரிவது தர்மவிரோதமென்று" வெகுவாய் ஆக்ஷேபித்தான். அப்பொழுது யுதிஷ்டிரர் தங்களுடைய உண்மையான ரூபங்களை வெளிப்படுத்தி, "அரசனே! தர்மம் வெகு நுட்பமானது. அதன் வழியை அறிந்தோமென்று சொல்லக் கூடியவர்களில்லை. முன்னோர்கள் தலைமுறை தலைமுறையாய்ச் செய்துவரும் வழியை நாமும் பற்றி நடக்கிறோம். நான் பொய்சொல்லி அறியேன். என் உள்ளமும் அதர்மத்தில் செல்லாது. என் கருத்தும் இதை ஒப்புக்கொள்ளுகிறது. என் தாய் வாக்கிலிருந்து ஆகாச வாணியைப்போல் இப்படியே உத்திரவாயிருக்கிறது. முன்பு மஹாதேவனால் அனுப்பப்பட்ட வியாஸமஹரிஷியும் இப்படியே எங்களுக்கு ஆலோசனை சொல்லியிருக்கிறார். இது சிரேஷ்டமான தர்மமென்பதில் சற்றேனும் சந்தேகப்படாமல் நீர் இதை நடத்துவீராகவே"ன்றார்.

அப்பொழுது வியாஸபகவான் அங்கே விஜயஞ்செய்ய, அவரை எல்லோரும் பூஜித்துத் திரௌபதியைப்பற்றின தர்ம ஸந்தேகத்தைக் கேட்டார்கள். அந்த மஹரிஷி துருபதன் திருஷ்டத்யும்னன் முதலிய பாஞ்சாலர்களுடைய ஆக்ஷேபங்களைச் சொல்லக்கேட்டு, "தர்மபுத்திரா! நீயும் குந்தியும் இதை எப்படி ஆலோசித்து முடிவு செய்திருக்கிறீர்களெ"ன்றார். யுதிஷ்டிரர் "என் மனம் இவ்விஷயத்தில் தடையில்லாமல் செல்லுகிறபடியால், இது எவ்வகையிலும் அதர்மமாகாது. முன்காலத்தில் மஹா கீர்த்திபெற்றவளும் தர்மிஷ்டையுமான ஜடிலை யென்பவள், ஸப்தரிஷிகளால் மனைவியாய்க் கொள்ளப்பட்டாள். அப்படியே ரிஷிபுத்திரியான வார்க்ஷி யென்பவள், நெருப்புக் கொழுந்துகளைப் போன்ற பிரசேதஸர்களென்ற பத்து சகோதரர்களால் மனைவியாய்க் கொள்ளப்பட்டாள். இதுவரையில் என் வாக்கில் உண்மையைத் தவிரப் பொய் வந்ததில்லை. பெரியோருடைய சொல் தர்மத்திற்கு விலக்காயிராது. பெரியோர் எல்லோரிலும் தாயைக் காட்டிலும் பெரியோரில்லை. ஆகையால், அவளுடைய உத்திரவையே சிறந்த தர்மமென்று நினைக்கிறேனெ"ன்றார். குந்தி "கனவிலும் தர்மானுஷ்டானம் தவறாத யுதிஷ்டிரன் எதைச் சொல்லுகிறானோ, எதைச் செய்கிறானோ, அதே தர்மமாகுமெ"ன்றாள். பிறகு வியாஸர் பாஞ்சாலராஜனைத் தனியாய் அழைத்துப்போய், திரௌபதியின் பூர்வஜன்ம சரித்திரங்களையும், அவள் அநேக பர்த்தாக்களை அடையவேண்டிய கர்மகதியையும், பாண்டவர்களின் நிஜஸ்வரூபத்தையும் எடுத்துச் சொல்லி, அவனுடைய ஸந்தேஹத்தை நீக்கி, ஸம்மதிக்கச் செய்தார். ஆனால், "மானிடர்களுக்கு விவாஹம் செய்வதில் இதே விதியாய் ஏற்படாது. பாண்டவர்களோ தேவாம்சத்தால் பிறந்தவர்கள். திரௌபதியும் லக்ஷ்மியின் அம்சம். தான் முன் செய்த தவத்தால், மஹாதேவருடைய அனுக்ரஹத்தைப் பெற்றுப் பாண்டவர்களுக்கு மனைவியானாள். மற்ற ஆண்பெண்களுக்கு இது தர்மமாகாது. ஆகையால், தருமபுத்திரனுடைய எண்ணப்படி திரௌபதியை ஐவருக்கும் விவாஹம் செய்துகொடுக்கக் கடவாயெ"ன்று ஆக்ஞாபித்தார்.

அப்படியே அந்த ஐவரும் திரௌபதியை ஒவ்வொரு நாளும் ஒவ்வொருவராக வரிசைப்படி பாணிக்ரஹணம் செய்தனர். அப்பொழுது ஓர் ஆச்சர்யகரமான விஷயம் நடந்ததென்று நாரதர் சொன்னார். அதாவது, ஒவ்வொரு நாளும் விவாஹமான பிறகு அப்பெண் எப்பொழுதும்போல் கற்பழியாமல் கன்னிகையாகவே இருந்தனளாம். தன் கணவனுடைய மூத்த சகோதரனைக் கணவனாயும் மாமனாயும் மைத்துனனாயும், கணவனுக்குக் கடைசித் தம்பியைக் கணவனாயும் மைத்துனனாயும், நடுவிலிருப்பவர்களைக் கணவனாயும் மாமனாயும் மைத்துனனாயும் எண்ணியிருந்தனளாம். விவாஹமான பிறகு பாண்டவர்கள் துருபதனால் வெகு மரியாதையுடன் ஆதரிக்கப்பட்டு அங்கே வஸித்துக்கொண்டிருந்தார்கள்.

பாண்டவர்கள் உயிருடனிருப்பதை யறிந்த எல்லோரும் திருதராஷ்டிரனையும் துரியோத

காட்டுப் பேய்ச்சுரைக்காய் கறிக்கு ஆகுமா?

னையும் கர்ணனையும் நிந்தித்தார்கள். ஆனால் அந்தத் துஷ்டர்கள் கொஞ்சமேனும் வெட்க மடையாமல், பாண்டவர்களைக் கொல்வதற்குப் பற்பல உபாயங்களை ஆலோசித்துக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது ஸோமதத்தனுடைய புத்திரன், சகுனியைத் தடுத்துப் ''பாண்டவர்களை ஒரு நாளும் ஒருவரும் கொல்லமுடியாது. தேவாம்சங்களுக்குப் பிறந்து, பீஷ்மர் துரோணர் விதுரர் கிருஷ்ணன் முதலியவர்களின் அபிமானத்தையும், ஆசீர்வாதத்தையும் பெற்ற பாண்டுபுத்திரர்களுடன் ஸமாதானஞ் செய்து வாழ்வதே நலமெ"ன்றான். கர்ணன் அவனைக் கண்டித்து, கௌரவ வீரர்களுடன் பாஞ்சால நகரத்திற்குச் சென்று, பாண்டவர்களை எதிர்க்க, மறுபடியும் அவர்கள் முறிபட்டோடி வந்தார்கள்.

பிறகு பீஷ்மர், திருதராஷ்டிரனிடத்தில் சென்று ''பாண்டு புத்திரர்களுடன் விரோதஞ் செய்வது எனக்கு எவ்வகையிலும் இஷ்டமில்லை. எனக்கு நீயும் பாண்டுவும் காந்தாரியும் குந்தியும் எப்படி ஒன்றோ, அப்படியே பாண்டவர்களும் துரியோதனாதியரும். நீயும் அவ்விருவரையும் இப்படியே எண்ணி நடத்த வேண்டும். இந்த ராஜ்யம் உங்களிருவருக்கும் பொது. இது நியாயமாய் எனக்குக் கிடைக்க வேண்டியது. நான் பிதாவிடத்தில் செய்த பிரதிக்ஞையால்இந்தராஜ்யம் வேண்டாமென்றும் எனக்குப் பின், என் ஸந்ததியால் யாதொரு கலகமும் நேராதபடி விவாகமே செய்துகொள்ளாமல் நித்தியப் பிரஹ்மசாரியா யிருப்பேனென்றும் விரதம் பூண்டபடியால், இது என் தாயான ஸத்யவதிக்குப் பிறந்த விசித்ரவீரியனுக்குக் கிடைத்தது.பிறகு அவனுடைய புத்திரர்களான உனக்கும் பாண்டுவுக்கும் இது ராஜவம்ச நீதிப்படி கிடைத்தது.நீ தேஹ அசௌக்கியத்தால் ராஜ்ய பாரத்தை வகிக்கமுடியாமல் விலகிக் கொண்டபடியால், உன் தம்பியான பாண்டு இதை ஆண்டுவந்தான். அவனுக்குப் பிறகு, ஜ்யேஷ்ட புத்திரக் கிரமமாய் தர்மபுத்திரனுக்குக் கிடைக்கவேண்டியது. அப்படியில்லாவிட்டாலும், பாண்டவர்களுக்குப் பாதி ராஜ்யத்தையாவது கொடுப்பது நியாயமென்பது ஜனங்களுடைய அபிப்பிராயம். துர்யோதனாதியரின் வார்த்தையைக் கேட்டுப் பாண்டவர்களைக் கெடுக்கவும், வஞ்சிக்கவும் கொல்லவும் சூழ்ச்சி செய்வது மஹா பாபம். நமது வம்சத்திற்கே கெடுதியை விளைவிக்கும். உயிருக்கும் மேலான புகழை யழிக்கும். அருநரகில் சேர்க்கும். கடவுளினருளைக் கெடுக்கும். ஆகையால், நீயும் புரோசனனைப்போல் காலமுள்ளவரையில் அவதூறுக்காளாகாமல், அவர்களை அன்புடனும் ஆதரவுடனும் அழைப்பித்து அவர்களுக்குப் பாதி ராஜ்யத்தைக் கொடு. மேலும், அவர்கள் இப்பொழுது பலவானான பாஞ்சால ராஜனுடைய உதவியையும் யாதவ சிகாமணியான கிருஷ்ணனுடைய அபிமானத்தையும் பெற்றிருக்கிறார்கள். அவர்களுடன் நட்புப் புரிவதே நலமெ"ன்றார். விதுரரும் அதை ஆமோதித்துத் திருதராஷ்டிரனுக்கு வற்புறுத்த, புறக்கண்ணற்ற அம்மன்னன் விதுரரையே அனுப்பிப் பாண்டவர்களை அழைத்துவரச் சொன்னான்.

அவரும் மனக்களிப்புற்று, பாஞ்சால நகரத்திற் கேகி, அங்கே கிருஷ்ணன் முதலானோர் ஸபையில் வீற்றிருக்கும்பொழுது, திருதராஷ்டிரன் அனுப்பின செய்தியைத் தெரிவித்து, பாண்டவர்களை அன்புடன் அழைத்தார். அவர்கள் துருபதனோடும் கிருஷ்ணனோடும் கலந்து ஆலோசித்து, விதுரருடைய சொற்களுக்கிணங்கிப் பாஞ்சாலனால் விசேஷ வெகுமதியுடன் அனுப்பப்பட்டு, ஹஸ்தினபுரம் வந்து, கௌரவர்களால் எதிர்கொண்டழைக்கப்பட்டார்கள்.

பிறகு திருதராஷ்டிரன் ஒரு நாள் யுதிஷ்டிரரை வருவித்து, ''குழந்தாய்! நீயும் தம்பிமார்களும் நான் சொல்வதைக் கவனமாய்க் கேளுங்கள். இந்த ராஜ்யம் என் அருமைத் தம்பியான பாண்டுவால் வளர்க்கப்பட்டது. குடிகளைத் தன்னுயிர்போல் காப்பாற்றி, எவ்விதத்திலும் எத்தேசத்திலும் நமது பெயர் விளங்கச்செய்து, எல்லையற்ற பூமிகளையும் சைன்னியங்களையும் தனங்களையும் சேர்த்து வைத்தான். ஒருபொழுதாவது என் சொல்லை அலக்ஷியம் செய்தவனல்ல, தவறினவனல்ல, எதிர்த்துப் பேசினவனல்ல. எக்காரியத்தையும் என் உத்திரவு பெற்று, என் ஊழியனென்று சொல்லிக்கொண்டே செய்துவந்தான். குந்தீபுத்திரா! நீ எவ்விதத்தாலும் அவனை மிஞ்சியிருக்கிறாய். என் மக்களனைவரும் தீராக்கர்வமும் தற்புகழ்ச்சியும் பிடிவாத

மும் அகங்காரமு முள்ளவர்கள். என் வார்த்தையைத் துரும்புபோல் எண்ணுகிறவர்கள். மறுபடியும் அவர்களோடு நீ விரோதிக்காமலிருப்பதற்கு ஓர் உபாயம் எனக்குத் தோன்றுகிறது. ஆகையால், நீ இந்த ராஜ்யத்தில் பாதிக் கரசனாய், காண்டவப்பிரஸ்தத்தில் ராஜதானியை அமைத்துக்கொண்டு, அர்ஜுனனால் காக்கப்பட்டு, கிருஷ்ணனுடைய அபிமானமென்ற குடைநிழலில் ஸுகமாய் வாழக்கடவாயெ"ன்றான். பீஷ்மர், துரோணர், கிருபர், விதுரர், கிருஷ்ணன் முதலியவர்கள் இதை நல்லதென்று கொண்டாடி 'இந்தச் சுபகார்யம் தடையின்றி இப்பொழுதே நடக்கட்டுமெ'ன்றார்கள். அப்பொழுது அங்கே அகஸ்மாத்தாய் வந்த வியாஸ பகவானும் அதை வெகுப் பிரீதியுடன் ஆமோதித்தார்.

பிறகு, வெகு விமரிசையுடன் யுதிஷ்டிரர் அர்த்த ராஜ்ய பட்டாபிஷேகஞ் செய்யப்பெற்றார். முடிசார்ந்த மன்னர்களால் வெகுமதிக்கப்பெற்று, ஊர்வலம் வந்து, குடிகளால் கொண்டாடப்பட்டு, காண்டவப் பிரஸ்தத்தில் செங்கோல் செலுத்திவந்தார். ஆதியில், ஆயுஸ் புரூரவஸ் நகுஷன் யயாதி முதலியவர்களுக்கு அதே ராஜாதானியா யிருந்தது. புரூரவஸின் லோபித்தனத்தால் ரிஷிகள் அதை அழித்துவிட்டார்கள். பிறகு, கண்ணனால் நினைக்கப்பட்ட தேவேந்திரன், விச்வகர்மாவைக் கொண்டு அந்நகரத்தைச் சிறப்பித்துப் புதிப்பித்து, அன்றுமுதல் அதற்கு இந்திரப்பிரஸ்தமென்று பெயர் விளங்கச் செய்தான்.

இப்படிச் சிலகாலம் சென்ற பிறகு, தேவரிஷிகளுக்குள் சிரேஷ்டரான நாரதபகவான் அங்கேவந்து, பாண்டவர்களால் மஹாபக்தியுடன் பூஜிக்கப்பட்டுத் தனியே யிருக்கும் பொழுது "தர்மபுத்திரா! புகழ்பெற்ற பாஞ்சாலி உங்களெல்லோருக்கும் ஒரே தர்மபத்னியாயிருக்கிறாள். இதைப்பற்றி உங்களுக்கு எவ்வாறு விரோதம் வாராமலிருக்குமோ அவ்விதமான ஏற்பாட்டை நீங்கள் செய்துகொள்ளவேண்டும். முற்சாலத்தில் நிகரற்ற பலசாலிகளான ஸுந்தோபஸுந்தர்கள் அபூர்வமான வரங்களைப் பெற்றும், திலோத்தமையென்ற ஓர் பெண்ணைப்பற்றி விரோதம் பூண்டு ஒருவரால் ஒருவர் மாண்டார்கள். ஆகையால், நீங்கள் விரைவில் ஒரு ஏற்பாடு செய்துகொள்ளுவீரெ"ன்றார். அதைக் கேட்டுப் பாண்டவர்கள் அவருடைய முன்னிலையிலேயே, "கிருஷ்ணை நமக்குள் ஒவ்வொருவருடைய வீட்டிலேயும் ஒவ்வொரு வருஷம் வஸிக்கவேண்டும். ஒருவன் திரௌபதியோடு இருக்கையில் மற்றொருவன் பார்த்தால் அவன் பன்னிரண்டு மாஸங்கள் வரையில் ப்ரஹ்மசாரியாய் வனத்தில் வஸிக்கவேண்டுமெ"ன்று உடன்பாட்டைச் செய்துகொண்டனர்.

ஒரு நாள் அந்த ராஜ்யத்தில் ஒரு பிராமணனுடைய பசுக்களைத் திருடர்கள் கொண்டுபோயினர். அவன் அரண்மனையின் வாயிலில் வந்து வெகு கோபத்துடன், "ஏழையான என் பொருளை அல்பர்களும் கொடியர்களும் கொண்டுபோகிறார்கள். ஆறில் ஒரு பாகம் கடமை வாங்கிக்கொண்டு குடிகளைக் காக்காமலிருக்கும் வேந்தன், இவ்வுலகத்தில் எந்நாளும் அபகீர்த்தியையும், இறந்த பின் கோரமான நரகங்களையும் அடைகிறான். உங்களுடைய அஜாக்கிரதையால் இத்தேசத்தில் திருடர் பயம் ஏற்பட்டது. ஓடிவாருங்கள். என் பசுக்களைத் திருப்பிக்கொடாவிட்டால் என் கோபம் வீண்போகாதெ"ன்றான்.

அதைக் கேட்டுக்கொண்டிருந்த அர்ஜுனன் பதைபதைத்து, அந்தப் பிராஹ்மணனுடைய துயரத்தைத் தீர்க்க நினைத்து, தங்களுடைய ஆயுதங்களிருந்த வீட்டிற்குள் போகையில், யுதிஷ்டரரும் திரௌபதையும் அங்கிருப்பதாய் அறிந்து, உள்ளே போவதற்கும் யுத்தத்திற்குப் போவதற்கும் முடியாமல், வேதியனுடைய கடுஞ்சொற்களாலும் அழுகையாலும் துன்பமுற்று 'ஐயோ! பரம ஸாதுவான பிராஹ்மணனுடைய பசுக்கள் திருடர்களால் கொண்டு போகப்படும்பொழுது அவனுடைய கண்ணீரைத் துடைத்துக் கவலையைத் தீர்ப்பதே நமது கடமை. அண்ணாவை இப்பொழுது போய்ப் பார்த்தால் நாங்கள் ஏற்படுத்திக் கொண்ட விருதத்திற்குக் கெடுதி வருகிறது. இந்த வேதியனுடைய பசுக்களைக் கொண்டுவந்து கொடுக்காவிட்டால், எங்களுடைய கடமையைத் தவறின மஹாபாபம் ஐவரையும் பிடிக்கிறது. நான் ஒருவன் கொஞ்சம் கஷ்டத்தை அனுபவித்துப் பன்னிரண்டு மாஸங்கள் வரையில் பிருஹ்மசாரியாய் வனவாஸஞ் செய்ய நேர்ந்தாலும், ராஜதர்மத்

தைத் தவறி நரகத்தை அடைவதைக் காட்டிலும் அது கெடுதியல்ல. மேலும், இக்காரணத்தால் பல புண்ய தீர்த்தங்களேயும் க்ஷேத்திரங்களேயும் ஸாதுக்களேயும் தரிசித்து, என் ஜன்மத்தை ஸபலமாக்கிக்கொள்வேன். ஒருவேளே இது என்னேப் பரீக்ஷிப்பதற்காகப் பகவானுல் ஏற்படுத்தப்பட்டிருக்கலாம். மேலும், இதனுல் எந்த நன்மை விளேயுமோ தெரியாது. தன் உடல், பொருள் ஆவி மூன்றையும் துரும்பு போலெண்ணிப் பரோபகாரம்செய்வதே மானிடர்களின் கடமை; அதிலும் நான் குடிகளேக் காக்கும் வேந்தன்; அதிலும் க்ஷத்திரியவீரன். இந்த ஸமயத்தை விட்டுக்கொடுக்கக் கூடாதெ"ன்று, வஸ்திரத்தால் முகத்தை மூடிக்கொண்டு, தான் வருவதைத் தன் அண்ணனுக்குத் தெரிவித்து, உள்ளே புகுந்து வில்லே எடுத்துக்கொண்டு வெளியில் வந்து, திருடர்களேப் பின்தொடர்ந்து அடித்துத் துரத்தி பிராஹ்மணனுடைய பசுக்களே அவருக்குத் திருப்பிக்கொடுத்து, அவரால் ஆசீர்வதிக்கப் பெற்று, அவரை ஸந்தோஷத்துடன் அனுப்பினுன். பிறகு தர்மபுத்திரரிடத்தில் வந்து பாதங்களில் வணங்கி, நடந்த விஷயத்தைச் சொல்லி, "நமக்குள் செய்துகொண்ட உடன்பாட்டை மீறினதற்குப் பிராயச்சித்த ரூபமாய் பன்னிரண்டு மாஸங்கள் வரையில்பிரஹ்மசாரியாய் யாத்திரைசெய்து ஸந்தோஷத்துடன் திரும்பி வருவேனெ"ன்ருன். தர்மநந்தனன் அதைக் கேட்டு "நான் உனக்கு மூத்தவனென்றும் என் வார்த்தை உனக்குப் பிரமாணமென்றும் நீ எண்ணிஞல், என் சொற்படி நட. நானிருந்த அறைக்குள் நீ பிரவேசித்தது,காரணமில்லாமல் வேண்டுமென்றுசெய்ததல்ல. என் கடமையை நானே செலுத்த வேண்டியதைத் தவறியிருந்த எனக்குப் பதிலாய் நீ செய்து, என்னேப் பெரும் பாபத்திலிருந்து தப்புவிப்பதற்காகவே அங்கு வந்தாய். பிராஹ்மணனுடைய பயங்கரமான சாபத்திலிருந்து என்னே மீட்டாய். மேலும், நீ உள்ளே பிரவேசித்ததால் எனக்காவது திரௌபதிக்காவது வெறுப்புமில்லே, கோபமுமில்லே. வேறு விதியில்லாமல், ஏதோ வெகு அவஸரமான காரியமில்லாவிட்டால் நீ வரமாட்டாயென்று எங்களுக்குத் தெரியாதா? எனக்கு நீ எவ்விதமாயாவது அசௌகரியத்தைச் செய்தாயென்று நான் எண்ணிஞலல்லவா அது பாபமாகும்; பிரதிக்ஞையை மீறினதுமாகும்; அப்படியுமில்லே. என் தர்மத்தைக் காப்பாற்றி எனக்குப் பரம உபகாரஞ் செய்திருக்கிருய். இதற்காக நீ வனவாஸம் செய்வது அனுவசியம். எனக்கு இஷ்டமில்லாத காரியமெ"ன்ருர். ஆயினும் அர்ஜுனன் அதை ஒப்புக்கொள்ளாமல், "அண்ணு! கபடமாகத் தர்மம் செய்வது தகாதென்று தாங்களே சொல்லக் கேட்டிருக்கிறேன். நான் ஸத்யம் தவருதவன். என் ஆயுதங்களேத் தொட்டுப் பிரமாணஞ் செய்திருக்கிறேன். என்னேத் தடுக்காமல் உத்திரவு கொடுத்தனுப்ப வேண்டுமெ"ன்று அவரிடத்தில் விடைபெற்று வனவாஸஞ் செய்யப் புறப்பட்டான். அந்தத் தீர்த்தயாத்திரையில் நாககன்யையான உலூபியையும், கிருஷ்ணனுக்கு சகோதரியான ஸுபத்திரையையும் மணஞ்செய்து, முறையே இராவான் அபிமன்யு வென்ற புத்திரர்களேப் பெற்ருன். அப்படியே திரௌபதியிடத்தில் யுதிஷ்டிரருக்கு பிரதிவிந்தியனும்,பீமனுக்குஸுதஸோமனும், அர்ஜுனனுக்கு ச்ருதகர்மாவும், நகுலனுக்கு சதானீகனும், ஸகதேவனுக்கு சுருதஸேனனும் ஒரு வருஷ வித்யாஸ முள்ளவர்களாய்ப் பிறந்தார்கள்.

ஒரு சமயத்தில் அக்னிபகவான் காண்டவ வனத்தை எரித்துத் தன் பெரும் பசியைத் தணித்துக்கொள்ள விரும்பி, அதற்கு இந்திரன் தடைசெய்யாவண்ணம் கிருஷ்ணர்ஜுனர்களிடத்தில் கேட்டுக்கொண்டு, அர்ஜுனனுக்குத் தெய்வத்தன்மையுள்ள தேரையும் குதிரைகளேயும் வில்லேயும், கண்ணனுக்குச் சக்கிரத்தையும் கதாயுதத்தையும் கொடுத்தான். பிறகு அர்ஜுனனுல் காக்கப்பட்டு அக்னி காண்டவ வனத்தை இஷ்டப்படி எரித்து மகிழ்வடைந்தான். அதைத் தடுக்க முயன்ற இந்திரனே அர்ஜுனன் தோற்கடித்து, தன் சபதத்தை நிறைவேற்றினுன். அவ்வனத்திலிருந்து தப்பின மயன், தன் நன்றியைத் தெரிவிக்க விரும்பிக் கண்ணனுடைய கட்டளேப்படி, விரைவில் ஓர் திவ்யஸபையை நிர்மாணஞ் செய்தான்.

பருத்தி : அதன் வியாபாரமும், தொழிலும்

COTTON-ITS TRADE AND INDUSTRY

[ஸ்ரீமான் ஆர். கே. துப்புஸ்வாமி ஐயரவர்கள், பீ. ஏ., எல். டி.]

கைத்தொழில்களில் உன்னத நிலைமையிலிருப்பதாக எண்ணப்படும் மேனாட்டார், நாகரிக மற்றவர்களாயிருந்த புராதன காலத்திலேயே, இந்தியர்களின் பருத்தித் தொழில் வெகு சிறப்படைந்திருந்தது. கிருஸ்து பிறப்பதற்கு 2000 வருஷங்களுக்கு முன்னர்—அதாவது இன்றைக்கு சுமார் 4000 வருஷங்களுக்கு முன்னரே—பேர்போன இராஜ்யமாயிருந்த ஈஜிப்டு தேசத்தில் நமது இந்திய நாட்டார் நெய்து விற்ற மெல்லிய நயமான மஸ்லின் துணிகளை ஆவலுடன் வாங்குவது வழக்கமென்று புராதன சரித்திர ஆராய்ச்சியில் வல்லவர்கள் சொல்லுகிறார்கள். ரோம் ஸாம்ராஜ்யம் வலுத்திருந்த காலத்தில், அங்குள்ளவர் இந்திய வஸ்திரங்களை ஏராளமாய் இறக்குமதி செய்ததாகவும் அதுபற்றி இந்தியர்வுக்கு அவர்கள் கணக்கற்ற பொன்னையும் பொருளையும் கொடுக்கவேண்டியிருந்ததென்றும் ப்ளினி (Pliny) என்னும் சரித்திர ஞானி எழுதியிருக்கிறார். ஆகையால் பருத்தி விளைவிப்பதிலும், நூல் நூற்பதிலும், ஆடை நெய்வதிலும் நம் நாட்டார் முன்னாட்களில் இணையில்லாத உயர்ந்த பதவியில் இருந்தனர் என்பதற்குச் சந்தேகமேயில்லை. இங்கிலாந்தில் துணி நெசவுக்குப் பேர்போன லங்காஷைரில் துணி நெசவு முதலில் பதினேழாவது நூற்றாண்டில்தான் துவக்கமாயிற்று. அப்படியே மற்ற மேனாடுகளிலும் அதுவரையில் பருத்தித் தொழிலில் இந்தியரை முந்தியவர் இல்லையென்றே சொல்லிவிடலாம்.

தேச நிலைமையையும் சீதோஷ்ண ஸ்திதியையும் அநுசரித்து நமது நாட்டாருக்கு மேன்மையான கனத்த கம்பளிகளும் போர்வைகளும் வேண்டியதில்லை யாயின. மெல்லிய பஞ்சாடைகளே போதுமான உடைகளாயிருந்தன. நாட்டின் ஒவ்வொரு பாகத்தாரும் தத்தமக்கு வேண்டிய துணிகளைத் தாமே நெய்து கொண்டனர். பருத்தியும் வெகுவாய் எல்லா விடங்களிலும் பயிராகி வந்தது. பெரிய பட்டணங்களிலும் சமுத்திரக் கரையிலுள்ள துறைமுகங்களிலும் சிறந்த வேலைக்காரர்கள், ஏற்றுமதி செய்யத் தகுதியான நேர்த்தியான மெல்லிய துணிகளை நெய்து விற்றுவந்தனர். கடல் வியாபாரமும் மும்மரமாய் நடந்தபடியால் உடனுக்குடனே சரக்குகள் விலையாய் வந்தன. ஆகையால் தொழிலாளிகள் மிக்க லாபத்தை அடைந்தனர். இம்மாதிரி இந்திய வியாபாரி சிறப்பாய் வியாபாரம் நடத்தி வந்த காலத்தில், அவனுடன் வியாபாரத்தில் போட்டி போடுவாரே இல்லாதிருந்தனர். ஆகையால் அவன் தன் தேசத்தில் விளையும் பருத்தியின் குணதோஷங்களைக் கவனிக்கவும், சிறந்த புதுமாதிரிகளைப் பயிரிடவும், உள்ள தினுசுகள் வருஷத்துக்குவருஷம் மலினமடையாமல் பாதுகாக்கவும்,அவசிய மேற்படவில்லை. தனக்குக் கிடைத்த பொருளைக் கிடைத்தபடியே உபயோகித்து வந்தான் இந்தியத் தொழிலாளி. 17-ம் நூற்றாண்டு முதல், மேனாட்டார் போட்டிபோட்டுத் தமது சரக்குகளை வெளிவிட்டபோது, இந்தியாவின் சரக்குகள், அப்போட்டிக்கு வலுத்து முன்னிற்க முடியாமல் படிப்படியாய்ப் பின்னடைந்தன. மலிவான யந்திர சக்தியையும், கல்விப்பயிற்சி யையுமடைந்த சாமர்த்தியமான உழைப்பாளிகளையும், நாகரிகமான தற்கால முறைகளையும் மேற்கொண்டு வேலை செய்வதால், மேனாட்டார் தமது சரக்குகளை நமது சரக்குகளைவிட மலிவாக விற்க வழியுண்டாகின்றது. ஜனசமூகத்தில் துணியின் பலத்தையும் நெடுநாள் நிற்கக்கூடிய திறமையையும் கவனிப்போர் பலர் இருப்பதில்லை. விலை குறைவாயிருப்பதையே பொதுஜனங்கள் முக்கியமாய் கவனிக்கின்றார்கள். ஆகவே நாளடைவில் நமது நெசவுத் தொழில்கள் நசித்துப் போயின.

மேனாடுகளிலோ, துணிகள் நெய்வதன்றி பருத்தி விளைவிப்பதில்லை. ஏனெனில், அவர்களுடைய தேசமும் நிலப்பான்மையும் பருத்தி விளைவுக்கு ஏற்றதல்ல. நமது தேசத்திலிருந்தும், இதைப்போன்ற உஷ்ண தேசங்களிலிருந்துமே, அவர்கள் பருத்தியை விலைக்கு வாங்கி, நூல்நூற்றுத் துணிநெய்து மறுபடி நமது தேசத்துக்கே விற்பனைக்கு அனுப்புகிறார்கள். நமது நாட்டிலோ, இன்னும் சில இடங்களில் துணி நெய்து வருகிறார்களானாலும் அதன்பொருட்டுச் செலவாகும் பருத்தி

காதவழி போய் அறியாதவன், மாதம் எல்லாம் நடந்தானும்.

யைவிட அதிகமான பருத்தியை நாம் வெளி நாடுகளுக்கு அனுப்பிக்கொண்டே வருகிறோம். கீழே காட்டியுள்ள கணக்குகள் அதை நன்கு விளக்கும்:—

வருஷம்	சென்னை ராஜதானியில் உபயோகமான மூட்டைகள்.	வெளியூருக்கு அனுப்பிய மூட்டைகள்.	ராஜதானியின் மொத்தம்	பயிரிட்ட நில விஸ்தீர்ணம் ஏகரா.
1894—1895	86,100	173,600	259,700	......
1904—1905	89,700	211,000	300,700	......
1909—1910	120,800	264,000	384,800	2,029,000
1910—1911	122,000	272,000	394,000	2,317,000
1911—1912	127,000	209,000	336,000	2,676,000
1913—1914	133,000	330,000	350,000	2,697,000
1914—1915*	128,000	171,000	299,000	2,087,000

* புத்தகத்திலுள்ள குறைவு—Madras Exhibition Book page 98.

தற்காலம் நாம் விளைவிக்கும் பருத்தி சிறந்ததாயிருப்பதில்லை. குடியானவர் படியாதவராயிருப்பதால், புராதன முறைகளையே பின்பற்றுகிறார்களே யல்லாமல், நூதன வழிகளை மேற்கொள்வதில்லை. அவர் விற்கும் நயமற்ற பருத்தியே பழைய வழிப்படி தொழில்செய்யும் நூல்நூற்பவனுக்கும் துணிநெய்பவனுக்கும் போதுமாயிருக்கின்றது. மேன்மையான பருத்தியை விளைவித்தால் அதை உபயோகப்படுத்தக்கூடிய சிறந்த தொழிலாளிகள் வெகுவாய் இல்லாததுபற்றி, அதை அந்நிய தேசத்தாருக்கே விற்கவேண்டி வருகிறது. மேலும் வகையறியா ஏழைக் குடியானவன், பழைய வழிகளை விட்டுப் புதிய பயிர்களை வளர்க்க பயப்படுகிறான். ஆகையால் வருஷத்துக்கு வருஷம் சரக்கின் குணம் குன்றிப் போகின்றது. வித்துக்கள் பலம் குறைந்து மலினமடைகின்றன. எவ்வளவோ இடங்களில், மிகவும் மட்ட ஜாதியான புராதனப் பயிர்களை முற்றிலும் களைந்து, புதிய பயிர்களை வளர்க்கவேண்டியிருக்கிறது. இதனால் விளைவு மிகக்குறைந்து வருகின்றதென்பதை மேலே காட்டியுள்ள அட்டவணையால் அறியலாம். பயரிடும் நிலவிஸ்தீர்ணம் எவ்வளவில் விருத்தியடைந்திருக்கிறதோ, அதே அளவில் விளைந்த பயிர்மொத்தம் அதிகமாகவில்லை யென்பது விளங்கும்.

விளைவு குறையவே, வியாபாரமும் குறைகின்றது. நமது பருத்தியை வாங்கும் அந்நிய நாட்டாருள் முதலிவிருப்பது ஜப்பான் தேசத்தார். பெல்ஜியம், இங்கிலாந்து, ஜர்மனி, இடலி பிரான்ஸ்—இவை முறையே பின்பற்றி வருகின்றன. கடனில் மூழ்கி, மீள வழியில்லாமல் அமிழ்ந்து கிடக்கும் நமது ஏழைக்குடியானவர்கள் அதிதூரத்திலிருக்கும் அந்நிய தேசத்தாருடன் நேரே வியாபாரம் செய்ய சக்தியற்றவர்களாயிருக்கின்றனர். தாங்கள் விளைவிக்கும் பருத்தியைக் கடைசியாக எவர் உபயோகிக்கின்றார்கள் என்றும், எங்கேபோய் லயமடைகின்றதென்றும், நினைத்துப் பார்ப்பதற்குக் கூட அவர்களுக்குச் சாமர்த்தியமில்லை. ஆகையால் கேட்ட விலைக்கு உடனுக்குடனே எவனுக்காயினும் தங்கள் பொருளை விற்றுவிடத் தயாராயிருக்கின்றார்கள். தக்க விலை கிடைக்கு மிடத்துக்குக் கொண்டுபோகவும், தங்களுக்கு ஏற்ற விலை கிடைக்கும் வரையில் பண்டத்தைத் தேக்கிவைக்கவும், அவர்களுடைய ஏழைத்தனம் இடம் கொடுப்பதில்லை. ஆகையால் குடியானவன் விற்கும் சரக்குக்கு நியாயமாய் என்னவிலை கிடைக்கவேண்டுமோ அவ்விலை கிடைப்பதில்லை.

சில வருஷங்களாக இந்தியாவிலேயே நெசவுத்தொழிலை அபிவிருத்திசெய்ய வேண்டுமென்று சில தேசாபிமானிகள் முயற்சிசெய்கின்றனர். அதனால் முன்காட்டிய அட்டவணைப்படி நமது ராஜதானியிலேயே செலவான மூட்டைகள் படிப்படியாய் அதிகமாவதே அம்முயற்சிக்கு சாக்ஷியாய் நிற்கின்றன. தொழில் சற்று அபிவிருத்தியாய்க் கொண்டிருக்கின்றதென்று நாம் ஒப்புக்கொள்ளவேண்டியதேயானாலும், இன்னும் இத்தொழில் விருத்

காது அறுத்த கூலி கைமேலே.

தியடைய எவ்வளவோ இடமிருக்கின்றது. சுல பமான யந்திரசக்தியும், கல்விகற்றுத் தேர்ந்த உழைப்பாளிகளும், ஏராளமான கைமுதலும் கிடைத்தபொழுதே தொழில் அபிவிருத்தியா கும். அப்பொழுதே இந்தியர் தமக்குப் பண்டைக்காலத்திலிருந்த வியாபார ஸ்தலங்களைக் கைப்பற்ற வழிதேடலாம். சுமார் 100 வருஷ காலமாய் நமக்கு இம்மூன்று அநுகூலங்களும் இல்லாததுபற்றி, நமது நெசவுத் தொழில் க்ஷீணமடைந்ததை எல்லோரும் ஒப்புக் கொள்ள வேண்டியதே.

ஆகவே, நாம் கவனிக்கவேண்டிய முக்கிய விஷயமென்னவெனில், இந்தியாவில் நாம் சிறந்த ஜாதிப் பருத்தியை விளைவிக்கவும், விளைந்த பருத்தியைக் கூடியவரையில் இந்தியாவிலேயே தொழில்களுக்கு உபயோகிக்கவும் மீந்த பருத்தியை விற்கும்போது தக்கவிலைக்கு விற்கவும் நாம் மேற்கொள்ள வேண்டியமுறைகளைத் தேடவேண்டியதுதான். நாம் எவ்வளவு பருத்தியை நமதுதேசத்தில் உபயோகப்படுத்த வேண்டும் என்பதைப்பற்றியும், எவ்வளவு பருத்தியை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவேண்டு மென்பதைப்பற்றியும் அந்நியநாட்டார் கவனிக்கவேண்டிய அவசியம் என்னவிருக்கின்றது? அவர்களுக்கு வேண்டியதெல்லாம் பஞ்சுதான்: அதுவும் சிறந்த முதல்தரமானதும், சுலபமான விலைக்குக் கிடைக்கக் கூடியதுமானால் மிகவும் திருப்தியே; நமது நாட்டில் நூல்நூற்கும் தொழிலையும், துணி நெய்யும் தொழிலையும் விருத்தி செய்ய வழியைத் தேடுவது இந்தியரின் பொருப்பேயல்லாது, அந்நியருடைய பொருப்பன்று.

நமது காருண்ய கவரன்மெண்டாரும் இவ் விஷயங்களையெல்லாம் மனதிற்கொண்டு இந்தியாவின் பருத்தி யபிவிருத்தியையும் வியாபாரத்தையும்பற்றித் தீரவிசாரித்து ரிபோர்ட்டு செய்யுமாறு 'இந்தியக் காட்டன் கமிட்டியாரை' (Indian Cotton Comittee) நியமனம் செய்தனர். அக்கமிட்டியாரும் விரைவில் விசாரணையை முடித்து, நமது நாட்டுக்கு வெகுவாய் அநுகூலமாகவே தீர்மானங்கள் செய்திருக்கின்றனர். அவர்களுடைய அபிப்பிராயமும், முக்கியமாய் இந்தியாவுக்கு நன்மையுண்டாக்கவேண்டுமென்பதே. அந்நிய தேசத்தார் ஏராளமான லாபத்தை அடித்துக்கொண்டு போகும்படியான வழிகளை அநுசரிக்கக்கூடாதென்பதே கமிட்டியாரின் கொள்கை.

முதலாவது, இந்தியாவின் பருத்தியைச் சீராக்கி மேன்மேலும் அபிவிருத்தி செய்வதெப்படி என்பதைப்பற்றி நமது விவசாய இலாகா உத்தியோகஸ்தர்கள் இடைவிடாமல் கவனித்து வருகின்றனர். கிருஷி சாஸ்திரத்திலும், விவசாயரசாயனசாஸ்திரத்திலும் தேற்சி பெற்ற நிபுணர்கள் நமது நிலங்களில் இப்பொழுதிருப்பவற்றைவிட சிரேஷ்டமான பருத்திப் பயிரை விளைவிக்கலாமென்றும், சரக்கின் தொகுதியை அதிகமாக்க நிலத்தைப் பண்படுத்த வழியுண்டென்றும், அபிப்பிராயப் படுகின்றனர். ஆனால்கஷ்டமென்னவெனில்,ஒரேஜாதிப் பருத்தி எல்லாவிடங்களுக்கும் ஏற்றதாயிருப்பதில்லை. ஒரே இடத்தில் அதிகமாய் விளையக் கூடிய பருத்தி மற்றொரு இடத்தில் பலனுக்கு வருவதில்லை. இதற்குத் தக்க பயிரைத் தேர்ந்தெடுப்பது நிபுணர்களின் முதல் வேலையாயிருக்கின்றது. சில இடங்களில் அந்நிய தேசத்துப்பயிர்கள் எளிதில் இடம் பழகி ராசி காண்கின்றது. சில இடங்களில் நாட்டு ஜாதிப் பயிரையே பலப்படுத்தி, குன்றிப்போன ஜாதிகளுடன் கலக்காமல் பாதுகாத்து விருத்திக்குக் கொண்டுவர வேண்டியிருக்கின்றது. வேறு சில இடங்களில் நூதனமாய்க் கொண்டுவந்த ஜாதிகளையும் பழைய பயிர்களையும் ஒருங்கே வளர்க்கவிட்டு இரண்டிற்கும் சம்பந்தப்பட்ட கலப்பு ஜாதியை உண்டாக்கவேண்டியிருக்கின்றது.

இப்பரிக்ஷைகளைக் கிரமமாய்ச் செய்யவும், செய்த பரிக்ஷைகளின் பலனை மேல்விசாரணை செய்யவும், கிருஷிசாஸ்திர முறைகளில் தேர்ந்த பண்டிதர்கள் இன்னும் அதிகமாய்த் தேவை. அப்பண்டிதர் தம் தொழிலை முறைப்படி செய்வதோடு, வழியறியா ஏழைக் குடியானவனோடு அநுதாபப்பட்டு, அவனது சுக துக்கங்களைக் கவனித்து, அவனை ஆதரவோடு முன்னுக்குக் கொண்டுவரவேண்டும். அவர்களே தேசத்துக்கு நன்மை செய்யக்கூடியவர்கள்.

நிலத்தின் தன்மைக்குத் தக்கபடி பயிரிடப்படும் பயிர், நல்ல மாசூல் கொடுக்கும் பொருட்டு சாஸ்திரமுறைப்படி சரியான உரம் போடுவதும், பயிர்களுக்கு நோய் பிடியாமல் பாது

காப்பதும், பருத்தியின் அபிவிருத்திக்கு முக்கிய ஸாதனங்கள். நமது இராஜதானியில் பயிர்களைக் கெடுக்கும் பூச்சிகளை யழிக்க வழி தேடவும், கவனிக்காது புழுவிழுந்த பயிர்களை மன்மானமாய் வளரவிடும் குடியானவர்களைக் கண்டிக்கவும் ஒரு சட்டமேற்படுத்தி யிருக்கின்றனர். பஞ்சு எடுத்தபின்னர், செடிகளை முற்றிலும் அழித்துவிடுவது நலம். அவ்வாறு செய்யாது அஜாக்கிரதையாய்ச் செடிகளை வளரவிட்டால் அவற்றிலுள்ள புழுக்கள் புதிதாய் வளரும் செடிகளுக்குப் பரவுகின்றன. ஆதலால் செடிகளை அழிக்கவும், அழித்தபின் நிலத்தைக் காயப்போடவும், பிறகு எப்பொழுது பயிரிட வேண்டுமென்றும் நிபுணர்கள் குடியானவர்களுக்குக் கற்பிக்கின்றனர்.

பருத்தி விஷயமாய் வியவசாய இலாகா உத்தியோகஸ்தர்கள் செய்துவரும்உதவிகளைப் பற்றி மிஸ்டர் ஜேம்ஸ் மேக்கன்னு என்பவர் பின்வருமாறு எழுதுகின்றனர். (Agriculture in India- James Mackanna, M. A., I. C. S. Government Press, Calcutta) "பருத்தியை அபிவிருத்தி செய்யும் கிருஷியை யனுசரித்து, பயிரிடுவதில் செய்யும் பரிக்ஷைகளென்ன, புலங்களில் பயிர் மாற்றுவதென்ன, உரம்போடுவதென்ன இவைபோன்ற காரியங்களை பரிக்ஷைப் புலங்களில் (Experimental Farms) செய்துபார்த்து நல்லவழிகளென் றுருசுவானால் அவற்றைப் பொதுவாய் எல்லாரும் அநுசரிக்கும் வண்ணம் ஏற்பாடு செய்கிறார்கள். முதல் தரமான விதைகளை உண்டாக்கவும் குணம் மட்டமடையாமல் பாதுகாக்கவும், அவ்விதைகளைப் பலருக்கும் விநியோகம் செய்யவும் அதிகக் கவலை எடுத்துக் கொள்ளுகிறார்கள். விதைஉண்டாக்குவதற்கென்றேபயிரிடப்பட்டு வரும் நிலங்கள் வெகு விரைவாய்ப் பெருகிக் கொண்டு வருகின்றன. எவ்விடங்களி லெல்லாம் பருத்தியை முக்கியமான பொருளென்று எண்ணிப் பயிர்செய்து வருகின்றார்களோ, அவ்விடங்களிலெல்லாம் மற்ற முக்கியமான விளைபொருள்களுக்கு இடையூறில்லாமல், பருத்தியைமட்டும் விசேஷமாய் எத்தனை தூரம் கவனிக்க முடியுமோ அவ்வளவு தூரம் குறைவில்லாமல் அதிகாரிகள் கவனித்து வருகிறார்கள்." ஆகையால் குடியானவர்களும் அதிகாரிகளோடு கூடியுழைத்தால் சில நாளைக்குள் பருத்தி விளைவு பலப்படு மென்பதற்கு ஆக்ஷேபனையில்லை,

கல்வி யபிவிருத்தியுடைய பலரும் தங்கள் குடியானவர்க ளல்லாவிட்டாலும் வியவசாய விஷயங்களில் சிரத்தையுடையவர்களாய், நூதனவழிகளைக் குறித்து அடிக்கடி குடியானவர்களோடு சம்பாஷித்து, அம்முறைப்படி வேலை செய்யவேண்டுமென்று அவர்களை வற்புறுத்த வேண்டும். இது தேசாபிமானிகள் செய்ய வேண்டிய முக்கிய காரியங்களுள் ஒன்றாகும். ஏனெனில் தற்காலத்தில் இந்தியா, உலகத்தில் பருத்தி விளைவிக்கும் தேசங்களுக்குள் இரண்டாவது ஸ்தானத்தை வகிக்கின்றது. முதல் ஸ்தானத்திலிருப்பவை அமெரிக்கா ஐக்கியமாகாணங்கள். நாம் சலிப்பில்லாமல் உழைத்து வந்தால் நமது தேசமே முதல் ஸ்தானத்தை அடைய வழியும் உண்டு.* "சில ஐரோப்பிய ஜாதியார் புதிதாய்த் தாங்கள் அடைந்திருக்கும் உஷ்ணபூமிகளாகிய ஆப்பிரிகாவின் சிலபாகங்களில் 10, 15 வருஷங்களாக, பருத்தி விளைவிக்க ஏராளமாய்ப்பணச்செலவுசெய்கின்றனர். அவர்களுடைய போட்டியை இனி நாம் சீக்கிரத்தில் எதிர்பார்க்க வேண்டியிருக்கும். ஆனால் இதுவரையில் ஆப்பிரிக்காவில் ஏராளமாய்ப் பணம் செலவு செய்திருந்தபோதிலும், அவ்விடங்களிலெல்லாம் விளையும் பருத்தி மொத்தமும் சேர்த்து நமது சென்னை ராஜதானியின் விளைவுக்குமட்டுமே ஈடாகின்றது. இருப்பினும் நமது தேசத்தில் நாம் ஏற்கெனவே பாடுபட்டிருப்பதுபற்றி மேல் வருஷங்களில் விழித்திருந்து உழைத்துவரின் அதிக லாபமடையலாமென்பதிற் சங்கதகமில்லை." தூங்கிவிட்டோமானால் ஆப்பிரிகா தேசத்தாரும் நம்முடன் போட்டிபோடத் தலையெடுத்துவிடுவார்கள்.

பருத்தி விளைவை அதிகப்படுத்துவதுமட்டும் போதாது. நூல் நூற்பதற்கும் துணிநெய்வதற்கும் நமது நாட்டிலேயே செலவாகும் பருத்தியின் அளவை இன்னும் அதிகமாக்க வேண்டியதவசியம். "பூர்வம் நமது நாட்டில் வீடுகள் தோறும் ராட்னங்கள் (நூல்நூற்கள்) இருந்ததில்லையா? தனவந்தர்களான ஸ்திரீகள் கூட ராட்னத்தில் நூல்நூற்றதாக நாம் சரித்

* Mr. D. T. Chadwick Director of Agriculture

திரங்களில் படிக்கவில்லையா? அப்படியிருக்க நாம் ஏன் அதைமீண்டும் ஆரம்பிக்கக்கூடாது. வங்காளத்தில் லேடி கார்மைக்கேலினால் ஸ்தாபிக்கப்பெற்ற குடிசைக் கைத்தொழிலாளர் சங்கம் (Society for Promoting Cottage Industries) மிகச் சிறப்பாக வேலை செய்து வருவதாக நாம் அறிகிறோம். அவ்விதச் சங்கமொன்றை ஏன் இம்மாகாணத்திலும் ஸ்தாபிக்கக்கூடாது? எல்லா மாகாணங்களிலும் இடத்துக்குத்தக்க மாதிரி, குடிசைத் தொழில்களை ஏராளமாய் விருத்தி செய்வேண்டியதவசியம். மகாத்மா காந்தியவர்கள் அபிப்பிராயப்படுகிற விதமாய் அவரவருக்கு வேண்டிய துணிகளை அவரவரே நெய்துகொள்ளும்படி செய்வது அசாத்தியமானாலும், நெசவுத்தொழிலை மேற்கொண்டவர் இப்பொழுதைவிட நூற்றுக் கணக்காய் அதிகமாகும்படி செய்ய இடமுண்டு. தொழிலாளிகள் நெசவு செய்து மட்டும் பயனில்லை. அவர்கள் நெய்த துணியை வாங்குவோரில்லாவிட்டால் வேலை உடனே நின்றுவிடு மென்பதைக் குழந்தையும் அறியும். நமது தேசத்திலேயே நெய்யும் துணிகளை வாங்கி ஆதரிப்போர் அதிகமாக, துணியின் நயமும் மேன்மை யடையவேண்டும்.

இப்படிப் பலவிதமாய் உழைத்து நெசவுத் தொழில் முன்னுக்குவரவழிதேடினாலும் நமது தேசத்தில் உண்டாகிற பஞ்செல்லாம் நாமே செலவழிப்போம் என்று எண்ண இடமில்லை. வெகுகாலம் வரையில், நம் தேசத்திலிருந்து ஏராளமாய்ப் பஞ்சை நாம் ஏற்றுமதி செய்தே தீர வேண்டியது தான். அவ்வாறு வியாபாரம் செய்யும்போது முன்னர் சொன்னபடி குடியானவன் தான் உண்டாக்கிய பருத்தியை அப்படியே நேராய் நெய்வோனுக்கு விற்க வழியில்லை. பருத்தியை ஏராளமாய் வாங்குவோர் சமுத்திரத்துக்கப்பால் தொலை தூரத்திலிருக்கின்றனர். மேலும், விளைந்த பருத்தியை அப்படியே மூட்டைகட்டி யனுப்புவதென்றால் மூட்டைகள் மிகப் பெரியவைகளாகும். அதற்காக முதலில் பருத்தியைக் கொட்டைநீக்கி சுத்தமாக்கவேண்டியிருக்கின்றது. கொட்டை நீக்கிய பஞ்சைஇயந்திரங்களில்வைத்துஅழுத்திச் சிறு மூட்டைகளாக இரும்புத் தகடுகளால் கட்டுவார்கள். இவ்வேலைகளைச் செய்யும் தொழிற்சாலை யஜமானர்கள், பஞ்சை விலைக்கு வாங்கியோ அல்லது கூலிக்காகவோ மூட்டைகளைத் தயாராக்குகிறார்கள். இத்தொழில் நடத்துவோர் நல்ல பஞ்சை வேறாகவும், மட்ட ஜாதிச் சரக்கை வேறாகவும் மூட்டை கட்டுவதானால் நல்ல பஞ்சுக்கு உயர்ந்த விலை கிடைக்கும். அதனால் நல்ல பருத்தியை விளைவிக்கின்றவனுக்கும் லாபமுண்டு. அவ்வாறன்றி எல்லாஜாதியையும் கலந்து உயர்வுமட்டமென்ற பேதமில்லாமல் விற்கும்போது அவற்றை வாங்கும் அந்நிய தேசத்தார் குறைந்த விலையே கொடுக்க இஷ்டப்படுகின்றனர். நல்ல பஞ்சு விளைவிக்கின்றவனுக்கும், மட்டஜாதியை வளர்ப்பவனுக்கும் தாரதம்யமில்லாமல் போகின்றது. அதிகமாய்ப் பாடுபட்டு சிறந்த ஜாதிப் பருத்தியை உண்டாக்கிய குடியானவனுக்கு இரண்டொரு வருஷத்தில் உற்சாகம் குறைந்துவிடுகிறது.

இந்தியக் காட்டன் கமிட்டியாரும் இவ்விஷயத்தைப்பற்றி விரிவாய்ப் பேசியிருக்கின்றனர். தற்காலத்தில் நடக்கும் வியாபாரத்தில், எவ்வளவு பாடுபட்டு நல்ல பருத்தி விளைவித்தாலும், அதற்குத் தக்க விலை கிடைப்பதில்லையென்று சொல்லி, பின்னர், கொட்டையெடுத்து மூட்டைகள் தயார் செய்யும் தொழிற் சாலைகளில் நடந்துவரும் மோசடிகளை விவரிக்கின்றனர்.* சில தொழிற்சாலைகளில் எடை சரியாய்ப் போடுவதில்லை. அதுபற்றி, சரியான எடையென்று அனுப்பும் மூட்டைகள் வாங்குகிறவன் தூக்கிப்பார்த்தால் பளுவு குறைகின்றது. எத்தனை விதமாய் மட்டச் சரக்கையும், உயர்ந்த சரக்கையும் கலந்து விற்று மோசம் செய்யக்கூடுமோ அத்தனை விதமாயும்மோசஞ்செய்கின்றனர். இவ்விதம் வியாபாரத்தைப் பாழாக்குவோர் பருத்தி விளைவிப்பவனை மோசம் செய்வதுஒருபுறமிருக்க, இன்னொருபுறம் நூல் நூற்பவனையும் மோசம் செய்கின்றனர். இவ்விரண்டுவித மோசத்தாலும்விளையக்கூடியநஷ்டமெல்லாம்விளைவிப்பவனான குடியானவன்தலையிலேயே விழுகின்றது. ஏனெனில், நூல் நூற்கும் வர்த்தகன், ஈரமாயும், குப்பை கூளங்கள் நிறைந்தும், கொட்டை நன்றாய் நீங்காததும் கழிக்கப்பட்டதும், பல ஜாதிக் கலப்புமான

* Compare Chapter XVI : Cotton Committee Report.

பஞ்சு மூட்டைகளை இரண்டொரு தடவை வாங்கி நஷ்டப்பட்டபின், அப்பிராந்தியங்களி லிருந்து வந்த பஞ்சுக்குத் தக்கவிலை கொடுக் கப் பின்வாங்குகிறான். இந்த மட்ட விலை, குடி யானவன்மீது தாக்குகின்றது. குடியானவ னுடைய பண்டத்தைத் தாழ்ந்த விலைக்கு விற் கும்படி தூண்டுகிறான் தொழிற்சாலைக்காரன். இவ்வித மோசம் மிகவும் சாதாரணமாய் நடப் பதுபற்றி இவ்விஷயத்தில் தக்க முயற்சி எடுத் துக்கொண்டு, இனி இவ்வித மோசடி நடக்கா மல் தடுக்க கவர்ன்மெண்டாரே தக்க பிரயத் தனம் செய்யவேண்டிய தவசியமென்று வற்பு றுத்திக் கூறியிருக்கின்றனர், காடன் கமிட்டி யார்.

இவ்விஷயத்தைக் குறித்து மிஸ்டர் மெக் ன்னு, எம். ஏ., வெகு விநோதமாய் "இந்தியன் அக்ரிகல்சர்" என்னும் புஸ்தகத்தில் எழுது கின்றார். "கம்போடியா பருத்தி சென்னை இராஜதானியில் 1904ம் வருஷத்தில் பயிரிட ஆரம்பமாயிற்று. சரியான வழியில் பயிரிட வும், அது விருத்தி யடையத்தக்க வழிகளையும் முதலில் விவசாய இலாகாவில் காட்டிக் கொடுத்தனர். உடனே சிறப்பாய்ப் பலனுக்கு வந்தது. வியாபாரிகளும் கூடியுழைத்தனர். பருத்தி வியாபாரம் விரைவில் பெருகிற்று. ஏழு வருஷத்துக்குள் 45,000 மூட்டைகள் கொடுக்கும்படி புஷ்டியடைந்தது. பஞ்சு நயமா யிருப்பதோடு, நாட்டு ஜாதிகளைப்போல் கொ ட்டையெடுக்கும்போது சேதமாகாமல் கணி சமாயிருந்தது. தவிரவும் இப்பருத்தி, நாட்டு ஜாதிகள் வெகுவாய் விளையாத நிலங்களிலும் கூட, லாபகரமாய் விளைவிக்கக்கூடியதா யிருந் தது. ஏகராவுக்கு 180 ரூபாய் விழுக்காடு விலை பொறுமான வஸ்துவைக் கொடுத்ததோடு ஏகராவுக்குச் சுமார் 30 ரூபாயே வரும்படி யான நாட்டுப் பருத்திகளை எளிதில் அப்புறப் படுத்தியது. வழக்கம்போல், விலையேற்றத்தை முன்னிட்டு, கலப்பும் மோசமும் பின்பற்றின. பொன் முட்டையிடும் வாத்துக் கோழியை வயிற்றைக் கிழித்து உள்ளிருக்கும் முட்டை களை யெல்லாம் ஒரே அடியாய் அடைய விரும் பினவன் வேலை போலாயிற்று இவ்வியாபாரம்! தொழிலாளிகள் சாதாரண நாட்டுப் பருத்தி யைக் கம்போடியாப் பருத்தியுடன் கலந்து அதைச் சுத்தமான கம்போடியாப் பருத்தி யென்று மோசம் செய்யத் தொடங்கினர். குடி யானவரும் தகுதியற்ற நிலங்களில் கம்போ டியா வித்துக்களை விதைத்து விளைபொருளைப் பாழாக்கினார்கள். இவ்விதமாய்த் தாழ்ந்த சரக் குகளை உயர்ந்த சரக்குகளாகவே விற்பனை செய்ய முயன்றனர். உடனே வாங்குவோரும் சந்தேகிக்கத் தொடங்கினர். அதிக விலை கொடுப்பது உடனே நின்றுவிட்டது." கம்போ டியாப் பருத்தி சிறந்த பொருளாயிருந்தபோது நூற்றுக்கு $12\frac{1}{4}$ முதல் 15 வரையில் அதிக விலை கொடுக்க, மேனாட்டு வியாபாரிகள் தயா ராயிருந்தனர். லங்காஷையரில் உள்ள நூல் நூற்கும் வியாபாரி ஒருவர், தன் வசத்தில் உள்ள நூல்நூற்கும் யந்திரசாலைகளுக்கு, சென்னை இராஜதானியில் விளையும் கம்போ டியா பருத்தி முழுவதும், கலப்பில்லாது சுத்த மாயிருந்தால், தானே வாங்கிக்கொள்வதாகவும், மிக உயர்ந்த விலையைக் கொடுக்கத் தயாராயி ருப்பதாகவும் இந்தியா மந்திரியிடம் சொன் னார். துரதிருஷ்ட வசத்தால் வியாபாரத்தில் நடந்த மோசடியால் கம்போடியாப் பருத்தி யும், கிட்டத்தட்ட மற்றப் பருத்திகளைப் போலவே விற்கின்றது. இதற்குக் காரணம் சுத்தமான வஸ்து கிடைக்காத குற்றமே தவிர வேறில்லை.*

இவைமட்டுமேயன்றி, நமது வியாபாரத் துக்கு இன்னுமொரு தொல்லையுண்டு. பருத்தி விற்போனுக்கும் வாங்குவோனுக்கும் நடுவே யுள்ள தரகாளி, அதிக லாபத்தைஇருவருக்கும் தெரியாமல் தானெடுத்துக் கொண்டு போகி றான். நடுநிற்கும் இத்தரகாளியை ஒழித்து, விற்போரும் வாங்குவோரும் நேருக்கு நேரே வியாபாரம் செய்துகொள்ளும்படி செய்வது மேலான சீர்திருத்தமாகும். இப்படிச் செய் யக் குடியானவர்களும் தொழிலாளிகளும்கூட் டுறவுச் சங்கங்கள் ஏற்பாடு செய்துகொண்டு வேலை செய்தால்தான் முடியும். நமது நாட் டில் கூட்டுறவு வியாபாரங்கள் மிகவும் ஆரம்ப நிலைமையி லிருக்கின்றன. கூட்டுறவால் விளை யக்கூடிய நன்மைகளையறிய, குடியானவன் கல்வி கற்றவனாயிருத்தல்வேண்டும். நமதுநாட் டில் அவ்விதம் இல்லையாகையால், தரகாளிகள் நீங்குவது படிப்படியாய் நடக்கவேண்டிய

* Mr. D. T. Chadwick, Director of Agriculture.

காராம் பசுவுக்குப் புல்லானால், நந்தவனத்துக்குக் களையுமாம்.

காரியமேயன்றி, விரைவில்முடியக்கூடியகாரியமன்று. தரகாளியின்றி, விற்பவரும் வாங்குபவரும் நேருக்குநேரே வியாபாரம் செய்தால் சரக்கின் மேன்மைக்குத் தக்கபடி விலைமதிப்பு ஏற்படுமென்பதைச் சந்தேகிக்க இடமுண்டா? மோசம்செய்ய வழியில்லாமல் வியாபாரயோக்கியமும் உயரும். திருநெல்வேலி ஜில்லாவில் பருத்தி விளையும் பாகத்தில் 30-கிராமத்து ஜனங்கள் ஒன்றுசேர்ந்து தமதுசிரேஷ்டமான பருத்தியை நேராய் நூற்கின்றவர்களுக்கே விற்றதினால் சரக்கு ஒரே தரமாயும், நேர்த்தியாயுமிருந்ததுபற்றி அவர்களுக்கு அதிக விலை கிடைத்ததாக சென்னை பொருட்காட்சிப் புஸ்தகத்தில் 123-ம் பக்கத்தில் சொல்லியிருக்கின்றது. அதேமாதிரி மற்ற ஜில்லாக்களிலும் ஏன் செய்யக்கூடாது? முதலில் சற்று பிரயாசமாயிருப்பினும் நாளடைவில் இலாபகரமாயிருக்குமல்லவா?

லங்காஷையரிலுள்ள பிரிட்டிஷ் வியாபாரிகளும், ஜப்பான் முதலிய அந்நியதேசத்து வியாபாரிகளும், இந்தியாவிலிருந்து சுத்தமான சிறந்த பருத்தியை எதிர்பார்க்கிறார்களென்பதிற் சந்தேகமில்லை. சிறந்த வஸ்துவுக்குத்தக்க விலை கொடுத்துவாங்க இஷ்டமும் சக்தியும் உடையவர்கள் என்பதற்கும் சந்தேகமில்லை. வியாபாரம் தேற்சி யடைந்தால் தேசத்துக்கு க்ஷேமமென்பதை அனைவரும் அறிவார்கள். குடியுயரக் கோனுயருமென்றபடி இராஜாங்கத்தாருக்கும் மேன்மையே தவிர வேறில்லை. ஆகையால் பொது ஜனங்களும் கவர்ன்மென்டாரும் ஏகோபித்து, தேசத்தின் க்ஷேமத்தின் மீது நோக்கமாய், பருத்தியின் விளைவையும் நயத்தையும் விருத்தியாக்கவும் அவ்வழியாய் நமது தேசத்தில் நெசவுத்தொழிலை பலப்படுத்தவும், அந்நிய நாட்டாருடன் நாம் செய்யும் வியாபாரத்தால் மிகுந்த லாபம் கிடைக்கும்படியும் முயற்சி செய்வது நலம்.

ரஜபுத்திர வீரர்

RAJAPUT HEROES

[ஸ்ரீமான் பாஷ்யமய்யங்கார் அவர்கள்.]

1. ஹிம்மத்ஸிமஹன்

அநேக வருஷங்களுக்கு முன், இராஜபுதனத்தைச் சேர்ந்த திர் (Dhir) என்னும் நகரத்தை அரசன் ஒருவன் ஆண்டுவந்தான். அம்மன்னனுக்கு மூத்த மனைவியினிடம் பிறந்த ஹிம்மத்ஸிம்ஹன் என்னும் வாலிபன் எல்லா நற்குணங்களும் தன்னிடம் ஒருங்கேயமையப்பெற்றவன். அவன் அழகில் மன்மதனையும் அறிவில் சூர்யனையும், சத்தியத்தில் ஹரிச்சந்திரனையும், சௌர்யத்தில் பீமனையும், துன்பம் சூழ்ந்தகாலத்தும் அறத்தைக் கடைப்பிடித்து ஒழுகுவதில் தருமனையும், அருளில் சிபிச்சக்ரவர்த்தியையும் ஒத்தவன். நாடு, பகைவரால் சிதைவடைய நேர்ந்தகாலத்து, தன் புயவலிமையினால் பகைவரை வென்று தன் தகப்பனுக்குப் புகழை நிலைநிறுத்திய வீரர் திலகமாய் அவன் யாவராலும் நன்கு மதிக்கப்பட்டு வந்தான். அரசனுக்குப்பின் அவ்வரசுரிமை பெறுவதற்கு வேண்டிய எல்லா நலங்களுடனும் ஹிம்மத்ஸிம்ஹன் விளங்கினான்.

இத்துணைப் பெருமைவாய்ந்த ஹிம்மத்ஸிம்ஹனிடம் பொறாமைகொண்டு, அவனுக்குத் தீமை புரிவதிலேயே கண்ணூட்டமாயிருந்த அவனது சிற்றன்னையும் அரசனது இரண்டாம் மனைவியுமான ஸூஜாபாய் (Sooja Bai) என்பவள், தன் சாமர்த்தியத்தால் அரசனைத் தன் வயப்படுத்தித் தன் புத்திரனான பதினைந்து வயதுள்ள (Bappa Lal) பாப்பா லால் என்பவனுக்கு நாடுசேரும் வகையை எண்ணி வந்தாள். அரசனும் இளையவள் மோகத்தால் மதிமயங்கி, தன்னரும் புதல்வனை நாட்டினின்றும் வெளியேறக் கட்டளையிட்டான். மன்னர் பெருமான் எனத்தகும் ஹிம்மத்ஸிம்ஹன் வெளிச் செல்வதற்குக் காரணமாயிருந்த அம்மாயாவியின் கொடுமைதான் என்னே!

தன் நாடு அகன்று வெளிச்சென்ற அரசிளங்குமரனைச் சூழ்ந்து ஓராயிரம் போர்வீரர் அவனைப் பின்தொடர்ந்து சென்றனர். தன் செல்வனைத் துரத்திய வன்னெஞ்சனாகிய வேந்தனது நாட்டில் வாழ்வதை முற்றும் வெறுத்து அரசகுமாரனுடன் அயல் நாடு சென்று அவ

னுக்கு உதவியாயிருந்து உயிர்வாழ்தலே சிறப் பெனத் துணிந்த வீரர் பலர் அவனுக்குற்ற கஷ்டத்தைத் தமதாகப்பாவித்து அவனுக்குத் தொண்டு புரிய முற்பட்டார்கள். நகர்வாயிலைக் கடந்து செல்லும் இவ்வீரர்களின் முகத்தில் அவர்க்கியற்கையாய் உள்ள பொலிவு தோன்ற வில்லை. அவர் மனம் சிறுவனுக்குற்ற துன்பத் திலேயே சென்றிருந்தது. அதற்கேற்ப, அவ ரது உடையும் அவர் ஏறிவந்த குதிரைகளும் அணிந்திருந்த படைக்கலங்களும் கருநிறமு டையனவா யிருந்தன. அவர்கள் வழியில் அமைதியாய் மௌனத்துடன் தத்தம் குதி ரைகளைச் செலுத்திச் சென்றனர். வருத்தத் தின் மிகுதியால் அவர்கள் வழக்கம்போல் வழியிற் பாடவுமில்லை, சம்பாஷிக்கவுமில்லை. இவ்வளவு அன்பு பாராட்டி வாலிபனது துன்பத்தைத் தமதெனக் கருதி அவனுக்குச் சேவகஞ்செய்ய முற்பட்ட இப்போர்வீரர் களின் மாண்பு அளவிடற்கரியது.

ஹிம்மத்ஸிம்ஹனது மனைவி அரண்மனை யிலேயே தன் கணவன் நிலைமைக்குப் பெரி தும் துக்கித்து அவன் க்ஷேமத்திற்காகக் கட வுளைத் தினந்தோறும் பிரார்த்தித்து வந்தாள். மாற்றாந்தாயோ, தன் எண்ணம் பலித்த தென்று அகம் பூரித்தாள். அவள் மைந்தனும் அரசனது மரணத்தை ஆவலோடு எதிர்பார்த் திருந்தான். அரசன் அறிவழிந்து இளையவள் மோகத்தில் ஆழ்ந்து அவள் ஆட்டி வைக்கும் பாவைபோ லானான். அவன் தன் அரும் புதல் வன் பிரிவிற் கிரங்காது, அவனுடன் நகரத்தி னர் பலர் சென்றது (Bappa Lal) பாப்பா லால் ஒருவித கஷ்டமுமின்றி அரசடைவ தற்கு அநுகூலமே யென்றெண்ணி மனங்க ளித்திருந்தான்.

ஹிம்மத்ஸிம்ஹன் தன் பரிவாரங்களுடன் நகரத்திலுள்ள மாடமாளிகைகள் கோபுரங் கள் தன் கண்ணுக்கு மறையுமளவும் சென் றனன் தம் நாட்டில் தமக்கு சுகம்கிடையாவிடி னும் அயல்நாடுகட்குச் சென்று தமது பராக் கிரமத்தால் நாடுகவர்ந்து வெற்றிப் புகழ்நாட் டிப் பெருமை யடையலாமென்கிற எண்ணம் அவர் மனங்களில் உதித்தலும், அவர்களு டைய முகங்கள் மலர்ந்தன. வெகுதூரம் தம் குதிரைகளை நடத்தி, பின் ஒரு பெரும் வனத் தையடைந்து வேட்டையாடி ஆகாரம் உண்டு ஒரு தண்ணீர் ஓடையைக் கண்டு அவர்கள் தாகசாந்தி செய்துகொண்டார்கள். சற்று இளைப்பாறிப் பின் தாம் செய்யவேண்டிய தைப்பற்றி ஆலோசிக்கையில், சிலர் அங் குள்ள தம் நாட்டு மலைக்கோட்டையொன்றை யெதிர்த்துக் கைப்பற்றிப் பின் அரசனுக்கு விரோதமாய்க் கலகம்செய்து ஹிம்மத்ஸிம் ஹனை நாட்டிற்கேக அநுமதி அளிக்கும்படி அர சனைவற்புறுத்தல்வேண்டுமெனத்துணிந்தனர். அவர்களது தீர்மானங்கள் பலவகைபட்டு மாறு பட்டன. தன் தந்தைக்கு மாறாகக் கிளர்ச்சி யுண்டாக்குவது தனக்கு மிகவும் அவமான மானகாரியமென அறிந்து ஹிம்மத்ஸிம்ஹன் தன் தோழர்களை நோக்கி, "இவ்விதம் கிளர்ச்சி செய்வதால் நம் நாட்டிற்கன்றோ பெரும் வசையைத் தேடுகிறோம்? நம் நாட்டின் நலத் திலேயே கருத்துடைய நாம், அதற்குப் பல விதத்தாலும் நன்மை செய்யவேண்டியிருக்க, தேசத்தில் குழப்பம் உண்டாகச்செய்தல் நீதி யோ? சுதேசாபிமானம் கொண்டுள்ள நாம் இவ்விதம் நினைப்பது தவறு. ஆகையால் நீங் கள் இவ்வெண்ணத்தை விட்டு யான் சொல் வதைக் கேளுங்கள். நம் நாட்டிற்கு விரோத மாய்க் கிளம்பி துரோகிகளெனப் பெயரெடா மல் நம் நாட்டிற்குச் சத்துருக்களான மொக லாயருடன் சண்டைசெய்து, வெற்றி பெறு வது சிறப்பல்லவா? ஆகையால் நாம் நமது ஜன்மதேசத்திற்குப் புகழ் உண்டாகும் வேலை யைச் செய்வோம். நான் கூறியபடி நீங்கள் செய்து நாம் இரஜபுத்திர வம்சத்துதித்தவர் என்பதை உலகினர்க்கு வெளிப்படுத்துங்கள்" என்று கேட்போர் மனம் கரையும்வண்ணம் ஆவேசத்துடன் கூறினான். இம்மொழி கேட்ட வீரர், "நன்று, நன்று; நின்பெருமை நாடெங் கும் பரவுவதாக! இதுமுதல் எமது உயிர் களை உனக்கே அர்ப்பணம் செய்துவிட்டோம். மனமொழி, மெய்களால் உனக்குத் தொண்டு புரிய சித்தராய் நிற்கின்றோம். இனி நீ ஏவின படியே நடப்போம்" என்று கூறித் தம் அகக் களிப்பிற்கு அறிகுறியாக, கத்திகளை ஆகாயத் தில் வேகமாய்ச் சுழற்றினார்கள். ஹிம்மத்ஸிம் ஹனையே தமக்குத் தலைவனாக வரித்து மொக லாயருடன் யுத்தம் செய்ய யாவரும் ஒருமித்த மனத்தரா யிருந்தனர்.

இராஜபுதன நாட்டு எல்லையைக் கடந்து

மொகலாயருக்கு முக்கியமானதும் பகைவரால் தாக்கக் கூடாததுமான (Bar) பார் என்னும் கோட்டைக்குச் செல்வதற்கு மூன்று நாள் பிடிக்கும். தற்சமயம் மொகலாயச் சக்ரவர்த்தி பெருத்த ஸைன்யத்துடன் கூர்ஜர நாட்டின் மேல் படையெடுத்துச் சென்றிருந்தமையால் பார் (Bar) கோட்டையைக் கைப்பற்றுதல் எளிதென வறிந்த ஹிம்மத்ஸிம்ஹன் தன்னுடன் வரும் வீரரைத் தம் குதிரைகளை பார் கோட்டையை நோக்கி செலுத்தும்படிக் கட்டளையிட்டான். அக்கோட்டையை காப்போரின் தொகை சிறியதென்றும், அதைக் கைப்பற்றியபின் அதிற் பிரவேசித்து எதிரிகளை வெருட்டியடித்தல் அதிசுலபம் என்றும், சுற்றுப் பக்கங்களிலிருந்து உணவுப் பொருள்கள் ஏராளமாய்க் கிடைக்குமென்றும் சொல்லி ஹிம்மத்ஸிம்ஹன் தனது வீரரை உத்ஸாஹப்படுத்தினன். அவர்களும் குன்றா மனவலிமையுடன் வேகமாய்க்குதிரைகளை நடத்தினர்கள். முடிவில் இறக்கும்படி நேரிட்டாலும், உயிரைக் கொடுப்பதற்குத் தயங்காமல் தம் நாட்டின் எதிரிகளை வதைப்பதற்கு இது ஒரு தக்க சமயம் எனக் கொண்டு அவர்கள் தைரியமடைந்தார்கள்.

வீரர்கள் ஹிந்துக்களின் நாட்டெல்லையைக் கடந்து தென்திசையை நோக்கி இரவு பகலென்று பாராது தம் குதிரைகளை, வேகமாய்ச் செலுத்தி பார் (Bar) கோட்டைக் கருகாமையில் வந்து சேர்ந்தனர். மூன்றும் நாட்காலையில் அவர்கள் மலையின்மேலுள்ள கோட்டையின் மதில்களைக் கண்டு அளவில்லா ஆனந்தமடைந்தார்கள். வழியில் சத்துருக்களின் அச்சம் சிறிதுமின்றி எவ்விதம் சுகமாய் வந்தார்களோ அதுபோலவே கோட்டையை நெருங்கி வந்தும் இவர்களை எதிர்ப்போர் ஒருவருமிலர். கோட்டைக்குள்ளிருந்த மொகலாயர் வேட்டையின் நிமித்தம் வெளியிற்சென்றிருந்தது இரஜபுத்திரருக்கு அநுகூலமாயிற்று. வீரர்கள் ஹிம்மத்ஸிம்ஹனுடன் கோட்டைக்குள் நுழைந்து மொகலாயர் வரவை எதிர் பார்த்திருந்தனர். வேட்டையாடி விலங்கினங்களை யழித்துத் திரும்பிவந்த மொகலாயர்பேரில் எல்லா ரஜபுத்திர வீரரும் மறைவிடத்திலிருந்து திடீரெனப் பாய்ந்து அவர்கள் கோட்டை வாயிலுள் பிரவேசிக்க இடங்கொடாமல் அடித்தார்கள். மொகலாயர் இச்சம்பவத்தைச் சிறிதும் எதிர்பாராதவராகையால் யாது செய்வதெனத் தெரியாமல் திகைத்தனர். மொகலாய ஸைன்யம் முறிபட்டுத் தோல்வியடைய, அநேகர் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டு சுற்றுப் பக்கங்களி லிருந்த கிராமங்களை நோக்கி ஓட்டம் பிடித்தனர். கோட்டைக்குள்ளிருந்த மொகலாய வீரர்கள் விரைவில் மதில்வாயிலை யடைந்து, வாயிற் கதவுகளை மூடிவிட்டு இராஜபுதன மக்கள் உள்ளே வரக்கூடாதபடி தகைந்தனர். ஹிம்மத்ஸிம்ஹனுக்குப் பகைவர் இவ்விதம் செய்வரென்பது முன்னமே தெரியுமாதலின், அவர்களின் முயற்சி வீணுகுமாறு கோட்டைக்குப் பின்புறத்து மதிற்சுவர் மீதேறி யுட்புகும்படி தன்னுடன் வந்த காலாள் வீரர்க்கேவித் தான் மற்றைய வீரரின் உதவியால் மொகலாயரைத் தாக்கிக்கொண் டிருந்தான். கோட்டைக்குப் பின்புறத்தில் ஒருவரும்தங்காமல் எல்லா மொகலாயரும் வாயிற் பக்கம் வந்து குழுமியிருந்தபடியால், இரஜபுத்திரர் வெற்றியடைதல் எளிதாயிற்று. இரஜபுத்திர காலாள் வீரர்கள் பூனைகள்போல் தொத்தி, மதில் ஏறியுட்புகுந்து முன் பக்க வாயிலடைந்து மொகலாயர் தடைசெய்ததை ஒரு பொருட்படுத்தாது அவரை யடித்து வாயிலிற் காத்திருந்த ஹிம்மத்ஸிம்ஹனும் மற்றையோரும் கோட்டையினுட் செல்ல கதவுகளைத் திறந்தனர். இங்ஙனம் உயிர்ச்சேதம் சிறிதுமின்றி மொகலாய ராஜ்யத்தில் மிகப் பிரஸித்தமான கோட்டைகளுள் முக்கியமான எல்லைப்புறக் கோட்டையை அவர் எளிதிற் கைப்பற்றிக்கொண்டனர்.

பார் கோட்டையைச் சுற்றிலும் குடிவளம் மிகுந்த கிராமங்கள் பல உள்ளன. கோட்டைக்கு மூன்று பக்கங்களில் உறுதியான மற்ற சுவர்களும் நான்காம் பக்கத்தில் பார்ப்போர் நடுங்கும்படி இயற்கையாய் அமைந்துள்ள பாறைகளும் இருந்தன. பாறையினாலாகிய பக்கம் மற்றப்பக்கங்களை விட அதிக உன்னதமாய் விளங்கிற்று. இரஜபுத்திரர், கோட்டையில் நானாவித தான்யங்க ளடங்கிய களஞ்சியங்களையும், மொகலாயர் சேமித்து வைத்திருந்த உணவுப் பொருள்களையும் கண்டதுமன்றி போர்க்கலங்களும் கவசங்களும் அணியணியாக வைக்கப்பட்டிருந்ததைக்கண்டு அதிசயித்தார்கள். மதிற்

கார்த்திகைக்கு மேல் மழையும் இல்லை, கர்ணனுக்கு மேல் கொடையும் இல்லை.

சுவர்களின்பேரில் பெருங்கற்கள் குவியல் குவியலாய்க் கிடந்தன.

இரஜபுத்திரர் தமது பாக்பத்தை மனதில் நினைத்து கடவுளைத் தொழுதனர். இவ்வீரர் அங்குள்ளதைக்கொண்டு திருப்தியாய் உண்டு சோம்பேறித்தனமாய்க் காலங்கழிக்க மனமில ராய், அண்டையிலுள்ள கிராமங்கட்குச் சென்று அவற்றைத் தாக்கி அரும்பொருள்கள் பல கவர்ந்து, கோட்டைக்கு மீண்டு செல்வர். இவர்கள் இங்ஙனம்கிராமங்களில் சூறையாடுவதைத் தவிர்க்கும்பொருட்டு அநேக மொகலாய வீரர்கள் ஒன்றுசேர்ந்து பெரும் படையொன்றெழுப்பி பார் (Bar)கோட்டையை முற்றுகை செய்தனர். இரஜபுத்திரரை முறியடிக்கும்படி மொகலாயர் செய்த சூழ்ச்சிகள் யாவும் பலிக்கவில்லை. தாம் எடுத்துக்கொண்ட காரியம்அரியதென்பதை மொகலாயர் நன்குய் அறிந்தனர். மதிற்சுவர்களும் பாறையும் மிகவும் உயர்ந்திருந்தமையால் நேர் நின்று இரஜபுத்திரரை எதிர்ப்பது அசாத்தியமாயிற்று. மொகலாய சேனாதிபதியுடன் வந்த வீரரின் தொகை மிக குறைவாயிருந்தது. கீழே நின்றுகொண்டு மேலே கல்லெறிதலும், குண்டுபோட்டுச் சுடுதலும் அவர்களுக்கே உயிர்ச்சேதம் விளைவித்ததே யன்றி, இரஜபுத்திரர்க்கு அதனால் ஒரு கெடுதியும் சம்பவிக்கவில்லை.

பின்பு மொகலாய ஸைங்யத்திற்குத் தலைவனான அசப்கான் என்பவன் போர்வேழங்களின் உதவியைக்கொண்டு கோட்டைக்குள் நுழைவதென்னும் எண்ணத்துடன் யானைகள் கோட்டை வாயிலுட் புகுவதற்கேற்ற ஏற்பாடுகளைச் செய்தான். இதுகண்ட கோட்டைவீரர் யானைகளின்மீதும் பாகர்கள்மீதும் கற்களையும் அம்புகளையும் எறிந்தார்கள். அசப்கானது எண்ணம் ஈடேறவில்லை. ஆயினும் அவன் இதற்குச் சற்றும் சலிந்தானல்லன். ஒரு யானை பகைவரது அம்புக் கிலக்காகாது கோட்டை வாயிலுள் நுழைவதற்குச் சாதகமான வழியொன்று நிருமிக்க வெண்ணி, அவன் பக்கத்தூர்களிலிருந்து பணியாளர் பலரை விளித்து அவர்களைக் கொண்டு ஏழு நாட்கள் வரையிலும் வேலை செய்வித்து வந்தான். இடையில் மொகலாயர் பட்ட கஷ்டத்தை இவ்வளவென்று வரையறுத்துக் கூறமுடியாது.

(இது அடுத்த சஞ்சிகையில் முடிவு பெறும்.)

நமது சிறு கதை

OUR SHORT STORY

(63-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஸ்ரீமான் ஜி.ஏ.சுந்தரமய்யரவர்கள், பி.ஏ., பி.எல்.

V

மறுநாள் காலையில் கேசவராவ், தன் ஆப்த சிநேகிதரும் பள்ளிக்கூடத் தோழருமான வக்கீல் சிதம்பரமய்யரிடம் போய் தனக்கு ஒரு பெரிய ஆபத்து வந்திருப்பதாயும் எல்லாம் அன்று சாயங்காலம் தெரியும் என்றும், சாயங்காலம் ஆறரைமணிக்குள் தான் வீட்டிற்குத் திரும்பாவிட்டால், தன்னைப்பற்றி தாலுகா கச்சேரியில் விசாரித்து மேலே செய்யவேண்டிய காரியங்களைச் செய்துமுடித்து, வீட்டையும் பார்த்துக்கொள்ளவேண்டும் என்றும் சொன்னார். சிதம்பரமய்யர் விஷயத்தை விபரமாய்ச் சொல்லும்படி கேட்டதற்கு ஆபீஸில் ஒரு தஸ்தாவேஜு காணமல் போய்விட்ட விஷயமாய் போலீஸ்காரர் விசாரணை செய்யப் போகிறதாயும், ஒருவேளை தன்பேரில் பொய் கேஸ் சிருஷ்டித்து, தன்னை ஜெயிலுக்கு அனுப்புவார்கள் என்று பயப்படுவதாயும் மற்ற விவரங்களை அவசியமானால் சாயங்காலம் சொல்லுகிறதாயும் கேசவராவ் பதில் சொன்னார். சிதம்பரமய்யர் "என்ன விசாரணை நடந்தாலும் ஆபீசிலுள்ளவர்களிடமும் தஸ்தாவேஜு சம்பந்தமான மற்ற எல்லாரிடமும் வாக்குமூலம் வாங்கி, எல்லாப் பெட்டிகள் மேஜைகள் அலமாரிகள் இவைகளைப் பரிசோதிப்பதோடு, வீடுகளிலும் சோதனை போடும்படி கேட்டுக்கொள். நீ சொன்னபடியே நான் சாயங்காலம் விசாரித்து விஷயங்களைத் தெரிந்துகொண்டு, மேல் யோசனை செய்கிறேன். அவசியமானால், அதற்கு முன்னாலேயே, எப்போது வேண்டுமென்றாலும் எனக்குச் சொல்லியனுப்பினால் நான் வந்து சேருகிறேன்" என்று சொன்னார்.

ராயர் வீடு சேர்ந்து, காரியங்களைப் பார்த்தார். ஸ்நானம் செய்துவிட்டு, தன் மனைவியுடன் சிறிதும் எதிர்வார்த்தை யாடாமலே அவள் சொல்வதையெல்லாம் பொறுமையாய்க் கேட்டுங் கொண்டே போஜனம் செய்தார். சாப்பிட்டுக் கை யலம்பின பிறகு, ஒவ்வொரு குழந்தையையும் அதிப் பிரியமாய்த் தழுவி முத்தமிட்டு

அனுப்பிவிட்டு யமுனுபாயிடம் ''இன்று சாயங்காலம் நான் கச்சேரியிலிருந்து திரும்பிவரத் தாமதப்பட்டால் எனக்காகக் கார்த்திராமல் குழந்தைகளுக் கெல்லாம் சாப்பாடு போட்டு விட்டு, பிறகு நீயும் சாப்பிடு. ஆதற்குமேல் ரகுநாதனை வக்கீல் சிதம்பரமய்யர் வீட்டிற்கு அனுப்பு'' என்று சொல்லி அதற்குள் தன்னை அறியாமல் கண்ணில்ததும்பிய நீர்த்துளியைத் துடைத்துக்கொண்டு வீட்டைவிட்டுப் புறப்பட்டுக் கச்சேரி சென்ருர்.

கச்சேரியில் கேசவராவ், ஏதோ பித்துப் பிடித்தவர்போல வேலை செய்தார். சுமார் 2 மணிக்கு அவரை தாசில்தார் அழைத்ததாக ஒரு சேகவன் கூப்பிட, அவரும் தாசில்தார் ஆபீஸ் அறைக்குச் சென்ருர். போனதும் அங்கே தனியாக இருந்த சக்கரவர்த்தி ஐயங்கார் அவரைப் பார்த்து ''ராயரே போலீஸ் இன்ஸ்பெக்டர் இதோ இரண்டு நிமிஷத்தில் வந்துவிடுவார். நான் சொன்னதெல்லாம் ஞாபகம் இருக்கட்டும். உம் வாயில் உம் கையாலேயே மண்ணை அள்ளிப் போட்டுக் கொள்ளாதேயும்'' என்று மெதுவாய்ச் சொன்ஞர். கேசவராவ் ''நான் செய்யவேண்டியதைச் சரிவரச் செய்கிறேன்'' என்ருர். சக்கரவர்த்தி ஐயங்காருக்கு இதன் உண்மையான கருத்து புலப்படவில்லை. வெளிப்படையாகச் சொல்லும்படி ராயரைக் கேட்க வாய்திறப்பதற்கு முன், போலீஸ் இன்ஸ்பெக்டர் ராமானுஜ நாயுடு வந்து சேர்ந்தார். உடனே சக்கரவர்த்தி ஐயங்கார் அவரை ஒருநாற்காலியில் உட்காரச் சொல்லிவிட்டு துரைசாமி ஐயரையும் ஹெட் குமஸ்தாவையும் டபேதாரையும் அழைத்து வரச்சொல்லி ஆள்விட்டார். அவர்கள் எல்லாரும் ஆபீஸ் அறைக்குள் வந்ததும், அந்த அறை வாசலில் காவல் வைத்தார். விசாரணையும் ஆரம்பித்தது.

தாசில் சக்கரவர்த்தி ஐயங்கார் தன் கைப்பெட்டியிலிருந்து ஒரு காகிதத்தை எடுத்து ''இன்ஸ்பெக்டர்வாள் இந்தப் புகார் மனு எனக்குத் தபாலில் வந்தது. இதில் கண்ட தஸ்தவேஜு வருமானவரி பரிசீலனைக்காக இந்தக் கச்சேரிக்கு வந்தது. அதுவும் அத்துடனிருந்த மற்ற எல்லா தஸ்தவேஜுகளும் இந்த ஆபீஸ் வருமானவரி குமஸ்தா துரைசாமி ஐயரிடம்தான் இருந்தன. அவர்மேல் எனக்கு சந்தேகம். குமாஸ்தா கேசவராவ், துரைசாமி ஐயருக்கு அடுத்து உட்கார்பவர். ஒவ்வொரு சமயத்தில் அவர் துரைசாமி ஐயருக்கு அவர் வேலையில் ஒத்தாசை செய்கிறதுண்டு. அவரும் அந்த தஸ்தவேஜை கைப்பற்றக் கூடும். ஆதலால் அவர்பேரிலும் சந்தேசம்'' என்றுசொல்லி மனுவை ராமானுஜ நாயுடுவிடம் கொடுத்தார். நாயுடு மனுவை முற்றிலும் சாவதானமாகப் படித்துப் பார்த்துவிட்டு ''இந்த இரண்டு குமாஸ்தாக்கள்பேரில் சந்தேக ஆஸ்பதமான விஷயங்கள் வேறு ஏதாவது உண்டா'' என்று கேட்டார்.

தாசில்தார் ''குமாஸ்தா துரைசாமி ஐயர் குறைந்த சம்பளத்திலிருந்தும் விலையுயர்ந்த உடுப்புகளை யணிந்துகொண்டும் மற்ற விதத்திலும் வெகு டம்பமாய் இருக்கிருர். கேசவராவ் பேரில் சமீபத்தில் யாரோ பிராது செய்ததாகவும், வாயிதா அன்றைக்கு ராயர் நூறுரூபாய் கோர்ட்டில் செலுத்தியதாகவும் கேள்வி. ஆனல் இவைகளைக்கொண்டு, ஒன்றும் தீர்மானமாகச் சொல்லுகிறதற்கில்லை, இருந்தாலும், இவைகள் சந்தேகத்திற்கு இடம் தருகிறபடியாலும், தாங்கள் கேட்டபடியாலும் சொன்னேன்'' என்ருர்.

போலீஸ் இன்ஸ்பெக்டர் துரைசாமி ஐயரைப் பார்த்து, ''உமக்கு இது விஷயமாய் என்ன ஐயா தெரியும்?'' என்று கேட்டார்.

''குழந்தையன் செட்டியார் தஸ்தவேஜுகளை நானும் கேசவராயரும்தான் பார்த்தோம். அவர் தஸ்தவேஜுகளைத் திரும்பி வாங்கிக் கொள்ளக் கச்சேரிக்குவந்தபோது எல்லா தஸ்தவேஜுகளையும் எடுத்து, தாசில்தார் அவர்கள் மேஜையின்பேரில் வைத்தேன். செட்டியாரிடம் கையொப்பம் வாங்கிக்கொண்டு தஸ்தவேஜுகளை யெல்லாம் கொடுக்குமுன், நான் திரும்பி வந்துவிட்டேன். செட்டியார் தாசில்தாரவர்கள் முன்னிலையில் மேஜையின்மேலிருந்து தஸ்தவேஜுகளை எல்லாம் எடுத்துப் போனதாக ஞாபகம். எனக்கு இதைக் குறித்து வேறு ஒன்றும் தெரியாது'' என்று துரைசாமி ஐயர் பதில் சொன்ஞர்.

இதைக்கேட்டதும் இராமானுஜநாயுடு தாசில்தார் முகத்தை நோக்கினர். அவர் குறிப்பை அறிந்த சக்கரவர்த்தி ஐயங்காரும் ''இந்த குமாஸ்தா, ஒரு கட்டு தஸ்தவேஜுகளைக்

கொண்டுவந்து என் மேஜையின்மேல் வைத்தது உண்மைதான். பிறகு அவர் முன்னிலேயிலேயேதான் செட்டியார் கையொப்பமிட்டு, தஸ்தவேஜுகளை எல்லாம் எடுத்துக்கொண்டார். தஸ்தவேஜுகளில் ஒன்று பாக்கியில்லாமல் எல்லாவற்றையும், கொண்டுவந்தாரா என்பதையும், எல்லாவற்றையும் செட்டியார் எடுத்துக்கொண்டாரா என்பதையும் நான் கவனிக்கவில்லை'' என்றார்.

பிறகு போலீஸ் இன்ஸ்பெக்டர் கேசவ ராயரைப்பார்த்து "உமக்கு என்ன தெரியும்?'' என்று கேட்டார்.

ராயர் இரண்டொரு நிமிஷம் பதில் சொல்லவில்லை. சக்கரவர்த்தி ஐயங்கார் அவர் முகத்தை உற்றுப்பார்த்தார். அதைக் கவனியாமலே "ஐயா தஸ்தவேஜை யார் அப்புறப்படுத்தினார்கள் என்பதைப்பற்றி எனக்கு ஒன்றுமே தெரியாது. இந்த விஷயத்தைப்பற்றி எனக்குத் தெரிந்த மற்ற விவரங்களை வெளியிட எனக்கே வெட்கமாயிருக்கிறது—'' என்று சொல்லி மேலே வார்த்தை எடுக்கு முன், சக்கரவர்த்தி ஐயங்கார் "வேறு சங்கதி ஒன்றும் உம்மைக் கேட்கவில்லை.—இன்ஸ்பெக்டர்வாள்-இந்த குமஸ்தா மெத்த அதிகப் பிரசங்கி. இவர் கட்டுக்கதைகளை யெல்லாம் பிற்பாடு கேட்டுக்கொள்வோம். டபேதார் வாக்குமூலத்தைக் கேளுங்கள்'' என்றார்.

அந்தக் கச்சேரி டபேதார் காசிம்கான் ஒரு பழைய பெருச்சாளி. எவ்விதத்தில் தன் எஜமானனை திருப்தி செய்யவேண்டுமோ அவ்விதத்தில் திருப்தி செய்யக்கூடியவன். கேசவ ராயரைப்பற்றி எந்த சமயத்தில் என்ன வாக்குமூலம் கொடுக்கவேண்டியது என்று அவனுக்குப் பாடம் சொல்லிக்கொடுக்கப்பட்டிருந்தது. அவன் சிறிதும் யோசிக்காமல், "இன்ஸ்பெக்டர் எஜமானவர்களே! இந்த மனுவில் கண்ட நத்தர்சா ராவுத்தர் வீடும், என் வீடும் ஒரே தெரு. இதற்கு சுமார் 22, 25 நாளைக்குமுன் ஒரு நாள் சூரியன் மலைவாயில் விழுந்ததும் கேசவராவ் அந்தத் தெருவுக்கு வந்து நத்தர்சா ராவுத்தர் வீட்டிற்குள் போய் சிறிது நேரத்திற்கெல்லாம் திரும்பி வந்து விட்டார். எனக்கு வேறு ஒன்றும் தெரியாது'' என்றான்.

உடனே போலீஸ் இன்ஸ்பெக்டர் தன்னுடன் வந்திருந்த ஒரு சப் இன்ஸ்பெக்டரைக் கூப்பிட்டு ஒரு துண்டுகாகிதத்தில் என்னவோ எழுதிக்கொடுத்து அவரைப்பார்த்து "இதை சப் கோர்ட்டிற்குக் கொண்டுபோய் சிரஸ்ததாரிடம் காட்டி பதில் வாங்கிவாரும். சைகிளில் ஏறிப்போய் 15 நிமிஷத்தில் திரும்பி வரவேண்டும்'' என்று சொன்னார். அப்படியே சப் இன்ஸ்பெக்டரும் சைகிளில் ஏறிச் சென்றார்.

பிறகு போலீஸ் இன்ஸ்பெக்டர், ஒவ்வொரு குமாஸ்தாக்களும் உட்காரும் இடங்களைப் பார்த்து மேஜைகள் பெட்டிகள் அலமாரிகள் எல்லாவற்றையும் சாவதானமாய்ப் பரிசோதித்தார். பரிசோதனை முடியும் சமயத்தில், சப் கோர்ட்டிற்கு சைகிள் ஏறிச்சென்ற சப் இன்ஸ்பெக்டரும் திரும்பிவந்து, ஒரு காகிதத்தை இன்ஸ்பெக்டரிடம் கொடுத்தார். அதை இன்ஸ்பெக்டர் இராமனுஜ நாயுடு வாங்கிப் பிரித்துப் பார்த்துவிட்டு, உடனே பாக்கிப் பரிசோதனை செய்யவேண்டியவைகளை சப் இன்ஸ்பெக்டரைப் பரிசோதனை செய்யச் சொல்லிவிட்டு, கேசவ ராவ், சக்கரவர்த்தி ஐயங்கார், டபேதார் இவர்களை மட்டும் அழைத்துக்கொண்டு, தாசில்தார் அறைக்குப் போனார். அந்த அறை வாசலில், ஒரு போலீஸ் சேவகனை வைத்து "சப் இன்ஸ்பெக்டர் சோதனை முடிந்ததும் திரும்பி வருவார். அவரைமட்டும் உள்ளே வரச்சொல். வேறு ஒருவரையும் உள்ளேவிடாதே'' என்று கண்டிப்பாய் உத்தரவு கொடுத்துவிட்டுக் கதவையும் அடைத்துக்கொண்டு உள்ளேபோய் ஒரு நாற்காலியில் அமர்ந்தார்.

இராமானுஜநாயுடு சப் இன்ஸ்பெக்டர் கொண்டுவந்து கொடுத்த கடிதத்தை கையில் பிரித்து வைத்துக்கொண்டு கேசவராயரைப் பார்த்து "ஐயா உம்பேரில் பலமான ருசுக்கள் ஏற்பட்டிருக்கின்றன. சப் கோர்ட்டில் நீர் பணம் செலுத்தியது எந்தத் தேதியில் என்பதை குறித்து வாங்கிக்கொண்டுவரும்படி என் சப் இன்ஸ்பெக்டரை சற்று முன்பு அனுப்பினேன். அவரும் அங்கேபோய் சிரஸ்ததாரிடமிருந்து அந்தத் தேதியைக் கண்டு பதில் வாங்கி வந்திருக்கிறார். அந்தத் தேதி, நீர் நத்தர்சா ராவுத்தர் வீட்டுக்குப் போய் வந்ததாக காசிம்கான் குறிப்பிட்ட தினத்திற்கு 2 அல்லது 3 நாளைக்கு பிற்பட்டதாக இருக்கிறது. தவிர, நீர் குழந்தையன் செட்டியார் தஸ்தவேஜுகளைப்

பார்த்ததாகவும் சாக்ஷியம் இருக்கிறது. அது உண்மைதானே? " என்று கேட்டார்.

ராயர் "ஒருசமயம் துரைசாமி ஐயருக்கு வேலைத் தொந்தரவு அதிகமாக இருந்ததால் நான் அந்த தஸ்தவேஜுகளைப் பார்த்தது உண்மைதான். இதை வைத்துக்கொண்டு என்னை குற்றவாளி என்று தீர்மானிக்காதேயுங்கள். காசிம்கான் சொன்ன வார்த்தைகளில் சிறிதும் உண்மையில்லை. நான் ஒருநாளும் பிசகானகாரியங்களுக்குப் போகிறவனேயல்ல" என்றார்.

போலீஸ் இன்ஸ்பெக்டர் "சரிதான் அதெல்லாம் பின்னால் சொல்லிக்கொள்ளலாம். தஸ்தவேஜுகள் உம் கையில் இருந்ததை நீரே ஒப்புக்கொண்டுவிட்டீர். மற்ற ருசுவும் பலமாய் இருக்கிறது. நான் உம்மை அரெஸ்டு செய்யப் போகிறேன்" என்று சொன்னார். கேசவராவ் பதில் ஒன்றும் பேசுமுன், அதற்குள் அங்கு வந்திருந்த சப் இன்ஸ்பெக்டரைப் பார்த்து "ஐயா இந்த ராயரை அரெஸ்டு செய்யும்" என்று சொன்னார்.

கேசவராயருக்கு சிதம்பரமய்யர் சொன்ன புத்திமதி உடனே ஞாபகத்திற்கு வந்தது. உடனே இன்ஸ்பெக்டரைப் பார்த்து "ஐயா நான் எங்கும் ஓடிப்போகக் கூடியவனல்ல. அப்படி போகப் பிரயத்தனப்பட்டாலும் என்னைப் பிடித்து விடுவது சிரமமில்லை. என்பேரில் இதுவரை ஒரு புகாரும் இல்லை என்பதற்கு தாசில்தாரவர்களே சாட்சி சொல்லுவார். அதை உத்தேசித்தாவது தாங்கள் தயவுசெய்து என் வேண்டுகோளைக் கேளுங்கள். காணாமல்போன தஸ்தவேஜு நத்தர்சா ராவுத்தர் வீட்டில் இருக்கிறதா என்று சோதனை போட்டுப் பார்க்க உத்தரவு செய்யுங்கள். தவிர, இந்த மனு உண்மைதானா என்பதைப்பற்றி குழந்தையன் செட்டியாரிடமும் வாக்குமூலம் வாங்கிக்கொண்டு அவர் வீட்டிலும் சோதனை போட்டுப்பார்க்க உத்தரவுசெய்யுங்கள். இதெல்லாம், அதிகமாய்ப் போனால் இரண்டு நாழிகை வேலை. தீர விசாரித்த பின், யுக்தமானதைச் செய்யுங்கள்" என்று கேசவராவ் கெஞ்சினார்.

போலீஸ் இன்ஸ்பெக்டர் "அதெல்லாம் இப்போது முடியாது" என்று மறுத்துவிட்டார்.

கேசவராவ் மறுபடியும் போலீஸ் இன்ஸ்பெக்டரைப் பார்த்து "ஐயா சற்றுப் பொறுங்கள். யோசியுங்கள். இந்த மனு உண்மையில் குழந்தையன் செட்டியார் போட்டதுதான் என்பதற்கே சாக்ஷியம் இல்லையே. சோதனைபோட நேரமில்லாவிட்டாலும், அவரிடம் வாக்குமூலமாவது கேட்க வேண்டாமா? உண்மையில் அவர் கைக்கு தஸ்தவேஜு போய்ச் சேரவில்லை யென்றுகூட வெளியாகவில்லையே. சற்றுப் பெரிய மனசுபண்ணுங்கள்" என்று முறையிட்டார்.

இன்ஸ்பெக்டர் சற்று நிதானித்தார். ராயர் சொன்னபடிக்கு, தஸ்தவேஜு குழந்தையன் செட்டியார் வாங்கிப்போகவில்லை யென்பதற்கும் அதைக்குறித்தே அவர் உண்மையில்மனு அனுப்பினார் என்பதற்கும் போதுமான ருசு இல்லை யென்பது மனதில் பட்டது. உடனே "இதில் ஒன்றும் உபயோகமிருப்பதாய் எனக்குத் தோன்றவில்லை. இருந்தாலும், முறைக்கு குழந்தையன் செட்டியாரை விசாரித்து விடுகிறேன்" என்று சொல்லி ஒரு போலீஸ் சேவகனைக் கூப்பிட்டு குழந்தையன் செட்டியாரை உடனே ஒரு குதிரை வண்டியில் அழைத்து வரச் சொல்லி அனுப்பினார். சிறிது நேரத்தில் அவனும் குழந்தையன் செட்டியாரை அழைத்து வந்தான். போலீஸ் இன்ஸ்பெக்டர் செட்டியாரைப் பார்த்து அவரிடம் மனுவைக் கொடுத்து "இந்த மனு நீர் எழுதியனுப்பியது தானா?" என்று கேட்டார்.

குழந்தையன் செட்டியார் "ஆமாம். நான் போட்டதுதான். ஆனால் இதைப்பற்றி தாங்கள் மேல் நடவடிக்கை நடத்தவேண்டியதில்லை. இதில்கண்ட தஸ்தவேஜு இப்போது தான் எனக்கு தபாலில் வந்து சேர்ந்தது. யார் இதுவரை அதை வைத்திருந்து அனுப்பினார் என்பது மட்டும் புலப்படவில்லை." என்றார்.

இதைக் கேட்டதும், எல்லோரும் பிரமை கொண்டார்கள். தாசில்தார் செட்டியாரைப் பார்த்து "என்ன ஐயா இது. கண்டபடியெல்லாம் மனுச் செய்கிறது. பிறகு, மேல் நடத்த வேண்டாம் என்கிறது. வாஸ்தவத்தில் தஸ்தவேஜு வந்துவிட்டால், எங்கே அதைக் காட்டும்" என்றார். குழந்தையன் செட்டி, "ஐயா இரண்டு நிமிஷம் பொறுங்கள் எடுத்து வருகிறேன்" என்று சொல்லி, ஒரு வண்டியில் ஏறிக்கொண்டு வீட்டிற்குப்போய் ஒரு காகிதப் பையுடன் திரும்பிவந்தார். வந்ததும், அந்தப் பைக்குள்ளிருந்து தஸ்தவேஜை

எடுத்து தாசில்தாரிடமும் போலீஸ் இன்ஸ்பெக்டரிடமும் காட்டி "எஜமான்களே நான் இந்த கச்சேரியிலிருந்து என் தஸ்தவேஜுகளை வாங்கிப் போகும்போது இது இல்லே. இதைப் பற்றி நேரில் கேட்கலாமென்று கச்சேரிக்கு வந்தபோது, டபேதார் என்னை அழைத்து மனுச் செய்துகொள்ளும்படி சொன்னார். அவர் சொல்படியே நான் மனு எழுதியனுப்பினேன். இன்று 1 மணிக்கு இந்தத் தபால் எனக்குக் கிடைத்தது. தஸ்தவேஜு என் கைவசம் வந்து விட்டபடியால் என் மனுவை அந்த விவரம் கண்டு பைசல் செய்யலாம்" என்றார்.

பையைப் போலீஸ் இன்ஸ்பெக்டரும் தாசில்தாரும் வாங்கிப் பார்த்தார்கள். அதில் தபால் முத்திரைகள் இரண்டு இடங்களிலும் மதுரை யென்றே போட்டிருந்தது. மேல்விலாசம் தமிழில் 'மதுரை கிழக்கு உத்தரவீதியிலிருக்கும் குழந்தையன் செட்டியாருக்கு' என்று தெளிவாய் எழுதியிருந்தது. அந்த எழுத்துக்களைப் பார்த்ததும், தாசில்தார் சக்கரவர்த்தி ஐயங்காருக்குச் சற்று முகம் வெளுத்தது. "சரி விசாரணையை நிறுத்திவிடுகிறது" என்றார். விசாரணையும் நிறுத்தப்பட்டது.

கேசவராயர் கைக்கு நெருங்கின விலங்கு கையிற் படாமல் இவ்விதம் விலகிற்று. இதன் உள் ரந்திரம் அவருக்குப் புலப்படவில்லே. சாயங்காலம் சிதம்பரமய்யரிடம் போய் "ஐயா நீங்கள் சொன்ன புத்தியால் நான் தப்பித்துக் கொண்டேன்" என்று சொல்லித் தன் விசாரணை விஷயம் முழுவதையும் சொன்னார். அன்றிரவே சக்கரவர்த்தி ஐயங்காரிடம் அவருடைய 100 ரூ. நோட்டையும் திருப்பிக் கொடுத்துவிட்டார். வீட்டிற்கு வந்ததும் எப்போதும்போல் யமுனாபாய் தன் குறைகளைச் சொல்ல ஆரம்பித்தாள். குழந்தைகள் ஒன்றோடொன்று சச்சரவு செய்தன. ஆனால் கேசவராயருக்கு இதெல்லாம் வெகு ஆநந்தமாகவே யிருந்தது. முற்றிற்று.

வஸந்த மந்திரம்

(மூன்றும் பாகம்.)

முதல் அத்தியாயம்

நரேந்திரன் துலுக்கசேனையுள் கலத்தல்

ஆமத் பாக்ஷாவின் சேனை யுத்தத்திற்குப் புறப்பட்டுவிட்டது. குதிரைவீரரும் காலாட்படையும் கூடி பதினாயிரவர். இவர்களைத் தவிர 100 யானைகளும் கணக்கில்லா ஒட்டைகளும் அவற்றை ஓட்டுவோரும் வேலேக்காரரும் பலர்: தளகர்த்தர்களும், மேல் அதிகாரிகளும், அவர் காக்குந்தலைவர்களும் 500 பேர்களுக்குக் குறைவில்லே. எல்லோருக்கும் சேனாதிபதி ஆமத்பாக்ஷா சாகிப் பகதூர். அவன் தனது அழகிய நீலவேணிக் குதிரையின் மீதேறி முன்வந்தாலே போதும்: வீரர்களுடைய சந்தோஷமும், ஆர்வமும், உற்சாகமும் இவ்வளவென்று சொல்லிமுடியாது. பலநாள் கூட்டில் அடைப்புண்ட மிருகத்தை வெளிப் புறப்பட விட்டது போலும், கரையுடைந்த ஏரி நீர் போலும் யாதும் லக்ஷியமின்றிச் சண்டைக்கு முன் சென்றார்கள்.

மீரான் சாகிப் செய்திருக்கும் ஏற்பாடுகளோ மிக நேர்த்தியானவை. சேனைகள் போய் இறங்கும் ஒவ்வொரு இடமும் ஒரு பட்டணம் போலவே காணப்படுகின்றது. ஒழுங்காய் தெருக்கள் போன்று இருபுறமும் கூடாரங்கள். அவற்றில் வீரர்கள் தங்குவது வழக்கம். அக்கூடாரங்களின் நடுவில் சற்றே பெரிய கூடாரங்கள் தளகர்த்தர்களுக்கு. இவ்வாறு நாலாபக்கமும் பெரிய தெருக்கள். இவற்றிற்கு நடுவே தலைவர்களுக்கும் அதிகாரிகளுக்கும் வெவ்வேறு கூடாரங்கள். எல்லாவற்றிற்கும் நடுவே அரசனுடைய அலங்கரிக்கப்பட்ட கூடாரம். ஒவ்வொரு பாகத்துக்கும் சாப்பிடவும், விளையாடவும், சண்டை பழகவும், வேறு வேறு இடங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இரவிலும் பகலிலும் காவல் காப்பதற்குச் செய்துள்ள ஏற்பாடுகள் அற்புதமானவை. ஆகையால் அந்நிய மனிதன் ஒருவன், சேனையின் உள்ளே நுழைவதும், சேனையில் சேர்ந்தவன் ஒருவன் வெளியே போவதும், அசாத்தியமென்றே சொல்லவேண்டும். அரசன் கூடாரத்துக்கு அப்பால்

உயர்ந்து தோன்றும் மரக்கூட்டில் நாழிகைப் பறை வைத்திருக்கின்றது. இரவிலும் பகலிலும் நாழிகைக்கு நாழிகை பறையறைகின்றனர். சேனைகளோடு, வீரர்களுக்கும், தலைவர்களுக்கும் வேண்டிய பொருள்களை விற்க, ஒரு கூட்டம் வர்த்தகர்களும் வருகிறார்கள். அவர்களுடைய வீதி சற்று அப்பால் இருக்கின்றது. தன் கூடாரத்தின் முன் அமைத்துள்ள மேடையில் நின்றுகொண்டு சுற்றிலும் கண்ணுக்கெட்டிய வரையில் தென்படும் கூடாரங்களைப் பார்த்து ஆமத் பாக்ஷா எல்லையில்லா ஆனந்தப்படுவான். "இங்கே தேர்ந்த சேனையைக் கண்ணாலே கண்டபொழுதே பயப்படமாட்டார்களா எதிரிகள்! அதிலும் கிழவனான பிரதாபசிங்கன் என்ன செய்யப் போகிறான்! நடுநடுங்கி ஓடிப் பின்வாங்க மாட்டானோ!! இவற்றை நடத்தும் சேனாதிபதி யார்? பாரசீகம், அரேபியா இத்தேசங்களில் சண்டைசெய்து பிரசித்திபெற்ற ஆமத் பாக்ஷாவாகிய நான் அல்லவா?......" என்று பெருமை பாராட்டிக்கொள்வான்.

சேனை இடம்விட்டுச் செல்லும்போது சுற்றிவரும் சுமாலி, மீரான்சாகிப், இவர்களுக்குத் தன் படையின் சிறப்பைப் பலவாறு வருணிப்பான். "இச்சேனையில் தளகர்த்தன் ஒவ்வொருவனையும் எனக்கு நன்றாய்த் தெரியும். என் பொருட்டு உயிரைத் துறக்கத் தயாராய் இருக்கும் இச்சேனையைவிட வேறு உயர்ந்த சேனை உளதோ! இன்னமும் இராஜபுத்திரர்களுக்குக் கொஞ்சம் தயை காட்டுவோம். அப்படுபாவி பிரதாபசிங்கன் மட்டும் இணங்குவானானால் இப்பெருஞ்சேனையே அவனது செல்வ மகளான லலிதாதேவிக்குச் சுற்றுப்படையாய் அவளைச் சந்தோஷத்தோடு வஸந்தபுரிக்கு இட்டுக்கொண்டுவர உபயோகமாகும்! இல்லையேல், அந்த இராஜபுத்திர வீரர்களைச் சின்னாபின்னமாக்கி, அவர்களின் இரத்தத்தில் தோய்ந்த கத்தியுடன் அப்பெண்மணியை அழைத்து வருவேன். இது திண்ணம்......! (தனது பக்கத்தில் இணையில்லா அலங்காரத்துடன் அம்பாரியோடு வரும் யானையைக் காட்டி) சுமாலீ! எனது பட்டத்து யானையைப் போலவே அலங்கரிக்கப்பெற்று என்னுடைய வலதுகைப்புறம் வரும் இவ்வியானை மேலேயே என் அன்பிற்குரிய லலிதையை ஏற்றி வருவேன்! அதுவரையில் இது என் பக்கத்திலேயே வந்துகொண்டிருக்கும்!......புத்தியுடையவனானால் அந்த பிரதாபசிங்கன் என்னை எதிர்ப்பதற்கு அஞ்சுவான். புத்தியற்றவனாகில் போரில் மரிப்பான்; தப்பித்துக்கொள்ள மார்க்கம் கொடாமல் சண்டையே பிரதானமாய் எண்ணி வந்தவனும் அன்று நான்!—" என்றிவ்வாறு தன் எண்ணங்களை வெளிப்படையாய்ச் சொல்லுவான் ஆமத் பாக்ஷா.

இங்ஙனம் சிலநாள்கள் வழியிற் சென்றன. இன்னும் உதயபுரிசெல்ல நான்கு நாளாகும். மத்தியானம் பகல் 15, 18 நாழிகையிருக்கும். அன்றுகாலை8-நாழிகைவரையில் தண்டுகளெல்லாம் நடந்து வந்து சிரமப்பட்டிருப்பதால் எல்லாரும் நித்திரைசெய்கின்றனர். காவல்காப்போர் மட்டும், மேலும் கீழும் அலைந்துகொண்டிருக்கின்றனர். அச்சமயத்தில் மேற்குப்புறத்தில் கூப்பிடு தூரத்தில் நொண்டிக்கொண்டு துருக்கப்பிள்ளை வருகிறான். காவல் நாய்கள் உறுமுகின்றன. காவல்காரர்கள் அப்புறம் திரும்புகின்றனர். கைகளையும், கால்களையும் ஆட்டிக்கொண்டு, குல்லாயை ஒருபுறம்சாய்த்து வைத்துக்கொண்டு, ஊன்றிய தடியுடன் விகாரமாய் நடந்துவருகிறான் அச்சிறுவன். அவன் நெருங்க நெருங்க நாய்களும் பலமாய்க் குலைத்தன. இரண்டு காவலாளிகள் முன் சென்று அவனண்டை நெருங்கி "நீ யார்" என்று பார்ஷியன் பாஷையில் கேட்டனர். அவன் "மகமத் ஆலி" என்றான், "ஏன் இங்கு வந்தாய்? நொண்டிக்கு இங்கு என்ன வேலை?" என்று கேட்டனர். அவன்"உங்கள் பாஷை தெரியவில்லை" என்பதாகச் சாடைகாட்டி, வேஷ்டியுள் வைத்திருந்த சிறியதோர்பறையை எடுத்துக்கொண்டு அதைத் தட்டிக்கொண்டே,

"சாமீ உங்க வார்த்தை தெரியாதே நமக்கு —நமக்கு ஒங்க வார்த்தை தெரியாதே என்று பாடிக்கொண்டு பலவிதமாய் ஆடத் தொடங்கினான். காவளாளிகளுக்கு அவன் பாடும்பாட்டு அர்த்தமாகவில்லை யாயினும், பாட்டும் ஆட்டமும் இனிமையாய்இருந்தபடியால் கவனித்துக்கொண்டு நின்றுவிட்டனர். பறை சப்தம் கேட்டு அப்பால் தூரத்தில் தங்கியிருக்கும் சில வர்த்தகரும், தூங்கி விழித்த வீரர்களும்அங்கு வந்து கூடினர். கூட்டம் அதிகப்படவே சிறு

வன் விதம் விதமாய்ப் பாடவும் ஆடவும் தொடங்கினன். சில சமயங்களில் அவனது செயல்கள் பைத்தியக்காரன் செய்கைகளைப்போல் தோன்றின. இதற்குள் தளகர்த்தன் ஒருவன் ஆரவாரத்தைக்கேட்டு அவ்விடம்வர, எல்லோரும் வழிவிலகி அவனை முன்வர விட்டனர். அவனைக்கண்டதும் மகமத் ஆலி பறையைக் கீழே எறிந்துவிட்டு தடியை ஊன்றிக்கொண்டு இரண்டடி முன்வந்து தலைவணங்கி, வயிற்றை இடக்கையால் தட்டி ஏதாவது உணவு வேண்டுமென்று சாடை காட்டினன். பைத்தியக்காரனிடத்தில் மஹமதியருக்கு அதிக மரியாதை. ஆகையால் அந்தத் தளகர்த்தன் ஒரு வீரனைப் பார்த்து "மடைப்பள்ளிக்கு இட்டுக்கொண்டு போய் இவனுக்கு அன்னம் படைக்கச்சொல் எனவே, மகமத் ஆலி சந்தோஷத்தோடு கீழே விழுந்து புரண்டு புரண்டு ஓடிப் பலவிதமாய்க் குதிக்கத்தொடங்கினன். பிறகு அவ்வீரன், கையைப் பிடித்துக் கூட்டிக்கொண்டு போகும் போது, ஆலி தளகர்த்தனைப் பார்த்து, "ஐயா சாப்பிட்டபின் வந்து பாடுகிறேன்! பாடுகிறேன்!" என்று சொல்லி கடகடவென்று சிரித்தான். தளகர்த்தனுக்கு ஒன்றும் தெரியவில்லை. பக்கத்தில் நின்ற மற்றொரு வீரன் விவரிக்க "நல்லது போய் போஜனம் செய்துவா!" என்றான் பர்ஷிய பாஷையில்.

போஜனம் செய்து மகமத் ஆலி வெளியே வருவதற்குள் ஒரு பெரிய கூட்டம் சேர்ந்துவிட்டது. பையனும் அதிக நேரம் போஜனம் செய்யுமிடத்தில் உட்கார்ந்திருக்கவில்லை. வெளியே வந்தவன் கூட்டத்தைக்கண்டு பயந்தவன்போல் கூக்குரலிட்டுக்கொண்டு ஒரு ஓட்டம் பிடித்தான். நொண்டிப்பையன் எவ்வளவு வேகமாய் ஓடுகிறான் என்று பார்த்து எல்லோரும் ஆச்சரியமடைந்தனர். ஓடினவன மறுபடி திரும்பிவந்தான். கையில் வைத்திருந்த பறை இவற்றை எறிந்துவிட்டு கூடாரத்துக்குக் கட்டியிருக்கும் கயிற்றின்பேரில் ஆதரவின்றி ஏறிப்போய் கூடாரத்தின் உச்சியில் உட்கார்ந்தான். எல்லோரும் நகைத்துக் கைகொட்டினார்கள். பின்னும்கடகடவென்றுசிரித்துக்கொண்டு கூடாரத்துணிமேல் படுத்துக்கொண்டு ஒரே உருளாய் உருண்டு கீழே வந்து வீழ்ந்தான். வீழ்ந்த நொடியில் மறுபடி எழுந்து பறையை எடுத்துத் தட்டிக்கொண்டு பாடவாரம்பித்தான். இப்பையனுடைய அற்புதச் செய்கைகளையும் குரங்குக் கூத்துகளையும், நொண்டித்தன்மையையும் பார்த்து அங்கு நின்ற ஜனங்கள் எல்லோரும் ஒருங்கே ஆச்சரியத்தையும் பரிதாபத்தையும் அடைந்தனர்.

பாடுவான் ஒரு நாழிகை; ஓடுவான் மற்றுரிடத்துக்கு! ஏறுவான் மரத்தின்மேல், தாவுவான் கிளைக்குக் கிளை. ஆனால் ஜனங்களுக்கு யாதொருதீங்கும் செய்யமாட்டான் மகமத்ஆலி. உயர்ந்த உத்தியோகஸ்தர்களுக்கும் மந்திரிமார்களுக்கும் இவனுடைய வரவு தெரியவே பொழுதுபோக்குக்காக இவனை அரசன் முன்னிலைக்குக் கூட அழைத்துப் போவார்கள். அரசனும் பைத்தியக்காரனை எம்மட்டில் மரியாதை செய்யவேண்டுமோ, அம்மரியாதையே காட்டினன். ஒருவனாவது இப்பிள்ளை எந்த ஊர், என்ன காரியத்துக்கு வந்தவன் என்று அறிய எண்ணவில்லை. தமாஷ் செய்த காலத்தில் அதைப் பார்த்துவிட்டு தத்தம் காரியத்தில் கண்ணாய் இருந்தனர்.

மகமத்ஆலி இரண்டு மூன்றுதினம் சேனைக் கூட்டத்தில் பழகவே, எங்கே வேண்டுமானாலும் போகவும், எச்சமயத்தில் என்ன வேடிக்கை வேண்டுமானாலும் செய்யவும், அவன் இஷ்டப்படி விட்டுவிட்டனர் காவலாளர்கள். உத்தியோகஸ்தர்கள் பேசிக்கொண்டிருக்குமிடத்துக்கு செல்லுவான். மெல்லப் பாடவாரம்பிப்பான். அவர் கோபித்தால் பறையை எறிந்துவிட்டு விசிறியெடுத்து அவருக்கு விசிறுவான். அவர்கள் சாந்தமாயும் சந்தோஷமாயும் இருந்தால் அவர்களுக்குஇனிமையாய்ப் பாடிக்கொண்டு ஆடுவான். இரவிலும் பகலிலும் அவன் எங்கே போனாலும் தடுப்பவரில்லை.

ஒரு நாள் இரவில் எல்லாரும் தூங்கியபின் நமது பழைய சிப்பாய் மல்லீக் மகமத், காவல் காத்திருக்கும் தலைவாசலுக்குச் சென்றான். சோற்றுமலை போன்ற மல்லீக் மகமதுக்கு இப்பிள்ளையிடத்தில் அதிக இஷ்டம். அவனிடம் ஆலி நொண்டி நொண்டி மெதுவாய்ப் போனதும், மல்லீக் "யார் அங்கே—சொல் உடனே" என்றான். தன் சொந்த பாஷையில் ஆலி "நானய்யா நானே! நானய்யா நானே, வேறில்லை நானய்யா நானே!" என்று பாடத் தொடங்கினன்.

மல்லீக் "அடே பயலே ஏண்டா வந்தே

காலம் போன காலத்தில், மூலம் வந்து குறுகியதுபோல்.

ராத்திரி இருட்டிலே—போ படுத்துக்கோ!" ஆலி "ஐயா தூக்கம் பிடிக்கல்லே எனக்கு; விள்ளாடலாமா ஐயா" என்றான்.

மல்லீக் சற்று சம்மதமாகவே "விளையாட்டா என்னப்பே ராத்திரிலே விளையாட்டு? போ போ!" என்றான்.

இதற்குள் அவன் தலைமேலே 'ஜிஞ்' என்று குதித்து, பதுங்கி இப்புறமும் அப்புறமும் ஓடி விளையாடினான். தூக்கமாட்டாத சதையுடன் மல்லீக் தன்னிடம் வருமுன், இன்னும் அப்பால் ஓடினான். இந்த மாதிரி கொஞ்சதூரம் ஓடிவந்ததும், விரைவில் திரும்பி அங்கிருந்த கூடாரங்களைச் சுற்றிக்கொண்டு தான் முதலில் மல்லீக்கைச் சந்திக்க அங்கு வந்துசேர்ந்தான். ஏழை மல்லிக் தன்னை இன்னும் தூரத்திலேயே தேடிக்கொண்டிருக்கின்றான் என்பதைக் காவல்காரர்களின் நெருப்பு வெளிச்சத்தால் கண்டுகொண்டான். உடனே தன்னெதிரேயுள்ள வனாந்தரவழியில் பறந்தோடினான். மல்லீக் மகமத் தேடித்திரிந்து பின்னால் "பைத்தியக்காரனோடு சாவாசம் செய்யலாமா? போறது கழுதை; எங்கயோ ஔிச்சுக்கொண்டிருக்கட்டும்; வறது நாளைகாலமே" என்று சொல்லிக்கொண்டே தன் இருப்பிடத்துக்கு வந்து காவலில் அமர்ந்தான்.

ஓடிப்போன மகமத் ஆலி உதயபுரிச் சாலையில் 10, 12 நாழிகை வரையில் ஒரே வேகமாய்ச் சென்றான். வழியில் ஓர் குளக்கரையில் முகம் கழுவிக்கொண்டு தலையில் அணிந்திருந்த குல்லாயை எடுத்து, சுருட்டி மறைத்து வைத்திருந்த தன் குடுமியை அவிழ்த்து விட்டான். காலில் கட்டியிருந்த துணியை நீக்கி இரண்டுதரம் காலை உதறிக்கொடுக்கவே கால்கள் இரண்டும் சரியாய் ஆய்விட்டன. இடுப்பைச்சுற்றிக் கட்டியிருந்த ஓர் துணியைத் தலைக்கு உருமாலையாகக் கட்டிக்கொண்டு "ஈசா! இராஜராஜேசுவரீ! மாறுவேஷம் பூண்டு எதிரியிடம் போய் அவர்களுடன் கலந்து ஒற்றறிவது சாமானியமா?—" என்றான். உரக்க "ஆமா" என்றது எதிரொலி; திடுக்கிட்டெழுந்தான். சுற்றுமுற்றும் பார்த்தான். ஒருவருமில்லை. பிரதித்துவனியைக் கேட்டு எங்ஙனம் பயப்பட்டேன்—போகின்றது. இனி நடக்கவேண்டியவற்றை கவனிப்போம். இந்தக்குல்லாயும் நமக்குபகாரம் செய்ததல்லவா? சந்தேகமென்ன? என்னை வேறு மனிதனாகச் செய்துவிட்டதே! மகமத் ஆலி! ஆஹா! மகமத் ஆலி! நல்லபேர், நல்லபேர்—ஏ குல்லாயே பத்திரமாய் இரு" என்று மார்பில் ஔித்து வைத்துக்கொண்டு—"ஆலியாம், அலியுமில்லை, ஆணுமில்லை, பெண்ணுமில்லை என்ன நானும் ஒரு துருக்கன்போல் வேஷம் பூண்டு.........சரி சரி எல்லாம் ஏனையாளும் ஈசன் செயல்! ஈசா எனது தேசத்தைக் காப்பாற்று! ஆரியநாட்டை அழிவில்லாமல் நிலை நிறுத்து" என்றிப்படிக் கடவுளைத் தியானித்துக்கொண்டே இன்னும் இரண்டு நாழிகை வழி நடந்தான். வழியில் தூரத்தில் ஓர் பெரிய ஆலமரம் தென்பட்டது. தான் நின்றவிடத்திலேயே நின்றுகொண்டு நாற்புறமும் பார்த்துக்கொண்டு "குக்கூஉ! குக்கூஉ!! குக்கூஉ!" என்று மூன்றுதரம் கத்தினான். இரவு பதினெட்டு நாழிகை வேளையில் இங்ஙனம் கத்தும் பக்ஷிகளும் உண்டோ! பக்கத்து மரங்களில் உள்ள ஆந்தை கோட்டான்கள் ஓடிவிட்டன. மறுபடி மூன்றுமுறை கத்தினான். சிறிதுநேரம் பொறுத்து "கிரிச்! கிரிச்! கிரிச்!" என்று வௌவால் கத்துவதுபோல் சப்தம் ஆறு தடவை கேட்டது. ஓடினான் மரத்தடிக்கு: மரப்பொந்திலிருந்து ஒருவன் தொப்பென்று குதித்து, "அப்பா நரேந்திரா! வந்தாயா உயிருடன். நேற்று இராத்திரியே வருவாய் என்று எதிர்பார்த்தேன்" என்று ஓடி வந்து அப்பையனைக் கட்டித் தழுவினான்.

உண்மையாகவே மகமத் ஆலியென்று மாறுவேஷம் பூண்டு ஆமத் பாக்ஷாவின் சேனையில்கலந்து எல்லாரோடும் தாராளமாய்ப் பழகி பைத்தியக்காரன்போல் நடித்தவன் நம்ம நரேந்திரனே! சிற்பசாஸ்திரியான முகுந்தன் மகன்! புஷ்பவல்லியின் தம்பி! உதயபுரியில் ஆயுதசாலையில் இராப்பகலாய் வேலை செய்த தேசாபிமானியும் இவனே!

மகமத் ஆலி அதாவது நரேந்திரன் "ஐயா சுலோசனரே! நம்மிஷ்டப்படி யாகிறதா நாம் போகின்ற காரியம். விஷயம் ஒவ்வொன்றையும் கொஞ்சமேனும் தெரிந்துகொள்ள வேண்டுமானால் எத்தனை நாள் கஷ்டப்படவேண்டியிருக்கின்றது! இதோ இக்கடிதத்தை உன் தகப்பனுக்குக் கொடு. இதோ இதை உன் தமக்கைக்குக் கொடு. இவ்விஷயங்களைமந்திரிக்

கும் அரசர்க்கும் தெரியப்படுத்து''என்று எதிரிகளின் சேனை வலிமையையும், அவர்களின் எண்ணத்தையும், அவர்கள் எங்கெங்கே தங்கப்போகிறார்கள் என்பதையும்—இன்னும் பல இரகசியங்களையும் விவரமாய்ச் சொன்னான்.

இந்த சுலோசனனே முன்னால் ஜோதிபுரியிலிருந்து கடிதம் கொண்டுவந்து அதை வழியில் இழந்தவன். பிரதாபசிங் இவனை மன்னித்து ஓர் ஒற்றனாய்த் தன்னிடம் அமர்த்திக் கொண்டான்.

சுலோசனன் "போகின்றது: இந்த வழியிலாவது என்னால் கூடியவரையில் உபகாரம் செய்கின்றேன். நமது அரசனுக்கு என் புத்தியீனத்தினால் அல்லவா வந்தது இத்துணை கஷ்டமும்......"

நரேந்திரன் "இனி அதை யோசித்து என்ன பயன்? வருவன வழித்தங்குமா? வந்தேதீரும்: நீர் உடனே ஊர் நோக்கிப் புறப்படும். நான் உமது இடத்தில் இந்த மரப்பொந்தில் படுத்துத் தூங்குகின்றேன். இன்னும் விடிய 6 நாழிகை இருக்கின்றதல்லவா. அவ்வளவு நேரம் தூங்கினால் போதும் இச்சரீரத்திற்கு!—நாளையதினம் இவ்விடத்திற்கு நான்கு மைல் தூரத்தில் தளம்வந்து இறங்கும் ஞாபகமிருக்கட்டும்—இனி நாம் கலந்து பேசுவது எவ்விடத்தில் தெரியுமல்லவா?—"

சுலோசனன் "தெரியும்! தெரியும்!"

நரேந்திரன் "போய் வாரும்! போய் வாரும்!" என்று சுலோசனனை அனுப்பிவிட்டு கைகூப்பி "என் அப்பனே! ஆக்கல், அழித்தல், காத்தல் ஆகிய முத்தொழிலுக்கும் காரணமாய் நின்றவனே! உன் திருவுள்ளத்தில் என்ன நினைத்திருக்கின்றாயோ-என் தேசத்தைக் காப்பாற்றுவாய்! என் இறைவனைக் காபாற்றுவாய்! உன் ஆணையின்றி அணுவும் அசையாதாகையால் கருணைகூர்ந்து எங்களவரை இரக்ஷிப்பாய்'' என்றிவ்வாறு கண்ணீர் நிலத்தில் சொட்டச்சொட்டத் தியானம் செய்துவிட்டு, தங்களுக்கென்று முன்னமேயே செய்துவைத்துக் கொண்டிருக்கும் மரப்பொந்தில் படுத்துக் கொண்டான். படுக்குமுன் தனது சுருட்டுக் கத்தியை எடுத்துத் தயாராய் முன்வைத்துக்கொண்டான்.

சிறுவர்களுக்கான பக்கங்கள்

CHILDREN'S PAGES

[ஸ்ரீமான் ஜி. ரத்தினம் பிள்ளை அவர்கள், பி. ஏ., எல். டி.]

மகா அலெக்சாந்தர்

ஐரோப்பா கண்டத்தின் தென் திசையில் கிரீஸ் என்ற சிறிய தேசம் ஒன்று உண்டு. அது நமது தேசத்திற்கு வடமேற்கிலிருக்கிறது. அநேக வருஷங்களுக்கு முன், அத்தேசத்தின் ஒரு பாகத்தை பிலிப் என்ற ஒரு அரசர் ஆண்டுவந்தார்.

பிலிப் ஒருசிறந்த போர்வீரர். அநேக யுத்தங்களில் ஜெயித்தவர். அவருக்கு அலெக்சாந்தர் என்ற ஒரு புத்திரனுண்டு.

அலெக்சாந்தர் வெகுபலிஷ்டன். அதிகதைரியமுள்ளவன். எப்போதும் உண்மையே பேசுபவன். எல்லோரிடத்திலும் பட்சமாயிருப்பவன். இவனுக்கு விளையாட்டிலும் வேட்டையிலும் பிரியம் அதிகம். ஆனால் கர்வமும் பிடிவாதமும் இவனிடத்திலுண்டு.

ஒருநாள் காலையில் பிலிப் அரசருக்கு அவருடைய சினேகிதர்களி லொருவர் ஒரு நேர்த்தியான ண்டைக்குதிரை ஒன்றை அனுப்பினார் அதன் தலை எருதின் தலைபோல் இருந்தமையால் அதற்குக் கடாத்தலை என்று பெயர்.

இந்தக் கடாத்தலை எவ்விதம் நடக்கும் ஓடுமென்பதை பரீட்சிக்க அரசரும், அவருடைய சிநேகிதரும், ஒரு பெரிய மைதானத்திற்கு இக்குதிரையை ஓட்டிக்கொண்டு சென்றனர். அலெக்சாந்தரும் அவர்களுடன் போனான். பிராணிகளிடத்தில் அவனுக்கு வாஞ்சை அதிகம்.

இந்தக் குதிரை அதிக மூர்க்கமாகவிருந்தது. தன் முதுகின்மீது யார் ஏறினாலும், அவனை உடனே கீழே தள்ளிவிட்டு, பின்னங்கால்களினால் நின்றுகொண்டு முன்னங்கால்களைத் தூக்கி, பக்கத்தில் நின்றவர்களை உதைத்துமன்னியில் கடிக்கவும் ஆரம்பித்தது. அங்கு நின்றவர்கள் எல்லோரும் பயந்து தூரவிலகி நின்றார்கள்.

அதுகண்ட அலெக்சாந்தர், பிலிப் அரசரைப் பார்த்து, "நான் இக்குதிரையின் மீது ஏறிச் சவாரி செய்கிறேன்" என்று சொன்னான். அதைக்கேட்ட அரசரும் மற்றுமுள்ளவர்க

ளும் நகைத்தனர். "இவர்கள் பட்டபாடு உனக்குத் தெரிந்திருந்தும், நீ இப்படிச் சொல்வது பைத்தியக்காரத்தனம்" என்று அரசர் சொன்னார்.

அதற்கு அலெக்சாந்தர் "என்னால் சவாரி செய்ய முடியும். இவர்களால் முடியாவிட்டால் என்னால் முடியாதா? தாங்கள் சொல்வது எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது. பாருங்கள்! இதோ நான் இந்தக் குதிரையின்மீது ஏறிச் சவாரி செய்கிறேன்" என்று சொல்லிக்கொண்டே குதிரையின் சமீபத்தில் போய் அதைத் திருப்பினான். பிறகு அதைத் தட்டிக்கொடுத்து இனிமையாகப் பேசி, அதன்மீது ஏறினான். குதிரை யாதொன்றுஞ் செய்யாமல் சாதுவாக நின்றது. பிறகு நடக்கச் சொன்னான், நடந்தது. ஓடச்சொன்னான், ஓடிற்று. இதைப் பார்த்தவர்கள் அனைவரும் மூக்கின்மேல் கைவைத்து ஆஹா! இவனல்லவா சமர்த்தன்! என்று ஆச்சரியப்பட்டார்கள். பிலிப் அரசரும் அதிக சந்தோஷமடைந்தார்.

இதற்கு என்ன காரணமென்று ஊகித்துப் பாருங்கள்.

அக்காலம் காலைவேளை என்று முன்னமே சொன்னேமல்லவா? சுமார் எட்டுமணியிருக்கலாம். குதிரை மேற்கு முகமாக நின்றது. சூரியன் அதற்குப் பின்னால் இருந்தபடியால் அக்குதிரையின் நிழல் அதற்கு முன்னால் தோன்றிற்று. அதைக்கண்டு குதிரை மருண்டு சமீபத்தில் வந்தவர்களை உதைத்துக்கடித்தது. தன்மீது ஏறினவர்களை உடனே கீழே தள்ளிற்று. அலெக்சாந்தருக்குக் கூர்மையான பார்வை இருந்தமையால் அதைஅவன் கண்டுபிடித்து, குதிரையை கிழக்குமுகமாகத் திருப்பினான். அப்படி அவன் செய்ததும், தன் நிழல் குதிரைக்கு நேரில் காணப்படவில்லை. குதிரை மருளாமல் சாந்தமாக நின்றது. அலெக்சாந்தர் தைரியத்தையும் சாமர்த்தியத்தையும் மெச்சாதவர்களில்லை. பிலிப் அரசர் அக்குதிரையை அலெக்சாந்தருக்கே வெகுமதி கொடுத்தார். அது இறந்துபோகும் வரையில் அலெக்சாந்தர் அதை விட்டுப்பிரிந்ததேயில்லை. குழந்தையைப்போல் பட்சமாக அதைப் பாதுகாத்து வந்தார். அலெக்சாந்தர் இந்தியாவின் மீது படையெடுத்து வந்தகாலத்தில் அக்குதிரை இறந்துவிட்டது. அதன் ஞாபகார்த்தமாக அலெக்சாந்தர் இந்தியாவில் ஒரு நகரத்தை ஸ்தாபித்து, அந்நகருக்கு இறந்துபோன தன் அருமைக் குதிரையின் பெயரையே வைத்தார்.

பிலிப் அரசர் இறந்துபோக, அலெக்சாந்தர் பட்டத்திற்கு வந்தார். அப்போது அவருக்கு வயது 21. கிரேக்கர்களில் அனேகம் பேர் கலகஞ்செய்தார்கள். இவர்களை உடனே அடக்கி அலெக்சாந்தர் தன் ராஜ்ஜியத்தைப் பலப்படுத்தினார். உலக முழுவதும் ஜெயிக்கவேண்டுமென்ற ஒரு பெரிய எண்ணம் இவருக்கு உண்டாயிற்று. ஒரு பெரிய சேனை சேர்த்துக்கொண்டு கிரீஸ்தேசத்துக்குச் சமீபத்திலுள்ள சின்ன ஆசியாதேசத்தின்மீது படையெடுத்து கார்டியம் என்னும் ஒரு நகரத்தை அடைந்தார். அந்நகரிலுள்ள ஒரு கோவிலில் கெட்டியான முடிச்சு ஒன்று இருந்தது. அதன் கீழ் "இதை யார் அவிழ்க்கிறாரோ அவர் உலகாள்வார்" என்று எழுதப்பட்டிருந்தது. அலெக்சாந்தர் தன்னால் ஆனமட்டும் முயன்றும் அதை அவிழ்க்கமுடியவில்லை. உடனேகோபங்கொண்டு உரையிலிருந்த தன் வாளை உருவி அதை ஒரே வெட்டாய் வெட்டிவிட்டார். ஆகையால்தான் அக்காலத்தில் ஜனங்களுக்குத் தெரிந்திருந்த உலகமுழுவதும் அவர் ஜெயித்துவிட்டார் என்று சிலர் சொல்லுகிறார்கள்.

அலெக்சாந்தரும் டியாஜினிஸும்

அலெக்சாந்தர் ஜெயித்த ஒருநகரத்தில் ஒரு கிழவர் இருந்தார். அவர் நடவடிக்கை, பார்ப்பவர்களுக்கு அதிசயமாயிருந்தது. அவர் ஒரு தொட்டியில் வசித்துவந்தார். அவர் பெயர் டியாஜினிஸ். உலக வாழ்க்கையை வெறுத்து இவ்விதம் வசித்து வந்தார். உண்மையில் பணக்காரர். அவருக்கு சொத்து அதிகம். வீடு, சொத்து, வேலைக்காரர்களில்லாமல் ஒரு மனிதன் சுகமாக விருக்கலாம் என்று உலகத்தாருக்கு காண்பிக்கும்பொருட்டே இவ்விதம் வசித்தார் என்று அநேகம்பேர் சொல்லுகிறார்கள்.

அலெக்சாந்தர், இவர் இருந்த நகரத்தை ஜெயித்தவுடன், நகரத்தார் எல்லோரும்போய் அரசரை வணங்கினர். ஆனால் இவர்மட்டும்

போகவில்லே. 'ஏன் போகவில்லே' என்று இவரை சிலர் கேட்க, அதற்கு அவர் "அலெக்சாந்தர் என்னே வந்து பார்க்கட்டும்" என்று கம்பீரமாகப் பதில் சொன்னார். எல்லோரும், அலெக்சாந்தர் இவர்மீது பெருங்கோபங் கொண்டு இவரைக் கட்டிக்கொண்டு வரும்படி உத்திரவு செய்வாரென்று எதிர்பார்த்தார்கள். அச்சமயம் அலெக்சாந்தர் சந்தோஷமாக விருந்தபடியால் அவ்விதம் செய்யவில்லே. தானே நேரில் டியாஜினிஸ் இருக்கும் இடத்திற்குச் சென்றார். அப்போது காலவேளே, குளிர்காலம். வெயிலில் டியாஜினிஸ் குளிர் காய்ந்து கொண்டிருந்தார். அலெக்சாந்தர் அவருக்குச் சமீபத்தில் வெகுநேரம் நின்றார். டியாஜினிஸ் அவரை நிமிர்ந்து பார்க்கவில்லே.

அலெக்சாந்தர் அவரை நோக்கி "நான் யார் உனக்குத் தெரியுமா?" என்று கேட்டார்.

டியாஜினிஸ்: "நீ யார்."

அலெக்சாந்தர்: "உலகமுழுதும் ஜெயித்த அலெக்சாந்தர்."

டியாஜினிஸ்: "நான் யார் உனக்குத் தெரியுமா?"

அலெக்சாந்தர்: "நீ யார்."

டியாஜினிஸ்: "உலகமுழுதும் வெறுத்த டியாஜினிஸ்."

அலெக்சாந்தர்: "உனக்கு என்ன வேண்டும்."

டியாஜினிஸ்: "வெயிலே மறைக்காதே அப்பால் செல்!"

இதைக்கேட்டதும் அலெக்சாந்தர் புன் சிரிப்போடு தன் இருப்பிடம் சேர்ந்தார்.

ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

LADIES' PAGES

[ஸ்ரீமான் ஸி. ஆர். ஸ்ரீனிவாஸ ஐயங்காரவர்கள், பீ. ஏ.]

2. அனஸூயை

ஆயினும், முதலாவது யுக்தி தவறினல் வேறொரு யுக்தியைச் செய்துபார்க்க அவர்கள் தயாரா யிருந்தார்கள். நிர்வாணமாய்ப் பர புருஷர்களுக்கெதிரில் நின்று அன்னம் போட்டால் பதிவிரதா தர்மத்திற்குக் கேடுவரும். அப்பொழுது தங்களுடைய பத்தினிகளின் கோரிக்கை நிறைவேறும். அப்படிச் செய்யாவிடில் அதிதிபூஜை செய்யாத பாபம் நேரும். அதற்காக அவளேச் சபித்துவிடலாமென்று நினைத்து, இந்த ஆபத்திலிருந்து அவள் ஒரு நாளும் தப்பமாட்டாளென்று அகமகிழ்ந்தார்கள். ஆயினும் யோக பலத்தையும் பதிவிரதா தர்மத்தின் மஹிமையையும் தபஸின்வலிமையையும் அவர்கள் நன்கறியவில்லே போலும்.

அதைக்கேட்டு அனஸூயை, புன்சிரிப்புடன் அத்ரிமஹரிஷியின் கமண்டலத்திலுள்ள ஜலத்தை எடுத்து, அவரைத் தியானித்து, தன்னே மானபங்கம் செய்யவந்த ப்ரஹ்மா விஷ்ணு மஹேச்வரரின்மேல் தெளித்தாள். இருப்புக் கடலேயைப் புஷ்பம்போலச் செய்த அந்த ஜலம், திருமூர்த்திகளே உருவம் மாற்றி, அன்று பிறந்த குழந்தைகளாகச் செய்தது.

அவர்கள் ஆச்சரியத்தால் பிரமித்துப் பயத்தால் திகைத்து வெட்கத்தால்குன்றித் துக்கத்தால் அழுதார்கள். ஸகல வேதங்களுக்கும் நிதியாய், எப்பொழுதும் அவைகளேயே அத்தியயனம் செய்துகொண்டு, அவைகளின் மர்மங்களேயும் ரஹஸ்யங்களேயும் பிரயோகங்களேயும் பூர்ணமாயறிந்த ப்ரஹ்மா, பயங்கரமான அதர்வண மந்திரங்களால் அனஸூயையைச் சாம்பலாய் எரிக்க ஓர் தேவதையை சிருஷ்டிக்க யத்தனஞ் செய்தார். ஆனல் வாயில் பற்களில்லாததாலும், பலவிதமான சப்தங்களே உச்சரிக்கக்கூடிய உறுப்புகள் தகுந்த வளர்ச்சியை அடையாததாலும், மந்திரத்தை உச்சரிப்பதற்குப் பதிலாக தீனமான அழுகையே வெளிப்பட்டது. தன்னல் அவளே யாதொன்றும் செய்ய முடியவில்லே. அபாயத்திலிருந்து தன்னேயும் காப்பாற்றிக்கொள்ள முடியவில்லே.

எப்படியாவது இந்தக் கோரமான ஸ்திதியிலிருந்து தப்பித் தன்னிடத்திற்கு க்ஷேமமாய்ப் போய்த்தன் பார்யையைப்பார்க்கமுடியுமா? அப்பொழுதும் அவளிடத்தில்செய்த பிரதிஞையை நிறைவேற்றாமல், வீண்பெருமையை சாதிக்காமல்,அவளுடைய வெறுப்பையும் நிஷ்டூரமான வார்த்தைகளையும் கேலியையும் பொறுப்பதெப்படி" யென்று நினைக்க நினைக்க வெட்கத்தால் உடம்பு குன்றிற்று. இந்த மஹா பிரயத்னத்தில் தனக்கு ஸஹாயமாய் வந்த விஷ்ணுவையும் ருத்ரனையும் கண்ணெடுத்துப்பார்க்க முடியாமல் வெட்கத்தால் கண்களை மூடிக்கொண்டார். "சகல லோகங்களையும் சிருஷ்டிக்கும் நம்மையே இவள் அலக்ஷ்யமாய் இப்படிக் குழந்தையாய் சிருஷ்டித்து அபாரமான சக்திகளை அடக்கி, பாம்புப்பிடாரன் கிருஷ்ண ஸர்ப்பத்தை மந்திரத்தால் தடை கட்டுவதைப்போல் அடக்கி ஒடுக்கினாளே! இனி என்ன செய்ய நினைத்திருக்கிறாளோ! நான் கொண்ட கெட்ட எண்ணத்திற்கு எந்த தண்டனையும்தகும்.என் மனைவியென்ற மிருத்யு தேவதையின் வார்த்தைக்கிணங்கி ஒரு மகாபதிவ்ரதையின் கற்பைச் சோதிக்க வந்த எனக்கு இது போதாது. ஸரஸ்வதியின் மாங்கல்ய பலம் சரியாயிருந்தால் உயிருடன் மறுபடியும் ஸத்யலோகம் போய்ச் சேரலா"மென்று இவ்விதமாய் தனக்குள்ளேயே எண்ணிக்கொண்டிருந்தார்.

ஸகல லோக ரக்ஷகனும், க்ஷீராப்தியில் ஆதிசேஷன்மேல் யோக நித்திரை செய்கிறவரும், தைத்ய தானவ ராக்ஷஸர்களுக்குக் காலனும், ஜீவகோடிகளை ஸகல ஆபத்துகளிலிருந்து விடுவிக்கிறவருமான வைகுண்டநாதன், தன்னை இப்படி அவமானம் செய்தவுடன் கோபம் மூண்டு, அனஸூயையை சாம்பலாய் எரிக்கவெண்ணி ஸுதர்சனமென்ற கால சக்கரத்தை நினைத்தார். ஆனால், அவருடைய குழந்தைக் கைகள் அதைத் தாங்க முடியவில்லை. மற்ற ஆயுதங்களைத் தொடுவதற்கும் சக்தியில்லை. பதினான்கு லோகங்களின் எண்ணிறந்த சராசர வஸ்துக்களைக் காப்பாற்ற வந்தவருக்குத் தன்னைக் கேவலம் ஓர் ஸ்திரீயினிடத்திலிருந்து காப்பாற்றிக்கொள்ள முடியாமல் போனதை நினைத்து நினைத்து, கோபத்தால் கண்களிலிருந்து தீபச்சுடரைப்போல் நீர்த்துளிகள் விழுந்தன. எவளுடைய கடைக்கண் பார்வையைப் பெற்றுக்கிருபைக்குப்பாத்திரமாய்க்கோடீச்வரர்களாயும், ஸந்தான ஸம்பத்து ஸௌபாக்யம் முதலியவைகளில் நிகரற்றவர்களாயும், லோக பாலர்களாயும், ராஜாதிராஜர்களாயும், கீர்த்திமான்களாயும் விளங்குகிறார்களோ,அந்த மஹாலக்ஷ்மியே அனஸூயையை மாங்கல்யபிக்ஷை கொடுக்கும்படி யாசித்துத் தன்னை உயிருடன் மீட்டுக்கொண்டுப்போக வேண்டியிருக்குமோ வென்று நினைத்து நினைத்து வெட்கத்தால் குன்றினார். திருமூர்த்திகளுக்குள் புத்தியிலும் யுக்தியிலும் உபாயத்திலும் மேலானவராய் மற்ற இருவர்களை ஆபத்துகளிலிருந்து நீக்குகிறவர்களாய்க் கர்வங்கொண்ட விஷ்ணு, அப்பொழுது அவர்களைப் பார்க்க வெட்கமடைந்து, கண்களை மூடிக்கொண்டார்.

தன் நெற்றிக் கண்ணால் ஒரு க்ஷணத்தில் திரிபுராஸுரர்களைச் சாம்பலாய் எரித்தவரும், பார்க்கப் பயங்கரமான மஹா கால பைரவ மூர்த்தியாய் இந்தப் பிரபஞ்சம் அழிந்து பிரளயம் மேலிட்டபொழுது அந்த மஹா ச்மசானத்தில் பத்ரகாளியுடன் மஹா தாண்டவஞ் செய்கிறவருமான காலாக்னி ருத்ரன்,கோபத்தால் மெய்மறந்து,தன்னையும்சபிக்கத்துணிந்து இப்படி அவமானஞ் செய்த அனஸூயையை இருந்தவிடந்தெரியாமல் அழித்துவிடுவதற்காக, தன் பூர்ணசக்தியுடன் நெற்றிக் கண்ணைத் திறந்து பார்த்தார். ஆனால், அனஸூயையின் முகத்தில் விளங்கும்சாந்தியாலும் அவளுடைய நேத்திரங்களிலிருந்து பெருகும் கிருபையென்ற அமிருத தாரைகளாலும், அந்தக் கோபாக்கினி அணைந்து அழிந்துபோயிற்று. ஸகலத்தையும் ஸம்ஹாரஞ் செய்யும் தான் ஒருஸ்திரீயால் கைகால்களை அசைக்கவும் வாயைத் திறக்கவும் முடியாமல் செய்யப்பட்டதைப்பற்றி நினைத்துப் பெருமூச்சு விட்டார். காலனுக்கும் காலனென்ற தனக்கும் காலரூபமாய்எங்கேஅனஸூயைநேருவாளோவென்று அவருக்குத் திகிலுண்டாயிற்று. காமனை எரித்த கண்ணும்,திரிபுரர்களை ஸம்ஹரித்த நேத்ராக்னியும்,காலனையுதைத்த காலும், கேவலம் ஒரு மனுஷ்ய ஸ்திரீயின் பதிவ்ரதா மஹிமையால் செயலற்றனவேயென்று வியந்தார்.

அனஸூயை இவர்களுடைய மனவில் தத்தளித்துக்கொண் டிருக்கும் எண்ணங்களை

உள்ளங்கை நெல்லிக்கனிபோல் நன்குயறிந்து, "இவர்களுக்குஇன்னும்சாந்திஉண்டாகவில்லை தங்களுடைய நிலைமையையும் எல்லையையும் தெரிந்து கொள்ளவில்லை. இன்னும் சிலகாலம் வரையில் இவர்களை இதே ஸ்திதியில் வைத்தாலாவது புத்திவராதா''வென்று சாபவிமோசனம் செய்யாமலிருந்தாள்.

இதற்குள் அத்ரி மஹர்ஷி வெளியிலிருந்து வந்து குழந்தைகளின் அழுகையைக் கேட்டு, அவைகளை உற்றுப் பார்த்து, ஞானதிருஷ்டியால் நடந்த விருத்தாந்தத்தை யறிந்து, புன்சிரிப்புடன் "அனஸூயே! தெய்வானுக்ரஹத்தால், நமக்கு புத்ரபாக்கியம் கிடைத்திருக்கிறது. ஆனாலும், இந்தக் குழந்தைகள் நமது குடிசையில் பிறந்து வளரத் தகுந்தவர்களல்லவே! மிகுந்த சாக்கிரதையுடன் இவர்களைப் போஷிக்கக் கடவா''யென்று ஆக்ஞாபித்தார்.

இப்படியிருக்க, இதற்கெல்லாம் காரணமான நாரத மஹரிஷி இதையறிந்து, ஒரு நாள் லோகஸஞ்சாரம் செய்துகொண்டு அகஸ்மாத்தாய் அங்கே வருகிறவரைப்போல், அத்ரியின் ஆச்ரமத்திற்கு வந்தார். "மஹர்ஷே, இதென்ன? வீட்டில் கல்யாண பரம்பரையாயிருக்கிறது. லோகத்தில் இரட்டைக் குழந்தைகள் பிறப்பதே அபூர்வம். தங்களுக்கும் அனஸூயைக்கும் அங்கம் தளர்ந்து வயஸ் முதிர்ந்து கிழத்தனம் மேலிட்டகாலத்தில் மூன்று குழந்தைகள் ஒரே தடவையில் பிறக்கும்படியான என்ன பாக்கியத்தைச் செய்தீரோ? இவர்களென்ன ஸாதாரணக் குழந்தைகளா? இதோ இந்தக் குழந்தையைப்பார்த்தால் ஸகல லௌகிக வைதிக ஞானத்திற்கும் கலைகளுக்கும் அதிஷ்டமான தேவதையான ஸரஸ்வதியேஇவனுக்குப் பணிவிடைசெய்யப் பெறும் பார்யையென்றே சொல்லலாம். இதோ நடுவிலிருக்கும் குழந்தை ஸர்வோத்தமனான ராஜலக்ஷணங்களுடன் விளங்கி, ஸகல லோகங்களையும் அடக்கியாளும் திறமையை உடையவனென்று பார்த்தவுடனேயே தெரியவில்லையா? மேலும்,வீரலக்ஷ்மி ஜெயலக்ஷ்மி தனலக்ஷ்மி முதலிய அஷ்டலக்ஷ்மிகளும்இவனுக்குப்பணிவிடை செய்து இவனை அண்டினவர்களுக்கு அடிமைக்கடிமையாய்த் தொண்டு செய்வார்களென்று சொல்லக் கூடியதாய், கருணைக் கடலாய் விளங்கும் கம்பீரமான பார்வையே இதற்குப் பிரமாணமல்லவா? இதோ எனக்கு ஸமீபத்திலிருக்கிற குழந்தையின் முகத்தில் ஜ்வலிக்கும் கடுமையான தேஜஸையும் அவனுடைய பார்வையின் தைரியத்தையும் கவனித்தால், இவன் பிறரால் நினைப்பதற்கரிய விரதங்களையும் நியமங்களையும் அனுஷ்டானங்களையும்யோகமுறைகளையும் அப்யஸித்து அனுஷ்டித்து, மகாயோகியாய்,ஆதி குருவாய், கேவலம் தக்ஷிணாமூர்த்தியைப்போல் லோகாசாரியராய் விளங்குவானென்பதில் ஸந்தேகமுண்டோ? நவநிதிகளும் அணிமா முதலிய எட்டு ஸித்திகளும்ஸாலோக்யம்முதலிய நான்குவித முக்திகளும் இவன் கொடுத்த பிக்ஷையாகும். மஹர்ஷே! நீர் பாக்யசாலியே! கேவலம் திருமூர்த்திகளே உமது பக்திக்கு வசப்பட்டு உம்மை அநுக்ரஹிப்பதற்காக உமக்குக் குழந்தைகளாய் வந்தார்களென்றே நினைக்கிறேன். இனி நான் விரும்பவேண்டிய விஷயம் ஒன்றே. காலாகாலத்தில் இவர்களுக்குத் தகுந்த பார்யைகளை விவாஹஞ்செய்து ஸரஸ்வதி, லக்ஷ்மி, பார்வதியென்ற லோகமாதாக்களைப்போல் அந்த மூன்று நாட்டுப் பெண்களும் அநஸூயைக்கு ஒத்தாசை செய்வதை நான் பார்த்து மகிழ்வதைத் தவிர வேறில்லை'' யென்று அத்ரிமஹர்ஷிக்கும்அவருடைய பார்யைக்கும் ஸ்தோத்திரம்போலவும் இதையெல்லாம்கேட்டுக்கொண்டிருந்த திருமூர்த்திகளுக்குக் கோபமும் வெட்கமும் அவமானமும் உண்டாகும்படிக்கும் மர்மமான வார்த்தைகளைச் சொன்னார். "நமது கர்வம் குறைந்து சபதம் வீணாய், இறகொடிந்த பக்ஷிகளைப்போல் கிடப்பதை இவன் பார்த்து பரிஹாஸஞ் செய்கிறானே. உடனே நமது பார்யைகளிடத்தில் போய்ச் சொல்வானே. அவர்களும் இங்கே வந்து பார்க்கும்படியான தலைவிதி நமக்கு நேருமோ தெரியவில்லையே. அதற்குமுன் அனஸூயைக்குக் கிருபை வராதா'' என்று அவர்கள்பிரார்த்தித்துக்கொண்டிருக்க ப்ரஹ்ம புத்திரனான நாரதர், மஹதீ என்ற வீணையை வாசித்துக்கொண்டு அதற்கனுகுணமாய் பரம புருஷனுடைய அநந்த கல்யாண குணங்களைப் பாடிக்கொண்டு புறப்பட்டார். ஸத்யலோக வைகுண்ட கைலாஸங்களில் திருமூர்த்திகளின் பார்யைகள் தங்களுடைய கணவர்கள் காணாமல்போன காரியம் என்னமாய்

முடிந்ததோ என்று கவலைகொண்டு தன் பர்த்தாவிற்கு ஏதாவது கெடுதி நேர்ந்தால் மற்றவளே அந்தப் பழிக்கு ஆளாகவேண்டுமென்று ஒருவரையொருவர் ஏசிக்கொண்டார்கள். இப்படி வெகு காலஞ் சென்றது. அத்ரி மஹரிஷி தன் தபோமஹிமையால் ஸகலலோகங்களிலும் திருமூர்த்திகளின் காரியங்களைக் குறைவற நடத்திவந்தார். ஒரு நாள் நாரதர் மறுபடியும் ஸத்யலோகத்திற்குச் சென்று ஸரஸ்வதியை நமஸ்கரித்து "அம்மா என்பிதாவிடத்தில் ஓர்முக்கியமான காரியத்தை உத்தேசித்து வந்திருக்கிறேன். காலதாமதம் செய்ய முடியாது. அவர் எங்கே"யென வாணிதேவி "குழந்தாய் அன்று உன்சொல்லைக் கேட்காமல் கர்வத்தால் மதிமயங்கி அனஸூயையின் பதிவ்ரதாமஹிமையை குலைத்துவரும்படிநிர்ப்பந்தித்து என் பிராணநாதனை அனுப்பினேன். அதற்குப் பிறகு நடந்த விஷயம் யாதொன்றும் நமக்குத்தெரியவில்லை" என்று கண்ணீர்விட்டு அழுதாள். நாரதர் அவளுக்கு புத்தி கல்பிக்க விரும்பி ஆறுதல் சொல்லுகிறவரைப்போல் "அம்மணீ நான் எம்மாத்திரம்? என் வார்த்தையைத் தாங்கள் ஒருபொருட்டாய் எண்ண வேண்டுமா? அதிருக்கட்டும். ஒருவேளை வைகுண்டவிலாஸங்களில் ஏதாவது ஸமாசாரம் கிடைத்திருக்கிறதோ பார்ப்போமென்று ஸரஸ்வதியுடன் வைகுண்டத்திற்கும் கைலைக்கும் சென்று பார்க்கையில், அங்கும் இதேரீதியாயிருக்கக்கண்டார். அப்பொழுது அவர்களில் லோகஞானத்தில் முதிர்ந்த லக்ஷ்மீ, சற்று யோஜித்து கோபமும் வியப்பும் விளங்கும் புன்னகையுடன் "நாரத எங்கள் மூவரையும், எங்களுக்குப் பதியான மூவரையும் ஏமாற்றிப் பறக்கவிட்டாயே. எங்களுடைய குறைகளை நாங்கள் அறியாமலிருக்க, அவைகளை நீக்க வேண்டுமென்று கவலைகொண்டு பரம விச்வாஸத்துடன் நாங்கள் உனக்குப் பெற்றிருக்கும் சம்பந்தத்தை உத்தேசித்து நேரில் புத்தி சொல்லி திருத்தாமல் இவ்விதமாய் எந்நாளும் எங்களுக்கு தன்னடக்கமும், தன் மதிப்பும், விநயமும் குடிகொள்ளும் வண்ணம் இந்த சூழ்ச்சியைச் செய்தாயே. இதெல்லாம் உன் விளையாட்டே"என்றுநாரதனைக்கடிந்துகொண்டார்கள். மற்ற இருவரும் "ஓஹோ? இதுவரையில் புத்திமோசம் போனோமே.நமது நாரதனா நம்மை இவ்வளவு பாடுபடுத்தினான். போனதெல்லாம் போகட்டும். நாரதா, எங்களுடைய நாயகர்கள் க்ஷேமமாய் எங்களிடத்தில் வந்து சேர்ந்தால் போதும். அதற்கேற்றஉபாயத்தைச் சொல். உன்னிடத்தில் யாதொரு குற்றத்தையும்காட்டுவதில்லை,உன்னைக் கோபிப்பதில்லை. என்று தீனமாய் மனதுருகும்படி வேண்டினார்கள். அதற்கு நாரதர் "இதென்ன கஷ்டகாலம், 'பிச்சைக்குவந்த பிராமணா என் பெருங்காயச் சிமிழைக் கொண்டுவா' என்றது போல் நான் தெய்வமேயென்று ஒருபாபத்தையுமறியாமல் ஏதோ லோகவிருத்தாந்தத்தைச் சொல்லப்போய் இந்த வீண்பழிக்கு ஆளானேனே. நான் ஒரு பாபத்தையுமறியேன். உங்களை வீண்பெருமை சொல்லிக் கொள்ளவும், வீண் பிடிவாதம் பிடிக்கவும் தூண்டிவிட்டது நானா? உங்களுடைய பர்த்தாக்களை ஒரு நிமிஷங்கூட ஓய்வில்லாமல் உபத்திரவப்படுத்திச் சித்திரவதை செய்து வீட்டிலிருந்து துறத்தினது நானா? அவர்கள்இங்கே ஹிம்ஸை பொறுக்காமல் ஓடிப்போனார்களோ அல்லது அநஸூயையை பரீக்ஷிக்கப்போய் 'கரடிவேண்டாம் கையைவிட்டால்போதும்'மென்று எங்கே மாட்டிக்கொண்டு பறக்கிறார்களோ? போன காரியம் சரியாய் முடிந்தால் இதுவரை இங்கே வராமலிருப்பார்களா? கெட்ட விடத்திலேயே தேடவேண்டு மென்பதுபோல் அவர்கள் போயிருக்கும் அத்ரிமஹர்ஷியின் ஆசிரமத்திலேயே விசாரிக்கவேண்டும். ஆனால் அதுவும் முடியாதென்று எண்ணுகிறேன். தன்னுடைய பதிவிரதா மஹிமையைப் பரீக்ஷிக்கவந்த புருஷர்களை இப்படிப் படுத்தின அந்த ரிஷிபத்னி இதெற்கெல்லாம் காரணமான உங்களைக் கண்டால் என்ன நேருமோ? புருஷர்களுக்குள் உண்டாகும் கோபதாபங்களையும் ரோஷத்தையுங்காட்டிலும் ஸ்திரீகளுக்குள் இவை கோடி மடங்கு அதிகமல்லவா? மேலும் அவள் பொறுமையோடிருப்பாளென்று வைத்துக் கொண்டாலும். ஸகல லோகங்களுக்கும் ஸிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரகாரியங்களைச் செய்யும் திருமூர்த்திகளின்பார்யைகளான நீங்கள் ஸத்யலோக, வைகுண்ட, கைலாஸங்களை விட்டு பூலோகத்திற்குப் போய் கேவலம் ஒருமனுஷ்ய ஸ்திரீயை, நீங்கள் அலக்ஷியம் செய்து கேலி பண்ணினஓர்ரிஷிபத்னியைப் பார்ப்பதுதகுமா?

காலைப் பிடித்த சனியன் ஊரைச்சுற்றி யடிக்கும்.

பிரபஞ்ச வர்த்தமானம்

NEWS & NOTES

கம்பளத் தொழில்.

பம்பாய் வாசிகளான இந்தியரால், மூன்று கம்பளத் தொழிற்சாலைகள் புதிதாக ஏற்பட்டு நடக்கப்படுமென்பதை சந்தோஷத்துடன் குறிப்பிடுகிறோம். நாளது வரையில், இத்தேசத்திலுள்ள கம்பளத் தொழிற்சாலைகள் நான்கே. அவை ஐரோப்பியரால் நடத்தப்படுவனவாகும். ஸ்தாபிக்கப்படப் போகும் புதிய சாலைகளை எந்நகரில் வைத்து நடத்துவதென்று இன்னும் திட்டமாய்த் தெரியவில்லையென்றே தோன்றுகிறது. மூலப்பொருளான ஆட்டு ரோமம் ஏராளமாய்க் கிடைக்கும் இடத்திற்கு அருகாமையிலும், இதர சாதனங்கள் பலவும் நிறைந்துள்ள இடத்திலும் அச்சாலைகள் ஏற்படவேண்டுமென்பதைப் பலரும் அங்கீகரிப்பார்கள்.

* * *

ஏழைகளுக்கு வாசவசதிகள்

பம்பாய் நகரில்,போரா சமூகத்தைச்சேர்ந்த சில பிரபல வியாபாரிகள், அங்குள்ள நடுத்தர வகுப்பினருக்கும், ஏழைகளுக்கும் கட்டடம் கட்டிக் கொடுப்பதற்காக இரண்டு கோடி ரூபாய் மூலதனத்துடன் ஒரு புதிய கம்பெனியை ஸ்தாபிக்கப் போகிறார்களெனக் கேட்டுச் சந்தோஷிக்கிறோம்.

* * *

பிள்ளைகள், பெண்கள் இவர்களின் கல்விச்செலவு

1917—18ல், இந்தியாவில், பிள்ளைகளின் கல்வியபிவிருத்திக்காக நேர்ந்த மொத்தச் செலவு ரூ. 7,35,21,383, என்றும், பெண்களின் கல்வியபிருத்திக்காக நேர்ந்தமொத்தச் செலவு ரூ. 1,01,47 168 என்றும் தெரிகிறது. பெண் கல்விக்காகச் செலவிடப் பட்டிருக்கும் தொகை, பிள்ளைகள் படிப்புக்காகச் செலவிடப்படும் தொகையில் ஏழில் ஒருபங்குக்குக் குறைவாகவே யிருக்கிறது.

* * *

தற்காலம் இந்தியாவில் எருதுகளைக் கொண்டே உழுது பயிர் செய்விக்கப் படுகிறது.

நூதன முறையில் விவசாயம்

அவைகளை இம்சிக்காமல் இயந்திர மூலம் உழுது பயிர் செய்து பரிசோதனார்த்தமாக கோயம்புத்தூர் விவசாய கலாசாலையில் நடத்திக் காண்பிக்கப்படும்.

* * *

மின்சார சக்திக்காக மைசூர் கவர்ன்மெண்டின் ஏற்பாடு

கோலார் தங்கச் சுரங்கங்களுக்கு, மின்சார சக்தி இப்போதைவிட அதிகமாய் வேண்டியிருப்பதாலும், மைசூர் பெங்களூர் ஆகிய நகரங்களின் தொழிலபிவிருத்திக்காக ஏராளமான மின்சார சக்தி அவசியமாயிருப்பதுபற்றியும், காவிரி நதியின் வீழ்ச்சிக்குப் பக்கத்திலுள்ள மின்சாரத் தேக்கத்தைப் பெரிதாக்க உத்தேசித்து, மைசூர் கவர்ன்மெண்டார் 32 லக்ஷம் ரூபாய் சாங்கிஷன் செய்திருப்பதைப் பாராட்டுகிறோம்.

* * *

வங்காளத் தொழில்கள்

யுத்தங்காரணமாக, வங்காளத் தொழில்கள் பலவும் ஓரளவு செழித்திருக்கின்றவென்று அறிய நமது நண்பர்கள் சந்தோஷப்படுவார்கள். அங்கே குடிசைத் தொழில்கள் மட்டும் பத்துலக்ஷம் பேருக்கு ஜீவனத்தைக் கொடுத்து வருகின்றன. தேயிலைத் தொழில், சர்க்கரைத் தொழில், நெசவுத் தொழில், பொத்தான் செய்யும் தொழில் முதலிய பல தொழில்களிலும் ஆயிரக்கணக்கான பேருக்கு ஜீவனோபாயம் கிடைத்துவருகிறது. இக்கைத்தொழில்களின் அபிவிருத்திக்கு,மேனாடுகளும் பிறவும் யுத்தத்தில் மும்முரமாயிருந்ததனால் வியாபாரப் போட்டி ஏற்படாததே முக்கிய காரணமாகும். யுத்தம் நின்று விட்டதால், இனிப் போட்டி அதிகமாயிருக்கும். ஜனங்கள் மட்டுமேயில்லாமல், கவர்ன்மெண்டாரும் தக்க சிரத்தை காட்டினால் இப்போட்டியிலிருந்து எதிர்த்து நிற்கலாம்.

நமது வெளிநாட்டுச் சந்தாதார்க்கு

சந்தா பாக்கியை அனுப்புமாறு பலமுறை எழுதியும் சந்தாதார்கள் கவனிக்காதது நமக்கு மிகுந்த சிரமத்தைக் கொடுக்கிறது. நம் நேயர்கள் இதைக் கவனிப்பாராக.



கனம் மிஸ்டர் ஆர். லிடில்ஹேல்ஸ்.
சென்னை கல்வி இலாகாத் தலைவர்.

The Hon'ble Mr. R. LITTLEHAILES.
Director of Public Instruction, Madras.

விவேகபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்.

தொகுதி XII } சித்தார்த்தி௵ புரட்டாசி௴ :: 1919-௵ அக்டோபர்௴ { பகுதி 4

கம்பராமாயணத் திரட்டு

SELECTIONS FROM KAMBA RAMAYANA

மான மீது மடந்தையைக் கொண்டனன்
போன போது புகுந்த சடாயுவை
ஈன மாக்கித்தா னேறிய தேர்விடா
மீன வேலை யிலங்கையை மேவினான்.

மன்னி ராகவன் றம்பியை வந்தவா
றென்னை யென்ன வியன்றதுரை செய்தான்
பன்ன சாலையிற் பாவையை நாடிப்போய்
முன்னர் வீழ்ந்த சடாயுவை முன்னினார்.

இறந்தவெரு வைக்கரசை யீமவெரி யேற்றி
முறஞ்செவி யயோமுகியை மூக்கினை யரிந்து
மறந்தரு கவந்தனையும் வானினிடை வைத்திட்
டறந்திகழ் தருஞ்சவரி யாச்சிரம முற்றார்.

மிக்கசவ ரிக்கினிய வீடருளி விட்டுப்
பக்கமது மிக்கமலர் பம்பையது கண்ணுற்
றக்கண மகன்றநு மனுமென வுரைப்பச்
சுக்கிரிப னைத்துணை யெனத்தொடர்வு கொண்டான்.

மந்தர மெனத்திகழ் மராமரம தெய்தே
துந்துபி களேபர மதைச்சுவ டறுத்தி
இந்திரன் மகற்கிமய லோகமரு ளித்தன்
அந்த முடை வாளவன் மகன்பெற வளித்தான்.

சுக்கிரி பனுக்குரிய தொன்முடி கவித்தே
மிக்கதிறல் வானரர்கண் மேவவரு வித்தே
கக்குமுகின் மிக்கமழைக் காலம தகன்றால்
இக்கண்வரு வாயென விராகவன் விடுத்தான்.

சுந்தரனு மத்துணை துயர்க்கடலு ளாழ்ந்தான்
இந்திரன் மகற்குரிய செய்தின னிருந்தான்
வந்தில னருக்கன்மகன் மாரிகழி வுற்றும்
தந்தனை யெனக்கடிது தம்பியை விடுத்தான்.

மற்றவ னழைத்தருள மாருதியு மேனைக்
கொற்றவனும் வந்தன ரிராமனடி கூடி
எற்றது செயக்கடவ தென்றன ரிருந்தார்
மற்றிழையை நாடவிடு மென்றிறை மொழிந்தான்.

அன்றநும னங்கத னறிந்தருள்செய் சாம்பன்
என்றவர்க டம்முட னிரண்டுகவி வெள்ளம்
சென்றனர்க டென்றிசையி னிற்கடிது சில்லோர்
பொன்றலில் பிலத்திடை புகுந்தனர் பெயர்ந்தார்.

குன்றமு நதிகளுங் குழைந்த கானகமும்
தென்றிசை யெங்கணுந் தேடிக் காண்கிலர்
இன்றுயிர் விடுவதே நன்றென் றியாவரும்
மன்றல்சேர் மயேந்திர. வரையை மேவினார்.

இறைவியாண் டிருந்தவா றெருவை வேந்தனும்
முறைமையால் வந்தவா மொழியக் கேட்டபின்
அறைகழ லநுமனு மரக்கி வாய்பிளந்
தெறிகடல் கடந்துபோ யிலங்கை யெய்தினான்.

எரிவிழி யிலங்கைமா தேவி தான்கெடக்
கருநிற வரக்கர்தங் கனக மாளிகைத்
தெரிவையை யெங்கணுந் தேடிக் காண்கிலான்
அரிமலர்ச் சோலைகண் டாழி காட்டினான்.

மானவ னறிந்தருண் மதுர மாமணி
சானகி யளித்தனள் விடையுந் தந்தபின்
யானிவண் வந்துவீ ணேக றீதெனப்
போனமா மாருதி பொழிலை வாட்டினான்.

காட்டொரு வானரங் கடிகொள் சேனையை
வாட்டின தென்றுகா வலர்சென் றோதலும்
கேட்டனன் றசமுகன் கிளர்ந்த சேனையை
மூட்டின னதனெதி ரநுமன் முன்னினான்.

தொக்கரக் கரைத்துரந்து தோரணத் திருந்துபோய்
அக்கனைத் தரைப்படுத் திரத்த மிக்கெழத்
தக்க சம்புமாலியைத் தரைப்படுத்தி வெற்றிசேர்
பக்கநின்ற பஞ்சசேனை மன்னரைப் படுத்தினான்.

மேகநாதன் வந்தெதிர்த்து வேதநான் முகன்றரும்
நாகபாசம் வீசி ஞான நாதனைக் கொணர்ந்துதம்
ஓகைவாளி ராவணற்குரைத்தலும் முருத்தெழா
ஏகவாலி னங்கியிட் டெரித்தியென் றியம்பினான்.

வாலின்வைத்ததீயை மாடமாளிகைக்கண்வைத்தபின்
சாலவந்து சீதையைப் பணிந்துசா கரந்தனைக்
காலினேகி வந்துதங் கவிக்குலத்து வீரராம்
வேலைசூழ வேலிராமன் விட்டசோலை கிட்டினான்.

கால் ஆடக் கோல் ஆடும், கோல் ஆடக் குரங்கு ஆடும்.

விவேக போதினி

தொ. 12] சித்தார்த்தி௵ புரட்டாசி௴ [ப. 4

யுதிஷ்டிரர்

YUDHISHTIRA

அங்கே ஒருநாள் நாரத மஹரிஷி வந்து பாண்டவர்களால் உபசரிக்கப்பெற்று, தர்மபுத்திருடைய வேண்டுகோளின்படி லோக பாலர்களின் ஸபைகளையும் பிரஹ்ம ஸதஸ்ஸையும் வர்ணித்து, ஹரிச்சந்திரன் ராஜஸூய யாகம் செய்து அதனா லடைந்த மேன்மையையும் செல்வத்தையும் எடுத்துரைத்துக் கொண்டாடி "யுதிஷ்டிரா! நீயும் அதைப் போன்ற ராஜஸூயத்தைச் செய்து, நிகரற்ற கீர்த்தியை அடைவாய். உன் தந்தையான பாண்டு, ஹரிச்சந்திரனுடைய மேன்மையைக் கண்டு வியப்புற்று, நான் இவ்வுலகிற்கு வருவதை யறிந்து "பரத சிரேஷ்டா! நீ ஒருவனாகவே இந்த பூமி முழுவதையும் ஜயிக்க வல்லவனா யிருக்கிறாய். உன் தம்பிமார்கள் ஒவ்வொருவரும் பலபராக்கிரமங்களில் லோகபாலர்களை மிஞ்சினவர்கள்; உன்னிடத்தில் பக்தியும் அன்பும் வைத்தவர்கள்; யாகங்களில் சிறந்த ராஜஸூயத்தை நீ செய்து முடித்தால் நிகரற்ற மேன்மையடைவாய். நானும் அந்தப் புண்ணியத்தால் இந்திரலோகத்திற்குச் சென்று அவனுடைய ஸபையில் ஹரிச்சந்திரனுடன் வெகு காலம் வரையில் விளங்கிக்கொண்டிருப்பேனெ"ன்று உன்னிடத்தில் சொல்லச் சொன்னார். இப்பெரிய காரியத்தைத் தடுப்பதற்கும் கெடுப்பதற்கும் பிரஹ்ம ராக்ஷஸர்களும் பகைவர்களும், ஸமயம் தேடிக்கொண் டிருப்பார்கள். யுத்தங்கள் நேரும். இவ்விதமான இடையூறுகளை அகற்றுவதற்கு உன் தம்பிமார் இருக்கையில், நீ கவலைப்படவேண்டிய தென்ன" வென்றார். தர்மபுத்திரர் "தங்கள் உத்தரவுப் படியே செய்கிறே"னென்று தன் தம்பிகளோடும் மந்திரிகளோடும் கிருஷ்ணனோடும் நன்றாய் ஆலோசித்தார். ஜராஸந்தன் முதலிய பகைவர் இருக்கையில் ராஜஸூயத்தைச் செய்து முடிப்பது ஸாத்யமல்லவென்று கண்ணன் சொல்லக் கேட்டு, பீமார்ச்சுனர்களையும் வாஸுதேவரையும் மகததேசத்திற்கு அனுப்பிப் பீமனால் ஜராஸந்தனைக் கொல்லுவித்து, அவனால் சிறையி லடைக்கப்பட்ட மன்னர்களைத் தனக்குச் சிற்றரசர்களாய்ச் செய்து கொண்டார். பிறகு பீமார்ஜுன நகுல ஸகதேவர்கள் நான்கு திக்குகளிலும் சென்று, அங்குள்ள மன்னர்களை ஜயித்து ஸமாதானஞ் செய்து தர்மபுத்திரருக்குக் கப்பங்கட்டும்படி, உட்படுத்தி, ஆங்காங்குள்ள அபூர்வமான பதார்த்தங்களையும் தனக் குவியல்களையும் கொண்டுவந்து சேர்த்து, ராஜஸூயத்தை ஆரம்பிக்க யத்தனம் செய்தார்கள்.

அந்த ராஜஸூய யாகத்தில் போஜனத்திற்கு வரிசையாய் உட்காரவைப்பதிலும் எச்சிலை எடுத்துச் சுத்தஞ் செய்வதிலும் போஜனங்களை விசாரிப்பதிலும் யுயுத்ஸுவையும், பக்ஷணங்களையும் போஜனங்களையும் தயார் செய்வித்துச் சேகரித்துத் தகுந்தகாலத்தில் எடுத்துக் கொடுப்பதில் துச்சாஸனனையும், பிராஹ்மணர்களை வரவேற்பதில் அசுவத்தாமாவையும், அரசர்களுக்கு மரியாதை செய்வதில் ஸஞ்சயனையும், செய்தவற்றையும் செய்யவேண்டிய கார்யங்களையும் விசாரிப்பதில் பீஷ்மரையும் துரோணரையும், பொன் நாணயம் ரத்னங்கள் முதலியவைகளை வைத்துக் காப்பதிலும் தக்ஷிணை கொடுப்பதிலும் கிருபாசார்யரையும், பொருள்களைச் செலவுசெய்வதில் விதுரரையும், எல்லாவிடங்களிலுமிருந்து வரும் காணிக்கைகளை வாங்குவதில் துரியோதனனையும், ஸ்திரீகளை உபசரிப்பதில் குந்தியையும் காந்தாரியையும், பிராஹ்மணர்களை எதிர்கொண்டு அவர்களுடைய கால்களைக் கழுவிப் பூஜிப்பதில் கிருஷ்ணனையும், தர்மபுத்திரர் நியமித்தார். வேதவ்யாஸ பகவான் அந்த யாகத்தில் பிருஹ்மாவாயும், ஸுஸாமா வென்பவர் ஸாமங்களைக் கானஞ்செய்யும் உத்காதாவாயும், பிருஹ்மஞானிகளில் சிறந்தவரான யாக்ஞவல்க்யர் அத்

கால்நடைக்கு இரண்டு காசு, கைவீச்சுக்கு ஐந்து காசு.

வர்யுவாயும், பைலரும் தௌம்யரும் ஹோ தாக்களாயுமிருந்து நடத்தினார்கள்.

அப்பொழுது அந்த யாகத்தில் முதலில் யாருக்குப் பூஜை செய்வதென்று விவாதம் உண்டானபொழுது, பீஷ்மர் முதலிய ஸாதுக்கள், ஸகல லோக ரக்ஷகனை ஸ்ரீ கிருஷ்ணனே அதற்குத் தகுந்தவரென்று நிச்சயித்தார்கள். ஸஹதேவன் அவர்களின் கட்டளைப்படி கண்ணனைப் பூஜித்தான். அப்பொழுது சேதி தேசத்தரசனை சிசுபாலன், பால்யம் முதல் கண்ணனிடத்தில் மட்டில்லாப் பகைகொண்டு, எவ்விதத்தாலும் அவருக்குக் கெடுதிசெய்ய முயன்றவனாதலால், அவரைப் பலவாறாய் நிந்தித்தான். கிருஷ்ணன் அதைப் பொறுமையுடன் கேட்டுக் கொண்டிருந்து, பிறகு அவனுடைய கர்மகதிப்படி அவனுக்கு மரணகாலம் வந்துவிட்டதென் றறிந்து, அவனைத் தன் சக்கராயுதத்தால் கொன்றார். தர்மபுத்திரர் வெகுசிறப்பாய் யாகத்தைச் செய்து முடித்து, எல்லோராலும் கொண்டாடப்பட்டு, இந்திரப்ரஸ்தத்தில் தன் தம்பிமார்களுடன் அரசாண்டு வந்தார்.

ஒருநாள் வியாஸ பகவான் அங்கே வர, யுதிஷ்டிரர் அவரைப் பூஜித்துப், பூமியிலும் ஆகாயத்திலும் உண்டாகும் சகுனங்களின் பலன்களை விவரித்துச் சொல்லும்படி கேட்டார். வியாஸர் "அரசனே! நீ சொன்ன அபசகுனங்களின் பலன் சிசுபாலன் இறந்ததால் அடங்கவில்லை. பதின்மூன்று வருஷங்கள் வரையில் எல்லோருக்கும் பெரும் பயத்தை விளைவித்துக்கொண்டே யிருக்கும். துர்யோதனன் நாளுக்கு நாள் செய்துவரும் பாபங்களின் கொடுமையால் உலகத்திலுள்ள அரசர்கள் இரண்டு கக்ஷிகளாய்ப் பிரிந்து, ஒன்று அவனையும், ஒன்று உன்னையும் தலைவனாகக் கொண்டு போர்புரியும். அதில் கிருஷ்ண பரமாத்மாவின் திருவுளப்படி, பீமார்ஜுனர்களின் வீர்யத்தால், க்ஷத்திரிய குலமே வேரற்றுப் போகும். மஹாதேவன் விருஷபத்திலேறிக்கொண்டு, யமனுடைய திசையான தெற்கை நோக்கி இடைவிடாமல் சென்றுகொண்டிருப்பதை, அப்பொழுது நீ பொழுது விடியும் ஸமயத்தில், ஸ்வப்னத்தில் காண்பாய். உன்னைக் காரணமாய் வைத்துக்கொண்டு, கண்ணபிரான் பூமியின் பாரத்தைத் தீர்ப்பார். ஆகையால், நீ ஐம்புலன்களையும் அடக்கி, சாக்கிரதையுடன் ராஜ்யபாலனம் செய்யக் கடவா"யென்றார். தர்மபுத்திரர் அதைநினைத்து நினைத்து, தன் தம்பிமார்களைப் பார்த்து, 'இவ்விதமான கொடிய பாபத்திற்கும் லோக நாசத்திற்கும் நான் காரணமாவதாயிருந்தால், இந்தப் பாழும் ஜன்மத்தால் ஆகும் பயனென்ன? இன்றுமுதல் பதின்மூன்று வருஷங்கள்வரையில் என்னுடன் பிறந்தோரையும் மற்ற அரசர்களையும் கடுமையாய்ப் பேசவேமாட்டேன். என் இனத்தாரின் கட்டளையைத் தலைமேற்கொண்டு, அவர்களுக்குத் தகுந்தபடி பேசி, எல்லோரிடத்திலும் ஸமமான பார்வையுடன், இனிமையான சொல்லையே வழங்கிக்கொண்டு, பிரியமான கார்யங்களையே செய்துகொண்டு, ஸகல பிராணிகளின் க்ஷேமத்தையே நினைத்துக்கொண்டு, சண்டையையும் கலகத்தையும் உண்டாக்கும் காரணங்களைத் தடுப்பே"னென்று, பெரிய பிரதிக்ஞையைச் செய்தார்.

மயனால் வெகு சாதுர்யமாய் அமைக்கப்பட்ட அந்த ஸபையைத் துர்யோதனனும் சகுனியும் சுற்றிப்பார்த்து வருகையில், ஸ்படிகக் கற்களால் தளவரிசை போடப்பட்ட இடத்தை ஜலமென்று துர்யோதனன் நினைத்து, தன் வஸ்திரத்தைத் தூக்கிக்கொண்டான். மேடு பள்ளந் தெரியாமல் தரையில் விழுந்தான். ஸ்படிகம்போல் தெளிந்த நீரால் நிறைந்து ஸ்படிகத்தாமரை மலர்களால் விளங்கும் ஓர் குளத்தைத் தரையென்று நினைத்து, அதில் விழுந்து நனைந்தான். அதைக்கண்டு பீமார்ஜுனர்களும் நகுல ஸஹதேவர்களும் திரௌபதியும் கைகொட்டிச் சிரித்தார்கள். தர்மபுத்திரர் மிகவும் வருந்தி, அவனுக்கு வேறு விலையுயர்ந்த வஸ்திரங்களைக் கொடுத்தார். ஜலத்தைப்போல் காணப்பட்ட ஓரிடத்தில் அதைத் தாண்டுவதற்காக வஸ்திரத்தைத் தூக்கிக்கொண்டு பாய, அது நிலமென்றுகண்டு மயங்கினான். எல்லோரும் உரக்கச் சிரித்தனர். படிகக் கதவால் மூடப்பட்ட வாயிலைப் பார்த்து அதில் நுழையும்பொழுது தலையில் அடிபட்டுக் கலங்கி நின்றான். இலகுவாய்த் திறக்கவேண்டிய கதவுகளைப் பலத்துடன் இடித்துத்தள்ளினதால் வெளியில்வந்து விழுந்தான். திறந்திருந்த வாயிலைக் கண்டு, அது

சுவரென்று நினைத்து, அங்கிருந்து திரும்பிப் போனுன். இவ்வாறு பலவிதமாய் அவமானப் பட்டு, அங்குள்ள வேலைக்காரர்களாலும் கேலி செய்யப்பட்டு, அடங்காத் துயரம் கொண்டு, தன் அரண்மனைக்குப் போய், சகுனியுடன் ஆலோசித்துப், பாண்டவர்களின் ஸகலசெல் வத்தைக் கவருவதற்கும், அவர்களைப் பதிலுக் குப் பதில் அவமானப் படுத்துவதற்கும் ஓர் உபாயம் செய்து, ஸ்திரபுத்தியில்லாத திருத ராஷ்டிரனையும் வற்புறுத்தித் தங்களுடைய எண்ணப்படி நடக்கச்செய்தான்.

பிறகு அவர்கள் ஓர் புதிய ஸபையைக் கட்டு வித்து, பாண்டவர்களை அங்கே அழைத்து வரும்படி விதுரரை அனுப்பினுர்கள். தர்மபுத் திரர் தன் பெரிய தகப்பனுடைய கட்டளையைச் சிரமேற்கொண்டு, அஸ்தினபுரத்திற்கு வந்து, அழகிய ஸபையில் பிரவேசித்து, கௌரவர்க ளால் உபசரிக்கப்பட்டு, தங்களுக்குத் தகுந்த ஆஸனங்களில் வீற்றிருந்தார்கள். துர்யோதன ஞல் ஏவப்பட்டுத் திருதராஷ்டிரன் தங்களை அழைத்ததையும், தங்களுடைய செல்வம் யாவற்றையும் சூதாட்டத்தில் கவர்ந்து தங்க ளைக் கெடுத்து அவமானப்படுத்த நினைத்திருப் பதையும், யுதிஷ்டிரர் விதுரரால் ரஹஸ்யமாய் அறிந்திருந்தும், அதற்கிணங்கி அஸ்தினபுரத் திற்குச் சென்ருர்.

தர்மபுத்திரர் சகுனியின் மூலமாய்த் துர் யோதனனுடன் சூதாடி, தன் செல்வத்தை யும் ராஜ்யத்தையும் தம்பிமாரையும் தன்னை யும் திரௌபதியையும் இழந்தாரென்றும், தனக்குச் சூதாட நன்ருய்த் தெரியாத பொ ழுது சூதில் வல்லவனுன சகுனியுடன் சூதாட ஸம்மதித்தது பிசகென்றும், சூதாடத் தெரி யாத துரியோதனன் தனக்குப் பதிலாக நிபுண னுன சகுனியை வைத்து ஆடினதைப்போல் தானும் சகுனிக்கு ஸமமான வேருெருவனை வைத்து ஆடியிருக்கவேண்டுமென்றும், சூதாடு வதே ராஜதர்மத்திற்கு விரோத மென்றும் சொல்வதும், சூதாடித் தோற்பவர்களின்பெயர் களைச் சொல்லுமிடத்தில் தர்மனையும் நளனை யும் உதாரணமாய்க் காட்டுவதும் வழக்கம். ஸகல தர்மங்களின் ஸூக்ஷ்மங்களையும் நன் ருய்ப் பரீக்ஷித்து மஹரிஷிகளிடத்தில் தீர விசாரித்து, அணுவேனும் தவருமல் தர்மத்தை அனுஷ்டிக்கும் தர்மநந்தனனைப்பற்றி இப்படிச் சொல்வது நியாயமாவென்பதைச் சற்று விசா ரிப்போம். கலிபுருஷன் நளனிடத்தில் கோபங் கொண்டு அவனைக் கெடுக்க விரும்பி, அவனு டைய புத்தியைக் கலைத்து, சூதாடச் செய்து, தன் மனைவியும் மந்திரிகளும் எவ்வளவு தடுத் தும் கேட்காமல், ஓரே பிடிவாதமாய் யாவற் றையும் தோற்கும்படி செய்தான். ஆனுல், தர்ம புத்திரரிடத்தில் கலிபுருஷன் இப்படித் துவே ஷங்கொண்டு பிரவேசித்தானென்று சொல்ல விடமில்லை. புத்தி பூர்வகமாய்த் தெரிந்தே, வேண்டுமென்றே, சூதாடுவதில் அடங்காத ஆசைகொண்டு, இப்படி ஆடித் தோற்ருு னென்று சொல்லலாமா? அல்லது, பரமசாந் தியையும் வைராக்யத்தையும் படைத்து, தர் மமே உருவெடுத்து வந்ததுபோன்ற பாண்டு புத்திரனிடத்தில், மேற்சொன்ன துர்க்குணங் களிருக்க நியாயமில்லை யாதலால், தன் நுட்ப மான புத்தியாலும் மாசற்ற ஞானக்கண்ணு லும் வருங்காலத்தை யறிந்தே, அந்த பிரபஞ்ச நாடகத்தில் தானும் ஒரு வேடம் பூண்டு, அதை நடத்திவைப்பதே தன் கடமையும் பக வானுக்குத் தான் செய்யும் பிரியமான கைங் கர்யமுமென்றறிந்து, பூமியின்பாரத்தைத் தீர்ப் பதற்குக் காரணமான கௌரவ பாண்டவ மஹாயுத்தத்தையும், அதற்குக் காரணமான பரஸ்பர துவேஷத்தையும், அதற்குக் காரண மான சூதாட்டத்தையும், கர்மமென்ற ஆதி யந்தமற்ற சங்கிலியில் இவை சில தனித்தனி கரணைகளென்று தெரிந்தே, சகுனியுடன் சூதாடச் சம்மதித்திருக்கவேண்டு மென்று சொல்லலாமா?

பாரதத்தில் காணப்படும் சில வாக்கியங்க ளால் இக்கொள்கை உறுதிப்படுகிறது. எப்படி யெனில், விதுரர் யுதிஷ்டிரரை அழைத்தபொ ழுது தர்மபுத்திரர் "சூதாட்டத்தில் ஏதாவது கலகம் நடக்குமென்பதில் ஸந்தேஹமில்லை. புத்தியுள்ள எவனுவது சூதாட விரும்புவானு? அதில் கேவலம் நிச்சயமில்லாத ஜயமும்தோல் வியும் திடீரென்று மாறிமாறி வரும். நமது புத்தியையாவது திறமையையாவது உபயோ கிப்பதற்கு இடமில்லை. கேவலம் கண்மூடித்த னமான ஓர் விளையாட்டில் ஆசைவைத்து, நம் மிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட பிரஜைகளின் க்ஷேமத்தையும் நமது க்ஷேமத்தையும் கீர்த் தியையும், ஒரு பாய்ச்சிகையின் வசமாக்கி,

அறிவற்ற மிருகங்களைப்போல் நடப்பதில் எவனுக்குத்தான் விருப்பமிருக்கும்? ஆனாலும், இந்த லோகத்திலுள்ள யாவும் பிருஹ்மாவால் விதியின் வசத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. ஸ்வதந்திரமென்பது எதற்கும் கிடையாது. என் குலத்திற்குப் பெரியவரும், எனக்கு அரசனும், என்னால் பூஜிக்கத் தகுந்தவருமான திருதராஷ்டிர மஹாராஜா சூதாடும்படி என்னைக் கட்டளையிட்டால் நான் அதை மீறத் துணியமாட்டேன். சகுனி என்னை அழைக்காமலிருந்தால் நானாகவே ஒருவனுடனும் சூதாடப் போவதில்லை. ஒருவன் என்னை சூதாட அழைத்துவிட்டால் போகாமலிருப்பதில்லை. இதையே விரதமாகக் கொண்டிருக்கிறேன். க்ஷத்திரிய வீரனை ஒருவன் யுத்தத்திற்கு அழைத்தால் அவன் பின்வாங்குவானா? சூதுக்கழைப்பதும் வாதுக்கழைப்பதும் ஒன்றே. திடீரென்று வந்து விழும் மின்னல், கண்ணைப் பறிப்பது போல், விதியின் வலிமை மனிதர்களின் மதியை அடக்கிவிடும். விதியின் வலையில் கட்டுப்பட்ட மனிதன் தப்ப நினைப்பதும் ஸாத்யமல்லவெ"ன்றார். அவரைச் சூதிற்கழைத்தது வெளிப்படையாய் திருதராஷ்டிரனானாலும், உண்மையாய்க் காலபலமென்றே சொல்ல வேண்டும்.

அந்த ராஜஸபையில் எல்லோரும் வீற்றிருக்கையில், சகுனி தர்மபுத்திரரை நோக்கி "அரசே! சூதாடுவதற்காக ஸகல பதார்த்தங்களும் தயாராய்க் கொண்டுவந்து வைக்கப்பட்டிருக்கின்றன. எல்லோரும் உம்மையே எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். காய்களை உருட்டிச் சற்றுநேரம் வேடிக்கையாய் விளையாடுவோமா" என்றான். அதற்குத் தர்மன் "சூதாடுவது மோசத்தையும் பாபத்தையும் அடிப்படையாய்க் கொண்டது. அதில் க்ஷத்திரியனுக்கு என்ன வீர்யம்? என்ன கீர்த்தி? ஒழுங்கும் நீதியுமில்லாமல் காரணமற்ற ஜயாபஜயத்தைக் கொடுக்கும் ஓர் தொழிலை என் வீணாய்ப் புகழுகிறாய்? இவ்விதமான தப்பு வழிகளாலும் தீச்செயல்களாலும் பிறரை ஏமாற்றி ஜயிப்பதில் என்ன ஆண்மை"யென்றார். அப்பொழுது சகுனி "தர்மநந்தன! நீயும் அறியாதவனைப்போல் இப்படிச் சொல்லத்தகுமோ? இந்தச் சூது சாதாரண வித்தையா? இதன் முறைகளை நன்றாய் அறிந்து, காய்களைப் புரட்டும் கைப்பழக்கத்தையும் தேர்ச்சியையும் ஸம்பாதித்து, காய்கள் புரளுவதா லுண்டாகும் மாறுதல்களால் ஜயாபஜயங்களைக் கவனித்து, ஆட்டத்தையும் கணக்கையும் மனதில் பதிய வைத்துக்கொண்டு, சோர்வில்லாமல், எவ்வளவு தடவை அபஜய மடைந்தாலும் அதை ரியப்படாமல், ஜயிக்காமல் திரும்புவதேயில்லையென்று, அஞ்சாத தீரனாய் ஆடுகிறவனே, ராஜ்ய கார்யங்களிலும் மோசம் போகாமல், சத்துருக்களை ஜயித்து அவர்களுடைய உபாயங்களைப் பயன்பெறாமல் செய்வான். ஆகையால், நமது பந்தயத்தால் பிறர்க்கு நஷ்டமுண்டாகிறதென்பதைக் கவனிக்காமல் ஆடுவோம். பயப்படாதே, கவலைப்படாதே. உனக்கிஷ்டமான பந்தயத்தை வை. ஆனால் ஆடுகிற முதலாளிகள் நீயும் உனக்கு ஸமமான துர்யோதனனுமே. அவனுக்கு ஆடத்தெரியாததால் அவனுக்குப் பதிலாய் நான் ஆடுகிறேன். உனக்குச் சரியாய் அவனே பந்தயங்களை வைத்துவருவா"னென்று உத்ஸாஹப்படுத்தினான். அதைக் கேட்ட யுதிஷ்டிரர், "சூதாடுவதையே தொழிலாக வைத்துக்கொண்டிருக்கும் வஞ்சகர்களுடன் சூதாடுவதே மஹா பாபம். யுத்தத்தில் தர்மமாக சத்துருக்களை ஜயிப்பதே மேலானது. ஆரியர்கள் சூதாடமாட்டார்களென்று அஸிததரும் தேவரும் சொல்லியிருக்கிறார்கள். பிராஹ்மணர்களை ரக்ஷிப்பதற்கும் துஷ்டர்களை சிக்ஷிப்பதற்கும் நாம் கூடியவரையில் முயலுகிறோம். அதே நமக்குப் பெரும் செல்வம். அக்கிரமமாய்ச் சூதாடிப் பிறரை ஜயிக்க எண்ணாதே. அந்த வழியால் பதினான்கு லோகங்களின் ஆட்சியையும் நான் அடைய விரும்பேனெ"ன்றார். சகுனி அவரைத் தடுத்து "உலகத்தில் ஒரு வித்தையை நன்றாய்க் கற்ற ஒருவன் அதைக் கற்காதவனை ஜயிப்பதும், புத்திமான்கள் மந்தபுத்தியுள்ளவர்களை அடக்கியாளுவதும், வஞ்சனையென்றும் மோசமென்றும் சொல்லலாமா? பலவான் பலங்குறைந்தவனையும், திறமையுள்ள வில்லாளி அஸ்திரப் பயிற்சியில்லாதவனையும், சூதாடத் தெரிந்தவன் தெரியாதவனையும் ஜயிப்பது ஸஹஜமே. அது மோசமென்று சொல்லத்தகுமாயினும், ஜனங்கள் அதை மோசமென்று சொல்வதில்லை. நீ என்னுடன் ஆடுவதில் மோசமும் கெடுதியும் நேருமென்று பயமிருந்தால் ஆடவேண்டா"மெ

ன்ருன். அதைக்கேட்டு யுதிஷ்டிரர் "என்னை ஒருவன் அழைத்தபிறகு நான் திரும்புவதில்லை யென்று விரதம் வைத்துக்கொண்டிருக்கிறேன். எல்லாவற்றிற்கும் விதியின் வலிமையே பெரிது. நானோ விதியின் வசத்திலிருக்கிறேன். ஆயினும், ஒருவனுக்காக மற்றொருவன் ஆடுவது சரியல்லவென் றெண்ணுகிறேன். அப்படியும் இஷ்டமிருந்தால் ஆட்டம் நடக்கட்டுமெ"ன்ருர். பீஷ்மர், துரோணர், கிருபர், விதுரர், இவர்கள் மாத்திரம் கொஞ்சமேனும் திருப்தியில்லாமல், அந்தச் சூதாட்டம் நடப்பதைப் பார்த்துக்கொண் டிருந்தார்கள்.

பிறகு சூதாட்டம் ஆரம்பித்தது. தர்மபுத்திரர் தம் செல்வம் யாவற்றையும் வரிசையாய்ப் பந்தயம் வைத்து, வரிசையாய்த் தோற்றுக் கொண்டே வந்தார். அப்பொழுது விதுரர் திருதராஷ்டிரனிடத்திற்குப் போய், அந்தச் சூதாட்டத்தை நிறுத்தும்படி தன்னால் இயன்ற மட்டும் புத்திசொல்லிப் பார்த்தார். அதைக் கேட்டுத் துர்யோதனன் அவரை மிகவும் இகழ்வாய்ப் பேசினன். இதற்குள் சகுனி, "தர்மபுத்திரா! உனக்குச் சொந்தமான ஸகல பொருள்களையும் நீ இந்தச் சூதாட்டத்தில் பந்தயம் வைத்தாய். நானும் அவைகளை வரிசையாய் ஜயித்துவிட்டேன். இனி உனக்குப் பந்தயம் வைப்பதற்கு யாதொரு பொருளுமில்லை. ஆகையால், நீ இனி ஆடமுடியாதென்று சொல்லிவிடு. ஆட்டத்தை நிறுத்திவிடுவோம். ஆடத் திறமையில்லாமலும், பந்தயம் வைப்பதற்குப் பொருளில்லாமலும் ஒருதடவையாவது ஜயிக்காமலும் எப்பொழுதும் தோற்றுக்கொண்டே இருப்பவனோடு சூதாடுவதில் என்ன ஸந்தோஷம்? எனக்கும் எப்பொழுதும் ஜயித்துக் கொண்டே வருவது வெறுப்பையும் அலுப்பையும் உண்டாக்குகிறது. ஆட்டத்தை நிறுத்துவோமா" என்று அலக்ஷயமாயும் அவமதிப்பாயும் தர்மபுத்திரரைச் சொல்லம்புகளால் துளைத்தான். யுதிஷ்டிரர் அதைக்கேட்டு "அடே! சகுனி! என் கடைசித் தம்பியான நகுலனென்ற இளஞ்சிங்கத்தைப் பந்தயமாக வைத்தேனெ"ன்ருர். உடனே சகுனி காய்களை உருட்டி "ஜயித்தே"னென்ருன். யுதிஷ்டிரர் "ஸகல தர்மங்களையும் ஆழ்ந்து அறிந்து, மஹா பண்டிதனென்று பெயர்பெற்ற இந்த ஸஹதேவனைப் பந்தயமாய் வைக்கத்தகாது; ஆயினும் அவனையே பந்தயமாய் வைத்தேன்" என்ருர். உடனே சகுனி "ஜயித்தேன்" என்ருன். பிறகு யுதிஷ்டிரர் "மஹாயுத்தமென்ற ஸமுத்திரத்தில் எங்களைக் கரைசேர்த்து, பகைவரென்ற அலைகளைப்பிளந்து கொண்டுபோகும் கப்பலைப்போன்றவனும், மூவுலகிலும் நிகரற்ற வீரனும், ஸகல வில்லாளிகளின் தலையில் காலை வைக்கத் தகுந்தவனும், ஸவ்யஸாசி யென்று இருகையாலும் பாணங்களை ஸப்தமேகங்களும் ஒன்று சேர்ந்து பொழிவதுபோல் பொழிகிறவனும், ஸ்வப்னத்திலும் உங்களுடைய பயத்திற்குக்காரணமுமான இந்த விஜயனைப் பந்தயமாக வைத்தேன்"என்ருர். உடனே சகுனி காய்களைப் புரட்டி "ஜயித்தேனெ"ன்ருன். பிறகு யுதிஷ்டிரர் "அடே! துஷ்டா! மஹா மேருவைப்போன்ற தோள்களையும், ஸமுத்திரத்தைப்போல் எல்லையற்ற தேகபலத்தையும், காலஸர்ப்பத்தைப்போன்ற கோபத்தையுமுடையவனுய்க் கதாயுத்தத்தில் தன் குருவான பலராமரைத்தவிர மூவ்வுலகிலும் நிகரற்றவனுய், எங்களைக் கண்ணிமையைப்போல் ஸகல ஆபத்துகளிலிருந்தும் காப்பாற்றுகிறவனுய், ஒருவரிடத்திலிருந்தும் அவமதிப்பையும் நிந்தையையும் பொறுக்காதவனுய், எனக்கு இளையவனுயிருக்கும் இந்தப் பீமஸேனனையே பந்தயம்வைக்கிறேன்" என்ருர். உடனே சகுனி "ஜயித்தேன். இனியாவது ஆட்டத்தை நிறுத்தலாமா" என்ருன். அப்பொழுது யுதிஷ்டிரர் "இந்நால்வருக்கும் நான் மூத்தவன். அவர்களுடைய அன்பிற்குரியவன். இந்தத் தடவை என்னையே பந்தயமாக வைக்கிறேனெ"ன்ருர். உடனே சகுனி காய்களைப் புரட்டி "உம்மையும் ஜயித்தேன். வேறு தனம் இருக்கும் பொழுது தன்னைப் பந்தயமாக வைத்து, ஆடித் தோற்பது மிகப் பாபம். பாஞ்சால ராஜபுத்திரியான கிருஷ்ணை உமக்கு மனைவியல்லவா? கட்டுப்பட்டவளல்லவா? அவள் மிகுந்த அதிருஷ்டசாலி யானதால், அவளைப் பந்தயமாக வைத்தாடினல் ஒருவேளை நீ ஜயிக்கலாம். பிறகு ஜயம் ஒரு முகமாய்த் திரும்ப ஆரம்பித்தால், அப்படியே ஓடிக்கொண்டிருக்கும். ஆகையால் வரிசையாய் உன் தம்பிமார்களையும் செல்வத்தையும் ராஜ்யத்தையும் மீட்டுக்கொள்ளலாம்" என்று ஆசைகாட்டினன்.

காவோலை விழுந்ததென்று குருத்தோலை சிரித்ததாம்.

கௌதம புத்தர்
GAUTAMA BUDDHA
(கி. மு 557-487.)

கோசல நாட்டின் சமீபத்தில் ரோஹிணி நதிக்கரையிலே கபிலவாஸ்து என்னும் நகரத்தில் சுத்தோதனன் என்னும் வேந்தன் சாக்ய வம்சத்தினர்க்குத் தலைவராய் அரசு புரிந்து வந்தான். அவனுக்கு வெகுநாள் வரையிலும் புத்திர பாக்கியம் கிடையாமலிருந்தது. அவன் அனுஷ்டித்துவந்த விரதங்களின் பலனாக முடிவில் அவனது மனைவியான மாயா தேவி கருத்தரித்து பத்தாவது மாதத்தில் சுப முகூர்த்தத்தில் அதிஸுந்தரமான ஆண் மகவைப் பெற்றாள். இந்தக் குழந்தை பிறந்த காலத்தில் அநேக நற்குறிகள் தோன்றின. அக்குழந்தையின் ஜாதகத்தைப் பார்த்த நிபுணர்கள், அவன் புகழ், உலகமுழுதும் பரவும்படி மகா பெருமைபெற்று விளங்குவான் என்று கூறினார்கள். அம்மகவுக்கு சித்தார்த்தன் என நாமகரணஞ் சூட்டி, நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வெகு அருமையுடன் வளர்த்துவந்தார்கள்.

குழந்தைப் பருவங்கடந்து சிறுவனாய் இருக்கையில் சித்தார்த்தனுக்கு உலக இன்பங்களில் வெறுப்புண்டாயிற்று. தன் நண்பர்களுடன் வினோதமாய் ஆடிக் களியாமல் சதா யோகிகள் போல் தியானத்தில் ஆழ்ந்திருப்பான். அரசிளங்குமரனாய்ப் பிறந்தும் எல்லாப் பொருள்களிலும் ஆசையற்று, தனித்திருந்த சித்தார்த்தனது மன நிலையைக் கலைக்கவேண்டி அவன் தந்தை அவனுக்கு ஒரு கட்டழகியை மணம் புரிவித்ததுமன்றி, ஸதிபதிகள் கொஞ்சிக் குலாவிக் காலங்கழிப்பதற்கு அழகிய பூஞ்சோலை யொன்றமைத்து அங்குள்ள அலங்காரமான மாளிகையில் அவர்கள் வசிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்திருந்தான். ஆயினும், தன்னைக் சூழவிருந்த சிற்றின்பங்களில் அவரது மனம் தங்கவில்லை. உலகில் மனிதர் பிணி, வறுமை துக்கம் முதலியவற்றால் கஷ்டப்படுவதையும், அவர்கள் முடிவில் இறப்பதையும் கவனித்த சித்தார்த்தர் மனதில் அநேக சந்தேகங்கள் உண்டாயின. இவ்விதம் பலவகைப்பட்ட துக்கத்திற்குக் காரணம் என்ன? இதனின்றும் மனிதன் தப்ப வழியுண்டா? அப்படியுண்டாயின், அது யாது? இவைபோன்ற பல கேள்விகளுக்குச் சமாதானம் கிடைக்குமாவென்று தம்மாலான வரை முயன்றார். பிறப்பு, இறப்பு, உலக இன்பம், துன்பம், இவற்றைப்பற்றிஆலோசனையில் இவரது மனம் செல்லச் செல்ல, உலக போகங்களில் வெறுப்புண்டாகத் தலைப்பட்டது. ஸம்ஸாரத்தில் தான் அழுந்திக்கிடக்கும் வரையில் மன நிம்மதியும் தெளிவும் உண்டாகாதென வறிந்து, தம் மனைவியையும் குழந்தையையும் போகங்களையும் விட்டு நீங்கத் துணிந்தனர். மனிதர் துக்கம் நீங்கி சுகப்படும் வழியின்னதென் றறிவதிலேயே அவர் மனம் சென்றிருந்தது.

இல்வாழ்க்கையைத் துறக்க நிச்சயித்து ஒரு நாள் இரவில் யாவரும் உறங்கும் சமயத்தில், அவர் படுக்கை விட்டெழுந்து தன் குழந்தையையும் மனைவியையும் கடைசியாக ஒருமுறை பார்த்துவிட்டு, உடனே அரண்மனையை விட்டு அகன்றார்.

அவர், மகா பண்டிதர்களெனப் பெருமைபெற்ற இரண்டு பிராம்மணோத்தமர்களை யடுத்து அவர்களிடம் வேதாந்த நூல்களைக் கற்றார். பாஷாஞானம், கலைகளில் பூர்ண பாண்டித்யம், வேதாத்யயனம் ஆகிய இவற்றால் இவருக்குச் சாந்தி பிறக்கவில்லை. கல்வியைத் தொடங்கு முன் இவர் மனதில் உதித்த ஸந்தேகங்களுக்கு சமாதானம் இன்னும் ஏற்படவில்லை யாகையால், சாஸ்திர ஞானத்தால் பலனில்லையென் றறிந்து, தவம் செய்யும் முனிவரைப் போல் உடலை வாட்டி யோகத்தில் மனஞ்செலுத்தினால் தமக்கு உண்மை விளங்குமென்று எண்ணி உருவேலா என்னும் ஒரு வனத்தை யடைந்து அங்கே பல வருஷங்கள் வரையிலும் நிஷ்டையிலிருந்தார். உணவு உறக்கமின்றி கடுந்தவம் புரிந்தும், சித்தார்த்தருக்கு திருப்தி யுண்டாகவில்லை. அவருடைய தேகம் வரவர மெலிந்து இளைத்ததேயன்றி, அவரது மனதில் எழுந்த சந்தேகங்கள் தெளிந்தபாடில்லை. மனிதன், பிறந்தது முதல் இறக்கும் வரையில் அடையும் கஷ்டங்களுக்களவேயில்லை. மானிட வாழ்க்கை சஞ்சலத்துடன் கூடினதாகவே யிருக்கிறது. கல்வியாலும் யோகத்தாலும் உடலை வாட்டி இயற்றும் அருந்தவத்தாலும் துக்க நிவிருத்திக்கு மார்க்

கம் அறிய முடியாதென்று நன்றாய் அறிந்து சித்தார்த்தர் காட்டினின்றும் நீங்கி நாட்டிற்கே திரும்பினார்.

ஒருநாள் இரவில் வழக்கம்போல் அவர் தியானத்தில் ஆழ்ந்திருக்கையில், அவருக்கு இதுவரையில் இருந்த பேதமை நீங்கி திடீரென்று ஞானம் உண்டாயிற்று. அவரைச் சூழ்ந்திருந்த இருள் அகன்றது. தனக்கு அப்போதுதான் உண்மை விளங்கிற்றென அறிந்தார். அவருக்கு விவேகம் பிறந்தபோது அவர் ஒரு அரச மரத்தின் கீழே உட்கார்ந்து கொண்டிருந்தார். இந்த மரத்தின் கீழ் அவருக்கு ஞானோதயம் உண்டானபடியால் அதற்கு போதி மரமென்று பெயர் வழங்கலாயிற்று. அவருக்கு தத்துவஞானம் பிறந்த பின் சித்தார்த்தர் என்ற பெயர் மாறி, புத்தர் என்று அவரது பக்தர்களால் அழைக்கப்பட்டார். இப்போதுதான், மனிதர் உஜ்ஜீவிப்பதற்கென ஒரு புதிய மதத்தை உத்தேசித்து அதன் கொள்கைகளைச் செல்வர், ஏழையினர், பிராஹ்மணர், சூத்திரர் என்ற வித்யாஸம் பாராட்டாமல், ஜனங்கள் யாவர்க்கும் உபதேசித்து வந்தார். இவ்விதம் இவரால் ஏற்பட்ட மதத்திற்கு புத்த மதமென்று பெயர் உண்டாயிற்று. கி. மு. 522-ல் காசிக்குச் சென்று, அங்கே தம் கொள்கைகளைச் சொல்லி அநேகரை புத்த மதத்திற்குத் திருப்பினார். பின் மகத தேசத்தை யாண்டுவந்த பிம்பிசாரன் என்னும் அரசன், அவரை வரவேற்று, அவரது மதத்தை நாட்டினர்க்கு பிரஸங்கிக்க அனுமதி யளித்தான். 45 வருஷங்கள்வரை கௌதமர் ஊர் ஊராய்த் திரிந்து ஆயிரக் கணக்கான ஜனங்களை புத்த மதத்தராக்கினார். பிம்பிஸாரனும், பின்வந்த அஜாதசத்ரு வென்னும் மகதநாட்டு வேந்தனும் அவரைக் கௌரவித்து வந்தார்கள்.

உலக வாழ்க்கையை விட்டு, அநேகர் அவர்க்கடியாராகி மடங்களில் பிரஹ்மசாரிகள்போல் வஸித்து வந்தனர். இவர்கள், உடலினின்றும் உயிர் நீங்காமல் இருப்பதற்கு இன்றியமையாதனவாகிய பொருள்களிலன்றி, மற்ற சுகங்களில் இச்சை வையாமல் தவசிகள்போல் காலங் கழித்துவந்தார்கள். உலகத்தில் முதன்முறை இவராலேயே மடங்கள் ஏற்படுத்தப்பட்டன. இவ்விதம் மடங்களில் ஒருமித்து மதவிஷயமாக உழைத்துவந்த புத்தமத ஸன்யாஸிகளுக்கு பிக்ஷுக்களென்று பெயர். ஸ்திரீகளும் மடத்தில் சேர்ந்து பிக்ஷுணிகளானார்கள். மடத்தைச் சேர்ந்து அவரது மதத்தைப் பின்பற்றியவர் தவிர, இல்வாழ்க்கையி லிருந்துகொண்டே அநேகர் புத்தமத தர்மங்களை அநுஷ்டித்து வந்தார்கள்.

பௌத்த ஸந்யாஸிகள் காலையி லெழுந்து புத்தருடன் மதவிஷயமான ஆராய்ச்சிகளை நடத்துவார்கள். பின் நகரை யடைந்து, வீடு வீடாய்ச் சென்று பிக்ஷைபெற்று, அதனால் காலங்கழித்து வந்தார்கள்.

அநேக வருஷங்கள் வரையிலும் ஜீவித்திருந்து, குசி நகரத்தில் கி. மு. 487-இல் புத்தர் தேக வியோகம் அடைந்தார். அவர் மரிப்பதற்குமுன், அவருடைய அந்தரங்க சிஷ்யனை ஆனந்தனை அருகே யழைத்து, அடியில் வருமாறு கூறினார்.—

"ஆனந்தா, நான் நரை திரை மூப்பினால் தளர்வடைந்து தொண்டு கிழவனாய்விட்டேன். நான் இனிப் பிழைத்திருக்கும் காலம் ஸ்வல்பமே. எனக்கு வயது 80 ஆகிறது......... இனி நீங்கள் உங்களுடைய புத்தியையே உபயோகப்படுத்தி நன்மையைக் கடைப்பிடியுங்கள். நீங்கள் மேன்மை யுறுவதும், தாழ்மை யடைவதும், உமது பொறுப்பே யென்றறிந்து கொள். தத்வத்தைக் கைசோர விடலாகாது. நான் உங்களுக்குப் போதித்துள்ள தத்துவங்களையும் விதிகளையும் நெகிழ விடாதீர்கள். நான் மரிப்பினும் அவற்றையே உமது துணையாகக் கொண்டு நற்கதி பெறுங்கள்."

புத்தரது போதங்களை யறிய, சாஸ்திர வித்பத்தியாவது அரிய விரதங்களாவது வேண்டுவதில்லை. உலக வாழ்க்கை துக்கமயமானதென்பதைத் தெரிந்து, அதைப் போக்குவதற்குரிய மார்க்கத்தைத் தெளிவாய்ப் பாமர ஜனங்களும் அறிந்துகொள்ளும்படி புத்தர் உபதேசித்து வந்தார். அரிய தவமியற்றுதலால் தேக வாட்டமும், யாகம் செய்வதால் ஜீவஹிம்ஸையுமே சம்பவிக்கிறபடியால் அம்மார்க்கங்களால் உண்மை யறிந்து நற்கதி பெறுவது அசாத்தியமென்று அவர் அபிப்பிராயப்பட்டார். எல்லா துக்கத்திற்கும் ஆசையே காரணமாமென்றும், அவ்வாசை தொலையின், துக்கம் முடிவுபெறும் என்றும் அவ்வாசை நீங்குவ

தற்கு உபாயமாக எட்டு முக்கிய தர்மங்களைக் கடைப்பிடித்து உத்தமமான வாழ்வு வேண்டுமென்றும் போதித்தார். திரிகரண சுத்தி, தியானம், பக்தி நற்கருமங்களில் முயற்சி ஆகிய இவைகளே மனிதன் சுகம் பெறுவதற்குரிய சாதனங்களென்றும் போதித்தார்.



கௌதம புத்தர்

பெரியோரிடத்தும் அறிவினரிடத்தும் மரியாதையுடன் நடந்துகொள்ளவேண்டுமென்பதும், மனிதர் ஒருவர்க்கொருவர் அன்யோன்யமாய் இருந்து உபகாரிகளாய் இருக்கவேண்டுமென்பதும் மனிதர்க்கு தர்மம், குடியாமை, சாந்தம், திருப்தி, நன்றிமறவாமை, பொறுமை, தன்னடக்கம், ஜீவன்களிடத்தில் தயை முதலிய குணங்கள் அமையவேண்டுமென்பதும் அவர் மதத்தின் சாராம்சமாகும். யாவரிடமும் அன்பு பாராட்டவேண்டுமென்று புத்தர் போதித்தனரே யன்றி, வர்ணாசிரம தர்மங்கள் பிசகென்றாவது ஹிந்துக்கள் ஆராதித்துவந்த தேவதைகளின் வணக்கம் பயனற்றதென்றாவது அவர் கூறவில்லை. அவருடைய மதத்தைப் பின்பற்றி மன நிம்மதி (நிர்வாணநிலை) யடைதல் எளிதாகுமென்று மட்டுமே சொல்லிவந்தார். புத்தர் மரிப்பதற்கு முன்னால், ஒரு கொல்லன் வீட்டிற்கு அதிதியாய்ச் சென்றிருந்தார். அவ்விடத்திலேயே வியாதியால் பீடிக்கப்பட்டு மரிக்கும்படி நேர்ந்தது. அவர் இறக்கும் சமயத்தில் விருக்ஷங்கள் வஸந்தகாலத்தில் புஷ்பித்து மனோகரமாயிருப்பதுபோல் தளிர்த்தன. அவர் பேரில் தேவர் மலர்மாரி சொரிந்தனர்; தேவ துந்துபி முழங்கிற்று. அப்போது அவர் தன் சீடனைக் கூப்பிட்டு "புத்தனை மரியாதைசெய்து கௌரவிக்கும் விதம் இதுவல்ல: எவன் ஒருவன் தன்னுடன் பிறந்தவர்களிடம் அன்பு பாராட்டி நேசிக்கிறானோ, எவன் ஒருவன் தான் நேசித்தவரை கடைசிவரையில் மறவாதிருக்கிறானோ, எவன் தனக்கேற்பட்டிருக்கும் கடமைகளைச் சரியாய்ச் செய்கிறானோ, எவன் வாழ்க்கையில் சுத்தனாயிருக்கிறானோ, அவனே புத்தனைச் சரியாய்ப் பூஜித்துக் கௌரவிப்பவன்" என்று சொன்னார். அவருடைய போதனைகளை திரிபிதாகங்களென்ற புத்தமத நூல்களில் விரிவாகக் காணலாம்.

இவர் உலகில் அவதரித்து, மனிதர்கள் நன்னடக்கையின்றி கேவலம் கர்மங்களைச் செய்து வைதிகரென்று கர்வித்துவந்ததை யடக்கியும், யாகங்கள் செய்யுங்காலத்தில் நடந்துவந்த ஜீவஹிம்ஸையைத் தடுத்தும் மனிதர்கள் ஒருவரையொருவர் நேசித்து மேன்மை யடையவேண்டுமென்று உபதேசித்தும், உலகிற்குப் பெரிய நன்மை புரிந்துவந்தார். இவரால் ஏற்படுத்தப்பட்ட மதம் விரைவில் உலக முற்றும் பரவி, பெருந்தன்மைப்பட்டதற்குக் காரணம் இவர் ஜனங்களிடத்தில் வைத்திருந்த அன்பேயாம்.

புத்தகக் குறிப்பு

ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸ சரிதை நம் நாட்டில் மேனாட்டு நாகரிகம் ஓங்கி வளர்ந்து, நம்மவரின் இலக்ஷியங்களை லௌகிகவிஷயங்களில் செலுத்த இருந்த ஸமயத்தில், வேதாந்தத்தின் உட்பொருளை பண்டிதர்களும் பாமரரும் அறியும் வண்ணம் உபதேசித்த ஸ்ரீராம கிருஷ்ண பரமஹம்ஸரின் சரிதை நாம் வரப்பெற்றோம். இதன் மூலம், வங்காளியில் எழுதப்பட்டு, பக்தர்கள், இருவரால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. எளிய தமிழ் நடையில், ஸ்ரீபரமஹம்ஸரின் சரித்திரம் சொல்லப்பட்டிருக்கிறது. ஹிந்து மதத்தில் பற்றுள்ளவர்கள் அனைவரும் வாசித்து, அனுபவத்திற்குக் கொண்டுவரவேண்டிய பல உண்மைகள் அடங்கிய இப்புத்தகம் யாவர் கையிலும் இருக்கவேண்டியது அவசியம். (விலை அணா 14. கெட்டி பைண்டு ரூ. 1—2—0 ஸ்ரீராமகிருஷ்ண மிஷன், மயிலாப்பூர், சென்னை).

காற்றைப் பார்த்துக் கப்பல் நாட்டு.

கிண்டர்கார்டன்

KINDER GARTEN

[என். ஆர். கேதாரிராவ் அவர்கள், எம். ஏ., எல். டி.]

சென்ற நூறு வருஷ காலமாக இங்கிலீஷ் பாஷையில் உபயோகப்பட்டு வரும் வார்த்தைகளில் ஒன்றுக்காவது இவ்வளவு விபரீதமாக அர்த்தம் செய்வதில்லை. கிண்டர்கார்டன் என்ற வார்த்தைக்கோ ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமான அர்த்தம் கொடுக்கிறார்கள். சிலர் "கிண்டர்கார்டன் என்றால் குழந்தை விளையாட்டு, தெரியாதா?" என்கிறார்கள். சிலர் "அழுகிற குழந்தையைச் சிரிக்கச்செய்யும் விதந்தான் கிண்டர்கார்டன்," என்பார். மற்றும் சிலர், "அழுகிற குழந்தைகளுக்கு விளையாட்டுக் கருவிகளைக் கொடுத்து, அவர்களுடைய காலத்தைச் சுகமாய்க் கழிப்பதுதான் கிண்டர்கார்டன்" என்பார். இன்னும் ஒரு சாரார் "சரித்திரம் இல்லையா. பூகோளம் இல்லையா, அதேமாதிரி கிண்டர்கார்டனும் ஒரு விஷயந்தான்" என்று சொல்வார். சற்று யோசித்துப் பார்த்தாலோ, இவையெல்லாம் தவறான எண்ணங்கள் என்பது எளிதில் புலப்படும். கிண்டர்கார்டன், விளையாட்டு விஷயந்தான் என்று அலக்ஷியம் செய்யும்படியானதன்று. காவியம், நாடகம், சரித்திரம், பூகோளம் முதலிய படிப்புகளைப்போல் ஒரு படிப்புமன்று. பின்னை அது என்னவென்றால்:—

சாதாரணமாய் நாம் குழந்தைகளுக்குப் பள்ளிக்கூடத்தில் ஏதோ கல்வி கற்றுக்கொடுக்கிறோமல்லவா? அக்கல்வியை எப்படிச் சரிவரவும், குழந்தைகளுக்குச் சுலபமாய்ப் புறியும் படியாகவும் சொல்லிக் கொடுக்கவேண்டும் என்ற முறைதான் கிண்டர்கார்டன். இப்பூவுலகமானது பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு, பல்கோடி நூறாயிரத்தாண்டாக நிலைநின்றிருக்கிறது. இப்பல்லாயிரம் வருஷங்களாகவும், குழந்தைகள் பிறந்து வளர்ந்திருக்கின்றனர். அவர்களுக்குக் கல்வி கற்றுக்கொடுப்பதும் சகஜமாய் நடந்துகொண்டே வந்திருக்கின்றது. ஆதலின் சாஸ்திர ஞானிகள் எக்காலத்திலும் இவ்விஷயத்தைப் பற்றியே தங்கள் புத்தியைச் செலுத்தியிருக்கிறார்கள்.

உதாரணமாக, முற்காலத்து இந்தியாவில் குழந்தைகளுக்குப் பள்ளிக்கூடம் எதுவென்றால் குருவின் வீட்டுக்குச் சென்று, அங்கே குருவின் வார்த்தைகளைக் கேட்டு, வேதாத்தியயன பராயணம் செய்வதே. அம்மாதிரியே க்ஷத்திரியர்களுக்குப் பள்ளிக்கூடம் என்னவென்றால், யானையேற்றம், குதிரையேற்றம், அம்பெய்தல், காடு சென்று கரடி, புலி, சிங்கம் முதலிய காட்டு மிருகங்களைக் கொல்லுதல் முதலியவையே.

இப்படிப் பலநாள் கழிந்தபின், குழந்தைகளுக்கு ஞானத்தைப் புகட்டுவதைப்பார்க்கிலும் அவர்களைத் தாங்களே ஞானம் சம்பாதிக்கும் படியான ஸ்திதிக்குக் கொண்டுவருவதுதான் உத்தமம் என்று தோன்றிற்று. அது எப்படியென்றால், சாதாரணமாய்க் கையைக் கட்டிக் கொண்டு பேசாமல் உட்கார்ந்திருக்கும் பையனே நல்லவன் என்று நம்முன்னோர் எண்ணியிருந்தார்கள். இப்பொழுதோ, குழந்தை திடகாத்திரமுடையவனாய், இங்குமங்கும் ஆடித் திரிந்து, ஓடிக் குலாவி, எப்போதும் சிரித்தவண்ணமாய் இருக்கும் பையனே நாளாவர்த்தியில் புத்திகூர்மை யுடையவனாவான் என்று சொல்லுகிறார்கள். அதற்கு உதாரணமாக, நீராவியின் அபார சக்தியை முதன்முதலில் கண்டுபிடித்த ஜேம்ஸ் வாட், ஜேம்ஸ் பர்கூஸன் என்ன, கம்பி இல்லாத் தந்தியைக் கண்டுபிடித்த மார்கோனி என்ன, மின்சாரத்தின் அநேக உபயோகங்களைக் கண்டுபிடித்த எடிஸன் என்ன, பிற்காலத்தில் பெரிய தளகர்த்தனாய் விளங்கின நேபோலியன், வெல்லிங்டன் என்ன, இவர்களெல்லோரும் குழந்தைப் பருவத்தில் சுறுசுறுப்பாய் இருந்தவர்கள் என்று சரித்திரம் கூறுகிறது.

ஆதலின், கல்வி பயில்விப்பதில் நாம் கவனிக்கவேண்டியவைகளில் முதலாவது என்னவென்றால்:—கையைக் கட்டிக்கொண்டு பேசாமலிருக்கும் குழந்தைதான் சாது என்றும், அப்படிக்கல்லாதவன் துஷ்டன் என்றும் நாம் எண்ணக்கூடாது. எப்போது பார்த்தாலும், விஷமம் பண்ணிக்கொண்டிருக்கிற குழந்தையையும் சரியான வழியில் கொண்டுவந்தால் நல்லவனாக்கிவிடலாம் என்பதே.

இரண்டாவது, நம் முன்னோர்கள், தத்துவ சாஸ்திரத்தையே அறியவேண்டுமென்றும்,

அதற்கு சாதகமாக ஜபதபம் முதலியவைக ளையே கைக்கொள்ளவேண்டும் என்றும் இருந் தார்கள். ஆதலின் குழந்தைகளைப் படிப்பிலே யே கவனமா யிருக்கும்படிக்கும், விளையாட்டு விஷயத்தில் காலம் போக்காமலிருக்கும்படிக் கும் சொல்லி வந்தார்கள். எப்போதும் புஸ்த கத்தை வைத்துக்கொண்டு வாசிக்கும் பிள் ளையே புத்திமானென்றும், கொஞ்ச காலத்தை யும் விளையாட்டில் செலவழிப்பவன் சோம் பேறி என்றும் நினைத்திருந்தார்கள். இப்பொ ழுதோ அப்படியல்ல. சிறுவர்களும் சிறுமிக ளும் எவ்வளவுக்கெவ்வளவு உற்சாகமாய் விளை யாடுகிறார்களோ, அவ்வளவுக்கவ்வளவு புத்தி தீக்ஷணியமாகிறது என்று நினைத்திருக்கிறார் கள். ஆதலால்தான் நமது பள்ளிக்கூடங்களில் இப்போது 'ஜிம்நேஷியம்' 'டிரில்' 'புட்பால்' முதலிய எல்லா விளையாட்டுக்களையும் கைக் கொண்டு வருகிறார்கள்.

மூன்றாவது, முற்காலத்தில் புஸ்தகத்தை வைத்துக்கொண்டு வாசித்தால்தான் வாசிப்பு என்றும்,மற்றவையொன்றும் வாசிப்பு இல்லை என்றும் நினைத்தார்கள். இப்பொழுதோ, கட வுளால் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிற இயற்கைப் பொருள்களைக் கவனிப்பதும், சித்திரம் எழுது வதும், சங்கீதம் கற்பதும், இன்னும் இவை போன்றவைகளும் வாசிப்புக்குச் சமானமான வை என்று ஆராய்ந்திருக்கிறார்கள்.

ஆதலின், தற்காலப் படிப்புக்கும் முற்காலப் படிப்புக்கும் மூன்று விதமான வித்தியாசங் கள் உள்ளன. முதலாவது, மனப்பயிற்சிக்கும் தேகப்பயிற்சியே முக்கியசாதனமாதலால், தே கப்பயிற்சியில் அதிக கவனம் செலுத்துகிறார் கள். இரண்டாவது, சிறுவர்களுக்கு உற்சாக மாகவே கல்வி பயில்விக்க வேண்டுமாதலால் அவர்களுக்கு வேண்டிய காலத்தை விளையாட் டில் செலுத்தச் செய்கிறார்கள்.

மூன்றாவது,புத்தகத்தை வைத்துக்கொண்டு மட்டும் வாசிக்காமல் சித்திரம் எழுதுவதினா லும், நாடகம் நடிப்பதினாலும், அங்குமிங்கும் ஓடித்திரிவதினாலும், இயற்கை அற்புதங்களைக் கண்டு ஆனந்திப்பதனாலும் கல்வி பயில்கின் றார்கள்.

இவ்விஷயங்கள் எல்லாவற்றையும் நன்கறி ந்து, தாயானவள் எப்படி குழந்தைக்குப் பாலூ ட்டுகிறாளோ, அதேமாதிரி உபாத்தியாயர் குழந் தைகளுக்குப் பட்சமாய் ஞானப்பாலை ஊட்டு வதுதான் கிண்டர்கார்டன்என்பது.இம்முறை யின் கருத்து என்னவென்றால், பிள்ளைகளை நன்றாய் வேலைசெய்யவும், நன்றாய் விளையாட வும், காரியங்களில் அதிக உற்சாகமா யிருக்க வும், உபயோகமான வழிகளில் பலருடன்கூடி ஒத்து உழைக்கவும் செய்வதே.

''இது எல்லாம் சரிதான். ஆனால் இதை எல் லாம் அனுபவத்துக்குக் கொண்டுவருகிறதெப் படி?'' என்று சிலர் கேட்கலாம். அக்கேள்வி க்கு இனி மறுமொழி கூறுவோம்:

பள்ளிக்கூடங்களில் சாதாரணமாய்ப் பாஷா ஞானம், கணக்கு முதலியவைகளைச் சொல் லிக் கொடுக்கிறார்கள். அப்படிப் பள்ளிக்கூடத் தில் சொல்லிக்கொடுக்கும் ஒவ்வொரு விஷயத் துக்கும் கிண்டர்கார்டன் முறையை அனுச ரிக்கலாம்; உதாரணமாய் நமது தாய்ப்பாஷை யாகிய தமிழ்ப் பாடத்தைப் பள்ளிக்கூடத்தில் எப்படி நடத்தலாமென்பதைக் கூறுவோம்.

வகுப்புக்குப் போனவுடன் குழந்தைகளு க்கு வந்தனமளித்து, இரண்டு மூன்று நிமிஷம் தேகப் பயிற்சி செய்வித்துப் பிறகு, உற்சாக மான முகத்துடன் குழந்தைகளைப் பாடத்தை வாசிக்கச் செய்யவும். அப்படி ஒரு சிறுவன் வாசிக்கும்போது, அவன் செய்யும் பிழை களை மற்றப் பிள்ளைகளைக் கவனிக்கு மாறு கூறவும். முழுப்பாடத்தையும், இப் படி ஒருதடவை வாசித்தான பிறகு, நிறுத்த வேண்டிய இடத்தில் நிறுத்தி, உரக்க வாசிக்க வேண்டிய இடத்தில் உரக்க வாசித்து, ரசிக மாய்க் குரலைஏற்றியும் தாழ்த்தியும் உபாத்தியா யரே ஒருதரம் வாசித்துக் காட்டவேண்டும்.

பிறகு பாடத்தின் விஷயத்தைப்பற்றி சா ராம்சமான சில கேள்விகளைக் கேட்டு, அதன் மேல் படிப்படியாய்ப் பாடத்தை நடத்தவும்.

செய்யுளாயிருந்தால், சரியான குரலுடன் இசையுள்ளவர்கள் இசையோடும், அல்லாத வர்கள் அர்த்தமாவது நன்றாய்த் தெரியும்படி யும் வாசிக்கச்செய்யவும். செய்யுட்களைப் பதம் பிரித்து வாசிப்பது கடினமாதலால், புதுச் செய்யுட்களை முதலில் உபாத்தியாயரே வாசி த்துக்காட்டுவது நலம்.

இப்படி வினாவிடை வழியாய்ப் பாடத்தை நடத்தியானபின் (கதையுள்ள பாடங்களாயிருந் தால் நல்லது) அதைக் குழந்தைகளுக்கு

உற்சாகம் உண்டாகும்படியாய் நடிப்பித்துக் காண்பிப்பது மேன்மை. ஏனெனில் குழந்தைகளின் புத்தி கூர்மை, நாடகரூபமாய்க் கதைகளை நடித்துக்காட்டுவதில் நன்கு புலப்படும். இதற்கு உதாரணமாக, அனுபவத்தில் நடந்த ஒரு விஷயத்தைக் கூறுவோம்.

பள்ளிக்கூடத்தில் ஒரு நாள் "ஒரு சிறுவன் காட்டு மார்க்கமாய் ஒரு ஊரிலிருந்து மற்றோரூருக்குப் போய்க் கொண்டிருந்தான்" என்ற கதை ஆரம்பிக்கவேண்டியிருந்தது. அதற்குத் தகுந்தபடி, பத்து அல்லது பதினைந்து குழந்தைகளை இருவரிசையாய் நிறுத்தி, "பையன்களே! நீங்கள்தான் மரங்கள் என்று நினைத்துக்கொள்ளுங்கள்" என்றோம். உடனே அவர்கள் எல்லோரும் என்ன செய்தார்கள் தெரியுமா? இருகைகளையும் விரித்துக்கொண்டுஇப்பக்கமும்அப்பக்கமும்,பேய்பிசாசுஆடுவதுபோல்ஆடிக்கொண்டிருந்தார்கள்.உபாத்தியாயருக்கோ ஒன்றும் புரியவில்லை. 'என்ன சமாசாரம்'என்று விசாரித்ததில், ஒருபையன் சொன்னான். "ஐயா! எங்களை மரம் என்று நினைக்கச் சொன்னீர்களே, புயற்காற்று அடித்தால் காட்டில் மரங்கள் அசையாவோ? அம்மாதிரி நாமும் அசைந்தோம்". உபாத்தியாயர், "அந்தச் சிறுவன் காட்டு வழியாய்ப் போகும் போது காற்று அடிக்கவில்லை" என்று இவர்களை சும்மாயிருக்கச் செய்தார். அருகிலிருந்தவரெல்லோரும் பையன்களின் புத்தி சாதுரியத்தைக்கண்டு மெச்சினார்கள்.

இப்படி நடிப்பித்துக் காட்டியானபின்,செய்யுட்பாடமானால், அதை நெட்டுரு செய்யும்படி சொல்லலாம். ஏனெனில், செய்யுட் பாடத்தை நாம் மறக்காமல் மனதில் வைத்துக் கொள்வதால் அநேக நன்மையுண்டு. சில நாள் நாம் ஆறுதல் வேண்டலாம். சிலநாள் நாம் தெம்பாயிருக்கலாம். சில சமயத்தில் நமக்கு தத்வ சாஸ்திரத்தில் புத்தி செல்லும். சில சமயத்தில் இலகுவான விஷயங்களில் இச்சையிருக்கும். ஆதலின் சமயத்துக்குத் தகுந்தபடி, சிரிப்பு, ஸந்தோஷம் பரிதாபம் முதலிய உணர்ச்சிகளை உண்டாக்கக்கூடிய செய்யுட்களை எப்பொழுதும் ஞாபகம் வைத்துக்கொள்வது மேன்மை.

இவ்வாறே கணித சாஸ்திரத்திலும். முன்னாளில் குழந்தைகள் பள்ளிக்கூடத்துக்குப் போனால் முதன் முதலில் சொல்லிக்கொடுப்பது பெருக்கல் வாய்ப்பாடுதான். $7 \times 8 = 56$ என்றும்; $12 \times 9 = 108$ என்றும் குருட்டுப் பாடம் செய்வது அவசியமா யிருந்தது. இப்பொழுதோ குருட்டுப்பாடத்தை வரவரக் குறைத்து வருகிறார்கள். $4 \times 3 = 12$ என்பதற்குப் பதிலாக, நான்கு குன்று மணிகளை ஒரு வரிசையாய் வைத்து, அப்படி மூன்று வரிசைகளை வைத்தால் எவ்வளவு குன்று மணி யிருக்கும் என்று கேட்கிறார்கள். ஒரு மாம்பழம் அரை அணு என்றால், பத்து மாம் பழம் விலை என்ன என்கிறார்கள். ஏனெனில் குழந்தைகளுக்குத் தெரிந்தவிஷயத்தில் புத்தி செலுத்துவது சுலபமானது. தெரியாததும், மறை பொருளாயும் இருக்கிற விஷயத்தில் புத்தி செலுத்துவது கடினமானது.

இன்னமொரு விஷயம். முன்னாளில் பள்ளிக்கூடத்துப் பையன்களுக்கு வாசிக்கவும், கணக்குப்போடவும் தெரியுமே யொழிய, வேறொன்றும் தெரியாது. இப்பொழுதோ நமது குழந்தைகளுக்குப் பாட்டுப்பாடவும்,சித்திரம் வரையவும், விதம் விதமான ஆடல்களை விளையாடவும், பாய்ப்பின்னல்(வர்ணத்தாளால்) போடவும், ஈரமான களிமண்ணினால் கத்திரிக்காய், வாழைக்காய் முதலியன பண்ணவும் சொல்லிக்கொடுக்கிறார்கள். ஏனென்றால், அவைகளால் நன்மை அதிகம் இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். உதாரணமாக, இங்கிலாந்திலிருந்த தளகர்த்தனை வெல்லிங்டன் என்பவர் வாடர்லூ என்ற சண்டையில் நெபோலியனை வென்றபிறகு, தான் ஈடன் பள்ளிக்கூடத்தில் வாசித்தபோது கற்றுக் கொண்ட விஷயங்கள்தான் சண்டையில் மிக்க நன்மையுண்டாக்கின என்று சொன்னார். அதாவது, பத்துப் பேருடன் கூடி விளையாடினால், அதிகாரி (Captain) சொன்னபடி மற்றவர் கேட்கவும், பலரும் ஒத்து உழைத்து ஒரு காரியத்தைச் சாதிக்கவும், மற்றவர்களுக்காகத் தான் சிரமப்படுதலும் இன்னும் ஏனைய நற்குணங்கள் நன்றாய்ப் படிகின்றன. இக்குணங்களை வைத்துக்கொண்டு நாம் நமது வாணாளில் பல நன்மைகளைப் பலருக்கும் புரியலாம். இதைப்பற்றித்தான் நமது கவிசிரேஷ்டரான ரவீந்திரநாத் டாகூர் என்பார்,"குழந்தைகளின் விளையாட்டும், புன்சிரிப்பும் எங்கிருந்து வந்தது என்றால், சொர்க்க லோகத்திலிருந்து

கிட்டவா நாயே என்றால், மூஞ்சியை நக்குகிறது.

நேரே வந்தது," என்று அழகாய்க் கூறியுள்ளார். இதை அனுசரித்தே தத்வசாஸ்திரிகளான ஸ்பென்சர், ஷில்லர் முதலியவர்களும், "குழந்தைகளின் விளையாட்டைப் பார்க்கிலும் அற்புதமானது ஒன்றுமில்லை" என்று சொல்லியிருக்கிறார்கள். நமது தமிழ்ப்பாஷையிலும், "யாழினிது, குயிலினிது, என்பார் தமது மக்கள் மழலைச் சொல் கேளாதார்" என்று கூறியிருக்கிறார் அல்லவா? இன்னும் மனிதர்களுக்குத் தெரிந்த அறுபத்து நாலு கலைகளுள்ளும் காவியம், சித்திரம், சிற்பம், சங்கீதம் முதலியவை எவ்வளவு சிரேஷ்டமானவையோ அப்படியே எல்லாவிஷயத்தைப் பார்க்கிலும் குழந்தைகளுக்கு விளையாட்டுத்தான் சிரேஷ்டமானது. ஆதலால்தான் சில பள்ளிக்கூடங்களில் குழந்தைகள் தூங்குவதற்காகக் கொஞ்சம் ஒழிவு நேரம் வைத்திருக்கிறார்கள்.

இயற்கைப் பாடம்.— மற்றும் குழந்தைகளுக்கு இயற்கை அற்புதங்களை நன்றாய்க்கற்றுக் கொடுக்கவேண்டும். அதற்காகக் குழந்தைகளை தோட்டத்துக்கு அழைத்துக்கொண்டுபோய் அங்கே வளரும் செடி கொடிகளையும், மரம் மட்டைகளையும் காண்பித்து, அவற்றின் பெயர், அவைகள் காணப்படும் இடம், அவைகளின் தோற்றம், மற்ற செடிகளுக்கும் அவைகளுக்கும் உள்ள வித்தியாஸம், அவைகளின் உபயோகங்கள் முதலியவைகளைக் கற்பிக்க வேண்டியது. குழந்தைகளுக்கு எப்பொழுதும் நாய், பூனை, அணிற்பிள்ளை, கோழிக்குஞ்சு, முயல், புறா இவைகளிடத்தில் பிரியமாதலால் அவைகளை வளர்க்கச் செய்வது உத்தமம். பலவகையான மீன்களை உற்றுநோக்கி அவைகளின் நிறத்தையும், வாத்து தண்ணீரில் எப்படி நீந்துகிறதென்பதையும் சொல்லிக் கொடுத்தால் குழந்தைகளுக்குச் சந்தோஷமாயிருக்கும். இப்படியே ஆகாயத்தின் தன்மையென்ன, வாயு மண்டலத்தின் வைபவமென்ன, இன்னும் சந்திர சூரியரின் சுபாவமென்ன என்பவற்றைப்பற்றிக் கூறலாம். இதினின்று:—

"மாநிலம் சேவடியாகத் தூநீர்
வளை நரல் பௌவம் உடுக்கையாக
விசும்பு மெய்யாக, திசை கையாகப்,
பசுங்கதிர் மதியமொடு சுடர் கண்ணாக
இயன்றவெல்லாம் பயின்று, அகத்தடக்கிய
வேத முதலவன் என்பானை" த்துதித்து,

அவர் தம் பேரருளை அநுதினமும், அல்லும் பகலும் அடையுமாறு பிரார்த்திக்கச் செய்யுமின்.

சிக்ஷாநுகூலமான கைத்தொழில்

மற்றும் கிண்டர்கார்டனில் கூறும் விஷயங்களுள் முக்கியமான தொன்றுள்ளது. அது யாது எனின், சிக்ஷாநுகூலமான கைத்தொழில்.

நமது இந்தியா தேசமானது பல நூற்றாண்டுகளாகக் கைத்தொழிலில் மேன்மையடைந்திருந்தது என்பது வெளிப்படை. ஆனால் இப்பொழுது சுமார் இரண்டு நூற்றாண்டுகளாக நமது கைத்தொழில் குறைந்திருக்கிறதென்றும், அதன் மூலகாரணம், நமது பள்ளிக்கூடத்தில் வாசிப்பதற்கும் எழுதுவதற்கும் சொல்லிக்கொடுக்கிறார்களே தவிர, கைத்தொழிற் பயிற்சி செய்வதில்லை என்றும் எல்லாருக்கும் தெரியும். இக்குறையை நீக்கும் பொருட்டும், தேக சிரமப்பட்டு வேலை செய்வது நன்மையே யொழிய, தீமையில்லை என்பதைத் தெரிவிக்கும் பொருட்டும், குழந்தைகளுக்கு சிக்ஷாநுகூலமான கைத்தொழில் பள்ளிச் சாலையில் சொல்லிக் கொடுக்கிறார்கள். பெண் பிள்ளைகளுக்கு சங்கீத ஞானமும், தையல் வேலை செய்வதும், சமையல் செய்யும் திறனும் முக்கியமானவை. ஆண்பிள்ளைகளுக்கோ வென்றால் கொத்துவேலை, தச்சுவேலை முதலியவை ஏற்கும். மற்றும் பொதுவாக ஈரக் களிமண்ணால் ரூபம் செய்தல், காகிதத்தைக் கத்தரித்தல், அட்டைகளால் வீடு, கப்பல் முதலியவைகளைச் செய்தல் முதலியவைகளைக் கற்பிக்கலாம்.

இவைகளின் உபயோகம் பின்வருமாறு:—

(1) சித்திரம் வரைவதாலும், காகிதம், களிமண் முதலியவைகளில் உருவம் அமைத்தலாலும் ரூபம், வர்ணம், இவைகளின் சுவாரசியத்தைக் குழந்தைகள் அறிவார்.

(2) ஏதாவது ஒரு பதார்த்தத்தைப் பார்த்து அதைப்போலவே ஒரு உருவம் அமைத்தலால் குழந்தைகளுக்கு அதன் உருவம் மனதில் நன்றாய்ப் படியும். உதாரணமாக யானை, குதிரை, பானை, தென்னைமரம் முதலிய வார்த்தைகளைச் சொல்லுவதைப் பார்க்கிலும், அம்மாதிரி சித்திரப்படங்கள் அமைப்பதால், விஷயம் எப்போதும் மறந்துபோகாம லிருக்கும்படி புரியும்.

ஆனால் முதன் முதலில் குழந்தைகள் வரையும் சித்திரமும், அமைக்கும் உருவமும் அழகாயிருக்கமாட்டா. அதற்காகக் குழந்தைகளைக் கோபித்துக் கொள்ளக்கூடாது. பட்சமாய்ப் பாராட்டி, கொஞ்சங் கொஞ்சமாய் அறிவை அதிகரிக்க வேண்டும்.

(3) அப்படிச் சித்திரம் வரைதலில், கையைத் தாராளமாய் வீசிப் பெரிய உருவங்களை முதலில் அமைக்கச் சொல்லி, பின்னர்தான் சிறிய உருவங்களை அமைக்கச் சொல்லவும்.

(4) அவ்வாறே உருவங்களை வர்ணக் காகிதத்தில் அமைப்பதால் குழந்தைகளுக்கு மிகவும் உற்சாகமாய் இருக்கும்.

(5) களிமண்ணால் உருவம் செய்யும் பொழுது மாத்திரம், குழந்தைகள் கையை அழுக்காக்கிக் கொள்ளாமல், சுத்தமாய் வைத்துக் கொள்ளும்படி எச்சரிக்கை யிடவேண்டும். களிமண் மிகவும் ஈரமாயும், காய்ந்துமிருக்கக் கூடாது. சரியான பக்குவமா யிருப்பதற்குக் களிமண்ணின்மேல் ஒரு ஈரத்துணியைப் போட்டிருக்கவும்.

இவைகளையெல்லாம் ஜாக்கிரதையாய்க் கவனித்து வந்தால், சிக்ஷணானுகூலமான கைத்தொழில் குழந்தைகளுக்குப் பலவித நன்மையை விளைவிக்குமென்பதற்கு ஐயமேயில்லை.

இவ்வண்ணமே நெய்தல், முடைதல் இவைகளிலும் குழந்தைகளுக்கு அதிகப் பிரியம். ஏனென்றால், இயற்கைப் பொருள்கள் எல்லாவற்றிலும் முடைதல் இருக்கிறது. அடர்ந்த காட்டில், மரங்களின் கிளைகள் ஒன்றோடொன்று பின்னிக்கொண்டிருக்கின்றன வல்லவா? தரையில் வளரும் புற்பூண்டுகளும் ஒன்றோடொன்று பின்னி யிருக்கின்றனவல்லவா? இன்னும் பட்சிகள் தங்கள் கூடுகளையும், சிலந்திப் பூச்சி, தான் வசிக்குமிடத்தையும் எவ்வளவு அற்புதமாய் நெய்திருக்கின்றது? இவைகள் எல்லாவற்றையும் பிள்ளைகளுக்குக் காட்டி அவர்கள் மனதைச் சந்தோஷப்படுத்தவேண்டும். பின்பு தாமே காகிதத்தையும், ரோமத்தையும், நூலையும் வைத்துக்கொண்டு நெய்ய ஆரம்பிப்பார்கள். இப்படிச் செய்வதில், நெசவுகாரர்களைப்பற்றிச் சம்பாஷணைசெய்து, முற்காலத்திலும், தற்காலத்திலும் உள்ள நெசவு தினுசுகளின் வித்தியாஸத்தை எளிதிற்கூறலாம்.

பூகோளம்.—இப்படியே சரித்திரத்தையும் பூகோளத்தையும் குழந்தைகளுக்குஇனிப்பாய் இருக்கும்படி சொல்லிக்கொடுக்கலாம். பூகோளத்தைப்பற்றி இங்கே சற்று விஸ்தரித்துக் கூறுவோம். மற்ற தேசங்களைப் பற்றி நாம் அறியவேண்டுமாயின் அவ்வத் தேசங்களைப் பற்றிய கதைகளைக் கேட்பது முக்கியமாகும். ஆதலால் பூகோள பாடம் நடக்கும் காலத்தில், மற்ற தேசத்திலுள்ளவர்களின் படங்களை சுவற்றில் மாட்டவேண்டும். அங்கே காணும் காட்சிகளை மாஜிக் லாண்டர்ன் மூலமாயாவது, போட்டோகிராப் மூலமாயாவது குழந்தைகளுக்குக் காட்டலாம்.

உதாரணமாக நாம் இவ்வூரிலிருந்து (இவ்வூர் பெரியகுளம்) கொண்டே பூகோளம் கற்கவேண்டுமானால், இங்கிருந்து * லண்டனுக்குப் போவதாய்ப் பாவனைசெய்வோம். பூகோளப் படம் ஒன்றில் இவ்வூர் இருக்குமிடத்தையும், லண்டன் இருக்குமிடத்தையும் சுட்டிக்காட்டி நாம் போகவேண்டிய வழியை முதலில் ஸ்தூலமாய் வரையவேண்டும்.

முதற்படத்தில் பெரியகுளத்திலிருந்து மோட்டார் புறப்படுங் காட்சியைக் காண்பிக்கலாம். இரண்டாவது படத்தில், அம்மைநாய்க்கனூருக்குப் போய், அங்கே ரயில்வண்டி புறப்படுகிறதை ஒரு காட்சியாய்க் காண்பிக்கலாம். (சில குழந்தைகள் ரயில்வண்டியைப் பார்த்திருக்கவே மாட்டார்கள். அவர்களை ரயில் ஸ்டேஷனுக்கு அழைத்துப்போய் ரயில் வண்டியைக் காட்டினால் வெகு நன்மையுண்டாகும்.)

மூன்றாவது, ரயில் ஏறி மதுரைக்குப்போவதாகப் பாவிப்போம். அங்கிறங்கி ஸ்ரீ மீனாக்ஷியம்மன் கோவிலை தரிசனம் செய்து, திருமலை நாயக்கர் மஹாலைப்பார்த்து,அங்கிருக்கும் வண்டியூர் தெப்பக்குளத்தைக் காட்டி, அருகிலிருக்கும் சுப்பிரமணிய ஸ்தலமாகிய திருப்பரங்குன்றத்துக்கும் அழைத்துப் போகலாம். (இவை யெல்லாம் மானஸீக மானதால் படங்களைமட்டும் ஒட்டினால் போதுமானது.)

மதுரைக்கருகில் வைகையாறு வருகின்றது. அதை நீலவர்ணமாய் வரையச் சொல்லவேண்டும். கரையோரங்களில் தென்னை, பனை முதலிய மரங்களின் சித்திரங்களை வரையலாம்.

* இப்படியே மற்ற ஊர்களுக்கும் செய்யலாம்.

கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டாற்போல்.

அங்கிருந்து இராமேசுவரத்துக்குப் போய் ஸ்ரீ இராமலிங்கஸ்வாமியைத் தரிசனம்செய்து, சேதுபந்தனத்தில் நீராடி, பிறகு இலங்கைத் தீவுக்குப் படகேறிச் செல்லலாம். ஒரு நாள் அவ்விடத்தி லிறங்கி, அங்கிருக்கும் தேயிலை, காப்பிக்கொட்டை, ரப்பர் முதலிய வஸ்துக்களின் வியாபார விஷயத்தைக் கேட்டறியலாம்.

பின் P and O ஸ்டீமரில் ஏறி, இந்துமஹா சமுத்திரத்தைக் கடந்து, ஏடனில் இறங்குவோம். அவ்வூரில் பார்க்கவேண்டிய அதிசயங்களைப்பார்த்து, செங்கடலைத் தாண்டி, ஸூயஸ் கால்வாய் வழியாய்ப் போய், போர்ட் ஸேட் (Port Said) என்ற இடத்தில் இறங்கி ஈஜிப்ட் என்ற தேசத்தைப் பார்ப்போமாக.

அங்குள்ள பெரிய வனாந்தரத்தையும், "கானலை நீரென்றெண்ணிக் கடுவழி திரியுமான் போல்" திரிகின்ற வியாபாரிகளையும், பிரமிட்ஸ் (Pyramids) என்ற அபூர்வக்கட்டடங்களையும் பல ஆயிரம் வருஷங்களாக அழிவற்றிருக்கும் மம்மிகளையும் பார்த்து ஆநந்திப்போமாக!

பின் மத்தியதரைக்கடல் வழிச்சென்று இத்தாலியா தேசத்தி லிறங்கி, ரோமாபுரி, வெனிஸ், நேபிள்ஸ் முதலிய நகரங்களைப் பார்த்து, பிரஞ்சு தேசத்துக்குப் போய், பிரெஞ்சுக்காரர்களுடைய நடை யுடை பாவனைகளையறிந்துகொண்டு, டோவர் ஜலசந்தியைத் தாண்டி, பெரும் புகழ்படைத்த லண்டன் மாநகருக்குப் போய்ச் சேருவோம்.

அங்கேயுள்ள நமது சக்கரவர்த்தியார் சக்கரவர்த்தினியார் முதலியவர்களைப் பார்த்து, சண்டைக்குப்போயிருந்த படைவீரர்களையும், மற்றவரையும் கண்டு மான்செஸ்டர், பர்மிங்ஹாம் முதலிய கைத்தொழில் அதிகமாயிருக்குமிடங்களுக்குச் சென்று அரிய பெரிய விஷயங்கள் பலவற்றையும் அறிந்துகொள்வோமாக!

இப்படிச்சரியாய் ஒவ்வொருவிஷயத்தையும் சொல்லிக்கொடுப்பதென்றால் ஒரு வருஷம் பிடிக்கும். (மேற்கூறிய பாடத்தை நடப்பிப்பதற்கு) ஆயினும், உபாத்தியாயரும் காலத்தைச் சாதுரியமாய்க் கழிக்கலாம். குழந்தைகளுக்கும் பூகோளம் நன்றாய் விளங்கும்.

சரித்திரம்.—இதேமாதிரி சரித்திரத்தையும் வெகுநன்றாய்ச் சொல்லிக்கொடுக்க வழியிருக்கிறது. இவ்வுலகத்தில், பல சமயங்களிலும் பல தேசங்களிலும் அவதரித்த மஹான்களின் ஜீவிய சரித்திரத்தைச் சொல்வதுதான் சரியாய்ச் சரித்திரம் சொல்லிக்கொடுக்கும் முறையாகும். உதாரணமாக, இந்தியாவில் ஸ்ரீராமாவதாரம் கிருஷ்ணாவதாரம் முதலியவைகளைச் சொல்லி "ஸ்ரீகிருஷ்ணஜனனம்" முதலிய சினிமாப்படங்களைப்பார்க்கக்குழந்தைகளை அழைத்துக்கொண்டு போகலாம். பிற்கால சரித்திரத்தை விளக்குவதற்கு புத்தர், மகமது, சிவாஜி மகாராஜா, அக்பர், அவுரங்கசீப், விக்டோரியா மகாராணி, ஸ்ரீமான் கோகலே, ஜியார்ஜ் சக்கரவர்த்தி முதலியோரின் ஜீவிய சரித்திரத்தைச் சுருங்கச் சொல்லலாம். அப்படியே, இங்கிலாந்தின் சரித்திரத்தை விளக்க மஹா ஆல்பிரட், எலிஸபெத் மகாராணி, நெல்ஸன், ராபர்ட்ஸ், ஷேக்ஸ்பியர், கிச்சினர், ஏழாம் எட்வர்டு மன்னர் இவர்களைப்பற்றிக் கூறலாம்.

சிலசமயங்களில் நமது நாகரிக நிலைமையை விவரித்து வருங்கால் முன்னாளிலிருந்த இரட்டைமாட்டு வண்டிகளையும், பல்லக்குகளையும், இப்போதிருக்கும் டிராம் வண்டி, ரயில்வண்டி மோட்டார்வண்டி, பைசிக்கல், (துவிசக்கரம்) புகைக்கப்பல் ஆகாயக்கப்பல் ஆகிய இவைகளையும் ஒத்துப்பார்த்து, அவைகளுக் குள்ள பேதா பேதங்களை எடுத்துக் காட்டலாம். முன்னாளில் ஒரூரிலிருந்து, மற்றோரூருக்குப் போவதுஎவ்வளவு அபாயமாயிருந்ததென்றும் எவ்வளவு பணச்செலவு பிடித்ததென்றும் கூறலாம். இப்போது பதினாயிரம் மைல் தூரமானாலும் சரி, எவ்வளவு சுலபமாய் நாம் பிரயாணம் செய்கிறோம் என்பதைச் சொல்லி, ஒரு சிறு உபந்நியாஸம் செய்யலாம்.

ஆதலின் சிறு குழந்தைகளைப் பள்ளிக்கூடத்தில் எப்படிப் பாராட்டவேண்டுமென்றால், தோட்டக்காரன் விதையை பூமியில் விதைத்து அது செடியாய் முளைத்தபிறகு, அதற்கு எப்படி ஜாக்கிரதையாய்த் தண்ணீர் ஊற்றி, களைபிடுங்கி, வேண்டிய வெளிச்சம் வருமிடத்தில் வைத்து, தன் கண்ணுக்குக் கண்ணாய்ப் பாராட்டுகிறானோ, அப்படியே நாமும் நமது பாலர்களைக் காப்பாற்றவேண்டும். ஆதலால் தான், ப்ரோபல் (Froebel) என்பவர், "வாருங்கள்! நாம் நமது குழந்தைகளுக்கென்றே உயிர் வாழ்வோம்" என்று கூறியிருக்கின்றார்.

பெரியகுளம் வித்யாவிஷய பொருட்காட்சி சபையின் ஆதரவில் இது உபந்நியஸிக்கப்பட்டது.

ரஜபுத்திர வீரர்

RAJAPUT HEROES

[ஸ்ரீமான் பாஷ்யமய்யங்கார் அவர்கள்.]

1. ஹிம்மத்ஸிம்ஹன்

(98-ம் பக்கத் தொடர்ச்சி.)

யானைகள் அவ்வழியிற்சென்று மதில்சுவர்களைத் தாக்கும்போது அவைகள் இராஜபுத்திரது கண்களுக்குத் தோற்றாதபடி மொகலாயர், வழி முழுதும்கூரையும் சுவர்களும்கூடிய கட்டிடம் ஒன்று அமைத்தார்கள். ஏழு எட்டு நாள் வரையிலும், வேலை மும்மரமாய்நடந்தது. புதுக்கட்டிடமும் மதிற்சுவருக்கு வெகு சமீபம் வரையிலும் முடிந்துவிட்டது.

இவ்வாறு அதிக நஷ்டத்துடன் கஷ்டப்பட்டு தம் வேலையை முடித்ததற்கு மகிழ்ந்து, மொகலாயர் அந்நாளை நன்னாளாய்க் கொண்டாடினார்கள். அவர்கள் அன்றிரவில் நெடுநேரமளவும் வெறிக்கக் குடித்து, பாடியும் ஆடியும் களித்துப் பின் சோர்ந்து மெய்ம்மறந்து உறங்கி விட்டார்கள். இதுவரை இராஜபுத்திரர் தம்மைக் காத்துக் கொண்டனரேயன்றி மொகலாயருடன் தாமாக வலிய சண்டையிடாததுபற்றி இனியும் அவர்களால் தமக்கு ஒரு கெடுதியும் சம்பவியாதென்று மொகலாயர் நம்பி, கவலையற்று நன்றாய்த் தூங்கிக் கொண்டிருந்தார்கள். மறுநாளே யானைகளைக்கொண்டு மதிற்கதவுகளைத் தாக்கி உட்புகுவதென்பது மொகலாயரது கருத்தாகும்.

இது நிற்க. இராஜபுத்திரரது நிலையைக் கவனிப்போம். இப்பொழுதுதான் தங்களுக்கு நெருக்கடியான சமயமென்று ஹிம்மத்ஸிம்ஹன் நன்றாய் அறிந்தான். பொழுது விடிந்தபின் பகைவர் கோட்டைக்குள் புகுவது நிச்சயம். ஹிம்மத்ஸிம்ஹன் விஷயங்களை நுட்பமாய் ஆராயும் இயல்பினனானதால் இராஜபுத்திரர் பகைவர் வசப்பட்டு அழியாவழியை ஒரு நொடியில் அறிந்தான். இந்தப் பார் கோட்டையைப்பற்றிய விவரமனைத்தும் முன்னமேயே அவன் நன்றாய்க் கேட்டுணர்ந்தவனாகையால் அதைப்பற்றிய மர்மம் அனைத்தும்நன்றாய் அறிந்தான். மொகலாயர்க்கு இது காறும் தெரியாதிருந்தபாசறைவழியொன்றிருப்பது ஹிம்மத்ஸிம்ஹனுக்கு நன்றாய்த் தெரியும். இக்கோட்டை இராஜபுத்திரரது ஆளுகைக் குட்பட்டிருந்து, நாளடைவில் மொகலாயரால் கவரப்பட்டது; ஆகவே தம்முரிமையில் இருந்தகாலத்து இராஜபுத்திரர் அப்பாசறை வழியை வேண்டும்போது உபயோகித்து வந்தனர். கோட்டை மொகலாயரது ஆதீனத்துக்குள்ளான பிறகு, அவ்வழியொன்றிருப்பது அவர்களுக்குத் தெரியாமற் போயிற்று. நெருக்கடியான இச்சமயத்தில் தான் அவ்வழி தமக்கு உபயோகமாகக் கூடியதென்றுணர்ந்து, அந்தில மார்க்கமாய்ச் சென்று, வெளியிலுள்ள பகைவரை வளைக்க சூழ்ச்சிசெய்தல் நலம் என்று தீர்மானித்தான்.

நள்ளிருளில் மொகலாயர் அயர்ந்துறங்கும் வேளையில் ஹிம்மத்ஸிம்ஹன் தன்னுடன் இருநூறு போர்வீரர்களைக் கூட்டிக்கொண்டு இரகசிய மார்க்கமாய்ச் சென்று கோட்டைக்கு வெளியேவந்து மொகலாயர் முடித்திருந்த கட்டிடத்தின்பேரில் மண்ணெண்ணெயை ஏராளமாய் ஊற்றி கோட்டைவாயிலுக்கப்பால் வெகு தூரம்வரை வியாபித்திருந்தஅக்கட்டிடத்தின் ஒரு மூலையில் தீமூட்டிவிட்டனர். காற்று கோட்டைப்பக்கமாய் அடிக்கவே, அக்கட்டிடம் முழுதும் ஒரு நொடிக்குள் தீப்பிடித்து எரியவாரம்பித்தது. ஹிம்மத்ஸிம்ஹன் மண்ணெண்ணெயை மேன்மேலும் சொரியும்படி ஏற்பாடுகள் செய்து வந்தான். கட்டிடம் முழுதும் இருந்த விடம் தெரியாமல் தீக்கிரையாயிற்று. அந்தோ! எட்டுநாள் அன்னம், உறக்கம் இன்றி மொகலாயர் பட்ட பாடெல்லாம் ஒருக்ஷணத்திற்குள் வீணாய்முடிந்தது! மொகலாயர் திடுக்கிட்டு விழித்து, மனக் கலவரமடைந்து பகைவரைக்காணாதுநாலாபக்கமும் ஓடினார்கள். உடல் நடுக்கமுற பந்தங்களைக்கையிலேந்தி விரோதிகளைத் தேடலாயினர். அபரபக்ஷமாகையால் நிலவின் வெளிச்சமுமில்லாததுபற்றி மொகலாயர் வெருண்டு, தமக்குள் ஒருவரையொருவர் இன்னாரென்று கவனியாமல் பலமாய்த் தாக்கினார்கள். இராஜபுத்திரரோ ஈட்டிகளைக்கொண்டும்அம்புகளைக்கொண்டும் பகைவரை மடித்துத் தரை சாய்த்தனர். பின் ஹிம்மத்ஸிம்ஹன் தமக்குள் முன்னரே ஏற்படுத்திக்கொண்ட சங்கேதப்படி ஊதுகுழலின் முழக்கொலி செய்ய, அதுகேட்ட

வீரர் யாவரும் மீண்டும் தாம் வந்த பாசறை வழியே சென்று, பகைவர் கண்ணுக்குப் புலனுகாமல் கோட்டைக்குள் சென்றுவிட்டனர். வீரர் திலகமாகிய ஹிம்மத்ஸிம்ஹனது திறத்தால் அவனுக்காவது மற்றவர்க்காவது ஒரு தீங்கும் நேரிடவில்லை.

மொகலாயர் இதற்கும் சலிப்படையாமல் முன்போலவே வழியொன்று நிருமிக்கத் தொடங்கி அதை இரவும் பகலும் சாக்கிரதையாய்க் காவல் காத்துவந்தார்கள். கட்டி முடிந்தவுடன் மொகலாயர் கோட்டையைத் தாக்கத் தொடங்கி மூன்று பெரிய யானைகளை ஒவ்வொன்ருய் அவ்வழியிற் செலுத்தினுர்கள். இராஜபுத்திரர் யானைகளைக் குத்தித் தள்ளுவதற்கென்று கோட்டைவாயிலிற் பல கூரிய ஈட்டிகளை வைத்திருந்தார்கள். இதுகண்ட மொகலாயரும் யானைகளின் முகங்களில் எஃகினுல் செய்யப்பட்ட முகமூடிகளை (முகபடாங்களை)யும் பகைவரது அம்புகள் தைக்காதபடி அதன் தேகத்தில் கவசங்களையும் போட்டார்கள். பாகருக்கு ஒரு தீங்கும் விளையாதபடி, அம்பாரிகளும் கெட்டி இரும்பினுல் செய்யப்பட்டிருந்தன. மொகலாயர், வெற்றி தம்முடையதெனத் தீர்மானித்து யானைகளுள் ஒன்றை உள்ளே செலுத்தினுர்கள்.

கோட்டை யடிவாரத்தில் யானை வெளிவந்ததைக் கண்டதும், இராஜபுத்திரர் பாணங்களை வருஷித்தனர். பாகன், யானைக்கு நேர்ந்த நோயையுங் கவனியாது மதில்வாயிற் கதவுகளைத் தாக்கும்படி யானையை முன்னே செலுத்திக் கொண்டேயிருந்தான். அம்புகள் யானையின் பேரில் இருந்த அம்பாரியின் இரும்புத் திரைகளின்மேல் விழுந்தபடியால், பாகனுக்கு ஒரு விதமான கெடுதியும் சம்பவிக்கவில்லை. யானை தன்பேரில் அம்புகள் விழுவதையும் கவனியாமல், கோட்டை வாயிற் கதவுகளை, கூரிய ஆயுதங்களைத் துதிக்கையிற் பிடித்துத் தாக்கியது. யானை நின்ற இடத்திற்கு நேராக பெரும் பாறையொன்று கோட்டையின்மேற் கிடந்தது. இராஜபுத்திரர் அப்பாறையைப் புரட்டி, யானையின் மண்டைமேல் விழும்படித் தள்ளினுர்கள். பாறை பலமாய் மோதவே, நோய் பொறுக்கமுடியாமல் யானை அலறி வெகுண்டு கட்டிடத்தின் முற்பகுதியை அடியோடு இடித்துத் தள்ளிக்கொண்டே பின்னுக்கோடிற்று.

இச்சமயத்தில் தாமதம் உண்டாளுல் பகைவர் முன்போலவே. பாறையைக் கொணர்வரென்றஞ்சி, மொகலாயர் ஊக்கங் தளராமல் இரண்டாவது யானையை உடனே கோட்டைவாயிலை நோக்கி வழியிற் செலுத்தினுர்கள். மேலே யிருந்தோர், அம்பெய்தலைச் சிறிதும் லக்ஷியம் செய்யாது சென்று, கோட்டைவாயிலை நெருங்கி அங்கு வரிசையாகப் பளபளவென்று மின்னிக்கொண்டிருந்த ஈட்டிகளைக் கண்டதும் யானை பயந்து வாயிலைத் தாக்காமலே திரும்பிவிட்டது. பாகன் யானையை முன் செலுத்த முயற்சித்ததெல்லாம் வீணுகவே, இந்தத் தடவையும் மொகலாயரது எண்ணம் நிறைவேறவில்லை.

எஞ்சிநின்ற மூன்ருவது யானையின் உதவியால் பகைவரை அழித்தால் அழிக்கலாமேயன்றி இனி முன்போலவே தவறும்பக்ஷத்தில் தாம் இதுவரை பட்டகஷ்டம் வியர்த்தமென்றறிந்து மொகலாயர் வீராவேசத்துடன் அந்த யானையை செலுத்தினுர்கள். கஜமும் விரோதிகளால் எய்யப்பட்ட அம்புகளை ஒரு பொருட்படுத்தாது கோட்டைவாயிலை யணுகி, வலிய இருப்பாயுதங்களைத் துதிக்கையிற் பிடித்து, அங்கே யமைக்கப்பெற்றுள்ள ஈட்டிகளை அப்புறப்படுத்தி கதவைத் தன் முழுவலிமையுடன் உடைக்க யத்தனித்தது. கோட்டைக் கதவுகளும், யானை தாக்குவதால் தளர்ந்ததுபோல் கணீர் கணீரென ஒலி எழும்பிற்று. மேலே யிருந்தோர் யுத்த சிங்கங்களாய் அஞ்சாநெஞ்சம் படைத்திருந்தமையால்தான் இதுவரை தைர்யத்தை இழக்காமல் இருந்தார்கள். மொகலாயர் தம்மெண்ணம் பலித்ததென்று ஆனந்தமடைந்தனர். இவ்வளவு காலம் சலிப்படையாமல் இரஜபுத்திரர் காத்து வந்தது, முடிவில் பகைவர் கைபட்டு இறப்பதற்கென்று தோன்றிற்று.

ஆயினும் ஹிம்மத்ஸிம்ஹனைத் தலைவனுகப்பெற்ற அவர்களுக்கு ஒரு குறைவும் உண்டாகாதன்றே! இரஜபுத்திரர் எய்யும் அம்புகளுக்கும் கற்களுக்கும் சற்றுந்தயங்காது தாக்கிய அம்மிருகத்தைப் பாகன் உற்சாகப்படுத்தி வந்தான். யானையும் தன்னுலானமட்டும் கதவைப் பெயர்க்க பிரயத்தனம் செய்து, அதிலேயே கருத்துடையதா யிருந்தது. தன்னைச் சுற்றிலும் யாது நடந்ததென்பதை அது கவனிக்க

இனற்றுத் தண்ணீரை வெள்ளம் கொண்டுபோகுமா?

வேயில்லை. ஹிம்மத்ஸிம்ஹன் கோட்டையின் பேரிலுள்ள ஒரு கல் ஸ்தம்பத்தில் வலிய கயிறொன்றை உறுதியாகக்கட்டி அதைப்பிடித்துக் கொண்டே கீழே யிறங்கி யானையின் பிடரிக்கு நேராய் வந்து, தான் இதுவரையில் பற்களால் பற்றியிருந்த வாளை யெடுத்து நிராயுதபாணியான பாகனை தன் வாளுக்கிரையாக்கி, பின்னர் யானையின் மத்தகத்தின்மேல் நன்ருய் உட்கார்ந்து அதன் மண்டையில் ஒரு பெரிய ஆணியை வைத்து, தான் கொண்டுவந்திருந்த சம்மட்டியால் ஓங்கி யடித்தான். அடி பொறுக்க மாட்டாமல் யானை கோபத்துடன் தன் தலையைப் பலமாய் அசைக்க ஹிம்மத்ஸிம்ஹன் பொத்தென்று கீழே விழுந்தான். யானை, தன் முழுவலிமையையும் இழந்தமையால், இனி கோட்டைக் கதவைத் திறக்க அதனால் முடியாதென்று கண்ட இராஜபுத்திரவீரன் தான் வீழ்ந்ததைப்பற்றிச் சிறிதும் கவலையுறுனாய், தான் கைக்கொண்ட உபாயம் பலித்ததே யென்று அகமகிழ்ந்து தான் மரிப்பது திண்ணமெனக்கண்டும் திகிலடையாமல் மன அமைதியுடன் இருந்தான். இதுவே தகுந்த சமயமெனக் கொண்டு, நூற்றுக்கணக்கான மொகலாயர்கள் தனித்து மரணத் தறுவாயிலிருந்த ஹிம்மத்ஸிம்ஹன்மேல் பாய்ந்தார்கள். என் செய்வான் அரசகுமாரன்! இப்பொழுதும் தன் ஊக்கம் குன்ருதவனாய் அவர்கள் தன்னை நெருங்குமுன், தனக்கு நேராக தான் கோட்டையின்பேரி லிருந்து இறங்கி வந்த கயிறு தொங்குவதைக் கண்டு உடனே அதைப் பற்றிக்கொண்டு மேலே பரபரப்புடன் தொத்தி விரைவில் கோட்டையின்மேல் இவனைப்பற்றி கவலைப்பட்டுக் கொண்டிருந்த அவனது நண்பர் நடுவில் வந்து சேர்ந்தான். திரும்பவும் ஹிம்மத்ஸிம்ஹனை உயிருடன் காண்போமாவென் றேங்கியிருந்த இராஜபுத்திரர்க்குண்டான சந்தோஷத்திற்கு எல்லை யில்லை. கரகோஷம் புரிந்தனர் சிலர். அவனைச் சேர்த்து ஆலிங்கனம் செய்துகொண்டு ஆனந்தக் கண்ணீர் பெருக்கினேர் சிலர். அவனுடைய அஞ்சாநெஞ்சையும் வீரத்தையும் கண்டு அதிசயித்தனர் பலர். தன்னை நம்பிய வீரர்களைப் பகைவர் வசம் அடிமைகளாகவிடாமல் அவர்கள் உயிரைக் காப்பாற்றத் தன்னுயிரை ஒரு துரும்பெனக் கருதி முன்வந்த அக்குமாரனது ஆற்றலும் சௌரியமுந்தான் என்னே! இவனினும் பெருமைவாய்ந்த வீரர் திலகம் வேறொருவ ருண்டோ!

முற்றுகை செய்து பகைவரை வெல்வதென்று மொகலாயர் கொண்ட எண்ணம் பலிக்காமற் போகவே, அவர்கள் வேறொரு வகையால் பகைவரை மடிக்கத் தீர்மானித்தார்கள். மணலாலும் கற்களாலும் செயற்குன்றொன்று கோட்டை மதிலின் உயரமளவும் உன்னதமாக அமைத்து, பின் எளிதாகக் கோட்டைக்குள் நுழையலாம் என்று நினைத்தார்கள். மணல்மேடொன்றெழுப்பி கோட்டையி னுட்சென்ருலும் அல்லது இராஜபுத்திரர்க்குள்ள உணவுப்பொருள்கள் சுருங்கி அவர் பட்டினி கிடக்கவேண்டியதா யிருந்தாலும் மொகலாயர் இராஜபுத்திரரை அடக்கி வெற்றி பெறுதல் எளிதெனத் தேறி மும்மரமாய் தம் வேலையை ஆரம்பித்தார்கள்.

இங்ஙனமிருக்க, ஒருநாள் மாலை அடுத்த வனத்தில் மாடு மேய்த்துக் கொண்டிருந்த இடையனொருவன் மொகலாயரை யடுத்து கோட்டைக்குட்செல்லும் மர்மவழி யொன்றிருப்பது தனக்குத் தெரியுமென்றும், தனக்கு தகுந்த பரிசுகொடுப்பதாக அவர்கள் வாக்களிக்கும் பக்ஷத்தில், தான் அதை அவர்களுக்குக் காட்டுவதாகவும் கூற, மொகலாயரும் அவன் இஷ்டப்படிசெய்ய உடன்பட்டனர். இடையன் குறிப்பிட்ட வழி, கோட்டைக்கு வடக்குப்பக்கத்தில் உள்ளது. அது செங்குத்தான பாறையின்மூலமாய்ச் சென்றபடியால் மிகவும் அபாயகரமானதே. ஆயினும் அந்தப்பக்கத்தில்தான் மற்றப் பக்கங்களைக் காட்டிலும் மதிற்சுவர் தாழ்ந்திருந்தது. எவ்வாறுவது சிரமப்பட்டு, பாறையின்பேரில் ஏறிவிட்டால் உள்ளே செல்வது பெரிதல்லவென்று இடையன் சொல்லக் கேட்டுத் தேறிய மனத்தராய் 500 மகம்மதிய வீரர் தமக்குட் தீரனும் போர்வல்லோனுமான காசிம் கான் (Kasim Khan) என்ற இளைஞனைத் தமக்கு முதல்வனாய்க்கொண்டு இரவுபதினைந்து நாழிகைக்குப் புறப்பட்டார்கள். அவர்களைக் கூட்டிக்கொண்டு கோவலன் வடதிசை நோக்கிநடந்து தாம் ஏறவேண்டிய பாறையைக் குறுகினன். அந்தப் பாறையின் கீழே ஓடிக்கொண்டிருந்த நீரோடையைத் தாண்டி கோட்டை யடிவாரத்தையடைந்து மேலே செல்லும்

வழி மிகவும் குறுகியிருப்பதைக்கண்டு ஒருவர் பின்னொருவராய்ச் சந்தடி செய்யாமல் ஏறினர்கள். பாறையோ ஒரேநெட்டாய் உயர்ந்திருந்தது. பாதையும் மிகக்குறுகலாயிருந்தமையால் ஒருவர்பின் ஒருவரே போகக்கூடுமே யன்றி, பக்கத்தில் பலர் ஒரேவரிசையாக மேலேதொத்திச்செல்வது முடியாமற்போயிற்று. ஆகவே, இடையன் முதலிலும் அவனுக்குப் பின்னால் மொகலாயர் தலைவனாகிய காஸிம்கானும் முறையே மற்றைய வீரரும் மெதுவாய்க் காலடி வைத்து நடந்தார்கள். சிலவிடங்களில் இருப்பாணிகளைப் பாறையின் பிளவுகளிற் பொருத்தி சாக்கிரதையாய் அவற்றின்மேல் காலையூன்றிச் சென்றனர். பாறையின் உச்சியை யடைந்ததும் இடையனைப் பிடித்துக் கீழேயுருட்டி விட்டு, காசிம்கான் தன் மனிதருடன் மதிற் சுவரின் சமீபத்தில் வந்து சேர்ந்தான். சுவர் தாழ்ந்திருப்பதைக்கண்டு மொகலாயர் அகங்களித்தனர். அந்நள்ளிருளில் அங்கு ஒருவரும் இருக்கமாட்டார்களென்று நிச்சயித்து இருளையும் கவனியாமல் தம் வேலையிலேயே அவர்கள் கருத்துடையரா யிருந்தார்கள்.

காஸிம்கான் சுவரின்மேல் காலைப் பதிய வைத்து ஏறயத்தனிக்கையில், அவன் மார்பில் பளீரென்று ஒரு குத்து விழவே, அவன் கோவென்றலறிக் கூக்குரலிட்டு தனக்கு பின்னிருந்த வீரன்பேரில் சாய்ந்தான். அவன் விழுந்த வேகத்தால் மற்றையோரது உடலில் தாக்க, யாவரும் குப்புறக் கீழே விழுந்து இறந்தார்கள். அவர் கீழே விழுகையில் பகைவரை வாயில் வந்தபடி சபித்துக் கூக்குரலிட்டதனாலாய ஒலியைக்கேட்டு கீழேயிருந்த மற்ற மொகலாயர், கத்தி கேடயங்களைத் தாங்கிப் பகைவரைத் தாக்க வெழுந்தனர். அவர்கள் தம் மக்கள் மாண்டமைக்கு மிகவும் துக்கித்துப் பகைவரை எவ்வாற்றானும் பழிக்குப் பழி வாங்குவதென்று நிச்சயித்தார்கள். ஐயோ பாவம்! அவர்கள் மடமையால் தம்முயிர் விட்டது மிகவும் பரிதபிக்கத்தக்கதாம். பலர் அதிக கஷ்டப்பட்டு இரஜபுத்திரரது அம்புகட்கிலக்காகாது உயிர் பிழைத்தனர். ஒரு மணிக்கு முன்னர்தான் காசிம்கான் தைர்யத்துடன் பகைவரை நீருக்கலாமென்று மனப்பால் குடித்துக்கொண் டிருந்தான். அந்தோ! அடுத்த மணியில் மண்ணுலகை நீத்தான்.

காசிம்கானை கோட்டையின்பேரில் வரவொட்டாது தடுத்துப் பிடித்துக் கீழே தள்ளியவன் நமது ஹிம்மத்ஸிம்ஹனே யாவன். அவன் நடுநிசியில் தூக்கம்பிடியாமல், கோட்டையைச் சுற்றிலும் காவலர் அவரவர்க்குரிய ஸ்தானத்தை விட்டுப் பெயராம லிருக்கின்றனராவெனப் பார்த்து வருதல் வழக்கம். அன்றிரவும் அவன் அங்ஙனமே வர, யாரோ பலர் மேலே ஏறிவருவதுபோன்ற அரவங்கேட்டு பகைவர் என அறிந்து, தன் முழுபலத்துடன் அவர்கட்குத் தலைவனான காஸிம்கானை தள்ளி வீழ்த்தினன்.

இரஜபுத்திரர் மொகலாயரை யழித்து வென்று அவர்கள் தமக்கு விரோதமாய் இழைத்துவந்த சூழ்ச்சிகளினின்றும் தப்பி ஸுகஜீவிகளாய் அக்கோட்டையில் சிலகாலம் வாழ்ந்து வந்தார்கள். மொகலாயரோ தாம் பிடித்தபிடியை இன்னும் விட்டபாடில்லை. எப்படியாவது மணற்குன்றமைத்துக் கோட்டையைப் பிடிப்பதெனத் தீர்மானித்து ஒய்வு ஒழிவில்லாமல் வேலை செய்துவந்தார்கள். இப்படிப் பல நாட்கள் கழிந்தன. இரஜபுத்திரருடைய உணவுப் பொருள்களும் அளவிற் குறைந்து கொண்டே வந்தன. அவர்கள் முடிவில் ஆகாரமின்றி மாண்டுபோக நேரிடுமோவென்று ஐயுற்றனர். சுற்றுப் பக்கங்களிலிருந்து பொருள்கள் வரக்கூடாதபடி மொகலாயர் திட்டம்செய்து காவல் காத்தனர். இப்படியிருக்க, ஒருதினம் ஹிம்மத்ஸிம்ஹனுக்கு அவன் மனைவியிட மிருந்து நிருபமொன்று ஒரு தூதன் மூலமாய்க் கிடைத்தது. அதில் அவன் தகப்பன் ஒரு பெரிய ஆபத்தில் சிக்கியிருப்பதாகவும், ஹிம்மத்ஸிம்ஹன் உடனே வந்து அவனை ரக்ஷிக்க வேண்டும் என்றும் கண்டிருந்தது. அப்பெண்மணியும் அந்தக் கடிதம் ஒருகால் பகைவர் கைவசப்படக் கூடுமென்றெண்ணி அவனது தகப்பனுக்குற்ற கஷ்டம் இத்தகையதென விவரங் குறியாது விட்டாள். கோட்டைக்குள் ஆகாரம் குன்றி வந்தமையாலும், அரசன் ஏதோ இடரில் அகப்பட்டு வருந்தும் செய்தி காதுக்கெட்டியமையாலும் ஹிம்மத்ஸிம்ஹன் கோட்டையை விட்டுத் தன் தோழர்களுடன் நாடு செல்லத் துணிந்தான்.

பகைவரினின்றும் தப்பி நாடுசெல்ல, ஹிம்மத்ஸிம்ஹன்ஓர்உபாயம்செய்தான். பகைவரது

ஸைங்யத்தை முற்றும் ஒருபுறத்தே நிறுத்தும் படி ஏற்பாடு செய்தால், இராஜபுத்திரர் மற்றப் பக்கமாக அவர்களுக்குத்தெரியாமலேஇறங்கிப் போய்விடக் கூடுமென்று எண்ணினன். அவனது இஷ்டப்படி ஒரு குடியானவனை யழைத்து அவன் திருப்தி யடையும்படி அவனுக்குப் பொன் அளித்து மொகலாயரிடம் சென்று ஹிம்மத்ஸிம்ஹன் அவர்கள் கட்டி வரும் மேட்டை தரையோடு தரையாய் இடித்து நிரப்பக் கங்கணங் கட்டிக் கொண்டிருப்பதாகக் கூறும்படி அவனை ஏவினர்கள். அவனும் அங்ஙனமேசென்று மொகலாயருக்குத் திகிலுண்டாகும் வண்ணம் ஹிம்மத்ஸிம்ஹன் மொழிந்தபடியே கூறினன். யானைகளைக் கொண்டு இவர்களை வெருட்டியடிக்கலாம் என்றெண்ணி ஏமாந்தது முதல் ஹிம்மத்ஸிம்ஹனையும் அவனது ஸைங்யத்தையுங் கண்டு நடுங்கிய மகம்மதியர் கண்களுக்கு, இருண்டதெல்லாம் பேயெனத் தோன்றிற்று. ஹிம்மத்ஸிம்ஹன் தான் கூறும் விதம் செய்தே காட்டுவான் என்று பயந்து அவர்கள் சேனை முழுவதையும் மேட்டின் பக்கத்திலேயே நிறுத்தி வைத்திருந்தார்கள். ஹிம்மத்ஸிம்ஹனது மனோரதமும் கைகூடியது.

இராஜபுத்திரர் காசிம்கான் எந்தப் பக்கமாக இறங்கித் தன் பரிவாரங்களுடன் நாசத்தை யடைந்தானே, அதே பக்கமாகவே மொகலாயர் தம்மைப்பற்றி சந்தேகம் கொள்ளாமற்படி வெளியேற நினைத்தார்கள். மொகலாயரும் இவரது மனோபாவத்தைச் சிறிதும் அறிந்திலர். இதைத் தமக்கு ஒரு பெரும் நன்மையெனக் கொண்டு இராஜபுத்திர வீரர் எளிதிற் கோட்டையினின்றிழிந்து அடிவாரத்தையடைந்து பின் நீரோடையைக் கடக்கும் சமயத்தில் வானத்தைக் கிழித்து எழுந்த மின்னலின் வெளிச்சத்தால் அங்கு காவலிருந்த மொகலாயரது கண்ணுக்கெதிர்ப்பட்டனர். ஆயினும் மொகலாயர் ஸைங்யம் முற்றும் முன் பக்கத்திருந்தமையால், அவர்களை வந்து எதிர்த்தோரின் தொகை மிகச் சொற்பமேயாம். அவர் தம் ஊதுகருவியை எடுத்துமுழங்கியும் அவர்க்குத் துணையாக ஒருவரும் அங்கு வரவில்லை. பக்கங்களிலிருந்த அவர் மனிதர்கள் கோட்டைவாயிற் பக்கம் ஆபத்து நேர்ந்திருக்கிறதென அங்கு வந்து குழுமினர். இராஜபுத்திரர் தம்மை யெதிர்க்கவந்த சிலரையும் யமபுரமனுப்பி இனியொரு விக்கினமுமின்றி நீரோடையைத்தாண்டிநடந்துகொண்டிருந்தார்கள். மொகலாயர் மறுநாட்காலையில் கோட்டைவாயில் திறந்து கிடப்பதை நோக்கி ஆவலுடன் உள்ளேநுழைந்துபார்க்கையில்இராஜபுத்திரரில் ஒருவரையும் காணுது விழித்தனர். கோட்டையில் இதுவரை மனுஷ சஞ்சார மிருந்ததாக அறிவிக்கவும் ஒன்றையும் அவர் காணவில்லை. கோட்டையை நன்ருய்க் காலி செய்துவிட்டு அவர்களை இராஜபுத்திரர் ஏமாற்றியதற்கு மொகலாயர் மனம் வாடினர்கள். இவ்வித நிலையில் கோட்டை அவர்களுடைய கைவசப்பட்டது.

இராஜபுத்திரர் வடதிசைநோக்கிக் கடுகிநடந்து பன்னுட்சென்றபின் தம் நாடடைந்தனர். பழையபடி தம் நாட்டெல்லையை மிதிக்கும்பாக்கியம் பெறுவோமாவென்று ஏங்கியிருந்தஇவர்கள் தம் நாட்டெல்லையை யடைந்ததும் ஆனந்தக்கூத்தாடினர்கள். தாம் பத்திரமாய் நாடடைந்தது கடவுளின் கிருபையாலென்று மதித்துக்கடவுளை மனமாறத் துதித்தனர். அவர் மனம் அப்போதிருந்த நிலையை நம்மாற் கூற முடியாது.

இவர்களுக்கெதிரில் ஒருகுதிரைவீரன் தன் குதிரையை வேகமாய் நடத்திவருவதைக் கண்டார்கள். சில நிமிஷங்கள் சென்றதும் அவன் இவர்கள் பக்கலில் வந்துவிட்டான். ஆயினும் இவர்களைக் கவனியாமலே அவன் குதிரையைச் செலுத்திச் சென்ருன். இராஜபுத்திரர் அவனைக் கூவியழைத்து யாரென்று கேட்க அதற்கு அவன் ஏதோ ஒருவிதமாகச் சமாதானம் சொல்லித் தன் பிரயாணத்தைத் தொடங்க யத்தனித்தான். ஆயினும் ஹிம்மத்ஸிம்ஹனைக் கண்டதும், அவனை இன்னுனென்றறிந்து கொண்டவனுய் அவன் காலில் விழுந்து நமஸ்கரித்துப் பின் தன்னிடையிற் செருகியிருந்த ஓர் உறையினின்றும் ஒரு கடிதத்தை யெடுத்து, அவன் கைகளில் அதிக வணக்கத்துடன் கொடுத்தான். வந்தவன் தன் மனைவியால் அனுப்பப்பட்ட வீரன் என்றறிந்து அவனை உபசரித்துக் கடிதத்தைப் பிரித்துப் பார்த்தான். கடிதத்தில் எழுதப்பட்டிருந்த விஷயம் அவனது மலர்ந்த முகத்தை வாடச்செய்தது. அவனையடுத்தோர் அவனுக்கு பெரிய ஆபத்து ஏதோ நேர்ந்திருக்கிறதென்று

அறிந்தனர். "ஒரு நொடியும் தாமதியாமல் வழியில் எவ்விதமான விபத்து நேரிட்டாலும் அதை லக்ஷயம் செய்யாமல் உடனே வந்து சேருங்கள். ஸுஜாபாயும் பாப்பாலாவும் தங்கள் தந்தையை வஸந்தமாளிகைக்குக் கூட்டிச் சென்றிருக்கிறார்கள். அவரது ஆருயிர்க்கு இன்னல் இழைக்கவே, அந்தப் படுநீலி அவரை யங்கு அழைத்துப் போயிருக்கிறாள். தாமதித்தால் அவர்க்கு உயிர் நஷ்டம் உண்டாயினும் உண்டாகக்கூடும்" என்று அக்கடிதத்தில் வரைந்திருந்தது.

அக்குதிரைவீரனை வழியிற் கண்டது நன்மையாய் முடிந்ததென்ற சந்தோஷம் ஒரு பக்கம் அவனுக்குண்டாயிற்று. தான் போய்ச் சேர்வதற்குள் தன் பிதாவிற்கு யாதொரு கெடுதியும் சம்பவியாம லிருக்கவேண்டுமேயென்று கடவுளைப் பிரார்த்தித்தான். துரோகிகளின் சதியால் தன் தந்தை என்னென்ன கஷ்டப் படுகிறாரோவென்று மிகவும் வருந்தினான்.

உடனே அவ்விடம் விட்டுத் தகப்பனைக் காப்பாற்றவேண்டுமென்னும் ஆசையால், தூதன் ஆரோகணித்து வந்த துரகத்தின் பேரில் தான் ஏறி, தன்னுடன் வந்தவரை வேகமாய் நடந்து வரக் கட்டளையிட்டு, வஸந்த மாளிகையை நோக்கிப் புறப்பட்டான். அவன் ஆறு மணிநேரம் சவாரி செய்து நகர்ப் புறமடைந்தான். தற்சமயம் அவன் மனதில் எண்ணுவதெல்லாம் அவன் எண்ணினான். அவன் அரசன் ஆணையால் நாட்டை நீங்கியவன் தன்னை ஊரார் அறிந்துகொள்வரேல், தான் சிறையில் அடைபடுவது உண்மை. அங்ஙனம் சிறைப்பட நேருமானால், தகப்பன் கதி யாதாமோ? இவைபோன்ற பற்பல எண்ணங்கள் அவன் மனத்துதிக்க அவன் நெடுநேரம் ஆழ்ந்த சிந்தையிலிருந்து, பின் ஒரு முடிவான தீர்மானத்திற்கு வந்தான். தான் ஏறி வந்த குதிரையை ஒரு மரத்தடியிற் கட்டி, அண்டையிலுள்ள காட்டிற் செல்லும் காலடிப் பாதையில் ஒருவர் கண்ணுக்கும் படாமல் நடந்து, வஸந்த மாளிகையை யடையலாமென்று எண்ணினான். அஸ்தமித்து வெகு நாழிகை யாகிவிட்டதால் எங்கும் ஓரே இருட்டாயிருந்தது. அது அவனுக்கு அநுகூலமாயிற்று. மெதுவாய் அரண்மனையை யடைந்து தாழ்வாயிருந்த ஒரு சாளரத்தின் பேரில் ஏறி யுட்கார்ந்து மறைந்து கொண்டு உள்ளே நோக்கினான். உள்ளே தீபம் ஒன்று அதிகப் பிரகாசமாய் எரிந்து கொண்டிருந்தமையால் ஹிம்மத்ஸிம்ஹன் உள்ளே நடப்பதை நன்றாய் அறிந்துகொண்டான். தன் தகப்பன் களங்கமற்ற மனதுடன் பாப்பாலாலே பக்கத்தில் இருக்கச் செய்து இருவரும் போஜனஞ் செய்வதைக் கவனித்தான். அரசன் சிரித்த முகத்துடன் ஏதோ பேசிக்கொண்டு சாப்பிட்டுக் கொண்டிருந்தான். அவனுக்கெதிரில் உணவு பரிமாறிக் கொண்டிருந்த ஸுஜாபாயை ஹிம்மத்ஸிம்ஹன் நோக்கினான். அவள் விலைபெற்ற பூஷணங்களால் தன்னை யலங்கரித்துக்கொண்டு அரசனுடன் கொஞ்சிக் குலவிக் கொண்டிருந்தாள். கையில் அந்தமான விசிறி யொன்றேந்திசுகமாகக் காற்றடிக்க அவள் அரசனுக்கு விசிறிக்கொண்டிருந்தாள். பாப்பாலாவின் அகத்தில் சூதும் கபடமும் குடிகொண்டிருந்தமை போல வதனத்திலும் மாறுதல் காணப்பட்டது. ஸுஜாபாய் இயற்கையிலேயே அதிக ரூபவதியெனப் பெயர் பெற்றவள். இப்போது இருக்கும் நிலையில், அரசன் அவளை தேவ ரம்பையென்றே நினைத்து உள்ளம் பூரித்தான். அவள் காதுகளில் பளபளவென்று நானாவித நிறத்துடன் ஜ்வலித்துக்கொண்டிருந்த வைரத்தோடுகளும், மார்பில் நவமணிகளால் பதக்கத்துடன் கூடிய முக்தாஹாரமும் கழுத்தைச்சுற்றிலும் அணிந்திருந்த நவரத்தின கண்டிகையும் ஹஸ்தங்களில் அணியணியாய் விளங்கிய நகைவகைகளும் அவளது அழகைப் பன்மடங்கு அதிகமாகச் சிறப்பிக்கச் செய்தன. அவள் அரையில் சித்ரவர்ணச் சேலையுடுத்தி, அதன் மேல் மேகலாபரணத்தை யணிந்திருந்தாள். மேலாடையும் அவள் தரித்திருந்த சேலைக்கு ஏற்றிருந்தது. தவசிகள் மனதையும் கலைத்துத் தன் வயப்படுத்தும் அற்புத சக்தி அவளிடம் பூர்ணமாய் இருந்தது. இந்த உருவந்தான் அரசனைத் தன் வயப்படுத்தி அவனது செல்வக் குமாரனை நாட்டைவிட்டு ஓட்டியது. அவள் இவ்வளவு ஒய்யாரமாய் நிற்பதைக்கண்ட ஹிம்மத்ஸிம்ஹனுக்குக் கோபத்தால் கண்கள் சிவந்தன. ஆயினும் இனி நடப்பது யாதென்றறியும் வண்ணம் அவன் தன்னைப் பிறரறியாதபடி ஒளித்து வாளாவிருந்தான்.

உண்டி முடிந்ததும் ஸுஜாபாய், அரசன் குடிப்பதற்கு ஜலம் கொண்டுவருவதாகச் சொல்லி ஒரு அறைக்குள் நுழைந்தாள். அப்போது அவள் முகத்தை ஒருவன் கவனித்திருப்பானாகில் அவளது உண்மைக் குணங்களை யறியாமற் போகான். ஹிம்மத்ஸிம்ஹன் ஆதிமுதற்கொண்டே இவர்கள் குணங்களை நன்ருய் அறிந்தவன். அரசனே அவளிடம் தன் அன்பை முற்றும் காட்டிவந்தான். அவ்வறையில் நுழைந்ததும் தன்னிடையிலிருந்து ஒரு கடிதச்சுருளை யெடுத்து அதைப் பிரித்து அதிலுள்ள வஸ்துவை தான் கையில் ஏந்தியிருந்த பொற்கலத்தில் சேர்த்துப் பின் ஒரு பெட்டியில் வைத்திருந்த புட்டியிலிருந்து பானத்தை அதில் ஊற்றினுள். இதைக் கண்டதும் ஹிம்மத்ஸிம்ஹனுக்கு உண்மை விளங்கிற்று. தன் மனைவியின் மொழிகள் மெய்யாக முடிந்ததற்கு வியந்தான். உடனே தான் இருந்த விடத்தை விட்டு, சிறிதும் பயப்படாமல் தன் தகப்பனுக்கெதிரில் போய் நின்ருன்.

இவனைக் கண்டதும் தகப்பன் கடுஞ்சினங் கொண்டு தன் சேவகரைக் கூவியழைத்தான். பின் ஹிம்மத்ஸிம்ஹனை நோக்கி, "அடேபதரே, என்ன துணிவடா உனக்கு? என்னுணையை மீறி, நீ எனக்குத் துரோகமல்லவா நினைத்தாய்? உன் மன உறுதிக்காக நீ படப்போவதைப்பார்" என்று அதட்டினுன். அதற்கு ஹிம்மத்ஸிம்ஹன் சாவதானமாய், "ஐயனே, நான் தமதுகட்டளையை மீறி நடந்தேனென்ருவது, துரோகி சதிக்காரன் என்ருவது எண்ண வேண்டாம். யார் உங்களுக்குத் துரோகம் நினைத்தவர் என்பதை தாங்கள் சற்று நேரத்திற்குள் அறிவீர்கள். தயைகூர்ந்து தங்களுக்காக தயாரித்திருக்கும் பானத்தை பாப்பாலாலுக்குக் கொடுக்கும்படி ஸுஜாபாயை வேண்டுங்கள். அப்போது தங்களுக்கு வைரி யாரென்பது நன்ருய் விளங்கும்" என்று கூறினுன். ஸுஜாபாய் தான் செய்த சதி வேலை, கண்டு பிடிக்கப்படவே மனம் பதறி ஓவென்றலறிக் கீழே விழுந்து மூர்ச்சித்தாள். அருகேயிருந்த காவலன் ஒருவன் அப்பாத்திரத்தை யெடுத்து அதிலுள்ள திராவகத்தைக் கீழே கொட்டி அடியில் தங்கியிருந்ததை நோக்கினுன். அப்பாத்திரத்திலிருந்தது வைரப்பொடி யென்று கண்டு யாவரும் அதிசயித்தனர். ஹிம்மத்ஸிம்ஹன் சற்றுத் தாமதித்து சரியான வேளையில் வந்து சேராமல் இருப்பானாயின் அம்மோசக்காரியின் கர்ப்பனையால் அரசன் உயிர் நீத்திருப்பா னன்ருே!

இதைப் பார்த்த அரசனுக்கு என்ன செய்வதென்று தோன்றவில்லை. அக்கொலைகாரியின் மேனியழகில் ஈடுபட்டு அவளது அகத்திலுள்ள களங்கத்தை இதுவரை அறியாமல் அவளைப் போற்றிவந்த அரசனுக்கு அப்போது தான் உண்மை விளங்க, அவன் தன் ஸ்வய அறிவையும் பெற்ருன். அவளைத் தூற்றி வெறுத்தான். தனக்கு உயிரளித்த தன் கண்மணியை வாரியணைத்தான். தான் அவனிடம் குரூரமாய் நடந்ததற்கு மனங்கசிந்தான். உடனே பாப்பாலாலையும் ஸுஜாபாயையும் காலில் தளை பூட்டி காராகிரகத்திற்கு (சிறைக் கூடம்) இழுத்துச் சென்றனர். ஹிம்மத்ஸிம்ஹன் தன் தகப்பன் தயவை மீண்டும் பெற்ருன்.

மறுநாள் வஸந்தமாளிகையை விட்டு யாவரும் புறப்பட்டு அரண்மனைக் கேகினர். வழியில் நகரமாந்தர் அரச குமாரனை வாழ்த்தி அவனது பெருமையையும் பிதாவினிடம் அவனுக்கிருந்த விஸ்வாஸத்தையும் புகழ்ந்தார்கள். அவர்கள் வெகு சிறப்புடன் நகர்வலம் வந்து பின் அரண்மனை வாயிலிற் புகுந்தனர். யாவரும் ஆனந்தக்கடலுள் ஆழ்ந்தனர். அவனுக்காக ஆவலுடன் காத்திருந்த அவனது மனைவியின் மகிழ்ச்சிக் களவேயில்லை. அந்நாளைச் சுபநாளாகக் கொண்டாடி நகரமாந்தர் யாவரும் அளவிலா இன்பமடைந்தார்கள். ஸுஜாபாயும் பாப்பாலாலும் மட்டில் சிறையில் தம் கதியை நினைத்துக் கண்ணீர் உதிர்த்தனர். பின் நடந்த விசாரணையில் அவள் இழைத்த குற்றம் பொறுத்தற்கரியதெனினும், அவள் பெண்ணென்பதையும், பாப்பாலால் வாலிபன் என்பதையும் உன்னி, ஹிம்மத்ஸிம்ஹன் அவர்களுக்கு இரண்டு வருஷங்கள் வரை காவல் தண்டனை விதித்துப் பின் அவர்களை சிறையினின்றும் விடுவித்தான். அவன் பொறுமை அளவிடற்கரியதாம்.

மக்கள் தந்தையரிடம் நடந்துகொள்ளும் விதமும், புருடபாரியயல்பும் தேசாபிமானமும் வஞ்சித்தொழுகும் மாதர் இயல்பும் வீரர்பெருமையும் இதிலிருந்து நன்கு விளங்குவனவாம்.

வாலிபச் சாரணன்

THE BOY SCOUT

[ஸ்ரீமான் சீ. சி. ராமஸ்வாமி ஐயரவர்கள்.]

முன்னுரை

'கல்வி' என்னும் மொழிக்கு கற்றல் என்று கூறுவர் அறிவுடையோர். கற்றல் என்பது, எதைப்பற்றியாயினும் ஊக்கத்துடன் கவனித்து அறிந்து அதை அனுபவத்தில் பொருள் கொண்டுவர முயல்வதே ஆகும். அம்மாதிரி கல்வி என்பது எண்ணையும் எழுத்தையும் மாத்திரம் ஒருங்குசேர்க்காமல், எது இகபரத்திற்கு ஸாதகமாயுள்ளதோ அதைக் கற்றல் அவசியமெனப் பொருள் படும்படியே பொதுப்பெயரால் "எதைக் கற்றல்" என்பதற்குக் சுருங்கின பொருளைக் கொடுக்காது இருக்கின்றது. ஆனல் தற்கால லௌகீக அகராதியின்படி கல்வி என்பது எண் சாணுடம்பைக் காப்பதற்கு வேண்டிய அளவே போதிக்கப்படுகின்றது எனக் குறை கூறுவார் பலருளர். ஞானம் விருத்தியடைய, எண்ணும் எழுத்தும் வழியே என்று சொன்னாலும், அது தற்காலத்தில் பொருந்தவில்லை. மற்றும் பள்ளிக்கூடங்களில் போதிக்கப் படுவது இகத்திலேயும் முற்றிலும் பிரயோஜனப் படுவதன்று. இதை அனுபவத்திலே காணலாம். "ஏட்டுச் சுரை கறிக்கு உதவுமா?" என்னும் பழமொழி நம்மவரில் படித்து பட்டம் பெற்றவர்களில் அநேகருக்கும் கூறப் பெறும்.

பள்ளிக்கூடங்களில் போதிக்கப்படும் கல்வியானது பலவிதங்களில் குறையுள்ளது என்பதை அறிந்தவர்கள் வாலிபச் சாரண சங்கத்தை மிகுந்த ஆவலுடன் நல்வரவேற்பார்கள்; நல்வரவேற்றனர். அச்சங்கம் பல வகுப்பினரைச் சேர்ந்த சிறுவர்களுக்கு ஸமத்வம் போதிக்கின்றது; பாலர்களுக்கும் அவர்களை ஆதரிக்கும் ஆசிரியர்களுக்கும் ஸங்கம் உண்டாக்குகிறது; பரோபகாரமே பரம பலன் என்பதைக் கார்ய ரூபமாகவே காட்டுகின்றது; ஏட்டுச் சுரைக் காய்க்கும், கறிக்குதவும் சுரைக்காய்க்கும் ஸந்தேஹம் ஏற்படுவது அஸாதாரணமானது என்பதை வற்புறுத்துகின்றது. இதனுலுண்டாகும் பலன்களையெல்லாம், 'பால ஸேவகர் பாரத மாதாவின்பிரிய ஸேவகராய்ப் பலன் எதிர்பார்க்காது உழைக்க முயல்கின்றனர்' என்பதில் அடக்கலாம்

இச்சாரணர் அனைவரும் 18-வயதுக்குக் கீழ்ப்பட்டவர்களே. அவ்வயதுக்குக் கீழ்ப்பட்டவரே உருகிய ஈயம்போலும், பிசைந்த குயவன் மண்போலும் ஆசிரியர் வழிப்படி திரும்புவர். 11-வது வயதிற்கு மேற்பட்டவரே இச் சங்கத்தின் அங்கத்தின ராகலாம். இதற்குக் கீழ்ப்பட்டவர் மிகவும் இளைஞர்.

பால ஸேவகர் சங்கம் முதன்முதலில் பேடன்பவல் என்பவரால் ஏற்படுத்தப்பட்டது. இளைஞர்கள் பலவிதத் தொழில்களிலும் திறமையுற்றிருப்பின், அவர்கள் எப்பொழுதும் பிழைப்பிற்கஞ்சார் என்பது திண்ணம். ஆதலின் பேடன்பவல் துரைமகனர் தாம் ஏற்படுத்தியசங்கத்தின்பாலர்கள் அனைவரும் தந்தியடித்தல், கொடிகாட்டல் (Flag Signalling) அபாய சிகித்சை செய்தல் முதலிய பல வேலைகளும் அறிந்திருக்க வேண்டுமென்று கூறினர். சிறுவர்களுக்கு ஊக்கமுண்டாக அத்தொழில்களில் தேர்ச்சி பெற்றவர்களுக்குப் பதக்கம் அளிக்கும் ஏற்பாட்டையும் செய்தார்.

ஆபிரிகாவில் போயர் சண்டை தொடங்கிய போது, பெரியவர்களெல்லாரும் யுத்தத்திற்குச் செல்ல, சிற்றுள் வேலைக்கு ஆங்கிலேயருள் ஒருவரும் இல்லாதுபோயினர். அப்பொழுது பால ஸேவகர் தந்தியாட்களாகவும், தபாற் சேவகராகவும், அபாய சிகித்சை செய்பவராகவும் அமர்ந்தனர். இளங்கன்று பயமறியாது என்பதற்கேற்ப பால ஸேவகரும் துணிவுடன் வேலை செய்தனர். ஆங்கிலேயர் யுத்தத்தில் வெற்றி யடைந்தனர்.

இவ்வாறு வாலிபச் சாரணர்களின் காரியங்களைப் பார்த்த பற்பல தேசத்தாரும், தம் தம் தேசங்களில் இச்சங்க மேற்படுத்த லாயினர். யுத்தத்திற்கு எப்பொழுதும் தயாராயிருக்கும் நாட்டிற்கு இச்சங்கம் மிகவும் உபயோகமாயிருந்தது. சங்கத்தில் பயிற்சியுள்ளவர் சண்டையில் கார்ய நிர்வாகத்திற்குந் தகுந்தவர்களானுர்கள். சமாதான காலத்திலும் தேசத்தின் சமாதான நிலைமையைக் காப்பதில் உதவி புரிந்தார்கள்.

இவ்விதமான வாலிபச் சாரண சங்கமொன்று சில வருஷங்களுக்கு முன்னே லங்கைத் தீவில் ஸ்தாபிக்கப்பட்டது. அம்மாதிரி

இங்கும் ஏற்படுத்தவேண்டும் எனப் பலர் கேட்டும் துரைத்தனத்தார் தமது உத்தரவை முதலில் தரவில்லை. ஆங்கிலேயச் சிறுவர்களுக்கும், ஆங்கிலோ இந்தியரெனப்படும் ஸ்வதேச ஐரோப்பியச் சிறுவர்களுக்கும் மேற்படி சங்கம் ஏற்படுத்தப்பட்டிருக்க, நமது தேசச் சிறுவர்களுக்கு மேற்படி பாத்தியதை யில்லாமலிருந்தது. கடைசியில் ஸ்ரீமதி பெஸண்டு அம்மையார், வடக்கே காசி, கான்பூர் முதலிய இடங்களிலும், தெற்கேயும் இச்சங்கங்களை ஏற்படுத்தினர். பிரமஞான சபையைச் சார்ந்த பள்ளிக்கூடங்கள் பலவற்றுள் வாலிபச் சாரணர் சங்கம் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது.

பிறகு, துரைத்தனத்தார் சாரணர் சங்கம் ஏற்படுத்துவதை மேற்கொண்டனர். ஸ்ரீமான் மெண்டிஸ் என்பவர்தேகப்பயிற்சித் தலைவராக நியமிக்கப்பட்டார். அவர் ஸிம்ஹளத் தீவிலிருந்து வந்தவர். பால ஸேவக ஸங்கத்தில் மிகவும் உழைத்தவர். அவரது முயற்சியின் பேரில் பால ஸேவக சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. அதை நிலை நிறுத்துவதற்காக உபாத்தியாயர்கள் பலர் பயிற்சி செய்யப்பட்டனர். பிறகு பற்பல இடங்களில் பால ஸேவக ஸங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டு பலவித உதவிகளை ஜனஸமூஹத்திற்குச் செய்துவருகின்றன.

இனி, வாலிபச்சாரணர் சங்கத்தின் நோக்கங்களையும், பயிற்சி செய்யப்படும் விதங்களையும் கூறுவோம்.

வஸந்த மந்திரம்

இரண்டாம் அத்தியாயம்

பிரதாபசிங்கன் உதயபுரிக்கு நேர்ந்த ஆபத்தை அறிதல்

விஷயங்கள் ஒன்றுக்கொன்று சிக்குண்ட நூல்போல் முரண்படவே, எதை அறிந்து என்ன செய்யவேண்டுமென்பது கஷ்டமாய் விட்டது. ஜோதிபுரியிலிருந்து ஜயபாலன், ஜயசிங்கனுடன் பிரதாபசிங்கருக்கு உதவிசெய்ய சேனைகளை யனுப்பிய தினம் முதல், வேறொரு இராஜகாரியத்தையும் கவனிக்கவில்லை. சிதானந்தரும் சிறு பிள்ளையான ஜயபாலனுக்கு அதிக சிரமம் கொடுப்பதில்லை. சுலோசனன் உதயபுரி சேர்ந்து, பிரதாபசிங்கரிடமிருந்து பதில் கொண்டு வரவேண்டியகாலமும் கடந்துவிட்டது. "உதயபுரி போனவர்கள் வந்தார்களா, சிதானந்தரே?" என்று கேட்பான். "இன்னும் வரவில்லையே!" என்பார் சிதானந்தர். "சரி இன்னும் வேறு விசேஷமில்லையே இராஜ்யத்தில்?" என்பான். "ஒன்றுமில்லை—விசேஷம் ஒன்றும்—" என்பதற்குள், "சரி நான் போய்வருகிறேன்" என்று சோலையுள் புகுவான்.

ஜயசிங்கரிடத்திலிருந்தும் ஒன்றும் பதில் வரவில்லை. "ஏன் இத்துணை நாளாய் பதில் வரத் தாமதப் படுகின்றது? துருக்கர் படையெடுத்துப்போய் உதயபுரியை வாட்டாவண்ணம் அனுப்பிய என் சேனையின் கதி யென்னவாயிற்றோ? கடும்போர் நடக்கின்றதோ?— இராது. போர் நடப்பின், துணை வலிக்காவது சமாசாரம் தெரியப்படுத்த மாட்டானா ஜயசிங்கன்! சண்டை நடவாது: என் இடது கண்ணும் இடது தோளும் துடிக்கின்றனவே! என்ன ஆபத்து வருமோ இராஜபுதனத்துக்கு? இன்று சாயுங்காலத்துக்குள் சமாசாரம் வராவிட்டால் மறுபடி தூதரை யனுப்புவோம்..." என்று பலவிதமாய் எண்ணி யெண்ணி ஏங்குவான்.

உண்மையாகவே நமக்கும் விஷயங்கள் தெரியவேண்டியதே யல்லவா? எல்லைப்புறத்தில் வைத்திருந்த சேனையை உடனேயே அனுப்பினானே ஆமத் பாக்ஷா. அச்சேனைக்கு வேலையென்னவெனில், ஜயசிங்கன் சேனை உதயபுரி சேரவொட்டாமல் தடுக்க வேண்டியது மட்டுமேதான். அவர்கள் ஜயசிங்கனுடன் சண்டைபோடுவதும்கிடையாது. அம்மாதிரி போடவும் கூடாதென்பது ஆமத் பாக்ஷாவின் உத்தரவு. ஆகையால் ஒவ்வொரு நாளும்ஜயசிங்கன்பிரயத்தனப்பட்டபோதிலும் எதிரிகள் சண்டைக்கு எழுவதில்லை. தடை செய்வது மட்டும் பலமாய் இருந்தது. இத்துடன் உதயபுரி, ஜோதிபுரி முதலிய இடங்களுக்குத் தூதர்கள்போய் சங்கதி தெரியப்படுத்தாமல் இருக்கும்படி குன்றுகளில் மகமதியவீரர்களை ஒளிந்திருக்கும்படி செய்து வைத்திருந்தது. ஆகையால் சமாசாரங்களை அரசனுக்குத் தெரியப்படுத்தமூன்று தடவை தூதனுப்பியும்

அத்தூதர்கள் சிறைப்பட்டனர். ஆதலால் தான் ஜயபாலன் விஷயங்களின் போக்கை அறியக்கூடாமல் தவித்துக் கொண்டிருந்தான்.

இதற்குள் ஆமத் சேனை சும்மாவிருக்கின்றதா? மெல்ல மெல்ல முன் சென்று கொண்டிருக்கின்றது. நரேந்திரன், சுலோசனன் முதலிய சில ஒற்றர்களே அதிர்ஷ்டசாலிகளாய் சமாசாரம் சேகரித்துத் தமது நாட்டிற்குத் தெரியப்படுத்தினர். அம்மாதிரி அதிர்ஷ்டம் இல்லாமல் எதிரி கையில் அகப்பட்டவர் பலர்.

கடைசியாக ஒருநாள் ஒருதூதன் ஜயசிங்கனிடமிருந்து ஜோதிபுரி வந்துசேர்ந்தான். அவனால் விஷயங்கள் நன்ருய்த் தெரிந்தன. திடீரென்று துருக்க சேனை ஜயசிங்கனை மடக்கிக் கொண்டதும், அவன் சண்டைபோடப் புறப்பட்டாலும் அவனுடன் சண்டையிடாமல் அவனைத் தொந்தரவு செய்வதும், திரிசங்குபோல் ஜயசிங்கன் உதயபுரியிலும் இல்லாமல், ஜோதிபுரியிலும் இல்லாமல் நடுவே தவிப்பதும் தக்க காவலினால் எதிரிகள் சமாசாரம் பரவ வொட்டாமல் தடுப்பதும்—இவைகளெல்லாம் சிதானந்தருக்கும், சபையோருக்கும், ஜயபாலனுக்கும் அளவில்லா ஆச்சர்யத்தை விளைவித்தன. "சுலோசனன் கதி யென்னவாயிற்று!" என்று ஆலோசனை செய்தனர். "என்னவாயிற்று? என்பதைச் சொல்வாரில்லை." இங்ஙனம் சேனைகள் வந்து மடக்க சமாசாரம் எப்படித் தெரிந்தது துருக்க ராஜனுக்கு? எப்படித் தெரிந்தது?—சொல்லுவாரில்லை!

பலவிதமாய் ஆலோசனை செய்து கடைசியாக மற்ருெரு சேனையை அனுப்பி ஜயசிங்கருக்கு உதவி செய்யவேண்டுமென்று தீர்மானம் செய்தனர். இவர்கள் இத்தன்மையாய் ஏற்பாடுகள் செய்யும்போது உதயபுரியில் என்ன நடந்ததென்பதை விசாரிப்போம்.

பிரதாபசிங்கன் துருக்கப்படை முன் வந்து ஜயசிங்கரைத் தடுத்துவிட்டதையும், ஆமத் பாக்ஷாவின் முக்கியமான சேனைகள் வெகு வேகமாய் வருகின்றதென்பதையும் கேள்விப்பட்டு, குடிகளையும், கிழவர்களையும் பெண்டிர்களையும் கிராமங்களுக்கு அனுப்பிவிட்டு உதயபுரியைத் தக்கவாறு காப்பாற்ற சேனைகளை நியமித்தான். எதிரியின் விருத்தாந்தங்கள் தெரிவது மஹா கஷ்டமாய் விட்டது. ஒருமுறை சுலோசனன் வந்துவிட்டு, மறுபடியும் போய் இருக்கிருன். இன்னொரு முறை வருவானோவென்று எதிர்பார்க்கின்ருன் பிரதாபசிங்கன்!

மரப்பொந்திலிருந்து தூங்கியெழுந்த நரேந்திரன் மறுபடி குல்லாய் தரித்து காலில் துணி கட்டி நொண்டிக்கொண்டு மெல்ல மெல்ல ஆமத்பாக்ஷாவின் முக்கிய சேனையோடு கலந்தான். அன்று இராத்திரி சில விசேஷ சமாசாரங்கள் பாக்ஷாவுக்கு எட்டின. உடனே முக்கிய உத்தியோகஸ்தர்களுக்குச் சொல்லியனுப்பினான். அவர்கள் ஒருவர் ஒருவராய்ப் புறப்படுவது நரேந்திரனுக்குத் தெரியவே, அவர்களோடு தானும்போய் நடப்பவற்றை அறிய வேண்டுமென்று எண்ணங்கொண்டு அரசன் கூடாரத்துக்குமுன் சென்ருன். நாற்புறமும் தீவர்த்திகளுடன் சேவகர்கள் காத்திருக்கின்றனர். பூச்சிகளும் அக்கூடாரத்தைச் சுற்றிப் பறக்கவில்லையென்ருல், மனிதர் நெருங்கவும் படுமோ! வாயில் முன்னிலையில் ஒரு தளகர்த்தன் ஈட்டியுடன் காவல் காத்திருந்தான். அவனிடம் நெருங்கவே அவன் கோபத்தோடு "நில் அவ்விடத்திலேயே. சமயம் தெரியாமல் இடம் தெரியாமல், எப்பொழுதும், எல்லா விடத்திலும் வந்து தொந்தரவு கொடுக்கிருய்" என்ருன் தனது பாஷையில். வணக்கத்துடன் அவன் அண்டையிலேயே நின்றுவிட்டான் நரேந்திரன். ஒருவர் ஒருவராய் பிரபுக்கள் உள்ளே நுழைகின்றனர். இன்னும் அரை நாழிகையில் காரியம் ஆரம்பமாகும். நரேந்திரனுக்கு மனம் பதைக்கின்றது. தான் நிற்குமிடத்தில் நிற்பதும், உதயபுரியில் கவலையில்லாமல் படுத்து உறங்குவதும் ஒன்றே என்று அவனுக்கு நன்கு புலப்பட்டது. எப்படியாவது உள்ளே நுழையவேண்டுமென்று நாற்புறமும் பார்த்தான். வடக்கே வெகுதூரத்தில் ஒரு பந்தம் நன்ருய் எரியவில்லை. ஒருக்கால் அந்தச் சேவகன் 'தூங்குமூஞ்சி'யாய் இருக்கலாம். இல்லையேல் தீவர்த்தி முடிவதாயிருக்கலாம். எப்படியும் அங்கே சென்ருல் பயனுண்டென்று எண்ணி, கையைத் தூக்கி அந்த தளகர்த்தனை வணங்கினான். அவன் "சரி நீ போகலாம்: சாக்கடையில் நாய்க்கு என்ன வேலையோ!" என்ருன்.

கூடாரங்களைச் சுற்றியோடித் தான் சேர

கீரைக் கடைக்கும் எதிர்கடை வேண்டும்.

வேண்டிய இடத்தை ஒருநொடியில் அடைந்தான். உடனே அச்சேவகனிடம் பல்லைத் திறந்துகொண்டும், தலையை ஆட்டிக்கொண்டும் சென்று,தீவர்த்தியைக் காட்டித் தன் மார்பைத் தட்டிக்கொண்டான். தன்னிடம் கொடுக்கும்படி வேண்டிக்கொண்டதைப் பார்த்த அந்த வீரன் தீவர்த்தியை நரேந்திரன் கையில் ஒப்புவித்து அங்கேயே தரையில் படுத்துப் புரண்டு கொடுத்தான். இதைக்கண்ட நரேந்திரன் மடியிலிருந்து இரண்டு வெற்றிலையும், பையிலிருந்து கவனமாய்த் தேர்ந்தெடுத்த இரண்டு பாக்கையும் அவ்வீரன் கையில் கொடுக்க, அவன் அவற்றை மென்றுகொண்டே மயங்கி நித்திரை போனான்.

பின்பு நரேந்திரன் தீவர்த்தியைக் கீழே ஒரு குழிதோண்டிப் புதைத்துவைத்துவிட்டுமெது வாய்க் கூடாரத்தின் துணிக்குக் கீழே நுழைந்தான். தனது இருப்பிடம் பாக்ஷாவின் ஆசனத்துக்குப் பின்னால் இருப்பதை அறிந்தான். 10-அடிக்கப்பால் அவனுடைய கவசப் பெட்டியும், படுக்கை பாய்களும் இருந்தன. ஒரே தாவாய்த் தாவிக் குதித்து அப்படுக்கைகளுக்கு இடையில் ஒளித்துக்கொண்டான். "இனி சமாராய் நடப்பவற்றைக் கேட்போம்" என்று நிச்சயம் செய்துகொண்டு ஆவலுடன் காத்திருந்தான்.

* * *

இரண்டு தினங்கள் கழிந்தன. இரண்டாநாள் சாயங்காலம் நரேந்திரனும் சுலோசனனும் உதயபுரிக்கு அருகாமையில் அதிவேகமாய்ச் சவாரி செய்துவருகிறார்கள். கோட்டை வாயிலில் சோதனைசெய்து உள்ளேவிட்டனர். இருவர் முகமும் வெயிலில் கருகிவாடி மண்படிந்து ஒளியற்று விளங்கின. குதிரைகளோ சொல்ல வேண்டியதில்லை. ஒரு கல் இடறுமாயின்,கீழே விழுந்து மடியும். கோட்டையுள் நுழைந்ததும் சுலோசனன் "அப்பா நரேந்திரா, நமது குதிரைகள் அதிக வேலை செய்திருக்கின்றன இன்றையதினம்.இவைகளை இங்கேயே மேயவிட்டு நாம்மட்டும் நடந்துபோவோம் அரசனிடம். இவை நடப்பதை விட, நாம் வேகமாய் நடக்கலாம்போல் தோன்றுகிறது."

நரேந்திரன் "சரி! சரி உமது இஷ்டப்படி செய்வோம், நாம் நடப்பதும் சரியாய்த்தான் இருக்கும். சட்டியில் இருந்தால் அல்லவா அகப்பையில் வரும். சாப்பிட்டால் அல்லவா நடக்கிறதற்கு; சரி விட்டு இறங்கும். ஓடலாம் அரண்மனைக்கு" என்று கீழே குதித்தான். சுலோசனன் குதிக்கும்போதே கீழே விழுந்தான்.விழுந்தவனை எழுப்பி இருவரும் அரண்மனை வந்து சேர்ந்தனர்.

வழக்கம்போல, அரசன் சபாமண்டபத்தில் சுமதியுடன் உட்கார்ந்து இருந்தான். முகுந்தனும் மங்களநாயகனும் பக்கத்தில் நிற்கின்றனர். அச்சமயத்தில் நமது நண்பர்களின் வரவை அரசனுக்குச் சொல்லவே, அரசன் உடனே "வர விடுமின்" என்று உத்தரவு செய்தான். அடுத்தநொடியில் இருவரும் வந்து அரசனை வணங்கினர். அரசன் வணங்கிய இருவரையும் உற்றுப்பார்த்து, அவர்களின் அலங்கோலத்தைச் சகிக்கமாட்டாதவனாய்க் கண்களில் நீர்ததும்ப "உம் நாட்டையாளும் அரசனுக்கு என்ன சமாசாரம் கொண்டுவந்தீர்கள் இன்றையதினம். உங்கள்முகத்தைப்பார்த்தால் அதிவிரைவில் வந்தவர்கள்போல் தோன்றுகின்றது. மேலும் இருவரும் ஒருங்கே வரக் காரணமென்ன? சொல்லுங்கள் தெளிவாய். உட்கார்ந்து பேசுங்கள் குற்றமில்லை" என,இருவரும் உட்கார்ந்தனர். பேசுவதோ அவ்வளவு இலகுவாய் ஆகவில்லை. திரவமின்றி வரண்டு போன நாக்கையும் தொண்டையையும் சற்றே வசப்படுத்திக்கொண்டு ஆரம்பித்தான் நரேந்திரன் ஹீனஸ்வரத்தில்:— "அரசர்க்கரசே! எதிரிகளின் முயற்சி நான் முன் தெரியப்படுத்தியதற்கு முற்றிலும் மாறுகிவிட்டது. ஜயபாலர் ஜோதிபுரியிலிருந்து மற்றும் ஒருசேனையோடு வந்து ஜயசிங்கனைச் சேர்ந்து துருக்கரை வாட்டுவதாக உத்தேசித்து இருக்கிறார்—"

பிரதாபசிங்கர் "சரி! ரொம்ப சரி! நமக்கு அநுகூலந்தான். நல்ல சமாசாரம் கொண்டு வந்தாய்!—"

நரேந்திரன் "சுவாமி சற்று நிதானமாய்க் கேட்கவேண்டும். ஜயபாலர் தீர்மானித்த தினமே ஒரு ஒற்றன் சங்கதி தெரிந்துகொண்டு பாக்ஷாவிடம் வந்து சேர்ந்துவிட்டான். ஆகையால் அன்றிரவே ஒருசபை கூடி தளகர்த்தர் சேனைத்தலைவர் இவர்களோடு ஆலோசனை செய்து, ஜயபாலர் மெல்ல மெல்ல வந்து ஜயசிங்கனுடன் சேருமுன்னரே, தான் உதயபுரியை அடையவேண்டுமென்றும், திடீ

ரென்று எதிர்க்கும்போது நமதுசேனைதோற்று விடும் என்றும், இல்லையேல் சமாதானத்துக்கு வரும் என்றும் எண்ணி, அன்று இராத்திரியே புறப்பட்டு உதயபுரி நோக்கி வருகின்றனர். இத்துடன் போதாமல், ஜயசிங்கரைத் தடைசெய்ய ஒரு சிறு சேனையைக் கணவாயில் விட்டு முதற்படையில் முக்கால் பாகமும் தன்னைச் சேரவேண்டும் எனவும், அவர்களுக்கு அன்றிரவே உத்தரவு அனுப்பி விட்டான். நாளை ஒருநாள் சாவகாசமிருக்கும். மறுதினம் இரண்டு சேனையும் வந்து நெருங்கி விடும்; சந்தேகமில்லை. தூங்கவும் சாப்பிடவும் எவ்வளவு நேரம் வேண்டுமோ அதைத்தவிர வேறு காலதாமதம் செய்யக்கூடாதென்று அவர்களுக்கு உத்தரவு. நமது சேனையை மடக்கிக்கொண்டு பின் ஜயபாலரைத் தோறகடிக்கவேண்டுமென்பது அவர்களுடைய அபிப்பிராயம்" என்று ஆமத்பாக்ஷா சபையில் நடந்த விருத்தாந்தங்கள் எல்லாவற்றையும் ஒன்றும் விடாமல் தெரிவித்தான்.

சபயையில் உள்ள ஒவ்வொருவரும் யோசனையில் ஆழ்ந்தனர். நரேந்திரன் மூர்ச்சையாய்க் கீழே விழுந்துவிட்டான். சுலோசனனும் இன்னும் இரண்டு சேவகர்களுமாய் அவனை வெளியே எடுத்துப்போய் சைத்தியோபசாரம் செய்தனர். உள்ளே ஒருவரும் பேசவில்லை. சிறிது நேரம் கழித்து பிரதாபசிங்கன், "சுமதியாரே, இப்பொழுது என்ன செய்யலாம்?" என்றான். சுமதி ஒன்றும் பேசவில்லை. முகுந்தன் "சுவாமீ, எதிர்க்கவேண்டியதுதான் கூடிய மட்டில்: நமக்கென்னகுறைவு? கோட்டையில் இருக்கும்வரையில் எத்தனை சேனைவந்துதான் என்ன செய்யமுடியும் நம்மை?" என்றான். மங்களநாயகரும் வாயைத் திறக்கவில்லை. இன்னும் சிறிதுநேரம் யோசனை செய்துவிட்டு பிரதாபசிங்கன் "என்ன செய்யலாம் சொல்லுங்கள். இனி யோசனை செய்யக் காலமில்லை. நடக்கவேண்டியதை உடனேயே நடத்த வேண்டும்."

சுமதி "மங்களநாயகரே நமது சேனை இப்பொழுது இருக்கும் நிலைமையில் 10,000 பேர்களை—ஏன்?—12,000 என்று வைத்துக்கொள்வோம்—அத்தனை பேர்களை எதிர்த்து யுத்தம் செய்யமுடியுமா?" மங்களநாயகர் இன்னமும் பேசவில்லை. அரசன் "எதிர்த்து யுத்தம் செய்யாவிட்டாலும் கிடக்கட்டும். முற்றுகை போட்டால் எத்தனைநாள் கோட்டையில் நாம் சௌக்கியமாய் இருக்கமுடியும்?"

மங்களநாயகர் "சுவாமீ! நாம் இதுவரையில் செய்த ஏற்பாடுகளில் ஜயபாலர் உதவியின்றி நமது சேனைமட்டும் துருக்கப்படையை எதிர்க்கவேண்டுமென்ற தீர்மானமே கிடையாது. மேலும் நமது கோட்டையில் இருக்கும் உணவுப்பொருள்கள் ஒரு மாதத்துக்குமேல் நில்லாவென்பது மந்திரிக்கும் தங்களுக்கும் தெரிந்த விஷயமே—"

அரசன் "ஆகையால் என்ன செய்யலாம் என்கின்றீர்? சொல்லும் விரைவாய்!"

முகுந்தன் "பிறர் உதவியை எதிர்பார்த்து நம்காரியங்களை முடித்துக்கொள்வோம் என்று எண்ணுவதால் வரும் தப்பு இதுவேதான். இப்பொழுது என்ன செய்யவேண்டியது—'

அரசன் "முகுந்தா நடந்த சமாசாரத்தைப் பற்றி யோசிப்பது,சாப்பிட்ட சாதத்திற்குஊறுகாய் தேடுவதுபோலாகும்! இனிச்செய்யவேண்டியவற்றைப் பேசுவோம்." சுமதி "இனிச் செய்யவேண்டியது ஒன்றேதான். இதைவிட்டகலவேண்டும்."

அரசன் "அது எப்படி சாத்தியம்? எங்கே போவது?—" மங்களநாயகர் "புறப்படவேண்டியதுதான். சாத்தியமோ சாத்தியமில்லையோ புறப்படுவது நலம். பிரயோஜனமின்றி ஜனங்களை மடிப்பதில் என்ன பயன்?—"

அரசன் "ஈசா! என்ன விந்தையா யிருக்கின்றது உன் செயல்! இராஜராஜேசுவரீ:தாயே! உன் கருணையோ இத்துன்பங்கள்! ....சரி இஷ்டப்படி செய்யுங்கள்."

சுமதி "நமது சேனை, ஜனங்கள் எல்லோரும் அஹோரபுரத்திற்குப் புறப்பட வேண்டியதுதான். முன்னரே சாதாரண ஜனங்களை அனுப்பிவிட்டோமன்றோ. இப்பொழுது பட்டணத்தில் உள்ளவர்களை விரைவில் வெளிக்கிளப்பலாம். மேலும் உணவுப்பொருள்களையும் சிறிது சிறிதாய்க் கணவாய் மார்க்கமாய் அஹோரத்திற்குக் கொண்டுபோகலாம். ஆதலால் அங்ஙனம் செய்வதே நலமென்றுதோன்றுகின்றது......" மங்களநாயகர் "அதுதான் திறமானவேலை. பறந்தோடிவரும் அந்த துருக்க சேனை நிர்மானுஷ்யமா யிருக்கும் உதயபுரியை அடைந்தால் உற்சாகமற்று, சோர்ந்து வாடி

விடும். ஒன்றும் விடாமல் ஊருக்குத் திமூட்டிப் போவோமாகில், சாம்பலைத் தின்னட்டும் வந்து சேர்ந்தவுடன்! மெலிந்த சேனை மறுபடி தேறி வருவதற்குள் நமது நிலைமை வெகுவாய்ப் பலப்படும். நரேந்திரனும் அதிவேகமாகவே வந்திருக்கின்றனன் பாபம். காலமும் நமக்கு அநுகூலமே" என்றான்.

நரேந்திரன் என்ற பெயரைச் சொல்லவே, அனைவரும் நரேந்திரனைப்பற்றி விசாரிக்கத் தொடங்கினர். அவன் சற்றுத் தெளிந்து சுகமாய் இருக்கிறான் என்று கேட்டுச் சந்தோஷமடைந்தனர். மறுபடி வெகு நேரம் கூடிப் பேசி கடைசியாக அஹோராத்ம்போவதே யுக்தமென்றும், கூடிய சீக்கிரம் எல்லோரையும் பிரயாணப்படுத்த வேண்டுமென்றும் தீர்மானமாயிற்று.

சிறுவர்களுக்கான பக்கங்கள்

CHILDREN'S PAGES

[ஸ்ரீமான் ஜி. ரத்தினம் பிள்ளை அவர்கள், பி.ஏ., எல்.டி.]

அலெக்சாந்தரும் ஆப்பிரிக்கா தலைவரும்

அலெக்சாந்தர் அநேக நாடுகளை ஜயித்துக்கொண்டே ஆப்பிரிக்காவிலுள்ள ஒரு நகரத்தை அடைந்தார். அவ்வூர் ஜனங்கள் அவரைத் தங்கள் தலைவரிடம் அழைத்துக்கொண்டு போயினர். தலைவர் இவருக்குத் தக்கவாறு உபசரித்து இவருடன் இனிமையாகப் பேசிக்கொண்டிருக்கையில் இரண்டு வழக்காளிகள் வந்தனர். அவர்களில் வாதி, "தலைவரே! நான் இவரிடத்தில் ஒரு துண்டு நிலத்தை வாங்கினேன். அதில் நான் ஒரு கிணறு வெட்டியபோது ஒரு பெரும் புதையல் அகப்பட்டது. நிலத்தை நான் வாங்கினேனே தவிர, புதையலை நான் வாங்கவில்லை. ஆகையால் புதையல் என்னுடையதல்ல. பிரதிவாதிக்கே சொந்தம். புதையல் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று நான் அவருக்குப் பலதடவைகளில் சொல்லியும் எடுத்துக்கொள்ளமாட்டேன் என்று சொல்லுகிறார். ஆகையால் தாங்கள் அவரை எடுத்துக்கொள்ளச் சொல்லவேண்டும். இதுதான் என்னுடைய வேண்டுகோள்" என்று சொன்னான்.

பிரதிவாதி, "தலைவரே! நான் வாதியிடம் என் நிலத்தை விற்றபோது அதிலடங்கிய எல்லாவற்றையும் விற்று விட்டேன். ஆகையால் புதையல் வாதியினுடையதே தவிர என்னுடையதல்ல. அவரையே அதை வைத்துக்கொள்ளச் சொல்லவேண்டும்" என்று பதில் சொன்னான்.

இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த அலெக்சாந்தர், "தலைவர் எவ்விதம் இந்த வழக்கைத் தீர்ப்பார்; பார்ப்போம்" என்று யோசித்துக்கொண்டிருக்கையில், தலைவர் வாதியைப் பார்த்து, "உமக்குப் பிள்ளையுண்டா" என்று கேட்க, "அவர் எனக்கு ஒரு பிள்ளையுண்டு" என்றனர். பின் பிரதிவாதியையும் இம்மாதிரி வினவ, அவரும் தனக்கு ஒரு பெண் உண்டென்று சொன்னார். தலைவர் பிரதிவாதியைப் பார்த்து, "உம்முடைய பெண்ணை அவருடைய பிள்ளைக்கு கலியாணம் செய்து கொடும். தம்பதிகள் அப்புதையலை அடையட்டும்" என்று தீர்மானஞ் செய்தார்.

இதைக்கேட்ட அலெக்சாந்தர், தலைவர் இவ்வளவு நியாயமாகத் தீர்மானஞ் செய்ததற்கு மிகவும் மெச்சினார். "உங்கள் தேசத்தில் இந்த வழக்கை எவ்விதம் தீர்ப்பீர்கள்" என்று தலைவர் கேட்க அலெக்சாந்தர், "இருவரையும் சிறையிலிட்டுப் புதையலை அரசருக்கு சேர்த்துவிடுவோம்" என்று சொன்னார்.

தலைவர்: "தங்கள் தேசத்தில் வெயில் எரிகிறதா? மழை பெய்கிறதா?"

அலெக்சாந்தர்: "வெயிலும் எரிகிறது. மழையும் பெய்கிறது."

தலைவர்: "உங்களுக்காக அல்ல; உங்கள் தேசத்திலுள்ள ஆடுமாடுகளுக்கும் மற்றப் பிராணிகளுக்குந்தான்." இதைக் கேட்டதும் அலெக்சாந்தர் வெட்கமடைந்து சென்றார்.

ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

LADIES' PAGES

[ஸ்ரீமான் ஸி. ஆர். ஸ்ரீனிவாஸ ஐயங்காரவர்கள், பீ.ஏ.]

2. அனஸூயை

"ஒருவேளை உங்களுடைய கணவர்களை அவளுடைய தயவால் ஆபத்தில்லாமல் மறுபடியும் பெறும்படியிருந்தாலு மிருக்கும். இப்படி ஒருவருக்கொருவர் வைரம் பூண்டு நடக்கும் விஷயத்தில் நானும் உங்களுடன் சென்றால், இந்தக் கார்யத்தில் எனக்கும் ஏதோ சம்பந்த முண்டென்றெண்ணி, அந்தத் தபோநிதியான பதிவிரதை என்னைச் சாம்பலாய் எரித்தால் நான் என்ன செய்வேன்? நான் தேவர்களுக்கும், அஸுரர்களுக்கும், மனிதர்களுக்கும், ராக்ஷஸர்களுக்கும், ஸகல பிரபஞ்சத்திற்கும் நண்பனாய், எல்லோரிடத்திலும் நல்ல பெயரைப் பெற்றுக்கொண்டு மானமாய்க் காலங்கழிக்கிறேன். உங்களுடைய குடும்பச் சண்டையில் என்னை மாட்டிவிட வேண்டாம். இதையெல்லாம் அறிந்தே நான் இல்லறத்தை வெறுத்து துறவியானே"னென்றார். அதைக்கேட்டு அவர்கள் "நாரத! போதும் போதும். எங்களுக்குப் புத்தி வந்தது. இனி ஒருநாளும் மறக்கமாட்டோம். எங்களை கொடிய பாபத்திலிருந்து மீட்டதற்கு நீ எந்த சிக்ஷை செய்தாலும் உட்படுகிறோம். எவ்வளவு தடவை நீ எங்களுக்கு நல்ல புத்தி புகட்டினாலும், அஞ்ஞானம் மேலிட்டு அதை மறந்துவிடுகிறோம். உலகங்களைப் படைத்துக் காத்தழிக்கும் மஹா புருஷர்களை விட கேவலம் காமக்ரோதமற்று சாந்தியால் நிறைந்து ஸமுத்ரம்போல் அசைவற்று எங்கும் பூர்ணப்ரஹ்ம ஸ்வரூபமாய்ப் பார்க்கும் உன்னைப்போன்ற ப்ரஹ்மஞானிகள் கோடிமடங்கு மேலானவர்களே. எங்களுக்கும் எங்களுடைய பர்த்தாக்களுக்கும் அவ்வளவு பக்குவம் வரவில்லையென்று அஹம்பாவத்தையும் வெட்கத்தையும் விட்டு ஒப்புக்கொள்ளுகிறோம். போதுமா? அந்த ப்ரஹ்ம ஞானிகளுக்குள் சிரேஷ்டரும், பற்றற்றவரும், எல்லையற்ற ஞானத்திற்கும், சக்திக்கும் ஆநந்தத்திற்கும் நிதியாயிருப்பவருமான அத்ரிமஹர்ஷி மேன்மைடன் கொண்டாடும் அந்த அநஸூயா, தேவி எங்களையும் மற்ற எல்லோரையும் காட்டிலும் பதிவிரதாமஹிமையில் மாத்திரமல்ல; ஞானத்திலும் யோகபலத்திலும் ஸகல உத்தமகுணங்களிலும் மேலானவளென்று ஸந்தேகமில்லாமல் வாய்விட்டுக் கோடி தடவை சொல்லுகிறோம். எவ்விடத்தில் எவர்களுக்கு முன்பாக பிரமாணம் செய்யச்சொன்னாலும் செய்கிறோம். எங்களை இனிமேலும் பரீக்ஷிக்காதே. கவலையில் ஆழ்த்தாதே. எங்களுடைய பர்த்தாக்கள் இருக்குமிடத்திற்கு அழைத்துப்போ. அநஸூயை வேண்டுவ திருக்கட்டும். முதலில் எங்களுக்கு மாங்கல்யபிக்ஷை கொடுக்கும்படி உன்னை 'வேண்டுகிறோமெ"ன்று கண்ணீர் பெருக, தேகம் பதற, கர்வங் குன்றி, பார்ப்போர் மனம் உருகும்படி பரிதாபமாய்க் கெஞ்சும் லோகமாதாக்களைப் பார்த்து நாரதர் "நீங்கள் சொல்வதெல்லாம் எனக்கு விளங்கவில்லை. ஏதோ அத்ரிமஹர்ஷியின் ஆசிரமத்திற்குப் போவோம். பிறகு பார்த்துக்கொள்வோ"மென்று அவர்களுடன் பூலோகத்தில் அந்த புண்யாசிரமத்தி னருகில் வந்தார்கள்.

தங்களை யொருவரும் பார்க்கக்கூடாதென்று அவர்கள் இருட்டினபிறகு வந்ததால், அநஸூயை அந்த மூன்று குழந்தைகளையும் தொட்டிலில் வளர்த்தி மதுரமாய்ப் பாடி அவர்களை தூங்கச்செய்து கொண்டிருந்தாள். நிகரற்ற தன் ஞானதிருஷ்டியால் லோகமாதாக்களின் வரவை அறியாமலிருப்பாளா? அந்த ஸமயத்திற்குத் தகுந்தபடி தான் பாடும் பாட்டில் திருமூர்த்திகளின் மஹிமையையும் கல்யாண குணங்களையும் மறைபொருளாய் வர்ணித்துக்கொண் டிருந்தாள். நாரதர் அதைக்கேட்டுத் தன்னுடன் வந்தவர்களுடைய முகத்தைக் கடைக்கண்ணால் கவனித்தார். அவர்கள் வெட்கத்தாலும் வணக்கத்தாலும் தலைகுனிந்து முகம் வெளுத்து பச்சாத்தாபத்தால் கண்ணீர் விட்டுக்கொண் டிருந்தார்கள். திரிமூர்த்திகளுக்கு நேர்ந்தகதியை அநஸூயையின் பாட்டால் அவர்கள் அறிந்துகொண்டார்களென்று நாரதர் கண்டு, அவர்களுடன் ஆசிரமத்தில் பிரவேசித்தார். அங்கே அக்னிஹோத்ர சாலையில் ஜ்யோதிர்மயமான பர்வதத்தைப்போல் வீற்றிருக்கும் அத்ரி மஹரிஷியைத் தரிசித்து, தன்னுடைய பெயரைத் தெரி

கீறி ஆற்றினால், புண் ஆறும்.

வித்து நமஸ்கரித்தார். அவருடைய ஆசீர்வாதத்தையும் பெற்ருர். ஸரஸ்வதீ முதலியவர்களும் அப்படியே அந்தத் தபோநிதியை வணங்கினர்கள். "நித்ய ஸுமங்கலிகளாய் இருக்கக்கடவீர்க"ளென்ற ஆசீர்வாதத்தைப் பெற்ருர்கள். பிறகு, அநஸூயா தேவி இருக்கு மிடத்திற்கு வந்து, நாரதர் தன் பெயரைத் தெரிவித்து "அம்மணீ ப்ரஹ்மவித்தையை பிரார்த்திப்பதுபோல், தங்களுடைய கிருபையை வேண்டுகிறே"னென்று நமஸ்கரித்தார். "நாரதா! சிரஞ்ஜீவியாய் பகவத் கைங்கர்யத்தில் ஈடுபட்டவனய் லோகமித்திரனய் விளங்கக்கடவாயெ"ன்ற ஆசீர்வாதத்தைப் பெற்ருர். பிறகு முறையே, ஸரஸ்வதீ முதலியவர்கள் பரம விநயத்துடனும் பக்தியுடனும் அந்த பதிவிரதா சிரோமணியை நெருங்கித் தங்களுடைய பெயர்களைச் சொல்லி "அம்மணீ! எங்களுடைய அபராதங்களைப் பொறுத்து, எங்களுக்கு நிர்மலமான ஞானத்தைஅநுக்ரஹித்து எங்களுக்கு மாங்கல்ய பிக்ஷை கொடுக்க வேண்டு"மென்று கைகூப்பிப் பிரார்த்தித்தார்கள். அநஸூயை அவர்களை வாரி யணைத்து உச்சிமுகர்ந்து ஆநந்தக்கண்ணீர் பெருக, மஹாபிரியததுடன் ஆசீர்வதித்துத் தானும் தன் கணவனும்,நாரதருக்கும் அவர்களுக்கும் விதிப்படி செய்யவேண்டிய அதிதிபூஜையைசெய்து, "நீங்கள் இங்கே வரும்படி என்ன பாக்கியம் செய்தோமோ? என்ன தவமிழைத்தோமோ? உங்களில் ஒருவராலேயே இந்தப் பிரபஞ்சம் நடைபெற்று வருகிறது. மூவரும் சேர்ந்து எங்களைக் கடாக்ஷிக்கும்படி நாங்கள் என்ன புண்யம் செய்தோமெ"ன்று நல்வரவு கூறி, "நாரதமஹர்ஷே! தங்களுடைய அநுக்ரஹமும் கிருபையும் இல்லாவிட்டால், இந்தப் பெரும் பேறு எங்களுக்கு எப்படிக் கிடைக்கு"மென்ருர்கள். அந்த ஸமயத்தில் தூங்கிக்கொண்டிருந்த அந்த மூன்று குழந்தைகளும் திடீரென்று சிரித்து, அடுத்த நிமிஷத்தில் வாய்விட்டு அழுதன. ஜகத்தின் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹார கர்த்தாக்களென்று பெயர் பூண்டு, தாங்கள் தங்களுடைய பத்தினிகளிடத்தில் பேசிக்கொண்ட பெருமையும், கூறிக்கொண்ட வீர்யமும், செய்த சபதமும் வீணய், தங்களுக்கே சொல்ல முடியாத அவமானம் நேர்ந்து, உண்பதற்கும் உறங்குவதற்கும், இருப்பதற்கும் படுப்பதற்கும் நிற்பதற்கும் சக்தியற்று, பிறருடைய கையைப் பார்த்து தயவை அபேக்ஷித்து நிர்வாணமாய்க் கதியற்று இருக்கும் குழந்தைகளாகத் தாங்கள் உருவம் மாறினதையும், அந்த ஹீனமான ஸ்திதியில் தங்களுடைய பார்யைகள் தங்களைப் பார்க்கும்படி நேர்ந்ததையும், பிறகு அவர்களுடைய கோபத்திற்கும் குரூரமான வார்த்தைகளுக்கும் கேலிக்கும் நாம் எப்படித் தப்பிப் பிழைக்கிறதென்றும், கேவலம் நமது பார்யைகள் ஒரு மனுஷ்ய ஸ்திரீயைக் கெஞ்சி பல்லைக் காட்டி காலைப்பிடித்துக்கொண்டு நம்மை மீட்கும்படி நேர்ந்ததல்லவாவென்றும்,நமக்கு எதிரிலேயே நமது பார்யைகள் இப்படி அவமானம் அடைந்தார்களே யென்றும், திருமூர்த்திகளானுலும்திருமூர்த்திபத்தினிகளானுலும்,ப்ரஹ்மதேஜோபலத்திற்கும் பதிவ்ரதா தர்மத்திற்கும் எதிர்நிற்கமுடியாதென்றும் நன்ருய்உணர்ந்து, வெட்கமும் துக்கமும் தாங்காமல் இப்படித் திடீரென்று அழுதார்களோ? அல்லது, "இந்த நாரதன் நமக்குப் புத்திரனைப் போலிருந்தாலும் நமது குறைகளை நாம் அறியாமல் கெடுவதைக் கண்டு, இரக்கங்கொண்டு எப்படி உபதேசித்தால் மனதில் நன்ருய் படுமோ, என்னுளும் நடக்காதோ, அப்படி உபதேசிக்கும் வழியைத் தேடி நம்மைக் களங்கமற்றவர்களாய்ச் செய்தானே வென்ற ஸந்தோஷம் மேலிட்டு அதனுல் முதலில் சிரித்தார்களோ, அல்லது "ஜீவகோடிகள் கர்மபந்தத்திலிருந்து விடுபடுவதற்காக எந்த மூர்த்திகளை ஆராதிக்கிருர்களோ அந்தத் திரிமூர்த்திகளான நாமே இந்த ஸ்திதியை அடைவதற்குக்காரணமென்ன? நம்மைக் காட்டிலும் மேலான சக்தி ஒன்று இருப்பது போல் தோன்றுகிறது. அந்தப் பராசக்தியான கர்ம தேவதைக்கு நமஸ்காரம். நமக்கும் அக்ஞானம் மேலிட்டு, இந்தக் கதியை அடைந்தோமல்லவா வெ"ன்று ஆச்சரியத்தால் சிரித்தார்களோ? அல்லது, "நாம் எப்பாடு பட்டாலும் பாதகமில்லை. யாரால் மீட்கப்பட்டாலும் பாதகமில்லை. இந்த மஹா பதிவிரதையின் கோபத்திற்கு எப்படியாவது பாத்திரமாகாமல் இந்தச் சாபத்திலிருந்து விடுபட்டு இங்கிருந்து வெளிக்கிளம்பினுல் போதும்: உயிரிருந்தால் உப்புமாறிப் பிழைக்கலாமென்ற பழமொழிப்படி இந்த ஆபத்திற்குத் தப்பினுல், இனி ஒரு

நாளும் இந்த அஹம்பாவத்திற்கும் தூர்ப்புத்திக்கும் இடம் கொடுப்பதில்லை. பெண்டுகளின் போதனைக்கும் உபத்திரவத்திற்கும் உட்பட்டு அவுத்து, முன்பின் யோசிக்காமல் நமது பலத்தையும் எதிரியின் பலத்தையும் கவனிக்காமல் மதியற்று, தகாத காரியங்களில் தலையிட்டுக்கொள்வதில்லை" யென்று ஒவ்வொரு நிமிஷமும் தங்களுக்குள் பிரதிக்ஞை செய்துகொண்டிருந்த திருமூர்த்திகள் தங்களுடைய பார்யைகள் அநஸூயையை நமஸ்கரிப்பதையும் அவளால் பிரியத்துடன் ஆசீர்வதிக்கப்படுவதையும் கேட்டு "இனி நமக்குப் பயமில்லை. ஆதியந்தம் இல்லாதவர்களென்று நம்மைச் சொன்னதும் இன்று செத்துப் பிழைத்தோ"மென்ற ஸந்தோஷத்தால் வாய்விட்டுச் சிரித்தார்களோ அறியோம்.

அப்பொழுது அநஸூயை "குழந்தைகளே! உங்களுடைய பர்த்தாக்கள் என்னிடத்தில் அநுக்ரஹம் செய்ய 'விரும்பி என் பூர்வஜன்ம புண்யங்களின் பலரூபமாய் இங்கே வந்தார்கள். திருமூர்த்திகளையும் அவர்களுடைய பார்யாஸமேதர்களாய் தரிசனம்செய்யும் மஹா பாக்கியத்தை யடைவதற்காக இந்த உபாயத்தைச் செய்யத் துணிந்தேன். வேறு காரணத்தாலல்ல. உங்களுடைய பர்த்தாக்கள் தங்களை அண்டி உபாஸிப்பவர்களுக்கு எவ்வளவு கட்டுப்பட்டிருக்கிறார்களென்பதையும், தங்களுடைய அபாரமான சக்தியையும் ஞானத்தையும் மறைத்து அடக்கிக் குழந்தைகளைப்போலிருந்து, எங்களைக் காட்டிலும் பக்தர்களே மேலானவர்களென்று லோகத்திற்கு உபதேசிக்கும் கருணா ஸமுத்ரமென்றும் காட்டுவதற்கே இப்படிச் செய்யத்துணிந்தேன். இன்றே என் தபஸ் பூர்ணமான பலத்தைக் கொடுத்தது. இன்று தான் என் ஜன்மம் ஸபலமாயிற்று. திருமூர்த்திகளைக் குழந்தைகளாய்ப் பெற்றுச் சீராட்டவும் அவர்களுடைய பார்யைகளுடன் ஒரே காலத்தில் அவர்களைத் தரிசனம் செய்யவும் வேறு யாருக்காவது இதுவரை இந்தப் பாக்கியம் கிடைத்ததுண்டா" வென்று பார்வைக்கு ஸ்தோத்ரரூபமாயும் முன் நடந்தவிருத்தாந்தங்களையும் அதனால் அவர்கள் அறியவேண்டிய விஷயங்களை ஜாடையாய் எடுத்துப் புகட்டி மர்மமாய் அவர்களுக்கு ஹிதத்தைஉபதேசிக்கும் அநஸூயையின் வார்த்தைகளால் குழந்தைகளாயிருந்த திருமூர்த்திகளும் அவர்களின் பார்யைகளும் சாந்தமான சித்தத்தை யுடையவர்களாய் அஹம்பாவம் நீங்கி, "எங்களுக்கு புத்தி வந்தது; போதும்" என்று சொல்லும் பாவனையாய் எல்லோரும் நாரதரைக் கடைக்கண்ணால் பார்த்து வேண்டினார்கள். அவரும் அனஸூயையைப்பார்த்து "என் உத்தேசம்நிறைவேறிற்று. இவ்வளவு போதும். இனி ஒருநாளும் மறக்க மாட்டார்கள். இப்படிச் செய்யமாட்டார்" ளென்று கண் சாடையால் தெரிவிக்க, அநஸூயை அதை அறிந்து இவ்வளவுக்கும் காரணமான ஸரஸ்வதியைப்பார்த்து, "குழந்தாய்! நான் எம்மாத்திரம்? எனக்கு என்ன தெரியும்? என் பர்த்தாவின் கிருபைக்கும் அநுக்ரஹத்திற்கும் பாத்திரமாவதற்கேதான் எக்காலத்திலும் யத்தினஞ் செய்துகொண்டிருக்கிறேன். அவரே எனக்கு மித்திரன். அவரே எனக்கு ஆசாரியர். அவரே எனக்குத் தெய்வம். அவரே நான் உபாஸிக்கும் ப்ரஹ்ம வித்யை. அவரே நான் அடையப்போகும் பரப்ஹ்ம ஸ்வரூபி. அவருடைய கமண்டலத்திலுள்ள ஜலத்தின் மஹிமையால் இப்படிச் செய்தேனே யொழிய, என்னால் என்ன முடியு"மென்றாள். இப்படி மறைபொருளாய் அவர்களுக்கு பதிவிரதா தர்மத்தை உபதேசித்த அநஸூயையைப்பார்த்து எல்லாமறிந்த அத்ரி மஹர்ஷி "அநஸூயே! திருமூர்த்திகளை நமது குழந்தைகளாகப் பாவிக்கும் பாக்கியம் நமக்கு இனி கிடைக்காதென் றெண்ணுகிறேன். ஆகையால் அவர்களைப் பூர்வ ரூபங்களை யடையச்செய்" என்றார். உடனே அந்த உத்தமி தன் கணவனுடைய பாதங்களில் நமஸ்கரித்து அவருடைய கமண்டலத்திலுள்ள ஜலத்தால் தொட்டிலிலுள்ள குழந்தைகளின்மேல் புரோக்ஷித்தாள். உடனே அவை அந்த ரூபங்களை விட்டு ஸ்வரூபங்களை அடைந்தார்கள். அத்ரியும், அநஸூயையும், அவர்களுக்குப் பிரதக்ஷிண நமஸ்காரங்கள் செய்து உபசரித்தார்கள். ஆயினும், அவர்கள் அவ்விடத்தில் தங்குவதற்கும் நாரதரையாவது தங்களுடைய பார்யைகளையாவது ரிஷி தம்பதிகளையாவது பார்ப்பதற்கும் பேசுவதற்கும் அதிக இஷ்டமில்லாதவர்களாய் காணப்பட்டார்கள். அதே வண்ணம், லக்ஷ்மி முதலியவர்களின் முகத்திலும் விளங்கிற்று. எப்படி யிருந்தாலும்,

அதை வெளியில் அவளிடத்தில் காட்டிக் கொள்ள இஷ்டமில்லாமல், அந்த ரிஷி தம்பதிகளைப் பார்த்து, "நீங்கள் எங்களுக்குச் செய்த அதிதி பூஜையாலும், உங்களுடைய நிஜமான பக்தியாலும் மிகவும் சந்தோஷித்தோம். உங்களுக்கு வேண்டிய வரங்களைக் கேளுங்க"ளென, அவர்கள் கைகூப்பி வணங்கி, "எங்களுடைய பூர்வ புண்யவசத்தால் ஸ்வல்ப காலமாவது எங்களுடைய கிருஹத்தில் குழந்தைகளாய் விளங்கினபடியே எப்பொழுதும் எங்களுக்கு அநுக்ரஹம் செய்யவேண்டு" மென்று பிரார்த்தித்தார்கள். "அவர்கள் அப்படியே ஆகட்டு" மென்று வாக்களித்தார்கள். அந்தக் காரணத்தாலேயே ப்ரஹ்மாவின் அம்சத்தால் சந்திரனும், விஷ்ணுவின் அம்சத்கால் தத்தாத்ரேயரும், ருத்ரனுடைய அம்சத்தால் துர்வாஸரும், அந்த ரிஷிபத்னிகளுக்குக் குழந்தைகளானார்கள்.

தபோ மஹிமையாலும், ஞானத்தாலும் திருமூர்த்திகளை மிஞ்சி, அவர்கள் நடத்தும் தொழிலைத் தானே நடத்திவரும் சக்திவாய்ந்த அத்ரி மஹர்ஷியைப்போல், நமது ஆர்யபுத்திரர்கள் ஆகவேண்டும். தபோ பலத்திலும், பதிவிரதா தர்மத்திலும் பொறுமையிலும் திருமூர்த்திகளின் பார்யைகளான ஸரஸ்வதியையும், மஹாலக்ஷ்மியையும், பார்வதியையும் மிஞ்சி, அவர்களுக்கு மாங்கல்ய பிக்ஷை கொடுக்கும்படியான தன்மை வாய்ந்த அநஸூயா தேவியைப் போல் நமது ஆர்யபுத்திரிகள் ஒவ்வொரு கிருஹத்திலும் ரத்தினதீபம்போல் விளங்கட்டும். முன்காலத்தில் இப்படிப்பட்ட மஹாநுபாவர்களையும் ஸ்த்ரீரத்நங்களையும் கணக்கில்லாமல் பெற்ற, ஆர்யமாதா இப்பொழுது மலடானளோ! நாம் நமது நன்னடைத்தையாலும், பரோபகாரத்தாலும், தாராளமான எண்ணத்தாலும், தன்னயம் பாராட்டுவதை ஒழிப்பதாலும், பக்தியாலும், லோகநாதனுடைய கிருபைக்குப் பாத்திரமாகச் செய்துகொண்டால், நாம் அடையாத மேன்மையும் உண்டோ? நமக்குக் கிடைக்காத பாக்கியமு முண்டோ?

முற்றிற்று.

பிரபஞ்ச வர்த்தமானம்

NEWS & NOTES

யுத்தத்தில் நமது ராஜாங்கத்தார் வெற்றியடைந்ததை அனைவருக்கும் ஞாபகப்படுத்தும் பொருட்டு பத்து லக்ஷரூபாய் செலவிட்டு சென்னை மவுண்ட் ரோடுக்கருகில் ஒரு கம்பீரமான கட்டடம் கட்டவேண்டுமென்று சமாதானக்கொண்டாட்ட கமிட்டியார் தீர்மானித்து அதற்காகப் பண உதவியைக் கோருகிறார்கள். கட்டடமானது பொதுநன்மைக்காக உழைப்பவர்களுக்கு உபயோகப்படுமாம். தனவான்கள் இயன்ற வரையில் இதற்குப் பண உதவி செய்வார்களென நம்புகிறோம்.

ஜயமண்டபம்.

சேலம் உபாத்தியாயர் சங்கத்தின் ஆதரவின்கீழ் சேலம் காலேஜில், சென்ற மாதம் ஒரு கான்பரன்ஸ் கூடியது. பல பாகங்களிலிருந்தும் பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். உபசரணைக் கமிடியின் தலைவராகிய ம-ா-ா-ஸ்ரீ எக்கிய நாராயணய்யர் அவர்களுக்கு நல்வரவு அளித்தார். கல்வி விஷயமான உபந்யாசங்கள் பல நடைபெற்றன. கான்பரன்சில் பிரதம பாடசாலைகளின் வேலை நேரமும் உபாத்தியாயர்களின் வேலைநேரச் சுருக்கமும் இந்திய நிலைமைக்குத் தகுந்த பாடபுத்தகங்களை ஏற்படுத்துவது முதலியவைகளைப்பற்றிய தீர்மானங்களோடு பின்வரும் விஷயங்களைப்பற்றியும் தீர்மானிக்கப்பட்டன.

சேலம் ஜில்லா வித்தியா கான்பரன்ஸ்.

(1) எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் ஹிந்தி பாஷையைக் கற்பிக்கும் முயற்சிகள். (2) சேலம் ஜில்லாவின் பூகோளமும் சரித்திரமும் எழுதுவது. (3) பிரதமப் படிப்பை இலவசமாயும் கட்டாயமாயும் ஆக்குவது. (4) உபாத்தியாயர்களுக்கும் பிள்ளைகளுக்கும் அனுகூலமான பிரத்தியேக ஐக்கியநாணயச் சங்கங்கள் ஏற்படுத்துவது. (5) மாணவர்களும் ஆசிரியர்களும் சேர்ந்து உல்லாசப் பிரயாணங்கள் போவதற்கும் வேண்டிய திரவிய சகாயம் செய்வது. (6) உபாத்தியாயர்கள் உயர்தர பரீட்சைகளுக்குப் பள்ளிக்கூட படிப்பு இல்லாமலேயே போவதற்கு இடங்கொடுத்தல் முதலியனவாம். நடவடிக்கைகள் எல்லாம் தமிழிலேயே நடைபெற்றதெனக் கேட்டு சந்தோஷிக்கிறோம்.



காலஞ்சென்ற ஸர். வி. வி. தேசிகாசாரி.
The Late SIR V. C. DESIKA CHARRY, Kt.

விவேகபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்.

தொகுதி XII | சித்தார்த்தி௵ ஐப்பசிமீ :: 1919-௵ நவம்பர்மீ | பகுதி 5

கம்பராமாயணத் திரட்டு

SELECTIONS FROM KAMBA RAMAYANA

மன்றலோ திதந்தகோல மணியைநல்கி மாருதி
நின்றுவாச கங்கள்கூற நீடுவே லிராமனும் [பின்
என்றின்மைந்த விப்பதாதி யெழுகவென் றெழுந்த
தென்றிசைக் கருங்கடற் றிரைப்புறத்து மேவினார்.

கடற்கரை யிறுத்தனன் கவியின் சேனையோ
டடற்படை யிராகவ னரக்க னேவலால்
மடற்கமலத்தயன் மயனுந் தானுமாய்ப்
படைத்தன னிலங்கையைப் பண்டுபோலவே.

மேலுயர் மண்டபத் திருந்து வெய்யவன்
தோலியல் குரங்கிவ்வூர்ச் சுட்டதாவென
மாலிய வான்முத லரக்கர் வல்லென
ஓலுயர் கடலென வுளையக் கூவினார்.

மைந்த னிந்திர சித்து மவுலியான்
தந்தை தன்னொடு கூறத் தடுத்தெதிர்
தந்த போதவர் தங்கட் கயில்படு
வெந்த புண்ணென வீடணன் கூறுவான்.

இரணிய னென்பவன் யாவர் தம்மினும்
முரணிய னவனிவன் முனிய மாய்ந்தனன்
அரணிய னெஞ்சினு னவன்றன் தேவியாம்
தரணியின் றுயை விட் டருள றக்கதால்.

என்றலு மிராவண னெரியுஞ் சிந்தையான்
நின்றனை யேனினை யடுவ லீங்கெனத்
தன்றுணை நால்வருந் தானும் வீடணன்
வென்றிகொளிராகவன் சரண மேவினான்.

கடலுடை யிலங்கையி னரணுங் காவலர்
உடைய நீள் வரங்களு மைந்த ருற்றமும்
படையின நீட்டமும் பகர்தி நீயெனா
அடையவா னிராமனுக் கரக்கன் கூறினான்.

வேண்டினா னொருவழி வேலை வேந்தனை
ஈண்டிய விலங்கைக்கன் றெய்த லின்மையால்
தூண்டினான் சுடுசரம் வருணன் றோன்றிவந்
தாண்டகை யிராகவ னடியின் வீழ்ந்தனன்.

ஆனபோர் வேலையை யடைந்த பின்புயர்
மானவர் தலைவனும் வான ரேசனும்
கோனக ரின்புறக் குன்றி றுத்தபின்
ஊனமி லிராவண னுற்றார் மேவினார்.

பற்றினர் சாரண சுகரைப் பன்முறை
சொற்றனர் கண்டவத் தூய மானவன்
விற்றொழில் வீடணற் கரசு விட்டதும்
கொற்றவற் குரைக்கெனக் கூறிப் போக்கினான்.

சேது பந்தமும் வீடணன் செய்தியும்
தூது சென்றவர் சொல்லத் தசமுகன்
ஓதும் வெவ்வுரை யோதின னப்பொழு
தேத மின்றி யெழுந்த திரவியே.

இலங்கை வேந்தனு மிராமனு மெரிபடை காண்பான்
இலங்கை மாளிகைத் தலையினு மலையினு மேற
இலங்கை யான்மணி முடி பறித் திரவிசே யகன்றான்
இலங்கை வேந்தனு மிராமனு மிருக்கைசென் றடைந்
[தார்.

நாலு வாயிலு நரரும்வா னரருமே நண்ணி
ஓல வேலையி னுருத்தன ரெனச்சில ருரைத்தார்
ஆல காலவேலரக்கனும் படைவகுத் தமைந்தான்
வேலி ராகவ னங்கதற் றூதென விட்டான்.

சீதை யென்னு மத் திருவைவிட் டின்சிரம் பெறுகென்
றோதி விட்டன னிராமனென் றங்கத னுரைத்தான்
போதி போதியென் றிராவணன் புகறலு மிராமன்
பாத பங்கயம் பணிந்தன னெழுந்தது பதாதி.

அரக்க ரைம்பது வெள்ளமு மலிகமு முடையக்
குரக்கு வேந்தனு மனுமனு நீலனுங் குறைத்தார்
அரக்க னவ்வுரை கேட்டுவந் தடர்த்தலு மருமன்
குரக்கு வேந்தர் மற்றவரவன் சாம்படக் குலைந்தார்.

இளைய வீரனு மிராவண னிளைந்து சிலையும்
உளைய வெய்தன னுடம்பிடி யவனுரத் துய்த்தே
வளையும் வாளெயிற் றிராவணன் வவ்வுவான் செல்ல
இளைய வீரனை மாருதி யெடுத்துக்கொண் டகன்றான்

விவேக போதினி

தொ. 12] சித்தார்த்தி௵ ஐப்பசி௴ [ப. 5

யுதிஷ்டிரர்

YUDHISHTIRA

உடனே யுதிஷ்டிரர் "ஸ்திரீகளில் இவளுக்கு எவ்விதத்திலும் நிகரில்லையென்று சொல்லக்கூடியவளும், மற்றவரைப்போல் தாயின் கர்ப்பத்திலிருந்து பிறக்காதவளும், மஹா பரிசுத்தமான அக்கினியையே உத்பத்திஸ்தானமா யுடையவளும், தெய்வாம்சம் பொருந்தினவளுமான பாஞ்சாலியையே இந்தத் தடவை பந்தயமாக வைக்கிறேன். ஐயோ" வென்றார். உடனே அந்த ஸபையிலுள்ள பெரியோர்கள் சீசீ யென்று நிந்தித்தார்கள். அந்த ஸபையே புயற்காற்றா லடிக்கப்பட்ட அலைபோல் கலங்கிற்று. பீஷ்மர் துரோணர் கிருபர் மற்ற அரசர்கள் கண்ணீ ருதிர்த்தார்கள். அவர்களை யறியாமல் தேகத்திலிருந்து வியர்வை யுண்டாயிற்று. விதுரர் ஒன்றும் தோன்றாமல் தலைகுனிந்து, "இதனால் என்ன அநர்த்தம் விளையுமோ" யென்று சிந்தித்துக் கொண்டிருந்தார். ஸஞ்சயன், அச்வத்தாமா, ஸோமதத்தன், திருதராஷ்டிர புத்திரனான யுயுத்ஸு வென்றவர்கள் தலைகுனிந்து, கோபங்கொண்ட நாகங்களைப்போல் சீறிக்கொண்டிருந்தார்கள். திருதராஷ்டிரன் மாத்திரம் மிகுந்த மகிழ்ச்சியடைந்து, அடிக்கடி "ஜயித்தாயிற்றா" வென்று சந்தோஷத்துடன் கேட்டுக்கொண்டே யிருந்தான். துச்சாஸனன், கர்ணன் முதலிய துஷ்டர்கள், சகுனி ஒவ்வொரு தடவை ஜயித்தவுடன் கைகொட்டிச் சிரித்துப் பாண்டவர்களை வெறுப்புடன் பார்த்து ஜாடைசெய்து "சபாஷ்" என்று உத்ஸாஹப்படுத்தினார்கள். பிறகு சகுனி கர்வத்தாலும் ஸந்தோஷத்தாலும் பிரகாசித்துக் கொண்டு காய்களை உருட்டி "இதையும் ஜயித்தே" னென்று காய்களை வீசியெறிந்து, எழுந்து நின்று "ஸபையோர்களே! கவனத்துடன் கேளுங்கள். தர்மத்தைத் தவறாமல் அனுஷ்டிக்கும் பரமயோக்கியனென்று வேஷம்பூண்ட இந்த யுதிஷ்டிரனுடைய வஞ்சனையும், பலத்தில் தனக்கு நிகரில்லையென்று இறுமாந்து மாம்ஸ பர்வதத்தைப்போல் வளர்ந்திருக்கும் இந்தப் பீமனுடைய ரக்தக்கொழுப்பும், தனக்கு அஸ்திர வித்தையை கற்பித்தத் துரோணரும் கிருபரும் தனக்கு ஈடில்லையென்று தலைதெரியாமல் கர்வங்கொண்ட இந்த அர்ஜுனனுடைய கைவன்மையும், சிறுபயல்களான இந்த நகுல ஸஹதேவர்களின் குதிப்பும், பதினான்கு லோகங்களையும் ஓர் துரும்பாய் நினைத்து அலக்ஷயமாய் நடக்கும் அந்தப் பாஞ்சாலியின் நொடிப்பும் இந்த சகுனியின் ஓர் கைப்பிடியில் இப்பொழுது அடங்கிக் கிடக்கிறதைக் கண்டீர்களா?" என்றான்.

அப்பொழுது துர்யோதனன் சகுனியை விலக்கிக்கொண்டு, தான் முன்னே வந்து நின்று விதுரரைப் பார்த்து, "விதுரா! பாண்டவர்களால் இதுவரையில் ஆளப்பட்டுவந்த நாடெல்லாம் நமக்குள் வந்துவிட்டது. இன்று முதல் அங்கே நமது கொடியை நாட்டி நமது ஆளுகையை எல்லோருக்கும் தெரிவித்து ஜயஸ்தம்பங்கள் தோரணங்கள் உத்ஸவங்கள் திருவிழாக்கள் முதலியவைகளைச் சரிவர ஏற்பாடுசெய்யும். பாண்டவர்களுடைய பொருள்களில் ஒரு தூசி விடாமல் இங்கே கொண்டு வந்து ஆஜர் செய்யும். கொண்டுவரக்கூடாதவைகளை ஜாப்தா செய்து அங்கேயே தகுந்த பந்தோபஸ்தில் வையும். பஞ்சைகளான இந்தப் பஞ்சபாண்டவர்களை, ஆடையாபரணங்களைப் பிடுங்கிக்கொண்டு, அடிமைகளுக்குத் தகுந்த உடையைத் தரிக்கச்செய்யும். அந்தச் சிற்றிடை திரௌபதியை விரைவாய் அழைத்துவரச்சொல்லும். அவள் அரண்மனை வேலைக்காரிகளுடன் சேர்ந்து வீட்டை விளக்கி மெழுகிப் பாத்திரங்களைச் சுத்திசெய்துகொண்டு போட்டதைத் தின்று பிழைக்கட்டு" மென்றான். புறக்கண்ணில்லாத திருதராஷ்டிரனுக்குப்பிறந்த துர்யோதனன், அகக்கண்ணில்லாத

குத்தி வடித்தாலும் சம்பா, குப்பையிலே போட்டாலும் தங்கம்.

வன். தன் சிற்றப்பனும், நடுவுநிலை தவறாதவரும் மஹாஞானியுமான விதுரரைப் பெயரைச் சொல்லியழைத்து வேலைக்காரனைப்போலக் கட்டளையிட்டதே அதற்கு அடையாளம். அந்தப்பரமஸாதுஅதைக்கேட்டு ''அடேமூடா! நீ பேசின வார்த்தைகள் உனக்கு முற்றிலும் தகாதவை. கயிற்றால் கழுத்தில் சுருக்கிட்டுக்கொண்டு படுகுழிக்கு நேரே தொங்குகிறதை ஏன் அறியவில்லை. பெரும்புலிகளை அளவுக்கு மிஞ்சிக் கோபம் மூட்டின மானுக்கு, நேரும் கதியென்ன? கொடிய விஷமுள்ள ஸர்ப்பங்கள் உன் தேகத்தைச் சுற்றிக்கொண்டிருக்கின்றன. யமனுடைய வீட்டிற்குப்போக ஆசைகொண்டாயா? தர்மபுத்திரன் தன்னைப் பந்தயமாய் வைத்துத் தோற்று ஸ்வதந்திரமில்லாக்காலத்தில் திரௌபதியையும் பந்தயமாய் வைத்தது ஸரியல்ல. அவளைச் சகுனி ஜயித்ததும் ஸரியல்ல. அவள் உனக்கு எப்படித் தாஸியாவாள். முன்காலத்தில் வேனனென்ற அரசன், செய்யத்தகாத செயல்களைச் செய்து, மஹர்ஷிகளைக் கோபமூட்டி, அவர்களால் கொல்லப்பட்டதையறியாயோ? மூங்கில் காய்ப்பது தன் நாசத்திற்குக் காரணமன்றோ. அப்படிப் பகையையும் பயத்தையும் இழிவையும் மரணத்தையும் தரக்கூடிய இந்தச் சூதை ஆலோசித்த நீ இதனாலேயே அழிவாய். ஓர் ஆடு, கத்தியை இலையென்றெண்ணி விழுங்கிற்று. அந்தக் கத்திக்குடையவன் அந்த ஆயுதத்தை வெளியில் இழுத்தால் அது அதன் தேகத்தை கிழித்துக் கொண்டல்லவா வெளியில் வரும்? அப்படியே பாண்டவர்களிடத்தில் நீ கொண்ட பகை உன்னையே வேரறுக்கும். இப்பொழுது பாரமுள்ள கற்கள் மிதப்பதற்கும் சுரைக்காய்கள் அமிழ்வதற்கும் காலம் வந்துவிட்டது. நீ துஷ்டர்களின் யோசனையைக்கேட்டு, ஸாதுக்களை விலக்கிப் பிறர் மனதைப் புண்படுத்தும் வார்த்தைகளைச் சொல்லி தீச்செயல்களைச் செய்ய ஆரம்பித்தபொழுதே கௌரவ குலத்திற்கு நாசம் வந்து விட்ட''தென்றார். மதக்கொழுப்பாலும் காலபலத்தாலும் தன்னை மறந்த துர்யோதனன் விதுரருக்குப் பதில் சொல்லமுடியாமல் அவரை ''சீ சீ'' யென்று இகழ்ந்து பிராதிகாமி யென்ற ஓர் வேலைக்காரனைப் பார்த்து ''இந்த விதுரன் நமது சோற்றைத் தின்று, நம்மால் எல்லா ஸுகங்களையும் கௌரவத்தையும் அடைந்து நம்மிடத்தில் எள்ளளவாவது விசுவாஸமின்றி, அந்தப் பாண்டவர்களுடைய பக்கத்திலேயே அன்புடையவனாய், எப்பொழுதும் நம்மைத் தூஷித்து அவர்களுடைய க்ஷேமத்தையே தேடுகிறான். ஒருவேளை இவன் பாண்டவர்களிடத்திலுள்ள பயத்தால் இப்படிப் பிதற்றுகின்றானோ தெரியவில்லை. அவ்விதமான பயம் யாதொன்றும் உனக்கில்லையல்லவா? நீ போய் திரௌபதியை இங்கே அழைத்துவா'' என்றான்.

அந்தத் தேர்ப்பாகன் சிங்கத்தின் குகையில் நாய் நுழைவதுபோல் திரௌபதியிருக்கும் இடத்தில் பிரவேசித்து ''அம்மா! தர்மபுத்திரர்சூதாட்டமென்றகள்ளைக்குடித்து புத்திமயங்கி உன்னைப் பந்தயமாய் வைத்து தோற்றுவிட்டார். துர்யோதனன் உன்னை இந்த அரண்மனையில் தாஸிவேலை செய்வதற்காகக் கட்டளையிடவேண்டி ஸபையில் அழைத்துவரச்சொன்னார். இப்பொழுதே வரவேண்டு''மென்றான். பாஞ்சாலி ''விவேகமுள்ள எவனாவது சூதாடத் துணிவானா? தர்மபுத்திரரும் சூதாடி யாவற்றையும் தோற்றாரா? தனம் பூமி ஆபரணங்கள் ஸைன்யங்கள் வாஹனங்கள் முதலியவைகளைப் பந்தயம் வைத்தாடுவது கேட்டதுண்டு. சூதையே தொழிலாயுடையவனும், பாபபுண்ய விவேகமற்று, கேவலம் மிருகத்தைப்போல் நடக்கும் அல்பனுங்கூடத் தன் மனைவியைப் பந்தயமாய் வைத்தாடினதை இதுவரையில் ஒருவரும் பார்த்ததுமில்லை; கேட்டதுமில்லை. இவரைப்போல் பொய்ச்சூதாடி யாவற்றையும் தோற்று, ராஜ்யத்தையும் விட்டோடின நளச்சக்கிரவர்த்தியும், தன் பார்யையை வைத்து ஆடினதாய்க் கேட்டதில்லையே. அக்கினியிலிருந்து பிறந்த என்னை அந்த அக்னி ஸாக்ஷியாகவே கைப்பிடித்து மணஞ்செய்து இப்படிச் சூதாட்டத்தில் பந்தயம் வைத்துத் தோற்று, அல்பர்களுக்கும் கொடியவர்களுக்கும் அடிமைப்படுத்தும்படி என் கணவனுக்கு புத்தி தோன்றினது விதியின் கொடுமையாலென்றே சொல்லவேண்டும். ஆடுவதற்கு வேறு பந்தயம் இல்லையோ? அப்படி யில்லாவிட்டால் ஆட்டத்தை நிறுத்தலாகாதா''யென்றாள். பிராதிகாமி ''அம்மணி! முதலில் ஸகல செல்வத்தையும், பிறகு தன் தம்பிமாரையும்

பிறகு தன்னையும் பந்தயமாய் வைத்து ஒவ்வொன்றுய்த் தோற்று, சகுனி ஞாபகப்படுத்தினதால் தங்களையும் பந்தயமாய் வைத்தாடினு'' ரென்றுன். திரௌபதி " அப்படியா? நீ அவரிடத்தில் சென்று நீர் முதலில் உம்மைத் தோற்றீரா? அல்லது என்னைத் தோற்றீரா என்று நான் கேட்டதாகச் சொல். அதற்குப் பதில் கிடைத்த பிறகு அவருடைய கருத்தையறிந்து நான் ஸபைக்குவருகிறே''னென்றுள். அதைக் கேட்டுப் பிராதிகாமி "இது முக்கியமான விஷயமே. இந்தச் சந்தேஹத்தைத் தீர்க்காமல் எந்தக் கார்யத்தையும் செய்யக்கூடா''தென்று ஒப்புக்கொண்டு, ராஜஸபைக்குச் சென்று தர்மபுத்திரரைப் பார்த்து "ஐயா நீர் முதலில் உம்மைத் தோற்றீரா? அல்லது என்னைத் தோற்றீரா? உம்மைத் தோற்றுல் எந்த ஸ்வதந்திரத்துடன் என்னைப் பந்தயம் வைத்தாடித் தோற்றீ'' ரென்று திரௌபதி உம்மைக் கேட்கிறு''ளென்றுன். யுதிஷ்டிரர் திரௌபதியின் கேள்விக்கு மறுமொழி சொல்லாமல் தான் செய்த காரியம், நியாயம் அல்லது அநியாயமென்று வது நிச்சயிக்காமல் மனங்குன்றி உயிரற்றவர் போலிருந்தார். அப்பொழுது துரியோதனன் "இவ்விருவருக்கும் சமாசாரப் போக்குவரத்தென்ன? அவள் இங்கேவந்து இந்த ஸந்தேஹத்தை எல்லோருக்கும் முன்பாகவே தீர்த்துக்கொள்ளட்டு''மென்றுன். பிராதிகாமி மறுபடியும் திரௌபதியிடத்திற்குச் சென்று, துக்கத்துடன் "அம்மணி! கௌரவர்களுக்கே ஸந்தேஹம் வந்திருக்கிறது. உன் பெருமையையும் கௌரவத்தையும் கவனிக்காமல இந்த அற்பன் உன்னை ஸபைக்கு வந்து உன் ஸந்தேஹத்தைத் தீர்த்துக்கொள்ளும்படிகட்டளையிடுகிறு''னென்றுன். திரௌபதி "இது விதியின் செயலென்றே எண்ணுகிறேன். உலகில் ஸுக துக்கங்கள் தகுந்தவனுக்கும் தகாதவனுக்கும் ஒரே விதமாய் நேருகின்றன. தர்மம் ஒன்றே மேலானது. அதை நாம் காப்பாற்றினல் அது நமக்கு க்ஷேமத்தைச் செய்யும். அது இப்பொழுது கௌரவர்களைவிட்டுப் போகாம லிருக்க வேண்டும். நான் கேட்ட கேள்வி தர்மத்திற்கு ஒத்ததே. இதை அந்த ஸபையோரிடத்தில் மறுபடியும் கேள். நியாயம் தவரு தவர்களும், தர்மத்தையே கைப்பிடித்து நடப்பவர்களும் சீலர்களுமான அந்தப் பெரியோர் நிச்சயிக்கிறபடி நான் நடப்பே''னென்றுள். ஸூதன் அப்படியே ஸபையோரிடத்திற்குச் சென்று திரௌபதி சொன்னதைத் தெரிவித்தபொழுது அவர்கள் துர்யோதனனுடைய கொடிய நினைவையும், முரட்டுப் பிடிவாதத்தையுமறிந்து தலை குனிந்து ஒன்றும் பேசவில்லை. அதைப்பார்த்து யுதிஷ்டிரர், துர்யோதனன் செய்யக் கருதினதை அறிந்து திரௌபதிக்கு நம்பிக்கையுள்ள ஓர் தூதனை யழைத்து, "பாஞ்சாலியே! நீ இப்பொழுது ரஜஸ்வலையாய் வீட்டிற்கு விலகியிருக்கிருய். ஆனுலும் ஒற்றை வஸ்திரத்துடன் அவிழ்ந்த தலைமயிருடன் அழுதுகொண்டு ஸபையில் வா. உன் மாமனுரும், நமக்குப் பெரியவருமான திருதராஷ்டிரர் முன்னிலையில் நின்று அவரைச் சரணமடையவேண்டும். இப்படி அலங்கோலமாய் உன்னை இங்கே இழுத்து வந்ததைப் பார்த்த எல்லோரும் துர்யோதனனை மனதால் சபிப்பார்க''ளென்று சொல்லி யனுப்பினுர்.

பாண்டவர்கள் துயரத்தாலும் வெட்கத்தாலும் சோர்ந்து ஸத்யத்தால் கட்டப்பட்டுச் செயலற்று "இந்த அக்கிரமத்தைத் தடுக்கமுடியவில்லையே" யென்று பெருமூச்செறிந்தார்கள். தர்மபுத்திரர் வரும் கார்யத்தை யறிந்து துர்யோதனனுடைய பாபத்தை வளர்த்தி கொடுஞ் செயல்களை செய்வித்து, ஸகலப்பிராணிகளும் அதைக் கண்டு நடுங்கி அவனைச் சபிக்கும்படிக்கும், அதனுல் கௌரவ பாண்டவர்களுக்குத் தீராப்பகையும் யுத்தமும் உண்டாகவேண்டுமென்றும் அதனுல் பூபாரம் தீரவேண்டுமென்றே நன்றுய் அறிந்து செய்த உபாயமென்றும் தோன்றுகிறது. இல்லாவிட்டால் தனக்கு ஸ்வதந்திரமில்லாதபொழுது திரௌபதியை வைத்தாடுவாரா? வெளியில் வரமுடியாமலும் ஒருவரும் பார்க்கக்கூடாத ஸ்திதியில் இருப்பவளுமான திரௌபதியை ஒரு ராஜஸபையில் வரும்படி தானேசொல்லியனுப்புவாரா? துர்யோதனனுடைய கருத்தை யறிந்து, அதற்கனுகூலமாகவே தானும் நடந்துகொண்டு, கர்மகதியை அநுஸரித்து பகவானுடைய திருவுள்ளத்தை அறிந்து அவருடைய கைங்கர்யத்தில் ஈடுபட்ட மஹாஞானியென்றே சொல்லவேண்டும்.

அப்பொழுது துரியோதனன், பாண்டவர்கள் படும் வருத்தத்தைப் பார்த்து மகிழ்ந்து "அவளை

இங்கேயே அழைத்துவா. அப்பொழுது கௌரவர்கள் அவளுடையகேள்விக்குப்பதில்சொல்வார்க''ளென்ருன். துர்யோதனனுடைய கட்டளைக்கும் திரௌபதியின் கோபத்திற்கும் பயந்த அந்தத் தேர்ப்பாகன் ஸபையோரைப் பார்த்து 'திரௌபதிக்கு நான் என்னபதில்சொல்லட்டு' மென்ருன். அதைக்கண்டுதுர்யோதனன் "தம்பீ துச்சாஸனு! இந்தப் பிராதிகாமி பீமனைக் கண்டல்லவா நடுங்குகிருன். அடிமைகளாய் குற்றேவல் செய்யும் இந்தப் பஞ்சைகளால் உனக்கென்ன பயம்? அந்தத் திரௌபதியை நேரில் போய் பிடித்துக் கொண்டுவா''வென்ருன். தனக்கு பீமனிடத்தில் இராப்பகலாய் குடிகொண்டிருந்த பயத்தைத் துர்யோதனன் பிராதிகாமியின்மேல் வைத்துச் சுமத்தினனென்று சொல்லவும் வேண்டுமோ? ஒன்றிற்கும் கட்டுப்படாமல், சற்றும் அவமானத்தைப் பொறுக்காமல், திடீரென்று கோப வெறி கொண்டு எதிரிலிருந்த எதையும் அழிக்கும் ஸ்வபாவமுள்ள பீமன், தன்னையும் தங்களுடைய ஸத்யத்தையும் நிலைமையையும் மறந்து எங்கே மேல்விழுந்து எல்லோரையும் நாசஞ் செய்து விடுகிருனோவென்று கௌரவர்களுக்கு ஒருபுறத்தில் பயமுண்டு. ஆனல் அந்நால்வரும் தர்மபுத்திரரிடத்தில் பக்தியும் அன்பும் வைத்தவர்களென்றும் அதை மீறத் துணியார்களென்றும் அஷ்டகுல பர்வதங்கள் தலைகீழாய்ப் பெயர்ந்து விழுந்தாலும் ஸப்த ஸமுத்திரங்கள் கரை புரண்டாலும் சூரிய சந்திரர்கள் தெற்குவடக்காய்ச்சென்ருலும் ஜலம் கொதித்தாலும் தீ குளிர்ந்தாலும் யுதிஷ்டிரர் தர்மத்தைக் கைவிடார்; சொன்ன சொல்லைத் தவருர். பாபத்தை நினையாரென்று பரமதுஷ்டர்களும் துரோஹிகளும் கொடியர்களுமான துர்யோதனுதியருக்கும் தெரியும். அவர்களே அந்தத் தர்மத்தை நம்பி, அதை ஆதாரமாய் வைத்துக்கொண்டு, எந்த அக்கிரமங்களையும் செய்யலாமெனத் துணிவைக்கொடுக்கக்கூடிய யுதிஷ்டிரருடைய மன உறுதிக்கும் தர்மானுஷ்டானத்திற்கும் ஈடுண்டோ? அதைப் புகழ்வதற்கும் எவருக்கும் திறமையுண்டோ?

உடனே துச்சாஸனன் கட்டிலிருந்து அவிழ்த்துவிட்ட வேட்டை நாயைப்போல் தன் தமயனுடைய கட்டளையைக் கேட்டவுடன் துடைகளைத் தட்டிக்கொண்டு ஓட்டமாய் ஓடி திரௌபதியைப் பார்த்து "அடி பாஞ்சாலி வா, வா. உனக்கு இங்கென்ன வேலை? ராஜஸபையில் வரும்படி எங்கள் அண்ணன் உத்தரவு செய்திருக்கிருர். எங்களால் சூதாட்டத்தில் நியாயமாய் ஜயிக்கப்பட்டு நீயும் பாண்டவர்களும் எங்களுக்குக் குற்றேவல் செய்யவேண்டியவர்களல்லவா? வெள்ளம் தலைமேல் ஓடின பிறகு அதைச் சாணென்றும் முழமென்றும் விசாரிப்பவர்களுண்டோ? யாவற்றையும் தோற்ற உங்களுக்கு மானமேன்? வெட்கமேன்? கொத்தடிமை செய்பவர்களுக்கு யஜமானனே தெய்வம்: உங்களுடைய உடல்களுக்கும் உயிர்களுக்கும் அவனே ஈச்வரன். வா" என்ருன். அக்கொடும் சொற்களைக் கேட்டு, அந்தத் துஷ்டனைக் கண்டு "இவன் என்ன செய்வானே" வென்று நடுங்கி எப்படியாவது அங்கிருந்து தப்பியோட நினைத்து, புலியால் துரத்தப்பட்ட பெண்மானைப் போல் காந்தாரி முதலிய திருதராஷ்டிரமஹாராஜனுடைய ஸ்திரீகள் இருக்குமிடத்திற்கு ஓடினள். அதைக் கண்டு துச்சாஸனன் அவளை வழிமறித்து "அடீ தாஸீ! எங்கே ஓடுகிருய்? நில்"என்று நீண்டு இருண்டு அலைகளைப்போல் படிப்படியாய் இருக்கும் திரௌபதியின் தலை மயிரில் கையைப் போட்டுப் பிடித்திழுத்தான். ராஜஸூய யாகத்தில் மஹரிஷிகளாலும் பிராமண சிரேஷ்டர்களாலும் வேதமந்திரங்களால் ஜபிக்கப்பட்டுப் பரிசுத்தமான புண்ய ஜலத்தால் அபிஷேகஞ்செய்யப்பட்ட திரௌபதியின் கூந்தல்களை, புறக்கண்ணில்லாத திருதராஷ்டிரன் மகனும் அகக்கண்ணில்லாத துர்யோதனன் தம்பியுமான துச்சாஸனன் பாண்டவர்களின் அபாரமான சக்தியை அவமதித்து பலாத்காரமாய்த் தொட்டிழுத்தான்.

தாய்ப் பாஷையில் கல்வி போதித்தல்

INSTRUCTION THROUGH VERNACULARS

[ஸ்ரீமான் ஆர். கே. குப்புஸ்வாமி ஐயரவர்கள், பி.ஏ., எல்.டி.]

நமது ஹைஸ்கூல்களின் உயர் வகுப்புகளில் இங்கிலீஷ் தவிர மற்றப்பாடங்களை யெல்லாம் தாய்ப் பாஷையிலேயே போதிக்கவேண்டுமென்று சிலர் அபிப்பிராயப்படுகின்றனர். கல்வி பயில்வதின் நோக்கம் உண்மையாய் எதுவென்றும், கற்றதின் பயன் என்னவென்றும் ஆலோசனை செய்வோமானால் தாய்ப் பாஷைகளை உபயோகித்து, எல்லா விஷயங்களையும் போதிப்பது லாபமென்று வெளியாகும். கல்வி பயில்வதால் அறிவு பெருகி, வேறொருவர் உதவியின்றி, தானே அவ்விஷயத்தை மேன்மேலும் கையாளச் சக்தியுண்டாகவேண்டு மென்பது ஒன்று. சரித்திரம் படித்தவன் ஒருவன், ஒவ்வொரு படியிலும் உபாத்தியாயர் உதவியை எதிர்பாராமல் தானாகவே சுலபமாய்ச் சரித்திரப் பயிற்சியை விருத்தி செய்துகொள்ள முயலவேண்டும். அவ்வாறு அவன் தேர்ச்சியடைய அவ்விஷயத்தில் மூலாதாரமாயுள்ள அரிய பெரிய நூல்களைப் படிக்க சாமார்த்தியமும், ஆசையும் அவனுக்கு உண்டாகவேண்டும். தவிர, படித்த விஷயத்தைப் பள்ளிக்கூடத்துடன் விட்டுவிடாமல், அதன் ரசத்தை உணர்ந்து, அவ்வுணர்ச்சி தூண்ட, ஆயுள் முழுவதும் சந்தோஷத்துடன் அதைப் பின்பற்ற வழக்கமேற்பட வேண்டுமென்பதொன்று. கம்பராமாயணத்தில் இரண்டு படலம் வாசித்துப் பரீக்ஷையில் ஏதோ எழுதிவிட்டுத் தேறியபின்னர், இராமாயணத்தைக் கையிலெடுத்தவர் எத்தனைபேர் என்று கேட்டால் அவர்களின் தொகையை விரல்களை விட்டு எண்ணிவிடலாம். அவ்வாறு விஷயத்தில் வெறுப்பை ஊட்டும் கல்வி, பயனற்றதாகும்.

கல்வியின் நோக்கம் இவ்விதமானால் நாம் கணக்கு, சரித்திரம், ரசாயன சாஸ்திரம் முதலியவற்றை ஆங்கிலபாஷை மூலமாய்ப் போதிக்கும்பொழுது பிள்ளைகளுக்கு அவ்வழிகளில் நீங்காத ஆசையும், ஊக்கமும் இருக்க முடியுமாவென்று கவனிப்போம். பரீக்ஷைக்கு அத்யாவசியமானவரையில் எவ்வளவு தெரியவேண்டுமோ அவ்வளவை மட்டும், கூடுமானவரையில் சிறியதாயுள்ள புஸ்தகங்களில்வாசித்துப் பாடம் பண்ணி பரீக்ஷையில் உமிழ்ந்துவிட்டுத் தேறினதாகப் பேர் வாங்கிக்கொண்டு போகவேண்டு மென்பதே பிள்ளைகளின் நோக்கமா யிருப்பதன்றி, அவ்வவ்விஷயங்களில் ஆதாரமாயுள்ள பெரிய நூல்களைப் படித்துத் தாங்களே விஷயத்தைக் கையாள வேண்டுமென்ற ஆசை எத்தனைபேருக்கு உண்டாகின்றது? ஆசையுண்டான சிலருக்கு ஆங்கில பாஷையில் எழுதியுள்ள புஸ்தகங்களைப் படித்து அறிந்துகொள்ள சக்தியிருப்பதில்லை.

பள்ளிக்கூடத்துப் பாடம் ஒவ்வொன்றையும் ஆங்கில பாஷையில் படிப்பது மட்டுமின்றி அவ்விஷயத்தைப்பற்றிக் கேட்கும் கேள்விகளுக்குச் சரியாக ஆங்கிலத்தில் பதில் சொல்லவும், காகிதத்தில் பதிலை எழுதவும் பயிற்சி செய்யவேண்டியிருக்கிறது. இந்தத் தொந்தரவுகளுக்காக உபாத்தியாயர்களும் கூடியவரையில் எளிதாயுள்ள சிறிய புஸ்தகங்களையே உபயோகப்படுத்த வேண்டியிருக்கிறது.

இப்படியின்றித் தாய்ப்பாஷைகளில் போதிப்பதாயிருந்தால், தற்காலத்தில் தக்க புஸ்தகங்கள் இல்லையே என்று ஆக்ஷேபிக்கலாம். புஸ்தகங்கள் வேண்டுமென்று தேவை ஏற்பட்டால், புஸ்தகங்கள் தானே வரும். தேவையில்லையாகையால், இப்பொழுது புஸ்தங்களை எழுதிவைத்துக்கொண்டு யாராவது வீணில் பொருள் நஷ்டப்படுவார்களா? தவிர, போதிப்பதும், கேள்விக்கு பதில் சொல்வதும், பதில் எழுதுவதும் தாய்ப் பாஷைகளில் தொடங்கிவிடுவோமானால், தக்க புஸ்தகங்கள் தயாராகும் வரையில் சிலகாலம் ஆங்கில புஸ்தகங்களையே படித்தாலும் தப்பில்லை. பள்ளிக்கூடத்து வாசக புஸ்தகங்கள் தயாரான பின்பும் சிலகாலம் வரையில் பெரிய ஆதார நூல்களை ஆங்கில பாஷையில் கற்கவேண்டிய அவசியம் இருந்துகொண்டே வரும். ஜப்பான் தேசத்தார் தங்கள் தேசத்தில் ஜப்பான் பாஷையிலேயே போதித்து வந்தபோதிலும், ரசாயன சாஸ்திரம், மின்சாரம், முதலிய அரிய விஷயங்களில், சில ஆங்கில புஸ்தகங்களையும், சில ஜர்மென் புஸ்தகங்களையும் படிக்க

வேண்டியிருக்கின்றது. இங்கிலீஷ் பிள்ளைகளுக்கும் ஆதார நூல்களைப் படிக்கும்போது பிரெஞ்சு, ஜர்மென் இப்பாஷைகளில் எழுதியுள்ள புஸ்தகங்களைப் படிக்கவேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. எந்தப் பாஷையில் எழுதியுள்ள புஸ்தகங்களைப் படிப்பினும் விஷயங்களை அறிந்து கொண்ட பின்னர், அவர்கள் பரீக்ஷையில் பதில் எழுதுவதும், உபாத்தியாயர் கேட்ட கேள்விக்கு ஜவாபு சொல்வதும் தம் தம் பாஷையிலேயே யல்லவா?

'ஆங்கில பாஷையிலேயே எல்லாப் பாடங்களையும் போதிக்கவேண்டியதவசியம்' என்று பிடிவாதம் பிடிப்போர்—"இந்தியாவின் ஐக்கியப்பான்மைக்கு ஆங்கிலபாஷையே காரணமாகும்: இங்கிலீஷ் அபிவிருத்தியினால்தான் இந்தியாவில் ஒரு மூலையிலிருப்போர் தமது சுகதுக்கங்களை மற்றொரு மூலையி லிருப்பவர்களுக்கு அறிவிக்கக் கூடுமாயிருக்கின்றது: இங்கிலீஷ் பாஷை மூலமாய் ஹைஸ்கூல் வகுப்புகளில் போதிக்காவிட்டால் இந்தியாவின் ஒற்றுமைப் பாட்டுக்கே நஷ்டம் சம்பவிக்கும். ஒவ்வொரு மாகாணமும் மற்ற மாகாணங்களுடன் கலந்து ஒற்றுமையாய்உழைக்க வழியில்லாமல் துணுக்குத் துணுக்காய்ப் பிரிந்துவிடும்" என்கிறார்கள். அவ்வாறு பிரிவுபடாமல் ஒன்றுசேர்த்துக் கட்டிக் கிடத்துவது இங்கிலீஷ் பாஷையென்பது அவர்களின் அபிப்பிராயம். இதன் உண்மை எவ்வகையென்று சற்று ஆராய்வோம். கானிஷ்மாரிக் கணக்கை எடுத்துப் பார்த்தால் இந்தியாவின் 30 கோடி ஜனங்களுக்குள் இங்கிலீஷ் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் சில லக்ஷமே. ஸ்ரீமான் யதுநாத் ஸர்க்கார் சொல்லுகிறபடி, "இங்கிலீஷ் சுமாராய்ப் பேசினால் அறிந்து கொள்ளக்கூடியவர் இன்னும் இரண்டொரு லக்ஷம் என்று வைத்துக்கொள்வோம். இந்தச் சிறு பான்மையோர் காரணமாகவே இந்தியாவின் ஐக்கியப் பான்மை நிலை நிற்கின்றதென்று எங்ஙனம் வாதாட முடியும்? தவிர, பாக்கியுள்ள இந்தியர்கள் அனைவரையும் ஆங்கிலத்தில் பாண்டித்தியம் உடையவர்களாகச் செய்வது சுலபமான காரியமா? சாத்தியமா? விரைவில் முடியுமா?"

மேலும் பள்ளிக்கூடத்துப் பாடங்களைத் தாய்ப்பாஷைகளின் மூலமாய் போதிக்க வேண்டுமென்று சொல்வதினாலேயே, ஆங்கில பாஷையை முற்றிலும் பள்ளிக்கூடங்களில் நீக்கிவிட வேண்டுமென்றும், மாணாக்கர்கள் கற்றுக்கொள்ளவே கூடாதென்றும், நாம் வாதம் பண்ணவில்லை தற்காலத்தில் இங்கிலீஷுடன்தேசபாஷைகளைக்கற்பது போல் தாய்ப் பாஷைகளுடன் இங்கிலீஷும் கற்கவேண்டியதே. அது இல்லாமல் முடியாது. சற்றுமுன் சொன்னபடி, சிலநாள் வரையில் பிரகிருதி சாஸ்திரம்,வான சாஸ்திரம், ரசாயன சாஸ்திரம்—இவைபோன்ற விஷயங்களில் முதல் நூல்கள் இங்கிலீஷ் பாஷையில் இருக்கின்றன. அவற்றை வாசிக்க இங்கிலீஷ் தெரியாவிடில் சாத்தியமா? அத்தகைய பெரியநூல்கள் தேசபாஷைகளில் எழுத, வருஷக் கணக்காகும். ஆகையால் இப்பொழுதுள்ளபடி ஆங்கிலம் தெரிந்தோருடைய தொகை சற்றும் குறையாமலே—ஐக்கிய நிலைமை முன்மாதிரியே தளர்வில்லாமல் நிலைபெறச் செய்து—நமது ஹைஸ்கூல் மேல்வகுப்புகளில் எல்லாப் பாடங்களையும் தாய்ப் பாஷையில் போதிக்க முயற்சி செய்யலாம்.

சிலர் "நமது தேசத்தில் பல பாஷைகளிருக்கின்றன! கன்னடம் வீட்டில் பேசுகிறவனுக்குக் கன்னடத்திலேயேபோதிக்கவும், தமிழ் பேசுகிறவனுக்கு தமிழிலேயே போதிக்கவும், இந்துஸ்தானி பேசுகிறவனுக்கு இந்துஸ்தானியில் போதிக்கவும் பிரயத்தனப்பட்டால், அவ்விதம் செய்வது கஷ்டமாகும்: ஏனெனில் சில ஜில்லாக்களில் பல பாஷைகள் பேசப்படுகின்றன. அந்த ஜில்லாக்களில் எந்த பாஷையை மேற்கொள்வது? பொதுவாய் இங்கிலீஷை மேற்கொண்டாலே சுகம்: சுலபமாய்க் காரியமாகும்" என்பார்கள். சற்று உண்மையே. உதாரணமாகத் தமிழ் ஜில்லா ஒன்றை எடுத்துக்கொள்ளுவோம். அவ்விடத்தில் கன்னடம் பேசும் ஜனங்கள் சிலரும், ஆந்திர தேசத்திலிருந்து உத்தியோகத்தின் பொருட்டு வந்தவர்கள் சிலரும் இருக்கலாம். அவர்களின் பிள்ளைகள் இரண்டொருவர், தமிழ் கற்றுக்கொள்ளச் சிரமப்படுவதுபற்றி, அந்த ஜில்லாவில் உள்ள தமிழ்ப்பிள்ளைகள் எல்லோரையும் இங்கிலீஷிலேயே எல்லாப் பாடங்களையும் கற்கவேண்டுமென்று வருத்துவது தர்மமா? இரண்டு பாஷைகள் இணையாய் ஒரு ஜில்லாவில் பேசப்படுமாயின், வெவ்வேறு வகுப்பு

குப்பை உயர்ந்தது கோபுரம் தாழ்ந்தது.

களில் இரண்டு பாஷைகளையும் போதிக்கச் செய்வதுதான் என்ன கஷ்டம்? இப்பொழுது கூட கர்நூல் முதலிய சில இடங்களில் ஹைஸ்கூல் கீழ்வகுப்புகளில்,தெலுங்கு தவிர இந்துஸ்தானியில் படிப்பிக்க பிரத்தியேகமாய் வேறு வகுப்புகள் ஏற்பட்டிருக்கின்றன. கீழ் வகுப்புகளில்செய்யும் மாதிரியே மேல் வகுப்பு களிலும் செய்ய என்ன தடை?

அவ்வாறு செய்வது சில இடங்களில் ஏதோ காரணம்பற்றி சாத்தியமில்லாம விருப்பினும், தமிழ் தேசத்தில் படிக்கும் ஒரு தெலுங்குப் பிள்ளை,—தன் வீட்டில் தமிழ் பேசாவிட்டா லும்—தன் அயலார்களும், தெருவில் போய் வருகிறவர்களும், பள்ளிக்கூடத்து மற்றப் பிள்ளைகளும் பேசும் பாஷையை இடைவிடா மல் கேட்டு அறிந்துகொள்ளும் தமிழ்ப்பாஷை யில் உபாத்தியாயர் ஒரு விஷயத்தை விளக்கி னால், அதைப் பின்பற்றி அறிந்துகொள்வது சுலபமாயிருக்குமா, அல்லது பள்ளிக்கூடம் தவிர மற்ற இடங்களில் காதிலும் படாத இங் கிலீஷில் அதே விஷயத்தை விளக்கும்போது அதைப் பின்பற்றி அறிந்துகொள்வது சுலபமா யிருக்குமா? இதை நன்ருய் ஆலோசனை செய்தல் வேண்டும்! ஜன்ம பூமியை விட்டு, வேறு ஜில்லாக்களில் உத்தியோகத்தின் பொருட்டோ, வியாபாரத்தின் பொருட்டோ வந்திருந்து ஜீவனம் செய்யும் ஜனங்களுடைய குழந்தைகளுக்கு சுயபாஷையை விட்டு, குடி யேறியுள்ள ஜில்லாவின் பாஷையில் எல்லா விஷயத்தையும் கற்றுக்கொள்ள வேண்டு மானல் கஷ்டமே; இல்லையென்று சொல்ல முடியாது. ஆயினும் அப்பிள்ளைகளுக்குச் சில நாட்களில், கேட்டுக் கேட்டுப் பழகுவதினல் அன்னிய பாஷையும் ஸ்வயபாஷை போலவே ஆகின்றது. ஆகையால் அப்பிள்ளைகள் சில வாரங்கள் கஷ்டப்படுவதா யிருந்தாலும், எளிதில் உபாத்தியாயர் சொல்வதை அறிந்து கொள்ளக்கூடிய நிலைமைக்கு வந்துவிடலாம். ஆகவே, இக்காரணம்பற்றியும் ஆங்கில பாஷை யிலேயே நமது மாணக்கர்களுக்கு எல்லாப் பாடங்களையும் போதிக்க நியாயமில்லை.

தாய்ப் பாஷைகளை உபயோகிப்பதனல் விளை யக்கூடிய அநுகூலங்களைக் சற்று கவனிப் போம். முதலாவது காலமும் தேக சிரமமும் லாபமாகும். பத்து தடவைஆங்கிலத்தில்திருப் பித்திருப்பி முறையிட்டு விளக்கும் விஷயத் தைத் தாய்ப்பாஷையில் இரண்டொருதடவை விளக்கினல் போதும். ஆங்கிலத்தில் விளக் கும் விஷயத்தை அறியவேண்டி, மூளையானது ஆங்காங்கே விஷய தாத்பரியத்தைத் தாய்ப் பாஷையில் மாற்றிக் கொடுக்கிறது. மறுபடி கேள்விக்கு பதில் சொல்லும்போது தாய்ப் பாஷையில் எண்ணுகிற எண்ணங்களை ஆங்கி லத்தில் மாற்றவேண்டியிருக்கின்றது. இந்த மாறுபாடு தன்னிச்சையாய் நடப்பதனாலும் மூளைக்கு வேலைதானே! அதிக வேலை செய் வதுபற்றி மூளை விரைவில் தளர்வுற்றுச் சோர் ந்துபோகிறது, எப்பொழுதும் வீணில் செல வாகிறது. "காலமே பணம்"என்று ஒவ்வொரு நிமிஷத்தையும் அளந்து செலவிடுகிருர்கள் அந்நிய நாட்டார். அப்படியிருக்க அனாவசிய மாய்ப் பல நாட்களை நமது சிறுவர் வீணில் கழிப்பது சரியா?

அன்றியும், எல்லாப் பாடங்களையும் தாய்ப் பாஷைகளில் போதித்தால், மிகுந்த காலத்தை இப்பொழுதைவிட அதிகமாக இங்கிலீஷ் படிக்க உபயோகப்படுத்த முடியும். இங்கிலீஷ் பாஷையை முறைப்படி வாசித்தறிய வாரத் துக்கு இரண்டு மூன்று மணி நேரம் அதிக மாகச் செலவு செய்யலாம். இவ்வழியால் இங் கிலீஷும் கூட இப்பொழுதிருப்பதைவிட பலப்படுமென்பதற்குச்சந்தேகமே கிடையாது.

இதினும் முக்கியமான மற்றொரு அநுகூ லம் என்னவெனில், பள்ளிக்கூடத்தைவிட்டு வெளியேறிய வித்தியார்த்திகளுக்கும் ஜன சமூ கத்துப் பொது ஜனங்களுக்கும் அநுதாபம் அதிகமாகும். ஒன்றுமறியாத பொது ஜனங் கள் ஒரு விஷயத்தைப்பற்றி அறிய விரும்பி, படித்தவர்களிடம் சென்ருல், அவர்களுக்கு விஷயத்தை எடுத்துச்சொல்ல, படித்தவர் கள் சக்தியற்றவர்களா யிருக்கிருர்கள். படித்து விஷய ஞானமுள்ளவர்கள் பொது ஜனங்களு டன் கூடிப் பழகவும், அவர்களின் குறைகளை எளிதில் அறியவும், அக்குறைகளை விலக்க அவர்களுக்கு புத்தி சொல்லவும், தாய்ப்பாஷை களைப் பயிலாவிட்டால் இயலாது. இப்பொ ழுது பி. ஏ. தேறியவர்களில் பலர் ஜனங்களு க்கு ஏதாவது பொது விஷயத்தைப்பற்றித் தாய்ப் பாஷையில் உபன்னியாசம் செய்யவும் பாஷா பத்திரிகைகளில் விளங்க எழுதவும்,

சக்தியற்றவர்களா யிருக்கின்றனர். ஜனங்களின் அபிவிருத்தியைப்பற்றி அவர்கள் செய்யக் கூடியதெல்லாம் கூட்டம் கூடவும், ஆங்கிலத்தில் பிரசங்கம் செய்யவும், இங்கிலீஷில் விவாதம் செய்வதும் தவிர வேறில்லை. ஜன சமூகத்தார் இவர்கள் செய்வதை அறிய வழியே இருப்பதில்லை. ஆகையால் ஆங்கிலம் கற்றுத் தேர்ந்த வித்தியார்த்திகளுக்கும் பொது ஜனங்களுக்கும் ஒற்றுமையின்றிப் போகின்றது.

ஆங்கிலம் கற்காத ஸ்திரீ ஜனங்களும் பெற்றோர்களும் தங்கள் பிள்ளைகள் தாய்ப்பாஷையில் படிக்கும் விஷயங்களைக் கேட்டும் அவர்களுடன் பேசியும், சரித்திரம், பிரகிருதி சாஸ்திரம் இவற்றைப்பற்றிச் சில விஷயங்களை எளிதில் அறிந்து கொள்ளக்கூடும். தற்காலத்தில் அவ்வாறு அறிய வழியேயில்லை. பிள்ளைகள் ஆங்கில பாஷையில் பாடங்களை வீட்டில் படிக்கும்போது பெற்றோர்களுக்கும் மற்றவர்களுக்கும் என்ன விஷயம் தெரிகின்றது? ஏதோ சப்தம் காதில் படுவதல்லாமல் வேறொன்றுமில்லை!

தேசபாஷைகளில் பள்ளிக்கூடத்துப் பாடங்களை போதிக்கத் தொடங்கினால் பாஷைகள் தாமாகவே விரைவில் விருத்தியடையும். பற்பல கலைகளிலும் பிள்ளைகளின் அறிவை விசாலப்படுத்தவேண்டுமென்ற எண்ணம் தூண்ட, சிறந்த ஞானிகள் மேனாட்டு பாஷைகளில் எழுதியுள்ள அரிய முதநூல்களை மொழி பெயர்ப்பார்கள். தாமே பலர் புதிய நூல்களை இயற்றுவார்கள். அப்படிச் செய்யும்போது பாஷையின் மேன்மை அதிகப்படாதா? வானசாஸ்திரம், ஆகாய விமானம், கம்பியில்லாத்தந்தி— இவ்விஷயங்களைப்பற்றி பொதுஜனங்களுக்கு உபயோகமாகும்படி எளிதாகப் புஸ்தகங்கள் எழுதவேண்டுமென்றால் இப்பொழுதுஎவ்வளவோ கஷ்டமாயிருக்கின்றது. தக்க வார்த்தைகள் தேச பாஷைகளில் கிடைப்பதில்லை. இக்கஷ்டமெல்லாம்விரைவில் குறையவேண்டுமானால் தேச பாஷையிலேயே போதிக்கத் தொடங்கவேண்டும். அவசியம் தூண்டுவதினால் தக்க வார்த்தைகள் தாமே கண்டு பிடிக்கப்படும்.

இவையெல்லாவற்றையும் விட முக்கியமாய் நாம்கவனிக்கவேண்டியதென்னவெனில் தாய்ப் பாஷையில் போதிப்பதுதான் ஸ்வபாவமான வழியாகும்,என்பது.மற்றவழிகளெல்லாம் மாருட்டமான வழிகள். குழந்தை, பகுத்தறிவு வந்தகாலமுதல்தாய்ப்பாஷையிலேயேயல்லவா சுற்றிலுமுள்ள வஸ்துக்களின்தன்மையை அறிந்து வருகிறது. அப்படியிருக்க, அப்பாஷையிலேயே முற்றிலும் போதனை செய்வதை ஒழித்து, நடுவில் வேறு பாஷையை உபயோகிப்பது என்ன காரணம் பற்றி? நமது பிள்ளைகளின் க்ஷேமத்தை நாம் கவனியாவிட்டால், நம்மவரல்லாத மற்றவர் நம்முடைய குறைகள் அறிந்து தீர்க்க வழி தேடுவார்களா? தேச நன்மையை நாடுவோரும் பள்ளிக்கூடப் பிள்ளைகளின் க்ஷேமத்தைக் கோருவோரும் இவ்விஷயத்தில் இன்னும் அதிக முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும்.

தாய்ப்பாஷைகளை உபயோகிப்பதால் உண்டாகும் அநுகூலங்களையும் ஆங்கிலத்தில் கல்வி போதிப்பதால் விளையக்கூடிய அநுகூலங்களையும் சீர்தூக்கிப் பார்த்தால், தாய்ப்பாஷைகளை உபயோகிப்பதே மேலென்பது எல்லாருக்கும் விளங்கும், ஆயினும், ஆங்கிலத்தை விட்டு, முற்றிலும் தாய்ப்பாஷைக்கே உடனே எப்படி மாற்றுவது என்று சிலர் கேட்கின்றனர்! உடனேயே எல்லாப்பாடங்களையும் தாய்ப்பாஷைகளில் போதிக்கத் தொடங்குவதினால் பிரயாசம் ஒன்றுமிராது. ஆயினும் ஆங்கிலத்தைக் கைவிட இஷ்டமில்லாதவர்களை மெய்ப்பிக்க முதலில் ஸ்கூல் பைனல் பி. பிரிவுப் பாடங்களைத் தாய் பாஷையில் தொடங்கலாம். அப்பாடங்களில் அபிவிருத்தியைக் காட்டி, மற்றப்பாடங்களையும் சில வருஷங்களுக்குள் படிப்படியாய் தேச பாஷைகளையே உபயோகித்து போதிக்கலாம். முதலில் பி. பிரிவுப் பாடங்களில் துவக்கம் செய்தால், அப்பாடங்களில் பொதுவான சர்க்கார் பரீக்ஷையில்லாததாலும், பள்ளிக்கூடங்களே தங்களிஷ்டப்படி பரீக்ஷை செய்யலாமாகையாலும், பிரதிகூலம் ஒன்றுமிராது. உபாத்தியாயர்கள் முதலில் மனதாறப் பிரயத்தனம் செய்யாவிடில் பெற்றோர்களும், அன்னியர்களும் இவ்விஷயத்தில் ஒன்றும் செய்ய முடியாது. இம்முறையை ஏற்படுத்தி, பரீக்ஷை செய்துபார்த்து, அபிவிருத்தியைக் காட்டி, எல்லாருடைய ஆதரவையும் அடைய வேண்டிய பாரம் உபாத்தியாயர்களுடைய தே மற்றவர்களும் இதைக் கவனிக்கவேண்டும்.

வாலிபச் சாரணன்

THE BOY SCOUT

[சி. இராமஸ்வாமி ஐயர் அவர்கள், பீ.ஏ., எல்.டி.]

ஆரம்பம்

வாலிபச் சாரணன் பயிற்சியடையவேண்டிய முறைகளைப்பற்றியும் அதனால் அவன் அடையவேண்டிய பயன்களைப் பற்றியும் இனி விரித்துக் கூறுவோம்.

வாலிபச் சாரணர் அனைவரும் இளைஞர்களாயிருத்தலாலும், அவர்கள் பல விஷயங்களை அறியவேண்டியது அவசியமானதாலும் அவைகளைத் தகுந்த முறையில் போதிப்பதற்கு ஒரு ஆசிரியர் வேண்டும். அவர் சாரணத் தலைவர் எனப்படுவர். சிறுவர்களின் குணத்தைச் சுலபமாய் அறிந்துகொள்ளும் வன்மையும், அவர்களுடன் கூடி, நடத்தையாலும் பேச்சினாலும் தன்வழி நடத்தும் தன்மையும் இருத்தல் வேண்டும். தம்மிடமுள்ள குணங்களாற் சிறுவர்களை யடக்கி நடத்தவேண்டிய சக்தியுள்ளவரா யிருக்கவேண்டும். ஆனால் சிறுவர்கள் தண்டனைக்குப் பயந்து நடப்பது கூடாது. தண்டனைக்குப் பயந்து நடப்பது, எப்பொழுதும் முழுப்பலனைக் கொடுக்காது. தண்டனைக்காகக் காரியங்களைச் செய்யும் எவனும் தன்னைத் தண்டிக்க அதிகாரம் பெற்றவர்களை வெறுக்கிறானன்றோ? ஆகவே சிறுவர்கள் தண்டனையன்றி வேறொன்றினால் கீழ்ப்படியவேண்டும். அது அன்பு நம்பிக்கை என்பவைகளாம். இவ்விரண்டு குணங்களும் ஓர் சாரணத்தலைவரிடம் குடியிருந்தால்தான் அவர் தம் கார்யத்தைச் சரிவரச் செய்து முடிப்பார். இதுகாரணம் பற்றியே சிற்சில விடங்களில் சிறுவர்களின் உபாத்தியாயர்கள் சாரணத்தலைவர்களாய் இருப்பதால் கெடுதியேயன்றி நன்மை விளைவிப்பதில்லை.

குணத்தை நல்வழிப்படுத்தி, சிறுவர்களை நன்னெறியில் செலுத்துவதே வாலிபச் சாரணர் சங்கத்தின் நோக்கமாதலால் தலைவர் இதைக் கொஞ்சமேனும் மறக்காது தம் வார்த்தையாலும் நடத்தையாலும் ஓர் நிதரிசனமாக இருந்துவரவேண்டும். சாரணத் தலைவரும் வாலிபச் சாரணர்களும் மிகவும் நெருங்கிப் பழகுவதால் பரஸ்பர அன்பு ஏற்படுகின்றது. அதே, சிறுவர்களை நல்வழியிற் செலுத்தும். சாரணத்தலைவர் எப்பொழுதும் சிரித்த முகமும் அன்பும் நிறைந்தவராய் பலவிஷயங்களில் அனுபோகம் பொருந்தியவரா யிருத்தல் மிகவும் நல்லது. இதனால் எல்லா விஷயங்களிலும் நிபுணராக இருக்கவேண்டுமென்று நாம் கூறவில்லை. உலகத்தில் நடக்கும் பல விஷயங்களையும் புத்திசாலித்தனமாய் கவனிக்கவும், அவைகளைச் சாதாரணமாய் நாம் எவ்வாறு உபயோகிக்கவேண்டும் என்பதை அறியவும் வேண்டும் என்பதே நாம் கூறுவது. சாரணத் தலைவர் சங்கத்தின் முறைப்படி 18 வயதிற்கு மேற்பட்டவராய் இருக்கவேண்டும். ஓர் வாலிபச் சாரணச் சங்கத்தை நடத்த வேண்டுமென்று விரும்பும் ஒருவர் ஆங்கிலத்திலுள்ள 'சிறுவர்களுக்கான சாரணத்தொழில்' என்னும் நூலையாவது அல்லது அதைப்போன்றவேறொரு நூலையாவது சரிவர வாசித்துப் பிறகு சாரணர்களாயிருக்க விரும்பும் சிறுவர்களைக்கூட்டி அவர்களுக்குப் பயிற்சி செய்ய ஆரம்பிக்க வேண்டும். சாரணத் தொழிலைப்பற்றிப் பலர் தப்பான அபிப்பிராயம் கொண்டிருக்கிறபடியால், அவைகளை நீக்குவதற்காக வாலிபச் சாரணர்களாகச் சேர விரும்பும் சிறுவர்களின் பெற்றோர்களுக்கு சாரணத் தொழிலைக் கற்பிப்பதா லுண்டாகும் பலா பலன்களைத் தெரிவித்தல்வேண்டும்.

முதலாவது, பழுப்பு நிறமான சட்டைகளையும் காற்சட்டைகளையும் தரிப்பதால், சிறுவர்கள் ஒருவேளை சண்டைக்கனுப்பப்படுவார்களோ வென்பதே முதலாவது விஷயம். போருக்கும் வாலிபச் சாரணப் பயிற்சிக்கும் ஒரு விதமான சம்பந்தமும் இல்லை யென்பதைத் தெரிவித்து மேற்சட்டையும் காற்சட்டையும் ஓடுதல் முதலிய காரியங்களுக்குமுகவும் ஸாதகமா யிருப்பதினாலேயே அவைகள் தரிக்கப் படுகின்றன வென்றும் தெரிவிக்கவேண்டும்.

இரண்டாவது, சிறுவர்கள் சாரணச் சங்கத்தைச் சேருவதால், பள்ளிக்கூடத்துப் பாடங்களைப் படிப்பதற்கு நேரமில்லாதிருக்கின்றதென்றும், அவைகளுக்குக் கேடு வருகின்றதென்றும் எண்ணியிருப்பதால் இவ்வெண்ணம் சாரணச் சங்கம் ஒருவனுடைய அறிவைப் பெருக்கவே ஏற்பட்டிருக்கிறதென்றும் பள்ளிக்கூடத்தில் படிக்கும் கல்வி சார

ணச் சங்கத்தைச் சேருவதால் விருத்தியடை யுமே தவிர, குறையாதென்பதையும் தெளி வாக எடுத்து உரைக்கவேண்டும். இத்தப் பெண்ணம் உண்டாவதற்குக் காரணம், தற் காலக் கல்வி, புஸ்தகங்களையே பெருந்தெய்வ மாகக் கொண்டாடுவதால் உண்டாகிறது.

சாரணச்சங்கத்தின் நோக்கம், சிறுவர்களை சுறுசுறுப்பாகவும், மற்றவர்களுக்கு உதவி செய்ய எப்பொழுதும் தயாராயிருக்க வேண்டு மென்றும் இச்சங்கத்தின் பெருவாக்கு 'தயா ராயிரு' (Be Prepared) என்பதே யென்றும் தெளிவாக எடுத்துச் சொல்லவேண்டும்.

பெற்றோர்களிடம் அநுமதி பெற்ற பிறகு, வாலிபச் சாரணர்களை ஓரிடத்தில் கூடும்படிச் செய்ய வேண்டும். சாரணர்க ளனைவரும் சேரும்பொழுது பதினொருவயதிற்கு மேலும்; பதினெட்டு வயதிற்குள்ளும் இருக்க வேண் டும். சிறுவர்கள் சேர்ந்த பிறகு, அவர்களுக்கு எளிய நடையில் ஸ்வாரஸ்யமாகச் சாரணச் சங்கத்தைப்பற்றித் தெரிவிக்க வேண்டும். சாரணனுகச் சேருவதற்கு முன்னமேயே சில காலம் பயிற்சி யடையவேண்டும். இந்த காலத்திற்கு 'மெல்லிய பாதம்' (Tender foot) என்று பெயர். இக்காலத்தில் சாரணன் அறியவேண்டிய முக்கியமான சில விஷயங்க ளைக் கற்றுக்கொடுக்கவேண்டும். இவைகளைக் கற்றபிறகே ஒருவன் வாலிபச் சாரணனுக சேர்த்துக் கொள்ளப்படுவா னென்பதையும் வற்புறுத்த வேண்டும்.

'மெல்லிய பாதம்' அறியவேண்டியவை:— (1) சாரண நீதி (2) சாரணக் குறிகள், சாரணச் சலாம் (3) யூனியன் ஜாக் எனப் படும் ஆங்கிலக் கொடி, அது எவ்வாறு உண் டானதென்பது, அதை சரிவர பறக்கவிடும் விதி, (4) சாரணக் கழி, அதை உபயோ கிக்கும் சமயங்கள், (5) சாதாரண முடிச்சு கள், அவைகளின் பயன்கள்.

சாரண நீதி

ஒவ்வொரு சாரணனும் தன் கடமைகளை சரிவரச் செய்து வருவதே அவன் சாரணத் தன்மையைக் குறிக்கும். அவன் செய்வதெல் லாம் பயத்தினாலன்று. ஆனால், தன் கடமை யைச் சரிவரச் செய்யவேண்டும் என்ற வோர் நெஞ்சழுத்தத்தினாலும், அவ்வாறு செய்யா விடின், அது வோர் அகௌரதை என்றும் அவன் அறியவேண்டும். ஆகவே, சாரண நீதி யின் முதல் அம்சம் பின்வருமாறு:— ஓர் சார ணனின் கண்யதை எப்பொழுதும் நம்பப்பட வேண்டும். அதாவது ஓர் வாலிபச் சாரணன் "நான் இன்ன கார்யத்தைச் செய்கிறேன்" என்று சொல்வானானால், அதுவே போதும். அதற்குச் சத்தியம் செய்யவேண்டியதில்லை. சாக்ஷி வேண்டியதில்லை. அவனுக்கு மானமே பெரிது. சொன்ன சொல் தவறுவதைப் பார்க் கினும் நாடிழந்தும், நகரிழந்தும், தன் மனைவி மக்களையும் இழந்தும், ஸத்தியத்தைத் தவருத ஹரிச்சந்திரனின் சரித்திரத்தைச் சிறுவர் களுக்குத் தெரிவித்தல்வேண்டும்.

இரண்டாவது, சாரணன் தன் சக்கரவர்த்தி, தேசம், தன் மேலதிகாரிகள், பெற்றோர், தன் எஜமானர், தோழர், தன் கீழிருப்பவர் ஆகிய இவர்களிடம் விச்வாஸம் உள்ளவர்களா யிருக்க வேண்டும்.

விசுவாஸமில்லாவிடில் ஒரு கார்யமும் ஆகா தாகையால் இந்த அம்சத்தின் பொருளை வாலி பச் சாரணன் நன்கறியவேண்டும்.

மூன்ருவது, மற்றவர்களுக்குப் பிரயோஜன மாயும் உதவி செய்பவனாயும் இருக்கவேண்டி யது ஒரு சாரணன் கடமை.

நான்காவது, ஓர் சாரணன் அனைவருக்கும் நண்பனாகவும், மற்றச் சாரணர்கள் எந்த ஜாதி அல்லது நிலைமையிலிருந்தாலும் அவர்களிடம் சகோதர பாவனை யுள்ளவனாயும் இருக்கவேண் டும்.

ஐந்தாவது, சாரணன் எப்போதும் மரியா தையுள்ளவன்.

ஆருவது, ஓர் சாரணன் பிராணிகளின் சிநே கிதன்.

ஏழாவது, பெற்றோர், கூட்டத்தலைவன், சார ணத்தலைவர் இவர்கள் செய்யும் உத்தரவுக ளுக்குப் பதில் பேசாமல் கீழ்ப்படிந்து நடக் கிறுன்.

எட்டாவது, ஓர் சாரணன் எவ்வித கஷ்டங் களிலிருந்தபோதிலும், சிரித்த முகத்துடன் தைர்யமாயிருக்கிறுன்.

ஒன்பதாவது, சாரணன் சிக்கனமுள்ளவ னாயிருக்கிறுன்.

பத்தாவது, சாரணன், எண்ணத்திலும் வார் த்தையிலும் கார்யத்திலும் (மனோவாக்குக் கார் யங்களில்) சுத்தமுள்ளவனா யிருக்கிறுன்.

ஸர் வி. ஸி. தேசிகாசாரியார்

SIR V. C. DESIKACHARRIAR Kt.

பெருங்குடியிற் பிறந்து, பெருவாழ்வு வாழ்ந்து தம் குலத்திற்கும் தமக்கும் நற்பெயர் பெற்று வாழ்தல் சுலபமானதன்று. அதனுடன் படாடோபமும், தற்புகழ்ச்சியும் விளங்கி வரும் இக்காலத்தில், வெளி ஆடம்பரங்களில் பிரியமின்றி, இருக்குமிடம் தெரியாமல் தம் மாலானவரையில் பிறர்க்குதவி செய்து, ஜன ஸமூகத்தின் முன்னேற்றத்தைக் கவனித்து அதற்கு வேண்டிய வழிகளைத் தேடுபவர் வெகு சிலரே. அச்சிறு கூட்டத்தில் ஒருவராவர், சமீபத்தில் காலஞ்சென்ற ஸர் வி. ஸி. தேசிகாசாரியார்.

பிரபலமான பல பல வக்கீல்களும், நீதிபதிகளும் தோன்றிய வேம்பாக்கம் மரபில் வி. ராஜகோபாலாசாரியாரின் புத்திரராக வீ. ஸி. தேசிகாசாரியார் 1861 ஆ டிசம்பர் மீ 31 உ மயிலாப்பூரில் பிறந்தனர். சிறு வயது முதலே அவர் திடகாத்திரமானவரல்லர். உயர்தரப் படிப்பை சென்னை ராஜதானிக் கலாசாலையில் முடித்து, பிறகு சென்னை லாகாலேஜில் சட்டப்பரீக்ஷைக்குப் படித்து 1885 ஆ அப்பரீக்ஷையில் தேறினர். தேறியதும், வக்கீல் வேலையில் பழக்கமடைய, அக்காலத்தில் மயிலாப்பூரில் பிரசித்தி பெற்றிருந்த வேம்பாக்கம் ஸர். பாஷ்யம் ஐயங்காரிடம் அப்ரெண்டிஸாக அமர்ந்தனர். தம்முடைய நுண்ணறிவாலும், தம்மிடம் கொடுக்கப்பட்ட கேஸ்களை ஆராய்ந்து வேலை செய்யும் திறமையாலும் பாஷ்யம் ஐயங்காருடைய பிரீதிக்குப் பாத்திரரானர். 1887 ஆ அவர் ஹைகோர்ட்டு வக்கீலாக அமர்ந்த பிறகும், வெகுகாலம் பாஷ்யம் அய்யங்கார் அவர்களுடனேயே ஒத்துழைத்து வந்தார்.

பார்ப்பவர்களுக்கு வக்கீல் வேலை மிகவும் சுலபமானதாகத் தோன்றினும், கட்சிக்காரர்களுடைய திருப்திக்கும், உண்மையிலேயே சட்டங்களின் நுட்பத்தை அறிவதற்கும், மிகவும் சிரமப்பட்டே உழைக்க வேண்டும். வெறும் வாய்ப்பேச்சே வக்கீல் வேலையில் முன் வருவதற்குப் போதுமாயின், பலர் முன் வந்திருப்பர். ஆனல் உண்மை உழைப்பே வேண்டியது என்பதற்கு ஸர் வி. ஸி. தேசிகாசாரியரே அத்தாட்சி. வெகு சீக்கிரத்தில் தேசிகாசாரியார், சென்னையிலுள்ள பிரபலமான வக்கீல்களிலொருவ ரானர். வக்கீலா யிருக்கும்போதே 1896 ஆ முதல் 1900 ஆ வரையில் தாம் முன் வாசித்த லா காலேஜிலேயே ஓர் உபந்யாசகராகவும் இருந்தார்.

1908 ஆ த்தில் பிரஸிடென்ஸி ஸ்மால் காஸ் கோர்ட்டில் ஜட்ஜாக நியமனம் பெற்று, அந்த ஸ்தானத்தில் மிகவும் கீர்த்தியுடன் 10 வருஷம் வீற்றிருந்தார். அவர் ஆரம்பத்தில் மிகவும் உழைத்து வந்ததின் பலன், இப்பொழுது நன்கு விளங்கிற்று. தம்முன் வாதிக்கும் வக்கீல்களின் சட்ட வாதங்களை கவனிப்பதிலும், பிழையில்லாது, பக்ஷபாதமின்றித் தீர்ப்புகளைச் செய்யவும் அவரது பூர்வ அபாரப்படிப்பு காரணம் எனச் சொல்லலாம். வீண் பேச்சுகளையும், டம்பங்களையும் அவர் வெறுத்துப் பேசினபோதிலும், நீதி எப்பொழுதும் அவரிடம் பிறழ்வதில்லை என்று அனைவரும் கூறியிருக்கின்றனர்.

ஸர் தேசிகாசாரியார் தம் உத்தியோகத்தில் மிகவும் ஊக்கத்துடன் உழைத்து, பேரும் பொருளும் பெற்ருராயினும், ஜன ஸமூகத்தின் முன்னேற்றத்தைக் கவனியாமலில்லை. தாம் வசித்துவந்த சென்னை நகரின் விருத்தியைக் கவனித்து 1896 ஆம் முதல் 1908 ஆ வரையில் சென்னை கார்பொரேஷன் அங்கத்தினராக இருந்து, அங்குச் சபையில் ஏற்படும் பற்பல விஷயங்களை மிகவும் சிரத்தையுடன் கவனித்து வந்தார். கார்பொரேஷன் அங்கத்தினர் எவ்வளவு நம்பிக்கைவைத்திருந்தார்கள் என்பது, தம்முடைய பிரதிநிதியாக சென்னை சட்ட சபையில் அங்கத்தினராக அவர்கள் தெரிந்தெடுத்ததே நன்கு விளக்கும். சட்டசபையின் அங்கத்தினராக அவர் 1904-ம் ஆ முதல் 1908 ஆ வரையில் இருந்தார்.

சென்னை ஸர்வ கலாசாலையின் ஆலோசனை சபையின் அங்கத்தினராக (Fellow of the Madras University) அவர் 1903 ஆ த்திலிருந்து, 1918 ஆ வரையில் இருந்ததே கல்வியில் அவருக்குள்ள அபிமானத்தைக் காட்டும். அவர் வக்கீலாக இருந்தபோது, இந்திய ஜாதீய மஹாநாடு சென்னையில் கூடின

பொழுது, தம்மாலான உதவி செய்தார். நம் சிறுவர்களுக்கு தேகாப்பியாசம் முக்கியமானது என்று கருதி ஸௌத் இண்டியன் அதெல்டிக் அஸோஸியேஷன் என்னும் தேகாப்பியாஸச் சங்கத்தில் வேலை செய்துவந்தார்.

பொதுஜன நன்மையைக் குறித்து அவர் செய்த விஷயங்களில் நாம் கவனிக்கவேண்டிய விஷயங்கள் இன்னம் சில உள. நம் ராஜதானியிலுள்ள ஏழைகளும் தனிகர்களும் ஆயிரக்கணக்காய்த் தாம் சேகரித்து வைத்த பொருளை வட்டிக்கு ஆசைப்பட்டு, ஆர்பத்நட் கம்பெனியில் கடன் கொடுத்து வைக்க, அது திடீரென நஷ்டமடைந்தது. அக்கம்பெனியில் கடன் கொடுத்தவர்கள் அனைவரும் 'கோ' வென்றலறிக் கூக்குரலிட்டனர். அச்சமயத்தில், நஷ்டங்களைக் கணக்கிட்டு, கூடியவரையில், கடன் கொடுத்தவர்களுக்கு ஈடுகொடுக்க ஏற்பட்ட கமிடியில் தேசிகாசாரியார், கௌரவக் காரியதரிசியாக அமர்ந்தார். அவருடைய முயற்சியாலும், பணவிஷயங்களில் உள்ள அனுபோகத்தாலும் கூடியவரையில் பணம் சேர்த்து ஈடு கொடுக்க ஏற்பாடு செய்தனர். வேறொரு ஸமயத்தில், சில கோளாறுகளால் பின்னி கம்பெனியார், தாம் கொடுக்கவேண்டிய தொகைகளைச் செலுத்தாது போக, தேசிகாசாரியார் கணக்குகளைப் பரிசோதித்து, வரவு செலவுகளைப்பார்த்து, சேர வேண்டியவர்களுக்குத் தொகையைச் செலுத்த உதவிசெய்தார்.

சென்னையிலுள்ள பல பொது ஜன சங்கங்களில் அவர் உழைத்ததை அனைவரும் அறிந்திருந்த போதிலும், கூட்டுறவு என்னவென்பதே தெரியாதிருந்த காலத்து, மதராஸ் ஸென்ட்ரல் அர்பன் பாங்க் என்னும் நிதியைப் பற்றி நாம் இங்குக் கூற வேண்டும். அவர் தாமே முதலில் கார்யதரிசியாக விருந்து, வெகுகாலம் தமது இல்லத்திலேயே பாங்கின் ஆபீஸ் இருக்க இடம் கொடுத்து வந்தார். அந்த அர்பன் பாங்கே தற்காலம் இவ்விராஜதானியிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கெல்லாம் உதவிசெய்துவருகின்றது.

1906ஹு வேல்ஸ் இளவரசராக இருந்த நமது ஜார்ஜ் சக்கரவர்த்தி, தமது பட்ட மகிஷியுடன் நம் நகருக்கு விஜயம் செய்திருந்த போது தேசிகாசாரியார் அவரை வரவேற்பதற்கான ஏற்பாடுகளைச் செய்த பிரமுகர்களில் ஒருவராக இருந்தார். தேசிகாசாரியாரது குணசீலத்தையும், பொதுஜன நன்மைக்காக உழைப்பதையும் அறிந்த அரசர், தம் திருக்கரத்தாலேயே அவருக்கு ஸர் என்னும் பட்டமளித்தார்.

பொது ஜன நன்மைக்காக மிகவும் பாடுபட்டபோதிலும், ஸர் தேசிகாசாரியார், பெரும்பாலாரைப் போன்று, தம் பெயர் பத்திரிகை வாயிலாக வரவும், பிறர் மெச்சவும் விரும்பவில்லை. தம்மைக் காணவருபவர்களிடம் மரியாதையும், தம் மதத்தையும் நாட்டையும் நேசித்தவராயும், பிறரை அவமதிக்காதவராயும் இருந்தார். தாம் பலருடன் கூடிப் பழகும்போது, அபிப்பிராய பேதங்கள் பல இருப்பினும், அதனால் அருவை தோன்றாமலே யிருந்து வந்தார். நினைப்பதொன்றும் பேசுவது மற்றொன்றும் அவரிடங்கிடையாது. பாத்திரமறிந்து தர்மஞ் செய்வதே, தர்மஞ்செய்யவேண்டிய வழி என்பது அவர் கொள்கை.

இப்படி நாடெங்கும் புகழ வாழ்ந்த புருஷர் இவ்வருஷம் நவம்பர் மீ 24வ மாலை இவ்வுலகை நீத்துப் பரமபத மெய்தினர். இவரது உயிர் நீத்தலால், நாட்டினரும் முக்கியமாக சென்னை நகர வாசிகளும், மிகவும் கஷ்டமடைந்தனர் என்பதிற் சந்தேகமில்லை.

இயற்கை அற்புதங்கள்

இது ஆ வீ. கஸ்தூரிரங்கய்யர் பி.ஏ., எல்.டி., அவர்கள் செய்தது. ரிடையர்டு ஸ்கூல் இன்ஸ்பெக்டர் காலஞ்சென்ற ராவ் பஹதூர் L.C வில்லியம்ஸ் பிள்ளை அவர்கள் எழுதிய முகவுரையுடன் கூடியது. இதிலடங்கிய விஷயங்கள்: 1 மழைக்கால்கள்; 2. எரிமலை; 3 பூகம்பம்; 4. வெந்நீர் ஊற்றுகள். 5. கானல் நீரும் அதன் ரூபாந்தரங்களும்; 6 வால் நக்ஷத்திரங்கள்; 7. எரி நக்ஷத்திரங்களும், பொறி நக்ஷத்திரங்களும்; 8. வானவில், 9 நிழலும் கிரகணங்களும்; 10 ஹாலி வால் நக்ஷத்திரம், 11. மொழி பெயர்ப்பு விளக்கம். இதில் அநேக படங்கள் அழகாய் அச்சிட்டுச் சேர்க்கப்பட்டிருக்கின்றன. விலை அணா 8.

வந்தனோபசார வாழ்த்துக் கவிகள்*

BENEDICTION SONGS

[ஸ்ரீமான் பண்டித ம. கோபாலகிருஷ்ணையர்.]

[இவை திருச்சி உபாத்திம சங்கத்தின் அங்கத்தினரது ஆதரவில் நாஷனல் காலேஜில் கூடிய மகா சபையில் வாசிக்கப்பட்டவை.]

திறமிகுந்த சரதன்மக னய்விபுதர் தமைக்காத்
[துத் திகழ்த லானும்,
நிறமிகுந்த கவியணியாக் கொடுகவிகள் நாயகமா
[திலவலானும்,
அறமிகுந்த பதத்தாலே கலைமங்கை வடிவாக்கி
[னவனாய் ஆர்வம்
உரமிகுந்த தன்மையினாலும்,'ராமஸ்வாமி'யெனும்
[உறுபே ருற்றோய் ! (க)

[திறமிகுந்தசரதன் = திறம் மிகுந் தசரதன் ; திறமிகுந்த சரதன் (அதாவது சத்திய சீலன்). கவிஅணியாக்கொடு = வானரங்களை சைனியங்களாகக்கொண்டு; பாமாலை புனையப்பெற்று. கவிகள் நாயகம் = வானரங்கட்கு எஜமானன் ; புலவர் திலகன். அறமிகுந்த = மிகப் பெருமை தங்கிய ; புண்ணிய மிக்க. பதந்தாலே = பாதத்தால்; வாய் மொழியால். கலைமங்கைவடி. வாக்கினவனாய் = கல்லை மங்கை வடிவாக்கினவனாய் ; சரஸ்வதியையே வடித்த வாக்குடன் கூடியவனாய் (அல்லது கேட்போரை கல்வியில் நாமகளன்ன ஆக்கினவனாய்.]

'தந்தையே தனது மகன் ஆவன்" எனும் வேத
[மொழி சரதமாகச்
சுந்தரரா மப் பெரியோன் திருமகவாய் அவதரித்த
[தோன்றல் ! தெய்வச்
செந்தமிழும் ஆரியமும் ஆங்கில மாதிய யாவும்
[தேர்ந்தன்போடு
சந்ததமும் பிறர்க்கு நலம் செய்வதையே செய்கட
[னாத் தான்கொண்டுள்ளோய் ! (உ)

கரசங்கம் வரு அரிவாழ் திருவரங்கம் முன்னை
[யினும் கவினுற் றோங்க,
அரசங்கம் கனிவாா ஒருநீதி பதியாக அமர்ந்தோய்!
[யாரும்
பரசங்கம் உடையாய் ! நன் னெறிதழைய வைதிக
[நற் பயிர்மிக் கோங்கப்
பிரசங்கம் பொழிந்ததுபோற் பிரசங்க மாரிபொழி
[பெருமை வாய்ந்தோய் ! (ங)

[காசங்கம் = கைச்சங்கு; பாசங்கம் = பரசு அங்கம்; பிரசங்கம் பொழிந்தது பிரசம் (அதாவது தேனை) கம் (அதாவது ஆகாயம், பொழிந்தது].

சொல் வலிமை உண்டாயின் மற்றதனுற் பயனுற்
[றச் சோம்பல் ஆ! ஆ!!
நல்வினைகோ றலின்வேறன்றென் றுணர்ந்து பண்டி
[தர்க்கும் நல்லோருக்கும்
பல்தியங்கள் மாணவர்க்கும் புரவலர்க்கும் பொது
[ஜனர்க்கும் பரிந்தி குற்ற
சில்பொழுதில் நீசெய்த பன்னலமும் எடுத்தெடுத்
[துச் செப்பார் யாரே? (ச)

புகழ்தருநல் உயர்பதவி தனைஎய்த நீகோயம் புத்
[தூர் செல்லல்
அகமகிழ்வும்,நின்பிரிவு வெகுதுயரும் எமக்கெல்லாம்
[அளிப்பதோர்வை.
இகல் எவரும் இல்லாய் ! நின் மெய்யன்பெங் களை
[நீங்காதென்றே எண்ணி
மகிழ்வொடுனை அவண்செல்ல விடுக்கின்றேம் "நீடூழி
வாழி !" என்றே. (ரு)

எத்திசையும் "இவன் தந்தை என் நோற்றான் !
என் நோற்றான் !" என்ன வந்தோய் !
நித்தியமும் தனதருகே அரி இருந்தும் நளினமலர்
[நிலவுமோதான் ?
மித்திரன்தன் அருகில் இலா தநிதொலையில் இருந்
[தும் அது மிளிர்தல் தேர்வெம்
ஒத்தஉணர் வுளநமக்குப் புணர்வேனோ ? பழக்க
[மெனோ ஒதுங்காலே ? (சா)

[அரி = சத்துரு, வண்டு ; மித்திரன் = நண்பன் சூரியன்.]

இயலிசைநா டகம் இயற்றி "உலககவி திலகர்"
[என இலகி, மாந்தர்
மயலகற்றும் ரவீந்திரநாத் தக்கோரின்மகிமையெலாம்
[வயங்கச் செய்வோய் !
வியன் கதம்பி சுந்தரரா மன்சேயே ! ராமஸ்வா
மிப்பேர் உற்றோய் !
உயர்குலம்போல் உயர்குண ! நீ ஊழி ஒரு நாள்
[எனப்பல் ஊழிவாழி ! (எ)

[கதம்பி:— இது அவரது குடும்பப் பெயராயினும், ஜனசங்கத் தலைவன் அல்லது மேகம் போல் கைம்மாறு கருதாது பயனுற்றுவோன் ; பிரசங்க மாரியான் என்பதையும் குறிக்கும்.]

* ஸ்ரீரங்கம் டிஸ்ட்ரிக்ட் முன்ஸீபாக இருந்து ஸப் ஜட்ஜாகக் கோயம்புத்தூருக்கு மாற்றப்பட்ட ஸ்ரீமத் K. S. ராமஸ்வாமி சாஸ்திரிகள் B. A. B. L. அவர்களுக்குக் கூறியவை.

புராதன இந்தியா
ANCIENT INDIA

[ஸ்ரீமான் பாஷ்யமய்யங்கார் அவர்கள்]

புத்தர் அவதரித்ததற்கு முன், இந்தியாவின் ஆதிசரித்திரத்தை யுள்ளபடி அறிவதற்குப் போதுமான ஆதாரங்களும் சாதனங்களும் நமக்குக் கிடைக்கவில்லை. கி. மு. ஆறுவது ஏழாவது நூற்றுண்டுகட்குமுன் நடந்த விஷயங்கள் கர்ணபரம்பரையாகக் கிடைத்தனவேயாம். எழுத்துமூலமாய் நிலையாக நம்தேசத்தைப்பற்றியும் பண்டைக் காலத்தில் ஆரியர் நடத்திவந்த ராஜரீகத்தைப்பற்றியும் ஒருவரும் எழுதிவைக்கவில்லை. வேதங்களிலிருந்தும், ப்ராஹ்மணங்களிலிருந்தும், இந்தியரின் நிலைமையும் அவரதுநாகரிகமும் பொதுவாக வெளியாகின்றனவேயன்றி சரித்திரசம்பந்தமாய்க் கிரமமாய் நடந்த விஷயங்களும் முறையே அரசாண்டுவந்த மன்னர் வரலாறுகளும் அவற்றில் தெளிவாகக் குறிப்பிக்கப்படவில்லை, ஆயினும், கௌதமபுத்தர் அவதரித்ததுமுதல், நம்நாட்டின் வரலாற்றை ஒருவாறு நிச்சயமாக அறியக்கூடிய ஆதாரங்கள் நமக்குக் கிடைத்துள்ளன. புத்த ஜைனமத நூல்களிலிருந்தும் ஹிந்து புராணங்களிலிருந்தும் மற்றும் இந்நாட்டில் வெளித்தேசத்திலிருந்து வந்தவர்கள் எழுதிவைத்துள்ள குறிப்புக்களிலிருந்தும் இந்தியரின் சரித்திரத்தை புத்தர்காலம் முதற்கொண்டு அறிவது சாத்தியமாகிறது.

ஆரியர்கள் முதலில் பஞ்சாபில் வசித்திருந்து அங்கிருந்து கொஞ்சங் கொஞ்சமாய்க் கிழக்குப்பக்கத்தில் பரவி கங்கை நதிபாயும் ஸமவெளியைக் கைப்பற்றினர்கள். நாளேற வேற, அவர்கள் வடஇந்தியாமுழுதும் வியாபித்து, அநேக இராஜ்யத்தை ஏற்படுத்தினர்கள். ஹிமாலயம் முதல் நர்மதை வரையில் ஆரியர்களுடைய செல்வாக்கே மிகுந்திருந்தது. மொத்தத்தில், வடஇந்தியாவில் அக்காலத்தில் பதினறு இராஜ்யங்கள் பிரஸித்தி பெற்று விளங்கின, அஸ்வாகர், காம்போஜர், காந்தாரர் எனப் பலவகைப்பட்ட குடிகள் இந்த ராஜ்யங்களை யடுத்து வஸித்துவந்தார்கள். மஹாபாரதத்தில் காணப்படும் இராஜ்யங்களுள் கோஸலம், விதேஹம், காசி இம்மூன்று நாடுகளும் கி. மு. 600வரையில் பெருமைபெற்று விளங்கின. குருக்ஷேத்திரமும் பாஞ்சாலமும் கோஸல நாட்டரசுக்குட்பட்டிருந்தன. வைசாலியில் லிச்சாவியர் என்போரும் மிதிலையில் விதேஹரும் அதிகாரம் வகித்துவந்தார்கள். இராஜபுதனமும் மாளவமும் சேர்ந்து மாளவநாடென வழங்கின. மத்ஸ்ய தேசத்தாரும் ஸூரஸேனரும் அவந்தி நாட்டாண்மைக்கடங்கி யிருந்தார்கள். அவந்தி நாட்டிற்குக் கீழ்ப்புறத்தில் வத்ஸரும் சேதிநாடரும் அதிகாரம் செலுத்திவந்தார்கள். கூர்ஜரத்தில் ஸௌராஷ்டிரர் தலைமை பெற்றுர்கள். வடக்கே காந்தாரரும் தெற்கே ஆந்திர சேர, சோழபாண்டியரும் ஆதிபத்யம் நடத்தி வந்தார்கள். நருமதை, கிருஷ்ணநதி கட்கிடையில் அமராவதி யென்னும் நகரை இராஜதானியாகக் கொண்டு ஹிந்து மதத்தையும் நாகரிகத்தையும் கைக்கொண்டு புகழ்பெற்று ஆந்திரர் அரசுரிமை செலுத்தி வந்தார்கள். இவ்வகைப்பட்ட நாடுகளுள் ஒவ்வோர் சமயத்தில் ஒவ்வொன்று ஏகாதிபத்யம் பெற்று பிரபலமாய் விளங்கிவந்தது. புத்தர் தம் மதத்தை உபதேசித்தகாலத்தில், வெகு சிறப்புடன் ஏகாதிபத்தியம் செலுத்திவந்த நாடு மகதமாகும். அவந்தி, கோஸலம் முதலிய நாடுகளைப்போலவே மகதமும் மஹாபாரத யுத்தம் நடந்தநாள் தொட்டு, பிரஸித்தி பெற்றிருந்தது. இந்தியா முழுதும் ஹிந்து நாகரிகமே தலையெடுத்து ஹிந்துக்களே ஸர்வாதிகாரம் பெற்று வந்தனர். இந்து நாட்டு வேந்தர், ஒருவருடன் ஒருவர் சண்டையிட்டு வந்தனரெனினும் பலாஷ்டிகனுயுள்ள அரசனொருவன் ஏனைய சிற்றரசர்களை யொடுக்கி அவர்களிடம் இறைவாங்கி நாட்டிற்கு சமாதானத்தை நிலை நிறுத்தி, நன்மைகளைச் செய்வான். குடிகளும் அரசர்க்கு விரோதமாய்க் கிளம்பி கலகம் விளைக்காமல் அவரிடம் தமக்குள்ள விசுவாசத்தை அடிக்கடி காட்டிவருவார்கள். முடிவில், மகத நாடொன்றே மிகப்பிரபலமடைந்து விளங்கிற்று. இனி மகததேசத்தின் சரித்திரத்தை ஆராய்வோம்.

மகதநாடு மிகப் புராதனமானதென்று முன்னே கூறியிருக்கிறோம். மகதநாடு கங்காநதி பாயப்பெற்று எல்லாவளங்களும் நிரம்பியதாயிருந்தது. சுற்றிலும் வாய்க்கால்களும் ஆழமான அகழிகளும் பொருந்தி யிருந்த

மையால் வைரிகள் அதன்மேல் எளிதிற் படையெடுத்து வந்து தாக்கி மகத நாட்டை வெல்வது அசாத்தியமாயிற்று. அன்றியும், அவந்தி, வத்ஸம் முதலிய பக்கத்திலிருந்த நாட்டரசர் ஒருவர்க் கொருவர் மனஸ்தாபப்பட்டு போர்புரிந்து வந்தது, மகதநாடு அபிவிருத்தி யடைவதற்குப் பெரிதும் அனுகூலமாயிற்று. மகதநாட்டை அரசாண்டு வந்த அரசர்கள் நாட்டின் தலைமை வகிப்பதற்கு வேண்டிய எல்லா நலங்களையும் பெற்று பலாஷ்டிகராய்த்தமது ஸைந்யத்தைப் பலப்படுத்தி வந்தார்கள். இதனால் தான் மற்றைய நாடுகள் நாளடைவில் வலிமைகுன்றி, ஒடுங்கியும், மகதராஜ்யம் மாத்திரம் பெரும் புகழ் பெற்று வந்தது.

மஹாபாரத யுத்தம் நடந்த காலத்தில், மகத நாட்டை ஜராஸந்தன் என்றொரு அரசன் ஆண்டு வந்ததாக அறிகிறோம். அதற்குப்பின் கி. மு. 600 வரையில், அதன் சரித்திரத்தைப் பற்றி நமக்கு ஒன்றும் தெரியாது. அதில் முதன்முறை பிரபலமாய் ஆட்சி புரிந்துவந்தவர் சேஷநாகர் என்று நாம் புராண வாயிலாக அறிகிறோம். ராஜக்ரஹம் என்பது மகதநாட்டின் பழைய இராஜதானியாய் இருந்தது. அந்நாட்டை முதலில் ஸ்தாபித்த சேஷநாக மன்னனைப் பற்றி நமக்கு அதிகமாகத் தெரியாது. சேஷநாக பரம்பரையி லுதித்து (537-485) வரையில் ஆண்டு வந்த பிம்பிஸாரன் என்னும் வேந்தன் மகத ராஜ்யத்தை நீதிதவறாது செங்கோல் செலுத்திவந்தான். அவன் ஆண்ட காலத்தில்தான், கௌதமபுத்தர் உலகில் அவதரித்து தம் மதத்தை நாடெங்கும் போதித்துவந்தார். பிம்பிஸாரன் கோஸல நாட்டினருடனும் விச்சாவியருடனும் நட்பு பூண்டு அத்தேசத்தரச குமரிகளை மணந்து கொண்டான். விச்சாவியர் நாட்டுப் புதல்வியினிடம் பிம்பஸாரனுக்குப் பிறந்த அஜாதசத்ருவென்பவன் தன் தந்தையைக் கொன்று அரசைக் கைப்பற்றி நாற்பது வருஷங்கள் ஆட்சி புரிந்துவந்தான். அவன் கோஸல நாட்டின்மேல் படையெடுத்து அதை ஸ்வாதீனப்படுத்தினான். பின்னர் வைசாலியிலுள்ள விச்சாவியரையும் தோற்கடித்து வைசாலியையும் மற்றும் பல நாடுகளையும் கைப்பற்றினான். இவன் காலத்தில் மகதநாட்டின் வலிமை வரவா அதிகரித்துக்கொண்டே வந்தது. அஜாதசத்ரு பெரிய யுத்தவீரன். நாட்டின் நன்மைக்குப் பெரிதும் உழைத்து வந்தான். அவன் தன் இராஜ்யத்தில் பாடலியென்ற கோட்டையைக் கட்டினான். இவனது பேரனாகிய உதயன் என்பவன் இக்கோட்டையைச் சுற்றிலும் நகர் ஒன்று உண்டாக்கி அதற்குப் பாடலிபுத்ரம் எனப் பெயரிட்டு அதையே மகத நாட்டிற்கு இராஜதானி யாக்கினான். இப்போது மகத ராஜ்யமே மற்றெல்லா நாடுகளினும்சிறப்புற்று விளங்கியது. கங்கையும் அதன் உபநதிகளும் பாயும் இடம் முழுதும் மகதராஜ்யம் வியாபித்திருந்தது.

சேஷநாகரில் கடைசியாக அரசு புரிந்தவன் மஹாநந்தன் என்பவன். அவனுக்குப் பின் (361 கி. மு.) அரசு செலுத்தியவர் நந்த பரம்பரையினர். மஹா பத்மநந்தன் என்னும் நந்த குல மன்னன் மஹா நந்தன் என்ற சேஷநாக மன்னனுக்கு ஒரு சூத்திர ஸ்திரீயினிடம் பிறந்தவன். அவன் தன் தகப்பனது இராஜ்யத்தை அக்கிரமமாய்க் கைப்பற்றி தனக்கு எதிரிகளாக இருந்தவரைக் கொன்று அதிகாரம் பெற்றான். அவனுக்குப்பின் அவனது குமாரர் எட்டுப்பேர் அரசு செலுத்தியதாக ஏற்படுகிறது. ஆயினும் இங்ஙன நந்தர் ஆட்சி புரிந்தது இரண்டு தலை முறைகளேயாம்.

மஹா பத்மநந்தன் மகதநாட்டில் ஆண்டு வந்த காலத்தில்தான், மாஸிடன் நாட்டதிபதியான அலெக்ஸாண்டர் இந்தியாவின் மேல் படையெடுத்து வந்தான். மகதநாட்டின் ஸேனாபலத்தைப்பற்றி அலெக்ஸாண்டர் வெகு சிறப்பாக மதித்திருக்கிறார். இரண்டுலக்ஷம் காலாள்வீரரும் இருபதினாயிரம் குதிரைகளும் இரண்டாயிரம் ரதங்களும் மூவாயிரம் கஜங்களும் அடங்கிய பெரிய ஸேனைக்கதிபதியாய் மகதநாட்டு வேந்தன் விளங்கினான். நந்தர்களைப்பற்றி வழங்கிவரும் வரலாற்றிற் பெரும் பாகம் கற்பனையே யாயினும் மொத்தத்தில் அவர்கள் பராக்கிரமசாலிகளாய் இருந்தனர். என்பது உண்மையேயாம். ஆயினும் அவர்களால் ஜனங்களுக்கு நன்மைகள் ஒன்றும் உண்டாகவில்லை.

(தொடரும்.)

வஸந்த மந்திரம்

மூன்றும் அத்தியாயம்

தூது செல்லல்

ஆமத்பாக்ஷா தன் இணையில்லாச் சேனையோடு ஆவலுடன் உதயபுரியை அணுகவே, கோட்டை வாயில்கள் திறந்துகிடக்கின்றன. எதிர்ப்பார் ஒருவருமே கிடையாது. புற்போர்களும், தானியக் குவியல்களும் எரிந்துகொண்டும், எரிந்து தணிந்துகொண்டும், வந்தோருக்குப் பயன்படாமல் நிற்கின்றன. சண்டையை எதிர்பார்த்துவந்த சேனை, ஜனமற்ற நகரத்தைக்கண்டு திகைத்தது. நகரத்தை அணுகும்போதே பக்கத்தில் செய்துவைத்திருந்த படுகுழிகளில் யானைகளும், குதிரைகளும், காலாட்களும் விழுந்து துன்பமுற்றனர். பாக்ஷாவுக்கு உண்டான கோபத்திற்கும் விசனத்திற்கும் அளவில்லை. வீரரெல்லாம் கிடைத்த பொருளைக் கைசோரவிட்டவர் போன்று ஓவென் றலறினர். பந்தி பந்தியாயும், வரிசை வரிசையாயும் முன் வந்த சேனை அரை நொடியில் பாம்பு நுழைந்த கூட்டம்போல் தலைகால் தெரியாமல் குழப்பமடைந்தது. ஏதோ விபரீதம் விளைந்துவிட்டதென்று நினைத்து யானைகளும் குதிரைகளும் மற்ற விலங்குகளும் நிலை தடுமாறி பயந்து சேனைக் கூட்டத்தில் ஓடுவதும், ஓடும் சமயத்தில் சிலரை மிதிப்பதும், அவற்றிற்குப் பயந்து வீரர்கள் ஓடுவதும், அவற்றை எதிர்ப்பதும், அவை மற்றொரு வழியில் ஓடுவதும்,—இந்நிகழ்ச்சிகளால் பாக்ஷாவின் சேனை அப்பொழுது பூகம்பத்தால் நிலைகுலைந்த பட்டணம்போல் தோன்றிற்று.

ஆமத்பாக்ஷா தன் துக்கத்தை ஒருவாறு பொறுத்துக்கொண்டு யானையின் அம்பாரிமேல் ஏறி நின்றுகொண்டு கையை அமர்த்தி நல்வார்த்தைகளால் அவர்களைப் போற்றி விஷயம் இன்னதென்று விவரித்தான். பிரதான உத்தியோகஸ்தர்களும், சேனை நடுவில் நுழைந்து குழப்பத்தை அடக்கினர். பின்பு ஆமத்பாக்ஷா 6-நாள் அவ்விடத்திலேயே சேனைகள் தங்கவேண்டுமென்றும் சிரமபரிகாரம் செய்துகொள்ளவேண்டுமென்றும் உத்தரவுசெய்தான்.

மறுதினமே ஜயசிங்கனைத் தடுத்து நிற்கும் சேனையிலிருந்து வரவேண்டிய வீரர்கள் வந்து கூடினர். இரண்டு சேனையுமாய் உதயபுரியின் இயற்கை யழகையும், அங்குள்ள குன்றுகளின் பொலிவையும், சோலைகளின் இனிமையையும் கண்டு களித்தனர். வேட்டையாடி ஏராளமான மிருகங்களைக் கொன்றனர். சோர்வு சற்றே ஆறியபின், மறுபடி அஹோரத்தை நோக்கிச்செலுத்தினான் பின்வாங்கா வீரனான ஆமத்பாக்ஷா சக்கரவர்த்தி.

அஹோரமென்பது மலைமேலுள்ள ஒரு துர்க்கம். சுற்றி நான்கு பக்கமும் மதில்கள். குதிரை வீரரும் காலாட்களும் சௌகரியமாய் மதிலண்டை வந்து நின்று சண்டை செய்யாதிருக்கும்படி சுற்றிலும் கூறிய கற்கள் நடப்பட்டிருக்கின்றன. குதிரைகள் மதிலை நெருங்கினால் இரண்டடிவைப்பதற்குள் கீழே வீழ்ந்துவிடும். காலாட்கள் நெருங்கினால் வரிசையாய் நின்று ஏகோபித்து எதிர்க்கமுடியாது. அக்கற்களை அகற்றுவதும் இலேசான வேலையன்று. செங்குத்தான மதில்களின்மேல் எதிரிகளைக் கொல்லக்கூடிய பல யந்திரங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. இடைஇடையே பெரியபாறைக் கற்களையும் ஏற்றியிருக்கின்றனர். கோட்டையின் உள்ளே சேனைமுழுவதும் கஷ்டமின்றித் தங்க இடமும், நீர் அருந்த நேர்த்தியான சுனையும் உண்டு. அச்சுனை நீர், படிப்படியாய் ஓடிவந்து சிறு சிறு தடாகங்களாகி அடிவாரம் வரையில் ஓடுகின்றது. உள்ளே சேகரித்திருக்கும் ஆஹாரங்கள் மூன்று மாதத்துக்கு மேலேயே உபயோகமாகும். நடுவே நிற்கும் கோபுரத்திலிருந்து நான்கு மைல் தூரத்துக்கப்பால் வருகிறவர்களைக்கூடக் கண்டுகொள்ளலாம்.

இத்தகைய அழகிய சிறு துர்க்கத்தில் பிரதாபசிங்கன் தனது முக்கிய பிரபுக்களையும் அவர் பெண்டிர் பிள்ளைகளையும் தன் வலிய சேனைகளையும் சேர்த்து வைத்துக்கொண்டு துருக்கசேனையின் வரவை எதிர்பார்த்திருந்தான். ஆமத்பாக்ஷா தன் சேனையை துர்க்கத்தின் மதிலண்டை நடத்திவந்தான். செங்குத்தான கூறிய கற்களின் பக்கத்தில் சேனையை நிறுத்திக்கொண்டு வெள்ளைக் கொடியுடன் நான்கு வீரர்களைக் கோட்டை வாயிலுக்கு அனுப்பினான். அத்தூதருள் முதல்வன் கையில் ஒரு பொன்தட்டும், அத்தட்டில் தான் அன்பு பாராட்டும் லலிதைக்கு ஒரு விலையுயர்ந்த ஆடையும்,

மேலே அணிய ஒரு மரகத மாலையும் பொன் ஆபரணங்களும் இருந்தன. இரண்டாமவன் ஒரு வெள்ளித்தட்டில் பிரதாபசிங்சருக்கு ஒரு சால்வையையும் இனிய வைரக்கற்களையும் கொண்டுபோனான். மூன்றாமவன் ஒரு தட்டில் ஒரு ஓலையைத் தாங்கிச் சென்றான். நான்காமவன் இரண்டு கையிலும் இரண்டு வெள்ளைக் கொடிகளை எடுத்துக்கொண்டு முன்சென்றான். தூதர்கள் வெள்ளைக்கொடியுடன்வர அவர்களை அரசன்முன் விட்டனர். அரசனுக்கு எழுதிய கடிதத்தில்:—

"உதயபுரி யரசனான பிரதாபசிங்க ராஜருக்கு சக்கரவர்த்தி ஆமத்பாக்ஷா எழுதுவது:—

நீர் வீணில் சண்டையிட்டு உமது ஜனங்களைக் கொல்வதில் பயனில்லை. இதோ உமக்குக் கொண்டுவரும் பரிசுகளை அங்கீகரித்து, உமது பெண்ணாகிய லலிதையை எமக்குக் கல்யாணம் செய்து கொடுத்துவிடும். சண்டையிடாதீர். சம்மதமென்று தெரிவித்தால், இந்தப் பெருஞ் சேனையே உமது பெண் லலிதையை என் நாட்டிற்கு அழைத்துப்போகத் துணை வலியாகும். உமக்கு உண்டான நஷ்டத்துக்கெல்லாம் பிரதியாக வேண்டிய பொருள் கொடுக்கிறோம். இரத்த மழை பொழிவதில் பயனில்லை. யோசனை செய்து இணங்குவீர் என்று எண்ணுகிறேன். இல்லையேல் உம்மையும் உமது சேனைகளையும் கத்திக்கிரை யாக்குவேன்—" என்று எழுதியிருந்தது.

இதைப் படித்தபின் அரசன் "க்ஷேமமாய் தூதர்களை வெளியே அனுப்புங்கள்" என்று உத்தரவு கொடுத்தான். தூதர்கள் திரும்பி வந்து சேர்ந்தவுடன், சிறிது நேரத்துக்கெல்லாம் ஓர் அம்பு, சுல்தான் ஆமத் சக்கரவர்த்தி உட்கார்ந்திருந்த அம்பாரியின் கலசத்தின் மேல் 'பட்' டென்று பட்டுக் கீழே விழுந்தது. மஹமதிய சேனை ஆர்த்தது. சோதனை செய்ததில் அவ்வம்பு கூரற்ற அம்பென்று தெரிந்ததும் தவிர, அதனடியில் ஒரு சுருள் ஓலையும் இருந்தது. அச்சுருளைப் பிரித்து சுல்தானுக்குக் காட்டினார்கள். அதில் "புத்தியில்லாச் சக்கரவர்த்தியே! உன் அம்பாரியின் கலசத்தைக் குறிவைத்தடித்த வீரன், இஷ்டப்பட்டால் உன் தலைக்கே குறிவைத்து உன் மூளையைக் கீழே நிலத்தின்மேல் எளிதில் சிதறியிருப்பானல்லவா? இதைத் தெரிந்துகொள்ள இல்லை! மரியாதையுடன் திரும்பிப்போ! மிலேச்சனாகிய நீயா பிரதாபசிங்க ராஜன் புத்திரியை மணம் செய்துகொள்ள யோக்கியதை உடையவன். வேண்டுமானால் புறங்கொடுத்து உன் ஊருக்குத் திரும்பிப்போ. இல்லையேல், எங்கள் கத்திக்கு இரையாவாய். உன் இஷ்டப்படி செய். இதோ உன் பரிசுகள் எல்லாம் விழுகின்றன பார்.—"

ஆமத்பாக்ஷா அனுப்பிய பரிசுகளை எல்லாம் ஒரே மூட்டையாய்க் கட்டி மதிலுக்குமேலே வீசியெறிந்தனர். அது சக்கரவர்த்தியின்முன் புழுதியில் விழுந்தது. மஹமதிய சைன்யம் "தீன்! தீன்!" என்று ஆர்த்தனர். "ஹர! ஹர! மஹாதேவ!" என்ற சப்தம் கோட்டைக்குள்ளிருந்து கேட்டது. அடுத்த நிமிஷத்தில் நாகப்பாம்புகள்போல் சீறிக்கொண்டு நாலாபக்கமும் கூறிய அம்புகள் பறந்தன. மதிலண்டை நிற்பது இனி புத்தியீனம் என்று துருக்க சேனைகள் பின்னடைந்தன. பின்னடைந்த சேனைகளை ஒழுங்குபடுத்தி, அம்பு விழும் தூரத்துக்கப்பால் கொண்டுபோய் நிறுத்தினான் சுல்தான் ஆமத்.

முதல் தடவையிலேயே முகுந்தனுடைய அம்புகளின் சிறப்பு விளங்கிற்று. குதிரைகளையும் மனிதர்களையும் மட்டுமின்றி, யானைகளையும் கலசங்களையும் துளைத்துச் சென்றதென்றால் அந்த அம்புகளின் மேன்மையைப் பார்த்துக்கொள்ளவேண்டியது தானே.

பின்சென்ற சேனை, ஓர் அகழ் வெட்டிக் கொண்டு மரங்களையும் சுவர்களையும் முன்னிறுத்தி அவற்றிற்குப் பின்னால் க்ஷேமமாய்த் தங்கியிருந்தது. கோட்டையில் இருப்பவரை திடீரென்று எதிர்ப்பது சாத்தியமான காரியமா? தக்க சமயத்தை எதிர்பார்த்து இரண்டு சேனைகளும் தத்தமிடங்களில் தங்கின.

நான்காம் அத்தியாயம்

மஹா ஸபை

ஆகவே சுல்தான் ஆமத் துர்க்கத்தை முற்றுகை யிட்டான். முற்றுகைபோடுவது இலேசான காரியம் அன்று. முற்றுகை போடும் சேனைக்கும் அடைப்புண்டசேனைக்கும்—இரு திறத்தாருக்கும் கஷ்டமே. முற்றுகை போடுவோர் தங்களுக்கு வேண்டிய பொருள்களை வெகு தூரத்திலிருந்து அடையவேண்டும்.

உள்ளிருப்பவர்களுக்கு யாதொரு உதவியும் கிடைக்காமல் காத்துக்கொள்ள வேண்டும். அடைபட்டவர்களுக்கோ இன்னும் அதிகத் துன்பம். உள்ளிருக்கும் உணவுப் பொருள்களும் ஜலாதாரமும் குறைந்துகொண்டே வருவதற்குள் முற்றுகையை விடுவிக்கவேண்டும். ஆனதுபற்றி இரண்டு சேனைகளும் வெளிப்படையாய் யுத்தம் செய்ய சமயம் பார்த்துக் கொண்டேயிருந்தன. இராஜபுத்திரர் வெளியே புறப்படாததைக்கண்ட ஆமத், சிலநாளைக்கெல்லாம் ஒரு பாகத்தையனுப்பி ஜயசிங்கனைத் தோற்கடித்து ஜயபாலருடைய சேனையை ஜோதிபுரிக்கு முடுக்கி கணவாய்களில் காவல் வைத்து இனி ஒருவரும் உதயபுரியின்பால் படையெடுத்து வாராமல் பத்திரப்படுத்திக் கொண்டான்.

பின்பு அஹோர துர்க்கத்தினுள் நுழைய எத்னம் செய்து நூலேணிகளைக்கொண்டு மதில் மீதேறி உள்ளிருப்பவரோடு சண்டைச் செய்ய எத்தனித்தனர். பாக்ஷாவின் காலாள்கள் ஏணி வைத்து ஏற ஆரம்பிக்கும்போதெல்லாம் மதிலின் சாளரங்களின் வழியாய் வலுவான மூங்கில்களை விட்டு ஏணிகளையும் ஏறுவோரையும் கீழே உருட்டித் தள்ளிவிட்டனர். மறுபடியும் மறுபடியும் நெருங்கி வந்து, தொந்தரவு செய்யாதபடி சேனை நெருங்கும் போதெல்லாம் பாறைக்கற்களை மதில் மீதிருந்து உருட்டித் தள்ளினர்கள். அம்புகள் எய்தது கணக்கில்லை. யந்திரங்களின் உதவியால் நெருப்பு உமிழும் சில வஸ்துக்களையும், விஷக்காற்றை உண்டாக்கும் சில வஸ்துக்களையும் எதிரிகளின் பேரில் தாராளமாய்ப் பிரயோகித்தனர். இவற்றையெல்லாம் சிறிதும் லக்ஷியம் செய்யாமலே மஹமதியப் போர்விரர்களும் வீரத்துடனும் தைரியத்துடனும் போராடினர்கள். கடைசியாக ஆமத்பாக்ஷா வீணில் மனிதர்களை மடிப்பதில் பயனில்லையென்றுகண்டு "இராஜபுத்திரர்களுக்கு உணவு முடிந்து பஞ்சம் நேரும் வரையில் முற்றுகை போடுவேன்" என்று விரதம் பூண்டான்.

'கட்டிக்கொடுத்த சோறும் சொல்லிக்கொடுத்த வார்த்தையும்' என்றபடி சேர்த்துவைத்த உணவுப் பொருள் எத்தனை நாளைக்கு உதவும்? இரண்டொரு தடவை இராஜபுத்திரர் ஒவ்வொருவாயிலிலும் வெளியேவந்து துருக்கப் படையுடன் சண்டைசெய்து அவர்களைத் தோற்கடித்து முடுக்கிவிட எண்ணங்கொண்டு புறப்பட்டனர். சண்டை ஒவ்வொரு சமயத்திலும் பலமாய் நடந்ததேயன்றி ஜயமோ அபஜயமோ நிச்சயமாகவில்லை. ஓய்ந்துபோய்க் கடைசியில் கோட்டையுள் புகுந்தனர். இவ்வாறாக இருதிறத்தாரும் தத்தம் வலிமையைச் சோதனை செய்த பின்னர், இராஜபுத்திரர்களுக்கு வழியொன்றும் தோன்றவில்லை. முற்றுகை போடும் சேனைகளின் தொந்திரவும் அதிகமாயிற்று.

இவற்றையெல்லாம் பார்த்துச் சகியாத பிரதாபசிங்கராஜன் ஒருநாள் தன் மந்திரி சுமதியை அழைத்து "மந்திரீ, இனி காப்பது வீண். இராஜபுதனத்தைக் காக்கவும், ஆரிய நாட்டை மேன்மைப் படுத்தவும், இராஜ ராஜேசுவரி நமது ஸ்திரீகளையும் நம்மையும் பலியாக எதிர்பார்க்கிறுள். பராசக்தியின் விருப்பத்திற்கு மாறாக நாம் வீண் பிரயத்தனம் செய்வதில் பயனில்லை. உணவுப்பொருள்கள் குறைந்துவிட்டன. இனி அடைபட்டு பஞ்சத்தில் வாடி, ஒருவன் தன் பக்கத்தில் நிற்பவனை அடித்துத் தின்னலாமா என்று எண்ணும்படியான மிருகத்தன்மை மனிதனுக்கு வரும்வரையில் ஜனங்களை அடையப்போடுவது தப்பு. உள்ள தன்மையை உள்ளபடி என்னிடத்தில் வந்து சொல்ல உத்தியோகஸ்தர்களும் பயப்படுகின்றனர். இவற்றை உத்தேசித்து துருக்கருக்குக் கீழ்ப்படிந்து விடலாமோ என்ருல் நம்மருமை லலிதையை——" மேலே சொல்லமாட்டாமல் துக்கம் நெஞ்சை அடைத்துக் கொண்டது. சுமதி கண்ணீர்விட்டு சும்மாவிருந்தான். நொடியில் தேற்றிக்கொண்ட பிரதாபசிங்க ராஜன் "சுமதியாரே, மிலேச்சனுடன் சம்பந்தம் செய்வதென்னவோ முடியாத காரியம். என்னருமை லலிதையை, நானே வளர்த்த அக்னி குண்டத்தில் வீழ்த்துவதானாலும், அது செய்வேனே ஒழிய அவளை மிலேச்சனுக்கு தானம் செய்துகொடேன்.

"இனி ஆலோசிப்பதில் பயனில்லை. நம்மால் கூடியவரையில் எதிர்த்துப் பார்த்தோம். பிரயோசனப்படவில்லை. நாளையதினம் மஹாசபையைக் கூடடுவீராக!" என்ருன்.

சுமதி அப்படியே சாய்ந்துவிட்டான். அவனுக்கு மஹாசபை கூட்டுவதற்கு சமயம்

வந்து விட்டதென்று தெரிந்தாலும் அவ்வெண்ணத்தை அரசனும் வெளியிடக் கேட்கச் சகிக்க முடியவில்லை.

அரசன் "சுமதியாரே! என்ன பைத்தியக்காரத்தனமாய் இருக்கிறது. ஜாதஸ்யஹி துருவோ மிருத்யு: (பிறந்தபோதே இறப்பு நிச்சயம்) வேறொரு வழியும் இல்லை. கூட்டும் ஐயா மஹா சபையை நாளைய தினம்" என்று சொல்லி அந்தப்புரம் சென்றான்.

சுமதி தெளிந்தெழுந்து, "ஈசா! மஹா சபையைக் கூட்டவேண்டிய ஸ்திதிக்கு வந்துவிட்டதே நமது அரசன் வாழ்வு' என்று ஏங்கி, மற்ற உத்தியோகஸ்தர்களுடனும் சேனைத்தலைவர்களுடனும் ஆலோசனை செய்து மறுநாட் காலையில் மஹாசபை கூடுமென்று பரசுறைவித்தான்.

மஹாசபை கூடுவது இன்ன காரியத்துக்குத்தான் என்று ஒவ்வொரு இரஜபுத்திரனுக்கும், இரஜபுத்திரிக்கும் நன்றாய்த் தெரியும். மறுநாட்காலை ஐந்து நாழிகைக்குப் பிரதான மண்டபத்துக்கு முன்னர், வெளியிடத்தில் மஹாசபை கூடிற்று. வெளுத்த முகமும் ஒளியற்ற கண்களையும் உடைய இராஜ ஸ்திரீகள் கல்யாண வீட்டிற்கு வருவதுபோல், அலங்கரித்துக்கொண்டு வந்தனர். புருஷர்கள் எல்லோரும் ஒரு புறமும், ஸ்திரீகள் எல்லோரும் ஒரு புறமும் வந்து கூடினர். சற்று நேரத்தில் அரசனும் அரசியும் லலிதையும் வந்தனர். அரசனுக்கு சிம்மாஸனமாவது, வேறு உயர்ந்த இடமாவது கிடையாது. எல்லா வீரர்களையும்போல் தானும் நின்றான். இராணியும் அப்படியே. தலைமுறை தலைமுறையாய் வந்துகொண்டிருக்கும் இராஜசின்னமான குடையை மட்டும் அரசன் தலைக்குமேல் ஒருவன் பிடித்து நிற்கின்றான்.

அரசனுடைய முகத்தில் விசனமென்பது சற்றேனும் இல்லை. ராணியும் புன்சிரிப்புடன் மற்ற ஸ்திரீகளோடு வார்த்தையாடுகிறாள். ஆயினும் விசாரமென்றும் கவலையென்றும் சொல்லும் பேய்கள் அவள் தேகத்தை முற்றிலும் தின்றுவிட்டன. லலிதையோ உடல் வாடி, முகம் கன்றி, கண்குழிந்து, உயிரற்ற பாவைபோல் தோன்றினாள்.

அரசனும் அரசியும் வந்து கூடியதும், அரசன் கீழே உட்கார, அவனைப்போலவே அனைவரும் புழுதியில் உட்கார்ந்தனர். பின்பு அரசன் ஒருமுறை சுற்றிப்பார்க்கவே சபை நிச்சப்தமாய் இருந்தது. குழந்தைகள்கூட அழவில்லை. அரசன் மணியடித்ததுபோல் கம்பீரமான இனிய தொனியுடன், "என் அருமைப் பிரஜைகளே! இரஜபுத்திர மஹா சபை கூட்டும் காரணத்தை நீங்கள் அனைவரும் அறிவீர். யான் எடுத்துச் சொல்லவேண்டிய விஷயம் வேறு ஒன்றுமில்லை. ஆயினும் நமது நிலைமையை உங்களுக்கு விவரமாய்த் தெரியப்படுத்தவேண்டியது என் கடமையே யாதலால் யான் உங்களுக்குத் தெரிவிக்கின்றேன். நமது பின்படா வலிய சேனை எத்தனையோ வழிகளில் பாவிகளான எதிரிகளை மடக்கித் தோறகடிக்க முயன்றும் பயன்படவில்லை. இனி நாம் முற்றுகைக்கு உடன்பட் டிருப்பதும் கூடாத காரியம். ஏனெனில் நமது உணவுப் பொருள்கள் விரைவில் குறைந்து வருகின்றன. நாம் பஞ்சமேலிட்டு வலியிழந்து, எதிர்க்கச் சக்தியில்லாதிருக்கும்போது எதிரிகள் நம்மை ஜயித்துக் கோட்டைக்குள் நுழைந்துவிட்டால் நமது கதியும், நமது ஸ்திரீகள் குழந்தைகள் இவர்களின் கதியும் என்னவாகுமென்பதை நீங்களே யோசித்துக்கொள்ளுங்கள். ஆகையால் உண்மை சமாசாரத்தை உங்கள்முன் தெரிவித்து உங்கள் அபிப்பிராயப்படி நடந்துகொள்ளுவதற்காகவே மஹாசபை கூட்டினேன். உங்கள் அபிப்பிராயத்தை தயவு செய்து தெரிவியுங்கள்" என்று உட்கார்ந்தான்.

உடனே "ஹர! ஹர! மஹா தேவா!" என்ற சப்தம் காதைப் பிளந்தது. திக்குகள் செவிடடைந்தன. வெளியே துருக்கசேனை திகைத்து பிரமையடைந்தது. மேன்மேலும் ஆர்த்தனர். எல்லா வீரரும் ஒருங்கே "வழக்கப்படி நடப்போம்; வழக்கப்படி நடப்போம்" என்றுரைத்தனர்.

அரசன் எழவே, மறுபடி சபையில் மௌனம். "சுத்தவீரர்களான உமது அபிப்பிராயத்தை நான் அறிந்து கொண்டேன். எனது தாய்மார்களான இரஜபுத்திரிகளின் அபிப்பிராயத்தையும் அறிய விரும்புகிறேன்" என, இரஜபுத்திரிகளெல்லோரும் "ஹர, ஹர! மஹாதேவ!! என்று கூச்சலிட்டனர். வயது முதிர்ந்த ஒரு மாது சிரோன்மணி "எங்கள்

அபிப்பிராயத்தைக் கேட்கவேண்டிய அவசியமும் உளதோ? என்றேனும், இரஜபுதனத்தில் ஸ்திரீகள் புருஷன் உத்தரவையும் அரசன் உத்தரவையும் நிராகரித்ததுண்டா? நாளையதினமே பெருந்தழல் மூட்டி யாமெல்லோரும் தத்தமது நாயகன் கரத்தைக் கல்யாண காலத்தில் பிடித்துக்கொள்ள எத்துணை சந்தோஷத்தோடு முன் வந்தோமோ அத்துணை சந்தோஷத்துடன், சீதாதேவி முன்னாள் அக்கினியில் பிரவேசித்தவாறு, அக்கினி பகவானைச் சரணமடைந்து, எங்கள் ஆடவர்களை வீரசுவர்க்கத்தில் எதிர்கொள்ளத் தயாராய் இருக்கிறோம். நீர் யோசனை செய்யவேண்டியதில்லை. எங்கள் மனவுறுதிக்குச் சாக்ஷியாக இதோ எமது ஹிருதயத்தின்மீது கைவைத்து எல்லோரும் ஈசனைப் பிரார்த்திக்கின்றோம்" என்றாள்.

உடனே ஆண்பெண் அனைவரும் எழுந்து நின்று கைலாச நாதனையும் வைகுண்ட வாசியையும் மனதாறத் தொழுதனர். உடனே பெண்டிர் கூட்டத்திலிருந்து ஒரு பெண்மணி முன்வந்து "அரசே! ஒரு விண்ணப்பம். நாங்கள் அனைவரும் நாளைகாலையில் சுவர்க்கம் புகுவோம். எங்களில் ஒருத்தியான லலிதா தேவியைக் காப்பாற்றவேண்டும். எனது முன்னே நிற்கும் வீரசிங்கங்களான இரஜபுத்திரரில் சிலர் அத்தொழிலை மேற்கொண்டு பூர்த்தி செய்யவேண்டும். அவள் ஒருவளிடத்தில், பெண்கள் பெறத்தக்க குணமனைத்தும் குடிகொண்டிருக்கின்றன. அவளை மீட்பின் எங்கள் அனைவரையும் மீட்டது போலாகும். என் சகோதரர்களான இரஜபுத்திர வீரர்களில் ஒருவராவது முன்வரவில்லை. புருஷர்களும் எங்களைப்போல் பேடித்தன்மையை அடைந்தனரோ?" என ஒருவன் முன்வந்து "அரசே! நாளை உதயத்துக்குள் இராஜகுமாரியாகிய லலிதையை பத்து நாழிகை வழிக்கு அப்பால் கொண்டுபோய்ப் பத்திரப் படுத்துகிறேன்" என்றான்.

அவனது வீரத்தன்மையை நோக்கி அனைவரும் ஆச்சர்யமடைந்தனர். இராணி மூர்ச்சையடைந்தாள். அரசன் ஒன்றும் பதில் உரைக்கவில்லை.

ஒரு நொடிப் பொழுதுக்கெல்லாம் பிரமை தெளிந்து இரஜபுத்திர வீரர்—"நரேந்திரா! நரேந்திரா! முகுந்தன் மகனே! உன் வீரத்தனத்துக்கு எதுதான் அசாத்தியமான காரியம். லலிதையைக் காப்பாற்றினால் இராஜகுலத்தைக் காப்பாற்றினவனாவாய். அரசன் குலம் லலிதையாலேயே அல்லவா அபிவிருத்தியடையவேண்டியது! நன்று! நன்று!" என்று அவ்வீரனைக் கொண்டாடினார்கள். இராணியை எடுத்து சைத்தியோபசாரம் செய்கின்றவர்களுடன், லலிதை அவ்விடத்தைவிட்டுப் போய் விட்டாள். அரசன் நரேந்திரனை நோக்கி, "அப்பா நரேந்திரா! எனது சகோதரிகளான இரஜபுத்திரிகள் விரும்பியபடி செய்ய எனக்கும் இஷ்டமே. நீ க்ஷத்திரிய தர்மத்தை முற்றிலும் அநுசரித்தாய். என் அருமை லலிதை தன் பந்துக்களுடன் அக்னிப்பிரவேசம் செய்ய மேற்கொண்டால் அதை நான் தடுக்க இயலாது. அவள் இஷ்டப்படி செய்யட்டும்——" என,

இரஜபுத்திரர் "அரசகுலத்தின் அழிவை நாங்கள் சகியோம்—சகியோம்—" என்று ஓலமிட்டுக் கதறினார்கள்.

அரசன் "ஏதோ பார்ப்போம். இந்நிலையில்லா உலகில், இன்னும் ஒரு நாள் வாழ்விருக்கின்றது நமக்கு. இனி நடக்கவேண்டிய வேலைக்கு எத்தனம் செய்வீர்களாக" யென்று ஸபை கலைய உத்திரவுகொடுத்தான்.

பஞ்சரத்தினம்

(துரைத்தனத்தார் அங்கீகரித்தது.)

மரகதவல்லி என்னும் உயர்தர நாவலின் ஆசிரியரான ஸ்ரீமான் ப. சி. கோவிந்தஸாமி ராஜா அவர்கள் எழுதியது. மணாளனைத் தவிர மற்றொருவரை மனத்திலும் நாடாத ருக்மிணி, நமனிடமிருந்து நாயகன் உயிரை மீட்டுவந்த சாவித்திரி, காதகர் கையிற் சிக்கிக் கஷ்டப்பட்ட காலத்தும் கற்பைக் காத்துவந்த ஸீதை, தந்தை வீட்டில் எல்லாச் சம்பத்திருந்தும் காதலன் பிரிந்த துக்கத்தால் தரையே படுக்கையாகவும், கந்தையே ஆடையாகவுமெண்ணிக் காலங் கழித்து வந்த தமயந்தி, கள்ளமென்பதை எள்ளளவும் உணராத தன்னைக்கூடிப்பிரிந்து ஆண்டுகளாயும் கணவன் வருமளவும் காத்திருப்பதே கடனெனக்கொண்ட சகுந்தலை முதலிய ஐந்து புண்ணியவதிகளின் சரிதங்கள் கொண்டது. புதிய பதிப்பு. ஐந்து அழகிய ஆப்டோன் படங்களுடன் விலை அணா. 12.

நமது சிறு கதை
OUR SHORT STORY
அபுஹாஸன் அல்லது விச்வாஸத்தின் அவச்யம்

ஒரு பெருங்காடு. இரவில் ஏகோபித்துச் செய்யும் நரிக்குழாங்களின் ஊளையீட்டின் சப்தமும், ஓநாய்களின் பயங்கரமான குரலோசையும், ஆந்தை கோட்டான்களின் கூக்குரலுமன்றி வேறெவ்வித அரவமும் அங்கில்லை. எத்திக்குநோக்கினும், வானறவோங்கி, வளம்பெற வளர்ந்து பரிதியின் கிரணங்கூட உட்புகாதபடி தழைத்துக் கவிந்த பலவகை விருக்ஷஜாலங்களும், அவைகளின் அடியில் விரிந்து படர்ந்திருக்கும் முட்புதர்களுமே மலிந்து கிடக்கும். இடை இடையே, ஆகாயத்தையளாவி அதனுடன் கலப்பதே போன்று, உயர்ந்து விளங்கும் மலைத்தொடர்களும், சிறுசிறு குன்றுகளும் அவைகளின் இயற்கையின் சலனத்தினாலேயே அமைந்துள்ள குகைகளும் காணப்படும். வேறு சிற்சில இடங்களில் வழிப்பட்ட பொருளனையவையும் வாரியடித்து வரையறுத்தோடும் பயங்கரமான அழகுபூண்ட மலையருவிகள் அக்காட்டின் இயற்கையழகை யதிகரிக்கும்.

மத்தியான காலத்தில்கூட, காற்றில் மந்தமாயசைந்தாடும் மரக்கிளைகளினோசையும், வெகு உற்சாகமாய்த் தம்மினத்தோடு சேர்ந்து இன்னிசை பாடும் பறவைகளின் மதுரமான குரலோசையுமன்றி வேறு சப்தமென்பதே கிடையாது. என்றால், மனித ஸஞ்சாரமென்பதேயில்லையென்பது சொல்லாமலே புலப்படும்.

ஆயினும் சற்று கவனித்து நோக்கினல், ஒரு விஸ்தாரமான சால விருக்ஷத்தினடியிலுள்ள விசாலமான ஓர் குகையில் விசேஷமான பொருள் சில காணலாம். சீதோஷ்ணக் கொடுமைகளை விலக்குவதற்கான சில துணி மணிகளும், அந்நபானாதிகளுக்கு அவசியமான சிற்சில கலங்களும், செடி கொடிகள் வெட்டுவதற்கான இரண்டொரு ஆயுதங்களுமே முக்கியமாக அக்குகையிற் கிடப்பவை. மனிதனன்றி இவை இக்காட்டிடை வருவது இயலாததாகவே, இக்குகையில் யாரோ வசிக்கவோ வசித்திருக்கவோ வேண்டுமென்று ஊஹிப்பது கஷ்டமல்ல.

நிர்ஜனமான அக்காட்டில், பிறர் ஸகாயத்தை ஒரு சிறிதும் வேண்டாது ஏகாந்தமாக வசித்துவந்தவன் அபுஹாஸன் என்றவோர் இஸ்லாமி குரு. 'மனிதன்' என்றால் ஹாஸனுக்கு 'விஷம்'. மனிதர்கள் கண்ணிலேயே தென்படாமலும், அந்த நன்றிகெட்ட பாதகர்களைப் பாராமலும் மறந்தும் நாட்களைக் கழிப்பதில் அவனுக்கு நிரம்பத் திருப்தி. அதையுத்தேசித்துத்தான் அவன் நாட்டைத் துறந்து இக்காட்டை நண்ணியதும்.

ஆம். வாஸ்தவமே. மனித வர்க்கத்தையே வேரோடு வெறுத்தொழிக்கும்படி அபுஹாஸனுக்குத் தோன்றிய தென்னே?'' என்று உங்களுக்கு ஸந்தேகமுண்டாவது இயல்புதான். அதைப் பரிகரியாமல். மேலே சென்றால், உங்களுக்குக் கோபமுண்டாகி, கதையை வாசியாமல் நிறுத்திவிட்டால் என் கதி என்னவாகும்? பொறுங்கள்; முதலில் அதை விஸ்தரித்துவிடுகிறேன்.

அபுஹாஸனுக்கு வயது 12 நிரம்புவதற்கு முன்னமேயே பெற்றோர் பரகதி யடைந்தனர். ஏராளமான பொருள் தேடி வைத்திருந்தபடியால், பெற்றோரை யிழந்த கவலையைத் தவிர வேறு துக்கம் அநுபவியாமல்வளர்ந்தான். ஸ்வபாவத்திலேயே இளகிய மனதினன். ஈ எறும்பு முதல் துன்பப்பட்டால் கண்ணீர் விட்டுக் கதறுவான். ஸகல பிராணிகளிடமும் அவனுக்கு 'அன்பெனுமாறு கரையது புரண்டோடும்'. தன்னுயிர்போல் பிறவுயிரையும் கருதவேண்டுமென்று தான் கற்றதை வெறும் ஏட்டுச்சுரைக்கா யாக்கிவிடாமல், அநுபவத்தில் அநுஸரிக்க முயன்றான். 'தேகி' என்றவர்க்கு 'நாஸ்தி'என்பது கிடையாது. பணம் பெரிதன்று; மனிதரிடம் பிரியமும், அமைதியும் ஸந்தோஷமும் நிறைந்த மனமே பெரும் பாக்கியம் என்று அவன் அடிக்கடி சொல்வதுண்டு.

இவ்விதக் கொள்கைகளைப் பின்பற்ற அளவற்ற ஆசைகொண்ட பேதைக்கு இவன் பணத்தின்மேல் கண்ணுள்ள அநேக உயிர் நண்பர்கள் ஏற்படுவது ஆச்சரியமா? இடைவிடாது இவனைச் சூழ்ந்து, அவனுடைய உதாரத்வத்தையும், அவன் ஸ்நேகத்தால் தங்களுக்குண்டாகும் எல்லையற்ற ஆனந்தத்தையும் பற்றிப் பொழிந்துகொண்டே யிருப்பார்கள். ஹாஸனோ கள்ளங்கவடு சிறிதுமில்லா நெஞ்சி

னன். கருத்ததெல்லாம்நீர், வெளுத்ததெல்லாம் பால் எனக் கருதும் நேர்மையான். தன்னைப் போலவேதான் பிறருமிருப்பார்கள் என்பது அவன் எண்ணம். பாபம்! அவன் என்ன செய்வான். செல்வத்திலேயே பிறந்து செல்வத்திலேயே வளர்ந்தவன். கஷ்ட நிஷ்டூரங்களுக்குட்பட்டவனுக் கல்லவா மனிதரின் தீக்குணமும் தீச்செயலும் தெரிந்திருக்க விடமுண்டு.

என்றும் விசேஷ சக்தியில்லாத தன்னிடம் நட்பு பூண்டது, தன் உயிர் நண்பர்களின் பெருங் குணத்தின் குறியாகத் தோன்றிற்று ஹாஸனுக்கு. அவர்களைக் குண நிதிகளெனவும், துர்க்குணமென்ற துறையிலேயே குடியிருந்து மறியாதவர்களெனவும் மதித்து வந்தான். ஆனால், அந்நண்பர்களும் ஹாஸனிடம் நிரம்பப் பிரியத்துட னிருந்தார்களெனத்தான் நினைக்கவேண்டி யிருக்கிறது. ஏனெனில், தன் நண்பர்கள் ஸந்தோஷிப்பதற்கென்று ஹாஸன் செய்யும் வேடிக்கையோ, விருந்தோ, ஸங்கீதக் கச்சேரிகளோ, ஏதாயினும் ஸரி, வருவதற்கு ஒருவித ஆக்ஷேபனையும் ஒருவராவது சொன்னது கிடையாது. இதைவிட நட்பிற்கு என்ன அடையாளம் வேண்டு மென்கிறீர்கள்?

இவ்விதம் பல துறையிலும் பணச் செலவு செய்துவரவே, பிதிரார்ஜிதமான பொருளனைத்தும் விரயமாய்விட்டது. அப்பொழுதும் முன்போல் ஏழை எளியவர்க்கும், தன்னை யண்டினவர்க்கும் இயன்ற உபகாரம் செய்யமுடியாமைபற்றியேதான் ஹாஸனுக்குத் துக்கமெல்லாம். உலக அநுபவம் சிறிது மில்லாதவனாகவே, தன் செல்வம் முழுவதையும் செலவிட்டுத் தான் ஆதரித்த நண்பர்கள், ஸமயம் நேருமிடத்து, அவ்வண்ணமே தன்னையும் ஆதரிப்பார்கள் என்று திடமாக நம்பியிருந்தான்.

சிறிது காலஞ்சென்றது. கையிலிருந்த பொருள் முற்றிலு மொழிந்தது. சுற்றியிருந்த தொட்டாற் சுருங்கிக் கூட்டமும் போனவிடந் தெரியாமற் பதுங்கிவிட்டனர். கையிற் காசென்பதே இல்லாது போகவும், தன் பழைய நண்பர்களை யடுத்து, தனக்கு உதவி புரியும்படி வேண்டினன். ஹாஸனுக்குண்டாய ஆச்சர்யத்தை வரையறுக்க இயலாது. அவனைக் கண்ட நேரம் ஒளித்துக் கொள்வோரும், கண்டும் காணாதது போல முகந் திருப்பி நடிப்போரும், 'இன்று, நாளை' என்று 'சாக்குப் போக்கு'ச் சொல்வோருமாக விருந்தார்களே யொழிய, உதவியென்பது ஒருவர் பாலும் தென்படவில்லை. அடுத்தடுத்துக் கேட்கவே, ஹாஸன்மீது சிறிது பரிதாபம் வைத்தவர்களும் கோபிக்க வாரம்பித்தார்கள். அன்பு என்பதன்றி, பரிதாபமட்டுமிருந்தால் அது எவ்வளவு நாள் தங்கப்போகிறது? வரவரப் பரிஹாஸத்திற்கும், கொடுஞ் சொல்லுக்கும் ஆரம்பித்துவிட்டனர்.

இதைப் பார்த்த ஹாஸனுக்கு உலகத்தைப் பற்றி அவன் கொண்டிருந்த நல்லபிப்பிராயம் முற்றிலும் மாறத் தலைப்பட்டது. தான் நினைத்தவண்ணம் நற்குணங்கள் பொருந்தினவன் ஒருவனாவது இல்லையென்று தீர்மானித்தான். தீயகுணமென்பதே இன்னதென அறியாதிருந்த அவனுக்கு இப்பொழுது மனிதரிடம் பெரும்பான்மையும் கெட்ட குணங்களே குடிகொண்டிருப்பதாகத் தோன்றிற்று. எப்பக்கம் திரும்பினாலும், நன்றிகொல்வோனும், அடுத்துக் கெடுப்போனும், ஸ்வயநலப் பிண்டமுமாகவே கண்டான். வரவர இத்தகைய தீக்குணங்கள் நிறைந்த மனிதர்களின் ஸகவாஸமே கூடாதெனத் தீர்மானித்தான். நன்றி மறக்குங்கடையராய நரப்பூண்டை முற்றிலும் வெறுத்தான். அவர்கள் மத்தியில் நாடுநகரங்களில் வாழ்வது கூடப் பெரும் பாதகமாகத் தோன்றியது அவனுக்கு. அதைவிடக் கரடி கடும்புலி வாழும் கானக வாஸம் எவ்விதத்தினும் மேன்மையெனக் கொண்டான். இடும்பைகூர் ஒரு சாண் வயிற்றிற்கு காட்டில் யாதானும் உணவு கொண்டு தின்று மனித வர்க்கத்தையே அறத் துறந்து காட்டிலேயே காலங் கழிப்பதென்று ஸித்தாந்தஞ் செய்து, எஞ்சியிருந்த சில சாமான்களைமட்டும் எடுத்துக்கொண்டு, நகரத்தை விட்டு அருகாமையிலுள்ள வோர் பெருங் காட்டினூடே திரிந்தலைந்து, தனக்கேற்றதென வோர்ந்தவோர் குகையிற் சென்றடைந்து தன் காலத்தை நிம்மதியாகக் கழித்துவருகிறான். நண்பர்களே! அபுஹாஸனின் பூர்வாசிரம சரித்திரம் முடிந்துவிட்டது. விழித்துக்கொள்ளுங்கள்.

முதன்முதல் காட்டிற்குவந்து சிலநாள்வரை

குடி மதம் அடிபடத் தீரும். குடியனும் வெறியனும் சரி.

ஹாஸனுக்கிருந்த ஸங்கடங்களுக்கும் திகிலுக்கும் அளவேயில்லை. ஸாயந்திரமாய்விட்டால் அவனை வெளியே காணமுடியாது. ஸூர்யோதயமானபின்தான் வெளிவருவான். காதில் விழும் ஒவ்வொரு சப்தமும், தன் குகையின் வாயிலில் உண்டானதாகப் பிராந்தியடைவான். இரவு நிழலில், இயற்கையைவிடப் பதின்மடங்கு பருமனாகக் காட்டிய மரக்கிளைகளெல்லாம் பிசாசங்களாகத் தோன்றி, பீதியை விளைக்கும். ஆயினும், கொஞ்சநாளில் பயமென்பது மருந்திற்குமில்லாமல் அகன்றது. உயிரில் ஆசை அதிகமாக அதிகமாகத்தானே மனிதனுக்குப் பயமெல்லாம். உயிரைத் துரும்பென வொருவன் வெறுத்துவிட்டால், பயமெதற்கு? போனால் உயிர்தானே போகும். என்ன நஷ்டம்? இங்நன்றியற்ற உலகத்தில் வாழ்வதிலும் இறப்பதே மேல். அடுத்தடுத்தெழுந்த இவ்வித எண்ணங்களாலும் நெடுநாளைய வழக்கத்தாலும், அபுஹாஸனுக்குத் தான் காட்டில் வஸிப்பது ஸகஜமாகவே யாகிவிட்டது.

தினந்தோறும் தனக்கு வேண்டிய மூலபலாதிகளை சிரமப்பட்டு சேகரித்துவந்து ஸரியான காலங்களில் அவற்றைப் புசிப்பான். மலையாறுகளிலிருந்து 'செத்தேன் பிழைத்தேன்' என்று பருகப் புனல் மொண்டுவருவான், மாரிகாலத்தில் மரக்கிளைகளைக் கொணர்ந்து ஒன்றோடொன்றுராய்ந்துத் தீயெழுவித்துக் குளிர் காய்ந்துகொள்வான். இங்ஙனம், தவமியற்றும் ஓர் யோகியின் வாழ்நாட்கள்போலவே சென்றன ஹாஸனின் வாழ்நாட்களும்.

மனித வர்க்கத்தின்மேல் எத்துணைதான் கோபமும் வெறுப்புமிருந்தாலும், ஹாஸனுக்குக் கடவுளிடமுள்ள பக்திமட்டும் எள்ளளவேனுங் குறைந்ததில்லை. தினமும், காலை மாலைகளில் முழந்தாளிட்டு தனக்கு அளித்திருக்கும் மனோபாக்கியத்திற்காக மனதார அல்லாவைத் தொழுவான்.

இவன் வஸித்துவந்த குகையின் பின்புறம், கன்னங்கரேலென்று தெளிந்து கண்ணாடிபோற் றுலங்கும் ஜலத்தால் நிறைந்த பெரிய ஏரி யொன்றிருந்தது. ஒழிவாயிருக்கும் சமயங்களில் அதன் கரையிலுட்கார்ந்து ஹாஸன் பலவித மனோராஜ்யம் செய்வதுண்டு. அங்ஙனமே ஒருநாள் வேலையெல்லாம் முடிந்ததும் ஏரியின் கரையை யடைந்து, பலமாளா யோசனையி லாழ்ந்தான். கரையிற் கிடந்த வோர் கருங்கல்லின் மீதுட்கார்ந்து, வலது கையால் முகவாய்க்கட்டையைத் தாங்கிச் சற்று ஆகாயத்தை நோக்கி மேலெடுத்த பார்வையாக அடியில்வருமாறு சிந்திக்கலானான். "என்னே கடவுளின் கருணையும், யோசனையுமிருந்தவாறு! மனித வாசனையே இல்லாது, இயற்கையிலேயே எத்துணை எழிலுடன் விளங்குகின்றது இப்பிரதேசம். என் முன்னுள்ள ஸமஜல ஏரிக்கும், குகையின் முன்புறமுள்ள மரகதம் வைத்திழைத்ததென விளங்கும் பசும்புல் மைதானத்திற்கும், கம்பீரமாக மேக மண்டலத்தை முட்டும் பர்வதத்திற்கும் எவ்வளவு பொருத்தமாக விருக்கிறது; தான் அழகாக விருப்பதோடு ஒவ்வொன்றும் மற்றவையின் அழகையுமல்லவா விருத்திசெய்கிறது. இப்பிரதேசத்தில் பரிந்தோடும் பெரும் அருவிகளின் கண்கொள்ளா அழகுக்கு எதுமேம்படும்? எழில் மாத்திரமேயோ? இவைகளால் உலகிற்கு விளையும் நன்மை எவ்வளவு? எவ்வளவு தேசங்களினூடு பாய்ந்து அவைகளைப் பொன் விளையும் பூமிகளாகச் செய்கின்றனவே இந்நதிகள்! இயற்கையமைப்பிலேயே ஒவ்வொரு வஸ்துவும் காலதேசபேதத்திற்கியைய அமைந்திருப்பது எவ்வளவு விந்தைக்கிடம்! இம்மட்டோ? கண்ணெடுத்து மேனோக்கி, ஸூர்ய சந்திர நக்ஷத்திராதி விநோதங்களைக் கவனித்தாலோ, என்ன அலங்காரம்! எத்துணை உபகாரம்! என்ன விசித்திரமான ஒழுங்கமைப்பு! இவையனையவையும் பார்த்தும் ஒருவன் இவைகளின் காரணபூதமான கருணைக்கடவுள் அல்லாவின் ஆற்றலை மறக்கப்போமோ? ஆனால் சிருஷ்டியின் பதாரகிய மனிதன் ஒருவனே கடவுளின் கருணையை வீணாக்குகிறான். அவன் ஒருவனே இயற்கை யமைப்பின் அழகைக் கெடுக்கிறான். அவன் ஒருவனே கற்றறிந்தும் கசடாகக் கழிபடுகிறான். எரிமலைகள், பூகம்பங்கள், வால் நக்ஷத்திரங்கள் முதலிய உத்பாதங்களுக்குக்கூட நன்மை பயக்கும் சக்தியிருக்கிறது. தீக்குணமும், தீயசிந்தையுமுள்ள மனிதன் ஒருவனே, எதற்காகச் சிருஷ்டிக்கப்பட்டான் என்பது விளங்கவில்லை. ஆகா! மற்றப்படி உலகமமைந்திருக்கும் நேர்மைக்கு, மனிதர்கள் மட்டும் தீய குணங்கள்

ஒரு சிறிதுமின்றி யிருப்பரேல், இவ்வுலகத்தில் வாழ்வதிலும் இன்பம் வேறென்ன விருக்கிறது! உலகமுழுதும் சாந்தமும், நேசமும், ஒற்றுமையுமே விளங்க, பொய் புரட்டென்பது பூமியிலில்லாது ஒழியுமானால், ஸத்யரூபியாகிய கடவுளின் கல்பனையான உலகமாகத் தெரியும். அவ்விதஞ் செய்வது அல்லாவிற்கு எம்மாத்திரம்? அதைவிட்டு ஏன் மனிதர்களை விச்வாஸ காதுகர்களாக சிருஷ்டித்தார்! என்னையேன் அப்பாழும் கூட்டத்தில் ஒருவனுகப் பிறப்பித்தார்? இவ்விதம் ஸந்தேகமும், விச்வாஸக்குறைவும் வந்து தாக்கி புத்தி கலங்கும்படி ஏன் திருவுளம் பற்றுகிறார்? நபிகளுக்குப் பூர்ண அருள் சுரந்த அல்லாவே! ஏழையிடம் தயவு வைத்து, இவ்வஞ்ஞானாந்தகாரத்தி விருந்து என்னைக் கரையேற்ற லாகாதா?" என்று நெஞ்சார கண்ணில் நீர் மல்க, உள்ளம் நெக்குருகப் பிரார்த்தித்தான்.

பிரார்த்தித்து வாய் மூடுமுன், அவனுக்கருகாமையில ஓர் கம்பீரமான உருவம் தென்பட்டது. திடீரென்று தூக்கிப்போட்டது ஹாஸனுக்கு. ஜாக்ரமா ஸ்வப்னமா, என்று கண்ணைத் துடைத்துக் கொண்டான். அதற்குள் அப்புதிய உருவமும் அருகணைய, அதைச் சற்று நிதானித்தான். தேவலக்ஷண மமைந்ததாய், முழங்கால் வரை நீண்டுருண்ட புஜங்களோடும், திரண்டகன்ற மார்போடும், பரந்தேறிய லலாடத்தோடும் சோபித்த அவ்வுருவம் அபுஹாஸனை வச்யப்படுத்திற்று. சற்று ஏறெடுத்துப் பார்த்தான். சந்திரமண்டலத்தைத் திரஸ்கரித்துப் பிரகாசித்த அம்முகத்தின் காந்தியையும், காதளவோடிக் கருணை பொழியும் விசாலமான அங்நயனங்களையும் அதுவரை அபுஹாஸன் கண்டதில்லை. வஸந்த ருதுவில் தென்றலோடு கூடிய நிலவெனக் குளிர்ந்த அத்தேவனது கடாக்ஷமோ வர்ணனைக்கு உட்படுவதன்று. இருந்தாலும், அத்தேவனது முகத்தில் சிறிது கோபமும் ஜ்வலித்துக் கொண்டிருந்தது. இவைபனையவையும் ஒரு நொடியில் பார்த்துக்கொண்ட ஹாஸனுக்குத் திக்பிரமையும், ஒரு விதமான பயமும், அடக்க வியலாத மனவெழுச்சியு முண்டாயின. அத்தேவனும் ஹாஸன் முன்னிலையில் வந்ததும், நன்றாக அவனை ஓர் முறை கூர்ந்து பார்த்துவிட்டுப் பின்வருமாறு பேச வாரம்பித்தனன்.

"அபுஹாஸன், இவ்வளவு நேரம் நீ எண்ணிய எண்ணங்களும், பட்ட ஸந்தேகங்களும் அல்லா அறிவார். உன்னுடைய தியாகத்தையும் இளகிய மனதையும், நீ அடைந்த துன்பங்களையும் முற்றுமறிந்த அல்லா மனமிரங்கி, உனக்கு ஆறுதல் செய்து உன் ஸந்தேகங்களைத் தீர்க்கும்படி என்னை யனுப்பியுள்ளார். நான் கடவுளின் சேவகர்களில் ஒருவன். என்னை 'விச்வாஸதத்தன்' என்று அழைப்பார்கள். எங்கே, உன் கையைக் கொடு. பயப்படாதே. என் கையைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டால் உனக்கு ஒரு தீங்கும் நேரிடாது. நல்ல பரிசுத்தமான ஹிருதயமுள்ளவரா யிருந்தும், நம்பிக்கைக் குறைவால் கடவுளின் நியமத்தைக் கூடக் குற்றங்கூறிக் கெட்டுப்போக விருப்பவர்களுக்குத் தோன்றி மறுபடியும் அவர்கள் மனதில் விச்வாஸமுண்டாக்கி அவர்களை ரக்ஷிப்பதற்கென்றே என்னை உண்டாக்கியிருக்கிறார்" என்று சொல்லிக்கொண்டே முன்னால் நடந்து ஹாஸன் கையைப்பிடித்து ஏரி ஜலத்தின் மேல் இட்டுப்போனான். ஸரியாக ஏரியின் மத்திவரை சென்றார்கள். மத்தியை யடைந்ததும் திடீரென்று ஜலத்தில் இருவரும் மூழ்கிவிட்டனர். அபுஹாஸனுக்கு "இதேதோ மோசடியாக விருக்கிறது" என்ற யோசனை தோன்றி மறையும் முன்னர், ஏரியினடியில் தென்பட்டவோர் பிலத்துவாரத்தின் வழியே தேவதூதன் இட்டுப் போவதை யுணர்ந்தான்.

என்னே ஆச்சர்யம்! கண்டவர் கண்கள் களிகொள்ளும் வண்ணம் ஸ்வபாவ அலங்காரத்துடன் விளங்கிய ஓர் விஸ்தாரமான நகரம் அபுஹாஸன் திருஷ்டிக்குக் கோசரமாயது. எங்கு பார்த்தாலும், தங்கு தடையின்றிச் செழித்துத் தழைத்த கனி விருக்ஷங்களும், அவைகளால் நெடுக நிழற்றப்பெற்ற விசாலமான ரஸ்தாக்களும் மிகுந்திருந்தன. நாற்புறமும் பயிர் பச்சைகளும் புல்லுமாகக் கண்ணிற்கு ரமணீயமாய்த் திகழ்ந்தது. வீணையின் ஒலிபோன்று 'ஜில் ஜில்' என்று சப்தித்தோடும் பல சிறு அருவிகள் இந்திரியங்களுக்கு மிகுந்த இன்பத்தை யூட்டின. மேலே நிமிர்ந்து நோக்கின், களங்கமற்றுப் பிரகாசிக்கும் இந்திர நீல விதானமும், அதனிடை எரியும் சூர்யனையும் காணலாம். சுருங்கச் சொல்லுமிடத்து, ஏரியின் வழியாக ஏதோ பாதாளவுல

கத்தை யடைந்ததாக வெண்ணிய ஹாஸனுக்குத் தான் விட்டுவந்த உலகத்தை முற்றிலும் ஒத்ததாக மற்றொரு உலகத்தைக் கண்டதும் அளவிறந்த ஆச்சர்யமுண்டானது வியப்பன்று.

அந்த புது நகரில் நானாவிதமான விசித்திரங்களை ஆவலுடன் அநுபவிக்கும் அபுஹாஸனை விளித்து, கூடவந்த தேவன் பேசவாரம்பித்தான். "ஹாஸன், நீ விட்டுவந்த உலகத்தைப் போலவே இங்கொன்றிருப்பது உனக்கு மிதமில்லாத ஆச்சரியத்தை விளைக்கிறதுபோலும். இன்னும் இவ்வுலகத்தைப்பற்றிய விபரமனைத்தும் நீ அறியின், உன் அதிசயம் இருமடங்காகும்; சொல்வதைக் கவனமாய்க் கேள். சற்றுமுன் ஏரிக்கரையில் உட்கார்ந்திருந்தபொழுது உனக்குண்டாகிய விபரீதங்களும், ஸந்தேகங்களும், முன்னொரு ஸமயம் நமது தீர்க்கதரிசியாகிய 'மகம்மது' வின் மனத்திலும் ஜனித்தன. கருணை வள்ளலான அல்லாவை மன்றாடி தன் மனோபாவம் போனபடி ஓர் உலகம் நிர்மாணஞ்செய்யும்படி வேண்டினார். மகம்மதுவே நேரேயிருந்து நியமித்த நகரம் இது. இந்நகரவாஸிகளனைவரும்ஸுக்ஷுமபுத்தி படைத்தவர் இல்லாவிடினும், ஒருவனுக்காவது தீக்குணமென்பதே கிடையாது. சண்டை சச்சரவு, பொறாமை, கோபம் முதலிய துர்க்குணங்கள் மருந்திற்குங் காண்பதரிது. ஆகவே நீ சற்றுமுன் உத்தேசித்தபடியே, துர்க்குணமே யில்லாத மனிதர்களால் நிரம்பியது இந்நகரம். மற்றைய விஷயங்களி லெல்லாம் உன் உலகத்தை யொத்தே யிருக்கும். அதைவிட இங்கு வசிப்பதற்கு உனக்கு விசேஷப் பிரியமிருக்குமேல், தாராளமாக உன் வாழ்நாளை இங்கே கழிக்கலாம். முதலாவது, இப்பட்டணம் முழுதும் ஒரு முறை சுற்றிப் பார்த்துக்கொள்வது சிலாக்கியம். ஆங்காங்குள்ள காட்சி விசேஷங்களை உனக்குக் காண்பிக்கவும், உனக்குண்டாகும் ஸந்தேகங்களுக்கு ஸமாதானஞ் சொல்லி அவற்றை நீக்கவும் நானும் உன் கூடவே வருவது அவசியம். ஆகையால், புறப்படு போகலாம்" என்று முடித்தான்.

அபுஹாஸனுக்கு ஆச்சரியம் மட்டுப்பட்டபாடில்லை. 'காமக் குரோதாதி பேய்க்குணங்களால் பிடிக்கப்படாத மனித வர்க்கம் நிறைந்த ஓர் உலகத்தில் வசிப்பதைவிட வேறென்ன ஆநந்தம் ஒருவன் அடையமுடியும்? சற்றுமுன் நான் எண்ணியதற்கும். இப்பொழுது இவ்வரிய உலகத்திற்கு வர நேரிட்டதற்கும் எவ்வளவு பொருத்தம்! இத்தகைய அருளிற்காக அல்லாவை மனமார வந்திக்கிறேன்' என்று வணங்கிவிட்டு மனம்போன திக்கில் விசுவாஸதத்தனை யிட்டுக்கொண்டு செல்லவாரம்பித்தான். பத்தடி தூரம் நகருமுன்னர், பாம்பின் வாய்ப் பட்டுப்பரிதாபமாய் அரற்றுமோர் மண்டூகத்தின் ஒலியும், பருந்திடமகப்பட்டுப் பயத்தால் கொக்கரிக்கும் ஒரு கோழியின் அவஸ்தையும், அபுஹாஸன் காதிற்கெட்டியது. "இவ்விஷயத்தில் பூலோகத்திற்கும் இவ்வுலகத்திற்கும் வேற்றுமை யொன்றும் காணேம். எளியாரை வலியார் அழிப்பதும், சிறு பிராணிகளைப் பெரும் பிராணிகள் விழுங்குவதுமாகிய அநியாயம் இங்கும் நடக்கிறது. என் மட்டில் அது அக்கிரமமாகத்தான் தோன்றுகிறது. தீர்க்கதரிசியான மகம்மதின் அதிர்ஷ்டம்போல், என் மனதின்படி ஓர் உலகம் அமைக்க வாய்த்தால் இந்த பாபங்கூட இல்லாததான் உலகத்தை கிருஷ்டிப்பேன்" என்றான்.

தேவதூதன் : "சிறு பிராணிகளிடங்கூட இவ்வளவருங் கருணை கூர்வது சற்று விபக்ஷபாலதேயாம். அதற்குப் பெரிதும் உன்னை மெச்சினேன். ஆயினும், பூலோகத்திலும் ஸரி, இங்கும் ஸரியே, பகுத்தறிவு விசேஷமாயில்லாக் கீழ்ப்பிராணிகள் ஸம்பந்தப்பட்டமட்டில், அவைகள் ஒன்றிற்கொன்று ஆகாரமாக இயைத்தது அவைகளின் அபிவிருத்தியை உத்தேசித்தே யென்றறி. பிராணிகளனைத்தும் சாகபக்ஷிணி களாகவே யிருந்திருக்குமேல், இவ்வளவு வித்தியாஸவ ஸ்பாவமுள்ளனவாய், இத்தனை சங்கம் பிராணிகள் இவ்வளவு பலமுற்று வாழ்வது அருமையல்லவா? அப்படியன்றி ஒன்றிற்கொன்று ஆகாரமாக அமைந்திருப்பதால் ஒரு பிராணி உணவானால், அதற்கு பதிலாக அதனிலும் பலமுற்ற பத்துப் பிராணிகள் ஜனிக்க வழியாகிறது. தீர்க்காலோசனை செய்து பார். உனக்கே தெரியும். இது நிற்க, இந்நகரின் பிரதான வீதிகள் அதோ தென்படுகின்றன பார். சற்று வேகமாய் நட. தீக்குணரகிதரான இவ்வூர் ஜனங்களைக் கண்டு, அவர்களுடன் அளவளாவி ஆநந்திக்கலாம்" என்றியம்பி இருவரும் கடுகி நடந்தனர். (தொடரும்)

குடியிற் பெண் மயிறு எரிந்தால், கொடியிற் சேலை நின்று எரியும்.

சிறுவர்களுக்கான பக்கங்கள்

CHILDREN'S PAGES

[ஸ்ரீமான் ஜி. ரத்தினம் பிள்ளை அவர்கள், பி.ஏ., எல்.டி.]

அலெக்சாந்தரும் புருஷோத்தமரும்

முன்னர் சொல்லியவிதம் அலெக்சாந்தர் அநேக தேசங்களை ஜயித்து கடைசியில் இந்தியாவின்மீது வடமேற்குக் கணவாய் வழியாகப் படையெடுத்தார். இந்தியாவின் வடமேற்கு பாகத்தில் புருஷோத்தமர் என்ற ஒரு அரசர் ஆண்டுவந்தார். அலெக்சாந்தர் வருவதைக் கேள்வியுற்று, அவரை எதிர்க்க ஜீலம் நதிக் கரையில் தயாராக இருந்தார். அலெக்சாந்தர் பகலில் அந்நதியைக் கடக்காமல் ஒருநாள் நடு இரவில் புருஷோத்தமர் சேனை தங்கியிருந்த இடத்திற்குத் தென்புறமாக வெகு தூரம் சென்று, ஒருவருக்குந்தெரியாமல் அதைக் கடந்து, அதிகாலையில் புருஷோத்தமர் சேனைக்குப் பின்புறமாக புருஷோத்தமர் வந்து திடீரென்று அதை எதிர்த்தார். இருவருக்கும் கடும்போர் விளைந்தது. இந்தியர்கள் வெகு ஆவேசத்தோடு கிரேக்கர்களுடன் சண்டை செய்தார்கள். அவ்விதம் போர் புரிந்தும், புருஷோத்தமர் தோல்வியடைந்தார். அவருடைய யானைப்படை சண்டை நடக்கும்போது வெருண்டு, அவருடைய சேனையையே சின்னாபின்னப் படுத்திற்று. தன்னைத் தைரியமாக எதிர்த்து, போர் செய்ததற்கு புருஷோத்தமரை அலெக்சாந்தர் புகழ்ந்து பேசி, அவருடைய ராஜ்யத்தை அவரிடம் திரும்பவும் கொடுத்துவிட்டார்.

அக்காலத்தில் இந்தியாவில் மகதராஜ்யம் என்ற பேர்பெற்ற ஒரு பெரிய ராஜ்யமிருந்தது. அதன்மீது படையெடுக்க அலெக்சாந்தர் எத்தனிக்கையில் அவருடைய போர்வீரர்கள் "நாங்கள் சொந்த ஊரைவிட்டு வெகுகாலமாயிற்று. எங்கள் மனைவிமக்களை விட்டு இனிமேல் எங்களால் பிரிந்திருக்க முடியாது. அவர்களைப் பார்க்கவேண்டுமென்ற அவா நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே வருகிறது. அநேக சண்டைகள் செய்து களைத்துப் போய்விட்டோம். இனிமேல் சண்டை செய்ய முடியாது. நாங்கள் இந்த நிமிஷமே ஊருக்குத் திரும்பவேண்டும்" என்று பிடிவாதமாகச் சொல்ல, அலெக்சாந்தர் மறுத்துப் பேசமுடியாமல், உடனே தன் தேசத்திற்குத் திரும்பினார். போகும் வழியில் பாபிலோன் என்னும் நகரத்தில் விஷசுரங்கண்டு இறந்தார். அப்போது அலெக்சாந்தருக்கு வயது 35.

ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

LADIES' PAGES

[ஸ்ரீமதி B. ராஜலக்ஷ்மி அம்மாள்.]

பெண்புத்தி

முன்னொருகாலத்தில் சோழநல்லூரென்னும் கிராமத்தில் கபிலன் என்னும் பெயருடைய ஒரு குடியானவன் இருந்தான். அவன் எளிய குடியில் பிறந்தவனாயினும், தன் இனத்தாரைவிட புத்தி யுக்தியில் சிறந்தவனாயிருந்தான். ஆதலின் தனக்கேற்ற பெண்ணைத் தேடி கல்யாணம் செய்துகொண்டு, இருவரும் ஒத்து தனது ஸொல்ப நிலங்களை பிரயாசப்பட்டு சாகுபடி செய்து பிழைத்து வரலாம் என்றெண்ணினான். ஆனால் அவ்வெண்ணத்திற்கேற்ற அதிர்ஷ்டம் மாத்திரம் வாய்க்கவில்லை. தன் குடும்பத்தைச் சேர்ந்த பெரியவர்கள் கட்டாயத்தால், தனது அத்தை மகள் சாமந்தியை மணக்கலாயிற்று. அப்பெண் சிறு வயதிலேயே தன் தாய் தகப்பனை இழந்து தகுந்த போஷிப்பாரின்றி தன்னைச் சேர்ந்தவனொருவனால் தருமத்திற்கு வளர்க்கப்பட்டுக் கபிலன் கழுத்தில் கட்டப்பட்டாள். கபிலனும் சாமந்தியும் குடித்தனம் செய்ய ஆரம்பித்து, அதிர்ஷ்டப்பெருக்கால் வரவர ஏழ்மைத்தனம் மேலிட்டது. இப்படி இருக்க, நிலத்தை உழுது விதைவிதைக்கும் காலம் கிட்டிற்று. ஆனால் வீட்டில் நல்ல விதையுமில்லை, அதை வாங்கப் பணமுமில்லை. ஆகையால் தங்களிடம் இருந்த ஒரே பசுவை அடுத்த கிராமத்து சனிக்கிழமை சந்தையில் கிரயப்படுத்தி விதை வாங்க நிச்சயித்தார்கள். சனிக்கிழமை பொழுது விடிந்ததும், கபிலன் மாட்டை ஓட்டிப் புறப்பட்டான். சாமந்திக்கோ தன் புருஷன் அதை ஸரியானவிலைக்கு விற்க திறமையற்றவ

னென்றும், அப்படி விற்ருலும் முழுப்பணத்தையும் நெல்விதை வாங்குவதில் உபயோகப்படுத்தாமல் சிறிது சாராயக்கடையில் சேர்ப்பானென்றும் சந்தேகம் உதித்தது. ஆதலால் அவனை வீட்டில் இருத்தி, பசுவுடன் சந்தைக்குத் தான் புறப்பட்டாள். கூட, தன்னிடமிருந்த சேவல் ஒன்றையும் எடுத்துச் சென்ருள். சோழநல்லூர் எல்லை கடந்ததும், ஒரு கசாப்புக் கடைக்காரன் எதிர்ப்பட்டான்.

கசா :—அம்மணீ ! சனிக்கிழமை சந்தைக்குப் போகிருப்போல் தோன்றுகிறதே!

சாமந்தி :—ஆம். நீர் யார் ? எங்குபோகிறீர்?

கசா :—நான் அடுத்த கிராமத்துக் கசாப்புக் கடைக்காரன். இந்த மாடும் சேவலும் விற்பனைக்குத்தானே ? அப்படியானல் இரண்டையும் எவ்விலைக்குத் தருவீர்கள் ?

சாமந்தி :—சும்மா பேரம் பண்ணுவதில் எனக்கு இஷ்டமில்லை. காலதாமதமும் ஆகின்றது. ஒரே விலை. பசுவை அணு ஒன்பதுக்கும் சேவலை ரூபாய் 25க்கும் கொடுத்துவிட அட்டி இல்லை.

கசா :— சேவலுக்கு இப்போது கிராக்கி இல்லை. அதைச் சந்தையில் உமதுஇஷ்டப்படி விலைப்படுத்திக்கொள்ளலாம். இந்தாரும் அணு ஒன்பது பெற்றுக்கொண்டு பசுவைக்கொடுங்கள்.

அணு ஒன்பதும் பசுவும் கைமாறின. சாமந்தி சந்தையில் சேவலை ரூபாய் 25க்கு விற்க முயன்ருள். அவள் சொன்னவிலை கிடைக்காவிட்டாலும், பயித்தியக்காரி யென்ற பட்டம் கிடைத்தது. வழியில் மாட்டுவியாபாரஞ்செய்த இறைச்சிக் கடைக்காரனிடம் சென்ருள். சந்தையில் தான் சேவலை விற்கக்கூடவில்லையென்றும் பசுவாங்கினவனே சேவலையும் வாங்கவேண்டுமென்றும் வற்புத்தினுள். கடைக்காரனே கிழப்புலி. சாமந்தியை உட்காரச்செய்து தின்பண்டங்களாலும், சாராயத்தாலும் வெகுவாய் உபசரித்தான். குடிமயக்கம் மூளைக்கேறி சாமந்தி கீழ்ச்சாய்ந்தாள். கிழவன் அவளைத் தாரில் தோய்த்தெடுத்து குவித்துக்கிடந்த இறகுமேட்டில் உருட்டி விட்டான். சிறிது நேரத்திற்கெல்லாம் மயக்கம் தெளிந்தது. பார்த்தாள் தன் சரீரக் கோலத்தை. "இது நான்தானே அல்லவோ ! ஒரு விசித்திரப்பறவை போலிருக்கிறதே ! இது நான் தானே அல்லவோ என்று நிச்சயிக்க என்ன செய்யலாம்! ஆ, இதுதான் நல்ல யுக்தி. நான் வீடு சென்றதும் என் பசுவின் கன்றுகள் என்னை நக்கிக் கொடுத்தாலும், வீட்டு நாய் என்னை அறிந்து குரைக்காமல் வாலாட்டி சும்மாயிருந்தாலும் இதுநானென்றே நிச்சயிப்பேன்'என்று நிதானப்படுத்திக் கொண்டாள்.

வீடுசேர்ந்ததும், சாமந்திபேய்க்கோலத்தைக் கண்ட அவள் வீட்டு நாய் ஊளையிட்டுக் குரைத்து ஓடி ஒளிந்தது. இதுகண்டு தான் சாமந்தி அல்லவென்று நினைத்து, ஆகிலும் பார்ப்போமென்று மாட்டுக் கொட்டிலுள் நுழைந்தாள். அங்கிருந்த கன்றுகள் அவள் கீல் நாற்றத்தை முகந்து, நக்கிக் கொடுக்காமல் விலகிநின்று வெறித்துப் பார்த்தன.

அவளுக்குத் தான் இன்னுரென்பது தெளிவாயிற்று. தான் சாமந்தி அல்லவென்றும், விசித்திரமான ஒரு பெரிய பறவையென்றும் நிச்சயித்து, வீட்டுக் கூறையின்மேல் தொத்தியேறி நின்று தன் கைகளை, சிறகுகள்போல் அடித்துக்கொண்டு பறக்க யத்தனித்தாள். அத்தருணம் கபிலன் வீட்டினின்று வெளி வந்தததும், கூறைமேல் நின்ற ரூபம் கண்ணில் பட்டது. திடுக்கிட்டு, உட்சென்று தன் துப்பாக்கியை எடுத்துவந்து அவளைச்சுடகுறிபார்த்தான். சாமந்தி, "சுட்டு விடாதேயுங்கள், நான்தான் சாமந்தி" என்று உரக்கக் கூவினுள். கபிலன் திகைத்து சற்று நிதானித்து, "சாமந்தியா ! அப்படியானல் இறங்கு கீழே. இக்கரடிக்கோலம் எவ்வாறு சம்பவித்தது ? எங்கெங்கு திரிந்துதிரும்பினுய் ? எங்கே நம்முடைய பசுவும் சேவலும்? " என்று அதட்டி பரபரப்புடன் வினவினன். கூறையினின்றும் மெல்ல கீழ்வந்து,தான்செய்துவந்த வியாபாரத்தைச் சொல்லி இடுப்பைத் தடவினுள். தான் கசாப்புக் கடைக்காரனிடம் பெற்ற பசுவின் விலை அணு ஒன்பதும் போய்விட்டதாகக் கண்டாள். அவள் கதையையும் தனக்கு சம்பவித்த பொருள் நஷ்டத்தையும் கண்டு கபிலன் மனம் நொந்தான். கோபமும் வருத்தமும் மேலிட்டு, "நீ எப்பொழுதுமே பைத்தியக்காரி. இன்று உன் பயித்தியம் மிதமிஞ்சி முற்றிவிட்டது.உன்னுடன் காலந்தள்ளஎன்னுலாகாது. நீ எக்கேடு கெட்டுப் போ. நான் இவ்விடம்விட்டுத் தொலைந்துபோகிறேன். உன்

னைப்போல் மூளையற்ற மூன்று ஸ்திரீகளுக்குக் குறையாமல் நான் கண்டாலொழிய திரும்பி வந்து உன் முகத்தில் விழிக்க மாட்டேன்'' என்று சொல்லி வெளிக் கிளம்பிவிட்டான்.

கொஞ்சதூரம் சென்றதும், சாலை ஓரத்திலிருந்த ஒரு புதுவீட்டைக் கண்டான். அவ்வீட்டு ஸ்திரீ ஒருவள் சல்லடை ஒன்றைக் கையிலேந்தி வீட்டிற்கு உள்ளேயும் வெளியேயும் வெகு அவஸரமாய் ஓடிக் கொண்டிருந்தாள். வெளி வரும்போது சல்லடை திறந்திருக்கும். உள்ளே போகும்போதெல்லாம் அதில் ஏதோ சாமான்களை எடுத்துச் செல்வதுபோலத் தன் சேலையின் தலைப்பால் ஜாக்கிரதையாய் மூடி மூடிச்சென்றாள்.

கபி:—அம்மா! தாங்கள் ஏன் இவ்வாறு செய்கிறீர்கள்? வெளியினின்று உட்செல்லும் போதெல்லாம், சல்லடையில் சாமான் ஒன்றுமில்லை யாயினும், அதை மூடிச் செல்வானேன்?

ஸ்த்ரீ.—இவ்வீடு எங்களால் இப்பொழுது தான் கட்டி முடிந்தது. ஆனால் உள்ளெல்லாம் ஒரே இருட்டாயிருக்கிறது. முன் பழைய வீட்டிலோ வேண்டிய அளவு சூரிய உஷ்ணமும் வெயிலும், கிடைத்துக்கொண்டேயிருந்தது. ஆகையால் நான் இப்புது வீட்டிற்குள் வெளிச்சத்தை இச்சல்லடையில் ஏந்தியேந்திக் கொண்டுசேர்க்கப் பிரயாசைப் படுகிறேன். வெளியில் வந்து வெய்யிலில் ஏந்த, இந்தச் சல்லடை வெளிச்சத்தால் நிறைகிறது. எவ்வளவு ஜாக்கிரதையாய் மூடி யெடுத்துச் சென்றாலும் உள்ளேபோய் திறக்கு முன் அத்தனையும்எங்கேயோ மாயமாய்ப்போகிறது. என் கால்கள் துவண்டு போய்விட்டன. யாராகிலும் கொஞ்சம் சூர்ய காந்தியை இவ்வீட்டினுள் சேர்ப்பித்தால் அவர்களுக்கு ரூபாய் 300 வரையிலும் கொடுக்கத் தயார்.

கபிலன் இதைக்கேட்டு தனக்குள் ஆச்சரியமடைந்து, ஒரு கடப்பாறை கொண்டு சுவற்றில் பெரிய ஜன்னல்கள் போன்றவளவு இடித்து விட்டான். அவ்வழியாய் உடனே சூரிய கிரணங்கள் உட்புகுந்து வீடெங்கும் ஒளி பரவிற்று. கபிலனுக்கும் ரூபாய் முன்னூறு பழுத்தது. தான் தேடி வந்த ஸ்திரீகளில் இவள் ஒருத்தி யென்றெண்ணிக்கொண்டான்.

இன்னும் சிறிது தூரம் கடந்ததும், அருகில் நின்ற வீட்டினுள்ளிருந்து அடி சத்தமும், கூச்சலும் காதிற்பட்டது. உள் நுழைந்து, அங்கு ஒரு ஸ்திரீ தன் கணவன் தலைமேல் ஒரு புதிய சட்டையை மாட்டி அவன் தலைமேல் மட்டைக்கழியால் ஓங்கி ஓங்கி அடிப்பதையும், அடிக்கு ஒருதரம் அம்மனிதன் அப்பா ஐயா வென்று கதறுவதையும் கண்ணுற்றான்.

கபி:—ஏன் அம்மா. இம்மனிதன் என்ன பெரும் குற்றஞ் செய்துவிட்டான். அவன் மண்டையை ஏன் உடைத்து, கொல்ல யத்தனிக்கிறாய்.

ஸ்த்ரீ:—ஐயா! இவருக்கு புதிதாய் சட்டையொன்று தயாரித்தேன். அதைத் தலைவழியாய் போட்டுக்கொள்ள உத்தேசித்து, போதுமானவளவு துவாரம் செய்ய இவ்வாறு மாட்டி அடித்து இறக்குகிறேன்.

கணவன்:—(மூக்கியும் முனகியும்) அப்பா, ஐயோ! புதிதாய் சட்டை போட்டுக்கொள்பவர் பாடு இப்பொழுதுதான் தெரியவருகிறது. பாவம். புதுசட்டையும் வேண்டாம், இடியும் வேண்டாம். போதுமய்யா இந்தக் கஷ்டம். என் மனைவிக்கு வேறுவிதமாய் தலை நுழைய இச்சட்டையில் வழிவிடக் காட்டிக் கொடுப்பாயாயின் ரூபாய் 300 வரையில் கொடுத்துவிட தயாராயிருக்கிறேன்''—என்று பரிதபித்தான். உடனே கபிலன் அதற்கு ஓத்துக்கொண்டு கத்தரிக்கோலொன்றைத் தருவித்து போதுமான அளவு வெளிதிறந்து கொடுத்துவிட்டு ரூபாய் 300டன் வெளிப்பட்டான். இவள் இரண்டாமவள் என்றெண்ணி நடந்தான் கபிலன்.

நெடுந்தூரம் வழிநடந்து சிரமம் மேலிட்டது. அருகில் இருந்த ஒரு வீட்டுத்திண்ணைச் சார்மணையில் சாய்ந்து இளைப்பாறினான். அவ்வீட்டு ஸ்திரீ அச்சமயம் வெளிவர நேர்ந்தது. கபிலனைக்கண்டு யாரென்று வினவினாள்.

கபி:—அம்மா, நானொரு வழிப்போக்கன். வெகுதூரம் வழிநடந்த சிரமத்தால் இவ்விடம் களைப்பாறத்தங்கினேன்.கொஞ்சம்தாகத்திற்கு மோர் அல்லது சுத்த ஜலம் கிடைக்குமோ?

ஸ்திரீ—இதற்கென்ன பிரமாதம்? (உட்சென்று மோர்ப் பாத்திரத்தை கொண்டுவந்து கொடுத்து, இந்தாரும். வேண்டியவளவு குடித்து இளைப்பாறும் நீர் எந்த ஊரிலிருந்து போய்க்கொண்டிருக்கிறீர்?

குணம் பாதி, கொண்ட கோவு பாதி.

கபி :—சோழநல்லூரிலிருந்து.

ஸ்திரீ :—சோழநல்லூரிலிருந்தா! சோழப் பெருமான் மஹா புண்ணியவான். அவன் கட்டுவித்த தேவாலயங்களுக்கும், செய்த மற்ற தானதர்மங்களுக்கும் எல்லையேயில்லை. அவன் இப்போதிருப்பது ஸ்வர்க்கமென்பதற்கு ஐயமில்லை. அவ்விடமிருந்து தாங்களும் வருவதாகச் சொல்லுகிறீரே. ஆனால், என்னுடைய இரண்டாம் கணவனை மாஹாளியை தாங்கள் பார்த்திருக்கலாமே. இப்பொழுது எனக்கு மூன்றாந்தரம் கல்யாணமாயிருப்பது. காலஞ் சென்ற இரண்டாமவர் ஒருவரே புண்ணியவான். வெகு சாது, ஸ்வர்க்கமடைய யோக்கியமானவர்.

கபி:—ஆம், ஆம். அவரைக்கண்டு மிருக்கிறேன். அவரிடம் பேசியதும் உண்டு.

ஸ்திரீ :—(ஆவலோடு) ஆனால் அவர் என்ன சொன்னார்? என் ஞாபகம் அவருக்கு இருக்கிறதோ? எனக்கு ஏதாவது செய்தி உண்டோ? சௌக்கியமாயும் சந்தோஷமாயும் இருக்கிறாரோ?

கபி :—எனக்குத் தெரிந்தமட்டில் அவர் அவ்வளவு திருப்தியாக இருப்பதாக தெரியவில்லை. உண்பதற்கு உணவும், உடுப்பதற்கு துணியும் இல்லாமல், அவைகளுக்காக அலைந்து திண்டாட வேண்டியிருக்கிறதாம். கையில் நாலு காசு பணங் கிடைத்தாலும்.—

ஸ்திரீ :—ஐயோ பாவம்! இஹத்தில் எவ்வளவோ தேடிவைத்து ஸவுக்கியமாயிருந்துவிட்டு, பரத்தில் அவ்வளவு அவர் கஷ்டப்பட்டுக்கொண்டு இருப்பதை கேட்க என்மனம் பதைக்கிறதே! அவர் போட்டுக்கொண்டிருந்த துணிமணிகள், பெட்டி பெட்டியாய் இருக்கின்றனவே! தாங்கள் தயவு செய்து சிரமத்தைப் பாராமல் அவற்றையெல்லாம் எடுத்துச்சென்று என் கணவனிடம் சேர்ப்பிக்கவேணும். இதோ என்னுடைய வண்டியையும் குதிரையையும் தருவிக்கிறேன். வண்டியையும் குதிரையையும் கூட ஆவரண்டையே விட்டுவாருங்கள். எங்கேயாவது போகவேண்டியிருந்தால் கால் நடை நடந்து கஷ்டப்பட வேண்டாம் என்றுசொல்லிவிட்டு வண்டி நிறைய உடுப்பு மூட்டைகளையும் பணப்பெட்டியையும் ஏற்றி கபிலனிடம் ஒப்புவித்து, வழிப்பிரயாணத்திற்கு உதவ கட்டுச்சோறும் கட்டி அனுப்பினாள். கபிலனும் வண்டியிலேறி இவள் மூன்றாமவள் என்று சிரித்துக்கொண்டே குதிரையை வேகமாய்ச் செலுத்தித் தன் ஊர்வழி திரும்பினான். சற்று தூரத்தில் உழப்பட்ட தன் நிலங்களை மேற்பார்வை பார்த்து நின்ற அந்த ஸ்திரீயின் மூன்றாம்கணவன் அயலான் ஒருவன் தன் வண்டியையோட்டிச் செல்வதைக்கண்டு சடுதியில் ஓடித் தன் பெண்சாதியைத் தேடி விசாரித்தான். விஷயமின்னதென்று வெளிப்பட, தான் சரேலென்று குதிரையின் மேலேறி வண்டி சென்ற வழியே வெருட்டிச்சென்றான். கபிலன் இதையறிந்து, வண்டியை அடர்ந்த புதரின் நடுவே ஓட்டிவிட்டு, குதிரை வாலினின்றும் ஒரு கொத்து மயிரைப் பிடுங்கி எடுத்துக்கொண்டு அருகில் நின்ற குன்றின் உச்சியை அடைந்து ஒரு மரக்கிளையில் அம்மயிர்க்கொத்தைக் கட்டி அதன்கீழ் மல்லார்ந்து படுத்து வானத்தை நோக்கி வாயைத் திறந்து வெறிக்கப் பார்த்துக்கொண்டுகிடந்தான். வேளாளன் தன்னண்டை நெருங்கியதை யறிந்து "ஆஹா! என்ன ஆச்சரியம், என்ன ஆச்சரியம்! என் ஜன்மத்தில் இம்மாதிரிகண்டதேயில்லையே? அடாடாடா!" என்று கூச்சலிட்டான்.

வேளா :—என்னப்பா ஆச்சரியத்தைக் கண்டாய்! இவ்வளவு கூச்சல் போடுகிறாயே!

கபி :—நான் இம்மாதிரி கண்டதேயில்லை. ஆஹா. அதோபார் அண்ணாந்து. ஒருவன் மேகங்களைத்தாண்டி அதோ குதிரைவண்டியிலேறி வெகு வேகமாகச்சென்று கொண்டிருக்கிறானே! குதிரையின் வால் மயிர்கூட இம்மரத்தின் கிளை நடுவே அதோ தெரிகிறதே! என்ன ஆச்சரியம்!

வேளா :—(அண்ணாந்து பார்த்து கபிலனை நோக்கி) என்னங்காணும். பகல் சொப்பனமோ அல்லது குடிவெறியோ? மரத்தில் குதிரை வால் மயிர்க் கொத்தைத் தவிரவேறொன்றையும் காணோமே!

கபி :— உம். அங்கிருந்து பார்த்தால் எவ்வாறு தெரியும்? சொப்பனமுமில்லை, குடிவெறியுமில்லை. என்னண்டை இப்படி மல்லாந்து படுத்து கண் கொட்டாமல் அம்மேகங்களி னடுவே உற்றுப்பாரும். பிறகு என்னைப் பழிக்கலாம்.

இதுகேட்டு வேளாளன் அவ்விதமே செய்ய, கண் எரி வெடுத்து நீர் ததும்பி மங்கியது. ஸமயம் பார்த்திருந்த கபிலன் க்ஷணத்தில் வேளாளன் குதிரைமேல் தாவி யேறி, வழியில் நிறுத்திவந்த வண்டியையும் குதிரையையும் கூட இட்டுக்கொண்டு தன்னிருப்பிடம் நெருங்கினன். வேளாளன் ஆச்சரியம் தெளிந்து கண்ணைத் துடைத்து நடந்தது இன்னதென் அறிவதற்கு முன், கபிலன் கண்ணுக் கெட்டாத தூரம் சென்று மறைந்தான். வேளாளனும் வெட்கத்தால் தலை குனிந்து, வீடு சேர்ந்தான். அவன் மனைவி போன காரியம் எவ்வளவு தூரம் கைகூடிற்றென்று விசாரிக்க, வேளாளன், 'நீ சொன்னதெல்லாம் வாஸ்தவமே, மாஹாளி நமது பழைய ஒற்றைக் குதிரை வண்டியில் ஏறி கஷ்டப்படாமல் புதிதாய் இரட்டைக் குதிரை பீடன் வாங்கி ஸுகமாய் ஸவாரி செய்யட்டும் என்றெண்ணி, நானே றிச் சென்ற குதிரையையும் சேர்த்து விட்டு வந்தேன்" என்று சொல்லி முடித்தான். அவன் மனைவியும் தன் மூன்ருங் கணவனின் தயாள குணத்தைக்கண்டு மெச்சினுள்.

அறுநூறு ரூபாய் பணம், இரண்டு குதிரைகள், வண்டி நிறைய மூட்டை மூட்டையாய் உடுப்புகள், பணம் நிறைந்த பெட்டி இவைகளோடு கபிலன் சோழநல்லூர் சேர்ந்து தன் வீட்டை அடைந்தான். வழியில் தன் நிலங்கள் உழுது விதை விதைத்திருப்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டான். அவன் மனைவி சாமந்தி அவனை முகமலர்ந்து எதிர்கொண்டு, அழைத்து, "எப்படியும் நீங்கள் இங்கு வந்து சேர்வீர்களென்று எனக்கு நம்பிக்கையுண்டு. ஆதலால் நான் நமது நிலங்களை உழச் செய்து, உப்புக்காரக் கோவிந்தனிடம் ஒரு மூட்டை உப்பு கடன்வாங்கி தாராளமாய் நெருங்க விதைத்திருக்கிறேன். ஈசுவர கிருபையால் மழை மாத்திரம் பொழியவேணும். எதேஷ்டமாய் உப்பு விளைந்துகண்டு முதல் செய்யலாம்" என்று தன்னுடைய பிரதாபத்தை சந்தோஷமாய் வெளியிட்டாள். "நீ இதுவரையிலும் பயித்தியம், இனிமேலும் சாகுமளவும் பயித்தியமாகவே இருக்கப்போகிருய். ஆனுலு மென்ன! உலகத்து பயித்தியக்காரிகள் உன்னை விட குறைந்தவரில்லை" என்று தன்னைத் தானே சமாதானப் படுத்திக்கொண்டான்.

பிரபஞ்ச வர்த்தமானம்

NEWS & NOTES

இலட்சுமண புரியில் யூநிவர்ஸிடி

ஐக்கிய மாகாணத்திலே ஒரு யூநிவர்ஸிடி இருந்தும், அது போதாதென்பதின் மேல், முதலாவதாக இலட்சுமணபுரியிலும், அப்பால் ஆக்ராவிலும் யூநிவர்ஸிடிகளை ஏற்படுத்த ஸர் ஹார்கோர்ட்டு பட்லர் வாக்களித்து, இலட்சுமணபுரியில் நியூ வர்ஸிடி ஏற்படுத்துவதைப்பற்றி யோசனை செய்ய ஓர் பிரபல கமிடியை நியமித்தார். அக்கமிடியார் இம்மாதம் கூடி, இன்னின்ன முறையில் யூநிவர்ஸிடியை ஏற்படுத்த வேண்டுமென்று தீர்மானித்தனர். அத்தீர்மானங்களில் சில அம்சங்கள் பின்வருமாறு:--இலட்சுமணபுரியில் ஏற்படவேண்டிய யூநிவர்ஸிடி, கேவலம்பரீக்ஷை நடத்தும் யூநிவர்ஸிடியாக இராமல் போதிக்கும் யூநிவர்ஸிடியாக இருக்கவேண்டும். அதற்குப் பல விதத்திலும் தகுந்த அளவு ஸ்வதந்திரம் இருக்கவேண்டும். மேற்படி யூநிவர்ஸிடியைப் பற்றி தம்மாலான உதவிபுரிய கனம் ஸர் ஹார்கோர்ட்டு பட்லர் வாக்களித்ததாகத் தெரிய வருகிறது, இங்கிலாந்தில் ஒவ்வொரு பட்டணத்திலும் ஓர் யூநிவர்ஸிடி இருக்க இந்தியாவில், மாகாணத்திற்கு ஒரு யூநிவர்ஸிடி இருப்பதை எவரும் ஒத்துக்கொள்ள மாட்டார்கள். ஆகையால் ஷை யூநிவர்ஸிடியைப்பற்றி உழைப்பவர்கள் உண்மை தேசாபிமானிகளே. அவர்கள் காரியம் சீக்கிரத்தில் சித்திபெற கவுடள் அருள் புரிக!

* * *

பேசும் படங்கள்.

ஸினிமா என்ற காட்சிப் படங்களில் மனிதர்களும் ஜந்துக்களும் நடமாடும் விவரம் புலப்படினும் பேச்சும் சத்தமும் கேட்கவில்லை; எனினும் பேச்சும் சத்தமும் புலப்படும்படி நூதனஸாதனமொன்று ஸ்வீடன்தேசத்து இஞ்சினீயர் ஒருவரால் கண்டு பிடிக்கப் பட்டிருக்கிறது. ஸினிமா காட்சிப்படங்களைப் பார்வையிடுவதினுல் ஜனங்களின் நடத்தையும், முக்கியமாக வாலிபரின் நடத்தையும் கெட்டு வருகின்றதென்று முன்னம் எங்கும் பெருங் கிளர்ச்சி உண்டாக, சீர்கேட்டுக்கு இடமான படங்களைக் காட்டாமல் தடுக்கவேண்டு

மென்று பல இடங்களில் சட்ட திட்டங்கள் செய்ய அதிகாரிகள் முன் வந்தனர். இப்புது ஸாதனத்தினால் கேடு உண்டாகாமல் இருப்பதற்கு அதிகாரிகள் ஜாக்கிரதையாக இருக்க வேண்டுமாயினும், ஹரிச்சந்திரன் சரித்திரம் முதலியவற்றைப் பேச்சுடன் பார்ப்பதால் நன்மையே உண்டாகுமென்பதற்கு ஐயமில்லை.

* * *

சென்னை யூநிவர்ஸிடியின் வருஷாந்தரப் பட்ட மளிப்பு.

நம்மாகாணத்து யூநிவர்ஸிடியின் வருஷாந்தரப் பட்ட மளிப்பு இம்மாதம் 17வ நடைபெற்றது. பட்டம் பெற்றவர்களிற் சில பெண்மணிகளென்றும், அவர்கள் தொகை முந்திய வருஷங்களைக் காட்டிலும் அதிகம் என்பதையும் நாம் குறிப்பிடவேண்டும். இவ்வருஷ முதல், ஸ்திரீகளும் யூனிவர்ஸிடி ஸபையின் அங்கத்தினராக இருக்க உரிமை பெற்றது பாராட்டற்பாலது. பட்டமளித்தபின் உபந்யாசம் செய்த கனம் ரெவரெண்டு மெக்பேல் அவர்கள் பட்டம் பெற்றவர்களைத் தம் தம் ஸமூகத்திற்கு உழைக்குமாறு வற்புறுத்தினர்.

* * *

அயல் நாடுகளில் ஹிந்து மதம்.

ஹிந்து மதம் நம் நாட்டில் மாத்திரமின்றி இந்துக்கள் சென்றிருக்குமிடம் எல்லாம் பரவி இருப்பது நாமறிய வேண்டிய விஷயம். பினங்கு, சிங்கப்பூர் முதலிய வேறு தேசங்களுக்குச் சென்றிருக்கும் நம்மவர், நம் பூர்வ மதத்தைக் கைவிடவில்லை. இவைகளுக்கும் அப்பால் இருக்கும் ஜாவாத் தீவில் ஹிந்துக்கள் இருக்கிறார்களெனவும் அவர்கள் தம்முன்னோர் மதத்தில் மிகவும் பற்றுடையவர்களெனவும், தற்காலம் அவ்விடம் பிரயாணஞ்செய்யும் ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தைச் சேர்ந்தவராகிய ஸ்வாமி ஸர்வாநந்தர் எழுதினதாகத் தெரியவருகிறது.

* * *

அகில பாரத புத்தகசாலைக் கூட்டம்.

இக்கூட்டம் இம்மாதம் 14வ சென்னைநகரில் கோகலே மண்டபத்தில் நடைபெற்றது. மேன்மை தங்கிய நமது கவர்னர் லார்டு வில்லிங்டன் அவர்கள் இக்கூட்டத்தில் மிகவும் சிரத்தை காட்டினது பாராட்டத்தக்கது. அநேக புத்தகங்களும் பத்திரிகைகளும் இக்கூட்டத்திற்கு அனுப்பப்பட்டிருந்தன. பரோடா ஸமஸ்தானத்து புத்தகசாலைகளின் தலைமை அதிகாரியான ஸ்ரீமான் குதால்கர் அக்கிராசனம் வகித்தார். ஹிந்துப் பத்திரிகையின் ஆசிரியர் ஸ்ரீமான் கஸ்தூரிரங்கய்யங்கார் வரவேற்புக் கமிடியின் தலைவராக இருந்தார். புத்தகசாலையைப்பற்றின பற்பல அரிய உபந்நியாஸங்களும் தீர்மானங்களும் செய்யப்பட்டன. இவ்விஷயத்தில், நம் ஆந்திரஸகோதரர்கள் தமிழர்களைவிட எவ்வளவோ முன்னேற்றமடைந்திருக்கிறார்கள் என்பதை, அறிஞர்கள் கவனித்து, கல்விவிருத்தியடையச் சுலபமான வழிகளிலொன்றான பொதுப் புத்தக சாலைகளை ஏற்படுத்தவும் நடத்தவும் முயலவேண்டும்.

* * *

படிப்பிற்காகப் படும் கஷ்டம்.

மிஸ் மிரியாம் எட்வினுவென்ற 19-வயதுடைய ஒருஅழகியவாலிப மாது, தான்படித்துவரும் கலாப்பயிற்சிக்கு போதியபணமில்லாததினாலும் இன்னும் இரண்டு வருடம் தொடர்பாய்ப் படிக்கவேண்டியதவசியமானதாலும் ஒரு டிக்கட் 10 டாலர் வீதம் விற்றனள். இந்த டிக்கட் வாங்கினவர்களின் நாமங்களை சீட்டிகளிலெழுதி இரண்டு வருடத்துக்கு பிறகு திருவுளச் சீட்டுப்போட்டு வெற்றி பெற்றவர், இம்மாதை விவாகம் செய்துகொள்ள விருப்பமிருக்குமேயாகில் செய்துகொள்ளலாமென அப்பணப்பற்றுச்சீட்டில் எழுதியிருக்கிறது. அநேக வாலிபர்கள் அவ்வழகிய மாதை மணந்துகொள்ளவேண்டுமென்ற ஆசையினால் சீட்டுகளை வாங்குகின்றனர். இதுவும் காலத்திற்கேற்ற கோலந்தான்.

* * *

அமெரிக்காவில் ஆகாயப் போக்குவரவு விருத்தி.

பனாமா, அலாஸ்கா முதலிய இடங்களுக்கும், கூடுமானால் ஆசியாவுக்கும், ஆகாயக் கப்பல் போக்குவரவை உண்டாக்க செனேட் மிலிடரி கமிட்டியார் 150 லக்ஷம் டாலர்கள் செலவழிக்கலாமென உத்தரவிட்டிருக்கின்றனர்.

* * *



முதலாவது இலங்கை காங்கிரஸ். மகா சபையில்
அக்கிராசனம் வகித்த ஸர். பி. அருணுசலம், எம். ஏ.

Sir P. ARUNACHALAM, Kt., M. A,
President, First Session of The Ceylon National Congress.

விவேகபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்.

தொகுதி XII | சித்தார்த்தி௵ கார்த்திகைமீ :: 1919-௵ டிசம்பர்மீ | பகுதி 6

கம்பராமாயணத் திரட்டு

SELECTIONS FROM KAMBA RAMAYANA

ஆளியாயிரம் பூண்டதே ரரக்கன்வந் தடர்ந்தான்
காளை மாருதி தோளின்மே லிராமனுங் கடந்தான்
மூளும் வார்சிலை பத்துடன் முடிபத்து மொழித்து
நாளை வாபொர வென்றன னகர் சென்று புக்கான்.

மூலத்தானையைத் தருகெனத் தூதரை முடுக்கிக்
கோலப் பள்ளியிற் குறுகலுங் குரவன்வந் தணுகிச்
சாலச் சாம்பினை முன்னமே சாற்றினெ னென்றான்
மாலைத் திண்புய மகோதரன் மறுத்திது சொன்னான்.

கும்ப கன்னனை யழைக்கெனத் தூதருங் கொணர்ந் [தார்
எம்பி போரினை யியற்றுதி மனிதரோ டென்றான்
வெம்பு போர்க்களம் புகுந்தனன் வினை வினிராமன்
தம்பிரா னிவற் றருகென்றான் றசமுகற் கிளையான்.

வியந்து வீடண னழைத்தலும் வெய்யவன் மறுத்து
வயந்தனைப் பிசைந் தருக்கன்மா மகனைக்கொண் டக [ன்றான்
இயைந்த நாசிகொண் டிரவிசே யகன்றன னிராமன்
உயர்ந்தொ ரம்பினா லவன்றலை யுவரியி லிட்டான்.

அப்புறத்தினின் மருத்தனைச் சனகர்கோ னாக்கிக்
குப்புறத்தினன் மகோதரன் சிதையுங் குலைந்தாள்
எப்புறத்தினு மிராவணன் செவியெலாங் கேட்க
இப்புறத்தினின் றார்த்ததங் கிராவணன் சேனை.

கும்ப கன்னன் குறைந்தமை கூறிடத்
தம்பி யோவென் றரற்றித் தசமுகன்
அம்பொற் றேரதி காயனை யேவினான்
எம்பி ரார்க்கினை யோனெதிர் தாக்கினான்.

எதிரெதிர் தாக்கின விரண்டு சேனையும்
கதுமென விராகவற் கிளைய காவலன்
அதிர்கழல் புனையதி காயன் றன்னையோர்
சதுமுகன் சரத்தினாற் றலையைத் தள்ளினான்.

குரக்கு வேந்தர்கள் குன்றுகொண் டேவலும்
அரக்கன் மைந்த ரனைவரு மாண்டனர்
பரக்கவன் கொலைப் பாடுகண் டார் சிலர்
இரக்க மெய்தி யிராவணற் கோதினார்.

அரக்க னவ்வுரை கேட்டலு மங்கணே
இரக்கமுற் றிந்திர சித்தை யேவினான்
குரக்கு வேலையைக் கொன்றனன் கொன்றபின்
தரைக்கு நாயகன் றம்பியை யெய்தினான்.

ஏரழுங்க விலக்குவன் மேனிமேல்
கூரழுங்க நெடுஞ்சரங் கூட்டினான்
தேரழிந்து தசமுகன் றிண்மகன்
போரழிந்து விசும்பிடைப் போயினான்.

இடந்தரு மிராகவற் கிளவலைக் கவித்
தடம்புனை யெழுபது வெள்ளத் தானையை
அடங்கலு மரக்கன்மா மதலை யல்லிடை
விடந்தரு நாகபா சத்தின் வீக்கினான்.

போயின னரக்கனும் புரண்டு வானரர்
கூயின ரிராகவற் கனலன் கூறிட
மேயினன் வருத்தினன் விகங்க ராசனும்
பாயின னுரகனைப் படுத்திப் போயினான்.

சென்ற தூதுவர் சொலத் தெசமுகத்தவன்
தன்றகு பெரும்படைத் தலைவர்க் கூயினான்
நின்றிலர் கொன்றனர் நிசிதர் தங்களைக்
கொன்றனர் வானரத் தலைவர் குன்றினால்

உரையது கேட்டு மைந்தர்க்
குரைத்தலு மரக்கர் கோமான்
கரன்மகன் மகரக் கண்ணன்
செல்கெனக் காற்றினம்பும்
வருணன்ற னம்புங் கூட்டி
மாயையால் விட்டான் மாயன்
பொருசர மொன்றாற் சென்னி
போக்கினான் யானை யோடும்.

விவேக போதினி

தொ. 12] சித்தார்த்தி௵ கார்த்திகைமீ [ப. 6

யுதிஷ்டிரர்

YUDHISHTIRA

அதைக் கண்டு அந்தப்புரத்து ஸ்திரீகளில் கற்புடையோர் "இந்த அநியாயத்தையும்பூதேவி பொறுக்கிருளா"வென்று மார்பில் அடித்துக் கொண்டார்கள். பீஷ்மர், துரோணர், கிருபர், விதுரர் முதலிய ஸாதுக்கள், "ஆஹா! என்ன ஆச்சர்யம்! பகவானுடைய மாயை எவ்வளவு விசித்திரமாய் ஜீவகோடிகளைச் சுற்றுகிறது! தன் திருவுள்ளத்தில் பூபாரத்தைத் தீர்க்க உத்தேசித்து என்னென்னமோ நுட்பமான வழிகளால் தன் கருத்தை நிறைவேற்றிக் கொள்ளுகிருர். அவருடைய சாமர்த்தியமே சாமர்த்திய"மென்று வியந்து மூக்கில் விரலை வைத்தார்கள். துவாரகாபுரியில் தன் அரண்மனையில் ஏகாந்தத்தில் வீற்றிருந்த கண்ணன் தன்னையறியாமல் திடுக்கிட்டு சக்கராயுதத்தில் கையை வைத்தார். பிறகு ஏதோ நினைத்துக் கொண்டு இன்னும் ஸமயம் வரவில்லையென்று ஞாபகப்படுத்திக் கொண்டார். கைலாஸகிரியில் பார்வதியுடன் தர்ம ரஹஸ்யங்களைப் பேசிக் கொண்டிருந்த மஹா தேவனுடைய நெற்றிக் கண்ணிலிருந்து பிரளய காலாக்கினியைப்போன்ற சுடர் வெளிப்பட்டது. உடனே சங்கரன் சற்று யோசித்து "ஓஹோ! கிருஷ்ணனுடைய நோக்கம் வேறு விதமாயிருக்கிற"தென்றறிந்து, கோபத்தை அடக்கிக் கொண்டார். பிரஹ்மாவும் தேவதைகளும் பூதேவியும் மஹரிஷிகளும், "ஸகல லோகங்களுக்கும் பரம மங்களம். இதே நல்ல தினம். இன்று ஜீவகோடிகளின் கஷ்டங்கள் தீர்ந்தன; துஷ்டர்கள் அழிந்தார்கள். ஸாதுக்கள் கவலையற்றுர்கள். தர்மம் நிலை நாட்டப்பட்டது. கண்ணனுடைய அவதார காரியம் நிறைவேறிற்று. லோக ரக்ஷகா! ஜயவிஜயீபவ"வென்று கைகூப்பி வாழ்த்தினுர்கள்.

அப்பொழுது பரம துஷ்டனை துச்சாஸனன், காலஸர்ப்பத்தின் தலையில் அடித்து அதன் விஷப்பல்லைப் பிடுங்குவதற்காக வாயில் கையை நுழைத்த மூடனைப்போல், திரௌபதியின் நீண்ட கூந்தலைக் கையில் சுழற்றிக் கொண்டு, தன் கற்பாலும் தர்ம தேவதையாலும் லோகரக்ஷகனை கண்ணனாலும் காக்கப்பட்டிருந்தும் அநாதையைப்போலத் தவிக்கும் பாஞ்சாலியை ஸபையில் இழுத்துக்கொண்டு வந்து, பெரிய கப்பலைப் புயல்காற்று அலைப்பது போல், அங்குமிங்கும் அலங்கோலமாய் இழுத்தான். திரௌபதி தேஹம் குன்றி, கண்களைத் தவிர மற்ற அவயவங்களை வஸ்திரத்தால் மறைத்துக்கொண்டு, "நான் தீண்டக் கூடாத நிலைமையிலிருக்கிறேன். என்னைத் தொடாதே. நீயும் உன் சுற்றமும் அழிவீர்க"ளென்றுள். துச்சாஸனன் காலபாசத்தால் கழுத்தில் மாட்டி இழுக்கப்பட்டுப் "பாஞ்சாலீ! நீ எந்த நிலைமையில் வேண்டுமானுலும் இரு. ஒற்றை வஸ்திரத்துடன் இருந்தால் எனக்கென்ன? வஸ்திரமில்லாமலேயே யிருந்தால் எனக்கென்ன? கிருஷ்ணனையும் அர்ஜுனனையும் இபபொழுது வேண்டியவரையில் கூப்பிடு. சூதாட்டத்தில் ஜயிக்கப்பட்டு, தாஸியான உனக்கு மான மென்ன? வெட்க மென்ன" வென்றுன். இடிபோலச் சிரித்து வீசையில் கையைப்போட்டு "தாஸீ! தாஸீ" யென்று கூவி அவளைக் கேலி செய்தான். கர்ணன் துர்யோதனன் முதலியவர் "பலே பலே! நல்ல காரியம் செய்தா"யென்று கொண்டாடி, வேட்டை நாயைத் தூண்டி விடுவதுபோல், அவனை உத்ஸாஹப் படுத்தினுர்கள். திரௌபதி, "இந்த ஸபையில் வயதிலும் ஒழுக்கத்திலும் ஞானத்திலும் முதிர்ந்த பலரிருக்கும் பொழுது, இந்தத் துஷ்டர்கள் இவ்விதமான கொடிய செயல்களைச் செய்யும்படி பார்த்துக்கொண்டிருக்கிருர்களே! இதென்ன கலி வந்ததோ? தர்மம் அழிந்ததோ? மனிதர்கள் மிருகங்களானுர்களோ"வென்றுள். அதைக்கேட்ட பீஷ்மர் "தனக்குத் தான் ஸ்வதந்திர மில்லாதவன்

குலம் குலத்தோடே, வெள்ளாடு தன்னோடே.

வேறொருவனுடைய பொருளைப் பந்தயம் வைக்க முடியாது. ஸ்திரீ பர்த்தாவிற்குக் கட்டுப்பட்டவள். இவ்விரண்டு விஷயங்களையும் யோசித்தால், தர்மம் வெகு நுட்பமாயிருக்கிறது. நீ கேட்ட கேள்விக்கு நான் பதில் சொல்ல முடியாது. யுதிஷ்டிரன் எந்த நிலைமையிலும் தர்மத்தை விடமாட்டான். நான் ஜயிக்கப்பட்டே னென்று அவன் சொன்னான். நான் இந்த விஷயத்தில் எப்படி முடிவு சொல்ல முடியும்? உனக்கிஷ்ட மிருந்தால் திரௌபதியைப் பந்தயம் வைக்கலாமென்று சகுனி சொன்னான். அந்த வஞ்சனையை உன் கணவன் அறியவில்லை. உனக்கு நான் பதில் சொல்லச் சக்தியற்றவ" னென்றார்.

"சூதில் என் பர்த்தாவிற்கு உண்மையாய் ஆசையில்லை. ஆனால், தன்னை ஒருவன் அழைத்த பிறகு பின்வாங்குவதில்லையென்று பிரதிக்ஞை செய்திருக்கிறார். இது துர்யோதனன் கர்ணன் சகுனி முதலியவர்களுக்கு நன்றாய்த் தெரியும். அவருக்குச் சூதாட்டத்தில் சற்றும் திறமையில்லையென்றும் நன்றாய்த் தெரியும். சகுனியோ சூதில் ஒப்பற்றவ னென்பது லோகப்பிரஸித்தம். துர்யோதனனும் பாண்டவ சிரேஷ்டரும் சூதாடுவதென்று ஏற்படுத்தி, பிறகு "துர்யோதனனுக்குச் சூதாடத் தெரியாது, அவனுக்குப் பதிலாக நான் ஆடுகிறே" னென்று சகுனி சொன்னதை நீங்கள் எப்படி ஒப்புக் கொண்டீர்கள்? அதே ஒழுங்குப்படி சூதாடத் தெரியாத யுதிஷ்டிரருக்குப் பதிலாகச் சகுனிக்கு ஸமமான வேறொருவர் ஏன் வைக்கப்படவில்லை? இந்தப் பாபிக்குத் தகுந்த தண்டனையை விதித்து, அவனுடைய மாயச் சூதை வீணாக்கவல்ல துவாரகா நாதனை மாயோன் எங்களுக்குக் கத்தியும் கேடயமுமாயிருக்கிறா ரென்பதை அவர்கள் மறந்தார்களோ? யுதிஷ்டிரரை இப்படி ஏமாற்றிச் சூதாடச் செய்த பிறகு, அவருக்கு ஸ்வதந்திரம் உள்ளதென்றும் இஷ்டமிருந்தால் பந்தயம் வைக்கலாமென்று சொல்வதும் வீண் பகட்டே. மோசக்காரர்கள் ஒன்று சேர்ந்து, மோசமே அறியாத என் கணவனை வஞ்சகத்தால் ஜெயித்த பிறகு அவர் பந்தயத்தை ஒப்புக்கொண்டா ரென்பது விஷயமல்ல. என்னைப்போன்ற பெண்களும் மனைவிகளும் மக்களும் மருமக்களுமுள்ள நீங்கள் என் கேள்வியை ஆராய்ந்து பார்த்து; உசிதமான பதிலைச் சொல்லி இந்த அதர்மத்தை நிறுத்துங்கள். இதை ஒப்புக்கொண்டாலும் மௌனமாயிருந்தாலும் உங்களுக்குக் கொடிய ஆபத்து நேரும். நான் படும் கஷ்டத்தையும் அவமானத்தையும் காட்டிலும், கோடி மடங்கை உங்களுடைய பெண்டிர் அனுபவிப்பார்கள். ஸ்திரீகளின் வயிற்றெரிச்சலும், கற்புடைய மங்கையரின் கண்ணீரும், தர்மமே கதியென்ற ஸாதுக்களின் மனக்கொதிப்பும் வீண் போகாது; உங்களை வேருடன் அழிக்கும். நான் இப்பொழுது காலகதியால் கஷ்டத்தை அனுபவித்தாலும், பிறகு என் பர்த்தாக்களுடன் ஸுகமடைவேன். தர்மத்தையும் பகவானையும் நம்பியிருக்கிறேன். இந்த துஷ்டர்களுக்குப் பயந்து தர்மத்தைக் கைவிட்டுப் பகவானை மறந்து நீங்களும் இந்த அதர்மத்திற்கு இடங்கொடுத்தால், உங்களுடைய ஸ்திரீகள் யாவரும் உங்களைப் பறிகொடுத்து என்னைப்போல் கண்ணும் கண்ணீருமாய் கோவென்றலறிக்கொண்டு தலைவிரி கோலமாய் எல்லோராலும் சீ,சீயென்று நிந்திக்கப்பட்டு உங்களுக்குப்பிரேதக் கிரியைகளைச் செய்வதற்குப் போவதைக் நான் பார்ப்பேன். என் பழியைத் தீர்ப்பதற்கு கண்ணனுடைய சக்கராயுதமும், பீமஸேனனுடைய கதையும், அர்ஜுனனுடைய காண்டீவமுமே போதும். இந்த துஷ்டர்களிடத்தில் பயந்து பிடிபடாமல், தந்திரமாய்ப் பேசித் தப்பித்துக்கொள்ளப் பார்ப்பது உண்மையாகுமா? உண்மையைக் கைவிட்டவர்கள் தர்மவான்களாவதெப்படி? தர்மத்தைச் சொல்லாதவர்கள் பெரியோர்களல்ல. பெரியோர்களில்லாத ஸபை பிரயோஜனமற்றதே" என்று பார்ப்போர் மனம் உருகும்படி அழுதுகொண்டு, பாண்டவர்களைக் குறுக்குப் பார்வையாய்ப் பார்த்தாள்.

இப்படி அலங்கோலமாய்க் கதறும் பாஞ்சாலியைக் கண்டு, பீமன் கண்களில் நெருப்புப் பொறி பறக்கக் காதுகளிலிருந்து புகை கிளம்ப தர்மபுத்திரைப் பார்த்து "சூதாடுகிறவர்களின் வீடுகளில் தாஸிகளுண்டு. அவர்களையும் மனிதர்களைப்போல் பிரியத்தோடும் இரக்கத்தோடும் நடத்துகிறார்கள். மிருகங்களைப்போல் கொடுமையாய் ஹிம்ஸிப்பதும் விற்பதும் வாங்குவதும் பந்தயம்வைத்தாடுவதும் வழக்கமில்லை. நமது மித்திரர்களாலும் சிற்றரசர்களா

லும் காணிக்கையாய்க் கொடுக்கப்பட்ட பொருள்களைப் பந்தயம் வைத்ததைப்பற்றி எனக்குக் கோபமில்லை. அவை உமது பொருள். எங்கள் நால்வரையும் பந்தயம் வைத்ததைப்பற்றி எனக்குக் கோபமில்லை.நாங்கள் உமது புத்திரர்களைப்போன்றவர்கள்.திரௌபதியைப் பந்தயம் வைத்ததைப்பற்றி எனக்குக் கோபம் பொங்குகிறது ஸ்வயம்வரத்தில் அர்ஜுனனை மாலையிட்டு லோகாசாரத்திற்கு விரோதமாய் நம் ஐவரையும் மணந்து, நம்மையே கதியென்று நம்பியிருக்கும், யாக குண்டத்திலிருந்து மனுஷ்ய ஸம்பந்தமில்லாமல் பிறந்த இந்தப் பெண்மணி, நீசர்களும் துஷ்டர்களும் மூடர்களுமான இந்தக் கௌரவர்களால் கொடுந் துன்பத்தையும் அவமானத்தையும் இப்பொழுது அடைவது உம்மாலே யல்லவா? இந்தப் பாபிகளை ஒரு நொடியில் தன் பதிவிருதாக்கினியால் சாம்பலாய் எரிக்கக்கூடிய இந்த உத்தமி, திக்கற்ற பரதையைப்போல் கையாலாகாத நம்மைப்பார்த்துக் கதறுவது உம்மாலே யல்லவா? இவர்களுடைய மூளைகளைக் கதையால் ஒரு நொடியில் சிதற வடிக்கக்கூடிய என் புஜபலமும், இவர்களைச் சல்லடைக்கண்ணாய்த் துளைத்துச் சித்திரவதை செய்யக்கூடிய அர்ஜுனனுடைய வீர்யமும் மழுங்கி இருந்தவிடம் தெரியாமல் இந்த அல்பனான சகுனியின் கையில் சிக்கிக்கொண்டு தபிப்பதும் உம்மாலே யல்லவா? இந்த மதியற்ற கௌரவர், சிங்கங்களைப் பார்த்துக் குலைக்கும் நாய்களைப்போல் நம்மைப் பார்த்துக் கேலி செய்வதும், நாம் தாலிகட்டின பெண்சாதியைக் காப்பாற்ற முடியாமல் தலைகுனிந்து நிற்பதும் உம்மாலே யல்லவா ? என் கோபத்தை இந்த துஷ்டர்களிடத்தில் செலுத்தமுடியாமல் உமது பிரதிக்ஞை என்னைத் தடுக்கிறது. ஆகையால் என் கோபாக்கினியை உம்மிடத்தில் மூட்டுகிறேன். ஸஹதேவா ! ஜ்வலிக்கும் அக்கினியைக் கொண்டுவா. இப்படிச் சூதாடத் தெரியாமல் சகுனியிடத்தில் மாட்டிக்கொண்டு இவ்வளவு அனர்த்தங்களையும் விளைவித்த இவருடைய கைகளைக் கொளுத்தப்போகிறேனென்றான்.அர்ஜுனன் அவனைத் தடுத்து, தர்மத்தையும் பெரியோரிடத்தில் காட்டவேண்டிய மரியாதையையும், அவனுக்கு ஞாபகப்படுத்தினான். அதைக்கேட்டு பீமன் "அப்படியா! இவர் தர்மத்திற்குக் கட்டுப்பட்டு, தன் விருதத்தைத் தவறமுடியாமல் நடந்தாரென்று எனக்குத் தெரியவில்லை.வேறு விதமாயிருந்தால் பலாத்காரமாய் இவருடைய கையைக் கொளுத்தியிருப்பேன்" என்றான்.

அதற்குள் திருதராஷ்டிரருடைய புத்திரனான விகர்ணன், "ஸபையோர்களே! திரௌபதியின் கேள்விக்கு ஏன் பதில் சொல்லவில்லை? யாருக்காவது பயந்து, உண்மையைச் சொல்லாமலிருந்தால் நமக்குக் கொடிய நரகம் கிடைக்கும். பீஷ்மரும் திருதராஷ்டிரரும், குருகுலக் கிழவர்களா யிருந்தும் மௌனஞ் சாதிக்கிறார்கள். மஹா புத்திமானான விதுரருக்கும் பதில் சொல்லத் தெரியவில்லை. எங்களுக்கு ஆசார்யர்களான துரோணரும் கிருபரும், தாங்கள் பிராமணர்களென்பதை மறந்து, இரக்கமில்லாமல் இந்த அநியாயத்தைப் பார்த்துக்கொண் டிருக்கிறார்கள். இங்கிருக்கும் ஸபையோர், பிறரால் தங்களுக்குக் கிடைக்கக்கூடும் லாபத்தையும் பிறருடைய கோபத்தால் நேரக்கூடிய கெடுதியையும் லக்ஷியஞ்செய்யாமல், தங்களுக்கும் பாஞ்சாலியைப்போன்ற பெண்டிர் உண்டென்பதை மறக்காமல், தர்மத்தையே கடைப்பிடித்து, கலங்காமல் தைர்யமாய்த் தங்களுக்குந் தோன்றின அபிப்பிராயத்தை வெளியிடவேண்டும். திரௌபதி பலமுறை கேட்டும், நாம் சும்மா விருப்பது தர்மமல்ல" வென்றான்.அவர்களோ அது நியாயமென்றாவது அநியாயமென்றாவது சொல்லவேயில்லை. அதைக் கண்டு விகர்ணன் "அரசர்களே! நான் பலமுறை கேட்டும் ஏன் மயங்குகிறீர்கள்? மறுமொழி சொல்லுங்கள். அல்லது சொல்லாம விருப்பதற்குக் காரணத்தையாவது தெரிவியுங்கள். நீங்கள் எப்படியிருந்தாலும், என் அபிப்பிராயத்தை ஒளிக்காமல் நான் சொல்லப்போகிறேன். ஒருவருடைய தயவாவது, கோபமாவது எனக்கு லக்ஷியமில்லை. சூது, வேட்டை, கள், சிற்றின்பம் என்ற இந்நான்கில் பற்றுள்ள மனிதன், தர்மத்தில் பற்றில்லாம விருப்பான். உலகத்தாரால் ஒருநாளும் ஒப்புக்கொள்ளப்படாத கார்யமான சூதாட்டத்திற்கு அழைக்கப்பட்டு தர்மபுத்திரர் ஒப்புக்கொண்டு திரௌபதியைப் பந்தயம் வைத்தாடினார். அப்பொழுது அதை ஒருவரும் ஆக்ஷேபிக்கவில்லையே. இவளோ, பாண்டவர்க ளெல்லோருக்கும் பொதுவான

வள். தர்மபுத்திரருக்கு இவளை ஏகதேசமாய்ப் பந்தயம் வைப்பதற்கு ஸ்வாதீனமில்லை. மேலும், இவளைப் பந்தயம் வைக்கும்படி சகுனி ஞாபகப்படுத்தி, தூண்டிவிட்ட பிறகே யுதிஷ்டிரர் சம்மதித்தார். மேலும், தன்னை சகுனிக்குப் பந்தயமாய் வைத்து அவனால் ஜயிக்கப்பட்டபிறகு இவர் துர்யோதனனுடைய பொருளானார். அதற்கு முந்தி இவருக்கு, ஒன்றைப் பந்தயம் வைப்பதற்கும் ஆடுவதற்கும் பாத்தியமுண்டு. தன் ஸ்வாதீனம் தவறினவருக்கு வேறொருவரைப் பந்தயம் வைக்கப் பாத்தியமெங்கே? ஒருவேளை, பத்தினி பர்த்தாவின் சரீரத்தில் பாதி ; தான் எந்நிலைமையிலும் அவளைக் கட்டுப்படுத்தலாமென்றால், இவர் தன்னைப் பந்தயம் வைத்தபொழுதே அவளும் வைக்கப்பட்டாள். இவர் தன்னைத் தோற்றபொழுதே, அவளையும் தோற்றார். ஆனால் அப்படித் தர்மபுத்திரர் எண்ணவுமில்லை, சகுனி எண்ணவுமில்லை, நாம் ஒருவரும் அப்படி எண்ணவுமில்லை. எண்ணினால் திரௌபதியைத் தனியாய்ப் பந்தயம் வைத்திருக்கமாட்டார். சகுனி அதற்கு சம்மதித்து ஆடியிருக்கமாட்டான். பாஞ்சாலியையும் ஜயித்தேனென்று சொல்லியிருக்கமாட்டான். மேலும், ஸஹோதரர்கள் மூத்தவனுடைய புத்திரர்களைப் போன்றவர்கள். புத்திரர்களோ பிதாவேயென்று சொல்லப்படுகிறது. தானே புத்திரனாய்ப் பிறக்கிறானென்கிற நியாயத்தால், அவர்கள் தன்னைத் தவிர வேறல்ல. இந்த யுதிஷ்டிரர் தன்பொருள்களையும் தம்பிகளையும், வரிசையாய்ப் பந்தயம் வைத்து ஆடவேண்டியதில்லை. முதலிலேயே தன்னைப் பந்தயமாய் வைத்தாடினால் போதும். தன்பொருளும் தானேயான தம்பிகளும் தன் பாதியான மனைவியும் அவருடன் ஜயிக்கப்படுவார்கள். இப்படிச் சூதாடின இருவரும் இவர்களைச் சேர்ந்தவர்களும் இங்குள்ள யாவரும் எண்ணவேயில்லை. ஆகையால் திரௌபதியைப் பந்தயம் வைத்தாடினது அதர்மம். அவள் ஜயிக்கப்படவில்லை. இந்த துஷ்டர்கள் இவளை மானபங்கம் செய்வதால், வேருடன் அழியப் போகிறார்க''ளென்றான். அதைக் கேட்டு ஸபையோர் விகர்ணனைப் புகழ்ந்து சகுனியை இகழ்ந்தார்கள்.

அப்பொழுது கர்ணன் மேற்சொன்ன காரணங்களுக்குப் பதிலளிக்கமுடியாமல் விகர்ணனைத் தூஷித்து, ஒன்றும் தெரியாத சிறுவனென்று கேலிசெய்து, ''துச்சாஸனா! பாண்டவர்களையும் திரௌபதியையும் வஸ்திரமில்லாமல் செய்யெ''ன்றான். இதைக் கேட்டவுடன் பாண்டவர்கள், மேல்வஸ்திரங்களை எறிந்துவிட்டு, ஸபையில் உட்கார்ந்தார்கள். பிறகு துச்சாஸனன், ஸபை நடுவில் திரௌபதியின் வஸ்திரத்தைப் பலாத்காரமாய் அவிழ்த்து இழுக்க ஆரம்பித்தான். அந்த ராஜபுத்திரி அந்த ஸமயத்தில் தன்னைக் காப்பாற்ற வேறொருவரும் இல்லையென்றறிந்து, தன் ஹிருதயத்தில் எப்பொழுதும் வஸிக்கும் ஸகலலோக நாதனான கண்ணனை நமஸ்கரித்து, ''சங்கம் சக்கரம் கதையென்ற திவ்யாயுதங்களை கையில் ஏந்தினவரே! செந்தாமரைக் கண்ணா! உம்மைச் சரணமடைந்த என்னை ரக்ஷியும். கிருஷ்ணா! துவாரகையில் வஸிப்பவரே! யாதவகுலத்தில் உதித்தவரே! எங்கிருக்கிறீர்? அநாதையாய் இந்நிலைமையை அடைந்த என்னை ஏன் கவனிக்காமலிருக்கிறீர்? எல்லாமறிந்த உமக்கு இந்தக் கௌரவர்கள் என்னை அவமானப்படுத்துவது மாத்திரம் தெரியவில்லையோ ? உமது பார்யையான லக்ஷ்மியைப்போல் நானும் ஓர் ஸ்திரீயல்லவோ? என்னைக் காப்பாற்றுவதற்கு வேறு யார் இருக்கிறார்களெ''ன்றாள். ஆயினும், தன் தேஹமுழுவதையும் நீண்ட தலைமயிரால் மறைத்துக்கொண்டு, தன் இடுப்பில் கட்டியிருக்கும் ஒற்றை வஸ்திரத்தின் முடிச்சை ஒரு கையால் பிடித்துக்கொண்டு பகவானைப் பிரார்த்தித்தாள். ஆகையால், தன்னைத் தானே காப்பாற்றிக்கொள்ள முடியுமென்ற எண்ணம் இன்னும் அவளுக்கு விலகவில்லை. அதை அறிந்த கண்ணன், அநுக்கிரஹம் செய்யவுமில்லை. மேலும் ஸர்வவியாபியான பகவானைத் துவாரகையில் இருப்பதாய் தியானித்தபடியால், அங்கிருந்து ஹஸ்தினபுரத்திற்கு வருவதற்கு சற்று நேரமாகுமல்லவா? அதற்குள் துச்சாஸனன் ''கௌரவர் உன்னை ஒன்று செய்ய நினைத்தால், கண்ணனும் அவனைப்படைத்தவனும் கண்ணெடுத்துப் பார்க்கவும் முடியுமோ'' வென்று இடுப்பு முடிச்சில் வைத்திருந்த கையை அடித்துத் தட்டிவிட்டான். ''ஆஹா! நம்மை நாம் காப்பாற்றிக்கொள்வோமென்ற அஹம்பாவம் இன்னும் விட

வில்லையே. கண்ணன் என் ஹிருதயத்தில் என்றும் குடிகொண்டிருக்க, அவரை எங்கேயோ இருப்பதாய் எண்ணின என் அக்ஞானத்தைச் சுடவேண்டு"மென்று, இரண்டு கைகளையும் விட்டு மெய் மறந்து "ஹே! ஹிருதய கமல வாஸா! வென்று வாய்விட்டுக் கதறினாள். ஸபையிலுள்ள ஸாதுக்கள் அனைவரும் கண்களை மூடிக்கொண்டார்கள். அவர்களை அறியாமல் கண்ணீர் தாரைதாரையாய்ப் பெருகிற்று. அந்த க்ஷணத்தில் துவாரகையில், ருக்மணியின் அந்தப்புரத்தில் கண்ணன் அவளுடன் சொக்கட்டான் ஆடிக்கொண்டிருந்தார். காய்களைக் கையிலெடுத்து உருட்டும்பொழுது 'ஆட்டக்காரர்கள் தங்களுக்கு ஜயத்தைக் கொடுக்கும்படியான ஏதாவது ஒரு வார்த்தையைச் சொல்வதுபோல் தானும் திரௌபதியை நினைத்து 'அக்ஷய' மென்று காய்களை உருட்டினார். திடீரென்று, யாதொரு காரணமுமில்லாமல் இப்படிச் சொன்னதென்னவென்று ருக்மணி கேட்க, சுருக்கமாய் அவளுக்கு சங்கதியைச் சொன்னார்.

துச்சாஸனன் திரௌபதியின் வஸ்திரத்தின் முடிச்சை இழுத்து அவளை நிர்வாணமாய்ச் செய்து விட்டோமென்று ஆரவாரிக்குமுன், அந்த வஸ்திரத்தின்கீழ் கண்ணைப் பறிக்கும்படியான வேறொரு வஸ்திரம் தோன்றிற்று. அவன் பிரமித்து, இதென்ன ஜாலமென்று, அதையும் உரிந்தான். அதின் கீழ் வேறொன்று தோன்றிற்று. இப்படி நூற்றுக் கணக்காய் நானா வர்ணங்களும் நானா தினுசுகளும் அலங்காரங்களும் வேலைப்பாடுகளுமுள்ள விலைமதிக்கக் கூடாத வஸ்திரங்கள், கண்ணனுடைய மாயையால் ஸமுத்திரத்தின் அலைகளைப்போல் ஒன்றின்பின் ஒன்றாய் வந்து கொண்டேயிருந்தன. துச்சாஸனன், தன்னால் கூடிய வரையில் அவைகளை அதிவேகமாய் உரிந்து கொண்டே யிருந்தான். கை சளைத்து, தலை கிறுகிறென்று சுழன்று, பூமியில் விழுந்தான். வஸ்திரங்களோ மலைமலையாய்க் குவிந்தன. ஸபையிலுள்ளவர்கள் அந்த ஆச்சர்யத்தைப் பார்த்து ஒன்றும் தோன்றாமல் பிரமித்து "இதுவும் லோகநாதனுடையகிருபை" யென்றார்கள். அவர்களை அறியாமல் ஓர் ஆனந்தக்களிப்பு அவர்களிடத்திலிருந்து கிளம்பிற்று. அதுவரையில் மெய்மறந்து பகவானையே தியானித்துக்கொண்டிருந்த திரௌபதி, அதைக் கேட்டு கண்களைத் திறந்து, தனக்கு யாதொரு அவமானம் நேராமல் கண்ணன் தன்னைக் காப்பாற்றினதையும், துச்சாஸனன் மூர்ச்சையடைந்து கிடப்பதையும், தேவர்களும் விரும்பக்கூடிய வஸ்திரங்கள் மலைமலையாய்க் குவிந்திருப்பதையும் கண்டு, பகவானுடைய அபாரக்கருணையைக் கொண்டாடி, கௌரவர்களாலும் மற்ற எவராலும் இனி தனக்கு யாதொரு தீங்கும் நேரிடாதென்று தைர்யமடைந்தாள். அந்த அபூர்வமான வஸ்திரங்களைக்கண்டு துர்யோதனன் ஆசைகொண்டு, தன் அந்தப்புர ஸ்திரீகளைத் தருவித்து இவைகளை உடுத்துக்கொண்டுவரும்படி கட்டளையிட்டான். அவர்கள் அப்படியே செய்து ஸபையில் பிரவேசிக்கும்பொழுது, பகவான் தன் மாயையை விலக்க, உடனே அந்த வஸ்திரங்கள் பட்டுப்பூச்சிகளைப்போல் பறந்து மறைந்தன. திரௌபதிக்குக் கௌரவர் செய்ய விரும்பின அவமானம், கௌரவ ஸ்திரீகளுக்கே பலித்தது. ஸபையிலுள்ள அரசர்கள் கௌரவர்களை சீ, சீ யென்று இகழ்ந்து திரௌபதியைக் கொண்டாடினார்கள்.

அப்பொழுது பீமன் கோபத்தால் உதடுகள் துடிக்கக் கையோடு கையை அறைந்து கர்ஜித்து, "உலகம் உண்டானது முதல் இதுவரை ஒரு மனிதனும் செய்யாத கோரமான பிரதிக்ஞையைச் செய்கிறேன். தேவர்களும் மனிதர்களும் மற்ற ஜீவகோடிகளும் இதற்கு ஸாக்ஷியாக இருக்கட்டும். இனி எவரும் இப்படிச் செய்யப் போகிறதுமில்லை. எங்களுடைய தர்ம பத்தினியான பாஞ்சாலியைத் தொட்டிழுத்து இப்படி ஸபையில் நிறுத்தி அவமானஞ் செய்த இந்த துச்சாஸனனுடைய மார்பைப் பிளந்து ரக்தத்தை இருகையாலும் குடிப்பேன். அதுவரையில் என் கதையால் அடிக்கப்பட்டுக் கிளம்பும் நீரையே குடிப்பேன். இப்படிச் செய்யத் தவறினால், என் முன்னோர்கள் அடைந்த நற்கதியை நான் அடையாதிருக்கக்கடவேன்" என்றான்.

KING'S MESSAGE

INDIAN REFORMS : : A GENERAL AMNESTY

A Gazette Extraordinary says ;—

Notification.

FORT ST. GEORGE, THE 24TH DECEMBER 1919.

The Royal Assent to the Government of India Bill lately passed by both Houses of Parliament in England having been signified, the following Royal Proclamation is published :—

Proclamation

George V. by the Grace of God, of the United Kingdom of Great Britain and Ireland and of the British Dominions beyond the seas, King, Defender of Faith, Emperor of India :

To My Viceroy and Governor-General, to the Princes of the Indian States and to all My subjects in India whatever race and creed :

GREETING :

1. Another epoch has been reached to-day in the annals of India. I have given My Royal assent to an Act which will take its place among the great historical measures passed by the Parliament of this Realm for the better Government of India and the greater contentment of her people. The Acts of 1773 and 1784 were designed to establish a regular system of administration and justice under the Honourable East India Company. The Act of 1833 opened the door for Indians to public offices and employment. The Act of 1878 transferred the administration from the Company to the Crown and laid the foundations of the public life which exists in India to-day. The Act of 1861 sowed the seed of representative institutions and the seed was quickened into life by the Act of 1909. The Act which has now become law entrusts the elected representatives of the people with a definite share of the government and points the way to responsible government hereafter. If, as I confidently hope, the policy which this Act inaugurates should achieve its purpose, the results will be momentous in the story of human progress : and it is timely and fitting that I should invite you to-day to consider the past and to join me in My hopes of the future.

Royal Trusteeship

2. Ever since the welfare of India was confided to Us it has been held as a sacred trust by Our Royal House and Line. In 1858 Queen Victoria of revered memory solemnly declared Herself bound to Her Indian subjects by the same obligations of duty as to Her other subjects ; and She assured to them religious freedom and the equal and impartial protection of the law. In His message to the Indian people in 1903 My dear Father King Edward VII, announced His intention to maintain unimpaired the same forms of humane and equitable administration. Again, in His Proclamation of 1908 He renewed the assurances which had been given fifty years before and surveyed the progress which they had inspired. On My accession to the Throne in 1910, I sent a message to the Princes and Peoples of India acknowledging their loyalty and homage and promising that the prosperity and happiness of India should always be to me of the highest interest and concern. In the following years I visited India and testified My sympathy for the people and My desire for their well-being.

Indian Self-Government

3. While these are the sentiments of affection and devotion by which I and My predecessors have been animated, the Parliament and the people of this Realm and My officers in India have been equally zealous for the moral and material advancement of India. We have endeavoured to give to her people the many blessings which Providence has bestowed upon Ourselves. But there is one gift which yet remains without which the progress of a country cannot be consummated: the right of her people to manage her affairs and safeguard her interests. The defence of India against foreign aggression is a duty, an Imperial interest and pride. The control of her domestic concerns is a burden which India may well aspire to take upon her shoulders. The burden is too heavy to be borne in full until time and experience have brought the necessary strength. But opportunity will now be given for experience to grow and for responsibility to increase with the capacity for its fulfilment.

Political Growth

4. I have watched with understanding and sympathy the growing desire of My Indian people for representative institutions. Starting from

small beginnings the ambition has steadily strengthened its hold upon the intellects of the country. It has pursued its course along constitutional channels with sincerity and courage. It has survived the discredit which at times and in places lawless men sought to cast upon it by acts of violence committed under the guise of patriotism. It has been stirred to more vigorous life by the ideals for which the British Commonwealth fought in the Great War, and it claims support in the part India has taken in our common struggles, anxieties and victories. In truth the desire after political responsibility has its source at the root of the British connexion with India. It has sprung inevitably from the deeper and wider studies of human thought and history which that connexion has opened to the Indian people. Without it the work of the British in India would have been incomplete. It was therefore with a wise judgment that the beginnings of representative institutions were laid many years ago. Their scope has been extended stage by stage until there now lies before us a definite step on the road to responsible Government.

Future Progress

5. With the same sympathy and with redoubled interest I shall watch the progress along this road. The path will not be easy and in marching towards the goal there will be need for perseverance and for forbearance between all sections and races of My people in India. I am confident that those high qualities will be forthcoming. I rely on the new popular assemblies to interpret wisely the wishes of those whom they represent and not to forget the interests of the masses who have yet to be admitted to the franchise. I rely on the leaders of the people, the ministers of the future, to face responsibility, to sacrifice much for the interest of the State, remembering that true patriotism transcends party and communal boundaries; and while retaining the confidence of the legislatures, to co-operate with My officers for the common good in sinking unessential differences and in maintaining the essential standpoint of a just and generous Government. Equally do I rely upon My officers to respect their new colleagues and to work with them in harmony and kindliness to assist the people and their representatives in an orderely advance towards free institutions; and to find in their new task opportunities to fulfil as in the past the highest purpose of faithful service to My people.

General Amnesty

6. It is My earnest desire at this time that so far as possible any trace of bitterness between My people and those who are responsible to My government should be obliterated. Let those who in their earnestness for political progress have broken the law in the past respect it in the future. Let it become possible for those who are charged with the maintenance of peaceful and orderly government to forget the extravagances they have had to curb. A new era is opening. Let it begin with a common determination among My people and My officers to work together for a common purpose. I therefore direct my Viceroy to exercise in my name and on my behalf my Loyal clemency to political offenders in the fullest measure which in his judgment is compatible with public saftey. I desire him to extend it on this condition to persons who for purposes of State or under any special or emergency legislation are suffering imprisonment or restraint upon the liberty. I trust that this leniency will be justified by the future conduct of those whom it benefits and that all My subjects will so demean themselves as to render it unnecessary to enforce the laws for such offences hereafter.

Princes' Chamber

7. Simultaneously with the new constitution in British India I have assented to the establishment of a Chamber of Princes. I trust its counsel may be fruitful of lasting good to the Princes and the States themselves and may advance interests which are common to their territories and to British India and may be to the advantage of the Empire as a whole. I take this occasion again to assure the Princes of India of My determination ever to maintain unimpaired their privileges, rights and dignities.

Prince of Wales

8. It is My intention to send My dear son, the Prince of Wales, to India next winter to inaugurate on My behalf the new Chamber of Princes and the new Constitution in British India. May he find mutual good will and confidence existing among those on whom will rest the future service of the country, so that success may crown their labours and progressive enlightenment may attend their administration. And with all my people I pray to Almighty God that by His wisdom and under His guidance India may be led to greater prosperity and contentment and may grow to the fulness of political freedom.

இந்திய அரசியல் திருத்தச் சட்டம்

சக்கரவர்த்தியின் அங்கீகாரம் பெற்றுவிட்டது :: மன்னர்பிரான் அனுப்பியிருக்தும் ஸ்ரீமுகம்

ராஜீயக் குற்றவாளிகளை மன்னிப்பதைப்பற்றி யோசனை

போர்ட் செயின்ட் ஜார்ஜ் கெஜட்டின் விசேஷப்பிரசுரம் அறிவிப்பதாவது:—

இங்கிலாந்திலுள்ள இரண்டு பார்லிமெண்ட் சபைகளினாலும் சமீபத்தில் நிறைவேற்றப்பட்ட அரசியல் திருத்த மசோதாவானது மன்னர்பிரானின் அங்கீகாரத்தைப் பெற்றுவிட்டதால், மாட்சிமைதங்கிய சக்கரவர்த்தியினால் அடியிற்கண்ட பஹிரங்க அறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது.

அறிக்கை

எனது அன்புள்ள கவர்னர் ஜெனரலுக்கும், இந்திய சமஸ்தானாதிபதிகளுக்கும், இந்தியாவிலுள்ள எல்லா வகுப்புப் பிரஜைகளுக்கும் இதன் மூலமாக அறிவிப்பதாவது:--இந்தியாவின் சரித்திரத்திலேயே இன்று, மற்றோர் புதிய வாழ்வு ஏற்பட்டிருக்கிறது. இந்தியாவின் நல்ல ஆட்சிக்காகவும், இந்தியப்பிரஜைகள் விசேஷ திருப்தியுற்றிருப்பதற்காகவும் இத்தேசத்திலுள்ள பார்லிமெண்டினால் இயற்றப்பட்டுள்ள சட்டங்களில் மிகவும் முக்கியமானதாகிய சட்டமொன்றுக்கு, இன்று எனது அங்கீகாரத்தைக் கொடுத்துவிட்டேன். 1773-ம் வருஷத்திய சட்டமும், 1784-ம் வருஷத்திய சட்டமும், ஈஸ்ட் இந்தியா கம்பெனியாரின் விசாரணையில் இந்தியாவில் நிர்வாக முறையையும் நீதியையும் ஒழுங்காக அமைப்பதற்காக ஏற்பட்டவை. 1833-ம் வருஷத்தில் இயற்றப்பட்ட சட்டத்தினால், இந்தியர்கள் சர்க்கார் உத்தியோகங்களைப் பெற இடமுண்டாயிற்று. 1858-ம் வருஷத்தில் இயற்றப்பட்ட சட்டமானது, தேச நிர்வாகத்தை கம்பெனியாரிடமிருந்து சக்கரவர்த்தியிடம் மாற்றி இப்பொழுது இந்தியாவில் நிலவிவரும் பொது வாழ்விற்கு அடிப்படை போட்டது. 1861-ம் வருஷத்திய சட்டமானது இந்தியாவில் பிரதிநிதித்துவ ஸ்தாபனங்களுக்கு விதையிட்டது. அந்த விதையானது 1909-ம் வருஷத்திய சட்டத்தினால் வலுவுற்றது. இப்பொழுது இயற்றப்பட்டிருக்கும் சட்டமானது தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனப்பிரதிநிதிகளுக்கு, தேச நிர்வாகத்தில் குறிப்பிட்ட ஓரளவு ஆதிக்கத்தைக் கொடுத்து, இனி ஜவாப்தாரியான ஆட்சியை அவர்கள் பெறுவதற்கு வழிகாட்டுகிறது. எந்த நோக்கத்துடன் இந்த சட்டம் இயற்றப்படுகிறதோ, அந்த நோக்கமானது, நான் மனப்பூர்வமாய் எதிர்பார்க்கிறபடி பூர்த்தியடைந்தால், மானிட வாழ்வின் அபிவிருத்தியிலேயே அது ஒரு குறிப்பிடத்தகுந்த சம்பவமாகும். ஆகவே, இதுகாறும் சென்றுபோயிருப்பவைகளை உங்களுக்கு ஞாபகப்படுத்தி, இனி எதிர்கால வாழ்வைப்பற்றி எனக்குத் தோன்றியிருக்கும் எண்ணங்களில் கலந்து கொள்ளும்படி உங்களை வேண்டிக்கொள்ளுதல் பொருந்தும்.

2. இந்தியாவின் க்ஷேமத்தை எங்கள் பொறுப்பில் விட்ட நாள் முதலாய், அதை தெய்விகத் தன்மையுடன் காத்து வருகின்றோம். இக்கடமையைக் கொண்டே 1858-ம் வருஷத்திலும், என்றும் ஞாபகத்தில் வைத்திருக்கக்கூடிய விக்டோரியா மஹாராணியாரும் மற்றையப் பிரஜைகளினிடம் செலுத்தும் கடமையைப்போலவே இந்தியப் பிரஜைகளிடத்தும் செலுத்துவதாக ஒரு அறிக்கை வெளியிட்டனர். அவர், மத சுதந்தரமும் பட்சபாதமற்ற நியாய வரம்பும் அளிப்பதாகவும் உறுதி கூறினர். 1903-ம் வருஷம் என் அரும் தந்தையார் ஏழாம் எட்வர்ட்சக்கரவர்த்தியும் மேற்குறிப்பிட்டகாருண்ய முறைகளையே அனுஷ்டிப்பதாக இந்திய ஜனங்களுக்கு அனுப்பிய செய்தியில் குறிப்பிட்டிருந்தார். 1908-ம் வருஷத்தில் அனுப்பிய மற்றொரு செய்தியில் அவர் 50 வருஷங்களுக்குமுன் கொடுக்கப்பட்ட உறுதிமொழிகளைப் புதுப்பித்து அவைகளினால் உண்டான விருத்தியையும்பார்வையிட்டார். 1910-ம் வருஷம் நான் சிம்மாசனம் ஏறியபோதும் இந்தியர்களின் ராஜபக்தியையும் விசுவாசத்தையும் பாராட்டி இந்தியாவின் அபிவிருத்தியில் நான் மிக்க அபிமானம் கொண்டிருப்பதாகவும் அதை முன்னுக்கு கொண்டு வருவது என்னைப் பொருத்ததே யென்றும் சுதேச அரசர்களுக்கும், இந்தியாவிலுள்ள ஜனங்களுக்கும் ஒரு செய்தி அனுப்பினேன். அதற்கடுத்த வருஷங்களில் நான் இந்தியாவிற்கு விஜயஞ் செய்து இந்தியர்களின் க்ஷேமத்தில் நான் கொண்டிருக்கும் விருப்பத்தையும் அநுதாபத்தையும் காட்டினேன்.

3. என்னுடையதும் எனக்கு முன்னிருந்தவர்களுடையதும் கொள்கையும் அன்பும் ஆதரவும் இங்ஙனமிருக்க, பார்லிமெண்டு சபையாரும் ஏகாதிபத்தியத்திலுள்ள குடி ஜனங்களும் இந்தியாவிலுள்ள என் உத்தியோகஸ்தர்களும், எங்களைப்போலவே இந்தியா எல்லாத் துறைகளிலும் விருத்தியடையும்படி செய்ய ஊக்கம் கொண்டிருக்கின்றனர். எங்களுக்குக் கடவுளால் அளிக்கப்பட்ட எல்லா செல்வத்தையும் இந்திய ஜனங்களுக்குக் கொடுக்கவே முயற்சிக்கின்றோம். ஆனால் சொந்த விஷயங்களையும், தங்களுடைய சொந்த நன்மைகளையும் தாங்களே பாதுகாக்கும் உரிமை அவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டி

யது அவசியம். அது இன்னும் கொடுக்கப்படாமலேயிருக்கின்றது. அந்நிய நாட்டாரின் கையிலிருந்து இந்தியாவைப் பாதுகாப்பது ஒரு கடமை. அது ஏகாதிபத்தியத்திற்கும் பெருமை. நமக்கும் நன்மை. தன் வீட்டுக் காரியத்தைத் தானே பார்த்துக் கொள்ள இந்தியர் ஆசைப்படுவது கிரமமே. ஆனால் அந்த பாரத்தைப் பூராவும் இப்பொழுதே மேற்போட்டுக்கொள்ளுவது முடியாதாகையால், சிறிது அனுபோகம் அவர்களுக்கு ஏற்படவேண்டியது அவசியம். அந்த அனுபோகம் அவர்களுக்குண்டாகும்படி செய்ய இப்போது நாம் சந்தர்ப்பம் கொடுக்கப் போகின்றோம்.

4. பிரதிநிதித்துவமான ஸ்தாபனங்களைப்பற்றி எனது இந்தியப் பிரஜைகளுக்கு வளர்ந்து வந்திருக்கும் ஆவலை, நான் அனுதாபத்துடன் கவனித்துவந்திருக்கிறேன். இந்த ஆவலானது கொஞ்சம் கொஞ்சமாக உண்டாகி, நாளடைவில் கல்வியாளர்களின் மனதில் வேரூன்றிவிட்டது. அந்த ஆவலானது நாளடைவில் சரியான துறைகளில் உண்மைத்தனத்துடனும் மனோதைரியத்துடனும் வெளியிடப்பட்டு வந்திருக்கிறது. தேசாபிமானம் என்று சொல்லிக்கொண்டு அதிக்கிரமமான செயல்களை சில அயோக்கியர்கள் செய்துவந்தும், அதிலிருந்தும் அந்த ஆவல், பேர் சொல்லி வளர்ந்து வந்திருக்கிறது. எந்த மேலான நோக்கங்களைக்கொண்டு பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமானது போர்க்கோலங் கொண்டதோ, அதே நோக்கங்களினால் அந்த ஆவலானது வலுவுற்றது. இந்தியா நம்முடைய பொதுப் போராட்டத்தில் கலந்துகொண்டும், நம்முடைய கவலைகளையும் வெற்றிகளையும் பங்கிட்டுக்கொண்டுமிருந்ததை அது தன்னுடைய லட்சியங்களுக்கு ஆதாரமாகக் குறிப்பிடுகிறது. பிரிட்டிஷாருடைய சம்பந்தம் இந்தியாவுக்கு இருந்து வந்ததே, இந்தியாவுக்கு ராஜீயப் பொறுப்பைப் பெற ஆவலுண்டானதற்கு முக்கிய காரணம். அவ்வித சம்பந்தத்தினால் ஏற்பட்ட உணர்ச்சிகளிலிருந்தே இந்த ஆவலானது வலுத்துவந்திருக்கிறது. அவ்வித உணர்ச்சியை உண்டுபண்ணியிராவிட்டால் பிரிட்டிஷாரின் ஆட்சியே பூர்த்தியுள்ளதாகாது. ஆகவேதான் சில வருஷங்களுக்குமுன் வெகு புத்திசாலித்தனத்துடன் பிரதிநிதி ஸ்தாபனங்களுக்கு அஸ்திவாரம் போடப்பட்டது. அது நாளடைவில் கொஞ்சம் கொஞ்சமாகப் பெருகி, இப்பொழுது ஜவாப்தாரியான ஆட்சிக்கு சரியானபடி ஏற்பட்டிருக்கிறது.

5. எவ்வளவு அனுதாபத்துடன் இந்தியாவின் ஆவலை நான் கவனித்து வந்திருக்கிறேனோ, அவ்வளவு அனுதாபத்துடனேயே இம்முறையினால் ஏற்படும் அபிவிருத்தியையும் நான் கவனித்து வருவேன். இந்த வழியானது இலகுவாயிராது. முடிவான லட்சியத்தைஅடைவதில் இந்தியாவிலுள்ள என்னுடைய எல்லா வகுப்புப் பிரஜைகளும் விடாமுயற்சியும் பொறுமையும் கொண்டிருக்கவேண்டும். அத்தகைய உத்தம குணங்கள் காணப்படுமென்றே நான் நம்பியிருக்கிறேன். புதிதாக ஏற்படப்போகும் ஜனப்பிரதிநிதி சபைகளில் ஸ்தானம் பெறுபவர்கள் தாங்கள் யார் யாருடைய பிரதிநிதியாகத் தெரிந்தெடுத்தனுப்பப்பட்டிருக்கிறார்களோ அவர்களுடைய உண்மையான லட்சியங்களை வெளியிட்டுவருவார்களென்றும், இன்னமும் ஓட் சுதந்தரம் பெறாமலிருக்கும் சாமான்ய ஜனங்களின் விஷயத்தில் அலட்சியமாயிருந்துவிடமாட்டார்களென்றும் நான் நம்பியிருக்கிறேன். உண்மையான தேசாபிமானத்திற்கு கட்சிபிரதிகட்சி பேதங்கள் கிடையாதென்பதை ஜனத் தலைவர்களும், இனி ஏற்படப்போகும் மந்திரிகளும் உணர்ந்து, தங்களுக்கு ஏற்படும் பொறுப்பை மதித்து, தேசத்தின் க்ஷேமத்தை உத்தேசித்து அவசியமான தியாகங்களைச் செய்ய சித்தமாயிருப்பார்களென்றே நம்பியிருக்கிறேன். அவர்கள் சட்டசபைகளின் மதிப்பை இழக்காமலிருந்து வருவதுடன், பொது நன்மையை உத்தேசித்து அனாவசியமான விஷயங்களில் அபிப்பிராய பேதங்களை விடுத்து, என்னுடைய உத்தியோகஸ்தர்களுடன் ஒத்துழைப்பார்களென்றும், நீதியாக கவர்ன்மெண்டு நடந்துவரவேண்டிய மார்க்கத்தை அனுஷ்டிப்பார்களென்றும் நம்பியிருக்கிறேன். அதைப்போலவே என்னுடைய உத்தியோகஸ்தர்களும் தங்களுடைய சகாக்களிடம் மதிப்பு வைத்து அவர்களுடன் ஒற்றுமையாகவும், அன்புடனும் நடந்துகொள்வார்களென்று நம்புகிறேன். சுயேச்சை ஸ்தாபனங்கள் அபிவிருத்தியுற, ஜனங்களுக்கும் அவர்களுடைய பிரதிநிதிகளுக்கும் என்னுடைய உத்தியோகஸ்தர்கள் உதவியாயிருப்பார்களென்று நம்புகிறேன். எப்பொழுதும்போலவே, என்னுடைய பிரஜைகளுக்குத் தங்களுக்குள்ள கடமையை நிறைவேற்றிவைக்க என்னுடைய உத்தியோகஸ்தர்கள் இப்பொழுது தக்க சமயம் வாய்த்திருப்பதை அறிந்து அதன்படியே நடந்துகொள்வார்களென்று நம்புகிறேன்.

6. எனது பிரஜைகளுக்கும் என்னுடைய கவர்ன்மெண்டுக்கு ஜவாப்தாரியாயிருப்போருக்கும் பரஸ்பரம் இருக்கக்கூடிய மனக்கசப்புஅடியோடு ஒழிந்துபோகும்படி கூடுமானவரையில் பார்த்துக் கொள்ள வேண்டுமென்பது என்னுடைய விருப்பம். ராஜீய முற்போக்குக்கு ஆசைப்பட்டு, இதுவரையில் சட்டவிரோதமாய் நடந்தவர்கள் இனியாவது சட்டத்தை மீறி நடவாதிருக்கட்டும். சமாதானமாயும் ஒழுங்காயும் ஆட்சியை நடத்தும் பொறுப்பை வகித்தவர்கள், தாம் ஏற்கெனவே போராடவேண்டியிருந்த அதிக்கிரமங்களை மறந்துவிடுவது சாத்தியமாகட்டும். ஒரு

குற வழக்கும் இடை வழக்கும் கொஞ்சத்தில் தீராது.

புதிய சகாப்தம் ஆரம்பித்திருக்கிறது. எனது பிரஜைகளும் எனது உத்தியோகஸ்தர்களும் ஒரு பொதுவான நிர்மானத்துடன் ஒத்துழைக்க ஆரம்பிக்க வேண்டும். இத்தகைய காரணங்களை முன்னிட்டு, எனது (ராஜப்) பிரதிநிதியை அவரிஷ்டப்படி ராஜீயக் கைதிகளுக்கு என் பெயரால் தாராளமாய் மன்னிப்புக் கொடுக்கும் வண்ணம் நான் ஆக்ஞாபிக்கிறேன். அப்படிச் செய்வதனால், பொதுஜன க்ஷேமத்துக்கு எவ்விதத்திலும் குறைவு வராதபடியும் அவர் பார்த்துக் கொள்வார். ராஜாங்கக் குற்றங்களுக்காகவும், அவசரச் சட்டங்களின் கீழும், தண்டிக்கப்பட்டுச் சிறைவாசம் செய்து வருவோரும், மற்றும் சுயேச்சையை இழந்தவர்களும், விடுதலையடையும்படி. ராஜப்பிரதிநிதி பார்த்துக் கொள்வார். அவ்வாறு மன்னிக்கப்பட்டவர்கள் இனிமேலாவது சரியாய் நடந்துகொண்டு, அப்பேர்ப்பட்ட குற்றங்கள் மறுபடியும் செய்யாமலிருப்பார்களென்று நம்புகிறேன்.

7. புதிய திருத்தங்கள் அனுஷ்டானத்துக்கு வரும்போது, மன்னர் சபையொன்றும் ஸ்தாபிக்க நான் சம்மதித்து விட்டேன். சிற்றரசர்களுக்கும் சமஸ்தானாதிபதிகளுக்கும் அதனால் நன்மை ஏற்படுமென்று நினைக்கிறேன். இந்திய மன்னர்களின் சுதந்தரங்களையும் கௌரவத்தையும் அப்படியே பாதுகாக்க நான் நிர்மானித்திருக்கிறேன். அதையும் இதன் மூலமாய்த் தெரியப்படுத்த விரும்புகிறேன்.

8. புதிய அரசியல் திருத்தத்தையும் புதிய மன்னர் சபையையும் இந்தியாவில் ஆரம்பித்து விட்டு வருவதற்காக எனது அருமைப் புத்திரனாகிய **வேல்ஸ் இளவரசனை** நான் அடுத்தவருஷம் இந்தியாவுக்கு அனுப்ப உத்தேசிக்கிறேன். இந்தியாவின் வருங்கால நிர்வாகத்துக்கு ஜவாப்தாரியா யிருக்கப் போகிறவர்கள், பரஸ்பரம் ஒற்றுமையும் நம்பிக்கையும் காட்டுவதை, எனது குமாரர் நேரில் பார்ப்பது சாத்தியமாகு மென்று நம்புகிறேன். அவ்வாறு ஒத்துழைத்தால் அவர்களுடைய உழைப்பு நல்ல பலன் தந்து, நிர்வாகமும் இனிது நடைபெறுமென்பது நிச்சயம். எல்லாம் வல்ல கடவுள், நல்ல புத்தி கொடுத்து ஒழுங்கான வழியைக் காட்டி, இந்தியா எப்போதையும்விட அதிக சுபிக்ஷமும் திருப்தியும் அடைந்து, ராஜ்ய சுயேச்சையைப் பூர்ணமாய்ப் பெற்று வாழும்படி செய்யவேண்டுமென்று நான் பிரார்த்திக்கிறேன்.

பிரகிருதி சாஸ்திரம்

PHYSICAL SCIENCE

[ஸ்ரீமான் ஏ. வரதாசாரியாரவர்கள், பி. ஏ., எல். டி.]

முன்னொரு ஸஞ்சிகையில் ஜடப்பொருளின் சாமான்ய தர்மங்களும், பருமன், கனபரிமாணம் அபேத்யத்துவம் ஆகிய மூன்று குணங்களும் சொல்லப்பட்டன. மற்றைய தர்மங்களைப் பற்றி சற்று கவனிப்போம்.

உலகத்திலுள்ள ஜடபதார்த்தம் ஒவ்வொன்றும் தன் நிலைமையைத் தானே மாற்றிக் கொள்ளமுடியாத இயற்கையான இயலாமை யுள்ளது. சலனமற்றிருக்கும் ஜடவஸ்துவானது தனக்குப் புறம்பான ஏதாவது சக்தி விசேஷத்தால் (force) தாக்கப்பட்டாலொழிய தனது ஸ்திதியைவிட்டு விலகாது. சலித்துக் கொண்டிருக்கும் பதார்த்த விஷயத்திலும், சலனத்தின் திசை அல்லது வேகம் மாற வேண்டுமானால் ஏதாவது விசை அவ்வஸ்துவின்மேல் தாக்கவேண்டும்.

ஒரு கல்லை ஓரிடத்தில் வைத்தால், அது அசையாமல் அவ்விடத்திலே நிற்பதையும் அதைத் தள்ளி அல்லது இழுத்தாலொழிய அது நகராம லிருப்பதையும் நாடோறும் நாம் பார்க்கலாம். சமமாயும், வழவழப்பாயுமுள்ள தரையின்மீது ஓர் பந்தை உருட்டிவிட்டால் அது நேர் வரியாய் ஒரேவிதமான கதியுடன் போய்க்கொண்டிருக்கும். அதன் மார்க்கத்தில் ஏதாவது இடையூறு நேரிட்டாலொழிய, அதன் சலனத்தின் திக்கு அல்லது வேகத்தின் ஏற்றக்குறைவு ஏற்படாது. அசைவற்றிருக்கும் பதார்த்தம் தானே சலிப்பதற்கோ, சலிக்கும் வஸ்துவானது நேர்கோட்டை விட்டு வேறு திக்கில் சலித்தல், வேகம் குறைதல், அதிகரித்தல், சலனமே நசித்து அசைவற்றிருத்தல் ஆகிய மாறுதல்களில் ஏதாவது ஒன்று அல்லது மேற்பட்டவைகளைத் தானாகவே அடையவோ, இயல்பாய் சக்தியற்றது. இவ்விதம் ஜடபதார்த்தம் தன் நிலைமையைத் தானாகவே மாற்றிக்கொள்ள முடியாத சக்தியின்மைக்கு, அசேஷ்டனம் அல்லது ஜடத்துவம் (Inertia) என்று பெயர். இவ்விதம் ஜடவஸ்து

வின் இயற்கையான அசேஷ்டனத்தை விவரிக்கும் நியமத்தை ஆங்கிலேய பாஷையில் நியூடன் என்னும் பிரகிருதிசாஸ்திர வித்வான் கண்டுபிடித்துள்ள சலனவிதிகளில் முதன்மையான ஒழுங்கு (Newton's first law of motion) எனச் சொல்லுவார்கள். இவர் இந்த நியமத்தைப் பூர்வத்தில் வெகு சிரமப்பட்டு அநேக பரீக்ஷணங்களால் கண்டுணர்ந்து கூறியதாகச் சொல்லப்படுகிறது.

மேற்சொன்ன அசேஷ்டனம் என்னும் குணவிஷயமாய் நமது அனுபவத்தில் பலவித உதாரணங்களையும் பரீக்ஷணங்களையும் காணலாம்.

1. ஜலம் நிறைந்த ரீஒ டம்ளர் அல்லது வேறு பாத்திரத்தை திடீரென்று முன்பக்கமாய் நகரும்படி தள்ளினால் அதிலுள்ள ஜலம் பின்பக்கமாய் சிந்தும். நாம் திடீரென்று தள்ளுவதால் ஏற்படும் விசை (force) யானது பாத்திரத்தைத் தாக்கி அதைச் சலிக்கும்படி செய்கிறது. அதன் மேற்பாகத்திலுள்ள ஜலத்துக்கு, அவ்விசை போக ஸாவகாசமில்லாததால் தன் பூர்வ ஸ்திதியிலேயே சலனமற்று நின்று பிறகு ஆதாரம் ஒன்றுமில்லாமையால் கீழே சிந்துகிறது. மேற்சொன்ன பாத்திரத்தை மேல்ல நகர்த்தினால் ஜலம் சிந்தாமலிருக்கும்படி செய்யலாம். இதன் காரணம் பாத்திரத்தில் தாக்கும் சக்தி ஜலத்திற்கும் பரவி, இரண்டையும் ஒரே புறமாய்ச் சலிக்கும்படி செய்கிறது.

2. ரயில்வண்டி, டிராம்வண்டி, இதர வண்டிகளிலும் நாம் உட்கார்ந்திருக்கும்போது, வண்டி திடீரென்று புறப்பட்டால் நமது மேல்பாகம் பின் புறமாய் சாய்வதை நாம் அநுபவத்தில் பார்க்கிறோம். வேகமாய் ஓடிக்கொண்டிருக்கும் வண்டி திடீரென நின்றால் நாம் முன்புறம் சாய்ந்துவிழுகிறோம்.

3. நாம் வேகமாய் ஓடும்பொழுது காலில் கல் முதலியவை தடுக்கினால் முகங்குப்புற விழுகிறோம். ஓடும் வண்டியிலிருந்து திடீரென இறங்கினால், முகங்குப்புறவோ அல்லது மல்லாக்கவோ விழுவது ஸகஜம். ஓடும் வண்டியில் ஏறும்போதும், சலிக்கும் வண்டியிலிருந்து இறங்கும்போதும் நாம் விழாமல் நிர்வகிப்பதற்கு அப்பியாசம் வேண்டும். டிராம் வண்டியில ஏறி இறங்குவதற்காக ஏற்பட்டுள்ள பக்கப் பலகையில் நாம் சாவதானமில்லாமல் நிற்கும்போது வண்டியானது அதன் பாதையிலுள்ள வளைவில் (curve) விரைவாய் ஓடித் திரும்பினால், வண்டி திரும்புவதற்கு முன் ஓடின திசை நேராகவே நாம் சாய்ந்து, அச்சமயம் வண்டியில் உறுதியாய் கைப்பிடித்துக்கொள்ளாவிட்டால் கீழே விழும்படியும் நேரிடும். இது சென்னைப்பட்டணம் போன்ற இடங்களில் டிராம் வண்டியில் பிரயாணம் செய்பவர்களுக்கு அனுபவ சித்தமாகவோ அடிக்கடி திருஷ்டிகோசரமாகவோ ஏற்படும். சலிக்கும் வஸ்துவுக்கு இடையூறு நேரிட்டாலொழிய நேர்கோடாய்ச் செல்வதே ஸஹஜம் என்று இதனால் தெரிந்துகொள்ளலாம்.

4. ஸைகில், குதிரை இவைமீது ஸவாரி செய்யும்போது ஸைகிலோ குதிரையோ திடீரென்று நிற்க நேர்ந்தால், ஸவாரி செய்பவர் முன்புறமாய்ச் சாயும்படி தள்ளப்படுவதையும் நாம் அடிக்கடி பார்க்கலாம்.

5. நாம் எழுதும் பேனாவை உதறி ஆட்டும்போது அதிலுள்ள மசி கீழே விழுவதும், தூசி படிந்த கம்பளம் முதலியவற்றைத் தூக்கிப் பிடித்துக்கொண்டு கோலால் தட்டும்போது, தூசி விலகுவதும் மேற்சொன்ன அசேஷ்டனம் என்னும் ஜடவஸ்துவின் குணத்தா லுண்டாவதே.

ஆரியமத உபாக்கியானத்தைப்பற்றி தேசபக்தன் எழுதுவது.—* * மனித வாழ்க்கைக்கு இன்றியமையாத வேண்டற்பாலனவாய் ஒழுக்கம், பக்தி, கடமை முதலியவற்றைச் சரித்திர வடிவாகப் படிப்போர் மனதில் பசுமரத்தாணிபோல் பதியுமாறு எளிய தமிழ் நடையில் எழுதியிருக்கின்றார். இளமையில் இந்நூலை வாசிப்போர், வயதில் எல்லாவித நற்குணங்களையும் பெற்றுத் தேசத்துக்கு நலஞ்செய்பவ ராவார் என்பதிற் சந்தேகமில்லை. தற்கால நாகரிகம் என்னும் விஷயம் இந்தியாவை எரித்து வரும் இந்நாளில், இந்தியாவின் பண்டைப் பெருமைகளை நிறுத்தவல்ல இத்தகைய நூல்கள் வெளிவருதல் வேண்டுமென்பது எமது கோரிக்கை. இந்நூல் வாசக பாடமாகவும், சமய பாடமாகவும் ஆண் பெண் பாடசாலைகளில் போதிக்கப்படல்வேண்டும். இந்நூல் சிறுவர் சிறுமியர் உள்ளத்தைக் கவரத்தக்கவாறு எழுதப்பெற் றிருப்பது பாடசாலை அதிகாரிகள் கவனிக்கத் தக்கது. இடையிடையே கதைகளுக்கேற்ற படங்களும் அமைக்கப்பெற்றிருக்கின்றன. இரண்டு பாகங்களும் விலை ரூ. 1-2-0.

வாலிபச் சாரணன்

THE BOY SCOUT

[ஸ்ரீமான் கி.சி. இராமஸ்வாமி அய்யர் அவர்கள் பி.ஏ., எல்.டி.]

சாரண நீதிகளையும் அவற்றின் ஆழ்ந்த கருத்துக்களையும் 'மெல்லிய பாதம்' நன்கு அறிந்தபின், சாரண ரகஸ்யக் குறிப்பை அறிய வேண்டும். இக் காலத்தில் நாகரீகம் பரவியுள்ள தேசங்களி லெல்லாம் வாலிபச் சாரணர்கள் இருக்கின்றனர். அவர்கள் எப்பொழுதும் சாரண உடையை தரித்துக்கொண் டிருக்கமாட்டார்கள். ஆகையால் ஓரிடத்திற்கு வாலிபச் சாரணன் போகும் போது அவன் பலரைச் சந்திக்கிருன். அவர்களிற் சிலர், வாலிபச் சாரணர்களா யிருக்கலாம். அவர்களுடைய உதவி வாலிபச் சாரணனுக்கு மிகவும் அவசியமா யிருக்குமாகையால், அவ்வுதவியை ஒவ்வொரு வாலிபச் சாரணனும் அடைய விரும்பவேண்டும். அப்படியாயின், சாரணர்கள் ஒருவரையொருவர் அடையாளம் கண்டுபிடிப்பது எப்படி? தமக்குள் ஏற்பட்டுள்ள சங்கேதக் குறியினுல் தான். அது என்னவெனில்; ஓர் வாலிபச்சாரணன் மற்ருெருவன் என்று யூகிப்பானுனல், அவன் தன் எதிரிலிருப்பவன் அறியும்படி சங்கேதக் குறி செய்வான். எதிரிலிருப்பவன் வாலிபச் சாரணனுயின், அவன் அதே சைகை செய்கிருன். சாரண னில்லாவிட்டால் அவன் இவ்விரகசியக் குறியை கவனிக்காது சென்று விடுகிருன்.

வாலிபச் சாரணக்குறி மிகவும் கடினமானதன்று. வலது கையை உயர்த்தி, வலதுகையிற் சுண்டுவிரலின்மீது வலதுகையின் பெருவிரல் அழுத்திக்கொண் டிருத்தல்வேண்டும். அப்பொழுது ஆள்காட்டிவிரலும், நடுவிரலும், மோதிரவிரலும் நேரே நிற்கின்றன. இதுவே வாலிபச்சாரணனின் ரகசியக் குறி. இக்குறியே சிற்சில வேளைகளில் 'சலாம்' குறியாகவும் பிரயோஜனப்படும். இக்குறியை நன்ருய்ச் செய்ய அறிந்தபிறகு, ரகஸ்யமாக வாலிபச் சாரணர்களுக்குத் தகுந்தபடி, ஸமாசாரம் தெரிவித்தல், தூரத்திலுள்ளவர்களை அழைத்தல், வெளியே போகச் சொல்லல், ஒன்று கூடச் சொல்லல் முதலியவைகளுக்குத் தகுந்த ஸங்கேதங்களை அறியவேண்டும். இச்சங்கேதங்களை மூன்று விதமாகத் தெரிவிக்கக்கூடும்- (1) ஊதுகுழல் (2) கொடி (3) வாலிபச்சாரணனின் இரு கைகள். ஆகையால் 'மெல்லிய பாதம்' இவைகளில் தேர்ச்சி யடையவேண்டும். இவைகளைப்பற்றின விவரங்கள் பின்பு விஸ்தரித்து கூறப்படும்.

வேறு சில குறிகளும் இருக்கின்றன. அவைகள், வாலிபச் சாரணர்க்கும் அவர் முறையில் பழகியவர்களுக்கே பொருள் விளங்கும். மேலும் இவை அனுபோகத்தாலேயே விருத்தியடையும். இக்குறிகளில் முக்கியமானவை, சாரணர் ஒருவர்க்கொருவர் தாம் போகும் வழியைத் தெரிவித்துக்கொள்வது, நீர் இருக்குமிடத்தை பின் வருவோருக்கு அறிவிப்பது, சமாசாரங்கள் எழுதப்பட்ட கடிதம் முதலியவை பத்திரப்படுத்தப்பட் டிருக்குமிடத்தைக் காண்பிப்பது முதலியவையாம்.

'சாரணச் சலா'மென்பது ஓர் வாலிபச் சாரணன் மற்ருேர் சாரணனைக் காணும்போதும், தனக்கு மேலதிகாரியான சாரண உத்தியோகஸ்தனைக் காணும்போதும், செய்யும் வந்தனமாகும். இது 'அரைச்சலாம்' எனவும் 'முழுச்சலாம்' எனவும் இருவகைப்படும். முதலாவது ஓர் சாரணன் மற்ரொரு சாரணனைக் காணும்போது செய்யும் சங்கேதக் குறியே யாகும். சாரணருக்கு வந்தனுேபசாரமாகவும் அறிகுறியாகவும் மற்றவருக்கு கவனிக்கத் தகுந்ததல்லாததாகவும் இந்த 'அரைச்சலாம்' தோற்றும். சாரணக் கழியுடன் செய்யும் சலாம் பின்பு விவரிக்கப்படும்.

யூனியன் ஜாக் எனப்படும் ஆங்கில அரசாட்சிக்கொடியைப்பற்றி, ஒவ்வொரு சாரணனும் அறியவேண்டும். இக்கொடி மூன்று தேசத்து (இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, அயர்லாந்து) தனிக்கொடிகள் சேர்ந்து ஒன்ருனதாகும். இம்மூன்று தேசங்களும் முற்காலத்தில் தனித்தனி அரசர்களால் ஆளப்பட்டபோது வெவ்வேருயிருந்தனவென்பதையும் மூன்று தேசங்களும் ஓர் அரசரால் ஆளப்பட்டபோது, ஒன்று சேர்க்கப்பட்டபோது, மூன்று கொடிகளும் ஓர் கொடியாக்கப்பட்டன என்பதை 'மெல்லிய பாதம்' அறியவேண்டும். கொடியைப பறக்க

விடுவதிலும் சிலமுறைகளைத் தழுவியே பறக்க விடப் படுவதாகையால், கொடிக்குப் பறக்க விடும் பக்கம் பார்த்துவிடவும், எந்தெந்த ஸமயங்களில் எவ்வெவ்விதம் கொடி பறக்க வேண்டுமென்பதையும் சாரணச் சிறுவர்கள் நன்கு தெரிந்திருக்கவேண்டும்.

வாலிபச் சாரணர்கள் வெளியே போகும் பொழுதெல்லாம், ஐந்து அல்லது ஆறு அடி நீளமுள்ள கழிகளை எடுத்துக்கொண்டு போவதை நம்மவர் அனைவரும் பார்த்திருக்கலாம். அக்கழிகள் ஒன்றையெடுத்து நாம் கவனித்துப்பார்ப்போமாயின், அங்கு சில அடையாளங்களைப் பார்க்கலாம். கழியில் அங்குலத்திற்கு அங்குலமும், அரை அடிக்கும் ஓரடிக்கும் குறிகள் இருப்பது வெளிவரும். இக்கழியின் உதவியினால், பொருள்களின் உயரம், பருமன் முதலியவைகளை அறிதல் கூடும். இக்கழியினாலேயே சிறு பாலங்களைக் கட்டவும் சிறு கூடாரங்களையடிக்கும்போது உபயோகிக்கவும், கொடி பறக்க விடுவதற்குக் கழியாகவும், காயமடைந்தவர்களை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குக் கொண்டுபோவதற்கு உதவியான கட்டில் செய்யவும் உபயோகப்படும். ஜன நெருக்கமுள்ள இடங்களில் ஜனங்களை விலக்கவும் (அடித்தல்ல) தேகப்பயிற்சிக்குத் தகுந்த சில பயிற்சிகளுக்கும் சாரணக்கழி உபயோகப்படும்.

"மெல்லிய பாதம்" கடைசியாக அறியவேண்டியது சாதாரணமுடிகளும் அவைகளை உபயோகிக்கும் சமயங்களுமாம். 'முடி' போடுவது சுலபமான காரியமெனத் தோற்றினும், அதைஸரியாகப் போடவும் உபயோகிக்கவும், பலருக்குத் தெரியாதபடியால், சாரணர் இவ்விஷயத்தில் மிகவும் கவனமுள்ளவர்களாக இருக்கவேண்டும். மேற்கூறியவைகளை எல்லாம் அறிந்த பின்னரே, 'மெல்லியபாதம்' வாலிபச் சாரணனாக சேர்த்துக்கொள்ளப்படுவான்.

கிரிஸெல்டா

இப்புத்தகம் பெண்பாலார் அவசியம் வாசிக்க வேண்டிய புத்தகங்களில் ஒன்று. இப்புத்தகத்தில் ஒரு பெண் தன் கணவனிடம் நடந்துகொண்ட சிலாக்கத்தக்க மாதிரியை விளக்கிக் காட்டியிருக்கிறது. படிக்கப்படிக்க உத்ஸாகத்தைக் கொடுக்கக்கூடியது. துரைத்தனத்தார் அங்கீகரித்தது. விலை அணா 3.

புராதன இந்தியா

ANCIENT INDIA

[ஸ்ரீமான் பாஷ்யமய்யங்கார் அவர்கள்.]

(160-ம் பக்கத் தொடர்ச்சி.)

மகதநாடு வட இந்தியாவில் சிறப்புற்று விளங்கிய காலத்தில் டேரையஸ் என்னும் பாரஸீக தேசத்து மன்னன் தன் இராஜ்ஜியத்தை மேற்கே ஐரோப்பாவில் டான்யூப் நதிவரையிலும், கிழக்கே இந்தியாவில் ஸிந்து நதிவரையிலும் விஸ்தரித்தான். ஆப்கானிஸ்தானம், பெலுசிஸ்தானம், பஞ்சாபின் மேற்பாகம், ஸிண்ட் முதலிய நாடுகள் அவன் கைவசப்பட்டன. டேரையஸ் சிறந்த போர்வீரன். வென்ற நாடுகளை ஒருங்கு கட்டியாளும் திறமை வாய்ந்தவன். அவன் பாரஸீக இராஜ்ஜியத்தைப் பல மாகாணங்களாகப் பிரித்து, ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு கவர்னரை நியமித்து வந்தான். இந்தியாவில் அவன், ஸ்வாதீனப்பட்ட மகாணங்களைக் கவனித்துவரும்படி தனி கவர்னர் ஒருவரை நியமித்திருந்தான். பாரசீகருக்கு ஆசியாவிலுள்ள மாகாணங்களிலிருந்து கிடைத்த வரும்படியில், மூன்றில் ஒரு பாகம் இந்தியாவிலிருந்து கிடைத்ததென்று ஏற்படுகிறது. இந்தியா அக்காலத்தில் செல்வத்திலும் செழுமையிலும் பெருமை யடைந்து வந்ததென்பதற்கு இது ஒரு அத்தாட்சியாகும். டேரையஸ் பழக்கி வந்த ஸேனாவீரரில் இந்தியரும் சேர்ந்து யுத்தங்களில் பாரசீகருக்கு உதவிபுரிந்து வந்தார்கள். டேரையஸ் மரித்தபின், ஸிந்து நதிக்கரையில் இந்தியர் தம் அதிகாரத்தை முன்போலவே செலுத்திவந்தார்கள்.

டேரையஸ் இந்தியாவிற்கு வந்தது இந்தியருக்கு அனேக நன்மைகள் உண்டாவதற்கு சாதகமா யிருந்தது. வட இந்தியா முழுதும் பாரசீக ராஜ்யத்தைப்போலவே ஓராட்சிக்குட்பட்டு பெருமை யடைந்தது. இதுமுதல் மேல்நாடுகளுக்கும் இந்தியாவிற்கும் உள்ள சம்பந்தம் வளர்ந்துவர, வியாபாரம் பெருகிற்று. அரசாட்சி விஷயங்களில் இந்தியர் பாரசீகரை அனுசரித்து நடந்தார்கள். பாரசீகர் இந்தியாவிற்கு வந்தபிறகே, கிரேக்கரும் இந்தியாவின் மேல் கண்ணோட்டமுடையா ராயினர். அக்கா

லத்தில் மிகப் பிரஸித்தி பெற்றுவந்த கிரேக்கர் இந்தியாவிற்கு வந்ததற்குக் காரணமாயிருந்தவர் பாரசீகரேயாம்.

கி. மு. 334இல் உலகில் மகா யுத்த வீரன் என்று புகழ்பெற்ற மாஸிடன் நாட்டு வேந்தனாகிய அலெக்ஸாண்டர், பாரசீக ராஜ்யத்தின் மேல் படையெடுத்தான். ஐந்து வருஷங்களுக்குள் அவன் பாரசீக முழுவதும் வென்றான். உலகம் முழுவதும் ஜயித்து, சக்கரவர்த்தியாய் விளங்கவேண்டுமென்று அவன் ஆவல்கொண்டான். கி. மு. ஆறுவது ஏழாவது நூற்றாண்டின் முதல், இந்தியாவின் நாகரீகம், செல்வம் பெருமையைப்பற்றி கிரேக்கர் கேள்வியுற்றிருந்தனர். அன்றியும், ஸ்கைலாக்ஸ் முதலிய பாரசீகர் எழுதிவைத்திருந்த குறிப்புக்களிலிருந்து இந்தியர்களைப்பற்றிய ஞானம் கிரேக்கருக்கு உண்டாயிருந்தது எங்ஙனமாயினும், பாரசீகர் கவர்ந்திழந்த நாடுகளைத் தான் கைப்பற்றிப் புகழ் அடையவேண்டுமென்று அலெக்ஸாண்டர் நிச்சயித்தான்.

கி. மு. 300 இல் பெலுசிஸ்தானம், ஆப்கானிஸ்தானம்மூலமாய்ப் பாக்டிரியாவுக்குச் சென்று மத்திய ஆசியாவில் பலநாடுகளை ஜயித்தான். கி. மு. 327 இல் அவன் காபூல் நதி ஸமவெளி வழியாய் வந்து ஹிந்துகுஷ், பர்வதத்தைத் தாண்டி இந்தியாவில் நுழையலானான். கி. மு. 326 இல் அட்டாக் என்ற இடத்தினருகில் ஸிந்து நதியைக் கடந்து 80,000 போர்வீரருடன் இந்தியாவின் வடமேற்குப் பாகத்தில் மிகப் பெருமைவாய்ந்த டாக்ஸிலா என்னும் நகரை யடைந்தான்.

இந்தியாவில் வடமேற்கில் அனேக அரசர்கள் தத்தமக்குரிய மாகாணங்களில் சுவேச்சையாய் அதிகாரம் செலுத்திவந்தார்கள். இவர்களுக்குள் அடிக்கடி சண்டை நேரிடுவதுண்டு. அவர்கள் ஒற்றுமைப்பட்டிருந்தால், தம் நாடு அன்னியரால் தாக்கப்படாதபடி ஒருமித்து உழைத்து வருதல் கூடும். இவர்கள் ஒருவருக்கொருவர் பகைமை கொண்டிருந்தது வெளிநாட்டார் எளிதில் இங்குவந்து தங்கி, தம் அதிகாரத்தை செலுத்துதல் சாத்தியமாயிற்று. காஷ்மீரத்தில் அபிசாரஸ் என்பவரும் டாக்ஸிலத்தில் அவர் சஹோதரனை அம்பி என்பவரும் ஜீலம், ராவி நதிகட்கிடையில் பௌரவர்களும் அரசு செலுத்தி வந்தார்கள். ஸட்லிஜ் நதிக்குக் கிழக்கில் நந்தர்களது செல்வாக்கு மிகுந்திருந்தது. மூல்டானுக்கருகில் க்ஷுத்ரகர், மாளவர் முதலியோர் வஸித்தனர். ஆயினும் பஞ்சாபிலும் ஸிண்டிலும் தலைமை வகித்து வந்தவர்கள் அஞ்சா நெஞ்சம் படைத்த போர்வல்லோரை துணையாகக்கொண்டவர். நீர்வளமும் குடிவளமும் பொருந்தி யிருந்தமையால் அவற்றைப் பகைவர் கவர்வது எளிதல்ல.

டாக்ஸிலா (தாக்ஷசீலா) என்பது அம்பி என்னும் வேந்தனது இராஜதானியாயிருந்தது. அவனுக்கு பௌரவ மன்னன் வைரியானபடியால் அலெக்ஸாண்டரின் உதவியைக் கொண்டு தன் பகைவனை வென்று விடலாமென்றெண்ணி கிரேக்காதிபதியைவரவேற்று அவருக்கும் அவர் ஸைன்யத்திற்கும் வேண்டிய சர்வ நலங்களும் புரிந்துவந்தான். அலெக்ஸாண்டர் இதுவே சமயமென்றறிந்து தன் சேனையுடன் ஜீலம் நதியின் கீழண்டைக் கரைவரையில் வந்து சேர்ந்தான். நதி மிகவும் ஆழமாய் கடத்தற் கரியதா யிருந்தது. புருஷோத்தமனென்னும் (Porus) பௌரவ மன்னனே நதிக்கு எதிர்க்கரையில் தன் ஸேனையை அணிவகுத்து அலெக்ஸாண்டருடன் யுத்தம் புரிய ஸன்னத்தரா யிருந்தான். அலெக்ஸாண்டருக்கோ தன் குதிரைகளுடன் நதியைக் கடப்பது அசாத்தியமெனத் தோன்றியது. அவர் பகைவர்க்குத் தெரியாமல் நதியைக் கடப்பதெப்படி யென்று ஆலோசனை செய்தான். அலெக்ஸாண்டர் பெரும்புகழ் படைத்தவீரன். அவன் கஷ்டத்திற்கொரு நாளும் சலித்தவனல்லன். புருஷோத்தம மன்னன் தன்னைப்பற்றிச் சிறிதும் ஐயுறாதபடி தன் ஸேனையில் ஒரு பகுதியை ஆகாரத்திற்கு வேண்டியபொருள்களைத் தேடும்படி அனுப்பி, மழைக்காலம் முழுதும் சும்மா இருந்து பிறகே யுத்தம் தொடங்குவதாக எதிரிகள் தம்மைப்பற்றி எண்ணிக்கொள்ளும்படி நடந்துவந்தான். இடையில் எதிரிகள் நினைத்ததுபோல் அவன் சும்மா யிராமல், எந்தப் பக்கத்தில் நதியை சுலபமாய்க் கடந்து அக்கரை சேர்ந்து திடீரெனப் பகைவர் மேல் பாய்வதென்பதில் தம் கவனம் முற்றும் செலுத்தி தகுந்த சமயத்தை எதிர் பார்த்திருந்தான்.

ஒரு நாள் இரவில் வானம் இருண்டு காற்று பலமாய் வீசிற்று. அன்றைய தினம் அலெக்ஸாண்டர் 12,000 வீரர் அடங்கியஸேனையுடன் தான் தண்டிறங்கியிருந்தவிடத்திற்கு பதினாறு மைல்கட் கப்பால் சௌகர்யமாய் நதியை கடக்ககூடிய வழியொன்றிருந்தது கண்டு, தன்னுடன் வந்த வீரரை உத்ஸாகப்படுத்தி பொழுதுவிடிவதற்குள் அக்கரையை அடைந்தான். அலெக்ஸாண்டர் இவ்விதம் தன்னைச்சூழ்வான் என்பதை புருஷோத்தமன் அறிந்துகொள்ளவேயில்லை. அலெக்ஸாண்டர் அக்கரையடைந்த பிறகே புருஷோத்தமன் எதிரிகள் தம்மைச் சூழ்ந்து எதிர்க்கத் தலைப்பட்டதைக்கண்டான். அவன் இரு மருங்கிலும் தேர்களையும் குதிரைகளையும் நிறுத்தி இடையில் காலாட்களையும் யானைகளையும் அணிவகுத்திருந்தான். பார்வைக்கு இந்தியமன்னன் படை ஒரு நகர் போலவும், யானைகள் அந்த நகரிலுள்ள கோபுரங்கள் போலவும் யானைகளுக்கிடையில் நின்ற காலாள்வீரரின் வரிசையானது கோபுரங்களுக்கு நடுவில் உள்ள சுவர்களின் வரிசைகள் போலவும் விளங்கின.

அலெக்ஸாண்டர் இந்தியரது சேனையையும் அதன் அமைப்பையும் கண்டு அதிசயித்து நடுவில் சென்று வீரரைத் தாக்குதல் அரிதெனவறிந்து அவன் தன் சேனாபலத்துடன் இரு புறங்களிலுமுள்ள குதிரைகளைத் தாக்கினான். குதிரைகள் வெருண்டு நடுவில் உள்ள காலாட்களின்மேல் விழுந்தன. குதிரைகளின் உபத்திரவம் பொறுக்கமுடியாமல் ஹிந்துஸைன்ய வீரர்கள் தம் பக்கத்தில் நின்றிருந்த யானைகளின் பின்புறத்தில் ஓடி ஒளிந்துகொண்டார்கள். பகைவரை நடுவில் எதிர்ப்பதற்குத்தகுந்த சமயம் இதுதான் எனக்கண்டு வீராவேசத்துடன் தன் வீரரை புருஷோத்தமனது சேனையின்மேற் பாயும்படி ஏவினான். யானைகளால் கிரேக்க நாட்டு வீரர்க்குண்டான துன்பங்கள் கொஞ்சமல்ல. எனினும் இராஜபுத்திர மக்கள் சண்டைக்குச் சற்று சளைத்து பின்வாங்கினர். தாம் எதிர்பார்த்திருந்ததுபோல் அலெக்ஸாண்டர், முதலில் காலாள்வீரரை எதிர்த்திருக்கும் பக்ஷத்தில் யுத்தம் இராஜபுத்திரர்க்கு அனுகூலமாய் முடிந்திருக்கும். அலெக்ஸாண்டரே எதிரிகளின் போர்த்திறமையைக் கண்டு வியந்தன்ன எனின், புருஷோத்தமனது ஸைன்யத்தைப்பற்றி நாம் அதிகமாகக் கூறவேண்டியதில்லை. அவர்கள் நினைத்ததற்கு முற்றிலும் மாறாக அலெக்ஸாண்டர் பகைவரது குதிரைகளை முதன்முறை எதிர்த்து எதிரிகளது படையில் கலவரம் விளைவித்தமையால் இராஜபுத்திரர் திகைத்து ஒன்றும் செய்யக்கூடாதவர் ஆயினர். அலெக்ஸாண்டர், தன் வலியும் மாற்றான் வலியும் ஆராய்ந்து பகைவனுடைய குறைகளையறிந்து அதற்கேற்ப பொருது வெற்றியடைந்தான். புருஷோத்தம வேந்தனும் தன்னைச் சூழவிருந்த வீரர் முறிபட்டு, தான் தனியே நின்று யுத்தம் புரியும்படி அவனைப் போர்க்களத்தில் விட்டு உயிர்தப்ப அவ்விடம் விட்டு ஓடியும் அவன் சற்றும் மனந்தளராமல் யுத்தம் முடியும் வரையில் ஒருவனாய் நின்று அலெக்ஸாண்டரை யெதிர்த்தான். இவன் பக்கல் இவனுக்குதவியா யிருந்தோரிற் பலர் பகைவரால் மாண்டனர். இவன் தனித்துயுத்தம்செய்வதைக் கண்டு மனம் கசிந்த அலக்ஸாண்டர் இவனை நெருங்கி சண்டையை நிறுத்தும்படி வேண்ட, புருஷோத்தமன் "நான் உயிருள்ளளவும் என் நாட்டை அயலான் கவர்ந்து ஆள அவன் கீழ்ப் பட்டு நான் வாழமாட்டேன். இது திண்ணம். என்னை மடித்து நீ நாட்டைப்பற்றிக்கொள்" எனமொழிந்தான். இதைக்கண்டு அலெக்ஸாண்டர் புருஷோத்தமனை மிகவும் கொண்டாடி தான் அவனது நாட்டைக் கவர்வதில்லையென்று அவனுக்கு உறுதிமொழி கொடுத்த பின்னரே புருஷோத்தமன் யுத்தத்தை நிறுத்தினான். அலக்ஸாண்டரும் தன் வாக்குத்தத்தத்தின்படியே புருஷோத்தமனுடன் பகைமை நீங்கி நட்புகொண்டு அவனுடைய நாட்டை அவனிடமே ஒப்புவித்தான்.

ஸ்ரீமான் ராஜம் ஐயர் சரிதை

கூடத்தைக் கொடுத்தாலும், மாடத்தைக் கொடுக்கல் ஆகாது.

நமது சிறு கதை

OUR SHORT STORY

(170-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஸத்குண பூஷணர்களான அஜ்ஜனங்களோடு எதைப்பற்றி வியவகரிக்கலா மென்பதையும், அவர்களோடு மிகுந்த மரியாதையும் அடக்கமும் காட்டுவதோடு தன் விசேஷ மனோ சக்திகள் அவர்களுக்குப் புலப்படும் வண்ணம் எவ்வாறு ஸம்பாஷணை தொடுக்கலா மென்பதையும்பற்றி தீர்க்காலோசனை செய்துகொண்டு ஹாஸன், தூதன்பின் சென்றனன். பிரதான வீதிக்கு பத்தடி தூரத்தில் இருவரும் வரும் ஸமயம், அவ்வூர்வாஸிகளி லொருவன் "வியர்க்க விறுவிறுக்க" பயத்தால் நெஞ்சுலர வாய்குழறி, பின்னங்கால் பிடரியில் அடிபட "குடல் தெரிக்க" இவர்களெதிரே ஓடுவதைக் கண்டனர். கண்டவன், பிறருக்குத் தீங்கென்பது கனவிலுங் கருதாத ஒருவனுக்கு எவ்வித வாபத்து வரமுடியும்? எதற்காக இவ்வளவு அலங்கோலமாக ஓடுகிறான்? என்று நிதானித்தான். என்னே விந்தை! சற்றுப் பின்னால் வரிசையாக 5, 6 ஸாதாரணக் குரங்குகள் துரத்துவதைப் பார்த்தான். "இதென்ன கேலிக்கிடம்! ஒரு அற்பப் பிராணியான மர்க்கடத்திடம் மனிதனுக்கு எதற்காக இவ்வளவு பயம்?" என்று பெரு நகைப்புடன் கூவும் பொழுதே இன்னமொரு புரவாஸி யதேவண்ணம் பயம் பிடரிபிடித்து உந்த மனோவேகமாய் பறப்பதையும் அவனை இரண்டு ஸாதாரண நரிகள் துரத்துவதையும் அறிந்தான். ஹாஸனுக்கு ஆச்சர்யம் பன்மடங்காயிற்றேயொழிய விஷயமொன்றும் விளங்கவில்லை. விச்வாஸதத்தனை வணங்கி "ஐயா, இதென்ன விந்தை? அல்ப மிருகங்களிடங்கூட இவ்வூர் ஜனங்கள் இப்படி நடுங்கி யொடுங்குவதேன்? விவரித்தருளலாமோ?" என்று விநயமாய்ப் பணித்தனன்.

"அதுவா, ஹாஸன், சொல்லுகிறேன். இந்நகரத்தார் அனைவரும் தீத்தொழிலை யொழித்தவர்களென்று முன்பே சொன்னேனல்லவா? அதை யொத்து ஜீவஹிம்ஸை பரமபாதகமென்ற கோட்பாடு கொண்டுடைய ரனைவரும். ஆகவே, பிராணிகளைத் தொந்திரவு செய்வது எவ்விதத்திலும் ஸரியல்லவென்று அதைத் தவிர்க்கின்றனர். ஆதலின், ஈ எறும்பு முதல் கஜேந்திரன் வரை ஸகல மிருகங்களும் பயமென்பதையே அறியாது மனம் போனபடி திரிகின்றன. 'துஷ்டரைக் கண்டால் தூர விலகு' என்பதற் கிணங்க, அவைகளின் சேஷ்டைக்கஞ்சிய மனிதர்களுக்கு ஓட்டந்தான் கதி" என்று ஸமாதானம் மொழிந்தான்.

ஹாஸன் "இது நகைப்பிற்கிடம். இவ்விதம் இஷ்டப்படி மிருகங்களை விடுவதின் பயன் இதோ பலித்திருக்கிறதல்லவா? இச்சங்கடம் அறியாமையால் விளைவதே. மனிதரை இம்மாதிரி கஸ்திப்படுத்தா திருக்கும்பொருட்டு, இம்மிருகங்களை யெல்லாம் அடக்கி வைக்க வேண்டும். அவசியமானால், அழித்து விட வேண்டும்" என்றான்.

விச்வாஸதத்தன், "ஏது ஹாஸன், நீகூட வன்னெஞ்சினனாய்ப் பேசுகிறாய்? சிறு பூச்சி புழு முதல், துன்பமடையாது உலகத்தை சிருஷ்டிக்காதது அல்லாவின் குற்றமென்று கருணைபாராட்டிய நீ அவைகளை வதஞ்செய்து விடலாமென்பது பொருத்தமாகவில்லையே?"

என்னலும், ஹாஸன் வெட்கத்தால் சிறிது தலை குனிந்து, "ஆம் நான் முன் சொன்னது சற்று யோசனைக் குறைவென்றுதான் நினைக்கிறேன். அஹிம்ஸையே பரம தருமமாயினும், நாம் சற்றுக் கவலையற்று வாழ விரும்பின், நம்மைத் துன்புறுத்தக் கூடிய பிராணிகளை பயங்காட்டியோ, ஹிம்ஸித்தோ அடக்கி வைப்பது இன்றியமையாததே. அது போகட்டும். எவ்வுலகத்திலும், மனிதர் பரஸ்பரம் நல்ல ஹிருதயமுள்ளரேல், அதுதான் பெருங் காரியம்" என மெள்ளப் பேச்சை மறைத்தான்.

அந்நகரின் வீதிகளிற் புகுந்து இருவரும் வேடிக்கை பார்ப்பதற் காரம்பித்தனர். இயற்கை யழகு மிகப்பொலிந்து விளங்கும் அவ்வுலகில், மாடமாளிகைகளும், கூடகோபுரங்களும், விசித்திர வேலைப்பாடமைந்த வெவ்வேறு விமானங்களும் கண் கொள்ளாது காணலாமென்றிருந்த அபுஹாஸனுக்கு அலங்காரமாகவாவது, உந்நதமாகவாவது ஒரு கட்டிடமேனும் தென்படவில்லை. எங்கு பார்த்தாலும் சிறு சிறு குடில்களும், தோட்டம் துரவுகளுமேதான் கண்ணிற் கிலக்காயின. அபுஹாஸனுக்குண்டாய அதிசயத்தை யாரால்

அளவிட முடியும்? அதை ஜாடையாக அறிந்த தேவதூதனும் "என்ன ஹாஸன், இதில் ஆச்சர்யத்திற்கிடமென்ன விருக்கிறது? இவ்வூராருக்கு டம்பமான வீடுகளும் மாளிகைகளும் எதற்கு? ஒவ்வொருவனுக்கும் தன் குடும்பத்திற்குப் போதுமான அளவுள்ள வீடொன்றுண்டு. எல்லோரும் நல்ல குணசாலிகள்: திருட்டு முதலிய பயமே கிடையாது. பெரிய வீடுகளால் என்ன பிரயோசனம் அவர்களுக்கு? கட்டுபவனின் வீண் பெருமையையும், காண்போரின் பொறாமையையும் விளைப்பதன்றி வேறென்ன கிடைக்கும்? ஆகையாற்றான், தங்களுக்குள்ள இக்குடில்களே போதுமென்ற திருப்தியுடன் வாழ்ந்து வருகின்றனர்" என்று முடித்தான்.

"ஆனால் இவ்வுலகத்தில் சிற்பிகளும், சித்திரம் வரைவோரும் இவைபோன்ற மற்ற கலைவல்லோருங் கிடையாது போலிருக்கிறது. அப்படி யேன் கலாஞானத்தில் பயிற்சியுள்ள மேதாவிக ளில்லாமல் மகம்மது இவ்வுலகத்தைப் படைத்தார்? ஆனல் அதுவும் ஒருவிஷயத்தில் நன்மையேதான். பணச் செலவிற்கும், ஆடம்பரத்திற்கும், மனக் கொதிப்பிற்கும் ஆஸ்பதமே யில்லாமல் போய் விடுகிறதல்லவா? அக்கலைகளைப் பயிற்சிசெய்து அவைகளில் அளவிறந்த ஆநந்தத்தை யடையக் கூடிய சிலருக்குமட்டும் அதற்கிடமேயில்லாததாய் விடுகிறது. இருந்தாலும் நஷ்டமில்லை. அதெல்லாம் போகட்டும், இக்காட்சிகளிற் காலங்கழிப்பதைக் காட்டிலும், இவ்வூரிலுள்ள மூதறிவாளரான சிலரைக் காட்டினல் எனக்கு நிரம்பத் திருப்தியாயிருக்கும். இவ்வுலக்ங்களின் ஸுகமனைத்தையும் கல்வி கேள்விப் பயிற்சியும் அனுபவஞானமுமுடைய ஸ்நேகிதரோடு ஸம்பாஷிப்பதே யல்லவா, மேம்பாடுடைத்து. "தவலருந்தொல் கேள்வித் தகைமையுடையார், இகலிலர், எஃகுடையார் தம்முட்குழீஇ, நகலினினிதாயிற் காண்பாமகல் வானத்தும் பருறை வார்பதி" என்றது மிகையன்று" என்றான் ஹாஸன்.

இதைக்கேட்டதும் விச்வாஸகத்தன் 'இடி இடி' என்று சிரித்துவிட்டு "அறிவாவது, முதிர்ச்சியாவது, அனுபவமாவது! அவைகட்கெல்லாம் இங்கு இடமேயில்லை என்பது உனக்கு இன்னும் விளங்கவில்லை போலும். அறிவின் பயனெல்லாம் தத்தம் கடமையை செவ்வனே யறிந்து அதன்படி நிற்பது தானே? இங்கே ஒவ்வொருவனும் தன்தன் கடமையை ஸ்வபாவமாகவே செய்யுமியற்கையுணர்ச்சி பெற்றிருக்கிறான். ஆகவே முதிர்ந்த அறிவின் அவசியம் ஈண்டில்லையென்பது தெளிவில்லையா? அல்லது, மனிதரின் மனோபாவங்களும் அதை யிட்டு அவர்கள் செய்யும் காரியங்களும், சூது, தந்திரங்களும், இவைகளை யெளிதிற் கண்டுகொள்ளும் ஸாமர்த்தியமுந்தான் அறிவு அநுபவம் என்று நீ எண்ணினல், அவ்வகை யறிவிற்கும் அநுபவத்திற்கும் ஸூக்ஷ்ம புத்தியும், பொய் புரட்டுள்ள மனிதர்களுடைய பழக்கமும் வேண்டும். அவை சிறிதுமில்லாது, இவ்வுலக மமைக்கப்பெற்றதாகவே, அவைகளுக்கு இங்கு வழியேயில்லை. ஆகையாற்றான் பூலோகத்திலிருப்பது போல், முதிர்ந்த அறிவாளிகள் இங்கிருக்க நியாயமுமில்லை. கிடையவுங்கிடையாது" என்று பூர்வபக்ஷவித்தாங் தத்துடன் முடித்தான்.

"யோசித்தால் எல்லாம் ஸரியாகத்தான் தோன்றுகிறது. ஆனாலும் நிரம்ப வேடிக்கையே! இது நிற்க, ஜனங்கள் விசேஷமாக ஒருவரோடொருவர் கலகலப்பாகப் பேசி ஆநந்திப்பதையே காணேமே? ஒவ்வொருவனும் தன் வீட்டைவிட்டு வெகுவாக வெளி யேறுமல் வௌவால் மாதிரி அடைபட்டுக் கிடக்கிறானே! கர்வம், அகம்பாவம் இவை சிறிதுமற்ற இவர் இவ்வண்ணம் ஸ்நேகிதருடன் கூடக் கலந்து அளவளாவாது போவதின் காரணந் தானென்னே?" என்று பரமாச்சர்யத்துடன் வினவினன் ஹாஸன். "ஆம் வாஸ்தவமே. ஜனங்கள் கலந்துறவாடுவது அவ்வளவாகக் கிடையாது. குடிகளென்றும், அரசனென்றும், உத்தியோகஸ்தர்களென்றும், கூலியென்றும், ஏழையென்றும், தனவந்தரென்றும் இவை முதலான ஜனக்கூட்டத்திற்குரிய விசேஷங்கள் இங்கு கிடையாது. கொஞ்சம் யோசித்தால் ஏன் என்பது உனக்கே புலப்படும். விதி விலக்குகளுக்குட்பட்டதான (ராஜாங்கம் போன்ற) ஜனங்களின் சேர்க்கைக்கு இரண்டு காரணங்கள்தா னிருக்கமுடியும். ஒன்று,மனிதனுக்குத் தன் உயிரிலுமுற்ற பொருளிலுமுள்ள (அபிமானத்தைப்பற்றிய)

பயம். மற்றென்று, ஸ்வயநலத்தையோ, பரோபகாரத்தையோ கருதிய மனிதர்களின் நட்புணர்வு, இவையிரண்டு மில்லாத விடத்து ஜனச்சேர்க்கை யிருக்க ஹேஷ்யமில்லை யல்லவா? இவ்வுலகத்திலோ எல்லோரும் நல்லோராகவே எவ்விஷயத்தினும் எத்துணை பயமுங் கிடையாது. தத்தமக்கு வேண்டியது ஒவ்வொருவரிடமு மிருப்பதாலும், வீணாசை யொருவருக்குங் கிடையாததாலும் நட்பு ஸம்பந்தமான ஜனச்சேர்க்கைக்கும் இடமில்லை. ஆகையாற்றான், ஜனங்கள் விசேஷமாகக் கலப்பதில்லை'' என்று விஸ்தாரமாகச் சொல்லி முடித்தான்.

"இதேது ஆச்சர்ய பரம்பரையாக விருக்கிறதே! ஆயினும் நீ சொல்லும் காரணங்களைக் கவனித்தால் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். தீமை யென்பதே சிறிதுமில்லாத உலகத்தில் வஸிக்க வேண்டுமென்று நெடுநாளாக நான் ஆவல்கொண்டிருந்ததற்கேற்ப மகம்மதுவின் இஷ்டத்திற்கிசைந்து அல்லா படைத்தருளிய இவ்வுலகத்தையுங் கண்டேன்; நான் எண்ணிய வண்ணம் என் வாழ்நாளில் எஞ்சியதை இங்கே கழிப்பதற்கிஷ்டமே. இங்கோ சித்திர முதலிய கலா ஞானமாவது, ஸ்நேகமென்பதாவது ஸூக்ஷ்ம புத்தியாவது இல்லையென்று நிரூபித்துக் காட்டிவிட்டாய். தனியே காலங்கழிப்பது மிக்கப் பிரயாஸை என்று நான் நாளுக்குநாள் அறிகிறேன். ஆதலின் சில ஸமயங்களில் மட்டும் ஸுகதுக்கங்களைச் சொல்லிக்கொள்வதற்கும், மனதிற்றோன்றும் பற்பல யோசனைகளை வெளியிட்டு அளவளாவுவதற்கும் ஒரு கலகலப்பான தோழன் அகப்பட்டால் போதும்'' என்றான் ஹாஸன்.

விச்வாஸதத்தனும் விடாமல் "அதுதான் எதற்கு? உன் யோசனைகளைச் சொல்வதும், உன் தோழன் மனோபாவங்களை உணர்வதும் எதற்கு? உன் எண்ணங்களின் உயர்வையும் அழகையுங்கண்டு உன் தோழன் ஆச்சர்யப்பட்டு ஸ்தோத்திரஞ்செய்ய, அத்தகைய வீண்புகழ்ச்சியால் களிப்படைய நீ விரும்பவேண்டும். அன்றேல் அவன் மனதில் நிகழும் எண்ணங்களை அறியவேண்டும் என்ற உபயோகமற்ற ஆவல் உன்னைத் தூண்டவேண்டும். இரண்டும் இவ்வுலகத்திற் கொவ்வாதவை. அது எப்படியாயினும் உன்னோடு சினேகஞ் செய்யும்படி அவ்வளவு கூர்ந்த புத்தியுள்ளவன் இங்கே ஒருவனுமில்லை. பூலோகத்திலுள்ள மனிதர்கள்தான் உனக்கு விஷம். ஆதலின் நீ விரும்பும்வண்ணம் ஓர் தோழன் கிடைப்பது அருமையென்று ஏற்படவில்லையா'' என்றான்.

அபுஹாஸன் பாடு திண்டாட்டமாயிற்று. "ஆம் அதுவும் வாஸ்தவமே. இது நிரம்ப விசித்திரமான வுலகமே. மனிதனுக்கவசியமென நான் கருதியிருந்தவை ஒன்றையுமே காணோமே! ஆனால் இதற்கெல்லாம் மாறாக, ஒருவர் தவறாது ஸந்தோஷமுள்ளவர்களாயிருப்பார்களல்லவா? எல்லோருக்கும் வேண்டிய அளவு எல்லாப் பொருள்களுமிருக்கின்றன. அதற்குமேல் பொருள் வேண்டுமென்றாவது, மிகுந்த செல்வந்திரட்டவேண்டுமென்றாவது ஒருவனுக்கும் பேராசை யில்லை. ஆகையினால், இன்னல்பட்டிடறுவோர் எவருமிருக்க நியாயமில்லை. அதைவிட வேறென்ன பாக்கியம் வேண்டும் ஓர் நாட்டிற்கு?'' என்றான்.

வழி நடந்துகொண்டே இவ்வண்ணம் சொல்லி வாய்மூடுமுன், ரஸ்தாவின் ஓரமாக உட்கார்ந்து தன் வினையின் கொடுமையைக் குறித்து நொந்துகொண்டும், பிணியின் ஆதிக்கத்தால் "ஐயோ! அப்பா" என்றரற்றிக்கொண்டும் ஒருவன் உட்கார்ந்திருப்பதைக் கண்ணுற்றான் ஹாஸன். ஸ்வபாவத்திலே கனிந்த மனத்தினனாகிய ஹாஸன், ஓட்டமாயோடி அப்பிணியாளிக்குத் தன்னாலியன்றதைச் செய்தான். மிகுந்த பலமான காசரோகத்தால் பீடையுற்று வருந்தும் அவ்வெளியவனுக்கு உபாதியைச் சற்றுக் குறைக்கும்படியான உபசரணைகளைச் செய்துகொண்டே "இதென்ன எல்லாவற்றினும் ஆச்சர்யமாக வல்லவோ விருக்கிறது! தீமையென்பதே சிறிதுமில்லாத உன் போன்றவர்கள் கஷ்டப்படுங்காலத்தில்கூட உதவி செய்ய ஒருவரும் முன்வரவில்லையே இவ்வூரில்! அவ்வளவு கன்னெஞ்சரா எல்லோரும்?'' என்று கடிந்தான் அபுஹாஸன்.

அதற்கு அப்பிணியாளி, "ஐய, அதில் ஆச்சர்யமென்ன? அதுதானே நியாயம். இவ்வூருக்கு நீங்கள் புதிதாகத் தோன்றுகிறபடியால், நான் எடுத்துக்காட்டத் துணிகிறேன். இங்கே ஒவ்வொருவனுக்கும் தனக்கு வேண்டிய அளவுதான் தனதான்யங்கள் உண்டு. ஒருவேளை பிறரெவருக்காவது அன்னமிட்டால், தன் குடும்பத்

தில் யாரேனும் ஒருவேளை உணவின்றி யிருத்தல் வேண்டும். நான் ஏதோ கர்மத்தால் துன்ப மனுபவிக்கிறேன். என்னிமித்தம் ஒரு பாபமு மறியாத வொருவன் பொருளை யிழந்து பசியால் வருந்தும்படி எனக்கு சிகித்ஸைக்காக விசேஷ உணவளிப்பது அவசியமில்லாததோடு மெத்தத் தவறல்லவா?'' என்று இருமியிருமிக் கொண்டு சொல்லி முடித்தான்.

கண்ணில் நீர்ததும்ப, ஹாஸனும் "அதுதான் முட்டாள்தனம். இவ்விதம் வேண்டியதற்கு மேல் ஒரு கவளங்கூட இல்லாதிருப்பது பிசகு. ஸமயங்களுக்கென்று கொஞ்சம் அதிகமாகவும் சில விசேஷித்த பொருள்களும் கையிலிருக்க வேண்டும்''—என்று முடிக்குமுன் விச்வாஸ தத்தன் "அதற்கென்ன அளவு? அதிகமாக எவ்வளவு வைத்திருத்தல் நியாயம்? எதற்கு மேல் வைத்திருந்தால் 'பணவாசை யென்ற பேய் பிடித்தவன்' என்று தூற்றவாரம்பிப்பாய்?'' என்று சற்றுக் கோபமாக மொழிந்தான்.

அபுஹாஸனுக்கு ஒன்றுமே தோன்றவில்லை. "வேண்டியதற்குமேல் திரவியம் சேர்ப்பதாற்றான் ஆசையும், மோசமும் பொறாமையும், களவும் கொலையும் நேருகின்றன' என்ற கொள்கை கொண்டிருந்தோமே! இப்பொழுது வேண்டியதற்குமேல் கையிருப்பு வேண்டுமென்றோமே! முன்பின் விரோதமாக வல்லவா உளர ஆரம்பித்துவிட்டோம்''என்று சற்று நேரம் பேசாது சிந்தையி லாழ்ந்திருந்தான். பிறகு தனக்குள்ளேயே 'மொணமொணக்கலானான்.' "இருந்தாலும் இவ்வுலகம் நிரம்ப அதிசயத்திற் கிலக்கே. கனவிலும் இப்படியொன்றிருக்கும் என்று எண்ணவேயில்லை. என்ன வேடிக்கை! கெட்ட குணம் என்பதே ஒருவரிடமும் கிடையாது. அதனாலேயே மனிதனுக்கு ஸந்தோஷத்தை விளைப்பதான ஸகல விஷயங்களும் இல்லா தொழிகின்றன. கஷ்டப்படுபவரைக் கண்ணெடுத்துப் பார்ப்போரைக் காணோம். அப்படி உதவி புரியவில்லை யென்று ஒருவரைக் குற்றஞ் சொல்லவுமிடமில்லை. ஸாதாரணமாக அண்டை அயல் மனேவேதனை யடைந்தால் அதை நுட்பமா யறிந்துகொள்ளப் போதுமான புத்தி ஒருவரிடமும் கிடையாது. யாராவது பிறரிடம் நன்மை பெற்றிருந்தாலல்லவா, உதவி புரியாதவனை 'நன்றி கொன்றவன்' என்பதற்கு! என்ன இப்படி யொன்றிற்கானால் ஒன்றிற்காகவில்லையே? கண்ணைக்கட்டிக் காட்டில்விட்டது போலல்லவோ விருக்கிறது? தீய சிந்தையே யில்லாத மனிதர்கள் வஸிக்கும் ஒரு உலகமிருந்து அதில் வஸித்தால் அதனினு மானந்த மொன்றிராது என்று எண்ணினோமே? அப்படி யமைக்கப்பட்ட உலகத்தை கண்ணாரக் கண்டால் இப்படிப் பலித்திருக்கிறதே?'' என்று ஐயப்பொருள் 'ஏ' கார மாகவே அடுக்கினான்.

சற்று நேரங்கழித்து ஏதோ யோசனை தோன்றினவன்போல் "ஆமாம்; இதெல்லாம் போனாலும், பெருந்தன்மையுள்ள குணங்கள் வெகுவாக இல்லாவிடினும், தங்கள் தேசத்திடம் பெரிதும் பிரியமுடையவர்களல்லவா இவர்கள். அதுவே போதும்: ஸ்வதேசாபிமானத்தினும் சிறந்த நற்குணம் வேறென்ன?'' என்றான்.

இதுவரை பேசாதிருந்த் விச்வாஸதத்தன் முன்னினும் கோபமாக முகத்தைச் சுளித்துக் கொண்டு "ஹாஸன், அனுபவத்தால் முதிர்ச்சியுற்ற பேரறிஞன் என்றதெல்லாம் இவ்வளவு தானா? ஸாமாந்ய அறிவுள்ள ஜனங்கள் போலவே கக்ஷிசெய்கிறாயே! பிறருடைய நலத்தைவிட நம்முடைய நலத்தைக்கோருவது மனித இயற்கை. அதற்கு மட்டில் "ஸ்வய நலங் கருதுதல்'' என்றிழிவுப் பெயரிட்டுத் தூர்க்குண மாக்கிவிடுகிறாய். பிறதேசங்களின் நன்மையைவிட நம்முடைய தேசத்தின் அபிவிருத்தியை விரும்புவதும் ஒருவகை ஸ்வய நலமன்றி வேறென்ன? அதுமட்டும் "ஸ்வதேசாபிமானம்'' என்ற பெருங்குணமாய்ப் போமோ? தானுடைத்தால் மண்கலம், மருமகள் உடைத்தால் பொன்கலமோ? கொஞ்சமாவது தூர்க்குணங்கள் பூலோகத்தில் இருக்கலாமானால், ஸ்வதேசாபிமானம் முதலியன மிகுந்த நன்மைக்காதாரமென ஒப்புக்கொள்கிறேன். நீயோ தானென்றும் பிறனென்றும் வித்தியாஸங் கருதும் அற்பதூர்க்குணங்கூடக் களைபடவேண்டு மென்கிறாய். அப்படியிருக்க, ஸ்வதேச நலத்தைக் கோருவதுமட்டும் எங்ஙனம் சிறந்த குணமாகும்? அற்ப தூர்க்குணமுமில்லாத இவ்வுலகத்தில், ஸ்வதேசாபிமானம் எங்கிருந்து வரும்''என்று இடித்துக்கூறினான்.

கூத்தாடிக்குக் கீழே கண், கூலிக்காரனுக்கு மேலே கண்.

இவ்வண்ணம் தேவதூதன் இயம்பி முடித்ததும் ஹாஸனுக்குண்டான மனோ ஸங்கடத்திற்கு எல்லையில்லை "அந்தோ கெட்டேன். என் அகம்பாவத்தால் கெட்டேன். 'தீமையென்பதே சிறிதுமில்லாது அல்லா பூலோகத்தைப் படைத்திருக்காலாகாதா' என்று நான் நிந்தித்தது நிரம்ப நன்றா யிருந்தது! இவ்வுலகத்தில் கேடு இல்லாது போயினும், சிறந்த நற்குணங்கள் ஒன்றாவது காணோமே! அளவிற்கு மேல் புசியாமை ஒன்றுதான் குணமாகத் தெரிகிறது. அது மிருகங்களுந்தான் செய்கின்றன. மற்றப்படி, ஊக்கம், ஸூக்ஷ்ம புத்தி, ஈகை, பெருந்தன்மை, நட்பு, தேசாபிமானம் முதலிய உண்மையான குணங்கள் ஒன்றாவது இவர்களிடமில்லையே. அந்தோ! அந்தோ! தீமையில்லாவிட்டால் உலகம் நிரம்ப நன்றாயிருக்கும் என்று நான் நினைத்தது பெருந்தவறுதான். கேடு இருப்பதாற்றான், அதையொழிப்பதற்காக மிக்க மேன்மையான குணங்களும் விளங்குகின்றன. இதை யறியாமல் நான் அல்லாவின் சிருஷ்டியைக் குறைகூறினேனே! என்னே அறியாமை! இப்பொழுது தான் புத்தி வந்தது. அல்லாவின் அபாரமான ஆற்றலை அளவிட்டு அறியமுடியாது. மகா தீர்க்கதர்சியான மகம்மதுவே இத்தகைய தவறு செய்திருக்க, பேதையான நான் செய்ததென்ன ஆச்சர்யம்? மகம்மதுவினால் அமைக்கப்பட்ட இவ்வுலகத்தைவிட அல்லாவினால் அமைக்கப்பெற்ற பூலோகம் எத்துணை மேன்மை யுடைத்து! ஈதறியாது அல்லாவைக் குற்றஞ்சொல்லப் புறப்பட்டேனே!" என்று கழிவிரக்கமுற்று, தேவதூதனை நோக்கி "ஐய, விச்வாஸதத்தனே, அல்லாவின் அருளினாலும், நபிகளுடைய ஆசீர்வாதத்தாலும், உன்னுடைய உதவியாலும், தீமையில்லாமலே உலக மிருத்த லியலாதென்றும் கடவுளின் சிருஷ்டிக்குப் பழுது சொல்பவர், வீண் அறியாமையாலும், அகங்காரத்தாலும் பாபக் குழியில் விழுகிறார்கள் என்றும் அறிந்துகொண்டேன். ஆகையால் நான் செய்த அபசாரத்தை மன்னித்து, மறுபடியும் குற்றம் நிறைந்த பூலோகத்திலேயே என்னைக் கொண்டுபோய் விட்டுவிட வேண்டுகிறேன். குற்றமே யில்லாமல் உலகம் அமைவது முடியுமோ முடியாதோ? என் மட்டில் முன் ஜாக்கிரதையால் பிறருக்குக் கேடு நினைப்பது செய்வது முதலிய பாபங்களைச் செய்யா தொழிவேன். பாபஞ்செய்பவர்களை நிந்திப்பதையும் வெறுப்பதையும் விட்டு, அவர்களுக்கிரங்கி அநுதாபப்பட்டு இயன்றவரை உதவி புரிவேன். இதுதான் மனிதன் நடக்க வேண்டிய முறை. உலகம் சிருஷ்டிக்கப்பட வேண்டிய வழி முதலிய விஷயங்களைப்பற்றி வாயெடுத்துப்பேச நாம் அருகரல்லவென்றும் கடவுள் செய்யுங் காரியமும், அதை அவர் செய்யும் வழியுமே 'உயர் நல' முடையதென்றும் திடமான நம்பிக்கையோ டிருக்கவேண்டும். அதற்கடையாளமாகத்தான் எனக்கு விவேகம் வந்தது விச்வாஸதத்தனான உன்னால்" என்று பக்தி பரவசமாகப் பொழிந்தான்.

மொழிந்து வாய் மூடுமுன், கோபங்காட்டியிருந்த தேவதூதனின் முகம் திடீரென்று மந்தஹாஸத்தால் விகஸித்தது. அதே க்ஷணத்தில் அண்டகடாகங்களெல்லாம் வெடித்ததுபோல் 'படீர்' என்று ஒரு பயங்கரமான சப்தம் அபுஹாஸன் காதில் விழுந்தது. கண் மூடித் திறப்பதற்குள் விச்வாஸதத்தன் போன விடந்தெரியாமல் மறைந்தான். ஆச்சர்யம் ஒரு பக்கம், 'எப்படி மறுபடி பூலோகத்திற்குத் திரும்பப்போகிறோம்' என்ற பயம் ஒரு பக்கம் பிடிக்க, ஹாஸன் நாற்புறமும் மிரள மிரள விழித்தான். என்ன ஆச்சர்யம்! தேவதூதனைக் காணாததோடு, அந்தப் பாதாள வுலகத்தையுங் காணோம்! கண்ணை நன்றாகத் துடைத்துக்கொண்டான். விச்வாஸதத்தன் வருமுன், எந்தக் கல்லின் மீதுட்கார்ந்து எப்படி வலதுகையில் முகவாய்க்கட்டையைத் தாங்கி யிருந்தானோ அதே கல்லின் மீது அதேமாதிரி உட்கார்ந்திருப்பதை உணர்ந்தான்.

இவையனையவும் நிஜமாக ஹாஸனுக்கு நேர்ந்தனவோ, அல்லது இவை ஹாஸன் கண்ட கனவோ எனக்குத் தெரியாது. அதைப்பற்றி ஹாஸன் ஒருவரோடும் ஒரு பொழுதும் பிரஸ்தாபிப்பதில்லை. ஒன்று மட்டும் எனக்குத் தெரியும். அது ஹாஸன் சரித்திரத்தின் பிற்பகுதியே.

காட்டைவிட்டு நாட்டை யடைந்து வியாபாரத் தொழிலைக் கைக்கொண்டான். தன் பொருளனைத்தும் விரயமானபொழுது மனிதவியற்கையை முற்று மறிந்தவனாதலால் சிறிது

சிறிதாய் வியாபாரத்தில் விருத்தியடைந்தான். இப்பொழுது 40 லக்ஷ ரூபாய்க்குமேல் ஸ்திதியிருக்கிறது. முன் காட்டிலிருந்தது போலிராமல் மனிதர்களிடம் மிகுந்த கனிவும்அன்பும், ஆதரவுமாக நடந்துவருகிறுன். கஷ்டம் யாதானும் நேர்ந்ததென்றால், துன்புற்றவர்களுக்கு பேர் ஊரில்லாமல் திரவியம் முதலிய உதவி அடிக்கடி கிடைக்கிறது. அவ்விதஞ் செய்யப்படும் உதவியெல்லாம் அபுஹாஸனாலேயே செய்யப்படுகின்றன என்ற ரகஸ்யம் எனக்கு மட்டும் (என் மூலமாக இக்கதையைப் படிக்கும் நண்பர்களுக்கும்) தெரியும்.

இது கட்டுக் கதை யென்று நண்பர்கள் நினைக்கவேண்டாம். சந்தேகமிருந்தால் அபுஹாஸன் இருக்கு மிடத்தைச் சொல்லி விடுகிறேன் ; அவனையே கேட்டுக் கொள்ளுங்கள். அபுஹாஸன் வஸிப்பது 'மனோராஜ்யத்தில்' 'கனு' என்னும் நகர். ஓம் தத் ஸத்.

வஸந்த மந்திரம்

ஐந்தாம் அத்தியாயம்
லலிதையின் பிரதாபம்

லலிதையைப்பற்றிப் பேச நமக்கு இதுவுரையில் அவகாசப் படவில்லை. நரேந்திரனைக் கண்டு கால ஸ்திதியை அறிந்து கொண்டதினம் முதல், இராஜபுதனத்துக்குத் தான் உபகாரம் கூடியவரையில் செய்யவேண்டுமென்ற எண்ணத்துடன், அரண்மனைப் பெண்டிரை ஒருங்கு சேர்த்து, முதலில் வேலை செய்யத் தொடங்கினாள். முகுந்தனுடைய பேருதவியால் இவர்கள் இராஜ சேனைக்கு எத்தனையோ வழிகளில் உதவிபுரிந்தனர். வீரர்களுக்கு அம்பராத்தூணிகளும், கவசமும், குதிரைகளுக்கு முகபடாமும் கயிறுகளும்,யானைகளுக்கு மேற்போர்வைகளும் கணக்கில்லாமல் செய்துகொடுத்தனர். பிரபுக்களின்பெண்டிர்இவ்வாறு உதவி செய்யவே, சாதாரண ஸ்திரீகளும் சங்கம் சங்கமாய்க் கூடி தங்களால் இயன்றவரையில் தானியம்சேர்த்தும், புல்போர்கட்டியும், போர் வீரர்களுக்கு உதவியாய்ப் பாதைகளை சீர்படுத்தியும் பலவிதத்தில் உதவி செய்தனர். ஸ்திரீகளின் சபைகளில் எல்லாம் லக்ஷ்மிபோன்ற லலிதையைக் காணலாம். தன் தேசத்துக்கு அடிமைத் தொழில் செய்ய மேற்கொண்டதினம் முதல், தன்னுடைய சொந்த மனக் கவலையை கொஞ்சம் கொஞ்சமாய் மறக்கத் தொடங்கினாள். லலிதை தங்கள் நடுவில் கலந்து, பொது நன்மைக்காகப் பிரயாசைப்படுகிறாள் என்ற ஒரு எண்ணமே ஒவ்வொரு ஸ்திரீயையும் தனக்கு அசாத்தியமான வேலையையும் கூட செய்வதற்கு உற்சாகப்படுத்திற்று.

இராஜபுத்திரர்கள் லலிதையை சாதாரணமான பெண் என்று எண்ணவில்லை. தங்கள் குல தெய்வம் என்று எண்ணினர். பெண்டிர் செய்யும் வேலைகளை மேற்பார்வை செய்து வரும் லலிதையை தூரத்தில் கண்டால் இரஜபுத்திரர் தலைவணங்கி மரியாதையாய் விலகி நின்று "ஈசனே ! துவாரகாபுரி வாஸா ! இவ்வம்மையைக் காப்பாற்றுவீர்" என்று மனதாரத் தோத்திரம் செய்வார்கள். தாங்கள் பேசிக் கொண்டிருக்கும் காலத்தில் லலிதையைப் பற்றி யாராவது வாயெடுத்தால், "அப்பா! அவள் பெயரை நாம் உச்சரிக்கவும் யோக்கியதை உடையவர்களல்லர். அவளைப் பெண்ணென்று நினையாதீர்கள், நமக்கு அருள் புரிய வந்த இராஜ இராஜேச்வரி" என்பார்கள். தேசாபிமானம் என்னும் பாசத்தால் கட்டுண்டு மதிமயங்கி,

"மெய் வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்............கருமமே கண்ணாயினர்."

என்று ஆன்றோர் சொல்லியபடி, பொது நன்மைக்காக உழைக்கும் லலிதையை ஆண் பாலரும் பெண் பாலருமாகிய எல்லா மக்களும் மனதாற "வாழி ! வாழி ! உன் தொல் குலம் வாழி !" ....என்று ஆசீர்வதித்தனர்.

இப்படி எல்லா மக்களும் ஒருமனப்பட்டு தேசத்தைக்காப்பாற்றவேண்டுமென்று வேலை செய்யவே, உதயபுரிக்கு யாதொரு பயமும் இல்லை யென்று எல்லோரும் எண்ணினர். ஆனால் தெய்வ சங்கல்பம் அவ்வாறிருக்கவில்லை. முற்றுகையை எதிர்பார்த்துச் சாதாரண ஜனங்களையும், பெண்டிர் குழந்தைகளையும் அனுப்பியபொழுதே லலிதையுடன் சேர்ந்து உழைப்பவர்களும் குறைந்து விட்டனர். பிரபுக்களின் மகளிர் சிலரே; சங்கங்களில்

கூரை ஏறிக் கோழி பிடிக்கமாட்டாத குருக்கள், வானம் ஏறி வைகுண்டம் காட்டுவாரா ?

உழைத்துவந்தனர். ஆமத்பாக்ஷா உதயபுரியை நெருங்கி வந்தபோது, அதைவிட்டு அஹோரத்திற்கும் சில மாது சிரோன்மணிகள் சேனையோடு வந்துசேர்ந்தனர். அஹோர துர்க்கத்தில் யுத்தம் ஆரம்பித்தவுடன் லலிதைக்கும் அவளது ஸங்கத்தாருக்கும் அநேக வேலைகள் ஏற்பட்டன. முகுந்தனே விலையுயர்ந்த மருந்துகளையும் பச்சிலைகளையும் சேகரித்து வைத்திருந்தான். அவற்றைக்கொண்டு காயம் பட்ட வீரர்களுக்கு வைத்தியம் செய்ய முன் வந்தனர்.

இரணகளத்தில் காயம்பட்டவர்களுக்கு முதலில் செய்யவேண்டிய சிகிச்சைகளையும் உதவிகளையும் செய்து, அவர்களைக் காப்பாற்றுவதினும் மேம்பட்ட தர்மகாரியம் வேறுண்டோ! இவ்வுலகம் ஏற்பட்டதுமுதல், களத்தில் மடிந்தோருக்கு உதவி செய்யும் வைத்தியரையும், பணித் தொழில் செய்யும் மாது சிரோன்மணிகளையும் புகழாதவர்கள் யார்?

பலவித வேலைகளில் சுறு சுறுப்பாய்ப் புத்தியைச் செலுத்தித் தன் நிலைமையை மறந்தாளாயினும் லலிதைக்கு எப்பொழுதாவது தன் நினைவும் வந்துவிடும். அது மனிதற்கு இயற்கையே யல்லவா? அச்சமயங்களில் லலிதை "எனக்காக வல்லவா இத்துணைபேர் இம்மாதிரி கஷ்டப்படுகிறார்கள். யான் ஒருவள் பிறவாதிருப்பின்............ஈசன் செயல்—யான் பிறவாதிருப்பின் என் தந்தையை ஏன் வருத்துகிறான் அம்மிலேச்சன்! இச்சேனைக்கும் கஷ்டம் வராது. என் அன்னையும் சுகமாயிருப்பாள். என்னைக் காப்பாற்றும் பொருட்டல்லவா இத்தனை வீரர், துருக்கப் படையை எதிர்த்துச் செல்லுகின்றனர். யான் இதோ தோன்றும் இம்மலையின்உச்சியிலிருந்து கீழே விழுந்து உயிரை மாய்த்துக் கொண்டால்—அந்த துஷ்டன் என்ன செய்வான்? உடனே திரும்பிவிடுவான் அன்றோ.........அங்ஙனம் எப்படி எண்ணக்கூடும்? தற்கொலை செய்து கொள்வதும் பாவமோ!

"மூர்க்கர் வழியை அறிந்தார் யார்?...காலசக்கரத்தின் போக்கை மாற்றயாராலியலும்! 'லலிதை ஓர் ராக்ஷசி; அவள் மூலமாய் உதயபுரி அழிவுற்றது. மஹாபாபிஅவள்; அவள் பிறவாதிருந்தால் எங்களுக்கு இவ்வளவு கஷ்டம் வராது!' என்று இரஜபுத்திரர் பிற்காலத்தில் பழி கூறுவதானல் அப்பழி நம்மைத் தொடாமல் விடுமோ......சீச்சீ! இந்நினைவுகள் நமக்கென்ன? யானு, ஈசன் செயலையும் அவன் காரணத்தையும் அறிய வல்லமையுடையவள். நமக்குரிய வேலையைச் செய்து, பலனை எதிர் பாராமல் கிருஷ்ணார்ப்பணம் செய்துவிட்டு, ஒன்றிலும் பற்றில்லாமல் ஈசனை நம்பவேண்டுமென்று சொன்னார் அல்லவா ஆசிரியர். அங்ஙனம் செய்வேன்! மனமே! இன்னமும் ஜயபால ராஜனிடத்தில் என்ன சபலம் உனக்கு! கிட்டாதாயின் வெட்டெனமற வென்ற உறுதி மொழியைக் கடைப்பிடி..........." என்று மனோராஜ்யம் செய்துகொண்டும், தன்னையே தேற்றிக்கொண்டும் இருக்கும் சமயத்தில், சங்கத்தார் ஏதாவது வேலை யிருக்கின்றதென்று சொல்லியனுப்புவார்கள். உடனே விரைந்தோடுவாள். இராப்பகலாய் இம்மாதிரி வேலை செய்து தன் முயற்சியில் எண்ணம், விசாரம், தேசாபிமானம், இவற்றை மறந்தாள் லலிதை. இராஜராஜேச்வரியின் அருள், குழந்தாய்! உனக்கு இப்பிறப்பில் இல்லாவிட்டாலும் மறுபிறப்பில் தப்பாமல் கிடைக்கின்றது!

மஹாசபையில் ஆடவரும் பெண்டிரும் லலிதையைக் காப்பாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொண்டதற்குக் காரணம் இதுவே. லலிதை பிழைத்திருந்தால், இராஜபுதனம் மேம்படும் என்று எல்லோரும் மனதார நம்பியிருந்தனர்.

ஆறும் அத்தியாயம்
லலிதையைக் காப்பாற்றியது

அஹோரதுர்க்கத்தில் அரசன் இருப்பிடம். சாயுங்காலம். லலிதை "ஐயா நான் தமது புத்திரியென்று தாங்கள் எண்ண வேண்டியதில்லை. ஓர் இரஜபுத்திரியென்பதை முதலில் அங்கீகரித்துக் கொள்ளும். யான் மனதார அக்கினிப் பிரவேசம் செய்யவேண்டுமானல் நீர் தடுக்கலாமோ?"

அரசன் 'லலிதா, உன்னுடன் வாதாடுவது சாத்தியமானகாரியமன்று; நீ தப்பித்துப்போக உடன்படுவாய். ஆனல் எனக்குச் சந்தோஷமே, உன் தாயையும் சந்தோஷப்படுத்தியவளாவாய். நமது தேசத்தாரும் சந்தோஷப்படுவார்கள். இல்லையேல் உன்னைத் தடுக்க எனக்கோ அதிகாரமில்லை. இன்னமும் ஒரு நம்பிக்

கை யிருக்கின்றது. நாளே, ஈசனருளே முன் னிட்டு எதிரியை வதைப்போமாயின் யான் உன்னே என் அருமை லலிதையென்று காண வும் கூடும். என் பிரஜைகளும் இராஜகுலம் பழுதுபடவில்லையென்று களிப்படைவார்கள். இதோ உன்னைக் கூப்பிடுகிறார்கள். எனது காலம் இனி ராஜாங்கத்துக்கே அர்ப்பணம் செய்யவேண்டியதுதான். உன் அன்னையு டன் யோசித்து அரைமணி நேரத்தில் தீர்மா னத்தைத் தெரியப்படுத்து. நரேந்திரன் தன் வேலையைச் செய்ய சித்தமாய்க் காத்திருக்கி ருன்" என்று தன்னருமை லலிதையின் தலை யைத் தடவி உச்சி முகர்ந்து முத்தமிட்டு வெளியே புறப்பட்டான் பிரதாபசிங்கன்.

அரை நாழிகைக்கெல்லாம் ஒரு சேவகன் அரசனையடைந்து "சுவாமி எல்லாம் சரியா யிற்று. லலிதை புறப்படுகிருள். இராணியார்—"

அரசன் "சரி! போ" என்று அவனை அனு ப்பிவிட்டு நரேந்திரனைக் கூப்பிட்டு அவனு டைய ஏற்பாடுகளைப்பற்றி விசாரித்தான். நரேந்திரன் தன் யுக்திகளை அரசனுக்கு எடுத் துச்சொல்லி விவரித்தபின் "இராத்திரி எட்டு நாழிகைக்குமேல் சுனையின் ஜலாதாரத்தை தொடர்ந்தே புறப்படவேண்டும் அம்மூவரும். லலிதை புருஷனைப்போல் ஆடைகளை யணிய வேண்டும். இனி நேரமாகின்றது. நான் போய் வருகின்றேன். இரவில் 15-ம் நாழிகையில் நாங்கள் க்ஷேமமாய்த் தப்பியோடினதற்கு அடையாளமாய்க் குறிகள் காட்டுவோம். கோ புரத்தின்மேல் நின்று அதனை அறிந்துகொள் ளுங்கள்" என்று விடைபெற்று அரசனையும் தன் தகப்பனையும் வணங்கிக் கண்ணும் கண் ணீருமாய்ப் புறப்பட்டான்.

சூரியன் அஸ்தமித்துவிட்டான். வெளிச் சம் மட்டும் இன்னும் குறையவில்லை. பாக்ஷா வின் சேனையில் காவல்காரர் என்றும்போல் உலாவுகின்றனர். கொஞ்சநாளாய் யாதொரு விசேஷமும் நிகழாததுபற்றி, வீரர் எல்லாம் கவலையின்றி யிருக்கின்றனர். தூங்கு கின்றவர் சிலர்; கூடாரத்தில் உட்கார்ந்து பேசு கின்றவர் சிலர்; ஆடுகின்றவர் சிலர். காவல்கா ரர்களே ஜாக்கிரதையாய் இருக்கிருர்களேயன்றி மற்றவர்கள் தத்தமிஷ்டப்படி காலம் கழிக்கின் றனர். சேனையில் உள்ளோர் எல்லாருக்கும் நன்ருய்த் தெரிந்த மஹமத் ஆலி நொண்டிக் கொண்டு நடக்கமாட்டாமல் தத்தளித்து பெரு மூச்சுடன் நடந்துவருகிருன். முதலில் பார் த்த காவல்காரன் "யார்" என்று சொல்லிக் கொண்டு திரும்பிப் பார்த்ததும் ஆலியைக்கண் டு ஆச்சரியமடைந்தான். அவனிடம் சென்று பார்க்கவே, அவன் கைகள் இரண்டும் கட்டப் பட்டிருந்தன. காலில் ஒரு பெரிய கட்டை, கயிற்ருல் கட்டப்பட்டிருந்தது. காவல்காரன் ஓடினதைக்கண்டு மற்றும் சிலர் அவ்விடத் திற்கு ஓடவே, படிப்படியாய் ஆலியைச்சுற்றி ஒரு கூட்டம் சேர்ந்துவிட்டது. ஆலி சுற்றி லும் நிற்போரைப்பார்த்து ஜாடைகாட்டிக் கட் டை அவிழ்த்துவிடும்படி கெஞ்சினான். அவர் கள் இப்பைத்தியக்காரன் ஊர் ஊராய்ப்பிச்சை யெடுத்துத் திரியும்போது, யாரோ துன்பப் படுத்தவேண்டுமென்று கட்டி யிருக்கலாம் என்று எண்ணி பரிதாபப்பட்டு, கட்டுகளை அவிழ்த்துவிட்டனர். ஆலி சந்தோஷத்துடன் ஆடிப்பாடினான். வீரர்கள் சந்தோஷப்பட்ட னர். இரவில் போஜனகாலம் வரையில் அவர் களைப் பலவற்ருல் சந்தோஷப்படுத்தினான். போஜனமுடிந்ததும், அவர்கள் எல்லாரும் தத்தமிடத்திற்குச் சென்றனர். ஆலிமட்டும் காவலாளிகளுடன் அங்குமிங்கும் அலைந்து விளையாடிக்கொண்டிருந்தான்.

நள்ளிருள் மூண்டது. சுனைகளிலிருந்து வழிந்து அடிவாரத்தில் ஓடிவரும் கால்வாயின் பக்கத்தில் காவல் காப்பவன் மல்லீக் மகமத் என்பதை அறிந்துகொண்டு அவனிடம் சென் ருன். சிப்பாய் மகமத், ஆலியைப் பார்த்து சந்தோஷத்துடன் "என்னுப்பே! என்னு!" என்ருன். "எல்லாம் சரி: சாயபு: எல்லாம் சரி" என்ருன் ஆலி.

சிப்பாய் "அன்னிக்கு ஓடிட்டயே: இன் னிக்கு ஓடு பாப்போம் என்னேடு" என்று கேட்டான். ஆலி நல்லதென்று மனதில் நினைத்து "இன்னும் சற்றுநேரம் போகட்டும். சாப்பிட்ட இளைப்பு ஆறட்டு" மென்ருன்.

சிப்பாய் "உனக்கு கால் வலியா என்ன பயப்படரே" என்ருன்.

ஆலி "பயமென்ன ஓடறத்துக்கு" இதோ ஓடறேன் பார். என்று ஒரே ஓட்டமாய் ஓடிக் கூடாரத்துக்குப்பின் ஒரு யந்திரத்தை ஒளித்து வைத்துவிட்டு மறுபடி வந்து "என்ன சொல் றெ இப்போ" என்ருன்.

சிப்பாய் "சரி: என்னோடு ஓடி பார்ப்போம்-- என்ன பார்க்கறே வாய்க்கால் கிட்டே. மினு மினுப்பூச்சியப்பா—பயப்படாதே" என்றான். உண்மையாகவே ஆலி, சிப்பாயின் வார்த்தையையும் அவன் ஓட்டத்தையும் கவனித்தவன் அல்லன். நாழிகை ஒன்பதிற்குமேல் ஆய்விட்டபடியால் ஆற்றங்கரை யோரத்தில் ஏதாவது குறிப்புகள் காண்கின்றனவா என்று அடிக்கடி பார்த்தான். அவ்விதம் பார்த்தபொழுது மூன்றுதரம் முணுக்கு முணுக்கென்று ஒரு விளக்குத் தெரிந்தது. அதைத்தான் சிப்பாய் மினுமினுப் பூச்சி யென்றான்.

ஆலி "பயமில்லை: என்னைப் பிடி பார்ப்போம்! இந்தக் கூடாரத்தைச் சுத்திச்சுத்தி ஓடணும். சத்தம் செய்யப்படாது. யாராவது முழிச்சிண்டால் அடிப்பா" என்றான். சிப்பாய் மெதுவாய் ஓடிவர சம்மதிக்கவே, (நரேந்திரன்) ஆலி ஓடினான். ஓடும்போது மெதுவாய்த் தான் ஒளித்து வைத்திருந்த யந்திரத்தை தாண்டித் தாண்டிச் சென்றான். சிப்பாய் ஒருமுறை அதில் மாட்டிக்கொண்டு ஓடமுடியாமல் நின்று விட்டான். காலில் காயம்பட்டு இரத்தம் ஒழுகுகின்றது. நரேந்திரன் ஓடிவந்து "ஐயா கூடாக் கயிறுபட்டுக் காலில் காயமாய்விட்டது. ஐயோ பாவம்! படுத்துக்கொள்ளும் சத்தம் செய்யாமல்—இதோ காயம் கட்டறேன். மருந்து வாங்கிக்கொண்டு வரேன். இப்படி படுத்துண்டு இரும்" என்று சொல்லி ஒரு துணியைக் காயத்துக்குக் கட்டிவிட்டுப் பறந்தோடினான். மருந்துக்குச் சென்றவன் சேனை நிற்குமிடத்தைவிட்டு கால்வாயின் பக்கமாய் ஓடி தன் மார்பில் மறைத்து வைத்திருந்த சிக்கிமுக்கியைக் கீற்றி இரண்டு முறை யொளி யுண்டாக்கினான். வெகு தூரத்தில் துருக்கசேனையின் இரண்டு கூட்டத்திற்கும் நடுவே மூன்றுபேர் சந்தடி செய்யாமல் போயினர். அவர்கள் கண் மறைவாய்ப் போகும் வரையில் பார்த்திருந்து, பெருமூச்சுவிட்டுக் காலடியில் இருந்த சில பச்சிலைகளைப் பறித்துக்கொண்டு அவற்றைக் கசக்கி வைத்து சிப்பாயின் புண்களைக் கட்டி "ஐயா இனி ஓடாதே. நாளைக்கு ஆறிப்போகும் காயம்: இதோ நான்போய் மரத்தடியில் படுத்துக்குறேன். போகட்டுமா"என்று கேட்டுக்கொண்டு மெல்ல மெல்ல சமயம் பார்த்துக்கொண்டு அம்மூவரும் போன வழியைத் தொடர்ந்தான்.

தேக இளைப்பாலும் மனத் தளர்ச்சியாலும் சிறுவன் வழிநடக்க முடியவில்லை. இரவில் 15-நாழிகையானதும் தன் சிக்கிமுக்கியை மறுபடி எடுத்துக்கொளுத்தித் தன் ஆடையில் ஒரு துணி கிழித்துப் பற்றவிட்டான். கோட்டை நடுவில் உள்ள கோபுரத்தின் உச்சியில் ஒரு தீபம் மூன்று முறை தோன்றி மறைந்தது.

உடனே நரேந்திரன் "ஈசா இனி நடத்தல் இயலாது; இதே இடத்தில் படுத்து இளைப்பாறுகிறேன். நாளைப்பொழுது எப்படி விடியுமோ எங்ஙனம் முடியுமோ! யான் நின்று என்னரசனுடன் சண்டைசெய்ய முடியாமல் போயிற்றே. ஆயினுமென்? அவன் கட்டளைப்படி நடக்கின்றேன். என் உயிர் உள்ளவரை லலிதையைக் காப்பாற்றுவேன். நாளைக் காலையில் அவர்கள் சுகுணபுரம் சேரவேண்டியது; நானும் அதற்குள் அவ்வூர் சேருவேன்! ஈசா! எல்லாம் உன் திருவருள்! " என்று ஈசனைத் தொழுது புழுதியில் படுத்துக்கொண்டான்.

சிறுவர்களுக்கான பக்கங்கள்

CHILDREN'S PAGES

ஸர் வால்டர் ரலே

இப்போது நம்மை ஆள்பவர் இங்கிலீஷ்காரர். இவர்கள் தேசம் இங்கிலாந்து. இது ஐரோப்பா கண்டத்திற்கு மேற்கிலுள்ளது. இங்கிலாந்து தேசத்திற்கு முக்கிய நகரம் லண்டன். லண்டன் மாநகரம் தெம்ஸ் நதிமீதுள்ளது. இந்நகரத்தில், பார்ப்பவர் மனதை பிரமிக்கச்செய்யும் அழகுவாய்ந்த அநேக கூட கோபுரங்களும் மாடமாளிகைகளும் உண்டு. இம்மாளிகைகளில் முக்கியமானது உவின்ஸர் காஸில். இதை ஒரு புராதன அரண்மனை என்றே சொல்லவேண்டும்; தெம்ஸ் நதிக்குச் சமீபத்தில் கட்டப்பட்டிருக்கிறது.

மேற்சொன்ன அரண்மனைக்கு வெளிப்

கூலிக்கு நாற்று நட வந்தவனுக்கு எல்லைக்கு வழக்கோ ?

புறத்தில் சுமார் 330 வருஷங்களுக்கு முன் ஒரு பெருங்கூட்டத்தில் ஒரு யௌவன புருஷன் நின்றுகொண்டிருந்தான். மாலை சுமார் ஐந்துமணி யிருக்கலாம். நின்றுகொண்டிருந்த மனிதன் அதிக உயரமுமல்ல, அதிக குள்ளமுமல்ல. அவன் தேகம் அதிக் ஸ்தூலமுமல்ல அதிக ஒல்லியுமல்ல. முகம் கொஞ்சம் நீளமென்று சொல்லலாம். தலைமயிர் ஒரு அங்குலத்திற்கு மேலாகவே வெட்டப்பட்டு செங்குத்தாக சீவப்பட் டிருந்தது. காதில் விலையுயர்ந்த முத்துக் கடுக்கன்கள் அவன் தலையைத் திருப்பும் போதெல்லாம் வெய்யில்பட்டு பளீர் பளீர் என்று பிரகாசித்தன. அவன் மேலே போட்டுக்கொண்டிருந்த சட்டையோ விலை உயர்ந்த வெல்வெட்டால் தைக்கப்பட்டு தங்க சரிகைகளால் பூக்கள் போடப்பட் டிருந்தது. அவனுடைய கைகளும் விரல்களும் கொஞ்சம் நீளம். விரல்களில் பச்சை மோதிரங்கள் தரித்திருந்தான். மற்ற உடைகள் அக்காலத்து வழக்கப்படி இருந்தன. இவனுடைய பார்வை கம்பீரமாகவும் பார்ப்பவர் மனதை கவரச் செய்யும்படியாகவு மிருந்தது. முகத்தில் எப்போதும் சந்திரகாந்தி போன்ற புன்சிரிப்பு உண்டு.

அக்காலத்தில் இங்கிலாந்து தேசத்தை, ராஜீய விஷயங்களில் வெகு சமர்த்தரான எலிஜபத் மகாராணியார் ஆண்டுவந்தனர். அப்போது ராணியாருக்கு முக்கிய வாசஸ்தலம் உவின்ஸர். தினப்படி சாயங்காலத்தில் எலிஜபத் தன்னுடைய பரிவாரங்களுடன் தெம்ஸ் நதியில் உல்லாசப்படகுகளில் வேடிக்கையாய்ப் போய் வருவதுண்டு. அன்றைய தினமும் ராணியார் அதற்காக வழக்கம்போல் புறப்பட்டு வருவதை கண்ணுற்று ஆனந்திக்கும் பொருட்டே அநேக ஜனங்கள் அரண்மனை வாயிலில் கூடியிருந்தனர். கொஞ்சநேரத்திற்கெல்லாம், "சற்று விலகி நில்லுங்கள்! மாட்சிமைதங்கிய நமது மகாராணியார் வருகின்றனர்" என்ற கம்பீரமான ராஜசேவகர்களுடைய குரலும் கேட்டது. ராணியாரும் தமது கொலுமண்டபத்தைவிட்டுப் புறப்பட்டு, ராஜசபையிலுள்ள சீமான்களும், சீமாட்டிகளும் புடைசூழ, கண்ட ஜனங்கள் களிப்புடன் கரகோஷம் செய்ய படகுகள் தயாராக அலங்கரிக்கப்பட்டுக் காத்துக் கொண்டிருக்கும் தெம்ஸ் நதிக்கரையை நோக்கிச் சென்றனர். போகும் வழியில், இருபக்கங்களிலும் ஜனங்கள் நின்றனர். வண்டிகளெல்லாம் நிறுத்தப்பட்டன. நம்முடைய யௌவன புருஷரும் ராணியார் வரும் வழியில் ஒரு பக்கத்தில் நின்றுகொண்டிருந்தார். முதல்நாள் இரவில் மழைபெய்ததால் வழியில் ஒரு பாகம் சேறாக விருந்தது. வந்துகொண்டிருந்த ராணியார் அதன்மீது நடக்கலாமா நடக்கக் கூடாதாவென்று சற்று நேரம் யோசித்துத் தயங்கி நின்றனர். பக்கத்தில் நின்ற வால்டர் ரலே (அதுதான் நமது யௌவன புருஷனின் பெயர்) தன்னுடைய விலையுயர்ந்த பொற்சரிகைகளால் பூக்கள் போடப்பெற்ற மேல்சட்டையை உடனே கழற்றி, ராணியார் சௌகரியமாக போகும்படி சேற்றின்மீது வைத்தார். ராணியார் அவரைப் புன்சிரிப்புடன் சற்றுநேரம் உற்றுப் பார்த்துவிட்டு, சட்டையின்மீது தன் காலை வைத்து அப்பால் சென்று, தெம்ஸ் நதிக்கரை சேர்ந்து, காத்துக்கொண்டிருந்த தன் படகில் ஏறினதும், தன் சேவகனைக் கூப்பிட்டு, "அரண்மனை வாயிலில் ஒரு யௌவன புருஷர் மேல்சட்டை யில்லாமல் நின்று கொண்டிருப்பார். அல்லது, சேறுபட்ட மேல்சட்டை போட்டுக் கொண்டிருப்பார். அவரை இவ்விடம் அழைத்துவா" என்று கட்டளை இட்டார். சேவகனும் அரண்மனைவாயிலிலிருந்து கலையஆரம்பித்த கூட்டத்தில் ஒவ்வொருவராக கவனித்துப் பார்த்து வந்தபொழுது, சேறு கறைபட்ட சட்டையைப் போட்டுக் கொண்டிருந்த ஒருவரைக் கண்டு, "ஐயா நமது மகாராணியார், அரண்மனை வாயிலில் ஒருவர் சேறுபட்ட சட்டை போட்டுக் கொண்டிருப்பார். அவரை அழைத்துவாவென்று எனக்குக் கட்டளை இட்டிருக்கிறார்கள். அவர்கள் குறிப்பிட்ட பேர்வழி தாங்கள்தான் என்று நினைக்கிறேன்; தயவுசெய்து என்னுடன் வரவேண்டும்" என்று சொன்னான். "சரி அப்படியே வருகிறேன்" என்று சொல்லி, ரலேயும் சேவகனுடன் பின் தொடர்ந்து, ராணியார் வீற்றிருந்த படகிற்கு வந்து சேர்ந்தார். வந்ததும் ராணியாரை வணங்கி, "தேவரீர் உத்தரவுப்படி அடியேன் இவ்விடம் வந்திருக்கிறேன்" என்று சொன்னார்.

ராணியார்: "வாரும், உட்காரும்" என்று சொல்லி, படகில் ஓர் இடத்தைக் காட்டினார்.

கூலிக்குப் பாவி குறுக்கே வந்தானே.

ரலேயும் சற்றுநேரம் நின்று பிறகு உட்கார்ந்தார். "ஏனய்யா! நீர் நமக்காக இன்றையதினம் உமது விலையுயர்ந்த மேல்சட்டையை ஏன் வீணுக்கினீர்?"

ரலே : நான் அதை வீணுக்கவில்லையே. தேவரீர் திருவடிபட அது எவ்வளவோ பாக்கியம் பெற்றது. தங்கள் பாதம் அதில் பட்டவுடனே அரசகுமாரர்களும் அணிந்து கொள்ளும்படியான அந்தஸ்து அதற்கு உண்டானபோது நான் அதை வீணுக்கிவிட்டேன் என்று தேவரீர் சொல்வது முறையோ?

ராணியார் : வெகு நன்ருய்ப் பேசுகிறீர் நல்லது இருக்கட்டும். உமது பெயர் உன்ன?

ரலே : என் பெயர் வால்டர் ரலே.

ராணியார் : வால்டர் ரலேயா? நான் உம்மைப்பற்றி கேள்விப்பட் டிருக்கிறேன். நீர் வாசித்தவ ரல்லவா?

ரலே: ஏதோ கொஞ்சம் வாசித்திருக்கிறேன் என் படிப்பு தங்கள் படிப்புக்கு ஒரு ஈடா?

ராணி : ஓய்! போதும். நன்ருய் வாசித்தவர்களெல்லாம் அப்படித்தான் சொல்லுவார்கள். அதுதான் தேர்ந்தபடிப்பின் லட்சணம். வித்துவான்களுக்கு அடக்கம் அணிகலமல்லவா?

ரலே : நான் சொன்னது உண்மையேதவிர முகஸ்துதிக்காகச் சொல்லவில்லை.

ராணி : ஷேக்ஸ்பியர் படித்திருக்கிறீரா?

ரலே : படித்திருக்கிறேன்.

ராணி: "முதுவேனிற் கனவு" என்ற நாடகம் எப்படி?

ரலே : நல்ல நாடகம். நன்ருய் எழுதப்பட்டிருக்கிறது.

ராணி: அதில் உமக்குப் பிரியமுள்ள சில சந்தர்ப்பங்கள் எடுத்துச் சொல்லும். கேட்கலாம். ஷேக்ஸ்பியர் வாசித்துச் வெகுகாலமாகிவிட்டது.

ரலே உடனே முதுவேனிற்கனவில் ராணியாரைப்பற்றி குறிப்பிட்டிருக்கும் சந்தர்ப்பத்தை தெளிவாகச் சொல்ல ராணியார் சற்று நாணினர். முகமும் கொஞ்சம் சிவந்தது. படகும் புறப்பட்ட இடம் வந்துசேர்ந்தது. இதுமுதற் கொண்டு ராணியாருக்கும் ரலேக்கும் சிநேகம் பலத்தது. மேற்சொல்லிய விதம் ராணியார் தயவை ரலே சம்பாதித்தார்.

பிறகு ரலே அமெரிக்காவுக்குப்போய் இங்கிலீஷ்காரர் குடியேற ஒரு நாடு ஏற்படுத்தி அதற்கு 'வர்ஜினியா' என்று பெயரிட்டார். ராணியாரை திருப்தி செய்வதற்காகவே இவ்விதம் பெயரிட்டார். 'வர்ஜின்' என்ற பதத்திற்கு 'கலியாணமாகாதவள்' என்று பொருள். ராணியார் கலியாணம் செய்துகொள்ளாததால் அவருக்கு "வர்ஜின் குவீன்" என்ற வேறு பெயரும் வழங்கலாயிற்று.

ரலே அமெரிக்காவிலிருந்து உருளைக்கிழங்கையும், புகையிலையையும் முதல் முதல் இங்கிலாந்துக்குக் கொண்டுவந்தார். ரலே என்ன சொல்லியும் ஜனங்கள் உருளைக்கிழங்கை சமையல் செய்துசாப்பிட பயப்பட்டார்கள். முதல் முதல் தேயிலை இங்கிலாந்துக்குக் கொண்டு வரப்பட்டபோது, ஒரு கிழவி தேயிலையை கொஞ்சம் வேகவைத்து உப்புப்போட்டுத்தின்றுபார்த்தாள். அரைப்பாய்க் கசந்தது. "சீ! சீ! இதுகெட்டது! நன்ருகவேயில்லை. இதைக்காட்டிலும் கீரை நல்லது" என்று சொல்லி வேகவைத்த தேயிலை முழுமையும் தூரக் கொண்டுபோய் எறிந்துவிட்டாள். அதுபோல, முதலில் உருளைக்கிழங்கை பக்குவம் தெரியாமல் சமையல் செய்து நன்ருயில்லாதது கண்டு, விஷம் என்று நினைத்து, அநேகர் அதைப் பன்றிகளுக்குப் போட்டார்கள். நாளடைவில் அதன் உபயோகத்தை அறிந்து இப்போது அதை விடாமல் கையாடி வருகிருர்கள்.

இங்கிலாந்தில் முதல் முதலில் ரலே புகையிலைச் சுருட்டுக் குடித்தபோது பக்கத்தில் நின்ற அவர் வேலைக்காரன், வேறெவரும் இம்மாதிரி சுருட்டுப் பிடிப்பதைப் பார்த்து இராததினுலே தன் எஜமானன்மீது நெருப்புப் பிடித்துவிட்டதென்று நினைத்து, அவர் மீது ஒரு குடம் குளிர்ந்த ஜலத்தை ஊற்றினன். ரலே குடல் குலுங்க நகைத்து, "என்னடா! உனக்குப் பைத்தியமா" வென்று சொன்னர். "நான் தங்கள்மீது தண்ணீர் ஊற்றி, தங்களைப் பிடித்துக்கொண்ட நெருப்பை அவிக்காவிட்டால் இந்நேரத்திற்குள் தாங்கள் வெந்து சாம்பலாய்ப் போயிருப்பீர்களே" என்று வேலைக்காரன் பதில் சொல்ல, இன்னும் அதிகமாகச் சிரித்தார்

ரலே ஒருநாள் ராணியாரைப் பார்க்க அரண்மனைக்குச் சென்ருர். ராணியார் வெளியில் சென்றிருந்தார். ராஜ சேவகர்கள் ரலேயை ஒரு அறையில் ஓர் ஆசனம் கொடுத்து உட்கா

ரச் சொன்னார்கள். ரலேயும் உட்கார்ந்து சுருட்டுக் குடிக்க ஆரம்பித்தார். அறையெல்லாம் ஒரே புகைமயமா யிருந்தது. ராணியாரும் வந்துவிட்டார். உடனே ரலே எழுந்து வணங்கினார்.

ராணி : அங்கே யார் ரலேயா ?

ரலே : ஆம். ரலேதான்.

ராணி : புகையில் தெரியவில்லே. ஆ! எவ்வளவு புகை ! இவ்வளவு புகையா ?

ரலே: புகை ஒரு டன்னுக்கு மேலாகவிருக்கும்.

ராணி : புகையைக் கூட நிறுத்துச் சொல்லும் சாமர்த்தியம் உம்மிடமுண்டோ ?

ரலே ; ஆம் ! உண்டு.

ராணி: புகையை நிறுத்து, அதன் அளவை உம்மால் பிசகில்லாமல் சொல்லமுடியுமோ?

ரலே : ஆம். புகையை நிறுத்து, அதன் நிறை எவ்வளவு என்று சமுகத்தில் காட்டுகிறேன்

ராணி: நீர் அவ்விதம் செய்யா விட்டாலோ?

ரலே: இனிமேல் சுருட்டே கையில் பிடிக்கிறதில்லே. ஆனால் புகையை நிறுத்து அதன் அளவை எவ்வளவென்று சொன்னாலோ ?

ராணி: நூறு பவுன் தருகிறேன்.

ரலே: பந்தயம் உறுதிதானே.

ராணி: ஆம்; உறுதிதான்.

உடனே ரலே ஒரு பவுண்டு புகையிலேயை கொண்டுவரச் சொல்லி, சுருட்டு செய்து, அதைக் குடித்தார். குடிக்கும்போதே அதினின்று விழும் சாம்பலே, கீழே விழாதபடி ஒரு காகிதத்தில் பிடித்தார். சுருட்டுகுடித்து முடிந்ததும் அவர் புகையை நிறுக்கவில்லே. சாம்பலே நிறுத்தார். அது அரையே அரைக்கால் பவுண்டு இருந்தது. குடித்த புகையிலேயின் நிறை ஒரு பவுண்டு. சாமபலின் நிறை அரையே அரைக்கால். ஆகையால் புகையின் நிறை காலே அரைக்கால் பவுண்டு என்று சொன்னார்.

இதைக் கேட்டதும் ராணியார் சந்தோஷமடைந்து, "இக்காலத்தில் அநேகர் தங்களிடமுள்ள பொன்னே எல்லாம் புகையாக்குகின்றனர். ஆனால் புகையை பொன்னாக்கினவர் நீர் ஒருவரே" என்று சொல்லிக்கொண்டே தான் பந்தயம் கட்டின நூறு பவுனேயும் ரலேக்குக் கொடுத்தார்.

ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

LADIES' PAGES

[ஸ்ரீமான் ஸி. ஆர். ஸ்ரீனிவாஸய்யங்கார் அவர்கள், பீ.ஏ.]

அஹல்யாபாய்

மாளவ தேசத்தில் பாத்தர்த்தியென்ற கிராமத்தில், அஹல்யாபாய், 1735-வது வருஷத்தில் பிறந்தாள். அவளுடைய பிதாவான ஆனந்தராவ் சிந்தே யென்பவர் தாங்கர ஜாதியைச் சேர்ந்த வேளாளர். அவருக்கு வெகு காலமாய் புத்திர ஸந்தானமில்லாமல், எண்ணிறந்த விரதங்களேயும் நியமங்களேயும் அனுஷ்டித்தார். அவரும் மனேவியும் அடிக்கடி புண்ய க்ஷேத்திரங்களுக்குப்போய் பகவானேத் தரிசித்துப் பூஜித்து, தங்களுக்கு ஓர் குழந்தையை அனுக்கிரஹிக்கும்படி பிரார்த்தித்தார்கள். பல புண்ய தீர்த்தங்களுக்குச் சென்று ஸ்நானஞ் செய்து உபவாஸம் தர்ப்பணம் பிரதக்ஷிணம் முதலியவைகளே விதிப்படி அனுஷ்டித்தார்கள்; நாக பூஜை செய்தார்கள்; அரசமரத்தையும் வேப்பமரத்தையும் சேர்த்து வளர்த்து, விவாஹஞ் செய்வித்தார்கள்; ஸன்யாஸிகளேயும், ஸாதுக்களேயும், பக்கிரிகளேயும், உபசரித்து, சுச்ரூஷை, செய்தார்கள்; ராமாயணம் முதலிய புண்ய கதைகளேப் படிக்கக் கேட்டார்கள். எப்படியாவது, ஸந்தான மில்லாமைக்குக் காரணமான பாபங்கள் அழிந்து பரிசுத்தமாய் ஓர் உத்தமான குழந்தையைப் பெற்று மகிழ்ந்து, வம்சவிருத்திசெய்து கோரமான நரகத்திலிருந்து தாங்கள் தப்பவேண்டுமென்பதே அவர்களுடைய கருத்து.

ஒருநாள் அவர்கள் வசித்த கிராமத்திற்கு ஓர் ஸாதுவந்தார். அங்குள்ளவர்கள் ஆனந்தராவிடத்திற்குவந்து "இந்தமஹான் மிகவும் வயது சென்றவர்; சாந்தமூர்த்தி; காமக் குரோதங்களற்றவர்; களங்கமற்ற ஞானமும், இந்திரியங்களேயும் மனதையும், அடக்கி நிறுத்தும் சக்தியும் அவருடைய முகத்தில் ஜ்வலிக்கின்றன. இதுவரையில் இப்படிப்பட்ட புண்யராசியை நாம் பார்த்ததில்லே. நீர் அவரைப் பிரார்த்தித்து உபசரித்தால், உமது மனக்குறையை நீக்குவா"ரென்றார்கள். ஆனந்தராவ் "எனக்கும என் மனேவிக்கும் நடுவயது தாண்டி விட்

டது. மக்களைப் பெறுவோமென்ற ஆசை ஒழிந்தது. நாங்கள் புண்யக்ஷேத்திரங்களையும், புண்ய தீர்த்தங்களையும், ஸாதுக்களையும் பெரியோர்களையும் அண்டி அலுத்தோம். இது வரையில் பார்த்தவர்களைக் காட்டிலும் இவர் என்ன விசேஷம்? ஆயினும் ஸாதுக்களைப் போற்றுவது நமது கடமை. நமக்குப் பூர்வ ஜன்ம புண்ணியமும் பகவானுடைய அனுக்கிரஹமும் இல்லாவிட்டால், அவர்களைக் குற்றஞ் சொல்வதில் பயனென்ன? ஸாதுக்களைத் தர்சிப்பதில் யாதொரு தோஷமுமில்லையே" யென்று ஆனந்தராவ் சிந்தே அந்த ஸாதுவை உபசரித்து வீட்டிற்கு அழைத்துவந்து, தன் மனைவியுடன் பூஜித்துத் தங்களுடைய மனக்குறையை அவரிடத்தில் வணக்கமாய்த் தெரிவித்தார். அதைக்கேட்டு அந்த ஸாது, வெகு நேரம் தியானத்தில் ஆழ்ந்து பிறகு கண்ணைத் திறந்து, ஆனந்தராவையும் அவருடைய மனைவியையும் குளிரக் கடாக்ஷித்து, "பக்தசிரேஷ்டர்களே! உங்களுடைய பாக்கியமே பாக்கியம். கோலாப்பூரென்ற புண்யஸ்தலத்தில் விளங்கும் மஹா தேவியை, ஸ்ரீஜகதம்பிகையைநீங்கள் அண்டிப் பூஜித்தால், உங்களுடைய மனோரதங்கள் நிறைவேறும். நீங்கள் அதைரியத்தைவிட்டு, பகவானுடைய அபாரமான அருளை நம்பி, அவரையே சரணமடையுங்களெ"ன்றார்.

ஆனந்தராவும் அவருடைய இல்லாளும், அந்த ஸாதுவின் வார்த்தையை வேத வாக்காய் நம்பி, அன்றே புறப்பட்டுக் கோலாபுரத்திற்குச் சென்று, வெகு பக்தியுடன் ஜகதம்பிகையை மற்றப் பற்றற்றுச் சரணமடைந்து, ஒருவருஷம் வரையில் பூஜைகளாலும் அர்ச்சனைகளாலும் அபிஷேகங்களாலும்பிரதக்ஷிண நமஸ்காரங்களாலும் விரத உபவாஸங்களாலும் தேவியின் கிருபையை ஸம்பாதிக்க முயன்றார்கள். ஒரு வருஷமானவுடன், ஒரு நாள் இரவில் மஹாதேவி ஆனந்தராவின் ஸ்வப்னத்தில் தோன்றி, "குழந்தாய் நீயும் உன் மனைவியும் என்னிடத்தில் வைத்த பக்தியாலும் எனக்குச் செய்த உபசாரத்தாலும் மகிழ்ந்தேன். நீ இனி உன் ஊருக்குப் போகலாம். உன் பிரார்த்தனையை அங்கீகரித்து நானே உனக்குப் பெண்ணாய்ப் பிறப்பே"னென்று திருவாய் மலர்ந்தருளி மறைந்தாள். அப்பொழுதே அவருடைய பார்யைக்கும் தோன்றி, "பெண்ணே! உன் மனக்கவலை நீங்கிற்று. உன் எண்ணங்கள் நிறைவேறின. என்னையே மகளாகப் பெற்றுச் சீராட்டும் பாக்கியத்தைப்பெறுவாயெ"ன்று அவளுடைய நெற்றியில் தன் கையால் திலகமிட்டு, தாமரை மொட்டைப்போன்ற தேஜோமயமான ஓர் குழந்தையைக் கையில்கொடுத்து, ஸுமங்கலி ரூபந்தரித்த அந்த லோகநாயகி மறைந்தாள்.

ஆனந்தராவின் பார்யை கர்ப்பவதியாய், நல்ல முஹூர்த்தத்தில் பெண் குழந்தையைப் பெற்றாள். மஹா தேவியின் அனுக்ரஹத்தால் பிறந்த குழந்தையாகையால், மாசற்றவளென்ற கருத்துடன், அந்தக் குழந்தைக்கு அஹல்யை யென்று பெயரிட்டார்கள். அப்பொழுது அதின் ஜாதகத்தைக் கணித்துப் பார்த்த ஜோஸ்யர், அடங்காத ஆச்சர்யமடைந்தார். "இது ஸாதாரண மனுஷ்ய ஜாதகமல்ல. தெய்வயோகங்கள் பல அமைந்திருக்கின்றன. இவ்வளவு தாழ்ந்த குலத்தில் பிறந்தும், இந்தப்பெண் மஹாராஜாவின் நாட்டுப்பெண்ணாய்மஹாராஜாவின் மஹிஷியாய், மஹாராஜாவின் தாயாய், மஹாராஜாவின் ஸிம்மாஸனத்தில் வீற்றிருந்து, மஹாராஜாவின் அதிகாரத்தைச் செலுத்துவாள். இவளுக்கு நீண்ட ஆயுஸும், தனதான்ய வஸ்துவாஹன பரிவார அதிகார பாக்கியமும் குறைவற வாய்த்திருக்கின்றன. இவள் ஜீவித்திருக்கும் வரையில், எல்லோராலும் கேவலம் பகவானுடைய அம்சமென்று கொண்டாடப்பட்டுக் காலகதியை அடைந்தபிறகு ஸாக்ஷாத் ஜகதம்பிகையின் அவதாரமேயென்று ஆலயத்தில் வைத்துப் பூஜிக்கப்படுவாள். ஆனந்தராவ் சிந்தே! உன் பாக்கியமே பாக்கியம். நீயே தன்யனெ"ன்றார்.

ஆனந்தராவும் அவருடைய மனைவியும், அந்தப் பெண்ணை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்த்துவந்தார்கள். அஹல்யாபாய், காந்தியிலும் புத்தியிலும் ஞானத்திலும் தன்னடக்கம் முதலிய உத்தம குணங்களிலும் சுக்கிலபக்ஷத்துச் சந்திரனைப் போல் நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டேயிருந்தாள். தன் ஸ்வய பாஷையையும் ஸம்ஸ்கிருதத்தையும் எழுதப்படிக்கப் பழகி ராமாயண மஹாபாரத பாகவத வாஸிஷ்ட முத

லிய உத்தம கிரந்தங்களையும் மனு முதலிய ஸ்மிருதிகளையும், சாமந்தகீயம் முதலிய ராஜ நீதி சாஸ்திரங்களையும் ஸந்தேஹ விபரீத மின்றிக் கற்ருள். பெரியோர்களைப் பூஜித்து வந்தனை வழிபாடுகள் செய்து, தேவாலயங்க ளுக்குச் சென்று, எல்லாம் அருளிய கருணைக் கடலைக் கண்ணுரக்கண்டு, வாயார வாழ்த்தி, கையாரப் பூஜித்து அவர் தனக்குச் செய்த செப்புதற்கரிய அனுக்ரஹத்திற்குத் தன்னுலி யன்றவரையில் நன்றியைத் தெரிவிக்க முயன் ருள். வீட்டுக் காரியங்களை ஒழுங்காயும் அழ காயும் செய்வதும், யாவரையும் பார்வையாலும் பேச்சாலும் நடத்தையாலும் ஆதரித்துக் காந் தம் ஊசியை இழுத்துக்கொள்வதுபோல தன் னிடத்தில் இழுத்துக்கொண்டு தன்னை விட்டு ஒருநாளும் பிரியாத பக்தர்களாய்ச் செய்து கொள்ளும் அபூர்வமான சக்தி அவளிடத்தில் அமைந்திருந்தது. ஸாதா ரணமாய் உலகத்தார் அழகென்று மதிக்கும் விதம் அவள் அழகானவளல்ல. ஆனுல் அவ ளுடைய அகத்தின் ஒளி முகத்தில் விளங் கிற்று. சிறு வயதிலேயே அவளுடைய நடை உடை பாவனைகளில் ஓர்வித கம்பீரமும் கௌ ரதையும், பிறர் கண்டு மதிக்கும்படியான ஓர் வித அதிகாரப்பாங்கும் தாஞகவே வாய்ந்தி ருந்தன. அஹல்யாபாய் ஒன்பது வருஷங்க ளுக்குள் தான் கற்கவேண்டிய கல்வியை முடி த்து, லோக ஞானத்திலும் இல்லறத்திற்கு வேண்டிய மேலான குணங்களிலும் நிகரற்ற வளாய் விளங்கினுள்.

அந்த தேசத்தின் வழக்கப்படிஅவளுடைய பெற்ருேர் அவளுக்கு விவாஹம் செய்விக்க உத்தேசித்தார்கள். ஆனந்தராவ் நாடெங்கும் தேடி, தனக்குத் தெரிந்த வரன்களை விசாரித் துப் பார்த்தும், தன்பெண்ணின் ஜாதகத்தில் சொல்லியபடி தகுந்த கணவனைக் காணுமல், அலைந்தலைந்து அலுத்து, முடிவில் "நம்மால் செய்யக்கூடியது ஒன்றுமில்லை. அவளுடைய விதிப்படி நடக்கட்டுமெ'ன்று வீட்டிற்கு வந்துவிட்டார்.

இப்படியிருக்கையில், மஹாராஷ்டிர தேசத் தில் ராகோபா, அல்லது ரகுநாதராவ் என்ற வர் பீஷ்வா அதிகாரத்தைக் கைக்கொண்டு ராஜ்யத்தை ஆண்டுவந்தார். வருஷா வருஷம் இதர தேசங்களின்மேல் படையெடுத்துச் சென்று, அங்கங்குள்ள மன்னர்களை ஜயித்து, அவர்களுடைய நாடுகளில் பத்தில் ஒருபங்கும் நான்கில் ஒருபங்கும் தங்களுக்குக் கப்பங்கட் டச்செய்து, ஜயசாலிகளாய் பூனுவிற்குத் திரு ம்பிவருவது வழக்கம். அப்படி அந்த வருஷத் தில், ராகோபாவும், அவருடைய நண்பனும் பெயர்பெற்றவீரனுமான மல்ஹார்ராவ்ஹோல் காரும் வட இந்தியாவில் படையெடுத்துத் திரும்பிவரும்பொழுது,பத்தார்த்தி என்ற கிரா மத்தில் தங்கினுர்கள். ஆஞ்சனேய ஸ்வாமியின் ஆலயத்தில் பீஷ்வாக்கள் இறங்குவது வழக் கம். ஆனந்தராவின் வீடு கோவிலுக் கெதிரில் இருந்தபடியால், அஹல்யாபாய் மாருதியைத் தரிசனம் செய்வதற்கு அங்கே போகும்படி நேர்ந்தது. அப்பொழுது அங்குள்ளவர்கள் அவ ளுடைய கம்பீரமான நடையையும் முகத்தில் விளங்கும் அபாரமான புத்திக்கூர்மையையும் மனத்தூய்மையையும் கண்டு, இந்தச்சிறு வய தில் இவ்விதமான நற்குணங்கள்வாய்ந்த பெண் மணி யாரென்று விசாரித்தார்கள். ரகுநாத ராவிற்கு ஸமீபத்தில் உட்கார்ந்திருந்த அவளு டைய உபாத்தியாயர் தனக்குத் தெரிந்தவரை யில் அஹல்யாபாயின் பிறப்பு, வளர்ப்பு படிப்பு முதலியவைகளைப்பற்றி வெகு விஸ்தார மாக எடுத்துரைத்து, "ஸ்ரீ ஜகதம்பிகையின் வரப் பிரஸாதத்தால் பிறந்த கன்யாரத்னம் ஸாதாரண மனுஷ்யர்களைப்போல் இருக்குமோ வென்ருர். அதைக் கேட்டுக்கொண்டிருந்த மல்ஹார்ராவ் ஹோல்கார், அளவற்ற ஸந்தோ ஷமடைந்து தனக்கருகில் உட்கார்ந்திருந்த தன் புத்திரனை கண்டேராவ் என்றவரின் முகத்தைக் கவனித்தார். அவருடைய மனம் அந்தப் பெண்ணிடத்தில் ஆழ்ந்து எல்லையற்ற ஆசை கொண்டிருப்பதை அறிந்து, பீஷ்வா யிடத்தில் தன் கருத்தை அந்தரங்கமாய்த் தெரிவித்து, அவருடைய அனுமதியைப் பெற்று, அவ்வூரிலுள்ள பெரியோர்களால் ஆனந்தராவிடத்தில விவாஹவிஷயமாய் பிரஸ் தாபித்தார். அஹல்யாபாயின் பெற்ருேர்கள், மஹாதேவி தங்களுக்கு வரங்கொடுத்தபடிக் கும் ஜ்யோதிஷர்கள் ஜாதகத்தைப் பார்த்துச் சொன்னபடிக்கும் தங்களுடைய மகளுக்கு ராஜவம்சத்தைச் சேர்ந்தவிடத்தில் விவாஹம் நேர்ந்ததைப்பற்றி அடங்கா மகிழ்ச்சிகொண்டு அஹல்யாபாயின் அபிப்பிராயத்தை வெகு

சாதுர்யமாய்க் கேட்டறிந்தார்கள். அதுவும் தங்களுடைய எண்ணத்திற்கு அனுகூலமாய் இருந்தது. உடனே விவாஹம் நிச்சயம் செய்யப்பட்டு, பிறகு பூனா நகரத்தில் நிகரற்ற விமர்சையோடும் ஆடம்பரத்தோடும் நடத்தப் பட்டது.

அஹல்யாபாய் தன் கணவனுக்கும் அவருடைய பெற்றோர்களுக்கும் பக்தியோடும் அன்போடும் ஸகலவித சுச்ருஷைகளையும் செய்து கொண்டு ராமாயண பாரத புராணங்களில் வர்ணிக்கப்படும் ஸீதை, தமயந்தி, திரௌபதி, ஸாவித்திரீ, ஸுகன்யை, அருந்ததீ, அன்ஸூயை முதலிய உத்தமிகளைப்போல், தானும் நடந்துகொள்ளவேண்டுமென்று இரவும் பகலும்வெகுசாக்கிரதையாய்ப்பாபலேசமுமின்றி, வேத சாஸ்திரங்களுக்கும் தன் அந்தக்கரணத்திற்கும் நியாயமென்றும் புண்யமென்றும் எது தோன்றிற்றோ அதையே செய்வதில் நோக்கமுள்ளவளா யிருந்தாள். குடும்ப வியவஹாரங்களில் நிகரற்ற திறமை வாய்ந்தவளாதலால் ஹோல்காருடைய அரண்மனையில் நடக்கும் ஸகல விஷயங்களையும் தானே நேரில்பார்த்துக் கவனித்துத் தனக்கு மூத்தோருக்கும் ஸமமானவருக்கும் தாழ்ந்தோருக்கும் தகுந்தபடி நடந்துகொண்டாள் அவரவர்களுடைய யோக்யதையையும் சக்தியையும் திறமையையும் நன்றாய் அறிந்து, அவர்களால் செய்யக்கூடியவைகளை குறைவரச் செய்வித்து, அந்தந்த ஸமயத்தில் தகுந்தபடி புகழ்ந்தும் உத்ஸாஹப்படுத்தியும் குறைகளை எடுத்துக்காட்டியும் மனம் நோகாமல் கண்டித்தும், ஒவ்வொருவரும் அவளைத் திருப்திசெய்து அவளுடைய நல்ல அபிப்பிராயத்தைப் பெறுவதே தங்களுக்குப் பரம புருஷார்த்தமென்றும் மேலான கடமையென்றும் எண்ணும்படி செய்தாள். பெரிய ராஜகரங்களில் கட்சிகளும், பிரதிகக்ஷிகளும், சூழ்ச்சிகளும், தந்திரங்களும், பொருமையும் மனக்கொதிப்பும் இருப்பது ஸஹஜம். ஒருவரையொருவர் மிஞ்சி மேற்கொண்டு, தங்களை எவ்விதத்திலாவது யஜமானனிடத்தில் மேன்மைப்படுத்திக்கொள்ளவேண்டு மென்பதே அவர்களுடைய கருத்தாகும். உலகத்தில் எல்லோரையும் திருப்தி செய்வது ஸாத்யமல்ல; அண்டாண்ட கோடி சராசரங்களைப் படைத்துக் காத்து அழிக்கும் எல்லாமறிந்த ஸர்வேச்வரனே, அவரால் படைக்கப்பட்ட ஜீவகோடிகளைத் திருப்திசெய்ய முடியவில்லை. பாழுந் தெய்வமேயென்றும், உனக்குக் கண்ணில்லையா வென்றும்; தெய்வம் கல்லாய்ச் சமைந்ததோ வென்றும், கேட்டிருக்கிறோமல்லவா? ஆயினும், அஹல்யாபாயின் விஷயத்தில் அந்த விதி விலக்கானது போலும். தன் மிருதுவான ஸ்வபாவத்தாலும், இனிய வார்த்தையாலும், கடலை நிகர்த்த பொறுமையாலும், குற்றம் செய்தவர்களைக் கோபிக்காமல், குரூரமாய் தண்டிக்காமல், அவர்களை அழைத்து, அவர்களுடைய தவறுதல்களைத் தெளிவாய் எடுத்துக்காட்டி, அவர்களை ஒப்புக்கொள்ளச் செய்து, அப்படித் தவறினதற்குக் காரணங்களையும் விளக்கி, இனி அவ்வாறு அவர்கள் நடக்காவண்ணம் எச்சரித்து, புத்தி மதிகூறி, அவர்களை நன்னெறியில் வழுவாது நடக்கும்படி கவனித்து வந்தாள்.

மல்ஹார் ராவ் வயதாக வயதாக, படையெடுப்பதிலும் யுத்தஞ்செய்வதிலும் தன் காலத்தையும், கவனத்தையும் செலுத்தினர். ஆகையால், அவருடைய ஸ்வபாவம் வரவர மாறி, கோபம் மேலிட்டு, அவருடைய பிரீதிக்கும் கௌரதைக்கும் உரியவர்களும் அவருடைய கோபவேளையில் அவரை நெருங்க முடியாமல் பயந்து நடுங்கும்படியாயிற்று. ஆனால், எப்பொழுதும் ஒரே சீராயிருக்கும் அஹல்யாபாயின் சாந்தமான ஸ்வபாவமும், எவ்வித கஷ்டத்தாலும் துன்பத்தாலும் மாறாத சந்தோஷமும், கோபமூட்டக்கூடிய எவ்விதமான கரணங்களையும் மிஞ்சின பெருமையும், மதுரமான வார்த்தையும், மனதில் தோன்றும் எண்ணங்களை வார்த்தைகளால் வெளிப்படுமுன் முகக்குறியாலும் கண்ஜாடையாலும், அறிந்து, சுச்ருஷை செய்யும் ஊக்கமும், மல்ஹார்ராவ் வெகு மூர்க்கமாயிருக்கும் வேளையிலும், சற்றேனும் பயமில்லாமல் நெருங்கித் தாய் தன் குழந்தையை சமாதானஞ்செய்து, கோபத்தையும் வருத்தத்தையும் நீக்கி மறுபடி சிரித்து விளையாடும்படி சாமர்த்யமாய்ச் செய்வதுபோல், அந்த மஹாராஷ்ட்ரத்தலைவனைத் தன் நடுநிலை தவறாத நெறியால் வசப்படுத்தி, அவருடைய கோபத்தால் யாருக்கும் கெடுதியில்லாமல், அவரால் கூடிய உபகாரத்தையே எல்லோரும் பெறும்படி செய்தன.

பிரபஞ்ச வர்த்தமானம்

NEWS & NOTES

பெருங் கொடை.

வங்காளத்தில் பிரபல பாரிஸ்டரான ஸர் ராஷ் விகாரி கோஷ், முன்னர் கல்கத்தா யூனிவர்ஸிட்டி சம்பந்தமாய் பத்து லட்சம் ரூபாய் கொடுத்திருக்கிருர். அவர் கல்கத்தாவிலே சாஸ்திரக் கல்விச்சாலை யொன்று ஏற்படுத்த மீண்டும் பதின்மூன்று லட்சம் ரூபாய் கொடையளித்திருப்பதாக அறிகிருேம். பரோபகாரமாக, இவ்விதம் லட்சக் கணக்கில் பணத்தை யள்ளிக் கொடுக்கும் பெருமானை, யாவரும் மனப்பூர்வமாய்ப் பாராட்டுவர். நம் தேசம் பரம ஏழ்மை நிலையி லிருப்பினும், செல்வம்படைத்த சீமான்கள் இல்லாமலில்லை. அவர்கள் தங்கள் சகோதரர்களின் நலத்தையும் தேசத்தின் சுக வாழ்வையும் பெரிதாக மதித்து, கல்வி விஷயத்தில் பணத்தை வாரிக் கொடுத்தாலன்றி நம் தேசம் முன்னுக்கு வருவதெப்படி? கல்வி தானத்திலும் சிறந்த தானமில்லை யன்ருே! பணம் படைத்திருப்பதின் பயன் பிறருக்கு உபகாரியாக இருப்பதேயாம். ஆதலின், நம் தேசத்திலுள்ள பிரபுக்கள் மேற்கண்ட கனவானைப்போல் பணத்தைக் கொடுத்து புண்ணியத்தைக் கட்டிக்கொண்டு, தேசத்தைக் கைதூக்கிவிட முயலுவரென எதிர்பார்க்கிருேம்.

* * *

ஆப்கன் யுத்தச் செலவு.

ஆப்கன் யுத்தநிமித்தம் 140 லட்சம் பவுன் அதாவது 21 கோடி ரூபாய் செலவென்றும், இச் செலவு இந்தியாவைச் சார்ந்த தென்றும், காமன்ஸ் சபையில் மிஸ்டர்மாண்டேகு கூறுகிருர். ஆப்கன் யுத்த விஷயமாய்ப் பிரமாதமான சண்டை எதுவும் நடந்துவிடவில்லை; தவிர அத்தேசத்தோடு ஏற்பட்டுள்ள சமாதான உடன்படிக்கையைப்பற்றி அவ்வளவு திருப்தியும் இல்லை. இப்படியிருக்க, 21 கோடி ரூபாய் செலவாயிருக்கிறது! இதிலிருந்தே தற்கால யுத்தத்தில் நேரும் செலவு எவ்வளவென்பதை நன்கு கண்டு கொள்ளலாம். யுத்த சமயத்தில் துருப்புகளுக்குரிய சில சௌகரியங்கள் சரிவரத் தேடி வைக்கப்பட்டிருக்கவில்லை எனச் சொல்லப்படுகிறது. தேடி வைக்கப்பட்டிருப்பின், செலவு இன்னும் எவ்வளவு அதிகமா யிருக்குமோ தெரியவில்லை.

* * *

இலங்கைகாங்கிரஸ் மகா ஸபை.

இந்தியாவைப்போல் ஸிலோனிலும் அரசியல் திருத்தங்கள் செய்து கொடுக்க வேண்டுமென்று அங்கு இப்போது பலமாய்க் கிளர்ச்சி செய்யப்பட்டு வருகிறது. கொழும்பில் இதை முன்னிட்டு நாளதுமீ 12உ இலங்கை வாசிகள் ஒரு மஹா ஸபை கூடி, இனிச் செய்யவேண்டிய காரியத்தைப்பற்றி ஆலோசித்தார்கள். இலங்கை மஹா ஜனங்களின் முதலாவது காங்கிரஸ் இதுதான். இம்மஹாநாட்டில் ஸர். பி. அருணாசலம் அக்கிராசனம் வகித்து அருமையானதோர் பிரசங்கம் செய்தார். இதில் நடந்தேறிய சில முக்கியமான விஷயங்களைப்பற்றி அடுத்த சஞ்சிகையில் விபரமாய் எழுதுவோம்.

* * *

ஸ்கூல் இன்ஸ்பெக்டராக நியமனம் பெற்ற மிஸ்டர் ஸ்டேதம்.

கும்பகோணம் கவர்ன்மெண்ட் காலேஜ் பிரின்ஸ்பாலாயிருந்து நற்பெயர் பெற்றவர்களுள் மிஸ்டர் ஸ்டேதம் ஒருவராவார். இவர் காலத்தில் காலேஜ் மிகவும் நற்பெயருடன் விளங்கிற்று. மாணவர்களிடம் இவர் மிக்க அன்பு பூண்டு விளங்கினவர். சமீபத்தில், ஸ்கூல் இன்ஸ்பெக்டராக இவர் மாற்றப்பட்டு கும்பகோணத்தை விட்டுப் புறப்பட்டபோது, ஷை கல்லூரி மாணவர்கள் அனைவரும் புடைசூழ மங்கள வாத்தியங்களுடன் ரயில் ஸ்டேஷனுக்குச் சென்று வழியனுப்பினர். இவர் பிரிவு கும்பகோணம் மாணவர்களுக்கு மிகுந்த வருத்தத்தை உண்டுபண்ணிவிட்டது. மிஸ்டர் ஸ்டேதம் ஸ்தானத்துக்கு நியமிக்கப்படுபவரும், அவர் அடிச்சுவடுகளைப் பின்பற்றி நடந்து, மாணவர் நல்லன்பை சம்பாதிப்பரென நம்புகிருேம். மிஸ்டர் ஸ்டேதமும், ஸ்கூல் இன்ஸ்பெக்டர் ஹோதாவில் கல்வி இலாகாவுக்குப் பற்பல நன்மைகள் புரிவாரென நம்பியிருக்கிருேம்.

* * *



ஸ்ரீ கிருஷ்ணன் வேணுகானம்.
SRI KRISHNA PLAYING ON FLUTE.

விவேகபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்.

தொகுதி XII } சித்தார்த்திஸு மார்கழிமீ :: 1920-ஸு ஜனவரிமீ { பகுதி 7

கம்பராமாயணத் திரட்டு

SELECTIONS FROM KAMBA RAMAYANA

இற்றன ரரக்கர் தானை யிருபது வெள்ளத் தோடும்
செற்றவா ளரக்கன் கேட்டான் மைந்தனைச் சேறி [யென்றான்
மற்றவன் தேரி லேறி வானரப் படையைச் சீறி
எற்றுவ னினியென்றெண்ணி யிலக்குவன் றன்னோ [டேற்றான்.

அறுபது வெள்ளத் தானை யாயிரந் தேரினோடும் [றும்
வெறுவது செய்யக்கண்டு மயன்படை விடுவேனென்
உறுவலி யரக்கன் வானத் தொளித்ததை யோரான் [றம்பி
எறிபடை பூசைசெய்வா னெழுந்தன னிராம னிப் [பால்.

உரைத்தன னிராவணி யிராவணற் குற்றவா றெல் [லாம்
வரைப்புய மகோதரன் வருகவென் றேவினன் வலத் [தால்
குரைத்தெழும் வானரக்குழுவை வென்றிலக்குவன் [சரத்தால்
பொருக்கென வெழுந்தன னந்தர விசும்பிடைப் [போனான்.

முட்டின மகோதரன் முனிவரு மமரர்களாகச் [றான்
சிட்டனீ தென்னைகொ லென்றுளந் திகைத்தன னின்
விட்டன னயன்படை யிராவணி யிலக்குவன் மீதே
பட்டனன் பட்டவா றிராவணற் குவகையிற் பகர்ந் [தான்.

ஏய்ந்தெழி லிராகவ னிலக்குவன் பாடுகண் டேங்கிச்
சாய்ந்தனன் சாம்புவன் மாருதி தருதியா லென்னப்
பாய்ந்தனன் மருந்துகொண் டமரிடை யயனது [படையால்
ஓய்ந்தவர் யாவருமுயிர்த்தனர் தூதர்போ யுரைத்தார்.

யாவ திங்குநாஞ் செய்வதென் றியம்பலு மைந்தன்
ஆவ துண்டென வரக்கனு மதுசெயென் றடைந்தான்
தேவி சீதையாச் சமைத்தபின் னநுமன்முன் சிதைத் [துப்
போவ னனையோத் தியிலென நிகும்பலை புக்கான்.

ஆய வாறெலா மநுமன்வந் திராகவற் கறைய
மாயை யேயென வீடணன் வலிக்கின்ற தென்றான்
ஏய காரியஞ் செய்திரென் றெழுந்தன னெம்மான்
போயொர் மாயையால் வீடண னிலங்கையிற் புக் [கான்

ஆனயாயைகண் டறிந்துவந் தரக்கர்கோ னுரைப்ப
வானரேசனு மிளவலும் வடதரு நீழல்
சேனை சூழ்தர நிகும்பலை வேள்வியைச் சிதைத்தே
போன போதெதி ரிந்திர சித்தயர் புரிந்தான்.

கறுத்திராவணி விடுங்கணையெலாம் விடுகணையால்
இறுத்தொ ரம்பினாற் கையுடன் வில்விழ வெய்தான்
குறித்தொர் சூலத்தா லிலக்குவ னுயிர் கொளக் கொ [தித்தான்
அறுத்தொ ரம்பினா லவன்றலை கொண்டன னகன் [றான்.

அடுத்துரைத்தனர் தூதவ ரரக்கர்கோன் களம்புக்
கெடுத்திரங்கினன் மதலைதன் றலையிலா யாக்கை
படுத்தனன் றயி லத்திடை மூலமாப் படையும்
விடுத்து வந்தடி பணிந்தன ராயிர வெள்ளம்.

மூலத் தானையை யிராமன் மேன் முடுக்கித் தான் [குரக்குக்
கூலத் தானைமேற் சென்றன னிராவணக் கொடி [யோன்
மூலத்தானைசென் றிராமனை முடுக்கலுங் குரக்குக்
கூலத் தானைபோ யிரிந்தன குரைகடற் கப்பால்.

வேர்த்திருந்தவக் கவியெலா மங்கதன் மீட்பக்
காத்தி நீயெனாத் தம்பியைக் காவலா விடுத்தே
ஆர்த்த வெம்படை யாயிர வெள்ளமு மடியக்
கோத்த வம்பினா லேழரை நாழிகை குறைத்தான்.

அத்தனசிலை யிளவலோ டரக்கர் கோனடர
வித்தினன் சரம் பலப்பல விளவலும் விட்டான்
எத்தினன் னெடுமோகமாப்படை தொடுத்தெய்தான்
அத்த னச்சர மாழியான் சாத்தினா லட்டான்.

விவேக போதினி

தொ. 12] சித்தார்த்திஸு மார்கழிமீ [ப. 7

யுதிஷ்டிரர்
YUDHISHTIRA

ஸபையோர் துச்சாஸனன் மாண்டானென நிச்சயித்து, பீமனைக் கொண்டாடினார்கள். அப்பொழுது விதுரர் "ஸபையோர்களே, விகர்ணன் தனக்குத் தெரிந்தவரையில் திரௌபதியின் கேள்விக்கு மறுமொழி சொன்னான். நாமும் அப்படிச் செய்யாவிட்டால், பொய் சொல்வதாலுண்டாகும் பாபத்தில் பாதி நம்மைத் தொடரும். தர்மத்தை அறிந்தும் பிசகாய் மறுமொழி கூறினால் பொய்யின் முழுப் பயனையும் அடைவீர்கள்" என்றார். அப்பொழுதும் அவ்வரசர்கள் ஒன்றும் சொல்லவில்லை. கர்ணன் "இந்த தாஸியை நமது வீட்டிற்கு அழைத்துப் போ"வென்று துச்சாஸனனைக் கட்டளையிட்டான். அவனும் அவளை இழுக்கப் பாஞ்சாலி கைகளைத் தூக்கிக்கொண்டு "பெரியோர்களே! வாய்திறந்து ஒரு வார்த்தை சொல்ல லாகாதா? பெண்ணென்றால் பேயுமிரங்கும். என்னைப்போன்ற பெண்களும் பார்யைகளும் ஸஹோதரிகளும் நாட்டுப்பெண்களும் உங்களுக்கும் உண்டு. இதைக் காட்டிலும் கோரமான கதி அவர்களுக்கு நேராமலிருக்கும்படி பார்த்துக்கொள்ளுங்கள். நான் தாஸியா அல்லவா? எனக்குத் தெரியாமல், என் ஸம்மதமில்லாமல், யுதிஷ்டிரர் தன்னையும் தோற்று ஸ்வாதீனமற்றபிறகே என்னைப் பந்தயம் வைத்து ஆடினது நியாயமா?" என்றாள்.

அதைக்கேட்ட பீஷ்மர், "மகா ஞானிகளும், தர்மத்தின் ஸூக்ஷ்மத்தை அறிவது கஷ்டம். பலவான் எதைத் தர்மமென்று நினைத்துச் செய்கிறானோ, அதை மற்றவர்கள் மறுக்க முடியாது. ஆகையால், உன் கேள்விக்கு மறுமொழி சொல்லத் தோன்றவில்லை. ஆனால் இந்தக் குலத்திற்குச் சீக்கிரத்தில் நாசம் வரத் தகுந்தகாரியங்களைக் கௌரவர்கள் செய்துவருகிறார்கள். எவ்வித ஆபத்து நேர்ந்தபோதிலும், நீ தர்மத்தை விடக்கூடாது. யுதிஷ்டிரனே உன் கேள்விக்குத் தகுந்த மறுமொழியைச் சொல்ல வேண்டுமெ"ன்றார். துர்யோதனனும், அதை ஒப்புக்கொண்டு, "உன் விஷயத்தில் யுதிஷ்டிரனுக்கு யாதொரு பாத்தியமுமில்லையென்று பெரியோர்களுக்கு முன்பாக அவன் சொல்லட்டும். எல்லோரும் தர்மராஜாவைப் பொய்யனாகச் செய்யட்டும். அப்பொழுது நீ அடிமைத்தனத்திலிருந்து விடுபடுவாய். தர்மபுத்திரன் உனக்கு அதிகாரியா, அல்லவாவென்றுதானேசொல்லட்டும். அதன்படி நான் நடக்கச் சித்தமாயிருக்கிறேனெ"ன்றான். சபையோர்கள் வெகு ஆவலுடன் பாண்டவர்கள் என்ன சொல்லப் போகிறார்களென்று எதிர்பார்த்துக்கொண் டிருந்தார்கள். அப்பொழுது பீமஸேனன், "ஸபையோர்களே! இந்த யுதிஷ்டிரர் எங்களுடைய புண்யங்களுக்கும், தவங்களுக்கும் உயிருக்கும் அதிகாரி. அவர் தம்மைத் தோற்றதாக நினைத்தால் நாங்களும் தோற்றவர்களே. ஆனால், பாஞ்சாலியை இப்படி சபையில் மானபங்கம் செய்த பிறகு கௌரவர்களை நான் உயிருட னிருக்க விடமாட்டேன். தர்மத்தாலும், தர்மபுத்திரரிடத்திலுள்ள மரியாதையாலும் அர்ஜுனனாலும் தற்காலம் தடுக்கப்பட்டிருக்கிறேன். தகுந்த சமயம் வரும்பொழுது, என் பிரதிக்ஞையை நிறைவேற்றுகிறேனெ"ன்றான்.

அப்பொழுது துர்யோதனன் பாஞ்சாலியை இன்னும் அவமானஞ் செய்ய வேண்டுமென்ற கருத்துடன், இடது துடையைக் காட்டி "நீ இதில் வந்து உட்காருவதே உனக்குத் தகுந்த காரியமெ"ன்றான். அதைக்கேட்டபீமஸேனன் இடிபோல் சிரித்து, "இந்தத் துடையை என் கதையால் முறிக்காவிட்டால், என் முன்னோர்கள் சென்ற புண்யலோகங்களுக்கு நான் செல்லாதிருக்கக் கடவேனெ"ன்று கோரமாய் பிரதிக்ஞை செய்தான். அர்ஜுனன் "மகாத்மாவான தர்மராஜா முதலில் எங்களைப் பந்தயம் வைக்கும்பொழுது அதிகாரமுள்ளவரா யிருந்

பட்ட காலிலே படும், கெட்ட குடியே கெடும்.

தார். அவர் தம்மைத் தோற்ற பிறகு, யாருக்கு அதிகாரி யென்பதைக் கௌரவர்கள் யாவரும் அறியுங் களே"ன்ருன். கர்ணன் "வெகு நேரம் இவர்களுடன் என்ன பேச்சு? துர்யோதனு! நீ இவளைத் தாஸியாக வைத்துக் கொண்டு உன் இஷ்டப்படி செய்"யென்ருன். துச்சாஸனன் திரௌபதியை மறுபடியும் இழுத்துக்கொண்டு போக ஆரம்பித்தான். அவள் அநாதையாய்க் குந்தியையும் காந்தாரியையும் திருதராஷ்டிரனையும் பார்த்து, கண்ணும் கண்ணீருமாய்க் கதறினுள்.

விதுரர் எவ்வளவு தடுத்தும் கௌரவர்கள் கேட்காமல், பாஞ்சாலியை மறுபடியும் ஹிம்ஸிப்பதைப் பார்த்துப் பீமன், "இந்தத் துர்யோதனனைப் பெரும்போரில் ஜயித்து, இவனுடைய துடையைக் கதையால் ஒடித்துத் தரையில் விழுந்த இவன் தலையைக் காலால் மிதிப்பேன். இந்தக் கொடிய பாபியான துச்சாஸனனுடைய மார்பைப் பிளந்து, நரஸிம்மனைப் போல், இரத்தத்தைக் குடிப்பேனெ"ன்ருன். அர்ஜுனன், "கௌரவர்கள் மெச்சும்படி இச்சகம் பேசும் இந்தக் கர்ணனையும், அவனைச் சேர்ந்தவர்களையும், மற்றும் என்னுடன் யுத்தஞ் செய்யும் யாவரையும், என் பாணங்களால் யமலோகத்திற் கனுப்புவேன். ஹிமயமலை, தன் இடத்தைவிட்டுப் பெயர்ந்து ஏழு ஸமுத்திரத்திற்கப்பால் சென்ருலும், சூரியன் காந்தியற்ருலும், சந்திரன் கொதித்தாலும், என் வார்த்தை பொய்யாகாதெ"ன்ருன். ஸஹதேவன் காலஸர்ப்பம்போல் பெருமூச்சு விட்டுச் சகுனியைப் பார்த்து, "மதி கெட்டவனே! உன்னையும் உன்னைச் சேர்ந்தவர்களையும் என் பாணங்களுக்கு இரையாக்குவது என் கடமை"யென்ருன். நகுலன் "என் ஸஹோதரர்களுக்குத் தப்பி மிருந்தவர்களையும், சகுனியின் புத்திரனுன உலூகனையும் நான் கொன்று, பூமியில் திருதராஷ்டிர வம்சமே யில்லாமல் செய்வேனெ"ன்ருன். திரௌபதி, "பாபி துர்யோதனு! நீ துடையை எனக்குக் காட்டினதால் எனக்குப் பதிலாக மிருத்யு அதன்மேல் இப்பொழுதே உட்கார்ந்துவிட்டான். நீசனுன துச்சாஸனனுடைய இரத்தத்தைப் பீமஸேனன் குடிக்கப் போகிறு னென்பதில் ஸந்தேஹ மூண்டோ? அவனுல் தொடப்பட்ட கூந்தலை, அவனுடைய இரத்தத்தால் நனைத்த பிறகே, நான் முடிப்பேனெ"ன்ருள். திரௌபதி இப்படிக் கோரமான சபதம் செய்தபொழுது, ஆகாயத்திலிலிருந்து பூமாரி பொழிந்தது. மஹா பதிவிரதையான யாக்ஞஸேனியின் கற்பினுலும், பீமனுடையபலத்தாலும், அர்ஜுனனுடைய பராக்கிரமத்தாலும், யுதிஷ்டிரருடைய ஸத்ய விரதத்தாலும், கௌரவர்களுக்கு நேரப்போரும் நாசத்தை நினைத்து, அந்தச் சபையோர் ஒன்றும் பேசாமல் பயந்திருந்தார்கள்.

உடனே அர்ஜுனன் திரௌபதியின் சொல்லால் மெய் மறந்து, கோபமே உருவெடுத்தது போல் காண்டீவத்தை எடுத்துக்கௌரவர்களை அழிக்க நினைத்தான். பீமன் மனமகிழ்ந்து தானும் யுத்தஞ்செய்ய எழுந்தான். திரௌபதியும் தனஞ்ஜயனைக் கடைக்கண்ணுல் தூண்டிவிட்டாள். பூமி நடுங்கிற்று. காற்று அடிக்கவில்லை. சூர்ய சந்திர நக்ஷத்திரங்கள் ஒளி மழுங்கின. ஸகலப் பிராணிகளும் பயந்து திகைத்தன. பிரளயகாலாந்தகனைப் போல் கோரமாய்க் கர்ஜித்துக்கொண்டு கிளம்பின பார்த்தனை, யுதிஷ்டிரர் சாந்தமான பார்வையுடன் பார்த்து "அர்ஜுனு! தர்மத்தை மறக்காதே. பொறுமையைக் கைவிடாதே. முன் யோசனையில்லாமல்நடக்காதே. கீர்த்தியை அழிக்காதே. இந்தத் துஷ்டர்கள் அனைவரையும் நான் கோப திருஷ்டியால் சாம்பலாக்க முடியாதா! அது அதர்ம மென்றே என் கோபத்தை அடக்கினேன். உலகத்தின் நன்மைக்காக நீயும் கோபத்தை அடக்கி பின்பு போர்க்களத்தில் சத்துருக்களின் மேல் செலுத்துவாயெ"ன்ருர். அர்ஜுனன், அந்த ஜாடையை அறிந்து, ஸமுத்திரம் வடவாக்கினியை அடக்கிக் கொள்வதைப் போல், தன் கோபத்தை அடக்கிக்கொண்டான். அதைக்கண்டு சகல பிராணிகளும் சந்தோஷித்தன.

அப்பொழுது கோரமான அபசகுனங்கள் உண்டாவதைக்கண்ட திருதராஷ்டிரன் பயந்துவருந்தி, "புத்தியில்லாத் துர்யோதனு! அயோக்கியா! கௌரவ ஸபையில் ஒரு பெண்ணை அதிலும் தர்மபத்தினியான திரௌபதியை அவமானஞ் செய்து, பரிஹாஸமாய்ப் பேசினுய். அதனுல், கெடுவாய். பாஞ்சாலீ! நீயோ மஹா பதிவிரதை. தர்மத்தையே தெய்வமாகக் கொண்டவள். என் மருமக்களுக்

குள் சிறந்தவள், வேண்டிய வரங்களை என்னிடத்தில் கேட்டுக் கொள்ளெ"ன்றான்.

அப்பொழுது திரௌபதி "பரத சிரேஷ்டா! தர்ம ஸ்வரூபியும் மகாத்மாவுமான யுதிஷ்டிரர் அடிமைத்தனத்திலிருந்து விடுபடவேண்டியது முதலாவது வரம். என் புத்திரனை பிரதிவிந்தியனைத் துஷ்டர்கள் தாஸிபுத்திரனென்று சொல்லாம லிருக்கவேண்டுமெ"ன்றாள். கௌரவாதிபதி "சிறந்தவளே! அப்படியே ஆகட்டும். இன்னும் ஒரு வரத்தை கேளெ"ன்றான். திரௌபதி "மன்னர்க்கரசே! மற்ற பாண்டவ சிரேஷ்டர்களும், ஸ்வதந்திரத்தை அடையவேண்டுமெ"ன்று கேட்டுக் கொண்டாள். திருதராஷ்டிரன் "உத்தமியே! உன் இஷ்டம் நிறைவேறட்டும். இன்னும் ஒரு வரத்தையும் கொடுக்கிறேனெ"ன்றான். திரௌபதி "மகிமை பொருந்தினவரே! வைசியனுக்கு ஒருவரமும், க்ஷத்திரியப்பெண்ணுக்கு இரண்டும், அரசனுக்கு மூன்றும், பிராமணனுக்கு நூறு வரங்களும் கொடுக்கலாமென்று பெரியோர் சொல்லுகிறார்கள். அதிக ஆசை தர்மத்தைக் கெடுக்கும். தாங்கள் கொடுத்த வரங்களால் என் கணவர்கள் மிகுந்த பாபத்திலிருந்து விடுபட்டு, இனி நற்செய்கைகளால் க்ஷேமத்தை அடைவார்களெ"ன்றாள்.

பிறகு யுதிஷ்டிரர் கௌரவவேந்தனிடத்திற்குச் சென்று, "நீரே எங்களுக்குப் பிரபு. நாங்கள் இனிச் செய்ய வேண்டியதைக் கட்டளையிடுங்களெ"ன்றார். அதற்கு அம்மன்னன், "அப்பா, குழந்தாய்! தர்ம ரஹஸ்யங்களை அறிந்த நீ, இங்கு நடந்த பாபச் செயல்களை மறந்து,எப்பொழுதும்போல் உன் ராஜ்யத்தை ஆண்டுவரக் கடவாய். நமது புத்திரர்களின் சிநேகிதர்களையும் பலா பலங்களையும், பார்க்க விரும்பியே இந்தச் சூதாட்டத்தை விலக்காம லிருந்தேன். உனக்கு சகல க்ஷேமங்களுமுண்டாகட்டுமெ"ன்றான்.

பிறகு யுதிஷ்டிரர் தன் தம்பிமார்களோடும் கிருஷ்ணையோடும் இந்திரப்பிரஸ்தத்திற்குப் போகப் புறப்பட்டார். அதைக் கேட்ட துரியோதனன் மனங்கொதித்து, திருதராஷ்டிரனைப் பலவிதமாய் நிர்ப்பந்தஞ்செய்து, அவன் எவ்வளவு சொல்லியும் கேட்காமல், பாண்டவர்களை மறுபடியும் சூதாட அழைக்கும்படி செய்தான். காந்தாரி, தன் புத்திரர்களிடத்தில் மிகுந்த அன்புள்ளவளானாலும், தர்மம் தவறாதவளாகையால், தன் கணவனைப் பார்த்து, "துர்யோதனன் பிறந்தபோதே 'குலத்தைக் கெடுப்பவனான இந்தப் பாபியைப் பரலோகத்திற்கனுப்புவது நலமெ"ன்று விதுரர் சொன்னதை நாம் அலக்ஷியம் செய்யாமலிருந்தால் இவ்வளவு அனர்த்தங்கள் நேர்ந்திராது. இவன் பிறந்தவுடன் நரியைப்போல் ஊளையிட்டான். இந்தக் குலநாசத்திற்கு இவனும், சிறுபிள்ளைகளின் பேச்சைக் கேட்கும் நீங்களுமே காரணமாவீர்கள். கட்டின அணையை உடைப்பது போலும், அணைந்த நெருப்பை மூட்டுவது போலும், கோபத்தை யடக்கித் திரும்பிப் போன பாண்டவர்களை எவன் கோபமூட்டுவான்? புத்திரர்களிடத்திலுள்ள அன்பால் தர்மத்தைத் துறந்து, அதர்மத்தைக் கைக்கொள்ளப் போகிறீரெ"ன்றாள். திருதராஷ்டிரன் "குலத்திற்கு நாசம் வந்தாலும் வரட்டும். என்னால் தடுக்கமுடியாது. என் பிள்ளைகளின் இஷ்டப்படியே நடக்கட்டுமெ"ன்றான்.

தூதர்களால் அவனுடைய ஆக்ஞையைக் கேட்டு, மறுபடியும் சூதாட அழைக்கப்பட்ட யுதிஷ்டிரர், புன்சிரிப்புடன் "பகவானுடைய திருவுள்ளம் எவ்வளவுவிசித்திரமாயிருக்கிறது பிராணிகள் நன்மையையும் தீமையையும் விதிப்படி அநுபவிக்கின்றன. மறுபடியும் ஆடவேண்டுமோ? சூதிற்கழைப்பது தீமையை விளைக்குமென் றறிந்தும், அரசனுடைய கட்டளையை நான் மீறமுடியாது. பொன் மானென்று ஓர் மிருகம் ஒருநாளும் இருந்ததேயில்லை. ஆயினும், ஸ்ரீராமச்சந்திர மூர்த்தி அதைப் பிடிக்க விரும்பினார். கஷ்டம் நேருங்காலத்தில்மனிதர்களின் புத்தியும் மழுங்கிப் போகின்றனவெ"ன்று தம்பிமாருடன் திரும்பிவந்தார். சகுனியின் மோசத்தை அவர் அறிந்திருந்தும் காலகதியை அநுசரித்துச் சூதாட சம்மதித்தார்.

அப்பொழுது சகுனி, "யுதிஷ்டிரா! நாங்கள் உங்களால் ஜயிக்கப்பட்டாலும், நீங்கள் எங்களால் ஜயிக்கப்பட்டாலும், தோற்றவர்கள் பன்னிரண்டு வருஷங்கள் வரையில் மான்தோலை உடுத்து வனவாஸஞ் செய்யவேண்டும். பதின் மூன்றாவது வருஷம் பந்துக்களால் கண்டு பிடிக்கப்படாமல், அக்ஞாதவாஸம் செய்ய வேண்டும். கண்டுபிடிக்கப்பட்டால், மறுபடியும் வனத்தில் பன்னிரண்டு வருஷங்கள் வசி

க்கவேண்டும். இப்படிப்பதின்மூன்று வருஷங்கள் கழிந்தால், மறுபடியும் வழக்கம்போல் அவரவர்களுடைய ராஜ்யத்தைப் பெறுவோம். இதையே பந்தயமாய் வைத்துச் சூதாடுவோமெ''ன்றான். மகா புத்திமானான தர்மராஜன் யாவற்றையும் அறிந்திருந்தும், கௌரவர்களுக்கு நாசமும், பூமியின் பாரம் நீங்குவதற்குக் காலமும் வந்ததென்றறிந்து மறுபடியும் சூதாடினார். சகுனி முன்போல் ஜயித்தான். யுதிஷ்டிரர் தோற்றார். பிரதிக்ஞைப்படி பாண்டவர்கள் வனவாஸ தீக்ஷை பூண்டு அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டார்கள்.

அப்பொழுது கௌரவர்கள் அவர்களை மறுபடியும் பரிஹாஸஞ்செய்ய, பாண்டவர்கள் மறுபடியும் முன்போல் கோரமான சபதம் செய்தார்கள். தர்மபுத்திரர் எல்லோரிடத்திலும் வணக்கமாய் விடைபெற்றுக்கொண்டு, அவர்களுடைய ஆசீர்வாதத்தை யடைந்து, பீஷ்மர், விதுரர், துரோணர் முதலிய பெரியோர்களால் புத்திமதி சொல்லப்பட்டு, அவர்களை நமஸ்கரித்து, "நாங்கள் க்ஷேமமாய்த் திரும்பிவரவேண்டுமென்று அனுக்கிரஹிக்கவேண்டு'' மென்றார். விதுரர் "உங்களுடைய பிரதிக்ஞை நிறைவேறட்டும். நீ ஹிமயமலையில் மேரு ஸாவர்ண்யரென்ற மஹரிஷியாலும், வாரணாவதத்தில் வேதவியாஸ பகவானாலும், பிருகுதுங்கமென்ற பர்வதத்தில் பரசுராமராலும், திருஷத்வதீயென்ற நகரத்தில் பரமசிவனாலும், கல்மாஷ நதிக்கரையில் பிருகுமஹரிஷியாலும், சகல தர்மங்களையும் ஆத்ம ஞானத்தையும் உபதேசிக்கப் பட்டிருக்கிறாய். நாரத பகவான் உன்னிடத்தில் அளவற்ற பிரியத்துடன் அடிக்கடி உன்னைக் கண்டு தர்ம ரஹஸ்யங்களைப் போதிக்கிறார். புத்தியில் புரூரவஸையும், பராக்கிரமத்தில் எல்லா அரசர்களையும், தர்மானுஷ்டானத்தில் மஹரிஷிகளையும், ஜயத்தில் இந்திரனையும், பொறுமையில் யமனையும், ஐச்வரியத்தில் குபேரனையும், இந்திரிய ஜயத்தில் வருணனையும் மிஞ்சியிருக்கிறாய். தன்னை எல்லோருக்கும் கொடுத்து, தன் குளிர்ச்சியால் அவர்களுடைய தாபத்தைப் போக்கி, ஜீவனத்திற்குக் காரணமாகும் குணத்தை ஜலமும், பொறுமையை பூமிதேவியும், பிரதாபத்தை சூரியனும், தேஹபலத்தை வாயுவும் உனக்குக் கொடுக்கட்டும். தர்மமே ஸத்யம். தர்மமே ப்ரஹ்மம். அதைக் கைவிடாதே யெ''ன்றார்.

தர்மராஜா அங்நகரத்தை விட்டு, தன் ஸஹோதரர்களோடும் மனைவியோடும் வனத்திற்குப் போகும்போது, ஜனங்களுடைய மனதும், நல்லோர்களுடைய அனுக்கிரஹமும், கௌரவ ராஜ்யத்தின் அஷ்ட லக்ஷ்மியும் அவருடன் சென்றன. அப்பொழுது கோரமான அபசகுனங்கள் நேர்ந்தன. தன் ராஜ்யமும் ஐச்வர்யமும் கௌரவர்களால் கவரப்பட்டும், தானும் தன்னைச் சேர்ந்தவர்களும் கொடுமையாய் நடத்தப்பட்டும், தர்மபுத்திரர் பொறுமையையும் தர்மத்தையும் விடாமல், ஒருவேளை தன்னை மறந்து கோபம் வந்து உக்கிரமான பார்வையால் கௌரவர்களை எரிக்கும்படியா யிருக்குமோவென்று பயந்து, வஸ்திரத்தால் முகத்தை மூடிக்கொண்டு போனார். 'புஜபலத்தில் எனக்கு நிகரில்லை. இருப்புத் தூண்களைப் போன்ற என் கைகளால் இந்தக் கௌரவர்களை யமலோகத்திற்கனுப்புவேனென்று, பீமன் தன் பெரும் கைகளிரண்டையும் பார்த்துக்கொண்டே போனான். இரு கைகளாலும் பாணங்களைப் பிரயோகிக்கும் திறமையுள்ள அர்ஜுனன், "பாபிகள் வசிக்கும் தேசத்தில் மண்மாரி பெய்து அழிப்பதுபோல், என் பாணங்களை ஓயாமல் தாரையாய்ப் பெய்து, இந்தக் கௌரவர்களையும் அவரைச்சேர்ந்தவர்களையும் அழிப்பேனெ''ன்று காட்டி, மணலை இறைத்துக்கொண்டே சென்றான். "இந்தக் காலத்தில் என் முகத்தை யாரும் தெரிந்துகொள்ளக் கூடாதெ''ன்று நினைத்து, ஸஹதேவன் முகத்தில் வர்ணத்தைப் பூசிக்கொண்டு போனான். "போகும் வழியில், பெண்களின் மனதை நான் கவரக்கூடாதெ''ன்று நினைத்து, நகுலன் அங்கமெல்லாம் புழுதியைப் பூசிக்கொண்டு சென்றான். வீட்டிற்கு விலக்கியிருந்த திரௌபதி, ஒற்றை வஸ்திரத்தோடும் விரிந்த கூந்தலோடும் அழுதுகொண்டே சென்றாள். "நான் இந்தக் கஷ்டத்தை அனுபவிக்கும்படி செய்த மனிதர்களின் மனைவிகளும் பெண்களும் உடன் பிறந்தவர்களும் இன்றைக்குப் பதினான்காவது வருஷத்தில், உற்றாரையும் பெற்றாரையும் இழந்து, அவர்களின் இரத்தத்தால் உடம்பெல்லாம் பூசப்பட்டுத்தலைவிரிகோலத்துடன், புழுதி படிந்து,

கேட்டது எல்லாம் நம்பாதே, நம்பினது எல்லாம் சொல்லாதே.

கோவென் றலறிக்கொண்டு, மார்பிலும் முகத்திலும் அடித்துக்கொண்டு, பிரேதக் கிரியைகளைச் செய்ய இந்நகரிலிருந்து புறப்படுவார்களெ"ன்ற கோரமான வார்த்தைகள் அவளுடைய வாயிலிருந்து வந்ததைக் கண்டு ஜனங்கள் நடுங்கினார்கள். பாண்டவர்களுக்குப் புரோகிதரான தௌம்யர், "பதினான்காவது வருஷத்தில் நேரும் மஹா யுத்தத்தில் கௌரவர் அனைவரும் கொல்லப்பட்டு, அவர்களின் புரோகிதர்கள் இப்படி அவர்களுக்குப் பிரேதக்கிரியைகளைச் செய்வார்களெ"ன்று ஜாடையாய் அறிவிப்பதுபோல், தென்மேற்கு மூலையிலிருக்கும் தர்ப்பங்களை அறுத்து, யமனையும் ருத்திரனையும்பற்றின கோரமான ஸாம மந்திரங்களை ஸ்வரத்துடன் சொல்லிக்கொண்டு அவர்களுக்கு முன்னே சென்றார்.

நகரத்து ஜனங்கள் யுதிஷ்டிரரைப் பின் தொடர்ந்து, அவரைப் பிரிய மனமில்லாமல், அவர்கள் வனங்களில்வஸிக்கும்வரையில்தாங்களும் அவர்களுடனிருப்போமென்று நிர்ப்பந்தித்தார்கள். அதைக் கேட்டு யுதிஷ்டிரர் அவர்களை வணங்கி, "நண்பர்களே! எங்களிடத்தில் நீங்கள் வைத்திருக்கும் அன்பாலும் இரக்கத்தாலும், நீங்கள் எங்களிடத்திலில்லாத நற்குணங்களைக் கண்டு புகழ்வதாலும் ஆசீர்வதிக்கப்பட்டோம். நானும் என்னுடன் பிறந்தோர்களும் உங்களை வணங்கிக் கேட்டுக்கொள்ளும் விஷயம் என்னவென்றால், குருகுல பிதாமஹரான பீஷ்மாசார்யரும், திருதராஷ்டிர மஹா ராஜாவும் இன்னும் மற்றுமுள்ள எங்கள் நண்பர்களும் ஹஸ்தினபுரத்திலிருக்கிறார்கள். வருத்தத்தாலும் கஷ்டத்தாலும் அவர்கள் பீடிக்கப்படுவார்கள். நீங்களெல்லோரும் ஒன்றுசேர்ந்து இயன்றவரையில் அவர்களுக்கு உபசாரம் செய்து, அவர்கள் வருந்தாதபடி பார்த்துக்கொள்வதே எங்களிடத்தில் உங்களுக்குள்ள அன்பிற்கு அடையாளமாகும். அதைவிட எங்களுக்குப் பரமானந்தத்தைக் கொடுக்கும் விஷயம் வேறொன்றும் எனக்குத் தோன்றவில்லை. எங்களிடமுள்ள பிரியத்தால் வெகுதூரம் நீங்கள் வந்துவிட்டீர்கள். திரும்புங்கள். எங்கள் நன்மையை விரும்பும் நண்பர்களையும் உறவினர்களையும் உங்களிடம் ஒப்புவித்துக் கவலையற்றுவனவாஸம் செய்யும்படி எனக்கருள்புரிய வேண்டுமெ"ன்றுவேண்டினார்.

சீட்டுக் கவி

COMPLIMENTARY VERSES

[ஸ்ரீமான் ஜி. ஏ. சுந்தரமய்யரவர்கள், பி. ஏ., பி. எல்.]

தமிழ்ப் புலவர்கள் பழைய வழக்கங்களை விசேஷமாய்க் கைவிடாமல், இன்றும் அனுஷ்டித்து வருகிறார்களானாலும், முற்காலத்துத் தமிழ்ப்புலவர்கள் ஒருபிரபுவைப் பார்க்கப்போகுங் காலத்தில் சீட்டுக்கவி எழுதும் வழக்கம் இக்காலத்தில் காணப்படவில்லை. புதிதாய் ஒருவரைப் பார்த்து தம் விவரங்களை வாயால் சொல்வதைக் காட்டிலும், எழுத்து மூலமாயே தெரிவிப்பது, பல காரணங்களால் சௌகரியம். இதைக்கொண்டே இப்போதும் ஒருவர் ஒரு பெரிய மனிதரை பார்க்கப் போனால் தன் பேரைக் கண்டு எழுதிய வரவு சீட்டு (Visiting Card) கொடுத்தனுப்புகிற வழக்கம் பரவியிருக்கிறது. முற்காலத்துத் தமிழ் வித்துவான்கள் எழுதிய சீட்டுக்கவிகள் தற்காலத்து வரவு சீட்டு அனுப்பும் வழக்கத்தைப்போல்தான்.

சீட்டுக்கவிகளில் தற்புகழ்ச்சி பரவக் காணலாம். இது இழுக்கன்றாம். இக்காலத்து வரவு சீட்டிலும், கலாசாலைப் பட்டப்பெயர் முதலியவைகளைச் சேர்த்துக்கொள்வது பிரசித்தம்.

சீட்டுக்கவிகள் புலவர்களால் எழுதப்பட்டவையானதால், வரவு சீட்டுக்கள்போல சுருக்கமாய் இல்லாமல் நீண்டு கவிரஸம் பொருந்தியவைகளாகவே இருக்கும்.

சில சீட்டுக்கவிகளை இனி பார்ப்போம்.

சோடசாவதானி சரவணப் பெருமாள் கவிராயர் பாடிய சீட்டுக் கவிகளுட் சில வருமாறு:—

" கல்விச்சமுத்திரங் கமலாலயன் தமிழ்க்கடல்
 மடைதிறந்த வெள்ளம்
கற்பனை பிறப்பிடங் கலைமக ளிருப்பிடங்
 கவி மாரி பொழியு மேகம்
சொல்விற் பனம்விளையு மதுரக் களஞ்சியம் தோன்று
 கர்ப்பூர தீபம்.
சுகிர்த குண வவதானி சரவணப் பெருமாள்
 கைதொட் டெழுதி விட்ட சனது
வில்லுக் கருச்சுனன் சொல்லுக் கரிச்சந்திரன்
 வெற்றிக்கு விக்கிர மார்க்கன்
வித்தைக் ககத்தியன் முத்துக்கருப்பண
 விலட்சணன் எதிர்ந்து காண்க

மல்வெற்றி யாயன்று தாயென்று நீயென்று
மாலென்று வேலென்றுகா
மாவென்று காவென்று நாவொன்று பாவொன்று
வருகின்ற தருள்புரிவையே.

இச்சரவணக்கவிராயர், சேது நாட்டில் வசித்தவர். இராமநாதபுரம் சோமசுந்தர குருவினது மாணக்கர். இப்புலவர் தமது நாட்டையும், தமது வேந்தனையும் தமது ஆசிரியரையும், தமது நாட்டுத் தலங்களையும் தீர்த்தங்களையும் சிறப்பித்துப் பல சீட்டுக்கவிகள் எழுதியிருக்கிறார். அடியில் வரும் கவியில் இப்படிச் சிறப்பித்திருப்பதைக் காணலாம்.

மரபுதவி ராதவன் சோமசுந் தரகுரு
மலர்ப்பதம் பரவு தாசன்
வண்டமிழ்ச் சரவணப் பெருமாள் கவிச்சக்கர
வர்த்தி தேர்ந்தெழுது நிருபம்
வளர்காரை யம்பதியில் மேவுதுரை லட்சுமண
மந்திரியெதிர் கொண்டு காண்க
வானருக் குபகாரி நீயாகை யாலெமது
வல்லமையு மகிமையுங் கேள்
கருணீகர் நால்வர்க்கு நாற்கவிதை சொல்ல
வாய் கனவேலு மயிலுமென்னக்
காலிலொரு கவிதையுயர் தோளிலொரு கவிதை யிரு
கையிலொரு கவிதை யெழுதக்
கணக்கொரு புறஞ்சொல விலக்கொரு புறஞ்
சொலக் காணுத்திரை மறைவிலே
கனரூது சதுரங்க மொடுகுதிரை யடி சொலக்
கன்னெல்லு முதுகிலெண்ணப்
பரிவுபெற்ற புதுச்சேரியிற் சென்றினிய
பண்பரிச்சி னையவாத்தி
பண்புள குமரபா ரதிமதுரகவி வீரபத்திரகவி
கொண்டாடவே
பாக்கிய ஞானந்த நாதன் சபையினுஞ் செய்து
பல்லக்குவரிசை பெற்றேன்
பலகா வியங்களுந் தெரிவே னளப்பரிய பஞ்ச
லட்சணமு மறிவேன்
அரசரிலுயர்ந்த துரை யாரெனிற் சேதுபதி
யாகுமவன் மணிவாயிலில்
அகத்திய முனிக்கு மதிகங் கற்ற பேர்களா
யாயிரங் கவிவாணருண்
டவரிலொரு சிறுவன் யான் பாடவறியேனென்
றகற்றிவிட் டார்க ளென்னை
ஆதலாற் பூமியிற் சஞ்சரித்தே னின்னகந்
தனில் மகிழ்ந்தருள்வையே?

இவரது சீட்டுக் கவிகளில் தமது நாட்டையும் குருவையும், அரசனையும், மூர்த்தி, தீர்த்தத்தையும், புகழ்ந்து எழுதியிருப்பதை அடியில் வரும் சில அடிகளில் காணலாம். கவிகளை முழுவதும் எடுத்தெழுதினால் விரியுமாதலால் சில அடிகளை மட்டும் எடுத்துக்காட்டுவோம்.

யௌவன மனோன்மணி பதம்பணிகொள்
சேது பதி யிறைவன் மணிவாசன் மணிவாய்
இலகுமணி சைவமணி சோமசுந் தரகுரு
வெணையன் மகிழ் சிந்தா மணி
செவ்வசன மொழிதமிழ்ச் சரவணப் பெருமாள்
சிரோமணி யனுப்பு மோலை
செய்யதிரு மலைராயன் பட்டணத் தவரெலாம்
சிரசுமேற் கொண்டுகாண்க

* * * *

அட்டதிசை பணி செயுஞ் சேதுபதி மணிவாச
வட்டாவ தான சிங்கம்
அருந்தமிழ்ச் சோமசுந் தர குரு சுவாமி யடிமைக்
குமடிமை

* * *

மகபதிராதிபதி சேதுபதி வாசற் பிரசண்டவாக்கி
வடிதமிழ் சோமசுந் தரகுரு சுவாமி யடிமைக்குமடி
மைக்கு மடிமை

* * *

ஜெய ராம நாதனே தெய்வந் தனுக்கோடி
தீர்த்தமே தீர்த்தமெங்கள்
"சேதுபதியே ராஜன்"*

* * *

இக்கவிராயர் தொண்டைமானுக்கு அனுப்பிய சீட்டுக் கவி ஒன்றையும் பார்த்துவிட்டு வேறு புலவர்கள்கவிகளை எடுத்தெழுதுவோம்.

நீதி பெறுகல்வி ப்ரதானந் தெளிந்திடு நிதான
ஞானப்பிரகாசம்
நித்திய சுமங்கள கவிதா ப்ரசங்க மனனேய சுந்தர
விலாசம்
வேதாந்த சாகரஞ் சித்ராவ தான தமிழ் மேகம் சபா
ரஞ்சிதம்
வித்வஜன சேகரம் சேதுபதி வாசலில் விளங்கு நவ
ரத்ன தீபம்
சீதரஞ் சோமசுந் தரகுரு சுவாமி திருவடி துதிக்கு
மடிமை
சீர்பெருஞ் சரவணப் பெருமாள் கவீசுவரச் செய
சிங்கமெழுது மோலை
மாதவன் விசயரகு நாததுரை தொண்டை
மானெதிர் நடந்து காண்க
வரிசை பெறு நூறொன்று பாடிவர் தனமுனது
மனமகிழ்ந்தருள் புரிவையே

சரவணப்பெருமாள் கவிராயர் குமாரர் அருணசல கவிராயரும் சீட்டுக்கவிகள் பாடியிருக்

கிறுர். அவர் கவியின் நடையும் சரவணக் கவிராயர் கவிநடை போலவே இருக்கிறது. இப்புலவர் சீட்டுக் கவிகளுள் ஒன்று.

சக்ரவா ளத்தகடு முகடுபடபடென பிரசங்கத்
தெழுந்த சிங்கம்.
தத்வ லட்சண வித்வ லட்சண சுலட்சண
சபா ரஞ்சிதம்
சத்திய லோகத்தும் அதலத்தும் விதலத்தும்
நிலத்தும் பிரசித்ததுல்யம்
சற்குணலயமினிமை பெறுசுவைக் கல்விய முதத்
தலங்கார கும்பம்
உக்ரகாடின்ய திடதட விகட கடன் மடை
யுடைத் தெழு தமிழ்க்குஞ்சரம்

உசிதத்துகந்த சித்தாந்த வேதாந்த உரராம
வைராக்கிய சித்தம்
உபய பர்வதவட வரைக்கப்புறத்து முலவப்புகழ்
நடத்து வீரம்
உரக கங்கண மகுட புவன சக்ரேச
வுதார நதிசிரேஷ்டம்
கைக்கடாசல கோடி தரு சேதுபதி ராசகர்த்தன்
வாசற் பிரசங்கம்

கற்றறி விலக்கணச் சோமசுந்தரகுரு கடாட்ச
கனகாபிஷேகம்
கருது விரதவவதானி சரவணப் பெருமாள்
கவிசுரன் பெற்றரத்தினம்
கமல நாமகள் வளர் நிதானி யருணசல
கவிசரப மெழுது மோலே
திக் கெலாந் திறை கொண்ட கவுரிவல்லப ராஜ
சிங்கமெதிர் கொண்டு காண்க

* * *

படிக்காசுப் புலவர் என்று ஒரு சிறந்த புலவர் பாடிய சீட்டுக் கவி ஒன்று அடியில்வருமாறு:-

விருது கவிராஜன் கவி சக்கரவர்த்தி வாய்
வீண் பேசுவார்கள் மிண்டன்
விஞ்சையர்கள் தம்பிரான் கள ந்தைப்படிக்காசு
விவரமுட னெழுது மோலே
பொருது பிரபந்தமதில் விறல் சேகரன் புகழ்
செய் தளவாய் குமாரன்
பூச்சக்கர மன்னர்பணி ரகுநாத சேதுபதி
பூரித்தெழுந்து காண்க
பருதிமதி யுள்ளளவு நிற்கும் பிரபந்த கவி
பாடிநின் கீர்த்தி கேட்டுப்
பஞ்ச லட்சணதமிழ்க் காணிக்கையுங் கொண்
பரிவாக வுனை நாடியே
இருபதின் காதவழி கடலேறிவந்தன
னிருந்தமிழ் கொள்ளவேண்டி
யிந்நேரமே நம்மை யிருகாத வழியளவு மெதிர்
காணவரல் வேண்டுமே"

இராமநாடகம் செய்த சீர்காழி அருணசலக் கவிராயர் எழுதிய சீட்டுக் கவிகள் இரண்டு எடுத் தெழுதுவோம்.

எத்திசையுமே பரவு தட்சணசலமுனி
யெதிர்த்த பாவலர் குடாரி
இராமாயணக் கவிதை நாடகஞ் செய்தவ
னிலக்கண முயர்ந்த புலவன்
முத்தமிழ்க் காழியரு ணசலக் கவிராய
முகில்வர விடுக்குமோலே
முந்துபுகழ் தென் குளத் தூர்முத்து தானப்பன்
முகமலர்ந் தினிது காண்க.
வித்துவ சனங்களுக் காதார மாகியவர்
வேண்டியவெலா மக்கணம்
விரகுட னளித்தனே யெனக்கேட்டு நாமுமுனே
மேவினேம் கவியெழுதினேம்
உத்தம சிகாமணி நீயாதலாலிவிட மூன்று
பெருமழை தொடருமுன்
ஓராயிரங் கரும் பதுவேண்டு நீமன
துகந்து வரவிடல் வேண்டுமே"

கனிகொண்ட பஞ்சலட் சண மிராமாயணக்
கடலையு முணர்ந்த புலவன்
கவிராஜர் புகழ்கின்ற காழியரு ணசலக்
கவிராய னெழுதுமோலே
மணிகொண்ட மார்பன் லிங்கப்பன் மகிழ்ந்த
சுதன் வணிகாதிபன்
வருசீர் படைத்ததேப் பெருமாணரேந்திரன்
மனமுவந் தினிதுகாண்க
அணிகொண்ட தியாகேசர் வண்ணமுறை
செய்தது மதற்கு வெகுமதி செய்ததும்
அதினமக் குபகார நீ செய்ததும் புவியி
லறியாத பேரு முளரோ
பணிகொண்ட ராமகீர்த்தனையுமப்படியே
பரிந்து நீ கேட்க வேண்டும்
பாரி லோராயிரம் பிறைகண்டு நீ மகிழ்
படைத்து வாழ்கவினிதே

சுப்பிரமணிய கவிராயர் என்ற ஒரு புலவர் பாடிய சீட்டுக் கவி ஒன்று அடியில் வரும்.

மஞ்சரி கலம்பகங் கோவைஉலா தனமாக மாலே பல
சந்தமாலே
மடலுலா பரணிபிள் ளேக்கவிதை முதலா வழுத்தும்
ப்ரபந்தவாக்கி
மகுடமுடி மன்னர் சிரகரகம் பிதஞ்செயும் வசன
வுசிதப்ரசங்கன்
வாதுபுரி விகடகவி மதகரி குழாங்கடமை வாய்வீற
டக்கு சிங்கம்

சஞ்சரிக முத்தமிழை யெங்கும் செலுத்திவரு
தாஷ்டீகமான நிபுணன்
தன்டமி ழிலக்கண விலக்கிய ம்தாம்பெரிய சலதி
நிலைகண்ட வங்கம்
தணிகா சலக்குமரர் பாதமற வாதவன்
சரசுவதி நடனசாலை
சரசகவி சோடசா வதானிசுப் பிரமணியன்
தான் மகிழ் தனுப்பு மோலை
கஞ்சமலர் மாலைமுந் நூலிலகு திண்புயன் கருவேடு
நகராதிபன்
கவிஞர்கற் பகமுத்த ராபதியனும்பிரக் கியாதி
பழமறை வேதியன்
காரைநிக ராவகொடை வீரபூ பாலனருள்
காதல்சுத ஞானசுமுகன்
கங்கைநதி யாளன்வேங் கடரங்க மாலிது
கருத்தினின் மகிழ்ந்து காண்க
விஞ்சுபுவி மீதிவன் போலாஞ்சிற்குண
விவேகிவே றில்லை யென்றே
விரும்பிவெகு நாளாக வுரையடுத் தனனெனது
வறுமைநீங் கிடவு மினியோர்
வேளை தனி லென்றனை தானமது தன்னைப்பின்
மீதிலன் பாகமகிழ்வாய்
விளவியிப் புவியிலுங் பேரில்கவியினுமிகு
மேன்மை செய் திடல் வேண்டுமே''

கண்பார்வையில்லாத அந்தகக்கவி வீரராகவ முதலியார் என்னும் புலவர் சீட்டுக்கவி ஒன்றின் முற்பாதியை எழுதி இந்த வியாசத்தை முடிப்போம்.

ஏடா யிரங்கோடி யெழுதாமல் தன் மனத்
தெழுதிப் படித்த விரகன்
இமசேது பரியந்த மெதிரிலாக்
கவிவீர ராகவன் விடுக்கு மோலை
சேடாதி பன்சிர மசைந்திடும் புகழ்
பெற்ற திரிபதகை குலசேகரன்
தென்பாலை சேலம்புரந்துதா கம்தீர்ந்த
செழியனெதிர் கொண்டு காண்க.

பொங்கலகவல்

[ஸ்ரீமான் பண்டித ஊ. சா. வேங்கடராம ஐயர் அவர்கள்.]

வடதிசைக் கிமைய வரையே வரம்பா
ஏனைமுத் திசைக்கும் எறிதிரைப் புணரியே
எல்லையாத் துன்னிய இயம்பருஞ் சீர்சால்
தொல்நில மீதென நல்லோர் நவிலமுப்
பத்துமுக் கோடியாம் உத்தம ப்ரஜைகளைத்
தன்பாற் கொண்டநம் அன்னையாம் இந்தியா
'தானே தனக்குத் தக்கநற் றுணை' எனச்
சான்றோர் கூறிய ஆன்றமொழி பற்றிச்
சின்னா ளாக முன்னே செல்லத்
தேசபக் தர்களை ஈசன தருளாற்
பெற்று வளர்த்துக் கற்றவர் ஆக்கி
அங்கும் இங்கும் எங்கும் ஆகப்
பற்பல தலத்திடைப் பயில்வுறத் தவராற்
காலத் திற்குப் பொருந்த நூலொடு
பத்திரி கைமுதல் உத்தயக் கருவிகொண்
டெவரையும் அறிவுறீஇ இவர்தரற் பொருட்டுத்
தூண்டுவ துடனே வேண்டிய வரைக்கும்
'கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்' நாட்டிற்
கேற்ற வாறுரை ஏற்ற ப்ரசங்க
மாரியைப் பொழிவித் தார்தலால் இன்றுஞ்
சின்னா ளில்தான் உன்னிய சித்தியைப்
பெறும் பெறும்; அதனாற் பேணிஇத் தேசக்
காரியங் களையே கண்ணுக் கொள்வதொ
டொப்புர வுண்மை ஒற்றுமை பொறையே
உறுதி ஒழுக்கம் உயர்வருள் முதலவாஞ்
சீரிய குணங்களைக் கூரிய ஆக்கி
மேன்மே லோங்க வளர்த்து வருநம்
உத்தமத் தேச பக்தர்கள் பொங்குக;
பக்தர் களைப்பரி பாலிப்பான் வளர்ந்
தென்றும் உயர்ந்தோர் இசையெனப் பொலிந்தின்
டுச்சிமேற் கொளவல மெச்சும் புகழ்சேர்
இந்திய மகாநா டொடுபல செந்தமிழ்ச்
சங்கமும் பிறபல பாஷைச் சங்கமும்
பொங்குக பொங்குக பொங்குக; அன்றியும்
தங்குக நல்லன; மங்குக தீயன;
மெய்யுரை வளர்க; பொய்யுரை மாள்க;
அறம்உயர்ந் தோங்குக; மறம்அயர்ந் தேங்குக;
உரையும் ஒளியும் புரையிலா தோங்குக;
கல்வியுஞ் செல்வமுங் கவினுற வளர்க;
புன்மையும் இன்மையும் புகலிடம் இன்றிச்
சென்றதேய்ந் திடுக; தேசஞ் செழிக்க;
நீர்வளம் நிலவளம் ஏர்வளம் எல்லாம்
ஓங்குக; மேன்மேல் உத்தமக் குடிகளும்
ஒப்புயர் வற்றிங் குயர்ந்து மகிழ்ந்திடுக;
செப்பிய திருமால் எனத்தினம் நம்மாற்
கொண்டா டப்பெறுங் கொற்றவன் ஓங்குக;
எல்லவ ருக்கும்நல் இன்பமொ டாயுளும்
வளருக; அன்பே மல்குக; அருளும்
கூடுக; தமிழுங் குவலய மதனிற்
பீடுபெற் றுயர்வாய்ப் பிறங்குக என்றிவ்
ஆண்டெறும் உயர்சித் தார்த்தியொ டண்டிய
தையெனப் பெயரிய அப்பகன் மாதப்
பிறப்பாஞ் சீரிய சிறப்புறு மொருபுதன்
வாரத் தினத்தில் ஆரப் பெருகிப்
பொங்குக பாலும் பொங்குக;
பொங்குக நன்மறப் பெண்களும் பொலிந்தே.

 கை ஊன்றிக் கரணம் போடவேண்டும்.

சந்திரகுப்த விக்ரமாதித்யன்
CHANDRAGUPTA VIKRAMADITYA

[ஸ்ரீமான் ஆர். ரெங்காசாரியார் அவர்கள், எம். ஏ., எல். டி.]

நமது நாட்டில் பூர்வத்தில் அநேக முடி மன்னர்கள் வெகு சிறப்பாக ஆண்டுவந்திருக்கின்றனர். அவருள் சந்திரகுப்த விக்கிரமாதித்தன் என்பானும் ஒருவன். பல அரசர்கள் தங்களது வீரத்திற்கும் செல்வாக்குக்கும் அறிகுறியாக விக்கிரமாதித்தன் என்ற பட்டப்பெயரைப் புனைந்துள்ளார்களாயினும், குப்தவம்சத்தைச் சேர்ந்த இரண்டாவது சந்திர குப்தன் என்பானே அப்பெயர் புனைவதற்குத்தகுதியுடையயவனென்பது இவனைப்பற்றிக் கூறப்படும் பின் வரலாற்றால் அறியலாகும்.

இவன் குப்த வம்சத்தின் மூலபுருஷனான சந்திர குப்தனது பௌத்திரன். சமுத்திர குப்தனுக்கும் அவனது பட்டமகிஷியாகிய தத்தாதேவிக்கும் புத்திரன். தகப்பன் வெகு கியாதியுடன் ஆண்டுவரும் நாளிலேயே இளவரசப்பட்டம் எய்தி, இராச்சிய பாரத்தைத் தந்தையுடன் வகித்துச் சரிவர நடாத்தி வந்தவன். இவனது தந்தை 50 ஆண்டுகள் அரசுரிமை தாங்கிவந்தமையின், இவன் பட்டத்துக்கு வந்தபோது இவனுக்கு வயது முதிர்ந்திருக்கவேண்டு மென்பது திண்ணம். இவன் பட்டம்பெற்ற வருஷம் நமக்கு இப்போது உண்மையாகத் தெரியாது. ஆயினும் கி. பி. 375-க்கு ஸமீபத்தில் அவன் மகுடாபிஷேகம் செய்யப்பட்டிருக்கவேண்டு மென்பது ஒருவாறு ஊகிக்கப்பட்டுள்ளது. இவனுடன் பிறந்தோர் பலரிருப்பினும் இவனது தந்தை தனக்குப் பின்னால் அரசபாரம் தாங்குவதற்கு ஏற்றவன் இவனே யெனத் தெரிந்தெடுத்தான். இதனால் இவன் யுவராஜனாக விருக்கும்போது இராச்சியப் பொறுப்பைத் திறமையுடன் தாங்கிவந்தனனென அறியக்கிடக்கின்றது. இவனும் தந்தையின் விருப்பத்தின்படியே இராச்சியத்தை யாதொரு சண்டை சச்சரவின்றிப் பெற்றான்.

இவன் அரசு கட்டிலில் ஏறியபோது, இவனது இராச்சியம் வெகு விஸ்தாரமாக விருந்தது. இவனது தந்தை சேனைகொண்டு சென்றவிடமெல்லாம் ஜயபேரிமுழக்கிப் பல நாடுகளைக் கவர்ந்து தன் நாட்டை நாற்புறமும் வளர்த்தனன். தந்தையின் வழியையே பற்றி நடக்க இவனும் எண்ணினான். ஆயினும் இவன் முக்கியமாக வடநாட்டிலேயே படையெடுத்துச்சென்றான். தென்னாட்டின் மீது இவன் படையெடுத்துச் செல்லவில்லை. இவனது சேனை கிழக்கிலும், வடமேற்கிலும், தென்மேற்கிலும் சென்று பகைவரைத் தாக்கின. டில்லி நகரில் இவனால் நாட்டப்பட்ட ஒரு இரும்புத்தூண் உள்ளது. அதில் இவனைப் பற்றிய ஒரு சாஸனம் செதுக்கப்பட்டுள்ளது. அச்சாஸனம் சிறந்த சுலோகங்களால் ஆக்கப்பட்டது. (இதிலிருந்து) இவ்வரசன் வங்க நாட்டின்மீது படையெடுத்துச் சென்று தன்னை யெதிர்த்த பகையரசரை வேரறுத்தான் என்பது தெரிகிறது. இச்சாஸனத்தை சுலோக ரூபமாகச்செய்த பண்டிதனுடைய வாக்கை உத்தேசித்தால், இவ்வரசன் வென்ற பகைவர்கள் இவனது நாட்டைப் படையெடுக்கவில்லை யென்பதும், அவர்கள் கலகஞ் செய்ததற்காக முறியடிக்கப் பட்டார்களென்பதும் தெளிவாகின்றன. இன்னும் இவ்வரசன் ஸிந்து நதியின் ஸப்த முகத்தையும் தாண்டிச் சென்று அங்கேவசித்துவந்த வாஹ்லிகர் என்றவோர் ஜாதியாரைப் போரில்வென்றானென்பதும் இச்சாஸனத்தால் வெளியாகின்றது.

மேற் குறித்த படையெழுச்சிகளெல்லாம் இவ்வரசனது வீரத்திற்கும் புகழுக்கும் ஓர் அறிகுறியாகா. இவன் சௌராஷ்டிர தேசத்தின்மீது படையெடுத்துச் சென்று அதை வென்று தன் நாட்டுடன் சேர்த்துக்கொண்டதே இவனது பெரும்புகழுக்கும் விக்கிரமாதித்தனென்ற இவனது பட்டப் பேருக்கும் காரணமாயிற்று. ஆதலால் இப்படையெழுச்சியைப் பற்றித் தெரிந்துகொள்வது மிக்க அவசியமாகின்றது.

சௌராஷ்டிரதேசம் இந்தியாவின் மேற்கே மேல் கடலோரத்திலுள்ள ஒருதேசம். கண்ணபிரானது படைவீடாகிய துவாரகை இதிலேதானுள்ளது. இந்நாட்டின்மீது சந்திர குப்தன் படையெடுத்துச் செல்லவேண்டுமாயின் இடையிலுள்ள மாளவம் கூர்ச்சரம் என்ற இரண்டு நாடுகளின் வழியாக அவன்

செல்லவேண்டும். இவ்விரண்டு நாடுகளும் குப்தராஜ்யத்துடன் இன்னும் சேரவில்லை. சமுத்திர குப்தனது நாளில் அவை குடியரசு நாடாக விருந்தாலும், அவை உடன்படிக்கை மூலமாக சமுத்திர குப்தனது ஏக சக்கராதிபத்தியத்தை ஒப்புக்கொண்டன. ஆதலின் சௌராஷ்டிர தேசத்தை வெல்லுவதற்கு முன்பு,மாளவத்தையும்கூர்ச்சரத்தையும் தன்னுட்டுடன் சேர்த்துக்கொள்வது சந்திர குப்தனுக்கு அவசியமாயிற்று. இவனும் அவ்வாறே இவ்விரண்டு நாடுகளையும் முதலில் வென்று தனது இராச்சியத்துடன் சேர்த்துக் கொண்டான்.

சௌராஷ்டிர தேசம் வெகுகாலமாக சுதந்திரம் பெற்று சாக குடியினரால் ஆளப்பட்டு வந்தது. இவ்விராச்சியத்தை முதன்முதல் ஸ்தாபித்து சாகவம்ஸத்தையும் நாட்டியவன் பூமகக்ஷஹராடன் என்ற சாகமன்னன் ஆவான். இவன் கி. பி. முதல் நூற்றுண்டின் முடிவில் வசித்தவன். இவனுக்குப் பிறகு ஆண்டவன் அதே குடியைச்சேர்ந்த நாதபாணனென்பான் இவன் அடுத்துக் கிழக்கே ஆண்டுவந்த ஆந்திர வரசர்களை வென்று அவரது நாட்டின் ஒரு பாகத்தைக் கட்டிக்கொண்டு தன் இராச்சியத்தை வளர்த்திக்கொண்டான். கி. பி. 126 இல் விலிவாயகுரன் II என்ற ஆந்திர மன்னன் தன் நாட்டைக் கவர்ந்துகொண்டு, நாதபிதிராச்சியத்தையும் சிறுமைப்படுத்திய தன்பாணனைப் போரில் முறியடித்துத் தொலைத்து விட்டான். இதன் பிறகு மேற்றிசை நாடுகள் ஆந்திரர்களுச்குக் கீழே ஒரு சிற்றரசாக மாறிவிட்டன. சாஷ்டானன் என்ற சாகவம்சத்தினன் ஒருவன் ஆந்திர ராஜ பிரதிநிதியாக இப்பாகத்தை ஆண்டு வந்தான். இவனது பேரன் உருத்திரதாமன் என்பான் தனதுமகள் தக்ஷமித்ரா என்பவளை விலிவாயகுராவின் மகன் புலிமாயி II என்ற ஆந்திர மன்னனுக்கு மணமுடித்தானுயினும் தனது இராச்சியத்தைப் பெருக்க வேண்டுமென்ற அவாவால் தன்மாப்பிள்ளை மீது படையெடுத்துஅவனை வென்று சௌராஷ்டிரம் மாளவம் கச்சு சிந்து கொங்கணம் முதலிய ஆந்திரநாடுகளைத் தன் வசப்படுத்திக் கொண்டு பெரும்புகழுடன் ஏகசக்கிராதிபத்தியம் செய்துவந்தான். இவனது இராசதானி உச்சனி என்ற நகர். இவன் பாட்டன் நாள் முதல் இந்த வம்சத்தாருக்கு இதுவே தலைநகராகவிருந்தது. இது இந்தியாவின் புராதன நகரேழில் ஒன்று. வியாபாரஸ்தலங்களில் சிறந்தது. மேல்கடல் துறைமுகங்களில் இறங்கும் சரக்குகள் இதன்மூலமாகவே உள்நாடுகளுக்கு அனுப்பப்படும். இன்னும் இந்நகர் கலைகளுக்கும் நாகரிகத்திற்கும் இருப்பிடம். இந்நகரின் இரேகாம்சத்தைக் கொண்டே வானசாஸ்திரிகள் முன்னுளில் தமதுகணிதங்களைக் கணித்து வந்தனர். இன்னும் இந்நகரின் பெருமை ஒரு சிறிது விளங்குகின்றது.

உருத்திரதாமனுக்குப் பிறகு அவனது சந்ததியாருக்குள்ளேயே மேற்கூறிய மேல்நாடுகள் இருந்துவந்தன ஸமுத்திரகுப்தன் பிரபலமாக பாடலிபுரத்தில் ஆண்டுவந்தபோது உச்சினியில் ஆட்சிபுரிந்த உருத்திரதாமன்மகன் உருத்திரசேனனென்பான் தன் தூதுவர் சிலரைப் போக்கி ஸமுத்திரகுப்தனது நட்பைத்தேடிக் கொண்டான். இதனுல் இப்பாகத்தின்மீது ஸமுத்திரகுப்தன் படை யெடுக்கவில்லை. இவன்மகன் சந்திரகுப்தனே வடஇந்தியாவை ஒருகுடைக்கீழ்க்கொண்டு வரவேண்டுமென்ற பேரவாக்கொண்டவன். இவன் மேல்நாடுகளில் சாகவம்சத்தினர் மிக்க செல்வாக்குடன் ஆண்டுவருவதைச் சகிப்பானே? மேல்நாடுகளோ செல்வங்கொழிக்கும் சிறப்பினை யுடையவை. அவற்றை ஆள்பவரோ வேற்றுநாட்டிலிருந்து வந்து மேல்பாகத்தைக் கைப்பற்றியாளும் கொற்றவர்கள்; ஜாதியிலும், மதத்திலும், ஒழுக்கத்திலும் இந்துக்களுடன் ஒற்றுமை சிறிதுமில்லாத அந்நியர்கள்; வருணாசிரம நியதியில்லாத பாசண்டர்கள்; மிலேச்சர்கள் ஆதலின் சந்திரகுப்த விக்கிரமாதித்தனிடம் இந்த சாகவம்சத்தைக் கருவறுத்து மேனாடுகளைத் தன்னுடன் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்ற நினைவு எப்போதும் குடி கொண்டிருந்தது. இவன் இந்துமதத்தில் மிகுந்த பற்றுள்ளவன் ஆயினும் பௌத்த ஜைன மதங்களில் வெறுப்பில்லாதவன்; அவற்றை ஒருசிறிது ஆதரித்தும் வந்தவன். தனக்கு எதிரியாக மேல்நாடுகளில் அந்நியர்கள் குடியேறி இராச்சியபரிபாலனஞ் செய்வது இவனுக்குப் பொறுக்கவில்லை. இவன் பட்டத்திற்கு வந்ததுமுதல் இந்நாடுகளைக் கைப்பற்று

வதற்கான வழிகளைத் தேடினான். படைகளை ஏராளமாகத் திரட்டிக்கொண்டான். முதலில் மாளவத்தை வென்று கைப்பற்றிக் கொண்டான். பிறகு கூர்ச்சரத்தைக் கட்டிக் கொண்டான். கடைசியாக சௌராஷ்டிரத்தின் மீது பெரும்படைகொண்டு சென்று அப்போது ஆண்ட சத்தியஸிம்ஹன் மகன் உருத்திரஸிம்ஹனைப் போரில் முறியடித்து அவனையுங் கொன்று அவன் நாடுகளைத் தனது இராச்சியத்துடன் சேர்த்துக்கொண்டான்.

மூன்று நூற்றாண்டுகளாக சுதந்தரத்துடன் ஆண்டுவந்த சாகவம்சம் இவ்வாறு சந்திரகுப்தனால் அழிவுற்றபோது குப்தராச்சியம் மேல் கடலைத் தொட்டுவிட்டது. இப்படையெழுச்சியால் சந்திரகுப்தனுக்குப் பேரும் புகழும் செல்வமும்செல்வாக்கும் கிடைத்தன. தனது வெற்றிக்கு அறிகுறியாக சந்திரகுப்தன் விக்கிரமாதித்தன் என்ற பட்டப் பெயரையும் புனைந்து கொண்டான். இப்படையெழுச்சிகளால் மேனாடுகளைக் கைக் கொண்டு தனது இராச்சியத்தைப் பெருக்கிக் கொள்வதற்குப் பலவருஷங்கள் பிடித்திருக்கு மென்பதற்கு ஐயமில்லை. அது கி. பி. 388-க்கும் 401-க்கும் இடையில் நிகழ்ந்த தென்பதற்கு ஆதாரங்களுள்ளன. ஆதலால் கி. பி. 395 இல் இவன் இப்போரை வென்று சௌராஷ்டிர மாளவ நாடுகளைக் கைப்பற்றிக் கொண்டான் எனத் தீர்மானிக்கத் தடையொன்று மில்லை.

இந்நாடுகளோ மிகவும் வளமும் செல்வமும் நிறைந்த நாடுகள். இந்நாடுகளிலுள்ள துறை முகங்கள் மேனாட்டாரோடு வியாபாரம் நடத்தி வந்தன. இவற்றை வென்று சேர்த்துக் கொண்டபோது சந்திரகுப்தனும் இத்துறைமுகங்கள் வழியாக ஐரோப்பா தேசங்களுடனும் எகிப்து தேசத்துடனும் நடை பெறும் வியாபாரத்தைக் கைவசப்படுத்திக்கொண்டு, அதன் மூலமாக நாட்டின் ஊதியத்தையும், மேனாட்டாரது கூட்டுறவையும் பெருக்கினான். அக்காலத்தில் அலக்சாண்ட்ரியா நகரிலிருந்து அநேகர் இவனது சமஸ்தானத்துக்கு வந்து கொண்டிருந்தனர்.

இந்த சந்திரகுப்தன் சுமார் 40 ஆண்டுகள் அரசு நடாத்தி வந்தான் (375-413). இவனைப் பற்றிய வேறு விஷயங்கள் நமக்கு இப்போது வெளியாகவில்லை. மேற்குறித்தவைகளிலிருந்து இவன் ஓர் சிறந்த போர்வீரனென்றும் தனது புஜபல பராக்கிரமத்தால் தான் பெற்ற பெரியதோர் இராச்சியத்தைப் பின்னும் பெருக்குவதற்கான திறமையும் வலிமையும் வாய்ந்தவனென்றும் வெளியாகும். இவன் உயர்ந்த பட்டப்பெயர்களைப் புனைந்துகொள்ளுவதில் பிரியமுள்ளவன். பழைய பாரசீக மன்னர்களைப்போல சிங்கத்துடன் சண்டை போட்டு அதை வீழ்த்தியதாகத் தன்னைச் சித்திரித்துக்கொள்வதில் இவனுக்கு பிரீதியுண்டு.

இவனது தலை நகர் பாடலிபுரமாயினும் சமுத்திரகுப்தனது நாள்முதல் இது அரசரது வாழ்க்கைக்குத் தகுதிபெறாது போயிற்றென்றும் இவனது பெரிய இராச்சியத்திற்கு மத்தியபாகத்திலுள்ள அயோத்தி நகரே சமுத்திரகுப்தனுக்கும் சந்திரகுப்தனுக்கும் சில சமயங்களில் தலைநகராக இருந்ததென்றும் தெரிகின்றன. சந்திரகுப்தன் காலத்தில் இங்கே நாணயசாலையொன்றிருந்தது. இதில் தாமிர நாணயங்கள் அடிக்கப்பட்டன. 5-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அயோத்தியே தலை நகராக மாறிவிட்டது.

இவன் காலத்தில் சீனதேசத்திலிருந்து பாஹியான் என்ற ஓர் பௌத்தயாத்திரிகன் இந்தியாவுக்கு வந்து இவனது நாட்டில் ஆறு வருஷம் தங்கி பௌத்தநூல்களில் ஆராய்ச்சி செய்தும் பௌத்தநூல்களைத் திரட்டியும் வந்தான். அவன் எழுதிய நூலிலிருந்து அக்காலத்தில் குப்தராச்சியத்தின் நிலைமையும் குடிகளின் செல்வமும் சமாதான வாழ்க்கையும், நாட்டின் அமரிக்கையும் பிறவும் தெரிகின்றன. ஆயினும் இவன் தான் வந்தபோது ஆண்டுவந்த அரசனது பெயரைக் குறிக்கவேயில்லை. அவன் எழுதியவற்றிலிருந்து சந்திரகுப்த விக்கிரமாதித்தனே அப்போது அரசு புரிந்திருக்கவேண்டுமென்று ஊகிக்கத் தடையொன்றுமில்லை.

பிலாமரம்

THE JACK

[ஸ்ரீமான் ஜே. ஆர். ரங்கராஜு அவர்கள்.]

பிலாமரம் நமது இந்தியாதேசத்தில் அநேக நூற்றாண்டுகளாகப் பயிர் செய்யப்பட்டு வருகிற தென்று தெரிகிறது. விநாயகர் அகவலில் "முப்பழநுகரும் மூஷிகவாகன" என்று சொல்லியிருப்பதாலும் முப்பழம் என்பது வாழை, மா, பிலா என்பதாலும், இது நமது நாட்டில் ஆதிகாலத்திலிருந்து வளர்ந்து வந்த செடியென்று திட்டமாய்ச்சொல்லலாம். முதலில் ஒரே தினுசாக இருந்திருந்தாலும் கால தேச சீதோஷ்ண பேதங்களால் பல தினுசுகளாக மாறுபாடடைந்திருக்கிலாமென்று தெரிகிறது.

வகைகள்

(1) வர்க்கை. (2) கூழை. (3) வேர் பிலா.

1. வர்க்கை —சுளைகள் தடிப்பாயும் பருமனுயு மிருக்கப்பட்ட ஜாதிக்கு வர்க்கை யென்று சொல்லுவார்கள். இதில் சிவப்பு நிறமான வர்க்கையென்றும் மஞ்சள் நிறமான வர்க்கையென்றும் வெளுத்தமஞ்சள் நிறமான வர்க்கையென்றும் மூன்று உட்பிரிவுகள் உண்டு. இச்சுளைகளை ஒடித்தால் இரண்டு துண்டுகளாய் ஒடிந்துவிடும்.

2. கூழை-இதில் விதைகள் பெருத்தும் ஓலையைப் போல் மெல்லியதாயும் பிசுபிசுவென்று ஒட்டக்கூடியதாயுமிருக்கும். இது காயாய்இருக்கும்போது கறிசமைக்க உபகாரப்படுமேயல்லது பழத்திற்கு உதவவே உதவாது. இதிலும் வர்க்கை ஜாதியில் சொன்ன மூன்று உட்பிரிவுகள் உண்டு.

3. வேர் பிலா.—பூமியோடு பூமியாய் வேரிலேயே காய்க்கும் மரங்களுக்கு வேர் பிலா வென்று சொல்லுவார்கள். இது நல்ல ருசிகரமாயிருக்கும். இது ஒரு தனி ஜாதியென்று நமக்குத் தோற்றவில்லை. சீதோஷ்ண பேதங்களைப் பொறுத்து இயற்கையாகவே இப்படி காய்க்கிறதே யொழிய வேறல்லவென்றே நாம் நினைக்கிறோம். ஏனெனில் இந்த ஜாதிவிதை நாமே நேரில் பழம்பறித்துக் கொண்டு வந்து விதைபோட்டு செடி உண்டாக்கியதில் அவைகள் வேரில் காய்க்கவில்லை.

சிலர் வேர் பிலா பழத்தைக் கொண்டுவந்து பழத்தை அறுக்காமல் முழுப்பழமாகவே பூமியில் புதைத்தால் அதிலிருந்து பெரிய மூடு கட்டி ஒரே செடியுண்டாகுமென்றும் அச்செடி வேரில் காய்க்குமென்றும் சொன்னார்கள். நாம் அப்படியே ஒருபழம் கொண்டு வந்து பூமியில் புதைத்துப் பார்த்ததில் பெரும் மூடுகட்டிஒரே செடி உண்டாகாமல் பலமூளைகள் உண்டாகி பல செடிகளாகவே வந்ததால் அதுவும் சரியல்லவென்று தெரிகிறது. ஆகையால்தான் சீதோஷ்ண பேதங்களைப் பொறுத்து இயற்கையாகவே அப்படி சில இடங்களில் காய்க்கிறதென்று நாம் அபிப்பிராயப் படுகிறோம்.

பொதுவாக பிலாவில் மேற்சொன்ன பிரிவுகள் உட்பிரிவுகள் தவிர இன்னும் ஒருவிதமான வித்தியாசமும் உண்டு. அதாவது பெரிய பழங்கள் பழுக்கும் மரங்களென்றும் சிறு பழங்கள் பழுக்கும் மரங்களென்றும் இரு வகைப்படும். பெரிய பழங்கள்பழுக்கும் மரங்கள் விரிந்து படர்ந்து சுமார் 40 அல்லது 50 அடி அகலம் வரையில் பரவி நிற்கும். சிறு பழங்கள் பழுக்கும் மரங்களோ விரிந்து படராமல் உயரமாக வளரும். இது 20 அடி அகலத்திற்குமேல் பரவுவதில்லை. இதில் சிறுகாய்கள் தேர் அலங்கரித்ததுபோல் அடி முதல் நுனிவரையில் அலங்காரமாய்த் தொங்கும்.

மண்.—போதுமான ஜலவசதியும் வடிகால் வசதியும் உள்ள செம்மண் சரள் நிலம் சிலாக்கியமானது. களர் இருக்கக்கூடாது. படுகை நிலங்களில் கழிக்கால் நிலங்களிலும் வடிகால் வசதி யிருந்தால் அவைகளிலும் பயிர் செய்யலாம்.

உற்பத்தி.—விதைகள் போட்டும், ஒட்டுக் கட்டியும் உண்டாக்கலாம். விதைகள் போட்டு உண்டாக்குவதே சிலாக்கியம். ஒட்டுஅவ்வளவு நல்லதல்ல. எலுமிச்சையைப்போல் அவ்வளவு கஷ்டமான பயிரல்ல. கன்றுகள் எவரும் சுலுவாய்ப் பயிர்செய்து உண்டாக்கலாம். ஆகையால் இச்செடிகள் உற்பத்தி செய்ய விரும்புவோர் தங்களுக்கு எந்த ஜாதச்செடி உற்பத்திசெய்ய விருப்பமோ அந்த ஜாதியில் நடுவயதுள்ள மரங்களில் நன்றாய் செடியிலேயே பழுத்து தானாய் கீழேவிழும் வரையில் அறுக்காமல் விட்டு அப்படி விழுந்த பழத்தைக் கொண்டு வந்து அறுத்து சுளைகளிலி

ருந்து விதைகளை, விதைகளின் மேல் மூடியிருக்கும் ஜவ்வுபோன்ற தோல் பின்னப்படாமல் எடுத்து ஈரம் காயுமுன் நாற்றுப் பாவ வேண்டும்.

நாற்றுங்கால் தயார்செய்தல்.—பூமிமட்டத்திற்குமேல் ½ அடி உயரமாக பாத்தி கட்டி, கல் சட்டிகளில்லாமல் நன்ருய்க்கொத்தி அத்துடன் ஆடுமாடுகளின் மக்கின சாணியைத் தூள்செய்து கலந்து பாத்தி நிரவி விதைபாவி மூட்டம்போட்டு தண்ணீர் ஊற்றவேண்டும். நாற்றுப்பாவும் இடங்களுக்குத் தக்கபடி தண்ணீர் நிற்காமலும் ஈரம் காய்ந்து விடாமலும் பதமாகத் தண்ணீர் ஊற்றிவந்தால் சில நாட்களில் முளை கிளம்பி வளர ஆரம்பிக்கும். ஒரு மாதத்திற்குப் பின் கூச்சுக் களையால் செடிகளுக்குக் காயம்படாமல் களை வெட்டி புல் பூண்டுகளை அப்புறப் படுத்தலாம். சாதாரணமாய் சித்திரை, வைகாசி, ஆனி மாதங்களில்தான் பிலாப்பழங்கள் காலமாதலால் அப்போது விட்ட நாற்று ஆறுமாதக் காலத்தில் பிடுங்கி நட தயாராயிருக்கும். பெரும் மழைகள் நின்றவுடன் நடுவது சிலாக்கியம்.

செடிகள் வைத்தல்.—செடிகள் வைக்க உத்தேசித்திருக்கும் நிலத்தை நன்ருய் உழுது புழுதியாக்கி வைக்க நாம் உத்தேசித்திருக்கும் ஜாதிக்கும், நிலத்திற்கும். தக்கதாக 20-அடி முதல் 50 அடிக்கு ஒரு செடியாக நடவேண்டும். அதாவது நாம் கடைசியில்சொன்ன சின்ன பழங்கள் ஜாதியாயிருந்து கிராவல் நிலமாயிருந்தால் 20 அடிக்கு ஒரு செடிநடலாம். அதே ஜாதி மரத்தை படுகை அல்லது கழிக்கால் நிலத்தில் நடுவதனுல் 30 அடிக்கு ஒரு செடி நடவேண்டும்.

விரிந்து வளரக்கூடிய பெரிய ஜாதி பிலாவை சரள்கண்டமுள்ள நிலத்தில் நடுவதானல் 35 அல்லது 40 அடிக்கு ஒரு கன்ருகவும் அதே ஜாதியை படுகை நிலத்தில் நடுவதானுல் 50-அடிக்கு ஒன்ருகவும் நடவேண்டும். ஆகவே நாம் வைக்கும் நிலம், ஜாதி, சீதோஷ்ண பேதம் முதலியவைகளைக் கவனித்து 20-அடி முதல் 50-அடிக்கு ஒரு கன்ருக நட வேண்டும்.

இத்தனை அடிக்கு ஒரு செடி நடுவதென்று தீர்மானித்தபின் குழிகளை அடையாளமிட்டு குறைந்தது 3-அடி சதுரமாவது தோண்டி ஆறப்போட்டு குழி நன்ருய் காய்ந்தபின் வண்டல், எரு முதலியவைகளைக் கலந்து குழிகளை நிரப்பி செடிகளை வைத்து தண்ணீர் பாய்ச்ச வேண்டும். எலிமிச்சம் செடிகளைப் போல் இவைகளையும் மாடுகள் மேயாமல் பாதுகாக்க வேலி கட்டவேண்டும். மொத்த விஸ்தீரணத்திற்கு வேலிகட்ட சாத்தியமாகாவிட்டால்அந்தந்த செடிகளுக்காவது போதுமானபடிவேலி கட்டவேண்டும். ஆகவே ஒரு ஏகராவிற்கு 20-முதல் 50-செடி வரையில் வைக்கலாம். மரங்கள் பெரிதாகும் வரையில் இச்செடிகளின் மத்தியில் காய்கறிப் பயிராவது கேழ்வரகு, (ராகி)ப்பயிராவது செய்யலாம். இப்படிச் செய்வதால் இச்செடிகளுக்குத் தண்ணீர் இறைக்குங்கஷ்டம் தோன்ருமற்போவதுடன் அடிக்கடி கொத்தி எருவிடப்படுவதால் செடிகளும் வீரியமாய் வளரும். அப்படிப் பயிர் செய்ய சாத்தியமாகாவிட்டால் வாரத்திற்கு இருமுறையாவது தண்ணீர்பாய்ச்சி வருஷத்திற்கு 4-முறையாவது செடியைச்சுற்றி நன்ருய்க் கொத்திவிடவேண்டும்.

இவைகள் சரியானபடி பயிர் செய்யப்பட்டால் 7-வது வருஷம் முதலும் அப்படியில்லாவிட்டால் பயிர் செய்வதற்கேற்றபடி வருஷங்கள் பொறுத்தும் காய்க்க ஆரம்பிக்கும்.

ஒரு ஏகராவில் குறைந்தது வருஷத்திற்கு நூறு ரூபாயாவது இலாபம் கிடைக்கும்.

ஆங்கிலேய அரசாட்சியும், அனுமரணமும்

BRITISH RULE AND SUTTEE

[ஸ்ரீமான் டி. எஸ். கணேசய்யரவர்கள், எம். ஏ., எல்: டி.]

சாதாரணமாய், இந்து தேச சரித்திரத்தை படிப்பவர் கற்றுக்கொள்ளும் விஷயங்களில், ஆங்கிலேய அரசாட்சியின் முக்கிய நன்மைகள் என்பது ஒரு பாடம். இருப்புப் பாதை, தந்தி தபால், போக்குவரவுக்குரிய சாதனங்கள் என்று அடுக்கப்படும் நன்மைகளில், அனுமரணம் நிறுத்தல் என்பது ஒன்று. பெரும்பாலும் மாணாக்கர்கள், அதன் பொருள் தெரியாமலே பொட்டைப்பாடம் செய்வதும் உண்டு. இந்த அனுமரணம் என்பது யாது, அதன் குணதிசயங்கள் என்ன என்பதே, நமதுவியாசம்.

அனுமரணமென்றால், உடன்கட்டை ஏறுவது என்று பொருள். நாயகனைப் பிரிய இஷ்டமில்லாத பெண்களும், நாயகனின் பிரிவாற்றாமையை சகிக்க முடியாதென்று எண்ணும் உத்தமிகளும், நாயகனுடைய ஜதையிலேயே, உடலை அக்னிபகவானுக்கு தியாகம் செய்வது, பூர்வ காலங்களில் வழக்கமாகஇருந்தது. சககமனம் செய்யாத உத்தம ஸ்திரீகளே கிடையாது. உடலிரண்டாயினும் உயிர் ஒன்றாக இருந்த தம்பதிகள், திரும்பவும், இணை பிரியாது சேரவேண்டும் என்று எண்ணியே, இவ்வழக்கத்தை அநேகர் அனுசரித்து வந்தார்கள். புது வழக்கங்களும், நவீன நாகரிகமும், முற்ற, பழைய வழக்கங்கள் ஒளித்துக்கொள்ள ஆரம்பித்தன. மனமொப்பி, தேகத்யாகம் செய்வது போய், சில பெண்டீர் கட்டாயத்திற்காகச் செய்ய ஆரம்பித்தார்கள். அந்த சமயத்தில் தான் ஆங்கிலேய அரசாங்கத்தாரும், அதை நிறுத்த ஆரம்பித்தார்கள்.

ஆங்கிலேய அரசாங்கத்தார், நிறுத்தினதின் பலன் வரவர நன்கு விளங்குகிறது. நாயகனின் பிரிவாற்றாமைக்கு அஞ்சி, ஸகமனம் செய்வது போய், விதவாவிவாகம் புறப்பட்டிருக்கிறது. எண்ணிமாளாத கைம்பெண்களின் கதி என்னவாகும், இப்புது வழக்கம் ஏற்படாவிடின் ? நாயகன் இறப்பதுதான் தாமதம், இரும்புப்பெட்டிச் சாவியை இடுப்பில் சொருகி விடுகிறார்கள். அழுவதும் கத்துவதும், அன்றொரு நாளே. மறுநாள் எஜமானியாகி விடுகிறார்கள். புதிதாய் வந்த அதிகாரத்தை செலுத்துவதில் கணவனிருந்த வாசனையே மறந்து விடுகிறது கணவன் இறப்பின், ஜீவனம்சத்துக்கு இருக்காதென்பதே, பெண்களைப் பெற்றவர்களின் குறியாகி விட்டது. பணமும், பூஸ்திதியும் இருப்பின், மாங்கல்ய வாழ்வைப்பற்றின கவலையே எடுத்துக் கொள்ளுவதில்லை.

சீதா, சாவித்திரி, மாத்ரி, கார்க்கேயி வாழ்ந்த பரதகண்டத்தில் இப்படி புராதன ஆசாரம் சீர்குலைந்து போனது நமது தௌர்ப் பாக்கியமென்றே எண்ண வேண்டும் ஆங்கிலேயர்கள், உயிர்நிலையற்ற வழக்கத்தை நிறுத்தினார்களே தவிர, அவர்கள் மீதில் குற்றமில்லை. திருஷ்டாந்தமாக, மேஜர் ஸ்லீமன், பின் வருமாறு எழுதுகிறார் : "நான் 1828 வருஷத்தில், அனுமரணத்தை நிறுத்தும்படி ஒரு அதிகாரியாய் நியமிக்கப்பட்டேன். அக்காலத்தில் சர்க்காரின் சட்டத்திற்கு விரோதமாக நானே, ஒரு பெண்ணிற்கு அனுமரணத்திற்காக அநுமதி கொடுக்க நேரிட்டது. உமத் ஸிங் உபாத்யா என்பவனின் மனைவி சுடுகாட்டிலேயே இருந்து கொண்டு, வீட்டிற்கு வரமாட்டேனென்று ஒரு பிடிவாதமாக, தன் மாமனார் மாமியார் மற்றுமுள்ள பந்துக்களுக்குச் சொல்லிவிட்டாள். அவளைச் சேர்ந்தவர்கள் என்னிடம் வந்து, அவளை நயத்தினாலோ பயத்தினாலோ வீட்டுக்கு வரும்படி தூண்டச் சொன்னார்கள். அவர்களுக் கிணங்கி, மறுநாட் காலை, சுடுகாட்டிற்குச்சென்று, அவளை வீடு திரும்பும்படி வேண்டியமட்டும் சொன்னேன். அவள் ஒரே பிடிவாதமாக மறுத்துவிட்டாள். அவள் பந்துக்களின் ஆஸ்தி, வீடு, முதலியவைகளை சர்க்கார் பிடிங்கிக்கொள்ளுவார்கள் என்று பயமுறுத்தினேன். அவள் "இவ்வுலகத்திற்கும் எனக்கும் சம்பந்தமில்லை, நேற்று என் நாயகன் இறந்ததும் என் உயிரும், ஆத்மாவும், என்னை விட்டுவிட்டன. அதோ ஆகாயத்தில் என் ஆத்மாவும் அவருடைய ஆத்மாவும், சேர்ந்தாப்போல் தெரிகின்றன பார். உனக்குத் தெரியாது. என் உடல்தானிருக்கிறது.வேணுமானால் ஒரு கத்தி

யினால் என் கையைக்கிழித்துப்பார். எனக்கு வலியென்பதே கிடையாது. அனுமரணத்திற்கு அனுமதி தந்தால் உமக்கு மிகவும் புண்ணியமுண்டு. இல்லாவிட்டால் இவ்விடத்திலேயே ஆகாரநித்திரையின்றி உயிரை விட்டு விடுகிறேன். பிறகு, தானே என்னை தகனம் செய்துவிடுவார்கள். உம்மை மிகவும் வேண்டிக்கொள்ளுவது இவ்வளவே. என் நாயகனின் சாம்பலுடன் என் சாம்பலைக்கலக்க அனுமதி கொடும். உமக்குக் கோடிபுண்ணியமுண்டு'' என்று சொல்லிமுடித்தாள். சர்க்கார் ஆக்கினைக்கு விரோதமாயினும், அவள் வேண்டுகோளுக் கிணங்கினவனாய், மறுநாட்காலையில், அனுமரண ஸம்ஸ்காரங்களுக்கு ஏற்பாடு செய்ய உத்தரவு கொடுத்தேன்.

"மறுநாட்காலையில் எல்லாம் சித்தமாயிற்று. நான் அவ்விடத்திற்கு, சில சிப்பாய்களுடன் போனேன். ஒருக்கால் அக்கினியின் தாபத்தை சகியாது, மனம் இளகிவிடுவாள் என்று நினைத்துக்கொண்டேன். குறித்த நாழிகைக்கு அவள் கணவனைத் தகனம் செய்த குழிலேயே, அக்கினிவளர்த்தார்கள். அவள் எனக்கு வந்தனமளித்துவிட்டு, வானத்தை நோக்கி, கைகூப்பினவளாய், புன்னகையுடன் அக்கினி பிரவேசம் செய்தாள். அன்று முழுவதும், என்னை அறியாமலே, அந்த உத்தமியைநினைத்த பொழுதெல்லாம் கண்களில் நீர் பெருகின."

இவ்வாறு ஆங்கிலேயர்களும் கண்டு வியக்கும்படியான உத்தமிகள் 18-வது நூற்றாண்டில்கூட இருந்தார்கள். வரவர, புது வழக்கங்கள் ஏற்பட ஏற்பட, ஆங்கிலேய நாகரீகம் அதிகரிக்க அதிகரிக்க, அனுமரணம் ஒழிந்ததே ஒழிய, ஆங்கிலேய ஆக்கினையால் மட்டும் அழியவில்லை.

இவ்வியாஸம் விதவைகளை அக்கினிக்கு பலிகொடுக்க வேண்டுமென்ற கருத்துடன் எழுதினதல்ல. சில கைம்பெண்கள் நல்வழக்கம் தவறாது, பிறருக்கு உபகாரம் செய்பவர்களாய், தேச அபிவிர்த்திக்கு, உடலைத் தியாகம் செய்பவர்களாய், இருக்கிறார்கள். அவ்வாறே ஏனையோரும் தம் காலத்தைக் கழிக்கவேண்டுமென்றே எழுதலானோம்.

—o—

பக்தியின் பெருமை

THE GREATNESS OF BAKTI

[ஸ்ரீமான் P.S. சுப்பிரமணிய ஐயரவர்கள், M.A.]

அருணகிரிநாதர் திருப்புகழ்

மாயா சொரூபமான இந்தவுலகில் மாந்தர்கள் படுந்துன்பங்கள் எண்ணிறந்தன. அவைகள் இன்பங்களுடன் கலந்தே நேரிடினும், அவ்வின்பங்கள் பின்னும் துன்பங்களையே விளைக்கின்றனவாதலால், அவ்வின்பங்களை இன்பங்களாகக் கருதுவது சரியன்று. இவ்வாறு சகிக்கவொண்ணாத எண்ணிறந்த துன்பங்களும் தங்கள்படையாக தம் பின்னே பல துன்பங்களைக் கொண்டுவரும் சில போலி சுகங்களும் நிறைந்துள்ள நிலையாத சமுத்திரத்தினின்று தப்பி, என்றும் அழியாததும் மெய்யாகவே நமது வீடுமான ஈசனது செவ்விய கழலிணைகளை யடைந்து, பேரானந்தத்தை யடைய விருப்பமில்லாப் பித்தரும் உலகினுள ரென்று எண்ண மனந்துணியவில்லை. ஆனால் மாந்தரெல்லோரும் இவ்வுலகத்தை விட்டகன்று ஈசனது பாதாரவிந்தங்களை யடைய வேண்டுமென்ற எண்ணமே சதாகாலமும் தமது மனத்திற் குடிகொண்டிருக்கச் செய்கிறார்கள் என்று சொல்லமுடியாது. ஏனெனில், மாயா சொரூபமான இவ்வுலகில் அது இயல்பன்று. ஆயின் இவ்வுலகிற் பிறக்கும் ஒவ்வொருவரும் தமது வாணாளில் ஏதோவொரு காலத்தில் எவ்வளவு முயன்றும் தம்மால் தடுக்க முடியாததும் தமது இதயத்தைப் பிளந்து உலகவாழ்க்கையில் வெறுப்பை யுண்டுபண்ணுவதும், தம்மினும் வலியில் மிக்க விதியை வெல்வ ஈசன் திருவருள் பெற்றோருக்கே சாத்தியமென்ற அறிவை விளைப்பதுமான ஓர் பெருந்துயரத்தை அனுபவிப்பா ரென்பது திண்ணம். அக்காலத்தில் இவ்வுலகத்தை விட்டகன்று ஈசனது பாதார விந்தங்களைச் சேர்ந்து அழிவில்லாப் பேரானந்தமடையவேண்டுமென்ற ஆசை அவர் மனத்தினுதிக்கு மென்பதற்கு ஐயமேயில்லை. அவ்வாறு உதிக்கும் ஆசையைப் பூர்த்தி செய்து கொள்ளுவதற்கவசியமான ஈசனது திருவருளைப் பெறுவதற்குரிய மார்க்கங்கள் பலவுள. அவைகளில் பக்திமார்க்கம் எக்காலத்திலும் எளிதென்றும் இக்கலி யுகத்தில் அம்மார்க்கத்தைத் தவிர

வேறு எந்த மார்க்கத்தையுங் கடைப்பிடித்தொழுகுவது சிற்சில பெரியோர்களைத் தவிர மற்றவர்களுக்குச் சாத்தியமல்லவென்றும், ஈசன் திருவருள் பெற்ற பல பெரியோர்கள் கூறியிருக்கிறார்கள். அவர்களே இறைவன் தங்களுக்கிட்டபணியைச் சிரமேற்கொண்டு உலகத்திலுள்ளார் உய்வதற்கென்றே அப்பக்தி மார்க்கத்தின் பெருமையை எடுத்துரைத் தருளியுமிருக்கிறார்கள். அவ்வாறு உரைக்குங்கால், உலகில் மாந்தர்படும் பல துயரங்களின் காரணங்களையும் சொல்லி யருளியிருக்கிறார்கள். அவ்வாறு உலகத்துக்குப் பேருதவி புரிந்துள்ளபெரியோர்களில் அருணகிரிநாத வள்ளல் ஒருவர்.

உலகங்களெல்லாவற்றிலும்ஞானங்குன்றிய காரணத்தினால் பாபங்கள் அதிகரித்துத் தலையெடுத்து நின்றதைக் கண்ணுற்ற முக்கணெந்தை ஞானதேசிகனை குமாரக் கடவுளை உலகத்துக்குதவி யருளினரென்பது அன்பர்களனைவருக்குந் தெரிந்த விஷயம். அவ்வாறு உலகத்துக்கு ஞானத்தைப் புகட்டுவதற்காகவே திருவவதாரஞ் செய்தருளிய அக்குமாரக் கடவுளது ஆக்கினைப்படி அவரது திருவருள் வலியால் அவரால் தடுத்தாட்கொள்ளப்பட்ட அருணகிரிநாதப் பெருமான், உலகம் உய்யும் பொருட்டு இசைத்தமிழால் அக்கடவுளது திருப்புகழை எடுத்துரைத் தருளி, பக்தி மார்க்கத்தைப் போதித்து ஞானத்தைப் புகட்டி யிருக்கிறார். அப்பாமாலைகள் பல நூல்களாகத் தொகுக்கப்பட் டிருக்கின்றன. அந்நூல்களிற் பாடற்றொகையில் மிகப்பெரியது 'திருப்புகழ்' என்ற நூல்தான். அந்நூல் ஆதியில் பதினாறுயிரம் பாடல்கள் அடங்கியது. பல காரணங்களினால் இவைகள் சிதறி மறைந்தன. இருபது வருஷங்களுக்கு முன், தென்னாட்டில் ஒருவருக்காவது நூறு அல்லது இருநூறு பாடல்களுக்குமேல் தெரியாது. இவ்வாறிருக்கையில், குமாரக் கடவுளது மெய்யடியார்களிற் சிறந்தவரான காலஞ்சென்ற ஸ்ரீமான் வ. த. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் ஆண்டவன் திருவருளால் உலக மேம்பாட்டுக்கென்றே அருணகிரிநாத சுவாமிகள் பாடியருளிய பாடல்கள் மறைந்து கிடந்ததைக் கண்டு வருந்தி, மிகுந்த பொருள் செலவழித்து பலரிடமிருந்து அப்பாடல்களடங்கிய ஏட்டுப்பிரதிகளைச் சம்பாதித்து தமது நிகரற்ற விடா முயற்சியால் 1231 பாடல்களைச் சேர்த்து, ஏட்டுப் பிரதிகளிற் புகுந்திருந்த பல பிழைகளைத் திருத்தி அச்சிட்டு, தமிழ் நாட்டவருக்கு மறக்கத்தகாத பேருதவி புரிந்தார்.

இனி, அந்நூலைப் படிப்பதனால் மானிடர் பெறும் பயன் யாதெனக் கூறுவோம்.

ஞானம் பெறலாம் நலம்பெறலாம் எந்நாளும்
வானம் அரசாள் வரம்பெறலாம்—மோனவீ
டேறலாம் யானைக்கிளையோன் திருப்புகழைக்
கூறினோர்க் காமே மிக்கூறு.

ஆறுமுகந் தோன்றும் அழகியவேல் தோன்றுமவன்
ஏறுமயில் தோன்று மெழில்தோன்றும்—சீறிவரு
சூரன் முடியைத் துணித்தோன் திருப்புகழைப்
பாரில் வழுத்தினோர் பால்.

இத்தனை பயன்கள்தாம் சிறப்புப்பாயிரத்திற் கூறப்பட்டுள்ளன. ஆயின், கலியுகத்தில் பிரத்தியக்ஷ தெய்வமான குமாரக்கடவுளது திருப்புகழை அன்புடன் ஓதுவாருக்கு அவ்வாறு ஓதுவதினா லுண்டாகும் பயன்கள் அக்கடவுளது கல்யாண குணங்களைப் போலவே எண்ணிறந்தன. இவ்வுண்மையை வற்புறுத்துமாறே, அருணகிரிநாத சுவாமிகள்,

"வேண்டியபோதடியர் வேண்டிய போகமது
வேண்ட வெறாதுதவு பெருமாளே"

என்று திருவாய்மலர்ந் தருளினர். அத்தகைய வள்ளலை யாவரும் வழிபட்டு, அவரது அருளைப்பெற்று, இகபர சுகங்களை யடைந்து அனுபவித்து சுகவாரிதியிற் சேர வேண்டுமென அவ்வாளவந்தானுடைய திருவருளைப் பிரார்த்திக்கிறேன்.

இனி, அருணகிரிநாதசுவாமிகள் இறைவன் ஆணைப்படி பாடியருளிய பாடல்களைக் கவனிப்போம்.

வாட்டியெனைச் சூழ்ந்தவினை யாசையமு வாசையனை
மூட்டியுலைக் காய்ச்சமழு வாமெனவி காசமொடு [ந்
மாட்டியெனைப் பாய்ந்துகட வோடமொ டாடிவிடு
—விஞ்சையாலே

வாய்த்தமலர்ச் சாந்துபுழு காலபனி நீர்களொடு
காற்றுவரத் தாங்குவன மார்பிலணி யாரமொடு
வாய்க்குமெனப் பூண்டழக தாகபவி சோடுமெகிழ்
—வன்பு கூரத்

நீட்டுவிழிக் காந்திமட வார்களுட னூடிவலை
பூட்டிவிடப் போந்துபிணி யோடுவலி வாதமெனை
சேர்த்துவிடப் பேர்ந்துவினை மூடியடி யேனுமுனை
—தன்பிலாமல்

தேட்டமுரத் தேர்ந்துமயிர் தாமெனவே பேகிநம
னேட்டிவிடக் காய்ந்துவரி வேதனைடை யாளமருள்
சிட்டுவரக் காண்டுநலி காலனணுகா நினருள்

—அன்பு தாராய்;

[முற்பிறப்புகளில் நான் செய்த நல்வினை தீவினைகளாகிய இரு வினைகளும் என்னை வளைத்து நின்று ஆசைகளில் முக்கியமானவைகளாகக் கூறப்படும் மண்ணாசை பெண்ணாசை பொன்னாசை ஆகிய மூவாசைகளான மூன்று அக்கினிகளை மூட்டி உலையிலிட்ட மழுவை யொத்த ஜோதியை யடையும்படி அவைகளை வளர்த்து, அவைகளினூடே என்னைப் பாய்ச்சி வாட்டி, என்னை நல்வழியிற் செல்லவொட்டக் கூடாது என்ற தீர்க்க வைரத்துடன் தமக்கு இஷ்டமான வழியில் என்னைச்செலுத்தும்மாய வித்தையின் பலனாக, நான் புஷ்பங்களையும், கஸ்தூரி, புனுகு முதலிய வாசனைகளையும், தேகத்தின்மீது காற்று வீசுவதை தடுக்கக் கூடிய அநேக இரத்தின மாலைகளையும் அவைகளைப் பூணுதல் எனக்கே தகுதியென எண்ணிப் பூண்டு, எனது அழகையும் அலங்காரத்தையும் கண்டு மனமகிழ்ச்சிகொண்டு, ஸ்திரீகளிடத்தில் காதல்கொண்டு, மைதீட்டியகண்களையும் காந்தி பொருந்திய தேகத்தையுமுடைய பெண்களுடன் விளையாடி, அவர்கள் வீசும் மோக வலையிற் சிக்கி, பல வியாதிகளினாற் பீடிக்கப்பட்டு, பிறகு அவர்களைவிட்டுப் பிரிந்து, உன தன்பில்லையேயென்று வருந்தி, அதை யடையும் நெறி யாதென ஆராய்ந்து, ஓர் நெறியைக் கண்டு இதுவே அந்நெறியெனத் தீர்மானித்து, அந்நெறியைக் கடைப்பிடித் தொழுகிக்கொண்டு வருகையில், நமன் வெகுண்டு அனுப்பியதும் பிரமன் எனது விதியை எழுதி யருளியதுமான சீட்டைக்கண்டு, காலன் வெருண்டு எனது உயிரைக் கவர்ந்துபோக என்னை அணுகுவான். அவன் அணுகாவண்ணம் நினது அருளையும் அன்பையும் எனக்கு நீ தந்தருளவேண்டும்.]

இதனால் உலகத்தில் மானிடர் படுந்துன்பங்களுக்கு அவர்கள் முற்பிறப்பிற் செய்த இரு வினைகளே காரணமென்று தெரியவருகிறது. அவைகளே மனிதரை ஆசையாகிய சாகரத்தில் விழ்த்துகின்றன. அவைகளே மாயையின் உதவியினால் மனிதர் மதியை மயக்கி அவர்களை விஷய சுகங்களிற் பிரவேசிக்கச் செய்கின்றன. அவைகளே ஓயாது மனிதரைப் பிறவிக் கடலில் வீழ்த்துகின்றன. "இருவினை யிடையிட்ட கொடியேனடியேன்" என்றும் சுவாமிகள் ஓரிடத்தில் கூறியிருக்கிறார். மாறிமாறி நல்வினை தீவினைகளைச் செய்துகொண்டு எண்ணிறந்த பிறவிகளுக்கு வழிதேடிக்கொள்ளுகிறார்கள் உலகினுள்ளோர். இவ்விரு வினைகள் வேரோடு அற்றாலொழிய ஜனன மரணங்களுக்கு முடிவு ஏற்படாது. ஆதலால், வினைகளைத் தீர்த்துக்கொள்ளல் நமது நோக்கங்களிலொன்றாக இருக்கவேண்டும்.

இப்பாடலில் ஆசைகளில் முக்கியமானவைகள் மூவாசைகளெனக் கூறி, பிறகு பெண்ணாசையைப்பற்றியே விசேஷமாகச் சொல்லியிருக்கிறார். மூவாசைகளில் பெண்ணாசையே மற்றவிரண்டு ஆசைகளுக்குங் காரணமாக சுவாமிகள் கருதுகிறார்கள்.

"தகர நறுமலர் பொதுளிய குழலியர்
கலக கெருவித விழிவலை படவிதி
தலையிலெழுதிய மனைவயி னுறவிடு—வதனாலே
தனயர் அனைதமர் மனைவியர் சினகிதர்
சுரபி விரவிய வகையென நினைவுறு
தவன சலதியின் முழுகிய விடர்படு துயர்தீர"

என்றார். நீ பெண்ணாசையிற் படக்கடவாய் என்று மனிதன் தலையில் எழுதியதனால்தான், குடும்பம், சிநேகம், பொருள் இவைகளில் அவனுக்கு ஆசை உண்டாயிற்றென அபிப்பிராயப்படுகிறார்.

அதுவுமன்றி, எவ்வாசையை அகற்றினாலும் அகற்றலாம். பெண்ணாசையை விடுவது யார்க்கும் அசாத்தியம்.

" பழுதற வோதிக்கடந்து பகைவினை தீரத்துறந்து
பலபல யோகத்திருந்து—மதராஜன்
பரியள பாணத்தயர்ந்து பனைமடலூர்தற் கிசைந்து
பரிதவி யாமெத்தநொந்து—மயல்கூர
அழுதழு தாசைப்படுங் கணபிரிய மாதர்க் கிரங்கி
யவ விழி பாணத்துநெஞ்ச—மறைபோய்நின்
றழிவது நான்முற்பயந்த விதிவச மோமற்றை யுன்ற
னருள்வச மோஇப்ரமந்தெ—ரிகிலேனே ;"

[கற்கவேண்டிய யாவற்றையும் கசடறக்கற்று, பகை வினை இவைகளை முற்றுந்துறந்து பல விதமான யோகப் பயிற்சிகளைச் செய்தபின்னும் மன்மத பாணத்தினால் வாடிபெண்களது பார்வையிற் சொக்கி ஆசையினாற் கலங்கி நான்

கொக்கென்று நினைத்தாயோ: கொங்கணு ?

அழிவதற்குக் காரணம் என் விதியோ உனதருளோ?]

கருவிலுரு வாகிவந்து வயதளவி லேவளர்ந்து
கலைகள்பல வேதெரிந்து—மதனாலே

கரியகுழல் மாதர் தங்கள் அடிசுவடு மார்புதைந்து
கவலைபெரி தாகிநொந்து—மிகவாடி;

'கலவியி னலமற்ப சுகமா கினுமா [தே;"
அநுபவ மிதுசற்றும் விடவோ இயலா—தியலா

இவைகளினால் பெண்ணாசையை விலக்குவது சகல கலைகளும் வல்லவர்களுக்கும் பெரிய யோகிகளுக்கும் துறவிகளுக்குங்கூட மிகவும் அரிதென எண்ணவேண்டி யிருக்கிறது.

உலகத்தில் மனிதர்களுக்கென்று கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட சுகங்களில் ஏன் மனிதர் ஆசை வைக்கக்கூடாது என்ற கேள்வி பிறக்கலாம். அதற்கு சுவாமிகள் தெளிவாக பதிலளிக்கிறார்.

" பரகதி பெறுவதொ ழிந்திட ர்வான
பரிசன தெரிசன கந்த வோசைகள்
பலநல விதமுள துன்ப மாகி—மயங்கிடாதே

பரிபுர பதமுள வஞ்ச மாதர்கள்
பலபல விதமுள துன்ப சாகர
படுகுழி யிடைவிழு பஞ்ச பாதக—னென்றுதீர்வேன்;

[நான் பரகதி பெறும் மார்க்கம் அற்றுப் போகும்படி உண்ணல், பரிசித்தல், தரிசித்தல், முகத்தல், கேட்டல் ஆகிய சுகங்கள் போன்ற துன்பங்களில் மயங்கி இச்சை வைத்து, தண்டைகளை யணிந்த பாதங்களை யுடையராய் பேரின்பத்தைத் தேடும் நெறியினின்று என்னை தங்கள் உருவத்தினாலும் மொழிகளாலும் நடையுடை பாவனைகளாலும் வஞ்சித்து இழுத்து, தங்கள் அடிமையாக்கிக் கொள்ளும் மாதர்களது பற்பல விதமான துன்ப சாகரமான பொய்க் குழியில் விழுந்து பஞ்ச பாதகங்களைப் புரிகிறேன். என்று நான் அந்நெறி விட்டு அகலுவது?]

ஆகையினால் விஷய சுகங்கள் மனிதனைப் பரகதி பெறும் மார்க்கத்தினின்று மயக்கி யிழுத்துக்கொண்டு போதலாற்றான் என்று ஏற்படுகிறது. அச்சுகங்களை மனிதன் வெறுத்துவிட வேண்டுவது அவசியமாகிறது. (தொடரும்)

பிரகிருதி சாஸ்திரம்

PHYSICAL SCIENCE.

(ஸ்ரீமான் ஏ. வரதாசாரியாரவர்கள்
பி. ஏ., எல். டி.)

மணி உருவமான சுழிபுடகம் என்னும் கருவி

இக்கருவி, ஆழ்ந்ததண்ணீரில் முக்குளித்து பவளம் எடுப்பதற்கோ, கட்டட வேலை செய்வதற்கோ சாதகமானது. நீண்ட சங்கிலிகளால் இதை ஜலத்தின்கீழ் வெகு தூரம் அமிழ்த்தினாலும், நீரின் மேற்புறமிருந்து வரும் குழாய் மூலமாய் இதற்குள்ளடைக்கப்படும் காற்றின் அபேத்யத்துவம் என்னும் குணத்தால் ஜலமானது இவ்வியந்திரத்தின் உட்புறத்தில் மிகவும் கொஞ்ச உயரத்திற்கு மேல் எழும்பாமலிருக்கும்படி தடுக்கப்படும். குளிகாரர்கள் ஆழ்ந்த தண்ணீரில் மூழ்கி வேலைசெய்து, வேண்டும்போது, இதற்குள் வந்து சுவாஸத்திற்கு வேண்டிய காற்றை உட்கொள்ளுவார்கள்.




Fig. 1.

அசேஷ்டனம் (தொடர்ச்சி)

பந்தய ஓட்டத்தில், மனிதரோ, குதிரையோ ஓடி, பந்தயம் கெலிப்பதற்குரிய ஸ்தானம் அடைந்தும், உடனே நிற்காமல், கொஞ்ச தூரம் ஓடி, மெல்ல மெல்ல நிற்பதை பலர் பார்த்திருக்கலாம். பாய்ச்சல் பந்தயம் ஓடுகிறவன் கொஞ்சதூரம் ஓடிவந்து தாண்ட வேண்டிய இடத்தை யடைந்ததும், கிளம்பிப் பாய்வதும் அநுபவசித்தமே.

கொடி சுற்றிப் பெண் பிறந்தால் கோத்திரத்திற்கு ஆகாது.

சுமார் ஒரு கஜம் நீளம், அரை அங்குலம் கனமுள்ள ஒரு மரக்கோலின் நுனிகளை இரண்டு கண்ணாடி டம்ளர்கள்மேல் வைத்து கனமான தடியால் அம்மரக்கோலின் மத்திய பாகத்தில் கெட்டியாய் அடித்தால், மரக்கோல் ஒடியுமே தவிர, கண்ணாடி டம்ளர்களுக்கு யாதொரு சேதமும் ஏற்படாது.

ஒரு கயிற்றின் நுனியில், அது தாங்கக் கூடிய, கல் அல்லது இரும்புக் குண்டை பாரமாய்க் கட்டித் தொங்கவிட்டு, அதன் கீழ்புரத்தில் அவ்வித கயிற்றுத் துண்டைக் கட்டி திடீரென்று இழுத்தால் கீழுள்ள கயிறு தெறிபடும். கீழ் கயிற்றையே ஒரேவிதமாய் மெல்ல இழுத்தால், மேற்புறமுள்ள கயிறு அறுந்து பாரம் விழுவதைக் காணலாம்.

நூலின் ஓர் நுனியில் ஒரு கல்லைக் கட்டி மற்றொரு நுனியை கையில் பிடித்துக் கொண்டு சுழற்றினால் அக்கல்லானது சக்கிர வடிவமாய்ச் சுழலும். அப்படி சுற்றும்பொழுது, கையிலுள்ள கயிற்று நுனியை விட்டு விட்டால், தக்ஷணமே அக்கல்லானது அச்சமயத்தில் சலித்துக்கொண்டிருந்த திசையின் நேர்கோடாய் விரைந்து ஓடுமேயொழிய, முன்னிருந்த வட்டமான சலனம் அதற்கு ஏற்படாது.

ஓர் மெழுகு வத்தியை இரு கைகளிலும் பிடித்துக்கொண்டு, மத்தியில் விரலை வைத்து, நுனிகளைக் கொஞ்சம் இழுத்தாற்போல் வேத விரைவாய் வளைத்து ஒடித்தால், அதிலுள்ள நூல்வத்தியும் அறுபட்டு, மெழுகு வத்தி இரண்டு துண்டாகும். இக்காரியத்தையே மெதுவாயும் அஜாக்கிரதையாயும செய்தால், மெழுகுவத்தி சரியாய் ஒடி படாமலிருப்பதும், ஒரு சமயம் அதிலுள்ள வர்த்தி ஒரு பக்கத் துண்டிலிருந்து உருவி வெளி வருவதும் பரீக்ஷணத்தால் அனுபவ சித்தமாகும்.

ஈரமான உடுப்புகளை உலர்த்துவதற்கும், சர்பத்து, சர்க்கரைப்பாகு இவைகளில் ஏற்படும் சர்க்கரையின் பளிங்குத் துண்டுகளை (Crystals) இவற்றிலிருந்து விலக்குவதற்கும் நவீனமாய் ஏற்பட்டுள்ள கருவிகளின் செயலும், அசேஷ்டனம் என்னும் குணத்தை ஆதாரமாயுள்ளதே. பக்கங்களில் துவாரங்கள் நிறைந்துள்ளதும், ஸ்தம்ப வடிவமுமான (cylindrical) ஓர் பெரிய பாத்திரத்தில நனைந்த உடுப்புக்களையோ, அடியில சர்க்கரைப் பளிங்கு படிந்துள்ள சர்பத்தையோ வைத்து அப்பாத்திரத்தை வேத விரைவாய்ச் சுழற்றினால், ஜலம் அல்லது சர்பத்தானது மிகவும் சன்னமான திவலை ரூபமாய்ப் பிரிந்து, துவாரங்கள் வழியாய் வெளிவந்துவிடும். சலிக்கும் வஸ்துவுக்கு, இடையூறு ஏற்பட்டாலொழிய, சலன திசையின் நேர்கோடாய்ப் போவதே இயல்பு என்று அறியலாம்.

இதையே அடியிற் கண்ட பிரத்தியக்ஷ பரீக்ஷணத்தால் நன்குணரலாம். Fig. 2.


ஓர் சிறு கிச்சிலி அல்லது கமலாப்பழத்தில் நெருப்புக்குச்சி போன்ற ஒரு சிறு குச்சியை அதன் இரு நுனிகளும் பழத்துக்கு வெளியில் சற்று நீண்டு நிற்கும்படி நுழைத்து, அக்குச்சி நுனி ஒன்றில், ஒரு மெல்லிய கயிற்று முனையைக் கட்டவேணும்.

இக்கயிற்றின் மற்றொரு நுனியை ஒரு ஊசிக்காதில் நுழைத்து, குளைச்சு முடிபோட்டு அவ்வூசியை முனைப்புறமாய் ஒரு நெட்டித் துண்டில் (Cork) கெட்டியாய்க் குத்தித் சொருகவேணும். மேற்கண்ட நெட்டித்துண்டை மூன்று முள்கரண்டிகள் (forks) அல்லது பேனாக்கத்திகளில் சொருகி, அது விழாதபடி நிறுத்தி, முள்கரண்டிகளை ஒரு தாலத்தின் மேல் (saucer) நிற்கவைக்கவும. இந்த தாலத்தில் மணலை இரண்டு குவியலாய் பரப்பி, மேற்கண்ட கயிற்றின் நுனியிலிருந்து தொங்கும் பழத்தை ஆட்டிவிட்டால், அது கெடியாரத்தில் தொங்கக்கட்டின, பெண்டுலம் என்ற பாரம்போல், அங்குமிங்கும் அசையும். அப்பழத்தின் கீழ்ப்புரத்தில் நீண்டிருக்கும் குச்சி நுனியானது மேற்சொன்ன மணல் குவியலின்மேல் உழவு சால்போல் கோடிடும்படி ஏற்படுத்தவேணும். இவ்விதம் பழம் அசைந்து கொண்டிருக்கும்போது, மேற்குறித்த தாலத்தை, அதின் மேலுள்ள ஏற்பாடு அசைவுபடாமலிருக்கும்படி, வெகு ஜாக்கிரதையாய் சுழலும்படி செய்தால், பழமானது தான் அசையும் திக்கு வேறுபடாமல் ஒரே திசையாய் ஆடிக்கொண்டிருக்கும். எவ்வஸ்துவும் ஏதாவது திசையில் சலித்தால், அதன்மேல் ஏதாவது விசை தாக்கினாலொழிய, இயல்பான அசேஷ்டனமென்னும் தர்மத்தால், அத்திசையிலே அசைந்துகோண்டிருக்கும் என்பதற்கு இதுவே ஓர் நிதர்சனம்.

கோமக்கிருன் பழனியாண்டி, தின்கிருன் சுப்பனாண்டி

ஓர் நீண்ட கயிற்றின் நுனியில் ஒரு கனமான பாரத்தைக் கட்டி பெண்டுலம்போல் (Pendulum) அசையச் செய்தால், அது சலிக்கும் திசை ஒரே சமக்ஷேத்திரத்தில் (same plane) இருக்கும். ஆனால், பூமியுடன் நாமும் ஸதா சுழன்றுகொண்டிருப்பதால், மேற்சொன்ன ஸமக்ஷேத்திரம் பேதித்துக்கொண்டிருப்பதாக நமக்குத் தோன்றுகிறது. இவ்

Fig. 2.



விதபேதம் ஒருநாள், ஒருமணி அல்லது வேறு அளவு நேரத்தில், நாம் பூமியில் வசிக்கும் ஸ்தலத்தை உத்தேசித்து ஏற்றக்குறைச்சலாயிருக்கும். சூரியன் நக்ஷத்திரங்கள்முதலியன ஸ்திரமாய் நிற்கின்றனவென்றும், பூமி தன்னைத் தானே சுற்றும்படி அசைவதால், சூரியன் முதலியன ஆகாயத்தில் அசைவதாய்த் தோற்றுவதாகப் பிரகிருதிசாஸ்திரவித்துவான்கள் சில நூற்றாண்டுகளுக்கு முன்பாகவே, பல நியாயங்களைக்கொண்டு ஊகித்துக் கண்டுபிடித்திருந்தபோதிலும், பூமி சுழல்வதை ருஜுப்படுத்தக்கூடிய பரீக்ஷணத்தை முதன்முதலில் பாரிஸ் நகரத்தில் பிரஞ்சுதேச வித்வான் (Foucault) ஒருவர் சுமார் 164 அடி நீளமுள்ள கயிற்றில் கட்டப்பட்ட பெண்டுலத்தால் செய்து காண்பித்ததாகத் தெரியவருகிறது.

வஸந்த மந்திரம்

ஏழாம் அத்தியாயம்

அக்கினிப் பிரவேசமும் - சேனை மாய்தலும்

அஹோராத்ரத்தில் கோயிலின்முன்னே ஒரு பெரிய குண்டத்தில் நெருப்பு எரிந்துகொண்டிருக்கின்றது. ஆண்பாலரும், பெண்பாலரும் கோயிலுக்கு வருகின்றனர். பூஜை செய்து துளஸி வாங்கிக் கொண்டனர் எல்லோரும். உடனே பெண்டிரெல்லாம் மாலையணிந்து புதிய ஆடைகளுடனே தலைமுதல் கால்வரையில் ஆபரணங்களை அணிந்தவராய் அக்கினியை மும்முறை வலம் வந்து அக்கினி பகவானிடம்அடைக்கலம் புகுந்தனர். மற்றும் சில ஸ்திரீகள் வீரர்களைப்போல் ஆடையுடுத்து வில்லும் வாளுமேந்தித் தத்தம் புருஷனுடன் சண்டைக்குப் புறப்பட்டனர். தேவனுடைய பிரசாதமாகிய திருத்துழாயை முடியிற் சூடி, ஸாலிக்கிராமங்களைக் கழுத்தில் கட்டிக்கொண்டு, மஞ்சள் வஸ்திரம் உடுத்து, தம் ஜனங்களை ஆலிங்கனம் செய்துகொண்டு யுத்தத்துக்குப் புறப்பட்டனர். மணக்கோலத்துடன் மாப்பிள்ளைகள் புறப்படுவதுபோல் எல்லா வாயில்களையும் திறந்துகொண்டு ஒருங்கே வெளிக்கிளம்பி வரிசை வரிசையாய் நின்றனர் இரஜபுத்திர வீரர்.

நின்ற இரஜபுத்திர வீரர்களை பிரதாபசிங்கராஜன் பார்த்து "ஐயன்மீர்! உமது தேசாபிமானத்துக்காகவும், மதாபிமானத்துக்காகவும் இன்று கூடியமட்டில் கடுமையாய்ச் சண்டை செய்துஉயிர்விடப்போகிறீர்கள். இன்றையயுத்தத்தின் முடிவு எப்படியாகுமென்று யாரால் சொல்லக்கூடும்? ஒருக்கால் நாமே ஜயமடையலாம். நானும்உயிரோடிருக்கக்கூடும். அப்பொழுது மறுபடி இங்கு சேர்ந்து நமது தேவாதிதேவனான கைலாச நாதனைத் தொழுவோம். எனது துரதிருஷ்டவசத்தால் யான் இந்த யுத்த பூமியில் படுவேனாயின் இதோ என் வலப்பக்கத்தில் நிற்கும் இந்த ராமஸிங்கருக்கு எனது நாட்டைக் கொடுங்கள். இவன் எனது வம்சத்தைச் சேர்ந்தவன் என்பது உங்களுக்கே தெரியும். என் தலைக்குமேல் பிடித்திருக்கும் இக்குடையை எனக்குப்பின் இராமசிங்கருக்குப் பிடியுங்கள். என்னிடம் எம்மாதிரி பயபக்தியுடன் நடந்து வந்தீர்களோ,

அப்படியே அவ்விடத்திலும் நடந்து கொள்ளுங்கள். இனி யுத்தத்துக்கு முன் செல்லுங்கள். ஈசனருளால் இரஜபுத்திரர் ஜயமடைவார்கள்" என "ஹர! ஹர மஹாதேவ!" என்று கூப்பிட்டுக்கொண்டு முன் சென்றனர் எல்லோரும் ஒருமிக்க.

சென்ற வீரர்களுக்குள் தாரதம்யமே கிடையாது. எல்லோருக்கும் ஒரே மாதிரி உடைதான். அரசனுக்கும் அப்படியே மேலே பிடித்திருக்கும் குடை தவிர, வேறு கிரீடமென்றும், மாலையென்றும், ஆபரணங்களென்றும், இராஜ சின்னங்களே கிடையாது. பிரபுக்களுக்கும் அவ்வாறே. இரஜபுத்திர குலத்தில் பெரியார் யார்? சிறியார் யார்? காலில் மிதியடியின்றி தலையில் ஈசுவரப் பிரஸாதமான பூக்களைத்தவிர வேறு முடியாவது மாலையாவது இல்லாமல் ஆண் வீரரும் பெண் வீரரும் புறப்பட்டனர்.

அவர்களின் நோக்கமெல்லாம் எதிரியின் மத்திய பாகத்தை எதிர்க்கவேண்டும் என்பது தான். நட்டநடுவில் (தாமரைமத்தியில் வண்டு போன்று) ஆமத் பாக்ஷாவின் யானை சக்கரவர்த்தியைத் தாங்கி நின்றது. அவனுக்குப் பின்னே மஹமதியருக்கு உரிய பிறை வடிவக் கொடியும், பாக்ஷவின் சொந்தக் கொடியான கரடிக்கொடியும் பறந்தன. இரண்டிலும் கொரானிலிருந்து பல வாக்கியங்கள் எழுதப்பட்டிருந்தன. அவவிடத்தை முதலில் எதிர்த்து, கொடிகளைப் பிடுங்கிக்கொண்டு சக்கரவர்த்தியையும் எதிர்க்கவேண்டுமென்று இரஜபுத்திரருக்கு எண்ணம். ஏகோபித்து அனைவரும் ஒரே எண்ணத்துடன் முன்வந்து துருக்க சேனைக்கு முன்னிருக்கும் தடைச்சுவர்களையும் முட்புதர்களையும் ஒரு நொடியில் பிடுங்கி எறிந்தனர். அங்கே காவலிருந்த வீரர் பயந்து புறங்கொடுத்தனர்.

புறங்கொடுத்த வீரரைப் பார்த்துப் பின்னின்ற சேனைகள் சற்றே தயங்கின. இதற்குள் கூட்டம் கூட்டமாய் இரஜபுத்திரர் முன் வரவே, சேனைமுழுவதும் கலங்கிப்போயிற்று. என்ன செய்வதென்று தெரியாமல் சிலர் கூக்குரலிட்டார்கள். சிலர் ஆயுதங்களை எறிந்துவிட்டுப் பிரமித்துப்போய் நின்றுவிட்டனர். சிலர் எதிர்த்தனர் தைரியமாய். சிலர் புறங்கொடுத்து ஓடத் தொடங்கினர்.

இதுகாறும் இரஜபுத்திரர் இங்ஙனம் துணிந்து வரவில்லை. இதுவரையில் 4, 5 தடவை சண்டை நடந்ததென்றாலும், ஒவ்வொரு சமயத்திலும் தங்களிடத்திலிருந்து சண்டைசெய்வார்களேயன்றி, முன்வந்து எதிர்க்கவில்லை. ஒருதடவை தடைச்சுவரின்மேல் நின்று, அம்பு மாரி பொழிந்தனர். அப்பொழுது கூட அவர்கள் எதிரியை ஜயிக்கமுடியாதென்று கண்டு ஒழுங்கு கலையாமல் மறுபடி கோட்டையினுட் சென்றனர். இப்பொழுதோ தடைச்சுவர்களும், படல்களும், செடி, புதர்களும், பஞ்சாய்ப் பறந்தன. எங்கே பார்த்தாலும் இரஜபுத்திரர்—இரஜபுத்திரரேம்! "ஹர! ஹர! மஹா தேவ!" என்ற சப்தமின்றி வேறு குரலே கேட்கவில்லை அம்புகளாலும் வேலாலும் குத்துண்டு குதிரைகள் தொப்! தொப் என்று கீழே விழுந்தன. மனிதர்கள் பர்வதம்போல் சாய்ந்தனர்.

இவ்வலங்கோலத்தைக் கண்ட சுல்தான் ஆமத் பாக்ஷாவுக்கும் சற்றுநேரம் ஒன்றும் தோன்றவில்லை. சுத்தவீரனானபடியால் பயத்தை ஒழித்து, எதிரிகளின் தொந்தரவைக் கவனியாமல் சிங்கம் கர்ஜிப்பதுபோல் கம்பீரமான வலுத்த குரலுடன் தன் சேனைத்தலைவர்களை ஒருங்கே கூட்ட முயன்றான். இறைவன் குரலைக்கேட்டு ஓடும் சேனை கொஞ்சம் நிதானித்தது. இதுதான் நல்ல சமயம் என்று மறுபடி உற்சாகப்படுத்தினான். தீன் தீன் என்று முழு பலத்துடன் கதறினான். முகம் சிவிர்த்தது. தலையை அசைத்து, எதிர்த்து வரும் மனிதர்களைக் கொல்லவரும் காளை போல், மஹமதிய வீரர்கள் பயத்தைக் கைவிட்டு ஆயுதங்களைக் கைக்கொண்டு தீன்! தீன்! என்று சப்தம் செய்துகொண்டு தமது சக்கரவர்த்தியை நோக்கிப்பார்த்தனர். சுல்தானும் முன்னே செல்லும்படி உத்தரவுசெய்தான்.

செய்தும் பயன்படவில்லை. ஆமத்பாக்ஷாவின் அம்பராவில் குத்திக்கொண்ட அம்புகளுக்கும் வேலாயுதங்களுக்கும் கணக்கேயில்லை. தேகமெல்லாம் காயப்பட்டும், அந்த யானை சற்றேனும் அசையவில்லை. அவனுடைய மெய்க்காப்பாளர்கள் ஒரு அம்பாவது தமது நாயகன்மேல் படவொட்டாமல் தடுத்தனர். தங்கள் எண்ணப்படி சுல்தானைக் கொல்ல முடியாதபோது, முன்னிலும் பதின்மடங்கு

கோபத்தோடு எதிர்த்துக் குத்தினர். நெருக்கிய இரஜபுத்திரர்களைத் துண்டு துண்டாய் நறுக்கினர் துருக்கவீரர். எத்துணை நேரம் தான் அம்மெய்க் காப்பாளர் கணக்கற்ற இரஜபுத்திரர்களை எதிர்க்கமுடியும்? ஒருவர்பின் ஒருவராய் மடிந்தனர். ஒரு சிறுவன் மட்டும், தலை பிளக்கப்பட்டு "மங்களபாய் மங்களபாய்! இனியுன்னைக் காண்பேனே!" என்று ஓலமிட்டுக்கொண்டு கீழே விழுந்து மூர்ச்சையடைந்தான்.

தன் திறத்தார் செய்வதெல்லாம் பயனற்றுப் போவதையும், ஒருவர்பின் ஒருவராய் இரஜபுத்திரர் முன்னே துண்டிக்கப்படுவதையும், மஹமதிய சேனை பயத்தைவிட்டு முன்னே செல்ல வாரம்பிப்பதையும் தூரத்தில் நின்று பார்த்திருந்த ராமசிங்கன் ஓரே ஓட்டமாய் ஓடிவந்து, தன்மேல் பாயும் அம்புகளைத் தட்டியெறிந்து, வேலாயுதங்களைக் கேடயத்தால் தடுத்துக்கொண்டு ஆமத்பாக்ஷா நிற்குமிடத்துக்கே சென்று, இப்புறமும் அப்புறமும் இருப்பவரை வாளாயுதத்தால் வெட்டித் தள்ளி யானையின் அண்டையில்வந்து அம்பாரி கட்டியிருக்கும் கயிற்றை யறுத்துவிட்டான். அம்பாரி புழுதியில் புரண்டது. ஆமத்பாக்ஷா தலைகீழாய் மண்ணில் விழுந்தான். மஹமதியர் "ஓஹோ ஓஹோ" என்று கூவினர். விழுந்த சுல்தானை அவ்விடத்திலேயே கொன்றுவிட, எண்ணில்லா இரஜபுத்திரவீரர் நெருங்கினர்.

ஆமத்பாக்ஷா, பக்கத்தில்கிடந்த ஒரு நீண்ட வேலாயுதத்தை எடுத்துக்கொண்டு இமைப்பொழுதில் புழுதியை விட்டெழுந்து தன்னைக் காத்துக்கொண்டான். ஆயுதத்தை உபயோகிக்கும் திறமையினாலும், புஜபலத்தினாலும், பின்வாங்கா மனோதிடத்தினாலும், ஒரு மனிதனையாவது தன்னிடம் நெருங்கவிடாமல் காத்துக்கொண்டான். இரஜபுத்திரர் தயங்கிப் பின்னடையவே, மஹமதிய வீரன் ஒருவன் இறந்துபட்டதினால் சும்மா நின்ற ஒரு குதிரையை சற்று தூரத்துக்கப்பால் கண்டு, அதன் பேரில் தாவி யேறிக்கொண்டு, தான் இறந்தானென்று எண்ணித், தன் சேனை பின்னடையாமல் இருக்கும்பொருட்டு "தீன்! தீன்! தீன்! தீன்!" என்று இடிமுழக்கம் போல் சர்ஜித்தான். சக்கரவர்த்தியை மறுபடி கண்ட வீரர்கள், சந்தோஷத்துடன் "தீன்! தீன்!" என்று ஆர்த்து அவனைச் சூழ்ந்தனர்

இரஜபுத்திரர்களுக்கு உற்சாகம் அடங்கிவிட்டது. ஒருவர் ஒருவராய் எத்தனையோ பேர் மாண்டுவிட்டனர். பிரதாபசிங்கரும் தன்னால் கூடியமட்டில் எதிரிகளைத்துரத்தியடித்து ஒரு வீரன் வேலினால் அடிப்பட்டு மாய்ந்தார். உடனே "இராமசிங்க மஹராஜ்கே ஜேய்! இராமசிங்கமஹாராஜ்கே ஜேய்!" என்று கோஷம் முழக்கிக்கொண்டு இராமசிங்கனை ராஜனாக்கியதற்கடையாளமாய் அவன் தலைக்கு மேலே குடையைப் பிடித்தனர். இராமசிங்கும் தன் உயிரைத் துரும்பாய் எண்ணி, கோபமூண்ட சிங்கம்போல் முன்சென்று தன் சேனையை நடத்தினான்.

இச்சண்டை மும்மரத்தில் நாம் சிறிய மனிதர்களையும் சற்று கவனிக்கவேண்டியதவசியமேயல்லவா? இராஜாக்களும் பிரபுக்களும் சண்டைபோடுவதுபோலவே சாதாரண வீரர்களும் சண்டை செய்தனர். நமது பழைய சினேகிதனான மல்லீக் மகமத்தனக்குப் பகைவரான ஏமாங்கதனையும் சித்திரக்கிரீவனையும் தேடிச்சென்றனன். அவ்விருவரும் தப்பாமல் சண்டைக்கு வருவார்கள் என்றும் அவர்களைத் தன் கையாலேயே கொல்லவேண்டுமென்றும் மல்லீக் எண்ணினான். ஒவ்வொரு முறையும் சண்டை நடக்கும்போதெல்லாம் அவர்கள் தென்படுகிறார்களோ எனத்தேடுவான். இன்று நிச்சயமாய் அவர்களைக் கண்டு சண்டை பிடிப்பதாக நினைத்து அதிக சிரமத்துடன் தன் தேகத்தைக் காப்பாற்றிக்கொண்டு அங்குமிங்கும் அலைந்தான். கடைசியாக ஒரு மூலையில் ஏமாங்கதன் சண்டை செய்வதைக் கண்டு "அடே பயலே வாசல்காரா ஓடியா: சண்டை பிடிக்கலாம்" என்றான். இந்தச் சோற்றுமலையைக்கண்ட ஏமாங்கதன் அடங்காக் கோபத்தோடுஅவன்மேல் எதிர்த்துச்சென்றான். வந்தவனை எதிர்த்துப் போர்செய்துகொண்டே மல்லீக் "இன்னொருத்தன் எங்கடா அடே" என்றான். ஏமாங்கதன் பதில் பேசவில்லை. சித்திரக்கிரீவன் அன்று அச்சேனையில் இல்லை. அவனும் சுலோசனனும்தான் லலிதையை வீரபத்திரன் நகரமான சுகுணபுரத்துக்கு அழைத்துச்செல்ல தக்க ஏற்பாடுகள் செய்துகொண்டு கோட்டையை விட்டுப் போய்விட்ட

னர். ஏமாங்கதன் மல்லீக்குடன் சண்டை செய்ய முடியவில்லை. ஈட்டியால் குத்தும் ஒவ்வொரு குத்தையும் கேடயத்தால் தடுத்துக் கொண்டு தத்தளித்தான். அடுத்த நிமிஷத்தில் கீழே விழுந்து உயிர் விடவேண்டியதுதான் என்று நிச்சயமாய்த் தெரிந்தது. அதற்குள் தெய்வச்செயலாய் ஒரு இரஜபுத்திரன் மல்லீக்கின் அள்ளையில் ஓர் அம்பெய்தான். அவன் அதனால் சற்று சலிக்கவே ஏமாங்கதன் அவன் தலையில் வாளாயுதத்தால் ஒரு அடி கொடுத்தான். அதை விலக்க சிப்பாய் அப்பால் நகர்ந்தபோது அவ்வடி தொடையில் தாக்கியது. மல்லீக் கீழே விழுந்தான். விழும்போது "கவுஸ்! கவுஸ்! எனக்கு வந்து உதவிசெய்யக் கூடாதா? உன்னெதிருக்கா இவன் அன்னிக்கு என்னை அவமானப்படுத்தில்லையா: இன்னிக்கு என்னைக் கீழே தள்ளிட்டானே" என்றான் துருக்க பாஷையில். பக்கத்தில்நின்ற ஒருமஹமதியவீரன் "ஹஸரத்! கவுஸ் முன்னேயே சுல்தானிடத்தில் சண்டைபோட்டு அடிபட்டு விழுந்து மூர்ச்சை யடைந்தானே" என்று சொல்லிவிட்டு ஏமாங்கதன்மேற் கிளம்பி அவன் தலையை உடைத்தான். இம்மாதிரி சிறியவர்களும் பெரியவர்களும் தத்தம் வலிமைக்குத் தக்கபடி சண்டைசெய்தனர்.

என்னசெய்தும் இராமசிங்கராஜனால் தாளவில்லை. நிமிஷத்துக்கு நிமிஷம் நல்ல பாம்பின் விஷம்போல் மஹமதியஉக்கிரம் அதிகரித்தது. நிமிஷத்துக்கு நிமிஷம் அவ்விஷமுண்ட உயிர்போல் இரஜபுத்திர வலிமை குன்றியது. இராமசிங்கராஜன் இவற்றையெல்லாம் அறிந்து கொண்டான். அவன் மனம் கொதித்தது "இரஜபுத்திரர் வாழ்வு இம்மட்டோ! இனி உதயபுரியின் மஹத்துவம் அடங்கிவிடவேண்டுமோ?" என்று ஒருதடவை ஏங்கினான் தன்னைச்சூழ்ந்து நின்ற பரிவாரங்களும் குடை தாங்கியவனும், கீழே விழுந்தனர். சூர்யசந்திரவம்ச முதல் பரம்பரையாய் வந்த குடை, கீழே சக்கரம்போல் உருண்டு விழுந்தது. நான்கு வீரர் ஒருங்கே இராமசிங்கனை எதிர்த்தனர். அவர்களைத் தடுக்கவே, கத்தி ஒடிந்துவிட்டது. சிங்கம் பசுமேல் பாய்வதுபோல் தன் முன்னின்ற துருக்கவீரன்மீது பாய்ந்து அவன் வேலாயுதத்தைப் பிடுங்கிக்கொண்டு மறுபடி அவர்களை மடக்கினான். பின்னும், பலர் மேல் நெருங்கினர். கடைசியாகக் கை ஓய்ந்து, பாரதப்போரில் அபிமன்யு போன்று, களத்தில் பட்டு உயிர் துறந்தான் இராமசிங்க ராஜன்.

எங்கே பார்த்தாலும் தீன் தீன் என்ற சப்தம் கேட்டதே ஒழிய, "ஹர! ஹர மஹாதேவா!" என்ற பிரதியுத்தரம் குறைவு பட்டது. ஆமத்பாக்ஷா ஜயமடைந்தான் என்றாலும், அந்த ஜயம் இலேசில் கிடைத்ததன்று. ஒவ்வொரு இரஜபுத்திரனும், இரஜபுத்திரியும் தான் படுமுன்னர் இரண்டு மூன்று வீரர்களை யாவது கொல்லாமல் படவில்லையென்றால், இறந்தவர்களின் தொகை எத்தனையாய் இருக்க வேண்டும்?

நமது சிறு கதை

OUR SHORT STORY

[ஸ்ரீமான் ஆர். ராஜசூடாமணி.]

பிரேமாவதி.

கமலம்:—"அண்ணா! நேற்று ஓர் கதை எழுதினாய். அதைப் படித்துப்பார்த்தேன். கதை நன்றாயிருக்கிறது இன்று என்ன கதை எழுதப்போகிறாய்?

சுந்தரம்—"கமலம்! இன்று பிரேமாவதியின் கதையை எழுதப்போகிறேன்."

கமலம்:—"அண்ணா! எனக்கு அந்தக் கதையைச் சொல்ல மாட்டாயா?"

சுந்த:—"கமலம்! இப்பொழுது சொல்லச் சாவகாசமில்லை. ஏனென்றால் நான் அக்கதையை இப்பொழுது எழுதப்போகிறேன்."

கமலம்:—"நல்லது அண்ணா; நீ எழுதிக் கொண்டேபோ; நான் உன் பக்கத்தில் நின்று வாசித்துக்கொண்டே வருகிறேன். நீ கதையை எழுதி முடிப்பாய், நானும் வாசித்து முடிப்பேன்."

சுந்த:—"சென்னப்பட்டணத்தில் நாலைந்து நாளாய் மழை விடாமற் பெய்துகொண்டிருந்தது. வீதியெல்லாம் வெள்ளம்; தண்ணீர்

மடைமடையாய் ஓடியது. மிகுந்த அவசர மான வேலையிருந்தவர்களே குடைபிடித்து முழங்தாள் அளவு கலங்கின ஜலத்தில் இறங்கி நடந்து சென்றனர். வேறு எவரும் புதுத் தெருவழியாகச் செல்லவில்லை. அங்குமிங்கும் ஓயாமல் ஓடும் மோட்டார் வண்டிகளும், ஜட்கா வண்டிகளும் எங்கேயோ மாயமாய் மறைந்து விட்டன. பெருமழை நின்ற போதிலும் தூற்றல் நிற்கவில்லை.

அத்தெருவில் கோமதி விலாஸத்தின் கீழ்க் கட்டில், தெருப்பக்கமான ஓர் அறையில் ஒரு குழந்தை வியாதியாய்க் கட்டிலில் படுத்திருந்தாள். அவள் தலைப்பக்கமாயிருந்த ஓர் மேஜை மீது மருந்துகளும், ரொட்டியும், பாலும், இன்னும் நோயாளிக்குத் தேவையான வேறு சாமான்களும் வைக்கப்பட்டிருந்தன. சுவற்றில் பதிக்கப்பட்டிருந்த ஓர் தட்டில் அழகான சிறு கதைப் புஸ்தகங்கள் அடுக்கப்பட்டிருந்தன. அந்த நோயாளியி னருகாமையில் ஒரு நாற்காலி யிருந்தது.

அக்குழந்தையின்பெயர் பிரேமாவதி. அவள் முகம் மூன்றுமாத ஜுரத்தினால் இரத்தம் சுவறி வெளுப்படைந்திருந்தது. அவளுடைய உதடுகள் உலர்ந்துபோ யிருந்தன. தலை முடி சன்னல் பின்னலாய்ச் சிக்குப்பிடித்துத் தேய்ந்து கழிந்தது. எலும்புகள் யாவும் வெளியே தோன்ற ஆரம்பித்துவிட்டன. கண்கள் ஒளி மழுங்கிச் சிறுத்தன. அவள் ஜன்னலின் வழியாக ஆகாயத்தில் சஞ்சரித்த மேகக்கூட்டங்களையும், அவற்றினின்றும் ஜலம் பூமியில் விழுவதையும், வீதியையும் எட்டிப்பார்த்துக் கொண்டிருந்தாள்.

அச்சமயத்தில் ஒற்றைத் தந்தித் தம்புரு ஒன்று கையிலேந்திய பன்னிரண்டு வயதுள்ள சிறுவன் ஒருவன் தந்தியை மீட்டிக்கொண்டு கோமதிவிலாஸத்தின் எதிரிலுள்ளஓர்வீட்டில் மழைக்காக ஒதுங்கி நின்றான். அச்சிறுவன் உடை முழுவதும் கிழிந்து மழையில் நனைந்திருந்தது. தலையிலிருந்து நீர் சொட்டிக்கொண்டேயிருந்தது. அவன் தங்கிநின்ற வீட்டின் வாசற்கதவு திறந்திருக்கிறதா என்று பார்த்தான். வெளிப்பக்கம் பூட்டியிராததால் உள்ளே ஆள் இருக்கிறார்களென்று நினைத்துக்கொண்டு பாட ஆரம்பித்துவிட்டான்.

"பண்ணேனுனக்கான பூசை ஒரு வடிவிலே" என்று ஆரம்பித்தான். அதற்குள் வீட்டிற்குள்ளிருந்த கிழவர் ஒருவர் ஓடி வந்து "சாண்பயலுக்கு முழம் நீளம் வீணையா? மழை அடிக்கிற அடிக்கு பாட்டு ஒரு கேட்டகேடு; ஓடிப்போடா இவ்விடத்தைவிட்டு; ஜல்தி;" என்று கத்தினார். பையன் அந்த வசை மொழிகளைக்கேட்டுத் திடுக்கிட்டு, மழை பெய்து கொண்டிருந்த தெருவில் நின்று நாலாபக்கங்களிலும் சுற்றிப்பார்த்து, எவ்வீட்டில் போய் மழைக்கு ஒதுங்கலாமென்று யோசித்துக் கொண்டிருந்தான்.

அச்சம்பவம் முழுவதையும் ஜன்னல் வழியாகக் கவனித்துக்கொண்டிருந்த பிரேமாவதி "அம்மா" என்று கூவினாள். அக்குரலைக் கேட்ட அவள் தாய் ஓடோடி வந்து "என்ன வேண்டுமம்மா? உனக்கு என்ன செய்கிறது?" என்று கேட்டாள்.

பிரேமா :—"அம்மா! வீதியில் மழையில் நனைந்துகொண்டு அதோ நிற்கிறான் பார் ஒரு சிறுவன். அவனை இங்கே கூப்பிடம்மா!'

தாயார்:—ஆகட்டும்" என்றுசொல்லிவிட்டு வெளியே சென்று அந்தப் பையனைத் தன்வீட்டிற்கழைத்தாள். பையன் வரவே, அவனைத் தன் புத்திரியிடத்திற்கழைத்துச் சென்றாள். அவன் கோலத்தைக் கண்டதும் பிரேமாவின் கண்களில் நீர் ததும்பிவிட்டது. அவள் அவனை அன்புடன் நோக்கி "ஒரு பாட்டுச்சொல்லேன் கேட்போம்" என்றாள்.

பகலெல்லாம் பிச்சை எடுத்தும் அவனுக்கு நாலணாதான் கிடைத்தது. ஒவ்வொரு நாளும் அவன் தன் தாய்க்கு 6-அணா அளிக்க வேண்டும் என்ற விரதம் வைத்துக்கொண்டிருந்தான். அந்த விரதம் இன்று நிறைவேறாமற் போகுமோ என்று கலங்கினான். அதற்காகத்தான் அந்தப் பையன் கொடிய மழையைக் கூடக் கவனியாமல் பிச்சை எடுக்கப் புறப்பட்டான். அவன் ஒருவருஷத்திற்கு முன்பாக திருவல்லிக்கேணிக்கு முதன்முதலாக வந்திருந்தபொழுது அவனுடைய இளம் பிராயத்தையும் இனியகுரலையும்,அவன்உருவத்திலும் நீண்ட தம்புருவையுங்கண்டு மனங்கசிந்துபலர் வேண்டிய அணுக்கள் அளித்தனர். நாளாவட்டத்தில் அவன் பழைய பிச்சைக்காரனாய் விட்டான். பிறகு அவன் பாட்டு, பழகப் பழகப் பாலும் புளிக்கும், என்றாற்போ லாய்விட்

டது. ஆதலால் அவனுக்கு ஒருநாள் கழிவது நெடியதோர் யுகமாய் முடிந்தது. இந்தச் சிறு குழந்தையின் உபசாரத்தை கேட்ட மாத்திரத்தில் உள்ளம் கனிந்து புன்னகை அரும்பினான் அச்சிறுவன்.

வியாதியால் மெலிவுற்றிருந்த அச்சிறுமியின் முன் வெகு சுகமாய்ப் பாடி அவளைப் பரவசப் படுத்த வேண்டும் என்ற எண்ணத்துடன் நன்ருய்க் கனைத்துவிட்டு அவன் பாட ஆரம்பித்தான்.

பண்ணேனுனக்கான பூசை ஒரு வடிவிலே
 பாவித்திறைஞ்ச வாங்கே
பார்க்கின்ற மலருடு நீயே யிருத்தியப்
 பனிமலர் எடுக்க மனமும்
நண்ணேன் அலாமல் இருகைதான் குவிக்கவெனின்
 நாணுமென் னுளநிற்றி நீ,
நான் கும்பிடும்போது அரைக்கும்பிடாதலால்
 நான் பூசை செய்யன் முறையோ;
விண்ணே! விண்ணுதியாம் பூதமே! நாதமே!
 வேதமே! வேதாந்தமே!
மேதக்ககேள்வியே! கேள்வியாம் பூமிக்குள்
 வித்தே! அவ்வித்தின்முளையே!
கண்ணே! கருத்தே என்! எண்ணே! எழுத்தே!
 கதிக்கான மோனவடிவே!
கருதரிய சிற்சபையில் ஆனந்த நிர்த்தமிடு
 கருணாகரக் கடவுளே!

என்று பாடினான். அப்பாடலைக் கேட்டு ஆனந்தமடைந்த பிரேமாவதி " அம்மா! இவனுக்கு இரண்டணுக் கொடு; சாதமும் போடம்மா; பாவம் பரம ஏழை; களைப்புற்றிருக்கிறான். கிழிந்த சட்டையிருந்தால் கொடு அம்மா மா! சின்ன அண்ணு சட்டை, பெட்டியிலிருக்கிறது பார்; கொஞ்சம் கிழிந்திருக்கிறது. அதை அண்ணு போட்டுக்கொள்ள மாட்டேன் என்ருன். பரிதாபம்; இவன் சட்டையெல்லாம் மிகவும் நனைந்து போயிருக்கிறது. அந்தச் சட்டையைகொடுத்துவிடு இவனுக்கு" என்ருள். தன் அருமை மகளின் வேண்டுகோளை நிறைவேற்றப் பெரிதும் ஆவல்கொண்ட தாய் "ஆகட்டும் அம்மா! அப்படியே செய்கிறேன். நீ தூங்கு" எனறு சொல்லி அச்சிறுவனை அழைத்துப் போய்விட்டாள்.

இவ்வெகுமதிகளைப் பெற்ற சிறுவன் ஆனந்தமாக வழிநடந்து ஓர் ஏகாந்தமான திண்ணையிற் போயுட்கார்ந்து கடவுளை நினைத்து "ஈச்வரா! அந்தச் சிறு குழந்தையின் வியாதியை வெகு சீக்கிரமாக மாற்றி அவளுக்குப் பூரண சுகத்தைக் கொடுக்கமாட்டாயா?" என்று சொல்லி அச்சிறுமியை மனமாற வாழ்த்தினான்.

சிறுவன் வீடு சேர்ந்ததும், தன் தாயிடம் தனக்கு அன்று நடந்த அபூர்வ உபசாரங்களை சவிஸ்தாரமாக எடுத்துச் சொன்னான். பிரேமாவதியை வாயாரப் புகழ்ந்து பேசினான். தாயும் அச்சிறு குழந்தையை மனமாற வாழ்த்தினாள்.

பிரேமாவதிக்கும் அச்சிறுவனுடைய முகத்தை மறக்க முடியவில்லை. மறுநாள் அச்சிறுவன் பிரேமாவதி தனக்குக் கொடுத்த சொக்காயை அணிந்து, தம்பூரைக் கையிலெடுத்துக் கொண்டு பிச்சைக்குப் புறப்பட்டான். பிரேமாவினுடைய சொக்காயின் மகிமைதானே! வெளிப்புறப்பட்டது தான் தாமஸம் பிச்சை கிடைக்க ஆரம்பித்துவிட்டது, பிரேமாவதியின் வீடுபோவதற்குள்ளாக சிறுவன் 6 அணு முடிந்துவிட்டான். அவன் கொண்ட விரதம் அன்று நிறைவேறிவிட்டது போலும். அன்றும் பிரேமாவதியின் அறைக்கதவின் வெளிப்பக்கத்தில் வந்து நின்று பாட ஆரம்பித்தான். "பண்ணேன் உனக்கான" என்ற பாடலைத் த்விர வேறோர் தமிழ்ப்பாடலும் அவனுக்குத் தெரியாது.

பிரேமா:—"வேறு ஏதாவது பாடல் தெரிந்தால் பாடு" என்ருள்.

சிறுவன் அவள் பாஷையை உணரவில்லை. அவன் தெலுங்கன். அவன் அவள் சொன்னதற்குப் பதிலாகத் தெலுங்கு பாஷையில் "நாக்கு அரவம் தெலியாதண்டீ" என்று சொன்னான். அதன் அருத்தம் அவனுக்குத் தமிழ்ப்பாஷை தெரியாது என்று அவன் கூறியதாகும். இக்குறிப்பை ஒருவாறு தெரிந்துகொண்டு பிரேமா தன்தாயை அழைத்தாள். தாயார் வந்ததும் "என்ன, பிரேமா?" என்று கேட்டாள்.

பிரேமா:—" அம்மா! "பண்ணேன் உனக்கான" என்ற பாடல் ஒன்றுதான் இவனுக்குத் தெரிகிறது. வேறு பாடல் தெரியுமா என்று கேட்டேன். அதற்கு அவன் தெலுங்கில் என்னவோ சொல்லுகிருன். எனக்கு ஒன்றும் புரியவில்லை. நீ கேளேன் " என்று சிரித்துக்கொண்டு சொன்னாள்.

(தொடரும்.)

சிறுவர்களுக்கான பக்கங்கள்

CHILDREN'S PAGES

[ஸ்ரீமான், கீ. சி. ராமஸ்வாமி ஐயர் அவர்கள். பி.ஏ., எல்.டி.]

பொறுமை

சாஸ்திர விற்பன்னர்களில் சிறந்தவர் ஒருவர் நியூடன்என்பவர். அவர் இருநூறு வருஷங்களுக்குமுன்னமே இங்கிலாந்தில் வாழ்ந்தவர். பூதத்வ சாஸ்திரத்தில் நூதனமான பல விஷயங்கள் கண்டுபிடித்தவர். அவர் தாம் அறிந்தவைகளை எல்லாம் கையெழுத்துப் பிரதிகளில் எழுதி வைத்திருந்தனர். அவர் அவைகளைப் பதிப்பிக்கவில்லை. ஆகையால் அவைகளை அவர் மிகவும் ஜாக்கிரதையாகப் பாதுகாத்துவந்தார்.

நியூடனிடம் ஓர் நாய்க்குட்டி இருந்தது. அதன் பெயர் "டயமண்டு." அதன்மீது அவர் மிகவும் ஆசையுடையவரா யிருந்தார்.—ஜீவகாருண்யமும், ஞானமும் பெற்றவர். ஆகையால் அவர் தம்மிடமிருந்தவைகளிடம் மிகவும் அன்புடையவரா யிருந்தனர் என்று சொல்லவும் வேண்டுமா?

நியூடன் ஒருநாள் தம்மறையில் வேலை செய்துகொண் டிருந்தார். அவர் மேஜையின்மேல் பல கையெழுத்துப் பிரதிகள் இருந்தன. இருட்டா யிருந்தபடியால் மேஜையின்மேல் மெழுகுவர்த்தி எரிந்துகொண் டிருந்தது. அப்பொழுது அந்த நாய்க்குட்டி உள்ளே நுழைந்து மேஜையின்மேல் ஏறி குதிக்க ஆரம்பித்தது. மேஜையின் மேலிருந்த மெழுகுவர்த்தி அந்நாயின் ஆட்டத்தினால் கவிழ்ந்துவிட, கையெழுத்துப் பிரதிகளெல்லாம் சில நிமிஷங்களில் பற்றி எரிந்துபோயின. நியூடன் திரும்பிப்பார்த்தார்; தாம் வெகுகாலமாய் எழுதின புத்தகங்கள் பாழாய்ப் போனதைக் கண்ட அவர் மனம் துக்கத்தால் நிறைந்தது. ஆயினும் என் செய்வார்? அவர் கோபத்தை அடக்கி, தம் நாயைப் பார்த்து "ஆ டயமண்டு! நீ செய்த காரியம் என்னவென்று உனக்குத் தெரிந்திருக்குமானால் நீ இம்மாதிரி செய்திருக்கமாட்டாய்" என்றார்.

அந்தப் பிரதிகளைத் திரும்பி எழுதுவது அவருக்குப் பெருத்த சிரமம். ஆயினும் அவர் தம் கோபத்தை அடக்கினது அவர் பெருங்குணத்தைக் காட்டுகிறது. ஒரு சிறிய நாய் செய்தபோதிலும் அதைத்தண்டியாது, அதன் அறியாமையே அப்படி நடந்ததற்குக் காரணம் என்று நினைத்த நியூடன் மஹானன்றோ? அவ்வித பொறுமை நம்மவருள் எத்தனை பேருக்கு இருக்கும்?

ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

LADIES' PAGES

[ஸ்ரீமான் ஸி. ஆர். ஸ்ரீனிவாஸய்யங்கார் அவர்கள், பீ.ஏ.]

அஹல்யாபாய்

(207-ம் பக்கத் தொடர்ச்சி)

இப்படியே, தன் மாமியான கௌதமீபாய் தன் உயர்ந்த குலத்தாலும் பதவியாலும் அதிக கர்வமடைந்து, ஒருவரையும் லக்ஷியம் செய்யாமல், எளிதில் கோபமூட்டப்பட்டவளாய்ப் பொறுமையின்றி, பிறரால் நெருங்கிப் பழக முடியாம லிருந்தாள். அஹல்யாபாய், அவளையும் எப்படியோ தன் வசப்படுத்தி, தன்னிடத்தில் அவளுடைய கஷ்ட சுகங்களை அந்தரங்கமாய்ச் சொல்லி, ஆறுதலடைந்து அவளுக்கும் மல்ஹார் ராவுக்கும் அடிக்கடி நேரும் மனவருத்தங்களையும் கோபதாபங்களையும் சமாதானஞ் செய்வதற்கு ஓர் கருவியாய் எண்ணி, எல்லையற்ற பிரீதியுடன் நடத்தினாள். வருத்தத்தாலும் கோபத்தாலும் மெய் மறந்திருக்கும் சமயத்தில், அஹல்யாபாயைக் கண்டவுடன், முகத்தில் தெளிவும், தன்னை யறியாமல் புன்சிரிப்பும் பிரியமான வார்த்தையும் உண்டாகி, வேறு மனுஷியைப்போல் மாறி விடுவாள்.

1754-வது வருஷத்தில், கண்டேராவ் தனக்கு விரோதமாய்க் கலகஞ் செய்த ஜாட் ஜாதியாரை அடக்குவதற்காகப் படையெடுத்துச் சென்றார். அங்கே நடந்த யுத்தத்தில் உயிரிழந்தார். அஹல்யாபாயிக்கு, மாலீராவ் என்ற புத்திரனும், மச்சாபாய் என்ற புத்திரியும் பிறந்தார்கள். அந்தப் பெண் யசோவந்தராவ் என்றவரை விவாஹஞ் செய்துகொண்டாள். தன் அன்பிற்கும் பக்திக்கும் பாத்திரமான பர்த்தா பரகதியடைந்தபின்பு, தனக்கு இவ்வுலகத்தில் யாதொரு பற்றுமின்றி, எங்கே பார்த்தாலும் சூன்யமாய், எதைப் பார்த்தாலும் துக்க ஸ்வ

ரூபமாகவே தோன்றினபடியால், தானும் பூர்வ ஆசாரத்தை அனுசரித்து அக்கினிபகவானால் அமைக்கப்பட்ட ரதத்தில் தன் பர்த்தாவுடன் ஏறி ஸ்வர்க்கலோகஞ் சென்று, அங்கும் தன் பிராணநாதனுக்கு சுசுரூஷை செய்வதையே பரம புருஷார்த்தமாய் நினைத்து இவ்வுலகத்தையும் நீர்மேல் குமிழிபோன்ற ஸுக துக்கங்களையும் வெறுத்து, வானுலகத்திற்குச் செல்லப் புறப்பட்டாள். அப்பொழுது மல்ஹார்ராவ், கோபத்தால் நெருப்புப்பொறிபறக்கும் கண்களிலிருந்து அடங்காத் துயரத்தால் தாரை தாரையாய் கண்ணீர் ஒருநாளும் இல்லாதவிதமாய்ப் பெருக, அஹல்யாபாயைப்பார்த்துக் "குழந்தாய்!என் ஒரே புத்திரனை கண்டேராவ் என்னைவிட்டுப் பிரிந்தான். முதிர்ந்த வயதில் பிள்ளையைப் பறிகொடுத்து ஒண்டியாய்த் தவிக்கிறேன்: அவன் எனக்குச் செய்ய வேண்டிய உத்தரக்கிரியைகளை நான் அவனுக்குச் செய்யலாயிற்று. நீ என்வீட்டிற்கு வந்தது முதல், எனக்கு நாட்டுப்பெண்ணும், என் வயிற்றில் பிறந்த பெண்ணும், என்னைப் போஷித்து யாதொரு குறைவுமின்றிப் பாதுகாப்பதில் பெற்ற தாயுமான நீயும் என்னைக் கைவிட்டால், என்கதி இன்னதென்று நான் சொல்லவேண்டியதில்லை. நீயும் என் மகனும் போகுமிடத்திற்கு என்னையும் என் மனைவியையும் அழைத்துப்போ. நீ இல்லாமல் நாங்கள் ஒரு நிமிஷங் கூட இங்கே உயிர் தரிக்க மாட்டோம். நிழலின் அருமை வெயிலில் போனால் தெரியு மென்பதுபோல், நீ இருக்கும் வரையில் உன் அருமையைப்பற்றி நாங்கள் நினைக்கவுமில்லை. இவ்வளவென்று மதிக்கவுமில்லை. நீ எங்களை விட்டுப் போகிறாயென்று கேட்டவுடன், எங்களுக்கு இவ்வுலகமே பாழாயிற்று. உன் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தால் எங்களுக்குப் புத்திரசோகம் மறந்துபோம். குழந்தாய்! எங்களுக்கு இனிமேல் புத்திரனும் புத்திரியும் நீயே. இந்த அகண்டமான ராஜ்யத்தையும் அதிகாரத்தையும் செல்வத்தையும் உன் இஷ்டப்படி உபயோகிக்கக் கடவா" யென்று, பிறர் கண்டு நடுங்கும் தொனியைமாற்றி தீனமாய்க் கெஞ்சி வேண்டினர். அஹல்யாபாய் தன் மூத்தோரின் சொல்லை ஈசுவர நியமமமாய் எண்ணி தன் கணவனுடன் உடன்கட்டை ஏற நினைத்த பிடிவாதத்தை மாற்றி, மறுபடியும் இல்வாழ்க்கையை ஒப்புக்கொண்டாள்.

மல்ஹார்ராவ் தன் ராஜதானியில் இருப்பதே இல்லை. எப்பொழுதும் தூரதேசங்களில் படையெடுத்துச்சென்று பகைவருடன் போர் புரிவதும், நாடு நகரங்களைப் பிடிப்பதுமே வேலையா யிருந்தார். கௌதமீபாய்,தன் புத்திரன் இறந்ததுமுதல், உலகத்தையே துறந்து விரதம் உபவாஸம் நியமம் பூஜை புண்ய தீர்த்த யாத்திரை ஜபம் தானம் முதலியவைகளில் மனதைச் செலுத்தி, காலங்கழித்து வந்தாள். ஆகையால், ராஜ்ய கார்யங்கள் யாவும் அஹல்யாபாயின் தலையில் சுமந்தன. ராஜ்யத்தின் வரவு செலவு கணக்குகளைச் சரியான காலங்களில் கொடுக்கச் செய்து, வருமான காரணங்களை விருத்திசெய்து, செலவாகும் இனங்களைக் குறைத்து, பொக்கிஷத்தில் ஏராளமான திரவியம் வருஷாவருஷம் மிகுந்திருக்கச் செய்தாள். மல்ஹார்ராவ் தன் யுத்த கார்யங்களுக்குப் போதுமான திரவியத்தை சரியான காலத்தில் அனுப்புவதையே கவனித்துக் கொண்டிருந்தார். ராஜ்யத்திலுள்ள உத்தியோகஸ்தர்களை நியமிப்பதும் மாற்றுவதும் குறைப்பதும் தள்ளுவதும் அவர்களுக்கு வேலையிடுவதும் நியாய ஸ்தலங்கள், வியாபாரம் கைத்தொழில், சாகுபடி, நீர் பாய்ச்சல், அரங்க வேலைகள், தர்ம ஸ்தாபனங்கள், படிப்பு முதலிய எல்லாத் துறைகளிலும் தன் கவனத்தைச் செலுத்தி, ஒவ்வொன்றிலும் நடக்கும் காரியங்களைத் தான் அடிக்கடி பரிசீலனை செய்து, எங்கும் நடக்கும் விஷயங்களைத் தன் தூதர்களாலும், சாரர்களாலும், வேவுகாரர்களாலும் உடனே அறிந்து, எங்கும் கண்ணாகவும் எங்கும் காதாகவும் அரசனுடைய ஆக்ஞையைச் செலுத்துவதில் எங்கும் கையாகவும், பகவானைப்போல் விச்வரூபியாய் விளங்கினாள். முன்பு கண்டேராவ் செய்துவந்த ராஜ்ய காரியங்கள் யாவும் இப்பொழுது அஹல்யாபாயைப் பொறுத்தன. இந்துஸ்தானத்தில் முஸல்மான்களுடைய ஆளுகையையும் மொகலாயர்களின் ராஜ்யத்தையும் அகற்றி, பூர்வீகமாயுள்ள ஹிந்து அரசாக்ஷியை ஸ்தாபிப்பதையே தன் கடமையாய்க் கொண்ட சிவாஜி மஹாராஜாவின் உத்தேசத்தை, அவருக்குப் பின்வந்த பாலாஜீ விச்வநாத், பாஜிராவ், பாலாஜீ

பாஜிராவ் முதலிய பேஷ்வாக்கள் பூர்த்திசெய்யப்பார்த்து, வெகுதூரம் காரியசித்தி யடைந்தார்கள். ஆனால், மஹாராஷ்டிரத் தலைவர்களுக்குள் பொறாமையாலும் கர்வத்தாலும் கலகமுண்டாகி ஒற்றுமை குறைந்து, பாணிப்பட்டில் 1761-ல் நடந்த மூன்றாவது மஹா யுத்தத்தில், ஆமத்ஷா அப்தல்லீ என்ற மகம்மதியத் தலைவனால் மஹாராஷ்டிர சைன்யங்கள் முற்றிலும் தோல்வியடைந்து, மூலைக்கு மூலை சிதறி ஓடின. அதற்குப் பிறகு மஹாராஷ்டிர அதிகாரமே இந்தியாவில் தலையெடுக்கக் காரணமில்லை யென்று எல்லோரும் நினைக்கும்படி யாயிற்று. ஆயினும், சிவாஜியின் வம்சத்தாரின் கையிலிருந்து நழுவின செங்கோலைப் பேஷ்வாக்கள் கைக்கொண்டு, அரசாண்டதுபோல், பேஷ்வாக்களின் அதிகாரம் சிதறி மலினமடைந்தபொழுது, அவர்களுடைய கையிலிருந்து நழுவின செங்கோலை அவர்களுடைய போர்வீரனும் நண்பனுமான மல்ஹாரராவ் ஹோல்கார் கைக்கொண்டு, சிவாஜி மஹாராஜாவின் உத்தேசத்தைப் பூர்த்தி செய்ய நினைத்து, ஆர்யாவர்த்தமெங்கும் ஹிந்து சக்கரவர்த்தியின் ஆளுகைக்கு உள்ளாகவேணுமென்று ஓயாத முயற்சி செய்தான். மனிதர்களால் ஸாத்யமில்லாத காரியமாய்த் தோன்றினும், மல்ஹார் ராவ் அஞ்சாத நெஞ்சமுடைய தீரனாகையால், இடைவிடாமல் யுத்தஞ்செய்து, ஜயலக்ஷ்மியின் கடாக்ஷத்தைப் பெற்று, வெகு சீக்கிரத்தில் குஜராத், லாகூர், மூல்தான் முதலிய ஸ்தலங்களையும், முடிவில் டில்லிமா நகரத்தையும் வசப்படுத்திக் கொண்டான். அங்கே ஆண்டுகொண்டிருந்த ஆமத்ஷாவை ஸிம்மாஸனத்திலிருந்து விலக்கி, தனக்கு நண்பனான ஆலம்கிர் என்பவனைப் பாதுஷா வாக்கினான். இப்படித் தன் மனோரதங்கள் ஏறக்குறைய நிறைவேறிவரும் ஸமயத்தில், எண்ணிறந்த சத்துருக்களின் சூழ்ச்சிகளைக் கலைத்து, எண்ணிறந்த போர்க்களங்களில் சத்துருக்களைச் சிதறவடித்த வீரஸிம்ஹம், ஸர்வலோக சத்துருவும் தடையற்ற வீரனுமான காலனுடன் போர்புரிந்து அபஜயமடைந்து, அவனால் சிறையாக்கப்பட்டு, உயிர் துறந்தான்.

உயிருக்குயிரான புருஷனையும், தாயும் தகப்பனுமான மாமனையும் பறிகொடுத்து, அகண்டமான ராஜ்யத்தை ஆள்வதற்கும், பிரசித்தி பெற்ற போர்வீரர்களால் விளங்கும் சைன்யங்களை நடத்துவதற்கும், தகுந்த தலைவனில்லாமல், சத்துருக்களாலும் பொறாமை குடிகொண்ட மித்திரனைப் போன்றவர்களாலும் சூழப்பட்டு, ஆயிரம் புலிகளுக்கு நடுவில் அகப்பட்ட பெண்மானைப்போல் அனாதையாய் நிற்கும் அஹல்யாபாயின் நிலைமையைச் சொல்லவும் முடியுமோ? ஆயினும், எந்தக் கஷ்டம் நேர்ந்தாலும், எவ்வித ஆபத்துகள் தடுத்தாலும், ஹோல்கார் ராஜ்யத்தைக் காப்பாற்றி, அதன் கீர்த்தியும் அதிகாரமும் செல்வமும் குறைவற வளரும்படி சகல ஏற்பாடுகளும் செய்வதே தன் கடமையென்று நிச்சயித்து, அஹல்யாபாய் தன் துக்கங்களை மறந்து, தன் காலத்தையும் புத்தியையும் சக்தியையும் அந்தப் பெரிய காரியத்தை நிறைவேற்றுவதற்காக தத்தஞ் செய்தாள். மாலீராவ் என்ற தன் புத்திரனைப் பட்டத்தில் வைத்து முடி சூட்டி, தான் அவனுக்குத் துணையாயிருந்து ராஜ்ய வியவகாரங்களை நடத்தி வந்தாள். அஹல்யாபாயின் மன வுறுதியையும் தன்னயம் பாராட்டாத லோகோபகார சிந்தையையும் முற்றிலும் பரீக்ஷிப்பதற்காகக் கங்கணம் கட்டிக்கொண் டிருப்பவரைப்போல், ஈச்வரன் அவளுக்கு ஓர் பெருங் கஷ்டத்தை விளைவித்தான். உகிரச்சுற்றின்மேல் உலக்கை விழுந்ததுபோலும், அம்பு பாய்ந்த காயத்தில் காய்ச்சின மழுதுளைத்ததுபோலும், புருஷனையும்மாமனையும் இரையாக்கினகாலன் மிகுந்திருந்த புத்திரனையும் அபஹரித்தான். ஸிம்மாஸனத்தில் உட்கார்ந்த ஒன்பதாவது மாதத்தில்மாலீராவ் பரகதியடைந்தான். முட்ட நனைந்தவர்களுக்குக் குளிரில்லை யென்பது போலும், தலைமேலோடிய வெள்ளம் சாணோ முழமோவென்று விசாரிப்பதில் பயனில்லை யென்பதுபோலும், இவ்வித கஷ்டங்களையே அனுபவிப்பது தனக்கு ஸஹஜ மென்றும், தன் கர்மகதியென்றும், பரம காருணிகனான ஸர்வேச்வரன் எதையும் நமது நன்மைக்காகவே செய்கிறானென்றும், நமது அல்ப ஞானத்தால் அவருடைய திருவுள்ளத்தை அறிய முடியாமல் வருந்துவதும், தெய்வத்தை நொந்துகொள்வதும் புத்தியின்மையென்றும் நன்கறிந்த அஹல்யாபாய், தான் அந்த ஸமயத்தில் இன்னது செய்யவேண்டுமென்று ஆழ்ந்து யோசித்து, அதிசீக்கிரத்தில் அதற்குத் தகுந்த

கொடும்பாவி ஆனாலும் கொண்ட மாமியார் வேண்டும்.

ஏற்பாடுகளைச் செய்துவிட்டாள். தன் வம்சத்தைச் சேர்ந்த ஒரு பையனை ஸ்வீகாரஞ்செய்து கொண்டு, அவனைப் பட்டத்தில் வைத்து, தான் ராஜ்யத்தை ஆளுவாளென்று நினைத்தவர் சிலர், ஆண்பிள்ளைத் துணையில்லாமல், ஒரு ஸ்திரீ அகண்டமான ராஜ்யத்தை ஆளத் துணிய மாட்டாள்; பிரஸித்திபெற்ற மந்திரியையாவது ஸேனாபதியையாவது அரசனாகச் செய்து, வைதிக கர்மங்களிலும், தானதர்மங்களிலும் தேவ பூஜையிலும் புண்ய க்ஷேத்திர யாத்திரைகளிலும் புத்தியைச்செலுத்துவாளென்று நினைத்தவர் சிலர். ஆனால், இந்தூர் ராஜ்யத்திற்குத் தகுந்தயோக்கிதையுள்ள ஒருவனை அரசனாகநியமிக்காமல், ராஜவம்சமென்ற அபிமானத்தை மாத்திரம் மேற்கொண்டு, ஓர் சிறுவனைப் பட்டத்தில் வைப்பதா லுண்டாகும் அபாயங்களை நன்கறிய, அஹல்யாபாயிக்கு ஸம்பத்தில் கிடைத்த அவகாசத்தை அவள் மறந்துவிடவில்லை. அவளுடைய வயிற்றில் பிறந்தவனும் கண்டேராவின் புத்திரனும், மல்ஹார்ராவின் பேரனுமானமாலீராவ், குணங்களிலும்நடத்தையிலும் அவர்களைக் கொஞ்சமேனும் அனுசரிக்கவில்லை. அவர்களுடைய வீர்யமும் பராக்கிரமமும் பெருந்தன்மையும் இச் சிறுவனிடத்தில் தலைகாட்டவில்லை. அவர்களிடத்தி லில்லாத முரட்டுப் பிடிவாதமும். இரக்கமின்மையும், கொடுஞ் செயல்களில் சந்தோஷமும்; அல்ப விஷயங்களில் மனதைச் செலுத்திக் காலத்தை வீணாக்கும் பழக்கமும், வயது ஜாதி அந்தஸ்து ஐசுவரியம் திறமையென்ற பேதமில்லாமல் எல்லோரையும் அவமதித்து குரூரமாய் உபத்திரவிக்கும் ராக்ஷஸ ஸ்வபாவமும், நல்லோரையும், திறமை வாய்ந்தவர்களையும் விரோதித்துக் கொள்ளும் சக்தியும், எப்படியோ அவனிடத்தில் குடிகொண்டிருந்தன. ஏதோ ஒரு துர்த்தேவதை அவனிடத்தில் ஆவேசங்கொண்டு, மனதால் நினைக்க வொண்ணாத கொடுமைகளைச் செய்யத் தூண்டிவிட்டது போலும்! வேறு குலத்தில், வேறு வம்சத்தில் பிறந்த பிள்ளைகளிடத்தில் அஹல்யாபாயிக்கு எப்படி நம்பிக்கை உண்டாகும்? ஆகையால், சிம்மாஸனத்தில் வேறொருவரையும் வைப்பதில்லையென நிச்சயித்துத் தன்னைவிடத்தகுந்த வேறொருவர் கிடைக்கும்வரை தானே ராஜ்யத்தை ஆண்டுவரத் தீர்மானித்தாள்.

இப்படியிருக்கையில், அவளுடைய மந்திரிகளில் ஒருவனான கங்காதர யசோவந்தனென்பவன், யாராவது ஒரு குழந்தையை சிம்மாஸனத்தில் வைத்துத் தான் ஸர்வ அதிகாரத்தையும் ராஜப்பிரதிநிதியாயிருந்து நடாத்தி அஹல்யாபாயை ஜீவனாம்சம் கொடுத்து ஓர் மூலையில் உட்கார வைக்கலா மென்று வெகுகாலமாய் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். காலக் கிரமத்தில் தன் அதிகாரத்தை பலப்படுத்திக் கொண்டு சேனைகளையும் பிரஜைகளையும் பல உபாயங்களால் வசமாக்கிப் பேருக்காக வைத்திருந்த குழந்தையை யமலோகத்திற்கனுப்பி, அஹல்யாபாயை ஆயுள்வரையில் சிறையிலடைத்துத் தானே இந்தூர் ராஜ்யத்தை ஆண்டு வரலாமென்று ஆகாசக் கோட்டை கட்டியிருந்தாலு மிருக்கலாம். ஓர் ஸ்திரீ ராஜ்யத்தை ஆளும் காலத்தில் நேரக்கூடிய ஊழல்களை மறைவாகக்கொண்டு, தங்களுடைய ஜமீன்களையும் செல்வத்தையும் அதிகாரத்தையும் விருத்தி செய்யலாமென்று எண்ணினவர் பலர். ஆனால், அஹல்யாபாய் ஜனங்களின் ஸ்வபாவத்தையும் நோக்கங்களையும் பல வருஷங்களாய்ப் பரீக்ஷித்து வந்தவளாகையால் தன் தயவை ஸம்பாதித்துப் பெரிய பதவிகளை அடைய விரும்பித் தன்னை அளவுக்கு மிஞ்சி உபசாரஞ்செய்து புகழும் வஞ்சகர்களின் வலையில் சிக்காமல், எந்தெந்த வேலைக்கு யார்யார் தகுந்தவரோ, அவனையே தெரிந்தெடுத்து, ஜாதி மதம் வயது அந்தஸ்து பழக்கம் அபிமானம் முதலியவைகளைக் கொஞ்சமேனும் கவனியாது, வேலைத்திறமையையும் கண்யத்தையுமே நோக்கிப் பலதேசங்களிலுமிருந்து நிபுணர்களைத் தருவித்து நியமித்துத் தனத்தாலும், மரியாதையாலும் ஆதரவாலும் கௌரதையாயும் பிரியமாயும் நடத்துவதாலும் அவர்களிடத்தில் பூர்ண விச்வாஸம் வைத்துஅவர்களை அடிக்கடி உபத்திரவிக்காம லிருப்பதாலும், தகுந்த ஸமயங்களில் அவர்களைப் புகழ்ந்து உத்ஸாகப்படுத்தியும் சாந்தமாய்க் குறைகளை எடுத்துக்காட்டி மிருதுவாய் வற்புறுத்துவதாலும், தன்னிடத்தில் அவர்கள் எல்லையற்ற ராஜவிசுவாஸமும் பக்தியும் பிரீதியும் நம்பிக்கையும் வைத்து, உடல் பொருள் ஆவியையும் ஸந்தோஷமாய் ராஜகார்

யத்தில் தத்தம் செய்யும்படி, கௌரதை அன் பென்ற ரத்தினஹாரங்களால் அவர்களைத் தனக்குக் கட்டுப்படுத்தினுள். பிரஜைகளை ஏழை நொந்தவனென்று பாராமல், அகப்பட் டவரையில் கழுத்தில் ஈரச் சவுக்கத்தை வைத்து அறுத்து ஒரு சொட்டு ரத்தங்கூட பாக்கியில்லாமல் கறக்கும் மந்திரிப்புலிகளை விலக்கி, திறமையும் ஜீவகாருண்யமும் வாய்ந்த பெரியோர்களையே அப்பதவிக்கு நியமித்தாள். பேராசைகொண்டவர்களும் கலகக்காரர்களும் பேச்சுமூச்சுவிட இடமில்லாமல், தப்பு ஸ்தோத்திரத்தாலும்வஞ்சகத்தாலும்அஹல்யாபாயை வசப்படுத்த முடியாதென்றறிந்து, வேறு வழியில்லாமல் அவளைப் பலாத்காரமாய் பட்டத்திலிருந்து விலக்கச் சதியாலோசனை செய்தனர்.

இப்படிப்பட்டவர்களின் தலைவனே கங்காதர யசோவந்த னென்பவன். ராஜ புரோகிதனும் மந்திரியாயுமிருந்த சலுகையால் அவன் அடியிற்கண்டவாறு அஹல்யாபாயிக்குக் கடிதம் எழுதினுன். “நீயோ கேவலம் பெண் பிள்ளை. இந்தப் பெரிய ராஜ்யத்தை ஆளமுடியுமென்ற பிரமைகொண்டு, உன்னுல் சுமப்பதற்கரிய பாரத்தைத் தலையில் ஏற்றுக்கொண்டு தத்தளிக்கிருய். நீயும் கெட்டு, ராஜ்யத்தையும், பாழாக்குவாய். மேலும், முதிர்ந்த வயதான உனக்கு இக்காலத்தில் அனுஷ்டிக்கவேண்டிய வைதிக தர்மங்களும் கெடும். மேலும் இந்தூர் ராஜ்யத்திலுள்ள பிரபுக்களும் வித்வான்களும் சுத்தவீரர்களும் மந்திரிகளும், கேவலம் ஓர் பெண்பிள்ளைக்குக் கைகட்டி நின்று தலை வணங்குவார்களா? உன் பந்துக்களுக்குள் யாராவது ஒரு பையனை முடிசூட்டி, ராஜ்ய பாரத்தை என்னிடத்தில் ஒப்புவித்து, நற்கதியடையவேண்டிய ஸாதனங்களைத் தேடு. வயதாலும் அனுபவத்தாலும், அறிவாலும் ராஜவம்சத்தில் வெகுநாளாய் வைத்திருக்கும் விச்வாஸத்தாலும், இந்தப் பெரிய வேலைக்கு என்னைவிடத் தகுந்தவன் உனக்குக் கிடைப்பது அரிது. மேலும், நீயோ ஸ்திரீ, வயது சென்றவள், புருஷனையும்,மாமனையும், மகனையும், உன் உயிரிருக்கும்பொழுதே பறிகொடுக்கும் மஹாபாபத்தைச் செய்தவள். உனக்கு ராஜ்யமேன், ஐசுவர்யமேன், அதிகாரமேன்? ஸ்திரீகளுக்குரிய அடக்கத்தையும் வணக்கத்தையும் மரியாதையையும் விட்டுப் புருஷர்கள் செய்யத்தகுந்த கார்யங்களைச் செய்யத் துணிவதால் பெரும் பாபமே விளையும். இவ்வளவு சொல்லியும் நீ கேளாவிடின், இந்த ராஜ்யத்திலுள்ள யாவரும் உன் ஜன்ம சத்ருக்களாவார். உனக்கு யார் துணை? கார்யம் மிஞ்சு முன், தக்க ஏற்பாடுகளைச் செய்”யென்ருன்.

அவனுடைய பலத்தையும் தைர்யத்தையும் சக்தியையும் நன்ருயறிந்த மஹாராணி, சற்றும் அஞ்சாமல், “நான் மஹாராஜாவின் நாட்டுப்பெண்; மஹாராஜாவின் பார்யை; மஹாராஜாவின் தாய். இப்படியிருக்க, வேறொருவனுடைய அதிகாரத்திற்கு என்னை உட்படுத்துவது அழகல்ல. மதசம்பந்தமான விஷயங்களில் உமது வார்த்தையும் உபதேசமும் எனக்குப் பிரமாணமே. அதை நான் மீறத் துணியமாட்டேன். ஆனுல், பேராசை கொண்டு, உமது வயதிற்கும் ஜாதிக்கும் படிப்பிற்கும் முற்றிலும் தகாத கார்யத்தில் மனதைச் செலுத்தி என்னை வஞ்சித்துப் பயமுறுத்தப் பார்த்தால், அது எவ்விதத்திலும் பலிக்காதென்பதை நன்ருய் அறியலாம். உம்மால் செய்யக்கூடியதை நான் தடுக்கமுடியாது. ஆயினும், நியாயமும் ஸத்யமும் எந்தக் கக்ஷியி லிருக்கிறதோ, அதே ஜயிக்குமென்று நம்பியிருக்கிறேன்” என்று பதிலளித்தாள்.

கங்காதரன் அதைக்கண்டு கோபங்கொண்டு முன்யோசனையில்லாமல், குரங்குதானுங் கெட்டுச் சந்திர புஷ்கரணியையும் கெடுத்ததுபோல், தனக்கு அஹல்யாபாயிடத்திலுள்ள துவேஷத்தாலும், தன் எண்ணங்கள் நிறைவேறவில்லையென்ற ஆத்திரத்தாலும் தன் கபடத்தை அவள் கண்டுபிடித்தாளே யென்ற வெட்கத்தாலும், அக்காலத்தில் மஹாராஷ்டிர ராஜ்யத்திற்குத் தலைவனுயிருந்த பீஷ்வாவுக்கு ரஹஸ்யமாய் ஸமாசார மனுப்பி, “இந்தூர் ராஜ்யத்தில் தகுந்த நாதனில்லை. கேவலம் கையாலாகாத ஓர் பெண்பிள்ளை, ராஜ்யத்தை ஆண்டு வருவதாயெண்ணி அபிநயித்து, பிரஜைகளையும் சேனையையும் தனக்கு விரோத மாக்கிக் கொண்டிருக்கிருள். எல்லோரும் மிகவும் அதிருப்தி யடைந்து, வேறு தகுந்த அரசன் எப்பொழுது வருவானென்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிருர்கள். நானும், மந்திரிகள் முதலியோரும் உதவிபுரிவோம்” என்று எழுதியனுப்பினுன்.

பிரபஞ்ச வர்த்தமானம்

NEWS & NOTES

ஸர் சங்கரன் நாயர்.

மிகவும் தாழ்ந்த நிலைமையிலிருந்து முன்னுக்கு வந்தவரும், சென்னை ஹைகோர்ட்டில் முதல் இந்திய அட்வோகேட் ஜனரலாக விருந்து அப்பதவிக்கு இந்தியர்கள் எவ்விதத்திலும் யோக்கியதை யுடையவர்களெனத் தெளிவாகக் காட்டினவரும், சமீபத்தில் இராஜப் பிரதிநிதியின் நிர்வாக சபையின் அங்கத்தினராகவுமிருந்த ஸ்ரீமான் ஸர் சங்கரன் நாயர் லண்டன்மா நகரிலுள்ள இந்திய ஆலோசனை சபையின் (India Council) அங்கத்தினருள் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட் டிருக்கிறாரென்பது நமக்கு மிகவும் மகிழ்ச்சியை விளைவிக்கின்றது. அவர் சிறந்த தேசாபிமானியாதலால், இப்புதுப் பதவியிலும் நம் தாய் நாட்டிற்காக முன்போலவே உழைப்பாரென நம்பியிருக்கிறோம்.

* * *

அரிசி விலை.

சென்ற 4, 5 வருஷங்களைவிட இவ்வருஷம் நல்ல மழை பல இடங்களில் பெய்திருந்தும், அரிசியின் விலையோ குறையக்காணோம். மழையில்லாக் காலத்தில் ரூபாவுக்கு 3½ படி கிடைத்த அரிசி இப்பொழுது 2 படி கிடைப்பதே அரிதாகிவிட்டது. சுவரை வைத்துக்கொண்ட பிறகே, சித்திரமெழுத முடியுமாதலால், நம் நாடு முன்னேற்ங்க வேண்டுமாயின், நம்மவர், ஆகாரத்திற்காகவாவது கஷ்டப்படாதிருக்க வேண்டுவது அவசியமென அனைவரும் ஒப்புக்கொள்வர். இந்த அரிசி விலையைக் குறைக்க துரைத்தனத்தாரும், தேசாபிமானிகளும் முன் வராவிடில், ஏழைகள் பாடு அம்பலந்தான் என்பதற்கையமில்லை. இனியாவது இவர்கள் விழித்துக் கொள்வார்களோ?

* * *

இலங்கை ஜாதீய மஹாநாடு.

சென்ற மாதம் இலங்கைத் தீவில் நடைபெற்ற மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட முக்கியமான தீர்மானங்களுள் சில வருமாறு:—(1) இலங்கைத் தீவிற்கு ஓர் சர்வ கலாசாலையும், ஒவ்வொரு முக்கியப் பட்டணத்தில் ஒரு காலேஜும் வேண்டும்; (2) வறுமையால் கஷ்டப்படும் இலங்கை வாசிகளுக்கு அரிசி குறைந்த விலைக்குக் கிடைக்கும்படி தகுந்த ஏற்படுகளைத் துரைத்தனத்தார் செய்யவேண்டும்; (3) பன்னிரண்டு வயதிற்குக் குறைந்த குழந்தைகளை வேலைக்கு அமர்த்தக் கூடாததோடு, அவர்களுக்குக் கட்டாயப் படிப்புக்கும் ஏற்பாடு செய்ய வேண்டும்; (4) தொழிலாளர் சற்று சிரம பரிகாரம் செய்யும்பொருட்டு, வேலைசெய்யும் நேரம் குறைக்கப்பட வேண்டும்; (5) கர்ப்பஸ்திரீகளைக் கவனிக்க ஏற்பாடுகள் செய்யவேண்டும்; (6) ஸ்திரீகளுக்கும் புருஷர்களைப் போலவே ராஜாங்க விஷயங்களில் ஓட் (Vote) சுதந்தரம் கொடுக்கப்படல் வேண்டும்.

* * *

ஸ்ரீமான் எஸ். கஸ்தூரி ரங்க ஐயங்கார்.

சிறந்த தேசாபிமானியும், சண்டை நடைபெற்றபோது மன்னர்பெருமானால் சீமைக்கு அழைக்கப்பட்டவரும், ஹிந்துப் பத்திரிகையை பொது ஜனங்களின் க்ஷேமத்திற்காக மிகவும் ஊக்கத்துடனும் திறமையுடனும் நடத்தி வருபவருமான ஸ்ரீமான் எஸ். கஸ்தூரிரங்கய்யங்காரின் அறுபதாம் ஆண்டு நிறைவு வெகு விமர்சையாகக் கொண்டாடப்பட்டது. நம்மவர் எல்லோராலும் கொண்டாடப்பட்ட ஸ்ரீமான் ஐயங்காரவர்கள் இன்னும் பலகாலம் சுக ஜீவியாயிருந்து, நம் நாட்டிற்குழைக்க ஈசுவரன் அருள்புரிவாராக!

பஞ்சரத்தினம்.—மணாளனைத் தவிர மற்றொருவரை மனத்திலும்நாடாத ருக்மிணி, நமனிடமிருந்து நாயகன் உயிரை மீட்டுவந்த சாவித்திரி, காதகர் கையிற்சிக்கி கஷ்டப்பட்ட காலத்தும் கற்பைக் காத்து வந்த ஸீதை, தந்தை வீட்டில் எல்லாச் சம்பத்திருந்தும் காதலன் பிரிந்த துக்கத்தால் தரையே படுக்கையாகவும், கந்தையே ஆடையாகவுமெண்ணிக் காலங்கழித்து வந்த தமயந்தி, கள்ளமென்பதை எள்ளளவும் உணராத தன்னைக் கூடிப்பிரிந்து ஆண்டுகளாயும் கணவன் வருமளவும் காத்திருப்பதே கடனெனக்கொண்ட சகுந்தலை முதலிய 5 புண்ணியவதிகளின் சரிதங்கள் கொண்டது. படங்களுடன், அ.12.

துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப்பட்டது.



மைசூரில் திவானாயிருந்த காலஞ்சென்ற ஸர். கே. சேஷாத்திரி ஐயர்.

THE LATE SIR K. SESHADRI AYYAR,
Dewan of Mysore.

விவேகபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்.

தொகுதி XII } சித்தார்த்தி௵ தைமீ :: 1920-௵ பிப்ரவரிமீ { பகுதி 8

கம்பராமாயணத் திரட்டு

SELECTIONS FROM KAMBA RAMAYANA

அறிந்து கூறினன் வீடண
னுமென வயில்வேல்
எறிந்த னன்னவன் மேனியி
லிலக்குவ னேற்றான்
பிறிந்து போயின னிராவணன்
மாருதி பெயர்த்தும்
செறிந்த மாமருந் தழைத்தலி
னுயிர் பெற்றான் சேயோன்.

சென்று கூடின னிராமனைத்
தெசமுகத் தவனும்
வென்றி மூலயாத் தானைக்கு
விருந்திட வமைந்தான்
பொன்றி னாரவ ரென்பது
தூதுவர் புகலக்
கன்றி னன்களம் புக்கனன்
கவியெலா மஞ்ச.

பூதல மளித்தோன் கூறப்
புரந்தான் கொடுத்த திண்டேர்
மாதலி கொணர வேறி
மகிழ்ந்தன னிராம னென்று
காதின வரக்கர் சேனை
கவிப்பெருஞ் சேனையான்ம
கோதரன் றன்னை யாவி
குறைத்தனன் பகழி யொன்றால்.

அந்தரத் தரக்கன் போக
வமலன்றே ரனுக விட்டான்
மந்திர மாயை யெய்ய
ஞானத்தால் வள்ளன் மாய்த்தான்.
உந்தின சூலமொன்றை
யுகுத்தன னுங்கா ரத்தால்
கந்தரத் தலைகள் பத்துங்
கரங்களுங் கணையாற் கொய்தான்.

கிளைத்தன சிரமுந் தோளுங்
கேடிலா னெய்ய வெய்ய
விளைத்ததோர் வரமுண் டென்ன
விரிஞ்சன்மாப் படையை விட்டான்
உளைத்தவன் றலத்து வீழ்ந்தா
னுடன்பிறப் பென்னு மன்பால்
இளைத்துவந் தடியில் வீழ்ந்தா
னிராவணற் கிளைய காளை.

மயன் மகள் வந்து மாய்ந்தாள்
வருகென நிருதர்க் கூவிப்
புயவலி யிராம வேந்தைப்
போற்றுதி ரென விராமன்
இயமலி யீமஞ் சேர்த்தி
யென்றனு மரக்கன் சேர்ந்தான்
செயமலி யநுமன் றன்னைச்
சீதைபாற் சேறி யென்றான்.

சென்றன னநும னோடு
வீடணன் சீதை தன்பால்
நின்றவ னிகழ்ந்த வாறு
நிரப்பி மஞ்சள் நீராட்டி
ஒன்றிய கலன்கள் பூட்டி
யுய்த்தன னிராம னோக்கி
நன்றுநீ செய்த தென்ன
நடுங்கின ளெரிபுக் குய்ந்தாள்.

ஏறிட விமானந் தன்னில்
யாவரு மிறைவி தானும்
P:11 மாறின வசந்தன் சேனை
நின்றது மலை வன்பால்
கூறின னநுமன் வாங்கிக்
கொண்டபின் குருசி றானும்
ஆறிய பாத்து வாச
னணிமலர்ச் சோலை புக்கான்.

வரதனு மநுமன் றன்னை வரன்முறை யேவ லோடும்
பரதனை யெரி புகாமற் பண்ணினான் மீண்ட பின்னர்
எரிமணி விமானத் தேறி யாவரு மினைய கோவும்
அரிமலர்க்குழலி னாளு மிராமனு மயோத்தி சேர்ந்தார்.

 கொல்லன் எளிமை கண்டு, குரங்கு காலுக்குப் பூண் கட்டச் சொன்னதாம்.

விவேக போதினி

தொ. 12] சித்தார்த்தி௵ தை௴ [ப. 8

யுதிஷ்டிரர்

YUDHISHTIRA

பாண்டவர்கள் வனத்திற்குச் சென்று, தங்களை விட்டு ஒருபொழுதும் பிரியமாட்டோமென்று ஒரே பிடிவாதமாய்ப் பின்தொடர்ந்தவர்களை எப்படிக் காப்பாற்றுவதென யுதிஷ்டிரர் கவலையுற்றபொழுது, சௌனகரென்ற ஒரு ரிஷி அவருக்குச் சூரிய மந்திரத்தை உபதேசித்தார். அதை விதிப்படி ஜபித்துச் சித்தியடைந்து சூரியபகவானுடைய கிருபையைப் பெற்றவுடன், ஆதித்திய மூர்த்தி அவருக்குப் பிரத்தியட்சமாய்க் "குழந்தாய்! உன் இஷ்டம் நிறைவேறட்டும். நீங்கள் வனவாசஞ் செய்யும் பன்னிரண்டு வருஷங்களும் உங்களுக்குக் குறைவில்லாமல் ஆகாரங் கிடைக்கும்படி ஏற்பாடு செய்கிறேன். இதோ நான் கொடுக்கும் இந்தப் பாத்திரத்தைப் பெற்றுக்கொள். பதிவிரதா சிரோமணியான பாஞ்சாலி போசனஞ் செய்வதற்குமுன், இதைக் கையில் வைத்துக்கொண் டிருக்கும் வரையில் நீங்கள் மனதால் நினைக்கக்கூடிய எவ்வகை உணவும் குறைவில்லாமல் வளர்ந்துகொண்டே யிருக்கும். இதற்குப் பதினன்காவது வருஷத்தில் நீங்கள் மறுபடியும் ராஜ்யத்தை அடைவீர்களெ"ன்று ஆசீர்வதித்து மறைந்தார்.

பாண்டவர்கள் வனத்தில் வசிக்கும்பொழுது திரௌபதி, தான் பட்ட கஷ்டங்களை நினைத்து நினைத்து வருந்தி, கௌரவர்களை ஜயித்து அழித்து, ராஜ்யத்தைக் கைப்பற்றும்படி பல காரணங்களை எடுத்துச் சொல்லி, யுதிஷ்டிரரைத் தூண்டிவிட்டாள். "மஹாராஜாவே! எப்பொழுதும் பொறுமையையே கொண்டாடுகிறவன் பல கஷ்டங்களுக்கு உள்ளாவான். வேலைக்காரர்களும், சத்துருக்களும், அந்நியர்களும் அவனை எப்பொழுதும் அலட்சியஞ் செய்வார்கள். ஒருவரும் அவனுக்கு வணங்குவதில்லை. அவனை அலட்சியஞ்செய்து, அவனுடைய வேலைக்காரர்கள் கெட்ட வழிகளில் நடப்பார்கள். அவனுடைய உடைகளையும், ஆபரணங்களையும், வாகனங்களையும், ஆசனங்களையும், படுக்கைகளையும், அன்ன பானங்களையும் தங்களிஷ்டப்படி உபயோகிப்பார்கள். அவன் செய்யும் உத்தரவைச் செவிகொடுத்துக் கேட்கமாட்டார்கள். அவனுக்குத் தகுந்த மரியாதை செய்யமாட்டார்கள். அவன் கொடுக்கும்படி சொன்னவர்களுக்குக் கொடுப்பதுமில்லை. தனக்குத் தாழ்ந்தவர்களிடத்தில் அவமானப்படுவதைக் காட்டிலும் மரணமே மேலாகும். எதைச் செய்தாலும் பொறுத்துக்கொண் டிருப்பவனை, பெண்டு பிள்ளைகளும் வழிப்போக்கர்களும் அவமதிப்பார்கள். அவனுடைய பார்யை தன்னிஷ்டப்படியே நடப்பாள். பிள்ளைகள் பெரியோர்களிடத்தில் வைக்கும் மரியாதையை முற்றிலும் மறப்பார்கள். அவனுடைய தனத்தையும் மனைவியையும் அபகரிப்பதைப்பற்றி எவரும் அஞ்சார்கள். முடிவில் அவனுடைய உயிருக்கும் உலைவைப்பார்கள். புத்திமான்கள் பொறுமையை எப்பொழுதும் கைக்கொள்ளார்கள்.

"ஆகையால், தகுந்த சமயத்தில் பொறுமையைக் காட்டவேண்டும். தகுந்த சமயத்தில் கோபிக்கவேண்டும். தகுந்த சமயத்தில் தண்டிக்கவேண்டும். நீர் எப்பொழுதும் பொறுமையையே கைக்கொண்டு, தண்டிக்கவேண்டியவர்களைத் தண்டிக்காமலிருப்பதால் எண்ணிறந்த கெடுதிகளுக்கும் அவமானத்திற்கும் உம்மையும் உம்மைச் சேர்ந்தவர்களையும் ஆளாக்கினீர். நியாயமாய்க் கிடைக்க வேண்டிய ராஜ்யத்தை இழந்தீர்.

"நான் உம்மை எப்பொழுதும் கோபத்தையும் தண்டனையையும் உபயோகிக்கவேண்டுமென்று சொல்லவில்லை. பொறுமையையே அறியாமல், எப்பொழுதும் கோபித்து, கடுமையாய், நியாயா நியாயமில்லாமல் தண்டிக்கிறவனை விட்டு, பெண்டுபிள்ளைகளும் உறவினர்களும் நண்பர்களும் முடிவில் எல்லா ஜனங்க

ளும் விலகுகிறார்கள். அவனிடத்தில் எல்லோருக்கும் மதிப்புக் குறையும் வெறுப்புமுண்டாகும்; பகைவர் வரவர அதிகரிப்பர்; துக்கமும் கஷ்டமும் மேற்கொள்ளும்; கீர்த்தியும் செல்வமும் அழியும். முடிவில் புலி பாம்பு முதலிய துஷ்ட ஜந்துக்களைப்போல், அவனைக் கண்டு எல்லோரும் நடுங்கி, ஜனங்களின் க்ஷேமத்தைக் கருதி, அவனைக் கொல்வதைப் புண்ணிய கருமமாய் நினைப்பார்கள். தனக்கு உபகாரஞ் செய்தவனையும் அபகாரஞ் செய்தவனையும் பேதமின்றிக் கடுமையாய்த் தண்டிப்பவனிருக்கும் ராஜ்யத்தில் எவரும் குடியிருக்கத் துணியார்கள். அன்பால் கட்டுப்படுத்த வேண்டியவர்களை, பயத்தாலும் பலத்தாலும் கொடுமையாலும் எவ்வளவு காலம் கட்டுப்படுத்த முடியும்? அவனைக் கெடுப்பதற்கு எப்பொழுது சமயம் வாய்க்குமென்று இரவு பகலாய்ப் பலர் கார்த்துக் கொண்டிருப்பார்கள்.

"ஆகையால், ஒருவன் எப்பொழுதும் கோபிப்பதும் பிசகு, பொறுப்பதும் பிசகு. சமயத்திற்குத் தகுந்தபடி அந்தக் குணங்களை உபயோகிக்க வேண்டும். இம்மையிலும் மறுமையிலும் அவனுக்குக் குறைவற்ற சுகமுண்டு. இதற்கு முன் நமக்கு உபகாரஞ் செய்தவன், இப்பொழுது நமக்குப் பெருந்தீங்கு விளைத்தால், அவன் செய்த நன்மையை நினைத்து, அவனை மன்னிக்க வேண்டும். அறியாத்தனத்தாலும் புத்தியீனத்தாலும் நமக்குக் கெடுதி செய்பவர்களை நாம் மன்னிக்க வேண்டும். உலகத்தில் எல்லோரும் புத்திமான்களாயும் வேத சாஸ்திரங்களில் நிபுணர்களாயு மிருக்க முடியுமா? மனப்பூர்வமாய், வேண்டுமென்று தெரிந்தே நமக்குக் கெடுதி செய்பவர்களை, அவர்களுடைய குற்றம் அற்பமாயிருந்தாலும், கடுமையாய்த் தண்டிக்க வேண்டும். முதல் தடவை குற்றஞ்செய்யும் எல்லோரையும் மன்னிக்கவேண்டுவது அவசியம். இரண்டாவது தடவை ஒருவன் குற்றஞ்செய்தால், அது அற்பமாயிருந்தாலும், அதற்குத்தகுந்தபடி தண்டிக்க வேண்டும். ஒருவன் தெரியாமல் குற்றஞ்செய்தால், அதை நன்றாய் விசாரித்து, அவனை மன்னித்து, 'இனி இப்படிச் செய்யக்கூடாதென்று எச்சரிக்கவேண்டும்.

"பொறுமை, பலவான்களையும் ஜயிக்கும். பொறுமை பலவீனர்களையும் பலவான்களாய்ச் செய்யும். பொறுமைக்கு அசாத்தியமானது யாதொன்றுமில்லை. ஆகையால், பொறுமையுள்ளவனே யாவற்றிற்கும் பிரபு. மேலும், காலத்தையும் தேசத்தையும் நன்றாய்க் கவனித்து, நமது பலாபலத்தையும் கவனித்து, குற்றவாளிகளை மன்னிக்கவும் தண்டிக்கவும் வேண்டும். இப்பொழுது நீர் பராக்கிரமத்தைக் கைக்கொண்டு, கௌரவர்களைத் தண்டித்து, க்ஷேமமடைவதற்குத் தகுந்த சமயமென்று நினைக்கிறேன். அவர்களிடத்தில் பொறுமையைக் காட்டுவதற்கு இது சமயமல்ல" வென்றாள்.

அதைக்கேட்டு யுதிஷ்டிரர் "துருபதராஜ புத்திரியே! நீ பொறுமை பெரிதெனச் சொல்வது நீதிக்கும் தருமத்திற்கும் ஒத்ததே. ஆனால், எதை இப்பொழுது உபயோகிக்க வேண்டியதென்பதைப்பற்றி நான் வேறு அபிப்பிராயப்படுகிறேன். கோபம் ஜனங்களை அழிக்கும். கோபம் ஜனங்களுக்குச் சில சமயங்களில் க்ஷேமத்தைச் செய்து, மேலான பதவியில் வைக்கும். ஆகையால் க்ஷேமத்திற்கும் கஷ்டத்திற்கும் கோபமே காரணமாகுமென்று அறிவாய். கோபத்தை அடக்குகிறவனுடைய தலையில் க்ஷேமமென்ற கிரீடம் விளங்கும். கோபத்தை அடக்க முடியாதவன் கஷ்டமென்ற வலையில் சிக்கி மாள்வான். மனிதரை வேரறுக்கும் கோபத்தை என்போன்ற அரசன் எப்படிக் கைக்கொள்ள முடியும்?

"கோபங்கொண்டவன் தன் குருவையும், பெற்ற தாய் தகப்பனையும் கொல்வான். பகுத்தறிவற்ற புலி முதலிய துஷ்ட மிருகத்திற்கும், கடுங்கோபத்தால் பகுத்தறிவற்ற மனிதனுக்கும் பேதமென்ன? கோபமென்ற மதுவைக் குடித்து மதிமயங்கி மெய்மறந்து, சொல்லக்கூடாததைச்சொல்வான்; செய்யக்கூடாததைச் செய்வான்; ஆண் பெண்ணென்றும், சிறியவன் பெரியவனென்றும், பண்டிதன் மூடனென்றும், மன்னன் ஏழை என்றும் பாரான். பாப புண்ணியம் இன்னதென்று அவனுக்குப் புலப்படாது. சாதுவைக் கொல்வான்; துஷ்டனைப் பூஜிப்பான்; கடுங்கோபத்தால் தன்னையே மாய்த்துக்கொள்வான். ஆகையால், இம்மையிலும் மறுமையிலும், க்ஷேமத்தை விரும்புவோர் கோபத்தை அடக்கவேண்டும். சாந்தமுள்ள மனதையுடைய பெரியோரால் புகழப்

படும் பொறுமையைக் கைக்கொள்ளாமல், கோடானுகோடி ஜனங்களின் க்ஷேமத்தையும் நாசத்தையும் என் கையில் வைத்துக்கொண்டிருக்கும் நான், யாவராலும் வெறுக்கப்படும் கோபத்திற்கு ஏன் இடங்கொடுக்க வேண்டும்?

"ஆகையால், நான் எப்பொழுதும் கோபத்தை ஜயிப்பதற்கே முயல்வேன். ஒருவன் நம்மைக் கோப மூட்டும்பொழுது, நாமும் கோபித்தால், நமக்கும் அவனுக்கும் நாசத்தைத் தேடுகிறோம். கோபத்தை அடக்கினால் அவனையும் நம்மையும் பெரிய ஆபத்திலிருந்து காப்பாற்றுகிறோம். பலமில்லாதவன், பலவான்களால் உபத்திரவிக்கப்பட்டபொழுது, கோபங்கொண்டு அவர்களை எதிர்த்தால், தன் நாசத்தையே தேடிக்கொள்ளுகிறான். இப்படிப் புத்தி பூர்வகமாய்த் தன்னைக் கொன்றவனுக்கு ஒரு நாளும் நற்கதி கிடைக்காது. ஆகையால், பலவீனன் எப்பொழுதும் கோபத்தை அடக்க வேண்டும்.

"நம்மை உபத்திரவிப்பவனைத் தண்டிப்பது இழிவான செய்கையாகும். அதை அலட்சியஞ்செய்து பொறுத்திருப்பது நடுத்தரமான செய்கையாகும்; எதிரிக்குத் தன் குற்றம் தெரிந்து, அதை விலக்கி, நற்குணத்தைக் கைக்கொள்ளச் சிரத்தை, இவைகளால் பிறக்காது. ஆனால், பிறர் நமக்குச் செய்யும் கெடுதியைப் பொறுத்துக்கொண்டு, அவர்கள் அறிவின்மையால் அப்படிச் செய்கிறார்களென்றறிந்து, அதற்கு மேலாக அவருக்கு நாம் உபகாரத்தைச் செய்து, கெடுதியை விலக்கி, அவர்களுக்கு நல்ல புத்தியைக் கொடுக்கும்படி கடவுளை வேண்டினால், நமக்கு யாதொரு குறைவுமில்லை. நமக்குக் கெடுதி செய்தவனுடைய மனதில் நமது நடத்தை பதிந்து, நாம் அவனைத் தண்டிக்கக்கூடிய வல்லமையிருந்தும், தண்டிக்காமல் விட்டதுமன்றி, அவனுக்கு நன்மையையே செய்ததை நினைத்து நினைத்து, அவன் உள்ளம் உருகிக் கசடற்று, பரோபகாரமே மேலான தருமமென்று நிச்சயங்கொண்டு, நல்வழியில் வேரூன்றி நடப்பான்.

"பொறுத்தார் பூமியாள்வாரென்று நீ கேட்டதில்லையா? மெய் பொய்யை ஜயிக்கும். கருணை கொடுமையை ஜயிக்கும். துரியோதனனைக் கொன்று ராஜ்யத்தை அடைவதற்காக நீசமான கோபத்திற்கு இடங்கொடுத்து, கீர்த்தியையும் புண்ணியத்தையும் ஆத்ம லாபத்தையும் ஏன் கெடுத்துக் கொள்ளவேண்டும்? கோபத்திற்கிடங் கொடுத்தபிறகு, பெரிய அணையில் ஊசி முனையளவு துவாரஞ் செய்தது போல், மற்றத் துர்க்குணங்கள் வரவரப் பெருகும். இராஜஸ தாமஸ ஸ்வபாவம் மேலிட்டு ஸாத்துவிக ஸ்வபாவத்தை வேரறுக்கும். பிறகு தயை, அடக்கம், பரோபகாரம், உண்மை முதலிய நற்குணங்களுக் கிருப்பிடமேது? ஞான சூரியன் ஒளிமழுங்கி அஞ்ஞானமென்ற ராகுவால் விழுங்கப்பட்டபிறகு, கோரமான நரகம் கைமேல் நெல்லிக்கனியைப்போல் நமக்கு சாசுவதமென்று சொல்லவும் வேண்டுமோ? கோபத்திற்குக் கோபம் ஔஷதமாகுமா? நெருப்பு நெருப்பால் அணையுமா? ஒரு வியாதி வேறொரு வியாதியால் ஒழியுமா! நம்மைக் கோபித்துக்கொள்ளும் ஆசாரியனையும், கணவனையும், பெற்றோர்களையும், மூத்தோரையும், அரசனையும், நாமும் எதிர்த்துக் கோபித்து, அவர்களைத் தண்டிக்க நினைத்தால் ஜனசமூக வாழ்வென்பது ஒரு நிமிஷமாவது சாத்தியமாகுமா? இப்படியே தெரியாத்தனத்தாலும், முன்யோசனையில்லாமலும், தீர விசாரிக்காமலும், நம்மிடத்தில் கோபித்து, கெடுதி செய்யும் மனைவியையும், குழந்தைகளையும், தாழ்ந்தோரையும், நாமும் எதிர்த்து, கோபத்திற் கிடங்கொடுத்து, அவர்களைத் தண்டிக்க நினைத்தால், ஜனசமூக வாழ்வு எப்படி நடக்கும்?

"நாம் இப்பொழுது இருக்கும் நிலைமையில் கௌரவர்களை எதிர்ப்பது உசிதமல்ல. பன்னிரண்டு வருஷங்கள் வரையில் வனவாசஞ்செய்வதாயும், பிறகு ஒரு வருஷம் அஞ்ஞாத வாசஞ்செய்வதாயும், பிரதிக்கினை செய்து, இப்பொழுது நீயும் என்னுடன் பிறந்தார்களும் படும் கஷ்டத்தாலும், சொல்லும் காரணங்களாலும், அதை மீறி நடப்பது தருமமல்ல. தருமம் தவறினால், தெய்வம் நமக்கு அனுகூலஞ் செய்யாது. தெய்வ பலமில்லாமல் நமக்கு க்ஷேமம் கிடைப்பதெப்படி?

"மேலும், கௌரவர்கள் இப்போது ராஜ்யத்தை ஆளுகிறார்கள். சேனையும், பொக்கிஷமும், கோட்டைகளும், அவர்களுடைய வசத்திலிருக்கின்றன. குறிப்பிட்ட காலத்திற்குள் நமது வார்த்தையை மீறி நடந்து, அவர்களுடன்

பகைத்தால், நமது நண்பர்களும், மத்தியஸ்தர்களும், நமது குடிகளும், நமக்கு உதவிசெய்யார்கள். இந்தப் பதின்மூன்று வருஷங்கள் வரையில் கௌரவர்கள் ராஜ்யபரிபாலனஞ் செய்து வரட்டும். குடிகளும், பெரியோர்களும், மற்றுமுள்ளோரும், அவர்களுக்கும் நமக்குமுள்ள பேதத்தை அனுபவத்தால் அறிந்து கொள்ளட்டும். பிறகு அவர்களே நம்மை வேண்டி அழைப்பார்கள்.

"மேலும், கௌரவர்கள் தங்களுடைய பாப புத்தியாலும் கொடுமையாலும் துர்க்குணங்களாலும் கொடிய செயல்களைச் செய்து, தங்களுடைய சக்தியையும் பலத்தையும் வரங்களையும் தவத்தையும் அழித்துக்கொள்வார்கள். நாமோ அதற்குள் சத்தியத்தையும் பொறுமையையும் கைக்கொண்டு, கடுந்தவத்தாலும் பெரியோர்களைப் பூஜிப்பதாலும், பலத்தையும் பராக்கிரமத்தையும் தெய்வானுக்கிரகத்தையும் குறைவறப் பெறுவோம்.

"மேலும், கௌரவர்களின் அக்கிரமத்தையும் நமது சத்தியத்தையும் பொறுமையையும் உறுதியையும் கண்டு, இது வரையில் நமக்குப் பகைவரா யிருந்தவரில் பலர் நமக்கு நண்பராவர். மத்தியஸ்தமா யிருந்தவர்களைப் பற்றிச் சொல்லவேண்டியதில்லை. இக்காரணத்தாலேயே கௌரவர்களுக்கு இது வரையில் நண்பரா யிருந்தவரும் விரோதி யாவார்கள்.

"மேலும், நாம் இந்த துக்கக் கடலிலிருந்து கரை ஏறுவதற்கு யாரைக் கப்பலாய் நம்பியிருக்கிறோமோ, அந்தப் பார்த்தன் மகரிஷிகளாலும் தேவதைகளாலும் அனுக்கிரகத்தையும் அபூர்வமான வரங்களையும் தவத்தால் பெறட்டும்.

"மேலும், நமது பிரதிக்கினை தவறாமல் வனவாசத்தை முடித்து, மறுபடியும் நமக்கு ராஜ்யத்தைக் கொடுக்கும்படி கேட்போம். பதினான்கு வருஷங்களாய் ராஜ்யத்தை ஏகசக்கிராதிபதியாய் ஆண்ட கௌரவர்கள், அதை நமக்குக் கொடுக்க ஒருநாளும் விரும்பமாட்டார்கள். வனவாசஞ்செய்து வந்த நமக்குப் பலமும் நண்பர்களும் சேனையுமில்லை யென்றும், தங்களிடத்தில் ராஜ்யமும் பொக்கிஷமும் அதிகாரமும் சைன்னியமு மிருக்கின்றன வென்றும் இறுமாப்படைந்து நம்மை அலட்சியஞ் செய்வார்கள். அப்பொழுது நமது சத்தியமும் பொறுமையும், அவர்களுடைய துரோகமும் வஞ்சனையும் அதருமமும், எல்லோருக்கும் நன்றாய்த் தெரியும். தேவதைகளும் மகரிஷிகளும் பெரியோர்களும் நம்மைப் புகழ்ந்து, ஆசீர்வதித்து ஆதரிப்பார்கள்; அவர்களை நிந்தித்து வெறுத்துச் சபிப்பார்கள். மேலும், நமக்கு ரட்சகனும் குருவும் உயிர்த்தோழனும், பந்துவுமான கண்ணன் சொல்லுகிறபடியே நாம் நடக்கவேண்டும். நீ எண்ணுகிறபடி நடப்பது எப்பொழுது உசிதமென்று அவருக்குத் தெரியும். காலமும் தேசமும் கரும கதியும் ஒத்திருக்கும்பொழுது அவர் அஜாக்கிரதையா யிருக்கமாட்டார். பொறுமையுடன் தீர்க்காலோசனை செய்து காரியங்களை ஆரம்பிப்பதால், ஒருநாளும் கெடுதி வாராது; முன் யோசனையின்றிப் பதட்டமாய்ச் செய்யும் காரியம் நம்மையும் பிறரையும் கெடுக்குமெ"ன்றார்.

பாண்டவர்கள் காட்டில் வசித்துக்கொண்டிருக்கும்பொழுது ஒருநாள் பீமசேனன் தங்களுடைய ஆச்சிரமத்திலிருந்து வெகுதூரம் காடுகளில் சஞ்சரித்துக்கொண்டிருக்கையில், ஓர் மலைப்பாம்பிற்குச் சமீபத்தில் சென்று, அதினால் இறுகக் கட்டப்பட்டான். அநேக ஆயிரம் யானைகளின் பலத்தை யுடையவனாயிருந்தும், ராக்ஷஸனுடைய கையில் அகப்பட்ட குழந்தையைப்போல், ஒன்றுஞ் செய்யமுடியாமல் தத்தளித்தான். தன்னை இன்னானென்று அதற்குத் தெரிவித்து, அது மகரிஷியின் சாபத்தால் பாம்பின் ரூபத்தை யடைந்த நகுஷ சக்கரவர்த்தி யென்றறிந்தான். தன் கதியை நினைத்து வருத்தப்பட்டுக்கொண் டிருக்கையில், பீமன் ஆசிரமத்திற்குத்திரும்பி வாராததைக்கண்டு யுதிஷ்டிரர் கவலைகொண்டு, "பீமன் எங்கேயெ"ன்று திரௌபதியைக் கேட்க, "அவர் வெளியில் போய் வெகுநேரமாயிற்றெ"ன்றாள். பாஞ்சாலியை விஜயனிடத்திலும், பிராமணர்களை நகுலசகதேவர்களிடத்திலும் ஒப்புவித்து, முறிந்த மரங்களாலும் இறந்த மிருகங்களாலும் பீமனுடைய ஆழ்ந்த அடிச்சுவடுகளாலும் அவன் போனவழியில் சென்று, மலைப்பாம்பால் கட்டுண்டு தீனமாய்த் தவிக்கும்

(இதன் தொடர்ச்சி 253-ம் பக்கம் பார்க்க.)

கொல்லைக்குப் பல்லி, குடிக்குச் சகுனி.

பக்தியின் பெருமை

THE GREATNESS OF BAKTI

[ஸ்ரீமான் P.S. சுப்பிரமணிய ஐயரவர்கள், M.A.]

(227-ம் பக்கத் தொடர்ச்சி.)

மேலே "வாட்டியெனை" என்று ஆரம்பிக்கும் பாடலில் 'காலனணுகா நினருளன்புதாராய்' என்கிறார். இன்னும் பலவிடங்களில் இவ்வாறே மரணத் தருவாயில் யமனும் யமபடர்களும் தன்னை யணுகும் வேளையில் வந்து தனக்கு உதவி புரியவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறார்.

"அந்த கனுமெனைய டர்ந்து வருகையினி
லஞ்ச லெனவலிய மயில்மேல் நீ
அந்த மறவிபொடு கந்த மனிதனம
தன்ப வனமொழிய வருவாயே',

என்றும்,

"பண்பி லாதொரு பகடது முதுகினில் யமராஜன்
அஞ்ச வேவரு மவதர மதிலொரு
தஞ்ச மாகியே வழிவழி யருள்பெறும்
அன்பி னுனதடிபு கழடிமைமெய் — னெதிரே நீ
அண்ட கோளகை வெடிபட இடிபட
எண்டி சாமுக மடமட நடமிடும்
அந்த மோகர மயிலினி லியனுடன் வரவேணும்"

என்றும்,

"எனைக்க டந்திடு பாசமு மேகொடு
சினத்து வந்தெதிர் சூலமு மேகையி
லெடுத்தெ திர்ந்தழல் வாய்விட வேபய
முறவேதாள்—
இழுக்க வந்திடு தூதர்க ளானவர்
பிடிக்கு முன்புன தார்மல ரிகிய
இணைப்ப தந்தர வேமயில் மீதினில் வரவேணும்"

என்றும் யமதூதர்கள் தன்னை நமனுலகத்துக்கு அழைத்துப்போவதில் தனக்குள்ள பயத்தைத் தெரிவிக்கிறார்.

அவரவர்களியற்றும் பாபங்களுக் கேற்றவாறு மனிதர்களுக்குத் தண்டனைவிதிப்பதற்காக கடவுளால் நியமிக்கப்பட்டுள்ள யமதர்மராஜன் எவரையும் மன்னிக்கும் சக்தி வாய்ந்தவனல்லனாதலால், அவன் தன்னை தான் செய்த பாபங்களுக்காகத் தண்டிப்பது நிச்சயமென அறிந்துகொண்ட சுவாமிகள் தான் செய்த எண்ணிறந்த பாபங்களை மன்னித்து தன்னை ஆட்கொள்ளக்கூடியவரான கருணாசாகரவள்ளலை, தனது தாயான முருகக்கடவுளை, தான் யமன் கையிற் சிக்காமற்றடுத்து தன்னைக் காப்பாற்றும்படி பிரார்த்திக்கிறார்.

மேற்கூறியபடி நாம் இவ்வுலகிற்படும் இடர்களைக்களைந்து ஆசைகளையகற்றி நமக்கு முத்தியை யளிப்பதற்கு ஷண்முகநாதனையன்றி வல்லவர் யார்?

"ஏறுமயி லேறிவிளை யாடுமுக மொன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுக மொன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்க்குமுக மொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுக மொன்றே
மாறுபடு சூரரைவ தைத்தமுக மொன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுகமொன்றே"

என்ற பாடலைக் கவனிப்போம்.

பக்தர்களையும் தீனர்களையும் அவர்களுக்குத் துயர் ஏற்படும் தக்ஷணத்திலேயே காத்தருளுவதற்கு அவர்களுறைவிடத்துக்குச் செல்லுவதற்காகவே குமரக்கடவுள் மயிலை வாகனமாகக் கொண்டருளினர். அதன் வேகமானது அளவிட முடியாதது. திருப்புகழில் சுவாமிகள் மயிலை வருணிக்கும் போதெல்லாம் அதன் வேகத்தைப்பற்றியே விசேஷமாகச் சொல்லுகிறார். சில உதாரணங்கள் உரைக்கிறேன்.

"அண்ட கோளகை வெடிபட இடிபட
எண்டி சாமுக மடமட நடமிடும்
அந்த மோகர மயிலினி யலுடன் வரவேணும்"

என்றும்,

"..........................பண்டு பாரதம்
வட்டகாச் சிகரச் செம்பொன் மேருவில்
எழுதிய பவளக் குன்று தாதையை யன்றுசூழ
வலம்வரு மளவிற் சண்ட மாருத
விசையினும் விசையுற் றெண்டி சாமுக
மகிதல மடையக் கண்டு மாசுண முண்டுலாவு
மரகத கலபச் செம்புள்..."

என்றும்,

"கடிதுல கெங்கணும் தாடி யிட்டு வந்த
மயிலும்..............',

என்றும்,

"பக்கரைவி சித்ரமணி பொற்கலணை யிட்டநடை
பக்ஷியெனு முக்ரதுர கமு............"

என்றும்,.................."இருதிசை யிருகாலும்
"படியு நெடியன எழுபுண ரியுமுது
கிரி கிரியும் வருகென வருதகு
பவுரி வருமொரு மரகத துரகத மிசையேறி"

என்றும்,

மயிலை வர்ணித்திருக்கிறார். அவசர காலங்களில் வந்து தோன்றி உதவிபுரிய வல்லவர் நமது முருகக்கடவுள்.

நமது துயரை எவ்வாறு தீர்ப்பாரெனில், நமக்கு ஞானத்தைப்போதிப்பதனால் தீர்ப்பார். சுவாமிகள் இவ்வபிப்பிராயத்தைப் பல பாடல்களில் தெரிவிக்கிறார்.

"தவன சலதியின் முழுகியெ யிடர்படு துயர்தீர
அகரமுதலான பொருளினை யருளிட
இருகை குவிசெய்து ளுருகிட வுருகியெ
அரக ரெனவல னிடமுற எழிலுன திருபாதம்
அருள அருளுடன் மருளற இருளற
கிரண அயில்கொடு குருகணி கொடியொடு
அழகு பெறமர கதமயில் மிசைவர இசைவாயே"

என்றும்

"அறிவாகமும் பெருக இடரானதுந் தொலைய
அருள் ஞான இன்பமது புரிவாயே"

என்றும் பாடி யருளியிருக்கிறார். உலகத்தில் மனிதர் படுந் துன்பங்களுக்கெல்லாம் அஞ்ஞானமே காரணமாகும். ஓர் மனிதன் தான் மிகுந்த பிரியம் வைத்துள்ள ஓர் பொருளை இழக்கிறான். அப்போது அப்பொருளை தான் இழக்க வேண்டுமென்பது ஈசனது திருவுளமென்றும் தனது நன்மைக்காகவேதான் ஈசன் அதை இழக்கும்படி செய்தானென்றும் அறிந்துகொள்வானேயாகில், அவனுக்குத் துயரமுண்டாகுமோ? அப்படிப்பட்ட அறிவில்லாமற் போனால் அவன் ஆராத்துயரமுற்று உலகத்தையும் தெய்வத்தையும் தன்னையும் நொந்துகொள்ளமாட்டானா? ஆதலால், நமது இடர் தொலைவதற்கு ஞானந்தான் முக்கியமாக வேண்டும். அத்தகைய ஞானத்தை உலகுகளுக்கெல்லாம் போதிப்பதற்காகவே பரமசிவன் குமாரக் கடவுளை ஈன்றருளினார். அத்தகைய ஞானபோதனா சக்தி தனதருமைக் குமாரனுக்கு உண்டு என்பதை உலகுகளுக்கெல்லாம் உணர்த்தவே பரமசிவன் தனது குமாரனைக் குருவாக அமர்த்தி தான் சிஷ்யனாக விருந்து சகலத்துக்கும் காரணமான பிரணவத்தின் பொருளைக் கற்றுக்கொண்டார். அக்குமாரக் கடவுளை, சுவாமிநாதனை, சிவகுருவை, ஞானதேசிகனை யார் வழிபடினும் அவருக்கு அவ்வள்ளல் ஞானத்தைப் போதிப்பது திண்ணம். அவ்வுண்மையையே "ஈசருடன் ஞானமொழி பேசுமுகமொன்றே" என்ற வாக்கியத்தினால் சுவாமிகள் தெரிவித்தார்.

அக்கடவுள் நமக்கு இன்னும் என்ன உதவி புரிவார்? "கூறுமடியார்கள் வினை தீர்க்குமுகமொன்றே" என்றார் சுவாமிகள். அவரிடத்தில் முறையிட்டுக் கொள்ளும் அடியார்கள் முற்பிறப்புக்களிற் செய்த இருவினைகளின் பயனை விலக்கி விடுவார். அவரால் ஆட்கொள்ளப்பட்டபின் அடியார்கள் செய்யும் வினைகளின் பயன் அவர்களைப் பாதிக்காது. அவ்வாறு வினை தீர்க்கப்பெற்றாலல்லது மனிதன் ஜனனமரண நோயற்றிருத்தல் ஆகாதாதலின், ஈசனருள் பெற்று இருவினைப்பயனை விலக்கிக் கொள்ளவேண்டுவது நமது முக்கிய நோக்கங்களி லொன்றாக விருக்கவேண்டும்.

இருவினைகள் மனிதனை ஆசாபயோநியில் மடுப்பதற்கு தமக்கு உதவியாக மாயையை அழைத்துக் கொள்ளுகின்றன. மாயையினால் ஏற்படும் மருளுக்கும் அஞ்ஞானமாகிய இருளுக்கும் வித்தியாசமுண்டு. உலகத்திலுள்ள பொருள்களெல்லாம் அழிவதைக் கண்ணாரக் கண்டு அவைகள் அழியுந்தன்மை யுள்ளனவென்றறிந்து கொண்ட பின்னும், மனிதன் இப்பூமியிலுள்ள பொருள்கள் சிலவற்றின்மீது மிகுந்த அன்பு பாராட்டி அவ்வன்பினால் ஏற்பட்ட மதிமயக்கத்தினால் அவைகள் அழியாதனவென நம்புகிறான். இதுவே மாயையினால் ஏற்படும் மருள். ஒருவன் ஓர் பெரிய காரியத்தைச் செய்துமுடிக்கிறான். உடனே தன்னுடைய திறமையைப் பற்றிப் பெருமை பேசுகிறான். அவனே மற்றொரு காரியத்திற் பிரவேசித்து அதைச் செய்ய முடியாமல் தயங்கி நிற்கிறான். அப்பொழுது தன் திறமைக் குறைவை இகழ்ந்து பேசாமல் தெய்வத்தைத் திட்டுகிறான். எல்லாம் எனையாளும் ஈசன் செயல் என்ற அறிவு அவனுக்கு வரவில்லை. உலகத்தில் மனிதன் செயல் ஒன்றுமில்லை என்பதை அவன் அறிந்து கொள்ளவில்லை; இதுவே அஞ்ஞானமாகும். ஞானபோதகத்தினால் அஞ்ஞானம் நீங்கிய பின்னும் மாயையினால் மயக்கம் ஏற்படக்கூடுமாதலின் மாயையை அகற்றும்படி ஈசனைப் பிரார்த்திக்கவேண்டும். மாயையின் சொரூபமான கிரௌஞ்சகிரியை ஞான சக்தியான சுடர்வேலினாற் பிளந்தருளிய வேலாயுதக் கடவுள் நம்

கொழுக்கட்டைக்குத் தலையும் இல்லை, குடியனுக்கு முறையும் இல்லை.

மைச் சூழ்ந்துள்ள மாயையை அகற்றவல்லார் என்பதற் கையமேது. இவ்வுண்மையையே 'குன்றுருவ வேல்வாங்கி நின்றமுகமொன்றே' என்ற வாக்கியத்தால் சுவாமிகள் தெரிவித்திருக்கிறார். அச்சுடர் வடிவேலனை வழிபட்டு நாம் மாயையை அகற்றிக் கொள்ளவேண்டும்.

நாம் துயருறுங்காலத்தில் கணப்பொழுதில் நம்பாலுற்று அருள் புரிவதற்காக வேகத்தில் நிகரற்ற மரகதமயின் மீதேறி, நமது துயரைத் தீர்ப்பதற்காக நமக்கு ஞானத்தைப் போதிக்கவும், நாம் முறையிட்டுக்கொண்ட மாத்திரத்தில் நமது வினைப்பயனை விலக்கவும், மாயையினின்று நம்மை விடுவிக்கவும் தயாராய்க் காத்துக்கொண்டிருக்கும் வேலைக்காரனை, செஞ்சொ லடியார்கள் வாரக்காரனை வழிபடவொட்டாமல் நம்மைத் தடுக்கும் காமக்குரோதம் முதலான கெட்ட குணங்களை எவ்வாறு வெல்லுவது? வெல்லுவது சாத்தியமோ? சாதாரண மானிடர்களுக்கு புலன்களை அடக்குவது சாத்தியமன்று. ஆயின், அவைகளை யடக்குந்திறமையை அத்தகைய மானிடர்களுக்கு அளிப்பதை குன்றுருவ ஏவிய வேலைக்காரன் தனது வேலையாக மதிக்கிறான். "மாறுபடு சூரரை வதைத்த" குகன் மானிடர் தன்னை வழிபடுவதற்கு இடையூறுகளைச் செய்யும் துர்க்குணங்களை எளிதில் விடுவானோ? சூரரை வதைத்தவாறு அத்துர்க்குணங்களையும் அழித்து விடுவான் என்பது திண்ணம்.

இவ்வாறு நமக்கு நன்மைபுரிவதற்குச் சதா காலமும் சித்தமாய்க் காத்திருக்கும் வள்ளி நாயகனை நாம் அடைவதற்கு நாமாக என்ன செய்யவேண்டுமெனில், வள்ளி நாயகியைப் போல அப்பெருமானை நாம் அடையவேண்டுமென்ற ஆராத காதலை எப்போதும் மனத்திலிருத்திவைக்கவேண்டும். வள்ளி நாயகியைப் பற்றிப் பேசும்போதெல்லாம், அவ்வம்மை குமரனிடத்து ஆராத காதலுடையவளென சுவாமிகள் கூறுகிறார். அவரை யடையவேண்டுமென்ற ஆசை மெய்யாகவும் பூர்ணமாகவும் ஒருவருக்கு இருக்குமாகில், முருகக்கடவுள் வந்து அவரைத் தடுத்தாட் கொள்ளுவாரென்பதற் கையமில்லை. இதற்கு வள்ளிநாயகியாரே சாக்ஷி. குமரகுருவை மணக்கவேண்டுமென வள்ளி நாயகியார் கொண்ட ஆசையை நாரத முனிவரால் அறிந்துகொண்ட கருணையங் கடலான சரவணபவன் அப்பிராட்டியாரது காதலைத் தீர்க்கவேண்டுமென்று தீர்மானித்து, மாறுவேடம் பூண்டு வள்ளிமலை மீது சென்று, அப்பிராட்டியாரை யணுகி தன் பெருங்காதலைத் தெரிவித்துக்கொள்ள, அப்பிராட்டியார் மாயையினால் அவரை அந்நிய புருஷனாக மதித்து, தன்னையறியாமல் அவரிடத்தில் தனக்குண்டான ஆர்வத்தை அடக்கிக் கொண்டு, அவரை அப்பால் போய்விடச் சொல்லி, பிறகு விநாயகமூர்த்தி யானையின் உருவமாக வந்து துரத்தின காலத்தில் பயந்து தன்னை இரக்ஷிக்கும்படி தன்னாயகனை குமரக் கடவுளை வேண்டிக் கொண்டாள். வள்ளி நாயகியாருக்கும் குமாரக் கடவுளுக்கும் பரஸ்பரம் உள்ள பெருங்காதலைப்பற்றி சுவாமிகள் பின்வருமாறு வர்ணிக்கிறார்.

"நாரத னன்றுசொ காயமொ ழிந்திட
நாயகி பைம்புன மதுதேடி
நாணம ழிந்துரு மாறிய வஞ்சக
நாடிய பங்கய பதநோவ
மாரச ரம்பட மோகமு டன்குற
வாணர்கு றிஞ்சியின் மிசையே போய்
மாமுனி வன்புணர் மானுத வுந்தனி
மானைம ணஞ்செய்த பெருமாளே."

"வேடர்செ ழுந்தினை காத்தித்தண்
மீதிலி ருந்தபி ராட்டிவி
லோசன அம்புக ளாற்செயல்— தடுமாறி
மேனித ளர்ந்துரு காப்பரி
தாபமு டன்புன மேற்றிரு
வேளைபு குந்தப ராக்ரம மதுபாடி;"

"குறவாணர் குன்றி லுறைபேதை கொண்ட
கொடிதான துன்ப மயல்தீர
குளிர்மாலை யின்க ணணிமாலை தந்து
குறைதீர வந்து குறுகாயோ;"

"குறமறவர் கொடியடிகள் கூசாது போய்வருட
கரடிபுலி திரிகடிய வாரான கானில்மிகு
குளிர்கணியி னிளமரம தேயாகி நீடியுயர்—குன்றுலாவி;"

இவ்வாறு வள்ளிநாயகியாரிடத்து குமரக் கடவுளுக்குள்ள அன்பு அவருக்கு ஒவ்வொரு ஜீவாத்மாவிடத்திலுமுண்டு. குமரன் உலக மாதாவான வள்ளிநாயகியாரை வேடர் குலத்தில் வளரச்செய்து தடுத்தாட்கொண்டது நம்மெல்லோரிடத்தும் அவருக்குள்ள அன்பு மிகுதியை நமக்குத் தெரிவிப்பதற்காகத்தான்.

அன்பினால் ஈசுவரனது அருளை எளிதில் பெற முடியு மென்பதை யுணர்த்துவதற்காகவே "வள்ளியை மணம்புணர வந்தமுகமொன்றே" என்றார் சுவாமிகள்.

இப்பக்திமார்க்கத்தின் பெருமையை சுவாமிகள் பலவாறாக எடுத்துரைக்கிறார். வேதங்கள், சாஸ்திரங்கள், புராணங்கள், மற்றுமுள்ள பல சமய நூல்கள் இவைகளை யோதுவதினாலும், சரியை, கிரியை, யோகம் முதலியவற்றை அனுஷ்டிப்பதனாலும் பரம்பொருளை யறிவது அரிதென்றும், ஆண்டவனிடத்தில் மெய்யான அன்பும் அனைவருக்கும் அடைக்கலமான அவன் பதும சரணங்களை யடைய வேண்டுமென்ற அடங்காத ஆசையும் குடி கொண்டிருக்கும் மனத்தவருக்கு பரம்பொருளை யறிவினா லறிந்து பேரானந்த வாரிதியிற் குளித்து மெய்வீடான குமரன் கழலிணைகளைச் சேர்ந்து அமர்தல் எளிதென சுவாமிகள் பல பாடல்களினால் தெரிவிக்கிறார். அவைகளிற் சிலவற்றை எடுத்துரைக்கிறேன்.

"சுருதி வெகுமுகபு ராண கோடிகள்
சரியை கிரியைமக யோக மோகிகள்
துரித பரசமய பேத வாதிகள் என்றுமோடித்
தொடர்வுணர அரி தாய தூரிய
பொருளை யணுகியது போக மானவை
தொலைய இனியவொரு ஸ்வாமி யாகிய நின்ப்ரகாசங்
கருதி யுருகியவி ரோதி யாயருள்
பெருகு பரமசுக மாம கோததி
கருணை யடியரொடு கூடி யாடிம கிழ்ந்துநீபக்
கனக மணிவயிர நூபு ராரிய
கிரண சரணஅபி ராம கோமள
கமல யுகளமற வாது பாடநி னைந்திடாதோ;"

"கறையிலங் குக்ரச் சத்தி தரிக்குஞ்
சரவணன் சித்தத் துக்கு ளொளிக்குங்
கரவடன் கொற்றக் குக்குட வத்தன்—தனிவீரக்
கழலிடும் பத்மக் கட்செவி வெற்பன்
பழநிமன் கச்சிக் கொற்றவன் மற்றுங்
கடகவஞ் சிக்குக் கர்த்த னெனச்செந்—தமிழ்பாடிக்
குறையிலன் புற்றுக் குற்ற மறுக்கும்
பொறைகளுற் றற்பப் புத்தியை விட்டென்
குணமடங்கக் கெட்டுக்குண மற்றொன்-றிலதான
குணமடைந் தெப்பற் றுக்களு மற்றுங்
குறியொடுஞ் சுத்தப் பத்த ரிருக்குங்
குருபதஞ் சித்திக் கைக்கருள் சற்றுங்கிடையாதோ;"

[அஞ்ஞானவிருளை நீக்கி ஞானவொளியை வீசும் உக்ரஞான சக்தியான வேலாயுதத்தைக் கையிலேந்தும் சரவணபவன்—மனிதர் இதயத்தில் மறைந்திருக்கும் திருடன்—வெற்றி வீரன் வருகிறானெனக் கூவும் மிக்க வலிமை பொருந்திய கோழியைக் கொடியாகவுடையவன்—நிகரில்லாத வீரனென்பதற் கடையாளமாக வீரக்கழல்கள் அணிந்துள்ள தாமரைப் பாதங்களை யுடையவனாய் நாகமலையில் எழுந்தருளியிருப்பவன்—பழனியையாளும் மன்னன்—காஞ்சீபுரத்து அரசன், அன்றியும் மலை வேடுவர் பெண்ணான வள்ளி நாயகியாரது நாயகன் என்று செந்தமிழாற் புகழ்ந்து பாடி, உன்னிடத்தில் பூர்ணமான அன்பு பூண்டு, (அவ்வாறு அன்பு பூண்டு பாடுவதால்) என்னிடத்துள்ள குற்றங்களை யகற்ற வல்ல பொறுமை, சாந்தம் முதலியன விருத்திபெறவும், அற்ப புத்தி யகலவும், என் குணங்களெல்லாம் அழிந்து குணமொன்றுமில்லாத நிர்க்குணனாகவும், எல்லாவிதமான ஆசைகளும் நீங்கவும் பெற்று, பிறகு உனதருள் பெற்றவர் என்பதையுணர்த்தும் சின்னங்கள் பொருந்திய தூய்மையுடைய பக்தர்களமர்ந்துள்ள மோக்ஷசாம்பிராச்சியத்தை நான் பெறுவதற்கு உனக்கருள் சிறிதுமில்லையோ ?]

"ஆசைகூர் பத்த னேன்மனோ பத்ம
மாமபூ வைத்து நடுவேயன்
பானநா விட்டு நாவிலே சித்ர
மாகவே கட்டி யொருஞான
வாசம்வீ சிப்ர காசியா நிற்ப
மாசிலோர் புத்தி யளிபாட
மாக்ருதா புஷ்ப மாலைகோ லப்ர
வாளபா தத்தி லணிவேனோ;"

[உன் மீது மிகுந்த ஆசையுடைய பக்தனாகிய நான் சஞ்சல சுபாவமுள்ள என் மனமாகிய தாமரை மலரை உன்னிடத்தன்பு என்னும் நாலினால் அம்மலர் சலிக்காதிருக்குமாறு உன் புகழைப் பாடவல்ல கரணமாகிய நாவினுதவியைக்கொண்டு விசித்திரமாகக் கட்டி, அவ்வாறு கட்டியபின் ஞானமாகிய வாசனையை வீசிப் பிரகாசித்துக்கொண்டும் களங்கமென்பது சிறிதுமில்லாது தெளிவடைந்துள்ள புத்தி என்னும் வண்டு மொய்க்கப் பெற்றும் உள்ள மாட்சிமை பொருந்திய புஷ்பமாலையை அழகு பொருந்தி பவளத்தின் நிறத்துடன் விளங்கும் உனது சரணங்களில் சாத்துவேனோ?]

கொள் என்றால் வாயைத் திறக்கிறது, கடிவாளம் என்றால் வாயை மூடுகிறதா ?

ஐரோப்பிய ஸயன்ஸூம் கர்நாடக ஸங்கீதமும் *

EUROPEAN SCIENCE AND CARNATIC MUSIC

[ஸ்ரீமான். பி. எஸ், சுந்தரமய்யர் அவர்கள், பீ. ஏ., எல். டி,]

இப்போது தென்னிந்தியாவில் வழங்கி வரும் ஸங்கீதத்தில் இரண்டு அம்சங்கள் வியக்தமாய்த் தெரிகின்றன. அவை என்னவென்றால்,

(1) 72 மேளகர்த்தா என்னும் விஷயமும்
(2) ஒவ்வொரு ராக ஆரோஹ அவரோஹ ஸ்வரவரிசைகள் கட்டுப்பாடாய் இருப்பதுமாம்.

மேலே காட்டிய இருவிஷயங்களும் ஒருவன் ராகஞானம் அடைவதற்குப் போதுமானவையா? இவ்விரண்டும் தெரிந்துவிட்டால் அவன் சரியாய் ராகத்தை விஸ்தரித்துப் பாடிவிடமுடியுமா? என்று கேட்டால் "முடியாது" என்னும் பதிலைத் தவிர வேறு உத்தரம் இல்லையென்பது ராகஞானம் அடைந்த யாவர்க்கும் தெரிந்த விஷயம்.

வாஸ்தவம் என்னவெனில், ராகஞானத்தையடைய வேண்டுமென்றால், இவ்விரண்டு அம்சங்களையும் தவிர அந்தந்த ராகத்துக்குரிய முக்கியமான அம்சங்களை ஸங்கீத குருவாய் ஏற்படுகிறவர் சிஷனுக்கு போதிக்கிறார். ஸாஹித்யங்களை ஸ்வரப்படுத்தி போதிக்கும்போது அந்தந்த ராகத்துக்குரிய ஸ்வரத்மாதுகளை சுட்டிக்காட்டுகிறார். சில ஸ்வரங்களை நீட்டியும், அசைத்தும், அவ்வவ்விராகத்துக்குத் தக்கவாறு நேருக்கு நேராய் சுட்டிக்காட்டி ஸ்வரபேதத்தைப் பதியவைக்கிறார். இதே முறையாய் நாளது தேதிவரையில் ஸங்கீதம் போதித்து வருவதை நாம் அறிவோம்.

காப்டன் டே முதலான ஐரோப்பிய ஸங்கீத வித்வான்கள் இந்திய ஜனஸமூஹத்தில் வழங்கும் மற்ற விஷயங்களை கவனிக்க இயலுவதில்லை போலவே, கர்நாடக ஸங்கீத போதனைமுறையையும் கவனித்துப்பார்க்க சௌகரியங்கள் கிடைக்காதது ஸகஜமேயாகும். ஆகவே, குருமுகமாய்க் கற்பிக்கப்படும் ஸ்வர அசைவு, ஸ்வர தீர்க்கம் முதலான ஒவ்வொரு ராகத்துக்கும் உரிய லக்ஷணங்களையும், நமது ஸங்கீத சாஸ்திரப்படிக்கு ஒவ்வொரு ராகத்துக்கும் உள்ள "சுருதி" பேதத்தையும் தெரிந்துகொள்ள சந்தர்ப்ப மேற்படாததால், காப்டன் டே முதலானவர் அவற்றை நிராகரித்து விட்டார்கள். அவர் இந்த ஸ்வர அசைவு முதலிய பேதத்தை ஸ்வர "மெருகு" (Grace) என்று பெயரிட்டார். கமகம் அல்லது "மெருகு" என்பது இன்னதென்று சொல்லாதவரையில் ஸயன்ஸூ அதை ஒப்புகிறதில்லை. கர்நாடக ஸங்கீத வித்துவான்களும், காப்டன் டே நமது ஸங்கீத முறையை அறியாதவராதலால், 'மெருகு' 'கமகம்' என்னும் அவரது இந்த அபிப்பிராயம் தப்பென்றெண்ணித் தள்ளிவிட்டார்கள். ஆனால், ஒவ்வொரு ராகத்திலும் ஏதோ ஒருவிதமான பேதம் ஸ்வரங்களில் வருகிறதென்பதை அவர் ஆதரிக்கிறார் என்பதை பூரணமாய் நாம் கௌரவிக்க வேண்டியதாகும்.

நமது ஸங்கீத சாஸ்திரங்களிலோ ராகலக்ஷணம் ஒழுங்காய் எழுதிவைக்கப்படவில்லை என்பதை நாம் எல்லோரும் ஒப்பவேண்டியது தான். ஆனாலும் ஒவ்வொரு ராகத்துக்கும், ஸம்வாதி, விவாதி, அநுவாதி ஸம்பந்தமுள்ள ஸ்வரங்கள் உண்டென்றும் கிரஹம் நியாஸம் உண்டென்றும் சாஸ்திரம் கூறுவதை நிராக்ஷேபணையாய்ப் பார்க்கலாம்.

இதிலிருந்து நாம் அறிவது என்ன? மேலே சொன்ன ஸங்கீத பரிபாஷைகள் இன்னவையென்று நாம் அறியவேண்டியது நமது கடமை என்பதே. காப்டன் டே முதலிய ஐரோப்பிய கனவான்கள் அவற்றைப்பற்றி தமது நிச்சயமான அபிப்பிராயம் சொல்லாதது அவர்கள் குற்றமாகாதென்று நினைக்கிறேன்.

பம்பாயில் ஜட்ஜ் (Clements) க்ளெமென்ட்ஸ் ஐ. ஸி.எஸ்., என்னும் ஆங்கில கனவான் நமது ஸங்கீதத்தை ஆராய்ந்து உணர்ந்து (1) இந்திய ஸங்கீத ஸ்வர அசைவு ஸ்வரலயத்தை (Harmony) ஒட்டிவருவதாயும் (2) இந்திய ஸங்கீதம் வெகு புராதனமான ஸ்வாபாவிக அழகு பொருந்தியதென்றும் (3) "சுருதி"கள் ஸயன்ஸில்வரும் ஸ்வர இடைவெளிகள்தான் என்றும் சொல்லுகிறார். அவர் அக்கிராஸனம் வகிக்கும் ஸங்கீத அபிமான ஸங்கம் (Phil-

* டில்லியில் நடந்த அகில இந்தியஸங்கீத கான்பரன்ஸில் சமர்ப்பித்த உபந்யாசத்தின் மொழிபெயர்ப்பு).

கொள்ளிக்கு எதிர்போனாலும், வெள்ளிக்கு எதிர்போகல் ஆகாது.

Harmonic Society) ஹிந்துஸ்தானி ராகங்களை சுருதிக்கணக்காய் ஸ்வரப்படுத்தி பிரசுரித்து லோகோபகாரமாய் அச்சிட்டிருக்கிறது யாவருக்கும் தெரியும்.

தென்னிந்தியாவிலும், காலஞ்சென்ற ராவ் பகதூர் நாகோஜிராவ் அவர்கள் 1902-ஆல் நமது ஸங்கீத சாஸ்திரத்தில் வரும் 22 சுருதிகள் ஐரோப்பிய ஸயன்ஸிலுள்ள ஸூகம் தரும் ஸ்வரலய இடைவெளி (Harmony) களை திட்டமாய்க் குறிக்கின்றன வென்று "மெட்ராஸ் ரிவியூ"வில் பிரசுரித்திருக்கிறார். இந்த இடைவெளிகளே "ஸம்வாதி" "அநுவாதி" ஸம்பந்தங்களைக் குறிப்பதாகவும் எழுதியிருக்கிறார்.

ஆனாலும், இந்திய ஸங்கீதத்தில் சொல்லியிருக்கும் சுருதி பேதத்தை ஊன்றிப் பாராததினால் மயக்கம் கொண்டவர் காப்டன் டே ஒருவர் அல்ல. அநேகருண்டு. பம்பாய் வக்கீல் ஸ்ரீமான் பாத்கண்டே என்னும் இந்திய கனவான் அப்படிக்கு ஒருவராவர். அதில் இன்னொரு ஆச்சரியமு முண்டு. அதென்னவெனில், ஸ்ரீமான் பாத்கண்டே அவர்கள் பாடத்திறமையுள்ளவர்; ஸமஸ்கிருத பாஷையில் "லக்ஷ்ய ஸங்கீதம்" என்னும் ஸங்கீத நூலை யியற்றும்படியான ஸாஹித்ய ஞானம் வாய்ந்தவர். அந்தக் கிரந்தம் ஹிந்துஸ்தானி ஸங்கீத விஷயமாய் எழுதியிருக்கும் ஒரு அரிய கிரந்தமாகும்.

ஷை கிரந்தத்தில், இந்தக் கனவான் 22 சுருதிகள் இந்திய ஸங்கீத முறைக்கு அவசியமில்லை என்று சொல்லுகிறார். அதாவது, ராக பாவத்துக்கு முக்கியமானதும், ஒவ்வொரு ஸங்கீத நூலிலும் சொல்லி வந்திருப்பதுமான, சுருதி பேதத்தைத் தழுவிய ராக லக்ஷணத்தைத் தள்ளிவிட வேண்டுமென்பது அவர் கருத்துப்போலும். அது மாத்திரமல்ல. அவரது நூலில் அஹோபலர், வெங்கடமகி முதலிய ஸங்கீத கிரந்தகாரர்களின் கிரந்தங்களிலிருந்து மேற்கோள்களை எடுத்துக் காட்டித் தன் அபிப்பிராயத்துக்குப் பலம் வேறு கட்டுகிறார்.

ஆனால், ஒவ்வொரு ராகத்திலும் வரும் ஸ்வர அசைவு பேதங்களோ நமது சுரோத்திரேந்திரியத்துக்கு ப்ரத்தியக்ஷமாக நிலை நிற்கின்றன. அவைகளை, அஹோபலருடையதோ, வெங்கடமகி யுடையதோ, வேறு எவருடைய வசனங்களும் இல்லையென்று சாதித்துவிட முடியாது என்பது உண்மையாகும்.

இந்திய ஸங்கீத அபிமானிகள், "கொஞ்சநாளாய் நமது ஸங்கீதத்தின் மெருகு என்னமோ குறைந்து வருகின்ற"தென்று அடிக்கடி சொல்லி வருத்தமுறுவது யாருக்கும் தெரியும். அதன் வாஸ்தவம் என்னவென்று பார்ப்போம். இந்த வித்தையின் அப்பியாஸம் இக்காலத்தில் பட்டணம் சுப்பிரமணியய்யர், மஹாவைத்தியநாதய்யர் போன்ற குரு பரம்பரையின் கையிலிருந்து மெள்ள மெள்ள நழுவி வருகிறது. இந்நாளில் யாரும் ஸங்கீத குருவாகி விடலாம். மற்றெல்லா இலாகாவிற்கும் முந்தி "ஜனநாயக ஆக்ஷி" ஸங்கீதத்தில் நடைபெற்றுவிட்டது என்று சொல்லலாம். "தலைக்குதலை நாட்டாமை" வழக்கத்தில் வந்துவிட்டது. வீடுவீடாய் நுழைந்து போலி ஸங்கீதத்தை நெடுக விறைத்துக்கொண்டு, "ஆயிரம்பேரைக் கொன்றவன் அரை வைத்தியன்" என்னும் பழமொழிக்கிணங்க,குருபீடம் மலிந்துவிட்டது. ஸங்கீதம் குருமுகமாய் அப்பியஸித்து வந்தது நின்றுபோய் புஸ்தக மூலமாயும் அப்பியஸிக்க ஆரம்பமாய் வருகிறது. ஒவ்வொரு ராகத்தின் "சுருதி"களின் மூலமாய் ராகபேத ஞானம் குருபரம்பரையில் வந்தது அடியோடு நின்றுவிட்டது. உதாரணமாக சங்கராபரணத்திலும் காம்போதியிலும் ரி என்னும் ஸ்வரத்தை பேதமாய் உச்சரிப்பதையும்; காம்போதியிலும் மத்திமாவதியிலும் ம என்னும் ஸ்வரத்தை பேதமாய் உச்சரிப்பதையும் இதுவரை குரு சிஷ்னுக்குப் பாடிக்காட்டிப் போதித்து வந்தார்; இப்போது இந்த முறை மாறி, வேறு முறைப்படி ஸங்கீதம் போதிக்கப்பட்டு, ராகங்களின் ஸ்வரூபம் மெள்ள மெள்ள மாறிக் குறைவு பட்டுவருவதை ஸங்கீத அபிமானிகள் கவனிக்கவேண்டும். அப்படிக் கவனித்து, அந்தந்த ராகஸ்வரங்களை 22 சுருதிக் கணக்குப்படி எழுதி ஸ்திரப்படுத்த வேண்டும். அப்படிச் செய்யாது போனால், கொஞ்சநாளில் கர்நாடக ஸங்கீதம் மறைந்து போய்விடும் என்பதில் சந்தேகமில்லையென்று தெரிந்தவர்கள் சொல்லுகிறார்கள்.

இதுநிற்க, நமது ஸங்கீதத்தைப்பற்றி நமது ஸங்கீதநூல்களில் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்று ஆராய்வோம்.

(1) சங்கீதத்தின் உற்பத்தி

நமது நூல்களிலெல்லாம் "ஸாமவேதாதிதம் கீதம் ஸஞ்ஜக்ராஹ பிதாமஹஃ" (ரத்நாகரம். 1-ம் அத்தியாயம்) பிரம்மா ஸாமவேதத்திலிருந்து ஸங்கித சாஸ்திரத்தை இயற்றினர்—என்பது இதன் பொருள். ஸாமவேதத்தில் க்ருஷ்டம், பிரதமம் முதலான ஏழு ஸ்வரங்கள் வருகின்றன. நி,த,ப,ம, க,ரி,ஸ, என்னும் ஸங்கித ஸ்வரங்கள்தான் இவை என்று ஸாமவேத லக்ஷணத்தில் சொல்லி யிருக்கிறது. இதற்கு ஆதாரம் பின் வருமாறு. "நாரதசீக்ஷை" யில்—அதஃ க்ருஷ்டாதயஃ ஸப்தஸ்வரா உத்தரோத்தரம் நீசாபவந்தி." இந்த ஏழு ஸ்வரங்களும் அவரோஹக் கிரமமாய் வருகின்றன என்று சொல்லிபிருக்கிறது,

[சௌனகர் தமது "பாரிஷதம்" என்னும் நூலில் ஸாமவேத ஸ்வரங்கள் ஸங்கித ஸ்வரங்களினின்றும் மாருனவை என்று சொல்லுகிருர். ஆனல், ஸாமகானம் செய்வதை உற்றுப் பார்த்ததில் சௌனகர் அபிப்பிராயம் தப்பென்றுதெரிகிறது.]

(2) சங்கீத போதனை முறை

கானம் போதிக்கும் முறையை நாரதர் தமது சீக்ஷையில் பின் வருமாறு குறிக்கிருர். "குரோரநுக்ருதிம் குர்யாத் யதா ஞானமதிர் பவேத்"—குரு எவ்விதமாய் உச்சரிக்கிருரோ சிஷனும் அதை ஒட்டி அநுஸரித்தால், அவனுக்கு கானம் செய்யும் ஞானம் உண்டாகும் என்பதில் சந்தேகமில்லை. (இதே முறையில் தான், நமது வித்துவான்களால் நாளது தேதிவரையில் ஸங்கிதம் போதிக்கப்பட்டு வந்திருக்கிறது.)

(3) ஆசாரியரின் லக்ஷணம்.

அதே கிரந்தத்தில் குருவின் லக்ஷணம் வர்ணிக்கும்போது, நாரதர் சொல்கிருர்:—

" தீப்தா (ஆ)யதா கருணாநாம்
ம்ருது மத்ய மயோஸ் ததா
ச்ருதீநாம் யோ (அ)விசேஷஞஃ
நஸ ஆசார்ய உச்யதே"—அதாவது,

எவனுக்கு 22 ச்ருதிகள் ஞானம் இல்லையோ, தீப்தா, ஆயதா, கருணா, ம்ருது, மத்யா முதலிய பேதம் தெரியாதோ அவன் ஆசாரிய வேலைக்குத் தகுந்தவனல்ல என்பது பொருள். (ஸங்கித ரத்நாகரம் முதலிய கிரந்தங்களில் தீப்தா, ஆயதா, கருணா, ம்ருது, மத்யா முதலிய பேதம் 22 சுருதிகளில் இருப்பதாய் யாரும் பார்க்கலாம். ஆகவே 22 சுருதி விஷயம் தெரியாதவர் ஸாமகானத்துக்கும் சரி, ஸங்கீதத்துக்கும் சரி—குருஸ்தானத்துக்கு அருகரல்லர் என்பதே.)

(4) சுருதிகள் என்னவென்பது

சுருதி என்பது என்ன? என்று பார்ப்போம். நாரத சீக்ஷையில் "யதாப்ஸு சரதாம் மார்கோ மீநாநாம் நோபலப்யதே * யதாததிநி ஸர்பிஸ்ஸயாத் * தத்வத் ஸ்வர கதா ச்ருதிஃ". என்று சொல்லி யிருக்கிறது. அதாவது, ராகத்தில் வரும் ஸ்வரங்களே சுருதிகளாகும். காதால் கேட்டு கவனித்துப் பார்த்து ஒரு ஸ்வரம் இன்ன சுருதி என்று கண்டு கொள்ள வேண்டும் என்பதாம்.

இன்னொரு இடத்தில் "நாரத சீக்ஷை வசனம்" பின்வருமாறு சொல்லுகிறது :—

"ச்ருதிஸ்தாநே ஸ்வரான் வக்தும்
நாலம் ப்ரஹ்மாபி தத்வதஃ *
ஞாயதே அத்ர உபதேசேந
யதா ஸ்வரகதா ச்ருதிஃ *
வீணாதேஸ்து ச்ருதி ஞானம்
ஸ்வரஞானம் து வம்சஜம்."—அதாவது

(ராகங்களில் வரும் சில) ஸ்வரங்களை (தனியாக) அவற்றின் ச்ருதி ஸ்தானத்தில் பிரம்மாவாலும் உச்சரிக்க முடியாது. [இது சரிதான் அந்தந்த ராகங்களில் வேறு வேறு சுருதி வருவதால், ராகங்களைப் பாடுங்காலத்தில் அதற்குரியசுருதி ஸ்தானம் காட்டப்படுமேயொழிய, தனியாய் சில சுருதிகளை உச்சரிக்க முடியாதென்பதேயாம்]. குருவானவர் சிஷ்யருக்கு நேரில் சுட்டிக் காட்டியே சுருதிகளை போதிக்கிருர். வீணையிலிருந்து நாம் சுருதிகளை அறியலாம். புல்லாங்குழலிலிருந்து ஸ்வரங்களை மட்டும் அறிகிறோம் என்பதே.

நாம் இதிலிருந்து அறியவேண்டியது என்ன? சாரங்கதேவர் 22 சுருதிகளை அறிந்தவர்தான். அவர் சுருதிகளை ரூபிக்கசுருதி வீணை செய்திருக்கிருர். ஆனல் வீணையை அவருக்கு பின் வந்தவர்கள் கையாண்டுவரும்போது 22 சுருதி விஷயம் மறைந்துவிட்டது. அதன் காரணம், ஸ்தூலமான ஸ்வரங்களை அறிவதற்கு மூலமான புல்லாங்குழல் முதலான ஸ்வர வாத்தியங்கள் உபயோகத்தில் வந்ததினலேயே நுட்ப சுருதிகள் மறைந்து விட்டன என்பதேயாம்.

மேலும், ஸாமகாந லக்ஷண கிரந்தங்களில் பின்வரும் வசனம் வழக்கத்திலிருக்கிறது :—

"தீப்தா மந்த்ரே த்வீதீயேச
ப்ரசதுர்த்தே ததைவச
அதிஸ்வாரே த்ரிதீயேச
க்ருஷ்டேச கருணச்ருதி:"—அதாவது

மந்த்ரம், த்விதீயம், ப்ரதமம் சதுர்த்தம், இந்நான்கு வேதஸ்வரங்களும் தீப்தமாயிருக்கின்றன. அதிஸ்வாரம் திரிதீயம், க்ருஷ்டம், இம்மூன்றும் கருணச்ருதியாம்.

அதாவது, (1) த, ப, க, ரி—தீப்தம்.

(2) நி, ம, ஸ—கருண என்பதே.

ஸங்கீத ரத்நாகரத்தில் குறித்த 22 சுருதிகளில் 1,5,8,10,17,18,21 என்ற சுருதிகளே இவைகள். இது ஸங்கீத வித்துவான்கள் அவசியம் விசாரித்து ஆராயவேண்டிய விஷயம். ஆகவே ஸாமகாநத்தைப் பற்றிய விதிகள் 22 சுருதிகள் சம்பந்தப்பட்டவை என்று கண்டிப்பாய் ஸித்தாந்தமாகிறது.

மேலும் "தைத்திரீய ப்ராதிசாக்யம்" என்னும் கிரந்தத்தில் யஜுர்வேத ஸ்வரங்களை விசாரிக்கும்போது "மந்த்ராதயோ த்விதீயாந்தா: சத்வார: தைத்திரியகா:"—அதாவது, மந்த்ரம், சதுர்த்தம், த்ரிதீயம், த்விதீயம், என்னும் நான்கு ஸ்வரங்களும், அநுதாத்தம், ஸ்வரிதம், ப்ரசயம் உதாத்தம் என்னும் நாலு ஸ்வரங்களாக முறையே வருகின்றன என்றும் சொல்லியிருக்கிறது. எனவே, அந்தஸ்வரங்களும் 22 சுருதி ஸித்தாந்தத்தைத் தழுவுவதாகிறது.

மேலும், "பாணினி சீக்ஷை"யில், பின்வரும் வசனம் கிடைக்கிறது.

"உதாத்தே நிஷாத காந்தாரௌ
அநுதாத்த ரிஷபதை வதௌ
ஸ்வரிதப்ரபவா ஹ்யேதெ
ஷட்ஜமத்யம பஞ்சமா:"— அதாவது,

(1) நி—க—உதாத்தம் என்றும்,

(2) ரி—த—அநுதாத்தம் என்றும்,

(3) ஸ—ம—ப— ஸ்வரிதம் என்றும் சொல்லியிருக்கிறது.

(இந்த விஷயமும் ஸங்கீத வித்துவான்களுடைய ஆராய்ச்சியைப் பெறவேண்டுமென்று என் அபிப்பிராயம்).

(5) லௌகிக ஸங்கீத கிரந்தகாரர்களின் அபிப்பிராயம்

1 சதுச் சதுச் சதுச் சைவ
ஷட்ஜ மத்யம பஞ்சமா:—
த்வே த்வே நிஷாத காந்தாரௌ
திரிஸ் திரீ ரிஷப தைவதௌ—என்று

பரதர், சார்ங்கதேவர் இருவரும் சொல்லியிருக்கிறார்கள். அதன் பொருள்.

ஸ, ம, ப ஒவ்வொன்றிலும் 4 சுருதிகளும்,
ரி, த ஒவ்வொன்றிலும் 3 சுருதிகளும்,
க, நி ஒவ்வொன்றிலும் 2 சுருதிகளும்,
ஆக மொத்தம் 22 சுருதிகள் வருகின்றன.

என்பதாம்.

2. சார்ங்கதேவர் வீணையைப்பற்றி எழுதும்

——"ததா வீணா த்விதா ப்ரோக்தா [போது,
ச்ருதிஸ்வரவி வேசநாத்—
தத்ரச்ரீ சார்ங்கதேவேந
ச்ருதி வீணேதிதா புரா—
வக்ஷ்யதே ஸ்வர வீணாத
தஸ்யா மபி விசக்ஷணை:
அங்கித்வா ஸ்வர தேசாநாம்
பாகாநு த்பிந்ததே ச்ருதீ:!"—]

இதன் பொருள் இருவகை வீணைகள் உண்டு அவை, சுருதிவீணையும், ஸ்வர வீணையுமாம். சார்ங்கதேவர் ஏற்கனவே சுருதிவீணையைப் பற்றி எழுதிவிட்டார். இப்போது ஸ்வரவீணையைப் பற்றிச் சொல்லுகிறார். வித்வான்கள்ஒவ்வொரு ஸ்வரத்தையும் பாகித்து சுருதிகளைக் குறிப்பார்கள் என்பதே.

மேலும், சார்ங்கதேவர் ஸம்வாதி அநுவாதி பேதங்களை ஒப்புக்கொள்ளுவதால், 22 சுருதியையும் ஒப்புக்கொள்பவராக ஆய்விடுகிறார் அல்லவா ?

(ஆனால் கடைசியில் 19 சுருதிகள்தான் ஒரு ஸ்தாயியில் வரும் என்று சொல்கிறார். ஒருக்கால், அவரது காலத்தில் வழக்கத்திலுள்ள ராகங்களில் 19 சுருதிகள் உபயோகித்து வந்ததால் அப்படி எழுதுகிறார் என்பது என் அபிப்பிராயம்).

(215-ம் பக்கத் தொடர்ச்சி.)

தம்பியைக் கண்டு, நடந்தவரலாற்றை அறிந்து நாகத்தைக் கைகூப்பி வணங்கி, "ஓ மஹாநுபாவா என் தம்பியை உபத்திரவிக்காமல் விடும்படி வேண்டுகிறேன். உமக்கிஷ்டமான வேறு எந்த ஆகாரத்தையும் தருகிறேனெ"ன்றார்.

குருடர்களின் கல்விப் பயிற்சி
THE EDUCATION OF THE BLIND

[ஸ்ரீமான் என். ஆர். கேதாரிராவ் அவர்கள் எம். ஏ., எல். டி.,]

நமது தேசத்தின் ஜனத்தொகைசற்றேறக் குறைய முப்பது கோடி என்பது எல்லோருக்கும் தெரிந்திருக்கும். இவற்றுள், கண் இல்லாமல் கஷ்டப்படுகிறவர்கள் எவ்வளவு பேர் என்று யாராவது யோசித்திருக்கிறார்களா? ஆயினும் 1911-ம் வருஷத்திய கணக்குப் பிரகாரம், ஆறு லக்ஷம் பேர் இவ்வாறு வருந்துகிறார்கள் என்று தெரியவருகிறது. ஏதோ தமது குற்றத்தாலல்லாது ஈசன் அருளால் இப்படி வருத்தப்படும் லக்ஷக்கணக்கான பேர்களுக்கு நாம் எவ்வாறு உதவி செய்ய முடியும் என்பதைச் சற்றே இவ்வியாசத்தில் கூறுவோம்.

சப்த, ஸ்பர்ச, ரூப, ரஸ கந்தம் என்று சொல்லப்பட்ட ஐந்துவகை உணர்ச்சிகள் மனிதனுக்கு இருக்கின்றன. அதாவது பதார்த்தங்களின் உருவத்தை மனிதன் கண்ணால் பார்க்கிறான்; எங்கேயாவது உண்டாகும் ஒலியைத் தன் காதால் கேட்கிறான்; வஸ்துக்களின் வாஸனையை மூக்கால் முகருகிறான்; சாப்பாட்டு வகையின் ருசியை நாக்கால் உணருகிறான். தன் உடலால் (பிரதானமாகத் தன் கைகளினால்) பொருள்கள் மெதுவா யிருக்கின்றனவா, சொறசொறப்பாய் இருக்கின்றனவா என்பதைத் தெரிந்து கொள்கிறான்.

ஆயினும் இவ்வைவகைஉணர்ச்சியிலும் பார்க்கும் சக்தியே முக்கியமானது என்பதற்கு ஐயமில்லை. ஆதலால்தான் 'எண்சாண் உடம்புக்குக் கண்ணே பிரதானம்' என்ற பழமொழியும் ஏற்பட்டிருக்கிறது. ஏதோ கர்மாந்தரத்தால் இச்சக்தியை யிழந்த தௌர்ப்பாக்கியர்களுக்கு நாம் உதவிசெய்வது அவசிய மல்லவா? அப்படி உதவிசெய்யவேண்டும் என்றால் எவ்வாறு செய்வது? என்பதைக் கற்றறிந்தோர் ஆராய்வாராக!

நம் தேசத்தில் தர்மகாரியம் நடப்பதுபோல் வேறு எந்த தேசத்திலும் நடப்பதில்லை என்பது வெளிப்படை. ஆதலின் இவ்வாறு லக்ஷம் ஜனங்களுக்கும் தர்மத்துக்காக சாப்பாடு போட்டு, அவர்களுக்கு வேண்டிய மற்றும் உள்ளகுறைகளையும் நீக்கிவிட்டால் என்ன? என்று சிலர்கருதக்கூடும்.

இப்படிச்செய்வது உத்தமமா என்றால்அது அவ்வளவு சரியல்ல என்று தோன்றுகிறது. முதலாவது, ஆறுலக்ஷம் பேருக்கும் ஆயுட்பரியந்தமும் சாப்பாடு போடுவதற்கு வேண்டிய திரவியம் கிடைப்பது அரிது; அப்படிக் கிடைத்தாலும் அதைச்சரிவரநடாத்திவருவது அதிலும் அரிது. இரண்டாவது, அப்படிக் கஷ்டப்பட்டாவது இவர்களைப் போஷித்தாலும் நமக்கு நன்மை யுண்டாகாது. ஏனெனில், சோம்பேறியாய் ஒருவனை வைத்து, அவனுக்குச் சாப்பாடும் போட்டுவிட்டால் அவன் மனம் துர்விஷயங்களில் செல்லுமே தவிர சும்மா இராது. அதனால் நமக்கும் கெடுதிவிளையுமே தவிர நன்மை யுண்டாவது அரிது.

பின்னை எப்படித்தான் அவர்களுக்கு உதவி புரியலாம் என்றாலோ, அவர்களால் செய்யக் கூடிய வேலைகளைச் செய்யும்படி சொல்லி, அதற்குத் தகுந்த கூலியை அவர்களுக்குக் கொடுக்கவேண்டும்; அதை வைத்துக்கொண்டு அவர்கள் ஜீவனம் பண்ணுவார்கள்.

கண் இல்லாதவர்கள் என்ன வேலை செய்யலாம்? என்று பலரும் ஆச்சரியப்பட்டுக் கேட்கலாம். தீர்க்கமாய் யோசித்தாலோ கூடை நெய்தல், சங்கீதம் பாடுதல், வேஷ்டிகளைத் துவைத்து, இஸ்திரிபோடுதல் முதலிய பல வேலைகளையும் செய்யக்கூடும் என்பது தெரியவரும். எங்கேயாவது இப்படிச் செய்திருக்கிறார்களோ என்றால் "ஆமாம், பலவிடங்களிலும் இப்படிச் செய்திருக்கிறார்கள்" என்று நாம் திண்ணமாய்க் கூறலாம்.

உதாரணமாக, நமது இந்தியா தேசத்திலேயே கல்கத்தா, பம்பாய், மதராஸ், (சென்னப்பட்டணம்), அலஹாபாத், லாகூர், மைஸூர், ராஞ்சி, ராஜபூர், பலமக்கோட்டை ரெண்ட சிந்தாலா (குண்டூருக்குஅருகாமையிலுள்ளது) முதலிய இடங்களில் கண்ணில்லாதவர்களுக்காகத் தனியாய்க் கலாசாலைகள் ஏற்படுத்திருக்கிறார்கள். அங்கே மேற்கூறிய தொழில்களையும், மற்றப் பையன்கள் வாசிப்பது போலச் சாதாரணமான வாசிப்பையும் சொல்லிக்கொடுக்கிறார்கள். அவைகளின் விவரம் பின் வருமாறு:—

அலஹபாத், ராஞ்சி, ரெண்ட சிந்தாலா ஆகிய இம்மூன்றிடங்களிலும் உள்ள கலா சாலைகள் கிறிஸ்தவ மிஷனரிகளின் ஆதீன மானவை. இவர்கள் ஆங்காங்கே ஒரு பள்ளிக் கூடம் வைத்துக் கீழ்தரப் படிப்பைச் சொல் லிக் கொடுக்கிறார்கள்.

லாகூரில் கண்ணில்லாதவர்களுக்கு இரண்டு பள்ளிக்கூடங்கள் உள்ளன; ஒன்று கவர்ன் மெண்டு ஆதீனத்திலும், மற்றொன்று ரெயில் வே ஆதீனத்திலுமுள்ளது. சென்னையிலுள்ள பள்ளிக்கூடத்தில் சங்கீதத்தைத் தான் வெகு வாய்ச் சொல்லிக்கொடுக்கிறார்கள்.

மைஸூர், பம்பாய், கல்கத்தா, ராஜபூர் ஆகிய இவ்விடங்களிலுள்ள கலாசாலைகளே வெகு பெயர் பெற்றவை. ஆதலின் இவற்றுள் ஒவ்வொன்றைப்பற்றியும் சற்று கவனிப்போம்.

ராஜபுரத்தில் (ஐக்கிய மாகாணத்தில் டெ ஹாடூன் என்ற பட்டணத்துக்கு அருகிலுள் ளது) ஐம்பத்தைந்து பேர் வாசித்து வருகிறார் கள். (பதினாறு சிறுவரும், இருபத்தோரு சிறுமிகளும், பதினெட்டு பெண்களும்) இங்கே கீழ்தரப்படிப்புடன், மூங்கில் வேலை செய்தல், பிரம்பு வேலை செய்தல், நெய்தல் முதலிய கைத்தொழில்கள் சொல்லிக்கொடுக்கிறார்கள்.

பம்பாயில் "விக்டோரியா மெமோரியல்" பள்ளிக்கூடத்தில், "நீலகண்ட ராவ் தாயா பாய்" என்பவர் பிரதம உபாத்தியாயர். இவ ரைத்தவிர உதவி உபாத்தியாயர் நாலைந்துபேர் இருக்கின்றனர். மஹாராஷ்டிர அரிச்சுவடி யைக் கண்ணில்லாதவர்கள் கூட வாசிக்கும் படி ஏற்படுத்தியிருக்கிறார்கள். (அதற்கு "பிரே யில் அரிச்சுவடி," Braille alphabet, என்று பெயர்). கலாசாலைப் படிப்பைத் தவிர தேகப் பயிற்சிக்கு உண்டான ஹேதுக்குள் இருக் கின்றன. தையல் வேலையையும் சங்கீதத்தை யும் சொல்லிக்கொடுக்கிறார்கள். பையன்கள் காலையில் ஒருமணி நேரம் ஈசுவரதியானம் செய்கிறார்கள். சிலவேளையில் பஜனைகளு முண்டு. பையன்கள் தங்கியிருக்க ஹாஸ்டலு மிருக்கின்றது.

இவ்விக்டோரியா மெமோரியல் பள்ளிக் கூடத்தைத் தவிர, பைகுல்லாவில் (பம்பாய் நகரத்தின் ஒருபாகம்) மிஸ் மில்லர்டு (Miss Millard) என்ற பெண்மணி ஒரு கலாசாலை ஏற்படுத்தியிருக்கிறாள். இதில் இருபது சிறு வர்களும், இருபத்துநான்கு சிறுமிகளும், பதி னேழு மனிதர்களும் வாசித்துக்கொண்டிருக் கிறார்கள். சாதாரணப் படிப்பைத்தவிர சங் கீதம், தையல்வேலை செய்தல் முதலிய தொ ழில்களும் சொல்லிக்கொடுக்கிறார்கள். இக் கலாசாலை சுமார் இருபது வருஷ காலமாய் நடந்து வருகிறது. இதில் வாசித்தபேர் பல ரும் தங்கள் ஜீவனத்துக்குக் கஷ்டமில்லாமல், தாம் பள்ளியில் கற்ற தொழில்களில் ஒன்றைக் கைப்பற்றிச் சுகமாய் வாழ்ந்து வருகின்றார்கள்.

கல்கத்தாவில் இருக்கும் பாடசாலையை ஸ்தாபித்தது "லால் விஹாரிஷா" என்பவரே. சுமார் இருபத்திரண்டு வருஷகாலமாய் இது நடந்து வருகிறது. இருபதுமுதல் முப் பது பையன்கள் வரையிலும் இங்கே இருக்கி றார்கள். பிரம்பு வேலையிலும் சங்கீதத்திலும் இது பெயர் பெற்றது. இக்கலாசாலையில் வாசித்த பையன்களில் மூன்றுபேர் இங்கேயே உபாத்தியாயராய் அமர்ந்திருக்கின்றனர். இவர் களைத்தவிர, மற்றொருவன் பஞ்சாப் யூனிவர் ஸிடியிலுள்ள மெட்ரிகுலேஷன் பரீக்ஷையில் தேறியிருக்கிறான் என்று சமாசாரம் தெரிகி றது. இவனுக்காக பரீக்ஷையில் அவகாசம் அதிகமாய் கொடுக்கவில்லையாம்.

மைஸூரில் உள்ள கலாசாலையின் பிரதம உபாத்தியாயர் ம-া-া-ஸ்ரீ என். வெங்கடராவ் என்பவர், இவர் இத்தேசம்முழுதும் சுற்றிவந்து கண்ணில்லாதவர்கள் குறைகளைத் தம்மால் எவ் வளவு தூரம் நீக்கலாமோ அவ்வளவு தூரம் நீக்கும்படி சிரமப்படுகிறார். இக்கலாசாலை 1901-ம் வருஷத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. மஹாராஜா அவர்களும் இதைப்பற்றித் தம் கவனத்தை அடிக்கடி செலுத்துகிறார்.

இதில் செய்யப்படும் பிரம்பு சாமான்கள் வெகு நேர்த்தியாயிருக்கும். ஆதலால் அநேக மெடல்களும், பரிசுகளும் பெற்றிருக்கின்றன. இங்கு வாசிக்கும் பையன்கள் சங்கீதத்திலும் கைதேர்ந்தவர்கள். இரண்டுமணி சாவகாசம் வரையிலும் நன்றாய்ப் பாடுவார்கள். இதில் வாசித்த மாணக்கர்கள் எல்லாரும் இப்போது தங்கள் ஜீவனத்தைச் சிரமமின்றித் தாமே சம்பாதிக்கிறார்கள்.

முன்னாளில் பலரும் கண் தெரியாதவர் களுக்கு வாசிப்புச் சொல்லிக்கொடுக்க முடி யாது என்றே எண்ணியிருந்தார்கள். ஆனால்

இது தவறு என்பது இப்போது வெளிப்படை யாகும். அமெரிக்கா தேசத்திலுள்ள ஹெலன் கெல்லர் (Helen Keller) என்ற மாது சிரோமணி எம். ஏ. என்ற பட்டப் பரீக்ஷை யில் தேறியிருக்கிறாள். பிறவிக் குருடாயிருந் தும் தனது கஷ்டத்தைச் சிறிதும் பாராட் டாமல் ஒரேமனவுறுதியுடன் வாசித்ததில் இவள் ஆண்மை எவ்வளவு மெச்சத்தக்கது !

கடவுள் ஓர் பெருங் கருணைக்கடலன்றோ ? ஒரு விதத்தில் கஷ்டம் வைத்தால் மற்றொன் றில் சுகம் கொடுக்கமாட்டாரோ ? அவர் தீனதயாளரல்லவா ? அநாத நாதரன்றோ ? தீனரக்ஷகரன்றோ ? ஆதலின் யோசித்துப் பார்த்தால் கண்ணற்றவர்களுக்கு பாக்கி உணர்ச்சிகள் வெகு தீக்ஷணியமாயிருக்கும் என்பதற்கு ஐயமேயில்லை. உதாரணமாக, எங்கள் ஊரில் ஓர் கிழவன் இருந்தான். அவன் பிறவிக்குருடன். ஆயினும் ஒரு தென் னைமரத்தைத் தட்டிப்பார்த்து அதில் இவ்வ ளவு தேங்காய் தான் இருக்கின்றனவென்றும், அவை முற்றினவையா, அல்லவையா என் றும் கொஞ்சமும் தவறின்றிச் சொல்லுவான்!

ஆதலின் வேறுவழிகளில் அவர்கள் புத்தி யைப் போக்காமல், சரியான வழியில் அவர்க ளுக்கு வாசிப்புச் சொல்லிக்கொடுத்தால், தங் கள் ஜீவனத்தைத் தாங்களே சம்பாதிப்பதும் தவிர, பொது நலத்துக்கு உழைத்து, ஜனசமூ கத்துக்கே இவர்கள் திலகமாய் விளங்கலாம் !

புராதன இந்தியா

ANCIENT INDIA

[ஸ்ரீமான் ஆர். பாஷ்யம் ஐயங்காரவர்கள், பீ. ஏ.]

(192-ம் பக்கத்தொடர்ச்சி)

அலக்ஸாண்டர் தன் வெற்றிக் கறிகுறியாக வும் பியூஸிபேலஸ் என்ற தன் அருமைக் குதிரையின் ஞாபகார்த்தமாகவும் இரு பெரு நகரை உண்டாக்கினர். பின் அவர் ராவி நதி யைக் கடந்து செல்கையில் குடியரசு செலு த்தி ஆண்டுவந்த காத்தியாய் முதலிய ஜாதி யார் அவரை யெதிர்த்தனர். அலெக்ஸாண் டர் அவர்களை எளிதில் வென்று அமிர்த ஸரஸுக்கருகாமையி லிருந்த அவரது கோட்டையை முற்றுகைசெய்து யழித்துப் பின் பியாஸ் நதிக்கரையை யணுகினர். இவ் விடத்தில்தான் மகத நாட்டின் சிறப்பைப் பற்றி அலெக்ஸாண்டர் சந்திரகுப்தன் மூல மாய் அறிந்திருந்தார். நந்தர்களை யொடுக்கி மகதநாட்டைக் கைப்பற்ற வேண்டுமென்று பேராவல்கொண்டு தன்னுடன் கூட்டிவந்த போர் வல்லோரை தைரியப்படுத்தி மகதநாட் டை நோக்கிச் செல்லத் தீர்மானித்தார். ஆயி னும் அவர் எண்ணம் ஈடேறவில்லை. அவரு டைய வீரர்கள் தத்தம் நாடுவிட்டு வந்து வெகு நாளானமையால் தம் வீடுசென்று மனைவி மக்களைக்கண்டு சுகமடைய நினைத்தார்கள். மாஸிடோனியாவிலிருந்து அலெக்ஸாண்ட ருடன் வந்த வீரரில் பலர் சண்டையில் இறந் தனர். பகைவரால் சிறை கொள்ளப்பட்டவர் பலர். வியாதியால் பீடிக்கப்பட்டிறந்தவர் அநே கர். வெயிலிலும் மழையிலும் மெய்வாடி யுத்தக் களமே கதியென்றிருந்தவர்களுக்கு தம் ஸ்வய நாட்டின் ஞாபகம் வரவே, தலைவனது வார்த் தைகள் அவர் செவிகளில் நுழையவேயில்லை. அலெக்ஸாண்டரும் அவரது மனோ நிலை மாறக்கூடுமென மூன்று நாள் காத்திருந்தும் பலனில்லை. என் செய்வார் அலெக்ஸாண்டர் ! உலகத்தில் பெருத்த ஜயசீலர் எனப் பெயர் வாங்கிய அவருக்கும்* பெருங்குறை யுண்டா யிற்று. வேறு செய்ய வகையின்றி அவர் தன் மனிதருடன் தன் நாட்டிற்கே திரும்பினர். உலகமுழுதும் ஜயித்து வெற்றிக்கொடி நாட்ட விரும்பிய இவரது எண்ணம் ஈடேறாமற் போனது ஆச்சர்யமே.

அலெக்ஸாண்டர் ஜீலம் நதிசென்று அங்கு தம் நாட்டார் பலர் அவரையடைய அவர்களை யும் கூட்டிக்கொண்டு நடந்தார். ஸிந்து நதி மார்க்கமாய்ச் செல்கையில் மாளவர் முதலி யோர் அவர்களை எதிர்த்தார்கள். அலெக் ஸாண்டர் வெகு சிரமத்துடன் அவர்களிட மிருந்து உயிர்தப்பி ஸிந்து நதி முகத்து வார்த்தை யடைந்தார். அங்கு தம் தேவதா வணக்கம்செய்து பத்திரமாய் வந்து சேர்ந்த

* கோட் சொல்பவனைக் கொடுங் தேள் என்கின.

தற்குப் பெரிதும் மகிழ்ந்து, நகர் ஒன்றுண்டாக்கினர். நியார்சஸ் என்னும் தளகர்த்தர் மூலமாய் கடல் வீரரை யனுப்பி அலெக்ஸாண்டர் மிகுந்த ஸைன்யத்துடன் நிலமார்க்கமாய் கடற்கரை யோரமாகவே சென்றார். (323 கி. மு) அடுத்த வருஷத்தில் அலெக்ஸாண்டர் பாபிலோன் என்னும் இடத்தில் மரித்தார்.

அலெக்ஸாண்டருக்குப் பின் இந்தியாவின் நிலைமை:--அலெக்ஸாண்டர் மரித்தபின் இந்தியாவில் அநேக சிற்றரசர்களும் கவர்னர்களும் ஏற்பட்டுவிட்டார்கள். ஜீலம் நதிக்கும் பியஸ் நதிக்கும் இடையிலுள்ள நாட்டை அம்பி மன்னனும், ஸிந்து நதிக்கு மேற்கே பிலிப்போஸ் (Philippos) என்பவனும் ஸிந்து நதியின் முகத்துவாரத்தை யடுத்த நாட்டை பைதான் (Paithan) என்பவனும் ஆட்சி புரிந்து வந்தார்கள். அலெக்ஸாண்டர் இறந்த சில மாதங்களுக்குள் மாஸிடோனியர் ஸிந்து நதி தீரத்தை விட்டு அகன்றனர்.

இந்தியாவில் கிரேக்கர் செய்த வேலை:-கிரேக்கர்கள் இந்தியாவில் நிலைத்திருந்தது சொற்ப காலமேயாம். அலெக்ஸாண்டர் இந்தியாவில் நிரந்தரமாய் கிரேக்கருடைய அதிகாரத்தை நிலைநிறுத்த முற்பட்டார். ஆயினும் எங்கும் சண்டையும் சச்சரவுமேயன்றி, கிரேக்கர் படையெடுத்தற்கு நிலையாக ஒரு அறிகுறியுமில்லாமற்போயிற்று. அலெக்ஸாண்டர் இந்தியாவில் தங்கியிருந்தது பத்தொன்பது மாத காலமே. அவரது மனோரதம் யாதாயிருப்பினும், அவர் கிரேக்க சமூக ஏற்பாடுகளை இந்தியாவில் பரவச்செய்ய யத்தனித்தது அவலமாய் முடிந்தது. அலெக்ஸாண்டர் மின்னல்போல் தோன்றி உடனே இருந்த இடமுந் தெரியாதபடி மறைந்துவிட்டார். கிரேக்கர் இந்தியாவில் நிலையான இராஜரிகம் செலுத்தவில்லை. அவர்கள் தம் நாகரீகத்தை இந்தியர் கைப்பற்றுவதற்கான வழிகளையும் அநுசரிக்கவில்லை. ஆயினும் இந்தியர் சில முக்கியமான விஷயங்களை மாஸிடோனியரிட மிருந்து அறிந்து கொண்டனர். கிரேக்கர் வந்தபின் இந்தியரின் கல்வி, சிற்பம் இவை சம்பந்தமாக சில மாறுதல்கள் உண்டாயின. கிரேக்கரிடமிருந்து இந்தியர் நூதன யுத்த முறைகளைக் கற்றனர். சிற்றரசர்களால் ஆளப்படும் மாகாணங்களை அடக்கி ஒரு குடைக்கீழ் ஓரே அரசன் ஆளும் திறம் கிரேக்கர் மூலமாய் இந்தியருக்கு வாய்ந்தது. மகத நாட்டு வேந்தரின் மரபினனாகிய சந்திரகுப்தன் என்பான் அலெக்ஸாண்டரை யடைந்து, அவரது சேனையில் தானும் ஒரு வீரனாயிருந்து அவர் மரித்தபின் பெருஞ்சேனை யொன்றெழுப்பி பாஞ்சால நாட்டைப் பிடித்து மகத ராஜ்யத்தின் தலைமையையும் வகித்து பெருமையுற்றது அலெக்ஸாண்டருடன் சின்னாள் பழகி அவரிடமிருந்து தான் பெற்ற யுத்த சம்பந்தமான ஞானத்தாலேயாம். மேலும் இந்தியருக்கு கிரேக்கரால் ஒரு பெரிய அநுகூல முண்டாயிற்று: இந்தியாவின் விஷயங்களை நன்றாய்க் கவனித்து இந்தியரைப்பற்றி ஐரோப்பியருக்கு ஞானம் உண்டாகும்படி செய்தவர் கிரேக்கர்களே. இதுமுதல், இந்து ஐரோப்பிய வர்த்தகம் பிரபலமாய் நடக்கும்படி வழிகள் ஏற்பட்டு வியாபாரம் ஓங்கிவந்தது.

சந்திரகுப்தன்:—அலெக்ஸாண்டர் இந்தியாவைவிட்டு நீங்கும்போது இந்தியா இருந்த நிலைமையைப்பற்றி முன்னமே கூறியிருக்கிறோமல்லவா? அலெக்ஸாண்டர் இறந்ததும், மாஸிடோனியருக்கு விரோதமாய் வட இந்தியாமுழுதும் பெருங்குழப்பம் உண்டாயிற்று. சந்திரகுப்தன் இவ்விதம் கலகஞ்செய்தவருக்குத் தலைமை வகித்து மாஸிடோனியரை எதிர்த்து பஞ்சாபைக் கைப்பற்றி சாணக்யன் என்னும் அந்தணனது உதவியால் மகதநாட்டு மன்னனாகிய நந்தனைக் கொன்று அந்நாட்டுக்கதிபதியானார். அவர் பஞ்சாப், சிண்டு நாடுகளினின்றும் மாஸிடோனியரைத் துரத்தி அவர்களுக்குத் தலைவரானஸெல்யுகஸ் அதிகாரத்தை யொடுக்கி வட இந்தியா முழுதும் தம்மதிகாரத்தை செலுத்தி கீர்த்திபெற்று விளங்கினார். அவர் இருபத்துநான்கு வருஷ காலம் அரசு செலுத்திவந்தார். அதற்குள் அவர் வட இந்தியா முழுதும் வென்று சக்கரவர்த்தியானார். இவரே முதன்முதல் வட இந்தியா முழுதும் ஒருங்கே ஆட்சி புரிந்தவர்.

ஸெல்யுகஸ் பெரிய யுத்தவீரர். அவரை அடக்கியபிறகு, அவர் புத்திரியை சந்திரகுப்தர் மணந்துகொண்டார். ஸெல்யுகஸும், தான் பஞ்சாப் தீரத்தைவிட்டு அகன்ற சில மாதங்களுக்குப் பிறகு, மெகஸ்தனிஸ் என்னும் இராஜதூதரை பாடலிபுரத்தில் அரசு

செலுத்திவந்த மகதநாட்டு சக்கரவர்த்தியைப் பார்த்துவரும்படி இந்தியாவுக்கு அனுப்பினர். மெகஸ்தனிஸ் இந்தியாவில் வெகுகாலம் தங்கி இந்தியாவின் நாகரிகம், இராஜரிகம், நடையுடை பாவனைகளைப்பற்றித் திருத்தமாய்த் தொகுத்து எழுதியிருக்கிறார். சந்திரகுப்தன் காலத்தில் நடந்துவந்த ராஜ்ய முறைமை எத்தன்மையதென்பதை அறிவிக்க அவர் எழுதி வைத்த குறிப்பே முக்கிய ஆதாரமாகின்றது. அரச மண்டபத்தின் சிறப்பைப்பற்றியும், முத்துக்கள் பதிக்கப்பெற்று ஸ்வர்ணமயமாய் விளங்கிய இராஜ வாகனங்களைப்பற்றியும், அரசனது ஸைன்யத்தின் பெருமையைப்பற்றியும் மெகஸ்தனிஸ் வெகுவாய்ப்புகழ்ந்து எழுதியிருக்கிறார். அக்காலத்தில் அரசர்கள் வேட்டையிலும் மாட்டுப் பந்தயம் முதலான விஷயங்களிலும் விநோதமாய்க் காலங்கழித்து வந்தார்கள். வேட்டையாடுங் காலத்தில் அரசனுக்குப் பரிவாரங்களாக ஸ்திரீகள் போவது வழக்கமாயிருந்தது. தத்தம் குறைகளை முறையிட வரும் மனுதாரர்களை நேரிற்கண்டு அவர்கள் குறைகளை நீக்கி யனுப்புவது அரசனின் சிறந்த குணத்தைக் காட்டுகின்றது. அரசனுக்கு அவனது பகைவரால் துன்பம் விளையாதபடி பாதுகாப்புச் சேனையொன்று நிரந்தரமாய் ஏற்பட்டிருந்தது. அரசனது சேனை ஆறு லக்ஷம் வீரரும் முப்பதினாயிரம் துரகங்களும் ஒன்பதினாயிரம் கஜங்களும் கூடியதாய் அக்காலத்திருந்த ஸைன்யங்களுக்குள் பெரியதென்று மதிக்கப்பட்டு வந்தது. ஈட்டி, கேடயம், வாள், வில், அம்பு முதலியவை அக்காலத்தில் முக்கியமான போர்க்கருவிகளாம்.

சேனை விஷயமாய்க் கவனித்து வருவதற்கு ஒரு யுத்தசாலை ஏற்பட்டிருந்தது. அதிலடங்கிய பதின்மூன்று அங்கத்தினரும் தமக்குள் ஆறு பிரிவினராய் முறையே கடற்சேனையையும், போர்க்கருவிகளை வேண்டிய இடங்களுக்குக் கொண்டு செல்வதற்குச் சாதனமான மாட்டு வண்டிகளையும், காலாட்களடங்கிய சேனைப் பகுதியையும், குதிரைப் படையையும், நாட்டிலுள்ள இரதங்களையும், யானைப் படையையும் கவனித்து வந்தார்கள்.

நகரங்களைப்பற்றிய சட்டங்களைக் கவனித்து வரும்படி ஆறு விதமான உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்பட்டார்கள். அவர்கள் முறையே கைத்தொழில், வெளி நாட்டாரை வரவேற்று உபசரித்தல், ஜனன மரணங்களைப் பதிவுசெய்தல், நிறைகளையும் அளவுகளையும் சோதித்து வியாபாரம் சரியாய் நடந்து வரும்படி கவனித்து, அந்தந்த பருவத்தில் உற்பத்தியாகும் தானியவகைகளை விற்பதில் விலைகளை சரிப்படுத்தல், கைத்தொழிற் பண்டங்களை விற்பதில் மேற்சொன்ன முறைகளை அநுசரித்தல், பண்டங்களை விற்று வரும் வரும்படியை வசூலித்தல் ஆகிய வேலைகளைக் கவனித்து வந்தார்கள்.

நகரங்களில் இருந்ததுபோலவே கிராமங்களைக் கவனித்து வரும்படி உத்தியோகஸ்தர்கள் பலர் நியமிக்கப்பட்டார்கள். அவர்கள் நதிகளையும் நிலங்களையும் தண்ணீர் பாயும் வாய்க்கால்களையும் மதகுகளையும் கவனித்து வந்ததுமன்றி வேட்டைக்காரர்களுக்கு அடிக்கடி ஸன்மானஞ் செய்து அவரது வேலையைச் சரியாய் செய்துவரும்படி வற்புறுத்தியும் தச்சர், கொல்லர், சுரங்கத்தில் வேலை செய்பவர், மரம் வெட்டிகள் முதலிய பணியாளரது வேலைகளை மேற்பார்வையிட்டும் வந்தார்கள். வரிகளை வசூல் செய்வதும் போக்கு வரவுக்குச் சாதனமான பாதைகளை ஏற்படுத்துவதும் இவருடைய வேலையாம்.

இராஜாங்கத்திற்குரிய வரிகளுள் நிலவரியே முக்கியமான வரும்படியா யிருந்தது. அந்தந்த ஸ்தல அதிகாரிகள் வரிகளை நாணயமாகவும் தான்யமாகவும் வசூலித்து வந்தார்கள். வியாபாரிகளிடமிருந்து அரசாங்கத்தாருக்கு ஏராளமான வரும்படி கிடைத்துவந்தது. இவை தவிர காட்டுவரி, உத்தியோகவரி, மீன்வரி சுரங்கவரி முதலிய பல விதமான வரும்படிகளை வசூலித்து வந்தார்கள்.

மெகஸ்தனிஸ் ஹிந்துக்கள் நியாயத்திற்குக் கட்டுப்பட்டு உண்மையைக் கைவிடாமல் நடக்கும் உத்தம குணமுடையவர் என்றும் நாட்டில் குற்றம் செய்து தண்டனை யடைவோரின் தொகை சிறியதென்றும் எழுதியிருக்கிறார். குற்றங்களை விசாரித்துத் தண்டனை விதிப்பதற்கு நியாயாதிபதிகளும் மாஜிஸ்ட்ரேட்டுகளும் நியமிக்கப்பட்டனர். அக்காலத்தில் குற்றவாளிக்கு ஏற்பட்டிருந்த தண்டனை மிகவும் கொடியதா யிருந்தது. தப்பு சாக்ஷி சொல்லல், வரி கொடாதிருத்தல், வேலையினின்றும்

கோட்டானை மடியிற் கட்டிக்கொண்டதுபோல.

உத்தரவன்றி நின்றுவிடுதல் ஆகிய அல்ப குற்றங்களுக்கும் உயிர்வதை, அங்கவீனமாக்கல் முதலிய கொடுந்தண்டனைகளை விதித்து வந்தார்கள். எனினும், நியாய பரிசீலனம் செய்து அநியாயமாய்த் தண்டனைக்குட்பட்டவரை ரக்ஷித்து அவர்களுக்கு நன்மை செய்வதற்காக அரசர் நேரில் வேவுகாரர் மூலமாய் உண்மையறிய முயற்சித்து வந்தார். பொதுவில் எங்கும் நியாயமே நடந்து வந்ததென்றே கூறவேண்டும்.

மெகஸ்தனிஸ் எழுதிவைத்த குறிப்புக்களிலிருந்து அக்காலத்திய ஹிந்துக்கள் பல ஜாதியாராய் வர்ணாசிரம விதிகட்கு கட்டுப்பட்டிருந்தனரென்பது நன்கு விளங்குவதாம். கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்கு இராஜாங்கத்தார் பெரிதும் உழைத்து வந்தனர். ஜனங்கள் டம்பமில்லாமல் சிக்கனமாய், உள்ளதைக் கொண்டு திருப்தி யடைந்து குடும்பம் நடத்தி வந்தனர். யாக காலங்களொழிய மற்றக்காலங்களில் மதுபானம் விலக்கப்பட்டது. "சொத்தையும் நிலங்களையும் பற்றி சொந்தக்காரர் கவனித்து காவல்காத்து வராமற்போனபோதிலும் நாட்டில் திருடர் பயமே இல்லாமலிருந்தது" என்று மெகஸ்தனிஸ் எழுதியிருக்கிறார். யுத்தத்தில் பகைவரை அடிமையாகப் பிடித்தல் அக்காலத்திய வழக்க மெனினும், அப்படிப் பிடிபட்ட அடிமைகளை யஜமானர்கள் மிகவும் பக்ஷத்துடனும் ஆதரவுடனும் நடத்தி வருவார்கள். காலாகாலங்களில் மழை பெய்து நிலசாகுபடி கிரமமாய் செய்து வர, வியவசாயம் விருத்தி யடைந்து வந்தது.

இந்தியருக்கு அணிகளில் விருப்பம் அதிகம். அவர்களில் தனிகர் விலையுயர்ந்த சித்திர வர்ண பட்டாடைகளை உடுத்தினர்கள். இந்தியரின் கைத்தொழில் மேம்பட்டிருந்ததென்பது இதனால் விளங்கும். சாதாரண நிலையிலுள்ள மனிதர் தற்காலத்தில் உள்ளபடியே அரையில் ஒரு வேஷ்டியும் மேலே ஒரு அங்கவஸ்திரமும் அணிந்து கொள்வர். சாதாரண நிலையிலுள்ள ஸ்திரீகளும் உயர்ந்த நகைகளைப் பூண்டிருந்தனர். நகைகள் செய்வதில் அக்காலத்தவர் மிகவும் தேர்ச்சி பெற்றனரென்பது இதனால் விளங்குகிறது.

வஸந்த மந்திரம்

எட்டாம் அத்தியாயம்

லலிதையின் க்ஷேமத்தை பாக்ஷா அறிதல்

சூரியன் அஸ்தமித்து இருள் மூடிக்கொண்டது. ஒரு நாளில் அக்கோட்டையில் நிகழ்ந்த அலங்கோலத்தைப் பாருங்கள். நேற்று இருந்ததுபோல் இன்றிருக்கின்றதென்று எதையும் நினைக்க இடமுண்டோ! கோட்டைச் சுவர்களும், மலைப்பாக்கங்களும், மண்டபமும், மாட மாளிகைகளும், தம் நிலை மாறவில்லை. நீராதாரமான சுனையும், அச்சுனையினின்று ஓடும் அருவியும் தம் நிலைமாறவில்லை. நடுவில் நின்ற கோபுரமும், கோபுர வாயிலுக்கு அப்பாலுள்ள கோவிலும் வித்தியாசமின்றி நிற்கின்றன. விளக்குகள்தான் ஏற்றுவாரில்லை. குழந்தைகள் ஆடிக்கொண்டிருந்த விளையாட்டுச் சாமான்களும், பெண்டிரும் புருஷரும் உபயோகித்துக்கொண்டிருந்த வீட்டு சாமான்களும் அப்படியே வைத்தவிடத்தில் இருந்தன. படுக்கை யறைகளில் விரித்த படுக்கை சுருட்டுவோர் இன்றி விரிந்து கிடந்தன.

திறந்து கிடந்த நான்கு பக்கத்து வாயில்களிலும் மஹமதிய வீரர்கள் பந்தங்களுடனும் தீபங்களுடனும் ஆரவாரத்துடனும் நுழைந்தனர். ஆமத்பாக்ஷா முக்கியமான வாயிலில் நுழைந்தான். நுழைந்தவன் முன்னே, தீ இன்னும் எரிந்துகொண் டிருந்தது. பிணங்கள் எரிவதனால் உண்டான துர்க்கந்தம் பொறுக்க முடியவில்லை. இறந்தோர் அன்றி இருப்பவர் ஒருவரும் இல்லாத நகரத்தைக் கண்ட சுல்தான் மதிமயங்கி உடல் சோர்ந்து உட்கார்ந்துவிட்டான். சுற்றிலும் உள்ளோர் அங்ஙனமே பிரமித்து நின்றுவிட்டனர். மற்ற வாயில்களில் நுழைந்தவர் ஆர்ப்புடன் கொள்ளையிட வாரம்பித்தனர். இரவில் நெடுநேரம் வரையில் ஒன்றும் தோன்றாமல் உட்கார்ந்திருந்தபின், சுல்தான் சேனபதியை அழைத்து "சேனைகளை நமது பழைய இருப்பிடத்துக்கே போகச்சொல்லுவாய்; நாளைக் காலையில் இக்கோட்டையைக் கைக்கொள்வோம்" என்றான்.

திரும்பியசேனைக்கும் சுல்தானுக்கும் போர்க்களத்தில்கூட நாற்றம்பொறுக்கமுடியவில்லை.

ஆந்தைகளும் கோட்டான்களும், நரிகளும், காட்டு நாய்களும் கூவிக்கொண்டும் ஊளையிட்டுக்கொண்டும் இருப்பதைப் பார்த்து, இதுவே தான் நரகம் என்று நினைத்தனர் பலர். கஷ்டத்துடன் அப்பால்சென்று சிதைந்து போன கூடாரங்களில் தங்கி தேகப் பிரயாசத்தால் விழிக்க லாற்றாது, ஆகாரமின்றி நித்திரை போயினர் அநேகர்.

சுல்தான் ஒருவனுக்குமட்டும் தூக்கம் வரவில்லை. பகலில் நடந்த விஷயமெல்லாம் ஞாபகத்துக்கு வந்தன. இராஜபுத்திரர் எதிர்த்ததும், சேனை பின்னிட்டதும், தான் தயங்கியதும், பிறகு சேனையை ஒன்று சேர்த்ததும், இராமசிங் அம்பாரியைத் தள்ளியதும், இவை முன்வந்து நின்றன. இவைகளைவிட இராஜபுத்திரிகள் அக்கினிப்பிரவேசம் செய்ததுஅதிகமான விசனத்தையும் பயத்தையும் உண்டாக்கின. எந்த லலிதையை அடையும்பொருட்டு இத்தனை கஷ்டமும் பட்டானே, எவளை அடைய இத்தனை மனிதர்களைப் பலியிட்டானோ, எவளை மணக்க இத்தனை தினம் ஏங்கினானோ, அம்மாது சிரோன்மணி மற்றவர்களுடன் தீயில் பட்டாள் என்று கேட்கவும் மனம் ஆறவில்லை. "இதுவும் சாத்தியமா? சாத்தியமா? லலிதையும் இறந்திருப்பாளா? அவள் இறந்துபோகவேண்டியதானால் அவள்தகப்பன் இத்தனைதூரம் கஷ்டப்பட வேண்டியதேன்? லலிதை இறக்கவில்லை. உயிருடன் இருக்கிறாள் என்று யாராவது வந்துசொன்னால் போதும். அவள் இவ்வுலகத்தின் கோடியில் இருப்பினும் கொண்டுவந்துவிடுவேன்" என்று கையோடு கைதட்டுவான். சுற்றிலும் நித்திரை செய்யும் காவலாளர் எழுந்து நின்று நடுங்குவார்கள். "தூங்குங்கள் நாய்களா? உங்களுக்கு என்ன?" என்று அதட்டுவான். மறுபடி லலிதையைப் பற்றி யோசிப்பான். பிரதாபசிங்கனுடைய உருவம் முன்வந்துநிற்கும். அதை மறக்க இன்னும் வேறு எதையாவது நினைப்பான். மேருள் தாதாகானும் விசித்திரவீரியரும்பாடியதும், தான்சந்தோஷத்தோடு பொன் படகில் ஸுவர்ண ஸரஸில் சென்றதும் ஞாபகத்துக்கு வந்தன. மறுபடி லலிதையின் ஞாபகம் வந்தது. இந்த விதமாய் என்னென்னவோ எண்ணிக்கொண்டு பெருந்துயரத்துடன் அவ்விரவைக் கழித்தான் சுல்தான் ஆமத.

விடியற்காலம்; சுல்தானுடைய கூடார வாயிலில் ஒரு வீரன் காலில் காயத்துடன் தவழ்ந்து வந்து கொண்டிருக்கின்றான். வாயில் காப்போர் தூங்குகின்றனர்.

வீரன்: "ஐயா காவல்காரரே எழுந்திரும்! எழுந்திரும்"—பதிலில்லை.

வீரன் பக்கத்தில் சென்று இரண்டு அடி கொடுத்து "ஐயாஎழுந்திரு என்றால் எழுந்திரு ஐயா! என்றால் தூங்கரையா?"

வாயில்காரன் கண்ணை விழித்துப் பார்த்துவிட்டு "நோக்கென்ன வேலையோ" என்று மறுபடி கண்ணை மூடிக்கொண்டு விட்டான்.

வீரன்: "அப்பப்பா இரணகளத்தில் செத்துக்கிடக்கும் ஜனங்களையும், இவன் தூங்கர தூக்கத்தையும் பாத்தா பலே சண்டை நடந்திருக்கும் போலே இருக்கே. அப்பப்பா! இதேது இவன் எழுந்திருக்கமாட்டான் போலிருக்கே" என்று மறுபடியும் வாசல் காப்போனைத் தட்டி எழுப்பினான்.

வாசல்காப்போன்: "இது என்ன ஐயா பாழும் கஷ்டம்: உனக்கு வேலையில்லே"

வீரன்: "இருக்குதையா அதுக்குதான் வந்தேன்.

வாசல்காப்போன் இன்னமும்கண்ணை மூடிக்கொண்டு "வேலையிருந்தாப் பாரு போயேன். இங்கேவந்து எதுக்குப் பிராணனைத்தின்றே."

வீரன் "எழுந்திரையா சொல்றேன்."

வாசல்காப்போன் எழுந்து கண்ணைத் துடைத்துக்கொண்டு அசாத்தியமாய் வலிக்கும் கையையும் காலையும் நீட்டி மடக்கி நெட்டை எடுத்துக் கொட்டாவி விட்டுக்கொண்டு "எழுந்திருந்தேன் ஐயா; உம்மரண சமாசாரத்தை சொல் ஐயா" என்றான்.

வீரன் "ஐயா உமமிடத்திலே சொல்ற சமாசார மன்னு: சுல்தானுக்குச் சொல்லணும்."

வாசல்காப்போன் "சரி ஆனால் சுல்தான் எழுந்தபிறகு வாபோ: இங்கே தொந்தரவு பண்ணாதே. நேத்தி நீ சண்டைபிடிக்கில்லையோ என்னவோ. இல்லாட்டா இத்தனை போதிலே எழுந்திருக்கிறதேது."

வீரன் "இங்கே நேற்று சண்டைபிடிக்கில்லே—"

வாசல்காப்போன் "சரி ஆனப்போ: போ: போ: இங்கேவிட்டு: உனக்குஎன்ன தெரியும் எங்க கஷ்டம்...."

வீரன்: "எனக்கு சுல்தானிடத்தில் விசேஷ வேலையிருக்கிறது. விடறயா இல்லையா உள்ளே— "

வாசல்காரன் : " உன்னைப் போல் எத்தனை பேருக்குக் கால் ஒடிந்து போச்சு தெரியுமா? எல்லாருக்கும் வேலே இருக்கத்தான் இருக்கு, ராஜா எழுந்திருந்த பின் வா போ—இராஜா எழுந்திருக்கில்லே இன்னும்.—"

வீரன்: "என்ன அப்பா இன்னிக்கி காத்தாலே எங்கபோனாலும் இப்படித் திருப்பி யடிக்கிரு; இராஜாவை எழுப்பு தம்பி: போ .பாக்கலாம்.— "

வாசல்: " அப்பப்பா! நன்னச் சொன்னுய்! ராஜாவை எழுப்பவா! என்னு லாகாது—"

வீரன்: "ஆனல் என்னை விடு நானே போய் எழுப்பறேன்— "

வாசல் : "அதுவும் முடியாது : எனக்குத் தலேபோயிடும்.... "

வீரன்: "நான் விசேஷம் ராஜாவுக்குச் செல்லணு மின்னல் விடமாட்டேங்கிருயே— " என்பதற்குள் சுல்தான் இவ்வார்த்தைகளை ஒருவிதமாய்க் கேட்டு, தன் தூக்க மில்லாமைக்கு இது ஒரு பொழுது போக்காய் இருக்குமென் றெண்ணித் தானே எழுந்து வாயிலுக்கு வந்தான். வந்த சுல்தானை வீரன் வணங்கினன்.

சுல்தான் : "என்ன சச்சரவு?" என்ருன்.

வாயில் காப்போன் வணங்கிநின்று "ஒன்று மில்லே. என்னவோ பேசணுமாம் உள்ளே போகணுங்கராரு" என்ருன்.

அரசன் : "என்ன சமாசாரம் இப்பொழுதில்—"

வீரன் : "ஐயா விசேஷ சமாசாரம் சொல்ல வேண்டி யிருக்கிறது. சற்று உள்ளே—"

அரசன் கோபத்துடன் "விசேஷமென்ன விசேஷம்! உனக்கும் எனக்கும்—சொல் போகிறது—" என,

வீரன் : " ஐயா அப்படியில்லே நான் ஒரு ஒற்றன். கிழக்கு பாகத்தில் வேலே செய்பவன்.—"

அரசன் "இருந்தால் என்ன ? சங்கதியைச் சொல் என்ருல்.—"

வீரன் "இரகசியமான—"

அரசன்! "இது என்னடா தொந்தரவு ! வந்து சேர் உள்ளே—அடே சுமாலியை அழைத்துவா" என்று சேவகனுக்குக்கு உத்தரவுகொடுத்து உள்ளே சென்று படுக்கையில் உட்கார்ந்து கொண்டு "சமாசாரத்தைச் சொல்" என்ருன்.

"சுல்தான் பஹதூர் ! நான் ஒரு ஒற்றன். சுகுணபுரம் முதலான இடங்களுக்குப் போய் வரப்போ ஒரு சமாசாரம் கேட்டான். வழிலே மூன்று பேர் வந்தாங்கோ—"

அரசன் கோபமேலிட்டு "சுகுணபுரத்தையும் வழியையும் மூன்று பேரையும் யார் கண்டார்கள். இந்தக் கதையெல்லாம் என்னத்துக்கு? " என்று சீறி விழுந்தான்.

இதற்குள் சுமாலியும் கூடாரத்துள் வந்து வணங்கி நின்ருன். "சுமாலி இவன் ஏதோ கதை வளர்த்துகிருன். என்னவென்று விசாரி" என்ருன் அரசன்.

சுமாலி "ஒற்றனே நடந்த விஷயத்தைச் சுருக்கமாய்ச் சொல்" என,

வீரன் "ஐயா மூன்று பேர்களை இவ்விடத்துக்கு 15 மைல் தூரத்திலே கண்டேன். என்னமோ பேசினுங்கோ. கேட்டுக்கொண்டு இருந்தேன். ஒத்தன் சொன்னுன் "கஷ்டம்! கஷ்டம்! பொறுக்கிறது கஷ்டம்! இரஜ புத்திரர்களுக்கு என்ன ஆபத்து" என்ருன்: நான் நெருங்கினேன் பக்கத்தில். அவர்களுக்குள் எல்லாம் சிறியவனுகத் தோன்றியவன் "என்தகப்பனும் மற்ற இரஜபுத்திர வீரரும் தங்கள் உயிரை தேசத்தின் பொருட்டு பலியாகக் கொடுத்து நாளையதினம் முடிவாய்ச் சண்டைபோடத் துணியும்போது, நான் மட்டும் பாவிதப்பியோடுவது சரியோ" என்ருன்.

முதலில் பேசியவன் "உமது தகப்பனும் மற்றவர்களும் இறந்தே போகின்றனர் என்று எண்ணுவதற்கில்லே. ஜயிக்கவும் ஜயிக்கலாம்" என்ருன். அதற்கு இரண்டாமவன் "முதலில், கெட்டதை எண்ணியல்லா நல்லதை எண்ண வேண்டியிருக்கின்றது. என் தலேவிதி இப்படியாய்விட்டது.நான் பெண்ணுய்ப்பிறந்தும் மற்ற இராஜ ஸ்திரீகள்போல்—" இதற்குள் என் பக்கத்தில் ஒரு பல்லி நச்சுக்கொட்டியது. அவர்கள் என்புறம் திரும்பிப் பார்த்தார்கள். இதுவரையில் பேசாதிருந்த மூன்ருமவன் "ஐயா யாரோ ஒற்றுக்கேட்பதுபோல் தோன்றுகின்றது" என்ருன். நானும் எழுந்து அவர்களைப் பிடிக்கப் போனேன். முதலில் பேசிய

வன் மூன்றுமவனைக் கூப்பிட்டு "இதோ இந்த ஈட்டியுடன் லலிதா தேவியிடம் நில்; நான் இப்பயலைக் கொன்றுவருகிறேன்" என்று என்னை எதிர்த்தான்.

நான் சண்டைபோட்டேன். முழங்காலின் கீழ் தனது கைத்தடியால் அவன் அடிக்கக் கீழேவிழுந்து மூர்ச்சை யடைந்தேன்.

பிறகு 4, 5 நாழிகைக்கெல்லாம் நான் மூர்ச்சை தெளிந்தெழுந்ததும் என் பக்கத்தில் நமது சேனையில் வந்து வேடிக்கை செய்யும் ஆலியைக் கண்டேன். அவனே என்னை மூர்ச்சை தெளிய வைத்ததாகச் சொன்னான். அவனிடத்தில் இக்கதை யெல்லாம் சொன்னேன். அவன் "அப்படியா சமாசாரம் கொஞ்ச நேரம் உட்கார்ந்து இரு. ஆள்களிடத்தில் சொல்லி உன்னைத் தூக்கிக்கொண்டு போகிறேன்" என்று சொல்லி ஓடிவிட்டான். வலி பொறுக்க முடியாமல் கஷ்டமாய் இருந்தபடியாலும், சமாசாரம் சமூகத்துக்குத் தெரியப்படுத்த வேண்டுமென்றும் தவழ்ந்து தவழ்ந்து வந்தேன். சாத்தியப்படாமல் இரவெல்லாம் ஒரு பாலத்தின் அடியில் தூங்கினேன். மறுபடி நேற்றுப்பகலும் இராத்திரியுமாய்க் கொஞ்சம் கொஞ்சமாய் வழி நடந்து இன்று இங்கு வந்து சேர்ந்தேன்" என்றான்.

அரசன் சங்கதி இன்னதென்று தெரிந்து கொண்டான். லலிதை தப்பித்துக்கொண்டு ஓடிவிட்டாள் என்பது தெரிந்தது. அதிக கோபத்துடன் சுமாலியைப் பார்த்து "மந்திரீ இது எவ்வாறு நடந்திருக்கும்? ஏதாவது கள்ளவழி உளதா? இல்லையேல் நமது சேனைகள் உபயோகமற்றனவா? மூவர் தப்பிப்போகவும் ஒருவரும் பாராமல் இருக்கவும், எப்படிக் கூடும்?"

மந்திரி ஒன்றும் பேசவில்லை. சேனாதிபதியை அழைத்துவந்து அவருடனும் கலந்து பேசினான் சுல்தான். சரியான சமாசாரம் மட்டும் தெரியவில்லை.

பலவாறு எல்லோரையும் கோபித்தபின்னர், ஆமத்பாக்ஷா "இனி நாம் இங்கு நின்று இப்பாழும் கோட்டையை முற்றுகை போட்டுப் பயன் என்ன? ஆண் பெண் குழந்தை அனைவரும் மாண்டனர். நாம் எம்மாதுன்பொருட்டு சண்டையை மேற்கொண்டோமோ, அவளோ வெளியேறிவிட்டாள் என்பது தெரிகின்றது. இனி அவளைப் பின்தொடருவோம்" என்றான்.

சேனாதிபதி "அரசர்க்கரசனே! எந்த ஊருக்கு நாம் போகவேண்டியது இப்பொழுது?"

அரசன் என்ன சொல்வதென்று தெரியாமல் சற்று விழித்து "அடே நொண்டிப்பயலே எந்த ஊருக்குப் போனார்கள் அந்த மூவரும்? தெரியுமா உனக்கு?"

வீரன் "அதுதான் தெரியவில்லை சுவாமீ! மன்னிக்கவேண்டும். தெரிந்து கொள்வதற்குள்—"

பாக்ஷா அதிக கோபத்துடன் "உதையடா அவனை, சங்கதி சொல்வதானால் சரியாய்ச் சொல்லவேண்டும். அரைகுறையாய்ச் சொல்லிப் பயனென்ன? ஏன் முழுவதும் தெரிந்து கொண்டு வரக்கூடாது?"

வீரன் "ஐயா அதற்குள் என்னைக் கண்டு பிடித்து அடித்துவிட்டார்களே—"

பாக்ஷா "உயிரை வாங்கவில்லையே? உன்னைப்போன்ற முட்டாள்கள் இருப்பதினும் இறப்பது நல்லது—"

பாக்ஷாவுக்குக் கோபத்தால் மதிமயங்கிப் போயிற்று. இந்த வீரன் சமாசாரம் கொடுக்காவிட்டால் லலிதை தப்பி ஓடிவிட்டாள் என்பதை இவன் அறிவதெப்படி? அவன் சொன்ன நல்ல சமாசாரத்துக்கு அவனை மெச்சாமல், விஷயத்தை இன்னும் பூர்த்தியாய் விசாரித்துக்கொண்டு வரவில்லை யென்று வாயில் வந்தபடி திட்டவே, மந்திரி இந்த விபரீதத்தைப் பார்த்து, இனி இவ்வீரனை இவ்விடத்திலிருந்து அனுப்பிவிடுவதே நல்லதென்று தீர்மானித்து, அரசனைப்போல் தானும் கோபத்துடன் "அடே ஒற்றா இன்னும் ஏதாவது சமாசாரம் உண்டா, சமூகத்துக்குத் தெரியப்படுத்த? உண்டானால் உடனே சொல், விரைவாய்" என்றான்.

வீரன் "ஒன்றுமில்லை—" என்பதற்குள், மந்திரி "சேவகா! இந்த மூடப்பயலை வெளியே வைத்தியரிடம் அழைத்துச் செல். பிறகு இவனது முட்டாள்தனத்துக்குத் தக்கபடி தண்டிப்போம்" என்றான்.

சேவகனும் வீரனும் வெளியே போனபின்னர் அரசனும், மந்திரியும் சேனாதிபதியும் இனி நடக்கவேண்டிய விஷயத்தை ஆலோசிப்பாராயினர்.

நமது சிறு கதை

OUR SHORT STORY

[ஸ்ரீமான் ஆர். ராஜசூடாமணி.]

(234-ம் தொடர்ச்சி.)

தாயார் அவனிடம் தமிழ்ப்பாட்டு வேறு ஏதாவது பாடும்படி தெலுங்கில் சொன்னாள். அதற்கு அச்சிறுவன் தனக்குத்தமிழ்ப் பாடல்கள் வேறொன்றும் தெரியாதென்றும், தெலுங்கில் தனக்கு அநேகப் பாடல்கள் பாட வருமென்றும் சொன்னான். அதையறிந்த பிரேமா தெலுங்கில் ஒரு பாட்டு கேட்க ஆசைகொண்டாள். சிறுவன் பாட ஆரம்பித்துவிட்டான்.

"ஏ, ஜகதீசா! எந்தூகுரு இந்த ஜாலமு சேசுரு" என்று பாடத் தொடங்கினன். அவன் தெலுங்கில் பாடின திறமையைக் கண்டு வியந்து மேலும் மேலும் தெலுங்கில் பாடல் கேட்க அதிக ஆசைகொண்டாள் நம் சிறுமி.

அன்று சிறுவனுக்கு பிரேமாவின் வீட்டில் நல்ல சாப்பாடு கிடைத்தது; தன் தாய்க்கும் அவன் ஆகாரம் கொண்டுபோனான். இவ்வாறு இரண்டு மூன்று தினங்கள் கழிந்தன.

ஒருநாள் அச்சிறுவனிடமிருந்து பிரேமாவின் தாயார் அவனைப்பற்றிய கதையெல்லாம் தெரிந்தாள். இதைக் கேட்டுக்கொண்டிருந்த பிரேமாவதி "அம்மா! நேற்று நீ அவனிடம் வெகுநேரம் பேசிக்கொண்டிருந்தாயே. அவன் என்னவெல்லாம் சொன்னான்?" என்று மறுநாள் தன் தாயிடத்திற் கேட்டாள்.

தாயார் "அம்மா! அவன் கதை மிகவும் பரிதாபகரமான கதை. அவனுக்கு குண்டூராம். அவ்வப்பா ரயிலில் அலுவலாயிருந்தாராம்: மாதம் முப்பது ரூபாய் சம்பளம் வாங்கினராம். அவர் ஒரு காசுகூட மீதம் பிடிக்கவில்லையாம். கடன் வளர்ந்துகொண்டே வந்ததாம். திடீரென்று அவனுடைய தந்தை இறந்து போய்விட்டார். கடன்கொடுத்தவர்கள் எல்லாரும் மொய்த்துக்கொண்டு அவர்கள் வீட்டில் உள்ள செம்பு குடங்கள் முதல், எல்லாச் சாமான்களையும் பொறுக்கிக்கொண்டு போய்விட்டார்கள். செலவு விஷயங்களில் அவன் தந்தையை அச்சிறுவனுடைய தாய் எச்சரித்து வந்தும், அவர் கவனியாமல் சண்டபடி செலவழித்துவிட்டபடியால் அவர்கள் வீட்டில் யாதொரு ஆபரணமும் இல்லை. சுருக்கமாய்ச் சொன்னால் ஒரு ஓட்டாணிகூட அவர்கள் வீட்டில் இல்லையாம். இப்பையனைமட்டும் அவர் மிகவும் செல்வமாய் வளர்த்து வந்தாராம். தகப்பனர் இறந்தபோது பையனுக்கு பத்துவயது தான். ஐயோ! பாவம்! அவர்கள் முன்னிருந்த கௌரவத்தோடு அவ்வூரில் வசிக்கமுடியவில்லை, அவன் தாய் ஏற்கெனவே நோயாளியானபடியால் யாதொரு வேலைசெய்து பிழைப்பதற்கும் அவள் வழியற்றுவிட்டாள். பையனை வேறு ஊருக்கு அழைத்துச் சென்று அவனைப் பிச்சை எடுத்து வரும்படியாகச் செய்து காலங்கழிக்கும்படியான ஸ்திதிக்கு வந்துவிட்டாள் அவள். அநேகம் ஏழைகளுக்குச் சந்தோஷமாய்த் தன் அருமைத் தாயிடத்திலிருந்து அரிசி வாங்கிக்கொண்டு போட்ட கைகள் இப்பொழுது பிச்சை எடுக்கப் புறப்பட்டுவிட்டன! இந்த வீணைகூட அவன் தாயார் கையினாலேயே செய்யப்பட்டதாம். பிறகு வீணைக்குத் தந்தி வேண்டுமே? அதற்குக் காசு வேண்டுமே? எங்கே போவது? தந்தியில்லாத வீணையை வைத்துக்கொண்டு "இந்த வீணைக்குத் தந்திபோடக் காசு கொடுக்கமாட்டீர்களா? ஐயா! யாராவது கொடுக்கமாட்டீர்களா?" என்று கூவிக்கொண்டு பையன் பட்டணத்தின் வீதியெல்லாம் அலைந்தான். கடைசியாக ஒரு பெரியவர் ஒரு நல்ல தந்திக்கம்பி கொடுத்தாராம். கையில் தனக்கு அன்றன்று கிடைக்கிற தொகையைப் பைசாகூட எடுத்துக்கொள்ளாமல் தன் தாயாரண்டை கொடுத்துவந்தான். அவன் ஏதாவது வீட்டிற்குக் கொண்டுபோனால்தான் சாப்பாடு. இல்லாமற்போனால், அன்று ஏகாதசிதானும். "பண்ணேன் உனக்கான" என்ற பாடல் அவன் தகப்பனர் சொல்லிக்கொடுத்த பாடலாம். தாயார் தெலுங்குப் பாடல்கள் முழுவதும் கற்றுக்கொடுத்தாளாம். பாவம்! என்ன கஷ்டம்! பரம ஏழை! அவன் பெயர் ரெங்கப்பாவாம்" என்று கூறிமுடித்தாள்.

அவ்வளவு பெரிய பட்டணத்திலே, பெரிய தனிகர்களும் பிரபுக்களும் நிறைந்த பட்டணத்திலே, செல்வம் மலை மலையாய்க் குவிந்திருந்த பட்டணத்திலே, எத்தகைய பெரியவரையிலுள்ளவர்களையும் சிறிதும் மதியாது வாழும் ஜனங்கள் நிறைந்த பட்டணத்திலே, பந்துவும்

சுற்றமும், அன்பும், ஆதரவும் அற்று நின்ற அவ்வநாதைக்கு முடிவில் ஓர் சிநேகித பாத்திரம் கிடைத்தது ஈசுவரனுடைய அருள்தானன்றோ! அந்தோ ! பாவம்! எளியாரைக் காக்கும் ஈசன் அப்பையன் மேல் எள்ளளவும் அருள் புரியாதிருப்பானோ ?

இவ்வாறு ஒரு மாதம் கழிந்தது; அச்சிறுவன் தினமும் தம்பூருடன் "பண்ணேனுனக்கான பூசை யொருவடிவிலே" என்ற பாடலில் ஆரம்பித்து பல தெலுங்குப் பாடல்களைப்பாடலானன். குழந்தைக்கு அப்பாடல்கள் செவியின்ப மளித்தபோதிலும், அவளுடைய பிணிக்கேற்றதோர் மருந்தாகவில்லை.

ஒருநாள் சிறுவன் ரெங்கப்பன் தம்பூருடன் கோமதி விலாஸத்தின் முன் வந்தான். என்ன விந்தை! இரவு பன்னிரண்டு மணியாயினும், அடைபடாத கோமதி விலாஸத்தின் தலைவாசல் அடைத்திருந்தது. குழந்தை படுத்திருந்த அறையின் ஜன்னலும் மூடப்பட்டிருந்தது. பத்து நிமிஷங்கள்—அரை மணி நேரம்—ஒரு மணிநேரம் ஆய்விட்டது. அடிக்கடி தம்பூரிலிருந்து சுருதி எழும்பித் தளர்ந்து கொண்டிருந்தது. ஒருவரும் வரவில்லை. கதவும் திறக்கப்பட வில்லை. என்ன நிகழ்ந்ததென்று அவனல் அறிய முடியவில்லை. அக்கம் பக்கத்தாரிடம் கேட்டு அறிந்து கொள்ளுவோம் என்றாலும் பாஷை தெரியாது. தான் ஒருவாரம்வரை வராத காரணமே பெரிய குற்றம் என்று எண்ணினன். பற்பல சந்தேகங்கள் மனத்தில் வாதாடி நிற்க,வீணையைத் தோளில் சார்த்தினவனாய், கண்களில் நீர்ததும்பி நிற்க, கைவீசிக்கொண்டு வேகமாய் வீடு நோக்கிச் சென்றான் ரெங்கப்பன். தன் தாயைக் கண்ட மாத்திரத்தில் ரெங்கப்பன், விழிநீர் பெருக்கெடுத்தோடக் கலங்கி நின்றான். தாய் என்ன நிகழ்ந்ததென்று பதறிப் பலமுறை கேட்க, அவன் அடைபட்ட குரலில் தன்னுடைய தெலுங்கு பாஷையில் "அம்மா! அங்கே போனேன். கதவு அடைத்திருந்தது. என்ன நிகழ்ந்ததோ ? என்ன நிகழ்ந்ததோ ? எனக்கு ஒன்றும் தெரியவில்லை அம்மா ! நாம் என்ன செய்வோம்" என்று அழுதான்.

தாயும் விஷயங்களை முழுவதும் அறியாத போதிலும் ஏதோ அக்குழந்தைக்கு அபாயம் நேரிட்டு விட்டதென்று நம்பி,கண்ணீர் பெருக்கி அழ ஆரம்பித்து விட்டாள். தன்னுடைய ஒரே அருமைப் பிள்ளைக்கு,யாருமறியா அப் பட்டணத்திலே அருந் துணையாயிருந்த குழந்தையல்லவா அப்பிரேமாவதி!

நாலைந்து தினங்கள் சென்றன. ஒவ்வொரு நாளும் சிறுவனுக்கு, தம்பூரெடுத்துப்பாடச் சிறிதும் விருப்பமுதிக்காத போதிலும், அந்தப் பிரேமாவதியின் நிலைமையை அறிந்து கொள்ள ஆசை வளர்ந்தது.

ஒரு நாள் சாயங்காலம் தம்பூரில்லாமல் நம் சிறுவன் வாடிய முகத்தோடு தெருப்பக்கமாய் ஒதுங்கி ஒதுங்கி நடந்து பிரேமாவதியின் படுக்கை யறை ஜன்னலின் கீழேவந்து நின்றான். உள்ளே ஒரு பெருமூச்சும், விம்மலும், அடைத்த குரலில் எழுந்த அழுகை யொலியும் கேட்டன. உடனே பையன் ஜன்னல் வழியாக உள்ளே எட்டிப் பார்த்தான். தனக்கு அன்புகாட்டிய தெய்வீக அருள் வாய்ந்த பிரேமாவதியின் தாய், பாழாய்க்கிடந்த கட்டிலின் பக்கத்தில் உட்கார்ந்து முகத்தைக் கைகளால் மூடிக்கொண்டிருப்பதைக் கண்டான்.

பையனுக்கு விஷயம் முழுவதும் விளங்கி விட்டது. உடனே ஜன்னல் கம்பிகளைப் பிடித்திருந்த கைகள் தளர, மெய்மறந்து கீழே விழுந்துவிட்டான். அச்சப்தத்தைக் கேட்ட தாய், ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தபோது ரெங்கப்பாவைக் கண்டுகொண்டாள். உடனே வெளிவந்து அவன் விசனத்தால் கண்களில் நீர்வடியச்சோர்ந்துகிடப்பதைக்கண்டு இருகைகளாலும் வாரி அவனை வீட்டிற்குள் கொண்டு போனாள். அவனை மயக்கந் தெளிவித்தாள். பையன் எழுந்ததும்,தாய் அவனைச்சமாதானப் படுத்தி பின்வருமாறு பேச ஆரம்பித்தாள்.

"ரெங்கப்பா ! உன் அருமைத்தோழி பிரேமாவதி பத்து தினங்களுக்கு முன்பாக இந்த லோகத்தைவிட்டுப் போய்விட்டாள். அவள் சாகுந்தருணத்தில்கூட, அப்பா! உன்னை மறக்கவில்லை. அடே, ரெங்கப்பா! அவ்வளவு பிரியமடா உன்மேல் அவளுக்கு. அப்போதைக்கப் போது பெற்றோர்களிடமிருந்து கிடைத்த அணாக்களையெல்லாம் சேர்த்து அவள் பத்து ரூபாய் தேடிவைத்திருந்தாள். அதை, இறப்பதற்கு முன் என் கையிற் கொடுத்து "அம்மா! இதை ரெங்கப்பாவிடம் கொடு, நாளை இங்கே வருவான். அவன் இதை வைத்துக்கொண்டு

ஊர்போய்ச் சேரட்டும், அவன் ஊருக்குப் போவதற்கு நாலுரூபாய் போதும். மீதியுள்ள பணத்தை வைத்துக்கொண்டு பழக்கடை வைத்து வியாபாரம் செய்து பணக்காரனுகட்டும்" என்று சொன்னுள். அதன்பிறகு சற்று நேரத்திற்குள் இறந்துபோய்விட்டாள்........" என்று அவள் சொல்லிக்கொண்டிருக்கும் போதே அந்தஅறை அழுகையொலியால் நிரம்பியது.

சிறுவன் கண்ணீரும் கம்பலையுமாய் இரு கரங்களையும் முட்டியின்மீது ஊன்றிக்கொண்டு ஏங்கி ஏங்கி அழுதான். உடனே தாயார் அப்பணத்தை எடுத்துவந்து அவன் முன் நீட்டி "அப்பா! பிரேமாவதி அன்போடு கொடுத்த பணம் இது. எடுத்துக்கொள்" என்று சொன்னுள்.

அதைக்கண்ட மாத்திரத்தில் சிறுவன் "தாயே! இதை என்னுல் தாங்க முடியாது. இப்பேருதவியை என்னுல் தாங்க முடியாது." என்று உரக்கக்கூவி அழுதுகொண்டு திரும்பிப்போகப் புறப்பட்டான்.

அப்பொழுது தாயார் அவன் கையைப் பிடித்துக்கொண்டு "அப்பனே! நீ இதைக் கேட்டுவிட்டுப்போ. அவள் இறக்கும் சமயத்தில் அன்போடு கொடுத்த பணம் இது. நீ இதை வாங்கிக்கொள்ளாமற்போனுல் அவளுக்கு நான் பெரிய அபராதம் விளைத்தவள் ஆவேன். நீ இதை வாங்கிக்கொள்" என்று சொன்னுள்.

அவளுடைய சொல்லை மீறிநடக்க மனமில்லாதவனுய் சிறுவன் அப்பணத்தை வாங்கி வாடின முகத்துடன் வீதிவழியாய் அழுதுகொண்டே சென்று, தன் வீடுபோய்ச் சேர்ந்தான்: தன் தாயிடத்தில் நடந்த விவரங்கள் முழுவதையும் கூறித் துக்கித்தான்.

அதைக்கேட்ட தாய் தன் அருமைக் கணவனிறந்தகாலத்தில் அழுததைப்பார்க்கிலும் அதிக விசனத்துடன் ஏங்கி அழ ஆரம்பித்துவிட்டாள். அன்றிரவே, பிரேமாவதி சொல்லிப்போனபடி தங்கள் ஊருக்குப் புறப்பட வேண்டுமென்று எண்ணி அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் யாவும் செய்தாள்: தன் குழந்தையின்மீது உள்ளன்பு பாராட்டிய பிரேமா இறந்துபோன பிறகு அவ்வூரில் தங்களுக்கு யாருமில்லை என்று எண்ணி ஏங்கினுள். அன்றிரவு ரயிலுக்குப் போவதற்குச் சற்று முன்பாக, தாயும் பிள்ளையும் கூடியிருந்து கடவுளை வணங்கி பிரேமாவுக்கு நற்கதியளிக்கும்படி வேண்டித் தொழுதார்கள்.

II

குண்டூரின் கடைவீதி—அங்கு அநேக கடைகளின் மத்தியில் ஓர் பெரிய பழக்கடை—அங்கு ஒரு பெரிய பலகையில் 'பிரேமா விலாஸ் பழக்கடை' என்ற எழுத்துக்கள் வரையப்பட்டிருந்தன. சகலவிதமான திவ்விய கனிவகைகள், அழகிய கூடைகளில் அடுக்கடுக்காய் வைக்கப்பட்டிருந்தன. பழக்கடையில் வேலையாயிருந்தவர்களின் கைகள் சோர்வடைந்து சலிப்புற்றன. அவ்வளவு பெரிய வியாபாரம் அக்கடையில் நடைபெற்றது. அக்கடைமுன் ஈ மொய்ப்பதற்கு இடம்கிடையாது. அவ்வளவு கூட்டம். எல்லாம் டஜன் கணக்கில்தான் விற்பனையாய்வந்தன. முதலாளி ஸ்தானத்தில், ஓர் பெரிய மனிதன் முறுக்கிய மீசையுடன் தன் பக்கத்தில் இருந்த இரண்டு சிறுகுழந்தைகளை அன்புடன் நோக்கி கடைக்கு வந்தவர்களிடம் பிரியத்துடன் பேசிக்கொண் டிருந்தான். அவன் யார்? அவனே நமது ரெங்கப்பா! அவன் கடையின் பெயரோ பிரேமா விலாஸம். அவன் முதற் குழந்தையின் பெயரோ பிரேமாவதி; அவனுடைய கடைப்பூனைக்குட்டியின் பெயரும் பிரேமாவதி; அவன் குழந்தைகளுக்குச் சொல்லுகிற கதையும் பிரேமாவதியின் கதையே.

கமலம் "அண்ணு! என்ன கதை எழுதிவிட்டாய்! எத்தனை இடங்களில் உன் கதை என் மனதைக் கரைத்துவிட்டது தெரியுமா? நான் பிரேமாவைப்போல ஏழைகள்மீது இரங்குபவளைக் கண்டதுமில்லை! கேட்டதுமில்லை! நானும் அவளைப்போல நல்ல குணவதி ஆகவேண்டும். அண்ணு! ஐயோ! பாவம்! அப்பேர்ப்பட்ட நல்ல குழந்தைகளை ஈசுவரன் அழைத்துக்கொள்ளுகிருனே. நறுமணம் வீசுகிற அழகியபூக்கள், செடியினின்று. பறிக்கப்படுவதுபோல குணபூஷணங்களாகிய குழந்தைகளைக் கொடிய யமன் அபகரித்துக்கொண்டு ஓடிவிடுகிருன்.

அண்ணன் "நாளை எழுதப்போகிற கதை இதைவிட நல்ல கதை."

(முற்றிற்று.)

சிறுவர், ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

CHILDREN'S and LADIES' PAGES

[ஸ்ரீமான் ஸி. ஆர். ஸ்ரீனிவாஸய்யங்கார் அவர்கள், பி.ஏ.]

அஹல்யாபாய்

(239-ம் பக்கத் தொடர்சி)

அப்பொழுது பீஷ்வாவுக்கு மாமனுயிருந்த ரகுநாத ராவ் அல்லது ரகோபா என்பவன், மஹாராஷ்டிர ராஜ்யத்தில் ஸர்வாதிகாரத்தையும் கைக்கொண்டு,உண்மையான அரசனுயிருந்தான். கங்காதரனுடைய யோசனையைக் கேட்டு மகிழ்ந்து, இந்தூரில் துஷ்டர்களாயும் திறமையற்றவர்களாயும் ஆசை நிறைவேருமல் ஏமாந்தவர்களாயு மிருக்கும் யாவரையும் ஒன்றுசேர்த்தான். அவர்களில் பலர், செல்வத்தாலும் பரிவாரங்களாலும் வலிமையுடையவர்கள். தாங்கள் அஹல்யாபாயை எதிர்க்கத் தகுந்த பலங்கொண்டிருப்பதாய் முடிவுசெய்து, மறுபடியும் அவளுக்கு எழுதினுர்கள். "இப்பொழுதாவது நீ யாரை யாவது ஸ்வீகாரம் செய்துகொண்டு, ராஜப் பிரதிநிதியாய்த் தகுந்தவர்களை நியமிப்பது நலம். இரஜபுத்திரர்களும் இங்கிலீஷ்காரரும் உன் ராஜ்யத்தைக் கட்டிக்கொள்ள சமயம் பார்த்துக்கொண் டிருக்கிருர்கள். அனுதையாய், ஆதரவற்று, ஒண்டியாய், எங்களையும் விரோதித்துக்கொண்ட நீ, என்னசெய்ய முடியும்? சேனையை நடத்துவாயோ? கவசம் பூண்டு யுத்தம் செய்வாயோ" வென்ருர்கள்.

அவர்களுடைய யோசனைகளையும் உபாயங்களையும் ஆரம்பமுதல் நன்ருயறிந்து படிப்படியாய்க் கவனித்துக்கொண்டு வந்த மஹாராணி "உங்களுடைய சூழ்ச்சிகளை ஆதியோடந்தமாய் அறிவேன். உங்களுடைய கெட்ட எண்ணங்களும் துரோகமும் பாபமும் உங்களையே கெடுக்கும். உங்களுடைய யத்தனங்களுக்கும் ஆடம்பரத்திற்கும் கூச்சலுக்கும் பயப்படுகிறவள் நானல்ல. நீங்களும் உங்களைச் சேர்ந்தவர்களும், உங்களால் கூடியவரையில் வஞ்சனையில்லாமல் பூர்ணபலத்தையும் உபயோகிக்கலாம். உங்களை அங்கங்கே தடுத்து, உங்களுடைய யுக்திகளைக் கெடுத்து, உங்களை என்னிடத்தில் வந்து சரணமடையும்படி செய்வதற்குவேண்டிய பலத்தையும் புத்தியையும் ஈச்வரன் எனக்குக் கொடுத்திருக்கிருனென்பதை மறக்கவேண்டா"மென்று பதிலனுப்பினுள்.

அதைக் கேட்டவுடன், ரகோபாவுக்கு தலை தெரியாமல் கோபம் வந்துவிட்டது. "மல்ஹார்ராவ் ஹோல்கார் பீஷ்வாவின் வேலைக்காரன். அவனுடைய நாட்டுப்பெண் தன்னிலைமையை மறந்து,இறுமாந்திருப்பதைப் பார்த்தால் தகுந்தபுத்திசொல்லவேணுமென்று தோன்றுகிறது. அவளுடைய கர்வத்தைக் குலைக்கிறே"னென்றுசபதஞ்செய்தான். ஆனல் கலகக்காரர்கள் யாதொரு முயற்சியும் செய்யுமுன், மஹாராணி அவர்களைத் திடீரென்று கைதுசெய்து, சிறையி லடைத்துவிட்டாள். அவர்கள் திடுக்கிட்டு, ஒன்றும் தோன்றுமல் தங்களுக்குள் யாரோ ஒருவன் துரோஹஞ் செய்து ரஹஸ்யங்களை அஹல்யாபாயிக்குத் தெரிவித்துக்கொண்டே இருந்திருக்கவேண்டும். இல்லாவிட்டால் இன்னுரை இன்னவிடத்தில் கைதுசெய்யவேண்டுமென்று, அவளுக்கு எப்படித் தெரியு"மென்ருர்கள்.

இதற்குள் அஹல்யாபாய் தன் மந்திரிகளையும் பிரபுக்களையும் சேனைத் தலைவர்களையும் வணிககுல திலகர்களையும் தருவித்து, ரஹஸ்யாலோசனை செய்தாள். அரண்மனையில் ஆஸ்தானமண்டபத்தில் இந்தூர் ராஜ்யத்திலுள்ள கனவான்கள் தனவான்கள் வீரர்கள் நிபுணர்களெல்லாம் கூடி, மஹாராணியைப் பக்தி விசுவாஸத்துடன் வணங்கினுர்கள். சுத்தமான அந்தக்கரணமும், லோகோபகார சிந்தையும், தர்மானுஷ்டானத்தில் நோக்கமுமுள்ள அஹல்யாபாயின் முகத்தில் தெய்வீகமான ஓர் காந்தி விளங்கிற்று. எல்லோரையும் கௌரவித்து ஆதரித்து, அவர்களுடைய ராஜவிசுவாஸத்தையும் திறமையையும் எடுத்துச் சொல்லி வந்தனஞ்செய்தாள். போஸலே, மாதவராவ், ஸிந்தே, காயக்வார் முதலிய மஹாராஷ்டிரத் தலைவர்களுக்குத் தூதர்களை யனுப்பி,ஆபத்துக் காலத்தில் தனக்கு உதவிசெய்ய வேண்டுமென்று வேண்டினுள். காயக்வார் இருபதினுயிரம் யுத்தவீரர்களை அனுப்பினுன். போஸலே "தங்களுடைய ஆக்ஞைப்படி நடக்கிறேனெ"ன்று பதிலனுப்பி, பெரிய சைன்யத்துடன்

ந்தூருக்குப் புறப்பட்டான். மஹா தந்திரி ான விந்தே, அஹல்யாபாயிக்கு உதவி சய்யத் தன் சேனையை அனுப்பினன்.

இதற்குள் ரகோபா தன் பிரபலமான சைன் ரியத்துடன் இந்தூருக்குத் சமீபத்தில் வந்து துரோகியான கங்காதரனல் பலவித சகாயத் தைப் பெற்றான். அஹல்யா பாயின் சேனபதி பான துக்கோசி யென்பவன், இந்தூர் சைனிய த்தை யுத்தசன்னதஞ் செய்து, நண்பர்களின் படைகளுடன் நகரத்திற்கு வெளியில் ரகோ பாவை எதிர்பார்த் திருந்தான். தன் வரவைக் கேட்டுப் பயந்து நடுங்கி, ஒன்றுந்தோன்றாமல், தன்னைச் சரணமடைவாளென்றும், தன்னை ப்றி அவளுக்கு உதவிபுரிய ஒரு மகாராஷ்டிரத் தலைவனும் துணியமாட்டானென்றும் நினைத் திருந்த ரகோபா, "கங்காதரனுடைய வார்த் தையைக் கேட்டு, மோசம் போனேமே'யென்று, தன்னை நொந்துகொண்டான். தன் கட்சியில் சேர்ந்த யாவரும் திடீரென்று கைதி செய்யப்பட்டதைக் கேட்க அவனுக்கு ஆச்சரி யமும் கவலையும் மேலிட்டன. மகாராஷ்டிரத் தலைவர் யாவரும் அஹல்யாபாயிக்குத் துணை யாய் வந்து நிற்பதைப் பார்த்து, மனந்தளர்ந் தான். தன்னைவிட வலுத்தசேனையுடன் யுத்தஞ் செய்வது முற்றிலும் பிசகு; தோல்வியோ நிச்ச யம். திரும்பிப் போனாலோ, காலமுள்ளவரைக் கும் கேலிக்கும் அவமானத்திற்கும் ஆளாக வேண்டும். இந்த தருமசங்கடத்தில் இன்னது செய்வதென்று அவனுக்குத் தோன்றவில்லை.

முடிவில் துக்கோசி யென்பவனுக்குத் தூத னுப்பி, "மாலீராவ் அகாலத்தில் மரணமடைந் ததைக் கேள்வியுற்று, அவனுடைய தாய்க்கு என் துக்கத்தைத் தெரிவிக்கவும், என்னாலியன்ற உபகாரத்தைச் செய்யவும் நான் வந்திருக்கை யில், என்னைச் சத்துருவா யெண்ணி யுத்தஞ் செய்யத் தயாராயிருப்பதைப் பார்த்து ஆச்சரி யப்படுகிறேனெ"ன்று சொல்லி யனுப்பினன். "அப்படியானல் அதை நடத்தையில் காட்ட லாமே"யென்று துக்கோசி பதிலனுப்பினன். ரகோபா ஓர் சிறிய பரிவாரத்துடன் துக்கோசி யின் கூடாரத்திற்கு வந்தான். துக்கோசி தான் ஒண்டியாய் அவனை எதிர்கொண் டழைத்து, தன் சேனையை அவனுக்குக் காட்டி, அஹல்யா பாயிடத்தில் அழைத்துக்கொண்டு போனன். மகாராணி அவனைத் தகுந்த மரியாதையுடன் வரவேற்று இந்தூரில் சிலகாலம் தன் விருந் தினராய் வசிக்கச் செய்தாள்.

ரகோபா அங்கிருந்துகொண்டு, அஹல்யா பாய் ராஜ்யகாரியங்களை நடத்தும் விதத்தை யும், மனிதர்களின் சுபாவத்தை அறியும் திற மையையும், அவர்களைத் தகுந்தபடி ஆதரித்து எச்சரித்து வற்புறுத்திக் கண்டித்துத் தண் டித்துக் கௌரவிப்பதையும், அவரவர்கள் செய்யக்கூடிய வேலைகளை பூர்ணமாயும், சிரத் தையோடு செய்யும்படி தூண்டி வேலைவாங்கு வதையும், ராஜ்ய தந்திரங்களின் மர்மத் தை சந்தேக விபரீதமில்லாமல் அறிந்து அனு பவத்தில் காட்டுவதையும், தன்னையும் தன் சேனையையும், முற்றிலும் மறந்து, ராஜ்யத் தின் க்ஷேமத்திற்கே தன்னைத் தத்தஞ்செய்து சோம்பலில்லாமல் இராப்பகலாய் ஓயாமல் பாடுபடுவதையும், குடிகள் யாவரும் அவளிடத் தில் வைத்திருக்கும் நம்பிக்கையையும் பக்தி யையும் அன்பையும் நேரில் பார்த்து, அடங் காத ஆச்சரியங்கொண்டு, ராஜ்ய காரியங் களையும் நீதியையும் பற்றி பலவிதமாய் அவ ளைக்கேட்டுப் பரீக்ஷித்து, தன்னைவிட அஹல்யா பாய் எந்த வழியிலும் மேலானவளென்று அறிந்து, இதென்ன தெய்வாம்சமோ வென்று பிரமித்தான்.

கங்காதரன், தன் சதியாலோசனை வீணான தைக்கண்டு, தன் நோக்கத்தையும் நடத்தை யையும் மாற்றிக்கொண்டு, அஹல்யாபாயிடத் தில் வந்து, தான் செய்த துரோகத்தை ஒப் புக்கொண்டு, வணக்கமாய் மன்னிப்புக் கேட் டான். அவன் பிராமணனென்பதையும், ராஜ புரோகிதனென்பதையும் நினைத்து, மகா ராணி அவனை மன்னித்து, மறுபடியும் ராஜ சபையில் வரும்படி உத்தரவளித்தாள். மற் றக் கலகக்காரர்களிடத்தில் ராஜ விச்வாஸப் பிரமாணத்தை வாங்கிக்கொண்டு, அவர்களைக் கடுமையாய் எச்சரித்துச் சிறையிலிருந்து விடு வித்தாள்.

ஆனல் ரகோபா, தன் எண்ணம் வீணான தையும், ஓர் பெண்பிள்ளையிடத்தில் தான் அவ மானப்பட்டதையும் நினைத்து நினைத்து ஆத் திரங்கொண்டு, இரஜபுத்திரர்களைத் தூண்டி விட்டு, அவர்களுடன் சேர்ந்து மறுபடியும் படையெடுத்து வந்தான். நிம்பைராமென்ற நகரத்தைப் பிடித்து அதன் தலைவனை அங்கி

ருந்து துரத்திவிட்டார்கள். துக்கோசி, ஸிந்தியா ஸ்ரீபாயென்பவர்களை அஹல்யாபாய் அங்கே தனக்கு முன்பாக அனுப்பி, தான் சேனையுடன் பின் சென்றாள். அதற்குள் துக்கோசி இரஜபுத்திரர்களை யுத்தத்தில் முறியடித்து, அந்நகரத்தைக் கைப்பற்றி விட்டான். தங்களை வஞ்சகமாய்த் தூண்டிவிட்ட ரகோபாவை அவர்கள் வெறுத்துக்கொண்டு, அங்கிருந்து விலகி விட்டார்கள்.

துக்கோசி தாழ்ந்த ஜாதியில் பிறந்தவனாயினும், வெகு திறமை வாய்ந்த சேனாதிபதி. இந்தூர் ராஜ்யத்தின் சைன்யத்தை எவ்விதத்திலும் பலப்படுத்தி, அக்காலத்தில் அதற்கு நிகரில்லாமல் செய்தான். மகாராஷ்டிரர்களும் இரஜபுத்திரர்களும், ரோகில்லாக்களும், பிண்டாரிகளும், தன் ராஜ்யத்தைச் சுற்றிலும் ஓயாமல் கலகமும் சண்டையும் செய்து கொண்டிருக்கையில், இந்தூர் சமஸ்தானத்தில் மாத்திரம் செழிப்பும் ஐசுவரியமும் சமாதானமும் விளங்கின.

ஒரு சமயத்தில் ஜயபுர ராஜனிடத்திலிருந்து வரவேண்டிய கடனை வாங்குவதற்காகத் துகோஜீ போயிருந்தபொழுது, ரஜபுத்திரர்களால் அபஜயமடைந்துதனக்குத் திரவியத்தையும் சைனியத்தையும், அனுப்பவேணுமென்று அஹல்யாபாயிக்கு எழுதினான். "இந்தத் தடவை அனுப்புகிறேன். இனி இப்படிக் கேட்காதே. யுத்தஞ் செய். சத்துருக்களை ஜயிப்பாய். உன்னால் முடியாவிட்டால், நீ பயந்தால் நானே வந்து சைன்யங்களை நடத்துகிறே"னென்று பதில் அனுப்பினாள். அப்பொழுது அவளுக்கு வயது 58. மல்ஹார்ராவ் இறந்த காலத்தில் பொக்கிஷத்தில் 16 கோடி ரூபாயிருந்தது. ராஜ்யத்தின் வரும்படி எல்லாச் செலவுகளுக்கும் கண்டு மிகுந்திருப்பதைப் பார்த்து, மகாராணி அந்த 16 கோடியை ஸ்ரீகிருஷ்ண மூர்த்தியின் கைங்கரியத்திற்காக வென்று ஒதுக்கி வைத்தாள். ரகோபா இரண்டு தடவை அவமானப் பட்டும் கோபந்தணியாமல், எப்படியாவது அஹல்யாபாயைக் கெடுக்கவேணுமென்று நினைத்து ஓர் தூதனை யனுப்பி, "ராஜ்ய காரியங்களுக்காக எனக்கு இப்பொழுது திரவியம் வேண்டியிருக்கிறது. உன்னிடத்தில் உபயோகமில்லாமல் குவிந்து கிடக்கும் தனத்தை எனக்கனுப்ப வேண்டுமெ"ன்று பெரிய தொகையைக் குறிப்பிட்டான். அதற்கு அஹல்யாபாய் "வெகு காலமாய் உபயோகமில்லாமல் பொக்கிஷத்தில் கிடப்பதாய் நீ சொல்லும் திரவியம், எனக்கும் இந்த ராஜ்யத்திற்கும் ரட்சகனாய்ச், சகல க்ஷேமத்தையும் ஜயத்தையும் கொடுத்த ஸ்ரீ கிருஷ்ணமூர்த்திக்கு அர்ப்பணஞ் செய்யப் பட்டுவிட்டது. அவருடைய கைங்கரியத்தைத் தவிர வேறு விஷயத்தில் ஒரு பைசா கூட உபயோகப்படக்கூடாது. ஆனால், நீ பிராமணனா யிருப்பதால் யாசகஞ்செய்வது சுவதர்மம், நாங்கள் கொடுக்க வேண்டியதும் சுவதர்மம். அப்படி உன் கஷ்டம் தாங்க முடியாமலி ருந்தால், என்னாலியன்ற வரையில் யாசகம் கொடுக்கிறேனெ"ன்று பதிலனுப்பினாள்.

அதைக்கேட்ட ரகோபா கோபத்தால் மெய் மறந்து, "நான் பிராமணனே; ஆனால் பிச்சைக்காரனல்ல. என் வேலைக்காரனுடைய தனம் யாவும் என்னுடையதே. எனக்கு வேண்டிய பொழுது எடுத்துக்கொள்ளச் சுவாதீனமுண்டு. என் உத்தரவை மீறி நடந்ததற்காகத் தகுந்தபடி தண்டிக்கிறேனென்று, எழுதிவிட்டு பெரும்படையுடன் இந்தூரை முற்றுகையிட்டான். அஹல்யாபாய் ஒண்டியாய்க் கவசம் பூண்டு, போர்க்கோலத்துடன், 500 ஸ்திரீ பரிவாரங்களுடன் அவனை எதிர்கொண்டழைத்தாள். அதைக்கண்டு அந்த மகாராஷ்டிரன் பிரமித்து, "உன் சைன்யமெங்கே? நீ ஒண்டியாய் இங்கு ஏன் வந்தா"யென்றான். "பிறர் தருமத்தைக் கைவிட்டாலும் நானும் அப்படிச் செய்வது நியாயமா? உப்பிட்டாரை உள்ளளவும் நினையென்ற நீதியை நான் மறக்கவில்லை. பீஷ்வாக்கள் எங்களுக்குப் பல தலைமுறைகளாய்ப் பிரபுக்கள். நாங்களோ அவர்களுடைய ஊழியக்காரர்கள். எஜமானன் காரணமில்லாமல் கோபங்கொண்டாலும், வேலைக்காரரும் தன்னை மறந்து கோபங்கொண்டு அவரை எதிர்ப்பது தருமமா? நான் உங்களுடன் யுத்தஞ் செய்யமாட்டேன், இஷ்டமிருந்தால் என்னை உங்களுடைய கோபத்திற் கிரையாக்கலாம். நான் இறந்த பின், என் தனம் உங்களுடைய கையில் விழுவதைத் தடுக்கமுடியுமா? ஆனால், உயிருள்ள வரையில் மனப்பூர்வமாய் ஒரு பைசாகூட உங்களுக்குக் கொடுக்கமாட்டேன். லௌகிக தனங்களைக் காட்டிலும், தருமமே

மேலான தனம். அதை இழக்கத் துணியே" னென்றாள். ரகோபா ஒன்றும் தோன்றாமல் வெட்கமடைந்து, சிலகாலம் இந்தூரில் தங்கியிருந்தான்.

அஹல்யாபாய் ஒவ்வொரு நாளும் அதிகாலையில் எழுந்து, ஸ்நானஞ்செய்து, தேவபூஜையை முடித்து, ராமாயண பாரத பாகவத பாராயணஞ்செய்து, தன் கையால் பிராமணர்களுக்கும் ஏழைகளுக்கும் அன்னமளித்து, பிறகு தான் போஜனஞ்செய்வாள். சற்று இளைப்பாறிச் சபாமண்டபத்திற்குச் சென்று, சாயங்காலம் வரையில் சகல ராஜ்யகாரியங்களையும் தானே நேரில் கவனிப்பாள். தன்னைப் பார்த்து விஷயங்களை நேரில் தெரிவித்துக்கொள்ள விரும்பும் யாரையும் தடுக்க விரும்புவதில்லை. அன்புடனும் பொறுமையுடனும் அவரவர்களின் வேண்டுகோளைக் கேட்டு, நீதியோடும் கருணையோடும் உத்தரவு செய்வாள். அஸ்தமித்தவுடன் சபையைக் கலைத்து, அரண்மனைக்குச் சென்று, ஸ்நானஞ்செய்து, தேவபூசையை முடித்து, அல்பாகாரஞ் செய்வாள். பிறகு ராத்திரி பதினொரு மணிவரையில் மந்திரிகள் வந்து அன்று நடந்த கார்யங்களைப்பற்றியும், மறுநாள் நடக்கவேண்டிய விஷயங்களைப் பற்றியும், உண்டான சந்தேகங்களைக் கேட்டு கலந்து யோசித்து முடிவுசெய்வாள்.

தன் ராஜ்யத்திலுள்ள யாவரும் தங்களால் இயன்றவரையில் அதன் க்ஷேமத்தையும் செல்வத்தையும் விருத்தி செய்யவேண்டுமென்று உற்சாகப்படுத்தி வந்தாள். கைத்தொழிலும், வியாபாரமும், விவசாயமும் வித்தைகளும், கலைகளும் செழித்தோங்கின. தன் குடிகள் க்ஷேமமாயும் சுகமாயுமிருப்பதைப் பார்ப்பதில் அஹல்யாபாயிக்கு மிகுந்த திருப்தி. காடுகளை அழித்துத் திருத்தி நஞ்சை புஞ்சைகளாகச் செய்து, அந்தந்த பூமியின் குணத்திற்குத் தகுந்தபடி பயிர்களையும் பலவிதமான மரங்களையும் வளர்த்து, வெட்டவெளியாயிருந்த விடங்களில் கிராமங்களையும் நகரங்களையும் உண்டாக்கி, தன் ராஜ்யத்திலுள்ள முக்கியமான விடங்களுக்குச் சுலபமாய்ப் போக்குவரத்துண்டாகும்படி பெரிய சாலைகளையும் கிளைச் சாலைகளையும் அமைத்து, இருபுறத்திலும் நிழலடர்ந்த விருட்சங்களை வைத்து, அங்கங்கே சுமைதாங்கிகளையும் கிணறுகளையும் குளங்களையும் தங்குமிடங்களையும் சத்திரங்களையும் ஏற்படுத்தினாள். ஏழை, கதியற்றவன், கூன், குருடு, செவிடு, நொண்டி, முடம், தாய்தகப்பனில்லாத அகதிகளை அவர்களுக்குத் தகுந்தபடி ஆதரித்தாள். வர்த்தகக் கூட்டங்கள் யாத்திரை செய்யும்பொழுது அவர்களைக் கொள்ளையடித்து உபத்திரவித்தபில்லெரென்ற ஜாதியாரை மலைப் பிரதேசங்களிலிருந்து வெளிப்படுத்தி, பயிரிடுதல் கைத்தொழில் முதலிய கண்ணியமான தொழில்களைச் செய்து பிழைக்கும்படி மாற்றினாள்.

இந்துக்கள் மகம்மதியரென்ற பேதமில்லாமல், யாரிடத்திலும் மகாராணி அன்பு பாராட்டித் தன் குழந்தைகளைப்போல் ஆதரித்துவந்தபடியால், எல்லோரும் அவளிடத்தில் பக்தியும் விசுவாசமும் கொண்டு, குல தெய்வத்தைப் போல் பூஜித்துவந்தார்கள். ஜனங்கள் தங்களுடைய செல்வத்தை ஒளிக்காமல் சகல சௌக்கியங்களையும் அனுபவிக்கும்படி சுவதந்திரத்தையும் ஆதரவையும் பெற்றார்கள். குடிகளின் தனத்தை அபகரிக்கும் கொடுங்கோல் மன்னனாவது ராஜ்யாதிகாரத்தைக் காரணமாய்க்கொண்டு, ஜனங்களைக் கண்ணும் கண்ணீருமாய்க் கதறவடித்து, மரத்தாலிகட்டி நடுங்கச் செய்யும் அதிகாரிகளாவது, அவளுடைய காலத்திலில்லை. எவ்விடத்திலும், எக்காலத்திலும், எவ்வளவு ரகசியமாய் நடந்தாலும், அதிகாரிகளும், துஷ்டர்களும் செய்யும் அக்கிரமங்கள் உடனே மகாராணிக்குத் தெரியும்; அவர்கள் குற்றத்திற்குத் தகுந்த கடுந் தண்டனையை ஒருநாளும் தப்பினதில்லை. ஆகையால் பிரஜைகள் பயமற்று, சிறந்த மாளிகைகளையும் ஆடையாபரணங்களையும் வாகனங்களையும், உபயோகிக்கவும், பண்டிகைகளையும், உற்சவங்களையும் கொண்டாடவும் செய்த தைரியமும் உற்சாகமும் அஹல்யாபாய் கொடுத்த பிச்சையாயிற்று.

ராஜ்ய தந்திரத்தில் ஒப்பற்ற திறமையாலும், வெகுகாலத்திற்குப் பின்வரும் காரியங்களை முன்னமே யறிந்து நடப்பதாலும், யுத்தத்தில் ஜயலக்ஷ்மியால் எப்பொழுதும் அனுக்கிரகிக்கப் பட்டதாலும், அஹல்யாபாயின் கீர்த்தி நாடெங்கும் பரவிக், காலமுள்ள வரையில் வழங்கும்படி யாயிற்று. ராஜரீகத்திற்கு ஏற்பட்ட விமரிசை, ஆடம்பரம் வீண் பெருமை

முதலியவைகளில் அவளுக்கு விருப்பமில்லை. அவசியமில்லாத காரியங்களில் டம்பத்திற்காகவும், எல்லோரும் தன்னைத் தோத்திரம் செய்யவேண்டுமென்பதற்காகவுமே ஏராளமாய்ச் செலவுசெய்யும் இனங்களை ஒழித்து, அந்தத் திரவியத்தைக் கொண்டு குடியானவர்களையும் தொழிற்காரர்களையும் ஆதிரிப்பதிலும் சாகுபடி செய்வதற்காகப் பாசனம் மராமத்து முதலிய வேலைகளுக்காகவும், சத்திரங்கள் பாடசாலைகள் தேவாலயங்கள் புத்தக சாலைகள் மடங்கள் சபைகள் முதலிய பொதுக்கட்டடங்களுக்காகவும் உபயோகித்தாள். அவள் ஒரு தேசத்தின் க்ஷேமத்திற்கு மதபோதனையும் தருமானுஷ்டானமும், ஈசுவர பக்தியுமே காரணமென்று நம்பினவள். கயா க்ஷேத்திரத்தில் விஷ்ணுபாதத்தில் கட்டப்பட்டிருக்கும் நேர்த்தியானதேவாலயம் அயஹல்பாயின் தருமமே. ஒவ்வொரு கிராமத்திலும், ஆடுமாடுகளும், மிருகங்களும் பக்ஷிகளும் உபத்திரவ மில்லாமல் சஞ்சரிக்கக்கூடிய இடங்களை ஏற்படுத்தினாள்.

அவள் பட்டத்திற்கு வந்தபொழுது, கொள்ளைக்காரர்களும் தக்கர்களும் அரக்கர்களைப் போலும், அசுரர்களைப்போலும் ஜனங்களைக் கொள்ளையடித்துக் கொன்று உபத்திரவித்துக் கொண்டிருந்தார்கள். அதை நீக்குவதற்காக அஹல்யாபாய் ஓர் உபாயஞ்செய்தாள். "இந்தத் துஷ்டர்களை வேரறுக்கும் வீரனுக்கு என் அருமைக் குழந்தையை மனைவியாக மணஞ்செய்து கொடுப்பேனெ"ன்று விளம்பரம் செய்தாள். யசோவந்தராவென்ற ஓர் பிரபு அதற்கிணங்கி, பல வருஷங்கள் வரையில் அந்தத்துஷ்டர்களுடன் போர்புரிந்து அவர்களிருக்கு மிடங்களைத் தேடிப்போய்க் கொன்று சிறையாக்கி, மறுபடியும் அவர்கள் தலையெடுக்காதபடி கொள்ளைக்காரர்களின் பூண்டேயில்லாமற் செய்தான். பலத்தாலும் யுக்தியாலும் அந்த அபாயகரமான காரியத்தைச் சாதித்து, ஜயசாலியாய் ராஜசபையில் பிரவேசித்த யசோவந்தராவை மகாராணி அன்புடன் வரவேற்றுத் தன் அருமைப் புதல்வியான மத்ஸ்யாபா யென்பவளை விவாகஞ் செய்து கொடுத்தாள். அந்தத் தம்பதிகள் சுகமாய் வசிப்பதைப் பார்த்து, தானும் சந்தோஷமடைந்தாள்.

ராஜ்யத்திலுள்ள பண்டிதர்களையும் நிபுணர்களையுமே நியாயாதிபதிகளாய் நியமித்தாலும், முக்கியமான விவகாரங்கள் யாவும் அவளாலேயே நேரில் விசாரித்துத் தீர்க்கப்பட்டன. பாலியாவென்ற கிராமத்தில் வசித்த ஓர் தனவான் இறந்தான். அவனுடைய அளவற்ற ஐசுவரியம் அவனுடைய பார்யைக்குக் கிடைத்தது. தன்னைச்சேர்ந்த ஒரு பையனை ஸ்வீகாரஞ் செய்து கொள்ள அவள் விரும்பினாள். அவ்விடத்திலிருந்த ரெவினியூ உத்தியோகஸ்தர் அதைத் தடுத்து, அவளுடைய சொத்தை ராஜ்யத்திற்குக் கொடுத்துவிடவேண்டுமென்று நிர்ப்பந்தப்படுத்தினார். அஹல்யாபாய் அதை அறிந்து, அந்த அதிகாரியைத் தகுந்தபடி தண்டித்து, "உன்னிஷ்டப்படி செய்யலாமெ"ன்று அந்தப் பெண்ணிற்கு அனுமதி கொடுத்தாள்.

ஒரு நகரத்தில் இரண்டு தனவான்கள் பிள்ளையில்லாமல் இறந்தார்கள். அவர்களுடைய பார்யைகள் துக்கத்தால் மனம் நொந்து, இல்வாழ்க்கையை வெறுத்து, மகாராணியிடத்தில் வந்து, "தாயே! எங்களுடைய உயிரும் பரகதியுமான கணவன் இறந்தபிறகு, நாங்கள் பிணமானோம். ஆடையாபரணங்கள், மாடமாளிகைகள், பொன் வெள்ளி ரத்தினங்கள் முதலியவைகளால் எங்களுக்காவதென்ன? ஐசுவரியமென்ற பெரும் பாறையைக் கழுத்தில் கட்டிக்கொண்டு பிறவிப் பெருங்கடலைக் கடந்து, ஈசனுடைய திருவருளென்ற அக்கரையைச் சேரமுடியுமோ? ஆகையால் எங்களுடைய செல்வத்தைத் தாங்கள் ஒப்புக்கொண்டு, எங்களைப் பெரிய நிர்ப்பந்தத்திலிருந்து விடுவித்து, நாங்கள் விரதோபவாச நியமங்களை யனுஷ்டிக்கவும், புண்ய தீர்த்தங்களையும் புண்ணிய க்ஷேத்திரங்களையும் பார்க்கவும், ஸாதுக்களுக்குத் தொண்டு செய்யவும் அவகாசங் கொடுக்கவேண்டுமெ"ன்று பிரார்த்தித்தார்கள்.

அதைக்கேட்ட அஹல்யாபாய், "சகோதரிகளே! முன்பிறப்பில் செய்த கருமத்தால், நாம் சம்பாதித்த கடமைகளை இவ்விதமாய் ஒதுக்கிவிட முடியுமானால், இல்வாழ்க்கையில் துக்கமென்பதே யிராது. என்னிடத்திலுள்ள ஏராளமான தனத்தைத் தகுந்த விஷயங்களில் உபயோகித்து இன்னும் முடியவில்லை. உங்களுடைய திரவியம் எனக்கேன்? அதை நீங்களே வைத்துக்கொண்டு, தாகமெடுத்த

வர்கள் குடிக்கத் தண்ணீரில்லாமல் தபிக்குமிடங்களில், குளங்களையும் கிணறுகளையும் தண்ணீர்ப் பந்தல்களையும், ஏழைகளும் கையாலாகாதவர்களும் பிரயாணிகளும் பசியால் வருந்துமிடங்களில் எல்லா ஜாதியார்க்கும் அன்ன சத்திரங்களையும், பக்தர்கள் சர்வேசுவரனை ஒன்று சேர்ந்து பூஜிப்பதற்காக ஒவ்வொரு கிராமத்திலும் தேவாலயங்களையும், புராதன வித்தையையும் கலைகளையும் ஆசாரங்களையும் கற்பிப்பதற்காகப் பாடசாலைகளையும் புத்தக சாலைகளையும் ஏற்படுத்துங்கள். தெய்வானுக்கிரகத்தால் இந்த ஜன்மத்தில் நற்காரியங்களுக்கு ஸாதனமாய் உங்களிடத்தில் ஒப்புவித்திருக்கும் இந்த தனத்தை நியாயமான வழியில் செலவு செய்து, ஜனங்களுக்கு இம்மையிலும் மறுமையிலும் க்ஷேமத்தைச் செய்யுங்களெ''ன்றாள்.

இப்படி ராமராஜ்யமாய் இந்தூரை ஆண்டுவந்த அஹல்யாபாயை, முதிர்ந்த வயதில், ஈசுவரன் இன்னுமொரு தடவை பரீட்சித்தார். யசோவந்தராவென்ற தன் மருமகன், அகாலத்தில் மரணமடைந்தான். தன் அருமைப் பெண்ணான மத்ஸ்யாபாய் விதவையானாள். அந்த துக்கத்தை நெடுங்காலம் சகிக்கமுடியாதென்று கண்டு, அந்தப் பெண்மணி தன் புருஷனுடன் புண்ணிய லோகங்களுக்குச் செல்ல விரும்பி, அக்கினிதேவனைப் பிரார்த்தித்து அவரால் அனுப்பப்பட்ட தேஜோமயமான ரதத்தில் தன் கணவனுடன் ஏறி, பதிவிரதைகள் அடையும் உத்தமகதியைப் பெற்றாள். இந்த துக்கத்தையும் அனுபவிக்கவேண்டிய பூர்வஜன்ம கருமம் அஹல்யாபாயிக்குப் பாக்கியிருந்தது. அதையும் கலங்காத மனதுடன் அனுபவித்து, ராஜ்யகாரியங்களைக் குறைவில்லாமல் நடத்திவந்தாள்.

இப்படி 70 வருஷங்கள் வரையில் தருமராஜ்ய பரிபாலனஞ் செய்துவந்து, முதிர்ந்த வயதில் அஹல்யாபாய் பகவானுடைய சரணாரவிந்தத்தை அடைந்தாள்.

அந்த ராஜ்யத்திலுள்ள யாவரும், ஏழை, தனவான், பண்டிதன் பாமரன் இந்து முஸல்மான், ஆண், பெண்; பாலன், விருத்தனென்ற பேதமின்றி, தங்களுடைய உயிரும் பொருளும் உயிருக்குயிரானவரும் தங்களைவிட்டுப் பிரிந்ததுபோல் வாய்விட்டலறி அழியாத் துயரமடைந்தார்கள். மகாராணி சாதாரணமான மானிடப்பிறவியைச் சேர்ந்தவளல்லவென்று எல்லோரும் கருதி, அவளைத் தேவாம்சமென்று நம்பி, குலதேவதையாய்ப் பாவித்து, ஆலயங்கள் கட்டி, இன்னும் பூஜைசெய்துவருகிறார்கள்.

இந்த மகாராஷ்டிர அரசி, 1735-ல் பிறந்து 1805-ல் வானுலகஞ் சென்றாள்.

அவளுக்கு நிகரான தேசாபிமானியும் மகாராணியும் அதற்கு முன்னுமில்லை, பின்னுமில்லை.

பிரபஞ்ச வர்த்தமானம்

NWES & NOTES

தெலுங்கும் தமிழும்.

தேசப்பொது முயற்சிகளில், தமிழர்களைவிடத் தெலுங்கர்கள் ஊக்கங்காட்டி வருவது அநேகமாய் நம்மெல்லோருக்கும் தெரிந்த விஷயமே. தெலுங்கர்கள் தங்களுக்கென்று பிரத்தியேகமான ஒரு சர்வகலாசாலை வேண்டுமெனப் பெரு முயற்சிகள் செய்துவருகிறார்கள். சமீபத்தில் கூடின ஆந்திர மாணவர்களின் மகாநாட்டில், ஆந்திர சர்வகலாசாலை ஒன்று தெலுங்க நாட்டில் ஏற்படுத்துமாறு அரசாங்கத்தாரை வற்புறுத்தும் வண்ணம் சில பிரதிநிதிகள் சென்னைக் கவர்னரைக் கண்டுபேச வேண்டுமென்று ஒரு யோசனை செய்யப்பட்டது. ஆந்திரக் கல்லூரி ஒன்றை ஏற்படுத்துவதாக அரசாங்கத்தார் தீர்மானித்து விட்டார்கள்; ஆந்திர சர்வகலாசாலையும் விரைவில் ஏற்பட்டு விடலாம். தெலுங்கர்கள் தங்கள் நாட்டைத் தனி மாகாணமாகப் பிரித்துவிட வேண்டுமென்று, நீண்டகாலமாக முயன்று வருகிறார்கள். இவையெல்லாம், தெலுங்கருக்குள்ள பாஷாபிமானத்தையும், தேசாபிமானத்தையும் நன்கு விளக்குகின்றன. நம் தமிழ்ப் பாஷையோ என்றால், ஆதரிப்பாரின்றித் தடுமாறி நிற்கிறது. இதற்கும், ஓர் நல்ல காலம் வருமோ என ஏங்கி நிற்கிறோம்.

சட்ட சபை அங்கத்தினர் எலக்ஷன்

சீர்திருத்த சட்ட சபை அங்கத்தினர்கள் இவ்வருஷம நவம்பர் மாதக் கடைசியிலோ அல்லது டிஸம்பர் முதலிலோ புதிய சட்ட சபைக்குத் தெரிந்தெடுக்கப் படுவார் களென அறிகிறோம். அதற்காக வேண்டிய வோட்டர்களுடைய ஜாப்தாக்கள் தயார் செய்யப்பட்டு வருகின்றன. தயாரானவுடன் இவை பொது ஜனங்களுடைய பார்வைக்கு வெளியிடப்படும். பிறகு, இந்த ஜாப்தாக்களில் ஆட்சேபம் செய்வோர்களுடைய ஆட்சேபங்கள் சரியானவையாயிருந்தால் அவைகளை ஏற்றுக்கொண்டு திருத்தம் செய்யப்பட்ட பிறகு எலக்ஷன் ஆரம்பிக்கப்படும். எலக்ஷன் முறையை ஒழுங்குபடுத்த இங்கிலாந்திலிருந்து எலக்ஷன் நிபுணர்கள் வரவழைக்கப்படுவார்களெனத் தெரிகிறது.

***

வேலை நிறுத்தச் செலவு

சமீபத்தில், பம்பாயில் மில் தொழிலாளர்கள் சுமார் ஒரு மாதகாலம் வேலைநிறுத்தம் செய்திருந்ததனால், பத்தரை கோடி ரூபாய் பொறுமான சாமான்கள் மில்களில் செய்யப்படவில்லையென்றும், தொழிலாளர்கள் தங்கள் கூலியாகப் பெறவேண்டிய தொகையில் முப்பது லக்ஷம் ரூபாய் இழந்துவிட்டனரென்றும் தெரிகிறது. இது பெரிதும் விசனிக்கக்கூடியதே. இனியேனும், இந்தியாவிலுள்ள முதலாளிகள் தொழிலாளரின் நிலையைக் கருணையுடன் கவனித்து, அவ்வப்போது வேண்டுவன செய்வாரென நம்புகிறோம்.

***

சென்னையில் டெலிபோன் வசதிகள்.

இப்பொழுது சென்னையில் பெரிய வியாபார ஸ்தலங்களிலும், அதிகார வாச ஸ்தலங்களிலும், பிரபுக்கள் வீடுகளிலும் 'டெலிபோன்' வசதிகள் ஏற்பட்டிருக்கின்றன. ஆயினும், இவற்றால் பொது ஜனங்களுக்கு நன்மை கிடையாது. இதை நீக்கக் கருதி டெலிபோன் கம்பெனியார், சென்னையில் சில முக்கிய இடங்களில், பொது டெலிபோன் ஆபீசுகளை ஏற்படுத்தப் போகிறார்கள். பரீக்ஷார்த்தமாக முதலில் முக்கியமான ரயில் ஸ்டேஷன்களிலும், வேறு சில மத்தியமான ஸ்தலங்களிலும டெலிபோன் ஆபீசுகள் ஏற்படுத்தப்படும். டெலிபோனில் மூன்று நிமிஷம் பேசுவதற்கு இரண்டணா கட்டணம் விதிக்கப்படுமென அறிகிறோம். ஆனால் அந்த விகிதம் அரையணாவாக இருந்தால், பலருக்கும் சௌசர்யமாயிருக்கும். கம்பெனிக்காரர்களும் மிகுந்த லாபமடைவார்களென்பதற்குச் சந்தேகமில்லை.

***

சென்னை கார்ப்பொரேஷன் புதிய பிரசிடெண்ட்

நாளது மீ 10௳ நடந்த கவுன்ஸில் மீட்டிங்கில் திவான்பஹதூர் கனம் பி. தியாகராஜ செட்டியார் கார்ப்பொரேஷன் பிரசிடெண்டாகத் தெரிந்தெடுக்கப்பட்டதற்கு நாம் மிகவும் சந்தோஷிக்கிறோம். இவர் சென்ற 35 வருஷ காலமாக சென்னை கார்ப்பொரேஷனில் பொதுஜன நன்மைக்காக மிகவும் பாடுபட்டிருக்கிறார். இப்பதவியை வகிக்க இவர் எவ்விதத்திலும் தகுந்தவர். இவர் காலத்தில், சென்னை நகர் வாசிகளுக்கு விசேஷ சௌகரியங்கள் ஏற்படலாமென நம்பியிருக்கிறோம்.


***

லாலா லஜபதி ராய்.

இந்தியத் தேசாபிமானிகளுள் ஒருவரான லாலா லஜபதி ராய் நாளது மீ 20௳ பம்பாயில் வந்து சேர்ந்தார். அவரை வரவேற்பதற்காகத் தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. சில வருஷங்கள் தமது ஜன்ம பூமியை விட்டு அகன்று அமெரிக்காவில் வாசஞ் செய்யும்படி நேர்ந்தபோதிலும், மிஸ்டர் லஜபதி ராய் அக்காலத்தை வீண்காலமாகக் கழிக்கவில்லை. அமெரிக்காவில் கல்வி விஷயமாகவும், பஞ்சத்தினால் கஷ்டப்படும் ஜனங்களுக்கு ஒத்தாசை செய்யும் விஷயமாகவும், பொது ஜனங்களின் நன்மைக்காகவும் இவர் அதிக ஊக்கத்துடன் உழைத்து வந்திருக்கிறார். வெளிநாட்டில் இவருக்கு வாய்ந்துள்ள அநுபவம் இப்பொழுது இந்தியாவில் இந்தியர்களின் முன்னேற்றத்திற்காக உழைப்பதற்குப் பயன்படும் என்பதற்குச் சந்தேக மில்லை. இவர்நீடூழிவாழ்க.

***

குண்டலகேசி.—இது, நாகை வி. கோபால கிருஷ்ண பிள்ளை எழுதியது; ஒரு சரித்திர சம்பந்தமான நாவலாகும். விலை அணு 5. வேண்டுவோர் விவேக போதினி மானேஜருக்கு எழுதிப் பெறலாம்.



ஸ்ரீ காளஹஸ்திக் கோயில் காட்சி.

விவேகபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்.

தொகுதி XII | சித்தார்த்தி௵ மாசி௴ : : 1920-௵ மார்ச்சு௴ | பகுதி ௯

திருமழுவாடி வயிரத்தூணர் பதிகம்

In praise of Tirumazhuvadi Vairattunar

ஊர்ந்து நடந்து பறந்து திரிந்துழலும்
  பிறவிக்கடன் மூழ்கிச்
சோர்ந்து பெருமூச் செறிந்து கரை
  தோன்று துடலம் பதை பதைத்துத்
தேர்ந்துன் கருணைத் திறங் கேட்டேன்
  செல்வா வயிரத்தூண வருள்
கூர்ந்தெ னிடர்தீர்த் தெனையடிமை
  கொள் மழுவாடிக் குடியானே.

உடையானைத் தோலுண்டி
  விடமுயரர் பரண முரகமதாம்
படையானெய் விட்டெரி சூலம்
  பண் கொளரங்கு நன் காடு
விடையா னேற்றுப் பரியானே
  விமலா விரவுத் தொழிலேற்ற
கொடையா யிடர்தீர்த் தெனை யடிமை
  கொள் மழுவாடிக் குடியானே.

அன்பே யன்பினின் றெழுகு மருளே
  யுருவா யாரணனே
வன்பே ராற்றல் கருணை யிவை
  யுரைப்பக் கேட்டு னரடைந்தேன்
வன்பே குடிகொ ளென்னுள்ளச்
  சிலையைக் கரைத்த வள்ளாலிங்
கென்பே ரிடர் தீர்த் தெனை யடிமை
  கொள் மழுவாடிக் குடியானே.

தீராப்பிணிகள் பேய் பில்லி
  பிரமகத்தி தினம் வருத்தப்
போராடல் செய் துழல் மாந்தர் போற்றிப்
  பிணி தீர்ப் புறந்தலைஞ் சார்
வாராள் குயத்தி சுந்தரியாள்
  மணவாளா வென் மேலினருள்
கூரா யிடர்தீர்த் தெனை யடிமை
  கொள் மழுவாடிக் குடியானே.

செய்யாள் கண்வன் திருவுந்திச்
  சனித்த பிரமன் முதற்றேவர்
மெய்யாய் வணங்கு மேன்மையினுன்
  வெறி பூங்குழலி சுந்தரியாந்
தையால் மருவும் வயிரத்
  தூணுதா பணியுந்தமியேனன்
குய்வா னிடர் தீர்த் தெனை யடிமை
  கொள் மழுவாடிக் குடியானே.

சேய்வ லாயுன் திருத்தாளே சரணென்
  றடைந்தேன் தினமுளக்கிங்
கேவலாவ துடன் செய்ய விசைந்தே
  னென்னைக் கைவிடினே
பாவ லார்கள் புகழ் நீங்கிப்
  பரம பழிக்காளாவீராற்
கோவே யிடர் தீர்த் தெனை யடிமை
  கொள் மழுவாடிக் குடியானே.

மர்சுருத பொன்னிதனில் மகளிற்
  குடைந்து மலர்க் கரத்தாற்
பூசும் வாசம் புனல் வழிபோய்ப்
  புனரி மணக்கச் செயுமூரா
தேசுங்கலையும் நிறை மாந்தர்
  திகழு மழுவைப் பதியானே
பேசும் வயிரத் தூணரசே
  பெரும வகற்றென் பேரிடரே.

பொய்யா முடலை மெய் யெனவும்
  பொருந்தா வாழ்வை நிலை யெனவு
மையா வுன்னு மட வோரை
  யனுகா யுன்னு வழிவோர்க்கு
மெய்யா மழுவைப் பதி மேவும்
  விமலா வயிரத் தூணபா
செய்யா பசிய கொடி படரும்
  தேவ தருவே செய்யருளே.

(இதன் தொடர்ச்சி 276-ம் பக்கம் பார்க்க.)

 கோவுக்கழகு செங்கோன் முறைமை.

விவேக போதினி

தொ. 12] சித்தார்த்தி௵ : : மாசிமீ௴ [ப. 9

யுதிஷ்டிரர்

YUDHISHTIRA

இவ்வாறு தனது தம்பியை விடுவிக்கும்படிப் பிரார்த்தித்த யுதிஷ்டிரரை நோக்கி, மலைப்பாம்பு "இன்று எனக்குத் தெய்வ வசத்தால் கிடைத்த ஆகாரத்தை விடமாட்டேன். இந்த ராஜகுமாரனைக் காட்டிலும் எனக்கு வேறு உணவு வேண்டியதில்லை. என் எல்லைக்குள் வந்த எவரும் எனக்கு இரையாவார்கள். நீயும் இங்கிருந்தால் என்னால் கொல்லப்படுவாய்" என்றது.

யுதிஷ்டிரர்:-"நீர் தேவனோ அசுரனோ நாகனோ யாரென்று தெரியவில்லையே. இவனைப் பிடித்த காரணமென்ன? இவனை விடுவிப்பதற்காக நான் என்ன செய்யவேண்டும்? உண்மையைச் சொல்லும்படி உம்மைக் கேட்கிறேன்."

மலைப்பாம்பு:—"அப்படியானால், என் கேள்விகளுக்குத் திருப்தியாய் நீ பதில் சொல்ல வேண்டும். உன் தம்பியின் உயிரைக் காப்பாற்ற இதே உபாயம்."

யுதிஷ்டிரர்:—"என்னால் கூடிய வரையில், நான் பெரியோர்களிடத்தில் கேட்டபடி உமது கேள்விகளுக்குப் பதில் சொல்லமுயல்வேன்."

மலைப்பாம்பு:—"பிராமணனென்று நாம் யாரைச் சொல்லலாம்? நாம் அறியவேண்டிய பொருள் எது?"

தருமநந்தனன்:—"உண்மை, தானம், பொறுமை, ஒழுக்கம், ஜீவகாருண்ணியம், தன்னடக்கம், கருணை யென்ற நற்குணங்கள் வாய்ந்திருப்பவரே பிராமணரெனப்படுவார். சுகதுக்கங்களுக்கு மேலானவரும், ஜீவகோடிகளுக்கு அஞ்ஞானத்தையும் துக்கத்தையும் போக்கிப் பரமானந்தத்தைக் கொடுப்பவருமான பரம்பொருளே அறியத்தகுந்தவர்."

மலைப்பாம்பு:—"நான்கு வருணத்தார்களின் க்ஷேமத்தை விருத்தி செய்து, மதவிஷயங்களில் நமக்கு ஆதாரமாயிருக்கும் உண்மையான வேதங்களின் உட்கருத்தும் சத்தியமும் தானமும் பொறுமையும் பரோபகாரமும் தயையும் அன்பும் மற்றவர்களிடத்திலும் காணப்படுகின்றனவே. சுகதுக்கங்களற்ற பொருளே அறியத் தகுந்த தென்றாய். அவ்விதமான பதார்த்தம் எங்கும் காணப்படவில்லையே!"

யுதிஷ்டிரர்:—"மேற்சொன்ன நற்குணங்கள் வாய்ந்தவன் கீழ் ஜாதியானல்ல, மேலானவன்" அவன் பிராமணனே. மேற்சொன்ன நற்குணங்களற்ற பிராமணன் பிராமணனல்ல, தாழ்ந்தவனே; அவன் கீழ்ஜாதியா னெனப்படுவான். ஆகையால் கல்யாணகுணங்களால் அலங்கரிக்கப்பட்டவனே உண்மையான பிராமணன். அவையற்றவனே உண்மையான சூத்திரன். சுகதுக்கங்க ளில்லாமல் யாதொரு பிராணியும் இருக்கமுடியாதென்று பார்வைக்குத் தோன்றுமென்பது நிஜமே. ஆனால், குளிர்ச்சியென்பது வெப்பமில்லாமையே. வெப்பமென்பது குளிர்ச்சி யில்லாமையே. ஆகையால், சுகதுக்கமென்ற உணர்ச்சியில்லாத பொருள் ஏன் இருக்கமுடியாது?"

மலைப்பாம்பு:—"நீ சொல்லுகிறபடி குணங்களே பிராமணனுக்கும் மற்ற வர்ணங்களுக்கும் நிறையாயிருந்தால், பிராமண க்ஷத்திரிய வைசிய சூத்திரனென்ற ஜாதிபேதத்தால் பயனென்ன? இந்தக் குணங்களில்லாவிட்டால் ஜாதியுமில்லை. வருணங்கள் பிறப்பையே விசேஷமாய் ஆதரிக்கின்றன."

யுதிஷ்டிரர்:—"நீர் சொல்வது சரியே. ஆயினும், இக்காலத்தில் இவ்வுலகில் ஒருவனுடைய உண்மையான குலம் இன்னதென்று பிறப்பால் கண்டுபிடிப்பது சாத்தியமல்ல. எல்லா வருணங்களும் சீர்கெட்டு ஒன்றோடொன்று கலந்து குழப்பமாய் விட்டன. நான்கு வருணத்தாரும் தங்குதடையின்றி எல்லா வருணத்து ஸ்திரீகளிடத்திலும் புத்திரர்களை உண்டுபண்ணுகிறார்கள். பேச்சாலும், பிறப்பாலும், இறக்கும் விதத்தாலும், ஜனங்களுக்குள் பேதத்தைக் கண்டுபிடிப்பது எளிதல்ல. 'நாங்கள் எந்த வருணத்தைச் சேர்ந்த

வர்களா யிருந்தாலும் இந்த யாகத்தைச் செய்கிறோ'மென்று ரிஷிகள் சொல்வதைக் கேட்டால், ஒருவனுடைய ஜாதியைக் கண்டுபிடிப்பது எவ்வளவு கஷ்டமென்று புலப்படுகிறது. ஆகையால், குணமே முக்கியமென்றும், குணத்தையே கவனிக்கவேண்டிய தென்றும், பெரியோர் விதித்திருக்கிறார்கள். சிசு பிறந்தவுடனேயே ஜாதகருமமென்ற சடங்கு செய்யப்படுகிறது. அப்பொழுது அவனுடைய தாய்க்கு சாவித்திரீயென்றும், தகப்பனுக்கு ஆசாரியனென்றும் பெயரிடப்படுகிறது. வேதாத்தியயனத்திற்கு அதிகாரம் வருகிறவரையில், ஒவ்வொருவனும் சூத்திரனென்றே எண்ணப்படுகிறான். இதைப்பற்றிப் பல அபிப்பிராயங்கள் ஏற்பட்டபடியால், சுவாயம்புவமனு அடியிற்கண்டபடி விதித்திருக்கிறார். 'வேதத்தில் சொல்லியபடி சடங்குகளைச் செய்யப்பெற்று, முதல் மூன்று வருணத்தாரும், தங்களுடைய தருமத்தைக் குறைவற நடத்தாவிட்டால், கலப்பான வருணத்தார் அவர்களுக்கு மேலானவரென்றே சொல்லவேண்டும். ஆகையால், நல்லொழுக்கத்தால் சிறந்தவனே வேதியனாவான்."

மலைப்பாம்பு:—"யுதிஷ்டிரா! உண்மையான ஞானத்தால் விளங்கும் உன் வார்த்தையைக் கேட்டு மகிழ்ந்தேன். உன் தம்பியான பீமனை நான் எப்படி விழுங்குவேன்?"

யுதிஷ்டிரர்:—"நாகராஜாவே! வேத சாஸ்திரங்களில் உம்மைப் போன்ற நிபுணர் இவ்வுலகத்திலில்லை. மனிதர் மோட்சத்தையடையும் மார்க்கத்தை எனக்கு உபதேசிக்கவேண்டும்."

மலைப்பாம்பு:—"தகுந்தவர்களுக்குத் தானம் கொடுப்பதாலும், மதுரமான வார்த்தையாலும், உண்மையைப் பேசுவதாலும், பொறாமையை அகற்றுவதாலும், மனிதன் உத்தம லோகங்களை அடைவான்."

யுதிஷ்டிரர்:—"பரோபகாரம் சிலாக்கியமா? உண்மையைப் பேசுவது பெரிதா? பொறாமையை அகற்றுவதிலும் நல்லொழுக்கத்திலும் எது சிரேஷ்டமானது?"

மலைப்பாம்பு:—"மேற்சொன்ன நற்குணங்களா லுண்டாகும் நன்மையைக் கவனித்தால், அவைகளின் ஏற்றத்தாழ்வு தெரியும். சில சமயங்களில் சில தானதர்மங்களைக் காட்டிலும் மெய்யே மேலாகும். சில சமயங்களில் தானம் மெய்யைக் காட்டிலும் மேலாகும். இந்த விதி, மற்ற குணங்களுக்கும், அனுசரிக்கும். ஆகையால், அந்தக் குணங்களின் மேன்மை தாழ்மை அவைகளா லுண்டாகும் பிரயோசனத்தையே பொறுத்திருக்கும்."

யுதிஷ்டிரர்:—"ஜீவன் தேகத்தை விட்ட பிறகு சுவர்க்கத்திற்கு எப்படிப் போகிறான்? தன் கருமங்களின் பலத்திற்குத் தகுந்தபடி சுகத்தையும் துக்கத்தையும், எப்படி அனுபவிக்கிறான்? இந்திரியங்களால் விஷயத்தை எப்படி அறிகிறான்?"

மலைப்பாம்பு:—"அரசனே! ஜீவன்களின் புண்ணிய பாப கருமங்களுக்குத் தகுந்தபடி மனிதர்களாயும், தேவர்களாயும், தாழ்ந்த மிருகங்களாயும் பிறக்கிறார்கள். தானம், பொறாமையின்மை, சோம்பலின்மை, விடாமுயற்சியென்ற குணங்களால் மனிதன் உத்தம லோகங்களை அடைகிறான். இதற்கு விரோதமான செய்கைகளால் மனிதர்களாயும் தாழ்ந்த மிருகங்களாயும் பிறக்கிறான். காமம், கோபம், அசூயை, சபலமென்ற துர்க்குணங்களுக்கு இடங்கொடுத்தவன் மனிதத்தன்மையி லிருந்து தள்ளப்பட்டு, அல்ப மிருகங்களாய்ப் பிறக்கிறான். வெகுகாலம் இப்படிப் பிறந்திறந்து மறுபடியும் மனிதத்தன்மையை அடைகிறான். பசுக்கள், குதிரைகள் முதலிய பிராணிகளும் சில சமயங்களில் தெய்வப் பிறவியை அடைவதையும் பார்த்திருக்கிறோம். குழந்தாய்! ஆதியந்தமற்ற ஜனன மரணமென்ற பிறப்பிறப்பெனும் சக்கரம் இப்படிச் சுழன்றுகொண்டேயிருக்கிறது. ஞானியோ நித்தியனான பரமாத்மாவைச் சரணமடைகிறான். இப்படி ஜீவன் பல பல தேகங்களையெடுத்து, விதியின் பாசத்தால் கட்டுப்பட்டு, தான் செய்த புண்ணிய பாப கருமங்களின் பலனைச் சுகதுக்கங்களை அனுபவிப்பதற்கு ஓயாமல் பிறந்திறக்கிறான். ஆனால், கருமபந்தத்திலிருந்து விடுபட்டவன் எல்லா ஜீவ கோடிகளின் கருமகதியை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் அறிகிறான்."

யுதிஷ்டிரர்:—"சுவாமீ! கடுந் தவத்தாலும், அரிய வரங்களாலும் அடையக்கூடாத ஞானோபதேசத்தைத் தங்களிடத்திலிருந்து பெறும்படியான பாக்கியத்தைச் செய்தேன். என் மனப்பூர்வமான நமஸ்காரத்தை அங்கீகரித்து, என்னை ஆசீர்வதிக்கவேண்டும்."

மலைப்பாம்பு:—"யுதிஷ்டிரா! மகரிஷிகள் என்னை மலைப்பாம்பாகும்படி சபித்தபொழுது, சாப விமோசன காலத்தையும் குறிப்பிட்டு, 'நீ கேட்கும் தரும சந்தேகங்களுக்குப் பதிலளிக்கிறவனால் உனக்கு இந்தக் கோரமான ரூபம் விலகும். குரு குல திலகமான யுதிஷ்டிரனே உன்னை அந்தச் சாபத்திலிருந்து கரையேற்றுவானென்'ன்றார்கள். பொறுமையாலும் கர்வத்தாலும் நான் மதங்கொண்டு புத்திமயங்கிப், பெரியோர்களுக்கு அபசாரஞ்செய்து, கீர்த்தியையும் பதவியையும் அதிகாரத்தையும் ஐசுவரியத்தையும் நல்லோரருளையும் இழந்து, பல்லாயிர வருஷங்களாய் இக்கோர ஜந்துவின் தேகத்திலிருக்கும்படி நேர்ந்ததை மறக்காதே. இவ்வித துர்க்குணங்களை அகற்றிப் பொறுமை வணக்கம், அன்பு, பக்தி முதலிய உத்தம குணங்களையே கைப்பற்று. உன் தம்பியான பீமசேனனை என்னிடத்திலிருந்து அபாயமின்றி முன்னைவிட பல பராக்கிரமசாலியாய்ப் பெற்றுக்கொள். இம்மையில் ராஜ்யமும், செல்வமும், கீர்த்தியும், நல்லோரிணக்கமும், மறுமையில் ஈசனுடைய திருவடிகளும் உனக்குக்கிடைக்கட்டுமெ"ன்று ஆசீர்வதித்து, மலைப்பாம்பின் தேகத்திலிருந்து கிளம்பி, அக்கினியையு சூரியனையும் மின்னலையும்போன்ற காந்தியுள்ள திவ்விய தேகத்துடன், தெய்வ விமானத்தில் ஏறி, விண்ணுலகம் சென்றான்.

(273-ம் பக்கத் தொடர்ச்சி.)

அந்திப் பிறை சூண்டியாற் றெம்
மன்னை வரிய பொருள் கொண்டு
நந்தி தேவர் யணைமுடிக்க ணன்று
மழுவைப் பதியானே
தந்தி முகவனாறு முக வன்தந்தா
யெந்தா யுமதடிகள்
வந்திப்பேற்கு மருள் காட்டும்
வள்ளால் வயிரத் தூணரசே.

சைய மீன்ற தையலருட் சத்தி
கொண்டு சராசரம் வாழ்
வைய மீன்ற மணி கண்டா மழுவைப்
பதி வாழ் மாதவ யான்
மெய்யன்போடு முமதருளை மேவினே
னினருள் கூர்ந்துன்
செய் யவதனக் காட்சியருள்
செய்யாய் வயிரத் தூணரசே.

பக்தியின் பெருமை
THE GREATNESS OF BAKTI

[ஸ்ரீமான் P.S. சுப்பிரமணிய ஐயரவர்கள், M.A.]

(249-ம் பக்கத் தொடர்ச்சி.)

கடவுளது பாதாரவிந்தங்களைச் சேர வேண்டுமென்ற ஆசையுடைய பக்தன் அவ்வாசையைப் பூர்த்தி செய்துகொள்ளுவதற்கு கடவுளது திருநாமங்களையும் திருப்புகழையும் இனிய கானத்தினால் அன்புடன் எடுத்தோதுவதனால் சஞ்சலசுபாவமுள்ள மனத்தை அடக்கி, பத்தி நெறியுறச் செய்ய வேண்டுமென்றும், அவ்வாறு செய்வதனால் அவனுக்கு ஞான முண்டாகு மென்றும், ஞானம் உதித்தபின் மனச்சஞ்சலங்க ளற்றுத் தெளிவான புத்தியுண்டாகு மென்றும், அவ்வாறு ஞானமும் தெளிவான புத்தியும் வாய்த்தபின் அப்பக்தன் ஈசனது பாதங்களிலமரும் பாக்கியத்தைப் பெறுவா னென்றும் இப்பாடலால் நாம் தெரிந்து கொள்ளுகிறோம்.

எந்தப் பாடலைப் பார்த்தாலும் ஈசனிடத்து அன்பும் அவனது சரணாரவிந்தங்களை யடைய வேண்டுமென்ற ஆசையும் அவனது நாமத்தையும் திருப்புகழையும் இனிமையாய்ப் பழுதறப்பாடி யோதுவதுமே முத்தி பெறுவதற்குரிய சாதனங்களாகக் கூறப்பட்டிருக்கின்றன.

"மாண்டாரெ லும்பணி யுஞ்சடை
யாண்டாரி றைஞ்ச மொழிந்ததை
வான் பூத லம்பவ ளங்களல் புனலாலா
ஊன் பூத முங்கர ணங்களு
நான்போயொ டுங்கஅ டங்கலு
மாய்ந்தால்வி ளங்குமதொன்றினை யருளாயேல்
வேண்டாமை யொன்றைய டைந்துள
மீண்டாற்றி நின்சர ணங்களில்
வீழ்ந்தாவல் கொண்டுரு கன்பினை யுடையேனாய்
வேந்தாக டம்புபு னைந்தருள்
சேந்தாசரண் சரணென்பது
வீண்போம தோன்றல என்பதை யுணராதோ;"

[உலகவியல்பினை விடுத்து உலகப் பற்றுக்களை யெல்லாம் அகற்றிய காரணத்தால் உயிருடனிருந்தும் உலகில் இறந்தாரென்றேகூறப் படவேண்டியவராயுள்ள பக்தர்களை சிறந்த

ஆபரணங்களாகத் தரித்துக்கொண்டு ஜீவராசிகளின் நன்மைக்காக சதாகாலமும் தவமியற்றும் சடாதரனுகிய முக்கண்ணெந்தை சிஷ்யனுக வணங்கிநிற்க நீ குருவாக விருந்து உலகுகளுக்கெல்லாம் மூலகாரணமான பிரணவத்தின்பொருளை யெடுத்துரைத்தாய். அப்பொருளானது ஆகாசம் மண் காற்று நெருப்பு நீர் ஆகிய பஞ்சபூதங்களும், மெய் வாய் கண் மூக்குச் செவியெனும் ஐந்து வெளிப்புலன்களும் உட்புலனுகிய மனமும் நானென்னும் அகந்தையும் பலங்குன்றி அழிந்தால் புத்திக்குத் தானுகவே விளங்கும். (பரம்பொருளாகிய பரமசிவனே சிஷ்யனுகநின்று கற்கத்தக்க பொருள் மிகவும் சிரேஷ்டமானதாய்த்தானிருக்க வேண்டும். அதை உன்னிடம் போதக மூலமாக அறிந்து கொள்ளுவதற்கு எனக்குத் தகைமையில்லை என்பது உண்மைதான். ஆனுல் புலன்களையும் பஞ்சபூதங்களையும் அகங்காரத்தையும் அடக்கியழித்து அப்பொருளை யறிந்துகொள்ளவோ சக்தியற்றவனுயிருக்கிறேன். ஆதலால் நான் ஜனன மரண சாகரத்திற் பட்டுத் தடுமாறுதிருக்குமாறு,) கருணைக்கடலாகிய நீ என்மீது இரக்கம் வைத்து எனக்கு அப்பொருளைப் போதித்தருள வேண்டும்.

(நான் இவ்வாறு இரந்து கேட்டும் நீ என்னிடத்திரங்கி அப்பொருளை யெனக்கு உணர்த்தாவிடில்,நான் வேறு கதியற்று துயரக்கடலில் மூழ்கித் தவிப்பேனென் றெண்ணுகிருயோ? ஒருக்காலும் தவிக்கமாட்டேன்.) உலகத்தில் எதுவும் எனக்கு வேண்டாமென்ற மனுேநிச்சயத்தை யுடையவனுய், என்னிடத்திருந்து வெளியேறி குடும்பம், குலம், ஜாதி, நாடு முதலியவைகளிடத்திற் பரவிச்சென்று பிரியம் வைத்துள்ள மனம் என்னிடத்துக்குத் திரும்பிவந்து ஆசையினு லுண்டாகும் தாபமற்றுச் சாந்த மடையப்பெற்று, உன் பாதாரவிந்தங்களில் வீழ்ந்து உன் பதங்களை யடையவேண்டுமென்ற ஆசை மிகுதியாக வுடையவனுய் உள்ளமுருகி உன்னிடத்தில் அன்பு பூண்டு 'என் அரசே! கடம்ப மாலையை யணிந்துள்ள சேந்தா! உனது சரணங்களே எனக்கு அடைக்கலம்' என்று உரைப்பதானது பயன் பெறுமற்போகக்கூடியதல்ல வென்பதை எல்லாமறிந்த உந்தன் திருவுள மறியாதோ? (அவ்வாறு உள்ளமுருகி உன் பாதங்களில் வீழ்ந்து உன் சரணங்களே எனக்கடைக்கலம் என்று உரைப்பதனுலேயே நான் உனதருள் பெற்று முத்தி யடைவேன். தவமும் இந்திரிய நிக்ரகமும் மனத்தை யடக்கலும் எனக்குச் சாத்தியமல்லாதனவாயினும் நான் ஏங்கவேண்டாம்.)

"கருணை சிறிதுமில் பறிதலை நிசிசரர்
பிசித அசனமற வரிவர் முதலிய
கலக விபரித வெகுபர சமயிகள் பலர்கூடிக்
கலகலெனநெறி கெடமுறை முறைமுறை
கதறி வதறிய குதறிய கலைகொடு
கருத அரியதை விழிபுனல் வரமொழி குழறஅன்
புருகி யுனதருள் பரவுகை வரில்விர
கொழியி னுலகியல் பிணைவிடி னுரைசெய
லுணர்வு கெடிலுயிர் புணரிரு வினையள றதுபோக
உதறி லெனதெனு மலமறி லறிவினி
லெளிது பெறலென மறைபறை யறைவதொ
ருதய மரணமில் பொருளினை யருளுவ
தொருநாளே"

[கருணை சிறிதுமில்லாமல் பிறர்பொருளைப் பறிக்கும் தொழிலைப்பூண்டுஇரவில் நிசிப் பொழுதில் சுற்றித் திரியும் கொடியர்கள், ஜீவராசிகளைக் கொன்று மாமிசங்களைப் புசிக்கும் பாவிகள் முதலியோர் விபரீதமாய்க் கலகம் விளைப்பதையே நோக்கமாக உடையராய், தற்காலம் ஹிந்து மதமென்று கூறப்படும் பிராமண மதமாகிய ஆதிசைவ மதத்தைத் தவிர்த்து வேறு மதங்களைத் தழுவி நின்று, சரியான நெறியை விட்டுவிட்டு,வேறு நெறிகளைச் சண்டப் பிரசண்டமாய் பன்முறை எடுத்துரைக்கும் குதர்க்கங்களடங்கிய சாஸ்திரங்களினுதவியினுல் அறியவரியதான பொருளானது, கண்களினின்றும் ஆனந்தபாஷ்பம் சொரிய மொழி குழற அன்பினுல் உள்ளமுருகி உனதருளை வணங்குதலை அனுஷ்டித்தால், உலகப்பற்றுக்களற்றுல், உலகத்தில் மானிடர் ஜன சமூகத்தில் அனுஷ்டிக்கும் ஆசாரங்களை விடுத்தால், மனுே வாக்குக் காயமென்ற மூன்று கரணங்களும் செயலற்றுப்போனுல், பிறக்கும்பொழுது கூடவந்து உலகத்திலுள்ளவரையிற் கூடவேயிருந்து இறக்கும்பொழுது கூடச்சென்று சதாகாலமும் உயிருடன் கலந்து நிற்கும் இருவினைகளாகிய சேறு உயிரை விட்டகலும்படி உதறினுல், எனது என்று உரிமை பாராட்டும் கெட்டகுணம் அழிந்துபோனுல், அறிவினுல்

எளிதாகப் பெறத்தக்கது என வேதங்கள் முறையிடுகின்றன. அந்த ஆதியந்தமில்லாத பொருளினை எனக்கு உதவியருளும் நாளு முண்டோ?]

மெய்யன்புடன் கண்களில் நீர்சொரிய மொழி குழற ஆண்டவனது அருளைத் துதித்து வணங்கவேண்டுவதுதான் நமது கடமை. அவ்வாறு செய்தால், ஆசைகளற்றுப்போம், உலகாசாரங்கள் ஒழியும், மனோ வாக்குக் காயங்கள் செயலொழிந்து நிற்கும், இருவினை யகலும், கடைசியாக ஞான போதகமும் முத்தியும் சித்திக்கும்.

உள்ளமுருகித் தன் புகழைப் பாடுபவரிடத்தும் தன் நாமத்தை உரைப்பவரிடத்தும் முருகக் கடவுளுக்கு உண்டாகும் அன்பும் அருளும் அளவற்றனவென்று சுவாமிகள் பல பாடல்களிற் கூறுகிறார்.

"பக்கரூர் வத்துடன் செக்குமா டிப்பரவு
பத்தர்பா டற்குருகு முருகோனே,"

என்றும்

"முருகா வெனவோர் தரமோ தடியார்
முடிமே லிணைதா ளருள்வோனே"

என்றும் ஆண்டவனது அன்பு மிகுதியையும் அருட்பெருக்கையும் புகழ்ந்து பாடியருளியிருக்கிறார்.

மற்றும் பல பாடல்களில் தான் பக்தி நெறியிற் சேர்ந்து, மெய்யன்புடன் உள்ளமுருகி பரமன் திருப்புகழைப் பழுதறப் பாடி ஆனந்திக்கும்படியான பாக்கியத்தைத் தனக்குத் தந்தருள வேண்டுமென சுவாமிகள் கடவுளைப் பிரார்த்திக்கிறார். அவைகளிற் சிலவற்றை எடுத்துரைக்கிறேன்.

"....................................வென்றிவேலா
பரிமள மிக்கச் சிவந்த நின்கழல்
பழுதற நற்சொற் றெரிந்து அன்போடு
பகர்வ தினிச்சற் றுகந்துதந்திட வந்திடாயோ;
"களித்த செந்தமி ழால்நினை யேதினை
நினைக்க வுந்தரு வாயுன தாளருள்
கருத்தி ருந்துற வாயென தாருயிர் துணையாக;"
"அலகில் அவுணரைக் கொன்ற தோளென
மலைதுளை யுருவச் சென்ற வேலென
அழகிய கலபத் தண்டை சூழ்வன புண்டரீக
அடியென முடியிற் கொண்ட கூதள
மெனவன சரியைக் கொண்ட மார்பென
அறுமுக மெனநெக்கென்பெலாமுரு கன்புறுநோ?"

"மொகுமொ கெனமது கரமுரல் குரவணி
முருக னறுமுக னெனவருவன பெயர்
முழுது மியல்கொடு பழுதற மொழிவது
மொருநாளே;"

"........................சங்கரன் கும்பிடுங்
குமர னறு முகவன்மது ரந்தருஞ் செஞ்சொலன்
சரவணையில் வருமுதலி கொற்றவன் கந்தனென்
[றுய்ந்து பாடித்
தணியவொலிபுகலும்விதமொன்றிலுஞ்சென்றிலன்;"

"செஞ்சர ணாதகீத கிண்கிணி நீபமாலை
திண்டிறல் வேல்மயூர முகமாறும்
செந்தமிழ் நாளுமோதி உய்ந்திட ஞான மூறு
செங்கனி வாயிலோர்சொ லருள்வாயே;"

"விரகற நோக்கியு முருகியும் வாழ்த்தியும்
விழிபுனல் தேக்கிட அன்புமேன்மேல்
மிகவுமி ராப்பகல் பிறிதுப ராக்கற
விழைவுகு ராப்புனை யுங்குமாரா
முருகசட க்ஷர சரவண கார்த்திகை
முலைநுகர் பார்த்திப என்றுபாடி
மொழிதழ றத்தொழ தழுதழு தாட்பட
முழுதும லாப்பொருள் தந்திடாயோ;"

"உம்பர்கள் ஸ்வாமீ நமோநம
எம்பெரு மானே நமோநம
ஒண்டொடி மோகா நமோநம எனநாளும்
உன்புக ழேபாடி நானினி
அன்புட னாசார பூசைசெய்
துய்ந்திட வீணாள்ப டாதருள் புரிவாயே;"

"நாளுரு நீயெவனை னுமலென தாவிகவர்
சேர்பாத மேகவலை யாயுமுன வேதமும்
நாதாத மாரமுந காளனவு மோதஅருள் புரிவா
[யே;"

"பரிவா லுளத்தில் முருகா என்ச் சொல்
பகர்வாழ் வெனக்கு மருள்வாயே;"

"எத்தியுனை நாடோறு முத்தமிழி னாலோத
இட்டமினி தோடார நினைவாயே;"

"பத்தி யுடனுருகி நித்த முனதடிகள்
பற்றுமருள் நினைவு தருவாயே;"

* ".......................................மாதர்கள்
வலைக்கு ளிற்சுழ லாவகை யேயுன
கழற்று தித்திடு வாழ்வது தான்மன துறமேவிக்
களித்த பத்திமை சாலடி யார்சபை
மிகுத்தி டுக்குண பாதக னேனுயர்
கதிக்க டுத்துயர் வாகவு மேயரு ளுரையாதோ;"

"மஞ்சுதவழ் சார லஞ்சயில வேடர்
மங்கைதனை நாடி வனமீது
வந்தசர ணார விந்தமது பாட
வண்டமிழ்வி நோத மருள்வாயே;"

சங்கிலே வார்த்தால் தீர்த்தம், சட்டியிலே வார்த்தால் தண்ணீர்.

"பாவ மாளபிற விக்கடலு ழப்பவனை
தாருலாவுபத பத்தியிலி ருத்துவது மெந்தநாளோ;"
"பாடலிசை மிக்க ஆடல்கொடு பத்தி
யோடுநினை பத்நர் பெருவாழ்வே
பாவவினை யற்று னுமநினை புத்தி
பாரிலருள் கைக்கு வரவேணும்;"
"வெகுமல ரதுகொடு வேண்டி யாகிலு
மொருமல ரிலைகொடு மோர்ந்து யானுனை [யே;"
விதமுற பரிவொடு விழ்ந்து தாடொழ அருள்வா
"எனக்கென யாவும் படைத்திட நாளும்
இளைப்பொடு காலம் தனிலோயா
எடுத்திடு காயந் தனைக்கொடு மாயும்
இலச்சையி லாதென் பவமாற
உனைப்பல நாளுந் திருப்புகழாலும்
உரைத்திடு வார்தங் குளிமேவி
உணர்த்திய போதந் தனைப்பிரி யாதொண்
போலச்சரா னுநந் தொழவேனோ;"

மேலே கண்ட பாடல்களால் சுவாமிகள் பக்தி மார்க்கத்தை எவ்வளவு உயர்ந்ததாகக் கருதினுரென்பது வெளிபாகிறது. மற்ற மார்க்கங்களோடு பக்தி மார்க்கத்தை ஒப்பிட்டுப் பார்க்கும்போது,பக்தி மார்க்கமே மிகவும் எளிதாயும் யாவராலும் அனுஷ்டிக்கத்தக்கதாயுமிருக்கிறது.அதனுற்றுன் அந்நெறியை விசேஷமானதென்று புகழ்கிறேம். உலக விஷயங்களிற் பிரவேசித்து அவைகளிலேயே காலத்தைக் கழித்தாலும், எப்போதும் குமரன் ஞாபகமிருந்தால் முக்தியடையலாமென்றும் சுவாமிகள் அபிப்பிராயப் படுகிறுர்.

"....................மாமேர்க காதலது—காரசாரு,
தெரியனுகு மெழுகுபத மாய்மேவி மேயிவினை
யிருவரு— மொருவரென நாளுது பாயல்மிசை
யிளமகளிர் கலவிதனி லேமூழ்கி யாழுகிலு மிமை
யாதே
இரவினிடை துயிலுகினும் யாரோடு பேசுகினும்
இளமையுமு எழகுபுனை யீராறு தோள் நிரையும்
இருபதமு மறுமுகமும் யானோத ஞானமதை
யருள்வாயே;"

"உருகி யுளமுட லுடலொடு செருகிட
வுயிரு மெனதுயி ரெனமிக வுறவுசெய்
துதவு மடமக ளிர்களொடு மமளியி லுநாக
உததி யதனிடை விழுகினு மெழுகினும்
உழலு கினுமுன தடியினை எனதுயிர்
உதவி யெனவுனை நினைவது மொழிவது மறவேனே;"

பக்தி மார்க்கத்தின் பெருமை இவ்விரு பாடல்களினுலும் தெளிவாய் விளங்குகிறது. உலகவியல்பை விடுவது மிகவும் அரிது. அவ்வியல்பை விடாமல், உலகத்திலுழன்றவாறே முத்தியடையவும் வழியுண்டென்றால், யார் தாம் அவ்வழியைக் கடைப் பிடித்தொழுகார். மாயை வெகுவாய் விருத்தியடைந்துள்ள இக்கலியுகத்தில் பக்தி மார்க்கமொன்றுதான் மானிடர் கடைப்பிடித் தொழுகக்கூடியது. அந்நெறியினுல், குமரக் கடவுளது பதும சரணங்களான மெய்வீட்டை எளிதில் அடையலாம்.

கபிலர்

KAPILAR

[ஸ்ரீமான் பண்டித எல். உலகநாதப் பிள்ளை அவர்கள்.]

நீதியா மதாக நீழல் 'நெட்டிலை யிருப்பை' என்றேர்
காதல்கூர் பனுவல் பாடுங் கபிலனுர் பிறந்த பூநூர்
சோதிசேர்வகுளநீழல்சிலம்பொலி துளங்கக்காட்டும்
வேதநா யகனுர் வாழும் வியன் திருவாத வூரால்.

1. கபிலர் சங்கத்திருந்து தமிழாராய்தல்

செந்தமிழ் நாடாகிய பாண்டிவள நாட்டில், வையையாற்றின் வடகரைக்கணுள்ள திருவாதவூரில், மறை நெறியில் வழுவாத ஓர் அந்தணர், வடமீன் அனைய கற்புவாய்ந்த தன் மனைவியோடிருந்து முத்தீவேட்டு, நான் மறையோதி, அறவோர்க்களித்தல் முதலிய ஐவகை வேள்வியும் ஆற்றி, இல்வாழ்க்கையை இனிதாக நடத்திவருகையில், அவ்விருவர் செய்த நற்றவப்பயனுல், அவர் குலத்தினை விளக்க வந்த இளஞாயிறு போல, அன்னவர்க்கு ஒரு நற்புதல்வர் உண்டானுர்.

சைவ அந்தணராகிய அவரும், தம் அருமந்த மகற்கு, கபிலர் எனப் பெயரிட்டு, அன்போடு வளர்க்க, இவரும், இளம்பிறைபோல, நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து, உரிய பருவத்தில் கல்வி பயிற்றப்பெற்றுச் சிறிது பயின்ற பின்னர், நல்லாசிரியரை அடுத்து, அகத்தியம் தொல்காப்பியம் முதலிய இலக்கணமும், அக்காலத்துப்

சங்கு ஆயிரம் கொண்டு காசிக்குப் போனுலும், தன் பாவம் தன்னுேடே.

பயின்று வங்க இலக்கியமும், நீதி நூலும் பிறவும் ஐயந்திரிபறக் கற்றுப், புலவர் பாராட்டும் பெரும் புலமை முற்றிச் சிறந்து விளங்குவா ராயினர்.

இவர், 'பாட்டு எனப்படுவது கபிலரது பாட்டு' எனப் புலவர் புகழ்ந்துரைக்கும் வண்ணம், இன்சுவையும் பொருட் செறிவும் வாய்ந்த செய்யுளை விரைவில் இயற்றவல்லவர்; அன்பும் அருளும் ததும்பிய நோக்கும், பொய்யாகாவும், தூயமனமும் உடையவர்; இன்னு கடிந்து இனியவை புரியும் நோக்கினர்; எத்துணையும் செய்ந்நன்றி மறவாத சீலத்தர்; உள்ளதை இடித்துரைப்பதில் எள்ளளவும் அஞ்சாதவர்; நட்பு, உயிரினும் சிறந்தது என்னும் கொள்கையர்; ஆரியம் வல்லாரும் தமிழைக் கற்குமாறு விழைவூட்டும் சொல் வன்மையர்; ஏனைய திணைகளினும் குறிஞ்சித் திணையைப் பெருகப் பாடும் தன்மையும், அந்நிலங்களில் பயிலுதற்கண் மிக்க ஆர்வமுமுற்றவர்; பற்பல இடங்களில் கண்டுவைத்த பொருள்களை எல்லாம் ஒருங்கே எடுத்தாளும் நினைவின் மாட்சியர்; எவ்வெவர் கொள்கையும் செவ்விதெனக் கொள்ளும் சைவசமயத்தினர்.

இவர், கசடறக் கற்றுப் புலமை நிரம்பியதற்கேற்ப, அன்பு, அருள், அடக்கம் முதலிய நற்குணங்கள் அமையப்பெற்றுச், சீலத்தில் தவருத செய்கையராய் இனிதிருக்கையில், பாண்டி நாட்டிற்குத் தலை நகராக இருந்தது மதுரை.

இம்மதுரையை அரசிருக்கையாகக்கொண்டு, மன்னுயிரைத் தன்னுயிராகக் கருதி, கண்ணினைக் காக்கின்ற இமைபோல, எவ்வித ஊறுபாடும் வராமல் அவற்றைக் காத்து, ஆறிலொன்று கடமைபெற்றுக், குடி தளர்வுற்ற காலை அதனையும் கொள்ளாது விடுத்து, எங்கும் புகழ் பரக்க, வெண்கொற்றக் குடை நீழலில் உலகைக் காத்துப், பாண்டியன் உக்கிரப் பெருவழுதி, முறை செய்திருந்தனன்.

இவன், தமிழின் அருமை பெருமைகளை நன்குணர்ந்தவன்; பன்னாட் பயின்று நூல் நயங்களைத் தெள்ளிதின் ஆய்ந்தவன்; ஆகவே, அதனை வளர்த்தற்கண் இத்தென்னவர் பெருமானுக்கு ஆர்வம் பெருகுவதாயிற்று; பெருகவே, 'தமிழ்மொழியில், அறம் பொருள் இன்பம் என்னும் முப்பொருளையும் இனிது விளக்கும் இலக்கியங்களும், அவற்றை ஆராய்வதற்குக் கருவியாகிய இலக்கணமும், பிறவும் பலப்பல அமைதல் வேண்டும்; இவைகளை வேண்டின், இவற்றை இயற்றவல்ல புலவர் பலர் இன்றியமையாதவ ராவார்; திருவேறு தெள்ளியராதலும் வேறுஉலகியற்கை; கற்றோர்க்குப் பகையாவன வறுமையும், அது காரணமாக உண்டாகும் கவலையுமன்றோ? இவர்க்கு எத்தகைய கவலையும் உண்டாகா வண்ணம் வேண்டுவ கொடுத்துதவிப், பொன்போற் போற்றி, ஆதரிப்போமாயின், பழுமரம் நாடிய பறவை போலப், புலவர் பலரும் நம்மை நாடி வந்தடைந்து, கவலையின்மையின், நூல்கள் பல இயற்றி இன்புறுவர்; எம்மனோரையும் இன்புறுத்துவர்; அப்பொழுது, கற்போருங் கேட்போரும் பற்பலர் ஏற்படுவர்; அதனால் தமிழ் மொழி நாட்குநாள் செழித்துத் தழைத்து வளர்ச்சியுறும்; ஆராயுமிடத்து, தமிழ் வளர்ச்சிக்கு இன்றியமையாதன, நூல் நிலயமும், நூல்,இயற்றவல்ல புலவர் கூட்டமுமே' எனச் சிந்தித்து, 'முத்தமிழ்த் துறைபோகிய உத்தமர் யாரையும் கொணர்க' என எல்லாப்பக்கமும் ஆட்போக்கினன்.

ஏவலாளர் எம்மருங்கினும் நாடி, இயல் இசை நாடகங்களில் வல்லார் பலரைக் கொணர்ந்தனர். இவ்வாறு வந்த புலவர் குழாத்தில், கல்வி நிரம்பிய நல்லறிவாளராகிய கபிலரும் ஒருவர்.

பற்பல நாட்டினின்றும், புலவர்கள் போந்திருப்பதைக் கேட்டு மகிழ்ந்த மாறன், அன்னோரை வணங்கி, முகமன் கூறி, உள்ளம் உவப்ப வரிசைகள் வழங்கி, முன்னரே அமைத்திருந்த மண்டபத்தில் யாவரையும் ஒருங்கு கூட்டிச் சங்கம் நிறீஇ, ஆதரித்துத் தமிழை வளர்த்துவந்தனன்.

கபிலர், ஏனைய புலவர்களோடு சங்க மண்டபத்தில் வீற்றிருக்கையில், பொறாமையுற்ற போலிப் புலவர்கள் வந்து வீண்வாதம் தொடுப்பாராயினர். இச்செய்கைக்கு மனம் புழுங்கிய சங்கத்தினர், கூடலின்கண் கோயில் கொண்டருளிய சொக்கப்பெருமான் திருமுன்னடைந்து தாழ்ந்து 'தமிழறியும் பெருமானே! எம்மிடத்து எவரும்போந்து வீணே சொற்போர் தொடுக்கின்றனர்; அன்னவர் புலமையை நுண்ணிதின் அளப்பதற்கு எமக்கு ஒரு கருவி

தந்தருளவேண்டும்' எனத் துதித்து நின்றனர்.

அன்பர்கள் வேண்டியவற்றை வேண்டிய அந்நிலேயே அளித்தருளவல்ல பெருமானும், ஒரு புலவர் வடிவாக எதிர்தோன்றிப், 'புலவீர்! இனிக் கவலுதல் ஒழிமின்; இது நம்போல்வார்க்கெல்லாம் முழம் வளர்ந்து இடம் தரும்; ஏனையோர்க்கு இடந்தராது; இதனுல் மெய்ப் புலவர் இவரென எளிதில் அறிந்து இன்புற்றிருமின்' என மொழிந்து, சதுரமாய் ஒரு முழ அளவினதாகிய பலகை ஒன்றைக் கொடுத்தருளித் திருவுருக்கரந்தனர்.

இவ்வாறு கற்பித்து, சொக்கர் தந்தருளிய பலகை பெற்றுப், பேருவகை எய்திய புலவர் பெருமக்களோடு கோயிலே வலம் வந்து, அங்கயற்கண்ணி பங்கனே வணங்கிப், பட்டி மண்டபத்தை அடைந்து, அக்கடவுட் பலகை புலமை அளந்து இடந்தர, கபிலர், ஏனைய புலவர்க்குத் தலைவராய் அதன்மீது ஏறியிருந்து தமிழாராய்வாராயினர்.

2 கபிலர் பிரகத்தனுக்குத் தமிழறிவுறுத்தல்

புலவர்கள் சங்கத்திருந்து தமிழாராய்ந்து தென்னவனுக்கு உவகை யுண்டாகப் பண்ணுவியற்றிப், பாண்டிநாடு, தமிழ்நாடு என்னும் பெயரால் விளங்க, எங்கணும் தமிழ்பரப்பி வருநாளில், வட நாட்டினின்றும் ஆரிய மன்னன் ஒருவன் போந்து, மதுரையின்கண் தங்கினுன். அவன் பெயர் பிரகத்தன்; அவனே யாழ்ப்பிரமதத்தன் எனவும் கூறுவர். ஆரியனெனினும், தமிழரோடு வேற்றுமை பாராட்டாமல் அளவளாவி இருந்தமையின், தமிழ் கற்பதில் விருப்பமுடையவனுனன். இஃது இயற்கையே.

இந்நாடோ என்ருல், செந்தமிழ்நாடு; இதன்கண் செங்கோல் நடாத்துவோன் தமிழ் மாறன்; இந்நகர், சங்கப்புலவர் தழைத்தினிதிருக்கும் இடமாகும்; வாழ்பவர் யாரும் தமிழர்; பார்த்த இடமெல்லாம் பைந்தமிழ் முழக்கம்; ஓடும் யாறும் தமிழ்ச்சுவை தேரும்; உலவும் காற்றும் தமிழ் மணம் கமழும்; அன்றியும், கனவினும் தேவர் காண்டற்கரிய சொக்கர், தம் நீற்றெழில் மேனியில், மாற்றடி பட்டதும் தமிழமுதம் மாந்துதற்கன்ருே? ஆகவே, நாடும் நகரும் அரசும் தேவும் பிறவும் தமிழ் மயம் என்ருல், இந்நகரில் குடிபுகுந்த எவர் தாம் தமிழைக் கற்கவும், அதன் சுவையை அறியவும் மனங் கொள்ளார்? தமிழ் மணம் அறியாத இவனும், கேட்டவர்க்கு இனிமை பயக்கும் தமிழை, எப்பொழுதும் கேட்க நேர்ந்தமையால் உள்ளம் தளிர்ப்பெய்தி, நல்லாசிரியரை அடுத்துக் கல்விகற்க விரும்பினுன். இவ்விருப்பம் நாட்குநாட் பெருகவே, கற்று வல்ல அறிஞரைக் காணின், அவர்கள்பால் அன்பு பாராட்டத் தலைப்பட்டான்.

இச்செய்தி, நாடெங்கும் பரவிற்று; நம் புலவர் செவியினும் புக்கது; 'கல்லாதார்க்கு நல்லறிவுறுத்துதல் கற்றவர் கடனுகும்; எல்லா அறத்தினும் சிறந்த நல்லறமும் இஃதென்பர்; ஆதலால், இவ்வாரிய மன்னற்குத் தமிழறிவுறுத்துங் கடனே யானே மேற்கொள்ளுவேன்' எனத் தமக்குள் முடிவு செய்துகொண்ட புலவர், பின்வருமாறு சிந்திப்பார்:

'அரசனேக் காணச் செல்பவர் வெறுங்கையோடு சென்றிடார்; தமக்கு இயன்ற ஒன்றைக் கையுறையாகக் கொண்டு செல்வது வழக்கம்; இவன் பிறநாட்டினன் எனினும், அரசன்; ஆதலால், இவனிடம் கையுறையின்றிச் செல்வது கூடாது; நாமோ என்ருல், புலவன்; நமக்கெல்லாம் கையுறுவது செய்யுளன்றிப் பிறிதில்லே ;- அச்செய்யுளும், இவன் அறிந்திராத புதுவதொன்றனேப் புனேந்துரைப்பதாக வேண்டும்; இவன் வடமொழி பயின்றவன்; அம்மொழியில், எழுத்தும் சொல்லும் யாப்பும் அணியுமன்றி அகத்திணையின் பாகுபா டுணர்த்தும் பொருளிலக்கணம் இல்லே; பொருளிலக்கணத்தில் வந்துள்ள துறை ஒன்றற்கு இலக்கியமாகச் செய்யுள் ஒன்று பாடிச் செல்வேன்; புதியதொன்றைக் காண்பதற்கன்றிக், கேட்டற்கண்ணும் எவர்க்கும் மனம் செல்வது இயற்கை; நீ பயின்றுள்ள வடமொழிக்கண் இல்லாதது எனவே, கேட்பதற்கு அவாக் கொள்ளுவான்; அதன் வாயிலாக இவற்குத் தமிழறிவுறுத்துவேன்'' எனக் குறிஞ்சிப்பாட்டு என்ற நூலைப் பாடி, ஏட்டில் வரைந்து கைக்கொண்டு, பிரகத்தன் உறைவிடம் சார்ந்து, வாயிலோனே அணுகிக், 'காவலோய்! யான் அந்தணன்; தமிழ்ப் புலவன்; அரசனேக் காண வந்தேன்; இடை தெரிந்து உணர்த்துக' என்றனர்.

அவனும், அரசன்பாற் போய்க் கைகட்டி

 சடைத் தம்பிரான் சாற்றுக்கு அழுகிறுனும், லிங்கம் பஞ்சாமிருதத்துக்கு அழுகிறதாம்.

வாய் புதைத்து ஒரு புறம் நிற்க, பிரகத்தன் தலை நிமிர்ந்து பார்த்தனன்.

வாயிலோன் பணிந்து, 'அரசே! நின்னைக் காண வேண்டி, இந்நாட்டுப் புலவர், கபிலர் எனப் பெயர் கொள் அந்தணர் வந்திருக்கின்றனர்' என்னு முன், தாயொலி கேட்ட கன்று போல விரைந்துவருபவன், 'காலையிற் கண்டன யாவும் நன்னிமித்த மாயின; அதனால் கிடைத்தற்கு அரியாரைக் கிடைக்கப் பெற்றேன்; இந்நல்லவர் வருகை நன்மைக்கு ஏதுவாக வேண்டும்' என நினைந்து வந்து, அடி வணங்கிப், 'பெரியீர்! நுமது திருவடி தீண்டுதற்கு இம்மாளிகை செய்ததே நற்றவம் போலும்; தேவரீரைக் காணக் கிடைத்த இந்நாளே நன்னாள்; நும் வருகை நல்வரவாகுக' என முகமனுரைத்திட, ஆதனத்தமர்ந்து அளவளாவி மகிழ்ந்த கபிலர், இதுவே நற்சமயம் எனக்கருதித், தமிழின் அருமையிற் சிறிது கூறத் தொடங்கினர். 'அரசே! கேட்பாய்.

தமிழ் என்பது பண்டைக்காலம் தொட்டுத் தென்றிசைக்கண் வழங்கும் மொழியாகும்; தெற்கில் வழங்கும் காரணம் பற்றித் தேன் மொழி எனப்பட்டது; தென்றிசை உண்டாகிய காலம் உணர்ந்தவர், தென் மொழியாகிய இத்தமிழ் தோன்றிய காலமும் நன்குணர்வர்; அறிவதற்கு அருமை நோக்கியே, என்று முளதென்றமிழ் என்கின்றனர் பெரியோர்; ஏட்டு வழக்கில் இடம் பெற்றுப் பேச்சு வழக்கிழந்த சில மொழிகள் போலாது, இருவகை வழக்கினும் தன்னியல்பு குன்றாது பயின்று நிற்றலின், கன்னித்தமிழ் எனவும், இலக்கண வரம்பாகிய செம்மை வாய்ந்திருத்தலின், செந்தமிழ் எனவும், இளஞ்சிறுமகாரும் வருத்தம் சிறிது மின்றி எளிதிற் சொல்லும் தன்மை பெற்றிருத்தலின், மென்றமிழ் எனவும், கேட்பதற்கு இனிமைபயந்து நிற்றலின் இன்றமிழ் எனவும் கூறுவர் ஆன்றோர்.

இத்தமிழ், இயற்றமிழ் இசைத்தமிழ் நாடகத் தமிழ் என முத்திறப்படும். இவற்றின் இயல்பெல்லாம் விரிந்த நூலிற் பரந்து கிடக்கும். ஆண்டுக் கண்டுகொள்க; 'தமிழ்வழங்கும் நிலம் தமிழகம் எனப்படும்; தமிழகத்திற்கு வடக்கில் வேங்கடமும், தெற்கில் கன்னியாகுமரியும், கிழக்கினும் மேற்கினும் கடலும் எல்லைகளாம்' எனத் தமிழின் இயல்பும், சில்வகை எழுத்தால் இயன்ற மொழியெனினும் பிறமொழியின் உதவி வேண்டாது, வேண்டுமளவு பரந்து கிடக்கும் சொற்பெருக்கம் உடைய அதன் அருமையும் தேற்றித் தமிழ் கற்பதில் இவற்கு ஆர்வம்பெருக்கினர்.

இவரை அடுத்துக் கல்வி கற்கவேண்டுமென முன்னமே நினைந்திருந்தவன்; நாடியபொருள் கைகூடுவதினும் ஒருவற்கு நனிமகிழ் தருவது பிறிதில்லை; கும்பிட நினைந்த தெய்வம் தானே குறுக்கிட்டாற்போல, இவர் வலியக்கிடைத்தனர் என்றால், இவனுக்குண்டான உவகையை அளவிட யாரான் முடியும்? இவரது இன்மொழிகளைக் கேட்டு நெருப்பிலிட்ட வெண்ணெய் போல, நெஞ்சநெக்குருகி, "இப்புலவர் பெருந்தகையார், எனக்குக் கிடைத்தது நான் செய்து வைத்த நல்வினைப்பயன் என்கோ? அன்றேல் என் முன்னோர் இயற்றிய நற்றவப்பேறென நவில்வேனோ? இவர் கூறிய இன்சொற்கள், என் அறியாமை என்னும் நோய்க்கு ஏலாதி கடுகம் போன்ற நன்மருந்தாயின; கேட்குந்தோறும் வேட்கை பெருகுகின்றதேயன்றி, அமையுமெனத் தெவிட்டிற்றில்லை! இந்நகரின் கண் எத்தனையோ புலவர்கள் இருக்கின்றனரே; எவரேனும் இத்தகைய நலம்புரிதற்கு இன்றுவரை முந்தினரா? இல்லையே; தாம் நன்றெனக் கண்டு இன்புற்றதனை ஏனையோர்க்குணர்த்தி அவரும் இன்புறக் காண்பர் நல்லோர். புலனழுக்கற்ற இவ்வந்தணர்பால் அதனைக் காண்கின்றேன்; வான்செய்த நன்றிக்கு வையகம் என் செய்யும்? பயன்நோக்காது இவர் செய்த இந்நன்றிக்கு இன்ன கைம்மாறு செய்வதென யான் அறிந்திலேன்" என எண்ணி எண்ணி வியந்து மகிழும் தன் உள்ளக் குறிப்பை முகத்தால் உரைத்தனன். (தொடரும்.)

ஐரோப்பிய ஸயன்ஸூம், கர்நாடக ஸங்கீதமும்

EUROPEAN SCIENCE AND CARNATIC MUSIC

[ஸ்ரீமான். பி. எஸ், சுந்தரமய்யர் அவர்கள், பி. ஏ., எல். டி.]

(253-ம் பக்கத் தொடர்ச்சி.)

(6) அஹோபலரும் வேங்கடமகியும்

பூர்வம், கோமளம், தீவ்ரம் முதலான ஸ்வர பேதங்களை அஹோபலர் தனது கிரந்தமாகிற ஸங்கீத பாரிஜாதத்தில் உபயோகிக்கிறதிலிருந்தும், வெங்கடமகி தாம் புதிதாய் சிருஷ்டித்து உபயோகிக்கிற நூதனமான "பஞ்ச ச்ருதி ரிஷபம்" என்கிற ஸ்வர நாமபேதத்தை அவர் உபயோகிக்காததாலும், இவ்விருவரில் முற்பட்ட விருத்த கிரந்தகர்த்தா அஹோபலர் தான் என்று தெரிகிறது.

அஹோபலரது ஸங்கீத பாரிஜாதம் அச்சிட்டிருப்பதால், ஸங்கீத வித்வான்களின் பரிசீலனைக்கு வந்திருக்கிறது. ஆனால் வெங்கடமகியின் நூலாகிய "சதுர் தண்டிப்ரகாசிகை"யோ அச்சிடப்படவில்லை. மேலும் அவர், நாயக்க ராஜாக்கள் தஞ்சாவூரில் ஆண்டபோது நல்ல பேர்பெற்ற மந்திரியான ஸ்ரீகோவிந்த தீக்ஷிதருடைய பிள்ளையாயிருந்தபோதிலும் வெங்கடமகியின் இந்நூல் அந்த தஞ்சாவூர் ஸரஸ்வதி மால் புஸ்தகாலயத்தில் காணப்படாதது வெகு விநோதமான விஷயம்.

மேலும், 1893-ஞு க்குப் பிறகு, காலஞ்சென்ற பிரம்மஸ்ரீ எட்டயபுரம் சுப்பராம தீக்ஷிதர் மூலமாய்த்தான், இந்த சதுர்தண்டிப்ரகாசிகை வியாபகத்துக்கு வந்ததாகும். சுப்பராமதீக்ஷிதர் "தீக்ஷிதர் கீர்த்தனங்கள்"என்று வழங்கும் கீர்த்தனங்களைப் பார்த்த ஸ்ரீமுத்துசாமி தீக்ஷிதரவர்கள்பேரன். அவருடைய ஸங்கீத ஸம்பிரதாயம் நமது வழக்கத்திலுள்ள ஸம்பிரதாயத்தி லிருந்து வெகு மாறுபாடுள்ளது. 72 மேளசர்த்தாக்களுக்கும் அந்த சாம்பிரதாயத்தில் வேறு பேர் கொடுக்கப்பட்டிருக்கிறது. எந்த ஸம்பிரதாயம் முந்தினது என்பதை வித்துவான்களே ஆராய்ந்து பார்க்கவேண்டியதாகும். [இந்த சந்தர்ப்பத்தில் ஒரு விஷயம் குறித்தல் அவசியம். அதாவது, ஜகத்கியாதி பெற்ற ஸ்ரீ தியாகராஜய்யர் அவர்கள், வெங்கடமகியின் ராகஸம்பிரதாயத்தை அநுசரிக்காமல் ஸர்வஜன ஸாதாரணமாய் வழங்கும் ராகஸம்பிரதாயத்தைத் தழுவியே, ஸாஹித்யம் செய்திருக்கிறார் என்பதே.]

மேலும், வெங்கடமகி சிருஷ்டித்த "பஞ்ச ச்ருதி ரிஷபம்" என்னும் பரிபாஷை, சென்ற 300 வருஷங்களாக இருந்தாலும், இதுவரை ஸங்கீத வித்துவான்கள் எவராலும் அங்கீகரிக்கப்படவில்லை என்பது நாம் குறிக்கத் தகுந்த விஷயம். மேலும், ஸ்ரீபட்டணம் சுப்பிரமணியய்யர், ஸ்ரீமஹாவைத்யநாதய்யர், இவர்களுடைய சீஷர்கள் யாரும் இப்பரிபாஷையை உபயோகிக்கவில்லையென்று எல்லாருக்கும் தெரிந்ததுதான்.

இனி வெங்கடமகி, சுருதிவிஷயமாய் சொல்லும் விவரத்தைப் பார்ப்போம். அவருக்கு 22 சுருதியின் ஸ்வரூபம் தெரியவில்லை. சுருதிஸ்தானங்களை அவர் குறித்திருப்பது கணக்குக்கு வராது; ஏதோ குத்து மதிப்பாய் இருக்கிறது என்று காணலாம். அவருடைய கிரந்தம் சதுர்தண்டி பிரகாசிகை இந்த வெளியில் அகப்படுகிறதோ இல்லை. ஆகவே, பம்பாயில் மிஸ்டர். ஸூகதனகர் எம்.ஏ., அவர்கள் அஹோபலருடைய ஸங்கீத பாரிஜாதத்தை மொழி பெயர்த்து மராட்டி பாஷையில் பிரசுரித்திருக்கிறார். அந்த ஸங்கீத பாரிஜாத பிரவேசிகை என்னும் நூலிலிருந்து, வெங்கடமகியின் சுருதிக் கணக்கு வசனங்களை நாம் இங்கு உபயோகிக்க வேண்டியதாகும். அது பின்வருமாறு:—

மேருப கண்டகம் சுத்த
ரிஷப க்ஷேத்ராந்தரம் த்ரிதா
விபஜ்யர்ஷப பர்வைதத்
த்ரிச்யமாநம் விநாந்தரே—
பர்வத்வய நிவேசே ஸ்யுஃ
திஸ்ரோபி ச்ருதயஃ ஸ்புடாஃ—

* * *

(இதன் பொருள்) வீணையில் முதல் மெட்டு சுத்த ரிஷப ஸ்தானம். அதை மூன்று பாகமாக (சமபாகமாக என்பது என் அபிப்ராயம்) பிரிக்கவேண்டும். அப்போது 3 சுருதிகள் காதுக்கு வியக்தமாய்ப் படுகின்றன என்பதே. இதில் சொல்லிய விஷயத்தை நாம் ஆராய்ந்து பார்ப்போம். முதல் மெட்டு, குறிக்கும் ஸ்வரம் 16/15 மடங்குள்ள (சுத்த ரி என்னும்) மேஜர் ஸெமிடோன் (Major semi tone) என்று சொல்லப்படும். அந்த மெட்டை 3 சமபாக மாக்கி, பரீக்ஷித்துப் பார்த்தால், இந்த

உலகில் அந்த ஸ்வர ஸ்தானங்கள் எந்த ஸம்பிரதாயத்திலும் கிடைக்காது. விஸ்தரிப்பதில் பிரயோஜனமில்லே. அதன் பின்வரும் சுலோகங்களும் பொருளில்லாமலே ஸ்வரஸ்தானங்களைப்பற்றி எழுதுகின்றன. வெங்கடமகி ஸம்ஸ்கிருத வித்துவான்: பெரிய உத்தியோகம் வகித்து வியாபகரா யிருந்தவர்தான். ஆனால், ஸங்கித ஸ்வர "அளவு" விஷயமாக அஹோபலர் எவ்வளவோ அவ்வளவு தெரிந்தவராக எவரும் சொல்லமுடியாது.

ஸங்கித சாஸ்திர இலாகாவில் அஹோபலர் தான் ஸ்வரங்களுக்கும் (வீணையில்) தந்தியின் நீளத்துக்கும் சம்பந்தம் உண்டென்று கணக்கிட்டறிந்தவர். அவர் அபிப்பிராயத்தை ஐரோப்பிய ஸயன்ஸு முறைப்படி பார்த்தால் பின்வருமாறு இருப்பதாகக் காணலாம்.

ஸ்வரம்	நீளம்	வேபாங்கள் (vibrations)
1. ஸ	1	1
2. ரி (கோமள)	25/27	27/25
3. ரி (தீவ்ர)	8/9	9/8
4. க (கோமள)	5/6	6/5
5. க (தீவ்ர)	19/24	24/19.
6. ம (கோமள)	3/4	4/3
7. ம (தீவ்ர)	25/36	36/25.
8. ப	2/3	3/2
9. த (கோமள)	11/18	18/11
10. த (தீவ்ர)	7/12	12/7
11. நி (கோமள)	5/9	9/5
12. நி (தீவ்ர)	19/36	36/19.

மேலே காட்டிய கணக்கு, ஒரு தந்தியை 2 அல்லது 3 சமபாகங்களாய்ப் பிரித்து கணக்கிட்டிருப்பதாகக் காண்கிறோம். ஸயன்ஸு ஆராய்ச்சிசாலைகளும், நுட்பமான யந்திரங்களும் இராத அக்காலத்தில் அஹோபலர் ஸ்வரங்களை இவ்வாறு கணக்கிட்டிருப்பது அவருடைய கூர்மையான ஆராய்ச்சி சக்தியை ரூபிக்கிறது என்று நாம் உணரவேண்டும்.

ஆனாலும், இவர் 12 ஸ்வரங்களைத்தான் குறித்திருக்கிறார். 10 ஸ்வர ஸ்தானங்கள் அநாவசியமென்று தனது கிரந்தத்தின் முடிவில் சொல்லுகிறார். இந்த 10 சுருதிகளும் வேண்டாமென்று சொல்லக் காரணம் சொல்லாதிருப்பது வித்துவான்கள் ஆராயவேண்டிய முக்கியமான விஷயமாகும்.

இவற்றால் நாம் அறியவேண்டியது என்ன?

(1) ஸங்கீத குருவானவன் எப்போதும் 22 சுருதி விவர ஞானம் பெற்றவனாயிருந்ததாகத் தெளிவாகிறது. மேலும், 22 சுருதி ஞானம் ஸகஜம் என்கிற விவகாரம் எல்லாப் புஸ்தகங்களிலும் காண்கிறோம்.

(2) ஸ்வர அளவை அஹோபலருக்குத்தான் முதலில் தெரியவந்தது. அவருடைய நூலில் தான் 12 ஸ்வர ஸ்தாநம் முதன் முதலில் வெளியிடப்பட்டது; 22 சுருதியும் நிராகரிக்கப்பட்டது.

(3) ஸம்ஸ்கிருத பண்டிதரும், செல்வாக்குள்ளவருமான வெங்கடமகி இந்த 12 சுருதி சித்தாந்தத்தைப் பலப்படுத்தி, 72 மேள கர்த்தாவை உண்டாக்கினர். 22 சுருதி சித்தாந்தத்துக்கு ஸங்கீத விவசாரத்தில் அழுல் குறைய ஆரம்பித்தது. 22 சுருதிபேதம் இல்லாது போனால், ஸம்வாதி அநுவாதிபேதம் இல்லாமல் போகிறதே. இந்த பேதம் நமது ராகத்துக்கு ஆதாரமானதே என்பதைக் கவனிக்காது வெங்கடமகி தமது காரியத்தைச் செய்துவிட்டார்போலும்.

அதன் பலனாக, 22 சுருதிபேத ஞானம் மலினமடைந்து, 12 சுருதி விவகாரம் பலத்து, சுத்தராகஞானம் கெட்டுக்கொண்டு வருகிறது. வெங்கடமகி ஏற்பாடு செய்த 12 ஸ்வரஸ்தாந வீணை நமது ராகங்களை வெளிப்படுத்தச் சக்தியற்றதாயிருக்கிறது என்று யாரும் பார்க்கலாம். 12 ஸ்வரஸ்தாநங்களைக் கொண்டு 22 சுருதி ஸ்தாநங்களால் ஆகவேண்டியவேலைகளை செய்யவேண்டி வந்துவிட்டது. நாம் நல்ல சுத்த 22 சுருதி ஸங்கீதத்துக்குப் பதிலாய் போலியான 12 சுருதி ஸங்கீதத்தைக் கேட்கிறோம். மேலும், மட்டப்படுத்திய(Tempered) ஸ்வரங்கள் பொருந்திய ஹார்மோனிய வாத்திய ஸங்கீதத்தையும் 22 சுருதிஸ்தாநமில்லாது 12 ஸ்தாநமுள்ள லக்ஷண விரோதமான ஸங்கீதத்தையும் ஆமோதிப்பதாலே நம் ஸங்கீதம் கெட்டு வருகிறது.

இதைக்கண்டு கர்நாடக ஸங்கீதத்தைக் குரு பரம்பரை முறைப்படி அப்பியஸித்தவர்கள் மனதுக்குள் வருந்துகிறார்கள். அவர்கள் முன் வருவோமென்று துணிந்தாலும், அகில இந்திய ஸங்கீத சங்கத்தின் நிருவாக சபையார் அவர்களை அழைக்கக்கூடவில்லை. ஐயோ,

சதுரக்கள்ளியில் அகில் உண்டாகும்.

ஸங்கீதத்தின் நிலைமை பரிதபிக்கத்தக்கதா யிருக்கிறது!

இவ்வளவு ஆபத்துக்கிடையில், "ராகம் ஒரு நாளும் அழியாது" என்று காட்டிக் கொண்டு ஒரு விஷயம் நமக்குத் தைரியம் தருவதாயிருக்கிறது. வெங்கடமகியின் 12 சுருதி சித்தாந்தப்படி நம் ராகம் நாசமடைய வேண்டியதாயிருக்க, குருபரம்பரைப்படி தொன்றுதொட்டு வரும் 22 சுருதி ஸங்கீதம் மலைபோல் அசையாமல் வந்திருக்கிறது. பூர்ணமான ராக பாவம் பொருந்திய ஸ்ரீக்ஷேத்ரையருடைய பதங்களும், ஸ்ரீ தியாகராஜையருடைய கீர்த்தனங்களும் குருபரம்பரையில் அப்பியஸித்துப் பாடப்பட்டு வருகின்றன; இதெல்லாம் ஸங்கீதத்துக்கு நல்ல காலமென்றே சொல்லவேண்டும்.

நாளதுவரையில் ஸங்கீத சாஸ்திர ஆராய்ச்சிக்கு வேண்டிய சௌகரியங்கள் இல்லாமலே வந்திருக்கிறது. மஹா வைத்தியநாதய்யர் போன்ற வித்துவான்கள் ஸங்கீத ஆராய்ச்சி செய்து நூல்கள் இயற்றவில்லை; தங்கள் அனுபவப்படி நூல் இயற்றும் வித்துவான்களோடு கலந்து உழைத்து அவரது தப்பெண்ணங்களைத் திருத்தவுமில்லை. சங்கீத நூலாசிரியரான அஹோபலர், வெங்கடமகி முதலானவர்களோ (தாங்களே வித்துவான்களாய் இராததினால்) "அநுபவத்தில் எப்படியிருக்கிறது" என்பதை முழுவதும் கண்டறியாதவர்கள் என்று அவர்களே ஒப்புக்கொள்ளுகிறார்கள். இதற்கு ருசுவாக, ஒவ்வொரு கிரந்தகாரரும் "இதுவரையி லிருக்கும் ஸங்கீத நூலின் விஷயங்கள் லக்ஷ்யத்துக்கு பேதமுள்ளதாய் இருப்பதால் நான் இந்தப் புதிய நூல் எழுதலாயிற்று" என்று எழுதுகிறார்கள்.

பாடும் வித்துவான்களோ, ஸங்கீத சாஸ்திர ஆராய்ச்சி செய்பவருடன் கலந்துழைக்கும் வழக்கம் நம் தேசத்தில் கிடையாததனால் தொழிலாளிக்கும், சாஸ்திரகாரனுக்கும் ஸம்பந்தமே யில்லையென்று சொல்லலாம். ஸங்கீதத்தையே ஜீவனமாக வைத்து வந்த ஸ்ரீமஹா வைத்திநாதய்யரும், பட்டணம் சுப்பிரமணியய்யரும், அஹோபலர், வெங்கடமகியைப்போல ஸங்கீத சாஸ்திர புஸ்தகம் எழுத முன்வரவில்லை. இத்யாதி காரணத்தாலே ஸங்கீத விஷயமாய் இவ்வளவு அபிப்பிராய பேதமும் வந்திருக்கிறது.

(7) நாம் செய்திருப்பதென்ன?

ஸங்கீதத்தை ஜீவனமாக வைத்திருப்பவரில் சிலரும், ஸங்கீத விஷயமான சாஸ்திர ஆராய்ச்சி செய்தவரில் சிலரும், தஞ்சாவூரில் ஒரு சபை கூடி, நமது ஸங்கீத சாஸ்திர பரிபாஷைக்கு ஐரோப்பிய ஸயன்ஸ் பிரகாரம் நிர்ணயமான அர்த்தம் கண்டுபிடிக்க வேண்டியும், வெவ்வேறு ராகங்களில் ஒரே பெயருடன் வெவ்வேறு மாதிரியாய் உச்சரிக்கும் ஸ்வரத்தின் பேதங்களை நிர்ணயிக்க வேண்டியும் அவர்கள் கலந்துகொண்டு, பின்வரும் முடிவுக்கு வந்தார்கள். அதில் முதலாவது, தஞ்சாவூர் வீணையில் வரும் 12 மெட்டுக்களும் ஐரோப்பிய ஸயன்ஸில் பின்வரும் ஸ்வரலய இடைவெளிகளைக் குறிக்கின்றன வென்று பார்த்தார்கள்.

ரெ.	ஸ்வரம்.	22 சுருதிப்படி ரெ.	எந்த ராக ஸ்வரம்.	இடைவெளி.	மெட்டு.	வீணையில் எந்த தந்தி.
1	ஸ	1	எல்லாம்	1	ஸ்ருதந்தி மெட்டு	3-வது
2	ரி (சுத்த)	3	ஸாவேரி	16/15	1-வது ,,	,,
3	ரி (சதுச்ருதி)	4	காம்போதி	10/9	2-வது ,,	,,
4	க (ஸாதாரண)	7	தோடி	6/5	3-வது ,,	,,
5	க (அந்தர)	8	காம்போதி	5/4	4-வது ,,	,,
6	ம (சுத்த)	10	ஷை	4/3	5-வது ,,	,,
7	ம (ப்ரதி)	13	வராளி	36/25	6-வது ,,	,,
8	ப	14	எல்லாம்	3/2	ஸ்ருதந்தி	4-வது
9	த (சுத்த)	16	தோடி	8/5	1-வது ,,	,,
10	த (சதுச்ருதி)	17	காம்போதி	5/3	2-வது ,,	,,
11	நி (கைசிக)	20	தோடி	9/5	3-வது ,,	,,
12	நி (காகலி)	21	சங்கராபரண	15/8	4-வது ,,	,,
13	ஸ (மேல்)	1	எல்லாம்	2	5-வது ,,	,,

இத்துடன், வைணிகர்கள் ராகம் வாசிக்கையில் பின்வரும் சுருதிகளை, தந்தியை இழுப்ப

தினுல் உண்டாக்குகிருர்கள் என்றும் கண்டார்கள்.

நெ.	ஸ்வரம்.	22 சுருதிப்படி நெ.	எந்த ராகத்தில் வரும்.	இடை வெளி.	எந்த ஸ்வரம் என்று வழங்கும்.
1	ரி (சுத்த) (சிறிது)	2	பூர்விகல்யா.	25/24	(சுத்த) ரி
2	ரி (சதுச்ருதி) (பெரிது)	5	மத்திமாவதி	9/8	(சதுச்ருதி) ரி
3	க (ஸாதாரண) (சிறிது)	6	பைரவி	32/27	(ஸாதா) க
4	க (அந்தர) (பெரிது)	9	கல்யாணி	32/25	(அந்தர) க
5	ம (சுத்த) (பெரிது)	11	மத்திமாவதி	27/20	(சுத்த) ம
6	ம (பிரதி) (சிறிது)	12	பூர்விகல்யா.	45/32	(பிரதி) ம
7	த (சுத்த) (சிறிது)	15	பைரவி	25/16	(சுத்த) த
8	த (சதுச்ருதி) (பெரிது)	18	கல்யாணி	27/16	(சதுச்ருதி) த
9	நி (கைசிக) (சிறிது)	19	காம்போதி	16/9	(கைசிக) நி
10	நி (காகலி) (பெரிது)	22	கல்யாணி	48/25	(காகலி) நி

ஸ,ப வைத் தவிர உள்ள 10 ஸ்வரஸ்தாநங்கள் இருவிதமாய் உச்சரிக்கப்படுவதால், 20 பேதமாகக் கணக்கிடப்பட்டு, மொத்தம் 22 சுருதிகளாகின்றன. வீணையில், 10 சுருதிகள், தந்தியை இழுத்தலால் உண்டாவதை வைணிகர்கள் ஸஹஜமாய் அறிவார்கள்.

(8) இது எவ்வாறு கண்டறியப்பட்டது ?

(1) வெவ்வேறு ராகங்களில் வெவ்வேறு மாதிரியாய் அதே ஸ்வரம் உச்சரிக்கப்படுவது குறிக்கப்பட்டது.

(2) சில ஸ்வரங்கள் மட்டும் தீர்க்கமாய் வருவதும், சில ஹ்ரஸ்வமாய் வருவதும், ராக பேதங்களில் வரும் ஸ்வர ஸமூஹங்களின் பேதங்களும் குறிக்கப்பட்டன.

(3) முதல் விஷயத்திலிருந்து சுருதி பேதமும், இரண்டாவதிலிருந்து ஸ்வரலய இடைவெளியும் (Harmony) நிர்ணயிக்கப்பட்டது.

4/3, 3/2, 2 என்னும் இடை வெளிகள், ஸ-ம, ஸ-ப, ஸ-ஸ, என்னும் ஸம்பந்தங்கள் என்று அஹோபலர் சொல்லியிருக்கிருர்.

(1) ஸாதாரண க (6/5) அந்தர க (5/4) இவை இரண்டுக்கும் சுத்தரிஷப ஸம்பந்தம்—அதாவது 25/24—என்னும் ஒருசுருதிபேதம்.

(2) அந்தர க 5/4, சுத்த ம 4/3 இரண்டுக்கும் 16/15 என்னும் 2 சுருதிபேதம்.

(3) சாதாரண க 6/5, சுத்த ம 4/3 இரண்டுக்கும் 10/9 என்னும் 3 சுருதிபேதம்.

(4) சுத்த ம 4/3, பஞ்சம ம 3/2 இரண்டுக்கும் 9/8 என்னும் 4 சுருதி பேதம் என்று கண்டுபிடிக்கப்பட்டது.

25/24 பேதம் தான் காதுக்குப் புலப்படும் ; 81/80 என்னும் comma பேதம் காதுக்குப் புலப்படுவதில்லை என்பதாலேயே த்ரிசுருதி ரி, சதுச்சுருதி ரி இரண்டும் ஒன்ருய் அழைக்கப்படுவது வழக்கத்திலிருக்கிறது. அதுபோலவே ஏகசுருதி ரி துவிசுருதி ரி—இரண்டும் தனியாய் பேதம்பண்ணி உணர முடியாததால் இரண்டையும் சுத்தரி என்று சொல்ல வந்துவிட்டது.

உதாரணமாக, காம்போதியில் வரும் திரிசுருதி ரி மத்திமாவதி, காபிராகங்களில் வரும் சதுசுருதி ரி இரண்டையும் சதுசுருதி என்று சொல்லுகிறேம். பூர்வி கல்யாணியில் வரும் ஏகச்ருதி ரி, ஸாவேரியில் வரும் துவிச்ருதி ரி இரண்டையும் சுத்த ரி என்று சொல்லுகிறேம். கர்நாடக ஸங்கீதத்தில் ஸங்கீத விஷயங்கள் வெகுவாய்ப் புதைந்து கிடக்கின்றன. அவருடைய பாட்டிலிருந்து ஸ்வரலய இடைவெளிகளுக்கு உதாரணங்களை ஸயன்ஸ் படிப்பவர் கண்டுகொள்ளவேண்டும்.

மேலே காட்டியவாறு, காலஞ்சென்ற மிஸ்டர் நாகோஜி ராவ் அவர்களும் நானும், ஸங்கீதத்தில் கந்தருவாம்சமாய் விளங்கின மஹா வைத்ய நாதய்யருடைய மாணுக்கரான, பழமானேரி சாமிநாதய்யருடன் கலந்துகொண்டு ஆராய்ந்தறிந்த இவ்விஷயங்கள் தங்கள் முன்னிலையில் ஸமர்ப்பிக்கப்பட்டுள்ளன. சுபம்.

சத்திரத்துக் கூழுக்கு நாயக்கர் அப்பண்ணயா ?

நம் சிறுவர்களின் மனோபாவமும், முற்போக்கும்

OUR YOUNG MEN: THEIR IDEALS AND OUTLOOK

[ஸ்ரீமான் P. B. விஜயராகவாசாரியா ரவர்கள் பி. ஏ.]

காலேஜுகளிலும், ஸ்கூல்களிலும் படித்து வருகிற நமது சிறுவர்களுக்கு மனதில் என்ன எண்ணம் உண்டாயிருக்கிறதென்பதை சற்று ஆராய்ந்து பார்த்தால், மிகவும் பரிதாபத்தை யுண்டாக்கத்தக்கதா யிருக்கும். அநேகமாய் எவ்விதமான சிறந்த இலக்ஷியமு மிருப்பதாகத் தெரியவில்லை. முக்கியமாய் நன்ருய்ப் படித்து வரும் சிறுவர்களின் மனதில், யூனிவர்ஸிடி பரீக்ஷைகளில் முதன்மையாய்த் தேறவேண்டு மென்கிற ஓரே கருத்துதான் இருப்பதாகத் தோன்றுகிறது. இதற்காக இரவும் பகலும் ஓயாமல் சிறு பிராயம்முதல் புஸ்தகத்திலேயே கவனமாயிருக்கிருர்கள். சிறுவர்களுக்குள்ள வேடிக்கை விளையாட்டுகள் எல்லாம் அவர்களுக்கு இன்பம் தருவதில்லை. நல்ல சாப்பாடும் கிடைப்பது அருமை. இதனுல் அவர்கள் சௌக்கியம் குன்றி, நோய்க்கு உட்பட்டு வியாதியஸ்தர்களாகி, சீக்கிரத்தில் மடிந்து விடுகிருர்கள். அப்படியில்லாமல், படித்து விருத்திக்கு வந்தவர்களைக் கணக்கிட்டுப் பார்ப்போம். நான்காவது வகுப்பில் பிரவேசித்த நூறு சிறுவர்களை எடுத்துக்கொண்டால் அவர்கள் ஸ்கூல் பைனல் (School Final) என்கிற பரீக்ஷைக்கு வருவதற்குள்ளாக ஏழு வருஷங்கள் ஆகின்றன. இதற்குள், பல காரணங்களினுல் தடைபட்டு நின்றுவிட்டவர்கள் நீங்கலாக, நூற்றுக்கு சுமார் ஐந்து வீதம் தேறி வருகிருர்கள். அவர்களும் மேல் பரீக்ஷையில் தடைபட்டு, கடைசியில் இந்த நூறில் ஒருவனே பி. ஏ. (B. A.) பரீக்ஷையில் தேறக்கூடியவனு யிருக்கிருன். அப்படியிருந்தும், இக்காலத்தில் நம்மவர்களில் இங்கிலீஷ் படிக்காதவர்கள் ஒருவருமில்லை.

முற்காலத்தில், அதாவது இங்கிலீஷ் படிப்பு இந்தியாவில் ஆரம்பித்தகாலத்தில், படிக்கவந்த சிறுவர்கள் கொஞ்சம். அவர்களும் விசேஷ சாமர்த்தியமுள்ளவர்களாயும் ஐசுவர்யமுள்ளவர்களுடைய பிள்ளைகளாகையால் தேக சௌக்கியத்தை நன்ருய்ப் பாதுகாக்கக்கூடியவர்களாயும் சரீர சுகானுபவத்திற்கு வேண்டிய அளவு செலவு செய்யக்கூடியவர்களாயும் இருந்தபடியால், நிர்விசாரமாகப் படிப்பிலேயே ஊக்கமுள்ளவர்களாயிருந்து பெருமை பெற்ருர்கள். படிப்பிலும் பரீக்ஷையிலும் நிர்ப்பந்தங்களும் குறைவாயிருந்தபடியினுல், உபாத்தியாயர்கள் தங்கு தடையின்றி தங்கள்புத்தியை உபயோகித்து விசாலமாகப் போதித்துவந்தார்கள். படிக்கும் மாணவர்களும், படிப்பின் பூர்ண பலனை அடைந்தார்கள். அப்பொழுது இங்கிலீஷ் படிப்பு என்பது புதிதாக இருந்தமையால் அதில் ஆசையுள்ளவர்களே அதில் புத்தி செலுத்தினுர்கள். பிறகும், மற்றவர்களுடைய பரிகாசத்திற்கு ஆளாகாமலிருக்கும் பொருட்டு நன்ருய் முயன்று படிப்பின் பலனைப் பூர்ணமாக அடையப் பிரயத்தனப்பட்டார்கள்.

இக்காலத்திலோ, பிழைப்புக்கு வழி ஸர்க்கார் உத்தியோகமென்றும், அதிலும் முன்னே இங்கிலீஷ் படித்துத் தேறினவர்கள் உயர்ந்த உத்தியோகம் பெற்று ஐசுவரியமும் செல்வாக்கும் அடைந்தார்களென்றும் கண்டறிந்துகொண்டு, எல்லோரும் இங்கிலீஷ் படிக்கத் தொடங்கினுர்கள். இந்தப் படிப்புக்கு வேண்டிய திரவியச் செலவு செய்யமாட்டாதவர்களென்ருவது, சாமர்த்தியமில்லையென்ருவது பின் தயங்குகிறவர்கள் யாருமில்லை. எப்பாடு பட்டாவது, தமது பிள்ளை இங்கிலீஷ் படித்துத் தேறினுல் போதுமென்று ஒவ்வொரு தகப்பனுரும் எண்ணுகிருர். எந்த கஷ்டப்பட்டாவது பரீக்ஷையில் தேறவேண்டுமென்று ஒவ்வொரு பிள்ளையும் எண்ணுகிருன். ஆகையால் எல்லா மாதிரியான சிறுவர்களும் படிப்பிற்கென்றே வந்து குவியவேண்டியதாயிற்று. 40 பிள்ளைகளுக்குமேல் ஒரு உபாத்தியாயரிடத்தில் வைக்கப்படாதென்று ஏற்பாடாயிருந்தாலும், ஓரே வகுப்பில் அநேக 40 பிள்ளைகளும், அதற்குத் தக்கபடி அநேக உபாத்தியாயர்களும் ஏற்படவேண்டியதாயிற்று. அப்படியிருந்தும், பிள்ளைகளெல்லோரும் ஓரேவிதமானவர்களாக இல்லாததினுலும், பரீக்ஷை நிர்ப்பந்தங்கள் தீவிரமாய்விட்டபடியாலும், தேக சௌக்கியமும் சிறுவர்களுக்கு குறைவாயிருப்பதினுலும் ஜனநெருக்கத்தினுலே பட்ட

ணங்களில் வஸதிகள் சௌகர்யப்படாததி
னாலும் இன்னும் பலவித கஷ்டங்களினாலும்
உபாத்தியாயர்களுடைய வேலையும் கஷ்டமாய்
விட்டது. படிக்கும் சிறுவர்களும் பலன்பெற
முடியாமல் போய்விட்டார்கள். ஆனபோதி
லும், பரீக்ஷையில் தேறவேண்டிய நோக்கம்
மாத்திரம் இருதிறத்தாருக்கும் பூர்ணமாகக்
குடிகொண்டிருக்கிறது. ஆகையால் இவ்வா
றான நிலைமையில் மிகவும் கஷ்டப்பட்டு
அதிர்ஷ்டவசத்தினால் பரீக்ஷையில் தேறுகிற
வர்கள் மிகவும் கொஞ்சம். அவர்களும் தேகம்
மெலிந்து, நீடித்து உழைக்க சக்தியற்றவர்
களாய், கண் முதலிய உறுப்புகளும் பலன்
குறைந்து ஆண் பிள்ளைகளுக்குப் பதிலாக
'போலி மனிதர்களாய்' உயிரிருந்தும் அநேக
மாய் உபயோகமற்றவர்களாய் விடுகிறார்கள்.
அப்படிப்பட்டவர்களுடைய நிலைமைதான்
பிறகு எத்தன்மையதென்று சற்று ஆலோசிப்
போம்.

அவர்கள் உத்தியோகம் பெறவேண்டுமென்
கிற ஓரே எண்ணத்துடன் படித்தவர்களாகை
யால், அதற்காகப் படாதபாடு பட்டு அதை எப்
டியாவது அடையவேண்டியிருக்கிறது. உத்தி
யோக விவரத்தைச் சற்று ஆராய்ந்து பார்ப்
போம்; முன்னுக்கு வந்த ஒன்றிரண்டுபேர்களை
நீக்கி வைத்து, மற்றவர்களைப்பற்றி முதலில்
ஆலோசிப்போம்: நித்திய தரித்திரம் பிடுங்
கித்தின்னும் பெரிய ஸம்ஸாரியான ஸ்கூல்
மாஸ்டர் அல்லது காலேஜ் புரொபஸர்;
அல்லது பொன்னான காலத்தை வீணாக்கிக்
கொண்டு திரியும் புதுப்புது வக்கீல்கள்; வயிற்
றுக்குறையோடு வாய்திறவாமல் ஓயாத வேலை
செய்யும் தாலூக்கா குமாஸ்தாக்கள்; ஒருபோர்
வாக்குமூலங்களுக் கிடையில் கொஞ்சங்கூட
மூச்சுவிட நேரமில்லாத முனுசீப்புகள்; மே
லதிகாரியும் கீழ் உத்தியோகஸ்தரும் சேர்ந்து
நசுக்கிக் கொல்லும் டிப்டி கலெக்டர்கள்; இவ்
வாறான கோரமும் கொடுமையும் தவிர
கொஞ்சமாவது ஸந்தோஷம் அல்லது நிர்
விசாரம் என்பது உண்டோ? இவைகளைவிட
வேறுவிதமான உத்தியோக முறைகளுண்
டோ? இப்படிப்பட்ட இலக்ஷியத்திற்காக,
பிறந்த ஐந்தாவது பிராயம் முதல், தமது
அருமைக் குழந்தைகளை விட்டுப் பிரிந்து,
தாமும் வருந்தி, அவர்களையும் வருத்தி கஷ்
டப்படும் மாதாபிதாக்களை என்னென்று
சொல்லலாம்? இவ்வாறான நிலைமைகளைக்
கண்டும் ஒருவிதமான சீர்திருத்தமும் செய்ய
முயற்சி எடுத்துக்கொள்ளாத நம்முடைய பிர
முகர்களை எவ்வாறு மதிக்கலாம்? இப்படிப்
பட்ட கஷ்டங்களுக்கு ஒருவித விமோசன
மும் கண்டு தெளியாத இந்த இந்து ஜாதியா
ரைத்தான் என்னவென்று சொல்லலாம்? போ
தாக்குறைக்கு கலியாணமும் இங்கிலீஷ் படிக்
கும் பிள்ளைகளுக்கே சீக்கிரத்தில் நடக்கக்
கூடியதாயிருக்கிறது. எதிர்ஜாமீனும் பெரிய
தொகையாய்க் கொடுப்பதற்கு, பெண்ணைப்
பெற்றவர்கள் சித்தமாயிருக்கிறார்கள். நன்றாய்ப்
படிக்காத பிள்ளைகளைப்பற்றி சிலர் என்னிடத்
தில் வந்து ப்ரமோஷன் விஷயமாயும் ஸெலெ
க்ஷன் (Selection) விஷயமாயும் சிபார்சு சொல்
லும்பொழுது இந்தக் கலியாண சங்கதியை
முக்கிய காரணமாகச் சொல்லி, தங்களுக்கு
இவ்வாறான உதவியைப் புரிவதினால் ஒரு கெடு
தியும் உண்டாகாதென்றும், விசேஷ புண்ணி
யம் கிடைக்குமென்றும் பற்பல விதமாக
வேண்டியு மிருக்கிறார்கள். ஆனதுபற்றி இத்
தன்மையான நிலைமைக்குக் காரணம் ஓரிடத்
தில்தான் இருக்கிறதென்று நிலையாய்ச்சொல்ல
முடியாது.

சாதாரணமாய் ஆதியில் இங்கிலீஷ் படிப்பை
இந்தியாவில் ஏற்படுத்தி, நம்முடைய நன்மை
க்கு ஸ்கூல்களையும் கவர்ன்மெண்டார் ஸ்தா
பித்தார்கள். இப்பொழுது உண்டாயிருக்கிற
பலன்களைக்கொண்டு, கவர்ன்மெண்டார் பே
ரில் தப்பு சுமத்துவது சரியல்ல. மேல்நாட்டு
நாகரீகத்தையும், அந்த பாஷையையும் இந்தி
யாவில் பரவச்செய்து நம்முடைய ஆர்ய நாக
ரீகம் நடையுடை பாவனை முதலியவைகளை
யெல்லாம் வேண்டுமென்று அழித்துவிட்டார்
களென்று சொல்வது கொஞ்சமும் பொருந்
தாது. வாஸ்தவத்தில், மேல் நாட்டார் இங்கு
வந்தகாலத்தில் நமது ஆர்யமதத்தின் நாகரீகம்
முதலியவைகளில் நமக்குப் பற்று சற்று குறை
வாகவே இருந்தது. ஆனதுபற்றி, மேல்நாட்டு
நாகரீகமானது சீக்கிரத்தில் வேர் ஊன்றி,
அநேகர்களால் மிகவும் சிரேஷ்டமானதென்று
ஏற்றுக்கொள்ளப்பட்டது. ராஜா ராம்மோஹன்
ராய், கேசவசந்த்ர ஸென் முதலிய ஒன்று இர
ண்டு பெரியோர்கள் அதன் நன்மையையும்

பெருமையையும் நன்கறிந்து அவைகளைக் கைக்கொண்டார்கள். ஆனாலும் விசேஷமாய் இந்தியர்கள் யாவரும், மேல்நாட்டு பழக்க வழக்கங்கள் மிகவும் நூதனமானவையென் றும், நேர்த்தியாய் பட்டு கத்தரித்தாப்போ லிருப்பவை யென்றும் அறிந்துகொண்டு அவைகளை முழுமையும் தழுவினார்கள். மேல்நாட்டு பழக்கங்களை எத்தனை சிறப் பாய்க் கொண்டாடினார்களோ, அத்தனை இழி வாய் நமது வழக்கங்களைப் பழிக்கத் தலைபட் டார்கள். ஆனதுபற்றி நம்மவர்களில் இங்கிலீஷ் படித்தவர்களும், அவர்களோடு நெருங்கிப் பழ கினவர்களும் வரவர விசேஷமாய் இங்கிலீஷ் பழக்கத்தையே அனுசரிக்கலானார்கள். இவை களுக்கெல்லாம் சர்க்கார் காரணமல்ல; வேணு மென்று நமது நாகரீகத்தை அழிக்க எண்ணி னவர்களுமல்ல. இங்கிலீஷ்கார் முதலில் இந்தி யாவுக்கு வந்தபொழுது, அவர்கள் வியாபாரி கள். காரியத்திலே கண்ணாயிருந்தவர்கள். அந்த காலத்தில் தங்களுடைய வியாபாரவேலை களுக்கு குமாஸ்தாக்கள் இங்கிலீஷ் தெரிந்தவர் களாயும் நம்மவர்களுடன் நன்றாய்ப் பழகினவர் களாயும் இருக்கவேண்டும். ஆனதுபற்றி அப் படிப்பட்ட குமாஸ்தாக்களை உண்டாக்கிக்கொ ள்வதற்கு வேண்டியதான வசதிகளைச் செய்து கொடுக்க, ஸ்கூல்களை ஏற்பாடு செய்தார்கள். ஆனால் அவ்வாறு செய்த ஏற்பாடானது அதிக தீவிரமாகச் செழித்து வளர்ந்து எங்கும் பர விற்று. ஆதியில் ஏற்பட்ட காரணமும் நாள டைவில் மறைந்துபோயிற்று. நம்மவர்கள் அதி சீக்கிரத்தில் இந்த ஏற்பாட்டின் பயனை நன் றாய் அறிந்துகொண்டார்கள். பலன் நிச்சய மானதென்றும் லாபகரமானதென்றும் தெரிந் துகொண்டதும், எல்லோரும் இந்த இங்கிலீஷ் படிப்புக்கு வந்து குவியலானார்கள். நம்மவர் களும் அதிக எளிதில் சமயத்திற்குத் தக்கவாறு தங்களை அமைத்துக்கொள்ள சக்தியுள்ளவர்க ளாகையால், இங்லீஷ் படிப்பையும் அதன் பய னையும் எளிதில் அடையக்கூடியவர்க ளானார் கள். ஆகையால் இக்காலத்தில் ஸ்கூல்களிலும் காலேஜ்களிலும் படித்துவரும் நமது சிறுவர் களின் நோக்கமானது இத்தன்மையானதென் பது இப்பொழுது நன்றாய் விளங்கும்.

இவவாறான நிலைமையில் நாம் இன்னும் வெகுகாலம் இருந்துவர இயலாது. இக்காலத் திற்கு ஏற்றவாறும், நமது சுபாவத்திற்குப் பொருந்தியவாறும் மாறுதல்களைக்கண்டறிந்து அவைகளை அனுஷ்டித்துக் காட்டுவது நம் முடைய தலைவர்களுடைய கடமையாகும். வியாபாரமும், கைத்தொழிலும், இயற்கை வளமும், வேளாண்மையும் இவைபோன்றசாத னங்களும் நாட்டின் முற்போக்குக்கு இன்றி யமையாதவை. இக்காலத்தில் இவைகளில் எந்த தேசத்தார் பயிற்சி குறைவாயிருக்கின் றார்களோ, அவர்களே மற்றவர்களுக்கு அடி மைகளாக உழைக்கவேண்டியிருக்கிறது. இது இப்படியிருக்க, நம்மவர்களோ சுபாவத்தில் பெரும்பாலும் உழைப்புக்கு விரோதமாய் மத வைராக்கியம் முற்றினவர்களாய், யுக்தி சாமர்த்தியமும் கல்வியும் தீவிரபுத்தியும் விருத்திசெய்ய விருப்பமுடையவர்களா யிருக் கிறார்கள். சரீரப்பயிற்சியும், உலகப்பற்றும், தேசாபிமானமும் விசேஷமாக வேண்டி யிருக்க, அவைகளுக்கு எதிராக நம்மவர் கள் புத்திநுட்பமும் பரமார்த்த தத்வஞான மும் சுயநயமும் அதிகமாக உடையவர்களா யிருக்கிறார்கள். இக்காலத்திய படிப்புகளும் சற்றேறக்குறைய இவைகளையே விருத்தி செய்யக் கூடியவை. பீ. ஏ. பரிக்ஷையில் தேறினவர்கள் எத்தனை சுலபமாய் ஜீவன், மாயை, சட்டம் இவைகளைப்பற்றி கூரிய புத்தியுடன் கக்ஷிபேசி, சாதிக்க மாட்டுவார் களோ அத்தனை சுலபமாய் தங்கள் ஆகாரம் உடுப்பு இவைகளைப்பற்றியாவது, மற்றும் தம் வாழ்க்கைக்கு அவசியமானவைகளைப் பற்றி யாவது அறிந்துகொள்ளவில்லை.

இவ்விதப் படிப்பில், நம் சிறுவர்கள் பயிலு வதை நீக்கி, சரீரப் பயிற்சி, கைத்தொழில் இவைகளில் பற்றுள்ளவர்களாய், உத்தியோகம் பெறுவதையே பெரிதாகக் கொள்ளாது, நாட் டின் நன்மையைக் கருதி ஒழுகும்படிச் செய் வதே நம்மவர்களின் கடமையாகும்

நமக்கு நமது தந்தையர்கள் செய்து வைத் ததுபோல் நாமும், நம் சிறுவர்களுக்கு நன் மையைச் செய்துவைக்கக் கடமைப்பட்டி ருக்கிறோம். நமது தந்தையர்கள் வெறும் பிரமஞானத்தையும் வேதாப்பியாஸத்தையும் விட இங்கிலீஷ் படிப்பதும்கூட அவசிய மென்று அக்காலத்தில் கண்டறிந்து நமக்கு இங்கிலீஷ் ஸ்கூல்களில் படிப்பு சொல்லி

வைத்து உத்தியோகம் பெறும்படி முயன்றார்கள். அவ்வாறே நாமும் நம்முடைய சிறுவர்களுக்கும் இக்காலத்திற்குத் தக்கபடி கைத்தொழில்களைக் கற்பிக்க ஸ்கூல்கள் ஏற்பாடு செய்து, அவைகளில் தேர்ச்சி அடையும்படிச் செய்யவேண்டும். எல்லோரையும் ஒரே விதமாக ஒரே வழியில் திருப்பாமல் அவரவர் இடம்பொருள் ஏவல்களுக்குத் தக்கபடி அவரவர்கள் முயற்சிசெய்து மேன்மையுறச் செய்யவேண்டும். இத்தகைய ஏற்பாடுகளுக்கு இக்காலத்தில் சாதனங்களுமிருக்கின்றன; செல்வவான்களுக்கும் குறைவில்லை. சர்க்கார் சகாயமும் உண்டு. நமது சக்ரவர்த்தியாரது கருணையானது இவ்விதப் படிப்பு விஷயத்திலேயே விசேஷமாகச் சென்றிருக்கின்றதென்று நாம் நன்கறிவோம். இச்சந்தர்ப்பத்தை உபயோகப்படுத்திக் கொள்ளாவிட்டால் இது யாருடைய குற்றமாகும்? இவைகளை அலக்ஷியம் செய்து சும்மாயிருந்தால் பிறகு நம் நாட்டின் கேட்டிற்கும், நம் சிறுவர்களின் தாழ்ந்த நிலைமைக்கும் நாமே அடிக்கோலினவர்களாவோம்.

பிரகிருதி சாஸ்திரம்

PHYSICAL SCIENCE

(ஸ்ரீமான் ஏ. வரதாசாரியாரவாகள், பி. ஏ., எல். டி.)

ஜடபதார்த்த சாமான்யதர்மங்கள்:-(தொடர்ச்சி)

பிரபஞ்சத்திலுள்ள வஸ்து ஒவ்வொன்றும் இதர வஸ்துக்களை இழுக்கும் தன்மையுள்ளது. ஆகர்ஷணம் (Gravitation) என்று சொல்லக்கூடிய இவ்வித சக்தியானது, பொதுவாய் எல்லாப் பதார்த்தங்களிடத்திலிருப்பினும், அதன் அளவானது, ஒன்றையொன்று இழுக்கும் வஸ்துக்களின் கன பரிமாணம் (Mass), அவற்றிற்குள்ள தூரம் (distance) இவைகளைப் பொறுத்திருக்கும். கன பரிமாணம் மிகுந்தால், ஆகர்ஷணம் அதிகரித்தும், தூரம் விருத்தியடைந்தால், இழுக்கும் சக்தி குறுகியும் இருக்கும். ஓர் பெரிய வஸ்துவும், சிறுவஸ்துவும் இழுக்கும் சக்தியை யோசித்தால், பெரியதை சிறியது இழுப்பதைக் காட்டிலும், பெரியது சிறியதை ஆகர்ஷிக்கும் சக்தி மிகுந்திருக்குமாதலால், பெரியதை நோக்கி அற்பமான பதார்த்தம் சலிக்கும்படி நேரிடும். இவ்வித சக்தி விசேஷத்தால்தான் சூரியனைச்சுற்றி பூமி முதலான கிரகங்களும் (Planets), பூமிபோன்ற கிரகங்களைச்சுற்றி சந்திரன் போன்ற உபகிரகங்களும் (Satellites) சுற்றிவருகின்றன. இவ்வித சக்தி விசேஷத்தை கி. பி. 17-வது நூற்றாண்டின் பின் பாகத்திலும், 18-வது நூற்றாண்டின் முன் பாகத்திலும் வசித்தவரும், பிரகிருதிசாஸ்திரம் கணிதம், இவைகளில் மிகப் பிரசித்திபெற்றவருமான ஸர் ஐஸாக் ந்யூடன் (Sir Isaac Newton) என்னும், வித்துவான் கண்டுணர்ந்து வெளியிட்டதாகத் தெரியவருகிறது.

பிரபஞ்ச வஸ்துக்களுக்குப் பொதுவான இவ்வித சக்தியானது, பூமிக்கும், அதன் மேலுள்ள வஸ்துக்களுக்கு முண்டு. பூமியானது, அதன்மீதுள்ள, தனி பதார்த்தங்களைக் காட்டிலும் மிகப் பெரிதாகையால், பூமியிலுள்ள வஸ்து ஒவ்வொன்றும், பூமியின் ஆகர்ஷண சக்தியால் இழுக்கப்பட்டு, ஏதாவது ஆதாரத்தால் தடுக்கப்பட்டாலொழிய, பூமியின் மத்திய பாகத்தை நோக்கிவிழும் தன்மையுள்ளது. இவ்விதம் பூமியானது அதன் மீதுள்ள பதார்த்தங்களை ஆகர்ஷிக்கும் விசைக்கு கரிமம் (Gravity) என்று பெயர். இவ்விதம் ஒவ்வொரு வஸ்துவையும் பூமியானது இழுக்கும் சக்தியின் மொத்த பரிமாணத்தை அவ்வஸ்துவின் கனம் (Weight) என்று விவகரிக்கிறோம்.

பூமியிலுள்ள வஸ்துக்கள் ஒன்றையொன்று இழுக்கும் சக்தியுள்ளதாயினும், ஒவ்வொன்றும் பூமியால் மிகவும் பலமாய் ஆகர்ஷிக்கப்படுவதால், மேற்சொன்ன ஆகர்ஷணமிருப்பதாய் சாதாரணமாய் நமக்குப் புலப்படுவதில்லை. மிகவும் ஸூக்ஷ்மமான பரீக்ஷணத்தால் இவ்வித சக்தியிருப்பதையும், அதன் அளவு, வஸ்துக்களின் கனம், தூரம் இவற்றையனுசரித்து ஏற்றக் குறைவா யிருப்பதையும், காவேண்டிஷ் (Cavendish) என்னும் வித்துவான் நிரூபித்திருக்கிறார்.

ஓர் உயர்ந்த ஆதாரத்திலிருந்து, நீண்டு மெலிந்த கம்பியின் ஒரு நுனியைக் கட்டித்

சந்திரனைப் பார்த்து நாய் குலைத்தாற் போல.

தொங்கவிட்டு, மற்றொரு நுனியை ஒரு மரக் குச்சியின் நடுவில் கட்டி, அக்குச்சியின் இரு முனைகளிலும், இரும்பு முதலிய உலோகத்தா லுண்டாய, சமமான இரு குண்டுகளைவைத்து, மேற்கண்ட குச்சியை அடிவானத்துக்கு ஸம மாக (Horizontal) இருக்கும்படி செய்ய வேண்டும். இவ்விதம் செய்து, மரக்குச்சி அசையாமல் நிற்கும்போது, ஏதாவது ஓர் பெரும் பாரமான வஸ்துவை, அவற்றுள் ஒரு உண்டையின் சமீபத்தில் கொண்டுவந்தால், அவ்வுண்டை இழுக்கப்பட்டு, கம்பி முறுக் கடையும். மேற்சொன்ன கன பரிமாணத்தை யும், அதற்கும், உண்டைக்குமுள்ள தூரத் தையும் அனுசரித்துள்ள ஆகர்ஷண சக்திக் குத் தகுந்தபடி கம்பியின் முறுக்கு அளவும் ஏற்றக் குறைச்சலா யிருப்பதைக் காணலாம்.

மேற்சொன்ன ஆகர்ஷண சக்தியினால் தான் நாமிருக்கும் பூமியும் அநேகமாய் உருண் டை வடிவமாய் ஏற்பட்டுள்ளது. இக்காலத் தில், பூமியின் மேற்பாகம் அநேக மைல் தூரத் திற்கு இறுகி, கரடுமுரடானதா யிருந்தாலும், வெகு காலத்திற்குமுன், பூமி அநேகமாய்த் திரவ பதார்த்த ரூபமாயிருந்தபோது இத் திரவ வஸ்துவின் அணுக்கள் மேற்சொன்ன அன்னியோன்னிய ஆகர்ஷண சக்தியால் தாக் கப்பட்டு, மத்தியத்திலிருந்து, மேற் பரப்பின் எல்லா பாகங்களும் சமமான தூரத்திலிருப் பதற் கனுகுணமான உருண்டை வடிவமான ரூபத்தை அடைந்துள்ளது.

தாமரை இலைமேலுள்ள ஜலத் திவலைகள், புல்லின்மேல் படிந்த பனித்துளிகள், மேஜை அல்லது சமமான பலகையின் மேலுள்ள பாதரஸச் சொட்டுகள், ஒரு சிறு ஒழுக்கிலி ருந்து ஒழுகும் ஜலத் திவலைகள், இவை யெல் லாம் உருண்டை வடிவமாயிருப்பதும், மேற் சொன்ன ஆகர்ஷண சக்திக்கு நிதர்சனமே.

பாச்சியத்துவம் அல்லது பிரிக்கப்படும் தன்மை

Divisibility.

நாம் பார்க்கும் ஒவ்வொரு வஸ்துவும், அநே கம் பரமாணுக்கள் ஓர் சக்தி பலத்தால் சேர்ந்து ஏற்பட்டுள்ளது. ஆகையால் ஒவ் வொரு பதார்த்தத்தையும், சிறு சிறு துண் டாக்கி மிகவும் அற்பமான அணு ரூபமாய் விசேஷ சாதனங்களால் செய்யக்கூடும். இவ்விதம் பாகிக்கக்கூடிய தன்மையை பாச்சி யத்துவம் என்று சொல்லலாம்.

(1) ரஸ்தாவில் பரப்பப்பட்ட கற்கள், வண்டி முதலானவைகளால் மிதிபட்டு, காற்றானது அங்குமிங்கும் அடித்துக் கொண்டுபோகக் கூடிய அவ்வளவு ஸன்னமான தூசிரூபமாய் ஆகிறது. (2) தங்கத்தை தகுந்த கருவியால் அடித்து அதிநுட்பமான தகடுகளாகச் செய்ய லாம். இவ்விதம் 2000 தகடுகளை, ஒன்றின் மேலொன்றாய் வைத்தால் சுமார் ஒரு காகிதத் தாளின் தடிப்புஇருக்கும் (3) ப்ளாடினம் (Platinum) என்னும் உலோகத்தைக் கம்பியாயி ழுத்து ஒரு மைல் நீளமுள்ள கம்பி ஒரு கிரெ யின் (1/7,000 பவுண்டுநிறை) நிறையுள்ளதாக அவ்வளவு சன்னமாய்ச்செய்யலாம். (4) பளிங் குத்துண்டை ஜ்வாலையில் உருகச்செய்து, மயி ரைக் காட்டிலும் நுண்மையான நூல்போல் இழுக்கலாம். (5) மினுக்கமுள்ள ஓர் கண்ணாடித் தட்டத்தில் (glass plate), 1/100,000 அங் குலம் இடைவெளியுள்ள இணையான கோடு களை (parallel line) தகுந்த கருவியால் வரி யிட்டு இழுக்க முடியுமென்று சொல்லுகிறார் கள். (6) அவுரி, இன்னும் இதர வர்ண பதார்த் தங்கள், திரவ பதார்த்தத்தில் கரைந்து எங் கும் பரவுவதும், ஜலத்தில் போடப்பட்ட சர்க் கரை, உப்பு முதலியன கரைவதும், வாசனைப் பதார்த்தங்கள் நாலாபக்கத்திலும், காற்று மூல மாய் வாசனையைப் பரவச் செய்வதும், மேற் சொன்ன பாச்சியத்துவம் என்னும் குணத் தால்தான். ஒரு கிரெயின் கஸ்தூரியை ஓர் அறையில் வைத்தால் அந்த அறைமுழுவதும் வாசனை பரவி, பல வருஷங்களுக்குப் பிறகு கூடஅதன்நிறை அநேகமாய்க் குறைவுபடாம லிருக்கும்படி அவ்வளவு நுட்பமான அணுக் களாகப் பிரிக்கப்படும் தன்மையுள்ளது.

ஆனால் மேற்சொன்ன பாகிக்கப்படும் தன் மைக்கும் ஓர் எல்லையுண்டு. மிகச் சிறிய அணுக் களான பிறகும், ஒரு வஸ்துவை பாகிக்கக் கூடுமானால், அவ்வஸ்துவின் ஸ்வரூபமே மாறி வேறு விதமாகப் பரிணமிக்கும். ஆகையால் ஒவ்வொரு பதார்த்தமும், தன் ஸ்வபாவம் மாறாமல் பாகிக்கப்பட வேண்டுமானால், பர மாணுக்களுக்கும் (atoms, molecules) சிறிய தாய் துணிக்கப்பட முடியாது.

ஒருமை விண்ணப்பம் அல்லது சமரஸப் பிரார்த்தனை

THE UNIVERSAL PRAYER

BY ALEXANDER POPE

[ஸ்ரீமான் பண்டித ம. கோபாலகிருஷ்ணய்யரவர்கள்.]

Father of all ! in ev'ry age,
In ev'ry clime adored,
By saint, by savage, and by sage,
Jehovah, Jove, or Lord. (1)

காலமொரு மூன்றினிலும் காசினியில் எவ்விடத்தும்
சிலர் அறிவிலிகள் தெள்ளறிஞர்—"மூல
சுயம்புவே ! சம்போ ! சுவாமி !" என இவ்வா(று)
இயம்பித் தொழும் எந்தையே !

Thou Great First Cause, least understood
Who all my sense confined
To know but this, that Thou art good
And that myself am blind ; (2)

"நல்லோனாய் நீ உள்ளாய்நான்எனிலோ ஞானக்கண்
இல்லா தவன்" என்றே யான் உணர—வல்லானும்
போதமே எற்(கு)அளித்தாய் புந்திதனுக் கெட்டாத
ஆதி பெருங்கா ரணா !

Yet gave me, in this dark estate,
To see the good from ill ;
And binding Nature fast in Fate,
Let free the human will. (3)

என்றாலும், இந்த இருள் உலகில் நீயதிது
நன்(று)இதென நான்காண நல்கினாய்—என்றும் நீ
ஒக்க இயற்கையையூழ்க் குட்பிணித்தாய் மாந்
மிக்க சுவேச்சையுற விட்டு. [தருளம்

Can sins of moment claim the rod
Of everlasting fires ?
And that offend Great Nature's God
Which nature's self inspires? (4)

ஆயா தொருநொடியில் ஆற்றியபா வச்செயல்கள்
ஓயாக் கொதி நரகுக்(கு) உய்த்திடுமோ?-ஆயுங்கால்
என்னே! இயற்கை எழுப்புவன அவ் இயற்கை-
முன்னோற்குக் குற்றம் ஆமோ?

What conscience dictates to be done,
Or warns me not to do,
This, teach me more than Hell to shun,
That, more than Heav'n pursue (5)

"செய்க என என்நெஞ்சம் செப்புவன,'முத்தியினும்
உய்கதிஈ(து)' என்னும் உணர்வுறுத்தும்—"செய்த
லொழி"
என்னு(ம்)அதன் எச்சரிக்கை, எற்காக்கும் கும்பி
வன் னெறியிற் செல்லா வகை. [யிற்புன்.

What blessings Thy free bounty gives,
Let me not cast away;
For, God is paid when man receives:
To enjoy is to obey. (6)

நல்ல உதாரன் நீ நல்கு நலங்களையான்
அவ்வழியிற் போக்கா தருளுவாய்—சொல்லுங்கால்
ஈசனுக்குச் செய்கைம்மா(று) ஈந்த அவன் ஏவியவா
ஆசறவே துய்த்திடுதலாம். [(று)

Yet not to earth's contracted span
Thy goodness led me bound,
Or think Thee Lord alone of man,
When thousand worlds are round. (7)

வாய்ந்தசாண் மண்ணுலகில் மட்டுமின்றி யான்செல்
[லப்
போந்துழி எல் லாந்துணையாப் போந்தருள்வாய்—
[சூழ்ந்த உல(கு)
எண்ணுயிரயால், 'நீ ஈசன் நரர்க்கே' என்(று)
எண்ணு திருந்திடுக யான்.

Let not this weak unknowing hand
Presume Thy bolts to throw,
And deal damnation round the land,
On each I Judge Thy foe. (8)

வன்பும் பகுத்தறிவும் வாயாஎன் புன்கையால்
உன்பே ரிடிவீழ்த்த உன்னுதும் 'நின்பகைவர்'
என்னையான் நிர்க்கும் இடந்தொறு(ம்) 'நீர் மூலமுற'
என்னுதும் யான் இருக்க வே.

If I am right, Thy grace impart,
Still in the right to stay;
If I am wrong, Oh! teach my heart
To find that better way (9)

நன்னெறியி லேநான் நடப்பேனேல் என்று(ம்)எனை
அந்நெறியே நிற்க அருளுவாய்—வன்னெறிக்கண்
நான் நடப்பேனுயின், அந் நன்னெறிகாண் பான்சிந் [தைக்
கான அறிவுறுத்து வாய்.

Save me alike from foolish pride,
Or impious discontent,
At aught Thy wisdom has denied,
Or aught Thy goodness lent. (10)

நற்குணத்தின் நீ நல்கு நன்மைஎணிப் பேய்ச்செருக் [கே
உற்றிடா வண்ண(ம்)எனை ஓம்புவாய்—முற்றுணர் நீ
தாராத துன்னித் தகவில் மனக்குறைவும்
வாராதெற் காத்தருளு வாய்.

Teach me to feel another's woe,
To hide the fault I see;
That mercy I to others show,
That mercy show to me. (11)

பிறர்துயரம் யான் உணரும் பெற்றியும், காணும்
சிறுமை புறங்காக்கும் திறனும்,—உற உணர்த்தி,
யான் எவர்க்கும் காட்டுகின்ற இன்னருளோ நீ ஏழை
யேன் எனக்குக் காட்டியருளே.

Mean though I am, not wholly so,
Since quickened by Thy breath;
Oh! lead me wheresoe'er I go,
Through this day's life or death. (12)

ஈனனே யான் எனினும் எற்(கு)ஆவி ஈந்தவன் நீ
ஆனதின் ஈனன் முற்றும் ஆகேன்யான்—யான் [நுகரும்
இன்றுறுவாழ் விற்சாவில், யான்செல் இடந்தோறும்
மன்ற வழி காட்டியருள் வந்து.

This day, be bread and peace my lot
All else beneath the Sun,
Thow Know'st if best bestowed or not;
And let Thy will be done. (13)

உச்சி வனமும் உளத்தெளிவும் இன்றெனக்கு
வைச்சிடுக: ஆதவன்கீழ் வாய்ந்துள்ள-மிச்ச(ம்) நனி
நல்கினும், நல் காய் எனினும் நான்வேண்டுவ அறிவை
செல்லுகநின் சித்தத் திறம்.

To Thee, whose temple is all space,
Whose altar, earth, sea, skies,
One chorus let all being raise;
All nature's incense rise! (14)

எண்ணுமிடம் எல்லாம் எழில் ஆ லயமாக,
விண்மண்ணை வேலையினை வேதிகையாய்-நண்ணு(ம்) [உனக்(கு)
எவ்வுயிரும் பல்லாண்(டு) இசைக்க; எழ இயற்கைத்
திவ்யநறுந் தூபத்திரள்.

* [இது ஆங்கில கவியாகிய அலெக்ஸாண்டர் போப் என்பவர் இயற்றிய "The Uiniversal Prayer" என்பதன் தமிழ் மொழிபெயர்ப்பு. "Alexander Pope" என்பதற்குப் பதிலாக, இவ்வருடத்திய ஸ்கூல் பைனல் பாட புத்தகத்தில் "Joseph Addison" என்று கண்டிருக்கிறது. இது தவறு என்பதை மாணவர்கள் நன்கு கவனிக்க.]

1. [காசினி=பூமி; சுயம்பு=Jehovah=Self-born; சம்பு=Giver of happiness=Jove.;] 2. [போதம்=அறிவு; எற்கு=எனக்கு; புந்தி=புத்தி.]; 3. [நல்கினுய்=கொடுத்தருளினுய்.]; 4. [ஆற்றிய=செய்த; உய்த்திடு=செலுத்து; இயற்கை=முன்னேற்கு=இயற்கை முதல்வனுகிய ஒரு பெருங் கடவுளுக்கு]; 5. [எற் காக்கும்=என்னைக் காக்கும்; தும்பியின்=நரகத்திலும்; வன்னெறி=பாப வழி]; 6. [நல்கு=கொடுத்தருளிய; ஈந்த=அவன் அருளியவற்றை; ஆசு அற=குற்றமற: நேரிய வழியில்; துய்த்திடுதல்=அநுபவித்தல்.]; 7. [போந்துழி=புகுமிடம்: போகுமிடம்; எண் ஆயிரமால்=நிலைக்கத்தக்க ஆயிரக் கணக்கானவைகளாதலின். 8. வன்பு=வலிமை: வாயா=பெற்றிராத; உன்னுதும்=எண்ணுமலும்; பகைஊர்=பகைவர்கள் வாழும் ஊர்; தீர்க்கும்=தீர்மானம் செய்யும்] 10. [எணி=எண்ணி; ஓம்பு=காத்தருள்; 'உன்னி=எண்ணி; தகவு இல்=தகாத; பக்தியினமான; எற்காத்து=என்னைக் காத்து.] 11. பெற்றி=தன்மை; புறங்காக்கும்=மறைக்கும்; உற உணர்த்தி=அடையும்படி அறிவு அளிப்பாயாக;] 12. [நுகரும்=அநுபவிக்கும்; மன்ற=நிச்சயமாக (அசையும் ஆம்).] 13. [உச்சிவனம்=வயிற்றுப் பிழைப்புக்கானவை; வைச்சிடுக=வைத்திடுக; ஆதவன்=சூரியன்;] 14. [ஆலயமாக=கோவிலாகவும், வேலை=சமுத்திரம்; வேதிகையா=பலிபீடமாகவும்; நண்ணும்=கொண்டு.]

சப்பாணிக்கு நொண்டி சண்டப் பிரசண்டம்.

வாலிபச் சாரணன்

THE BOY SCOUT

(தி. சி. இராமஸ்வாமி ஐயர், பி. ஏ., எல். டி.)

இதுவரையில் வாலிபச் சாரணனாக ஒரு சிறுவன் கற்கவேண்டிய விஷயங்களைப்பற்றிக் கூறிவந்தோம். இனி வாலிபச் சாரணனாக ஒருவன் தெரிந்தெடுக்கப்பட்டபின், செய்ய வேண்டிய காரியங்களையும், அவற்றைச் செய்யும் முறைகளையும் குறிப்பிடுவோம்.

சாரணத்தலைவர், வாலிபச் சாரணர்களாக விரும்பும் சிறுவர்களை ஒன்று சேர்த்த பிறகு, 'மெல்லிய பாதம்' அறிய வேண்டியவைகளைச் சரிவரத் தெரிவித்து, அவைகளைச் சிறுவர்கள் அறிகிறார்களா என்பதைக் கவனிக்கவேண்டும். பிறகு அவர்களை ஏழு அல்லது எட்டு பெயர்களாகச் சேர்த்து, அவர்களில் ஒருவனைத் அவ்வெட்டுப் பெயர்கள் சேர்ந்த பிரிவுக்குத் தலைவனாக ஏற்படுத்தவேண்டும். அவர்களில் மற்றொருவனைச், சிறுவர்களுடைய சம்மதத்தின் பேரில் தலைவனுக்கு உதவியாக ஏற்படுத்த வேண்டும். இவ்விதம் ஏற்படும் பிரிவிற்கு சாரணர் கூட்டம், அல்லது 'பெட்ரோல்' (Patrol) எனப் பெயராம். அக் 'குழாம்' என்பதின் தலைவனுக்கு 'கூட்டத் தலைவன்' எனவும், அவனுக்கு உதவியாயிருப்பவனுக்கு 'இரண்டாமவன்' (Second) எனவும் பெயர்களாம்.

இவ்விதம் நாலைந்து கூட்டங்கள் சேர்ந்தால் அது ஓர் படையாகும். அதற்குத் தலைவரே 'சாரணத் தலைவர்'. அவருடைய பார்வையின்கீழ், பயிற்சி பெற்ற கூட்டத் தலைவன், தன் கூட்டத்திலுள்ள சாரணர்களுக்குத் தகுந்த பயிற்சி தரல் வேண்டும். ஆகவே கூட்டத்தலைவன் சில விஷயங்களில் தகுந்த ஞானமும் பயிற்சியுமுள்ளவனாயிருத்தல்வேண்டும் எனவாயிற்று. இவைகளை விரிவாகப் பின் கூறுவோம்.

ஒவ்வோர் சாரணக் கூட்டத்திற்கும் ஓர் சங்கம் ஏற்படுத்தப் பெற்றிருக்கிறது. அச்சங்கம் கூடும்போது, ஒவ்வொரு சாரணனும், தான் சொல்லவேண்டியவைகளைச் சிறிதும் பயமின்றிக் கூறுவான். தன் கூட்டத்தினர் செய்ய வேண்டிய காரியங்களைப்பற்றி மற்ற வாலிபச் சாரணர்களுடன் சேர்ந்து யோசித்து, அவைகள் ஓர்புத்தகத்தில் எழுதிவைக்கப்படுகின்றன.

கூட்டத்தலைவர்களும், இரண்டவர்களும் சேர்ந்து 'ஸத்ய ஸபை' யாவர். இவர்கள் எல்லோரும் சாரணப்படையைப்பற்றின விஷயங்களை யோசிப்பர். தமக்குத் தோன்றும் எண்ணங்களை ஒவ்வொருவனாகத் தெரிவித்துக் கொள்வதற்கு இதுதான் தகுந்த இடம்.

சிறுவர்கள் தம்மைப்பற்றின விஷயங்களைத் தாமே யோசித்துச் செய்யக் கற்றுக்கொள்ள வேண்டியது அவசியமாதலின், அவர்களே ஒன்றுகூடி யோசிக்க விடவேண்டியது பெரியவர்களின் கடமையாகும்.

சிறுவர்கள் இம்மாதிரி யோசனை செய்யவும் தீர்மானிக்கவும் சுயேச்சையின்படி நடக்கவிடவும் இடங்கொடுப்பது சரியா என்று சிலர் சந்தேகிக்கலாம். இச்சந்தேகத்தைத் தீர்ப்பதற்கு சாரணச்சங்கமேற்பட்டதின் முக்கிய நோக்கத்தையே இங்கு கூறலாம். சிறுவர்கள் இளம் வயது முதற்கொண்டே ஆழ்ந்து யோசிக்கவும், தீர்மானித்துக் காரியங்களை நடத்தவும் திறமை கொள்ளவே, வாலிபச் சாரணச் சங்கம் ஏற்பட்டிருக்கின்றது. ஆகவே சிறுவர்கள் தமக்குள்ளேயே ஒரு விஷயத்தைப்பற்றி யோசிப்பது, அவர்களுக்கு நன்மையே பயக்கும். அவர்களுடைய தீர்மானங்கள் சாரணத்தலைவரால் அங்கிகரிக்கப்பட வேண்டியிருப்பதால், சீர்கேடானவழிகளில் செல்வதற்கு வழியில்லை. பெரியவர்களை விட, சிறுவர்களுக்கே தங்களைச் சேர்ந்த விஷயங்களில் அறிவும், அனுபோகமும் இருக்கின்றன. ஒருசிறுவனுக்கு மற்றொரு சிறுவனுடைய குணம், நன்கு தெரியுமாதலின், தங்களுக்குள் ஏற்படும் சண்டை சச்சரவுகளைத் தீர்க்க சரியான வழி ஏற்படும். 'இது யோக்கியன் செயல்', 'இது கெட்டவழி' என்பதும் அவர்களுக்கு உண்டு. ஆகையால் 'ஸத்திய ஸபை'யும் 'சிறுபிரிவுச் சபை'யும் சிறுவர்களுக்கு நன்மையே விளைவிக்கும்.

மேற்கூறிய சபையில் 'சத்தியசபை' கவனிக்கும் விஷயங்களைக் கவனிப்போமாயின், சாரணர்களின் அதிகார மேதாரணை எவ்வளவு செல்வாக் குடையது என்பது வெளிவரும். சாரண நீதிக்கு விரோதமாய் நடப்பவர்களை சங்கத்திலிருந்து நீக்குதல்; தமக்குள் ஏற்படும் ஸந்தேகங்களைத் தீர்த்துக்கொள்ளல்; பொது ஜன நன்மைக்காக உழைப்பதற்குத் தகுந்த ஏற்பாடுகளைச் செய்தல்; சாரண சங்

சமயம் வாய்த்தால், நமனையும் பலகாரம் செய்வான்.

கத்தின் பெயரை விளக்க முன்வந்தவர்களுக்கு மரியாதைசெய்தல்; தமக்குள் உண்டாகும் செலவு முதலியவைகளைப் பங்கிட்டுக் கொள்ளல்; சாரணர்களை பயிற்சி செய்வதில் ஏற்படும் கஷ்டங்களையும் அவைகளை நீக்குவதற்குத் தகுந்த வழிகளையும்பற்றி ஆலோசித்தல் முதலியனவாம்.

வாலிபச் சாரணர்கள், பெரியவர்களான பிறரு, பலருடன் சேர்ந்து, பலருக்கும் நன்மை விளைப்பதற்கான விஷயங்களைப்பற்றி ஆலோசிக்க வேண்டியது மிகவும் அவசியமாதலால், அவர்களுக்குத் தகுந்த பயிற்சி இச்சங்கத்தினாலும், அதனால் நேரிடும் கூட்டுறவினாலும் ஏற்படுமென்பதற்கு ஐயமில்லை.

நமது சிறு கதை

OUR SHORT STORY

ஸர் ரவீந்திரநாத் டாகூரின் சிறு கதைகள்

[ஸ்ரீமான் ஆர். ராஜசூடாமணி மொழிபெயர்த்தது.]

I. போஸ்ட் மாஸ்டர் *

போஸ்ட் மாஸ்டர், முதன் முதலாகத் தன் வேலையை உலாபுரத்தில் ஒப்புக்கொண்டான். அந்த ஊர் மிகச் சிறியதாக விருந்தது. பண்டசாலையின் வெள்ளைக்கார முதலாளி, மிகவும் சிரமப்பட்டு அங்கு ஓர் தபாலாபீஸ் ஏற்படும்படிச் செய்தான்.

நமது போஸ்ட் மாஸ்டர் கல்கத்தாவைச் சேர்ந்தவன். கல்கத்தாவிலிருந்து வெகு தூரத்திற்கப்பா லிருக்கும் இச்சிறு கிராமத்தில், அவன் நீரிலிருந்து வெளிவந்த மீன் எப்பாடு படுமோ அப்பாடு பட்டான். நாற்புறமும் அடர்ந்த சோலைகள் சூழ்ந்து பசும்புல் படர்ந்த கரையை உடைய ஓர் சேற்றுக்குட்டைக் கருகாமையில் இருண்ட கொட்டகையில் அவனுடைய ஆபீஸும் வீடும் இருந்தன.

அவுரிப் பண்டசாலையில் வேலை பார்த்து வந்த வேலையாட்களுக்கு ஓய்வு சமயம் சற்றுமே கிடையாது. மேலும், அவர்கள் யோக்கியர்களால் உறவாட விரும்புவதற்கே ஏற்றவர்கள் அல்லர். அன்றியும், கல்கத்தாவைச் சார்ந்த ஓர் சிறுவன் பிறருடன் உறவாடுவதில் சமர்த்தனுமல்லன். அவன் அன்னியரின் முன், அதிக கர்வம் பாராட்டுவான், அல்லது வெட்கத்தினால் வருந்துவான்; யாதாயினும் சரி; போஸ்ட்மாஸ்டருக்கு நண்பர்களே கிடையாது. அவனுக்கு அவர்களிடத்தில் ஒருவித அலுவலும் இல்லை.

நமது போஸ்ட் மாஸ்டருக்குச் சில சமயங்களில் கவிபாடப் பெரிய அவா ஏற்பட்டுவிடும். இலைகளின் சலனமும், வானத்தின் மேகக் கூட்டங்களின் சஞ்சாரமும், அவனுடைய வாழ்விற்கு இன்பமளிக்கப் போதுமானவையாக விருந்தன. அவ்விதக் கருத்துக்களையே அவன் தன் கவிதைகளில் அமைக்க முயலுவான். ஆனால் அராபிக் கதைகளில் தோன்றும் பூதங்களில் ஒன்று தோன்றி, அங்குள்ள மரங்களையும் இலைகளையும் எல்லாவற்றையும் அகற்றி அவற்றிற்குப்பதிலாக வளைந்துதிரியும் பாதைகளையும், அவற்றை மறைக்கும் வண்ணம் இரு பக்கங்களிலும் சாகோபசாகைகளுடைய விருக்ஷங்களையும் மேகமண்டலம் தோன்றாதபடி ஆகாயமளாவிய வீடுகளையும் ஓர் இரவிற்குள் அமைக்குமாகில், அதன் செய்கையை, அவன் தனக்கென்று ஏற்பட்ட ஓர் புதிய ஜீவிதத்தின் அனுக்கிரகம் என்று கருதாமல் இருப்பானோ என்பது கடவுளுக்குத்தான் தெரியும்.

போஸ்ட் மாஸ்டருக்கோ சொற்பச் சம்பளம். ஆதலால் தினமும் அவன் தனக்குத் தேவையான போஜனபதார்த்தங்களைத் தானே சமைக்கவேண்டியதாக இருந்தது. தான் உண்டபிறகு மீதி யிருப்பவற்றை தனக்குச் சிற்றேவல் புரிபவளும் அனாதையுமாகிய ரத்தினத்திற்கு இடுவான்.

சுற்றுப்பக்கங்களிலுள்ள ஆயர்பாடியினின்று புகை சுழன்றெழும் நேரத்தில், புதர்கள்தோறும் சில வண்டுகள் ரீச்சிடும்

---

* போஸ்ட் மாஸ்டர் என்ற பதம் எல்லோருக்கும் தெரிந்ததானபடியினால், அந்த இங்கிலீஷ் பதத்தை தமிழ்ப்படுத்தாமல் அப்படியே உபயோகிக்கப் பட்டது.

சமர்த்தி என்ன பெற்றாள், சட்டிச் சோறு தின்னப் பெற்றாள்.

வேளையில்—நேபாள தேசத்து ஆண்டிகள் பகலெல்லாம் பிச்சை புகுந்து ஓரிடத்தில் சந்தித்து உச்சஸ்தாயியில் பாடுங்காலத்தில்—அடர்ந்த மூங்கிற் காட்டில் இலை அசைவதைப் பார்க்கத் தலைப்பட்ட கவிவாணனுக்கு இருள் குவியும் என்ற பயம் ஏற்படும் வேளையில், மாலை நேரத்தில் போஸ்ட் மாஸ்டர் சிறு தீபத்தை ஏற்றிக்கொண்டு, "ரத்னம்! ரத்னம்!" என்று அழைப்பான்.

இந்த ஏவலை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்ரத்தினம்.அந்த க்ஷணமே உள்ளே வராது "அண்ணா, நீங்கள் என்னை அழைத்தீர்களா?" என்று கேட்பாள்.

"நீ என்ன செய்கிறாய்!" என்று போஸ்ட் மாஸ்டர் கேட்பான்.

"அடுப்பு மூட்டப் போகிறேன்" என்பாள்.

"ஓ, பரவாயில்லை. மெள்ள அடுப்பு மூட்டலாம்; என்னுடைய சுருட்டுப்பையையும் நெருப்பையும் எடுத்துவா."

ரத்தினம், சுருட்டுக் கொளுத்துவதற்காக நெருப்பை எடுத்துக்சொண்டு அதைக் கன்னம் வீங்க 'பூ' என்று விரைவாக ஊதிக் கொண்டு மெள்ள நடந்து போஸ்ட் மாஸ்டர் இருக்கும் அறைக்குள் நுழைவாள். இது நல்ல உபாயம். அவனுக்கு அவளுடன் ஸம்பாஷிப்பதற்கு நல்ல தருணம் வாய்க்கிறதல்லவா?

"ரத்னம் உனக்கு உன் தாயார் நினைவிருக்கிறதோ" என்று பேச ஆரம்பிப்பான். வெகு நேரம் பேசுவதற்கு அது ஓர் நல்லவிஷயமே. ரத்தினத்திற்கோ பாதி ஞாபகத்திலும், பாதி மறந்து மிருந்தது. அவளுடைய தந்தை, தாயினும் மிக்க அன்பு பாராட்டினமையால், அவனைப்பற்றிய ஞாபகந்தான் அவளுக்கு அதிமாக இருந்தது. அவன் தினமும் பகலெல்லாம் வேலை செய்துவிட்டுச் சாயங்காலம் விடு வந்து சேருவான். அப்படிப்பட்ட சாயந்திரங்களில் ஒன்றிரண்டு அவளுடைய ஞாபகத்தில் எழுது சித்திரங்கள்போல நன்றாய் அழுந்திக் கிடந்தன. அந்த ஞாபகங்கள் மனதிற் சுழ ்றெழும்போது அவள் போஸ்ட் மாஸ்டரின் காற்பக்கத்தில் உட்கார்ந்து கொள்ளுவாள். ஒரு நாள் வானத்தில் சூல்கொண்ட கரு மேகம் பரவிக் கிடந்தபொழுது, தன் கையில் ஓர் பொய்த் தூண்டிற் கோலை வைத்துக் கொண்டு குளத்திற் கருகாமையில் இருந்து, மீன் பிடிக்கும் பாவனையாக விளையாடிய அவளுடைய தம்பியின் ஞாபகம் அவள் மனதில் பிறந்தது. இவ்விதச் சின்னஞ்சிறு சம்பவங்கள் அவளுடைய மனதினின்று பெரிய சம்பவங்களைத் துரத்திவிடும். இங்ஙனம் அவ்விருவரும் வெகு நேரமட்டும் பேசிக்கொண்டிருப்பார்கள். வெகு நேரமாகி விடும்; போஸ்ட் மாஸ்டருக்கு அதிகச் சோம்பல் ஏற்பட்டுவிடும்; ஆதலால் சமையல் செய்ய விருப்பமற்றவனாகிவிடுவான். ரத்தினம் அவசர அவசரமாக அடுப்பை மூட்டிப் புளியாத தோசை சுட்டுவைப்பாள். மத்தியானம் சமைத்து மீந்திருந்தகறிகளுடன் அதை வைத்துக்கொண்டு இருவரும் போஜனம் செய்வார்கள். அது அவர்களுக்கு அதிக திருப்தியாக விருக்கும்.

அநேக நாட்களில் சாயங்காலவேளையில் குடிசையில் ஒருமூலையிலிருக்கும் மேசைக்கருகாமையில் ஓர் முக்காலிமீது உட்கார்ந்து கொண்டு இவ்வனவாஸத்தினால் விட்டுப் பிரியும்படி ஏற்பட்ட அன்பார்ந்த தாயையும், சகோதர சகோதரிகளையும், தனது இளமைப் பருவம் முதற்கொண்டு நடந்த பல சம்பவங்களையும், பண்டசாலையில் வேலைசெய்பவர்களுடன் பேசி ஆனந்திப்பதற்கு ஏற்றதல்லவாகையால் தன்முன் உட்கார்ந்து கொண்டிருக்கும் எளிய இளங் கன்னியைப்பார்த்து, ஒவ்வொரு விஷயத்தையும் ஞாபகப்படுத்திக்கொண்டு ஸம்பாஷித்திருப்பான். இங்ஙனம் பலபொழுதும் அவனுடைய வீட்டாரைக் குறித்து விரிவாகக் கேட்க நேரிட்டதால், ரத்தினம் அவனுடைய தாயார் சகோதரி சகோதரர்களைத் தனதாகப் பாவித்து,முறையிட்டு அழைத்து அவர்களைப்பற்றிய ஒவ்வொரு விஷயத்தையும், தான் அவர்களுடன் நெடுநாள் பழகி அறிந்தவள்போல் தன் ஞாபகத்தில் பதித்து வைத்துக்கொண்டாள்.

ஒரு நாள் மத்தியானம், ஓயாமல் பெய்த மழை சற்று நின்றிருந்தபொழுது, சீத மென் காற்று வீசிக்கொண்டிருந்தது. பகலோனது தாபத்தில், நனைந்த புல்லிலும் இலைகளிலும் இருந்து உண்டான சுவாசம், களைப்பு மிகுந்த பூமிதேவியின் மென்மையான சுவாசம்போல் உடலைத் தாக்கியது. இயற்கையென்னும் ஸபா மண்டபத்தில் மற்றப்பறவைகள் எல்லாம் தங்களிடங்களில் மறைந்தும்,ஒரு பறவைமட்டும்,

பிடிவாதமாக, மத்தியானத்திலிருந்து நாம் தன்னம் தனிமையாகவிருக்கிறோமே என்ற ஓர்குறையை முறையிட்டுக் கொண்டிருந்தது

போஸ்ட் மாஸ்டருக்கு அலுவல் ஒன்றும் இல்லை. அன்று, நீராடிக் கம்பிதமாகத் துலங்கும் இலைகளும், எல்லைகாட்டி நின்று பின்னேக்கி மறையும் மேகத்தின் சேஷமும்*பார்த்துக் களிப்பதற்குள்ள காட்சிகளாக விளங்கின. போஸ்ட் மாஸ்டர் அவற்றை நோக்கிக்கொண்டே தனக்குள் சிந்திக்கலானன்: "ஆ! என் உள் அந்தரங்கங்களை வெளியிட்டு உள்ளத்தோடு தழுவுவதற்கு ஓர்மனுஷசரீரி, ஓர் ஆப்த மித்ரம்......என்ன ஆனந்தம்!" ஓயாமற் கூவிக்கொண்டிருந்த பறவை சொல்ல முயன்றதும், முணுமுணுத்த இலைகள் தெரிவிக்கச் சிரமப்பட்ட விஷயமும் அதுவே என்று எண்ணலானன். ஆனல் சொல்ப சம்பளமுடைய அந்த போஸ்ட் மாஸ்டருக்கு மத்தியகாலஒய்வு சமயத்தில், எல்லாம் நிச்சப்தமாக விருக்கும் மத்தியான வேளையில், அவ்வித ஓர் எண்ணம் எழும் என்று ஒருவரும் அறியார்கள்; அல்லது நம்பமாட்டார்கள்.

போஸ்ட் மாஸ்டர் பெரு மூச்செறிந்து "ரத்னம்!" என்று அழைத்தான். அப்பொழுது ரத்தினம் கொய்யாமரத்தடியில் படுத்துக் கொண்டு அவஸரஅவஸரமாக கொய்யாக்காய் தின்றுகொண்டிருந்தாள். அவள் யஜமானன் குரல் கேட்டதும், மூச்சற ஓடிச்சென்று அவனிடம் "அண்ணு நீங்கள் என்னை அழைத்தீர்களா?" என்று கேட்டாள்.

போஸ்ட் மாஸ்டர் "ஆமாம்; உனக்கு வாசிக்கக் கற்றுக்கொடுத்தால் நன்றாயிருக்கும் என்று நினைத்தேன்" என்று சொன்னன். பிறகு மத்தியானம் பூராவும் அவன் அவளுக்கு அக்ஷராப்யாஸம் செய்துவைத்துக் கொண்டிருந்தான்.

இவ்வாறு வெகு சீக்கிரமாக ரத்தினம் ஸம்யுக்தாக்ஷரம் மட்டும் கற்றுக்கொண்டாள்.

(இக்கதை அடுத்த சஞ்சிகையில் முடிவுபெறும்.)

* மேகத்தின் சேஷமும் மழைபெய்தபிறகு மிகுந்திருக்கும் மேகக்கூட்டங்கள் மெள்ள மறைந்தும் மறைவதற்கு பாக்கியாகக் கிடந்த மேகம்.

வஸந்த மந்திரம்

ஒன்பதாம் அத்தியாயம்

நரேந்திரன் பிரயாணம்

அஹோரபுரத்துக் கோட்டையி னின்றும் தப்பியோடியவர் லலிதையும், புஷ்பவல்லியும், சுலோசனனும் ஆகிய மூவருமே. அவர்கள் 15 மைலுக்கு அப்பால் காளியம்மன் பூஞ்சோலையில் நரேந்திரனைச் சந்திப்பதாகப் பேசி யிருந்தனர். அவ்வாறு சந்தித்தவுடன் பிரயாணம் விரைவாய்ச் செய்யும்பொருட்டு நரேந்திரன் அவர்களுக்குக் குதிரைகளைச் சம்பாதித்துக் கொடுப்பதாகச் சொல்லியிருந்தான். அதற்காக முன்னமேயே சித்திரக்கிரீவனை ஒரு கிராமத்துக்கு அனுப்பினன். பூஞ்சோலை சேரும் வரையில் எல்லாக் காரியங்களும் எண்ணிய படியே நடந்தன. அங்கு சேர்ந்தவுடன் மூவரும் நீர் அருந்தி, உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்கும்போதுதான் பாக்ஷாவின் ஒற்றன் இவர்களைக் கண்டுபிடித்தான். அவன் அடிபட்டுமூர்ச்சையாய்விழுந்தவுடன், அவன்இறந்தானென்று எண்ணிக்கொண்டு அம்மூவரும் மறுபடி புறப்பட்டுவிட்டனர். பிணத்தின் அருகே இருப்பதற்கு இரண்டு இராஜபுத்திரிகளுக்கும் அருவருப்பு; சுலோசனனுக்கோ இன்னும்யாராவது வீரர்கள் அவ்வழியே வருவார்களோ என்ற பயம். ஆகையால் சுகுணபுரத்தை நோக்கியே புறப்பட்டுவிட்டனர்.

நரேந்திரனும் 5, 6 நாழிகை நித்திரை செய்தபின் எழுந்து காளியம்மன் பூஞ்சோலைக்கு ஓட்டமாய் ஓடிவந்தான்: வந்தவிடத்தில் ஒற்றன் மூர்ச்சையாய் இருப்பதைக்கண்டு ஜீவகாருண்யம் மேலிட அவனை மூர்ச்சை தெளிவித்தான். கண்விழித்த வீரன், ஆலியாகிய நரேந்திரனைக்கண்டு சந்தோஷித்து, நடந்த வர்த்தமானங்களை யெல்லாம் சொன்னன். நரேந்திரனுக்கு இடி விழுந்தது போலாயிற்று. பின் வருமாறு யோசிப்பானாயினன்:—"இவன் இறந்திருப்பின் சங்கதியே வெளிவராது. சுல்தானும் லலிதை இறந்தாள் என்றே எண்ணவும் கூடும். சீ! சீ! இது என்ன பயித்தியக்கார எண்ணம்; பிழைத்திருப்பவர் இன்னரென்று ஏதோ ஒரு நாள் சுல்தான் அறிந்தே தீருவான். ஆகையால் இவன் இறந்தால் என்ன? இருந்தால் என்ன? இவனே சுல்தானுக்கு சங்கதி தெரிவித்தால்

சருகு எரிக்க நேரம் அன்றி, குளிர்காய நேரம் இல்லை.

என்ன? எங்கே போகிறார்கள் என்று கூடத் தெரியுமோ இவனுக்கு?" என்று எண்ணி அவனை நோக்கி, "அப்பயல்கள் எங்கே போகிறார்கள். நான் பிடித்து வருகிறேன் அவர்களை. எந்த ஊருக்குப் போகிறார்கள்?" என்று கேட்டான்.

வீரன் "அதுதானே தெரியவில்லை.—" என, நரேந்திரன் தன் மனத்துள் "நல்லது அது தெரியவில்லையே; பார்த்துக்கொள்வோம். நாம் போகுமிடம் கண்டுபிடிப்பதும் சற்றுக் கஷ்டமேதான். இந்த முடவன் அஹோராத்துக்குப் போய்ச் சேர்ந்தபோது பார்த்துக் கொள்வோம். அதற்குள் சண்டை நடந்து முடிந்துவிடும். நான் அவர்களைத் தொடர்ந்து போவதே நல்லது" என்று வீரனுக்கு நல்ல வார்த்தை சொல்லி ஆள்களை அனுப்புவதாக வாக்களித்து அப்பால் புறப்பட்டான்.

விடியற்கால வேளையில் அடிச்சுவடுகளாவது தென்படுகின்றனவா? சந்தோஷமின்றி உற்சாகமிழந்து, எவ்வழிச் செல்வதென்று நிச்சயமில்லாமல், தெய்வத்தை நம்பி சுகுணபுரத்திற்குச் செல்லும் சாலையில் விரைவாய் நடந்து சென்றான். சித்திரக்கிரீவன் வழியில் அவர்களைச் சந்திக்கலாம் அல்லவா என்று மட்டும் அடிக்கடி எண்ணினான்.

பொழுதுவிடிய இன்னும் இரண்டு நாழிகை இருக்கலாம்: சுக்கிரன் உதயமாயிற்று. சலிக்காமல் வழிநடக்கும் நரேந்திரன் "இந்த வேஷத்துடன் நான் இந்த ஊர்களில் வழி நடக்க வேண்டுமோ? நன்று! நன்று! எனக்குப் பயித்தியம் பிடிக்கும்போல் இருக்கின்றதே: வேஷத்தைக் கலைக்கின்றேன்" என்று தன் துருக்க வேஷத்தைக் களைந்து "ஆலி என்ற பேரும் அவ்வாலியின் ஆடைகளும் இவ்வருவியோடு போகட்டும்" என்று பக்கத்தில் செல்லும் வாய்க்காலில் வீசியெறிந்துவிட்டு, குடியானச் சிறுவன்போல் கையில் தடிபிடித்து வழி நடந்தான். அரைமைல் தூரத்துக்கப்பால் ஒரு கிராமம் இருந்தது. அதில் நுழைய எண்ணி சத்திரத்து வாசலுக்குச் சென்றான். அக்கிராமத்திலிருந்துதான் குதிரைகளை வாங்கிக்கொண்டு, லலிதாதேவியைச் சுகுணபுரத்துக்கு அழைத்துச் செல்ல எண்ணியிருந்தான். மேலும் அந்தக் கிராமத்தில் நரேந்திரனுக்குச் சிநேகமான குடியானவன் ஒருவனுண்டு. அவன் சிறந்த புத்திசாலி. அவனையே அவ்வூரில் வேவுகாரனாய் இருந்து, புதிதாய் வருகிறவர்களை அறிந்து அடிக்கடி சங்கதி தெரியப்படுத்தும்படி ஏற்படுத்தியிருந்தான். அவன் பேர் சடையப்பன்.

இப்பொழுதோ லலிதாதேவி இருக்குமிடமே தெரியவில்லை. குதிரைகளுக்குப் பிரயத்தனம் செய்து என்ன பயன்! ஆகையால் ஒன்றும் தோன்றாமல் சத்திரத்துத் திண்ணையின் பேரில் உட்கார்ந்தான். இதை தூரத்துத் திண்ணையிலிருந்து பார்த்திருந்த ஒரு குடியானவன் ஓடிவந்து "அப்பே! அப்பே! நீ யாரப்பே?" என்றான். "உனக்காக வேண்டியது என்ன"

"இல்லே சாமி எங்கண்ணன் சொல்லிச்சு: யாரோ ஒரு சாமி வாராங்கோ அவங்களுக்குக் குதிரை கொடுக்கணுமா—முன்னே மூணு குதிரை வாங்கிட்டாங்கோ—"

"யார் உன் அண்ணன் சடையப்பனோ?" என்று கேட்டான்.

"ஆமப்பே! உனக்குத் தெரியராப்பவிருக்குதே! இன்னொருசாமி வரல்லையா?"

"யார் வாங்கிக் கொண்டார்கள் குதிரைகளை?" என்று கேட்டான், குடியானவன் கேள்விக்குப் பதில் சொல்லாமல்.

"அதென்னமோ நேக்குத் தெரியாதப்பா; வேவு போச்சு எங்கண்ணன். நேத்து ராத்திரி யாரோ வந்தாங்கோ: குதிரை கேட்டாங்கோ"

"உன் அண்ணன் எங்கே இப்பொழுது?"

"அவர்களுடன் போயிருக்கிறான்."

"உன்னிடம் என்ன சொன்னான்?"

"ஒரு சாமி வருகிறது: நம்ம ஊரு தெரியும்: விசாரிப்பாங்கோ: குதிரை கேட்டால் கொடு? என்னாங்கோ: அம்மட்டுத்தான்.

"சரி குதிரை கொண்டுவா, தாமதம் செய்யாதே: குதிரை எனக்குத்தான். கால வித்தியாசத்தால் நான் குடியானவனைப்போல் வேஷம் பூண்டுவர நேர்ந்தது. பொழுது விடிவதற்குள் இந்த ஊரைவிட்டு அகலவேண்டும் நான். எனக்காகவே குதிரையை ஏற்படுத்திப் போயினர் உனது தமையன். இதோ நான் ஆடைகளை அணிவதற்குள் ஓடிவா குதிரையுடன். விடிந்துபோனால் இந்தப் பட்டிக்காட்டில் குழந்தைகளும் பெண்டிர்களும் காணாதது கண்டதுபோல் என்னைச் சுற்றிக்கொள்வார்கள்" என்றான்

"சுவாமி! சுவாமி, குடியானப்பிள்ளையின்

னுட்டல்லவா நான் பேசிட்டேன்—மன்னிக்கணும்—"

"சரி போ—அப்பா, கொண்டுவா குதிரையை" என்முன்.

குதிரை வந்தவுடன் அதின்மேலேறி வெகு வேகமாய்த் துரத்திக்கொண்டு சென்முன். கிழக்கே செவ்வானம் பரவிற்று. உழவர்கள் மாடுகளை ஓட்டிக்கொண்டு தோளில் கலப்பைகளுடன் வழியில் செல்லுகின்றனர். குடிசைகளில் குடியானப் பெண்கள் "சர்சர்" என்று தயிர் கடைகின்றனர். பரிகங்களைத் தலையிலே கவிழ்த்துக்கொண்டு பறையர்களும் சக்கிலிகளும் வயல்களுக்குத் தண்ணீர் இறைக்கப் புறப்படுகின்றனர். மூலைக்கு மூலை கோழிகள் கூவுகின்றன. சாணி எடுக்கக் கிழவிகள் கூடைகளுடன் வெளிப் புறப்படுகின்றனர். பட்டியில் அடைபட்ட ஆடுகளும் மாடுகளும் வெளிப்புறப்படவேண்டுமென்று கத்துகின்றன. படல்களை முட்டுகின்றன: ஒன்றையொன்று முட்டிக்கொண்டு சண்டையிடுகின்றன. இதைத் தடுக்கும் பொருட்டு பட்டி நாய் குலைக்கின்றது.

இவற்றை யெல்லாம் சற்றேனும் கவனியாது நரேந்திரன் சுகுணபுரத்தை நோக்கி பறந்தோடுகிருன். சித்திரக்கிரீவன் சங்கதி என்ன வாயிற்று என்று புலப்படவில்லை. சுமார் 10 மைலுக்கு அப்பால் சென்றதும் எதிரே ஒரு குதிரை வீரன் வரக் கண்டான். அவனைக் கண்டதும் நரேந்திரன் குதிரையை அடக்கி நடத்திக்கொண்டு இடுப்பில் இருந்த சுருட்டுக் கத்தியைத் தொட்டுப் பார்த்துக்கொண்டான். சற்று பக்கத்தில் வரவே, நரேந்திரன் குதிரை கனைத்தது. தூரத்தில் வரும் குதிரையும் கனைத்தது. சவாரி செய்வோனை உற்றுப் பார்த்து நரேந்திரன், "நான் சடையப்பனை இன்னுனென்று தெரிந்து கொள்வதற்குள் அவன் குதிரைகள் ஒன்றை யொன்று அறிந்து கொண்டனவே" என்று சந்தோஷத்துடன் முன் சென்முன். சடையப்பனும் சந்தோஷத்துடன் நெருங்க, இருவரும் இறங்கித் தழுவிக்கொண்டு க்ஷேம சமாசாரம் விசாரித்தவுடன் சடையப்பன் "ஐயா நரேந்திரரே உமது சகோதரர் உம்மைப்போலவே யிருக்கிருர். விடியற் காலம் அவரைக் கண்டதும், நீர் என்றே எண்ணி வார்த்தையாடினேன். அவர் சொன்ன பிறகுதான் நீரன்று என்பது தெரிந்தது. சுகுணபுரத்துக்கு அம்மூவரும் போகவேண்டுமென்றும் நீர் பின்னே வருவதாகவும், என் உதவி வேண்டுமென்றும் கேட்டதினுல் இதுவரையில் அவர்களை வழியனுப்பி வந்தேன்" என்முன்.

இத்துணை உபகாரம் செய்தவனிடத்தில் உண்மையைச் சொல்லவேண்டுமென்று நரேந்திரன் "சடையப்பா உனக்கு வந்தனம். உன்னுல் கூடிய உபகாரத்தைச் செய்தாய். உனக்கு கடவுள் அருள் புரிவார். என் தம்பியென்முயே, அவளே என் சகோதரி: அவர்களுள் வயது சென்றவனே எனது நண்பன் சுலோசனன், மற்றவள் லலிதை—"என்முன். சடையப்பன் ஆச்சர்யத்தால் ஒன்றும் தோன்முது "ஐயா! ஐயா! என்ன சொன்னீர்—என்ன! என்ன!" என்முன்.

நரேந்திரன் எல்லா விஷயத்தையும் சடையப்பனுக்கு விவரித்துச் சொன்னுன். உடனே நரேந்திரன் "சடையப்பா நான் நேற்று அனுப்பிய ஆள் வந்துசேரவில்லையா?" என்முன். சடையப்பன் "எந்த ஆள்? ஒருவரும் காணுமே!"என்முன். நரேந்திரன் வருத்தத்துடன் "சித்திரக்கிரீவனுக்கு என்னவாயிற்ருே ஏதோ தெரியவில்லை; விசாரிக்கவேண்டும். நீயும் தேடுவாய் சடையப்பா"வென்முன். பின்னர் இருவரும் பக்கத்தில் ஓடும் அருவியில் முகம் கழுவிக்கொண்டு, தம் முன்னே பிரகாசிக்கும் சூரியனையும், அவனைக் கண்ணுய் உடைய நாராயணனையும், நமஸ்கரித்துப் போற்றினுர்கள். பின் சடையப்பன் தன் கிராமத்துக்கும், நரேந்திரன் சுகுணபுரத்துக்கும் சென்றனர். நரேந்திரன் சுகுணபுரம் சேர்ந்தபோது, பொழுது பன்னிரண்டு நாழிகைக்கு மேல் ஆய்விட்டது.

ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

LADIES' PAGES

இந்துமதியின் ஸ்வயம்வரம்

[ஸ்ரீமான் டி. எஸ். ராஜகோபாலய்யரவர்கள்.]

விதர்ப்ப மகாராஜனுடைய தங்கை இந்துமதியின் ஸ்வயம்வரத்திற்கு நூற்றுக்கணக்கான அரசர்கள் வந்திருந்தார்கள். திலீபனுடைய பேரனான அஜகுமாரனும் வெகு பரபரப்புடன் வந்து, ஸ்வயம்வரமண்டபத்தில் நவரத்தினங்களால் சிங்காரமாய் அலங்கரிக்கப்பட்டிருந்த பீடங்களில் வீற்றிருக்கும் அரசர்களை ஒரு தடவை சுற்றிப்பார்த்தான். ரதிதேவியின் மன்ருட்டத்தால், பரமசிவன் மனமுவந்து உயிர்தந்த காமதேவன்போல் விளங்கி நின்ற அஜனைக் கண்டதும், இதர ராஜாக்கள் இந்துமதியைப் பாணிக்கிரகணம் செய்து கொள்வதென்ற வெண்ணம் நிறைவேருதென அதைர்யப்பட்டார்கள். சுப்பிரமண்ய மூர்த்தி மயிலாசனத்தில் போய் அமர்வதுபோல, படிப்படியாயேறி, அநேக பீதாம்பரங்களால் போர்த்தப்பட்டிருந்த வொரு உயர்ந்த சிம்மாசனத்தில்போ யமர்ந்தான் அஜன். மேகத்தில் ஒரு மின்னல் ஜோதி அநேக பிரகாசங்களாகத் தோன்றுவதுபோல், அழகு லக்ஷ்மி அநேக ராஜாக்களிடத்தில் பரவி, பார்க்கக் கண் கூசும்படி விளங்கினாள்.

புஷ்பங்களினுள் புகுந்திருக்கும் வண்டுகள், அவற்றைவிட்டு மதம் பெருகும் யானைகளின் மஸ்தகம்போய் அடைவதுபோல, ஜனங்களின் கண்கள் மற்ற அரசர்களை விட்டு அஜனிடம் திரும்பின.

சிறிது நேரத்திற்கெல்லாம் சூர்ய சந்திர வம்சங்களின் பெருமை கானம் செய்யப்பட்டது. சமீபத்திலுள்ள நந்தன வனங்களில் உலாவும் மயில்கள் ஆநந்தத்துடன் ஆரவாரம் செய்யும்படி கம்பீரமான சங்கத்வனி கிளம்பிற்று. இந்துமதியும் விவாக விதிக்கேற்ப ஆடையாபரணங்கள் பூண்டவளாய், பல்லக்கில் தன் தோழிமார்களுடன் ஸ்வயம்வர மண்டபத்தை யடைந்தாள். தேகம் மட்டும் இருந்த விடத்திலும், மனது இந்துமதியிடத்திலும் லயித்துவிட்டது வந்திருந்த அரசர்களுக்கு. அங்கு அரச ஸமூகத்தில் ஒருவன், தாமரைத் தண்டைக் கையில் பிடித்து கர்ரென்று சுற்றுவதால் மடல்கள் வண்டுகளின்மேல் பட, உள்ளிருக்கும் மொக்கு நர்த்தனம் செய்தது. மற்றொருவன் தன் பருத்த தோளின்மேல் நழுவி விழுந்த முத்துமாலையைச் சிறிது தலை சாய்த்துச்சரியாயணிந்துகொண்டான். மற்றொருவன் கடைக்கண்ணால் பார்த்துக்கொண்டே பளபளவென்றிருக்கும் தன் கால் நகத்தால் ஸ்வர்ண பீடத்தின்மேல் கீரிக் கொண்டிருந்தான். மற்றொரு அரசன் தன் கைவிரல்களில் போட்டிருந்த வைடூர்ய மோதிரங்கள் டால் வீசும்படி பகடைக்காயுருட்டினான். தன் தலையிலிருந்த கிரீடம் விழுகிறதுபோல் தோன்ற மற்றும் ஒருவன் அதை இறுகப்பிடித்துக்கொண்டான்!

இவ்வாறு இவர்கள் தத்தம் மனோபாவத்தை வெளிப்படுத்தி நிற்க, வாசற் காப்பாளாகிய ஸுநந்தை, அங்கே கூடியிருக்கும் ஒவ்வொரு அரசனுடைய குலம், பெருமை முதலிய வற்றை நன்கறிந்தவ ளாதலால், இந்துமதியை முதலில் மகத தேசத்தரசன் முன்னிட்டுப் பேசத் துவக்கினாள்.

“வானத்தில் அநேக நட்சத்திரங்க ளிருந்தும் மதியினாலன்றோ இருள் நீங்குகின்றது! அவ்வாறே உலகத்தில் அநேக அரசர்களிருந்தும்; இவன் ஒருவனே பூபாலனம் செய்யத் தகுதியுற்றவன். இவன் செய்யும் யாகங்களனைத்துக்கும் தேவேந்திரன் வந்துவிடுவதால் இந்திராணிதேவி வெகுகாலம் தன் கணவனை விட்டுப் பிரிந்து தலைமயிரையும் கட்டாமல் தொங்கவிட்டபடியே துயரடைகிறாள். இவ்வரசனை நீ பதியாகக் கொண்டால் புஷ்பபுரத்திலிருக்கும் ஸ்திரீஜனங்கள் ஜன்னல்களினின்று உன்னையே கண்கொட்டாமல் பார்த்து மகிழ்வார்கள்.”

இதுகேட்டு இந்துமதி மகதனை ஒருதரம் பார்த்துத் தலையை யசக்கிவிட்டு ‘அப்புறம் போ’ வென்று ஸுநந்தைக்கு சம்க்ஞை காட்டினாள். காற்றினால் அசைக்கப்பட்ட அலைகள் மானஸ ஸரஸில் ஹம்ஸ பட்சிகளை ஒரு தாமரையிலிருந்து மற்றொரு தாமரைக்குக் கொண்டு போவதுபோல் ஸுநந்தை அரசிளங் குமரியை மற்றோரசன்முன் அழைத்துப் போய், “அங்கதேசத்தரசன் இவன், இப்புவியிலிருந்தபடியே தேவேந்திரனுடைய போகங்களை யனுபவிக்கிறான். அசுரர்களை வென்றுவர இவன் தேவலோகம் சென்றிருந்த

யத்தில், தேவ கன்னிகைகள் இவன் அழ ல் மோகித்து இவனை அடைய ஆசைப் டார்கள். யானை ஏற்றத்தில் நிபுணர்களான ிஷிகள் இவனது யானைகளைப் பழக்கினர் சத்துருக்களைக் கொலைசெய்து அவர்களு ய பத்தினிகளை முத்துமாலைகளுக்குப் பதி ் நூலற்ற கண்ணீர்ச் சொட்டு மாலைகளை யும்படி செய்தான் இவன். சகஜமாய் லட் ியும் ஸரஸ்வதியும் பரஸ்பரம் துவேஷமா ந்தும் இவனிடத்தில் சேர்ந்து ஒத்திருக்கி கள். ஆகையால் நீயும் இவனைக்கொண்டு ்விருவருடன் சேர்ந்திரு" என்று கூற, வர் மனதுபோல் மற்றொருவர் மனது இருப்பது அரிதாதலால் இந்துமதி "அப்பு றம் போ"வென்றாள்.

பிறகு ஸுநந்தை, "இதோ ஆஜானுபாகு வாய் அகன்ற மார்போடு, குன்றிய இடை யுடையனாய், விச்வகர்மாவினால் சாணைக்கல் லில் கருக்கேற்றப்பட்ட சூரியனுடைய பிர தாபம்போல் ஜ்வலித்துக்கொண்டிருக்கின்றான் பார் இந்த அவந்தி யரசன். இவன் த்ருடம், தன்மை, தைரியம் முக்குணமும் பொருந் தினவனாய்ச் சத்துரு ராஜாக்களின்மீது படை யெடுத்துச் செல்லுகையில், குதிரைகளின் குளம்புகளால் கிளப்பப்பட்ட புழுதி எதிரி களின் கிரீடங்களில்போய்ப் படிந்து அவற்றை மழுங்கச் செய்கிறது. சந்திரனைச் சிரசில் தரித்த மகாதேவனிருக்கும் மகா கைலாஸத் துக்கருகில் இவன் வசிப்பதால் தேய்பிறை நாட்களில்கூட நிலவில் தன் ஸகிஜனங்களு டன் ரமிக்கிறான். சிப்ராநதியின் அலைகளில் குளிரடைந்திருக்கும் மந்தமாருதத்தால்அசை யும் உத்தியான வனங்களின் தருக்களினிடை யே இவனுடன் நீ குலாவுகிறாயா?" வென்று கேட்டாள். தாமரையைப் புஷ்பிக்கச்செய்து, நீரை உறிஞ்சும் சுபாவமுடைய சூரியனிடம் அல்லிப் பூவுக்குப் பிரேமை ஏற்படுவதில்லை போல, இத்தனை பிரபாவமுள்ள அவந்தீச னிடத்தில் இந்துமதிக்கு அபிமானம் விழ வில்லை.

பிறகு ஸுநந்தை மற்றொரு அரசனிடம் இட்டுப்போய் "முன்காலத்தில் யோகாப்யா ஸத்தில் அமர்ந்தவனாயும், சண்டைக்களத்தில் ஆயிரங் கைகளோடு தோன்றி பதினெட்டு த்வீபங்களிலேயும் கொடிமரத்தை நாட்டின வனாயும், கேவலம் ராஜன் என்ற சப்தத்துக்கு மேலானவனாயும், கார்த்தவீர்யனென்றவொரு அரசன் ஆண்டான். பிரஜைகளில் ஒருவன் மனதினாலும் அகார்யம் நினைத்தால் உடனே பாணத்துடன் எதிரில் தோன்றி அவனை சிக்ஷைசெய்வான். இந்திரனையும் வென்ற இலங்கையரசன் பெருமூச்செறிந்து இவனது காராக்ருகத்தில் ராஜாக்யைவரையில் கைகளும் புக்கயிறால் கட்டப்பட்டவனாய்த் துன்புற்றான். அந்தக் கார்த்தவீர்யனுடைய வம்சத்தில்தான் இதோ இருக்கும் ப்ரதீபன் பிறந்தான். சாஸ் திரமுறை வழுவாது தழுவி, ஆகம வித்வான் களின் வார்த்தைகளைக் கேட்டு நடக்கிறான். க்ஷத்திரியர்களுக்குக் காளராத்ரிபோல் விளங் கும் பரசுராமனது கோடரியை இவன் (அக் னிபகவானுடைய சகாயத்தை யடைந்து) தாமரைப்பூப்போல் மிருதுவானதாய் நினைக் கிறான். மாகிஷ்மதீபுரத்தின் பிராகாரங்களுக் குத் தங்க ஒட்டியாணம்போல் சுற்றிவருகிற, பிரவாகத்தால் அழகடைந்துள்ள ரேவா நதியை அரண்மனை ஜன்னல்களினின்று பார்க்க ஆசைகொண்டால் நீ இந்த தீர்க்கபாகு வுக்கு மனைவியாவாய்" என்று சொல்ல, மேகங் களுக்கு மத்தியினின்று வெளிவந்த பூர்ண சந்திரனை எவ்விதம் செந்தாமரை ஏற்றுக் கொள்வதில்லையோ அவ்விதம் இந்துமதி இவ் வழகிய அரசனை ஏற்றுக்கொள்ளவில்லை.

பிறகு தாய் தகப்பன் இருகுலங்களுக்கும் தீபம்போல் விளங்கின சூரஸேனாதிபனான ஸுஷேணனைக் காட்டி "இவ்வரசன் நீபவம் சத்தில் பிறந்தவன். யாகங்களை விதிப்படி நடத் துவதால் இவனது கீர்த்தி தேவலோகத்திலும் பரவியிருக்கிறது. ரிஷியின் ஆச்ரமமடைந் துள்ள மிருகங்களைப்போல், இயற்கைப் பகை யுள்ள நற்குணங்கள் இவனிடத்தில் ஒத்திருக் கின்றன. இவனுடைய அந்தப்புர ஸ்திரீகள் ஜலக்ரீடை செய்யும்பொழுது அவர்கள் மார் பில் பூசியிருக்கும் சந்தனத்தால் யமுனை நதி கறுப்பு நிறத்தை மாற்றிக்கொண்டு வெண்மை யடைந்து செல்லுகிறது. கருடனிடம் பயந்த காளியனென்ற விஷஸர்ப்பத்தினால் யமுனை யாற்றில் கொடுக்கப்பட்ட மாணிக்கமதை யடைந்திருப்பதால் இவன் கௌஸ்துபமணி யைத் தரித்திருக்கும் கண்ணன் போல் தோன்றுகிறான். குபேரனது நந்தனவனத்

துக்குச் சமமான இவனுடைய பிருந்தாவனத்தில் இலைகளின்மேல் பூக்களைப் பரப்பிச் சுகமாய்க் காலத்தைக் கழிக்கலாம். கோவர்த்தன கிரிக்கருகில் மலைப்பிரதேச ஓஷதிகளின் வாஸனையால் நிரம்பியிருக்கிற கற்பாறைகளில் உட்கார்ந்துகொண்டு, மேகத்தைக்கண்டு களித்துக் கூத்தாடும் மயில்களை நீ ஆனந்தமாய்ப் பார்க்கலாம்" என்றாள் ஸுநந்தை. ஸமுத்திரத்தை நோக்கிப்போகும் ஆறு, வழியிலுள்ள மலையைச் சுற்றித் தாண்டிப் போவதுபோல், இந்துமதி அவ்வரசனைவிட்டு அப்புறம் நகர்ந்தாள். பிறகு ஸுநந்தை களிங்காதிபனான ஹேமாங்கதன் முன்னழைத்துப்போய் "மகேந்திரமலைபோல் திடகாத்திரனைக் காணும் இவன் மகேந்திரமலைக்கும் பக்கத்திலுள்ள சமுத்திரத்திற்கும் அரசன். கைதிகளாய்ப் பிடிக்கப்பட்ட சத்துருக்களின் பத்தினிகளுடைய அழுகை ஜலம், மையுடன் கலந்து இரு பிரவாகங்களாய்ப் பிரிவதுபோல், இவன் அடிக்கடி அம்பு இழுப்பதால் உண்டான வடுக்கள் இரு புஜங்களிலு மிருக்கின்றன பார்! தீவாந்தரங்களிலிருந்து லவங்க புஷ்பங்களின் வாஸனையோடு கலந்துவரும் காற்று உனது வேர்வையை யடக்க, நீ ஸமுத்திரக்கரையில் உட்கார்ந்து அலைகள் ஒன்றற்கொன்று மோதிக்கொள்வதை ஆனந்தமாய்க் கண்ணுறுவாய்" என, போஜமகாராஜனது தங்கை இந்துமதி, துரதிர்ஷ்டத்தோடு கூடினவனை லக்ஷ்மி தேவி யணுகாள்போல், அப்புறம் சென்றாள்.

உடனே நாகபுர அரசன்முன் அவளை நிறுத்தி வாசற்காப்பவளான ஸுநந்தை "இவன் பாண்டிய நாட்டுக்கு அரசன். பால சூர்யனோடு சம்பந்தப்பட்டு, அநேக ஊற்றுக்களால் நிறைந்திருக்கும் பர்வத ராஜன்போல் தோள்களில் முக்தாஹாரத்தோடும், மார்பில் மஞ்சள் நிறமான சந்தனத்தோடும், இவன் காணப்படுகிறான் பார். விந்தியபர்வதத்தை அதிகம் வளரவொட்டாமல் தடுத்தவரும், மகா ஸமுத்திரத்தைப் பானம் செய்து பிறகு வெளிவிட்டவருமான அகஸ்தியர், இந்தவரசன் அச்வமேத யாகம் செய்து ஸ்நானம் பண்ணினவுடன் யாகம் சரிவர நடைபெற்றதா வென்று விசாரிக்கிறார். ஹரனிடத்திலிருந்து வெகு கஷ்டத்துடன் கிடைக்கக்கூடிய பிரமாஸ்திரத்தைப் பெற்றிருக்கிறான். அதுகண்டு லங்கேச்வரன், ஒருவேளை இவன் ஜனஸ்தானத்தை யழித்து விடுவானோ வென்றுபயந்து, இவனுடன் சமாதானம் செய்துகொண்ட பிறகே இந்திரனோடு யுத்தத்துக்குப் புறப்பட்டான். நீ இவனை மணந்தால், வெற்றிலைக் கொடிகளா லணையப்பட்ட பூகைக் கொடுகளோடும், ஏலக் கொடிகளால் தழுவப்பட்ட சந்தன மரங்களோடுங் கூடின மலயப்ரதேசங்களில் தமால பத்ரங்களடங்கிய படுக்கைகளில் படுத்து நீ ரமிக்கலாம்" என்றாள். மதியின் கிரணங்கள், மூடியிருக்கும் தாமரையினுள் புகாததுபோல் ஸுநந்தையின் வார்த்தைகள் இந்துமதி மனதில் புகவில்லை.

பிறகு ரகு மஹாராஜாவின் குமாரன் அஜன் முன்வந்ததும் அவன் தன்னை இந்துமதி வரிப்பளோ மாட்டாளோ வென்று சந்தேகித்தான். அப்பொழுது அவனது வலதுகை படபடவென்று துடித்தது. வண்டுக் கூட்டங்கள் பூங்கொத்துகள் நிரம்பியிருக்கும் மாமரத்தைக் கண்டு அதைவிட்டு அப்புறம் போவதில்லை போல், இந்துமதி அஜனைக்கண்டதும் அங்கேயே நின்றுவிட்டாள். பேச்சில் சதுரையான ஸுநந்தை இவளந்தரங்க மறிந்து, "இக்ஷ்வாகு வம்சத்தில் ககுஸ்தன் என்ற ஓரரசனிருந்தான். உத்தர கோசலத்திலுள்ள ராஜாக்கள் ககுஸ்தரென்ற சிலாக்கியமான பட்டத்தைப் பெற்றார்கள். பருத்த காளை மாட்டுருவம் எடுத்த தேவேந்திரன் கொண்டை மீதேறி இவ்வரசன் சூலபாணிபோல் அஸுர ஸ்திரீகளின் கன்னங்களில் பூசியிருந்த பூச்சுக்களை அவர்களது கண்ணீர்ப் பிரவாகத்தால் கரையச்செய்தான். பிறகு இந்திரன் திவ்யரூப மடைந்ததும், ஐராவதத்தை யோட்டிவிட்ட கையைத் தொட்டுக்கொண்டு அவனுடன் ஒரே சிம்மாசனத்தில் உட்கார்ந்தான். இவனுடைய வம்சத்தில்தான் திலீபன் பிறந்தான். அவன் தொண்ணூற்றொன்பது அச்வமேத யாகங்கள் செய்துவிட்டு, இந்திரனுக்குத் தன்னிடம் அசூயை உண்டாகா மலிருப்பதற்காகவே நூறாவது யாகத்தைச் செய்யாமலிருந்தான். அவனுடைய புத்திரனான ரகுமகாராஜன் இப்பொழுது ராஜ்யத்தைப் பரிபாலனம் செய்துவருகிறான். கொஞ்சகாலம் முந்தித்தான் விச்வஜித் யாகம்

செய்ததில், நான்கு திக்குகளிலிருந்தும் வந்து குவிக்கப்பட்டிருந்த தனம் முழுதையும் கொடுத்துவிட்டு, மண்ணுலான கமண்டலு ஒன்றைத் தான் மீதி வைத்துக்கொண்டான். சமுத்திரங்களுக் கப்பாலும், நாக லோகத்திலும், ஸுரலோகத்திலும் பரவியிருக்கிற இவனது கீர்த்தியை நான் எவ்வாறெடுத் துரைப்பது! தேவேந்திரனுக்கு ஜயந்தன் எப்படித் தனயனுகப் பிறந்தானே, அப்படியே இவ் விளங் குமாரன் அஜன், ரகுமஹாராஜனின் புதல்வன். இவன் பால்யமா யிருந்தபோதிலும் தன் தகப்பனேடு ராஜ்ய பாரத்தை வகிக்கிருன். ஆகையால், வம்சம், அழகு, யௌவனம், வித்வத் எல்லாவிதத்திலும் இணையாயிருக்கும் இக்குமாரனை நீ வரித்தால், வைரக் கல்லோடு தங்கம் சேர்ந்தது போலாகும்" எனப் புகழ்ந்தாள். உடனே இந்துமதி அஜனை அபிமானத்துடன் கடைக்கண்ணுல் பார்த்தாள். வெட்கத்தால் வெளிவிட்டுச் சொல்லாவிட்டாலும், மயிர் கூச்சலெறிவதால் அவளுடைய மனேபீஷ்டம் இன்னதென்று வெளிவந்து நின்றது.

இப்படி நிற்கும் இந்துமதியை நோக்கி ஸுநந்தை, "அப்புறம் செல்லவோ?" வென்ருள். நாணத்தால் தலைகுனிந்து, தன் கையிலிருந்த ஹாரத்தை ஸுநந்தையிடம் கொடுத்து அதை அஜன் கழுத்தில் போடும்படி உத்தரவளித்தாள் இந்துமதி போட்டதும், அஜன் விதர்ப்ப மகாராஜனுடைய தங்கை இந்துமதியே தன் கழுத்தை இருகைகளாலும் தழுவிக்கொண்டதுபோல் ஆனந்தப்பட்டான். இவ்வாறு பரஸ்பரகுண விசேஷங்களில் ஒற்றுமை பொருந்தியிருந்த இவ்விருவருடைய சம்பந்தத்தைப் பட்டணத்து ஜனங்கள், கங்கை நதி தன் நாயகனுன சமுத்திரத்தை யடைந்ததென்றும், மற்றும் அநேக விதத்தால் வெகுவாய் மெச்சினர். அப்பொழுது சபாமண்டபமானது, ஒரு பக்கம் வருத்தத்துடன் கூடின அரசர்களின் ஜனங்களும், மற்ருெரு பக்கம் சந்தோஷத்தோடு கூடின அஜனுடைய ஜனங்களும் நிற்க, காலையில் ஒரு பக்கம் புதிதாய்ப் புஷ்பித்த தாமரைகளோடும் மற்ருெரு பக்கம் தூங்குகிற அல்லிப்பூக்க ளோடும் கூடின ஏரியை ஒத்தது.

சுபம்.

சிறுவர்களுக்கான பக்கங்கள்

CHILDREN'S PAGES

இடைவிடா முயற்சி

இடைவிடாமல் முயற்சிசெய்வதுதான் மெய்முயற்சியாகும். காரியமாகிய இன்பத்தை விரும்பாமல் காரணமாகிய முயற்சியை விரும்புவோனே எல்லாப் பயன்களும் அடையக்கூடும். ஆகையால் நமது வாழ்நாளில் ஒரு நாழிகைகூட அந்நேரத்தில் செய்யவேண்டிய தொழிலைச் செய்யாமல் காலத்தை வீண் போக்க லாகாது. "செய்வன திருந்தச்செய்" என்று ஔவையார் சொன்னபடி, எடுத்த தொழில் முடிகிறவரையில் மற்ருென்றில் புத்திசெலுத்தாமல் நிலையாக நின்றுமுடிப்பதே உத்தமம். எடுத்துக்கொள்வது ஒரு வேலையானுலும், விளையாட்டானுலும், பாடம் பண்ணுவதானுலும் அதை அறைகுறையில்லாமல் பூர்த்தியாய் முடித்துவிட வேண்டும். அது நன்ருக முடிந்தவுடனே மற்ருெரு தொழிலைத் துவக்க வேண்டுமேயல்லாமல் இடையில் மனம் திடமில்லாமல் சிற்சில நிமிஷங்களை நழுவிப் போகவிடக்கூடாது. இப்படி கண்ணுங் கருத்துமாகச் செய்பவர் ஒருநாள் முப்பது நாழிகையில் எத்தனை நிமிஷங்களை துளிதுளியாகக் கைவிட்டு நழுகிப்போகாமல் கையிருப்பாக்கிக் கொள்ளுகிருர்கள் பாருங்கள். சோம்பேறிகள் கைநழுகவிட்ட நிமிஷங்களை யெல்லாம் முயற்சியுடையோர் சேர்மானம் செய்துகொள்வதுபோலாகும்.

ஒருகால் பற்பல காரியங்கள் நெருக்கிடையாகச் செய்ய வேண்டியதாயிருந்து எதை முன் துவக்குகிறது என்று தடுமாற்றம் உண்டானுல் அதற்கு ரகசியமான யுக்தி யொன்றுண்டு. அதாவது, முதல் முதல் கைக்கு நேர்ந்ததைச் செய்யவாரம்பித்தால் மற்றதெல்லாம், ஒன்றன்பின் ஒன்று தானேவந்துகொண்டிருக்கும். ஒரு சமர்த்தனைப் பார்த்து "உன் வாழ்நாளில் இவ்வளவு வேலையும் எப்படிச் செய்தாய்" என்று ஆச்சரியப்பட்டு மற்ருெருவன் கேட்க்க அதற்குச் சொன்ன விடையாவது — "என் தகப்பனுர், ஏதாவதொரு வேலை செய்யவேண்டுமானுல் ஆலசிய மில்லாமல் உடனே அதைச் செய்" என்ருர். இந்த ரகசியத்தைக் கைவிடாதீர்கள்.

பிரபஞ்ச வர்த்தமானம்

NEWS AND NOTES

வி. பி. தபால் முறை.

அடுத்த ஏப்ரல் மாதம் முதல், இந்தியாவுக்கும், இங்கிலாந்திற்கும் வி. பி. தபால் முறை அநுஷ்டானத்திற்குக் கொண்டுவரப்படுமென அறிகிறோம். இது பொது ஜனங்களுக்கு ஒருக்கால் நன்மையுண்டாக்குமானாலும், இந்திய வியாபாரிகள் இதுவரை அடைந்து வந்த லாபத்தை இனி இங்கிலீஷ் வர்த்தகர்களே பெரும்பாலும் அடையலாம். ஆகையால் இந்திய வர்த்தகர்களுக்கு இதனால் விசேஷ நன்மை யுண்டாகாதென நினைக்கிறோம்.

***

தமிழ் நாட்டில் ஒரு சர்வ கலாசாலை.

முன் சஞ்சிகையில், ஆந்திர சகோதரர்கள் தங்களுக்கென ஒரு சர்வகலாசாலை பிரத்தியேகமாய் ஏற்படுத்திக்கொள்ளப் பெரு முயற்சிகள் செய்து வருவதையும், அவர்கள் நோக்கப்படி விரைவில் காரியம் கைகூடுமெனவும் சொன்னோம். அதேமாதிரி தமிழ் நாட்டுக்கென ஓர் சர்வகலாசாலை ஏற்படுத்தல் கல்வியபிவிருத்திக்கு மிகவும் அநுகூலமான காரியமாகும். இதைப்பற்றியும் யோசனை நடந்துவருகிறது. சுமார் நாலுகோடி ஜனங்களடங்கிய இச்சென்னை மாகாணத்திற்கு ஒரே சர்வகலாசாலை சென்னையிலிருப்பது போதாது. இதே ஜனத்தொகை கொண்ட இங்கிலாந்தில் 15 சர்வகலாசாலைகளிருக்கின்றன. ஆகையால் அங்கங்கே பல சர்வ கலாசாலைகள் ஏற்படுவதால் கல்வியபிவிருத்தியடையும்.

***

சிலதுக்க சம்பவங்கள்

சென்னை சர்வகலாசாலைத் திராவிட பாஷை சேர்மனாக அநேகம் வருஷம் இருந்துவந்தவரும், தமிழபிவிருத்தியில் அக்கரை கொண்டவரும், நம் பத்திரிகாபிமானியுமான ராவ் ஸாஹேப் டி. இராமகிருஷ்ண பிள்ளை அவர்கள் காலஞ்சென்றது ஒன்று; சித்தூரில் கவர்ன்மெண்ட் வக்கீலும், பொது நலப்பிரியரும் எமது பத்திரிகையை உள்ளன்போடு அபிமானித்து வந்தவருமான ராவ் பஹதூர் மிஸ்டர் B. C. ராகவய்யாவின் அகால மரணம் இரண்டு. மூன்றாவது, கோயம்பத்தூரில், ஐக்கிய நாணய விஷயமாய் மிகுந்த அக்கரை எடுத்து உழைத்து வந்தவரும் சில வருஷங்களுக்கு முன், சென்னையில் வித்யா விஹாரிணி என்ற பெயருடன் ஒரு தமிழ்ப் பத்திரிகையை சில காலம் நடத்திவந்தவருமான. மிஸ்டர் வி. என். கிருஷ்ணசாமி ஐயர், எம். ஏ. எல். டி காலஞ்சென்றது: இச்சம்பவங்களுக்கு நாம் மிகவும் வருந்துவதுடன், எமது அநுதாபத்தை காலஞ்சென்றவர்களின் குடும்பத்தினர்க்குத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

***

சர்வகலா சாலை அங்கத்தினர் பதவி.

சென்னைச் சர்வகலாசாலையில் ஒரு அங்கத்தினராயிருந்த காலஞ்சென்ற மிஸ்டர் ராம கிருஷ்ணபிள்ளை அவர்களின் ஸ்தானத்தில், தமிழ் மொழியின் வளர்ச்சிக்காக மிகவும் ஊக்கத்துடன் உழைத்து வரும் எக்ஸிகியூடிவ் எஞ்சினீர் ஸ்ரீமான் பி. வி. மாணிக்க நாயகரை நியமிக்க வேண்டுமென்பதே அநேகருடைய விருப்பமாகும். பாஷாபிமானமுள்ள இவரே, திராவிட பாஷைகளின் சேர்மனாக நியமிக்கப்படுவது எவ்விதத்திலும் பொருந்தும்.

***

வீட்டுவாடகை மசோதா.

சென்னையில் குடியிருப்பவர்களின் திண்டாட்டம் சொல்லிமுடியாது. விஷமேறுவது போல் வீட்டு வாடகை ஏறி வருகிறது. இதனால் ஏழைகளேதான் மிகவும் வருந்துகிறார்கள். இதை ஒருக்கால் நிவர்த்திக்க, சென்னை சட்டசபை அங்கத்தினருள் ஒருவரான கனம் மிஸ்டர் அருமைநாதம் பிள்ளை ஒரு மசோதா கொண்டுவந்திருப்பது பாராட்டத்தக்கது. இதே மாதிரி மசோதா ரங்கூன், பம்பாய் முதலிய இடங்களில் அமுலில் இருக்கிறது. மேன்மைதங்கிய நமது கவர்னரும் இவ்விஷயத்தில் மிகுந்த ஊக்கமும் சிரத்தையும் காட்டிவருவதற்கு நாம் மிகவும் சந்தோஷிக்கிறோம்.

***



ஸரஸ்வதி.



லக்ஷ்மி.

விவேகபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்.

தொகுதி XII } சித்தார்த்தி௵ பங்குனிமீ :: 1920-௵ ஏப்ரல்மீ { பகுதி 10

கம்பராமாயணத் திரட்டு

SELECTIONS FROM KAMBA RAMAYANA

உலகம் யாவையும் தாம் உள ஆக்கலும்,
நிலை பெறுத்தலும், நீக்கலும், நீங்கு அலா
அலகு இலா விளையாட்டு உடையார் அவர்
தலைவர்: அன்னவர்க்கே சரண் நாங்களே.

ஓசை பெற்று உயர் பாற்கடல் உற்று, ஒரு
பூசை முற்றவும் நக்குபு புக்கு என,
ஆசை பற்றி அறையலுற்றேன், மற்று, இக்
காசு இல் கொற்றத்து இராமன் கதை, அரோ!

ஆசு அலம் புரி ஐம்பொறி வாளியும்,
காசு அலம்பு முலையவர் கண் எனும்
பூசல் அம்பும், நெறியின் புறம் செலாக்
கோசலம் புனை ஆற்று அணி கூறுவாம்.

தாது உகு சோலை தோறும்,
சண்பகக் காடுதோறும்,
போது அவிழ் பொய்கை தோறும்,
புது மணல் தடங்கள் தோறும்
மாதவி வேலிப் பூக
வனம் தொறும், வயல்கள் தோறும்,
ஓதிய உடம்புதோறும்
உயிர் என, உலாயது அன்றே.

வரம்பு எலாம் முத்தம்; தத்து
மடை எலாம் பணிலம்; மா நீர்க்
குரம்பு எலாம் செம்பொன்; மேதிக்
குழி எலாம் கருநீர்க் கொள்ளை;
பரம்பு எலாம் பவளம்; சாலிப்
பரப்பு எலாம் அன்னம்; பாங்கர்க்
கரம்பு எலாம் செந்தேன்; சந்தக்
கா எலாம் களி வண்டு ஈட்டம்.

செவ்விய, மதுரம் சேர்ந்த, நல் பொருளில்
சீரிய, கூரிய, தீம் சொல்
வவ்விய கவிஞர் அனைவரும், வட நூல்
முனிவரும் புகழ்ந்தது,—வரம்பு இல்
எவ் உலகத்தோர் யாவரும் தவம் செய்து
ஏறுவான் ஆதரிக்கின்ற
அவ் உலகத்தோர் இழிவதற்கு அருத்தி
புரிகின்றது,—அயோத்தி மா நகரம்.

அம் மாண் நகருக்கு அரசன்,
அரசர்க்கு அரசன்,
செம் மாண் தனிக் கோல் உலகு ஏழினும்
செல்ல நின்றான்,
இம் மாண் கதைக்கு ஓர் இறை ஆய
இராமன் என்னும்,
மொய்ம் மாண் கழலோன் தருநல்
அறமூர்த்தி அன்னான்.

ஆயவன், ஒரு பகல், அயனையே நிகர்
தூய மா முனிவரத் தொழுது, "தொல் குலத்
தாயரும், தந்தையும், தவமும், அன்பினால்
மேய வான் கடவுளும் பிறவும் வேறு நீ;

"அறுபதினாயிரம் ஆண்டும் மாண்டு உற
உறு பகை ஒடுக்கி இவ் உலகை ஓம்பினேன்;
பிறிது ஒரு குறை இலை, என் பின் வையகம்
மறுகுறும் என்பது ஓர் மறுக்கம் உண்டு அரோ."

பாந்தளின் மகுடகோடி
பரித்த பார் அதனில் வைகும்
மாந்தர்கள் விலங்கு என்று உன்னும்
மனத்தன், மாதவத்தன், எண்ணில்
பூம் தவிசு உகந்து உளோனும்
புராரியும் புகழ்தற்கு ஒத்த
சாந்தனுல் வேள்வி முற்றின்
தனையர்கள் உளர் ஆம் என்றான்.

விவேக போதினி

தொ.12] சித்தார்த்தி௵ : : பங்குனிமீ [ப.10

யுதிஷ்டிரர்

YUDHISHTIRA

பாண்டவர்கள் வனங்களில் ஸஞ்சரித்துக் கொண்டு, தவத்தாலும், மகரிஷிகளின் உபதேசத்தாலும், அபூர்வமான சக்திகளைச் சம்பாதித்துக் கொண்டிருந்தார்கள். இப்படியிருக்கையில், கௌரவர்கள் தாங்களடைந்த ஜயத்தாலும், ஆண்டுவந்த ராஜ்யத்தாலும், அனுபவிக்கும் செல்வத்தாலும், திருப்தியடையாமல், பரதேசிகளாய்க் காட்டில்திரியும் பாண்டவர்களைப் போய்க் கண்டு தங்களுடைய செல்வத்தையும், பரிவாரங்களையும் அவர்களுக்குக் காட்டி, அவர்களைப் பொறாமையா லெரித்து கேலி செய்யவேண்டுமென்று நினைத்தார்கள். தங்களுடைய மாட்டு மந்தைகள் அப்பொழுது துவைத வனத்தில் மேய்ந்துகொண்டிருப்பதைக் காரணமாக வைத்துக்கொண்டு அவைகளைப் பார்த்து வருவதுபோல் பாசாங்கு செய்து, பாண்டவர்க ளிருக்குமிடத்திற்கு வந்தார்கள். திருதராஷ்டிரன் எவ்வளவு தடுத்தும், துரியோதனன் கேட்காமல், சகுனியால் தூண்டப்பட்டுக் காட்டிற்குச் சென்றான்.

போகும் வழியில் ஓர் ஏரிக்கரையில் கூடாரங்களை யடித்து ஜலக்கிரீடை செய்வதற்கு ஆரம்பிக்கையில், அங்கே அதே காரியமாய் வந்திருந்த கந்தருவ ராஜனுடைய பரிவாரங்கள் துரியோதனனைத் தடுத்தார்கள். அவர்களைக் கௌரவர்கள் லட்சியஞ்செய்யாமல் சண்டைக்கழைத்து, கந்தருவராஜனான சித்திரசேனனுடைய கோபத்திற் காளானார்கள். ஒரு க்ஷணத்தில் கௌரவர்கள் தோல்வியடைந்து, மூலைக்குமூலை ஓட ஆரம்பித்தார்கள். கர்ணன் மாத்திரம் மேருமலையைப்போல் அசையாமல் நின்று, கந்தர்வர்களை எதிர்த்துக் கோரயுத்தஞ்செய்தான். பிறகு, துச்சாதனன் முதலியவர்கள் தைரியங்கொண்டு ஒவ்வொருவராய் வந்து சேர்ந்தார்கள். முடிவில் கர்ணன் துரியோதனன் சகுனி முதலியவர்கள் இரதங்களை இழந்து பயங்கரமாய்க் காயம்பட்டுச் சித்திரசேனனால் சிறையாக்கப்பட்டார்கள். கௌரவசேனைகள் நான்கு திக்குகளிலும் சிதறிப்பாண்டவர்களிருக்குமிடத்திற்கு ஓடிக் கௌரவர்களுக்கு நேர்ந்த ஆபத்தைத் தெரிவித்து, எப்படியாவது அவர்களை கந்தருவர்களிடத்திலிருந்து மீட்கும்படி வேண்டின.

அதைக்கேட்ட பீமன், கைகொட்டிச் சிரித்துப், "பலவீனர்களான எங்களால் என்ன முடியும்? எவர்களை ஆதரவாய்க் கொண்டு, எங்களைச் சூதாட்டத்தில் வஞ்சனையால் ஜயித்து, இராஜ்யத்தைக் கவர்ந்து, வனத்திற்குத் துரத்தினார்களோ, குரூரமான வார்த்தைகளாலும் செயல்களாலும் உபத்திரவித்தார்களோ, அந்தக் கர்ணனும் சகுனியும் துச்சாசனனுமே இப்பொழுது துரியோதன மஹாராஜாவைக் காப்பாற்றட்டுமே" என்றான்.

அப்பொழுது யுதிஷ்டிரர் அவனைத் தடுத்துப், "பரிகாசஞ்செய்வதற்கும், குரூரமான வார்த்தைகளைச் சொல்வதற்கும் இது சமயமல்ல. நொந்தவர்களைப் புண்படுத்துவது தருமமல்ல. ஒரே குலத்தில் பிறந்தவர்களுக்குள் சண்டை சச்சரவுகளும் மனஸ்தாபமு மிருப்பது வழக்கமே. ஆனால், அதற்காகக் குலத்தின் பெருமையையும் கீர்த்தியையும் விட்டுக் கொடுக்கக்கூடாது. நாம் இங்கே வசிப்பதை அறிந்தும், கந்தர்வராஜன் நம் உறவினரைச் சிறையாக்கத் துணிந்தா னல்லவா? ஆபத்திற்குள்ளான எவனையும் காப்பது க்ஷத்திரிய தருமம். கௌரவர்களோ நமது சகோதரர்கள், அரசர்கள், க்ஷத்ரியவீரர்கள். சத்துருவால் அவமானத்தையும் கஷ்டத்தையும் அடைந்து கர்வத்தையும் வெட்கத்தையும் விட்டு, தங்களைக் காப்பாற்றும்படி நம்மை வேண்டுகிறார்கள். இதைவிட நாம் அவர்களிடத்தில் அடையக்கூடிய பெருமை ஒன்றுமில்லை. மேலும் நான் இப்பொழுது ஓர் விருதத்தை அனுஷ்டித்துக்கொண் டிருக்கிறேன்.

இல்லாவிட்டால், நானே நமது பந்துக்களை கந்தர்வர்களிடத்திலிருந்து விடுவிக்கப் போயிருப்பேன். ஆயினும், நீங்கள் கௌரவர்களுக்கு நேர்ந்த அவமானத்தை உங்களுடையதாய் நினைத்து, அவர்களைச் சித்திரசேனனிடத்திலிருந்து மீட்கவேண்டுமெ"ன்றார்.

அதைக்கேட்டு பீமன் முதலியவர் கந்தர்வர்களுடன் போர்புரிந்து, சித்திரசேனனை அடக்கி, துரியோதனாதியரை விடுவிக்கும்படி நிர்ப்பந்தித்தார்கள். அப்பொழுது சித்திரசேனன் அர்ஜுனனைப் பார்த்து, "இந்தப் பாபியான கௌரவனை விடக்கூடாது. உங்களையும் திரௌபதியையும் படாதபாடு படுத்திவைத்திருக்கிறான். இவன் இன்னும் எவ்வளவோ உங்களைக் கெடுக்க நினைத்திருக்கிறான். இப்பொழுது இங்கு வந்த உத்தேசத்தை நீங்கள் அறியீர்கள். தன் செல்வத்தையும் பெருமையையும் உங்களுக்குக் காட்டி, கைகொட்டிச் சிரித்து, உங்களுடைய ஏழ்மைத்தனத்தையும் திக்கற்ற நிலைமையையும் பார்த்துப் பரிகாசஞ் செய்து அவமானப்படுத்த வேண்டுமென்றே இந்தச் சூழ்ச்சிசெய்தான். யுதிஷ்டிரர் இதைக் கேட்டுத் தகுந்தபடி உத்திரவு செய்யட்டுமெ"ன்று பாண்டவர்களுடன் அவரிடத்திற்குச் சென்று நடந்த விஷயங்களைத் தெரிவித்தான்.

அஜாத சத்துரு அதைக் கேட்டு, சித்திரசேனனுடைய அன்பையும் விசுவாசத்தையும் கொண்டாடி, "அளவற்ற பலமும் சக்தியும் பொருந்தியிருந்தும் நீர் துரியோதனாதியரைக் கொல்லாமல் விட்டது அவர்களுக்கு நல்லகாலமென்றே எண்ணவேண்டும். இந்தப் பாபியை உயிருடன் விட்டதால் என்னிடத்தில் மிகுந்த அன்பைப் பாராட்டி, என் குலத்தின் கௌரதையைக் காப்பாற்றினீர். நான் இதற்காக உங்களுக்கு எவ்விதத்திலும் கடமைப்பட்டவன். போய்வரலாமெ"ன்று உத்தரவு கொடுத்தனுப்பிவிட்டு, துரியோதனாதியரை விடுவித்து "குழந்தாய்! பரத வம்சத்தில் பிறந்தவன் இவ்விதமான கெட்ட காரியத்தைச் செய்யலாகாது. முன்யோசனையில்லாமல் செய்யும் காரியங்களால் துக்கமும் வருத்தமுமே உண்டாகும். உன் அதிருஷ்டவசத்தால் கிடைத்திருக்கும் செல்வத்தையும் அதிகாரத்தையும் சுகமாய் அனுபவித்துக் கொண்டிரு, பிறருக்குக் கெடுதி நினைக்காதே. காற்று நமக்கெதிராய் அடிக்கும்போது, வேறொருவனுடைய கண்ணில் புழுதியைத் தூவவேண்டுமென்று எறிகிறவன், அந்தக் காற்றால் தன் கண்ணிலேயே புழுதிவிழுந்து வருந்துவதுபோல், தனக்கு அபகாரஞ் செய்யாதவர்களுக்குக் கெடுதி நினைக்கிறவன், தானே முதலில் அந்தக் காரியத்தின் பலத்தை அனுபவிக்கிறான். கந்தர்வர்களால் நேர்ந்த அபஜயத்தையும் அவமானத்தையும் மனதில் வைக்காமல், எங்களிடத்தில் எப்பொழுதும் சிநேகபாவத்துடன் இருக்கக் கடவாயெ"ன்று உபசரித்தனுப்பினார்.

பாண்டவர்கள் காம்யகவனத்தில் வசித்துக்கொண்டிருக்கையில், ஒருநாள் சிந்து சௌவீர தேசத்தரசனும், விருத்தக்ஷத்திரனுடைய மகனும், திருதராஷ்டிரனுடைய ஒரே புத்திரியான துச்சலையின் கணவனுமான ஜயத்ரதன், சாலுவ இராஜ்யத்திற்கு விவாக காரியமாய்ச் சென்றுகொண் டிருக்கையில், அந்த வழியாய் வந்து, பாண்டவர்களுடைய ஆசிரமத்தில் திரௌபதியை, தனிமையாயிருக்கக் கண்டான். குந்தி புத்திரர்கள் வேட்டையாடப் போயிருப்பதாய்த் தெரிவித்து, தகுந்தபடி அவனுக்குத் திரௌபதி அதிதி பூசை செய்தாள். ஜயத்ரதன் அவளுடைய அழகையும் லாவண்யத்தையும் கண்டு மனஞ் சிதறி, அவளைத் தன்னுடன் வரும்படிப் பலவிதமாய் வேண்டினான்.

பாஞ்சாலி அவனைப் பரிகாசஞ் செய்து, பாண்டு குமாரர்களின் பல பராக்கிரமத்தை எடுத்துச் சொல்லி, "மூங்கிலும் நாணலும் வாழையும் பலங்கொடுப்பது வளருவதற்கல்ல. நண்டு கருப்பந்தரிப்பது வம்சவிருத்திக்கல்ல. தன்னை மாய்த்துக்கொள்வதற்கே. நீயும் என்னிடத்தில் ஆசைவைத்தது உனக்கும் உன் வம்சத்திற்கும் கேட்டையே விளைவிக்குமெ"ன்றாள். அதைக் கேட்ட ஜயத்ரதன் "இதெல்லாம் எனக்குத் தெரியாததல்ல. பாண்டவர்கள் எனக்கு எம்மாத்திரமெ"ன்று அவளைப் பலாத்காரமாய்ப் பிடித்திழுத்தான். திரௌபதி வரும் காரியத்தை அறிந்து, பாண்டவர்களுக்குப் புரோகிதரான தௌம்யரைச் சரணமடைந்து நமஸ்கரித்து, ஜயத்ரதனுடைய தேரில் ஏறினாள். தௌம்யர் "அடே துஷ்டா! பாண்டவர்களை யுத்தஞ்செய்து ஜயிக்காமல், க்ஷத்திரிய தருமத்தைத் துறந்து, இந்த

சிவியானுக்கு அடிமைப்பட்டால் காவவும் வேண்டும், சுமக்கவும் வேண்டும்.

மகா பாபத்தைச் செய்தபடியால், கோரமான அவமானத்தையும் தண்டனையையும் அடைவாயெ"ன்று சபித்து, அவனுடைய பரிவாரங்களில் கலந்து பின்சென்றார்.

பாண்டவர்கள் வேட்டையிலிருந்து திரும்பிவந்து திரௌபதியைக் காணாமல் கவலைகொள்ள, அவளுடைய வேலைக்காரி நடந்த வரலாற்றைத் தெரிவித்தாள். யுதிஷ்டிரர் தம்பிமாருடன் கடுவேகமாய்ப் பின்தொடர்ந்து, ஜயத்ரதனுடைய பரிவாரத்தையும் தௌம்யர் அவர்களுடன் வெகு கோபத்துடன் செல்வதையும் கண்டார். ஜயத்ரதன் சற்றுநேரம் அவர்களை எதிர்த்துச் சண்டை செய்து தோற்று, பயங்கொண்டு திரௌபதியைவிட்டு ஓடினான். பீமார்ச்சுனர்கள் அவனைத் துரத்த, யுதிஷ்டிரர் அவர்களை எச்சரித்து, "நமது தங்கையான துச்சலையையும் தாயான காந்தாரியையும் நினைத்து, சைந்தவனைக் கொல்லாமல் விடுங்களெ"ன்றார். அதைக்கேட்ட திரௌபதி கோபங்கொண்டு, "இந்த அற்பனும் நீசனும் பாபியுமான சைந்தவனைக் கொன்றாலொழிய என் துக்கம் தீராது. ஒருவனுடைய மனைவியையும் இராஜ்யத்தையும் அபகரிக்கிறவன், யுத்தத்தில் தோற்று நம்மைச் சரணமடைந்து கெஞ்சினாலும், அவனை மன்னிக்கக்கூடாதெ"ன்றாள்.

பீமார்ச்சுனர்கள் சைந்தவனைக் கிட்டிப் பிடித்துப் பிரக்ஞை தப்பும்படி உதைத்து அடித்து, இரதத்தின் சக்கரத்தில் கட்டி, ஐங்குடுமி வைத்துத் தலையைச் சிறைத்துத், "துரோகி! நீ பிழைக்க விரும்பினால், பொதுஸ்தலங்களிலும் இராஜ சபைகளிலும் 'நான் பாண்டவர்களின் அடிமையெ'ன்று சொல்லிக் கொள்ளவேண்டும். இல்லாவிடில், உன் உயிரை வாங்குவோமெ"ன்று கர்ச்சித்தனர். அதைக்கண்டு பயந்த ஜயத்ரதன், "அப்படியே செய்கிறேனெ"ன்றான். அவர்கள் அவனை யுதிஷ்டிரரிடத்தில் கொண்டுவந்து ஒப்புவித்தார்கள். அவனுடைய பரிதாபமான நிலைமையையும் வருத்தத்தையும் கண்டு, தருமபுத்திரர் மனமுருகி "இப்பொழுதே இவனை அவிழ்த்து விடுங்களெ"ன்றார். பீமன் திரௌபதியைப் பார்த்து "இந்த க்ஷத்திரியப் பதர் இன்று முதல் பாண்டவர்க் கடிமையென்று எங்கும் சொல்லிக் கொள்வானெ"ன்றான். உத்தமியான பாஞ்சாலியும், இரக்கங்கொண்டு, "இவனுக்கு இவ்வளவு போதும். இனி நல்ல புத்தி வந்தது. அவிழ்த்து விடுங்களெ"ன்றாள்.

ஜயத்ரதன் விடுபட்டு, பாண்டவர்களை வணங்கி நின்றான். யுதிஷ்டிரர் அவனைச் சமாதானஞ்செய்து, "இனி உனக்குப் பயமில்லை. இவ்விதமான கெட்ட காரியத்தில் மனதைச் செலுத்தாதே. உனக்குப் பந்துவும் எங்களுடைய பாரியையுமான பாஞ்சாலியை, நாங்களில்லாத வேளையில் எவ்வித ஆபத்திலிருந்தும் நீ காக்கவேண்டியது. அதைவிட்டு அவள் எவ்வளவு புத்திமதி சொல்லியும் தடுத்தும், அதை லட்சியஞ் செய்யாமல், அவளைப் பலவந்தமாய் இழுத்துக்கொண்டு போனாயே. அறிவில்லாத மூடர்களும் கொடிய ராட்தர்களும் செய்யும் வேலையன்றோ இது? உன் பலாபலத்தைச் சற்றும் யோசியாமல் இப்படி ஏன் செய்யத் துணிந்தாய்? எங்களை நன்றாய் அறிந்திருந்தும், ஆசையால் மதிகெட்டுப் பீமனுடைய கோபத்திற்காளாய் இப்படி அவமானப்பட்டாயே. இவ்வளவு பலவீனனான உனக்கு இந்தப் பேராசை தகாது. உன்னிடத்தில் எந்த இராஜஸ்திரீ கௌரதைவைத்து ஆசை கொள்வாள்? எங்களுடைய தாயான காந்தாரியையும் தங்கையான துச்சலையையும் நினைத்து, உன்னைக் கொல்லாமல் விட்டோம். துரியோதனாதியர் போகும் வழியில் நடக்காதே. அவர்களைப்போல் மடியாதேயெ"ன்று எச்சரித்துப் போகவிட்டார்.

பாண்டவர்கள் துவைத வனத்தில் வசிக்கும்பொழுது ஓர் பிராமணனுடைய அக்கினிஹோத்திரசாலையிலுள்ள அரணியென்ற இரண்டு கட்டைகள் ஒரு மானால் கொண்டுபோகப்பட்டன. அவன் ஐவர்களிடத்தில் முறையிட, அவர்கள் அந்தமானைத் துரத்திக்கொண்டு வெகு தூரஞ்சென்றார்கள். முடிவில் அது அவர்களுடைய கண்ணிற்கு மறைந்தது. அதைக்கண்டு ஒன்றும் தோன்றாமல் நிற்கையில், நகுலன் "யாதொரு அதருமத்தையும் செய்யாத நமக்கு இந்த அபஜயம் எப்படி நேர்ந்ததெ"ன்றான். யுதிஷ்டிரர் "கஷ்டங்களுக்கு கணக்கென்ன? அவைகளின் காரணங்களையும் பலன்களையும் எளிதில் கண்டுபிடிக்கமுடியாது. பாபபுண்ணிய பலன்களைப் பகுத்துக்கொடுக்கிறவர் தருமதேவதையே யெ"ன்றார். பீமன்

"திரௌபதியைக் கௌரவ சபையில் தாசியைப்போல் இழுத்துக்கொண்டுவந்த பிராதிகாமியை நான் அப்பொழுதே கொல்லாமல் விட்டதால் நமக்கு இந்தக் கஷ்டம் நேர்ந்திருக்கிறதெ"ன்றான். அர்ஜுனன், "அற்பனான கர்ணன் சொன்ன கொடிய வார்த்தைகளை நான் பொறுத்துக் கொண்டிருந்ததால் இக்கஷ்டம் நமக்கு நேர்ந்திருக்கிறதெ"ன்றான். சகதேவன் "சூதில் வஞ்சகமாய் நம்மை ஜயித்த சகுனியை நான் அப்பொழுதே கொன்றிருந்தால் இந்த அவமானம் நமக்கு நேர்ந்திராதெ"ன்றான். யுதிஷ்டிரர்; "நகுலா! நாம் தாகத்தால் வருந்துகிறோம். எங்கேயாவது தேடி, ஜலங்கொண்டுவாவெ"ன்றார்.

நகுலன் கொஞ்சதூரம் சென்று பார்க்கையில், ஓர் விசாலமான ஏரி, படிகம்போல் தெளிந்த ஜலத்துடன், தாமரை மலர்களால் அலங்கரிக்கப்பட்டு விளங்கினதைக் கண்டான். அதிக ஆவலுடன் அதில் இறங்கித் தன் தாகத்தைத் தணித்துக்கொள்ளப் போகையில், ஆகாயத்திலிருந்து ஒரு சத்தம் கேட்டது. "குழந்தாய்! உனக்கு முந்தியே, இந்த ஏரி என் சுவாதீனத்திலிருக்கிறது. என் உத்தரவில்லாமல் அதில் இறங்காதே. என் கேள்விகளுக்குப் பதில்சொல்லி, பிறகு இந்த ஜலத்தைக் குடித்து எடுத்துக்கொண்டுபோவெ"ன்று சொன்ன யக்ஷனுடைய சொல்லைக் கேட்டும், நகுலன் தாகத்தால் பிரக்ஞையற்று, அந்த எச்சரிக்கையை அலட்சியஞ்செய்து, ஏரியில் இறங்கி, குளிர்ந்த ஜலத்தைக் குடித்து, உடனே பூமியில் விழுந்து இறந்தான்.

அவன் வரத் தாமதித்ததைக் கண்டு, யுதிஷ்டிரர் சகதேவனையும் அர்ஜுனனையும் பீமனையும், வரிசையாய் அனுப்பினார். நகுலனுக்கு நேர்ந்த கதி சகதேவனுக்கும் நேர்ந்தது. அர்ஜுனன் ஆகாயவாணியைக் கேட்டு, "நீ வீரனாயிருந்தால் எனக்கெதிரில் வா. என்னைத் தடுத்துப்பார். அப்பொழுது என் பாணங்களுக்கு இரையாவாயெ"ன்று வில்லை வளைத்து நாணேற்றிக், கண்ணுக்குத் தெரியாத வஸ்துக்களை அவைகளின் சப்தத்தால் இருக்குமிடமறிந்துஅடிக்கும் சப்தவேதியென்ற வித்தையைக் கற்றவனாகையால், பயங்கரமான பாணங்களால பூமியையும் ஆகாயத்தையும் நாற்றிசைகளையும் மறைத்தான். அப்பொழுது அந்த யக்ஷன் "அடே பார்த்தா! ஏன் வீணாய் சிரமப்படுகிறாய்? என் கேள்விகளுக்குப் பதில் சொல்லிப் பிறகு இந்த ஜலத்தைக் குடியெ"ன்றான். தனஞ்ஜயன் அதை லட்சியஞ் செய்யாமல் இறங்கிக் குடித்துப் பிணமாய் விழுந்தான். பீமன் அங்கே வந்து, தன் தம்பிமார்கள் இறந்துகிடப்பதைப் பார்த்து, "யாரோ ஒரு ராக்ஷதனோ யக்ஷனோ இப்படிச் செய்திருக்கவேண்டும். அவனுடன் பலமான யுத்தம் செய்யவேண்டியிருக்கு மாகையால் முதலில் என் தாகத்தையும், சிரமத்தையும் தீர்த்துக்கொண்டு, பிறகு மற்றவைகளைப்பற்றி யோசிப்போமெ"ன்று யக்ஷனால் தடுக்கப்பட்டும், ஏரியில் இறங்கிக் குடித்து, பிணமாய்க் கீழே விழுந்தான்.

அவர்கள் வெகுநேரம் வரையில் திரும்பி வாராததைக் கண்டு, தருமபுத்திரர் கவலைகொண்டு, அவ்வழியே ஏரிக்கரைக்கு வந்து, அவர்களுக்கு நேர்ந்த கதியைக்கண்டு அடங்காத் துயரங்கொண்டு பிரலாபித்தார். அவர்கள் தன்னால் அடைந்த எண்ணிறந்த கஷ்டங்களையும் அவமானங்களையும், தனக்காக அவைகளைப் பொறுத்துக்கொண்டு தங்களுடைய பலபராக்கிரமத்தை உபயோகிக்காமலிருந்ததையும், சகல க்ஷேமங்களையும் அடையலாமென்று அவர்களையே தான் நம்பியிருந்ததையும் சொல்லிப் புலம்பி, "ஐயோ! உங்களுடைய பிரதிக்ஞை வீணாயிற்றே! உங்களைப் பறிகொடுத்து நான் எதற்காகப் பிழைத்திருக்க வேண்டும்? உங்களைக் கொன்றவர் யார்? இங்கே உங்களுடைய அடிச்சுவடுகளைத் தவிர வேறொருவர் வந்ததாய்க் காணவில்லையே! உங்களுடைய தேகங்களில் பாணங்களாலாவது ஆயுதங்களாலாவது, யாதொரு காயமுமில்லையே! நிகரற்ற பலபராக்கிரமத்தையும் அபூர்வமான வரங்களையும் பெற்ற உங்களை யார் கொல்லமுடியும்? ஒருவேளை நமது சத்துருவான துரியோதனன் சகுனியின் யுக்தியைக் கேட்டு, இந்த ஏரியில் விஷங்கலந்து நம்மைக் கொல்ல இப்படி உபாயம் தேடினானோ? அல்லது வேறு எந்தத் தேவதை இந்த வீரர்களைக் கொன்றதோ? எப்படியானாலும், என் களையைத் தீர்த்துக்கொண்டு இதை ஆழ்ந்து யோசிக்க வேண்டுமெ"ன்று ஏரியில் இறங்கி நீரைக் குடிக்கப்

சிறியோர் செய்த சிறுபிழையெல்லாம் பெரியோராயினும் பொறுப்பது கடனே.

போகையில் ஆகாசத்திலிருந்து யக்ஷன் "தரும புத்திரா! பாசியையும் மீனையும் தின்று பிழைக்கும் நான், ஒரு நாரை. உன் தம்பிகள் என் வார்த்தையை மீறி இதில் இறங்கினதால் என்னால் மரணமடைந்தார்கள். நீயும் அப்படிச் செய்யாமல் என் கேள்விகளுக்குப் பதில் சொல்லிவிட்டு உன் தாகத்தைத் தீர்த்துக் கொள்ளெ"ன்றான்.

யுதிஷ்டிரர்: "ஐயா! தாங்கள் யார்? வஸுக்களிலும் ருத்திரர்களிலும் மருத்துக்களிலும் சிரேஷ்டமானவரோ? கேவலம் ஒரு நாரை, இப்படிச் செய்திருக்கமுடியாதே. அஷ்டகுல பருவதங்களைப்போன்ற என் தம்பிகளைக் கொல்வது எளிதாவெ"ன்றார்.

யக்ஷன்: "பாண்டவ சிரேஷ்டா! நான் நாரைரூபந் தரித்திருக்கும் யக்ஷன். உன் தம்பிகளை நானே கொன்றேனெ"ன்றான்.

யுதிஷ்டிரர் சமீபத்தில் சென்று, ஆகாயத்தை யளாவி, தேஜோமயமாய்ச் சகல திககுகளையும் விளங்கச் செய்துகொண்டு நிற்கும் யக்ஷனைக் கண்டு நமஸ்கரித்துச் "சுவாமி! தங்களுடைய தான இந்த வாரியில் அனுமதியின்றி இறங்க மாட்டேன். என்னைப்பற்றி நானே புகழ்ந்து கொள்வது தருமமல்ல. ஆனாலும், தாங்கள் கேட்கும் கேள்விகளுக்கு எனக்குத் தெரிந்தவரை பதில் சொல்லுகிறேனெ"ன்றார்.

யக்ஷன்: சூரியனை உதிக்கச் செய்கிறவர் யார்? அவருக்குச் சமீபத்திலிருப்பவர் யார்? அவரை அஸ்தமிக்கச் செய்கிறவர் யார்? அவர் எதை ஆதாரமாகக் கொண்டிருக்கிறார்?

யுதி: சூரியனை உதிக்கச்செய்வது பிரமமே. அவருக்குச் சமீபத்தில் தேவதைகளிருக்கிறார்கள். தருமம் அவரை அஸ்தமிக்கச்செய்கிறது. அவர் சத்தியத்தை ஆதாரமாகக்கொண்டிருக்கிறார்.

யக்ஷன்: சுரோத்திரியனுடைய லக்ஷணமென்ன? உத்தமமான புருஷார்த்தத்தை ஒருவன் எப்படி அடைகிறான்? ஒருவனுக்குத் துணையை எப்படிச் சம்பாதித்துக் கொள்ளலாம்; ஒருவன் எப்படி ஞானத்தை அடையலாம்?

யுதி: வேதாத்தியயனத்தால் ஒருவன் சுரோத்திரியனாகிறான். தவத்தால் ஒருவன் உத்தமமான புருஷார்த்தத்தை அடைகிறான். தெளிந்த புத்தியுடையவனே உற்ற துணையை யுடையவன். பெரியோர்களுக்குப் பணிவிடை செய்வதே ஞானத்தைக் கொடுக்கும்.

யக்ஷன்: பிராமணர்களுக்குள்ள தெய்விக குணம் எது? அவர்களுடைய எந்த ஆசாரங்கள் ரிஷிகளின் அனுஷ்டானத்தை ஒத்திருக்கும்? அவர்களில் மனிதகுணம் எது? அவர்களில் எந்த அனுஷ்டானம் துஷ்டர்களுடைய ஆசாரத்தை ஒத்திருக்கும்?

யுதி: வேதாத்தியயனமே அவர்களுடைய தெய்விககுணம். தவமே ரிஷிகளின் அனுஷ்டானத்தைப்போன்றது. மரணமே அவர்களுக்கு மனித குணம். பிறரைத் தூஷிப்பதே துஷ்டர்களின் ஆசாரத்தை ஒத்தது.

யக்ஷன்: க்ஷத்திரியர்களின் தெய்விக குணம் எது? அவர்களின் எந்த அனுஷ்டானம் சாதுக்களின் ஆசாரத்தைப் போன்றது? அவர்களின் மனித குணம் எது? அவர்களின் எந்த அனுஷ்டானம் துஷ்டர்களின் நடத்தையைப் போன்றது?

யுதி: பாணங்களும் ஆயுதங்களுமே அவர்களுடைய தெய்விக குணம். யாகங்களைச் செய்வதே சாதுக்களின் அனுஷ்டானத்தைப் போன்றது. பயமே அவர்களுடைய மனித குணம். வருந்துகிறவர்களைக் கைவிடுவதே துஷ்டர்களின் நடத்தையைப் போன்றது.

யக்ஷன்: யாகத்தில் உபயோகப்படும் சோமம் எது? யாகத்தில் உபயோகப்படும் யஜுஸ் எது? எது இல்லாமல் யாகத்தை நடத்த முடியாது?

யுதி: உயிரே அந்தச் சோமம், மனமே அந்த யஜுஸ்: ருக்வேத மந்திரங்களில்லாமல் யாகம் நடக்காது.

யக்ஷன்: குடியானவர்களுக்கு மிகுந்த அவசியமான விஷயம் எது? க்ஷேமத்தை விரும்புகிறவர்களுக்கு மேலான பிரயோஜனத்தை எது கொடுக்கும்? குழந்தைகளைப் பெறுகிறவர்களுக்கு எது மேலானது?

யுதி: பயிரிடுகிறவர்களுக்கு மழையே மிகவும் முக்கியமானது. நாற்று நடுகிறவர்களுக்கு விதையே முக்கியமானது. க்ஷேமத்தை விரும்புகிறவர்களுக்குப் பசுவே முக்கியமானது. குழந்தைகளைப் பெறுகிறவர்களுக்குப் புத்திர பாக்கியமே மேலானது.

❀❀❀

பிரதம கல்விச்சாலைகளின் நோக்கம்

THE AIM OF ELEMENTARY SCHOOLS

[ஸ்ரீமான் பு. சீதாராமய்யரவர்கள், பீ.ஏ., எல்.டி.]

"எண்ணென்ப வேனையெழுத் தென்ப விவ்விரண்டும்
கண்ணென்ப வாழு முயிர்க்கு"

"அறம் பொரு ளின்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையு நாட்டும் - உறுங்கவலொன்
றுற்றுழியுங் கைகொடுக்குங் கல்வியி னூங்கில்லை
சிற்றுயிர்க் குற்ற துணை"

என்று பெரியோர் கூறியிருத்தலாலும், நம் முன்னோர்கள் அடைந்த இசபர சாதனங்களுக்கும் தற்காலத்திய எண்ணிறந்த நவீன அற்புதச் செயல்களுக்கும், நாகரிக மேன்மைக்கும் சாஸ்திர ஆராய்ச்சியும் கல்வியின் அபிவிருத்தியுமே முக்கிய காரணமென்பது அனைவரும் அறிந்த விஷயமே. ஆகையால் கல்வியின் மேம்பாட்டை வற்புறுத்த இதர ஆதாரங்கள் எடுத்து விவரிப்பது அனுவசியம். ஒரு தேசத்தின் மேம்பாட்டை யறிந்துகொள்வதற்கு அந்நாட்டாரின் கல்விப் பயிற்சியே சிறந்த அறிகுறியாகும். உலகரக்ஷகனாகிய ஸ்ரீராமபிரான் ஆண்ட கோஸல நாட்டிலேயும்,

"கல்லாது நிற்பார் பிறரின்மையிற் கல்வி முற்ற
வல்லாரு மில்லை யவைவல்ல ரல்லாரு மில்லை"

என்று வர்ணிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் தற்காலத்திலோ, நமது தேசத்திலிருக்கும் ஜனங்களுக்குள் எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் வெகு சுவல்பமே. இத்தகைய நன்மைகளைப் பயக்கவல்ல கல்வியை, ஏராளமாய் தேசத்தா ரெல்லோருக்கும் புகட்ட வேண்டுவது நமது முதன்மையான கடமையாகும். இராஜாங்கத்தாரும் தங்களா லியன்றவரையில், இவ்விஷயமாய் உதவி புரிந்துவருகிறார்கள். கூடிய சீக்கிரத்தில் கட்டாயப்படிப்பு சட்டமும் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டு, ஜனங்களது அஞ்ஞான இருளைப் போக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. இவ்விதமான பிரதம கல்வியை கிராமங்களிலும், நகரங்களிலும், எண்ணிறந்த சிறிய பாலர்களுக்குப் புகட்டுவதிலேயே தங்கள் வாழ்நாளைக் கழித்தும், அக்குழந்தைகளின் அபிவிருத்தியை யநுசரித்து தங்களது சுயநன்மையையே யதிகமாகக் கருதாது உழைத்துவரும் பிரதம கல்விச்சாலைகளின் ஆசிரியர்களுக்கு, இந்த ஸஞ்சிகையிலும் பின் வரும் ஸஞ்சிகைகளிலும், அவர்கள் தொழிலுக்குச் சாதனங்களாகக் கருதப்பட்ட சில விஷயங்களைக் கூறுவதாக உத்தேசித்திருக்கிறோம். இங்கே விவரிக்க உத்தேசித்திருக்கும் விஷயங்கள் புதுமையானவைகளல்ல; நூதனமானவைகளு மல்ல. கூறும் விஷயங்கள் எல்லோருக்கும் முன்பே தெரிந்தவைகளா யிருந்த போதிலும், அவைகளைத் தொகுத்து பாகுபாடு செய்து, தெளிவாய் விளங்கும்படிச் செய்வது, அவ்வாசிரியர்களுக்கு ஊக்கத்தை யூட்டியும், சந்தேகங்களைத் தீர்த்தும் அவர்களது அறிவை விசாலப்படுத்தும்.

கற்பிக்கவேண்டிய விஷயங்களில் பூரணமான ஞான மிருந்தால், பாலர்களுக்கு எதையும் கற்பித்துவிடக்கூடு மென்றும், அவ்வண்ணம் கற்பிப்பதற்கு, ஆசிரியர்களுக்கு வேறெவ்விதமான பயிற்சியாவது அப்பியாஸமாவது, இருக்கவேண்டியது அனுவசியமென்றும், சிலர் அபிப்பிராயப் படுகிறார்கள். நோயாளிகளுக்குச் சிகிச்சை செய்யும் வைத்தியர்களுக்கும், உலக விவகார சம்பந்தமான நியாயங்களை வாதஞ் செய்யும் நியாயவாதிகளுக்கும், அவரவர்கள் தொழில்களில் மேன்மை பெற, எப்படி பிரத்தியேகமான பயிற்சியும், அநுபவமும் வேண்டியிருக்கிறதோ, அதே மாதிரியாக, பிள்ளைகளுடன் பழகி, அவர்களுக் கேற்றவாறு போதித்து, அவர்களைச் சன்மார்க்க குண சீலர்களாகச் செய்விக்கும் ஆசானுக்கும், அவர் தொழிலுக்கு வேண்டிய பயிற்சியும், அநுபவமும் இருக்கவேண்டும். குழந்தைகளின் ஸ்வபாவங்களையும், அவர்கள் தேகமனோ சக்திகள் தினே தினே வளரும் தன்மையையும், அவர்களுக்குப் போதிக்க வேண்டிய முறைகளையும், ஒவ்வொருவரும் நன்றாய் அறிந்து கொள்ள வேண்டும். இவ்விஷயங்களுக்கு அநுசரணையாக தேகதத்வ சாஸ்திரம், பாலர்கள் மனோ அபிவிருத்தி சாஸ்திரம் முதலிய விஷயங்களில் தகுந்த பயிற்சியடைய வேண்டியது இன்றியமையாதது.

பிரதம கல்வியை யாரம்பித்து பாலர்களுக்குப் புகட்டுகிற ஒவ்வொரு உபாத்தியாயரின் முக்கியமான நோக்கம் என்ன வென்பதைச்

சிறிது ஆலோசிப்போம். அவர்கள் கடைசியாக எவ்விதமான பலனை அடைய உத்தேசித்து, பிரதி தினமும் பள்ளிக்குச் சென்று தங்கள் வாழ்நாளை பாலர்களி னிடையே கழித்து வருகிறார்கள்? இவ்விஷயத்தை ஒவ்வொரு உபாத்தியாயரும் சற்று நிதானித்து செம்மையாய் ஆராய்ந்து, தங்களுடைய உண்மையான நோக்கத்தையும், அவ்வித நோக்கத்தைப் பூரணமாக அடைய வேண்டின், அதற்கேற்றஸாதனங்களையும், கைக்கொண்டபிறகே தன்வேலையையாரம்பிக்கவேண்டும். தம்மிடம் பெற்றோர்களால் விடப்பட்ட பாலர்கள், நான்கு அல்லது ஐந்து வருஷகாலம் கழிந்த பிறகு, அவரவர்களுக்கேற்பட்ட வித்தியா இலாகா பரிக்ஷைகளில் தேறினால், தாம் ஏற்றுக்கொண்ட கடமையைச்சரியாய்நடத்தினதாகக் கருதுவர் சிலர். கல்வி இலாகா உத்தியோகஸ்தர்கள் வருஷந்தோறும் செய்யப்பட்ட தணிக்கைகளில் அவ்வுத்தியோகஸ்தரைத் திருப்தி செய்துவிட்டால், தாம் ஏற்றுக்கொண்ட சங்கல்பம் நிறைவேறி விட்டதாகக் கருதுவோர் மற்றொரு சிலர். பெற்றோர்கள் மனது திருப்தியடையும் பொருட்டு, எக்காலமும் பள்ளியிலேயே யிருந்து, பிள்ளைகளைக் கூட்டமிட்டு, அவர்களை எந்த முகாந்தரத்தைக்கொண்டும் வீட்டிற் கனுப்பாமலும், வேறெவ்விதமாகவும் பிள்ளைகள், தங்கள் பெற்றோர்களைத்தொந்தரவு செய்யாமற்படிக்கும் கவனித்துக்கொண்டால், அதுவே தங்கள் கடமையைச் சரிவரச் செய்துவிட்டதற் கடையாளமாக, வேறு சிலர் எண்ணுகிறார்கள். ஆனால் ஒவ்வொரு ஆசானுடைய உண்மையான நோக்கம் இவைகளெல்லாமல்ல. ஒவ்வொரு பிள்ளைக்கும் ஏற்ற ஜீவனோபாயத்திற்கு வேண்டிய ஞானத்தைச் சம்பூர்ணமாய்க் கற்பிக்க வேண்டும். பாலர்களது மனோசக்தியை அபிவிருத்தி செய்வதனாலும், உலக விஷயங்களைப்பற்றி அவர்களுக்குப் பூரண ஞானம் ஏற்படும்படி போதிப்பதாலும் அவரவர்கள் தங்கள் உலக வாழ்க்கையிலே சம்பவிக்கக்கூடிய சுகதுக்கங்களையும், இடையூறுகளையும் தங்கள் புத்தியின் மேன்மையால் சிறிதேனும் கஷ்டமின்றி நிர்வகிக்கக்கூடிய சக்தியை யமைக்க வேண்டும். ஒவ்வொரு ஆசானும் தன் சிஷ்களங்கமான குணத்தாலும், எவரும் சிலாகிக்கக்கூடிய சன்மார்க்க நன்னடக்கைகளாலும், பிள்ளைகளுக்குச் சன்மார்க்க போதகராயிருந்து, அப்போதைக்கப்போது, அவர்கள் செய்யும் துஷ்கிருத்தியங்களைக் கண்டித்தும், துன்மார்க்கத்திலிருந்து அவர்களை நிவர்த்தித்தும்; தேசாபிமானிகளாகவும், சன்மார்க்கர்களாகவும், ராஜபக்தி நிரம்பிய மேன்மையான நகரவாசிகளாகவும் செய்ய வேண்டும். மேற்கூறியவைகளே, ஒவ்வொரு உபாத்தியாயருடைய முக்கியமான நோக்கங்களாகும். பிள்ளைகளோடு பள்ளியில் பழகுங்கால், இந்நோக்கங்களையே பெரிதாக எண்ணி இவைகளைப் பரிபூரணமாக நிறைவேற்றுவதற்குத் தகுந்த சமயங்கள் வாய்க்கும்பொழுது அவைகளைச் செம்மையாக உபயோகிக்கவேண்டும். பாடங்கள் கற்பிக்கும்போதும் அவர்களுடன் பேசும்போதும் விளையாடும்போதும் மற்ற எப்போதும் மேன்மையான ஒழுக்கங்களையே அவர்க்குப் புகட்டி, அவர்களை மேம்பாடடையச் செய்வதே முதற் கடமையாகக் கருத வேண்டும்.

மேலே விவரிக்கப்பட்ட நன்மைகளைச் சிறுவர்களுக்குச் சிறிதாவதுபயக்கவேண்டின், ஒவ்வொரு உபாத்தியாயரும் தன் போதனைக்குட்பட்ட பாலர்களின் மனோபாவங்களை, ஜாக்கிரதையாக அறிந்துகொள்ள முயலவேண்டும். ஒவ்வொரு தொழிலாளியும், தான் வேலைசெய்யும் மரம் அல்லது கல்லின் தன்மையைச் செம்மையாய் அறிந்த பிறகே, அதற்கேற்ற ஆயுதங்களைக்கொண்டு தன்னிடம் கொடுக்கப்பட்ட வஸ்துவிலிருந்து சித்திரப் பதுமைகளை யமைக்கிறான். அதேமாதிரியாகத் தன்னிடம் கொடுக்கப்பட்ட சிறுவர் சிறுமிகளின் மனோபாவங்களையும், மனோநிலையின் அபிவிருத்தியையும், முழுவதும் அறிந்தபிறகே அப்போதைக்கப்போது ஏற்றவாறு சொல்லியும் போதித்தும் அவர்களைச் சீர்திருத்தலாம்.

சிறு குழந்தைகளின் இயற்கையான தன்மைகளில் ஒவ்வொரு ஆசிரியரும் முக்கியமாய் அறிந்துகொள்ளவேண்டிய சில குணாதிசயங்களைச் சற்று கவனிப்போம்.

முதலாவது: சிறிது பொழுதேனும் சோம்பலாயிராமல் எப்பொழுதும் எவ்விதமாவது சுறுசுறுப்பாயிருத்தல். பாலர்கள் எப்போதும் விளையாடியோ, அல்லது பார்க்கும் சாமான்களை

உடைத்தோ அல்லது வேறுவிதமான காரியங்களைச் செய்தோ காலங் கழிக்கிறார்கள். கைகளாலும் கால்களாலும் வேலைசெய்யாமல் சிறிது நேரமும்சும்மாயிருப்பதில்லை. வீட்டிலிருக்கும் பண்டங்களைப் பாழாக்கியும் தட்டுமுட்டு சாமான்களை யுடைத்தும், தண்ணீரைப் பெருக்கியும், தன்னைப்போன்ற சிறுவருடன் ஆடியும் குதித்தும் ஓடியும், ஒருவேலையும் அகப்படாதிருந்தால், அழுதும் காலம் போக்குகிறார்கள்.

இரண்டாவது: பிறர் செய்வதைத் தானும் செய்ய முயலுதல். குழந்தைகள் எப்பொழுதும் பெரியவர்கள் செய்வதைத் தாமும் செய்யப் பிரயத்தனப்படுவதை ஒவ்வொரு நாளும் நாம் காண்கிறோம். வீட்டிலிருக்கும் பெரியவர்களைப் போல் தாமும் ஆடையுடுத்திக்கொள்ளவும் பேசவும் நடமாடவும் வேறு காரியங்களைச் செய்யவும் பாலர்கள் ஆசைப்படுகிறார்கள். அக்காரியங்களை முழுதும் செய்து முடிக்கத் தாம் சக்தியற் றிருப்பதைக்கண்டு, அவர்கள் துக்கப்படுவதையும் பார்க்கலாம். இந்த குணாதிசயம் குழந்தைகளிடம் அதிகமாகக் காணப்படுவதால், வீட்டிலிருக்கும் பெரியோர்களும் பாலர்களுடன் பழகும் மற்றவர்களும் எப்போதும் நன்மார்க்கத்தையே அநுசரிக்கவேண்டுவது அவசியமாகிறது.

மூன்றாவது: நூதன விஷயங்களை ஆராய்ந்து தெரிந்து கொள்ளவேண்டுமென்கிற அவா. குழந்தைகள் ஏதாவது புதிதான வஸ்துவைக் கண்டவுடனே, அதைக் கைகளினால் தடவிப்பார்த்தும் ஓதரவிதமாய்ச் சின்னாபின்னப்படுத்தியும், அதிலிருக்கும் நூதனம் அவர்களுக்குப் பழக்கப்படும் வரையில், அவ்வஸ்துவைக் கையாடுகிறார்கள். இந்த அவா மேலிட்டிருப்பதால், அநேக குழந்தைகள் தங்களிடம் கொடுக்கப்பட்ட விளையாட்டு சாமான்களை வெகு சீக்கிரத்தில் சின்னாபின்னப் படுத்துகிறார்கள்.

மேற்கூறிய மூன்று முக்கியமான நற்குணங்களைத் தவிர, குழந்தைகளுக்கு இயற்கையாகவே சில துர்க்குணங்களும் பொருந்தியிருக்கின்றன. அவைகளிற் சிலவற்றைக் கவனிப்போம்.

முதலாவது: குழந்தைகள் எவ்விஷயத்திலும் நீடித்த கவனம் செலுத்துவதில்லை. இதனால்தான் அநேக சிறு குழந்தைகள் சிலநேரம் அழுதுகொண்டும், உடனே சிரித்து விளையாடிக்கொண்டு மிருக்கின்றன. இவ்வியற்கைச் சுபாவமே குழந்தைகளைத் தங்களது புத்தியறியாத பருவத்தில் அதிகத் துன்பத்திலிருந்து பாதுகாக்கின்றது.

இரண்டாவது: குழந்தைகள் எதையும் பூரணமாகப் பார்ப்பதுமில்லை; கவனிப்பதுமில்லை. செய்யும் காரியங்களும், பேசும் வார்த்தைகளும், எப்போதும் அரைகுறையாகவே யிருக்கின்றன. காரண காரிய சம்பந்தங்களும் குழந்தைகளுக்கு இளமைப் பருவத்தில் ஏற்படுவதில்லை. அவர்கள் வார்த்தைகளும் செய்கைகளும் கோர்வையில்லாமலும் ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாமலு மிருக்கும்.

மூன்றாவது: தங்களைச் சுற்றியிருக்கும் வஸ்துக்களைக் குறித்தாவது, அவர்கள் பழகும் விஷயங்களைப் பற்றியாவது, அவர்களுக்குக் கிரமமான ஞானம் ஏற்படுவதில்லை. அவர்களுக்கு இயற்கையாய் ஏற்படும் அரைகுறையான ஞானத்தைத் தகுந்த வண்ணம் சீர்திருத்திப் பூரணமாக்குவதே ஆசிரியரது முக்கியமான கடமையாகும்.

இதற்கடுத்த சஞ்சிகைகளில் மேற்கூறிய சுபாவங்களின் ஞானத்தைக்கொண்டு குழந்தைகளை எவ்வாறு சீர்திருத்தவேண்டுமென்பதைப்பற்றியும், இச்சுபாவங்களை நன்கறிந்த உபாத்தியாயர் பிள்ளைகளை எவ்விதம் நடத்தி மேம்பாடடையச் செய்விக்கவேண்டுமென்பதைப்பற்றியும் விவரிப்போம்.

இயற்கை அற்புதங்கள்

(துரைத்தனத்தார் அங்கீகரித்தது.)

இது ஆ. வீ. கஸ்தூரிரங்கய்யர் பி. ஏ., எல். டி. அவர்கள் செய்தது. ரிடையாடு ஸ்கூல் இன்ஸ்பெக்டர் காலஞ்சென்ற ராவ்பஹதூர் L. C. வில்லியம்ஸ் பிள்ளை அவர்கள் எழுதிய முகவுரையுடன் கூடியது. இதிலடங்கிய விஷயங்கள் : 1. மழைக்கால்கள் ; 2. எரிமலை 3 பூகம்பம் ; 4. வெந்நீர், ஊற்றுகள் 5. கானல் வரும் அதன் ரூபாந்தரங்களும் ; 6 வால் நக்ஷத்திரங்கள் ; 7 எரி நக்ஷத்திரங்களும், பொழி நக்ஷத்திரங்களும ; 8 வானவில் 9 நிழலும் கிரகணங்களும் ; 10 ஹாலிவால் நக்ஷத்திரம் 11. மொழிபெயர்ப்பு விளக்கம். இதில அநேக படங்களும் அழகாய் அச்சிட்டுச் சேர்க்கப்பட்டிருக்கின்றன. விலை அணா 8.

கபிலர்

KAPILAR

[ஸ்ரீமான் பண்டித உலகநாதப்பிள்ளை அவர்கள்.]

(284-ம் பக்கத் தொடர்ச்சி)

அவன் இயல்பை, நன்குணர்ந்த கபிலர் "ஆரிய நாட்டரசே! நின்பொருட்டாக செய்யுள் ஒன்றுபாடிக் கொணர்ந்துளேன்; அது, இன்றளவும் நீ கேட்டிராததும், தமிழ் மொழிக்கே உரியதுமாகிய அகப்பொருள் மேலது; ஆதலால், பொருளிலக்கணத்தைச் சிறிதுணர்த்திப், பின்னர் நூலை விரித்துரைப்பேன்: கேட்பாயாக:

இம்மை மறுமைகளில், உயிர்க்கு உறுதி பயப்பதென நன்மக்களால் வேண்டப்படுவது யாது, அது பொருள் என்று சொல்லப்படும். அது, அறம் பொருள் இன்பம் வீடு என நான்கு வகைப்படும். அவற்றுள், வீடென்பது மன மொழிகளுக்கு அப்பாற்பட்டது. அதனை அடைவதற்குச் சாதனங் கூறுவதல்லது, இலக்கணம் கூறுதற் கருமையின், நூல்களாற் கூறப்படுவன ஏனைய மூன்றுமேயாம்.

இனி, செய்வனவும் தவிர்வனவும் இன்னவையென வரையறுக்கப்பட்டவை அறமாகும். அரசநீதி துணைக்காரணமாக அறநெறியில் ஈட்டப்படும் நெல், மணி, பொன் முதலாயின பொருளாகும். ஒருகாலத்தில், ஒரு பொருளால் ஐம்புலன்களும் நுகர்தற் சிறப்புடையது இன்பம்.

இவை, அகத்தும் புறத்தும் நிகழும் ஒழுக்கமாதலால், அகப்பொருள் எனவும் புறப்பொருள் எனவும் கூறப்படும். இவற்றை முறையே, அகத்திணை என்றும், புறத்திணை என்றும் வழங்குவர். அகம்—உள்ளம்; திணை-ஒழுக்கம். அது, ஒத்த அன்பினால், ஒருவனும் ஒருத்தியும் கூடும் கூட்டத்திற் பிறந்து, அவர் உள்ளத்தின்கண் நிகழ்வதாகிய இன்பமாகும். அவ்வின்பத்தையே, அகத்திணை எனப் பகுத்துரைத்தனர் சான்றோர்.

இவ்வகத்திணை, கைக்கிளை, பெருந்திணை ஐந்திணை எனனும் ஏழினையும்பற்றி நிகழும். இவை முதற் பொருள் கருப்பொருள், உரிப்பொருள் என்னும் மூன்றானும் சொல்லப்படும்; கைக்கிளை என்பது ஒரு தலைக்காமம்; பெருந்திணை என்பது பொருந்தாக்காமம்; ஐந்திணை என்பது அன்புடைக்காமம்; ஐந்திணைக்குரிய பெயர், குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்பன.

இவ்வைந்திணையிடத்துக், களவு கற்பு என்னும் இரண்டு ஒழுக்கமும் நிகழா நிற்கும்; இவற்றுள், களவு என்றது கந்தர்வ வழக்கப்படிக் காதலன் காதலியை அடைவது; அங்ஙனம் அடைந்த காதலியைக் காதலன் மறை விதிப்படி மணஞ் செய்துகொண்டு இல்லறம் நடத்துவது கற்பாகும்.

இவ்வாறு ஒத்த அன்பினராய தலைமகனும் தலைமகளும் தம்மில் மனமிசைந்து இல்லற நடத்திப், பின்னர்ப் பற்று விட்டுத் துறவற மேற்கொண்டு, மெய்யுணர்வு பெற்று வீடு பெறுவர்; ஆகவே, அகப்பொருளின் முடிந்த பயன் வீடடைவதாகும்; இவற்றை விரிக்கில் பெருகும்; விரிந்த நூலில் கண்டு கொள்க. இனி, அறமும் பொருளும் புறப்பொருள் எனப்படும். இவை, புறம்பே நிகழும் ஒழுக்கமாதலால், எல்லோராலும் அனுபவித்தறிந்து பிறர்க்கும் சொல்லப்படுவன ஆயின. இப்புறப்பொருள், வெட்சி, வஞ்சி, உழிஞை தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் என ஏழு வகைப்படும். ஏனையவற்றை அறிஞர் வாய்க் கேட்டுணர்க" எனப் பொருள் இலக்கணத்தைச் சுருங்க உரைத்துக் குறிஞ்சிப் பாட்டை விரித்து விளக்கினர்.

தமிழின் அருமையும், அகத்திணை இயல்பும் சிறிதுணர்ந்து அவற்றை விரிவாக அறிவதற்கு ஆர்வமுற்ற பிரகத்தன், கபிலரைப் பன்முறையும் கைகுவித்திறைஞ்சி, "என் இழிதகைமை நீக்கி எழுத்தறிவிக்க வந்த எந்தாய்! தமிழைப் போல இனிமை தருவதோர் மொழி பிறிதில்லை என்பதறிந்தேன்; பொருளிலக்கணம் மிகச் சுருங்க உரைத்திட்டமையின் என் மனதிற்கு இன்னும் அமைந்திலது; அதன் அகலம் கேட்கப் பெருங்காதல் கொண்டுள்ளேன்" எனப் பணிந்து நிற்க, அவரும் மனமுவந்து, இலக்கண இலக்கியங்களை வரன் முறையே விரித்துணர்த்த உணர்ந்து புலமை நிரம்பிய பின், 'இருகாற் கேட்பின் பெருக நூலிற் பிழைபாடிலன்' என்பதற்கிணங்கக், குறிஞ்சிப் பாட்டை மீளவும் விரும்பிக் கேட்டு அந்நூலிலுள்ள சொல்வனப்பும், பொருளின் மாட்சியும் நன்குணர்ந்து உரைப்பானாயினன்.

"புலவர் பெருமானே! இழுமென்னும் ஓசையும் விழுமிய பொருளும் அமைய நீயிர் இயற்றியுள்ள குறிஞ்சிப்பாட்டை யானே புகழவல்லேன்? மலைவளம் சொல்லப்புகுந்து, மலைகளில் காணப்படும் எண்ணிறந்த பன்மலரையும் எடுத்துக்கூறிய உங்கள் நினைவின் மாட்சி எவர்க்கமையும்? தலைவியினது வேற்றுமை கண்டு, அதனை அறிவதற்குப் பலவாறு முயன்றும், இன்னதென அறியமாட்டாமையால் வருந்திய செவிலிக்கு அறத்தொடு நிற்கும் பாங்கி கூற்றாக எடுத்துக்கொண்டு, தலைவனும் தலைவியும் தம்மில் வைக்கத்தகும் அன்புடைமையும், அவர்கள் நடத்துதற்குரிய இல்லற இயல்பும், தலைவனோடிருந்து அவ்வறம் நடாத்தும் தலைவிக்கு இன்றியமையாத கற்பின் மேம்பாடும், உணர்த்திச் செல்லும் உங்கள் ஆற்றலை என் சொல்லுவேன்? ஒழுக்கம் விழுப்பம் தருவது; அதனை இழுக்கின் இழுக்குண்டாம்; அவ்விழுக்கினைப் போக்கி, முன்னையிற்போல ஒழுக்கமுடையவனாதற்கேற்ற கழுவாயில்லை; வழுவினவற்றிற்கெல்லாம் உய்திறம் அமைத்திட்ட சான்றோர்க்கும் இஃது ஆகாது; என வற்புறுத்துவது என் மனதிற்குப் பெரிதும் உவகை அளிக்கின்றது; இன்னும் 'பூவும் புள்ளும் தத்தமக்கு உரியவாகக் கூறிய நிலத்தொடும் பொழுதொடும் நடவாமல், பிற நிலத்தொடும் காலத்தொடும் வரினும், அவற்றை வந்த நிலத்தின் பொருளாகக் கொள்ளவேண்டும்' என்னும் விதிக்கிணங்கக், குறிஞ்சிக்கும் அதற்குரிய கூதிர்க்காலத்திற்கும் உரிய பூக்களேயன்றி, வேறு நிலத்திற்கும் வேறு காலத்திற்கும் உரியபூக்கள் வரைவின்றி மயங்கிவர இங்குக் கூறியிருத்தல், எம்மனோர்க்கு எத்துணைப் பேருதவியாயிற்று; இக்குறிஞ்சிப்பாட்டை எனக்கு அறிவுறுத்துதல் காரணமாக, முன்னர் உணர்த்திய பொருள் நூல் வடமொழிக்கண் இல்லை என்பதே தேற்றம்; உலகியல் நிறுத்துதற்கண் அதனை ஒப்பதோர் நூல் இல்லை; இல்லற நடாத்து இன்பநுகர்ந்து, பற்றுவிட்டு ஞானமெய்தி, வீடடைவதற்கு ஏதுவாயிருத்தலின், அகப்பொருள் நூல், பெரிதும் பயன் படுவதோர் நூல் என்பது எவர்க்கும் ஒத்ததாகும்.

பொருள் நுட்பமுழுதும் எனக்கு எளிதில் உணர்த்திய பெரியீர்! உமது சொல்வன்மை இருந்தவாறென்னே" என வாயாரப் புகழ்ந்து மனமார வணங்கி, வேண்டுமளவு பரிசளித்துத், தமிழ் நாட்டுவழக்கிற் கிணங்கத் தானும், காலின் ஏழடி பின்சென்று, விடைகொண்டு மீண்டு, தமிழாராய்தலும் செய்யுளியற்றலும் பொழுது போக்காகக் கொண்டு இனிதிருந்தனன்.

இவ்வாறு பயின்று புலமை நிரம்பிய இவன் இயற்றிய செய்யுட்கள் தொகைநூலிற் காணப்படுமாயின், எதிர்ப்பட்டவைகளைப் பொன்னாக்கவல்ல தரிசன வேதிபோலத், தம்மை அடுத்த ஆரியமன்னன் பிரகத்தனைப், பொருட்டுறை தேர்ந்த தமிழ்ப்புலவனாக்கிய புலவர் பெருமானது சதுரப்பாட்டினை என்னென்றுரைப்பேம்?

3. கபிலர் திருமுடிக்காரியைக் காண்டல்

செந்தமிழ் நாட்டைச்சூழ்ந்த பன்னிரு நாடுகளில் மலாடு என்பதோர் நாடுண்டு. மலையமான் என்னும் ஒரு மரபினர்க்கு இடமாயிருந்த காரணம் பற்றி, அது மலையமானாடு என வழங்கும். ஔவைபாடலை உவந்து, தண்ணீரொழிய, நெய்யும் பாலும் தலைப்பெய்து வந்த பெண்ணை யாற்றங்கரைக்கண் உள்ள திருக்கோவலூர், அதற்கு இராசதானி. அது, சிவபெருமானுக்குரிய அட்டவீரட்டத்துள் ஒன்றாகும். அதனை அடுத்துள்ள முள்ளூர் மலையைத் தன் அரணமைந்த அரசிருக்கையாகக் கொண்டு அரசுசெலுத்திவந்தான், திருமுடிக்காரி என்னும் சிற்றரசன்.

அவன், முடியுடைவேந்தர் மூவரும், தன் பகைவரை வெல்லவேண்டின், வேண்டுமளவு பொருள்கொடுத்துத் துணை நாடும் பேராற்றல் உடையவன்; அந்தணர்பால் அன்புடையவனாதலால், தனக்குரிய முள்ளூரில் அன்னவரைக் குடியேற்றியவன்; கொல்லி மலையை ஆண்ட வில்லில் வல்லவனாகிய ஓரி என்பவன், அறியாது பகைகொண்டபோது, தன் கொய்யுளைப் பரியாகிய காரியின் மேலேறிச்சென்று, வென்று வாகை மிலைந்தவன்; எந்த நாளில், எந்நேரத்தில் எச்சமயத்து எவர் எத்தகைய பாடலைச் சொல்லித் தன்னை வந்து காணினும், அவரையும் புறக்கணித்திடாது, அன்னவர் சொன்னவற்றை உவந்து கேட்டுக் கேட்டதற்கிணங்க, வேண்டுமளவு கொடுத்துப் புகழ்பட வாழ்ந்திருந்தனன்.

அவ்வள்ளியோன், இவ்வாறு வரிசை யறியாது யார்க்கும் ஒருபடித்தாக வழங்குவதால், இசையேயன்றி வசையும் உண்டாவதறிந்த கபிலர், அருண்மேவிய உள்ளத்தராகலின், அவற்கு உள்ளதுணர்த்தி நல்லறிவு புகட்டுதல் காரணமாகத் திருக்கோவலூரை அடைந்து அவனது அரசிருக்கையை அணுகினர்.

வாயிலோன் உணர்த்த உணர்ந்த அவனும் இவரை எதிர்கொண்டு வணங்கி,ஏற்ற பெற்றி உபசரிக்க,மகிழ்ந்து உரையாடி இருக்கையில், புலவர், அவனை நோக்கி, வண்மையிற் சிறந்தோய்! ஒரு திசைக்கண் வள்ளியோன் ஒருவன் உளனாயின், அவனை நினைந்து, பலதிசையினின்று பரிசின்மாக்கள் பலரும் வருவர்; அவர் வரிசை அறிதல்அரிது; கொடுத்தல் மிகவும் எளிது; நீ அவ்வரிசை அறிதலை நன்ருகத் தெரிந்தனையாயின், புலவரிடத்து வரிசை கருதாமல் ஒருதரமாகப் பார்த்தலைத் தவிர்ப்பாயாக என்பார்,

"ஒருதிசை யொருவனை யுள்ளி நாற்றிசைப்
பலரும் வருவர் பரிசின் மாக்கள்;
வரிசை யறிதலோ வரிதே; பெரிதும் —
ஈதலெளிதே; மாவண் டோன்றல்
அதுநற் கறிந்தனை யாயிற்
பொது நோக் கொழிமதி புலவர்மாட்டே"

எனப்பாடினர். அதன் பின்னர், புலவர், "வீரக்கழலணிந்த திருந்திய அடியையுடைய காரி! நினது நாடு கடலாற் கொள்ளப்படாது; அதனைக் கொள்ளுதற்குப்பகைவர்ம்மறகொள்ளார்; அது, வேள்வித் தீயைப் பாதுகாக்கும் அந்தணரது; 'மூவேந்தருள் யான் ஒருவன்; நீ எனக்குத் துணையாகவேண்டும்' என மூவேந்தரும் புகழ்ந்து நினக்குத் தரும் பொருள், நுமது குடியை வாழ்த்திவரும் பரிசிலருடையது; அருந்ததியை வியக்கும் நின் மனையாளையலலது, நின்னுடையதென்று சொல்ல ஒன்றுடையையில்லை; அவ்வாறிருக்கவும், நீ பெருமிதமுடையை" என வியந்து,

"கடல் கொளப் படாஅ துடலுந ருக்கார்;
கழல்புனை திருந்தடிக் காரிநின் னுடே
அழல்புறந் தரூஉம் அந்தண ரதுவே;
வீயாத் திருவின் விறல்கெழு தானை
மூவரு ளொருவன் துப்பா கியரென
ஏத்தினர் தரூஉம் கூழே, நுங்குடி
வாழ்த்தினர் வரூஉம் இரவல ரதுவே;
வடமீன் புரையுங் கற்பின் மடமொழி
அரிவை தோளள வல்லதை
நினதெனவிலை; நீ பெருமிதத்தையே"

எனப்பாடி மகிழூட்டினர். அஃதோடமையாமல் அவனை அன்போடு நோக்கிப் "புகழ் விளங்கு மலையமானே! பிறரும் தேர்வழங்கினர் என்பர்; அவையெல்லாம், மதுவை நுகர்ந்து, நாளோலக்கத்து மகிழ்ந்திருக்கையில், வந்திரந்தார்க்கு வழங்கியவாகும்; இவ்வாறு தேர்வழங்குதல் யார்க்கும் எளிது; மது நுகர்ந்து மகிழாமல், நீ பரிசிலர்க்கு வழங்கிய தேர்கள், நின் முள்ளூர் மலைக்கட்பெய்த மழைத்துளியினும் பல என்ருல், 'கொடையும் பிறவிக்குணம்,' என்பதற் கேர்ப, நின் கொடை இயற்கை; ஏனையோர் கொடைசெயற்கை எனச் சொல்லவும் வேண்டுமோ?

"நாட்கள் ளுண்டு நாண்மகிழ் மகிழின்
யார்க்கும் எளிதே தேரீ தல்லே;
தொலையா நல்லிசை விளங்கு மலையன்
மகிழா தீத்த விழையணி நெடுந்தேர்
பயன்கெழு முள்ளூர் மீமிசைப்
பட்டமாரி யுறையினும் பலவே"

எனப்பாடினர். மீட்டும், அவனை நோக்கி, "அருவி முழங்கும் பெருமைவாய்ந்த முள்ளூர் மலையை யுடையோய்! பரிசின்மாக்கள், வள்ளியோன் ஒருவனைக் காணவேண்டின், நல்லநாளில் நிமித்தம் நாடிச் செவ்வி நோக்கிச் சென்று இனியமொழிகளைச் சொல்லிப் புகழுவர்; புகழினும் வறிதாக மீளினும் மீள்குவர்; நின்னைப்பாடியவர், நல்ல நாளன்ருகப் புள் நிமித்தம் இடையே நின்று தடுப்பச், செவ்வியன்ருகச் சென்று, முனியத்தக்க சொற்களைச் சொல்லினும் வறிதே மீள்வாரல்லர் என்ருல் நின்கொடைத் திறனை என்னென்றுரைப்பது!" எனக்கூறி,

"நாளன்று போகிப் புள்ளிடை தட்பப்
பதனன்று புக்குத் திறனன்று மொழியினும்
வறிது பெயர்குவ ரல்லர் நெறிகொளப்
பாடான் றிரங்கு மருவிப்
பீடுகெழு மலையற் பாடி யோரே"

எனப் பாடிய புலவர், "திருமுடிக்காரி! நீ கொடையிற் சிறந்த கோயான் என்பதிற்றடையில்லை; ஆயினும் நின்பாற் குறையொன்றுள்ளது; அஃது என்னென்பையேல் உரைக்குவன் கேள்; வரிசையறியாது பரிசிலர்க்கு வழங்குகின்றனை; அது, பரலையும் நன்மணியையும் ஒப்ப நோக்குவார் தன்மை

யை ஒக்கும்; இதனால், இசையேயன்றி வசையும் நினக்கு வருவதாயிற்று; அறிந்தனையாயின், புலவர்களை வரிசை கருதாமல் ஒருதரமாகப் பார்த்தலை இன்றோடு தவிர்க; இதனைக் கடைப்பிடித் தொழுகுவையாயின், வசையொழிய இசையுயரும்" என்றனர்.

இவ்வாறு கபிலர் உரைப்பக் கேட்ட திருமுடிக்காரி, அச்சமும் ஆர்வமும் உடனிகழ, அடிமிசை முடியுற வணங்கினன். "புலவர் பெருமானே! யான் அறியாமற் செய்த பிழையை நீவிர் எடுத்துரைத்திட்டபோது, யாது நிகழுமோ என அஞ்சினேன்; 'யாரையும் ஒரு தரமாக நினைந்து பரிசில் வழங்கற்க; தெரிந்தனையாயின், வரிசையறிந்து வழங்குக' என்றுரைத்த உங்கள் அருட்டிறத்தை நினைந்து, அச்சம் நீங்கி ஆர்வமுற்றேன்; வரிசை கருதாது பரிசில் அளிப்பது இழுக்கென விளங்கிற்று; இசை வளர்ச்சிக்கு ஏதுவாகிய இது எனக்கு எத்துணைப் பேருதவியாக முடிந்தது! சிலர், தாம் கருதிய ஒன்றை எடுத்துரைப்பதும் செய்யார்; பிறர் செய்வதில் உவகையும் கொள்ளார்; அதனால், தாமும் வருந்திப் பிறரையும் வருத்துவர்; உங்களது பெருந்தகைமை இருந்தவாறென்னே? தன்பால் வந்தவர்களின் புலமையை அறிதற்கேற்ற அறிவின்மையின், யார்க்கும் ஒருபடித்தாக வழங்குகின்றான்; இவனது அறிவின்மையை என்னுரைப்பது?' என உலகம் இழித்துரைப்பக் கேட்டு, மனம்பொறாமல், அதனைப் பரிகரிக்கவேண்டி, என்பால் பரிவோடு வந்திட்ட பெரியோய்! செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும் வானகமும் ஆற்றல் அரிதென்றால், நாயினும் கடைப்பட்ட யான் என் செய வல்லேன்? இடைக்காடனார்க்கினிய நண்பரே, கற்றறிந்தோர் கைம்மாறு வேண்டாமல் தம்மால் இயன்ற உதவிபுரிகுவர் என்பர்; அதனை உங்கள்பாற் கண்டேன்" என முகமன் கூறி, புலவர் மனத்தில் உவகை நிரம்பப் பரிசில் நல்கித் தேர்மீதேற்றிப் போக விடுத்து, நடந்து பின் சென்று, விடைபெற்று மீண்டு, தன் நகரடைந்து மகிழ்ந்திருந்தனன் திருமுடிக்காரி.

இப்பால், 'செவிப்புலன் இருந்தும் செல்வச் செருக்கால் செவிடுபட்டார் சிலர், செய்வன இவை, தவிர்வன இவை என அறிவுடையார் சொல்லவும் செவிகொடார்; அவர்க்கு உரைப்பன யாவும், ஆற்றிற் கரைத்த புளியும், விழலுக்கிரைத்த நீரும்போலப் பயன்படா; உரைத்தோரும் உமியைக் குத்தினாரும் மலட்டாக் கறந்தாரும்போல வருந்தி வறிதே மீள்குவர்; இவனோ என்றால், செருக்குச் சிறிதுமின்றிச் செல்வமுடையார்க்குப் பணிவுடைமை பிறிதொரு செல்வமாகும் என மதித்து, யான் கூறிய அத்தனையும், எளிதென்றிகழாது, உயிர்க்குறுதி எனக் கடைப்பிடித்துக் கழிந்ததற்கு இரங்கினன்; இவன் சாலவும் நல்லன்' என மகிழ்ந்து மதுரையை அடைந்தனர் கபிலர்.

மாணாக்கர்களின் தேக சௌக்கியத்தைக் கவனித்தல்

MEDICAL INSPECTION OF SCHOOL CHILDREN

[ஸ்ரீமான் ஆர். கே. குப்புஸ்வாமி ஐயரவர்கள், பீ. ஏ., எல். டி.]

பள்ளிக்கூடப் பிள்ளைகளின் தேகசௌக்கியத்தைக் கவனித்துப் பரிக்ஷைசெய்ய ஒவ்வொரு ஸ்கூலுக்கும் ஒவ்வொரு வைத்தியரை நியமிக்க வேண்டியதென்றும், அதற்கு ரூபாய் செலவு செய்ய கவர்ன்மெண்டாரே ஸ்கூல்களுக்குத் தக்க கிராண்டு கொடுப்பதாயும் சில நாளைக்கு முன் ஓர் உத்தரவு பிறப்பித்தனர். இதற்கு முன், பல நாளாகவே உபாத்தியாயர்கள் தமது சங்கங்களிலும், பொது ஜனங்கள் தமது சபைகளிலும் கான்பரன்ஸ்களிலும், இவ்விதப் பரிக்ஷை அவசியமென்று தீர்மானஞ்செய்து, இவ்விஷயத்தை கவர்ன்மெண்டார் அதிசீக்கிரம் கவனிக்கவேண்டுமென்று வற்புறுத்தியிருக்கின்றனர். இத்தனை முயற்சி, நாம ஏன் இவ்விஷயத்தில் எடுததுக்கொள்ள வேண்டுமெனில், தேக சௌக்கியம் அனைவருக்கும் இன்றியமையாதது. தேக சௌக்கியமில்லாதவனுக்கு என்ன படிப்பு இருந்தால்தான் என்ன? யாதும் பிரயோச

னப்படாது. படிப்பின் அபிவிருத்தியால் அடையும் பயனும், பணப்பெருக்கால் கிடைக்கும் சுகமும், தேக சௌக்கியம் இருக்கும் பொழுதே அநுபவிக்கக்கூடியதே தவிர, தேக சௌக்கியம் குறைந்தால் சற்றேனும் பயனில்லை. "தமது ஆயுள்காலத்தில் மேன்மையடைந்தவர் என்று கருதப்படும் மனிதர், தமது இளமைப்பருவத்தில் போதுமான அளவு தேக சௌக்கியத்தைத் தேடிவைத்துக் கொண்டவராதல் வேண்டும்: எவ்வளவெனில் சமயம் வந்தபோது, மெய்வருத்தம் கருதாமல், சலிப்பின்றி, தினத்துக்கு 16 மணி நேரங்கூட கஷ்டப்பட்டு வேலை செய்யத் திறமையை உடையவர்களா யிருத்தல்வேண்டும்" என்கின்றார் ஹக்ஸ்லி (Huxley). இம்மகான் சொல்லும் மாதிரி, விசேஷ திடசரீரத்துடன் ஒவ்வொரு பிள்ளையும் நமது பள்ளிக்கூடத்தைவிட்டுப் புறப்படுகிறானா? அவ்வளவு மேன்மையான தேக சௌக்கியத்தைச் சம்பாதிப்பதுஎல்லோருக்கும் அசாத்தியம்; ஆயினும் கூடியமட்டில் திருப்திகரமான திட சரீரத்துடனாவது பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்திலிருந்து உலகின்கண்ணே அனுப்ப, உபாத்தியாயர்கள் முயற்சி செய்யவேண்டிய தவசியம். அவ்வாறு செய்தல் முக்கியமென்பதை மனதிற்கொண்டே நமது காருண்ய கவர்மெண்டார் புதிய உத்தரவு பிறப்பித்திருப்பதும்.

வாலிபர்களின் தேக சௌக்கியத்தைச் சீராய்ப் பரிசோதனை செய்வதசியமென்பதைப் பலநாளைக்கு முன்னமேயே உணர்ந்த ஐரோப்பிய நாட்டார், தங்கள் தேசங்களிலெல்லாம் பள்ளிக்கூடங்களையும், படிக்கும் மாணாக்கர்களையும், தக்கபடி பரிக்ஷைசெய்ய ஒவ்வொரு பள்ளிக்கூடத்துக்கு ஒவ்வொரு டாக்டர் நியமித்திருக்கின்றனர். அமெரிக்காவில் ஐக்கிய மாகாணங்களிலும் அப்படியே. இப்படி வாலிபர்களைப் பரிக்ஷை செய்யாவிடில் விளையக்கூடிய பிரதிகூலங்களைச் சற்று கவனிப்போம்.

நமது பள்ளிக்கூடத்து வகுப்புகளில் உபாத்தியாயர் பாடம் சொலலும்போது, ஒரு வகுப்பில் உள்ள பிள்ளைகளைக் கிட்டத்தட்ட ஓரே படியில் இருப்பதாகவே எண்ணி, பாடம் ஆரம்பிக்கின்றனர். சில பிள்ளைகளுக்கு அப்பாடம் சுளுவாய்த் தோன்றுகின்றது. சிலருக்குக் கடுமையா யிருக்கிறது. சிலருக்கு ஏற்றபாடமா யிருக்கின்றது. தாழ்ந்தபடியில் இருப்பவனுக்குத் தகுந்தபடியும், உயர்ந்தபடியில் இருப்பவனுக்குத் தகுந்தபடியும், ஒருவனே ஓரே சமயத்தில் போதிப்பது கஷ்டம். பிள்ளைகளின் மூளை அபிவிருத்தியின் தாரதம்யத்தைக் கூர்மையாய் அறிந்து, அவ்வவருக்குத் தக்கபடி தமது போதனையை மாற்றிக்கொள்ள சில உபாத்தியாயர்கள் சக்தியற்றவர்களா யிருக்கின்றனர். ஆகையால் சில உபாத்தியாயர்கள், யோசனையின்றிச் சில பிள்ளைகளை "உருப்படாதவர்" என்றே வகுப்பின் கடைசிக்குத் தள்ளிவிடுகிறார்கள். அப்பிள்ளைகளுக்கு விமோசனம் என்ன? அவர்கள் எப்பொழுதுதான் 'உருப்படுவது'? அவர்களது சிறுபிராயம் முழுவதையும் வீணாக்கவா அவர்கள் பள்ளிச்கூடத்துக்கு வருவது? இவ்வாறு பிள்ளைகளைக் கெடுப்பது தர்மமாகாது. உபாத்தியாயர்களுடைய வேலையென்னவெனில், தம்மிடம் ஒப்புவித்த பிள்ளைகளின் தேகப்பான்மைபலவற்றையும் விருத்தி செய்வதே. ஒவ்வொரு அங்கமும், கர்மேந்திரிய ஞானேந்திரியமும், தத்தம் தொழிலைச் செய்ய சரியானபடி பயிற்சி செய்யாவிட்டால் விருத்தி யடையாது. அப்படியிருக்கச் சில பிள்ளைகளை ஞானசூன்னியர்களென்று விலக்கி வைக்கும்போது, அவர்கள் தமது இந்திரியங்களை உபயோகித்து, அவைகளை விருத்தி செய்துகொள்ள அவகாசம் எங்கே? வேலை செய்யாது நிறுத்திவைக்கும் யந்திரத்தின் பாகங்கள் துருப்பிடித்து மழுங்கிப் போவது போல், இப்பிள்ளைகளின் புத்தியும் விருத்தியடையாமல் மலினமடையும். இப்படிச் செய்வது, சில பிள்ளைகளை வீணில் நாசமாக்குவதற்காகவே நமது பள்ளிக்கூடங்களில் நாம் கங்கணம் கட்டிக்கொண்டது போலாகும்.

இக்குறைகளை விலக்க, அமெரிக்கா, பெல்ஜியம், ஜர்மெனி முதலான தேசங்களில், 'உருப்படாத பிள்ளைகள்' வைத்தியர்களைக்கொண்டு பரிக்ஷைசெய்து, அவர்களின் திறமைக்குத் தக்கபடி பிரத்தியேகமான (ஸ்பெஷல்) வகுப்புகளை ஏற்படுத்துகிறார்கள். அவ்வகுப்புகளுக்கு அநுபவசாலிகளான சாமர்த்தியமுள்ள ஆசிரியர்களை நியமிக்கின்றார்கள். ஆசிரியர்கள், தம்மிடத்து விடப்பட்ட பிள்ளைகளின் புத்தி தினே தினே விருத்தியடையும்படி அவர்களுக்குவேண்டிய சுலபமான பாடங்களைப் போ

தனை செய்கின்றனர்; தேகப்பயிற்சியும், விளையாட்டும், அன்புடன் ஏற்படுத்துகின்றனர். இவ்வாறு செய்யும்போதெல்லாம் பள்ளிக்கூடத்து வைத்தியரின் அபிப்பிராயத்தை அடிக்கடி கேட்டு அதை அநுசரித்து நடக்கிறார்கள். சுலபமான பாடங்களை இனிமையாய்ப் போதித்துப் படிப்பில் உற்சாகமுண்டாக்குகிறார்கள். மூளை படிப்படியாய் பலமடைந்த பின், புத்தியின் அபிவிருத்திக்குத் தக்கபடி, சாதாரணப் பிள்ளைகளுடன், எவ்வகுப்புக்கு ஏற்றவனோ அவ்வகுப்பில் சேர்க்கின்றனர். சில சிறுவர்களுக்குப் புத்தகப் படிப்பு அசாத்தியமானால், அப்படிப்பை வெகுவாய்க் குறைத்து கண், கை, இவற்றைப் பழக்குகிற வித்தைகளான, படம் வரைதல், பொம்மை செய்தல், பாய் பின்னுதல், தச்சுவேலை செய்தல்—ஆகிய இவற்றைக் கற்பிக்கின்றனர்.

மேலும், பலவேளைகளில் உபாத்தியாயர்கள் தங்களுக்குத் தெரியாமலே சில பிள்ளைகளின் தேக சௌக்கியத்தைக் கெடுக்கவேண்டி நேரிடுகிறது. எப்படியெனில், அம்மை போட்டிய பின்பும், விஷஜ்வரத்தால் வாலிபன் அவஸ்தைப்பட்டபின்பும், பிள்ளைகளின் சகல அவயவங்களும் பலஹீனமாயிருக்கும்போது அவர்களின் தேகக் கூறு தெரியாமல்—கடினமான பாடங்களைப் போதிக்கின்றனர். அவற்றைக் கற்க அப்பிள்ளைகள் மூளையை அதிகமாய் உபயோகித்து, ஆயுள் முழுவதும் தொடர்ந்து வரும் வியாதிகளுக்கு ஆளாகின்றனர். அச்சமயங்களில் டாக்டர்களின் மேற்பார்வை இன்றியமையாதது. நமது தேசத்தில் பெற்றோர்கள் அதிகமாய்ப் படித்தவர்களல்லவென்பது எல்லோருக்கும் தெரிந்தவிஷயமே. ஆகையால், பெற்றோர்களே தமது பிள்ளைகளின் தேகசௌக்கியத்தைக் கவனித்து, வாலிபர்கள் ஸ்கூலுக்குப் போகவும், பாடம் கேட்கவும் பலம் உண்டா என்றறிய சக்தியில்லாதவர்களாயிருக்கிறார்கள். உபாத்தியாயருக்கும் ஒவ்வொரு மாணாக்கனுடைய தேகஸ்திதியையும் வரையரைவாய் கவனிக்கச் சாவகாசப்படாது. அப்பொழுது, பிள்ளைகளின் தேகத்தைப் பரிசோதிசெய்ய ஸ்கூல்டாக்டர்களும் இல்லாவிட்டால், அவர்களின் தேகசுகம் முற்றிலும் சீர்கெட்டுப் போய்விடுமென்பதற்குச் சந்தேகமேயில்லை.

பள்ளிக்கூடத்தில் பிள்ளைகள் சில சமயங்களில் இரக்தபுஷ்டியில்லாமல் தினே தினே வெளுத்துப்போவதையும், கைகால்கள் 'நூல் நூற்று,' மார்க்கூடு பின்னி, பளுவு குறைவதையும், தோள் பட்டைகள் வளைந்து முதுகு கூன்பட்டுப் போவதையும்—எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் சாதாரணமாய்ப் பார்க்கலாம். இவற்றிற்குக் காரணம் பல உண்டு. பள்ளிக்கூடத்தில் சில அறைகளில் காற்றோட்டம், வெளிச்சம் இவை யில்லாமலிருக்கலாம். பள்ளிக்கூடத்தில் பிள்ளைகளுக்குத் தக்கபடி விளையாடவும் தேகப்பயிற்சி செய்யவும் அநுகூலங்கள் இல்லாமலிருக்கலாம். பள்ளிக்கூடத்தில் நடக்கும் பாடங்களே, சில சமயங்களில் அவர்களுக்கு அதிக கடினமாகவிருக்கலாம். இவற்றையெல்லாம் அப்போதைக்கப்போதே கவனித்து, தக்கபடி சீர்திருத்த, அநுபவமும் திறமையும் நிரம்பிய ஸ்கூல் டாக்டர்கள் அவசியமே யல்லவா?

முன் சொன்னபடி வெளிப்படையாய்க் காணக்கூடிய வியாதிகளல்லாமல், குறிப்பாய்க் கவனித்தாலன்றிப் புலப்படாத சில உபாதிகளும் சிறுவர்களுக்கு வருவதுண்டு. சில வாலிபர்களுக்குப் "பக்கப் பார்வை" சம்பவிக்கின்றது. அதற்குக்காரணம் கண்ணை அஜாக்கிரதையாய் உபயோகப்படுத்துவதே. பள்ளிக்கூடத்தில் பெஞ்சுகளின்மேல் நேராய் உட்காராமலும், முதுகை அதிகமாய் வளைத்து உட்கார்ந்துகொண்டும், வெளிச்சமில்லாத அறைகளில் படித்தும், நடந்துகொண்டு படித்தும் எழுதியும், நேரில்லாத தீபவெளிச்சத்தில் பலநாள் படிக்கப் பழகியும்,—இவ்வியாதியைப் பிள்ளைகள் அடைகிறார்கள். குழந்தைப் பருவத்தில் ஒருவருக்கும் இவ்வியாதி இல்லவேயில்லை யென்பது வைத்தியர்களின் சித்தாந்தம். இவ்வியாதி உண்டாவதும் முதிர்வதும் 8, 10 வயதுக்கு மேற்பட்டும் 18வயதுக்குக் குள்ளாகவுமே என்று மேனாட்டு வைத்தியர்கள் பரிக்ஷை செய்து அறிந்து சொல்லுகின்றனர். 20 வயது வரையில் "பக்கப்பார்வை" யில்லாமல் வளர்ந்த சிறுவனுக்கு, அதன்பின் "பக்கப் பார்வை" வருவதேயில்லை யென்னலாம்.

கண், கெட்டுவருவதற்கு ஆரம்பமாகும் போது பிள்ளைகளுக்கும் அந்த வியாதி வந்து விட்டதென்று தெரிவதில்லை. உபாத்தியாயர்

சாம்பலைக் கிண்டி, கோழி தானே விலங்கிட்டுக் கொண்டதுபோல,

களுக்கும் தெரிவதில்லை. போர்டுகளின்மேல் எழுதும் எழுத்து, கண்ணுக்குக் காணுவிட்டாலும் உபாத்தியாயர்களிடம் சொல்ல பயப்பட்டு, சில குழந்தைகள் மௌனமாய் இருந்து விடுகின்றனர். போர்டில் எழுதியது தெரியவில்லையென்று ஏதோ ஒரு சமயத்தில் சொல்லி, உபாத்தியாயர் அதட்டி என்ன சமாசாரமென்று கேட்டுவிட்டால் போதும், அதுமுதல், தெரிந்தாலும் தெரியாவிட்டாலும், அப்பிள்ளை வகுப்பில் பேசுவதேயில்லை! நமது இந்திய வாலிபர்களின் சாந்தமும், பொறுமையும் மிக அதிகமென்பதை எல்லோரும் அறிவார்கள். கேடு முற்றியபின்புதான் உபாத்தியாயரும் பெற்றோர்களும், சிறுவனுடைய நிலைமையை அறிகின்றனர். டாக்டர் பரிக்ஷை செய்து முதலிலேயே வியாதியைக் கண்டறிந்து விட்டால், அதை முற்றிலும் நீக்க அசாத்தியமானாலும், அதற்குமேல் அதிகமாக விடாமல் செவ்வையாய்த் தடுக்கலாம். வியாதி முற்றிய பின்னர், எவ்வளவுதூரம் சிகிச்சை செய்தாலும், பயனில்லாமல் அதிகரித்துக் கடைசியில் கண்ணே கெட்டுப்போகக்கூடும். இவ்வியாதி மிக்க அபாயமானதென்பதைப் பெற்றோர்கள் அறிவதில்லை. பிள்ளைகளுக்குக் கண் சரியில்லையென்று தெரிந்தவுடனேயே அதைச் சௌக்கியப்படுத்த வழிதேடாமல், இரண்டொரு வருஷங்கூட அசட்டைசெய்து விடுகின்றனர். பிள்ளைகள் கண்ணாடி போட்டுக்கொள்வதைப் பார்க்கப் பெற்றோர்கள் இஷ்டப்படுவதில்லை! கிழவர்கள்தான் கண்ணாடி போட்டுக்கொள்ளவேண்டும் என்றும், சிறு பிள்ளைகள் கண்ணாடி போட்டுக்கொள்ளுதல் சரியன்றென்றும் தப்பெண்ணம் நம்மவருள் பலருக்கு இருக்கின்றது. அந்தத் தப்பு அபிப்பிராயத்தை, உபாத்தியாயர்களும் டாக்டர்களும் முதலில் போக்கடிக்கவேண்டியது. ஏனெனில், "பக்கப் பார்வை" அந்த வாலிபனோடு போவதில்லை. அவனுடைய குழந்தைகளும் அவனிடமிருந்து அவ்வியாதியைப்பற்ற ஹேது உண்டென்பதை ஒவ்வொரு பெற்றோரும் வியக்தமாய் அறியவேண்டியது அவசியம்.

கண்போலவே காதும்; சற்றே காதில் சீ வழிந்துகொண்டிருந்தால் குற்றமில்லையென்று பலர் அசட்டையாயிருப்பது ஸகஜம். அதிலிருந்து பலத்த வியாதி முற்றுவது வெளிப்படையாய்த் தெரியாமலே மெதுவாய் நடந்துவரும். சில வருஷங்களுக்குப் பின், காதின் உள்ளேயுள்ள நுட்பமான அவயவங்களை வியாதி பற்றியபின், அவர்கள் விழித்துக் கொள்வார்கள். அப்பொழுது ஆபரேஷன் செய்து (கிழித்துவிட்டு) சௌக்கியப்படுத்த வேண்டியதாகிறது. சில வேளைகளில் அப்படியும் குணப்படாமல் வாலிபன் செவிடாய்ப் போவதுமுண்டு.

குழந்தைகளின் பற்களைப் பெற்றோர்கள் விசேஷமாய்க் கவனிப்பதில்லை. பல் நன்றாயில்லாவிட்டால் அஜீர்ணம், சோர்வு, தலைவலி, கடுப்பு இவை உண்டாகின்றன. அப்பொழுது உபாத்தியாயருக்காவது, தகப்பனுருக்காவது, தாயாருக்காவது, அசௌக்கியத்தின் காரணம் தெரிவதில்லை. டாக்டரிடம் அழைத்துப் போய் அவர் பரிக்ஷைசெய்து பார்த்த பின்னரே உண்மையான காரணம் புலப்படுகின்றது.

இவ்விதமாய் ஒவ்வொரு வியாதியைப்பற்றியும், ஒவ்வொரு இந்திரியத்துக்கும் சம்பவிக்கக்கூடிய கேட்டைப்பற்றியும் சொல்லப்புகின் விரியும். அற்பமான கண்வலி, பல்வலி, புண், சளி, தலைவலி—இவற்றையும் கூட அப்பொழுதுக்கப்பொழுது கூர்மையாய்ப் பரிக்ஷை செய்யவேண்டிய அவசியம். இல்லையேல் தேக அசௌக்கியத்துடன் பள்ளிக்கூடத்தில் வேலை செய்யும்போது மூளை அதிகக்கஷ்டப்படுகிறது. அதனால் மறுபடி தேகபலம் குறைகின்றது. மூளையின் வேலை செய்யும் திறமை, தேகபலத்தைப் பொறுத்தது. ஆகையால் வாலிபனுடைய தேகபலம் முற்றிலும் குறைந்து நரம்புகள் தளர்ச்சியடைகின்றன. நரம்புத்தளர்ச்சியே தீராத ரோகங்களுக்குக் காரணமாகும். நாட்டிற்கு ஆதாரமாயிருந்து, இனிமேல் வருங்காலத்தில் தேசக்ஷேமத்தின் பொறுப்பை வகிக்கப்போகிற வாலிபர்களின் நன்மைக்காகவே ஸ்கூல்டாக்டர்களை நியமிப்பது. அந்த உத்தியோகஸ்தர்களும் மனசாக்ஷிக்கு விரோதமின்றி, பொறுமையுடன் பிள்ளைகளை கவனித்தல் வேண்டும். அவர்கள் செய்யும் பரிக்ஷையும் அடிக்கடி நிகழவேண்டும்.

பெல்ஜியம் என்னும் தேசத்தில் எவ்விதம் ஸ்கூல் டாக்டர்கள் பரிக்ஷை செய்கிறார்கள் என்பதைச் சுருக்கமாய்ச் சொல்லுகிறேன்.

"ஸ்கூல் டாக்டர் ஒவ்வொரு ஸ்கூலேயும் வாரம் ஒரு முறை போய்ப் பார்த்து வருகிறுர். அப்பொழுது காற்ருேட்டம், வெளிச்சம் இவை திருப்திகரமா யிருக்கின்றனவாவென்று கவனிப்பார். பிள்ளை உட்கார்ந்து படிக்கும் மேஜை, பெஞ்சி, இவற்றின் உயரம், அமைப்பு, வாட்டம், இவை ஏற்றவைகளா என்று சோதனை செய்வார். ஜலகாரைகள், கக்கூஸ்கள், முதலியவற்றின் ஸ்திதியையும், சுத்தம் செய்யும் முறைமைகளேயும்பற்றி விசாரணை செய்வார். பொதுவான விளையாட்டுகளென்ன, பார்களின்மீது தேகப்பயிற்சி செய்வதென்ன, கபாத் பழகுவதென்ன, இவற்றை மேல்விசாரணை செய்து, வாலிபர்களுடைய பலத்துக்குத் தக்கபடி ஒவ்வொருவருக்கும் ஒழுங்குபடுத்துவார். —ஸ்கூல் படிப்பைப் பெறுவதற்கு ஒவ்வொரு பிள்ளையும் எத்தனை தூரம் ஏற்றவனு யிருக்கிருன் என்பதை அடிக்கடி கவனித்துப் பார்ப்பார். அதிக வெயில் காலத்தில் எத்தனை மணிநேரம் வேலே செய்ய வேண்டுமென்றும், எத்தனை பொழுதுக்கு ஸ்கூல் மூடுவது நலமென்றும், ஸ்கூல் அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்துவார். அதிக வேலே செய்து தேகத்தையும், மனதையும் மூளையையும் இளைப்படையச் செய்யும் சிறுவர்களேப் பார்த்துப் பிடித்து அவ்வாறு செய்தல் கூடாதென்று வற்புறுத்தித் தக்க புத்திமதி சொல்லுவார். சில மாதங்களுக் கொருமுறை வாலிபர்களின் உயரம், பருமன், பளுவு, பொதுவான தேக நிலைமை,—கண், காது, பல், இவற்றின் ஸ்திதி—முதலியவற்றைப் புஸ்தகத்தில் பதிவு செய்துவைப்பார். இதனுல் ஒவ்வொரு பிள்ளையின் அபிவிருத்தியையும் பார்த்துக்கொள்ள வழி யேற்படுகின்றது. இவைதவிர, உபாத்தியாயர்களுக்கு, சுகாதார நீதிகளை போதிப்பதென்ன, பிள்ளைகளின் தேகஸ்திதியைப் பரிசோதிப்பதென்ன, தொத்து வியாதிகளை அவற்றின் குறிப்பால் கண்டறிவதென்ன—இவ்வித முறைகளை எடுத்துக்காட்டி, அவர்களே அவசியம் உண்டானபோது, டாக்டரின் உதவியின்றிப் பிள்ளைகளைக் கவனித்துக்கொள்ளும்படி போதனை செய்வார். பலஹீனர்களையும் வியாதியஸ்தர்களையும் பிரத்தியேகமாய்ப் பார்த்து, அவர்களுக்கு மருந்து கொடுத்து, தக்க போஜனம் கொடுப்பித்து, பள்ளிக்கூட வேலேயை அவர்களின் சக்திக்குத் தக்கபடி ஒழுங்குபடுத்தி, ஸ்கூலுக்குப் போவதனுல் அம்மாணுக்கர்கள் முற்றிலும் நன்மையடையும்படி செய்கின்றனர்."

நமது தேசத்தில் ஒவ்வொரு மாகாணத்திலும் இம்மாதிரி பள்ளிக்கூடத்து மாணுக்கர்களின் தேகஸ்திதியைப் பரிக்ஷைசெய்ய முயற்சியெடுத்துக் கொள்வதவசியம். ஐரோப்பிய அமெரிக்கா நாடுகளைவிட, நமது நாட்டில் இவ்வகைப் பரிக்ஷை அதிகப் பிரயோஜனத்தைக் கொடுக்கும். ஏனெனில், நமது நாட்டிலே, பொது ஜனங்களுள் வெகுவாய் எல்லோரும் ஏழைகள். அவர்களுக்குக் குடியிருக்க வசதியான வீடுகளில்லே. அவர்களுடன் வசிக்கும் சிறுவர்களுக்கும் சிறுமிகளுக்கும் வீட்டைவிடப் பள்ளிக்கூடமே மிக அநுகூலமான இடம். சிலசமயங்களில் ஸ்கூலில் பெறும் அநுகூலங்களுக்கு நேர் விரோதமாய்ப் பிரதிகூலங்களே அவர்களுடைய வீடுகளில் சம்பவிப்பது முண்டு! அப்படியிருக்க, பிள்ளைகள் பள்ளிக்கூடத்துக்கு வருவதினுல் அவர்களுக்கு தேக செளக்கியமும், மூளையபிவிருத்தியும் எவ்வளவு தூரம் கிடைக்கக் கூடுமோ அவ்வளவுதூரம் அப்பிள்ளைகள் பெற்று விருத்தியடைய வழிகளை உண்டாக்குவது, ஒவ்வொரு இந்தியனும் மேற்கொள்ள வேண்டிய கடமையாகும்.

மேலும் உபாத்தியாயர்களில் சிலர்—கீழ் வகுப்புகளில் வெகுவாய் எல்லாரும்—சுகாதார விஷயங்களை முற்றிலும் சாஸ்திரமுறைப்படி அறியாதவர்களா யிருக்கின்றனர். அவர்களுக்கு சுகாதார முறைகளைப் போதிப்பது அத்தியாவசியமாகும். உபாத்தியாயர்கள் கூடியுழைக்காவிட்டால், ஸ்கூல் டாக்டர்கள் செய்யும் வேலே வீணுகும். உபாத்தியாயர்களின் உதவியைக்கொண்டு டாக்டர்கள் வெகு சீக்கிரம் தமது வேலேகளைச் சரிவர முடித்துவிடலாம். வைத்தியர் சிலநாளைக்கொரு முறை பிள்ளைகளை கவனிக்கின்றனர்; அன்பும் தயையும் பூர்த்தியாயுள்ள உபாத்தியாயர் தினம்தினம் 2, 3 மணிநேரம் ஒவ்வொரு பிள்ளையுடனும் கூடிப் பழகுகிருர். ஆகையால் முறைதெரிந்த ஆசாரியனுக்கு எத்தனை தூரம் பிள்ளைகளை விருத்திசெய்ய வழியுண்

 சாலோடே தண்ணீர் சாய்த்துக் குடித்தாலும், தாய் வார்க்கும் தண்ணீர் தாகம் தெளியும்.

டென்பதை நீங்களே கவனித்துக் கொள்ளலாம்.

பள்ளிக்கூடங்கள், கேவலம் மனோபிவிருத்தியை மட்டும் கொடுத்து, அறிவு பெருக்குவகற்கென்று நினைக்கும் தப்பெண்ணத்தை, நாம் முற்றிலும் களையவேண்டும். பள்ளிக்கூடம் பிள்ளைகளின் எல்லாவிதமான சக்திகளையும் ஒருங்கே விருத்திசெய்ய ஏற்பட்ட விடம். ஆகையால் எல்லாவிதப் பயிற்சிகளையும் அங்கே தொடங்குதல் அவசியம். மனம் விசாலமாய், அறிவு முதிர்ந்து, தேகம் வலுத்து, நன்மை தீமையைப் பகுத்தறியச் சக்திவந்து, சன்மார்க்கத்தைக் கடைபிடித்து சுயநயம் பாராட்டாது. யோக்கியனாய் நடக்கப் பழக்குமிடமே பள்ளிக்கூடம். தற்காலத்தில் நமது பள்ளிக்கூடங்களிலிருந்து வெளியேறும் பிள்ளைகள் பரீக்ஷை தேறுவதற்கு மட்டும் பழக்கப்பட்டவர்களென்றும், தாமாகவே முதனூற்களை இயற்ற அவர்களுடைய சக்தி பலப்படுவதில்லையென்றும் எல்லோரும் குறை சொல்லுகின்றனர். விசேஷ புத்திமான்களாகி, நமது வாலிபர்கள் தாமாகவே விஷயங்களைப் பரிசீலனை செய்ய அவர்களுக்குவிசேஷமான தேக பலமும் அவசியமென்பதை நாம் நினைவில் வைக்கவேண்டும்.

இந்தியாவின் நன்மையை முன்னிட்டு நாம் நமது மாணாக்கர்களின் தேக சௌக்கியத்தை ஆதரிக்கவேண்டியது. இல்லையேல் இன்றைய வாலிபர் நாளைதினத்தில் பொதுசனங்களாகின்றார். அவர்கள் பல ஹீனர்களானால் அவர்களின் பிள்ளைகளைப்பற்றிப் பேசவும் வேண்டுமோ! தலைமுறைக்குத் தலைமுறை பலம் குறைந்து வரும் நாடு நசித்துப் போகுமே தவிர விருத்தியடையாது. மற்ற தேசத்தார் நாகரீகமடைந்து பெருமையாய் முன் செல்லும்போது, நாம் தோற்றுப்போய் பின்னின்றுவிடாமல் அவர்களுடன் போட்டி போட்டு முன்சென்று, முதலணிகளில் வீரர்களாய் நிற்க முயற்சி செய்யவேண்டும்.

ஒரு துக்க சம்பவம்.—தமிழபிவிருத்தியில் மிக்க சிரத்தைகொண்டு விளங்கியவரும், எமது பத்திரிகாபிமானிகளுள் ஒருவருமான ஸ்ரீமான் ஹரித்துவாரமங்கலம் வா. கோபாலசாமி இரகுநாத ராஜாளியார் நாளது மீ 6உ காலஞ்சென்றதைக் கேட்டு மிகவும் வருந்துகிறோம்.

பக்தியின் பெருமை

THE GREATNESS OF BAKTI

[ஸ்ரீமான் பீ. எஸ். சுப்பிரமணிய ஐயரவர்கள், எம். ஏ.]

(297-ம் பக்கத் தொடர்சி)

அருணகிரிநாத சுவாமிகள் கருணைக் கடலாகிய குகப்பெருமானைத் தனக்கு அருள்புரிய வேண்டுமெனப் பிரார்த்திக்குங்கால், பக்தர்களுக்கு இரங்கும் தகைமையும் உதாரத்துவமும் நிறைந்துளோர் மரபில் உதித்த அப்பெருமான் தன்னிடத்து இரங்கி யருள்புரியாதிருப்பது மரபினியல்புக்கு விரோதமாகுமென எடுத்துக்காட்டக் கருதியதுபோல், விநாயகக் கடவுள், பராசக்தி, மகாவிஷ்ணு, சிவபெருமான் இவர்கள் அடியார்கள் பக்தியிலீடுபட்டு அவர்களுக்குப் பலவிதங்களில் அருள் புரிந்திருப்பதை எடுத்துரைக்கிறார். அவ்வாறுரைக்குமிடத்து அவர்களது பக்திக்கிரங்குந் தன்மையையே விசேஷமாக வர்ணித்திருக்கிறாரதலால், தெய்வத்தை எம்மூர்த்த மூலமாக வழிபடினும், பக்தி நெறியே எளிதாதலின் உயர்ந்ததெனக் கொள்ளவேண்டி யிருக்கிறது. அவ்வாறு சுவாமிகள் வர்ணித்திருக்கும் பாடல்கள் அநேகம். அவைகளிற் சிலவற்றை இங்கு எடுத்துரைக்கிறேன்.

விநாயகக் கடவுளைப் புகழ்ந்து பாடுமிடங்களில் விசேஷமாய் அவரது ரூபத்தையும், அவருக்கு விருப்பமுள்ள தின்பண்டங்களையும், விக்கினங்களை நீக்கும் குணத்தையும் வர்ணித்தும், சிற்சில விடங்களில் அவருக்கு பக்தரிடத்துள்ள கருணையைப் புகழ்ந்து மிருக்கிறாரே யொழிய, அவர் கருணை கூர்ந்து, எந்தெந்த பக்தர்களுக்கு உதவி செய்தருளினாரென்று குறிப்பாய்க் கூறவில்லை. அவர் தமது பக்தருக்கு அருள்புரிவாரென்பதைக் காட்டும் பாடலொன்றை மட்டும் கூறுகிறேன்.

"குஞ்சர மாமுக விக்கிநப்ப்ரபு
அங்குச பாசக ரப்ப்ர சித்தனோர்
கொம்பனமை சோதரன் முக்கண் விக்ரம கணராஜன்
தும்பிடுவார்வினை பற்றறுப்பவன்
எங்கள்வி நாயக னக்கர் பெற்றருள்
குன்றைய ரூபக கற்ப கப்பிளை யிளையோனே;"

சுவாமிகள் பராசக்தியைப் புகழுங்கால், பல விடங்களில், வெறுந்தோத்திரமாகப் பாடி,

சிலவிடங்களில் மட்டுமே தேவிக்குப் பக்தர் மீதுள்ள அன்பை எடுத்துரைத்தருளியிருக்கிறார். அவைகளிற் சில கூறுகிறேன்.

"சிலையு மெனப்பொற் சிலம்பை முன்கொடு
சிவமய மற்றுத் திடங்கு லைந்தவர்
திரிபுர மத்தைச் சுடுந்தி னென்தரி திண்மையாளி
திருமகள் கச்சுப் பொருந்தி டுந்தன
தெரிவை யிராக்கத்துடன் பிறந்தவள்
திசைகளி லொக்கப்படர்ந்திடம்பொரு கின்றஞானக்
கலைகளை ணைக்கொத் தடர்ந்து வம்பலர்
நதிகொளை கத்திற் பயந்து கம்பர்மெய்
கருக இடத்திற் கலந்திருந்தவள் கஞ்சபாதங்
கருணை மிகுத்துக் கசிந்து ளங்கொடு
கருது மவர்க்குப் பதங்கள் தந்தருள்
கவுரி திருக்கொட் டமர்ந்த இந்திரர் தம்பிரானே."

"குலசயி லத்துப் பிறந்த பெண்கொடி
யுலகடை யப்பெற் றவுந்தி யந்தணி
குறைவற முப்பத் திரண்ட றம்புரி கின்றபேதை
குணதரி சக்ரப் ப்ரசண்ட சங்கரி
கணபண ரத்னப் புயங்க கங்கணி
குவடு குனித்துப் புரஞ்சு டுஞ்சின வஞ்சிநீலி
கலப விசித்ரச் சிகண்டி சுந்தரி
கடிய விடத்தைப் பொதிந்த கந்தரி
கருணை விழிக்கற் பகந்தி கம்ப? யெங்களாயி
கருதிய பத்தர்க் கிரங்கு மம்பிகை
சுருதி துதிக்கப் படுந்தரி யம்பகி
கவுரி திருக்கொட்டமர்ந்த இந்திரர் தம்பிரானே."

சுவாமிகள் சிவபெருமானது பக்த வாத்ஸல்யத்தை பல உபமானங்களால் எடுத்துக்காட்டியும், அவரது திருவுருவத்தையும் திருவலங்காரத்தையும் திருவிளையாடல்களையும் விசேஷமாக வாணித்தும் இருக்கிறார். அத்தனை பாடல்களையும் சிவனடியார்க ளனைவரும் படித்து ஆனந்தக்கடலிற் குளிக்கவேண்டுமெனப் பிரார்த்திக்கிறேன். அவைகளிற் சிலவற்றை மட்டும் எடுத்துரைக்கிறேன்.

(சுந்தரமூர்த்தி நாயனாரைத் தடுத்தாட் கொண்டது.)

"ஒருசிறுவன் மணமதுசெய் போதிலெய்த்து வந்து
கிழவடிவு கொடுமுடிகி வாச லிற்பு குந்து
உலகறிய இவனடிமை யாமெ னக்கொ ணர்ந்து சபையூடே
ஒருபழைய சருகுமடி ஆவ ணத்தை யன்று
உரமொடவ னதுவலிய வேகி ழிக்க நின்று
உதறிமுறை யிடுபழைய வேத வித்தர் தந்த சிறியோனே;"

(பரவை நாச்சியாருக்காக சுந்தரமூர்த்தி நாயனாருக்குப் பொன்னளித்ததும், அந்நாயனார் கானகத்தில் பசியால் வாடி இளைப்புற்ற காலையில் அவருக்குப் பொதி சோறளித்ததும், அந்நாயனார் பாடலுக்கு உவந்து முதலை பன்னாட்களுக்கு முன் தின்று செறித்த பிள்ளையை முதலை வாயினின்று அழைப்பித்துக் கொடுத்ததும்.)

"இதப்பட்டிட வேகம லாலய
வொருத்திக்கிசை வானபொ னுயிர
மியற்றப்பதி தோறுமு லாவிய தொண்டர்தாள
இசைக்கொக்கவி ராசத பாவனை
யுளப் பெற்றெடு பாடிட வேடையி
லிளைப்புக்கிட வார்மறை யோனென வந்துகானிற்
றிதப்பட்டெதி ரேபொதி சோறினை
யவிழ்த்திட்டவி நாசியிலேவரு
திசைக்குற்றச காயனு மாகிம றைந்து போமுன்
செறிப்பித்தக ராவதின் வாய்மக
வழைப்பித்தபு ராண க்ருபாகர
திருப்புக்கொளி யூருடை யார்புகழ் தம்பிரானே."

(சுந்தரமூர்த்தி நாயனாருக்காக பரவை நாச்சியார் வீட்டுக்குத் தூது சென்றது.)

"பரவை மனை மீதிலன்று ஒருபொழுது தூதுசென்ற
பரமனரு ளால்வளர்ந்த குமரேசா;"

(இராவணனுடைய சாமவேத கானத்துக்கு உவந்து அவனுக்குக் கட்கமளித்தது.)

"அனல்விடுஞ் செக்கட் டிக்கய மெட்டும்
பொரவரிக் கிட்டெட் டிற்பகு திக்கொம்
பணிதருஞ் சித்ரத் தொற்றை யுரத்தன் திடமாக
அடியொடும் பற்றிப் பொற்கயி லைக்குன்
றதுபிடுங் கப்புக் கப்பொழு தக்குன்
றணிபுயம் பத்துப் பத்துநெ ரிப்புண் டவனிடுந்
தனதொரங் குட்டத் தெட்பல டக்குஞ்
சரியலன் கொற்றத் துக்ரவ ரக்கன்
தசமுகன் கைக்குக் கட்க மளிக்கும் பெரியோனும்"

(மகாவிஷ்ணுவின் பக்தியைக்கண்டு மகிழ்ந்து அவருக்குச் சக்ராயுதத்தை அளித்தது.)

"தொலையாத பத்தியுள திருமால்க ளிக்க வொரு
சுடர்வீசு சக்ரமதை யருள்ஞான
துவர்வேணி யப்பன்மிகு சிவகாமி கர்த்தன்மிகு
சுகவாரி சித்தனருள் முருகோனே;"

(மாணிக்கவாசக சுவாமிகளுக்காக நரிகளைப் பரிகளாக்கியதும் வாணிச்சிக்காக மண் சுமந்ததும்.)

"வாத வூரனை மதித்தொருகு ருக்களொன
ஞான பாதம்வெளி யிட்டேரி யிற்குழுவை
வாசி யாமெனாக டத்துவகை யுற்றரச னன்புகாண
மாடை யாடைதர பற்றிமுன கைத்துவைகை
யாறின் மீதுநட மிட்டுமனை டுத்துமகிழ்
மாது வானிதரு பிட்டுநகர் பித்தனருள்
கந்தவேளே;"

(சிவபக்த சிகாமணியான மனுநீதிச் சோழன் துயரைத் தவிர்த்தது.)

"சுரபி மகவினை யெழுபொருள் வினவிட
மனுவி னெறிமணி யசைவுற விசைமிகு
துயரில் செவியினி லடிபட வினவுமி னதிநீது
தணிவி லிதுபிழை பெரிதென வருமனு
வுருகி யரகர சிவசிவ பெறுமதொர்
சுரபி யலமர விழிபுனல் பெருகிட நடுவாக
பரவி யதனது துயர்கொடு நடவிய
பழுதின் மதலையை யுடலிரு பிளவொடு
படிய ரதமதை நடவிட மொழிபவ னருளாளர்,"

இவ்வாறே சுவாமிகள் மகாவிஷ்ணுவின் பக்த வாத்ஸல்யத்தை அநேக பாடல்களில் மிகவும் புகழ்ந்து பாடி யருளியிருக்கிறார். அவ்வாறு சுவாமிகள் புகழ்ந்து பாடியுள்ள பாடல்களில் இராமாயணம் பாரதம் இப்புராணங்களின் சாரமானது மிகவும் சாரமாக எடுத்துரைக்கப்பட்டிருக்கிறது. அப்பாடல்களிற் சிலவற்றை இங்கு எடுத்துரைக்கிறேன்.

(சமுத்திரத்தைக் கடைந்து சுரருக்கு அமுதளித்தது.)

"பார மேருப ருப்பத மத்தென
நேரி தாகஎ டுத்துட னட்டுமை
பாக ராரப டப்பணி சுற்றிடு கயிறாகப்
பாதி வாலிபி டித்திட மற்றொரு
பாதி தேவர்பி டித்திட லட்சுமி
பாரி சாதமு தற்பல சித்திகள் வருமாறு
நேர வாரிதி யைக்கடை வித்ததி
காரி யாயமு தத்தை யளித்தக்கு
பானு வாகிய பச்சுரு வச்சுதன் மருகோனே;"

(ஒருமை மனத்துடன் ஆதிமூலமே என்று ஒருகால் அழைத்த கஜேந்திரனுக்கு முத்தி யளித்தது.)

"மலர்த்தே நேடையி லோர்மா வானதை
பிடித்தே நீள்கர வாதா டாழியை
மனத்தா லேவிய மாமா லானவர் மருகோனே;"

"ஆண்டார்த லங்கா ளாந்திட
நீண்டார்மு குந்தார்த டந்தனில்
ஆண்டாவி துஞ்சிய தென்றமு தலைவாயுற்
றுங்கோர்சி லம்புபு லம்பிட
ஞான்றூது துங்கச லஞ்சலம்
ஆம்பூமு ழங்கிய டங்கும ளவில் நேசம்
பூண்டாழி கொண்டுவ னங்களி
லேய்ந்தாள வென்றுவெ றுந்தனி
போந்தோல மென்றுத வும்புயல் மருகோனே;"

(பிரகலாதனுக்குப் பரிந்து இரணியனை வதைத்தது.)

"கனக னங்கையி னுலறை தூணிடை
மனித சிங்கம தாய்வரை பார்திசை
கடல்க லங்கிட வேபொரு தேயுகிர் முனையாலே
கதற வென்றுடல் கீணவ னுருயி
ருதிர முஞ்சித ருதமு தாயுனு
கமல வுந்திய னுகிய மால்திரு மருகோனே;"

"உரியதவ நெறியில்நம நாராய ணயவென
ஒருமதலை மொழியளவி லோராத கோபமுட
னுனதிறைவ னெதனிலுள னேதாய டாவெனுமுனு றுதூணில்
உரமுடைய அரிவடிவ தாய்மோதி வீழவிர
லுகிர்புதைய இரணியனை மார்பீறி வாகைபுனை
உவணபதி நெடியவனும்............ ...."

(இராமாயணம்.)

"எனதுமொழி வழுவாமல் நீயேகு கான்மீதி
லெனவிரகு குலையாத மாதாவு நேரோத
இசையுமொழி தவறும லேயேகி மாமாது மிளையோனும்
இனிமையொடு வருமாய மாரீச மானுவி
குலையவரு கரதூஷ ணவீரர் போர்மாள
இறுகிநெடு மரமேழு தூளாக வேவாலி யுயிர்சீறி
அநுமனொடு கவிசூட வாராக நீராழி
யடைசெய்தனை தனிலேறி மாபாவி யூர்மேவி
அவுணர்கிளை கெடநூறி யாலால மாகோப நிருதேசன்
அருணமணி திகழ்பார வீராக ராமோலி
யொருபதுமொர் கணைவிழ வேமோது போராளி
அடல்மருக குமரேச மேலாய வானோர்கள் பெருமாளே."

(மகாபாரதம்.)

"விட்டில டைத்தெரி யேயிடு பாதக
ரூட்டைவி டுத்திட வேபல சூதினில்
வீழ்த்தவி திப்படி யேகுரு காவலர் வனமேபோய்
வேற்றுமை யுற்றுறு வோடியல் நாளது
பார்த்துமு டித்திட வேயொரு பாரத
மேற்புனை வித்தம காவிர மாயவன் மருகோனே;"

"சூது பொருதரும னுடு தோற்றிரு
வாறு வருஷம்வன வாச மேற்றியல்
தோகை யுடனுமெவி ராட ராச்சிய முறைநாளிற்

சூறை நிரைகொடவ ரேக மீட்டெதி
ராளு முரிமைதரு மாறு கேட்டொரு
தூது செலஅடுவ லாண்மை தாக்குவ னெனமீள
வாது சமர்திருத ராஜ ராட்டிர
ராஜ குமரர்துரி யோத னார்பிறர்
மாள நிருபரொடு சேனை தூட்பட வரிசாப
வாகை விஜயனடல் வாசி பூட்டிய
தேரை முடுகுநெடு மால் பராக்ரம
மாயன் மருகஅமர் நாடர் பார்த்திப பெருமாளே;"

இவ்வாறு விநாயகக்கடவுள், பார்வதிதேவி, சிவபெருமான், மகாவிஷ்ணு இவர்களுக்குப் பக்தர்களிடத்திலுள்ள கருணையைப் புகழ்ந்து பாடி, அத்தகைய பக்தரக்ஷகர்களுக்கும் குமரக் கடவுளுக்குமுள்ள உறவை யெடுத்துரைத்து, அக்கடவுளைத் தன்னிடத்தில் இரங்கும்படி அருணகிரிநாத சுவாமிகள் வேண்டிக் கொள்ளுவதானது அக்கடவுளது மரபின் ஒழுக்கத்தை அவர் மனத்திற் பதியும்படி எடுத்துரைப்பதுபோல் தோன்றுகிறது. ஆயின், கருணைக்கடலாகிய குமரக்கடவுளுக்கு அவ்வாறு எடுத்துரைக்கவேண்டிய அவசிய மில்லை ஜீவராசிகளுக்கும் அவருக்கும் உள்ள சம்பந்தமானது தந்தைதாயருக்கும் குழந்தைகளுக்கும் உள்ள சம்பந்தந்தான். நம்மைக் காப்பாற்ற வேண்டுவது அவரது கடமை. இவ்விஷயத்தை அருணகிரிநாத சுவாமிகளே சில பாடல்களால் தெரிவிக்கிறார்.

"ஏது புத்திஐ யாஎ னக்கினி
யாரை நத்திடு வேனவ் வத்தினி
லேயி றத்தல்கொ லோஎ னக்குநீ தந்தைதாயென்
றேயி ருக்கவு நானு மிப்படி
யேத வித்திட வோச கத்தவ
ரேச லிற்பட வோந கைத்தவர் கண்கள்காணப்
பாதம் வைத்திடை யாத ரித்தெனை
தாளில்வைக்க நியே மறுத்திடில்
பார்ந கைக்குமை யாத கப்பன்முன் மைந்தனேடிப்
பால்மொ ழிக்குர லோல மிட்டிடில்
யாரெ டுப்பத னுவெ றுத்தழ
பார்வி டுப்பர்க ளோஎ னக்கிது சிந்தியாதோ;"

"மாசாஸ நாலென் வகைதனை நீடாமொ னாத அறிவுளம்
வாயாத பாவி யிவனென நினையாமல்
மாதாபி தாவி னருளல மாருமகாரி லெனையினி
மாஞான போத மருள்செய நினைவாயே;"

மாயையை யகற்றி ஐம்புலன்களை வென்று அந்தக்கரணத்தை சரவணபவனது தாமரைத் தாள்களில் நிலைநிற்கச் செய்வது அவரது திருவருள் பெற்றாலல்லது சாத்தியமல்ல. அன்பினால்தான் அவரருளைப் பெற முடியும். அவரது அருள் பெறாவிடில், அவரிடத்து அன்பு ஏற்படுவது அசாத்தியம். இவ்விஷயம் சற்று யோசித்துப் பார்த்தால் விளங்கும். மனிதனால் என்னதான் செய்யமுடியும்? மாயையினால் 'நான் நான்' என்று மனிதன் பிதற்றுகிறானே யல்லாது, நிஜமாகவே சகல ஜகங்களும் அவனே யன்றோ? சகல ஜீவராசிகளின் செயல்களும் அவனுடைய செயல்களே யன்றோ? நம்முடைய செயல் ஏது? இவ்விஷயத்தை சுவாமிகள் தெளிவாகப் பின்வருமாறு எடுத்துரைக்கிறார்.

"என்னால் பிறக்கவும் என்னா லிறக்கவும்
என்னால் துதிக்கவுங் கண்களாலே
என்னா லழைக்கவும் என்னால் நடக்கவும்
என்னா லிருக்கவும் பெண்டிர்வீடு
என்னால் சுகிக்கவும் என்னால் முசிக்கவும்
என்னால் சலிக்கவும் தொந்தநோயை
என்னா லெரிக்கவும் என்னால் நினைக்கவும்
என்னால் தரிக்கவும் இங்குநானார்;"
"நானா ரொடுங்க நானார் வணங்க
நானார் மகிழ்ந்து வினையோத
நானா ரிரங்க நானா ருணங்க
நானார் நடந்து விழநானார்;"

மேற்கூறியவாறு எல்லாம் ஈசன்செயல். ஆகையினால் கரணங்களை வென்று முத்தி நெறியிற் செல்லவேண்டுமென்ற இச்சை என் மனதிலுதிக்கும்படி செய்யவேண்டுமெனவும் சுவாமிகள் பாடி யருளியிருக்கிறார்.

"மறைமுறையி னிறுதிநிலை முத்திக்கி சைத்தபடி
உடலுயிர்கள் கரணவெளி பட்டுகுணத்திரயம்
வழிபடவும் நிலைதடிமை இச்சைப்ப டுத்துவது மொருநாளே;"

ஆதலால், மிகவும் அற்பமான சக்தியையுடைய நாம் ஈசனடியார்கள் கூட்டங்களிற் சேர்ந்து, பவநோயை யகற்றிக்கொள்ளவேண்டுமென்ற ஆசையின் காரணங்களை யறிந்துகொண்டு, பிறகு ஈசனது பாதாரவிந்தங்களைத் துதித்து அவ்வாசை நமது மனத்திலுதிக்கும்படி அருள் பெற்ற பிறகே முக்திமார்க்கத்திற் சேர முடியும். ஆனால் மேற்கூறிய காரியங்கள் பக்தர்களுக்குக் கஷ்டமானவைகளல்ல. ஏனெனில், குமரக்கடவுள் 'முடிமேலே அஞ்சலி செய்வோர்கள் நேயக்காரன்', 'செஞ்சொலடி

சிட்டுக் குருவியேல், பிரமாஸ்திரம் தொடுக்கலாமா!

யார்கள் வாரக்காரன்'. ஆகையினால் ஆஸ்திகர்களனைவரும் பக்தி மார்க்கத்தின் பெருமையை நன்றாகத் தெரிந்துகொண்டு, அந்நெறியையே கடைப்பிடித்தொழுகி, கடவுளின் திருவருளுக்குப் பாத்திரர்களாக வேண்டுமென பரம்பொருளான குகப்பெருமானைப் பிரார்த்திக்கிறேன்.

"ஏலம் வைத்தபு யத்தில ணைத்தருள்
வேலெ டுத்தச மர்த்தையு ரைப்பவர்
ஏவ ருக்கும ளத்திலநினைப்பவை யருள்வோனே;"

என்று திருத்தொண்டர் சிகாமணியான அருணகிரிநாத சுவாமிகள் குமரனருளால் உரைத்த மொழி சத்தியமாதலின், பாபத்தைக் களைந்து சத்தியத்தை நிலைநிறுத்தும் பொருட்டு ஞான தேசிகனாய் வந்த ஷண்முகக் கடவுள் ஞானசக்தியான சுடர்வேலைக் கையிற் றாங்கிய சாமர்த்தியம் இணையற்றதெனக் கருதும் அடியேனுடைய மனத்திலுதித்துள எண்ணம் நிறைவேறுமென்பது திண்ணம்.

அறுமுகன் பாததாமரைகள் வாழ்க!

நமது சிறு கதை

OUR SHORT STORY

[ஸ்ரீமான் ஆர். ராஜசூடாமணி மொழிபெயர்த்தது.]

ஸர் ரவீந்திரநாத் டாகூரின் சிறு கதைகள்

பிரளயகாலம் வந்துவிட்டதோ என்று தோன்றுமாறு மழை ஓயாமற் பெய்துகொண்டிருந்தது. வயல்களும் ஓடைகளும் பள்ளங்களும் வங்குகளும் நீரினுள் மறைந்துவிட்டன. இராப்பகலாகப் பெய்யும் பெரு மாரியின் "சோ" என்ற இரைச்சலும், தவளைகளின் கத்துதலுமே எங்கும் கேட்கலாயின. கிராம ரஸ்தாக்கள் சஞ்சாரத்துக்குப் பிரயோசன மற்றதாயின. சந்தை வியாபாரம் எல்லாம் சிறு படகுகளின் உதவியால் நடைபெறலாயின.

மந்தாரம் மூடி மின்னித் தூற்றிய ஓர் காலையில் போஸ்ட்மாஸ்டருடைய சிறு வித்யார்த்தினி, தனது யஜமானனது ஆணைக்காக வெகுநேரமட்டும் வெளிப்புறத்தில் காத்துக்கொண்டிருந்தும், வழக்கம்போல் கேட்கும் கட்டளை வாராமையால், மூலைகள் சுருண்டு மடிந்த புஸ்தகத்துடன் அறைக்குள் மெதுவாக நுழைந்தாள். எஜமானன் படுத்திருப்பதைக் கண்டு, தூங்குகிறான் என்று நினைத்து குந்துகாலால் நடந்து வெளியேபோக யத்தனித்தபொழுது "ரத்னம்!" என்று அழைப்பதைக் கேட்டாள். உடனே அவள் திருப்பிப் பார்த்து "அண்ணா, நீங்கள் தூங்கிக்கொண்டிருந்தீர்களா?" என்று கேட்டாள். போஸ்ட்மாஸ்டர் ஈனஸ்வரத்தில் "ரத்னம், எனக்கு என்னமோ செய்கிறது. என் நெற்றியைத் தொட்டுப் பார். நெற்றி மிகவும் சுடுகிறதோ?" என்றான்.

பிற ஊரில் வந்து வாழ்கின்ற ஏகாந்தமான ஜீவிதத்தில்—மழை மந்தாரம் மூடிய அத்தினத்தில் அவனுடைய நொந்த சரீரம் அன்பு நிறைந்தவர்களின் சைத்யோபசாரத்தை விரும்பியது. அவன், வளைகள் ஒலிக்கும் கரங்களினால் ஏற்பட்ட ஸ்பர்சத்தை ஞாபகத்தில் வைத்திருக்க அதிக ஆசைகொண்டான். அன்பு நிறைந்த இளங்கன்னிகையின் ஆதரவினால் தாயும் சகோதரிகளும் அருகிலிருப்பதுபோல நினைத்துக்கொண்டான். அவனுடைய ஒண்டியான வாழ்வில், ஆதரவில்லாமல் வருந்தவில்லை. ரத்னம், சிறுபிள்ளைத்தனத்தை விட்டுத், தாயின் ஸ்தானத்தை வகித்தாள்; கிராம வைத்தியனை அழைத்தாள்; அவன் அளித்த குளிகைகளை வேளாவேளையில் உரைத்துக் கொடுத்தாள்; அவன் ருசி அறிந்து கஞ்சிகாய்ச்சி, அருகில் இருந்து, தேறுதல் மொழிகள் பேசிப் புகட்டினாள். இரவெல்லாம் கண்ணயராது விழித்திருந்து "அண்ணா! இப்பொழுது எப்படி இருக்கிறது?" என்று அடிக்கடி விசாரித்து வந்தாள்.

அவன் படுக்கையை விட்டெழுந்து தளர்ந்த சரீரத்துடன், நடப்பதற்குக் கொஞ்சநாட்கள் ஆயின. "இனிமேல் இது உதவாது" என்று அவன் உறுதியாகத் தீர்மானித்தான். அங்ஙனம் தீர்மானிப்பதற்குக் காரணம் என்னவோ? ரத்னம் அவன் மனதிற்குள் நுழைய ஆரம்பித்துவிட்டாளோ? எப்படி வேண்டுமா

இருக்கட்டும். அவன் வெகு சீக்கிரத்தில் ஸ்தல மாறுதல் செய்துகொண்டுபோக வேண்டும் என்று நிச்சயித்தான். அந்த க்ஷணமே உலாபுரத்தின் அசௌக்கியமான நிலைமையைக் காரணமாக வைத்துக்கொண்டு ஸ்தல மாற்றலுக்கு மனு எழுதிப்போட்டான்.

தாதி உத்தியோகத்திலிருந்து விடுதலை அடைந்ததும், ரத்னம் முன்போலவே பழைய ஸ்தானத்தை வகித்துக்கொண்டாள். ஆனால், எப்பொழுதும்போல யஜமானன் அவளை அழைக்கவில்லை. சிற்சில சமயங்களில் போஸ்ட்மாஸ்டர் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டிருக்கிறானா, அல்லது வெறு வெறுத்துக் கூரையைப் பார்த்துக்கொண்டிருக்கிறானா என்று அறிய, அவள் திருட்டுத்தனமாகப் பதுங்கிப் பார்ப்பதுண்டு. யஜமானன் தன்னை அழைக்கிறானா என்று அவள் எதிர்பார்த்துக் கொண்டிருந்த நேரத்தில் போஸ்ட்மாஸ்டர் தான் எழுதிய மனுவிற்கு பதிலை எதிர்பார்த்துக்கொண்டிருந்தான். அந்தப்பெண் அவளுடைய பழம்பாடத்தைத் திரும்பத்திரும்ப வாசித்துக்கொண் டிருந்தாள். அவன் தன்னை அழைக்கும்பொழுது தனக்கு ஸம்யுக்தாக்ஷரங்கள் மறந்துபோய்விடக்கூடாதே என்ற பயம் ரத்தினத்திற்கு அதிகமாக உண்டு. ஒரு வாரத்திற்குப் பிறகு, ஒருநாள் சாயங்காலம் போஸ்ட்மாஸ்டர் அவளை அழைத்தான். அதிக சந்தோஷத்துடன் விரைவாகச் சென்று "அண்ணா நீங்கள் என்னை அழைத்தீர்களா?" என்று ரத்னம் கேட்டாள்.

போஸ்ட் மாஸ்டர்: "நான் நாளைக்குப் போகிறேன் ரத்னம்!"

"அண்ணா! நீங்கள் எங்கே போகிறீர்கள்?"

"என் ஊருக்கு"

"எப்பொழுது திரும்பி வருவீர்கள்?"

"ரத்னம், நான் திரும்பி வரமாட்டேன்".

ரத்னம் இதன் பிறகு வேறு கேள்விகள் ஒன்றும் கேட்கவில்லை. போஸ்ட்மாஸ்டர் சுயேச்சையாகத் தான் எழுதிய மனுவையும், அது ரத்து செய்யப்பட்டதையும், அதனால் தன் வேலையை ராஜீநாமாக் கொடுத்துவிட்டதையும் அதன்பேரில் தான் ஊருக்குப் போவதையும் அவளிடம் கூறினான்.

வெகுநேரம் மட்டும் இருவரும் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. விளக்கு மங்கி எரிந்துகொண்டே இருந்தது. வீட்டுக் கூரையின் ஓர் மூலையிலிருந்த ஓட்டை வழியாக ஒழுகிக்கொண்டிருந்த நீர், அதன் கீழே வைத்திருந்த மண்பாத்திரத்தில் "கிளுங், கிளுங்" என்று விழுந்துகொண் டிருந்தது.

சிறிதுநேரம் சென்றதும், ரத்தினம் எழுந்து போஜன பதார்த்தங்களைத் தயார் செய்யப் புறப்பட்டாள். எந்நாளும்போல அவளால் வேலையை விரைவில் செய்யக்கூடவில்லை. பல புதிய நினைவுகள் அவளுடைய மூளையைத் தாக்கின. போஸ்ட்மாஸ்டர் இராச்சாப்பாட்டை முடித்ததும், ரத்தினம் அவனிடம் "அண்ணா! என்னையும் உங்களுடைய வீட்டிற்கு அழைத்துச் செல்வீர்களா?" என்று கேட்டாள்.

போஸ்ட்மாஸ்டர் சிரித்துக்கொண்டு, "என்ன அற்புதமான நினைவு?" என்று சொன்னான். ஆனால் அவன் அவளுடைய மொழிகள் எவ்விதம் யுக்திக்கு விரோதமாக இருந்தன என்று தெளிவாக எடுத்துச் சொல்லச் சிரமப்படவில்லை.

அவன் காலையில் எழுந்திருந்ததும் ஸ்நானத்திற்கு வேண்டியவை எல்லாம் தயாராகவிருப்பதைக் கண்டான். நீரில் குதித்து நீந்தி ஸ்நானம் செய்யும் வழக்கத்தைக் கைக்கொள்ளாமல் அவன் கல்கத்தாவாசிகளைப்போல, மொண்டு வைத்திருக்கும் நீரில் ஸ்நானஞ்செய்யும் முறையை இங்கும் அனுஷ்டித்து வந்திருந்தான். என்ன காரணத்தினாலோ அவளுக்கு அவன் எப்பொழுது போகிறான் என்று கேட்க முடியவில்லை. ஆதலால் அவள் அதிகாலையில் அருணோதயத்திற்கு முன்னதாகவே அவனுக்கு எப்பொழுது தேவையோ, அப்பொழுது உதவும்படியாக ஆற்றிலிருந்து நீர்கொண்டு வைத்திருந்தாள். ஸ்நானம்செய்தபிறகு அவன் ரத்தினத்தை கூப்பிட்டான். அவள் சந்தடிபண்ணாமல் அறைக்குள் நுழைந்து யஜமானன் முகத்தை நோக்கிக்கொண்டு என்னகட்டளை பிறக்குமோவென்று எதிர்பார்த்தவண்ணம் நின்றாள். யஜமானன் இப்படிச்சொன்னான்; "ரத்னம்! நான் உன்னை விட்டுப்பிரிந்துபோகிறேன் என நீ கவலைப்படவேண்டாம். எனக்குப் பதிலாக வருபவனிடம் உன்னை ஒப்படைக்கிறேன்." அந்த வார்த்தைகள் உண்மையாகவே அன்பி

ளுல் நிறைந்திருந்தன. ஆனல் பெண்களுக்கு மட்டும் ஒரு சுயேச்சையான சித்தம் உண்டு.

ரத்தினம் பலபொழுதும் அவனுடைய யஜமானன் கூறிய, கடுமொழிகளை இனிதாக ஏற்றுக்கொண்டதுண்டு. ஆனல் இந்த அன்பார்ந்தமொழிகளைமட்டும் அவளால் தாங்கமுடியவில்லை. அவள் திடீரென்று விம்மி அழுதுகொண்டு "வேண்டாம், வேண்டாம்; நீங்கள் என்னைக்குறித்து ஒருவரிடமும் ஒன்றும் சொல்லவேண்டாம். நான் இனிமேல் இங்கிருக்கமாட்டேன்" என்று கூறினள்.

போஸ்ட்மாஸ்டர் ஸ்தம்பித்துவிட்டான். அவன் இதற்கு முன் ஒரு பொழுதும் அவள் இவ்விதம் நடந்துகொண்டதைப் பார்த்ததே இல்லை.

புதிய பதிலாள் வந்து சேர்ந்தான். போஸ்ட்மாஸ்டர் வேலையை ஒப்பித்துவிட்டு பிரயாணத்திற்கு ஆயத்தமானன். அவன் புறப்படுவதற்கு முன்னதாக ரத்தினத்தை அழைத்து "ரத்னம் இதை எடுத்துக்கொள், இது உன்னைக்கொஞ்சகாலத்திற்குக் காப்பாற்றும்" என்று சொல்லி தனது ஒரு மாதச்சம்பளத்தில் வழிச்செலவுக்குப்போக மீந்திருந்த ரூபாயை எல்லாம்சொக்காயின் பையிலிருந்து வெளியில் எடுத்தான். இதைக்கண்ட ரத்னம் அவன் பாதங்களில் விழுந்து அவற்றைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு "அண்ணு! தங்களிடத்தில் பிரார்த்தித்துக்கொள்கிறேன். எனக்கு ஒன்றும் கொடுக்காமலிருங்கள். நீங்கள் என்னைக் குறித்து ஒருவிதக் கவலையும் எடுத்துக் கொள்ளவேண்டாம்" என்று அழுதுகொண்டே சொல்லிவிட்டு, எழுந்து ஓடி அவன் கண்ணினின்றும் மறைந்தாள்.

போஸ்ட்மாஸ்டர் பெருமூச்செறிந்து மூட்டையைக் கையில் எடுத்துக்கொண்டு, குடையைத் தோளில் சார்த்தினவனுய் பின்னல் ஒரு மனிதன் பலநிறம் பூசிய டிரங்கு பெட்டியையும் படுக்கையும் எடுத்துவர படகுகள் தங்கும் துறையை நாடிச் சென்ருன்.

அவன் படகிலேறிப் புறப்பட்டான். பூமிதேவியிடத்தில் நின்று உற்பவித்த கண்ணீர்ப் பிரவாகம்போலத் தோன்றுகின்ற பெருமழையால் கரைபுரண்டு ஒழுகும் நதி அந்தப் படகின் கோணத்திற்குப் பக்கமாக கெட்டியிர்த்து விம்மியபொழுது அவன் அகத்தில் ஓர் விதஉபாதி ஏற்பட்டது. அந்தக் கிராமவாசியாகிய இளங் கன்னியின் துக்க முகம் வாசாமகோசரமாய்.*ஸர்வ வியாபகமாய் காணப்பட்ட நில மகளின் துக்கக்கோலமே போன்றிருந்தது.

ஓர்சமயத்தில் திரும்பப்போய் உலகத்தாரால் கைவிடப்பட்ட அந்த அனுதைப் பெண்ணைத் தன்னுடன் அழைத்துக்கொண்டு போய்விடலாமா என்று கூட அவன் உள்ளம் அவனைத் தூண்டியது. ஆனல் பாய்களில் காற்று போதுமானபடி மோதிடவே படகு வேகமாய்ப் புறப்பட்டு விட்டது. அவன் கொஞ்சநாளாக வசித்துவந்த உளாபுரத்தைக் கடந்தாய்விட்டது. அதைச்சார்ந்த மயானமும் வந்துவிட்டது.

ஆதலால் நதியின் மத்தியப் பிரதேசத்தின் வழியாக யாத்திரை செய்யும் நம் பிரயாணி, "ஓர் சத்திரத்தில், பல யாத்திரைக்காரர்கள் ஓர் ராப்பொழுதைக் கழிப்பதற்காகத் தங்கும் பொழுது பரஸ்பரம் குசலப் பிரசினம்செய்து, சேர்ந்திருந்து போஜனமருந்தி, வெகு நாள் பழகினவர்கள்போல உறவாடித் தங்கள் புத்திர பௌத்திராதிகளுக்கு விவாஹத்தைக்கூட நிச்சயித்துப் பேசி முடித்தபிறகு மறு நாட்காலையில் ஒருவருக்கொருவர் 'ஐயா, நான் போய் வருகிறேன்; ஞாபக மிருக்கட்டும்' என்று சொல்லிப் பிரிந்து பின் ஒருவித ஸம்பந்தமின்றி இருக்கும் தன்மை போன்றது இந்த உலகவாழ்க்கை-ரயில் உறவு; சந்தை உறவு:—இறப்பு, முடிவு இல்லாப் பிரிவு," என்றிம் மாதிரி பலவித வேதாந்தங்களினல் தன்னைச் சமாதானப் படுத்திக்கொண்டிருந்தான்.

ஆனல் ரத்தினமோ இவ்வித தத்வவிசாரணை ஒன்றுமறியாள். அவள் தினமும் கண்ணீர் சோர, தபாலாபீஸைச் சுற்றி உலாவினள். அவளுடைய அண்ணு திரும்பவும் அங்கு வருவான் என்ற நம்பிக்கை அந்தக்கரணத்தின் ஓர்மூலையில் அழுந்திப் புதைந்திருக்கலாம், அக்காரணத்தினல்தான் அவளுக்கு அந்த இடத்தினின்று தன் மனதைத் திருப்பக்கூடவில்லை. அந்தோ! மனிதன் மூடத்தனத்தை என் சொல்ல! அதிக மடமையால் ஏற்படு

*எங்கு பார்த்தாலும் மழைப் பிரவாகமாக விருந்ததால் அதை பூமாதேவியின் துக்கத்திற்கும் வர்ணிக்கக்கூடாததால் வாசாமகோசர மென்றும் அதிசயோக்தியாகவும் இயற்கைப் பொருள் அலங்காரமாகவும் கூறப்பட்டிருக்கிறது.

கிற குற்றத்தை அது திரும்பத்திரும்பச் செய்கிறது. பகுத்தறிவின் தோரணை பிராதான்யத்திற்கு வர வெகு காலமாகின்றது. அதனிடையே, கரதலாமலகம் போன்ற அத்தாக்ஷிகள் நம்பப்படுகிறதில்லை. மனிதன் கட்டித்தழுவிக் கொண்டிருக்கும் பொய் நம்பிக்கை அவன் இருதயத்தை வற்ற உருஞ்சிச் செல்லும் மட்டும், அவனுடைய மூடமதி அதை விட்டு விடச் சற்றும் விரும்புவதேயில்லை. பிறகு அவனுக்கு, போத மேற்படும்போழுது, அவனுடைய மனம் மிகுந்த துன்பத்தை அடைந்து, மீண்டும் அதே தவறுகளின் சுழற்சியில் சிக்கிக்கொண்டு உழலப், பேரவா பிறக்கின்றது. என்ன விசித்திரம்! என்ன அற்புதம்.''

வஸந்த மந்திரம்

பத்தாம் அத்தியாயம்
லலிதையின் உறுதி

சுகுணபுரத்தில் வீரபத்திர ராஜன் அரண்மனை. காலை பத்துநாழிகை யிருக்கலாம். அரசன் மந்திரி பிரதானிகளுடன், நரேந்திரனும் சுலோசனனும் உட்கார்ந்திருக்கின்றனர். அரசன் நரேந்திரனை நோக்கி, "ஏ முகுந்த புத்திரா! நான் இந்தப் படையெழுச்சியை எதிர்பார்த்திருந்தேனேயன்றி எதிர்பாராது இருக்கவில்லை. நீயும், லலிதையும் மற்றைய இருவரும் வந்த நாள் முதல், அந்த மிலேச்சருடைய படையை எதிர்பார்த்தே யிருந்தேன். பிரதாப சிங்கருடைய சேனை, முற்றிலும் தோற்று அழிந்து போனதென்றாலும், மிலேச்சப் படையை வலுவழித்துவிட்டது. ஜயபாலனுடைய சேனைகளும் தோற்றுவிட்டதாம். ஆயினுமென்ன! அபயமென்று வந்த பக்ஷியைக் காத்த சிபிச் சக்ரவர்த்தி வம்சத்தில் பிறந்த நான், என்னிடம் அடைக்கலம் புகுந்த லலிதையைக் கைவிடுவேனோ! என்னுயிருள்ளளவும் காப்பதே நிச்சயம்" என்றான்.

"ஐயா! இருப்பினும் லலிதாதேவி தம்முடன் நேரில் ஏதோ சொல்லவேண்டுமாம். சபைக்கு வரவேண்டுமென்கிறாள். தன்னுடைய வார்த்தைகளைக் கேட்டபின்புதான், நேற்றுவந்த மஹமதிய தூதர்களை யனுப்ப வேண்டுமென்கிறாள்—" என்றான் நரேந்திரன்.

வீரபத்திர ராஜன் "அவளைக் கேட்பதென்ன? ஆயினும் வரட்டும்: சொல்லியனுப்பியிருக்கிறேமே" என்றான். சில நிமிஷங்களுக்குள் லலிதாதேவியும் சபையுள் நுழைந்தாள். எல்லோரும் எழுந்துநின்றனர். லலிதை வீரபத்திரரை நமஸ்கரித்து நிற்கவே, அவர் "லலிதா! குழந்தாய், உட்கார்" என்று தானும் உட்காரவே, எல்லோரும் உட்கார்ந்தனர். பின்பு அரசன் "லலிதா! உன்னை உனது தகப்பனார் என்னிடம் அடைக்கலமாக அனுப்பினார். ஆகையால் நான் என் உயிருள்ளளவும் உன்னை அவர் எவ்விதம் காப்பாற்றியிருப்பாரோ அங்ஙனம் காப்பாற்றவேண்டியது என் கடமை. இதோ அந்தப்பாக்ஷாவின் கடிதம்: உன்னை யாட்கொள்ளவேண்டுமென்றும், உன்னை யான் அவனிடம் கொடாவிட்டால், என்னையும் என் சேனைகளையும் சின்னாபின்னமாக்கி உன்னை யடிமைப்படுத்துவானும். யானோ, உன்னை விடுவதில்லையென்றும் அவனால் கூடியதைச் செய்துகொள்ளலாம் என்றும் இதோ உத்தரவு எழுதியனுப்பிவிட்டேன். அதை யனுப்புமுன்னர் நீ என்னிடம் சில வார்த்தைகள் சொல்லவேண்டு மென்றும், அதன் பிறகு கடிதத்தை அனுப்பலாம் என்றும் நரேந்திரன் கேட்டுக்கொண்டான். என் புத்திரியே! உன் அபிப்பிராயத்தை சீக்கிரம் சொல்வாயாக. அவர்களோ பறக்கின்றனர். சீக்கிரம் அனுப்பிவிடலாம் அத்தூதர்களை" என்றான்.

லலிதை மறுபடி வீரபத்திரரை நமஸ்கரித்து "ஐயா அரசர்க்கரசே! தந்தையினும் மிக்க தந்தையே! தாங்கள் என்பேரில் வைத்திருக்கும் அன்பின் உறுதி எனக்கு நன்றாய்த் தெரியும். என்னைக் காப்பாற்ற நீரும் உமது புத்திரர்களும் சேனைகளும் தயாராயிருப்பது நிச்சயமே. ஆயினும் நான் யார்! பாக்கியமற்ற பெண்டிருள் முதலில் நிற்பவள்! பட்டியில், பழுதுண்ட ஆட்டைச் சேர்ப்பதினும், இழப்பதே நன்றல்லவா? நீவிர் அனைவரும் என்பொருட்டு உயிர் விடுவதிலும், யான் ஒருவள் உயிர்விடுவது

நன்றே யல்லவா? கண்க்கற்ற இராஜபுத்திரர்களையும், இராஜபுத்திரிகளையும், என் அன்னையையும், பிதாவையும், என் தமையன் முறையில் நின்ற இராமசிங்கரையும் யமபுரத்துக்கனுப்பிய நானு, இன்னும் மற்றவர்களையும் நாசமடைவிப்பது? இராஜாதிராஜனே! இது ஏற்குமா? தாமறியாத தர்மமில்லை. என்னைத் தாங்கள் இழந்துவிடவேண்டியதுதான்—" எனப் பதிலுரைத்தாள்.

வீரபத்திரன் கண்களில் நீர் பெருக "குழந்தாய்! உன் அபிப்பிராயம் எனக்குத் தெரியவில்லையே! அபயமாக வந்த உன்னைக் கொன்றுவிடவா சொல்லுகின்றாய்! நன்று! நன்று! இல்லையேல் உன்னை இழப்பதென்றால் எப்படி!—"

லலிதை "ஐயனே! நீர் சொல்வது சரியே! நான் அக்கினியில் புகுவேன்! உமக்கு இஷ்டமில்லையேல், அந்த பாக்ஷாவை மணம்புரிவதாக எழுதி யனுப்புகிறேன். அவனிடம் அடிமையாகவாவது போவேனே ஒழிய, இனி என் பொருட்டு இரஜபுத்திரர் மடிவதைப் பார்க்கமாட்டேன்—"

வீரபத்திரன் "அது எவ்வாறு இயலும் குழந்தாய்! நாங்கள் வீரர்கள் அல்லவா? நீ சொல்வது தப்பு. இதற்காகவா இங்கு வரவேண்டுமென்றாய்? நன்று நன்று—அடே சேவகா! இதோ இக்கடிதத்தை அவர்களிடத்தில் கொடுத்து உடனே யனுப்பு அவர்களை" என்று கடிதத்தை நீட்ட, லலிதை மறுபடி வீரபத்திரரை நமஸ்கரித்து "சுவாமீ என் வார்த்தையைக் கேளும். இக்கடிதத்தை யனுப்பாதீர். நானே சம்மதித்து அந்த பாக்ஷாவைக் கல்யாணம் செய்துகொள்வதானால் உமக்கு என்ன ஆக்ஷேபனை! இன்னும் நான் சொல்லவேண்டியவற்றை விவரமாய்ச் சொல்லுகிறேன். தாங்கள் என்னுடன் வாருங்கள்" என்று அழைத்துச் சென்றாள்.

சபையோர் பிரமித்துச் சித்திரப்பாவைகள் போல் அசைவற்று நின்றனர். நரேந்திரனும், சுலோசனனும் முகத்தைத் திருப்பிக்கொண்டு கண்ணீர் விட்டனர். அரசனும் லலிதையும் உள் செல்லவே சபை கலைந்தது.

ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

LADIES' PAGES

[ஸ்ரீமான் ஸி. ஆர். ஸ்ரீநிவாஸய்யங்கார் அவர்கள், பி. ஏ.]

தாராபாய்

இராஜபுதனம் அல்லது ராஜஸ்தானமென்று வழங்கும் தேசத்திலுள்ள பல க்ஷத்திரிய வம்சங்களில், சோளங்கீ யென்றது மிகுந்தப் பிரசித்திபெற்றது; அன்ஹல் வாராவை ஆண்ட பலஹர ராஜவம்சத்தை ஆதியாகக் கொண்டதென்று சொல்வதுமுண்டு. அந்தத் தேசத்தில் புராதனமாய் வசித்துவந்த ராஷ்டிரகூடர்களென்னும் ஜாதியார் அவரே. பிற்காலத்தில் அவர்களுக்குத் தக்ஷிணத்து ராடோர்களென்று பெயர் வந்தது. இதனால், வடதேசத்திலுள்ள ராடோர்களைக்காட்டிலும், இவர்கள் முந்தினவர்களென்று தெரிகிறது. சோளங்கிகள் ஆபூ பர்வதத்தில் யாககுண்டத்திலிருந்து கிளம்பின அக்கினி குலர்களென்றும், சாளுக்யர்களென்றும் சரித்திரக்காரர்களால் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. அவர்களுடைய அரசர்கள் வல்லபர்களென்ற பட்டம்பெற்று விளங்கினார்கள். ஏறக்குறைய 500 வருஷங்களுக்குமேல் அவர்கள் ராஜஸ்தானத்தில் ஆண்டுவந்தார்கள்.

இக்கீர்த்திபெற்ற வம்சத்தில், அலாவுதீனென்ற கில்ஜிவம்சத்து மகம்மதிய அரசனுடைய காலத்தில், சுரசேனனென்ற அரசன் செங்கோல் நடத்திவந்தான். அலாவுதீன் இந்து ராஜாக்களின் தேசத்தை ஜயித்து, இந்தியா முழுவதையும் மகம்மதிய ராஜ்யமாக்கி, ஒரே குடையின்கீழ் ஆளவேண்டுமென்ற விரதம் பூண்டவனாய்ப் படையெடுத்துவரும் பொழுது, டாங்க் டோடா (Tonk Toda) என்ற நாட்டில் ஆண்டுவரும் சுரசேன ராஜாவினுடைய தேசத்தைக் கைப்பற்றுவதற்கு, வில்லாவென்ற சேனைத் தலைவனை அனுப்பினான். சுரசேனன் வெகு காலம் அவனுடன் போர்புரிந்து களைத்து அலுத்து, உற்சாகமழிந்து தன் முன்னோர் வெகுநாளாய் ஆண்டுவந்த நாட்டைத் துறந்து, அக்காலத்தில் மீவார் ராஜ்யத்தில் ஓர் பாகமான பிஜனூரென்ற விடத்திற்குச் சென்று, அதி

காரத்திலும் ஆட்சியிலும் ஆசைவிட்டு, கடவுளின் கிருபையால் மறுபடியும் தனக்கு அனுகூலம் பிறக்கும் காலத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தான்.

அவனுக்கு வெகுநாளய்க் குழந்தைகளில்லாமல் பிறகு ஓர் பெண் பிறந்தது. அதன் அழகையும் புத்திக் கூர்மையையும் கண்டு தாரையென்று (நட்சத்திரம்) பெயரிட்டு, அதையே மகனும் மகளும் யாவுமாய்த் தன்னுயிரைப்போல் பார்த்துவந்தான். அந்தப் பெண் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாய்ச் சுக்கிலபக்ஷத்துச் சந்திரனைப்போல், ரூபலாவண்ணியத்திலும் அறிவிலும் நிகரற்று விளங்கினாள்.

தன் தந்தை எப்பொழுதும் கவலையுற்று, ஒருவரோடும் பேசாமல் தனியே எதையோ நினைத்துக்கொண்டு விசாரப்படுவதை நுட்பமாய்க் கவனித்த தாராபாய், ஒருநாள் சுரசேனனுடைய மடியிலேறி அவருடைய கழுத்தில் தன் கையைப்போட்டு முகத்தோடு முகம் வைத்து, இனிய சொற்களால் "அப்பா! மற்றவர்களைப்போல் வெளியில் போகாமல், வேட்டை யாடாமல், யுத்தஞ் செய்யாமல், தனியே உட்கார்ந்துகொண்டு, ஏதோ கவலைகொண்டிருக்கிறீர்களே. உங்களுக்கு யார் என்ன கெடுதியைச் செய்தார்கள்? எதை விரும்பி அடையமுடியாமல் இப்படி வருந்துகிறீர்களெ" ன்றாள். அப்பொழுது சுரசேனன், சொல்லற்கரிய அன்பு பொழியும் பார்வையுடன் அவளை நோக்கி, தேனைப்பருக ஆசைகொண்டு வந்து மொய்க்கும் வண்டுகளைப்போல், சந்திரனை நிகர்த்த தாரையின் முகத்திலிருந்து பெருகும் இன்மொழியான தேனைப் பருக வந்து கூடும் வண்டுகளைப்போல், கறுத்துச்சுருண்டு விளங்கும் மயிரால், பார்ப்போர் மனதைக் கொள்ளைகொள்ளும் தலையை, கத்தியையும் ஈட்டியையும் வில்லையும் பிடித்துக் காய்த்துப்போன தன் கடினமான கையால் தடவி "என் கண்ணின் மணியே! மணியாடு பாவாய்; நீ உன் வயதற்கேற்ற குழந்தைகளுடன் விளையாடிக்கொண்டு மகிழ்வுடன் காலங்கழிக்காமல், இந்தக் கவலையெல்லாம் உனக்கேன்? புருஷர்களுக்கு எண்ணிறந்த காரியங்களும், விசாரங்களு முண்டு. சிறு குழந்தைகள் அவைகளைக் கேட்கக் கூடாதெ" ன்று தாரையின் புத்தியை வேறு விஷயத்தில் மாற்றப் பார்த்தான். ஆனால் தாரை அவன் தடுக்கத் தடுக்க ஓரே பிடிவாதமாய்க் கோபத்தாலும் வருத்தத்தாலும் கண்களில் நீர் ததும்ப, "அதைச் சொன்னாலொழிய அப்புறம் போக மாட்டே" னென்று நிர்ப்பந்தஞ் செய்தாள்.

தன் அருமைக் குழந்தையை வருத்தப்படுத்த மனமில்லாமல், சுரசேனன் தன் வம்சத்தின் வரலாற்றையும் பெருமையையும் கீர்த்தியையும் செல்வத்தையும் எடுத்துரைத்து, பிற்காலத்தில் ஆப்கானியர்களால் தன் இராஜ்யம் கைப்பற்றப்பட்டதையும், தான் பல தட்வை போர்புரிந்தும் பகைவரின் அதிகபலத்தால் தன் முயற்சிகள் வீணானதையும் நேவார் நாட்டரசனான ராயமல்லனுடைய நட்பைக் கொண்டு தற்காலத்தில் பிஜனூரில் ஒண்டியாய்க் காலங்கழித்து வருவதையும் சொல்லி, 'இதெல்லாம் நீகேட்கத்தகுந்ததல்ல. நீ கவலைப்படத் தகுந்ததல்ல. கடவுளுக்கு என்னிடத்தில் கிருபையும், எனக்கு அதிஷ்டமு மிருந்தால், உனக்கு முந்தியாவது பிந்தியாவது ஓர் ஆண் பிள்ளை பிறக்காதோ? அல்லது நீயே ஆண் குழந்தையாய்ப் பிறந்திருக்க மாட்டாயோ? உன் தைரியத்திற்கும், புத்திக் கூர்மைக்கும் முடியாத காரியமும் உண்டோ? ஓர் ஊசி நாட்டும் இடங்கூடத் துருக்கருக்கு கிடைக்காமல் செய்யமாட்டாயோ? விதியின் பயனை வெல்லவும் முடியுமோ" வென்றான்.

தாராபாய் அதைக்கேட்டு "அப்பா! அதெல்லாம் எனக்குத் தெரியாது. என் உபாத்தியாயர் விதியின் பயனை மதியால் வெல்ல முடியுமென்று பல கதைகளைச் சொல்லக் கேட்டிருக்கிறேன். நான் மகனாய்ப் பிறக்காத பாபத்தைச் செய்திருந்தாலும், என்னால் இயன்றவரையில் அந்தக் குறையை நீக்காதிருந்தால் நான் பிறந்தென்ன? உங்களுடைய வாயிலிருந்து வந்த வார்த்தை பொய்யாகாது. நான் உங்களுக்கு இன்றுமுதல் மகனென்றே நினைத்துக் கொள்ளுங்கள். அதற்குத் தகுந்த யோக்கியதையைச் சம்பாதித்துக்கொள்வதே, இனி எனக்கு வேலை; இரவு பகலாய் அதிலேயே என் எண்ணங்கள் யாவையும் செலுத்தி, ரஜபுத்திர வீரர்களுக்கு பின்னடையாமல், தங்களுடைய வாக்கிலிருந்து தெய்வச்செயலாய் வந்த மொழி

யின்படி, நமது பூர்விக இராஜ்யத்தில் துருக்கருக்கு ஊசிநாட்டவும் இடங்கொடாமல் அடித்துத் துரத்துகிறேன். இந்தப் புண்ணிய காரியத்திற்குக் கடவுள் அருள் புரியாமலிருப்பாரா பார்ப்போமெ"ன்றாள்.

அன்றுமுதல் தாராபாய் தன் வயதுக் குழந்தைகளுக்குரிய வேடிக்கைகளையும் விளையாட்டுகளையும் விட்டு, தன் ஆடையாபரணங்களையும் தின்பண்டங்களையும் உணவுகளையும் அகற்றி, ரஜபுத்திரச் சிறுவர்கள் தேகபலத்தையும், லாகவத்தையும், தைரியத்தையும் அடைவதற்கேற்ற முறைகளைப் பழகுவதுபோல், தானும் தேகப்பயிற்சியிலும், கத்தி கேடயம் ஈட்டி வில் முதலிய ஆயுதங்களை உபயோகிப்பதிலும், தன் தேசத்துப் பூர்வ சரித்திரங்கள், பெயர் பெற்ற யுத்த வீரர்களின் பராக்கிரமச் செயல்கள், வேட்டை படைகளின் அணிவகுப்பு, கோட்டைகளைக்கட்டுதல், அரண்களை ஏற்படுத்தல் முற்றுகையிடுவது முதலிய விஷயங்களிலேயே ஒவ்வொரு நிமிஷத்தையும் செலுத்தி வந்தாள். சில காலத்திற்குள் அங்குள்ள க்ஷத்திரிய குமாரர்களில் எவனும் தாராபாயுடன் பந்தயம் ஓடுவதிலாவது, கத்திச் சண்டையிலாவது, ஈட்டியை எறிவதிலாவது, தூரத்திலுள்ள பொருள்களைக் குறிதவறாமல் அம்புகளால் அடிப்பதிலாவது போட்டிபோட முடியவில்லை. அவர்களோ ஜாதிவழக்கப்படி, மேற்சொன்ன முறைகளில் அதிக ஊக்கமில்லாமல், அரை மனதுடன் உழைக்கிறவர்கள். தாராபாயோ அவைகளில் நிகரற்ற திறமையை அடைவதையே பொருட்டாக வெண்ணி, அதற்காகத் தன் உடலையும் ஆவியையும் தத்தம் செய்தவள். க்ஷத்திரியச் சிறுவர்களை வெகு சீக்கிரத்தில் அவள் மிஞ்சி, தன் தந்தையின் பரிவாரத்திலுள்ள போர்வீரர்களைக் கவனித்து, குதிரையேற்றத்திலும் ஆயுதப் பயிற்சியிலும் அவர்களையும் வெகுதூரம் பின்னடையச் செய்தாள். ஓய்வு நேரங்களில், முதிர்ந்த வீரர்களோடு யுத்த முறைகளைப்பற்றி பேசுவதும் வாதஞ் செய்வதுமே அவளுக்கு வேலை. மத்திய ஆசியாவிலுள்ள பாலைவனங்களிலிருந்து பிடித்துக் கொண்டுவரப்பட்ட, ஒருவரும் கிட்ட நெருங்கமுடியாத மூர்க்கமான காட்டுக் குதிரைகளின்மேல், பயமில்லாமல் ஏறி அடக்கிப் பழக்குவதில் அவளுக்கு இணையில்லை. அதிவேகமாய்ச் சவாரி செய்து கொண்டே, தரையில் வைத்திருக்கும் எலுமிச்சம்பழத்தைக் கத்தியால் இரண்டாய் வெட்டி மறுபடியும் தயங்காமல் கடுவேகமாய்ப் போய், பந்தயத்தை ஜயிப்பதில் அவளுடன் போட்டிக்கு ஒருவரும் வருவதில்லை.

இரவும் பகலும் அவளுக்கு ஒரே ஞாபகம். எந்த உபாயத்தால் சத்துருக்களை தன் தந்தையின் நாட்டிலிருந்து துரத்தியடித்து, எப்பொழுதும்போல் அவரை அதில் அரசாளச் செய்வோமென்று பகற்பொழுதெல்லாம் அதைப்பற்றியே ஆலோசித்துக் கொண்டிருப்பாள். தூங்கும்பொழுது அதைப்பற்றியே கனவு காண்பாள். இப்படிச் சிலகாலஞ் சென்ற பிறகு, தாராபாய் ஒருநாள் தன் தந்தையைப் பார்த்து "அப்பா! நம்மைச் சேர்ந்த வீரர்கள் மிகுந்த உற்சாக முடையவர்களாய், சத்துருக்களுடன் மறுபடியும் போர்புரியத்தகுந்த பலமும் தைரியமும் தங்களுக்கிருக்கிறதென்றும், வெகு நாளாய் நாம் யாதொரு முயற்சியும் செய்யாததால் துருக்கர் கவலையற்று அஜாக்கிரதையா யிருக்கிறா ரென்றும், நமது ராஜ்யத்தைக் கைப்பற்ற இதே தருணமென்றும் எனக்கு உறுதி சொல்லுகிறார்கள். நானும் அப்படியே நினைக்கிறேன். இதற்காகவே நான் வெகுகாலமாய் நமது ஜாதி வழக்கத்தைத் துறந்து, ஜனங்களுடைய அபிப்பிராயத்தைக் கவனிக்காமல், அவர்களுடைய பரிகாசத்தையும் பழிச்சொல்லையும் பொருளாக வெண்ணாமல், பெண் உடையையும் ஆபரணங்களையும் வழக்கங்களையும் துறந்து, உங்களுக்கு மகனாயிருக்கவேண்டு மென்றே இராப் பகலாய் உழைத்து வருகிறேன். இனி நமக்கு நல்ல காலம் பிறந்திருக்கிறது. நம்மைப் பிடித்திருந்த துரதிருஷ்டம் விலகிற்று. ஜயமும் அதிகாரமும், கீர்த்தியும் செல்வமும், நமக்குக் கிடைக்கும். தங்களுடைய கவலையை நான் ஒப்புக் கொண்டிருக்கும்பொழுது தாங்கள் வருந்துவதேனெ"ன்றாள்.

சுரசேனன் தாரையின் சொற்களைக் கடவுளினருளால் தனக்குக் கிடைத்த கட்டளையென்றே நினைத்து, தன் போர்வீரர்களை மறுபடியும் சண்டைக்கு ஆயத்தஞ்செய்தான். தாராபாய் க்ஷத்திரியவீரனுடைய வேடம் பூண்டு கவசந்தரித்தது, ஆயுதபாணியாய், தன்

சிந்த அறந்தபோதெ மூக்கு, எம்மட்டுமிருக்கும்?

பலத்திற்கும் தைரியத்திற்கும் உற்சாகத்திற்கும் எவ்விதத்திலும் ஏற்ற உத்தம அசுவத்தின்மேல் ஏறி, வயதாலும் பழக்கத்தாலும் அனுபவத்தாலும் கீர்த்தியாலும் முதிர்ந்த போர்வீரர்களை நடத்திச்சென்றாள். "முற்காலத்தில் க்ஷத்திரியப் பெண்மணிகள் கவசம்பூண்டு யுத்தஞ் செய்யவில்லையோ? கோட்டைகளைக் காக்கவில்லையோ? படைகளை நடத்தவில்லையோ? நானும் ஏன் அப்படிச் செய்யக்கூடாதெ"ன்பதே அவளுடைய வாதம். தங்களுக் கரசியான ஓர் குழந்தை, தன் வழக்கத்தையும் சுபாவத்தையும் தொழில்களையும் விட்டு, வீரர்களுக்குள் வீரனாய் விளங்கி, எவ்விதத்தாலும் தங்களை முந்தியிருப்பதைக் கண்ட அப்போர்வீரர்கள், தாரையைக் கேவலம் மனிதக் குழந்தையாய் எண்ணாமல், ஈசனருளால் தங்களரசனுக்கு மறுபடியும் நாட்டையும், கீர்த்தியையும், அதிகாரத்தையும், செல்வத்தையும் கொடுக்கவந்த தெய்வப் பிறவியென்றே மதித்து, அவளைத் தங்களுடைய கண்களின் தாரைபோலும், வீரலட்சுமியைப்போலும் கருதி, அவளுடன் சென்று, காலனையும் எதிர்த்துப் போர்புரிந்து ஜயிப்பதற்குத் துணிந்திருந்தார்கள். அவளுக்காகத் தங்களுடைய உடலையும் உயிரையும் வீடு வாசல்களையும் பெண்டு பிள்ளைகளையும் துரும்பாயெண்ணித் துறப்பவர்கள்.

நல்ல தருணம் பார்த்து, தோடா நாட்டிற்குள் புகுந்து, லில்லாவென்ற ஆப்கானியத் தலைவனை எதிர்த்தார்கள். ஆனால் நாமொன்று நினைக்கத் தெய்வமொன்று நினைத்ததென்றபடி, சுரசேனனுக்கு நல்லகாலம் இன்னும் பிறக்கவில்லை. அபஜயத்தையும் மனவருத்தத்தையும் அனுபவிக்கவேண்டிய கருமம் இன்னும் ஒழியவில்லை. சுரசேனனுடைய போர்வீரர்கள் ஒவ்வொருவனும் ஆயிரம் பேர்களைப்போலவும், தன் குட்டியைப் பறிகொடுத்த பெண் சிங்கத்தைப் போலவும், காயம்பட்ட வேங்கைப் புலிகளைப் போலவும் வீராவேசங்கொண்டு யுத்தஞ்செய்தும், ஆப்கானியருடைய எண்ணிறந்த சைன்னியங்களொன்றை பெருங்கடலிலிருந்து ஓயாமல் ஒன்றின்மேல் ஒன்றாக வந்து விழுந்து கொண்டிருக்கும் அலைகளில் கரைத்த உப்புக் கண்டத்தைப்போல விழுங்கப்பட்டார்கள்.

வெகுகாலமாய்த் தோல்வியையே அடைந்துவரும் சுரசேனனுக்கு இன்னும் மனந்தளர்ந்தது. அவனுடைய போர்வீரர்களுக்குத் தாராபாயினால் நடத்தப்பட்டு அவளுடைய கண்ணிற் கெதிரே யுத்தம்செய்யும் தங்களுக்கு ஏன் வெற்றி கிடைக்கவில்லையென்பது பெருத்த ஆச்சரியமாயிற்று. தேவாம்சமான தங்களுடைய இராணி மனிதரால் தோல்வியடைவது எப்படி? தாராபாய் முதன் முதல் செய்த யுத்தத்தில் வெற்றியடையவில்லையே! அவள் தங்களுடைய தைரியத்தையும் வீரியத்தையும் பற்றி என்ன எண்ணுவாளோவென்று எல்லோரும் கவலைகொண் டிருந்தார்கள்.

அந்த க்ஷத்திரியப் பெண்மணியின் மனக்கசப்பையும் கோபத்தையும் இன்னதென்று சொல்லவும் முடியுமோ? ஆயினும், அவள் தன் முகக்குறியாலும் சொற்களாலும் தன் உள்ளத்தில் கொதித்துப் பொங்கும் ஆத்திரத்தையும் துயரத்தையும் சற்றேனும் வெளிக்காட்டாமல், தன் தந்தையையும் போர்வீரர்களையும் தேற்றி, "யுத்தத்தில் தோல்வியும் வெற்றியும் ஒருவருடைய பங்கல்ல. இரவும் பகலும், வெய்யிலும் மழையும்போல், மாறி மாறி வரும். அடுத்த தடவை பகைவரை வெல்வோமென்பதில் சற்றும் ஐயமில்லை. முதலில் துக்கத்தை அனுபவிக்கிறவர்கள், பிறகு நீடூழிகாலம் சுகத்தையே அனுபவிப்பார்கள். சுத்தவீரர்கள் மனந்தளரலாமோ? குறித்த காரியத்தை முடிக்காமல் பின்னடையலாமோ? உயிருள்ள வரையில் பயமில்லை. பொறுத்தார் பூமி ஆள்வரென்ற பலவித நீதிகளையும் காரணங்களையும் சொல்லி, உற்சாகங் குறையாமல் செய்து, தங்களிலுள்ள குறைகளைச் சீர்திருத்திப் பகைவரின் பலாபலத்தை நன்றாய்க் கவனித்து, அதற்கேற்ற சூழ்ச்சி செய்யும்படி வற்புறுத்தினாள். அரசன் அன்று கொல்வான் தெய்வம் நின்று கொல்லும் என்றபடி அடுத்ததடவை ஆப்கானியரை இருந்தவிடந்தெரியாமல் அழித்துத் தன் தகப்பனுடைய ராஜ்யமனைத்தையும் துருக்கர்களிடத்திலிருந்து கைப்பற்றி, அவர்களை இந்தியாவில் தலைகாட்டாமல் அடிக்கவேணுமென்று தனக்குள் சபதஞ் செய்துகொண்டாள்.

தாராபாயின் ரூபலாவண்ணியமும் தைரிய

மும் வீரியமும் அபாரமான புத்தியும் ரஜ புத்திர வீரர்களை எவ்விதத்தாலும் மிஞ்சி, சுத்த வீரசிகாமணியாய் விளங்கும் கீர்த்தியும், நாடெங்கும் பரவின. எண்ணிறந்த க்ஷத்திரிய வீரர்களும் ராஜகுமாரர்களும், அந்தக் கன்னிகா ரத்தினத்தை மணஞ்செய்ய விரும்பி, விலை பெற்ற ஆடையாபரணங்களையும், அரிய காட்சிப் பொருள்களையும், தூதர்களால் சுரசேனனுக்கு அனுப்பி, அவனுடன் சம்பந்தஞ் செய்ய வேண்டினார்கள். தாராபாயின் மனம் போனபடியே மணஞ் செய்விக்கவேண்டுமென்று, அவ்வரசன் தன்னிடத்தில் வரும் தூதர்களைப்பற்றித் தாரையிடத்தில் வினவ, அவள் "அப்பா! ஒவ்வொருவருக்கும் தனித் தனியாய்ப் பதிலளிக்க வேண்டியதில்லை. இனி என்னைக் கேட்கவேண்டுவதுமில்லை. 'நமது பூர்வீக இர்ாஜ்யமான டோடாவை ஆப்கானியரிடத்திலிருந்து கைப்பற்றிக்கொடுக்கும் வீரனையே நான் மணஞ் செய்வேனென்று ஒரே மறுமொழியை எல்லோருக்கும் கூறுங்கள். தங்களை மறுபடியும் நமது இராஜ்யத்தை முடிசூட்டிப் பார்த்துக் களிப்பதற்கே இந்த ஜன்மத்தைத் தாரைவார்த்திருக்கிறேன். அந்தக் காரியத்தை முடிப்பவனே எனக்குக் கணவனும் அரசனும் கடவுளுமாவானெ"ன்றாள்.

இதைக்கேட்டு எல்லோரும் பின்னடைந்து மௌனஞ்சாதித்து, வந்த வழியே சென்றார்கள். பெருங்கடலின் மணல்களைப்போல் எண்ணமுடியாத சைன்யங்களைப் படைத்த ஆப்கானியருடன் போர்புரிந்து முறியடித்து, ராஜஸ்தானத்திலிருந்து அவர்களைத் துரத்துவது மனிதர்களால் முடியாத காரியமென்றும், இந்த விரதம்பூண்ட தாராபாய், காலமுள்ளவரையில் மணமில்லாமல் கன்னிகையாகவே இருப்பாளென்றும் முடிவுசெய்தார்கள்.

மேவார் நாட்டை ஆண்டுவந்த ராயமல்லனென்ற அரசனுக்கு, சங்கனென்றும் பிருதிவியென்றும், ஜயமல்லனென்றும் மூன்று குமாரர்களுண்டு. மூத்தவனான சங்கன், முன் யோசனையும் பொறுமையும் புத்திக்கூர்மையுமுடையவன். அடுத்தவனான பிருதிவி, வேட்டையிலும் யுத்தத்திலும் ஒப்பில்லாத திறமையுடையவன். பயமென்பது இன்னதென்றே அவனுக்குத் தெரியாது. போர் புரிவதையே உயிராகக் கொண்டவன். இளையோனான ஜயமல்லன், தன்னயம் பாராட்டுவதிலும், சூழ்ச்சி செய்வதிலும், கபடத்திலும் இணையற்றவன்.

ராயமல்லனுக்கு, மூத்த குமாரனான சங்கனிடத்தில் அளவற்ற பிரீதியுண்டு. ஜனங்களோ பிருதிவியின்மேல் ஆசைவைத்து, அவனே க்ஷத்திரிய வீரர்களுக்குரிய எல்லா லட்சணங்களும் பொருந்தினவனென்று கொண்டாடினார்கள். பிறந்ததுமுதல் எந்த மனிதனுக்கும் மிருகத்திற்கும், பின்னடையாத பிருதிவி, தானே பட்டத்திற்குரியவனென்றும், சங்கன் நெருப்புக் கொழுந்துபோன்ற ரஜபுத்திரர்களுக்குத் தலைவனாயிருக்கத் தகுந்தவனல்லவென்றும் நினைத்து, "பாழும் தெய்வம் என்னை இரண்டாவது மகனாய்ப் படைத்ததே; ஆயினும், ஒன்றிற்கும் அஞ்சாத நான், விதிக்கு மாத்திரம் அஞ்சுவேனோ? எப்படியாவது ரஜபுத்திரர்களுக்குத் தலைவனாகாமல் விடுவதில்லை" யென்று ஒளிமறைவில்லாமல் எவ்விடத்திலும் எல்லோரிடத்திலும் வீரவாதம் கூறிக்கொண்டேயிருந்தான்.

அதை ஒரு நாள் கேட்டுக்கொண்டிருந்த சங்கன், அவனை அழைத்துத் "தம்பி! ரஜபுத்திரர்களை நடத்துவதற்கு நீயே தகுந்தவனென்பதில் சற்றும் ஐயமில்லை. நம்மூவரில் பலத்திலும் ஆண்மையிலும் தைரியத்திலும் மேலானவன் நீயே. நமது நாட்டின் பேரும் கீர்த்தியும் விருத்தியாவதற்கு நீ அரசனாயிருக்கவேண்டுமென்பது இன்றியமையாமலிருந்தால், நான் மூத்தவனென்ற பாத்தியத்தை விட்டுக்கொடுத்து, உனக்கே பட்டம் கட்டுவிக்கிறேன். ஆயினும், கடவுளின் கருத்தை நாம் நிச்சயிக்க முடியுமோ? மூவரும் சாருணீதேவியின் ஆலயத்திற்குச் சென்று, அங்கே புலிக்குன்றில் வசிக்கும் பெண் துறவியைக் கேட்போம். அவள் அந்தத் தெய்வத்திற்கு உகந்த பணிவிடை செய்கிறவள். அவள் வாயால் கடவுளின் திருவுள்ளம் வெளிப்படு"மென்றான்.

சிறுவர்களுக்கான பக்கங்கள்

CHILDREN'S PAGES

[ஸ்ரீமான் கே.ஸி. ஆதிவராகாசாரியாரவர்கள்]

தன் வழி அறிதல்

ஏறக்குறைய நூறு வருஷங்களுக்கு முன், ஐதர் ஆலி என்பவர் மைசூருக்கு அரசனாக இருந்தார். அவருக்கும், புதுச்சேரியிலிருந்த பிரஞ்சுக்காரருக்கும் கடித வரத்துப் போக்குகள் உண்டு. புதுச்சேரி என்கிற பட்டணம் இப்பொழுது எப்படியோ, அப்படியே அப்பொழுதும் பிரஞ்சுக்காரருக்குச் சொந்தமாயிருந்தது.

ஒருதடவை புதுச்சேரியில் இருந்த பிரஞ்சுக்காரர், பெங்களூரிலிருந்த ஐதர் ஆலிக்கு ஒரு ஸ்தானபதியை அனுப்பினார்கள். அந்தக் காலத்தில் அப்பட்டணத்திலிருந்து பெங்களூருக்குப் போகச் சாலைமார்க்கம் இல்லை. ஆகையினாலே, அந்த ஸ்தானபதியானவர் காடு, மலை, வெளி, வனாந்தரம் இவைகளையெல்லாம் கடந்துகொண்டு போக வேண்டியதாயிற்று. அவர் போனபொழுது அவருடைய நாயும் கூடப்போயிற்று. அதற்குமுன் அது, புதுச்சேரியின் எல்லையைத் தாண்டிப் போனதே இல்லை. பெங்களூருக்குப் போய்ச் சேர்ந்த பிறகு, ஒருநாள் அது எஜமானனை விட்டுப் பிரிந்துபோயிற்று.

எஜமானன் அந்த நாய்க்காக ஊரெல்லாம் தேடியும் அது அகப்படவில்லை. அந்த நாயோ சிலவாரங்களுக்குப் பிறகு புதுச்சேரிக்கு எப்படியோ வந்து சேர்ந்து தன் எஜமானனுடைய வீட்டு வாசற்படியில் ஒருநாள் படுத்துக்கொண் டிருந்தது. இந்த மாதிரியாக, தான் எப்பொழுதும் போயிராத காடு மலை முதலியவைகளை எல்லாம் தாண்டிக்கொண்டு அநேக நாழிகை வழிதூரம் சாலையில்லாத வழியில் அது திரும்பிவந்துவிட்டது என்ன ஆச்சரியம்!

அந்த நாயைப்போல அவ்வளவு அறிவு மனிதர்களுக்கு இருப்பது அருமை. நமக்குள் அநேகர் இரண்டு மூன்று நாழிகை வழிதூரமுள்ள ஒரு கிராமத்துக்குப் புதிதாய்ப் போனால், தனியாய்த் திரும்பிவர அவர்களுக்கு வழிதெரிகிறதில்லை. சிலர் ஓர் ஊருக்கு எத்தனை முறை போனாலும், துணைக்கு யாரையாவது அழைத்துக்கொண்டு போகிறார்கள். அப்படிப் போயும், எப்பொழுதாவது தனியாய்ப் போனால் வழிதப்பிப் போகிறார்கள். ஏனென்றால், ஓர் ஊருக்கு அவர்கள் புதிதாய்ப் போகும் பொழுது, வழியில் இருக்கிறவைகளைக் கவனித்துப்பார்த்து அடையாளமாக வைத்துக் கொள்ளுகிறதில்லை; மேலும், வழி திரும்பும் பொழுது அது கிழக்கிலா, மேற்கிலா, வடக்கிலா, தெற்கிலா அல்லது வலப்புறமாகவா, இடப்புறமாகவா என்று கவனிக்கிறதில்லை; சிலவேளை தாங்கள் திரும்புவதே தெரியாது. தாங்கள் கடந்து போனதைத் திரும்பிப் பார்க்கிறதும், தாங்கள் போகும் வழி எவ்வளவு தூரம் திரும்பாமல் போகிறது என்று கவனிக்கிறதும் இல்லை.

ஓர் ஊருக்குத்தனியாய்ப் போகவும் அல்லது ஓர் ஊரிலிருந்து தனியாய்த் திரும்பி வரவும் வழி தெரிய வேண்டுமானால், நாம் இந்த விஷயங்களை யெல்லாம் நன்றாய்க் கவனித்து வைக்கவேண்டும்.

பிரபஞ்ச வர்த்தமானம்

NEWS AND NOTES

ஓர் அதிசயமான இயந்திரக் கை.

கைகள் எக்காரணத்தினாலாவது வெட்டிவிடப்பட்டால், அவைகளின் அவசியமில்லாமலே காரியங்களைச் செய்துவரும்படி, இயந்திரக்கைகள், டாம்ஸன் என்பவரால் ஏற்படுத்தப்பட் டிருக்கின்றன. அவை, ஓர் சிலந்தியின் கால்களைப் போன்று நின்று இருக்கின்றன. காலினாலும், கால் கட்டைவிரலினாலும் ஆட்டப்படும் சில கம்பிகளால் இயந்திரம் வேலை செய்யும். அதனால் எழுதவும், எழுதின கடிதத்தை மடித்து உரைக்குள் போடவும், சாப்பிடவும், குடிக்கவும் கூடும்.

* * *

காக்கிநாடாவிலுள்ள ஸத்தியலிங்க நாயக்கரின் தர்மகர்த்தர்கள் பி எஸ். கிரோதி என்பவருக்கு ஓர் உபகாரச் சம்பளம் கொடுத்திருக்கின்றனர்.

பயிர்த் தொழில் பரிசீலனைக்காக ஓர் உபகாரச் சம்பளம்.

ஸ்ரீமான் கிரோதி பீ. ஏ. பரிக்ஷையில் தேறியிருப்பதோடு பயிர்த்தொழிலில் நல்ல அனுபவ ஞானமுள்ளவர். அவர் இவ்வுபகாரச் சம்பளத்தின் உதவியால் தற்காலம் அமெரிக்காவிற்குச் சென்று, நாட்டுப்புறங்களில் பயிர்த்தொழில் விருத்தியாகும் வழிகளைக் கவனிப்பார். பிறகு அங்கிருந்து இங்கிலாந்து, ஜப்பான் முதலிய தேசங்களுக்கும் செல்வாரெனத் தெரிகிறது.

* * *

சில வருஷங்களாக மோடார் வண்டிகள் அதிகரிப்பதனால், அனேகர் அவைகளில் ஏறிச் செல்கின்றனர். அதனால் அப்படி செல்பவர்களுக்கு நன்மையோ தீமையோ என அபிப்பிராய பேதம் ஏற்பட்டது.

மோடாரில் செல்வதினால் உண்டாகும் நன்மைகள்.

தேகப் பயிற்சிக்கு அதனால் அவசியமில்லாமற்போமிற்றென சிலர் எண்ணியிருந்தனர். ஆனால், வேகமாகச் செல்வதால் காற்று உட்கொள்வது அதிகமென்றும், நாட்டுப் பிரதேசங்களில் 40, 50 மைல் வேகத்திற் செல்லும்போது கைகால்களுக்குப் பயிற்சி ஏற்படுவதோடு பிராணாதாரமான சுத்த வாயு உட்கொள்ளப்பட்டு தேகத்திலுள்ள துர்மலம் முதலியவை வெளிப்படக் காரணம் ஏற்படுகிறதென்றும் ஓர் வைத்தியர் அபிப்பிராயப்படுகிறார். அதனால் ஜீர்ணசக்தியும் அதிகரிக்குமாம்.

* * *

இந்திய சாஸ்திர நிபுணர்களில் சிறந்தவர்களுள் ஒருவராய் விளங்கும் ஸ்ரீமான் போஸவர்கள், ராயல் ஸொஸைடி அங்கத்தினர்களுள் ஒருவராகத் தெரிந்தெடுக்கப் பட்டிருக்கின்றனர் என்பதை அறிய நாம் மிகவும் மகிழ்ச்சி அடைகிறோம்.

ஸர். ஜே ஸி. போஸ்

இங்கிலாந்தில் மிகவும் பெருமைவாய்ந்த சங்கம் ராயல் ஸொஸைடி என்பது. அச்சங்கத்தில் அங்கத்தினராதல் மிகவும் அரிது. இதனுடன், ஸ்காத்லந்திலுள்ள ஓர் யூனிவர்ஸிடியார் போஸவர்களுக்கு சட்ட நிபுணர் என்னும் (Doctor of Laws) பட்டம் கொடுக்க உத்தேசித் திருப்பதாகக் கேள்வி. இதுவும் ஓர் நற்செய்தியே.

* * *

பிளேச்சும் மலேரியாஜ்வரமும் மிகவும் மும்மரமாக நடைபெறும் பீஹார் மாகாணத்திற்குத் தகுந்த வைத்திய சாலையும், வைத்தியர்களும் இல்லையென்பது பெருங்குறையாக விருந்தது. இதை நீக்கும் பொருட்டும், தக்க வைத்தியர்கள் ஏற்படும் பொருட்டும், ஓர் வைத்திய காலேஜ் ஏற்படுத்தும்படி தர்பங்கா மஹாராஜா ஐந்துலக்ஷம் ரூபாய் நன்கொடையாகக் கொடுத்திருக்கின்றனர்.

தர்பங்கா மஹாராஜாவின் நன் கொடை

இந்தியாவிற்கு முக்கியமாக வேண்டியவை நல்லுணவும், ரோகமின்மையுமாதலால், இரண்டில் பின்னதற்கு உதவிசெய்த மஹாராஜா அவர்களுக்கு இந்தியர்கள் மிகவும் கடமைப்பட்டிருக்கின்றனர்.

* * *

முதன் முதலில், இந்தியாவில் இந்திய சாரணச் சிறுவர் சங்க இயக்கத்தைக் கிளப்பியவர் அன்னி பெஸன்ட் அம்மை என்பது நேயர்கள் அறிந்த விஷயம்.

இந்திய சாரணச் சிறுவர் சங்கம்.

இவரது இயக்கத்தினால் ஏற்பட்ட சங்கத்தைப் பார்த்த லார்ட் பெண்ட்லண்டு கவர்ன்மெண்டார் ஒரு புதிய சாரணச் சிறுவர் சங்கத்தை ஏற்படுத்தித் தனியாக நடத்தி வந்தனர். லார்ட் வில்லிங்டன் கவர்னராகவந்த பிறகு, இந்த இரண்டு சாரணச் சிறுவர் சங்கங்களின் நோக்கம் ஒன்றாயிருக்கும்போது, தனித்தனியாக விருப்பதனால் பயனொன்றுமில்லையெனக் கருதி, இரண்டு சங்கங்களையும் ஒன்றுபடுத்த முயற்சிகள் செய்தனர். இவரது முயற்சிகளால், இரண்டு சங்கங்களும் ஒன்றுபடுத்தப்பட்டன வென்றும், ஒன்றுபடுத்தப்பட்ட இந்திய சாரணச் சிறுவர் சங்கத்திற்கு லார்ட் வில்லிங்டன் அக்கிராசனராகவும், அன்னி பெஸன்ட் உப அக்கிராசனராகவும் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறார்களென்றும் அறிகிறோம்..

* * *



விக்டோரியா மஹாராணியும், அவர்து மந்திரிகளும்.

விவேகபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்.

தொகுதி XII } ரௌத்திரிஸு சித்திரைமீ : : 1920-ஸு மேமீ { பகுதி 11

கம்பராமாயணத் திரட்டு

SELECTIONS FROM KAMBA RAMAYANA

என்றலுமே முனிவரன் தன் அடி இறைஞ்சி.
"ஈண்டு ஏகிக் கொணர்வேன்" என்று,
துன்று கழல் முடிவேந்தர் அடி போற்ற,
சுமந்திரனே முதல்வர் ஆய
வன் திறல்சேர் அமைச்சரோடு மாமணித் தேர்
ஏறுதலும், வானோர் வாழ்த்தி,
"இன்று எமது வினை முடிந்தது" எனச் சொரிந்தார்
மலர்மாரி இடைவிடாமல்.

அயல் வரு முனிவரும் ஆசி கூறிட,
புயல்பொழி தடக்கையால் தொழுது, பொங்கு நீர்க்
கயல்பொரு விழியொடு கலை வலாளனை
இயல்பொடு கொணர்ந்தனன் இரதம் ஏற்றியே.

" சான்றவர் சான்றவ! தருமம், மா தவம்
போன்று ஒளிர் புனித! நின் அருளில் பூத்த என்
ஆன்ற தொல் குலம் இனி அரசின் வைகும், ஆல்!
யான் தவம் உடைமையும் இழப்பு இன்றும், அரோ!"

என்றலும், "அரச, நீ இரங்கல்! இவ் உலகு
ஒன்றுமோ? உலகம் ஈரேழும் ஓம்பிடும்
வன்திறல் மைந்தரை அளிக்கும் மா மகம்
இன்று நீ இயற்றுதற்கு எழுக ஈண்டு!" என்றான்.

முழங்கு அழல் மும்மையும் முடுகி, ஆகுதி
வழங்கியே ஈராறு திங்கள் வாய்த்தபின்,
தழங்கின துந்துபி! தாஇல் வானகம்
விழுங்கினர் விண்ணவர் வெளி இன்று என்னவே!

ஆய இடை, கனலினின்று, அம்பொன் தட்டமீ
தூய நல் சுதை நிகர் பிண்டம் ஒன்று, சூழ்
தீ எரி பங்கியும், சிவந்த கண்ணுமா,
ஏ எனப் பூதம் ஒன்று எழுந்தது, ஏந்தியே.

மாமுனி அருள் வழி மன்னர் மன்னவன்
தாம மென் சுரிகுழல், தொன்றைத் தாய வாய்,
காமர் ஒண் கௌசலை கரத்தின் ஓர் பகிர்
தாம் உற அளித்தனன், சங்கம் ஆர்த்து எழ!

கைகயன் தனையை தன் கரத்தும் அம் முறைச்
செய்கையின் அளித்தனன், தேவர் ஆர்த்து எழ,
பொய்கையும், நதிகளும், பொழிலும், ஓதிமம்,
வைகுறு கோசலை மன்னர் மன்னனே.

நமித்திரர் நடுக்குறு நலம்கொள் மொய்ம்பு உடை
நிமித் திரு மரபு உளான், முன்னர் நீர்மையில், [ச்
சுமித்திரைக்கு அளித்தனன்,சுரர்க்குவேந்து, "இனி
சமித்தது என் பகை" எனத் தமரொடு ஆர்ப்பவே.

பின்னும் அப்பெருந் தகை பிதிர்ந்து வீழ்ந்தது
தன்னையும் சுமித்திரை தனக்கு நல்கினான்,
ஒன்னலர்க்கு இடமும், வேறு உலகின் ஓங்கிய
மன் உயிர் தமக்கு நீள் வலமும் துள்ளவே.

ஒரு பகல் உலகு எலாம் உதரத்துள் பொதிந்து,
அருமறைக்கு உணர்வு அரும் அவனை, அஞ்சனக்
கருமுகில் கொழுந்து எழில் காட்டும் சோதியை,
திரு'உறப் பயந்தனள் திறம்கொள் கோசலை.

ஆசையும் விசும்பும் நின்று அமரர் ஆர்த்து எழ,
வாசவன் முதலினர் வணங்கி வாழ்த்துற,
பூசமும் மீனமும் பொலிய, நல்கினாள்,
மாசு அறு கேகயன் மாது மைந்தனை.

தளை அவிழ் தரு உடைச் சயிலகோபனும்
கிளையும் அந்தரமிசை கெழுமி ஆர்ப்புற,
அளைபுகும் அரவினோடு அலவன் வாழ்வு உற,
இளையவற் பயந்தனள் இளையமென்கொடி.

படம் கிளர் பல்தலைப் பாந்தள் ஏந்து பார்
நடம் கிளர் தர, மறை நவில நாடகம்,
மடங்கலும் மகமுமே வாழ்வின் ஓங்கிட,
விடம் கிளர் விழியினாள் மீட்டும் ஈன்றனள்,

 சிபுரத்துப் பள்ளி செத்தும் கெட்டான் இருந்தும் கெட்டான்.

விவேக போதினி

தொ.12] ரௌத்திரி ஸு : : சித்திரைமீ [ப.11

யுதிஷ்டிரர்

YUDHISHTIRA

யக்ஷன் : இந்திரியங்களால் அடையப்படும் விஷயங்களை அனுபவித்துக்கொண்டு லோகத்தாரால் பூசிக்கப்பட்டுச் சகல பிராணிகளாலும் மரியாதை செய்யப்பட்ட எந்த புத்திமான், உயிரோடிருந்தும் உயிரற்றவனென்று சொல்லப்படுவான் ?

யுதி : தேவதைகளையும் பிதிருக்களையும் அதிதிகளையும் வேலைக்காரர்களையும் தன்னையும் திருப்தி செய்யாதவன் உயிரோடிருந்தும் இறந்தவனெனப்படுவான்.

யக்ஷன் : பூமியைக் காட்டிலும் பாரமுள்ளது எது? ஆகாசத்தைக் காட்டிலும் உயரமானது எது? வாயுவைக் காட்டிலும் வேகமானது எது ? புல்லுகளைக் காட்டிலும் அதிகமானது எது ?

யுதி . பூமியைக்காட்டிலும் தாயே மேலானவள். ஆகாயத்தைக்காட்டிலும் பிதாவே மேலானவர். வாயுவைக்காட்டிலும் மனதே வேகமானது. புல்லுகளைக் காட்டிலும் எண்ணங்களே அதிகமானவை.

யக்ஷன் : தூங்கிக்கொண்டிருந்தும் எது கண்ணை மூடுகிறதில்லை? பிறந்தும் எது அசைகிறதில்லை ? எதற்கு இருதயமில்லை? எது வேகத்தால் விருத்தியை அடைகிறது?

யுதி: மீன், தூங்கும்பொழுதும் கண்ணைமூடுவதில்லை. முட்டை பிறந்தும் அசைகிறதில்லை. கருங்கல்லிற்கு இருதயமில்லை. ஆறு, வேகத்தால் விருத்தியடைகிறது.

யக்ஷன் : தேசாந்திரத்தில் வசிப்பவனுக்கு நண்பன் யார்? கிருகஸ்தனுக்கு நண்பன் யார் ? நோயாளிக்கு நண்பன் யார் ? இறக்கப்போகிறவனுக்கு நண்பன் யார்?

யுதி : தேசாந்திரத்தி லிருப்பவனுக்கு வித்தையே நண்பன். கிருகஸ்தனுக்கு மனைவியே நண்பன். வியாதிக்காரனுக்கு வைத்தியனே மித்திரன். இறக்கப்போகிறவனுக்குத் தானமே மித்திரன்.

யக்ஷ: சகலப் பிராணிகளுக்கும் அதிதி யார்? நித்தியமான தருமம் எது? அமிருதம் எது ? இந்தப் பிரபஞ்சம் முழுவதும் எது ?

யுதி : அக்கினியே சகல பூதங்களுக்கும் அதிதி. அமிருதமே நித்தியமான தருமம். பசுக்களுக்குச் சந்திரனே அமிருதம். வாயுவே இந்தப் பிரபஞ்சம் யாவுமானது.

யக்ஷன்: யார் ஒண்டியாய்ச் சஞ்சரிக்கிறான்? எவன் பிறந்தும் மறுபடியும் பிறக்கிறான்? குளிருக்கு மருந்து எது? எல்லாவற்றைக் காட்டிலும் விஸ்தாரமான வயல் எது?

யுதி: சூரியனே ஒண்டியாய்ச் சஞ்சரிக்கிறான். சந்திரனே பிறந்தும் மறுபடியும் பிறக்கிறான். நெருப்பே குளிருக்கு மருந்து. பூமியே விஸ்தாரமான வயல்.

யக்ஷன் : தருமத்திற்கு சரணமான ஒரே இடம் எது ? கீர்த்திக்குச் சரணமான உறைவிடம் எது? சுவர்க்கத்திற்கு ஒரே இருப்பிடம் எது? சுகத்திற்கு ஒரே இருப்பிடம் எது ?

யுதி : சாமர்த்தியமே தருமத்திற்கு ஒரே இருப்பிடம். தானமே கீர்த்திக்கு ஒரே இருப்பிடம். சத்தியமே சுவர்க்கத்திற்கு ஒரே இருப்பிடம். நடத்தையே சுகத்திற்கு ஒரே இருப்பிடம்.

யக்ஷன் : மனிதனுக்கு ஆத்மா எது? பூர்வ கருமத்தால் நமக்கு ஏற்பட்ட தோழன் யார்? நமக்கு முக்கியமான ஆதாரம் எது? நமக்கு உத்தமமான அடைக்கலம் எது ?

யுதி : புத்திரனே மனிதனுக்கு ஆத்மா. மனைவியே அவனுடைய கருமத்தால் ஏற்பட்ட தோழன். மேகங்களே அவனுக்குமான ஆதாரம். தானமே அவனுக்கு முக்கியமான அடைக்கலம்.

யக்ஷன் : புகழத்தகுந்த பதார்த்தங்களில் மேலானது எது? தனங்களில் மேலான தனம் எது ? லாபங்களில் மேலான லாபம் எது ? சுகங்களில் மேலான சுகம் எது ?

சிங்கத்துக் காகமானாலும் கோவிந்தம் பாடுமா ?

யுதி: புகழத்தகுந்த பதார்த்தங்களில் திறமையே மேலானது. தனங்களில் வேதங்களின் ஞானமே மேலானது. லாபங்களில் ஆரோக்கியமே மேலானது. சுகங்களில் திருப்தியே மேலானது.

யக்ஷன்: லோகத்தில் உத்தமமான தருமம் எது? எப்பொழுதும் பலத்தைக் கொடுக்கும் தருமம் எது? எதை அடக்கினால் துக்கமில்லை? யாருடன் செய்யும் சேர்க்கை அழியாது?

யுதி: கொடுமையில்லாமல் நடப்பதே மேலான தருமம். வேதங்களில் சொல்லப்படும் தருமமே எப்பொழுதும் பலத்தைக் கொடுக்கும். மனதை அடக்கினால் வருத்தமில்லை. நல்லோருடன் செய்யும் சேர்க்கை என்றும் அழியாது.

யக்ஷன்: எதை விடுவதால் ஒருவன் எல்லோருக்கும் மித்திரனாகிறான்? எதைவிட்டால் ஒருவன் வருந்துகிறதில்லை? எதைவிட்டால் ஒருவன் தனவானாகிறான்? எதை விட்டால் ஒருவன் சுகத்தை அடைகிறான்?

யுதி: கர்வத்தை விட்டால்ஒருவன் எல்லோருக்கும் நண்பனாகிறான். கோபத்தை விட்டால் வருந்தமாட்டான். ஆசையை விட்டால் தனவானாகிறான். லோபத்தை விட்டால் சுகத்தை அடைகிறான்.

யக்ஷன்: பிராமணனுக்கு எந்தக் காரணத்தால் தானம் கொடுக்கிறான்? நாட்டியம் செய்கிறவர்களுக்கு ஏன் தனத்தைக் கொடுக்கிறான்? வேலைக்காரர்களுக்கு ஏன் தனத்தைக் கொடுக்கிறான்? அரசர்களுக்கு ஏன் தனத்தைக் கொடுக்கிறான்?

யுதி: தருமத்தைச் சம்பாதிப்பதற்குப் பிராமணர்களுக்கும், கீர்த்தியை அடைவதற்கு நாட்டியமாடுகிறவர்களுக்கும், தனக்குத் துணைவர்களைச் சேர்த்துக்கொள்வதற்காக வேலைக்காரர்களுக்கும், பயததால் அரசர்களுக்கும் தனத்தைக் கொடுக்கிறான்.

யக்ஷன்: உலகம் எதனால் மூடப்பட்டிருக்கிறது? எதனால் பிரகாசிக்கிறதில்லை? நண்பர்களை எதனால் ஒருவன் விடுகிறான்? எதனால் ஒருவன் சுவர்க்கத்தை அடைகிறான்?

யுதி: அஞ்ஞானத்தால் லோகம் மூடப்பட்டிருக்கிறது. இருட்டால் பிரகாசிக்கிறதில்லை. பேராசையால் மித்திரர்களைக் கைவிடுகிறான். விஷயங்களிலுள்ள பற்றுதலால் சுவர்க்கத்தை அடைகிறதில்லை.

யக்ஷன்: இறந்தவனென்று ஒருவன் ஏன் எண்ணப்படுகிறான்? ராஜ்யம் எப்பொழுது இறந்ததென்றுஎண்ணப்படுகிறது? சிரார்த்தம் எப்பொழுது இறந்ததென்று எண்ணப்படுகிறது? யக்ஞம் எப்பொழுது இறந்ததென்று எண்ணப்படுகிறது?

யுதி: தரித்திரன் இறந்தவனென்று எண்ணப்படுகிறான். அரசனில்லாத ராஜ்யம் இறந்ததென்று எண்ணப்படுகின்றது. பிராமணனில்லாதசிரார்த்தம் இறந்ததென்று எண்ணப்படுகிறது. தக்ஷிணை கொடுக்காத யாகம் இறந்ததென்று எண்ணப்படுகிறது.

யக்ஷன்: ஒருவன் நடக்கவேண்டிய வழி எது? ஜலம் எது? அன்னம் எது? விஷம் எது? சிரார்த்தம் செய்யவேண்டிய காலம் எது?

யுதி: சாதுக்களைப் பின்பற்றுவதே நாம் நடக்கவேண்டிய வழி. ஆகாசமேஜலம். பசுவே அன்னம். பிச்சையெடுப்பதே விஷம். பிராமணன் கிடைத்தபொழுதே சிரார்த்தம் செய்யும் காலம்.

யக்ஷன்: தவம் எது? தமம் எது? பொறுமை எது? வெட்கம் எது?

யுதி: தன் தருமத்தைக் குறைவற அனுஷ்டிப்பதே தவம். மனதை அடக்குவதே தமம். சுகதுக்கங்களைப் பொறுப்பதே பொறுமை. கெட்ட காரியத்தைச் செய்யாமலிருப்பதே வெட்கம்.

யக்ஷன்: ஞானம் எது? சமம் எது? தயை எது? நேர்மை எது?

யுதி: பரமாத்மாவின் உண்மையான சுவரூபத்தை அறிவதே ஞானம். சித்தம் தெளிந்திருப்பதே சமம். சகலப் பிராணிகளின் சுகத்தைக் கோருவதே தயை. எல்லோரிடத்திலும் பேதபுத்தியில்லாமலிருப்பதே நேர்மை.

யக்ஷன்: மனிதர்களால் ஜயிக்கமுடியாத சத்துரு யார்? என்று மழியாத வியாதி எது? சாது யார்? துஷ்டன் யார்?

யுதி: கோபமே ஜயிக்கமுடியாத சத்துரு. பேராசையே தீரா வியாதி. சகலப்பிராணிகளின் நன்மையைத் தேடுகிறவனே சாது. இரக்க மற்றவனே துஷ்டன்.

யக்ஷன்: மோகம் எது? கர்வம் எது? சோம்பல் எது? சோகம் எது?

யுதி: தருமம் இன்னதென்று அறியாம லிருப்பதே மோகம். காரணமில்லாமல் தன்னிடத்தில் அபிமானம் வைப்பது கர்வம். செய்யவேண்டிய தருமத்தைச் செய்யாம லிருப்பதே சோம்பல். அஞ்ஞானமே சோக மெனப்படும்.

யக்ஷன்: ரிஷிகளால் ஸ்திரத்தன்மையென சொல்லப்படுவது யாது? தைரியம் எது? உத்தமமான ஸ்நானம் எது? தானம் எது?

யுதி: தன் தருமத்தை அனுஷ்டிப்பதில் தவறாமலிருப்பதே ஸ்திரத்தன்மை. இந்திரியங்களை அடக்குவதே தைரியம். மனதின் அழுக்கைப் போக்குவதே ஸ்நானம். பிராணிகளை ரட்சிப்பதே தானம்.

யக்ஷன்: பண்டிதன் யார்? நாஸ்திகன் யார்? மூர்க்கன் யார்? காமம் எது? மாச்சரியம் எது?

யுதி: தருமத்தை அறிந்தவனே பண்டிதன். ஞானமில்லாதவனே நாஸ்திகன். ஸம்ஸாரத்திற்கு மூலமே காமம். மனதின் கொதிப்பே மாச்சரியம்.

யக்ஷன்: அகங்காரம் எது? டம்பம் எது? மேலான தெய்வம் எது? கோட்சொல்வது எது?

யுதி: எல்லையற்ற அஞ்ஞானமே அகங்காரம். தருமத்தை அனுஷ்டிப்பதுபோல் வேஷம் போடுவதே டம்பம். தானத்தின் பலமே உத்தமமான தெய்வம் (பூர்வ கருமம்). பிறரைத் தூஷிப்பதே கோட்சொல்வதாகும்.

யக்ஷன்: தருமம், காமம், அர்த்தமென்றவை ஒன்றிற்கொன்று எப்பொழுதும் விரோதிகள். இவை ஓரிடத்தில் எப்படிச் சேர்ந்திருக்கும்?

யுதி: தருமமும் மனைவியும் ஒன்றிற்கொன்று எப்போது வசப்பட்டிருக்குமோ, பாரியை கணவனுடைய தருமானுஷ்டானத்தை எதிர்த்துத் தடைசெய்யாமல் எப்போது கூடவிருந்து நடத்துகிறளோ, அப்பொழுது தருமார்த்த காமமென்ற புருஷார்த்தங்கள் ஓரிடத்தில் சேர்ந்திருக்கும்.

யக்ஷன்: என்றுமழியாத நரகம் எந்தக் கருமத்தால் கிடைக்கிறது?

யுதி: வலுவில் ஒரு ஏழைப் பிராமணனைக் கூப்பிட்டு, "உனக்கு தானஞ் செய்கிறேனெ"ன்று வாக்களித்து, பிறகு "இல்லையப்பா" வென்று துரத்துகிறவன், காலமுள்ளவரையில் நரகத்தை அனுபவிப்பான். வேதங்களையும், தர்மசாஸ்திரங்களையும், முதல் மூன்று வருணத்தாரையும், தேவதைகளையும், முன்னோர்களின் தருமங்களையும் பொய்யென்று ஸ்தாபிக்க முயல்கிறவன் அழியாத நரகங்களில் விழுவான். அளவற்ற தனமிருந்தும், அதைத் தானும் அனுபவிக்காமல், லோபத்தனத்தால் பிறருக்கும் கொடாமல் "என்னிடத்தில் ஒன்றுமில்லையே"யென்று சொல்லுகிறவன் நித்யமான நரகங்களை அடைகிறான்.

யக்ஷன்: பிராமணத்தன்மை அடையப்படுவது பிறப்பாலா? நடத்தையாலா? படிப்பாலா? பெரியோரிடத்தில் கேட்பதினலா?

யுதி: பிறப்பும் படிப்பும் கேள்வியும் பிராமணத் தன்மைக்குக் காரணமாகாது. நடத்தையே காரணமென்பதில் சந்தேகமில்லை. ஆகையால், பிராமணன் தன் ஒழுக்கத்தை வெகு சாக்கிரதையாய்க் காப்பாற்றவேண்டும். ஆசாரம் குறையாதவரையில் அவனுக்குங் குறைவில்லை. ஒழுக்கம் அழிந்தால் அவனும் அழிகிறான். வேதசாஸ்திரங்களைப் படிக்கிறவர்களும் கற்பிக்கிறவர்களும் சிஷ்யர்களும் கெட்ட நடத்தையுடையவர்களானால் மூர்க்கர்களே. புண்யகருமங்களைச் செய்கிறவனே பண்டிதன். நான்கு வேதங்களைப் பூர்ணமாய்க் கற்றிருந்தும் கெட்ட நடத்தையுள்ளவன் சூத்திரனுக்குந் தாழ்ந்தவன். அக்னிஹோத்திரத்தைத் தவறாமல் செய்துவந்து, இந்திரியங்களையும், மனதையும் அடக்கினவனே பிராமணன்.

யக்ஷன்: எப்பொழுதும் பிறர்க்குப் பிரியமானதையே பேசுகிறவன் எதை அடைகிறான்? நன்றாய்ப் பரீக்ஷித்துக் காரியங்களைச் செய்கிறவன் எந்த லாபத்தை அடைகிறான்? பல நண்பர்களைச் சம்பாதிக்கிறவன் என்ன லாபத்தை அடைகிறான்? தருமானுஷ்டானத்தில் நோக்கமுள்ளவன் என்ன லாபத்தை அடைகிறான்?

யுதஷ்டிரர்: பிறருக்குப் பிரியமானதைப் பேசுகிறவன் எல்லோருக்கும் பிரியமானவனாகிறான். காரியங்களை யோசித்துச் செய்கிறவன் மேன்மேலும் அதிகமாய் அடைகிறான். பல நண்பர்களைச் சம்பாதிக்கிறவன் சுகமாய் வசிக்கிறான். தருமத்தில் நோக்கமுள்ளவன் உத்தம கதியை அடைகிறான்.

யக்ஷன்: சௌக்கியமாயிருப்பவன் யார்? ஆச்சரியம் எது? வழி எது? சமாசாரம் எது?

யுதி: பிறரிடத்தில் கடன் வாங்காமல், தன் ஊரைவிட்டுப் போகாமல், யாருடைய வீட்டில் ஐந்து நாளைக்கோ, ஆறு நாளைக்கோ ஒருதடவை கறி சமைக்கப்படுகிறதோ, அவனே சௌக்கியமாயிருக்கிறவன். ஒவ்வொரு நாளும் பிராணிகள் யமனுடைய வீட்டிற்குப் போய்க் கொண்டிருக்கின்றன. அதை அறிந்தும் மற்றப்பிராணிகள் தாங்கள் அழியாமலிருக்க வேண்டுமென்று விரும்புகின்றன. இதைவிட ஆச்சரியம் எது? அறியவேண்டிய விஷயங்களைப்பற்றித் தருக்கம் செய்வதால் நிச்சயமான முடிவு ஏற்படுவதில்லை. வேதவாக்கியங்களோ ஒரே விஷயத்தைப்பற்றிப் பலவிதமாய்ச் சொல்லுகின்றன. தருமத்தின் ரகசியம் குகையில் மறைந்திருக்கிறது. ஆகையால், பெரியோர் எப்படி நடந்தார்களோ, அதே நமக்கும் வழி. பூமியே சட்டி. ஆகாசமே மேல் மூடி. சூரியனே நெருப்பு. இராப்பகலே விறகுகள். மாஸங்களும், ருதுக்களுமே கரண்டி. இவைகளால் காலம் பிராணிகளைச் சமைக்கிறதென்று லோக சமாசாரம்.

யக்ஷன்: என் கேள்விகளுக்குச் சரியான பதில் சொல்லிவிட்டாய். புருஷனென்றால் யார்? சகல தனங்களும் பொருந்தினவன் யார்?

யுதி: ஒருவன் செய்யும் புண்ணியங்களின் கீர்த்தி பூமியில் பரவி ஆகாசத்தை அளாவுகிறது. அது விளங்கும் வரையில் ஒருவன் புருஷனெனப்படுவான். விருப்பும் வெறுப்பும், மகிழ்வும் துயரமும், சென்றதும் வருவதும், எவனுக்கு ஒரேவிதமாயிருக்குமோ அவனே புருஷனெனப்படுவான். எந்த விஷயத்திலும் சமமான எண்ணத்துடன் ஆசையற்று, சாந்தமான மனதுடன், தெளிந்த முகத்துடனிருக்கும் யோகியே சகலவித தனங்களையுமுடையவனெனப்படுவான்.

யக்ஷன்: அரசனே! புருஷனுடைய லட்சணத்தையும் சகல தனங்களையும் பொருந்தினவனுடைய லட்சணத்தையும் உள்ளபடி சொன்னாய். ஆகையால், உன் தம்பிகளில் யாராவது ஒருவனைப் பிழைக்கும்படி வேண்டிக்கொள்.

யுதி: சியாமள வருணத்தையும் செந்தாமரை மலர்போன்ற கண்களையும், விசாலமான மார்பையும், நீண்ட கைகளையும் உன்னதமான ஆச்சாமரத்தைப்போல் தேகத்தையுமுடைய நகுலன் பிழைக்கட்டும்.

யக்ஷன்: பீமசேனன் உனக்கு மிகவும் அருமையானவன். அருச்சுனனே உங்களுக்கு ஆதாரம். அவர்களை வேண்டாமல், சக்களத்தி பிள்ளையான நகுலனை ஏன் வேண்டுகிறாய்? பீமனே உனக்கு மிகவும் பிரியமானவனென்று எல்லோரும் சொல்லுகிறார்கள். அப்படியிருக்க நகுலனிடத்தில் என்ன திறமையைக் கண்டு அவனை வேண்டுகிறாய்? எவனுடைய கைவன்மையைப் பாண்டவர்கள் நம்பியிருக்கிறார்களோ அந்த அருச்சுனனை விட்டு, நகுலன் பிழைக்க வேண்டுமென்று ஏன் கேட்கிறாய்?

யுதி: தருமத்தை நாம் அழித்தால் அது நம்மை அழிக்கும். தருமத்தை நாம் ரட்சித்தால் அது நம்மை ரட்சிக்கும். ஆகையால் தருமத்தைக் கைவிடேன். தருமம் என்றால் அழிபட்டு, என்னை அழிக்கவேண்டாம். சத்தியத்தைக் காட்டிலும் நேர்மையே மேலானது. ஆகையால், நேர்மையே விரும்பி நகுலன் பிழைக்க வேண்டுமென்று கேட்கிறேன். தருமத்தைத் தவறாதவனென்று என்னை எல்லோரும் எண்ணுகிறார்கள். ஆகையால், தருமத்தைக் கைவிடமாட்டேன். நகுலனே பிழைக்கட்டும். என் பிதாவிற்குக் குந்தி, மாத்திரி யென்று இரண்டு மனைவிகள். என் தாயான குந்தி எப்படியோ, அப்படியே மாத்திரியும் எனக்கு அருமையானவள். குந்தி புத்திரனுள் நான் ஒருவன் பிழைத்திருக்கும் பொழுது, மாத்திரி புத்திரனுள் ஒருவன் பிழைக்கவேண்டியது அவசியம். ஆகையால், நகுலனே பிழைக்கட்டும்!

யக்ஷன்: அர்த்தம் காமமென்ற இவைகளைக் காட்டிலும் நீ நேர்மையை மேலானதாய் மதித்தபடியால் உன் தம்பிமார் எல்லோரும் பிழைக்கட்டுமென்”றான்.

உடனே அவர்கள் களையற்று விசேஷ பலமும் காந்தியுமுள்ளவர்களாய் எழுந்திருந்தார்கள்.

யுதி: இந்த வாவியில் ஒற்றைக்காலால் நின்று கொண்டிருக்கும் தாங்கள் யார்? யக்ஷனும் பருக்க நியாயமல்ல. வசுக்கள் ருத்திரர்களென்று கணங்களில் தாங்கள் மேலானவரோ, அல்

னது அந்த தேவேந்திரன்தானே. என் தம்பி மார் ஒவ்வொருவரும் லக்ஷம் வீரர்களை ஜயிக்கக்கூடியவர்கள். அவர்கள் யாவரையும் கொல்லக்கூடிய ஒரு பிராணியையும் அறியேன். ஆகையால், தாங்கள் எங்களுக்கு பரமமித்திரனென்று எண்ணுகிறேன். என் தம்பிகள் தூங்கி எழுந்தவர்களைப்போல் களையில்லாமல் விளங்குகிறார்கள். தாங்கள் எங்களுக்குப் பிதாவோ?

யக்ஷன்: தருமநந்தனா? நான் உன் பிதாவே. உன்னைப் பார்க்க விரும்பியே இங்கு வந்தேன். கீர்த்தி, உண்மை, தன்னடக்கம், சுத்தமான நடத்தை, கபடமின்மை, வணக்கம், உறுதி, தானம், தவம், பிரமசரியமென்றவை என் தேகங்கள். துன்பப்படுத்தாமை, சமபுத்தி, சாந்தி, தவம், சுத்தி, பொறாமையின்மை என்னிடத்திற்கு வரும் வழிகள். நீ எனக்கு அருமையானவன். சாந்தி, அடக்கம், ஒழிவு, பொறுமை, சமசித்தமென்ற ஐந்து விஷயங்களில் எப்பொழுதும் நோக்கமுள்ளவனாயிருக்கிறாய். பசி, தாகம், சோகம், மோகம், கிழத்தன்மை, மரணமென்ற ஆறு சத்துருக்களையும் ஜயித்திருக்கிறாய். பசி தாகம், பிறந்தவுடனே மனிதனைப் பற்றிக்கொள்ளுகின்றன. சோகமும் மோகமும் நடுவயதில் மனிதனைப் பற்றிக்கொள்ளுகின்றன. மூப்பும் மரணமும் முடிவில் மனிதனை உபத்திரவிக்கின்றன. உன்னைப் பரீட்சிப்பதற்காக இங்கு வந்தேன். உன் நேர்மையால் மிகவும் சந்தோஷித்தேன். வேண்டிய வரங்களைக் கேள். என்னை நம்பினவர்களுக்கு ஒரு நாளும் கெடுதியில்லை.

யுதி: பிராமணனுடைய அரணிக்கட்டைகள் மானால் கொண்டு போகப்பட்டன. அவருடைய அக்னி ஹோத்திர காரியம் தடைபடாமலிருக்கவேண்டுமென்று வேண்டுகிறேன்.

தருமன்: நானே மான் வேஷங்கொண்டு அவைகளை எடுத்தொளித்தேன். நீ சொன்னபடியே ஆகட்டும். வேறொருவரத்தையும் கேள்.

யுதி: பன்னிரண்டு வருஷங்கள் வரை, வனத்தில் வசித்துக்கொண்டிருந்தோம். பதின்மூன்றாவது வருஷத்தில் எங்களை ஒருவரும் அடையாளம் கண்டுபிடிக்காதபடி நாங்கள் காலங்கழிக்கவேண்டும்.

தருமன்: அப்படியே ஆகட்டும். நீங்கள் சுவரூபத்துடன் பூமியெங்கும் சஞ்சரித்தாலும், மூன்று லோகங்களிலுள்ள யாவும் உங்களை அறியாமலிருக்கட்டும். விராட நகரத்தில் அந்த காலத்தைக் கழியுங்கள். நீங்கள் மனதால் விரும்பும் ரூபமும், அதற்குத் தகுந்த பேச்சு பார்வை நடத்தை முதலிய யாவையும் தகுந்தபடி அமையட்டும். மூன்றாவது வரத்தைக் கேள்.

யுதி: லோபத்தையும் மோகத்தையும் கோபத்தையும் நான் எப்பொழுதும் ஜயிக்கவேண்டும். தானத்திலும், தவத்திலும், சத்தியத்திலும், என் மனம் எப்பொழுதும் நாடியிருக்கவேண்டும்.

தருமன்: இயற்கையாலே உன்னிடத்தில் இந்தக் குணங்கள் பொருந்தியிருக்கின்றன. நீயே தருமஸ்வரூபி. ஆயினும், நீ சொன்னபடி ஆகட்டும்" என்று சொல்லிவிட்டு அவ்விடத்திலேயே மறைந்தார்.

பாண்டவர்கள் அவரை மனதால் வணங்கித், தங்களுடைய ஆச்சிரமத்திற்குத்திரும்பி வந்து பிராமணனிடத்தில் அரணிக் கட்டைகளைக் கொடுத்து அவரால் ஆசீர்வதிக்கப்பெற்றார்கள்.

பிரகிருதி சாஸ்திரம்

PHYSICAL SCIENCE

[ஸ்ரீமான் ஏ. வரதாசாரியாரவர்கள், பி ஏ., எல்.டி.]

ஜடவஸ்துவின் பொது தர்மங்கள்

(தொடர்ச்சி.)

6. பிரகிருதியின அழிவின்மை Indestructibility, நம்மைச் சுற்றிலுமுள்ள வஸ்துக்களெல்லாம் ஒவ்வொரு க்ஷணமும், குணம், ஸ்வரூபம் முதலியன மாறி, நாசமடைவதாய் நாம் நாடோறும் பார்க்கிறோம். இவ்விதத்தோற்றம் பிரபஞ்சத்திலுள்ள மூல வஸ்துக்களோ, கலப்புத் திரவியங்களோ எல்லாவற்றிலும் காணப்படும். மெழுகுவத்தி எரியும்போதும், மரம் மக்கிக் கெடும்பொழுதும், இரும்புத்துண்டு துருப்பிடிக்கும்பொழுதும் உஷ்ணத்தினால் ஜலம்குன்றி ஆவியாகி விடும்பொழுதும், மேற்சொன்ன வஸ்துக்கள் அழிந்துவிடுவதாய் நாம்

சுடர் விளக்காயினும் தூண்டுகோல் ஒன்று வேண்டும்.

சாதாரணமாய் விவகரிக்கிறோம். இவ்விதமே, மற்ற பதார்த்தங்களுக்கும் மாறுதல் ஏற்படும் போது, அவைகள் நசிக்கின்றன என்ற ஞானம் சாமான்ய ஜனங்களுக்கு உண்டாகிறது. இத்தகைய மாறுதல்களால் ஏற்படும் வஸ்துக்கள் சிருஷ்டிக்கப்படுவதாயும் ஜனங்கள் எண்ணுகிறார்கள். வஸ்துக்கள் அத்தியந்தமாய் நசிக்கின்றனவென்றாவது, சிருஷ்டிக்கப்படுகின்றன என்றாவது நினைப்பது தப்பான ஞானம். வஸ்துக்களுக்கு எவ்வித மாறுதல்கள் நேர்ந்தாலும், அடியோடே அழியும் தன்மை கிடையாது என்பது பிரகிருதி சாஸ்திர வித்வான்களின் கொள்கை. இவ்விதக் கொள்கையை, இதர கொள்கைகளைப்போல், மிகவும் சுலபமான பரீக்ஷணங்களால், நிரூபிக்க முடியாதென்றாலும், தகுந்த உபகரணங்களைக் கொண்டு, அநேக வேறுபாடுகள் விஷயத்தில் மேற்சொன்ன அழிவின்மை என்னும் குணத்தை ஸ்தாபித்து, அவை மூலமாய் மற்றவை விஷயத்திலும், இது ஊகிக்கக் கூடியதென்றும், ஆகையால் பிரபஞ்சத்திலுள்ள எல்லா பதார்த்தங்களுக்கும், இக்குணம் பொதுவானதென்றும், பிரகிருதி சாஸ்திர வித்துவான்கள் ஸித்தாந்தம் செய்திருக்கிறார்கள். இதைப்பற்றிய பரீக்ஷணங்களின் தத்துவத்தை உணர்த்தக்கூடிய ஞானம்சம் ஒன்றுண்டு.

கரிமம் (Gravity) என்ற பூமியின் சக்தியால் அதன் மீதுள்ள பதார்த்தங்களின் கனபரிமாணத்துக் (Mass)குத் தக்கபடி அவைகளின் கனம் அல்லது நிறை ஏற்படுகிறதென்றும், ஓர் வஸ்துவிலுள்ள அணு ஸமுதாயங்களிலிருந்து அவ்வஸ்துவின் நிறை பிரிக்கவொண்ணாதாகையால் ஒவ்வொன்றின் நிறை அதன் அணு ஸமுதாயத்துக்குரிய அளவாக எண்ணக்கூடியதாயிருக்கிறது. வஸ்துவின் நிறை அதிகரித்தாலும், குறைந்தாலும், அதன் கனபரிமாணம் அதிகரிப்பதாவலோ, குறைவதாலோ, யதாக்கிரமம் உண்டாவதாய் நினைக்க வேண்டும். இவ்வித ஞானத்தை ஆதாரமாய்க் கொண்டு, வஸ்துவின் அழியாத்தன்மை பரீக்ஷணங்களால் நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

1. ஒரு அவுன்ஸ் நிறையுள்ள உப்பு அல்லது சர்க்கரையை, பத்து அவுன்ஸ் ஜலத்தில் போட்டால், உப்பு அல்லது சர்க்கரையானது உடனே கரைந்து, கண்ணுக்குப் புலப்படாமல் போய்விடுகிறது. இதனால் உப்போ, சர்க்கரையோ அடியோடே அழிப்பதாய் நினைக்க இடமில்லை. அவற்றின் திவலைகள் ஜலத்தின் அணுக்களின் மத்தியப் பிரதேசங்களில் பரவி, கண்ணுக்குப் புலப்படாமலிருக்கும் தன்மையை யடைகின்றன. இவ்வித ஜலத்தின் எந்தத் துளியை வாயில் போட்டாலும், உப்பு அல்லது சர்க்கரையின் ருசியை உணரலாம். இது மாத்திரமல்ல. இவ்விதம் உப்பு அல்லது சர்க்கரை கரைந்துள்ள முழுஜலத்தையும் நிறுத்தால், 11 அவுன்ஸ் நிறையிருப்பதைக் காணலாம். இவ்விதமே ஜலத்திலோ, இதர திரவ பதார்த்தத்திலோ (Liquid) கரையக் கூடிய வஸ்துக்கள் விஷயத்திலும், மொத்த நிறை, பரீக்ஷணத்துக்கு முன்னும் பின்னும், ஏறக் குறைவாயில்லாமல், ஒரே அளவாயிருப்பதைக் காணலாம். மேற்சொன்ன ஜலமெல்லாம் ஆவியாய் மாறும்படி ஜாக்கிரதையாய் ஓட்டக்காய்ச்சினால், 'ஒரு அவுன்ஸ் உப்பு' அல்லது சர்க்கரையை மறுபடியும் அடையலாம்.

2. ஏதாவது நிறையுள்ள உப்பு ஜலத்தில் லெட் அஸிடேட் (Lead Acetate) என்னும் பதார்த்தம் கரைந்துள்ள ஜலத்தைக் கலந்தால் தெளிவான இவ்விரண்டு ஜலங்களும், கலக்கும்போது இவற்றின் ஸ்வரூபமே மாறி, பால் வெண்மையுள்ள ஜலம் தோன்றி, அதில் உப்பு, லெட் அஸிடேட் இவ்விரண்டைக் காட்டிலும் பல வகையிலும் வேறுபாடான வஸ்துவும் உண்டாகிறது. இப்பதார்த்தமுள்ள ஜலத்தின் நிறையோ, கலக்கப்பட்ட இருவகை ஜலங்களின் நிறையளவுகளின் மொத்தத்திற்கு சரியாயிருப்பதாய்க் காணப்படும்.

3. வெடிமருந்தில் நெருப்புவைத்துக் கொளுத்திவிட்டால், திடீரென்று பெரிய மாறுதல் உண்டாவதை யாவரும் பார்த்திருக்கலாம். பல வஸ்துக்கள் சேர்ந்தும், கறுப்பு நிறமுள்ள தூள் கூட்டமானது, கண்ணுக்குப் புலப்படாத அநேக காற்று ரூபமாயும், புகை ரூபமாயும்மாறிவிடுகிறது. வெடிமருந்திலுள்ள வஸ்துக்கள் ஆகாயத்திலுள்ள பிராண வாயுவுடன் (Oxygen) கலந்து, மேற் சொன்னபடி வேறு வஸ்துக்களாக மாறுகின்றன வென்றும், வெடிமருந்தினுடைய நிறையும், அத

னுடன் சேர்ந்த பிராணவாயுவின் நிறையும் சேர்ந்து, பிறகு உண்டாகிய எல்லா வஸ்துக்களின் மொத்த நிறைக்குச் சமானமாயிருக்குமென்றும் தகுதியான உபகரணங்களால் ரூபிக்கக்கூடும்.

4. மெழுகுவர்த்தி எரியும்போது, அதன் மூலவஸ்துக்கள், பிராண வாயுவுடன் கலந்து திராவியாயும் கண்ணுக்குப் புலப்படாத கரிய மிலவாயு (Carbon dioxide) போன்ற காற்றுகளாயும், கருப்புப் புகையாயும் பரிணமிக்கின்றன.

வெளித்தோற்றத்திற்கோ எரிந்து கொண்டிருக்கும் மெழுகுவர்த்தி பருமம் குன்றி, கண்ணுக்குப் புலப்படாமற் போவதைப் பார்த்து அது அழிந்துவிட்டதாய்ச் சொல்லுகிறோம். எரிந்தபோன மெழுகுவர்த்தியின் நிறையும் பிராணவாயுவின் நிறையும் சேர்ந்து பிறகு உண்டாகும் எல்லா வஸ்துக்களின் கனத்துக்குச் சரியாயிருக்குமென்று சுலபமான பரீக்ஷணத்தால் நிரூபித்திருக்கிறார்கள். ஆகையால், பிரகிருதிசாஸ்திரக் கொள்கைப்படி பிரகிருதிக்கு நாசம் என்பது கிடையாது.

வஸ்துக்களின் ரூபம், குணம் மாறினும் அவைகள் அழிவதில்லையென்பது பௌதிக சாஸ்திர (Chemistry)த்தின் முக்கியக் கொள்கை.

பிரபஞ்சத்திலுள்ள ஸர்வ பதார்த்தங்களின் மொத்த கன பரிமாணம் அவைகளுக்கு எவ்வித பரிணமங்கள் நேர்ந்தாலும், மாறாமல் எக்காலத்திலும் ஓரேவிதமாய் இருக்கும் தன்மையாகிய பிரகிருதியின் அக்ஷயத்துவத்தை ஆங்கிலேய பாஷையில், கான்ஸர்வேஷன் ஆப் மாட்டர் (Conservation of Matter) என்று விவரிக்கிறார்களென ஏற்கெனவே முன்னொரு பத்திரிகையில் சொல்லியிருக்கிறோம்.

இயற்கை அற்புதங்கள்.

(அநேக சித்திரப்படங்களுடன்).

இது ஸ்ரீமான் ஆ. வி. கஸ்தூரிரங்கய்யர் பி.ஏ., எல்.டி., அவர்கள் இயற்றியது. அநேகம் அருமையான விஷயங்கள் கொண்டது. ஸ்கூல் இன்ஸ்பெக்டாயிருந்த ராவ் பகதூர் எல். வி. வில்லியம்ஸ் பிள்ளை அவர்கள் முகவுரையுடன் கூடியது. அரசாங்கத்தார் அங்கீகரித்தது. விலை அணா 8.

உலக இன்பங்களும் சித்தார்த்தரும்

WORDLY PLEASURES, & PRINCE SIDDHARTA

[ஸ்ரீமான் ப. சங்கரநாராயணன்.]

(The following is a rather free rendering of Book XI of Asvaghosa's "Buddha Charita" translated by E.B. Cowell in which Siddharta, the Prince of Kapilavastu exhibits his firm resolution not to be enticed away by mundane joys preferring the life of an ascetic recluse to that of a house-holder.)

[கபிலவஸ்துவின் இளவரசரான சித்தார்த்தரென்பவர் உலகத்திலுள்ள துன்பங்களையும் கவலைகளையும் கண்டு உலகசுகங்களில் வெறுப்படைந்து ஒருவரிடமும் கூறாது ஒருநாள் இரவு கானகத்திற்கேகி தனது உயர்ந்த ஆடைகளைக் களைந்து, சன்னியாசி வேடங்கொண்டு செல்லுங்கால், புத்திர சோகத்திலாழ்ந்திருந்த அவரது தந்தையினால் தூண்டப்பட்டு அவரைத் திரும்பியழைத்துவரவெண்ணிய அமைச்சரும் புரோகிதரும் என்ன சொல்லியும் அவர் ஒரே மனதுடன் மறுபடியும் தன் நாட்டினுள் பூர்ண ஞானத்தை யடையாது காலடி யெடுத்துவைக்க மாட்டேனென்றுரைக்க, அவ்விருவரும் மிக மனவருத்தமுற்று வந்த வழியே திரும்பிச் சென்றனர்.]

அகண்ட அழகிய மார்பினரான மன்னவன் புதல்வர் இவ்வண்ணம் அமைச்சருக்கும் புரோகிதருக்கும் விடையளித்தனுப்பிய பின்னர், கங்கா நதியைக் கடந்து, பற்பல அழகிய மாளிகைகளும், ஐந்து குன்றுகளும் வேறு பல புண்ணிய ஸ்தலங்களும் கூடிய ராஜக்கிரஹம் என்னும் நகரத்தை அடைந்தார். அவரது காம்பீரியத்தையும், வல்லமையையும் அவரது தேகத்தினழகையும்பற்றி முன்னரே கேட்டிருந்த அந்நகரவாசிகள் அவரைக் கண்டதும் விருஷபாரூடனை பரமேஸ்வரனைக் கண்டதுபோல் திகைத்து நின்றனர். அப்பொழுது, தன் வழியே சென்றவனும் அவரைச் சற்று நின்று நோக்கினான். தனியே நின்றவன் அவரைப் பின் தொடர்ந்தான். மெள்ள நடந்தவன் கூட ஓடினான். கீழே உட்கார்ந்திருந்தவன் எழுந்து நிற்கலானான். அவரைக் கண்டதும் பணிவுடன் கைகூப்பி நின்றவர் சிலர்; தலை வணங்கி நின்றவர் சிலர்; பிரியவார்த்தை கூறி உபசரித்தவர் சிலர்; எவரும் அவரை வணங்காது சென்றாரல்லர்.

சநாதன தர்மமே உருவெடுத்து வந்ததோ வெனத்தோன்றிய அவர்முன் அழகிய ஆடையாபரணங்களை அணிந்தவர்கள் வெட்கித் தலை குனிந்தனர். வீண் வம்பு பேசியவர்கள் வாய் பொற்றி நின்றனர்; துரெண்ணத்தையும் மனதைவிட்டு அகற்றினர். அவரது அழகிய புருவங்களையோ, அகன்ற நெற்றியையோ, சிறிய வாயையோ, அல்லது ஒளி வீசும் கண்களையோ, வன்மை பொருந்திய தேகத்தையோ, நீண்ட கைகளையோ, செங்கமலம் போன்ற பாதங்களையோ, கம்பீர நடையையோ, எவரெவர் எதை நோக்கினர்களோ, பார்த்த கண் பார்த்த வண்ணமே நின்றனர்.

அச்சமயத்தில் மகத தேசாதிபதியாகிய ஸ்ரேண்யனென்போன் தனது மாளிகையின் புறத்திருந்து அந்த ஜனக்கூட்டத்தைக் கண்டு அதென்னவென்று வினவினன். வினவ, அங்கிருந்த ஒருவன், "அரசே! 'உயர்ந்த ஞானத்தையேனும் அல்லது பூமண்டலாதிபத்தியத்தையேனும் இவன் அடைவான்' என்று முன்னரே கூறப்பட்டுள்ள சாக்கியர்களின் மன்னரின் புதல்வர் சந்நியாசி உடை தரித்து இங்கு வந்துளர். அவரை ஜனங்கள் பார்த்துக்கொண் டிருக்கிறார்கள்" என்றான். இதைக்கேட்ட அரசன் "அவர் எங்கு செல்லுகிறாரென்று அறிந்துவா" என்று ஏவ, அம்மனிதன் அக்கட்டளையைச் சிரமேற்கொண்டு அரசிளங்குமரனைப் பின்தொடர்ந்து சென்றான்.

ஐம்புலன்களையும் மனதையும் அடக்கிக் கொண்டு, சஞ்சலமற்ற விழிகளுடன், தன் முன் சிறிது தூரமே நோக்கினவராய், சன்னியாசி சிரேஷ்டர் மெல்ல நடந்து யாசித்தவண்ணம் முன் சென்றார். கொடுத்த உணவைக் களிப்புடன் பெற்று, மலையில் தனியான விடத்தை நாடி, அங்கு அவ்வுணவை உண்டு, பின் அந்த மலையில் ஏறி மரங்களடர்ந்த கானகத்தில் மனிதருள் முன்னவனான அம்மன்னன் மைந்தன் காலைச் சூரியன்போல் சிவந்த ஆடை தரித்துச் சென்றார்.

ஸ்ரேண்யனின் ஏவலாளன் இதைக் கண்டு தன்னரசனிடம் கூற, அவனும் மிகுந்த பணிவுடன் உடனே புறப்பட்டு பிடரியடர்ந்த மிருகேந்திரனைப்போல் கிரீடத்தை யணிந்துகொண்டு மலையேறி கபில வஸ்துவின் இளவரசரிருக்குமிடம் தேடிச் சென்றான். அங்கு அப்பெரியோர், அடக்கிய புலன்களுடன் மலைச் சிகரம்போல் அசைவற்று, மேகமண்டலத்தினின்று வெளிக் கிளம்பும் மதியை யொத்தவராய் விளங்குவதைக் கண்ணுற்று, அவரது தேகத்தின் அழகையும், பூரணவமைதியையும் பார்த்து வியந்து, ஆதரவுடனும் மரியாதையுடனும் பிரமன்முன் இந்திரன்போல் மகத வேந்தன் அணுகுகின்றான்.

நின்று, குசலப்பிரஶ்னஞ்செய்ய, சித்தார்த்தன் தனது மனவமைதியையும், பிணியின்மையையும்பற்றித் தக்கவாறு விடையளிக்க, பிறகு ஸ்ரேண்யன் உத்தரவுபெற்று ஓர் பாறையின் மேல் அமர்ந்து அவரது மனதை யறியும்பொருட்டுச் சொல்லலுற்றான்.

"இக்ஷ்வாகு குலதிலகமே! உனது குடும்பத்திற்கும் எனக்கும் வெகுகாலமாக நீடித்த நட்புண்டு. அதனால் உன்னுடன் சிறிதுநேரம் வார்த்தையாடவேண்டுமென்ற அவா எனக்கு உண்டாயிருப்பதால் நான் பிரியத்துடன் கூறுவதைச் சற்று கேட்பாயாக. மகனே! நீ சூரிய குலத்தில் பிறந்திருப்பதையும், உனது இளமையையும், உனது கண்ணைப் பறிக்கும் அழகையும் கருதுங்கால், மற்ற குணங்களுக்கு வேறுபாடாக ராஜ்யத்தை விட்டு பிக்ஷுகனாய்த் திரிய உனக்கெவ்வண்ணம் மனம் வந்ததென அறிகிலேன்! உனது அங்கங்கள் சந்தனம், பன்னீர் முதலியவாசனைகளுக் குரியவையேயன்றி இக்காவியுடையை அணியத்தக்கவையல்லவே! குடிகளைக் காக்கவேண்டிய நின்கைகள் பிறர் பிச்சையெனத்தரும் உணவைவாங்குவதும் முறையோ! புரவியேறிச் செல்லுவதைவிட்டு நீ கானகத்தில் கன்மேலும் முள்மேலும் கால்நடையாய்ப் போவதும் தர்மமோ!

"இளைஞ! தகப்பனிடமுள்ள வாத்ஸல்யத்தால் பெருந்தன்மையுடன் உனது தந்தையின் ராஜ்யத்தை விரும்பாதிருப்பின், எனது ராஜ்யத்திற் பாதியை வகித்தருள்வாயாக. இவ்வண்ணம் செய்வது உனது குடிகளை அவமதித்ததாகாது. ஏனெனில், நாளடைவில் அவர்கட்கும் நீ அரசனாவாயன்றோ!

"ஆனால் இவ்வாறு எனதரசில் பாதியைப் பெறுவது உனது பெருமைக்குக்குறையெனக் கருதுவாயேல் ஆயுதபாணியாய் என்னுடன் உனது எதிரிகளை வெல்ல வருவாயாக!

அப்பனே! வில்பிடித்து அம்பெய்யக்கூடிய இக்கைகளின் பலத்தை வீணாக்குவது முறையல்ல. அவைகள் மூவுலகத்தையும் வென்று அரசாளத் தக்கவை யன்றோ? நான் இவ்வண்ணம் கூறுவது உன்னிடத்திலுள்ள அன்பினாலே யன்றி, வேற்றரசர் நாட்டைக் கைப்பற்றவல்ல வென்றறி.

"உனது சன்னியாசி யுடையைக் காணுங்கால் துக்கம் மேலிட்டு கண்ணீர் சொரிகிறேன். ஐயோ! சன்னியாசி யாகவேண்டுமென்று நீ விரும்பினாலும் அதற்கும் தக்க காலமில்லையா? இளமையிலே சகல போகங்களையும் அனுபவித்த பிறகல்லவோ தர்மத்தைத்தழுவி யோகியாய் இருக்க முயலவேண்டும். வயது முதிர்ந்த காலத்தில் சுகத்தை யனுபவிக்க முடியுமோ? இளைஞருக்குரியது போகமென்றும், கிழவருக்குரியது யோகமென்றும் கூறுவரே! இக்காலத்தில் இளமைக்கும் தர்மத்திற்கும் பொருத்தமில்லையே! சுகங்கள் நீடித்திராவாகையால் கிடைத்த சமயத்தில் அவைகளை அனுபவிப்பதல்லவோமுறை? வயதுமுதிர்ந்த கிழவர்களல்லவோபாசமற்றமௌனிகளாய்சாந்தவமைதியை நாடி நிற்பர்? அங்கிலை இளைஞருக்குத் தக்கதல்லவே! பொருமையற்று, சஞ்சலத்துடன், மனம்போன போக்காய்த் தங்கள் இளமைப் பருவத்தைக்கழித்து,பிறகு வயது சென்றபின், கொடிய விலங்குள்ள கானகங்கடந்த மானிடரைப்போல் "பிழைத்தோம்", என்று சும்மா இருப்பது கிழவர் வழக்கமாயிற்றே! ஆகையால் அவர்களையே பின்பற்றி அவர்களைப்போல் இச்சிறு வயதில் இன்பங்களை அனுபவிப்பாயாக.

"அல்லது, தர்மத்தைக் கைப்பற்ற நீ விரும்பினால் உனது வம்சத்தினரைப்போல் நீயும் யாகங்கள் செய்து இந்திர பதவியை அடைவாயாக. வனத்திற் சென்று இந்திரிய நிக்கிரகம் செய்து, கொடுந்தவம் புரிந்து யோகிகள் அடைந்த பதவியை, சர்வாபரணபூஷிதர்களாய் கிரீடதாரிகளாய் ராஜரிஷிகள் அடைந்திருக்கின்றனர்.

"ஆகையால், ஏ! சித்தார்த்தா! உனது விரதத்தை யொழித்து, என்னுடன் வந்து சகல போகங்களையும் அனுபவிப்பாயாக."

இவ்வண்ணம் மகததேசத்து மன்னன் கூற, அரசிளங்குமரன் அதைக்கேட்டு முன்னிலும் அதிகரித்த மனோதிடத்துடன் கைலாய கிரியைப்போல் சஞ்சலமற்ற நெஞ்சத்தினனாய்ச் சொல்லலுற்றான்:

"சிங்கக்கொடியோய்! தாங்கள் இவ்வாறு தங்கள் நண்பர்களுள் ஒருவனான என்னைக் குறித்துக் கூறியதைக் கேட்டு நான் ஆச்சரியப்படவில்லை. என்னிடத்தில் தங்களுக்குள்ள விசுவாசத்தால் தாங்கள் மொழிந்தீரென்பதை நான் சிறிதும் சந்தேகிக்கவில்லை. ஏனெனில் நீர்மேலெழுத்துப் போலன்றி கன்மேலெழுத்துப்போன்றதல்லவோ நல்லார் நட்பு. ஆயினும் நான் சொல்லுவதைச் சற்று கேட்டருள்வீராக.

"ஐயனே! மூப்பையும் மரணத்தையும் கண்டு நடுங்கினவனாய் அவ்விரு விலங்குகளிலிருந்து விடுதலையடைய வெண்ணி, அழுத கண்களுடன் கூடிய உறவினர்களையும், பாவச் செயல்களுக்குக் காரணமாயுள்ள சுகபோகங்களையும் விட்டகன்று, தர்மத்தை வழிபட வந்தேன். வேந்தே! அரவங்களைக் கண்டு நான் அஞ்சவில்லை, பேரிடி கேட்டு நடுங்கவில்லை, தீயைத் தீண்டவும் தடையில்லை. ஆனால், உலக விஷயங்களை நினைக்கும்பொழுது,என் மனம் பதறுகிறதே! இவ்வனித்ய இன்பங்கள் நமது மனவமைதியையும் தனத்தையும் கொள்ளைகொண்டு கனவைப்போல் நம்மை ஏமாற்றிச் செல்லுகின்றனவே. இன்பத்திலேயே மூழ்கிக்கிடக்கும் தேவர்களுக்கும் அழியாச் சுகமில்லையே! மானிடருக்கு அச்சுக மெங்கிருந்து வரும்? கட்டையை உட்கொள்ளும் அக்கினியைப்போல் இன்பத்தைக் கோருவோருக்குத் திருப்தியுண்டோ? இன்பங்களைவிட உலகத்தில் வேறு துயரமில்லை. ஜனங்கள் அறியாமையினால் அவைகளைத் தேடுகிறார்கள்; உண்மையை யறிந்தவர் அவைகளை வெறுப்பரன்றோ!

"பூமண்டல முழுதும் பிடித்தும் அரசர்கள் சமுத்திரங்களையும் அரசாள முயலுவதுபோல் இன்பங்களில் திருப்தி மனிதர்கட்கு எக்காலும் கிடையாது.வானத்திலிருந்து பொன்மாரி பெய்தும், அகில உலகையும் ஒரு குடைக்கீழ் ஆண்டும் மாந்தாதா திருப்தி யடையவில்லை. இந்திர பதவியையடைந்து,ரிஷிகள் பல்லக்குச் சுமக்க வனுபவித்தும், நகுஷனது ஆசை குன்றவில்லை. புருரவஸ் ஊர்வசியை யடைந்

தும் பேராசையால் ரிஷிகளிடம் நாசமடைந்த தைத் தாங்கள் கேட்டதில்லையோ? சஞ்சலமாய் அநித்யமான இவ்வுலக விஷயங்களை எவரேனும் விரும்புவரோ? சற்றும் நிலையாது செல்வோமெனும் செல்வத்தில் பற்றடைவதும் தர்மமோ? பலியினிடமிருந்து இந்திரன் தன் பதவியடைய, அவனிடமிருந்து நகுஷனடைந்து அவனும் அதை இழக்கவில்லையா? ஜடாதாரிகளாய் மரவுரி யுடுத்து, கந்தைகளையணிந்து கந்தமூலங்களை உண்டு கொடுந்தவம் புரிந்த மகரிஷிகளும் இன்பவலைகளில் சிக்கி கஷ்டப்பட்டிருக்குங்கால் அவைகளை நாடிச் செல்வதும் தருமமோ? அவைகளை நினைப்பதே பல இடுக்கண்களுக்கு இடமாயிருக்க, உன்மத்தர்களாய் சிற்றின்பத்திலேயே மூழ்கிக் கிடப்போரின் நிலையை நினைக்கவும் கூடுமோ?

"மன்னர் பெரும! உலக விஷயங்களெல்லாம் அல்பமானவை யென்று கண்டு, பேராவலுக்கும் அதிருப்திக்குமே காரணமாயிருக்கும் இன்பமென்னும் நஞ்சை நெஞ்சார நாடுவாரு முண்டோ? சாமான்ய விஷயங்களில் கவலை கொண்டிருப்பவரின் சஞ்சலத்தையும் அவைகளில் பற்றற்றவரின் அமைதியையும் கருதுங்கால் இந்திரிய நிக்கிரஹமுள்ளோர் இப்பாசத்தைத் துச்சமெனத் தள்ளுவர்.

"அன்றியும், இப்போகத்தை மேன்மேலும் அடைவது முடிவில் துக்கத்தை யன்றோ விளைவிக்கிறது.? விடாயிருப்பவன் சர்வ சுகங்களையு மனுபவித்து மதோன்மத்தனாய் தனது கடமைகளை மறந்து அடாது செய்து அதன் பயனாய் துக்கத்திற் காளாகிறான். இச்சுகங்களனைத்தும் எரியும் தணலைப்போலப் பார்க்க அழகாயிருப்பினும், கிட்ட நெருங்குங்கால் உடலைக் கொளுத்தும் தன்மையுள்ளவையாகையால் புலன்களை யடக்கியவர் அவைகளை ஒருபொழுதும் விரும்பார். பாடுபட்டுத் தேடிய இச்சுகங்களெல்லாம் கனவில் தோன்றுவனபோல் சீக்கிரத்தில் அழியக்கூடியவையே.

"மித்திர பேதத்தை யுண்டாக்கக்கூடிய இன்பங்களை நாடுவது நியாயமோ? சுந்தன் உபசுந்தன் என்ற அசுரரிருவர் அவைகளின் பொருட்டு தீராப்பகை கொண்டு உயிர் துறந்ததை மறந்தீரோ? ஐயனே! மாமிச பக்ஷிணிகளாகிய கொடிய விலங்குகள் பசியால் வருந்துகின்றனவென்று எந்த மூடனேனும் அவைகளிடம் இரக்கங்கொண்டு அவைகளுக்குத் தன்னை இரைபாக்குவானோ? மேலும், மதிகெட்ட போகி, படும் துயரங்களுக்குக் கணக்குண்டோ? கர்ம விலங்குகளை அதிகரித்து சிற்றின்பங்களின் நிமித்தம் எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி யெண்ணி நெஞ்சமும் உடலும் புண்ணாகி அவன் ஆவியுடனிருக்கையிலேயே பிணம்போல் திரிகிறான். அதுவும் அவனது மதியீனத்திற்குத்தக்க தண்டனையே. கானத்தைக் கேட்டுக் கானகத்துக் கலைமான் கெடுவதுபோல், விளக்கொளியைக் கண்டு பூச்சி விழுந்திறப்பதுபோல், மாமிசத்திற் காசைப்பட்டு மீன்கள் மடிவதுபோல் உலகவின்பங்களிற் சிக்கி மானிடர் துன்புறுகின்றனர்.

"அரசே! அழகிய ஆடையும் உயர்ந்த ஆபரணங்களும் மனிதனுக்கு இன்றியமையாதவையோ? அல்லவே! அவைகளெல்லாம் நிலையில்லாப் பொருளல்லவோ? தாகவிடாய் தீர்க்கத் தண்ணீரும், பசி நீங்க உணவும், மழை காற்று வெயில் நின்றும் தப்ப விடும், உடலை மூடி குளிரடங்க உடையும் மனிதனுக்குரியவை. அவ்வண்ணம் இளைப்பாறப் படுக்கையும், சோர்வு தணிய வண்டியும், நின்ற வலியடங்க ஆசனமும், அழுக்குத் தொலைய முழுக்கும் ஏற்பட்டவை. இவ்வாறு உலக விஷயங்களெல்லாம் கஷ்ட உபசாந்தியின் பொருட்டு ஏற்பட்டவையேயன்றி போகத்தின் பொருட்டல்ல. அவ்வாறிருக்க, புத்திமான் அவைகளை அனுபவிப்பதில் தன் மனதைச் செலுத்துவானோ?

"மேலும், சுகங்களுக்குள் தாரதம்ய மிருப்பது தங்களுக்குத் தெரியாததன்று. நிலவும் சந்தனமும் கோடையில் சுகத்தை நல்கினும் மாரிகாலத்தில் அவைகளை நாடுவாருண்டோ?

"அன்றியும், லாபநஷ்டம்; சுகதுக்கம்; வெயில் நிழல் முதலிய இரட்டைகள் உலகில் எங்குமிருக்கின்றன வாகையால் 'முப்பது வருஷம் சுகித்தவனுமில்லை, முப்பது வருஷம் பட்டவனுமில்லை' என்பதைத் தாங்கள் கேட்டதில்லையா? சுகமும் துக்கமும் மாறிமாறிவருவதைக்காணுங்கால் மன்னனின் பதவியும் அடிமையின் நிலையு மொன்றெனக் கருதுகிறேன். அரசன் முகமாயினும், அது எப்பொழுதும் மகிழ்ச்சியுடன் இராது. அடி

மைக்கும் விடியும் நாளுண்டு. அரசனுக்குள்ள அதிகமான செல்வாக்குக்குத் தக்கவாறு கஷ்டங்களுமுண்டு. தன் குடிகளின் பொருட்டு அவன் படும் துன்பத்திற்குக் கணக்கில்லை. பூமண்டலத்திற்கெல்லாம் அதிபதியாயிருப்பினும், ஒருநகரில் ஒரு வீட்டில் மட்டுமே அரசனிருத்தலால் மற்ற படாடோபங்களெல்லாம் அன்னியரைக் குறித்தல்லவோ! இரண்டு துணிகளும், பசிதீரப் புசிக்கச் சிறிது உணவும், ஒரு படுக்கையும், ஒரே ஆசனமும் போதுங்கால், மற்றவையெல்லாம் கௌரவத்தைக் குறித்தே யன்றோ! இவ்வேஷங்களெல்லாம் ஆசைதீர அனுபவித்துத் திருப்தியடையவெனில், நான் இவ்வரசின்றி திருப்தியடைகிறேனென்றால் இவைகளால்எனக்காகவேண்டியதென்ன? பேரின்பத்திற்கு வழிகண்டவன் சிற்றின்பங்களால் ஏமாறுவனோ?

"மன்னர் மன்ன! நான் சினங்கொண்டு கானகத்தை யடையவில்லை. எனது ராஜ்யத்தை எதிரிகள் கைப்பற்றினர் என்றும் நான் இங்கு வரவில்லை. விண்ணுலகத்தை யாளவேண்டுமென்ற பேராவல்கொண்டும் நான் வந்தவனல்ல. கடுவிஷங் கக்கும் சீறிய சர்ப்பத்தை விட்டகன்று, விரைந்தோடிப் பிறகு அதைப் பிடிக்கப்போகும் மூடனே அல்பசுகங்களை விட்டொழிந்தபின்னர் மறுபடியும் அவைகளைத் தேடிச்செல்வான். கண்ணிலாக் குருடனைக்கண்டு கண்ணுருக்கங் கொள்வோனும், கயிற்றால் கட்டுண்டோனைப் பொச்சரிப்புடன் பார்க்கும் தனியே திரிபவனும், தீனனிடம் அருளை கொள்ளும் தனவானும், மதிகெட்டோனைக்கண்டு அவன்போலிருக்க மயங்கும் மதியுள்ளோனுமே உலகவிஷயங்களில் பற்றுள்ளவர்களிடம் பொறாமை கொள்வர்.

"அன்புள்ள அரசனே! பிக்ஷுகனைக் கண்டு நீர் வருந்தவேண்டாம். அவன் தனது எண்ணம் நிறைவேற மூப்பையும் மரணத்தையும் தொலைக்க வழிதேடுகின்றான். அதுவே அவனுக்குப் பேரானந்தம். அதுவே மிகுந்த அமைதி. துன்பங்கள் அவனை இனி உறுத்தாவென் றறிவீராக! வெண்ணெயிருக்க நெய்க்கழுவான்போல் தனமிருக்கப் பேராசைதீராது காமத்தாலுண்டாகும் கஷ்டங்கள் பின்னிருக்க இடம்பாழுந்த அமைதியைத் தேடாத மபதையே கருணையுடன் கருதத்தக்கவன்.

"ஐயனே! இவ்வண்ணம் என்னிடம் தாங்கள், தங்கள் குணத்தையும், தங்கள் நடத்தையையும், தங்கள் வம்சத்தையும் ஒத்தவாறு மொழிந்தீர். எனது தீர்மானத்தை நிறைவேற்றுவது எனது குணத்திற்கும், நடத்தைக்கும், எனது வம்சத்திற்குமுரிய தர்மமென நான் கருதுகிறேன். விண்ணுலகத்திற்கு மேலுலகத்திலும் துன்பமில்லா வரசு வேண்டிலேனென்றால், இம்மானிட ராஜ்யத்தையா நான் கைப்பற்றுவேன்! பிறப்பு, மூப்பு, இறப்பு, பிணி, பயம், கவலை, கர்மம் இவையற்ற உலகமே மனிதனடையத்தக்கது.

"வேந்தா! 'வயது முதிரும் வரையில் காத்திரு, இளமையில் மனோதிட முண்டாகாது, என்றீரே! இவ்வெண்ணமே அநித்ய மல்லவா? கிழவயதிலும் சஞ்சல முண்டன்றோ, இளமையிலும் திடமாயிருப்பது அரிதோ?

"எக்காலத்திலும் யமபாதை பீடித்துக் கொண்டிருக்க, சாந்தத்தை நாடும் புத்திமான் நாளைக்கென்று ஒரு காரியத்தைத் தள்ளிவைப்பது முறையா? இறப்பென்னும் வேடன், மூப்பென்னும்ஆயுதத்துடன் பிணியென்னும் அம்புகளால் விதியென்னும் காட்டிலோடும் ஜீவன்களென்னும் மான்களை அடித்துக் கொல்லுங்கால் வாழ்நாட்களை யதிகரிக்க எவனேனும் விரும்புவனோ? சிசுவாயிருப்பினும், இளைஞனா யிருப்பினும், வயதுமுதிர்ந்த கிழவனா யிருப்பினும், கூடிய சீக்கிரத்தில் அவன் கர்மவிலங்குகளிலிருந்து விடுவித்துக் கொண்டு சன்மார்க்கத்திலேயே வாழ்நாட்களைக் கழித்து யோக நிலையிலிருக்க முயலவேண்டும்.

"அரசர்க்கரசே! தாங்கள் கூறும் வண்ணம் யாகஞ்செய்து உயர்ந்தபதவியை அடைய எனக்கு இஷ்டமில்லை. அநித்யமான சுகத்தின் பொருட்டு ஜீவஹிம்சை செய்து யாகம் பண்ணுவது குரூரமான காரியமல்லவா? மற்றொரு பிராணியைக் கொன்று நாம் சுகமடைவது நெறியோ? பின்வரும் லாபத்தைக் கருதிக் கருமஞ்செய்பவன் நானல்ல. இனி இச்சம்சார சாகரத்தில் வந்து பிறந்து கஷ்டங்களை யனுபவிக்க நான் விரும்பவில்லை. யாகங்களெல்லாம் புனர் ஜனனத்திற்கே வழிகாட்டுகின்றன வாகையால், அவைகளை நான் ஒரு பொழுதும் செய்யேன்.

"மன்னர் பெரும! கர்மபாசத்தினின்று விடுவித்துக்கொள்ள வழிசொல்லும் அராத முனிவரைக்கண்டு அவரடி பணிய நான் இன்றே செல்லுகிறேன். உமக்குச் சகல மங்களங்களு முண்டாகுக! கல்மஷ மின்றி நான் கூறிய கடுஞ்சொற்களை மன்னிப்பீராக."

இதைக் கேட்டதும் அரசன், "நீ உன் ஙிருப்பத்தை யடையத் தடையில்லை. அவ்வண்ணம் அடைந்த பிறகு என்னைக் கருணையுடன் கருதுவாயாக" என, இக்ஷ்வாகுகுல திலகரான சித்தார்த்தர் 'அப்படியே' என்று கூறி வைஸ்வந்தாசிரமத்தை நாடிச் சென்றார். ஸ்ரேண்யமன்னனும் ராஜகிரகத்தை நோக்கித் திரும்பினான்.

கபிலர்

KAPILAR.

[ஸ்ரீமான் பண்டித உலகநாதபிள்ளை அவர்கள்.]

(317-ம் பக்கத் தொடர்ச்சி)

கபிலர் பேகனோடு கண்ணகியைக் கூட்டுதல்

மலை நாட்டில், நல்லூரில், ஆவியர் குடியில் வையாவிக் கோப் பெரும் பேகன் என்றொரு வள்ளல் இருந்தான். அவன், கைத்தலம் என்னக் காந்தள் மலர, வெள்ளிய எயிறு போல் முல்லை அரும்ப, பொன் புரையக் கொன்றை விரியச், செந்நீர் துளித்தெனக் கோபம் ஊர்தர, ஊதை உலாவும் கார்காலத்தில், ஒரு நாள் வைகறைப் பொழுதில், விலையுயர்ந்த போர்வையால் தலைமறையப் போர்த்துக்கொண்டு காலில் தொடுதோலணிந்து, கையிற்கழி பிடித்துக், குன்றம் நடை கற்பதெனப் பையச் சென்று கொண்டிருக்கையில், முகில் அயலில் காலிறங்கிப் படிதலைக் கண்டு, வேங்கைமரத்துப் பூஞ்சினைக்கண் நின்ற மயில் அகவலுற்றது.

அதனைக் கேட்ட பேகன், அப்புறம் செல்லாது அங்கண் நின்று சிந்திப்பான்: பறவைகள் தத்தம் சேக்கையினின்றும் வெளிப்படாக் காலம் இது; விலங்குகள் உறைவிடம் விட்டு வெளியில் புறப்படா; இந்நாளையில், குளிரைப் போக்கும் ஆடையும், கனல் நிறைந்த இந்தளமும் கைக்கொண்டு, பலகணியைத் தாழிட்டு உள்ளே உறைகுவர்மக்கள்; ஆடையில்லாதார் வாடையால் மெலிந்து கையது கொண்டு மெய்யது பொத்திப், புற்றில் ஒடுங்கும் பாம்புபோல ஒடுங்கிக் கிடப்பர்; உயர்ந்த இம்மலைக்கண் குளிர் மிகுதி; அவ்வாறிருக்க இப்பறவை மட்டும் சேக்கையின் நீங்கி எதிர் நின்று கூவிற்று, அதனால் என் வருகையை அறிந்து தன்குறை உணர்த்துதற்கு முன் வந்ததென்றே நினைக்கின்றேன்; உற்றுநோக்கின், 'வள்ளியோய்! குளிரால் வருந்துகின்றேன், எனக்கொரு போர்வை தந்தருள்'; என்று கேட்பது போலிருந்தது; எவர்க்கு எது வேண்டுமோ அதனைத் தெரிந்து கொடுப்பதன்றோ கொடையாகும்; இம்மயில், இன்றியமையாது வேண்டுவது போர்வை; அதனைத் தந்திடேனெனில், என் கொடைத்திறம் யாதாய் முடியும்? இல்லாதவர்க்கு ஈவதன்றே ஈகை; அதனால் வருவது இசை; இசையிற் பெரியதோர் எச்சமில்லை; ஆனால், இல்லத்திற் சென்று நல்லதொரு போர்வை அனுப்பலாமெனின், கால இடையீடாகும்; அந்நேரமளவும் இவ்வெண்ணம் நிலைபெறும் என்று நினைப்பதற்கு இடமுமில்லை; இருப்பினும், இன்று, நம்முடைய முறை நாள் என்பதும் நமனுடைய முறை நாள் என்பதும் நாம் அறியோம்; இதனைக் கருதியே, நன்றெனின் அன்றே அப்பொழுதே செய்க என்கின்றனர் பெரியோர்; இஃதன்றி ஒருவர் துன்புறக் காணின், அத்துன்பம் துடைத்தற்கு வேண்டுவன கைக்கொண்டிருப்போன், அதனை ஒழித்தற்கு அப்பொழுதே முந்தவேண்டும்; வாளா இருப்பனேல், அவனினும் வன்னெஞ்சர் பிறரில்லை; அன்றியும் இயைவது கரந்தோனுமாவன்; இயைவது கரத்தலிற் கொடுமையில்லை; ஆதலால், இனிக் காலந் தாழ்க்காது. என் போர்வையை ஈவதே நன்று" எனக்கருதி, "இதனைப் போர்த்துக் குளிர் நீங்கி இன்புறுக" என்பவன் போலத், தன் போர்வையை, அம்மயில் இருந்த வேங்கைமரச் சினையில் தூங்கவிட்டுத் தன்மனைக் கேகினான்.

இங்ஙனம் கொடைமடம் பூண்ட அவ்வள்ளியோன், இசைபட வாழ்ந்திருக்கையில், அவன் பிறந்த நாள் விழாக்கொண்டாடு தினம் வந்தது. நகரமுழுவதும் வாழையும் கமுகும் வயின் வயின் நாட்டி, மலர்மாலை நாற்றி, கவரி தூக்கி, கொடி எடுத்து, ஒப்பனை செய்தனர். முரசும் முழவும் முழங்கின. அப்பொழுது சுனை நீராடிச், சாந்தணிந்து பட்டுடுத்து, நற்கலன் பூண்டு, முருகனை வழிபட்டு, வேலன் நல்கிய சேடையை ஏற்று நுதலிலணிந்து, மனதிற்கு இனியன உண்டு, அகமகிழ்வோடு ஆதனத்தின்கண் அமர்ந்திருந்தனன் பேகன்.

நகரிலுள்ளவர் யாவரும் தத்தமக்கு இயன்ற கையுறையோடு வந்து அவனைக் கண்டுமகிழ்ந்தவர். அன்னவனது வள்ளண்மையை எடுத்துப் பாராட்டினர் புலவர். விறலியர், யாழை இடவயின் தழீஇ நரம்பினை வருட, பாணர்கள் பாடுவாராயினர். கொடிச்சிமார், வட்டமாகக் கைபிணைந்து நின்று, குரவை யாட்டயர்ந்தனர். வேழம்பர் கழைக் கூத்தாடினர். ஐவன அடிசிலும் தினைமென் சோறும், உண்பாரும், ஊனும் கிழங்கும் தின்பாரும், செந்தினை இடியும் தேனும் விரவி நுகர்வாரும், கனியும் காயும் சுவைப் பாரும், நாட்களுண்டு நகுவாரும் ஆயினர் எங்கும். வந்தவர் யார்க்கும் மான்மதச் சாந்தும் மலர் மாலையும் ஆடையும் அணிகலனும் வழங்கினன். பார்த்த இடமெல்லாம் பாடலும் ஆடலும் மலிந்திருந்தன. கடம்படியில் கோழிக் கொடி நட்டு, முருகியம் கறங்க வெறிப்பாட்டயர்ந்தனன் வேலன். எங்கும் பெருமுழக்கமாயிருந்தது. எவரிடத்தும் குடி கொண்டிருந்தது மகிழ்ச்சி.

வந்தவர்க்கும் வாழ்த்துவோர்க்கும், வரிசை பெற்றுச் செல்பவர்க்கும, ஏற்ற வண்ணம் முகமனுரைத்து, மனமகிழ இனிதாகப் பேசி, பேகன் அளவளாவி யிருக்கையில், அவ்வூரில் வாழும் பொதுமகள் ஒருத்தி அவனைக் காண்பது கருதி வந்தனள்.

அவள், இருளெனச் சுருண்ட கருங்கூந்தலும், வில்போல வளைந்து பிறைபோல் இலங்கு நெற்றியும், நஞ்சமும் அஞ்சும் வஞ்ச விழியும், முருக்கின் அரும்பென இருக்கும் இதழும், முத்த நிரையினை ஒத்த மூரலும், கலை நிறைந்த மதியேபோல் நலம் சிறந்த முகமும், திருமகள் காமுறும் உருவமுமமைந்து நடை கற்கும் பசும்பொற்பாவை கொல் எனக் கண்டோர் நயக்கும் வடிவுடையவள்.

தான் யார்க்கும் மாலை அளிப்பவள் என்பதை உணர்த்தவோ, அன்றித் தன் பெயர் பொன் மாலை என்பதற்கு இணங்கவோ, அறியோம், முல்லையும் நீலமும், குல்லையும் கடம்பும், வேங்கையும் தேங்கமழ்குரவமும் விரவித் தொடுத்துப் பனிநீரில் தோய்த்த ஒரு மலர் மாலையைக் கையுறையாகக் கொடுத்து, பேகனை வணங்கினள்.

அவனும் அம்மாலை, கண்கவர் வனப்பிற் பன்மலர் விரவி நன்மணம் கமழத் தொடுக்கப்பட்டிருந்தமையின், அதன் மணத்தையும் வனப்பையும் வியந்து, புன்னகையோடு அன்னவளை நோக்கினன்.

மீன் குஞ்சுக்கு நீச்சும், கொடும் பாம்பின் குட்டிக்கு நஞ்சும் கொடுத்தவரில்லை யாதலால், அவளும், நாணமுற்றவள்போல நடித்து, தன் மரபிற்கு அடுத்தவண்ணம், நடைகுலுக்கி, முகமினுக்கி, நகைநகைத்து, கடைக்கண்ணால் மருட்டிப் பெடைமயில் போல, ஒரு சிறை ஒதுங்கிநிற்கப், பேகனும் அறிவிழந்து, காந்த முகத்தில் கரும் பொன்போல, அவள் அழகில் ஈடுபட்டு, "நங்காய்! வேற்படைக்கும் வாட்படைக்கும் அஞ்சாத நான், நின் விழி அம்பிற்கு உடைந்தேன்; என்னை ஏன்று கொள்ளுதல் நின் பரம்" எனக்கூறி அன்று தொட்டு அவளோடு உடனுறைவானாயினன்.

அச்சமயத்தில், தமது சுற்றமாகிய புலவர்கள் உடன்வர அங்குச் சென்றிருந்த கபிலர் பேகனைக் கண்டிலர். ஆனால், வாடிய முகத்தொடு கண்ணீர்வார ஒரு சிறை யிருந்து வருந்தி நின்ற ஒரு மகளைக் கண்ணுற்று, "நீயார்? உனக்கு என் உற்றது? பேகன் எங்குளான்?" என்றனர்.

கற்புடை மகளிர் தம் கணவர் கற்பித்த வழி நிற்பதல்லது அவரைப் புறங்கூறார்; ஆகையால், அவள் வாய் பேசாது இருந்தனள். அருகில் நின்ற உயிர்ப்பாங்கி, அன்னவளது கண்ணீர் மாற்றி, 'அன்னாய்! நின் கணவன் நின்னை நாடி விரைவில் வருகுவர்; வருந்தற்க' எனக்கூறி, 'ஐயன்மீர்! இந்நங்கை கனல் சான்றுகப் பேகனை வேட்ட பெண்மணி; பெயர் கண்ணகி என்பாள்; எவரைப் பிரிந்துறையி

னும், தம் கணவரைப் பிரிந்திருக்க மனம் பொறார் மங்கைமார் ; இன்னும் தம்மை நீத்த கன்று தம் கண் காணப் பிறமகளிரோடு அவர் உறையக் காணின், வெயிலிடைப்பட்ட புழு வெனத் துடிப்பரே யன்றிப் பொறுப்பரோ? இவளும் அன்னள்; பேகனும் இங்கில்லை" என்றுரைத்தனள்.

அம்மங்கை குறிப்பாக உணர்த்த உணர்ந்த சீரியோர், பேகனது செய்கை நன்றாயிருந்தது; கற்புடை மகளிரைக் கலங்க விடுத்துப், பரத்தையை நாடினன் பேதை ; அன்பையும் அருளையும் எங்கு குத்தனன்? நல்லறிவு புகட்டி நன்னெறிப்படுத்தவேண்டுமேயல்லது இவனை வெறுத்தலிற் பயனில்லை" என நினைந்து, ஏனைய புலவரோடு, அவனை நாடிச் சென்றனர்.

புலவர் வருகையை அறிந்த பேகன், கடிது முன்போந்து அடிபணிந்து, 'அடிகேள்! பிறிதொரு கருமத்திற் சென்றிருந்தேனாதலால் இந்நேரமளவும்உங்களைக் காணப்பெற்றிலேன்; பிழை நூறு செய்யினும் பொறுக்கவல்ல சான்றோய்! அறிவிலாத சிறியனேன் செய்த இப் பிழையைப் பொறுத்திடல் வேண்டும்' என்றுரைத்து வணங்கி நின்றனன்.

அப்பொழுது கபிலர், பெருநகை செய்து, 'புலவீர்! இவ்வள்ளியோன் செய்கையைத் தெள்ளிதின் ஆராய்மின் ; மறைவழிப்பட்டதென்று கருதினான், பழிமொழி, தெய்வம் பறை யறைந்ததுபோல, உலக முழுவதும் ஓடிப் பரக்கும் என்பதை மறந்தான்; மதியிடைப்பட்ட மறுவினை மறைப்பவர் யார்? அது பதியெல்லாம் காணப் படுமன்றே? இவனோ என்றால் உலகம் அறிந்தவன் ; இவனிடைப் பட்டதனை எவர் தாம் அறியாதார்? பகர்மின்' என்றனர்.

'மதம்பட்ட யானையையும், மனம் செருக்கிய குதிரையையும் உடைய பேக! யாம் பசித்து வருவேமல்லேம் ; எம்மால் பரிக்கப்படும் சுற்றமும் எமக்கில்லை; ஒரு காரணமும்இன்றி அருள்செய்யும் நீ, நின்னால் வருந்தும் நின் மனையாட்கு அருளாதொழிதல்தகாது ;அருளை விரும்புவோய்! யாம் நின்பால் இரந்த பரிசில், நீ அறஞ்செய வேண்டுமென்பதே ; அவ்வறந் தான் யாது என்பையாயின், நின் அருள்பெறாமையின் வருந்துகின்றாளது அருந்துயர் களைதல்; அதனைச் செய்க.

"மடத்தகை மாமயில் பனிக்குமென் றருளிப்
படாஅ மீத்த கெடாஅ நல்லிசைக்
கடாஅ யானைக் கலிமான் பேக!
பசித்தும் வாரேம் பாரமு மிலமே;
களங்கனி யன்ன கருங்கோட்டுச் சீறியாழ்
நயம்புரிந் துறையுநர் நடுங்கப் பண்ணி
யறஞ்செய் தீமோ வருள்வெய் யோயென
இஃதியா மிரந்த பரிசிலஃ திருளி
னினமணி நெடுந்தே ரேறி
இன்னாதுறைவி யரும்படர் களைமே"
எனப் பாடினர்.

பின்னர், அரிசில் கிழார், 'அடுபோர்ப் பேக! நின்னால் தரப்பட்ட அருங்கலமும் செல்வமும் யாம் பெற விரும்பேம் ; நின் மலை நாட்டைப் பாட என்னை நயந்து பரிசில் நல்குவை யாயின் குரிசில்! நீ அருளாமையால், கண்டவர் இரங்க மெலிந்து துயரால் வருந்தும் உன்னுடைய திருந்திழை அரிவை, விரித்த கூந்தலைத் திருத்திக்கோதை புனைய நின்தேரை ஏறி அவட்கு அருள் செயவருக' என்றுரைத்து,

"அன்ன வாகநின் னருங்கல வெறுக்கை
யவைபெறல் வேண்டே மடுபோர்ப் பேக
சீறியாழ் செவ்வழி பண்ணிநின் வன்புல
நன்னாடு பாட வென்னை நயந்து
பரிசி னல்குவை யாயிற் குரிசினீ
நல்கா மையி னைவரச் சாஅ
யருந்துய ருழக்குநின் திருந்திழை யரிவை
கலிமயிற் கலாவங் கால்குவித் தன்ன
வொலிமென் கூந்தற் கமழ்புகை கொளீஇத்
தண்கமழ் கோதை புனைய
வண்பரி நெடுந்தேர் பூண்கநின் மாவே."
எனப் பாடினார்.

அதன் பின்னர், பெருங்குன்றூர்கிழார், 'ஆவியர் கோவே! நீ துறத்தலின், தமியளாயிருந்து வருந்தும் அரிபரந்த மழைக்கண் அரிவையது நெய் துறந்த மைபோலும் கூந்தல் செவ்விய மலரை அணியும்படி, அவள்பால் நீ இன்று வருவையாயின், அதுவாகும் யாம் பெறும் பரிசில்.

"கன்முழை யருவிப் பன்மலை நீந்திச்
சீறியாழ் செவ்வழி பண்ணி வந்ததைக்
கார்வா னின்னுறை தமியள் கேளா
நெருந லொருசிறைப் புலம்புகொண் டுறையு
மரிமதர் மழைக்க ணம்மா வரிவை

சும்மாவிருந்த அம்மையாருக்கு அரைப்பணத்துத் தாலி போதாதா ?

நெய்யொடு துறந்த மையிருங் கூந்தல்
மண்ணுறு மணியின் மாசற மண்ணிப்
புதுமலர் கஞல இன்று பெயரின்
அதுமனெம் பரிசி லாவியர் கோவே"

எனப் பாடினர்.

இவ்வாறு புலவர் மூவரும் சொல்லி முடிவதன் முன், கபிலர், பேகனை நோக்கிச் 'சினந்துசெய்யும் போரையும் மகிழ்ந்தளிக்கும் வண்மையையும் உடைய பேக! நேற்று நடந்து வருந்திய என் சுற்றம் பசித்ததாக, மலையை அடுத்த சிற்றூரை அடைந்து, நின்னையும் நின் மலையையும் பாடினேம்; அங்கு நின்னைக் கண்டிலேம்; கண்ணீர் வார அழுது நின்றனள் ஒரு நங்கை; அவள்தான் யாரோ? அவள் நின்னருள் பெற்று இன்ப நுகர்வாளாக வேண்டும்' என இரந்து கூறி,

"கைவள் ளீகைக் கடுமான் பேக
யார்கொ லளிய டானே நெருநற்
சுரனுழந்து வருந்திய வொக்கல் பசித்தெனக்
குணில்பாய் முரசி னிரங்கு மருவி
நளியிருஞ் சிலம்பிற் சீறூ ராங்கண்
வாயிற் றோன்றி வாழ்த்தி நின்று
நின்னுநின் மலையும் பாட வின்னு
திகுத்த கண்ணீர் நிறுத்தல் செல்லாள்
முலையக நனைப்ப விம்மிக்
குழலினை வதுபோ லழுதனள் பெரிதே"

எனப் பாடினர்.

இங்ஙனம் இரந்து கூறிய பின், சிறிது வெகுண்டவர்போல நோக்கி, ஆவியர் மருக! நின் பிரிவால் வருந்திப் புலம்புவாளை அளிக்கத் தக்காள் எனக் கருதாமல் கையகன்று, நல்லூரின் கண் வாழும் நல்லார் ஒருவர் தொடர்புற்றனை; நின்செய்கை நன்று; நடுவூரிற் பழுத்த பயன்மரம் போலப் பலர்க்கும் பயன் படற்குரிய நீ, எவர்க்கும் அணுக ஒண்ணாத காளிகோட்டத்திற் கற்பகம் என்னக், கணிகையர் சேரியிற் காலங் கழிப்பது அழகாமோ?

(தொடரும்.)

கிரிஸெல்டா.—இப்புத்தகம் பெண்பாலார் அவசியம் வாசிக்க வேண்டிய புத்தகங்களில் ஒன்று. இப்புத்தகத்தில் ஒரு பெண் தன் கணவனிடம் நடந்துகொண்ட சிலாகிக்கத்தக்க மாதிரியை விளக்கிக் காட்டியிருக்கிறது. படிக்கப்படிக்க உத்ஸாகத்தைக் கொடுக்கக்கூடியது. துரைத்தனத்தரால் அங்கீகரித்தது. விலை அணா. 3.

அரசர் பிறந்த நாள்

KING'S BIRTH DAY

[ஸ்ரீமான் P. B. விஜயராகவாசாரியார் அவர்கள், பி.ஏ.]

வாழ்த்துப் பாடல்

தேசியராகம்

'உயர்வற உயர்ந்த ஒரு தனி முதல்வன்
அயர்வறு மங்களம் அரசர்க் காகுக;
உலகெலாம் படைத்த உயர்நலமுடையவன்
சலமிலா மங்களம் ஜார்ஜுக் காகுக;
அழியாப்புகழுடை ஆங்கில நாட்டினில்
வழி வழி வந்த மன்னவர் திலகன்;
பலபடியாகப் செய்து பலிக்க
நிலமதில் நீரை நொய்தினிற் கொள்ளும்
பகலவன் போலப் பாரினிற் குடிகளை
இதமுடன் ஆண்டு தன் இன்னருள் விளங்கப்
புகல்ருதேயம் பற்பல பொலியத்
தயவுடன் நல்கும் தனிப்பெருங் கொற்றவன்;
பிறங்கொளி மணியும் பொன்னும் பொலிந்து
நிறங்கிளர்காவும் நிறைந்த இந்திய
நாட்டினர் தழைக்க நலமுடன் செங்கோல்
ஓச்சியே இறைபுற்றுயர் செல்வநாயகன்;
'இந்திய நாட்டினர் சிறப்பே எமக்குறு
பொன்றுச்செல்வம்; அவர்பெறுங் கீர்த்தியே
அழிவிலாப் பேரும்; அவருடைய நன்றியே
ஒழிவிலா காவலெ'ன் றருளுவந் தொழுகச்
சாசனஞ்செய்து தயவேவடிவென
மாஞாலம் போற்றமகிதலம் ஆண்ட
அன்னை விக்டோரியாள் அமுதனைப்பெற்ற
மன்னன் எட்வர்ட் மைந்தனாய் விளங்கும்
இணையிலா எழிலுடன் தயையுலாவடிவினன்,
கன்னகழல் வீரர்கடிதினிற்காக்கும்
அணிமதி யென்னும் ஐந்தாம் ஜார்ஜும்,
கார்குழல் மாது கவிஞர் போற்றும்
வேரியங்கமலையாம் மேரி ராணியும்,
பாரினிற் பல்லாண்டருளுடன் வாழி,
வரந்தருமன்னர் மன்னவன் வாழி,
மகிதலத் திருவெலாம் மகிழ்வுடன் புரக்கும்
நிதியெனத் திகழும் நிறைபுகழ் வாழி,
வாழி, வாழி, எங்கோன் வாழி,
ஆழியைப்புரக்கும் அருங்கலம் வாழி,
மன்னவன் ஜார்ஜும், மதியெனத் திகழும்
மின்னுதல் மேரியும் மைந்தரும் சேர்ந்து
நிறைந்தபுகழொடு நெங்கியகீர்த்தி
பாந்துவாழ்க பல்லாண்டாண்டத்
திகிரிகோமான் தனொடுதிகழ்ந்தே

சும்மா இடைக்குமா சோம்பலன் பாதம்.

நமது சிறு கதை

OUR SHORT STORY

[ஸ்ரீமதி சம்பகவல்லி அம்மாள்.]

காலத்தின் கோலம்

I

சித்திரை மாதத்து மாலைப்பொழுது முடிவை அடையும் தருணம். விஜயமித்ரர், கோபால ஸர்க்காரின் வீட்டில் சீட்டு விளையாடிக் கொண்டிருந்தார். அப்பொழுது திடீரென்று அவருடைய கடைசி மகன் மூச்சுத் திணற அறைக்குள் ஓடிவந்து, "அப்பா! சீக்கிரம் வீட்டுக்கு வாருங்கள். ஒரு தந்தி வந்திருக்கிறது" என்றான். "தந்தி" என்ற வார்த்தையைக் கேட்டதும் அவ்வறையி லிருந்தோர் யாவரும் கலவரமடைந்தனர். கிராமாந்தரங்களில் தந்தி வருவது தினந்தோறும் நடக்கும் சம்பவமன்று. தந்திவந்தால், அவை கெட்ட சமாசாரங்களையே கொண்டுவருவது வழக்கம்.

விஜயமித்ரர் சீட்டைக் கீழேபோட்டுவிட்டு அவசரத்துடன் அங்கு ஓர் மூலையில் கிடந்த செருப்பை மாட்டிக்கொண்டு வீட்டுக்குச் சென்றார். தந்திச் சேவகன் வெகுதூரத்திலுள்ள ஸ்டேஷனிலிருந்து வந்ததால் சிரம மிகுதியினால் வாசலிலேயே நின்றுகொண்டிருந்தான். அவனைச் சுற்றி சிறுவர் சிறுமிகள் கூடியிருந்தனர். விஜயமித்ரர் தந்தி ரசிதில் கையெழுத்திட்டுவிட்டுக் கை நடுங்கத் தந்தியைப் பிரித்துப் படித்தார். உடனே அவர் முகம் சந்தோஷத்தால் மலர்ந்தது. வீட்டிற்குள் சென்று அங்கே மிகவும் கவலையுடன் உட்கார்ந்திருந்த தன் மனைவியிடம் "நல்ல சமாசாரம்" என்று சொன்னார்?

"என்ன அது?"

"விநோதன் வருகிறானாம்."

"விநோதனா? எங்கிருந்து? எப்போது இங்கே வந்து சேருவான்?"

"அதைப்பற்றி அவன் எழுதவில்லை." அவன் 'மோகம்ம' யிலிருந்து தந்திகொடுத்திருக்கிறான். நாளையதினம் வருவானென்று நினைக்கிறேன்."

விஜயஹரிமித்ரரும், விநோதவிஹாரிமித்ரரும் சகோதரர்கள். விநோதன் சிறுவனாயிருக்கையிலேயே அவன் பிதா காலஞ்சென்றார். விஜயஹரியின் மனைவியே விநோதனை வளர்த்தவள். விநோதன் கட்டுக்கடங்காதவனும், மூர்க்கத் தன்மையுடையவனும் ஆய்விட்டதால், சதா தன் தமையனுடன் சண்டையிட்டுக்கொண்டே யிருந்தான். ஒரு முறை கோபத்தால் தலைகால் தெரியாமல் விஜயஹரிமித்ரர், தன் தம்பியைச் செருப்பால் அடித்துவிட்டார். அன்றைக்கே விநோதன் வீட்டைவிட்டு ஓடிவிட்டான். ஒருநாள், இரண்டு நாள், ஒருவாரமும் சென்றது. விநோதன் திரும்பவில்லை. பிறகு விஜயமித்ரர் பத்திரிகைகளில் விளம்பரம் செய்ய ஆரம்பித்தார். அவனைக் கண்டு பிடித்துக் கொடுப்பவர்க்குப் பத்து ரூபாய் வெகுமதி கொடுப்பதாயும் எழுதினார். எல்லாம் வீணாயிற்று. விநோதன், சமாசாரமே கிடைக்கவில்லை. மூன்று வருஷங்கள் கழிந்தன. அவன் விஷயமே தெரியாததால் விஜயமித்ரர் தன் சிநேகிதர்கள் முகத்தில் விழிக்கவும் வெட்கமுற்றார்; இப்பொழுதோ காணாமற்போன தம்பி திரும்பிவருவதாய்த் தந்தி வந்திருக்கிறது. அந்த சந்தோஷத்தில் மிட்டாய் வகைகளெல்லாம் நிறையச் செய்து, வீட்டிலுள்ள துளசிக்கு நைவேத்யம்செய்து கிராமத்துக் குழந்தைகளுக்கெல்லாம் கொடுத்தனர். இந்த சந்தோஷ சமாசாரம் கிராமமெங்கும் பரவி, விநோதன் வருகைக்காக அவன் சிநேகிதர்கள் மகிழ்ச்சியுடன் காத்துக் கொண்டிருந்தனர்.

மறுநாள் மத்தியானம், விநோதன் வண்டி கிராமத்துக்குள் நுழைந்தது. விநோதன் கையில் பணப் பெட்டியுடன் இறங்கினான். வண்டிக்காரனும், வீட்டு வேலையாளும் சாமான்களைக் கீழே இறக்கி உள்ளே சேர்த்தனர். உள்ளே வந்ததும், விநோதன் மிகுந்த விநயத்துடனும் மரியாதையுடனும் தமையனையும் தமையன் மனைவியையும் நமஸ்காரம் செய்தான். குழந்தைகளை எடுத்து மடிமேல் வைத்துக் கொஞ்சினான். பிறகு தன் மதனியை அழைத்துப் பணப்பெட்டியை எடுத்து "இதை மிகவும் ஜாக்கிரதையாய் உன் இரும்புப் பெட்டியில் வைத்துவை மதனி!" என்று சொல்லிக் கொடுத்தான்.

அந்தப் பெட்டி மிகவும் கனமா யிருந்ததை மதனி கவனித்தாள். மிக்க மகிழ்ச்சியுடன் அதைப் பெட்டியில் வைத்துப் பூட்டிவிட்டு

"இவ்வளவு நாட்கள் எங்கு போயிருந்தாய் தம்பி" என்று கேட்டாள்.

"மோமம் ஹாரியில் இருந்தேன்"

"இப்பொழுதாவது எங்கள் ஞாபகம் வந்ததே."

"என் வேலையை விட்டுவிட்டு நான் எப்படி வருவது மதனி?"

"என்ன சம்பளம் வாங்கிக்கொண்டிருக்கிறாய்?"

"மாதம் 120 ரூபாய்."

"உனக்கு விவாகம் ஆய்விட்டதா?"

"விவாகமா? நான் ஏன் விவாகம் செய்து கொள்ளவேண்டும்?"

மதனி ஏதோ பரிகாசம் செய்ய வாரம்பித்தாள். அப்பொழுது உள்ளே வந்த விஜயபாபு, தன் தம்பி பிரயாணத்தால் களைத்திருப்பதையும் சீக்கிரம் போஜனம் சித்தம் செய்யவேண்டியிருப்பதையும் ஞாபகப்படுத்திப் பரிகாச வார்த்தைகளைச் சாப்பிடும் வரையில் நிறுத்தி வைக்கும்படி வேண்டினார்.

சாப்பாடு முடியும் சமயத்தில் சாயுங்காலமாய் விட்டது. சிநேகிதர்கள் வந்து கூடி விட்டனர். இவ்விரண்டு சகோதரர்களும் அவர்கள் நடுவில் உட்கார்ந்தனர். பெரியோர்களுக்கும் உறவினர்களுக்கும் நமஸ்காரம் செய்து, விநோதன் தோள்கள் நொந்துபோயின. சிலர் "உன்னிடமிருந்து சமாசாரமே கிடைக்காததால் இந்தப் பையன் என்னவாயினனோ என்று நினைத்திருந்தோம். நீ மிகவும் பெரியமனிதனாய் விட்டிருக்கிறாய். நூற்றிருபது ரூபாய் சம்பளம் இக்காலத்தில் எளிதில் கிடைப்பதல்லவே" என்றார்கள்.

அக்கிராமத்திலிருந்த சில பீ. ஏ. தேறின வாலிபர்கள் கல்கத்தாவில் 30 ரூபாய் சம்பளத்தில் ஏதாவது குமாஸ்தாவேலை கிடைக்காதா என்று பார்த்துக்கொண்டிருந்தனர். எம். ஏ-க்களில் சிலர் 50 ரூபாய் சம்பளத்தில் உபாத்தியாயர் வேலை கிடையாமல் ஏங்கினர். வயோதிகராகிய சக்ரவர்த்தி மஹாசாய் "இதெல்லாம் அதிர்ஷ்டம் அண்ணா! இவன் பீ. ஏ. பரீக்ஷை கூடத் தேறவில்லை" என்றார். அநேகர் அதைத் தாங்கிப் பேசினர். நவீனக் கொள்கைகளை உடைய ஒருவர் எழுந்து, "அது உண்மைதான். ஆயினும், அதனுடன் கொஞ்சம் புத்தியும் வேண்டும்" என்றார். அதற்கு மற்றொருவர், "நம் விநோதனுக்குப் புத்தி சாதுர்யம் உண்டென்பது நமக்கெப்பொழுதுமே தெரியுமே" என்றார். ஸர்க்கார் மஹாசாய், இத்தகைய முகஸ்துதியான வார்த்தைகளைச் சொல்லிவிட்டு பிறகு, "பால்யத்தில் மிகவும் மூர்க்கனாயிருந்தான் அனால் அநேகர் குழந்தைப் பருவத்தில் அப்படியிருந்து வயதாக ஆக மாறிவிடுகின்றனர். இந்த உன்னதமான வேலையில் இவன் மேன்மேலும் விருத்தி பெறுவானாக! அவன் வேலை உயர்ந்து சம்பளம் பெருகுமாக! இதுதான் நமது ஆசீர்வாதம்" என்றார். விஜயபாபு தன் தம்பியை அன்புடன் பார்த்த வண்ணம் "உங்கள் ஆசீர்வாதம் நிறைவேறுமாக!" என்றார்.

II

மறுநாட்காலை விநோதன் தன் தமையன் குழந்தைகளுடன் தாழ்வாரத்தில் உட்கார்ந்த வண்ணம், "நான் உங்களுக்காகக் கொண்டு வந்ததை நீங்கள் பார்க்கவில்லையே" என்றான்.

"என்ன கொண்டுவந்தீர்கள் சிற்றப்பா?" என்று குழந்தைகள் கூவினார்கள்.

விநோதன் ஒரு பெட்டியைத் திறந்து ஒரு குழந்தைக்கு ஒரு குரங்குப் பொம்மையையும், மற்றொன்றுக்கு ஒரு சிவப்புப் பந்தையும் மூன்றாவதற்கு ஒரு பெண் பொம்மையையும் கொடுத்தான். குழந்தைகள் சந்தோஷத்தால் குதிக்க ஆரம்பித்தன. விநோதன் தன் மதனியின் மலர்ந்த முகத்தைப் பார்த்து, "மதனி! உனக்கு என்ன கொண்டுவந்திருக்கிறேனென்று நீ கேட்கவில்லையா?" என்றான்.

"என்ன கொண்டுவந்திருக்கிறாய் தம்பி?"

"யோசித்துச் சொல்"

"என்னால் எப்படிச் சொல்ல முடியும்?"

"அது என்னவாயிருக்க வேணுமென்று விரும்புகிறாய்?"

"என்னவாயிருக்கவேணுமென்று விரும்புகிறேனா? சற்று யோசித்துச் சொல்கிறேன் இரு. குரங்கு வேண்டாம். ஏற்கெனவே வீட்டில் ஒன்றிருக்கிறது."

விநோதன் கோபம் கொண்டவன்போல் "மதனி! என் தமையனை ஒரு குரங்கென்கிறாயா?" என்று கூச்சலிட்டான்.

"இதோ பார். நான் யாரையாவது குறிப்பிட்டுச் சொன்னேனா? நீங்களாகவே சொல்

விக்கொண்டால் நான் என்ன செய்யமுடியும்?''

''உனக்கொரு பெண் பதுமை வேண்டுமென்று நான் நினைக்கவில்லை. ஏற்கெனவே வீட்டில் ஒன்றிருக்கிறது.''

''இல்லை. ஒரு மெழுகு பொம்மையை நான் விரும்பவில்லை. நீ ஒரு உயிருள்ள பதுமையை மணம்புரிந்து வருவாயானால் நான் மிகவும் சந்தோஷப்படுவேன் தம்பி!''

''நான் கொண்டுவந்ததைப் பார்த்தால் அதைவிட சந்தோஷப்படுவாய். இதற்காகவே தான் நான் ஊருக்குவர இவ்வளவு தாமதமாயிற்று. நான் இதற்காகப் பணம் சேகரித்துக் கொண்டிருந்தேன். என் பணப் பெட்டியை வெளியே எடு பார்ப்போம் மதனி!''

மதனி இரும்புப் பெட்டியைத் திறந்து பச்சைத் துணியால் உறை போடப் பட்டிருந்த பணப் பெட்டியை எடுத்து வெளியே வைத்தாள். விநோதன் சாவிக்காகத் தன் சட்டைப் பைகளிலும் ஒவ்வொரு ''கோட்''டிலும் தேடினான்; அகப்படவில்லை. பிறகு தன் ''டிரங்க்' குகளைத் திறந்து அவற்றிலிருந்த சாமான்களையெல்லாம் கீழே கவிழ்த்துத் தேடினான். அப்பொழுதும் அகப்படவில்லை. விநோதன் சோர்ந்த பார்வையுடன் ''நான் அதை வண்டியிலேதான் விட்டிருக்க வேண்டும்'' என்று சொல்லித் தலைமேல் கைவைத்துக்கொண்டு ஒரு ஆசனத்தில் சாய்ந்தான்.

மதனி அவனைத் தேற்றுவதாக, ''சாவி போனால் போகிறது- சாமான்கள் பத்திரமாய் நம்மிடமிருக்கின்றன. சாவி அகப்படாவிட்டால் பெட்டியை உடைத்துத்தான் திறக்க வேண்டும்'' என்றாள்.

விநோதன், வருத்தம் கலந்த சிரிப்புடன், ''நான் தினசரி செலவிற்காகக் கொண்டுவந்த பணங்கூட இதிலிருக்கிறது மதனி'' என்றான்.

''ஆனால் என்ன! உனக்கு வேண்டியதை எங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளேன்.''

''இந்தப் பெட்டியைக் கல்கத்தாவுக்குக் கொண்டுபோய்த்தான் சாவி போடவேண்டும். நான் எவ்வளவோ கஷ்டப்பட்டு சில ஆபரணங்களை உனக்காகச் செய்தேன். இப்பொழுது அவற்றை உனக்குக் காட்டக்கூட முடியாமலிருக்கிறது. அதுதான் என் மனதை மிகவும் வாட்டுகிறது.''

''அதைப்பற்றி நீ வருந்தப்படாதே! இன்னும் இரண்டு நாள் கழித்துத்தான் பார்க்கிறேன். நீ என்ன கொண்டுவந்திருக்கிறாய். அதைச்சொல்.''

''ஒரு ஜதை பொன்வளையல்கள் உனக்காகச் செய்திருக்கிறேன்.''

மதனி சந்தோஷமடைந்தாள். விநோதன் கொஞ்சங் கொஞ்சமாய் வருத்தம் தெளிந்து, ''உனக்கு ''டீ'' போடத் தெரியுமா? நான் காலைவேளையில் ''டீ'' குடிக்கிற வழக்கம்'' என்றான்.

மதனியின் மனம் ஆச்சர்யத்தால் நிறைந்தது. இவ்வளவு சீக்கிரத்தில் மைத்துனன் வருத்தம் தெளிந்து விட்டதே! ஆனால் அதைப்பற்றி அவள் அதிகமாய் நினையாமல் ''இங்கே அந்த இலை கிடையாதே தம்பி!'' என்றாள்.

''என்னிடம் கொஞ்சம் இருக்கிறது. கொதிக்கிற நீர், பால், சர்க்கரை, மூன்றுந்தான் வேண்டும்.''

சிறுவர்கள் ''சிற்றப்பா! நாங்களும் 'டீ' குடிப்போம். எங்களுக்கும் 'டீ' கொடு'' என்று சொல்லிக் குதிக்கலாயினர்.

சரியான ''டீ செட்டுகள்'' இல்லாததால் ஒரு கூஜாவில் வெந்நீர் கொண்டுவந்து கை நிரம்பத் தேயிலையை வாரி அதற்குள் போட்டு ஒரு கற்சட்டியால் மூடினார்கள்.

குழந்தைகளில் ஒன்று ஒரு கோப்பையையும் மற்றொன்று ஒரு கண்ணாடி ''டம்ளர்'' ரையும், இன்னொன்று வாயகன்றதோர் பாத்திரத்தையும் எடுத்துக்கொண்டு வந்தன. கூஜாவிலேயே பால், சர்க்கரை முதலியவற்றைப் போட்டு, அதன் பிறகு ஒரு வடிக்கட்டும் கருவியை கூஜாவின் வாயில் வைத்து ''டீ'' யைப் பாத்திரங்களில் மதனி வார்த்துக் கொடுத்தாள். ''டீ'' குழந்தைகளின் வயிற்றுக்குள் போய்ச் சேர்ந்ததோ என்னவோ தெரியாது, ஆனால் தரையில் ஏராளமாய்க் கொட்டிப் பிரவாகமாய் ஓடிக்கொண்டிருந்தது.

III

''அடுல்கோஷ்''என்று அடுத்த கிராமத்தில் ஒரு மிராசுதாரர் இருந்தார். அவருக்குப் பதினாலு வயதில் விவாகமாகாத பெண்ணொருத்தி இருந்தாள். அவர்களுடைய ஜாதியையே சேர்ந்தவனும், நற்குடும்பத்தைச் சார்ந்

தவனும், நல்ல அழகும் குணமும் உடையவனும், விவாகமாகாதவனுமாகிய விநோதவிஹாரி அப்பொழுதுதான் வந்திருக்கிறான். இக்காரணங்களை முன்னிட்டு எதுதான் நடக்காது?

அன்றையதினம் மத்தியானம் கோஷ்மஹாசாய் தன்மகளை விநோதவிஹாரிக்குத் கொடுப்பதாய் ஒரு மனுஷ்யனை விஜயமித்ரரிடம் அனுப்பினர். விஜயமித்ரர், அப்படி நடப்பதானல் தமக்கு மிகவும் சந்தோஷமாயிருக்குமென்றும் தன் குடும்பத்தாரையும் விநோதனையும் கேட்டுச் சொல்வதாயும் சொல்லியனுப்பினர். குடும்பத்தார் "நாங்கள் பெண்ணைப் பார்த்திருக்கிறோம். அவளைக் குறித்து ஒரு ஆக்ஷேபமும் எழுப்பமுடியாது. சீதனத்தைப்பற்றி அவர்கள் லோபத்தனம் செய்யாமலிருப்பார்களானல் இந்த மாதத்திலேயே முஹூர்த்தம் வைத்துவிடலாம்" என்றனர்.

இதற்குமுன் ஒரு பெண்ணை ஆயிரந்தரம் பார்த்திருந்தாலும், அவளை விவாகம் செய்துகொள்ளவேண்டியிருந்தால் இன்னொருமுறையும அவளைப் பார்க்கவேண்டியது அத்தியாவசியமாகின்றது. ஆகையால் சுப வேளையில் விஜயமித்ரர் தன் சிநேகிதர்கள் அநேகருடன் பெண்ணைப் பார்க்கச் சென்றார். கோஷ்மஹாசாய் அவர்களை மிக்க அன்புடன் வரவேற்றார். ஆனால் சீதனவிஷயம் தர்க்கத்துக்கு வந்தபோது ஆயிரம் ரூபாய்க்குமேல் கொடுக்க மறுத்துவிட்டார். இதைக் கேட்டதும் விநோதன் நண்பர்கள் சும்மாயிருக்க முடியவில்லை. "என்ன? வெறும் மெட்ரிகுலேஷன் மாத்திரம் தேறிவிட்டு எப். ஏ. க்கு வாசிக்கிற பையன் தகப்பனர்கூட ஆயிரம் ரூபாய் கேட்பாரே. கடைசியில் அந்தப் பையன் எதற்குதவுவான்? பதினைந்து ரூபாய் சம்பளத்தில் ஒருவேலை அவனுக்குக் கிடைக்குமானல் அதுவே அவன் அதிர்ஷ்டம்" என்றனர்.

அதற்குப் பெண்ணைச் சேர்ந்தோர் "ஆ! அது முழுவதும் வேற விஷயம். அவன் படித்து வருகிறான். அவனை சமுத்திரத்திலிருக்கும் மலை. எந்த அளவுக்கு அவனை வொருவாமென்னப்து நமக்குத் தெரியாது. ஒரு காலத்தில் அவன் ஹைகோர்ட் ஜட்ஜ் ஆனாலும் ஆகலாம். ஆனால் இறக்கைவிட்டு வெளியில் அயர்ந்துவிட்ட ஒருவரது விஷயம் அப்படியல்லவே. அவர் எவ்வளவு தூரம் விருத்திக்கு வருவாரென்பது ஒரு அளவுக்கு வந்துவிடுகிறது. அதை நீங்கள் ஒப்புக்கொள்ளுகிறீர்கள் அல்லவா?" என்றனர்.

இம்மாதிரி வாதங்களின் நடுவே, கோஷ்மஹாசாய் இரண்டாயிரம் ரூபாய்வரையில் உயர்த்தினர். அதற்கு விநோதனைச் சேர்ந்தோர் அதுதவிர "ஆயிரம் ரூபாய்க்குப் பெண்ணுக்கு நகைகளும், ஆயிரம் ரூபாய்க்குச் சீர்வரிசையும் செய்தாலொழிய ஒப்புக்கொள்ள முடியாது" என்றனர். அதற்குக் கோஷ் யோசித்துச் சொல்வதாய்ப் பதில்சொல்லிவிட்டார். சரிதானென்று ஒப்புக்கொண்டு அவ்விளைஞனின் நேயர்கள் விடைபெற்றுச் சென்றனர்.

மறுநாள் கோஷ்மஹாசாய் ரொம்ப கஷ்டப்பட்டுத் தொகையை இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாய்க்கு உயர்த்தியிருப்பதாய்ச் செய்தி கிடைத்தது. அத்துடன் திருப்தியடைந்தால் சரி; இல்லாவிட்டால் இதனுடன் இவ்விஷயம் நிற்கவேண்டியதே. அதற்கு விஜயமித்ரர் பணம் பெரிதல்லவென்றும் நல்ல சம்பந்தத்துக்கே ஆசைப்படுவதாயும் பதில் அனுப்பிவிட்டார். அவருக்குக் கோஷ்மஹாசாயிடம் சம்பந்தம் செய்யவேணுமென்றிருந்த ஆவலால் இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாயுடன் திருப்தியடைந்தார். இனி முகூர்த்தம் வைக்கவேண்டியதுதான் பாக்கி.

விநோதனைத் திருப்திப்படுத்துவது கஷ்டமாய் இருக்கவில்லை. ஆயினும் ஆயிரம் ரூபாய் பொறுமானமுள்ள ஆபரணங்களைப்பற்றி அவன் கேள்விப்பட்டபோது அவன் முணுமுணுக்க வாரம்பித்தான். "ஆயிரம் ரூபாய்க்கு என்ன நகை அகப்படும் மதனி! நான் உனக்குச் செய்திருக்கும் வளைகளே நூறு ரூபாய்க்குமேல ஆய்விட்டன. ஆயிரம் ரூபாய்க்கு நல்ல நகைகள் அகப்படா" என்முன்.

"அகப்படாதுதான். தற்காலத்துக்குச் சாதாரணமாய்ப் பார்த்துக்கொண்டால பிறகு நீ சம்பாதித்துப் பணம் சேர்த்தபின் அழித்துப் பண்ணிக்கொள்ளலாம்."

விநோதன் சற்று ஆலோசித்து, பிறகு, "பார், மதனி! இப்படிச் செய்வோம். அவர்களை நகை ஒன்றும் பண்ணவேண்டாமென்று சொல்லி ரூபாயை வாங்கிக்கொள்ளலாம். பிறகு நம்மிடமிருந்து ஆயிரம் ரூபாய் கூடப்போட்டு

* குடிக் குடு சௌரியம் மூன்றும் த்த்தது மெய்ப்பொருளாம்,

கல்கத்தாவில் நம் இஷ்டப்படி நகைகள் செய்வோம். நான் இப்பெட்டியைத் திறக்கக் கல்கத்தாவுக்குப் போகவேண்டும்'' என்றான்.

மதனி யோசித்துப் பார்த்து "நீ சொல்வது சரிதான். அப்படியே அவர்களிடம் சொல்லலாம். மருமகளைத் திரும்ப அவர்கள் வீட்டுக்கனுப்பும்போது நிரம்ப ஆபரணங்களால் அலங்கரித்தனுப்பலாம்."

"கல்கத்தாவுக்குப் போய் நகைகளைச்செய்து கொண்டு திரும்ப எவ்வளவு நாட்கள் ஆகும்?

"எவ்வளவு நாளா! நீ 'நெபுதோலா'வில் அக்கா அபலா வீட்டுக்குப் போய்த் தட்டானை வீட்டில் அழைத்து, வீட்டிலேயே செய்யச் சொன்னாயானால் ஏழு நாட்களில் ஆகிவிடும். அப்படித்தான் அவள் தன் நகைகளைச் செய்கிறாள்."

"கோஷ் சம்மதிப்பாரா!"

"ஏன் சம்மதிக்கமாட்டார்!" என்றவண்ணம் அவள் தன் கணவனை யோசனைகேட்கச் சென்றாள். விஜயமித்ரர் "அவர்கள் சம்மதியாமலிருக்க என்ன காரணமிருக்கிறது" என்றார் ஆனால் அவர் இதைப்பற்றி நன்றாக யோசித்த பின் "என் தம்பிக்கு வேலைகிடைத்திருந்தாலும் இல்லாவிட்டாலும் அவன் குணம் மட்டும் பழுதடைந்திருக்கிறது"என்று எண்ணிக்கொண்டார்.

அடல்கோஷ் சம்மதித்தார். ஆயினும் விவாக காலத்தில் அவர் தன் மகள் நகையின்றி மணையில் உட்காருவதை விரும்பாததால், ஏதோ சொற்பம் செய்துகொடுத்தார். அது தவிர பணத்தையும் கொடுத்தார். கடைசியில் எல்லாம் சேர்ந்து மூவாயிரம் ரூபாய் ஆயிற்று. விவாகம் ஆடம்பரத்துடன் நிறைவேறிற்று. மணமகள் பெயர் சரத்குமாரி. (தொடரும்.)

வஸந்த மந்திரம்

பதினோராவது அத்தியாயம்
லலிதை கல்யாணத்துக்கு உடன்பட்டதாகத் தெரிவித்தல்

மேற்சொல்லிய விஷயங்கள் நடந்த மறுநாள், சுல்தான் ஆமத்பாக்ஷா தன் கூடாரத்தில் உட்கார்ந்துகொண்டு தூதர்கள் வரவை எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றான். பக்கத்தில் ஒருவருமில்லை. வாசலில் இரண்டு சேவகர்கள் மட்டும் நிற்கின்றனர். சுற்றிலும் சேனைகள் தங்கியிருக்கின்றன.

அச்சேனைகளுக்கு, முன்னிருந்த உற்சாகமில்லை. கூலிக்குப் பாடுபடுகிறவர்களாகையால் காட்டினவிடத்துக்குச் செல்லுகிறார்கள். யுத்தமிடத்திற்குப் போகப் பலருக்கு இஷ்டம் பிறந்துவிட்டது. கொள்ளையடித்துச் சேர்த்து வைத்திருப்பதும் ஒவ்வொருவனுக்கும் அதிகமே. ஆகையால் யானுவம் பழகுகின்றவர்களும், யானை குதிரை பழக்குகின்றவர்களும், சுற்றிலும் காவல்காப்பவரும், முன்போல ஊக்கத்துடன் வேலை செய்யவில்லை. இவற்றையெல்லாம் கவனித்தவனுமல்லன் ஆமத்பாக்ஷா; லலிதையை அடையவேண்டுமென்ற ஒரே எண்ணத்துடன் அங்கிருந்தான்.

தூதர்களும் வந்தனர். அவர் வரவை யறிந்த மந்திரிப் பிரதானிகளும் வந்து கூடினர். ஆமத்பாக்ஷா தூதர்களிடமிருந்து கடிதத்தை வாங்கி முத்திரையை உடைத்துப் பின்வருமாறு வாசித்தான் :

சுகுணபுரி.

(ஸ்ரீராவணம்).—15.

சக்ரவர்த்தி சுல்தான் ஆமத்பாக்ஷா அவர்களுக்கு :—

என்னிடம் அடைக்கலம் புகுந்த லலிதாதேவியைக் காப்பாற்ற, யானும் எனது சேனைகளும் தயாராய் இருக்கிறோம். ஆனால் லலிதாதேவிக்கே நாங்கள் அவ்வாறு செய்வது இஷ்டமில்லை. உமது இஷ்டப்படி நடந்துகொள்வதாக அவள் என்னை எழுதும்படி சொல்லியிருப்பதால் அவ்விதம் எழுதியிருக்கிறேன். சண்டையின்றி, இனி உமது காரியங்களை முடித்துக் கொள்ளலாம் என்பது லலிதாதேவியின் அபிப்பிராயம். நீர் புறப்படும்போது உமது சேனையுடனேயே லலிதாதேவியும் புறப்பட்டு உம்மைப் பின்தொடர்வதாக எண்ணியிருக்கின்றாள்.

உமக்கு சகல சம்பத்தும் உண்டாவதாக ......அரசன் உத்தரவின்படி....மந்திரி."

பாஷா படித்து முடித்ததும் "சரி! சரி!" என்று ஆர்த்து, ஆனந்தக்கூத்தாடினான். "நான் அப்படியே எண்ணினேன். அவள் புத்திசாலி; இவ்வளவு நஷ்டமும் அந்தப் பிரதாபசிங்கனால் ஏற்பட்டது. அவன் சுத்தவீரனானாலும் முரடன். ஏன் வீணில் அத்தனை ரஜபுத்திரர்களைப் பலிகொடுக்கவேண்டும்! புத்தியற்றவன்!—மந்திரி, இந்த சந்தோஷ சமாசாரத்தை நமது சேனைகளுக்குத் தெரியப்படுத்துவதுடன் ஒவ்வொரு உத்தியோகஸ்தனுக்கும் சிப்பாய்க்கும் மூன்று மாதத்து சம்பளம் இனாமாகக் கொடுக்கப்படும் என்றும் பறையறைவிப்பாய்" என்றான்.

ஒரு நொடியில் சேனைக்கூட்டமெல்லாம் 'ஓ'வென்று அரற்றினர். அரசன் கல்யாணத்தினும் தங்களுக்கு மூன்று மாதச் சம்பளம் ஒரே அடியாய்க் கிடைத்ததே அதிக சந்தோஷத்தை உண்டுபண்ணிற்று. "வாழ்க! வாழ்க! அரசன் வாழ்க!" என்று போற்றினர் ஒருபுறம். "நல்லகாலம்! நல்லகாலம்! ஊருக்குப் போகலாம்—ஊருக்குப் போகலாம்!" என்றனர் ஒருபுறம். "நமது அருமை மக்களையும் பெண்டு பிள்ளைகளையும் காணலாம்! காணலாம்" என்று சந்தோஷ மடைந்தனர் ஒருபுறம். "மஹாராஜியாய் நெடுழிகாலம் வாழட்டும் அந்த லலிதாதேவி! நம்மைக் காப்பாற்றினாள் அதுவே போதும்—சிறந்த புத்திசாலி: அவள் பெயர் நெடுநாள் நிலைபெறட்டும்!" என்று லலிதையைப் புகழ்ந்தனர் ஒருபுறம். இவ்விதமாய் சேனைக்களமெங்கும் ஆட்டமும் பாட்டமுமாய் ஆரவாரம் மிகுந்தது.

ஆமத்பாஷா மறுதினமே கல்யாணத்துக்கு எப்பொழுது சௌகரியமாய் இருக்கும் என்பதை அறியும்பொருட்டு மறுபடி வீரபத்ரராஜனுக்குக் கடிதம் எழுதி யனுப்பினான். அதனுடன் அவ்வரசனுக்கும் அவன் மகளுக்கும் லலிதா தேவிக்கும் தக்கபடி ஆடையாபரணங்களைப் பரிசனுப்பினான். அதற்குப் பதிலாய் வீரபத்திரனும் தக்க மரியாதையுடன், வஸந்தபுரியிலேயே முகூர்த்தம் நடத்தலாமென்றும், இப்பொழுதே லலிதை சுல்தானுடன் புறப்பட்டுவர சித்தமாய் இருப்பதாயும் ஆனால் அவள் அச்சமயத்தில் கௌரி விரதம் அனுஷ்டிப்பதால் அது முடிந்த பின்னரே முகூர்த்தம் வைத்துக்கொள்ள வேண்டுமென்றும் பதிலுரைத்தான்.

அன்றிரவில் லலிதையின் அறையில், லலிதையும் புஷ்பவல்லியும் நரேந்திரனும் ஒரு சிறு சபை கூடினர். லலிதை நரேந்திரனை நோக்கி "நரேந்திரா! நாம் என்னவோ இவ்விடத்தைவிட்டு வெளிக்கிளம்ப வேண்டியது தான். கல்யாணம் நடந்தாலும் நடக்கும், இல்லாவிடினும் இல்லை. அது தெய்வச் செயல். இப்பொழுது என்னவோ நடப்பதாகவே வைத்துக் கொள்வோம். அதற்குத் தக்க சில ஏற்பாடுகள் செய்யவேண்டும். என்னைச் சுற்றிலும் 25 ரஜபுத்திரர் பெண் வேஷத்துடன் எனக்குப் பாங்கிகள்போல் என்னை எப்பொழுதும் இடைவிடாமல் காத்திருக்கவேண்டும். அந்த சுல்தான், மன்மதனுடைய வலையில் சிக்கி மயங்குவதால் என்ன சொன்னாலும் சரியென்பார். ஆகையால் கல்யாணம் நடப்பதாய் இருந்தால் நமது ரஜபுத்திர மாதிரியாய் நடத்தப்படவேண்டுமே யன்றி மஹமதிய சம்பிரதாயத்தை அநுசரிக்கக்கூடாதென்பதையும் தெளிவாய்ச் சொல்லி விடுவோம். அவரும் சம்மதிப்பார் என்பதற்குச் சந்தேகமில்லை. இவற்றையெல்லாம் தெளிவாய்ச் சொல்லி அவருடைய உறுதிமொழி வாங்கிவருவதற்காக நீ என் பொருட்டு ஒரு பாங்கிபோல் வேஷம் தரித்து அவரிடம் தூது போகவேண்டும்.

"இவற்றை யெல்லாம்விட முக்கியமான விஷயம் மற்றொன்று; நீங்கள் இருவரும் முகுந்தனுடைய குழந்தைகள். அவனிடமே இரசாயனசாஸ்திரம் கற்றவர்கள். மேலும் நன்றாய் சிற்பசாஸ்திரம் தெரிந்தவர்கள். இக்கல்யாணத்திற்குள் சிற்சில ஆபரணங்களும், கிரீட, ஹார, கேயூராதிகளும், பட்டாடைகளும் செய்யவேண்டி யிருக்கின்றன. அவை எவ்வாறு செய்யவேண்டு மென்பதை உங்களிருவருக்குமே சொல்லுகிறேன். அதற்கு வேண்டிய சாமான்களைச் சேகரித்துக் கொள்ளவேண்டும். எல்லாக் காரியத்தையும் சரிவர நடத்துவது, ஏ நரேந்திரா உன்னைச் சேர்ந்தது!

"என்னைக் காப்பாற்றிய நீ, நான் சொல்லுகின்றபடி இன்னும் சிலநாள் எனக்கு உதவி

சுவரை வைத்துக்கொண் டல்லவோ சித்திரம் எழுதவேண்டும்.

புரிய வேண்டும்—" என, நரேந்திரன் கண்களில் நீர்வழிய "காயே! சிலநாள் என்ன! என் உயிர் உள்ளளவும் உங்களுக்கு உதவி செய்ய நாங்கள் கடமைப்பட்டிருக்கின்றோம். தாங்கள் சொல்வதைப் பார்க்கால் இக்கல்யாணம் எளிதில் முடிவதாய்க் காணவில்லை. உங்கள் மனதில் உள்ள இரகசிய எண்ணங்களையும் யான் அறிய விரும்பவில்லை. உங்கள் இஷ்டப்படி எப்பொழுதும் நடந்துகொள்ள சித்தமாய் இருக்கின்றேன். இவ்வுடல் இராஜ காரியத்துக்குப் பிரயோஜனப்படாமல் இனி எதற்குப் பிரயோசனப்படப்போகின்றது? நாளையதினமே இரஜபுத்திர வீரர்களைத் சேர்ந்தெடுக்கிறேன். பிறகு பெண்வேஷம் பூண்டு, பாக்ஷாவிடம் தூது போய்வருகின்றேன். உமது திருஉள்ளத்தில் கொண்டிருக்கும் எண்ணத்தை ஈசன் பூர்த்தி பண்ணட்டும். தாங்கள் புறப்படும்போது எந்த இரஜபுத்திரன்தான் கூடவரமாட்டேன் என்னப்போகிறுன். இந்த பாக்ஷாவிடம் மட்டுமின்றி யமபுரத்துக்கும் உம்மைத் தொடர்ந்து வரத் தயாராய் இருக்கிறோம். நீங்கள் கொஞ்சமேனும் யோசிக்க வேண்டியதில்லை" என்று வணங்கினன்.

வணங்கிய நரேந்திரனை அன்புடன் வாழ்த்தி "நரேந்திரா! உன்னுடன் சொல்லாமல் நான் ஒன்றும் செய்யப்போகிறதில்லை. ஆயினும் இப்பொழுது என் எண்ணம் என்மனத்துள் இருக்கட்டும். நாளை நீ அந்தப் பாக்ஷாவிடம்போய் வந்ததின்மேல் எல்லாவற்றையும் யோசிப்போம். இராஜராஜேஸ்வரி! எனக்குத் தக்கபலம் கொடுப்பாயாக! தேகம்தளர்ச்சியடையும் காலம் போய்விட்டது. இனி இரஜபுத்திரியின் மனோதிடம் எவ்வாறிருக்கவேண்டுமோ அவ்வாறிருக்கும்படி கிருபைசெய்வாயாக. எல்லோரும் கூடி தெய்வத்தைத் தொழுவோம்" என்றுள்.

மூவரும் கடவுளைத் தியானித்து பின் தத்தம் அறைக்குப் பிரிந்தனர்.

பன்னிரண்டாம் அத்தியாயம்

பாக்ஷா வஸந்தபுரியை அடைதல்

ஆமதபாக்ஷாவின் சேனை வஸந்தபுரியை நோக்கிச் செல்லுகின்றது. உதயபுரியை எதிர்க்க வந்த சேனையா இது? அச்சேனையை அப்பொழுது பார்த்தவர், இப்பொழுது திரும்பி வரும் சேனையைப் பார்ப்பாராகில் பரிதபிப்பார்கள். யானை, குதிரை, காலாட்களுள் பாதிக்குமேல் குறைந்துவிட்டன. ஆனல் ஆரவாரமும் சந்தோஷமும் முன்னிலும்பதின்மடங்கு அதிகம். தலைவர்களுள் காணப்படாதவர்கள் பலர். மஹமத்கான் வீரோராபுரத்து யுத்தத்தில் மடிந்தான். மீரான்சாகிப், யுத்தத்துக்குப் பிறகு எதிரிகளின் சினேகிதர்கள் கையில் அகப்பட்டு, ஜோதிபுரிக்குக் கொண்டு போகப்பட்டான். தளகர்த்தர்களுள் மாண்டவர் கணக்கில்லை.

முன் லிந்து தேசத்திலிருந்து புறப்பட்டு வந்தபோது வழியில் சேனை தங்குவதற்கும், சாப்பிடுவதற்கும், மற்றச் சௌகரியங்களுக்கும் மீரான் சாகிப் வேண்டியபடி நேராய் ஏற்பாடுகள் செய்திருந்ததுபோல் இப்பொழுது செய்ய ஆட்களே கிடையாது. நினைத்த விடத்தில் சேனை இறங்கிவிடும். அவரவர்கள் இஷ்டப்படி வேண்டியதைச் சம்பாதித்துக் கொள்ளவேண்டியதுதான். பணம் மட்டும் ஏராளமாய் ஒவ்வொருவரிடமும் இருந்தது. ஆகையால் தாராளமாய்ச் செலவுசெய்து வழியிலுள்ள ஜனங்களிடத்தில் வேண்டிய வஸ்துக்களை வாங்கிக்கொண்டனர் சேனையில் உள்ளோர். சிலர் பணம் செலவிடாமலே தமது வலிமையால் வேண்டியவற்றை பலாத்காரமாய்ப் பிடுங்கிக்கொண்டனர்.

வழியிலுள்ள கிராமங்களும், காடு, வயல் வனந்தரங்களும் பாழாய்க்கிடந்தன. பருவ மழைபெய்த பின்னும் உழுவோரும் விதைப்போரும் கிடையாது. சண்டைக்கு பயந்தும், கொள்ளைக்கு பயந்தும், நாட்டைவிட்டு ஓடியவர் பலர். ஆண்பிள்ளைகள் சண்டையில் மாண்டுபோகவே பெண்டிர், உழைத்துப் பிழைக்கமுடியாமல், குழந்தைகளுடன், காடு வயல்களை விட்டுவிட்டு, தேசாந்தரம் போய் விட்டனர். வழியில் இருபுறமும் காடுகளிலும், வயல்களிலும், மலைச்சாரல்களிலும், நதிக்கரைகளிலும், புல்லும், எருக்கும், நெருஞ்சியும், வளர்ந்து புதராயின. தப்பி முளைத்த பயிர்களையும் விருத்தியாக வெட்டாமல் மேற்சொன்ன களைப்பூண்டுகள் மடித்தன.

யுத்தத்தால் வரும் கேடுகள் இம்மட்டோ! கூட்டம் கூட்டமாய்த் திருடர்கள் கிராமங்களையும் நகரங்களையும் கொள்ளையடித்தனர். இரவில் சேனையிலுள்ள சிப்பாய்களிடமிருந்

கே பணத்தைக் கவர்ந்து போய்விடுவார்கள் என்றால் அவர்களின் சாமர்த்தியம் எவ்வாறிருக்க வேண்டுமென்று நீங்களே மதிக்கலாம்! திருடர்கள் அகப்பட்டால் ஒரே அடியாய் அவர்களை ஆமத்பாக்ஷா கழுவில் ஏற்றிவிடுவான்.

இவ்வாறு அலங்கோலமாய் இருக்கும் நாடுகளைச் சீர்திருக்கம் செய்து கொண்டே வஸந்தபுரியை நோக்கிச்சென்றான் ஆமத். யுத்தத்தில் நேராய்ச் சண்டை செய்து பக்தியுடன் உழைக்க தலைவர்களை கிராமங்களுக்கும் நகரங்களுக்கும் அதிபதிகளாய் ஏற்படுத்தி அவ்விடங்களைச் சீராய் பரிபாலனம் செய்து வரும்படி உத்தரவளித்துச் சென்றான். ஆயினும் நாடுகளெல்லாம் நிலைகுலைந்திருந்தன.

இச்சேனையில் புதிதாய்க் காணப்படும் பெண்டிர் பலர். அவர்களுக்கென்று தனியாய் ஒரு சேனையைக் காவல் வைத்திருந்தான் சுல்தான். தனது வலது புறத்தில் எப்பொழுதும் தயாராய் அலங்கரித்து வைத்துக் கொண்டிருந்த யானையை லலிதா தேவிக்குக் கொடுத்தான். அவளைச் சுற்றிலும் ஆஜானுபாஹுக்களாய் அழகு நிரம்பிய இராஜஸ்திரீகள் முப்பதுபேர். உண்மையாய் அவர்களுள் ஐந்துபேர்களே ஸ்திரீகள். மற்றவர் இரஜபுத்திர வீரர். ஒரு நிமிஷமேனும் அந்த 30 பேர்களும் லலிதையின் பக்கத்தைவிட்டு அகல்வதில்லை. அந்த ஸ்திரீகளோடு கூடவரும் நெயவாளிகளும் பூத்தொடுப்பவர்களும், பரிசாரகர்களும் பலபேர். பொன்னாலும், நவரத்தினங்களாலும் வேலை செய்துகொண்டே சேனைகளுடன் வருகின்ற சிறந்த கம்மாளர்கள் சிலர். இம்மாதிரி லலிதையைச் சுற்றிலும் அவளிஷ்டப்படி ஆடைகளையும் ஆபரணங்களையும் செய்து கொடுக்கத் தொழிலாளிகள் பலர் வந்து சேர்ந்தனர். முக்கியமாய் லலிதைக்கு வேண்டியவற்றை நரேந்திரனும் புஷ்பவல்லியும் தமது கூடாரத்தில் ஒருவருடைய உதவியும் இன்றித் தாமாகவே செய்துகொடுப்பார்கள். சில நாட்களில் சுலோசனனும், சிலநாட்களில் சித்திரக்கிரீவனும், சிலநாட்களில் இருவரும் உதவிக்குச் செல்லுவார்கள்.

ஆமத்பாக்ஷாவுக்கு இராஜங்க விஷயம் கவனித்த சமயம் போக, மற்றக் காலமெல்லாம் லலிதையின் தியானமே தவிர வேறில்லை. அவள் மனதைத் திருப்திசெய்யும் பொருட்டு, தான் ஜயித்த இராஜபுத்திர நாடுகளுக்கு இராஜபுத்திர அரசர்களையே நியமித்தான். அவர்களுக்கு உடனே உபயோகமாகும்படி ஏராளமான திரவியங்களையும் தந்தான். மஹமதியப் பிரபுக்களுக்கு, இக்காரியங்கள் சரியாய்த் தோன்றவில்லையென்றாலும், அதி புத்திசாலியாகையால், அவர்களுக்குத் தக்க ஸமாதானம் சொல்லி தன்னைச் சூழ்ந்தோர் ஒருவருக்கும் அதிருப்தி ஏற்படா வண்ணம் ஜாக்கிரதையாய் கவனித்துக்கொண்டான்.

அரசன் பக்கத்தில் முக்கிய சேவகன் கவுஸ். தன் உயிரைக் கொடுத்து சுல்தானைக் காப்பாற்ற முயன்றபடியால் அவனிடத்தில் அதிக அன்பு வந்துவிட்டது அரசனுக்கு! ஆனால் கவுஸ் இனி சண்டைக்குப் போக இயலாது. ஒரு கால் நொண்டியாய் விட்டது. "இனி ஊருக்குப் போனவுடன் மங்களாபாயை மணம் செய்துகொண்டு என் பெற்றோர்களைப் போற்றி ஒருவருடைய தொந்தரவும் இன்றி கடவுளுக்குத் திருப்தியுண்டாகுமாறு நல்வழியில் நடந்துகொள்வேன்" என்று தினமும் பிரதிக்கினை செய்துகொள்ளுவான். தன்னுடன் பல சமயங்களில் கூடயிருந்து, பல ஊர்களுக்கும் கூடவந்து சிநேகமாய் இருந்த மல்லிக் மகமத் இறந்துபோய் விட்டானே யென்று அவனுக்கு சிற்சில சமயங்களில் துக்கமுண்டாகும். "சண்டை, சண்டையென்று அலைவானே யன்றி நமது சிப்பாய் நல்லவன்: எதிரிகளைக் கொல்லவேண்டுமென்ற ஒரு தப்பெண்ணம் தவிர வேறு குற்றமான எண்ணங்களை நினைக்கவே மாட்டான்" என்று அடிக்கடி தன் சிநேகிதனைப்பற்றி நினைப்பான்.

கவுஸ்சாகிப் எத்தனை சந்தோஷத்தோடு ஊருக்குப் போய்ச் சேரவேண்டுமென்று எண்ணினானோ, அதே மாதிரி தத்தம் ஊர் சேரவேண்டுமென்று எண்ணிய வீரர்கள் எத்தனையோ பேர். ஆகையால் "இன்னும் இரண்டு நாளில் வஸந்தபுரி போய்ச் சேர்ந்து விடுவோம்" என்ற சமாசாரம் கேட்டதும் சிப்பாய்களுக்கு உண்டான சந்தோஷத்துக்களவில்லை. வஸந்தபுரி சேரவும், சேனை கலையவும், தமது ஊர்களுக்குச் செல்லவும் மறுபடி சுல்தான் கல்யாணத்துக்கு சரிப்பட்டால் வஸந்தபுரிக்கு வரவும்—ஆஹா, என்ன

சுவாமி வரம் கொடுத்தாலும், முன்னடியான் வரம் கொடான்.

ஆனந்தம், என்ன ஆனந்தம்—குதித்தனர், புரண்டனர், எழுந்தனர், ஆடினர், பாடினர்.

வஸந்தபுரியை நெருங்கநெருங்க லலிதைக்கு மட்டும் கவலை அதிகரித்தது. உண்மையாகவே அவளுக்கு இக்கலியாணத்தில் விருப்பமென்று நீங்கள் எண்ணுகின்றீர்களா? "ஆயினும் எல்லாம் ஈசன் செயல்! ஆனாலும் ஆகலாம்! நரேந்திரா! ஈசன் என்ற ஒரு உண்மைப்பொருள் உண்டாயின், ஏன் அவர் இவ்வாறு வதைக்க வேண்டும்? அவர் இல்லையென்று எண்ணவோ இடமில்லையே! இராஜராஜேசுவரியும் இக்காலத்தில் பொய்யானாளா! என் திறத்தாரைக் கருவறுத்து என்னையும் இக்கோலம் செய்து......ஆஹா! ஈசனும் இருக்கின்றானா: நரேந்திரா! ...நீ எத்தனையோ வேதாந்தம் பேசுகிறாயே..." என்பாள்.

நரேந்திரன் "தாயே! பூர்வஜன்மத்தில் நாம் செய்த கர்மத்தின் பலன் இது! பொறுத்துக்கொள்ளும், தாயே! இன்னும் ஈசன் நம்மை எவ்வெவ்விதமாய் ஆட்டுகின்றானோ அவ்விதமெல்லாம் ஆடித்தீரவேண்டும்! இவ்வுலகமே நாடகசாலை: தாங்கள்மட்டும்—

'ஸர்வ தர்மான் பரித்யஜ்ய, மாமேகம் சரணம் வ்ரஜ' என்று பகவான் சொன்னபடி அவரையே சரணமாக அடையுங்கள். இவ்வாறு தயிக்காதீர்! ஈசன் காப்பாற்றுவான்" என்பான்.

"அப்பா, நரேந்திரா, இன்னும் இரண்டு நாளில் அப்பாழ்நகர் சேர்ந்துவிடுவோம் என்கிறார்களே. அங்கே நாம் செல்லவும், அங்குள்ள துருக்க ஸ்திரீகளும், இறையுண்ட நமது இராஜஸ்திரீகளும் நம்மைக் கண்டு சிரிக்கவும் எவ்வாறு சகிப்பதப்பா?"

புஷ்பவல்லி "அம்மா தாங்கள் ரஜபுத்திரியென்பதைமறக்கக்கூடாது. சுகமும் துக்கமும் மனிதர்க்கு வராமல் தடுக்க முடியுமா? சுகம் வந்த காலத்தில் அனுபவித்து சந்தோஷப்படுவதுபோல், துக்கம் வந்த காலத்து அதைப் பொறுத்துக்கொண்டு கஷ்டப்படவேண்டியது தானே. தமது அன்னையை நினைத்துக்கொள்ளுங்கள்—" என்பாள்.

இவ்விதமாய் ஏங்கியேங்கி லலிதை துரும்பாய் இளைத்துப்போய்விட்டாள். இிற்பதும் நடப்பதும் அரிதாய்விட்டது. சில சமயங்களில் லலிதைக்குப் பைத்தியம் பிடித்துவிடுமோ என்றுகூட பயப்படுவார்கள் புஷ்பவல்லியும் நரேந்திரனும். ஆயினும் செய்வதென்ன? தனது தகப்பனார் கற்றுக்கொடுத்த ரசாயன சாஸ்திரத்தை அநுசரித்து லலிதைக்குத் தக்க உணவும் ஔஷதங்களும் கொடுத்து வந்தான் நரேந்திரன். ஒன்றும் பயன்படவில்லை. தேகத்தில் நோய் உண்டானால் மருந்து கொடுக்கலாம். மனோவியாதிக்கு யார் மருந்து செய்ய வல்லவர்! படிப்படியாய் உடல் முகம் எல்லாம் வெளுத்து, யந்திரம் அமைத்த பாவைபோல் தோன்றினாள்.

மெல்ல மெல்ல சேனை வஸந்தபுரியை அடைந்தது. அரசனை எதிர்கொண்டு வந்தனர் நகரத்தார். அவர்களுக்கு முன்வந்தார் அனந்தபட்டர். அரசனுக்கு நல்வரவு கூறினர். அரசன் சந்தோஷத்துடன் அவரை க்ஷேம சமாசாரம் விசாரித்தான். ஊரெல்லாம் அலங்காரம் செய்திருக்கின்றார்கள். தெருக்களை வலம் வந்து கோட்டையுட் புகுந்தனர். மல்லப்பனும் இருநூறு தோழிகளும் லலிதையை அழைக்க வந்தனர்.

அரண்மனையுள் நுழைந்து சுல்தான் வடபுறம் பார்த்தான்; சுவர்ண ஸரஸு சாயங்கால வெயிலில் ஜ்வலிக்கின்றது. பருவ காலங்களில் பெய்த மழையால் ஏரி நிரம்பி, தங்கத்தை உருக்கிவிட்டதுபோல் தோன்றுகின்றது ஏரி நீர். நாற்புறமும் மரங்கள் துளிர்த்துப் பசேல் என்று தோன்றுகின்றன. நடுவில் உள்ள தீவுகள் முக்கால் வரிசை ஜலத்தில் மூழ்கிக் கொஞ்சமே தென்படுகின்றன. தோட்டத்தில் செடிகளையும் கொடிகளையும் சீர்படுத்துவார் இல்லாமையால் அவை மிதமிஞ்சி, எல்லை கடந்து, நாற்புறமும் பரவி வளர்ந்து மதாளித்திருக்கின்றன. இவற்றைக் கண்ட ஆமத் பாக்ஷாவுக்கு தான் முன்னாள் ஏரியில் போனதும், விசித்திரவீரியர் பாடியதும், தான் லலிதையிடம் ஈடுபட்டதும், அனந்தபட்டரைத் தூதுவிட்டதும் — எல்லாம்—ஞாபகத்துக்கு வந்தன. சுமாலியும் அனந்தபட்டரும் பக்கத்தில் நின்றனர். அவர்களைப் பார்த்து பாக்ஷா புன்சிரிப்புடன் "இத்தனை நாள் ஆயிற்று. லலிதையை அழைத்து வர" என்று சொல்லிஅவர்களுடன் சில இராஜாங்க சமாசாரம் பேசிய பின்னர் அவர்களுக்கு விடைகொடுத்தனுப்பிவிட்டுத் தான் பூஞ்சோலையில் புகுந்தான்.

மல்லப்பனும் தோழிகளும் எதிர்கொண்டு வந்தழைக்க, லலிதையும் முப்பது தோழிமார்களும் அந்தப்புரத்துள்புகுந்தனர். லலிதாதேவி நடக்கமாட்டாமல் நடந்து செல்ல, இரு புறமும் வந்து நின்ற அந்தப்புர ஸ்திரீகள் பரிதாபப் பட்டனர். 4,5 பேர் ஆலத்தி எடுத்தனர். சிலர் திருஷ்டி கழிக்க தீபத்தைச் சுற்றினர். சிலர் அரிசியையும் பருப்பையும் நாற்புறமும் வாரி வாரி இறைத்தனர். லலிதை இவற்றையெல்லாம் கவனியாமல் கண்களில் நீர்ததும்ப தனது மாடத்துக்கு அழைத்துச் செல்லும்படி கேட்டுக்கொண்டாள்.

லலிதையின் வாடிய முகத்தையும் வெளுத்த உடலையும் கண்ட சிலர் "ஐயோ பாவம்! என்ன கஷ்டம்! இராஜஸ்திரீகளுக்கு" என்றனர். சில பெண்கள் "இந்த உயிர்ப்பிணத்தையடையவா நமது சுல்தான் இத்தனை பிரயாசைப்பட்டான்! பக்கத்தில் செல்லும் தோழிகள், இவளைவிட 100 பங்கு தேவலையே" என்றார்கள். சிலர் "இவளாவது பிழைப்பதாவது; ஏதோ சுல்தானுக்குப் பைத்தியம்" என்றார்கள். மற்றவர் "நாளடைவில் எல்லாம் சரியாய் விடும், உப்பும் சோறும் உண்டு, ஏரிக்காற்று வாங்கினால் எல்லா வியாதியும் சொல்லாமல் ஓடிவிடும்" என்றார்கள். மற்றும் சிலர் "இப்பொழுதே இப்பெண் இத்தனை அழகாய் இருக்கும்போது, நல்ல காலத்தில் எத்தனை நன்றாய் இருந்திருக்கவேண்டும்" என்றனர்.

"அன்னைமார்களே! எனக்கு இவளைத் தெரியும்; குழந்தையா யிருக்கும்போது பார்த்திருக்கிறேன்; இவளது அழகும் புத்தியும் சொல்லிமுடியாது" என்றாள் ஒருவள்.

"என்செய்வது: விதிப்படி நடக்கின்றது. போவோம் வாருங்கள். நாளையதினம் போய்ப் பேசிவருவோம்" என்றாள் மற்றொருவள்.

இப்படி ஸ்திரீகள் தத்தமிஷ்டப்படி பேசிக்கொண்டு நிற்கவே, மல்லப்பன் புன்சிரிப்புடன் இப்புறமும் அப்புறமும் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டு லலிதையை அவளுடைய மாளிகைக்கு அழைத்துச் சென்றான். தேகத்தின்மேல் படிந்த ஆடையுடன் முப்பது ரஜபுத்திரிகளும் உடன் சென்றனர். மாளிகையண்டை நெருங்கியதும், மல்லப்பன் "தாயே! இது தமது கிருஹம். தங்களுக்கு வேண்டிய சாமான்கள் எல்லாம் நிறைந்திருக்கின்றன. இன்னும் தேவையானவை உண்டெனில் அடியேன் காத்திருக்கின்றேன்" என்றான்.

புஷ்பவல்லி "சரி! வேண்டுமானால் சொல்லியனுப்புகிறோம்" என்று சொல்லி மாளிகையுள் லலிதையை அழைத்துச் சென்றாள்.

அவ்வழகிய மாளிகை மற்ற மாளிகைகளைவிட வேறாயிருந்தது. முன்னர் அரசனே தனது உறைவிடமாய் வைத்துக்கொண்டிருந்த இடம் அது; வேண்டிய நாற்காலிகளும் கட்டில்களும், படங்களும் நிறைந்து கிடந்தன. அவையெல்லாம் லலிதைக்கு ஒரு பொருட்டாய்த் தோன்றவில்லை. அம்மாளிகையே தனது சிறையென்று தெளிவாய் அறிந்தாள். உள்ளே நுழைந்ததுதான் தெரியும்; துக்கம் மேலிட்டு மூர்ச்சையானாள்.

சிறுவர்களுக்கான பக்கங்கள்

CHILDREN'S PAGES

ஒரு பட்டணத்தில் தையற்காரன் ஒருவன் இருந்தான். ஒரு நாள் இராத்திரி அவன் வீட்டுக்கு யாரோ ஒருத்தி வந்து, "நீ ஊசிநூல் எடுத்துக்கொண்டு என் வீட்டுக்குவா, அங்கே வேலை அதிகமாயிருக்கிறது, நிரம்பக் கூலி கிடைக்கும்," என்று அவனைக் கூப்பிட்டாள்.

அதற்குத் தையற்காரன் "உன் வீடு எங்கே இருக்கிறது" என்று கேட்டான்.

அவள் "ஓ! அது உனக்குத் தெரியக்கூடாது. ஆகையால் உன்னைக் கண்ணைக்கட்டி அழைத்துக்கொண்டு போகவேண்டும்; அதற்குச் சம்மதமானால் சொல்லு" என்று இரண்டு மூன்று வராகனை எடுத்து அவன் கையில் கொடுத்தாள். அதற்கு அவன் சம்மதிக்க, அவளும் கண்ணைகட்டிப் பல தெருக்களுக்கு அப்பால் ஒரு வீட்டுக்குள்ளே அழைத்துக்

கொண்டுபோய்க் கண்கட்டை அவிழ்த்துவிட்டாள்.

பிறகு, தலைபோன ஒரு பிணத்தை அவள் காண்பித்து அதன் தலையை உடலோடுவைத்துத் தைக்கும்படி சொன்னாள். தையற்காரன் அப்படியே செய்ய, அவளும் அவனுக்கு வேண்டியமட்டும் கூலிகொடுத்து, மறுபடியும் கண்ணைக்கட்டி, அவனுடைய வீட்டில் கொண்டுவந்து விட்டாள்.

மறுநாள் அந்தத் தையற்காரன் நியாயாதிபதியிடத்திற்குப் போய் "ஐயா, இந்த ஊரில் ஒரு கொலை நடந்திருக்கிறது. கொலை செய்தவர்கள் அந்தக் கொலையை மறைத்து வியாதியினால் இறந்துபோன பிணத்தைப் புதைக்கிற மாதிரி அந்தப் பிணத்தைப் புதைக்கப் போகிறார்கள்" என்று இராத்திரி நடந்த சங்கதியைச் சொன்னான். அதற்கு நியாயாதிபதி "உன்னைக் கண்ணைக்கட்டி அல்லவா அநேக தெருக்களுக்கு அப்பால் அழைத்துக்கொண்டுபோனார்கள் என்கிறாய்? அந்தவீடு உனக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்டான்.

அதற்குத் தையற்காரன் "ஆம், ஆனால் கவனித்திருக்கிறேன், ஒவ்வொரு தடவையிலும் இன்னின்ன திக்கில் திரும்பினேன் என்றும், ஒவ்வொரு திக்கிலும் இத்தனை அடி நடந்தேன் என்றும் தெரியும்; இப்பொழுது மறுபடியும் என் கண்ணைக்கட்டிப் போகச் சொன்னால், என் வீட்டிலிருந்து கொலை நடந்த வீடு போய்ச் சேருவேன்" என்றான். அப்படியே அவன் அந்த வீட்டைக் கண்டுபிடிக்க, நியாயாதிபதி, கொலை செய்தவர்களைத் தண்டித்து தையற்காரனுக்கு வெகுமதி கொடுத்தான். ஆகையால் ஒவ்வொருவரும் ஊகிக்கும் சக்தியை விருத்திசெய்ய வேண்டும்.

ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

LADIES' PAGES

[ஸ்ரீமான் ஸி. ஆர். ஸ்ரீநிவாஸய்யங்கார் அவர்கள், பி.ஏ.]

தாராபாய்

(334-ம் பக்கத் தொடர்ச்சி.)

மற்ற இருவரும் அதற்குச் சம்மதிக்க, புலிக்குன்றிற்கு எல்லோரும் சென்றார்கள். அந்த வேளையில் குகையில் ஒருவருமில்லை. துறவி எங்கேயோ போயிருந்தாள். ராயமல்லனுடைய தம்பியான சுரசமல்லனும் அவர்களுடன் சென்றான். அவள் வரும்வரையில் காத்திருக்க நிச்சயித்து, பிருதிவியும் ஜயமல்லனும் அவளுடைய படுக்கையில் உட்கார்ந்தார்கள். சங்கன் தரையில் கிடந்த புலித்தோலின் மேல் படுத்தான். சுரசமல்லன் அவனுக்கருகில் வேங்கைத் தோலின்மேல் ஓர் முழங்காலை ஊன்றிக்கொண்டு அவனுடன் பேசிக்கொண்டிருந்தான். சற்று நேரம் கழித்து, அந்தக் குருக்கள் உள்ளேவர, பிருதிவி, தாங்கள் வந்த காரியத்தைத் தெரிவித்து, "எங்களில் யாருக்கு இந்த ராஜ்யம் கிடைக்கவேண்டுமென்று தெய்வத்தின் கட்டளையை நீ தெரிவிப்பாயாக" வென்றான். அவள் சற்றும் தயங்காமல் சங்கனைப் பார்த்து, "நமது தேசத்தில் தொன்றுதொட்டுப் புலித்தோலே அரசர்களுக்குத் தகுந்த சிங்காதனமாய் விளங்கிவருகிறது. நீ இந்த வேளையில் தானாக அப்படி உட்கார்ந்திருக்கக் கண்டபடியால், மேவார் நாட்டுக்கு அதிபதியாய் உன் முன்னோரின் சிங்காதனத்தில் வீற்றிருப்பாய். உனக்கருகிலிருக்கும் வீரனோ, வெகுகாலம் துயரத்தையும் அபாயத்தையும் அனுபவித்து, தன் நாட்டிலிருந்து வெளிப்பட்டு, வெகு தூரத்தில் அரசு புரிவான். எவ்விடத்தில் ஓர் தாய்ப்புலி தன் குட்டிகளை ஆபத்திலிருந்து காப்பாற்றுமோ, அவ்விடமே அவனுக்கு ராஜதானியாகும். இதே கடவுளின் திருவுள்ளம். இதை எவ்விதத்திலும் நீங்கள் மீறமுடியா" தென்றாள்.

அதைக்கேட்ட சங்கன் "நான் சொன்னது நிஜமாயிற்று" என்ற குறிப்புடன் பிருதிவியைப் பார்த்தான். அந்த மூர்க்கனோ, கோ

பத்தால் மெய்மறந்து "நான் ஒன்றை அடைய நிச்சயித்தபிறகு என்னைத் தடுக்க மனிதனுலும் கடவுளாலும் முடியுமோ? விதியை மதியே வெல்லும். ரஜபுத்திர சிங்காதனம் எனதே" யென்று கத்தியை உருவிச் சங்கன் மேல் பாய்ந்தான். அவனைக் கொன்று தெய்வத்தின் ஆக்கினையைப் பொய்யாகச் செய்வேனென்று கூவின அந்த ராட்சதனுக்கும் சங்கனுக்கும் கடுஞ்சண்டை நடந்தது. இளையோனான ஜயமல்லன் வஞ்சகனுகையால், ஒரு அண்ணன் எப்படியாவது தொலைந்தால் மற்றொருவனை வெளியில் கரையேற்றிவிடலா மென்று, தானும் சங்கன்மேல் பாய்ந்தான். அப்பொழுது சுரசமல்லன் அவனைத் தடுத்து "க்ஷத்திரியப் பதரே! பகைவனுடன் சண்டையிட்டுக்கொண் டிருக்கும் ஒருவனை வஞ்சகமாய்த் தாக்குவது நீதியோ; இதோ நானிருக்கிறேன். ஆசை தீரும் வரையில் என்னுடன் யுத்தஞ் செய்வா" யென்றான். இந்தக் கோரத்தைக் கண்டு பயந்து, அந்தத் துறவி ஓடி ஒளிந்து கொண்டாள். முடிவில் பிருதிவி காயம்பட்டு களைத்துக் கீழே விழுந்தான். சுரசமல்லனும் அடித்துத் தள்ளப்பட்டான். உடனே ஜயமல்லன் சங்கன்மேல் பாய்ந்தான். அவனுடைய தேகமெங்கும் காயம்பட்டு, இரத்தம் தாரை தாரையாய்ப் பெருக, ஒரு கண் கத்தி முனையால் குத்திக் கிழிக்கப்பட்டு, எப்படியோ ஜயமல்லனிடத்திலிருந்து தப்பிக்கொண்டு, குதிரை மேலேறிக் கடுவேகமாய்ச் சவாரி செய்தான். ஜயமல்லன் அவனை விடாமல் துரத்திச் சென்றான். இதற்குள் பிருதிவியும் சுரசமல்லனும் களை தெளிந்து மறுபடியும் சண்டையிட்டார்கள்.

சங்கன் வெகுதூரம் சென்று, ஓர் தேவாலயத்திற்கு வந்தான். அதின் வாயிலில் பீடா வென்ற ராடோர் வம்சத்து ரஜபுத்திரன் எங்கேயோ பிரயாணஞ் செய்வதற்காக குதிரையில் ஏறிக்கொண் டிருந்தான். சங்கன் அவனைக் கண்டு, காயங்களாலும் களைப்பாலும் தழுதழுத்த குரலுடன், "ராயமல்ல அரசனுடைய புத்திரன்—சங்கன்.—தம்பிமார்—என்னைக்கொல்லப் பார்க்கிறார்க" ளென்று, வெகு தூரத்திற் கப்பால் தன்னை துரத்திக் கொண்டு கடுவேகமாய் வரும் ஜயமல்லனையும் அவனுடைய பரிவாரங்களையும் காட்டினான். பீடா அவனைக் குதிரையிலிருந்து இறக்கி உள்ளேகொண்டுபோய், "நீ இங்கு சற்றுஇளைப் பாறு. களைதீர்ந்தவுடன் என் குதிரையில் ஏறி, பகைவர் வருமுன் வெகு தூரஞ்செல்வா"யென்று, கோவிலுக்குப் பின்புறத்தில் குதிரையைக் கட்டிவைத்துவிட்டுத், தான் வாயிலில் வந்து, உருவின கத்தியுடன் நின்றான். சற்று நேரத்திற்குள் ஜயமல்லன் அங்குவந்து பீடாவைப்பார்த்து, "என் அண்ணன் சங்கனென்பவன் இவ்வழியாய் வந்தான். இந்தக் கோயிலில் புகுவதைப் பார்த்தேன். உள்ளே போக வழிவிடவேண்டும்" என்றான். பீடா "ஆம். அவன் இன்று என் விருந்தினன். இப்பொழுது நீ அவனைப்பார்க்க முடியாது. இளைப்பாறிக் கொண்டிருக்கிறான்; அவன் வெளியில் வரும்வரையில் பொறுத்திரு" என்றான். ஜயமல்லன் "அதற்கு உன் உத்திரவென்ன வெ"ன்று அவன்மேல் தன் பரிவாரத்துடன் பாய்ந்தான். தன்னை அடைக்கலமென்று வந்தடைந்து, தன்னை நம்பி, உடலையும் உயிரையும் தன்னிடத்தில் ஒப்புவித்திருந்த ராஜ குமாரனுக்காக தன்னுயிரைக் கொடுத்து, க்ஷத்திரிய தருமத்தைக் காப்பாற்ற நிச்சயித்த பீடா, தான் ஒருவனாய் அவர்களை எதிர்த்து, நெடுநேரம் சண்டை செய்தான். முடிவில் தேகமெங்கும் ஊசி நாட்ட இடமில்லாமல் வெட்டுப்பட்டுப் பகைவருக்குப் புறங் காட்டாமல், இருந்த விடத்திலேயே விழுந்திறந்தான். அதற்குள் சங்கன் இளைப்பாறிக் குதிரைமேலேறி, வாயுவேகமாய்ப் பறந்தோடிவிட்டான். ஜயமல்லன் ஆத்திரத்துடன் உள்ளே புகுந்துபார்க்கையில் ஒருவரையும் காணமல், வெகு தூரத்தில் குதிரைமேல் கடுமையாய்ச் சவாரி செய்துகொண்டிருக்கும் சங்கனைக் கண்ணுற்றுப், பின் தொடருவதில் பயனில்லையென்றறிந்து திரும்பிவிட்டான்.

ராணு ராயமல்லன் இதைக்கேட்டு அடங்காக் கோபங்கொண்டு, பிருதிவியை அழைத்து, "நீ ரஜபுத்திரவீரனுக்குரிய எல்லா நற்குணங்களுமுடையவன். ஆனல், மூர்க்கமும், கோப வெறியும் பேராசையும் அரசனுக்குத் தகுந்ததல்ல. உனக்கு மூத்தோனும் தந்தையைப் போன்றவனுமான சங்கனைக் கொல்லப்பார்த்தாய்; ஊரைவிட்டு ஓட்டிவிடுவாய். இந்தத் துரோகத்தின் பயனை அனுபவிப்பாய். போரிலேயே

மிதமிஞ்சின பிரீதியுள்ள நீ, உன் ஆயுளுள்ள வரையில் போர்செய்து காலங்கழிப்பாய். ஆயினும், க்ஷத்திரியன் இறக்கவேண்டியபடி போர்க்களத்தில் மரண மடையமாட்டாய். இனி என் கண்ணின்முன் நில்லாதே. என் நாட்டிலிருந்து விலகி எங்கேயாவது போ''வென்றான். பிறரிடத்திலிருந்து அவமதிப்பையாவது கெடுதியையாவது ஒரு பொழுதும் பொறுக்காத பிருதிவி, தனக்காக உயிரையும் உடலையும் பொருளையும் வீடுவாசலையும், பெண்டு பிள்ளைகளையும், துறந்த ஐந்து வீரர்களுடன் நேவார் நாட்டிலிருந்து வெளிக்கிளம்பித் தன் தந்தைக்குப் பூர்வத்தில்சொந்தமானதும், பிற்காலத்தில் அவனுடைய ஆளுகையிலிருந்து விலகினது மான கோட்டுவாராவென்ற தேசத்தை ஜயிக்க வெண்ணி, அதின் அரசனிடத்தில் சேவகம் பூண்டு, தகுந்த தருணம் பார்த்துக் கொண்டிருந்து, திடீரென்று அவனைக் கொன்று, அந்த நகரத்தையும் சைன்யத்தையும் வசப்படுத்திக்கொண்டான். அந்தக் காரியத்தில் தனக்கு பெருந்துணை செய்த ஓர் வர்த்தகனை அந்நகரில் தனக்குப் பதிலாக ஆண்டுவரும்படி ஏற்படுத்தித் தான் ஓரிடத்திலும் நிலைத்திருக்க மனமில்லாமல், யுத்தஞ் செய்யாமல் சும்மாவிருப்பதை வெறுத்து, மறுபடியும் வேறு தேசங்களை ஜயிக்கப் புறப்பட்டான்.

இப்படியிருக்கையில், ராயமல்லனுடைய மூன்றாவது புத்திரனான ஜயமல்லன் தகப்பனால் புறக்கணிக்கப்பட்டுத் தானும் பிருதிவியைப்போல் ஓர் இராச்சியத்தைக் கைப்பற்ற விரும்பி, அதற்குத் துணையாக எவனையாவது தேடிக்கொண்டிருந்தான். தாராபாயின் அழகையும், பராக்கிரமத்தையும் கேள்வியுற்று, அவளை மணஞ் செய்தால் சுரசேனனுடைய சைன்யத்தைத் தான் துணையாகக்கொண்டு தன் எண்ணங்களை நிறைவேற்றிக்கொள்ளலாமென்று, தாரையைத் தனக்கு மனைவியாய்க் கொடுக்கவேண்டுமென்று சுரசேனனுக்குத் தூதனுப்பினான். அவ்வரசன் வழக்கப்படி மறுமொழிசொல்ல, அப்படியே செய்வதாய்ச் ஜயமல்லன் கடும் பிரதிக்ஞை செய்தான். அதுவரையில் வேறு உதவி யின்றித் தனியே முயற்சி செய்துகொண்டுவந்த தாரைக்கும், சுரசேனனுக்கும் ராயமல்லனுடைய புதல்வனான சயமல்லன் தன் இராச்சியத்து சேனை அனைத்தையும் நடத்தி ஆப்கானியரோடு போர் புரிந்து, தங்களுடைய தேசத்தைப் பகைவரிடத்திலிருந்து மீட்டுக் கொடுப்பானென்ற நம்பிக்கையும் உற்சாகமும் களிப்பும் தழைத்தோங்கின. அதன்மேல் தாரையின் அனுமதியைப் பெற்றுச், ஜயமல்லன் அங்கே வந்து அவளைக்கண்டு பேசும்படி சுரசேனனால் தருவிக்கப்பட்டான்.

அவ்வரசகுமாரன் தன் வஞ்சனையும் கெட்ட வெண்ணமும் கொஞ்சமேனும் வெளிப்படக் கூடாதென்று எவ்வளவோ சாக்கிரதையாய் நற்குணங்களையே பணியாகப் பூண்டவன் போல் நடித்தும், மிகுந்த கூர்மையுள்ள புத்தியையும் மனிதர்களின் இயக்கத்தையும் நுட்பமாய் அறியும் திறமையுமுள்ள தாரை, அவனுடைய கபடத்தை உடனே கண்டறிந்தாள். அவளுடைய கண்ணொளியை அவன் தாங்கமுடியாமல் தலைகுனிந்தான். அவள் கேட்ட கேள்விகளுக்குத் தகுந்த மறுமொழி சொல்லாமல் தயங்கினான். முன்னுக்குப்பின் விரோதமாய்ச் சாக்குப்போக்குச் சொல்ல வாரம்பித்தான். அவன் சுரசேனனுடைய கண்ணில் படுவதில்லை. தாரை இருக்குமிடத்தையே எப்பொழுதும் சுற்றிக்கொண்டிருந்தான். பெண்களின் இயற்கைக்கு ஒவ்வாத நடையும் பழக்கமுமுடைய தாரை, பெண்களுக்குரிய நாணம் அச்சம் மடம் முதலிய குணங்கள் பொருந்தியிராமல் புருஷருடன் இச்சைப்படி பழகும் விலைமாதரைப் போலென்றெண்ணி, அதற்கேற்ற பார்வையாலும் சொற்களாலும் அவளுடைய மனதைக் கலக்கி, வெட்கமும் அச்சமும் உண்டாகும்படி செய்தான். தாரை எங்கே தான் நினைத்த பெருங்காரியம் கெடுமோ வென்று, இதைத் தன் தந்தையிடத்தில் சொல்லவில்லை. ஜயமல்லன் ஆப்கானியரிடத்திலிருந்து டோடாவைக் கைப்பற்றுவதற்கு வேண்டிய எந்த முயற்சியையும் செய்யாமல் வீண் காலம் போக்கிக்கொண்டு, தற்புகழ்ச்சியாலும், தப்புத் தோத்திரத்தாலும் சுரசேனனையும் தாரையையும் ஏமாற்றப்பார்த்தான். அவளை மணம்புரிவதிலேயே நோக்கமுள்ளவனாய், "விவாகமானவுடன் யுத்தத்திற்கு ஆரம்பிப்போம்" என்றான்.

ஒருநாள் அவனுடைய தலைவிதி குறுக்

கிட்டு, அளவுக்குமிஞ்சி அபினேக்குடித்து, பித்தவெறிகொண்டு, தாரையும், சுரசேனனும் இருக்குமிடத்திற்குத் திடீரென்று வந்து, வாயில் வந்தபடி பிதற்ற வாரம்பித்தான். அதுவரையில் அவனுடைய நடத்தையை அறியாத சுரசேனன் கடுஞ்சின மடைந்து, மெய்மறந்து, கத்தியை உருவி, ஒரே வீச்சாய் அவனை வெட்டிவிட்டான்.

அதைக் கேட்டவர்களெல்லோரும் படுகொலை, படுகொலையென்று கூவி, அதற்குக் கொடும்பழி வாங்க வேண்டுமென்று ராயமல்லனைத் தூண்டிவிட்டார்கள். ஆனால், நடுநிலைமையும் நேர்மையுமுள்ள அவ்வரசன் அதற்குட்படாமல், ஜயமல்லனுடைய சுபாவத்தையும் மனப்பான்மையையும் செயல்களையும் அறிந்தவனானதால், தன் மகனுயிருந்தும் க்ஷத்திரிய ஒழுக்கத்திற்கு ஒவ்வாத ஓர் நீசன்தொலைந்தானென்று, அவனுக்காகவருந்தவில்லை. "சுரசேனன் செய்தது தகும். என் நாட்டில் அடைக்கலமென்று வந்து தங்கியிருக்கும் என்னைப்போன்ற ஓர் அரசனுடைய சுகமும் துக்கமும் மானமும் அவமானமும் எனதே. அவனுக்கு யாதொரு தீங்கும் நேராமல் காப்பது என் கடமை. இப்படியிருக்க சயமல்லன் கெட்ட எண்ணத்துடன் தாரையை மணஞ் செய்ய விரும்பினான். டோடா நாட்டை ஆப்கானியரிடத்திலிருந்து மீட்டுத் தருகிறேனென்று, அவ்விதமான எண்ணம் சற்றேனுமில்லாமல், பொய்யான பிரதிக்கினை செய்தான். அவன் ரஜபுத்திரனல்ல. என் புத்திரனுமல்ல. நமது ஆசாரத்திற்கும் குலமுறைக்கும் இழிவான பொய்யைச் சொன்ன அவனை அப்பொழுதே கொன்றிருக்கவேண்டும். இதுவும் போதாமல் தன் ஆயுள்முழுவதையும் தன் தந்தைக்காகத் தாரைவார்த்த தாரையை, நாமெல்லோரும் கொண்டாடி வணங்கி, இயன்றவளவு உதவி புரியவேண்டியிருக்க, இந்தத் தீயன் அம்மாது சிரோமணியை வஞ்சிக்க நினைத்தான். பெண்டுகளுக்குரிய மரியாதையை நடத்துவதிலும், அவர்களுடைய கௌரவத்தையும், மானத்தையும் காப்பாற்றுவதிலும், நிகரற்ற மேன்மை வாய்ந்து, அதையே விரதமாகக்கொண்டு, அதற்காக உயிரைத் துரும்புபோல் எண்ணும் சுத்தவீரர்களுள்ள நமது நாட்டில், ஓர் புருடன் ஒரு பெண்ணிடத்தில் மரியாதை தப்பி நடந்தானென்றால், அதைவிட நமது தேசத்திற்கே பழியும் அவமானமும் உண்டோ? தந்தை சொல்லைமீறி, தன் மூத்தோனைப் படுகொலை செய்யமுயன்ற அந்தப் பாபி செய்யாத காரியமும் உண்டோ? சுரசேனன் நன்கு செய்தான்; அவனுக்கு நான் செய்ய வேண்டிய கடமையைத் தவறினதற்காக அவன் என்னை மன்னிப்பானாக. இதுவரையில் அவன் அடைக்கலமாய்த் தங்கியிருந்த பிஜனூரில் அவனே ஆண்டுவரக்கடவான்" என்றான்.

பிருதிவி இந்த வரலாற்றை அறிந்து, தன் குலத்திற்கு நேர்ந்த மாசை அகற்ற விரும்பிச் சயமல்லன் செய்த பிரதிக்கினையை நிறைவேற்ற நினைத்தான். பகைவருடன் போர் புரிவதே இனிய அமிருதமாய் நினைத்து, அதற்காகத் தேசாதேசமெங்கும் தேடிச்செல்லும் தனக்கு, அவ்வித வேலை வலுவிலேயே வந்ததைக் கண்டு அடங்கா மகிழ்ச்சிகொண்டு, "எல்லோரும் சொல்லுகிறபடி, தாராபாய் நிகரற்ற அழகும் புத்தியும் சாமர்த்தியமும் வீரியமும் வாய்ந்தவளாய், க்ஷத்திரிய வீரர்களுக்குத் திலகமாய் விளங்குவது மெய்யானால் அவளைக் காட்டிலும் எனக்குத் தகுந்த மனைவி பதினான்கு புவனங்களிலும் காலமுள்ளவரையிலும் தேடித்திரிந்தாலும் கிடைக்குமோ? அவளுடைய பிரதிக்கினை எவ்வளவுமேன்மையானது! சுத்த வீரனுக்கேற்ற இல்லாள் இவளே: அவளுக்கேற்ற கணவன் நானே. அவளுடைய சபதத்தை நிறைவேற்ற என்னைத்தவிர வேறு யாரால் முடியும்? அதை ஈடேற்றித் தாரையை மணந்து, இவ்வுலகத்தில் தேவேந்திரனைப்போல் சுவர்க்க போகங்களை அனுபவிப்பேன். இறந்தால் வானுலகிற்குச் சென்று வீர சுவர்க்கமடைவேன்" என்று தனக்குள் உறுதிசெய்துகொண்டு, ரஜபுத்திர வழக்கத்தையும் மரியாதையையும் பின்பற்றி, சுரசேனனுக்குத் தூதனுப்பித் தாரையைத் தனக்கு மனைவியாகக் கொடுக்கவேண்டுமென்று கேட்டான். அவன் அக்காலத்தில் இரஜபுத்திரர்களுக்குள் அஞ்சாத சிங்கமென்றும் போரில் விசயனென்றும் சுத்த வீரர்களுக்கு நாயகமாய் விளங்குகிறவனென்றும் அவன் துணியாத காரியமும் முடிக்காத வேலையும் கிடையாதென்றும் பலரால் கேட்

டறிந்த சுரசேனனும் தாரையும், அதற் கிணங்கி அவனைத் தருவித்தார்கள்.

பிருதிவி தகுந்த பரிவாரங்களுடன் அங்கே வந்து, சுரசேனனுக்குத் தெரிவித்து, அவனைக் கண்டு வணங்கி, வெகு மரியாதையுடன் "வேந்தே! தங்களுடைய புத்திரியை மனைவியாகக்கொள்ள எனக்கு அனுமதி கொடுக்க வேண்டும்" என்று கேட்டான். பக்கத்தில் உட்கார்ந்துகொண்டிருந்த தாரையை அவன் கண்ணெடுத்துப் பார்க்கவுமில்லை. ஆனால், தாரை உடனே "டோடா நாட்டிலிருந்து ஆப்கானியரை அகற்றி என் தந்தையை அதற்கரசனாக செய்வீராவெ"ன்றாள். பிருதிவி தலைநிமிர்ந்து தாரையைப் பார்த்தான். தாரையும் பிருதிவியைப் பார்த்தாள். எண்ணிறந்த புருஷகுணங்கள் வாய்ந்தவன் இவனைத் தவிர வேறில்லை யென்று நினைத்துத் தாரை அவனிடத்தில் காதலுற்றாள். இவள் மானிடப் பெண்ணோ தேவதையோ வென்று பிரமித்துப் பிருதிவி "இவளையே மணம் புரிவேன்; இல்லாவிடில் உயிர் துறப்பேனெ"ன்று நிச்சயித்தான். சற்றும் தயங்காமல் "டோடா நாட்டில் துருக்கர்களைத் தலைகாட்ட வொட்டாமல் அடித்து, உன் தந்தைக்கு அங்கே முடிசூட்டுவிப்பேன்; இல்லாவிடில் நான் உயிர் துறப்பேன். க்ஷத்திரிய தருமத்தின் மேல் ஆணையிட்டுச் சொல்லுகிறேன். இது தவறினால், நான் க்ஷத்திரியனுக்குப் பிறந்தவனல்லவெ"ன்றான். சுரசேனனும் தாரையும், அவனுடைய பிரதிக்கினையை ஒப்புக்கொண்டார்கள்.

பிறகு பிருதிவி அந்த க்ஷணமே தன் சைன்யத்திலிருந்து, பலத்தாலும் வீர்யத்தாலும் தைரியத்தாலும் அனுபவத்தாலும் பெயற்பெற்ற 500 வீரர்களைத் தெரிந்தெடுத்து, யுத்தத்திற்குவேண்டிய யாவற்றையும் ஆயத்தஞ்செய்து, சுரசேனனிடத்தில் தெரிவித்தான். தாரை தானும் அந்தப் படையுடன் செல்வேனென்று தந்தையிடத்தில் உத்தரவு பெற்றுக்கொண்டு, தன் சேனையுடன் டோடா நகரத்தை நோக்கிச்சென்றாள். போகும்வழியில் பிருதிவி தான் செய்த உபாயத்தை அவளுக்குத் தெரிவித்து, "லில்லாவென்ற அந்நகரத் தலைவன் இப்பொழுது கவலையற்றிருக்கிறான். நீங்கள் சென்ற தடவை தோல்வியடைந்ததால் திரும்பவும் படையெடுத்து வரமாட்டீர்களென்று நம்பியிருக்கிறான். பகைவரை எதிர்ப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் ஒன்றையும் செய்யவில்லை. மேலும், இது அவர்களுக்கு மொகரமென்ற வருஷாந்திரப் பண்டிகை நடக்கும் தருணம். அப்பொழுது துருக்கர்கள் மற்றத்தொழில்களை விட்டுப் பண்டிகையைக் கொண்டாடுவதிலேயே நோக்கமாயிருப்பார்கள். முடிவு நாளில் அவர்கள் ஊர்வலம் வரும்பொழுது அவர்களை ஏமாற்றித் திடீரென்று தாக்கி, நம்மெண்ணத்தை நிறைவேற்றவேண்டுமெ"ன்றான். அதைக்கேட்ட தாரையின் முகத்தில் ஓர் பேரொளி விளங்கிற்று. இவனல்லவோ சுத்தவீரனென்று களிகொண்டாள். பிறகு அப்பெண்மணி ஆணுடை தரித்துக் கவசம் பூண்டு, ஆயுதமணிந்து, க்ஷத்திரிய வீரனாய், பிருதிவியுடன் பகைவரின் நகரத்தை அணுகினாள். கோட்டை வாயிலுக்கு வெளியில் சற்று தூரத்தில் தங்களுடைய சேனையை நிறுத்தித், தாங்கள் நகரத்தில் புகுந்தார்கள். தாரையும் பிருதிவியும் ஆதி முதல் அவனை விட்டகலாது நிழலைப்போல் பின்தொடர்ந்துவந்த நண்பனொருவனும், ஆப்கானியரைப்போல் மாறுவேடம் பூண்டு செல்லுகையில், கோட்டை வாயிலிலும் கொத்தளங்களிலும் கட்டுக்காவலில்லாமலிருப்பதையும், ஆண் பெண் அடங்கலும் உபவாசத்தாலும் மதவெறியாலும் மெய்மறந்து கூவிக்கொண்டு திரிவதையும் கண்டு, நமது காரியம் நிறைவேறுமென்று தைரியங்கொண்டார்கள்.

மகம்மதிய மதத்திற்கு ஆதிபுருஷனுடைய பேரன்மார்களான உசேன் அசேன் என்ற இருவர், கிர்பிலாவென்ற விடத்தில் கடும்போர் புரிந்து, அகாலத்தில் மரணமடைந்ததை ஒவ்வொருவருஷமும் கொண்டாடும் பண்டிகையே மொகரமெனப்படும். அப்பொழுது இஸ்லாமியர் அனைவரும் துக்கங்கொண்டாடி, அந்த போர்வீரர்களுடைய குணங்களை வர்ணித்து, பட்டினியிருந்து புலம்பிக்கொண்டு, கைகளாலும் கசைகளாலும் மார்பிலும் முதுகிலும் அடித்துக்கொள்வார்கள்.

பிரபஞ்ச வர்த்தமானம்

NEWS & NOTES.

உலகெங்கும் வலை வீசுதல்.

பிறரனைவரும் தங்களது வியாபார வலையை வீசி, உலகனைத்தையும் வசப்படுத்தி லாப மடைய வேண்டுமென்று முயன்று பலனடைந்து வருகையில், இந்தியாவோ அவ் வலையில் பட்டுக் கிடப்பதைத் தவிர வலையிலிருந்து தெறிபட்டு நிமிர்ந்து நிற்க முயன்றுள்ளதா? என்பது கேள்வி. உலகெங்குமுள்ளபருத்தி விளைவில் ஏகபோகமாய் வியாபாரத்தையும் லாபத்தையும் கைக்கொண்டு பெருவாழ்வு வாழவேண்டுமென்ற நோக்கத்துடன், இங்கிலாந்திலே பிரமாண்டமான இரண்டு கம்பெனிகள் ஏற்பட்டுள்ளன. ஒன்றின் பெயர் "பிரிட்டிஷ் பருத்தி விளை சங்கம்" என்பதாகும். மற்றொன்றோ "பருத்தி விளை ஸ்தாபனம்" என்ற பெயர்கொண்டது. இரண்டு கம்பெனிகளுக்கும் மூலதனம் அபரிமிதமாயிருக்கும். இப்படி பருத்தி வியாபாரத்திலும் வியாபாரத்திற்கான மூலப்பொருளிலும் ஸர்வாதிக்கம் பெற்றுவிடப் பலர் முயலுவதில், பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாரும் பக்கபலமாய் நிற்கின்றனர். அவர்கள் மகத்தான ஆதிக்கம்பெற்று விடுவாராயின் ஏராளமான பருத்தியை விளைவித்து அதைக் கொண்டு ஏராளமாகத் துணி நெய்ய வகையின்றி பிறநாடுகளுக்குப் பருத்தியை ஏற்றுமதி செய்துவிட்டு திண்டாடும் இந்தியாவின் கதி என்னாகுமென்பதை இங்குள்ள முதலாளிகளும் அதிகாரிகளும் சிந்தித்துப் பார்ப்பரா?

* * *

காகிதப் பஞ்சம்

மேனாட்டுப் பத்திரிகைகளைப் பார்க்குமளவில், இனி எப்படிக் காலந்தள்ளுவதென்று அங்கே பத்திராசிரியர்களும் காகிதத்தொழிற்சாலை யதிபர்களும் பிறரும் சிந்தாகுல மடைகின்றனரென்று நன்கு புலப்படும். நார்வே ஸ்வீடன் தேசங்களில் பிரபல காகிதத் தொழிற்சாலை யதிபர்களும் திணறுவதாக காண்கிறது. எவ்வாறெனில், அத்தேசத்திலுள்ள ஒரு சாலையில் ஏஜண்டான மிஸ்டர் பால் என்பவர் "நெடுங்காலம் வரையில் விலையும் குறையாது; உற்பத்தியும் அதிகமா யிராது. உற்பத்தியை அதிகப்படுத்தலாமென்றாலோ செலவுநாலேந்து மடங்கு ஏறியிருக்கிறது. என் செய்வோம்" என்று சொல்லியிருக்கிறார். யுத்தத்திற்கு முன்னே ஆஸ்டிரியாவும் ஜெர்மனியும் ஏராளமாகக் காகிதங்களை உற்பத்திசெய்து எங்கும் அனுப்பி வந்ததனால், விலை சரஸமாய் இருந்ததோடு சரக்கும் தாராளமாய்க் கிடைத்தது. இப்பொழுதோ தேவை வரவர அதிகமாயும், சரக்கு வரவரக் குறைவாயும் இருப்பதனால், பத்திராசிரியரும் பிறரும் என் செய்வர்? மேனாடுகளிலே பல பிரசுரங்கள் நின்று விட்டன. பல பத்திரிகைகளின் விலை உயர்ந்து விட்டது. அளவோ குன்றி விட்டது. அங்கேயே அப்படியானால் அங்கிருந்து காகித வரவை எதிர்பார்த்து நிற்கும் இந்தியாவைக் குறித்து நாம் அதிகஞ் சொல்லவும் வேண்டுமோ?

* * *

மின்சார சக்தி.

நீர் வீழ்ச்சிகளைக் கொண்டு மின்சார சக்தியை அபரிமிதமாக இந்தியாவில் அடையலாமென்றிருப்பது போலவே, இலங்கையிலும் அடைய வழியுளது. இதற்காகச் சில நிபுணர்கள் நியமனமாக இலங்கையில் பரிசீலனை நடந்து வந்தது. அவர்களுடைய பரிசீலனையின் முடிவாக ஏற்பட்டிருக்கும் யாதாஸ்தைப் பார்த்தால், அங்கே மின்சார சக்தியை வேண்டுமளவு அடையலாமென்பது திண்ணமெனப் புலப்படும். ஆரம்பத்திலே அதற்கு 120 லட்சம் ரூபாய் செலவு பிடிக்குமென்று மதிக்கப்பட்டுள்ளது. நூற்றுக்கு ஆறு வீதம் லாபமும் கிடைக்குமாம். பொதுவாகச் சொல்லின், நஷ்டம் ஏற்படாதென்று கண்டிப்பாய்ச் சொல்வோம். பல காரியங்களுக்கு உபயோகமாகும் மின்சார சக்தியை அபரிமிதமாய் அடையும்படியாக வழிகள் பல இருந்தும், அவ்வழிகளைப் பரிசீலனை செய்து, அனுபவத்தில் பலனடையப் பார்ப்பதுதான் துர்லபமாய் இருக்கிறது; எனினும் இலங்கையிலே பரிசீலனை நடத்திருப்பனுதல், அதன் முடிவு என்னவாகிறதென்று இனிமேல்தான் தெரியவேண்டும்.

* * *



பரமசிவன்.

விவேகபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்.

தொகுதி XII } ரௌத்திரிஞ வைகாசிமீ :: 1920-ஞ ஜூன்மீ { பகுதி 12

கம்பராமாயணத் திரட்டு

SELECTIONS FROM KAMBA RAMAYANA

கரா மலைய, தளர் கைக் கரி எய்த்தே
"அரா அணையில் துயில்வோய்!" என, அந் நாள்
விராவி, அளித்து அருள் மெய்ப் பொருளுக்கே
இராமன் எனப் பெயர் ஈந்தனன், அன்றே.

கரதலம் உற்று ஒளிர் நெல்லி கடுப்ப,
விரதம், மறைப் பொருள், மெய்ந் நெறி, கண்ட
வரதன், உதித்திடு அ மற்றைய ஒளியைப்
பரதன் எனப் பெயர் பன்னினன், அன்றே.

"உலக்குநர் வஞ்சகர்! உம்பரும் உய்ந்தார்!
நிலக் கொடியும் துயர் நீத்தனள்! இந்த
விலக்கு அரும் மொய்ம்பின் விளங்கு ஒளி நாமம்
இலக்குவன்!" என்ன இசைத்தனன், அன்றே.

"முத்து உருக்கொண்டு, செம் முளரி அலர்ந்தால்
ஒத்திருக்கும் எழிலுடைய இவ் ஒளியால்
எத் திருக்கும் கெடும்" என்பதை எண்ணு,
சத்துருக்கன் எனச் சாற்றினன் நாமம்.

ஐயனும் இளவலும், அணி நில மகள் தன்
செய் தவம், உடைமைகள் தெரி தர, நதியும்,
மை தவழ் பொழில்களும், வாவியும், மருவி
நெய் குழல் உறும் இழை என, நிலை திரிவார்.

பரதனும் இளவலும் ஒரு நொடி பகிராது,
இரதமும் இவுளியும் இவரினும், மறை நூல்
உரை தரு பொழுதினும் ஒழிகிலர், எனை ஆள்
வரதனும் இளவலும் என, மருவினரே.

அரசர் தம் பெரு மகன், அகிலம் யாவையும்
விரசு உறு தனிக் குடை விளங்க, வென்றி சேர்
முரசு ஒலி கறங்கிட, முனிவர் ஏத்துற,
ஈரைசெயல் அரியது ஓர் களிப்பின் வைகும் நாள்,

மடங்கல் போல் மொய்ம்பினன் முன்னர், "மன் உயிர்
அடங்கலும் உலகும் வேறு அமைத்து, தேவரோடு
இடம் கொள் நான்முகனையும் படைப்பென்
[ஈண்டு!" எனாத்
தொடங்கிய துனி அறு முனிவன் தோன்றினான்.

வந்து முனி எய்துதலும், மார்பின் அணி ஆரம்,
அந்தா தலத்து இரவி அஞ்ச, ஒளி விஞ்ச,
கந்த மலரின் கடவுள் தன் வரவு காணும்
இந்திரன் என, கடிது எழுந்து அடி பணிந்தான்.

"நிலம் செய் தவம் என்று உணரின், அன்று,
[நெடியோய்! என்
நலம் செய்வினை உண்டு எனினும் அன்று; நகர், நீ
[யான்
வலம் செய்து வணங்க எளிவந்த இது, முந்து என்
குலம் செய் தவம்!" என்று இனிது கூற, முனி
[கூறும்.

"என் அனைய முனிவரும் இமையவரும்
இடையூறு ஒன்று உடையரானால்,
பல் நகமும் நகு வெள்ளிப் பனி வரையும்,
பாற்கடலும், பதும பீடத்து
அந் நகரும், கற்பக நாட்டு அணி நகரும்,
மணி மாட அயோத்தி என்னும்
பொன் நகரும் அல்லாது புகல் உண்டோ,
இகல் கடந்த புலவு வேலோய்?"

"தரு வனத்துள் யான் இயற்றும் தவ வேள்விக்கு
இடையூறா, தவம் செய்வோர்கள்
வெருவரச் சென்று அடை காம வெகுளி என,
நிருதர் இடைவிலக்கா வண்ணம்,
'செரு முகத்துக் காத்தி' என, நின் சிறுவர்
நால்வரினும் கரிய செம்மல்
ஒருவனைத் தந்திடுதி," என, உயிர் இரக்கும்
கொடும் கூற்றின், உளையச் சொன்னான்.

47. செக்கு உலக்கையை விழுங்கினவனுக்குச் சுக்குக் கஷாயம் மருந்தாமா?

விவேக போதினி

நே.12] ரௌத்திரி ஸு : : வைகாசி மீ [ப.12

யுதிஷ்டிரர்
YUDHISHTIRA

பாண்டவர்கள் பிராமணர்களிடத்தில் உத்தரவு பெற்றுக்கொண்டு, மத்ஸ்யதேசத்திற்குச் சென்று ஆயுதங்களை ஒரு வன்னிமரத்தில் கட்டி ஒளித்துவைத்து, தருமதேவதையின் வரத்தால் தங்களுக்கு இஷ்டமான மாறுரூபங்களைத் தரித்து, விராடராஜனிடத்தில் போய், அவனால் பலவேலைகளில் அமர்த்தப்பட்டார்கள். தருமபுத்திரர் சன்னியாசி வேஷத்தைத் தரித்து, நல்ல யௌவனமுடையவராய், திரிதண்டத்தையும் கமண்டலத்தையும் தலைப்பாகையையும் தரித்து, காஷாயவஸ்திரத்தை உடுத்து, பிராமணச்சிரேஷ்டராய் விளங்கினார். தங்கத்தால் செய்யப்பட்டு, வைடூரியத்தால் இழைக்கப்பட்ட வெண்மையான பாய்ச்சிகைகளைத் துணியில் சுற்றிக்கொண்டு, அவர் விராடராஜன் சபையில் பிரவேசித்து, அவனால் எதிர்கொண்டழைத்துப் பூஜிக்கப்பட்டு ஆசனமளிக்கப்பட்டார்.

தன் வரலாற்றை வினவின அவ்வரசனுக்கு யுதிஷ்டிரர் "அரசே! குருவின் உபதேசத்தாலும் கட்டளையாலும் இந்த விருதம் எனக்கு ஏற்பட்டிருக்கிறது. குலதருமத்தை அனுஷ்டிக்கும்படி பிதிருக்கள் எனக்குக் கட்டளையிட்டிருக்கிறார்கள். அதற்காகவே சன்னியாசியாய், தண்ட கமண்டலத்துடன் இவ் வேஷத்தைத் தரித்தேன். இது நான் செய்துகொண்டதல்ல. இவ்வுலகில் என் ஐந்து இந்திரியங்களையும் சரீரத்தையும் பார்க்கிறவர்கள் எனக்கு ஐந்து பேர்களையே பிதிருக்களாகச் சொல்லுகிறார்களென்று கேள்விப்படுகிறேன். அந்த ஐவரும் மனுஷ்யரென்று நான் எண்ணவில்லை. சுபாவத்தால் நான் பிதிருக்களுக்குச் சமானனுமல்ல. விருதத்தை அனுஷ்டிக்கும் பிராமணனான எனக்குக் கங்கனென்று பெயர். விதிவசத்தால் நான் சொக்கட்டான் ஆடி வறுமையை அடைந்தேன். இப்பொழுது உண்மையைப் பேசிக்கொண்டு, தவசியாய்ச் சஞ்சரிக்கிறேன். யுதிஷ்டிரருக்கு உயிர்த் தோழனாய், கொஞ்சமேனும் பேதமின்றி நான் அவருடைய வீட்டில் சுகமாய் வசித்துக்கொண்டிருந்தேன். அவருடைய ஸ்திரீகளும் பரிவாரங்களும் குடிகளும், என்னிஷ்டப்படியே நடந்துவந்தார்கள். நாங்கள் ஒரே வயதுள்ளவர்கள். நான் வியாக்கிரபாத ரிஷியின் கோத்திரத்தில் பிறந்தவன். மறுபடியும் யுதிஷ்டிரருடன் எப்பொழுது சேருவோமென்று எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேன். தாய் தகப்பன், பந்து மித்திரன், ரூபம் சுகம் துக்கம், பெண்டு பிள்ளையென்ற பற்றுகள் எனக்கில்லை. ஏழையானாலும், ஆசையை விட்டவன். இந்த விருதத்தை ஒரு வருஷம் அனுஷ்டிப்பதற்காக உமது வீட்டிலிருக்க விரும்பிவந்தேன். அதற்குப் பிறகு என்னாலியன்ற உபகாரத்தை உமக்குச் செய்வேன். பாய்ச்சிகை ஆடுவதில் திறமையையும், சகுன சாஸ்திரத்தையும் மிருக பட்சிகளின் பாஷைகளையும் அறிந்த நான், யாவற்றையும் தோற்று, இருப்பிடமில்லாமல், துறவறம் பூண்டு பரதேசியாய் வந்து நிற்கிறேன்" என்றார்.

அவரைப் பார்த்தவுடன் ஏதோ ஒருவிதமான பக்தியாலும் பிரியத்தாலும் கவரப்பட்டு, விராடன் கைகூப்பி வணங்கி "சுவாமி! சூதாடுவதில் எனக்கும் பிரியமுண்டு. அதில் நிபுணர்களை நான் ஆதரிக்கிறவன். உம்மையும் உம்மை அண்டினவர்களையும் உமது இஷ்டமுள்ளவரையில் என் ராஜ்யத்தில் வைத்து, எவ்விதத்தாலும் பூசித்துக் கௌரவிக்க விரும்புகிறேன். நீர் எந்த விஷயத்திலும் எனக்குச் சமானமான பதவியையும் மரியாதையையும் உபசாரத்தையும் அதிகாரத்தையும் பெற்று, இந்த ராஜ்யத்தை உமதாய் நினைத்து, இஷ்டப்படி ஆண்டுகொண்டிரும். உமது நண்பர்கள் எனது நண்பர்களே. உமது பகைவர் எனது பகைவரே" என்றான்.

யுதிஷ்டிரர், "அரசே! நான் தனத்தைத்

தொடுவதில்லை. ஹவிஸைத் தவிர வேறொன்றையும் புசிப்பதில்லை. தரையில் படுப்பவன். ஒருவரிடத்திலும் கோபிக்கமாட்டேன். என் இஷ்டப்படி வசிக்க உத்தரவு கொடுக்கவேண்டும்'' என்றார். அன்றுமுதல் விராடனுக்குச் சமமான ஆசனத்தில் வீற்றிருந்து, சபாநாயகராய் விளங்கி, அவனுக்கு தருமோபதேசம் செய்து கொண்டிருந்தார்.

கீசகன் திரௌபதியிடத்தில் ஆசை கொண்டு, ஒருநாள் அவளைத் துரத்திக்கொண்டு ஓடிவந்து, விராடசபையில் புகுந்து, அவளை உதைத்துத் தள்ளினன். பாஞ்சாலியின் முகத்திலிருந்து ரத்தம் பெருகுவதைப் பார்த்து, அங்கிருந்த பீமன் அடங்காக் கோபங்கொண்டு, பற்களைக் கடித்து, கீசகனைக் கொல்வதற்கு ஆகாயத்தை அளாவின ஓர் மரத்தையும் பார்த்து அரசனையும் பார்த்தான். அதை அறிந்த யுதிஷ்டிரர் அவனைத் தடுக்க விரும்பி, ஜாடைசெய்து ''சமையற்காரா! நீ விரும்பும் காரியத்திற்கு இது தகுந்த பொருளல்ல. வீணாய் சிரமப்படாதே. இந்த மரத்தில் சில கனிகளிருக்கின்றன. உலர்ந்த விறகுகளில்லை. உபயோகமற்ற சிறு குச்சிகள் சிலவுண்டு. உனக்கு நல்லவிறகுவேண்டுமானால்நகரத்தை விட்டு வெளியிற்சென்று, உனக்குஇஷ்டமான மரத்தை வேருடன் பிடுங்கித் தள்ளு. பச்சை மரத்தின் குளிர்ந்த நிழலை அடைந்த மனிதன், அதனால் தனக்குக் கிடைத்த உபகாரத்தை நினைத்து, அதன் இலையைக்கூடக் கிள்ளமாட்டான். உன் ஆசையும் கோபமும் இங்கே உபயோகப்படாது. இந்த மரம் முழுவதும் வளருவதற்கு இன்னும் இரண்டு பட்சங்கள் செல்லும். பலசாலிகளுக்கு இது பெரிய காரியமல்ல'' என்றார். பிறகு தன் கைக் கட்டைவிரலால் கால்கட்டைவிரலை அழுத்தி அந்த பீமசேனனைத் தடுத்தார்.

திரௌபதி வருந்திப் புலம்புவதைக் கண்டு யுதிஷ்டிரர் ''பெண்ணே நீ பயப்படாதே. இவ்வரசன் உன்னைக் காப்பாற்றுவதால் நீ ராணியின் அந்தப்புரத்திற்குச் செல். வீரபத்தினிகள் பர்த்தாவைப் பின்தொடர்ந்து, அவர்கள் அனுபவிக்கும் துன்பத்தைத் தாங்களும் அடைகிறார்கள். பர்த்தாவிற்குப் பணிவிடை செய்ததால் துயரமடைந்த பெண்களுக்கு உத்தமலோகங்கள் கைமேல் கிடைக்கின்றன. உன் கணவர்கள், கோபத்திற்கு இது தகுந்த காலமென்று நினைக்கவில்லையெனத் தோன்றுகிறது. ஆகையால், நிகரற்ற பராக்கிரமமுள்ள கந்தருவர்கள் உன்னைக் காக்க இங்கே வரவில்லை. உத்தமஸ்திரீகள் அனுசரிக்கவேண்டிய தருமங்களை நீ கேட்டிருக்கலாம். யாகம் யஞ்ஞம் சிராத்தம் உபவாசமென்ற யாதொரு சிரமுமில்லாமல், கணவனுக்குப் பணிவிடை செய்வதாலேயே, ஸ்திரீகள் மோட்சத்தை அடைகிறார்கள். பால்யத்தில் பிதாவும், யௌவனத்தில் கணவனும், தளர்ந்த வயதில் புத்திரனும், அவர்களுக்கு யாதொரு கவலையுமில்லாமல் ரட்சிக்கிறார்கள். கணவனுடைய சத்துருக்களால் தனக்கு உபத்திரவமுண்டானாலும் குலஸ்திரீ அதைப் பொறுத்துக்கொண்டிருக்கவேண்டும். உன் கணவர்களைத் திருமூர்த்திகளும் ஜயிக்கமுடியாதென் றறிவேன். உன் விருதத்தையும், நீ செய்திருக்கக்கூடிய சபதங்களையும் ஞாபகப்படுத்திக்கொண்டு, பொறுமையைக் கைவிடாதிரு. ஒரு வருஷத்தில் ஒரு மாதம் குறைந்திருப்பதற்காக எவனாவது பொறுமைகொண்டு கோபத்திற்கு இடம் கொடுப்பானா? உனக்குக் கெடுதி செய்தவனை கந்தருவர்கள் கொன்று உன் துயரத்தைத் தீர்ப்பார்கள்'' என்று சமாதானஞ் சொல்லியனுப்பினார்.

வேறொரு சமயத்தில் விராடபுத்திரனான உத்தரன் அர்ச்சுனனுடன் யுத்தத்திற்குச் சென்று, கௌரவர்களைக் கண்டு பயந்தோட, விஜயன் அவனைத் தேற்றி தனக்குத் தேரோட்டச் சொல்லி, தான் துரியோதனாதியருடன் கடும்போர் புரிந்து, யாவரையும் வென்று திரும்பி வந்துகொண்டிருந்தான். அதற்குள் தூதர் ஓடிவந்து, உத்தரன் கௌரவர்களை முறியடித்ததாக அரசனிடத்தில் தெரிவித்தார்கள். அதைக் கேட்டுக்கொண்டிருந்த யுதிஷ்டிரர் ''பிருகன்னளையை (அர்ச்சுனனை) தேர்ப்பாகனாய்க்கொண்ட எவனும் கௌரவர்களை வெல்வது ஆச்சரியமல்ல'' என்றார். விராடன் மனங்களித்து, யுதிஷ்டிரரைச் சூதாட அழைத்தான். தர்மபுத்திரர் ''அரசே! சந்தோஷத்தால் பொங்கிக்கொண்டிருக்கும் சூதாடியோடு சூதாடக்கூடாதென்று கேள்விப்பட்டிருக்கிறேன். இப்பொழுது உம்முடன் நான் ஆடவிரும்பவில்லை. சூதின் கெடுதி

கள் உமக்கு நன்ருய்த் தெரிந்திருக்குமே. சூதாட்டத்தால் நளன் கெட்டான். தரும ராஜாவான யுதிஷ்டிரர் ராஜ்யத்தையும் செல்வத்தையும் மனைவியையும் தம்பிகளையும் பந்தயமாய் வைத்தாடி யாவற்றையும் தோற்று, இருந்தவிடம் தெரியாமல் எங்கேயோ மறைந்திருக்கிருர். கோபமும் கடுஞ்சொல்லும் வஞ்சனையும் மனவருத்தமும் சூதாட்டத்தால் ஏற்படும். இதைத் தெரிந்தும் நீர் சூதாட விரும்பினல் என்னல் தடையில்லை" என்ருர்.

ஆட்டம் நடந்துகொண் டிருக்கும்பொழுது விராடன் தருமரைப் பார்த்துக், "கங்கரே! தேவர்கள் ஒன்றுசேர்ந்தாலும் ஜயிக்கமுடியாத கௌரவர்கள் என் குமாரனை உத்தரனல் முறியடிக்கப்பட்டார்கள்" என்ருன். தர்மர் "அரசே! பசுக்கள் மீட்கப்பட்டதும், கௌரவர் ஜயிக்கப்பட்டதும், உமது அதிருஷ்டத்தாலேயே. உத்தரன் இப்படிச் செய்திருந்தால் அதைவிட ஆச்சரியம் வேறில்லை. ஆனல், பிருகன்னளையைச் சாரதியாயுடையவனுக்கு எதுவும் சாத்தியமாகும்" என்ருர். விராடன் அதைக் கேட்டுக் கடுங்கோபங்கொண்டு "பிராமணு! இப்படிச் சொல்லாதே. என் புத்திரனை ஒரு நபும்ஸகனுக்குத் தாழ்ந்தவனென்று கூறி என்னை அவமானப்படுத்தாதே" என்று பல தடவை தடுத்தும், யுதிஷ்டிரர் அடிக்கடி பிருகன்னளையைப் புகழ்ந்து, "பீஷ்மத் துரோண கிருப அசுவத்தாம கர்ண துரியோதன சகுனி முதலியவர்கள் அடங்கிய கௌரவ சைன்னியத்தை இந்திராதி தேவர்கள் ஒன்று சேர்ந்தாலும் எதிர்க்கமுடியுமோ? பாலனை உன் புத்திரனைப்பற்றிச் சொல்ல வேண்டியதென்ன? நீ நன்ருய் விசாரித்தால் நாம் சொல்வது உண்மையென்று தெரியும், பிருகன்னளையே அவர்களை ஜயித்திருப்பான். உத்தரன் அவனுக்குத் தேரோட்டும் பாக்கியத்தை அடைந்திருப்பான். ஆகையால், பிருகன்னளையை வரவேற்று, உபசரிப்பதற்காக நகரை அலங்கரியும்" என்ருர். விராடன் தன்னை எதிர்த்துப்பேசி அவமானஞ்செய்த சன்னியாசியை தருமரென்று அறியாமல், பாய்ச்சிகையால் தலையில் அடித்தான். அந்தக் காயத்தால் இரத்தம் தாரையாய்ப் பெருகினதைக் கண்டு, யுதிஷ்டிரர் ஒன்றும் பேசாமல் அருகிலிருந்த திரௌபதியை ஜாடையாய்ப் பார்த்து, இரத்தம் பூமியில் விழுமுன் அதைக் கைகளால் ஏந்தித் திரௌபதியின் முந்தாணியில் விட்டார். அவள் அதை ஒரு தங்கப் பாத்திரத்தில் பிழிந்ததைக் கண்டு, விராடன் "ஏன் இப்படிச் செய்கிரு"யெனப், பாஞ்சாலி துக்கத்தாலும் கோபத்தாலும் கடுகடுத்து, "கங்கருடைய இரத்தத் துளிகள் பூமியில் எவ்வளவு விழுகின்றனவோ, அவ்வளவு வருஷங்கள் வரையில் இந்த இராஜ்யத்தில் மழை பெய்யாது. உமது புத்திர மித்திர பந்துக்களுடன் இந்த ராஜ்யம் அழியவேண்டாமென்றே இப்படிச் செய்தேன். சன்னியாசியை உபத்திரவிக்கிறவன் ஆயுள்குறைந்து இறப்பான். சன்னியாசியை ஆக்கினை செய்கிறவனுக்கு, கோரமான நரகங்கள் கிடைக்கும். சன்னியாசியின் இரத்தத்துளிகள், எவ்வளவு பூமியில் விழுகின்றனவோ, எவ்வளவு புழுதியை நனைக்கின்றனவோ, அவ்வளவு பிதிருக்கள் உத்தம லோகங்களிலிருந்து கீழே தள்ளப் படுகிருர்கள். உமது நன்மையையும் கீர்த்தியையும் விரும்பியே இப்படிச் செய்தேன்" என்ருள்.

பிறகு உத்தரனும் விஜயனும் நகரத்தில் புகுந்து அரண்மனை வாசலில் வந்தபொழுது, யுதிஷ்டிரர் அதை அறிந்து, வாயிற்காப்போனைப் பார்த்து "உத்தரன் மாத்திரம் உள்ளே வரட்டும். சாரதியான பிருகன்னளை இப்பொழுது வரவேண்டாம். 'யுத்தத்தில் தவிர மற்ற சமயத்தில் என் தேகத்தில் காயத்தை உண்டு பண்ணுகிறவனையும் இரத்தம் சொட்டும்படி செய்கிறவனையும் ஒரு நிமிஷம்கூட உயிருடன் வைக்கமாட்டேன்' என்று இந்தப் பிருகன்னளை பிரதிக்கினை செய்திருக்கிருன். இரத்தத்தால் நனைந்திருக்கும் என்னைப் பார்த்தால் இவ்வரசனையும், இந்த ராஜ்யத்தையும் இப்பொழுதே அழிப்பான். இந்திராதி தேவர்களும் அவனிடத்திலிருந்து தப்பமுடியாது. ஆகையால், சற்றுநேரம் அவனை வெளியில் தாமதிக்கச்செய்" என்று ரகசியமாய்ச் சொல்லித் தான் சபையில் ஓரிடத்தில் ஒருவருடனும்பேசாமல் உட்கார்ந்திருந்தார். திரௌபதி அருகில் நின்று அவருக்கு உபசாரம் செய்துகொண்டிருந்தாள்.

உத்தரன் சபையில் பிரவேசித்துத் தகப்பனை வணங்கி, கங்கருக்குச் சமீபத்தில் வந்து

பார்க்கையில், அவருடைய தலையிலிருந்து இரத்தம் பெருகிக்கொண்டிருப்பதையும் அவர் மனம் சோர்ந்திருப்பதையும் கண்டு, "ஐயோ! குடி முழுகிற்றே"யென்று நடுநடுங்கி, விராடனைப் பார்த்து, "இந்த உத்தமமான சன்னியாகியை இப்படிக் காயப்படுத்தினது யார்? கால சர்ப்பத்தைக் காலால் மிதித்த மூடன் யார்? மிருத்தியு பாசத்தை வலுவில் கழுத்தில் மாட்டிக்கொண்ட மூர்க்கன் யார்? தருமசொரூபியும் தேவர்களால் பூஜிக்கத் தகுந்தவருமான இந்தப் பிராமணோத்தமருக்கு இந்தக் கொடிய அபராதத்தைச் செய்தவன் யார்"என்று கூவினான்.

விராடன் அதைக்கேட்டுப் பயந்து 'குழந்தாய்! நீ கௌரவர்களை ஜயித்தாயென்று நான் சொன்னதை இவர் மறுத்துப் பிருகன்னளையே அந்த ஆச்சரியகரமான காரியத்தைச் செய்திருப்பானென்று, அந்த நபும்ஸகனை உனக்கு மேலாக வைத்துப் புகழ்ந்தார். பல தடவை நான் தடுத்தும் பலதடவை என்னை எதிர்த்துப் பேசினார். ஆகையால் நான் கோபங்கொண்டு என்னை அவமதித்த இவரை பாய்ச்சிகையால் அடித்தேன்" என்றான்.

உத்தரன் அதைக் கேட்டுக் கடுங்கோபங் கொண்டு "அரசே என்ன காரியம் செய்தீர்! நீரும் நானும் நமது வம்சமும் ராஜ்யமும் இப்பொழுதே அழிவதற்குச் சுலபமான வழியைத் தேடிக்கொண்டீரே! இவருடைய பாதங்களில் வேரற்ற மரம்போல்விழுந்து நாமெல்லோரும் இவருடைய கால்களை நமது தலையில் வைத்துக்கொண்டு,நீர் செய்த பாபத்தால் கோபித்து நம்மை அழிக்காமலிருக்க வேண்டுமென்று கெஞ்சிக் கேட்டு, அவர் நம்மை வலதுகையால் தொட்டு 'உன் குற்றத்தைப் பொறுத்து உன்னை மன்னித்தேன்' என்று சொல்லுகிற வரையில் எழுந்திருக்கக்கூடாது" என்றான். விராடன் பயத்தால் ஒடுங்கி, உத்தரன் சொன்ன வார்த்தைகளால் மனங் கலங்கி, யுதிஷ்டிரரை வணங்கித் தன்னை மன்னிக்கும்படி பிரார்த்தித்தான். தருமநந்தனர், "அரசே! நான் பிறந்ததுமுதல் பொறுமையையே விருதமாகக் கொண்டிருக்கிறேன். கோபத்திற்கு இடம் கொடேன். என் இரத்தம் பூமியில் விழுந்திருந்தால் இந்த ராஜ்யமும் நீங்களும் அப்பொழுதே அழிந்திருப்பீர்கள். எனக்குக் கொடிய தீங்கு செய்பவனையும் நான் கெடுக்க நினைக்கிறதில்லை. அவரவர்கள் செய்யும் கருமம் தகுந்த காலத்தில் பலத்தைக் கொடுக்கும்" என்றார்.

இரத்த தாரை ஓய்ந்து உலர்ந்த பிறகு அர்ச்சுனன் அங்கு வந்து, அரசனையும் தமையனையும் வணங்கி, அருகில் நின்றான். உத்தரன் விராடனைப் பார்த்து, "கௌரவ சைன்னியத்தை ஜயித்தவன் நானல்ல. அபூர்வமான சக்தியும்காந்தியும் பராக்கிரமமும்பொருந்தின ஓர் தேவகுமாரன் எனக்குத் துணையாயிருந்து ஜயத்தைக் கொடுத்தான். யுத்தம் முடிந்த பிறகு அவன் மறைந்தான். ஒருவேளை இன்றைக்கோ நாளைக்கோ இங்கே வந்தாலும் வரலா"மென்றான். அதற்குள் அர்ச்சுனன் பீமனைப் பார்த்து "அண்ணா! தருமபுத்திரர் முகத்தைமூடிக்கொண்டு என்னுடன் ஒன்றும் பேசாமலிருக்கக் காரணமென்ன" என்றான். அதைக் கேட்ட யுதிஷ்டிரர் அவ்விருவரையும் நோக்கி "விஜயா! நீயே கௌரவ சைன்னியத்தை ஜயித்தாயென்று நான் உன்னைப் புகழ்ந்து, பலதடவை விராடனைத் தடுத்துச் சொன்னபடியால், அந்த மூடன் பாய்ச்சிகையால் என்னைத் தலையில் அடித்துக் காயப்படுத்தினான். அந்த இரத்தத் துளிகள் பூமியில் விழாமற்செய்து, அது உலர்ந்த பிறகே உன்னை உள்ளேவரச்செய்தேன். இப்பொழுதும் அதைப்பார்த்து நீ கோபிக்கக்கூடாதென்றே முகத்தை மூடிக்கொண்டிருக்கிறேன். இதற்காக நீ விராடனைக் கொல்லாதே. இவ்வளவு காலம் அவனுடைய ராஜ்யத்தில் அஞ்ஞாதவாசம் செய்து அவனுக்கு நாம் கெடுதி நினைக்கக் கூடாது. மேலும், நம்மை இன்னாரென்று அறியாமல் அவன் அப்படிச் செய்தான். என் வார்த்தையை மீறி நடந்தால் உன் முகத்தைப் பார்க்கமாட்டேன்" என்றார். அதைக்கேட்டு பீமனும் அர்ச்சுனனும் உடல் பதறி "விராடனையும், அவனைச் சேர்ந்த யாவரையும் இப்பொழுதே கொன்று இந்த ராஜ்யத்தை தருமருக்குக் கொடுப்போம்"என்று சிங்கம்போல் பாய்ந்தெழுந்த தம்பிகளைத் தருமமும் பொறுமையுமே உருவாய்க்கொண்ட தருமபுத்திரர் தடுத்து, "நாளைக் காலையில் நாம் சுயவேஷத்துடன் சிங்காதனங்களில் இங்கே உட்கார்ந்திருப்போம். அப்பொழுதும் இவன் நம்மைத்

தகுந்தபடி உபசரிக்காவிட்டால் உன் இஷ்டப்படி செய்யலாம்'' என்றார்.

மறுநாள் பாண்டவர்கள் தங்களுடைய நிஜ ரூபத்துடன் விராடனுடைய சபாமண்டபத்தில் சிங்காதனங்களில் வீற்றிருந்தார்கள். விராடன் அங்கு வந்து அதைக் கண்டு திகைத்து வினவ, தனஞ்ஜயன் தங்களுடைய வரலாற்றைத் தெரிவித்தான். அதைக்கேட்டு விராடன் அடங்கா மகிழ்ச்சிகொண்டு, அவர்களைத் தகுந்தபடி உபசரித்துத் தன் ராஜ்யத்தை அவர்களுக்குக் கொடுத்து, தன் பெண்ணான உத்தரையை அர்ச்சுனனுடைய புத்திரனான அபிமன்யுவிற்கு மனைவியாகக் கொடுத்தான்.

பிறகு பாண்டவர்கள் உபப்பிலாவ்யமென்ற நகரத்திற்குச் சென்று, கிருஷ்ணன் முதலிய நண்பருக்குத் தூதர்களை அனுப்பி வருவித்து, மேல் நடக்கவேண்டிய காரியங்களைக் குறித்து ஆலோசனை செய்தார்கள். பாண்டவர்கள் எவ்வளவு நயமாய்க் கேட்டும் பலரால் சொல்லுவித்தும், துரியோதனன் பீஷ்ம துரோணாதியரின் ஆலோசனையையும் மீறிப் ''பாண்டவர்களுக்கு இந்த பூமியில் ஊசி நாட்டவும் இடம் கொடுக்கமாட்டே'' னென்று கண்டிப்பாய் மறுத்துவிட்டான்.

யுத்தத்தைத் தவிர வேறு வழியில்லையென்று கண்டு, பாண்டவர்கள் தங்களுடைய நண்பர்களையும் சைன்னியங்களையும் ஒன்று சேர்த்தார்கள். கௌரவர்களும் அப்படியே செய்தார்கள். துஷ்டர்களும் கொடியர்களும் அசுர ராட்சத அம்சங்களுக்குப் பிறந்தவர்ளும் துரியோதனனுடன் சேர்ந்தார்கள். சாதுக்களும், தருமவான்களும் தேவாம்சங்களுக்குப் பிறந்தவர்களும் பாண்டவர்களுக்கு உதவிசெய்தார்கள். தேவர்களும் ரிஷிகளும், பூமியின் பாரத்தைத் தீர்ப்பதற்காக அவதரித்த கண்ணபிரான் சேர்ந்திருக்கும் பாண்டவ கட்சியில் அபிமானம்வைத்து அவர்களுக்கு ஜயமும் கீர்த்தியும் ராஜ்யமும் கிடைக்கவேண்டுமென்று ஆசீர்வதித்தார்கள். பீஷ்மர் துரோணர் கிருபர்முதலிய சில பெரியோர் மாத்திரம் ராஜநீதியால் கௌரவர்களுக்குக் கட்டுப்பட்டு, அவர்களுக்காகப் போர்புரிந்தாலும், உண்மையாய்ப் பாண்டவர்களிடத்திலேயே அபிமானங்கொண்டு அவர்களுக்கே ஜயம் கிடைக்கவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள்.

துரியோதனனும் அர்ச்சுனனும், கிருஷ்ணனைத் தனக்கு உதவிசெய்ய வேண்ட, அவர் தான் முதலில் பார்த்த விஜயனுக்கேஓத்தாசை செய்வதாய் வாக்களித்து, ''ஆனால், நான் கௌரவர்களுக்கு விரோதமாய் ஆயுதம் எடுத்து யுத்தஞ் செய்யமாட்டேன். கிரீடி என்னை முதலில் வேண்டினதால் அவனுக்குத் தேர்ப்பாகனாயிருக்கிறேன்'' என்றார்.

ஏறக்குறைய அவருக்குச் சரியான திறமையுள்ள தேர்ப்பாகனைத் தனக்கு நண்பனும், பாண்டவர்களை ஜயிப்பதற்காகவும் அர்ச்சுனனைக் கொல்வதற்காகவும் முக்கியமாய் நம்பியிருந்தவனுமான கர்ணனுக்குச் சம்பாதித்துக்கொடுக்க விரும்பி, துரியோதனன் சமயம் பார்த்துக் கொண்டிருந்தான். அப்பொழுது பாண்டவர்களுக்கு மாமனான சல்லியராஜன் அவர்களுக்கு உதவிசெய்ய விரும்பித் தன் நகரத்திலிருந்து புறப்பட்டு, அஸ்தினபுரத்தை நோக்கி வந்துகொண்டிருந்தான். துரியோதனன் அதை அறிந்து, அவன் வரும் வழியில், எங்கும் நேர்த்தியான விடுதிகளையும் மாளிகைகளையும் தங்குமிடங்களையும் ஏற்படுத்தி, அவன் மனங்களிக்கும்படி உபசரிக்கச் செய்தான்.

சல்லியன் அதனால் அளற்ற சந்தோஷமடைந்து, ''இப்படி எனக்கு உபசரித்தவர்களை நான் பார்த்து வந்தனமளிக்கவேண்டும். அவர்களுக்கு வேண்டினதைச் செய்யக் கடமைப் பட்டிருக்கிறே''னென, அதுவரையில் அங்கே மறைந்துகொண்டிருந்த துரியோதனன், எதிரில் வந்து அடிபணிந்து, ''மாமா! தாங்கள் இப்பொழுது சொன்ன வார்த்தையையும் கொடுத்த வரத்தையும் பொய்யாக்கக்கூடாது. தங்களையே நம்பியிருக்கிறேன்'' என்றான். சல்லியன் அவனைக் கண்டவுடன் திடுக்கிட்டு, ''ஓகோ! இதென்ன! பெரிய மோசம் போலிருக்கிறதே! நாம் விசாரிக்காமல் முன்யோசனையின்றி, வாக்குத்தத்தம் செய்துவிட்டோமே''யென்று மயங்கித் ''துரியோதனா! எது எப்படியிருந்தாலும், சொன்ன சொல் தவறுவேன் என நினைக்காதே. உனக்குப்பிரியமானதைச் செய்வேன்'' என்றான்.

ஸ்கூல்களில் இங்கிலீஷ் மொழிபெயர்ப்பு

ENGLISH TRANSLATION IN SCHOOLS

[ஸ்ரீமான் P. B. விஜயராகவாசாரியார் அவர்கள், பீ.ஏ.]

பிரதம பாடசாலைகளிலும், உயர்தரப் பாடசாலைகளிலும் (Elementary and High Schools) தற்காலத்தில் இங்கிலீஷ் மொழிபெயர்ப்பு என்பதை கவனிப்பதே இல்லை. இங்கிலீஷ்பாஷையை, தமிழ் முதலிய நமது சுயபாஷை மூலமாய்ப் படிப்பிக்காமல், நேரில் இங்கிலீஷில் சம்பாஷணை விதமாயும் வேறு விதமாயும் படிப்பிக்க வேண்டுமென்கிற நூதனமுறைகள் வெகுவாய் அனுசரிக்கப்பட்டு வருகின்றன. இதை டைரேக்ட் மேதேட் (Direct method) என்று அதிக சிறப்பாகக் கொண்டாடுகிறார்கள். ஆகையால் இங்கிலீஷ் மொழிபெயர்ப்பு அத்தனை உபயோகப் படுகிறதில்லை. அதை உபயோகப் படுத்தவும் கூடாதென்று மேலதிகாரிகளும் அபிப்பிராயப்படுகிறபடியால் உபாத்தியாயர்கள் அதை விட்டுவிட வேண்டியதாயிற்று. பத்துப் பதினைந்து வருஷங்களுக்கு முன்னால் இவ்விதமான மொழிபெயர்ப்பு அதிக அவசியமானதென்றும் இங்கிலீஷ் படிப்பு அதன் மூலமாகவே நடக்கவேண்டுமென்றும் ஏற்பாடாயிருந்தது. டாக்டர் ப்ராக்ஷா, மிஸ்டர் கார்த்வெயிட், மிஸ்டர் மார்ஸ்டன், மிஸ்டர் பிக்கில் (Dr. Bradshaw, Mr. Garthwait, Mr. Marsden, Mr. Bickle) முதலிய இன்ஸ்பெக்டர்கள் அக்காலத்தில் இம்மொழிபெயர்ப்பை அதிக முக்கியமானதாகப் பாராட்டினார்கள். வித்தியா இலாகாவில் இதர அதிகாரிகளும் சென்னை யூனிவர்ஸிடியாரும், காலேஜ் ஹைஸ்கூல் உபாத்தியாயர்களும் அதை ஆமோதித்து அதன்படி நடத்திவந்தார்கள். இங்கிலீஷ் மொழிபெயர்ப்பு, ஸ்கூல்களிலும் காலேஜ்களிலும் முக்கிய பாடமாயிருந்தது. மெட்ரிகுலேஷன், எப்.ஏ., பி.ஏ., (Matric, F.A., B.A.,) முதலிய பரீக்ஷைகளில் இங்கிலீஷ் மொழிபெயர்ப்பு பேபர் ஒவ்வொன்றிலும் தனித்தனியாய் ஏற்பாடு செய்யப்பட்டு அந்த பரீக்ஷையின் மார்க்குகளை இங்கிலீஷ் வசனம், செய்யுள், வியாஸம் (Prose, Poetry and Composition) முதலிய பேபர்களுடன் சேர்த்துக்கொள்ளப்பட்டது. இவ்வாறு சிறப்புப் பெற்றிருந்த இங்கிலீஷ் மொழிபெயர்ப்பு இக்காலத்தில் அதிக இழிவான நிலையையடைந்துவிட்டது. மிஸ்டர் ஏட்ஸ், மிஸ்டர் மேஹியூ (Mr. Yates, Mr. Mayhew) முதலிய இக்காலத்திய இன்ஸ்பெக்டர்களும் மிஸ்டர் ஹண்டர் (Mr. Hunter) முதலிய யூனிவர்ஸிடி அதிகாரிகளும் இங்கிலீஷ் மொழிபெயர்ப்பு அனாவசியமென்று அபிப்பிராயப்பட்டார்கள். மிஸ்டர் ஏட்ஸ் துரையவர்கள் டைரேக்ட் மேதேட் (Direct method) என்கிற நூதன முறையை ஏற்பாடு செய்தார்கள். மிஸ்டர் நாகோஜிராவ் என்கிற இன்ஸ்பெக்டரவர்களும் அதை ஆமோதித்தார்கள். அதன் பிரகாரம் போதிக்கும்பொருட்டு புதுப்புஸ்தகங்கள் எழுதப்பட்டன. இவை, இதற்குமுன் கார்த்வெயிட் துரையவர்கள் எழுதிய புஸ்தகங்களுக்கு மாறாக இருந்தபடியாலும் புதுமாதிரியாக இருந்தபடியாலும் இவைகள் யாவராலும் அதிகப் பிரீதியுடன் ஏற்றுக்கொள்ளபட்டன. ஸ்கூல்களிலும் எலிமெண்டெரி பாடசாலைகளிலும் இந்த நூதனமுறையிலேயே இங்கிலீஷ் படிப்பிக்கும்படி ஏற்பாடுகள் செய்யப்பட்டன. யூனிவர்ஸிடிகளிலும் இங்கிலீஷ் மொழிபெயர்ப்பு என்கிற பரீக்ஷை நீக்கப்பட்டது. இப்பொழுது அது எவ்விடத்திலும் தலைமங்கிக் கிடக்கிறது. ஒன்றிரண்டு ஸ்கூலில் யாராவது சற்று அதை அபிமானிக்கப் பிரயத்தனப்பட்டால் உடனே மேலதிகாரிகள் அந்த உபாத்தியாயரை நீக்கிவிடும்படி சிபார்சு செய்கிறார்கள். மற்றவர்களும் அப்படிப்பட்டவரைக் கர்னாடகமென்று பரிகாசஞ் செய்கிறார்கள். இது நிற்க.

இந்த இங்கிலீஷ் மொழிபெயர்ப்பினுடைய உபயோகமானது அதிகாரிகளின் அபிப்பிராயத்திற்கிணங்க மாறிமாறி வந்தபோதிலும் அதன் உபயோகத்தைப்பற்றி சற்றுத் தனியாய் ஆராய்ச்சி செய்யப்புகுந்தால் அனேக அரியவிஷயங்கள் வெளியாகலாம். ஒரு ஆங்கிலேயனாவது அமெரிக்கனாவது ஜெர்மெனி அல்லது பிரான்சு பாஷையைக் கற்றுக்கொள்வது போல இந்தியர்கள் இங்கிலீஷ்பாஷையைக் கற்றுக் கொள்கிறார்களென்று சொல்வது சரியல்ல. அநேகமாய் வியாபார விவகாரங்க

ளுக்கும், ஒன்றிரண்டு பேர்கள் மாத்திரம் பாஷா ஞானத்தின்பொருட்டும் அவர்கள் அந்நியபாஷையைக் கற்றுக்கொள்கிறார்கள்.நாமோ அந்த நிலையி லிருக்கவில்லை. அதிக சீக்கிரத்தில் கூடியவரையில் பூரணமாக இங்கிலீஷ் பாஷையைக் கற்றுக் கொள்ளவேண்டியிருக்கிறது. இல்லாவிட்டால் நமக்கு ஜீவனமில்லை. நமது உயிர்நிலை அந்த பாஷையாயிருக்கிறது. தாய்ப்பாஷை வேறொன்றா யிருந்தபோதிலும் இந்தியர்களுக்கு எல்லா சங்கதியும் இங்கிலீஷ் மூலமாகவே ஆகவேண்டியிருக்கிறது. உதாரணமாக, இங்கிலீஷ்காரர்கள் தங்களது பார்லிமெண்டில் பிரஞ்சு பாஷையிலாவது ஜெர்மன் பாஷையிலாவது பேசவேண்டுமென்றிருப்பதாக வைத்துக்கொண்டால், அப்பொழுது அவர்கள் அந்த அந்நியபாஷைகளில் அடைந்திருக்கிற அபிவிர்த்தியும் பாண்டித்யமும் அவைகளை ஸ்கூல்களில் போதிக்கும் முறைகளும் எத்தன்மையானவையென்று நன்றாய் வெளியாகும். ஆதலால் இந்தியாவில் படிக்கும் பாஷை விஷயமாகவும் அதை போதிக்கும்படி ஏற்பாடாயிருக்கும் போதனா முறை விஷயமாகவும் நாம் தனியாய் ஆராய்ச்சி செய்து முடிவிற்கு வரவேண்டுமே தவிர இதர தேசங்களில் நடந்துவரும் நடவடிக்கைகளைப் பார்த்து அவைகளை இந்தியாவிலும் நடத்திவைக்க முயல்வது கொஞ்சமும் பயன்படாது. ஆங்கில அரசாட்சிக்குட்பட்ட நமது இந்தியாவின் விஷயங்களெல்லாம் தனியாயிருப்பதினால் வேறு ஒன்றைப்பார்த்து அதைப்போல் இங்கே அநுஷ்டிக்கலாமென்கிறவிவகாரம் ஒன்றுமில்லை. ஆகையால் நூதன போதனா முறைகளை அநுஷ்டிப்பது அவசியமென்று ஒத்துக்கொண்டாலும் வேறு நிலைமையிலுள்ள அயல்நாட்டு அநுபவங்களை ஆதாரமாக வைத்துக்கொண்டு, நமது நாட்டில் ஆதரிக்கப்பட்டுவரும் போதனா முறைகளைத் தள்ளிவிடுவது அத்தனை மேன்மையான செயல் அல்ல. இப்படி சொல்வதினாலேயே அநுபவ ஞானத்திற்கு குறைசொல்ல வந்தவனாக எண்ணக்கூடாது. அந்நியநாட்டு சம்பந்தமானதென்று இகழ்ந்து பேசினதாகவும் நினைக்கக் கூடாது. அநுபவத்தினால் அடைந்த ஞானம் அதாவது சாஸ்திர பரிசயத்தினாலும் உலக விவகாரத்தினாலும் அடையக்கூடிய ஞானமானது நிச்சய ஞானமாகும். திடமான ஞானமென்றே சொல்லவேண்டும். இவைகளைத் தெரிந்துகொண்டு நமது சந்தர்ப்பத்திற்குத் தக்கபடி அமைத்து யுக்தாயுக்தங்களைக் கண்டறிந்து அதிக நுட்பபுத்தியுடன் பகுத்தறியக்கூடியமகான்கள் கைப்பட்டு தேறி வந்தால் அவைகளின் உபயோகம் நன்கு நிலைபெறும்.அப்படிக்கின்றி அந்நிய நாட்டிலிருந்து வந்ததென்கிற காரணத்திற்காகவே அவைகள் நன்மையாகவும் உபயோகமுடையனவாகவும் இருக்கவேண்டுமென்று எண்ணக்கூடாது. ஆகையால் சற்று நிதானித்து ஆராய்ச்சி செய்தால் இந்த நூதன முறைப்படி இங்கிலீஷ் படிப்பதினால் முன்னைவிட எத்தனை அதிகமாக பலன் பெறலாமென்று எண்ணினோமோ அத்தனை சிறப்பாக ஒரு பலனும் உண்டாகவில்லை யென்பது நன்கு விளங்கும். ஸர். பி. எஸ். சிவஸ்வாமி ஐயர் அவர்கள் உபாத்தியாயர் ஸபையில் பேசினபொழுது சொன்னதாவது: "இப்பொழுது அதிக முக்கியமாய் கவனித்து ஆதரிக்கப்படுகிற இந்த டைரெக்ட் மெதேட். (Direct Method) என்னும் போதனா முறையினால்தான் இக்காலத்தில் இங்கிலீஷ் படிப்பு அத்தனை நன்றாய் விருத்தியடையவில்லை யென்று நான் எண்ணுகிறேன். இங்கிலீஷ் சிறுவன் ஒருவன், அப்படி இங்கிலீஷில் பேசவேண்டுமென்று எல்லா உபாத்தியாயர்களும் எதிர்பார்க்கலாம். ஆனால் இந்தியச் சிறுவர்கள் அவ்வாறு இங்கிலீஷிலேயே நினைக்கவேண்டுமென்றும், இங்கிலீஷிலேயே பேசவேண்டுமென்றும் விரும்புவது சாத்தியமல்ல. இப்படி சொல்வதினாலேயே இந்த டைரெக்ட் மெதேட் (Direct method) போதனா முறையில் உபயோகமில்லை யென்று சொல்லவந்தவனல்ல. அதைமட்டும் அநுசரித்து மற்றமுறைகளை இகழ்ந்துவிடக் கூடாதென்பதுதான் எனது அபிப்பிராயம்.இதற்கு முன்னெல்லாம் மொழி பெயர்ப்பும் இலக்கணமும் கூடப் படிப்பித்தார்களென்றும், அதனால் விர்த்தி விசேஷமென்றும் எனக்குத் தோன்றுகிறது." இந்த போதனா முறையினால் விசேஷ பயனடையாமையினால், பாடங்களையும் படிப்பிக்கும் உபாத்தியாயர்களையும், படிக்கும் பிள்ளைகளையும் தூஷிக்கக்கூடாது. இந்த போதனா முறையை மாற்றி வேறுமுறை தக்கவாறு தக்க அநுபவ

முள்ளவர்களைக் கொண்டு ஏற்பாடு செய்ய வேண்டும். ஸ்கூல் பரீக்ஷைகளிலும் யூனிவர்ஸிடி பரீக்ஷைகளிலும் கவர்ன்மெண்ட் பரீக்ஷைகளிலும் இங்கிலீஷில் அநேகர் திருப்திகரமாக மார்க்குகள் பெறவில்லையென்று புலப்பட்டவுடன், பரீக்ஷை பாடங்களையும் பரீக்ஷை வினாக்களையும் பரீக்ஷைக்கு வரும் பிள்ளைகளையும் பரீக்ஷை செய்பவர்களையும், பரீக்ஷையில் மார்க்கு போடுபவர்களையும், அவரவருடைய அபிப்பிராயத்திற்குத் தக்கபடி இந்த கெடுதிகளுக்கு காரணமென்று தூஷிப்பது வழக்கமாயிருக்கிறது. அப்படி செய்யாமல், போதனை முறையை மாற்றி, தக்க அனுபவமுள்ளவர்களைக்கொண்டு அநுஷ்டித்துப் பார்த்து அதன் பின்பு இவ்வாறு குற்றம் கூறினால் சற்று யோசிக்க இடமுண்டாகலாமென்று தோன்றுகிறது. இவ்வாறு ஆலோசித்துப் பார்த்தால் இந்த இங்கிலீஷ் மொழிபெயர்ப்பின் உபயோகம் நமக்கு நன்கு விளங்கும்.

இந்த இங்கிலீஷ் மொழிபெயர்ப்பு மாத்திரம் அல்ல. எந்த விஷயத்தை போதிக்க வேண்டுமானாலும் குழந்தைகளின் சுபாவம் உலகத்தின் இயற்கையைப்போல் அநேக விதமாக இருப்பதினால் ஒன்றை போதிப்பதற்கு ஒரே வழிதான் சிறந்தவழியென்று நினைக்கக் கூடாது. எந்த முறையாயிருந்தாலும் சந்தர்ப்பத்திற்கும் அந்தந்த சமயத்திற்கும் தக்கபடி அதை அமைத்துக்கொள்ளாமல், சித்திரப்பாவைபோலும் யந்திரம்போலும் "கொக்குக்கு ஒன்றே மதி" என்பதுபோல ஒரே வழியில் நடத்திவந்தால் ஒருமுறையும் பயனைத்தரமாட்டாது. ஆகையால் நல்ல போதனாமுறையை ஒரு பெரியவர் எடுத்துக் காட்டினபோதிலும் அதை அநுஷ்டிக்கும் உபாத்தியாயர், எப்பொழுது மொழிபெயர்ப்பு நடத்தவேண்டும், எப்பொழுது வாய்க்கேள்வியில் போதிக்க வேண்டும், எப்பொழுது கரும்பலகையில் எழுதவேண்டும், எப்பொழுது சிறுவர்கள் தங்களுடைய புஸ்தகத்தில் எழுதிக்கொள்ள வேண்டும் என்று இத்தன்மையாக உபாத்தியாயர்கள் அறிந்து ஒழுகாவிட்டால் இங்கிலீஷ் மொழிபெயர்ப்பு மாத்திரம் அல்ல, மற்ற எந்தப் பாடமும் பயனற்றதாய்விடும். ஆகையால் உபாத்தியாயர் தினந்தோறும் முன்னதாக ஒவ்வொரு பாடத்தையும் தயார் செய்து கொண்டு வரவேண்டும். பிறகு படிப்பிலும் ஒருபொழுதும் சற்றும் தயங்காமலும் மோசம் போகாமலும் படிப்பில் எல்லா வழியிலும் மனது எச்சரிக்கையாயிருக்க வேண்டும்.

முதல்முதல், மொழிபெயர்ப்பு என்பதன் அர்த்தமென்ன என்று பார்ப்போம். நமது தாய்பாஷையிலிருந்து அதல்லாத வேறொரு பாஷையில், அதாவது இங்கிலீஷ் பாஷையில் விஷயங்களை வெளிப்படுத்துதலாகும். இதனால் அந்த அந்நிய பாஷையாகிய இங்கிலீஷில் பாஷாஞானம் புதிதாய் விருத்தி செய்ய சாத்தியமாகுமென்பது அல்ல. இதுவரையில் அறிந்தமட்டும் சரியாக அறியப்பட்டதாவென்று கண்டுகொள்வதே மொழிபெயர்ப்பின் முக்கிய தாத்பரியம். ஆகையால் மொழிபெயர்ப்பு பாஷாஞானத்தின் அப்பியாசமுறையாகும். இங்கிலீஷ் பாஷையில் கொஞ்சம் பயிற்சி யடைந்ததும் அந்த பாஷையில் கற்றுக்கொண்ட பதங்களும், பதப்பிரயோகங்களும் இலக்கணமுறைகளும் சரியாய் அறியப்பட்டனவா வென்று இந்த மொழிபெயர்ப்பு முறையினால் பரீட்சித்தறிகிறோம். ஆனால் வியாசம் எழுதுவதற்கும், மொழிபெயர்ப்புக்கும் என்ன வித்தியாஸம் என்றால் வியாசத்தில்கொடுக்கப்பட்ட விஷயத்தையும் அதன்நோக்கத்தையும் மாறாமல் வைத்துக்கொண்டால் பதப்பிரயோகத்திலும் சொற்சாதுரியத்திலும் வார்த்தைநயத்திலும் சொல்வன்மையிலும், எழுதுவோர் சுயேச்சையாய்எழுதலாம். ஆனால் மொழிபெயர்ப்பிலோ விஷயவர்ணனையும்அளவுபட்டசொல்நயமும் பதப்பிரயோகமும் கூட அந்த புது பாஷையின் போக்குக்குத்தக்கபடி ஒழுங்குபட்டு இயலவேண்டியிருப்பதால் எழுதுவோர்க்கு சுயேச்சைகுறைந்து அதிநுட்பமாய் பதங்களை தேடித்தேடி அமைத்து பாஷைக்குத்தக்கபடி பிரயோகத்தையும்மாற்ற வேண்டியிருக்கிறது. ஆதலால் மொழிபெயர்ப்பில் கல்விப்பயிற்சியானது அதிக வருத்தந்தரத்தக்கதாயிருப்பதோடு ஞானத்தையும் நன்றாய்ப் பரீக்ஷிக்கஹேதுவாகிறது. வியாசமென்பதுவிஷயவர்ணனையின் பயிற்சியாகும். மொழிபெயர்ப்பு பாஷா ஞானத்தின்பரீக்ஷையாகும். ஆகையால் மொழிபெயர்ப்பு அப்பியாசங்களையும் பாடங்களையும் திருத்தி, பிழைகளை எடுத்துக்காட்டு

வது உபாத்தியாயருக்கு அதிக கஷ்டம். வியாசம் எழுதுவதிலும் அவைகளைத் திருத்திக் கொடுப்பதிலும் அத்தனை கஷ்டம் உண்டாக இடமில்லை. ஆகையால் அடியில்வரும் தீர்மானங்கள் முக்கியமாய் கவனிக்கத்தக்கவை.

(1) மொழிபெயர்ப்பு என்பது பாஷாபிவிருத்தியைக் கொடுக்காவிட்டாலும் அறிந்தமட்டில் சரியென்பதை நிச்சயித்துக்கொடுக்கும்.

(2) இதில் சிறுவர்கள் தாங்கள் அறிந்துகொண்ட பதங்களையும் பிரயோகமுறைகளையும் இலக்கண விதிகளையும் அநுஷ்டிக்க அவசியம் ஏற்படுகிறது.

(3) சிறுவர்கள் பாஷையை நன்ருய் அறிந்துகொண்டு சந்தர்ப்பத்திற்கும் வாக்கியங்களுக்கும் பொருந்தும்படி பதங்களை தேர்ந்தெடுத்து உபயோகிக்கப் பழகுகிருர்கள்.

(4) இந்தியர் எளிதில் தமது அபிப்பிராயங்களை இங்கிலீஷ்பாஷையில் வெளியிடவும் அந்த பாஷையின் சொல்நயத்தை அறியவும் வல்லவராவர். ஆயினும் இந்தியரின் தன்மதிப்பும் சுய அபிப்பிராயங்களும் இந்து எண்ணங்களும் மாருமலிருக்கும்.

(5) இந்தியர்கள் இந்தியா தேசத்திலேயே இருக்கவேண்டியவர்களாதலாலும், இந்தியராகவே இருக்க முயலவேண்டுமாதலாலும் இந்திய பாஷையிலும் அவரவர் சுயபாஷையிலும் நினைத்து, எண்ணங்களையும் அபிப்பிராயங்களையும் கொள்ளவேண்டியவர்களாதலாலும் இந்திய பாஷைகளைக் கற்று அதிலேயே எண்ணத்தையும் ஞானத்தையும் விருத்தி செய்யவேண்டும். ஆனல் இங்கிலீஷ் இராஜாங்கத்தில் இருந்துவருவதாலும் இங்கிலீஷ் துரைத்தனத்தில் உத்தியோகம், விவகாரம் முதலியன நடத்த வேண்டியிருத்தலாலும் இங்கிலீஷ்பாஷையில் தங்கள் அபிப்பிராயங்களையும் எண்ணங்களையும் மொழிபெயர்த்து வெளியிட அதிசீக்கிரத்தில் பழகவேண்டும்.

(6) இந்தியர்களாக இருப்பதற்கும் அவரவர்களுடைய தாய்ப் பாஷையை விருத்திசெய்ய வேண்டும். இராஜாங்கத்தில் வாழ்ந்துவருவதற்குஇங்கிலீஷ்பாஷை வேண்டும். அதை எளிதிலும் சீக்கிரத்திலும் கற்றுக்கொள்வதற்கு இங்கிலீஷ் மொழிபெயர்ப்பு முக்கிய கருவியாகும். அதைக்கைக்கொண்டொழுகுவது இரண்டுபாஷையில் பயிற்சிக்கும் பயன்கொடுக்கும். மொழிபெயர்ப்பை நீக்கிவிட்டு நமது தாய்ப் பாஷையையும் அலக்ஷியம் செய்து, இங்கிலீஷிலேயே பிறந்து வளர்ந்தவர்களைப்போலவே நமது சிறுவர்களை பயிற்சி செய்யவேண்டுமென்று முயற்சிசெய்தால் நமது இந்திய நிலைமையையும் தாய்பாஷையையும் இழக்கும்படி வருமேதவிர இங்கிலீஷ் மனிதர்களாகவும் இங்கிலாந்து தேசத்தவர்களாகவும் அத்தேசத்திலேயே பிறந்து வளர்ந்து வந்தவர்களாகவும் ஒருக்காலும் ஆய்விடமாட்டோம். இந்தியர்கள் என்கிற தனிமையையும் பெருமையையும் இழந்து ஒன்றிரண்டு பேர்கள்தவிர மற்றவர்களெல்லோரும் தாய்ப்பாஷையிலும் பயிற்சியில்லாமல் இங்கிலீஷிலும் ஞான முதிர்ச்சியில்லாமல் இருஜாதி மனிதர்களாய் இரண்டுபாஷையை சேர்த்துப்பேசுபவர்களாய் ஆய்விடுவோம்.

கபிலர்

KAPILAR

[ஸ்ரீமான் பண்டித உலகநாதபிள்ளை அவர்கள்.]

'மூத்தோர், இளையவர், உயர்ந்தவர், தாழ்ந்தோர், நோயாளர் என்ற இன்னோரில், பொருள் கொடுப்பவர் யாவரேயாயினும் அன்னோரை வரைவின்றி ஏற்றுக்கோடலின், இவரை வரைவின்மகளிர் என்பர். இம்மகளிர் கூட்டம், தீராநோயும் மீளாநரகமும் விளைப்பதாகும். இருமணப் பெண்டிராகிய இவரது நட்பினைத் திருமகள் துறந்தவரன்றே காமுறுவர்? இம்மகளிர்வாய் இன்சொல் தூண்டிலினுட் பொதிந்த தேரையன்ருே? புலைமயக்கம் வேண்டினேரே பொருட் பெண்டிர்த்தோய்வர். பொருளுள்ளமட்டும் போற்றிப் பறித்து அற்றதறிந்து முற்றத்தில் ஓட்டும் இவரது உறவும் உறவாமோ? இதனலன்ருே வேசையர் நட்பும் விளக்கின் ஒளியும் ஒன்று என்கின்றனர் சான்ருேர்; பாம்பிற்குத் தலையும் மீனுக்கு வாலும் காட்டும் மலங்கு போலஎல்லோரிடத்தும் அன்புடையவர்போல

நடிக்கும் இவரை நச்சுதலினும், நஞ்சை நச்சி டினும் உஞ்சு பிழைக்கலாமே. அந்தோ! தன் மனையாளைத் தனிமனை யிருத்திப் பரத் தையர் நாடும் பதகனும் பதரன்றே? 'மைவிழி யார்தமைக் கையன்றெழுகு' என்னும் முது மொழியும் அயர்த்தனை போலும். இவரோடு உடனுறைதல் அறனும் அன்று; ஆன்ற ஒழுக்கமும் ஆகாதே. ஆதலால், பரத்தை யைத் துறந்து, கண்ணகியோடு இன்புற்று வாழுதி; அதுவே அறமாகும்; அன்றிப் புகழு மாம்; அன்றே யாமும் பரிசில் பெற்றவரா வோம்' என்று இடித்துரைத்தனர்.

இவ்வனைத்தையும் கேட்ட பேகன், 'ஆ! ஆ!! இந்நல்லோர் குழந்தையின் பிணிக்குத் தாய் மருந்துண்பதுபோல, என் பழியொழிக் கத் தாம் வருந்தி வந்தனர். இன்னவர் வாய்ச் சொற்கள், வேம்பும் கடுவும்போலத் தோன்றி னும், என்னுயிர்க்கு உறுதிபயப்பன என்ப தில் ஐயம் சிறிதுமில்லை. இதனை அறிந்து வைத்தும் இனித் தாழ்ப்பேனாயின், இவர் என்னைக் கைவிடுவர். நல்லவர் நட்பினைக் கைவிடுவேனாயின், பல்லாரோடு பகைகொள் வதினும் பதின்மடங்கு தீங்குண்டாம். எவ ரோடு பகைகொள்ளினும், புலவரோடு பகை கொள்ளலாகாதே' என நினைத்தவுடனே, பரத் தைபால் தான்வைத்த பாசம் அகல்வதா யிற்று; அகலவே நல்லறிவு தலைப்பட்டது; தலைப்படவே, 'ஏனையோரைப்போல் இரந் துரையாது, புலவர் பெருமான், இடித்துரை த்த நன்மொழியே என் புன்மையைக் கழு விப் புகழ் நிறுத்தற்கு ஏதுவாயிருந்தது. இவ் விழுமியோரை எழுமையும் மறவேன்' என நினைந்து பரத்தையை மறந்து, புலவர் பெரு மக்களைத் தேர் மீதேற்றித் தேரை நடத்தித் தன்னகரடைந்து, வேண்டும் பரிசளித்து விடைகொண்டு, கண்ணகியோடு இல்லற நடத்தி இனிதிருந்தனன். கபிலரும் மற் றைய புலவருடன் மதுரையை அடைவா ராயினர்.

5. கபிலர் இருப்பை மலர்க்கு காட்டிய உவமை

மலைநாட்டு நல்லூரினின்று மதுரை அடைந் தகபிலர் மாலைமணக்கும் மார்பினையும், பாவ டியானையைப் பரிசிலர்க்கு அருகாது வழங்கு தலையும், மறப்போர் செய்யும வன்மையையும் உடைய வள்ளியோன் அகுதையென்பவனைப் பாடிப் பரிசில் பெற்றுச், சங்கமண்டபத்தை அணுகச், சங்கத்தினர் யாரும் எதிர்வந்து வர வேற்று முகமனுரைத்து, அழைத்துப்போய் அளவளாவி இருக்கையில், 'புலனழுக்கற்ற அந்தணர் பெருமானே! எந்தெந்த நாடுசென்று எவ்வெவர்க்கு இன்னருள் புரிந்தீர், அறிதற் குப்பெரிதும் அவாவினேம்' என்றுரைத்த னர்.

அதற்குக் கபிலர் 'புலவீர்! மலையமானாடு சென்றடைந்தோம். அங்கு யார்க்கும் ஒரு படித்தாகப் பரிசில் அளித்து வந்த வள்ளி யோன் திருமுடிக்காரியை வரிசையறிந்து பரி சில் வழங்குமாறு திருத்தினேம். ஆவியர் பெருமகன் பேகன், தன்மனையாள் கண்ணகி யைத் துறந்து பரத்தையோடு வாழ்ந்திருந்த னன்; அவனை, அக்கணிகையைக் கையகன்று கண்ணகியோடு உடனுறையுமாறு நல்லறிவு புகட்டினேம்,' எனக்கேட்டுமகிழ்ந்த அவையத் தினர், 'அன்பார்ந்த உள்ளத்தீர்! அங்கயற்கண் ணிபங்கனது அருள்பெற்ற நீர் உமக்கு அடுத்த தொன்றைச் செய்தீர்; நும் அருஞ்செய்கை யைப் புகழ்ந்துரைக்க எம்மனோர்க்கு எளிதன் றே' என்றுரைக்க, 'நன்று கூறினீர்; என் செ யலாவது யாதொன்றுமில்லை; எல்லாம் எனையா ளும் ஈசன்செயல்' என்றனர்.

இஃதிவ்வாறாக; ஒருநாட்காலையில், 'தவத் திற்கொருவர் தமிழுக்கிருவர்' என்னும் பழ மொழிக்கிணங்கத் தம்மைவிட்டு நீங்காது நிழல்போல் உடனிருந்து தமிழாராயும் பரண ரோடு வையையாற்றங் கரையோரமாகச் சென்றுகொண்டிருந்தனர் கபிலர்.

அங்கு, வண்டுகள் தேனுண்டு இன்னிசை பாட, மணம் கமழ மலர்ந்து நின்றன இருப் பைகள். அன்றுதிர்ந்த வெண்மலரும், வாடிச் சுருங்கிய செம்மலரும், அடியில் பரந்துகிடந் தன. இளம்புலவர், இருவர் 'இவ்விருப்பை யின் நாண்மலர் ஒருவிதமாகவும், செம்மல் பிறிதொரு வண்ணமுமாகக் காணப்படுகின் றது; இவற்றை எவற்றிற்கு ஒப்பிடலாம்' எனத் தம்மில் உசாவி நின்றனர்.

அப்பொழுது அவர்களை அணுகிய நம் புல வர், 'மக்காள்! இயற்கைப்பொருளை இற்றெனக் காணும் உங்கள தன்மையை மகிழ்கின்றேன்; நும்பால்வாரைக்காண்பதில் எனக்குப் பெரு

விருப்பம்; இவ்வாறு எதனையும் ஊன்றிநோக்கும் தன்மை எல்லோர்க்கும் உண்டாவதில்லை; இதனைவிடாது பழகிடுவீராயின்,உங்கள்மனம் பெரிதும் மகிழ்வடையப், பின்னர்க் காண்பீர்கள்; நூல்களில், ஏதேனும் உவமம் கூறியிருப்பின், அவ்வுவமைக்கும் பொருளுக்கும் உள்ள ஒற்றுமையை, நேரிற் காணும்பொழுது உண்டாகும் இன்பம்போல அவற்றைக் காண்பதன் முன் உண்டாகாதென்பதை இனிப் பழக்கத்தில் காண்மின். இப்பக்கங்களில் இருப்பை மரங்கள் மிக உண்டு என்பதை யாரும் அறிவீர்; இம்மலர்களை நன்குணர்வேன்; இவற்றை இன்னதற்கு உவமிக்கலாம் என இப்பொழுதே கூறுதற்கு எனக்கு இயலுமெனினும், பொருளையும் உவமத்தையும் உடன்வைத்துக் காட்டுவதுபோ லாகாது; ஆதலால், ஒருவர் நாண்மலரையும், மற்றவர் பழம்பூக்களையும் கைக்கொண்டு என்னோடு வருக' எனப்பணித்திட்டு, மூவரும் பின்வர, முன் நடந்து வையையின் திருமருதந்துறையை அடைந்தனர்.

அன்று தைந்நீராடு நன்னாளாதலால், மகளிரும் மைந்தரும், பிடியினும் களிற்றினும் நிரை நிரையாகப்போந்து கரைக்கண் இறங்கிப், பூவும் சாந்தும், அவியும், பொன்னும் மணியாலும் செய்வித்த மீன், தவளை, அன்னம், குரண்டம் முதலியவும் நீரில் விடுத்து வையையை விதிப்படிவழிபட்டு நீராடுவாராயினர்.

பாகர்கள், காரென முழங்குகளிற்றினைப் பிடியோடு நீராட்டி, நெற்றியில் ஓடைமின்னச் செவியில் கவரிதூங்கக், கழுத்தில் புரசை தயங்க, மருங்கில் மணியிரட்ட ஒருபால் நிறுத்திவாலரியும் கட்டியும் நெய்யிட்டுப் பிசைந்தகவளத்தை அருத்தி நின்றனர்.

அச்சமயத்தில், புலவர் புகழும் பெரும் புலவர், மழபுலவர் இருவரையும், மென்னடைப் பிடியின் மருங்கில் அழைத்துப்போய் 'இப்பிடியின் வெண்கோடுகளை நோக்குமின்; அவை வாடாத வெண்மலரை நிகர்க்கின்றன காண்மின்' என, அவர்கள் கண்டு வியந்து நிற்கையில், 'மற்றொன்றற்கும் உவமை காட்டுவேன் வம்மின்'' எனவுரைத்து முன்செல்ல, அன்னவரும் பின்சென்று பரதர்சேரியைத் தலைப்பட்டனர்.

அச்சேரியின் மறுகுகளில், ஓலையான்மிடைந்த சிறு கூரைகள் செறிந்திருந்தன. தூண்டிலும் வலைகளும் தூங்கிக்கிடந்தன. பரதர் நீராடிச் சுறுக்கோடு நட்டுக், கண்டல்மலர் சூடி, வலைவளம் வாய்ப்பவேண்டிக் கடற்றெய்வம் பராவி நின்றனர். புன்னைப்பூவின் நன் மணத்தால், புலான் மணம் அடங்கிய அந்நுளையர் பாடியில், பருந்துகள் வட்டமிட்டுலவக், காக்கைகள் கரைந்து பந்தரிட, முற்றந்தோறும் மீன் உணக்கினர் பரத்திமார். சிற்சிலர் முன்றிலின்கண் பைந்தலைச் சிறுவர்கள் புள்ளோப்பச் செந்தலை இறுன் மீன்கள் உணங்கிக் கிடந்தன.

அம்முற்றத்தைச் சென்றணுகிய அந்தணர் பெருந்தகை, 'நும்கையிலுள்ள பழம்பூக்களை, இச்செந்தலை இறுன்மீனோடு ஒப்புக்கண்டறிமின்' என அவர்க்குக் கூறி,

''நெட்டிலை யிருப்பை வட்ட வொண்பூ
வாடா தாயிற் பீடுடைப் பிடியின்
கோடேய்க் கும்மே. வாடிலோ பைந்தலைப்
பரதர் மனைதொறும் உணங்கும்
செந்தலை யிறவின் சீரேய்க் கும்மே''

என்று பாடினர்.

அவ்விருவரும், 'இப்புலவர் பெருமான், இருப்பை மலர்க்கு உவமை காட்டியதும், அதனைச் செய்யுளில் அமைத்து இத்தனை விரைவாகப் பாடியதும் வியப்பினும் வியப்பு!' எனத் தம்மில் வியந்து புகழ்ந்து நிற்கையில், அருகில் இருந்தபரணர்,'இஃதுஎன்னவியப்புக்கண்டீர்? இவரது இயற்கையை ஏனையோரினும் யானே நன்குணர்வேன். இவர்க்கு இடைக்காடனார் முதலிய நண்பர் பலர் இருப்பினும், என்னைப்போல இணைபிரியாமல் உடனிருப்பவர் பிறரில்லை. அதனை அறிந்த ஆசிரியன்மார், உம்மைத்தொகைக்கு எடுத்துக் காட்டாக, கபிலர் பரணர் என எம்மையே எடுத்தாளுகின்றனர். இது நிற்க, ஒன்பது வகைப்பட்ட சுவைகளில், நகைச்சுவை பிறத்தற்கு நிலைக்களமாக உள்ளனவற்றுள், ஆரியர்கூறும் தமிழும் ஒன்றெனக் காட்டுவர் சான்றோர்; அதற்குமாறாக, ஆரிய மன்னன் பிரகத்தனைத் தமிழறிவுறுத்துப், புலவர் பாராட்டும் பொருட்டுறை தழுவிய இனியசெய்யுள் இயற்றவல்ல புலவனாக்கினர் இவர் எனின், இவரது சதுரப்பாட்டினை என்னுரைப்பேன்? அது கிடக்க. இயற்கைப் பொருளினை, எடுத்துவமிக்கும் இவரது இயல்பினைச் சிறிது காட்டுவேன்; கேண்மின்.

நமது சிறு கதை
OUR SHORT STORY

[ஸ்ரீமதி சம்பகவல்லி அம்மாள்.]

காலத்தின் கோலம்

(357-ம் பக்கத்தொடர்ச்சி.)

IV

விவாகம்கழிந்து ஒன்றிரண்டு நாள் மாமி வீட்டிலிருந்துவிட்டுப் பிறகு தாய்வீடு வந்து கொஞ்சகாலம் தங்கியிருப்பது வங்காளிகளுள் வழக்கம். விநோதன் மதனி அவன் மாமியிடம், "நகைகள் செய்ய நாளாகும். ஆகையால் இன்னும் இரண்டு வாரங்கள் கழித்துத்தான் மருமகளை உங்கள் வீட்டுக்கனுப்ப முடியும்" என்றாள்.

அதற்குத் தாய் "அதற்கென்ன? நீங்களோ பக்கத்தி லிருக்கிறீர்கள். அடிக்கடி பல்லக்கை அனுப்பி அவளை வரவழைத்துப் பார்த்துவிட்டுத் திருப்பியனுப்பிவிடுகிறேன். தற்சமயத்துக்கு அதுபோதும்" என்றாள். அருகே நின்றிருந்த ஒரு இளம்பெண், "பெண்கள், இந்தக்காலத்தில் முன்போல் மாமிவீட்டுபோகிற தென்றால் அழுகிறதில்லை. மாமிவீடு வந்த இரண்டுநாட்களுக்கெல்லாம் தங்கள் கணவர்களுடன் மிகவும் கூட்டாளிகளாகிவிடுகிறார்கள்" என்றாள்.

விவாகம் கழிந்து ஒருவாரமாயிற்று. விநோதன் கல்கத்தாவுக்குப் போவதைப்பற்றி ஒரு வார்த்தையும் பிரஸ்தாபிக்கவேயில்லை. பரிகசிக்கும் உறவினர் விநோதனை நோக்கிக் கண்ணைச் சிமிட்டிப் பரிகசிக்கலாயினர். மதனி விநோதனை அணுகி, "தம்பி, இனிமேல் நகைகள் செய்யாமல் தாமதம் செய்தால் நன்றாயிராது. நேற்று, பெண்ணின் அத்தையைப் பார்த்தேன். நகைகள் வந்துவிட்டனவா என்று விசாரித்தாள்" என்றாள்.

"என்னை இவ்விடத்திலிருந்து துரத்திவிட விரும்புகிறாயா என்ன மதனி? நீ நல்ல சிநேகிதிதான்!" என்றான் விநோதன்.

"அது எனக்குத் தெரிகிறது தம்பி. ஆயினும் அவர்களைத் திருப்திசெய்ய நீ ஏதாவது செய்யவேண்டும். அதிகாலையில் புறப்பட்டுக் கல்கத்தாவுக்குப் போ. தங்கத்தை வாங்கு. தட்டானைக் கூப்பிட்டு நகைகளைப் பண்ணக் கொடு. அபலா அக்காவைப் பார்த்துக்கொள்ளச்சொல்லு. பிறகு சாயுங்காலம் புறப்பட்டுப் பாதி ராத்திரியில் இங்கே வருகிறதே, அந்த ரயிலில் ஏறி வந்துவிடு. உனக்குச் சாப்பாடு, உன் படுக்கை அறையிலேயே வைத்துவிடுகிறேன்."

"நீ சொல்வது மிகவும் சரி மதனி!" என்றான் விநோதன்.

மறுநாட்காலையிலேயே விநோதன் கல்கத்தாவுக்குப் புறப்படவேணுமென்று தீர்மானமாயிற்று. இரவாயிற்று. சாப்பாடாய்ப் படுத்துக்கொள்ளும் நேரம் வந்தது. தங்கள் படுக்கைகளை ஜன்னலுக்கருகில் போட்டுக்கொண்டு சரத்குமாரியும்விநோதனும் படுத்துக்கொண்டனர். சந்திர கிரணத்தில் வெளிப்புறமிருந்த தோட்டம் முழுகி மனோகரமாய் விளங்கிற்று. மந்தமாருதம் மெல்லென வீசிற்று.

விநோதன், வழக்கத்தைவிட அதிக அமைதியுடனிருந்தான். சரத்குமாரி, "நீங்கள் எதைப் பற்றி நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டாள்.

"கஷ்டத்தைப் பற்றித்தான்"

"என்ன கஷ்டம்?" என்று அச்சிறுமி ஆவலுடன் கேட்டாள். "அதைச் சொன்னால் பிறகு ஒருநாளும் என்னை நம்பவே மாட்டாய்."

"ஒரு மனைவி தன் கணவன்மேல் அவநம்பிக்கைப் படுவாளா?" என்றாள் சரத்குமாரி.

விநோதன் தன் மனைவியின் முகத்தை உற்றுநோக்கினான். அவள் கேசம் சுருள் சுருளாய் அவள் கன்னங்களின்மீது புரண்டு கொண்டிருந்தது. அவள் கண்களில் நம்பிக்கை ஜ்வலித்துக்கொண் டிருந்தது.

"நான் ஒரு பாதகன். உங்களெல்லோரையும் ஏமாற்றிவிட்டேன்" என்றான் விநோதன்.

அச்சிறுமி, விநோதன் முகத்தை மௌனத்துடன் நோக்கினாள். விநோதன் "மோடிஹாரியில் எனக்கு ஒரு உத்தியோகமுமில்லை. நூற்றிருபது ரூபாய் சம்பளமுமில்லை." என்று தொடர்ந்துரைத்தான்.

சரத் ஆச்சர்யத்துடன், "பிறகு நீங்கள் எங்கே உத்தியோகம் செய்கிறீர்கள்?" என்றாள்.

"எனக்கு உத்தியோகமே கிடையாது. நான் அலகபாத்தில் ஒரு ரயில்வே ஆபிஸில்

ஒரு சிறு உத்தியோகத்தி லிருந்தேன். ஆனால் எனக்கு வேலை போய்விட்டது. வேறு வழியின்மையால் விவாகத்தால் பணம் சம்பாதிக்கக் கருதி இந்தத் தந்திரத்தை உபயோகித்தேன். உயர்ந்த வேலையிலிருப்பதாய்ச் சொல்லி மணம்புரிந்தபின் என் தந்திரம் சீக்கிரத்தில் வெளியாகுமென்பதும் தெரியும். ஆகையால் பணத்துடன் ஓடிவிட யோசித்தேன்.''

சற்றுமுன்தான் ஆழ்ந்த நம்பிக்கையுடனும் எல்லையற்ற விசுவாசத்துடனும், "ஒரு மனைவி தன் கணவன்மேல் அவநம்பிக்கைப் படுவாளா?'' என்று அச்சிறுமி சொல்லியிருந்தாள். ஆனால் பொழுதுவிடிய ஆரம்பித்த மாத்திரத்தில் இரவின் இருள் அகன்றுபோவதுபோல் தன் கணவனுடைய உண்மைக் குணத்தை அறிந்தவுடன் அவனிடமிருந்த நம்பிக்கை சீக்கிரத்தில் கரைந்து போய்விட்டது. கனத்த பாரத்தின்கீழ் இருப்பவள்போல் வாய்திறவாமல் கிடந்தாள்.

தன் மனைவியின் தோள்மேல் கையை வைத்து விநோதன் மீண்டும் கூறினான். "விவாகத்துக்குமுன் கல்கத்தாவில் நகை செய்வதாய்ச் சொல்லிப் பணத்தை வாங்கிக்கொண்டதும் இக்கருத்தைக் கொண்டேதான். ஆபரணம் செய்வதாய்ச் சொல்லிவிட்டுப் பணத்துடன் ஓடிவிட விரும்பினேன். என் யோசனைகளையெல்லாம் நீ வேரோடு பிடுங்கியெறிந்தாய்.''

சரத் நடுக்கத்துடன் அவன் கையிருக்குமிடத்திலிருந்து தன் தோளை நகர்த்திக் கொண்டு எழுந்து உட்கார்ந்து, "நான் என்ன செய்தேன்?'' என்று கேட்டாள்.

"நீ எனக்குத் தங்கத்தினால் தளையிட்டு விட்டாய். உன்னை நான் விட்டுப் பிரியமுடியாமலிருக்கிறது. ஆயினும் நான் இங்கிருக்க முடியாது. நான் இங்கிருந்தால் இந்த சமாசாரம் இன்றோ நாளையோ வெளியாகிவிடும். பிறகு அவமானத்தால் நான் ஒருவர் முகத்திலும் விழிக்கமுடியாது.''

சிறுமியின் ஹிருதயம் கோபத்தாலும் வெறுப்பாலும் அவமானத்தாலும் வெடித்துவிடும்போல இருந்தது. பிறகு "எங்கேபோக யோசித்திருக்கிறீர்கள்?'' என்று கேட்டாள்.

"நிலக்கரி சுரங்கத்துக்குப் போகத் தீர்மானித்தேன். அங்கே வேலை கஷ்டம் தான். ஆயினும் லாபகரமானது.''

திடீரென்று சரத் "நானும் உங்களோடு வருவேன்'' என்றாள்.

விநோதன் குதித்தெழுந்தான். "நீ வருவாயா சரத்? நீ வரக்கூடுமா?'' என்று மகிழ்வுடன் கேட்டான்.

"என்னால் கூடும்! நீங்கள்போய் நான் இங்கிருந்தால் ஜனங்கள் வாயிலிருந்து நான் எதையெல்லாம்கேட்டுப் பொறுக்கவேண்டியிருக்குமென்பதை ஒரு விநாடியேனும் யோசித்தீர்களா? நாடுமுழுவதும் நம்மைக் கேலி பண்ணும். ஜனங்கள் தோன்றியதையெல்லாம் சொல்வார்கள். நான் அதையெல்லாம் கேட்டுக்கொண்டு உட்கார்ந்திருக்கவேண்டும்.''

விநோதன் சந்தோஷத்தில்இருளடைந்தது. சரத் தன்னோடுவருவது தன்னிடமுள்ளபக்தியைக் குறிக்கவில்லை. தற்காப்பின் பொருட்டே வருவதாய்த் தெளிவாகிவிட்டது. சற்று கழித்து அவன், "ஆனால் நாம் இருவரும் செல்வோம்'' என்றான்.

"எப்பொழுது!''

"நாளையதினம் நான் கல்கத்தாவுக்குப் போகவேணுமென்று ஏற்பாடாயிருக்கிறது. நாம் தூங்குமுன் நான் பணத்தைக்கொண்டுவந்து இங்கே கைப்பெட்டியில் வைத்துவைக்கிறேன். விடியற்காலம் இரண்டுமணிக்கு நாம் போவோம். நிலக்கரி சுரங்கத்தின் அருகில் ஒரு சிறு வீட்டில் நாம் குடியிருப்போம். அந்த இடம் ஒருவருக்கும் தெரியாது. அங்கே சென்று நம்முடைய புதிய வாழ்க்கையை ஆரம்பிப்போம்.''

அச் சிறு மணமகளின் மனதில் கோபத்திலும் வருத்தத்திலும் இடையே தோன்றியது என்ன? ஒருவார்த்தை அவள் மனதிலேயே வேரூன்றியிருந்தது. "என் யோசனைகளையெல்லாம் நீ வேரோடு பிடுங்கியெறிந்தாய்'' இவ்வெண்ணம் மனதிற்கினிமையாயிருந்தது. அவளை விட்டுச்செல்ல அவள் கணவனால் கூடாமலிருந்தது. முள் நிறைந்ததோர் காட்டின் நடுவில் ஒரு இனிய பழம் கிடப்பதுபோல் அவ்வார்த்தை அவளுக்குத் தோன்றியது. தன் மனதின் கலவரங்களுக்கிடையில் ஒருவிதமான சந்தோஷத்துடன் அவள் உறங்கப்போனாள்.

செத்த ஆடு காற்பணம், சுமைகூலி முக்காற்பணம்.

மறுநாள் அதிகாலையில் மதனி விநோதனை எழுப்பவந்தாள். அங்கு ஒருவருமில்லை. படுக்கையின்மேல் அவள் கணவன் விலாசத்துக்கு ஒரு கடிதம் மாத்திரம் வைக்கப்பட்டிருந்தது.

"பூஜ்யரான அண்ணுவுக்கு,—நான் என் மனைவியுடன் மேற்கே போகிறேன். நான் உங்களையெல்லாம் வஞ்சித்துவிட்டேன். நான் மோடிஹாரியில் ஒரு உத்தியோகமும் செய்யவில்லை. அலகபாத்தில் ரயில்வே ஆபீஸில் ஒரு சிறு உத்தியோகத்திலிருந்தேன். ஆனால் குடியினுல் அதையும் இழந்தேன். பிறகு கையில் காசின்றி விவாகத்தினுல் பணம் சம்பாதிக்க நினைத்தேன். என்னைக் கண்டுபிடித்து விடுவார்களோ என்ற பயத்தால் டைரக்டரியில் என் பெயருடைய யாராவது உயர்ந்த உத்தியோகத்திலிருக்கிறார்களா என்று பார்த்தேன். மோடிஹாரியில் யாரோ ஒரு விநோத விஹாரி மித்ரா என்பவர் உயர்ந்த உத்தியோகம் செய்வதாய்த் தெரிந்தது. அதை மனதில் வைத்துக்கொண்டு இங்குவந்து மணம்புரிந்தேன்.

என்னிடம் ஒரு காசும் கிடையாது. என் பணப் பெட்டி நிரம்ப உடைந்த கண்ணுடித் துண்டுகள்தா மிருக்கின்றன. மதனியின்வளையல்கள் இன்னும் பண்ணவில்லை. விவாகத்தின்போது எனக்குக்கிடைத்த ஆயிரம் ரூபாயிலிருந்து அவைகளைப் பண்ணிவிட வேண்டுகிறேன். நகைப்பணத்தை உத்தியோக விஷயமாய்ச் செலவிடத் தீர்மானித்துவிட்டேன்.

என் நடத்தையையும் நிலைமையையும் நான் திரும்பப் பெறுவேனுயின் நீங்கள் மறுபடி என்னைப் பார்ப்பீர்கள். தற்சமயம் தங்களிடம் விடைபெற்றுக் கொள்கிறேன்.

உங்கள் தகுதியற்றஊழியன்
விநோத விஹாரி மித்ரன்."

இதை வாசித்ததும் மதனி பிரமித்துவிட்டாள். உண்மையை ஒப்புக்கொண்டு விட்டதால், தன் இளம் மைத்துனன்மீது அவளுக்கு அதிக கோபமிருக்கவில்லை. ஆனால் அச்சிறுமி இவ்வளவு இளம்வயதில் தன் கணவனுடன் ஓடிவிட்டதுதான் அவளுக்கு அசாதாரணமான விஷயமாய்த் தோன்றிற்று. மனதுக்குள்ளே "இதெல்லாம் காலத்தின் கோலமோ?" என்று யோசிக்கலானுள்.

முற்றிற்று.

வஸந்த மந்திரம்

(362-ம் பக்கத் தொடர்ச்சி.)

பதின்மூன்றும் அதிகாரம்

லலிதாதேவிக்கும் ஆமத்பாக்ஷாவுக்கும் கல்யாணமென்று கூட்டம் கூட்டமாய் ஜனங்கள் சுற்றிலுமுள்ள நாடு, நகரம் கிராமம் இவற்றிலிருந்து வருகின்றனர். முறைதவருமல் இரஜபுத்திரர் வழக்கப்படி கல்யாணம் நடக்கின்றதென்று கேள்விப்பட்டு கணக்கில்லாத ஜனங்கள் வந்து கூடினர். கல்யாண சமயத்தில் தங்கள் சாமர்த்தியத்தைக்காட்டி வெகுமானம் பெற எண்ணங்கொண்டுவந்த சங்கீத வித்துவான்களுக்கும், ஜாலவித்தை செய்கிறவர்களுக்கும், அஸ்திரசஸ்திரவித்தைசெய்கிறவர்களுக்கும் கணக்கில்லை. எல்லோருக்கும் அரண்மனைச் செலவில் அவ்வச்சாதியாருக்குத் தக்கபடி போஜனசாலைகள் பட்டணம் முழுவதும் நிறைந்திருந்தன. கல்யாணத்துக்கு ஒருவாரத்துக்கு முன்னமேயே வரவாரம்பித்த ஜனங்கள் படிப்படியாய் அதிகரித்து கல்யாணத்துக்கு முதல்தினத்தில் வஸந்தபுரியில் நிற்கவும் இருக்கவும் இடமில்லாமற்போகும்படி நிரம்பினர். சுல்தான் இரஜபுத்திர முறைமைப்படி கல்யாணம் செய்துகொள்ளப் போகிறுர் என்று ஹிந்து ஜனங்கள் எல்லோருக்கும் அதிக சந்தோஷம். துருக்க சேனையில் உள்ளோர் தமது அரசனுக்குக் கல்யாணம் ஆகிறதென்றும் அச்சமயத்தில் தமக்கு வெகுமானம் அதிகமாய்க் கிடைக்குமென்றும் சந்தோஷமடைந்தனர். அதிருப்தியடைந்த துருக்கரும் சிலர் உண்டு. அரசன் ஹிந்துப் பெண்ணைக் கல்யாணம் செய்துகொள்வதில் அவர்களுக்கு யாதொரு ஆக்ஷேபணையுமில்லை. ஆனுல் அரசன் இரஜபுத்திர முறைமைப்படி கல்யாணம் செய்துகொள்ள சம்மதித்தானே என்றுதான் அந்த ஜனங்கள் விசனமுற்றனர். ஆயினும் அரசனை அவ்விஷயத்தில் ஒருவரும் திருத்த முயலவில்லை. லலிதையின்பொருட்டு தனது சேனையில் அரைபாகத்தையும், பிரதாபசிங்கன் சேனை முழுவதையும் கொன்று, ரணகளத்துக்கு பலிகொடுத்து, அவளை அடைந்தபின் அவளைத் தன் இஷ்டப்படி கல்யாணம் செய்துகொள்ளத் தடைசெய்தால் அங்ஙனம் செய்தோர் தப்பாமல் கொலையுண்பார் என்று

அவர்களுக்கு நிச்சயமாய்த் தெரிந்தது. அதிருப்தியை வெளிக்காட்டாமல் கூட்டத்தோடு கூட்டமாய்த் தாமும் சந்தோஷமாய் இருந்தனர்.

கல்யாணத்துக்கு நான்கு நாள் முன்னமேயே வேடிக்கைகளும், விளையாட்டுகளும், நாடகங்களும் ஆரம்பித்துவிட்டன. சிப்பாய்களும், சாதாரண ஜனங்களும், துருக்கரும், ஹிந்துக்களும் ஒன்றுகூடி அவற்றைக் கண்டு களித்தனர். பிரபுக்களும், மந்திரிப் பிரதானிமார்களும் ஆடும் கூட்டத்தாருக்குத் தக்கபடி பரிசளித்து அவர்களை உற்சாகப்படுத்தினர். ஜனங்களுக்குக் காலைப்பொழுது விடிந்தது முதல் இரவு 10 நாழிகை வரையில் சந்தோஷத்தை உண்டாக்க ஏதாவது காரியங்கள் நிகழ்ந்து கொண்டேயிருக்கும். காலை வேளையில் ஒரு தெருவில் கழைக்கூத்தாடிகள் கடையேறி ஆடுவார்கள். அதைப் பத்து நாழிகை வரையில் பார்த்திருந்துவிட்டு போஜனசாலையில் போஜனம் செய்வார்கள். அதற்குள் இன்னொரு தெருவில் சங்கீதம் நடக்கின்றதென்று சமாசாரம் வரும். அத்தெருவிற்குக் கூட்டமெல்லாம் திரும்பும். சாயங்காலத்தில் ஏரிக்கரையில் வாணவேடிக்கையென்று அங்கு போவார்கள். இரவில் போஜனம் செய்தவுடன் நாடகசாலைகள் தயாராகவிருக்கும். இவையெல்லாம் சாதாரண ஜனங்களுக்கு. பிரபுக்களுக்கோ அரண்மனையிலேயே சகலவித வைபவங்களும் நிகழும். சிறந்த வித்துவான்களும், தேர்ந்த வீரரும், தத்தம் சாமர்த்தியத்தை தினமும் காட்டினர் அரசன் முன்னிலையில். ஆகவே இந்த வஸந்தபுரி இந்திரநகரம் போன்றிருந்தது. அதிலுள்ள ஜனங்கள் நான்கு நாளாவது தாம் ஜனங்கள் என்பதை மறந்து தேவர்களைப்போல் கவலையற்றிருந்தனர்.

சாதாரண ஜனங்களேயன்றிப் பிரபுக்களும் சிற்றரசரும் தினம் தினம் சிலராய் வந்து கொண்டிருக்கின்றனர். அவர்களுக்கெல்லாம் ஏரியைச்சுற்றிலும் வெளிச்சோலைகளில் பெரிய பெரிய கூடாரங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு வருஷம் தாம் செலுத்த வேண்டிய கப்பங்களுடனும் பாக்ஷாவினது கல்யாண சமயத்தில் அவருக்கும் இராணியாருக்கும் செய்யவேண்டிய மரியாதையுடனும் தயாராய் வந்திருக்கின்றனர். வந்த பிரபுக்களையும் சிற்றரசர்களையும் அவரவர் அந்தஸ்துக்குத் தக்கபடி மரியாதை செய்யவும், அவர்களைச் சரியான இடங்களில் சேர்ப்பிக்கவும், உத்தியோகஸ்தர்கள் தயாராய் நின்றனர். சிலரை உடனேயே அரசன் முன்னிலைக்கு அழைத்துப் போகவேண்டியிருக்கும். சிலரை அரசன் சாவகாசப்பட்டபோது பார்ப்பார். சிலரை சபையில் அன்றி, மற்ற இடங்களில் பார்க்க முடியாது. அவ்விதமாய்ச் செய்ய வேண்டிய காரியங்களை முறை தவறாமல் செய்யும்படி முன்னமேயே சுமாலி உத்தரவு கொடுத்திருந்தான்.

ஊரிலுள்ள மசூதிகளும் கோவில்களும் சுத்தம் செய்யப்பட்டு அழகாய் விளங்கின. துருக்க ஜனங்களைச் சந்தோஷப்படுத்த தினமும் மசூதிக்குச் சென்று கடவுளைச் தொழுவான் சுல்தான் ஆமத். ஹிந்து ஜனங்களைத் திருப்திசெய்ய கோவில்களிலிருந்து பிரசாதங்களைத் தனக்குக் கொண்டுவந்து கொடுக்கச் சொல்லுவான். தினம் மத்தியானமும், இராத்திரியும் தக்க மரியாதையுடன் புஷ்பம் சந்தனம், துளஸி இவற்றைப் பூசாரிகள் கொண்டு வந்து அரசன்கையில் கொடுப்பார்கள். அவற்றைச் சந்தோஷத்துடனும்,மரியாதையுடனும் ஆமத்பாக்ஷா ஏற்றுக்கொண்டு பூசாரிகளுக்கு ஸன்மானம் செய்வான். துளஸியையும் பூமாலைகளையும் ஆமத் சுல்தான் பெற்றுக்கொண்டு, அவற்றை யணியும்போது ஹிந்து ஜனங்கள் சந்தோஷத்தோடு ஆர்த்துக் கரகோஷம் செய்வார்கள். சில மஹமதிய மௌல்விகள் அதை ஒப்பாது, தலையை அசைத்துக் குனிவார்கள். சிற்சில நாட்களில் தான் மசூதிக்குச் சென்று கடவுளைத் தொழுது, வரும் வழியிலுள்ள கோவில்களில் பூஜைகள் சரியாய் நடக்கின்றவாவென்று நேரில் விசாரித்து வருவான். இவ்வாறெல்லாம் செய்து தனது பிரஜைகள் இருதிறத்தாரையும் திருப்தியடைவிக்க முயற்சி செய்தான் ஆமத்பாக்ஷா.

கல்யாணகாலத்துக்கு முதல் தினமே அரசன் தன் அருமை லலிதாதேவிக்கும் அவளுடைய தோழிகளுக்கும் தக்கபடி ஆடையாபரணங்களைப் பரிசளிக்க உத்தேசித்து பட்டத்து யானையை அலங்கரித்து அதன்மேல் தங்க அம்பாரியை ஏற்றி அதில் லலிதைக்கு அனுப்ப வேண்டிய சாமான்களை வைத்துக்கொண்டு

சேவகர்களும் உத்தியோகஸ்தர்களும் புடைசூழ, 18 வாத்தியங்களும், நாடகப்பெண்டிரும் முன்வர, வெகு மரியாதையாய் அனுப்பினான். அவ்வியானை தெருவெல்லாம் சுற்றிக்கொண்டுபோய்ப் பிறகு அந்தப்புரவாயிலுக்கு வந்து சேர்ந்தது. அந்த மணக்கோலத்தைப் பார்த்து சந்தோஷப்படாத ஜனங்களேயில்லை. ஜனங்களெல்லோரும் பவனிவரும் யானையின் பின்சென்று "வாழ்க! வாழ்க! எமது சுல்தான் வாழ்க! எமது அன்னை லலிதை வாழ்க!—இருவரும் மணந்து எம்மைப் பல காலம் ஆளட்டும்! இவர்கள் குலம் அழியாமல் சூர்யசந்திரர் உள்ளவரையில் நிலையாய் இருக்கட்டும்!" என்றிவ்வாறு பலதடவை ஆர்த்தனர்.

அந்தப்புர வாயிலை யடைந்தவுடன் ஸ்திரீ ஜனங்களெல்லோரும் ஒருங்கே புடைசூழ்ந்து அந்த சாமான்களை லலிதையின் மாளிகைக்கு எடுத்துப்போய் மரியாதையுடன் அவள்முன் வைத்து, அவள் அங்கீகரித்தபின் அவளுக்கு அவற்றைப்பூட்டி, அன்று நடத்தவேண்டிய காரியங்களைச் சிறப்பாய் நடத்தினர்.

லலிதை இவற்றையெல்லாம் வெறுத்த போதிலும் வெறுப்பை வெளிக்காட்டுவது நன்றில்லையென்றறிந்து, காலத்துக்குத் தக்க கோலம் வகிக்கவேண்டுமென்ற உண்மையைக் கடைப்பிடித்து, அந்த ஸ்திரீ ஜனங்கள் சொன்னபடியெல்லாம் நடந்துவந்தாள். காரியங்கள் நடந்தவுடன் லலிதை, தான் சுல்தான் பாக்ஷாவுக்கு அனுப்பவேண்டிய மரியாதைகளை அனுப்பினாள். தன்னிடமிருந்து சாமான்களுடன் செல்லக்கூடிய ஆடவர் ஒருவருமில்லையாகையால் வைதிக பிராமணர்களையும் கோவிலில் பூஜை செய்வோரையும், சேர்த்தனுப்பினாள். அரசனும் அவற்றையெல்லாம் மரியாதையாய் வாங்கிக்கொண்டான்.

அன்றிரவில் பலர் தூங்கவில்லை. மறுநாள் காலையில் நடக்கப்போகிற கல்யாணத்தைப் பார்க்கவேண்டுமென்ற ஆசை மிகுதியால் ஜனங்களுள் பலருக்குத் தூக்கம்பிடிக்கவில்லை. வைதிக பிராமணர்களுள் பலர் மறுநாட்காலையில் கல்யாணத்துக்கு வேண்டிய சாமக்கிரியைகளையும், தட்டு முட்டுகளையும் சேகரிக்க வேண்டி, இரவில் நெடுநேரம் வரையில் தடபுடல் செய்துகொண் டிருந்தனர். கோவில்களில் மறுநாள் காலையில் சீக்கிரமாய் அபிஷேகம் முதலியவற்றை நடத்தி முகூர்த்தத்துக்குள் அரண்மனைக்குப் பிரஸாதம் அனுப்ப வேண்டுமென்று சாமான்களைத் தயார்செய்து கொண்டிருந்தனர் தர்மகர்த்தாக்கள். வீதிகளில் தோரணங்களையும் கொடிகளையும் புதிப்பிக்கவும், வாழை பாக்கு இவற்றைக் கட்டவும், வேறுவிதமாய் அலங்காரம்செய்யவும், சேவகர்களும் பலஜனங்களும் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தனர். வஸந்தபுரியின் முக்கியமான மசூதியில் ஒரு கூட்டம் கூடிற்று. மகமதிய மதத்தில் அதிக நம்பிக்கை உடையவர்களும், இதர மதங்களை வெறுப்பவரும் ஒன்று சேர்ந்தனர். வழக்கப்படி கடவுளை வழிபட்டபின்பு அவர்களுள் தலைமையான குரு பின்வருமாறு பேசினார்: —"ஐயன்மீர்! நமது அரசன் உண்மையான மகமதியனாய் இருந்தும், காமவலையில்பட்டு அதனால் ஆற்றாமல் மதவிரோதமான காரியங்கள் பலவற்றைச் செய்கின்றனர். ஒருக்கால் அவர் செய்வதெல்லாம் மனதாறச் செய்யாமல் மேலுக்குச் செய்வதாய் இருக்கலாம். அப்படியிருப்பின் சந்தோஷமே! இருப்பினும், இம்மாதிரி சிலநாள் அவர் நடந்துவந்தால் அவருடைய மனம் மகமதிய மதத்திலிருந்து முற்றிலும் மாறிவிடலாம். அங்ஙனம் ஆவதானால் அதை நாம் பார்த்திருப்பது பாவமாகும். மதத்தைக் காப்பாற்றுவது நம்முடைய காரியம். ஆகையால் நாளையதினம் அக்கல்யாணம் ஆனவுடன் நான் அரசனை விளித்து அவரிடம் நேரில் அவருடைய தப்புகளைப்பற்றிப் பேசப்போகிறேன். நீங்கள் என்னைப் பின்பற்றவேண்டும் அச்சமயத்தில்" என்றான். எவ்வாறு அரசனிடம் ஆரம்பம் செய்யவேண்டியதென்பதைப் பல மகமதியர்கள் ஆலோசனை செய்துகொண்டு தூக்கமின்றி தமது காலத்தைக் கழித்தனர். சுல்தான் ஆமத்பாக்ஷாவும் தூங்கவில்லை. பழைய நினைவெல்லாம் ஒவ்வொன்றாய் ஞாபகத்துக்குவர, இவற்றிற்கெல்லாம் முதற் காரணமான விசித்திரவீரியரின் நினைவு, முன் வந்துநின்றது. எத்தனைதரம்வேறுவிஷயங்களை நினைத்தபோதிலும் அவரைப்பற்றிய நினைவே மறுபடியும் மறுபடியும் அவனைத் தொந்தரவு செய்தது. "ஐயோ! பாவம்! தேசாந்திரம்போய் விட்டாரே—" என்று நினைத்தான். விசித்திர வீரியருடைய உருவமும், பிரதாபசிங்கனு

49. செட்டியாரே செட்டியாரே என்றால், சேரகம் பண எடை மூக்காற் பணம் என்கிறார்.

டைய உருவமும், இராமசிங்கருடைய உருவமும் மாறி மாறி முன்தோன்றி அவன் தூக்கத்தைக் கெடுத்தன.

லலிதாதேவியும் தூங்கவில்லை. மறுநாள் எவ்வெக் காரியங்களை எவ்விதம் செய்ய வேண்டுமென்று நரேந்திரனுடனும், புஷ்பவல்லியுடனும் ஆலோசனை செய்தாள். பிறகு படுத்துக்கொண்டபோதிலும் நித்திரை வரவில்லை. 'நரேந்திரா எல்லா இரஜபுத்திர வீரர்களையும் உள்ளேயேவந்து படுத்துக்கொள்ளும்படி சொல். எனக்கு ஏதோ பயமாய் இருக்கின்றது'' என்றாள். நடுநிசிக்குமேல் லலிதை சற்று மயக்கமாய்ப் படுத்துக் கொண்டிருக்கவே, நரேந்திரன் தூரத்தில் உட்கார்ந்து கொண்டு காவல் காத்திருந்தான். தூங்கும் லலிதை சிறிது நேரத்துக்கெல்லாம் "கல கல" வென்று நகைத்தாள். திடீரென்று சிரித்த சப்தத்தைக் கேட்டவுடனே திடுக்கிட்டெழுந்தான் நரேந்திரன். லலிதையின் முகம் மலர்ந்து சந்தோஷமாய் இருந்தது. கண்கள் இரண்டுமட்டும் மூடியிருந்தன. புன்சிரிப்புடனே பேசுவதுபோல் உதடுகள் அசைந்தன. அரை நிமிஷத்தில் லலிதை எழுந்து உட்கார்ந்தாள். நிற்கும் நரேந்திரனைப் பார்த்து "நரேந்திரா! ஏன் நிற்கின்றாய்? நான் உளறினேனோ! உட்கார்வாய்; என்னுடைய கனவைக் கேள். அலங்காரமான ஓர் பட்டணத்துத் தெருவில் ஐயன் ஈசனும், ராஜராஜேசுவரியும் என் முன்னே தோன்றினர். எண்ணில்லா ஜனக்கூட்டடத்துக்கு நடுவில் என் தந்தையையும் தாயையும் கண்டேன். என் தாய் என்னைவாரியெடுத்தணைத்துக்கொண்டாள். "இதோ அம்மை கூப்பிடுகிறாள்" என்று என்னை இராஜராஜேசுவரியிடம் அழைத்துச் சென்றாள். அம்மையை வணங்கினேன்.

'கண்ணே, பயப்படாதே உன்னைக் காப்பாற்றுகிறேன்' என்றாள் அம்மை. எனது துக்கமெல்லாம் ஒன்றும் எனக்கு ஞாபகத்துக்கு வரவில்லை. ஆகையால் நான் எனது கஷ்டத்தை யொன்றும் சொல்லாமல் 'அன்னையே உமது அருளைப்பெற்றேன்' என்று சந்தோஷத்துடன் குதித்துக் குதித்து நகைத்தேன். திரும்பிப்பார்த்ததும் அந்த ஊரும், ஜனங்களும், எனது தாய்தந்தையரும், தூரத்தில் போய்க்கொண்டிருந்தனர். நானும் பின் தொடர்ந்தேன். என்னால் போகமுடியவில்லை. இராஜராஜேசுவரி என்னை நோக்கி அன்புடன் "நீ இப்பொழுது என்னுடன் வரமுடியாது. பிறகு வரலாம். சுகமாய் இரு" என்றாள். அடுத்த நிமிஷத்தில் என்முன் ஒரு பெரிய சமுத்திரம் தோன்றிற்று. வெகு தூரத்தில் ஒரு தீவும் கப்பல்களும் தென்பட்டன. "இத்தீவிலிருந்து வரப்போகிறவர்களே நமது தேசத்தைக் காப்பாற்றுகிறவர்கள் பிற்காலத்தில்!" என்று ஒரு வாக்கு காதிற்பட்டது.

தீவும், கப்பல்களும், கந்தர்வர்போன்ற ஜனங்களும் மறைந்தனர். அம்மையைக் கண்டேன்—கைவிட்டேன் — மயங்குகின்றேன்" என்று விசனித்தாள்.

நரேந்திரன் "தாயே! நடுநிசியில் தூக்கமின்றி இப்படி வருந்துவது சரியில்லை. தங்கள் மனத்துள் உள்ள துக்கத்தைப் போக்கி அருள் புரிவதற்காகவே இராஜராஜேசுவரி தமக்கு தரிசனம் கொடுத்தாள். இந்த சமயத்தில் அல்லவா அம்மை நமக்கு அருள் புரிய வேண்டும்! அவளுடைய கிருபை பரிபூர்ணமாய் இருக்கின்றது! பயப்படவேண்டாம்—படுத்துத் தூங்குவீர்" என்று தேற்றினான். பின்னர் சிறிது நேரம் கண்வளர்ந்தாள். சுற்றிலும் எல்லோரும் தூங்க, நரேந்திரன்மட்டும், கண் இமையோடு இமைமூடாமல் விழித்திருந்தான்.

மறுநாள் பொழுது விடியுமுன்னரே நரேந்திரனும் புஷ்பவல்லியும் எழுந்து கல்யாண சமயத்தில் சுல்தானுக்குக் கொடுக்கவேண்டிய மேற்போர்வையையும், தோள் வளைகளையும், கிரீடத்தையும், வீரக்கழல்களையும், பாதக் குறடுகளையும் எடுத்துவைத்தனர். அவற்றின் அழகு கண்களைக் கவர்ந்தன. திரளான ஜனங்கள் வந்து அவற்றின் நெசவையும், மணிகளையும், முத்துக்களையும் பரிக்ஷிப்பார் என்று ஒரு பளிங்குப் பெட்டியில்வைத்து வெளியே காவலாளிகளிடம் ஒப்புவித்தனர். அவர்கள் இருபுறமும் காவல் காத்துக்கொண்டு, வருவோரைப் பார்த்துப் போகமட்டும் அநுமதி கொடுத்தனர்.

லலிதையும் எழுந்தனள் என்று சொல்லவும் வேண்டுமோ? காலையிலே ஸ்நாநம் செய்வித்து புஷ்பம் வைத்து, மாலைபோட்டு அலங்கரித்தனர். அரசனிடமிருந்து முத்துச்

சிவிகையும் வந்தது. வேதியர் ஆசிகூற, தெய்வத்தைத் தொழுது, சிவிகையில் ஏறி ஊரை வலம்வந்து அரண்மனையில் கல்யாணமண்டபத்துக்கு அழைத்துச் செல்லத் தயாராய் இருந்தனர் காவலாளிகள்.

சுல்தானும் கழியா இரவைக் கழித்து, ஸ்நானமுடித்து பட்டாடைகளை அணிந்து, வாசனைத்திரவியங்களைப் பூசி, புஷ்பமாலைகளை அணிந்து, கிரீட ஹார கேயூராதிகளுடன் செங்கோல் பிடித்து, கல்யாண மண்டபம் வந்துசேர்ந்தான்.

அரசன் மாளிகையில் ஸுவர்ணஸரஸின் புறமாய் வடபுறம் விஸ்தாரமாய் நீண்டிருக்கும் மண்டபமே கல்யாணமண்டபம். இரு புறமும் பிரபுக்களும் சிற்றரசரும் இராஜாங்க ஜனங்களும் உட்கார, ஆஸனங்கள் அமைக்கப்பட்டிருந்தன. மண்டபத்தின் முன் ஒரு பெரிய திறந்த வெளியில் சூரியன் நிர்மலமாய்ப் பிரகாசிக்கின்றான். அங்கே நின்றுகொண்டால் வலதுபுறத்திலும், இடதுபுறத்திலும் கண்ணுக்கெட்டியவரையில் ஜனங்கள் நிற்பது தெரியும். இடதுபுறம் படியேறிச்சென்றால் மூன்றுவது நான்காவது மாடிக்குச் செல்லலாம், வடக்கே நேராய் எதிரே ஏரியும், சூரிய வெளிச்சத்தில் ஜ்வலிக்கின்ற அலைகளும் தென்படுகின்றன. இவ்வழகிய மண்டபத்தில் சுல்தானும் மற்ற ஜனங்களும் வந்துசேர்ந்த சிறிது நேரத்துக்கெல்லாம் லலிதாதேவி வருவதாக சமாசாரம் வந்தது. எல்லோரும் எதிர்கொண்டு சென்றனர்.

லலிதாதேவி வந்து சேர்ந்தவுடன் வேதியர் ஆசீர்வதித்தனர். பூஜை செய்த துளஸி முதலியவற்றை அனைவருக்கும் கொடுத்தனர். எல்லாம் நடந்தபின் வேதியன் அரசனிடம் சென்று லலிதையின் குலம் முதலியவற்றை எடுத்துக் கூறி அவளை மணக்க இஷ்டமாவென்று கேட்டான். 'ஆம்' என்றான் சுல்தான். அதேமாதிரி லலிதையிடம் வந்து, "அம்மா, இப்பிரபுவை மணக்க தமக்கு இஷ்டம் தானே" என்றான். "தெய்வச் செயல் நடக்கின்றது" என்றாள் லலிதை.

உடனே தோழி உருவமாய் நிற்கும் நரேந்திரன் பாக்ஷாவிடம் சென்று "அரசே! எமது அம்மையின் உத்தரவின்படி உமக்கு இவ்வாபரணங்களையும் உடைகளையும் பூட்டுகின்றோம்" என்றான். அரசன் சரியென்று முன் வந்து நின்றான். சிறந்த பட்டாலும் சரிகையாலும் செய்து மரகதம் முதலிய கற்களால் பூக்கள் இழைக்கப்பட்ட மேற்போர்வையை அரசன்மேல் போர்த்தினான். வைரமும், முத்தும், புஷ்பராகமும் ஒளிவிடும் கிரீடத்தை அவன் தலையில் சூட்டினான். தோள் வளைகளையும் கழல்களையும் கட்டியபின், அரசன் பூத்து நிரம்பிய மயில்கொன்றைமரம்போல் விளங்கினான்.

இவ்வாறு அலங்காரத்துடன் நிற்கும் அரசனைப்பார்த்து லலிதாதேவி "அரசே! உம்முடைய இந்த மணக்கோலத்தை உமது பிரஜைகள் பார்த்து சந்தோஷப்படவேண்டாமா? அவர்களுடைய சந்தோஷத்தில் தாமும் சந்தோஷமடையவேண்டும். ஈசன் கொடுத்திருக்கும் கொஞ்சகாலத்தில் அனுபவிக்கவேண்டியதெல்லாம் அனுபவிப்பீராக! இதோ இந்த முற்றத்தில் பிரகாசமாய் ஒளிக்கும் சூரியவெளிச்சத்தில் நின்று உம்முடைய தேகலாவண்ணியத்தை உமது பிஜைகளுக்குக் காட்டுவீர்" என்றாள்.

அரசன் கையை நரேந்திரன்தாங்கிச்செல்ல, லலிதை தன்னுடன் பேசிய சந்தோஷ சமுத்திரத்தில்மூழ்கி, தலைதெரியாமல் அம்முற்றத்தில் சூர்யவெளிச்சத்தில்போய் நின்றுகொண்டான். அரசனைக்கண்ட ஜனங்கள் எல்லோரும் கரகோஷம் செய்து, ஆர்த்தார்கள். அதைக்கேட்டு அரசனும் உற்சாகம் செய்வதற்காக கையை பலமுறை வீசினான். பிரளய காலம்போல், சப்தம் எங்கும் எல்லாத் திக்குகளிலும் நிறைந்தது. மேளவாத்தியங்களும், முழங்குகின்றன. கல்யாணமண்டபமெல்லாம் 'கம்' மென்று கற்பூரவாசனை வீசுகின்றது. எல்லாரும் 'பேஷ்! பேஷ்!' என்கிறார்கள். "என்ன வாசனை! என்ன அழகு! என்ன நெசவு! என்ன ஒளியப்பா அவ்வாடைகள்! நமது அரசனுக்குத் தகும்! தகும்! தகும்!' என்றனர் பிரபுக்கள்.

அரசன் இன்னமும் கையை வீசிக்கொண்டேயிருக்கின்றான். நரேந்திரன் பக்கத்தில் நிற்கிறான். அரசன் தோள்களிலும், முழங்காலிலும், தலையிலும் முதுகிலும்' ஜ்வாலை கிளம்புகின்றது. ஒருவருக்கும் தெரியவில்லை! சூர்ய

வெளிச்சத்தில் அந்த ஜ்வாலையா தெரியப்போ கின்றது! அடுத்த நொடியில் ஆடைகள் பற்றிக் கொள்ளவே, புகைய வாரம்பித்தது. உண்மையாகவே சுத்தவீரனுன சுல்தான் இங்ஙனம் இறந்துபோக எண்ணுதவனுகையால் ஏங்கி, பயத்தால் 'ஓ' வென்று அலறினுன். பிரபுக்கள் ஒருவருக்கும் ஒன்றும் தோன்றவில்லை. மறுநிமிஷத்தில் சுல்தான் தேகமெல்லாம் பற்றியெரிந்துவிட்டது.

லலிதை "இனியான் உயிரோடிருந்து பயனென்? நேற்று நான் கனவில் கண்ட மேற்குத் தீவின் மனிதர்கள் வந்தல்லவா நமது தேசத்துக்கு நன்மை செய்யப்போகிருர்கள். அதுவரையில் இப்பாதகர்களின் தொந்தரவு இருந்துகொண்டே வரும். அத்தீவார் நமது தேசத்தை யாட்கொண்ட காலத்தில் தர்மம் நிலைபெறும். வித்தை அபிவிருத்தியாகும்: பெண்டிர் சுகப்படுவார்கள் : கற்பென்பது எப்பொழுதும் அழியாது: பெண்டிரை பலாத்காரம் செய்பவரை நன்ருய் தண்டிப்பார்கள். அக்காலத்தில் யான் மறுபிறப்புடன் வருவேன். இனியான் இருந்தும் பயனில்லை. என் அம்மை பாதாரவிந்தம் சேர்வேன்" என்று கூறி, நரேந்திரன் தடுக்க வருவதற்குள், பயந்தோடும் மான்போல் ஒரே ஓட்டமாய் மூன்ரும் மாடிக்கு ஓடி, அங்கிருந்து ஸுவர்ண ஸரஸில் தாவிக் குதித்தாள். மாடியிலிருந்து ஒரு மின்னல் புறப்பட்டதுபோல் அவளது தேகம் ஆகாயத்தின்வழியாய்ச்சென்று ஜலத்தில் விழுந்தது. பெரிய அலைகள் நாற்புறமும் பரவின. சில நிமிஷங்கள் பொறுத்து கொப்பளங்கள் கொப்பளித்தன.

மந்திரத்தால் கட்டுண்டவர்கள்போல, பிரபுக்களும் பக்கத்தில் இருந்தவரும் பிரமித்து நிற்கின்றனர். நரேந்திரன்மட்டும், லலிதையின் பின்னே ஓடியவன், அவள் ஏரியில் விழுந்தவுடன், பயனில்லையென்றறிந்து மண்டபம் வந்துசேர்ந்தான். அப்பொழுதுதான் விழித்துக்கொண்டனர் எல்லோரும். ரஜபுத்திரர் சூழ்ச்சி விளங்கிற்று. பெரிய குழப்பமுண்டாயிற்று. நரேந்திரனும் மற்ற இரஜபுத்திரவீரரும் பெண்ணுடைகளைக் களைந்து கத்தியேந்தி சண்டைசெய்து வழிவிலக்கிக்கொண்டு தப்பியோடினர்.

மிகுந்தவர் கதையை, நொடியில் சொல்லி முடிப்போம்.கவுஸ் மங்களாபாயைக்கல்யாணம் செய்துகொண்டு சுகமாய் வாழ்ந்தான். இந்து தேசம் சின்னுபின்னமாய் இரஜபுத்திர வீரர்களுக்கு இரையாயிற்று.

அனந்தபட்டர் தானும் துறவறம்பூண்டு விசித்திரவீரியரைத் தேடிச் சென்ருர். ஜயபாலன் அபஜயமடைந்து, லலிதையை அடையமுடியாது,இனிக்கல்யாணம் வேண்டியதில்லையென்று விரதமேற்கொண்டான்.

நரேந்திரனும் புஷ்பவல்லியும் மற்ற இரஜபுத்திரரும் உதயபுரி சேர்ந்தனர். நரேந்திரன் சிதறிப்போன ஜனங்களைக் கூட்டி இராஜ்ய பாரத்தை மேற்கொண்டு ஜனங்களைப் பரிபாலனம் செய்துவந்தான்.

(முற்றிற்று.)

சிறுவர்களுக்கான பக்கங்கள்

CHILDREN'S PAGES

தீயாரைக் காண்பது தீது

ஒருரில் ஒரு கிழவி இருந்தாள். அவளுக்கு ஒரே பிள்ளை. அவள் அப்பிள்ளையை வெகு அன்புடன் வளர்த்துவந்தாள். அவனும் அவளிடம் மிகவும் பிரியமா யிருந்தான். கிழவிக்கு சொத்து கொஞ்சம் இருந்தது. அதிலிருந்து கிடைத்த வரும்படியைக்கொண்டு, அந்தக் கிழவியும் அவள் பிள்ளையும் பிழைத்து வந்தார்கள்.

இந்தக் கிழவி இருந்த ஊர், ஓர் ஆற்றங்கரையோரம் அந்த ஆற்றில் ஜலம் எப்பொழுதும் ஓடிக்கொண்டிருக்கும். ஆறு மிகவும் ஆழமா யிருந்தது. அந்த ஆற்றில் பல முதலைகள் இருந்தன. அவைகள் சில வேளைகளில், ஆற்றில் குளிக்க அல்லது நீர் குடிக்க வரும் ஜனங்களை, நீருக்குள் இழுத்துத் தின்று விடும். அதனுல் ஜனங்கள் வெகு ஜாக்கிரதையாயிருப்பார்கள். இந்த முதலைகள் எல்லாம் ஆற்றின் நடுவிலிருந்த ஓர் திட்டில் குடியிருந்தன. அவைகளுக்கு ஒரு ராஜன் உண்டென்று ஜனங்கள் சொல்லிக்கொண்டார்கள்.

ஒருநாள் கிழவியின் பிள்ளை தன் தோழர்க

ளோடு ஆற்றங்கரைக்கு விளையாடப்போனான். ஆட்டம் முடிந்ததும் அவனுக்குத் தாகமாயிருந்தது. அதனால் ஜலம் குடிக்க அவன் சில பிள்ளைகளோடு ஆற்றில் இறங்கினான். இரை என்ன அகப்படுமென்று காத்துக்கொண்டிருந்த ஒரு முதலை இதுதான் சமயமென்று அந்தப் பையன் காலை பிடித்துக்கொண்டது. அவன் என்ன திமிறியும், முதலை விடாமல், அவனை இழுத்துக்கொண்டு ஜலத்திற்குள் போய், அங்கே அவனைத் தின்றுவிட்டது. இந்த விஷயத்தை மற்றபையன்கள் ஓட்டமாய் ஓடி அந்தக் கிழவியிடம் சொன்னார்கள்.

பாவம்! செல்வமாய் வளர்த்துவந்த ஒரே பிள்ளையை முதலை விழுங்கிவிட்டதைக்கேட்ட கிழவிக்கு வெகு வருத்தம் உண்டாயிற்று. வெகு நேரம் அழுதாள். "ஆகட்டும், எப்படியாவது என் பிள்ளையைக் கொன்ற முதலையை நான் தண்டிக்காமல் விடுவதில்லை! என் ஒரு பிள்ளைதானா அந்த முதலைக்கு அகப்பட்டது! முதலை ராஜனிடமே சொல்லிப் பார்க்கிறேன்" என்று சொல்லி ஆற்றங்கரையை நோக்கிப் புறப்பட்டாள். போகவேண்டாமென்று யார் என்ன சொல்லியும் கேட்கவில்லை.

ஆற்றங்கரைக்குப் போய் என்ன செய்கிறது? முதலை ராஜன் குடியிருக்கும் திட்டிற்குப் போகவேண்டுமே? அவள் எப்படிப்போவது? கடைசியாக அந்த வழியே ஒரு படகு வந்தது. அந்தப் படகுக்காரனுடன் தன் கதையெல்லாம் சொல்லி, தன்னை முதலைராஜனிடம் கொண்டுபோய் விடும்படிக் கேட்டுக்கொண்டாள். படகுக்காரன் பயப்பட்டு, 'உன்னையே முதலைகள் கொன்றுவிடுமே! நான் வரமாட்டேன்' என்று சொன்னான். அதற்கு அந்தக் கிழவி "என்ன அப்பா' நீ ரொம்ப பயப்படுகிறாய். எல்லா முதலைகளைப்போல இருக்குமா முதலை ராஜனும். அது நம்முடைய ராஜாக்களைப்போல, நியாயம் எது, அநியாயம் எது என்று அறிந்திராதா? நிரம்ப தயையும், ஸத்யம் தவறாமல் நடக்கும் குணமும் அதனிடம் உண்டு என்று எனக்குக் கேள்வி" என்று அவள் சொன்னாள். படகுக்காரன் சம்மதிக்கவில்லை. கடைசியாகப் பாட்டி "நீ என்னைப் படகிலேற்றிவிட்டு இங்கேயே இரு, நீரோட்டத்தினால் உன் படகு அந்தத் திட்டண்டைப் போய்ச்சேரும். அங்கே நான் முதலைராஜனிடம் போய்ப் பேசிவிட்டு, பிறகு திரும்பி வந்து, உன் படகை உன்னிடம் ஒப்பிவித்துவிடுகிறேன்" என்றாள்.

முதலில் படகுக்காரன் ஒத்துக்கொள்ளவில்லை. ஆனால் கிழவி மிகவும் தொந்தரவு செய்ததினால், அவளிஷ்டப்படியே படகில் அவளையேற்றி, அதை நடு ஆற்றில் போகும் படித் தள்ளிவிட்டான். கிழவியுடன் படகு மெள்ள மெள்ள முதலைராஜன் குடியிருந்த திட்டண்டையில் போயிற்று. அங்கே பல முதலைகள் சேற்றில் புரண்டுகொண்டிருந்தன. சில முதலைகள் ஒன்றோடொன்று விளையாடிக்கொண்டும், சில சண்டை போட்டுக்கொண்டுமிருந்தன. கிழவி அவைகளைக் கண்டதும் நடுநடுங்கிவிட்டாள். ஆனாலும் தைரியமாய் அந்த முதலைகளைப் பார்த்து "உங்கள் ராஜா எங்கே? நான் அவரைப் பார்க்கவேண்டும்" என்று கூவினாள். ஒரு முதலை 'இப்படிவா' என்று சொல்ல, அவள் படகிலிருந்து கீழே இறங்கி அந்த முதலையின் பின்னால் போனாள். திட்டின் கரையோரத்தில் நாணல்செடிகளின் நடுவில் முட்டைகளின்மேல் ஒரு பெரும் முதலை உட்கார்ந்துகொண்டிருந்தது. அதைச் சுற்றிலும் பல சிறு முதலைகள் குதித்துக்கொண்டிருந்தன. கிழவியுடன் கூட வந்த முதலை 'இவர்தான் எங்கள் ராஜா! என்று சொல்லிவிட்டு, 'மஹாராஜா! தங்களைக் காண ஒரு கிழவி வந்திருக்கிறாள்' என்று சொல்லிவிட்டுப் போயிற்று.

"யார் என்னைக் காணவந்திருக்கிறது? என்ன காரணம்?" என்று முதலை உரக்கக் கேட்டது. கிழவி பயந்தவளாய் "மஹாராஜா! தங்களுடைய தயவிற்காக நான் வந்திருக்கிறேன். தாங்கள் ஒரு முதலையானாலும் ராஜாவானதால், பல்லிருந்தாலும் கடிக்கமாட்டீர்கள். கோபம் இருந்தாலும் கொல்லமாட்டீர்கள்" என்று சொன்னாள். 'சரி இருக்கட்டும், நீ ஏன் இங்கே வந்தாய்?" என்று முதலை ராஜன் மறுபடியும் கேட்டது. கிழவி, "நியாயம் பிறக்க நான் இங்கே வந்தேன். என் ஒரே பிள்ளையை ஒரு முதலை விழுங்கிவிட்டது. ஒருத்திக்குப் பத்து பிள்ளைகள் இருந்தாலும், ஒருவனை விழுங்கிவிட்டால் வருத்தமிராது. என் ஒரே பிள்ளையைக் கொன்றுவிட்டால் நான் எப்படிப் பிழைக்கிறது? ஆகையால், அந்த மாதிரி

கொன்ற முதலையைத் தண்டிக்கவேண்டு கிறேன்" என்ருள்.

"ஆகா, அப்படியே செய்கிறேன். ஆனல் நீ எப்படிப் பிழைப்பாய்?" என்று கிழ முதலை ராஜன் கேட்டது. "மஹாராஜாவே! அது தான் எனக்குத் தெரியவில்லை" என்று கிழவி சொன்னள். 'அப்படியானல் நான் சொல்லு கிறேன்; கிட்டேவா!' என்றது முதலை. கிழவி அதை நம்பி அதனருகே போனள். உடனே முதலை அவள் காலைக் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டு "பல்லிருந்தாலும் கடிக்கமாட்டேன் கோபமிருந்தாலும்கொல்லமாட்டேன் என்று யார் உனக்குச் சொல்லிக்கொடுத்தார்கள்? அதுபோனல் போகிறது.நீ பிழைக்கவேண்டிய வழியை நான் காட்டுகிறேன்" என்று அவளை விழுங்கிவிட்டது.

கிழவி ஏறிவந்த படகு நடு ஆற்றிலேயே மிதந்து போவதைக்கண்ட படகுக்காரன், வேறொரு படகில் ஏறிப்போய்த் தன் படகைக் கரைக்குத் தள்ளிக்கொண்டுவந்தான். கிழவி யின் கதி என்னவாயிற்று என்று அவனுக்குத் தெரிந்துவிட்டது.

ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

LADIES' PAGES

[ஸ்ரீமான் ஸி. ஆர். ஸ்ரீநிவாஸய்யங்கார் அவர்கள், பி.ஏ.]

தாராபாய்

(367-ம் பக்கத் தொடர்ச்சி.)

அவ்வழக்கப்படி டோடாவிலுள்ள இஸ்லாமி யர், பண்டிகையின் முடிவுநாளில் மசூதியில் திரளாய்க்கூடி, முழந்தாளிட்டுப் பிரார்த்தித் துக் கொண்டிருந்தார்கள். அங்கிருந்து தாசியா வென்ற ஓர் இரதத்துடன் புறப்பட்டு ஊர் வலம்வருவதற்குவேண்டியஏற்பாடுகள்நடந்து கொண்டிருந்தன. அந்த வாகனத்தில் அவ் விரு போர்வீரர்களைப் போன்ற பதுமைகள் செய்து வைக்கப்பட்டிருந்தன. அதற்கு அருகி லுள்ள ஓர் மாளிகையின் மேல்மாடியில் அந் நகரத் தலைவனைலில்லா,தன் பரிவாரத்துடன் நின்றுகொண்டு, பலகணி வழியாய் வேடிக்கை பார்த்துக்கொண் டிருந்தான். ஊர்வலம் புறப் பட்டவுடன் தானும் எல்லோருடன் சேர்ந்து அதை நடத்துவதற்கு வேண்டிய ஏற்பாடு களைச் செய்துகொண்டிருந்தான்.

அதற்குள் தாரையும் பிருதிவியும் அவ னுடைய தோழனும் அந்தப் பெருங்கூட்டத் தில் கலந்து, தாசியாவுக்கருகில் நின்றுகொண் டிருப்பதை எப்படியோ நகரத்தலைவன் கண்டு பிடித்து, தன் அருகிலிருந்த வீரனைப்பார்த்து "அதோ மூன்று மனிதர்கள் தாசியாவிற்குச் சமீபத்தில் நின்று கொண்டிருக்கிருர்களே. அவர்கள் யார்? வேற்று மனிதர்களென்றே நினைக்கிறேன், இச்சமயத்தில் ஆயுதந்தரித்து இங்கேவரக் காரண மென்ன" என்றான். "அவர்கள் நிற்குமிடம் எங்கே" என்று அவ்வீரன் கேட்டவுடன், அதற்கு உடனே மறுமொழி அளித்தாற்போல், தாரையின் வில்லிலிருந்து ஓர் கூரம்பும், பிருதிவியின் கையிலிருந்து ஓர் வேலும், ஆகாயத்தில் பறந்து ஒரே நொடியில் அந்த நகரத்தலைவ னுடைய மார்பில் பாய்ந்து, அவனுயிரைக் கொள்ளைகொண்டன. உடனே அம்மூவரும் அங்கே சற்றும் தங்காமல், கத்தியை உருவிக் கொண்டு அக்கூட்டத்தில் புகுந்து, கோட்டை வாயிலுக்கு எப்படியாவது போய்ச்சேர வேண்டுமென்று கடுமுயற்சி செய்தார்கள். அதற்குள் அம்மாளிகையின் மேல்மாடியில் நின்ற பரிவாரங்கள், யமபாசத்தைப்போல் தங்களுடைய தலைவனை ஒரு நொடியில் வீழ்த் தினதைக்கண்டு, சற்றுநேரம் திகைத்து, ஒன்றுந் தோன்ருமல், பிறகு தாசியா விற்கருகில் கூட்டத்துடன் கூட்டமாய் நின்றுகொண்டிருந்த அம்மூன்று வேற்று மனிதர்களாலேயே இப்படி நேர்ந்ததென்று கண்டுபிடித்துப் பெருங் கூச்சலிட் டார்கள். மாடியிலிருந்து நான்கு புறங்களி லும் பார்க்கையில், தடுப்போர் யாவரையும் கண்டதுண்டமாக்கிக்கொண்டு சிங்கங்களைப் போல் அதிவேகமாய் பாய்ந்தோடும் அம்மூவ ரையும் குறித்துக்காட்டி "அதோ ஓடுகிருர்கள் கொலையாளிகள், தூரத்துங்கள், விடாதீர்கள்" என்று கத்தினர்கள்.

உடனே கீழே நின்றுகொண்டிருந்த ஜனங்

செருப்பால் அடித்து குதிரைக் கொடை கொடுத்தாற்போல.

கள் அனைவரும் அழுகையையும் புலம்பலையும் கூக்குரலையும் மார்படிப்பதையும் தொழுவதை யும் நிறுத்தி, அம்மூவர் சென்ற வழியிலேயே தொடர்ந்து, மூர்க்கமாய்த் துரத்தினார்கள்.

இப்படியிருக்கையில், அந்நகரத்திலுள்ள இந்துக்கள் வெகு நாளாய் துருக்கருடைய ஆதீனத்திற்குட்பட்டு வருந்தி, எப்பொழுது தங்களுக்கு நல்லகாலம் பிறக்குமென்று எதிர் பார்த்துக்கொண் டிருந்தவர்கள், திடீரென்று காலனுடைய பாணத்திற்கிரையானதைப் போல் ஆப்கானியர் தலைவன் உயிரற்றுப் பிண மாய் விழுந்ததையும், மூவர் தப்பியோடுவதை யும், துருக்கர் அவர்களைத் துரத்துவதையும் கவனித்து, "இது நமது அரசனான சூரசேன னுடைய சூழ்ச்சியாகவே இருக்கவேண்டும்" என்று நினைத்து, ஓடுகிறவர்களைத் தடுக்கா மலும், அவர்களைத் துரத்தும் துருக்கரைத்தங் களாலியன்றவரையில் குறுக்கிட்டுத்தடுத்தும் அருமையான உதவிபுரிந்தனர். அம்புகளும் கல்லுகளும் ஈட்டிகளும் குண்டாந்தடிகளும் ஓயாமல் அம்மூவரின்மேல் வந்து விழுந்து கொண்டே யிருந்தன. கடவுளினருளால் அவர் தப்பி கோட்டைவாயிலுக்கருகில் ஓடிவந்த பொழுது, மலைபோன்ற ஓர் போர் யானை வழி மறித்தது. அம்மூவரில் முன்சென்ற தாரை யைப் பிருதிவி எச்சரித்து, "தயங்காதே. துதிக்கையில் வெட்டு" என்றான். அவன் சொல்லி வாய்மூடுமுன், தாரையின் கூர்மை யான கத்தி யானையின் துதிக்கையில் ஆழ்ந்து பதிந்து சோனைமாரி பொழிவதுபோல், வெட் டுண்ட முண்டத்திலிருந்து குருதி பெருகிற்று. அம்மத யானை துடிதுடித்து, கோபவெறி கொண்டு, துரத்திக்கொண்டுவரும் கூட்டத் தில் பாய்ந்து பலரை மிதித்துக் கொன்று கொண்டு ஓடிற்று. அம்மூவரும் முதலிலேயே சேர்ந்து ஓடாமல் வெவ்வேறு வழியாய் தப்பி யோடினதால், கூட்டம் பலவிதமாய்ப் பிரிந்து விட்டது. கோட்டைவாயிலில் மூவரும் மறு படியும் சேர்ந்து, வெளியில் தயாராய் நின்ற வாயுவேகத்தைப்பழிக்கும் குதிரைகளிலேறித் தங்களுடைய சைன்னிய மிருக்குமிடத்திற் குப் பறந்தோடினார்கள். ஆப்கானியர் அவர் களை விடேன் தொடேனென்று துரத்திக் கொண்டு வந்து, யுத்தத்திற்கு ஆயத்தமா யிருந்த ரஜபுத்திர சைன்னியம் மறைவிலி ருந்து வெளிக்கிளம்பி, கடல் அலைகளைப் போல் அணி அணியாய் வந்ததையும், அம்மூ வரும் அதை அணுகித் தலைமைபூண்டு தங் களைத் தாக்கவருவதையும் கண்டு அவர்கள் பின்னடைந்து கோட்டைக்குள் செத்தேன் பிழைத்தேனென்று ஓடி ஒளிந்தார்கள். தாரா வும் பிருதிவியும் அவர்களை விடாமல் துரத்திக் கொண்டுபோய், நகரத்தில் புகுந்து, தெருக் களின் வழியாய், கிலிபிடித்து ஆயுதங்களை எடுப்பதற்கும் சத்துருவை எதிர்ப்பதற்கும் நேரமின்றித் தலைவிரி கோலமாய் ஓடும் ஆப்கா னியரைக் கண்டதுண்டம் செய்துகொண்டு, பெரிய கடைத்தெருச் சவுக்கில் கூடியிருந்த துருக்கரைத் தாக்கி டோடாவின் வடக்குக் கோட்டைவாயில் வழியாய் வெளியில் துரத்தி விட்டார்கள்.

பிருதிவியும் தாரையும், ஒருவர்க்கொருவர் அடிக்கடி பார்த்துப் பார்த்து, "ரஜபுத்திரர் களுக்குள் இவ்விதமான வீரனுமுண்டோ வென்றும், உலகத்தில் ஆணிலும் பெண்ணி லும் இவ்விதமான வீரலட்சுமியின் அவதார மென்று சொல்லத்தக்க பிராணி வேறில்லை யென்றும் அடங்காமகிழ்ச்சி கொண்டிருந்தார் கள். பிருதிவியின் படைவீரர்கள் தாரை பெண்ணென்பதை மறந்து, தங்களுடைய தலைவனுக்கு எவ்விதத்திலும் நிகரில்லையென்ற நெடுங்காலத்துக் கொள்கையை மாற்றி "ஒரு பெண்ணே இப்படியிருந்தால் நம் போன்ற ஆண்பிள்ளைகள் அவளுக்குமுன் எப்படி முகம் காட்டுவோ"மென்றுவெட்கி,எல்லையற்றஆச்ச ரியத்தையும் மதிப்பையும் பக்தியையும்கொண் டார்கள். சூரியன்மேற்றிசைக்கடலில்விழுமுன் தன் மரபில்வந்த ரஜபுத்திரர்களுடைய வீரக் கொடி டோடாவின் கோட்டையில் பறப்பதை யும், ஆப்கானியருடைய கொடி முறித்து தள் ளப்பட்டதையும் கண்டுகளித்தான். டோடாவி லுள்ள இந்துக்கள் அனைவரும் பேரானந் தத்தால் மெய்ம்மறந்து ஆரவாரித்து, சூரசேன னுடைய பெண்மணியான கண்மணியை நிகர்த்த தாரையை, தங்களைக் காக்கவந்த துர்க்காதேவியென்றே மதித்து, போற்றி, பெரும் திருவிழாக் கொண்டாடினார்கள்.

இதற்குள் தூதர்கள் வாயுவேகமனோவேகத் தைப் பழிக்கும் புரவிகளின்மேல் டோடா கைப்பற்றப்பட்டதைச் சூரசேனனுக்குத் தெரி

செருப்பின் அருமை வெய்யிலில் தெரியும், நெருப்பின் அருமை குளிரில் தெரியும்.

விக்கப் பறந்தோடினர்கள். இறக்கும் தருவாயி லிருக்கிறவனுக்குத் தேவாமிருதம் கிடைத்தது போலும், பிறவிக் குருடனுக்குக் கண்கிடைத் ததுபோலும், நித்திய தரித்திரனுக்கு நவநிதி கிடைத்ததுபோலும் தான் என்னளும் துய ரத்தையே அனுபவிக்க வேண்டியிருக்கு மென்று முடிவுசெய்த சுரசேனன் உடல் பூரித் துப், பேரொளிவிளங்க, தன்னை அதுவரை அடைக்கலம்கொடுத்துக் காத்துவந்த ராய மல்லனுக்கு அந்தச் செய்தியை அறிவித்து, பலவருடங்களாய்த் தன்னையே கதியென்று நம்பி, செல்வத்திலும் வறுமையிலும் வெற்றி யிலும் தோல்வியிலும் மாருமல், தன் னுடன் இன்ப துன்பங்களைப் பொறுமை யுடன் ஏற்றுவந்த போர்வீரர்கள் புடைசூழ, டோடாவில் புகுந்தான். அங்குள்ள தன் குடிக ளும் தாரையும் பிருதிவியும், மிகுந்த சம்பிர மத்துடன் அவனை எதிர்கொண்டழைத்து, புராதனமான அரண்மனையில் அமர்த்தி முடி சூட்டினர்கள். நிகரற்ற வீரனை பிருதிவி தானே கைலாகு கொடுக்க, புத்தியிலும் யுக்தியிலும் தாரையை நிகர்த்த தாரை அரு கில் நிற்க, சுரசேனனைச் சோளங்கி வம்சத்தர சர்களால் தொன்றுதொட்டு ஏற்பட்ட சிங் காதனத்தில் உட்காருவித்தான்.

ரஜபுத்திரர்களுக்குள் வம்சத்தை விருத்தி செய்வதற்கும், வீரச்செயல்களால் புகழ்பெறுவ தற்கும், மகனையே பெறவேண்டுமென்று தாய் தந்தையர் விரும்புவதுண்டு. அத் தகைய பேறுபெருத சுரசேனன் தன் முன் னேரால் ஆளப்பட்டுவந்த நாடு பகைவ ரால் கைப்பற்றப்பட்டு, தான் வீடு வாச லற்ற பரதேசியாகி, தன்னைப்போன்ற வேறொரு அரசனிடத்தில் அடைக்கலம் புகுந் தான். ஜாதியிலும் மதத்திலும் ஒழுக்கத்தி லும் முற்றிலும் வேருன ஆப்கானியர் தன் நகரத்தில் அரசுசெலுத்தவும், சூரிய வம்சத்து மன்னர்கள் புகழுடன் வீற்றிருந்த சிங்கா தனத்தில் துருக்கர் வீற்றிருக்கவும், இந்து மதத் தெய்வங்கள் பூசிக்கப்படும் ஆலயங்க ளில் குரானும்பாத்தியாவும் ஓதப்படுவதையும், இஸ்லாமியர் தழைத்தோங்கவும், இந்துக்கள் அஞ்சி ஓடவும் கண்டான். மனம் கசந்து, எவ்வளவு தடவை பகைவரை வென்று தன் நாட்டை மீட்பதற்கு முயற்சி செய்தும் பலிக் காமல், இந்த அவமானத்தையும், துயரத்தை யும் போக்குவதற்கு நமக்கு வழியில்லை. நம் தலைவிதி இப்படியேயென்று ஆசையற்றிருந் தான்; இப்படிப்பட்டவனுக்குப் பிறந்த பெண் குழந்தை, "இராஜஸ்தானத்திலுள்ள முதிர்ந்த இராஜ்ய தந்திரிகளும், காலங்கண்ட போர்வீரர் களும் இது மனிதனால் முடியாததென்று கை விட்ட காரியத்தை முடிக்காமல் விடுவதில்லை. என் உடலையும், உயிரையும், பொருளையும் காலத்தையும் புத்தியையும் இதற்கே தாரை வார்த்தேன்" என்று சபதஞ்செய்தாள். பெண் டீரின் முறையையும் ஒழுக்கத்தையும் வழக் கத்தையும் நடையுடையையும் துறந்தாள். லோகாபவாதத்தைச் சற்றேனும் மதிக்காமல் ஒரேபிடிவாதமாய் அல்லும் பகலும், ஓயா மல், சலிக்காமல், அலுக்காமல், வீரர்களுக் குள் வீரனய், புத்திமான்களுக்குள் தேவகுரு வாய் விளங்கினள். முடிவில், தன் சபதத்தை முடித்து, கோரிக்கையை நிறைவேற்றி, தன் தந்தைக்குப் பெயரும் புகழும் செல்வமும் அதிகாரமும் நாடும் கொடுத்தாள்; இந்தத் தாரை சாமான்னிய மானிடப் பெண்ணென்று சொல்லத் துணிபவருமுளரோ ?

டோடா நகரத்திலுள்ள ஆப்கானியர் ஒரு வர் கண்ணிலும் படாமல் தங்களுடைய பெண்டு பிள்ளைகளுடன் வெளியேறி, இஸ் லாமியர் அதிகாரஞ் செலுத்திவந்த பலவிடங் களுக்குச் சென்று, தங்களுக்கு நேர்ந்த கஷ்டத்தையும் அவமானத்தையும் எடுத்து ரைத்து ஓலமிட்டார்கள். ஆஜ்மீர் என்ற நாட் டில் டில்லிமா நகரத்துப் பாதுஷாவிற்கு ஆளாய் ஆண்டுவந்த மகம்மதியத் தலைவன், தன் இனத்தாருக்கும் மதத்தாருக்கும் நேர்ந்த அபகீர்த்தியை ஒழித்து, காப்பிரிகளென்று இகழ்வாய்ச் சொல்லப்படும் இந்துக்களைத் தொலைத்து, பழிக்குப்பழிவாங்க நிச்சயித்து, அதற்கேற்ற படையைத் தயார்செய்து கொண் டிருந்தான். பிருதிவியின் வீரச்செயல்களை யும் தாரையின் கீர்த்தியையும் அவன் அறியா தவனல்ல. மேலும், சுரசேனனும் ராயமல்ல னும் ஒன்று சேர்வார்களென்றும், மற்ற ரஜ புத்திரத்தலைவர்கள் அவர்களுக்குத் துணைவரு வார்களென்றும் அறியாதவனல்ல. ஆயினும் அதுவரையில் இஸ்லாமியருக்கனுகூலித்து வந்த வெற்றி என்றும் கைவிடாதென்று நம்பி,

இந்துக்களை அலட்சியஞ்செய்து காலங் கழித்தான்.

இப்படியிருக்க, ''டோடாவைப் பகைவரிடத்திலிருந்து மீட்டுத் தங்களை அதற்கு அரசனுகச் செய்கிறேன். இல்லாவிடில், நான் சுத்த வீரனுன க்ஷத்திரியனுக்குப் பிறந்தவனல்ல'' என்று கோரமான பிரதிக்ஞை செய்த பிருதிவி, தன் சொற்படி நடந்து, தன் உள்ளத்தை மகிழ்வித்துத் தன்னை என்றும் கடனாளியாகச் செய்ததற்குப் பதிலாக தன் அருமைப் புதல்வியான தாரையை அவனுக்கு மனைவியாகச் சுரசேனன் கொடுத்தானென்று சொல்லவும் வேண்டுமோ? டோடாவில் விவாக மகோற்சவம் வெகு சம்பிரமமாய் நடந்தது. சுரசேனன் பிருதிவியை மகனுகவும், தாரையை மகளாகவும் பாவித்து, அவர்களைத் தன்னுயிரைப்போல் எப்பொழுதும் தன்னை விட்டகலாது கூடவிருக்கச் செய்து, கண்டுகளித்து வந்தான்.

ஆப்கானியர்கொண்ட கருத்தையும், செய்த சூழ்ச்சியையும் தன் வேவுகாரர்களால் அப்போதைக்கப்போதே அறிந்துவந்த பிருதிவி, எதிரிகள் தங்களை எதிர்பார்க்காத வேளையில் தானும் தாரையும் ஆயிரம் போர்வீரர்களுடன் சூறுவளிபோல் தாக்கி, அவர்கள் ஒன்றும் தோன்றுமல் மூலைக்கு மூலை ஓட, பலரைக் கொன்று, சேனையைக் கலைத்து ஆஜ்மீர் நகரத்தில் புகுந்து, எதிர்ப்பாரில்லாமல் அதைக் கைப்பற்றினுன். ராஜஸ்தானத்தின் திறவுகோல் போன்ற அப்பட்டணத்தைத் துருக்கரிடத்திலிருந்து பிடுங்கி ரஜபுத்திரர் வசமாக்கினுன். இதனுல் அவனுடைய பேரும், பெருமையும், வன்மையும், தேசாதேசமெங்கும் பரவிற்று. எங்கே பார்த்தாலும் பிருதிவியையும், தாரையையும் கொண்டாடாதவர் இல்லை. பிருதிவி சுரசேனனுடன் சிலகாலம் தங்கி, சண்டை செய்யாமல் சும்மாவிருக்க வெறுத்து, ஆஜ்மீரில் தனக்குப் பதிலாக ஒரு நண்பனை அமர்த்தி, திக்குவிஜயஞ் செய்யப் புறப்பட்டான். தாரையும், உடலுக்கு உயிர்போலும், மனிதனுக்கு நிழல்போலும், சூரியனுக்கு ஒளிபோலும், நெருப்பிற்குச் சூடுபோலும், அவனை விட்டுப் பிரியாமல் போர்க்களத்திலும், மந்திராலோசனையிலுங் கலந்து, கணவனுடைய இன்ப துன்பத்தைத் தானும் அனுபவித்தாள்.

இப்படியிருக்கையில் ஒருநாள் பிருதிவிக்குத் தன் தந்தையின் ஞாபகம் வந்தது. மூத்தோனுன சங்கன் எங்கேயோ இருக்கிறவிடம் தெரியாமல் காலம் கழித்துக்கொண்டிருந்தான். இளையோனுன ஜயமல்லனே எல்லோராலும் இகழப்பட்ட முடிவை அடைந்தான். வயது முதிர்ந்து, களைப்பு மேலிட்டு, எண்ணிறந்த வருடங்களாய் இராச்சியபாரத்தைத் தாங்கி, பகைவருடன் பின்னடையாது அமர் புரிந்துவந்த தன் தந்தை எந்நிலைமையிலிருக்கிருரோ? அவரைப் பார்க்கவேணுமென்ற அதுவரையிலுமில்லாத ஆசை பிருதிவிக்கு உண்டாயிற்று. ராயமல்ல அரசனே, ''என் அன்பிற்குரிய மூத்தமகன், பிருதிவியின் கொடுங்கோபத்திற் கஞ்சி, நாட்டைத் துறந்து காட்டிலோ மேட்டிலோ திரிந்து கொண்டிருக்கிருன். கடையோன் நமது குலத்திற்குக் கோடரிக்காம்புபோல் வந்து முளைத்தான். கருணைக்கடலான கடவுள் அவனது கடனை அதிகமாகச் சுமத்தாமல், இகழுடம்பெடுத்த அத்தீயனை மண்ணுலகிலிருந்து அகற்றிவிட்டார். நமக்கு வயது முதிர்ந்தும் ஒரு புதல்வனுவது நம்முடனிருந்து மனத்தைக் களிக்கச் செய்து இராச்சியபாரத்தை ஒப்புக்கொண்டு, நமக்குச் சற்றேனும் ஓய்வு கொடுக்கவில்லையே! பிருதிவி கடுஞ்சினமுடையோனுயினும் பேராசையால் பீடிக்கப்பட்டவனுயினும், நிகரற்ற வீரனென்று எல்லோராலும் புகழப்படுகிருன். நமது ஆளுகையை விட்டகன்றிருந்த கோதுவார் நாட்டைக் கைப்பற்றி நமக்குட்படுத்தினுன். டோடாவிலிருந்து ஆப்கானியரைத் துரத்தி, ரஜபுத்திரர்களின் வெற்றிக் கொடியை நாட்டி நமது தேசத்தில் வந்து அடைக்கலம் புகுந்த சுரசேனனுக்கு வாக்களித்தபடி அவனுடைய முன்னோர் ஆண்ட டோடாவிற்கு அவனை அரசனுக்கினுன். பெண்ணரசியும், மேலான குணங்களால் சிறந்து விளங்கும் தாரையை மணந்து, கந்தனையும் தேவசேனையையும்போல் வீரதம்பதிகளாய் நாடெங்கும் கீர்த்திபெற்றுன். ஒருவரும் எதிர்க்க முடியாதென்று ஆசையறுக் கைவிட்ட துருககரைப் பேரிடிபோல் விழுந்து தாக்கி இருநதவிடம் தெரியாமல் துரதது

யடித்தான். இவனை ஒருதரமாவது பார்த்தால் என் உள்ளம் ஆறுதல் அடையு மென்று நேவார் நாட்டரசன் பலதடவை நினைத்த துண்டு.

ஒருநாள் புத்திரவாஞ்சை மிகுந்து, தூதர்களை அனுப்பி, பிருதிவியை அழைத்துவரக் கட்டளையிட்டான். பிருதிவியும் தாரையும் சித்தூருக்கு வந்து தந்தையின் தாள்களில் வணங்கினார்கள். அவன் அவர்களை ஆசீர்வதித்து, மார்போடணைத்துப் பலவித சிறப்பையும் கௌரதையையும் மரியாதையையும் அளித்தான். அங்கே சிலகாலம் தங்கியிருந்து, பிறகு சும்மாவிருக்க மனமில்லாமல், தேசசஞ்சாரஞ் செய்யவும் சண்டையிடவும் ஆவல்கொண்டு, ராயமல்லனிடத்தில் விடைபெற்று, தாரையுடன் வெளிப்பட்டு, ஆஜ்மீருக்கு அருகிலுள்ள கோமள்மீர் என்ற கோட்டையிற் தானும் தன் போர்வீரர்களுடன் வசிக்க நிச்சயித்தான்.

அது ஓர் செங்குத்தான மலையின்மீது கும்பனென்ற அரசனால் அமைக்கப்பட்டிருந்தது. மதில்களும், அரண்களும் அணியணியாய் ஒன்றின்மேலொன்று, பூமியிலிருந்து ஆகாயத்திற்கு ஏறுவதற்காக அமைக்கப்பட்ட படிக்கட்டுகளைப்போல் விளங்கின. உச்சியில் மேகமாளிகையென்று பேர்பெற்ற ஓர் அரண்மனை சிகரம்போல் விளங்கிற்று. எவ்விடத்திலும் எக்காலத்திலும் பகைவரால் அதற்கு அபாயம் நேராத வண்ணம் நன்கு அரண் செய்யப்பட்டிருந்தது. அங்கே தன் யுக்திக்கேற்ற மாறுதல்களைச் செய்து புதுப்பித்து, அதைத் தன் ராஜதானியாக்கி, பிருதிவியும் தாரையும் ஆண்டு வந்தார்கள். அவர்களைத் தலைவராகக்கொண்டு அவர்களுடைய சேனையில் சேர்ந்து யுத்தஞ் செய்து புகழ்பெற விரும்பாத ரஜபுத்திரனில்லை. ஆயிரக்கணக்கான சுத்தவீரர்கள் அவனுடன் வசித்தார்கள். தேக வலிமையிலும் ஆயுதப் பயிற்சியிலும் துணிவிலும் யுத்த தந்திரத்திலும் முதிர்ந்தவர்கள், கீர்த்தியையே கவசமாய்க் கொண்டவர்கள் பிருதிவியையும் தாரையையும் தெய்வமாய் எண்ணி, அவர்களின் ஆக்ஞையைத் தலைமேற்கொண்டு, உயிரைக் கொடுத்தாவது நிறைவேற்றுகிறவர்கள். பிருதிவியைப்போல் பகைவருக்குக் காலனும் நண்பருக்கும் எளியோருக்கும் கவலைதீர்க்கும் கடவுளாயும் விளங்கினார்கள். கும்பமீரென்று ஆதியில் அதைக் கட்டுவித்த வேந்தனுடைய பெயரால் விளங்கி, பிறகு அதின் அழகால் கோமளமீரென்று நாமம் பூண்டு, பிருதிவியால் கைக்கொள்ளப்பட்டபிறகு தனக்கு ஜயலட்சுமியாய் விளங்கும் தாரையின் பெயரிட்டுத் தாரகாட் அதாவது தாராகிரியென்று பெயரடைந்த அக்கோட்டையிலிருந்து, சிங்கக் கூட்டங்கள் மலைக் குகைகளிலிருந்து தாவுவதுபோல், தெய்வப் பிறவியென்று மதிக்கப்படும் புரவிகளின் மேல் ஆரோகணித்து, தங்களுடைய உத்தேசமும் யோசனையும் வெளிப்படும் முன்னர் சத்துருவைத் தாக்கி முறியடித்து, அவர்களுடைய பொருளையோ நாட்டையோ கைப்பற்றி, நாளுக்கு நாள் தங்களுடைய அதிகாரத்தையும் செல்வத்தையும் கீர்த்தியையும் வளரச் செய்தார்கள். கொழுப்பாலும் ஆட்சிச் செருக்காலும் இறுமாந்து தலைதெரியாமல், எளியோரையும் வறிஞரையும் வருத்தின தீயர்களை, கருடனைக்கண்ட நாகம்போல் பிருதிவி ஓடி ஒளியச் செய்தான். நியாயமாயும், பட்சபாத மின்றியும் அவரவர்களின் குறைகளைக்கேட்டுத் தகுந்த பரிகாரஞ்செய்து, நீதி நெறிதவறாமல் செங்கோல் செலுத்திக்கொண்டிருந்தான். நேவார் நாட்டு இராஜதானியான சித்தூரில் விளங்கும் ராணாவைப் போல் செல்வத்துடனும் ஆடம்பரத்துடனும் முடிசார்ந்த மன்னனாய் விளங்கினான்.

ஒருவருக்கும் கட்டுப்பட்டுத் தலைவணங்காத பிருதிவி ராஜனுக்கு, தன் தகப்பன் தனக்குத் தாழ்ந்தவர்களிடத்தில் பொறுமையுடன் நடப்பது சற்றேனும் மனமில்லை. ஒருநாள் அவன் தன் தந்தையைப் பார்க்கச் சித்தூருக்குச் சென்றபொழுது மாளவதேசத்து அரசனை கியாசுடீனென்றவனிடத்தி லிருந்து ஓர் தூதன் வந்திருப்பதையும், அவனை ராயமல்லன் மரியாதையுடன் நண்பனைப்போல் உபசரிப்பதையுங் கண்டான். தனக்கு ஜன்ம சத்துருவான ஓர் மகம்மதியனிடத்திலிருந்து வந்தவனை முகமலர்ந்து உபசரிக்கத்தகுமாவென்று மனம்பொறாமல், தன்தந்தையுடன் தான் தனித்திருக்கையில் "மகாராஜா! எல்லாப் பிராணிகளுக்கும் ஒளியையும் உயிரையும் கொடுக்கும் சூரியவம்சத்தினராய், ஆரிய மதத்தை

யும் தருமத்தையும் மாசறவிளங்கச் செய்வதே கடமையாய், அதற்கென்றே ஜென்மமெடுத்த நாமே, நமது மதத்தை அழித்து பசுக்களைக் கொன்று நமது பெண்டிரைச் சிறைசெய்து நமது நாட்டைக்கவரும் இவர்களுக்கு நாம் இடங்கொடுத்து மரியாதை செய்வதும் ஆதரிப்பதும், சுத்தவீரனுக்கழகல்லவே" யென்றான். ராயமல்லன் "குழந்தாய்! நீ சொல்வது உண்மையே. கடவுளருளால் பலமும் வீர்யமும் ஓயாத உற்சாகமும் யுத்தமே மணக்கோலமென்றுகருதும் மனப்பான்மையுமுடைய நீ இப்படிச்சொல்வது தகும். நானோ வயதுமுதிர்ந்து, பலம் குறைந்து,எண்ணிறந்த போர்களில் பட்டுப்பட்டு, அலுத்து ஓய்ந்திருக்கிறேன். மாளவதேசத்தரசன் நம் மதத்திற்கு விரோதியும் நாட்டிற்குப் பகைவனுமானாலும், என்னைக்காட்டிலும் பலவான். அவனுடன் எதிர்க்கமுடியாத எனக்கு அவனை மரியாதையாய் நடத்துவதே அபாயமின்மைக்கு ஹேதுவாகும்" என்றான்.

இந்தமறுமொழியைக்கேட்ட பிருதிவி அடங்காக்கோபங்கொண்டு,தன் நகருக்கு வந்து, ஒருவருக்கும் தெரியாமல், பொருக்கி எடுத்த சேனையுடன் கடுவேகமாய்ச் சென்று, மாளவ மன்னனுடன்யாதொருவிரோதமுமில்லாவிடினும், அவனுடைய தேசத்தில் புகுந்தான். அதைக் கேட்ட துருக்கவரசன் கடல் கரைபுரண்டது போன்ற படையுடன் அவனை எதிர்த்தான். ஆயினும் என்ன பயன்? அவனுடைய சேனையிலுள்ள யுத்தவீரர்களுக்கு அதிகமாய் வேலைக்காரர்களும் வித்துவான்களும் விகடகவிகளும் ஜாலவித்தைக்காரர்களும் பாடகர்களும் நட்டுவர்களும் தாசிகளும், கடைகளும், இன்னும் சுகமாய் காலங்கழித்துவந்த வேந்தனுக்குரிய ஆடம்பரங்களுமே காணப்பட்டன. எல்லையற்றுக் கட்டிற்கடங்காத இந்தப் பெருங்கூட்டம், மின்னலைப்போல் வேகமாய் அணிவகுப்பதற்கும் பருந்துபோல் பறந்து யுத்தஞ்செய்வதற்கும் ஏற்ற பிருதிவியின் போர் வீரர்களோ, சுகதுக்கத்தைத் துறந்தவர்கள். வெயில் மழை காற்று, பனி, குளிர், இடி, புயல் முதலியவைகளுக்குச் சற்றும் அஞ்சாதவர்கள். பலநாள்வரையில் ஊண் உறக்கமின்றி, களைப்பின்றி, சவாரிசெய்வதும், சண்டையிடுவதும் அவர்களுக்கொரு பொருட்டல்ல. குதிரையும், வீரனும், ஒரே பிராணியைப்போல் ஒரே மனதுள்ளதாய் விளங்குகிறவர்கள். நீருண்டு கறுத்து அடர்ந்த மேகங்களில் பாய்ந்தோடும் மின்னற்கொடியைப்போல், சத்துரு சேனையில் வருவது போவது தெரியாமற் பாய்ந்து, பிணக்காடாய் வெட்டித் தள்ளிக்கொண்டே போவது அவர்களுக்கு ஓர் விளையாட்டே.

பிருதிவி தகுந்த சமயம்பார்த்து மாளவமன்னனுடைய சைன்னியத்தின்மேல் புலியைப்போற் பாய்ந்தான். ஆட்டமும் பாட்டமும் கூத்தும் குடியும், விகடமும்,விருந்துமாய்ப்போர்க்கோலத்தைத் துறந்து, மணக்கோலமாய்விளங்கும் துருக்கருடைய சேனையில் பந்தல்களும் கூடாரங்களும் விசித்திரமான பூமாலைகளாலும் விளக்குகளாலும் பரிமளத் திரவியங்களாலும் அலங்கரிக்கப்பட்டு விளங்கின. இரஜபுத்திரவீரர்கள் பிரளயகாலாக்கினியைப் போலும், சண்ட மாருதத்தைப் போலும், கேட்போர் மனங்கலங்கும்படி சிங்காதங்களையும் அட்டகாசங்களையும் போரொலிகளையும் செய்து கொண்டு, புலிகளையும் சிங்கங்களையும் நிகர்த்த புரவிகளின்மேல் பகைவர் கூட்டத்திற் புகுந்து, உற்சவங்கொண்டாடும் நிராயுதபாணிகளை வாளுக்கிரையாக்கிக்கொண்டே, மலைகளைப்போன்ற அலைகளைப் பிளந்து செல்லும் திமிங்கிலங்களைப் போல், இமைப்பொழுதில் எல்லோரையும் மூலைக்கு மூலை பறக்கவடித்து, போர்த்தலைவனும் அரசனுமான துருக்கரிருக்கும் கூடாரத்தைச் சூழ்ந்துகொண்டு, அங்கிருந்தகாவர்காரர்கள் பிரமை தெளிவதற்குமுன் அவ்வரசனைச் சிறைபிடித்துக் குதிரையிலேற்றிக்கொண்டு போய்விட்டார்கள்.

அதற்குள் துருக்க வீரர்களில் பலர் ஆயுதங்களை எடுத்துக்கொண்டு, குதிரைகளிலேறித் துரத்துவதைக் கண்ட பிருதிவி தாரையை நோக்கி, "நீ நமது சேனையுடன் செல். இந்த ஆட்டுமந்தைக்கு ஓர் ஆடு போட்டுவிட்டு வருகிறேன்" என்று, அம்மாளவராஜனை, தனக்கு முன் நிறுத்தி, அவனுடைய நெஞ்சில் தன் கத்தியின் முனையை நாட்டி, துருக்க வீரர்கள் கூப்பிடுந் தூரத்தில் வந்தவுடன் அவர்களைக் கூவியழைத்து "மதிகெட்டவர்களே! இதோ பாருங்கள். உங்களரசனை நான் ஒன்றும் செய்யப் போவதல்ல. சித்தூருக்கு

அழைத்துக்கொண்டுபோய், என் தந்தையான ராணுவின் பேட்டிசெய்வித்து, மறுபடியும் அபாயமின்றிமாளவதேசத்திற்கு அனுப்பி விடுறேன். என் வார்த்தையை நம்பாமல் நீங்கள் தொடர்ந்து வந்தால், இந்தக் கத்தியை அவனுடைய நெஞ்சில் பதியச் செய்வேனெ"ன்றான்.

அதைக்கேட்டு துருக்கவீரர்கள் பிருதிவியின் சுவபாவத்தை அறிந்தவர்களாகையால், "நன்மையோ தீமையோ அவன் சொன்னபடி செய்யத் தவறமாட்டேனெ"ன்று பயந்து,பின் தொடருவதை நிறுத்தித் திரும்பிப்போனார்கள்.

மறுநாளே பிருதிவி தாரையுடன் கடுவேகமாய்ப் பிரயாணஞ்செய்து, சித்தூருக்கு வந்து, அரண்மனையிற் புகுந்து, ராயமல்லனுடைய பாதங்களைத் தொட்டு வணங்கி"மகாராஜா! வெகுநாளாய்த் தங்களுடைய பேட்டி கிடைக்கவேண்டுமென்று ஆசைகொண்டு தங்களை வணங்கக் காத்துக்கொண்டிருக்கும் இந்தக் கோமானைத் தங்களுக்குக் காணிக்கையாகக் கொடுத்தேன். இதைப் பெற்றுக் கொண்டு தங்களிஷ்டப்படி உத்திரவு செய்யலாமெ"ன்றான். தன் எதிரில் நிற்பவன் இன்னானென்றறியாமல், முகக்குறியாலும் ஆடையாபரணங்களாலும் யாரோ துருக்கப் பிரபுவென்று நினைத்துத் தயங்கும் மேவார் நாட்டரசனைக்கண்டு, பிருதிவி முன்பு மாளவதேசத்திலிருந்து வந்திருக்கும் பிரபுவைத் தருவித்து, "இதோ நிற்பவரை நீர் அறிவீரா" என்றான். அந்தக் கனவான் தன் வேந்தனைக் கண்டு, மாளவதேசாதிபதியாய் அரசுசெலுத்துகிறவன் இந்த ராஜகுமாரனுக்குச் சிறையாய் இங்கேவரக் காரணமென்னவெ"ன்று திகைத்து, ஒன்றும் தோன்றாமல், "இவர் எங்களுடைய மன்னனைப்போல் காணப்படுகிறார். ஆயினும், அவரோ இங்குவர நியாயமில்லை. நிச்சயமாய் நான் ஒன்றும் சொல்லமுடியாது" என்று பதிலளித்தான். அப்பொழுது பிருதிவி நடந்த வரலாற்றை விரிவாய் எடுத்துரைக்க, ராயமல்லன் திடுக்கிட்டு, "இஃதென்ன விபரீதம்! மனதால் நினைக்கமுடியாத பெருங் காரியத்தை எளிதில் முடித்த இந்த வீரன் என் புத்திரனை பிருதிவியா? அல்லது, இந்திரஜித்து காலநேமி சூரபத்மன் முதலிய அசுரத்தலைவர்களில் ஒருவனோ" என்று ஐயமுற்றான். மாளவேசனுக்குத் தகுந்த மரியாதைசெய்து விருந்தளித்து, சிலகாலம் தன்னுடன் இருக்கச்செய்து, பிறகு எண்ணிறந்த போர்க்குதிரைகளை அவனிடத்திலிருந்து கப்பமாய்ப் பெற்றுக்கொண்டு, தகுந்த பரிவாரங்களுடன் அவனை ஊருக்கனுப்பினான்.

பிரபஞ்ச வர்த்தமானம்

NEWS & NOTES

இந்தியாவில் மரண விகிதங்கள்.

மற்ற தேசங்களைவிட இந்தியாவில் மரண விகிதங்கள் ஜாஸ்தியாயிருக்கின்றன. பிறக்கும் போதே பெரும்பாலான குழந்தைகள் மாண்டுபோகின்றன. வியாதிகளோ கணக்கிட முடியாது. அமெரிக்காவில் 1000-க்கு 14 பேரே மாண்டு போகிறார்கள். சென்ற 6 வருஷங்களில் இறந்துபோனவர்களின் விவரம் பின்வருமாறு :—

1913-ஸு	ஆயிரத்துக்கு	$28\frac{3}{4}$
1914 ,,	,,	30
1915 ,,	,,	30
1916 ,,	,,	29
1917 ,,	,,	$33\frac{3}{4}$
1918 ,,	,,	$64\frac{3}{4}$

இதிலிருந்து இந்தியாவில் மரணவிகிதங்கள் சராசரி 3-மடங்கதிகமாய் உயர்ந்திருப்பது தெரியவரும்.

இந்தியப் பயிற்சியின் பெருமை.

நம் நாட்டு நூல்கள், வட அமெரிக்காவிலும் தென் அமெரிக்காவிலும் பலரால் வாசிக்கப் படுகின்றன வென்பது, நம் நாட்டின் பெருமையை விளக்கும். தென் அமெரிக்காவிலுள்ள சிலீ என்னும் தேசத்தில், வரகவி ரவீந்திரநாத டாகூரின் கீதாஞ்சலியை ஸ்பானிய பாஷையில் மொழிபெயர்த்து வாசித்துவருகிறார்கள். அவருடைய சித்ரா என்னும் நாடகமும் அப்பாஷையில் குப்தா என்பவரால் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. ஸ்ரீ கிருஷ்ணபகவானுடைய அருள்வாக்கான "கீதை" ஸ்பானிய பாஷையில் பலரால் வாசிக்கப்பட்டு வருகின்றது.
